# சி.ஐ.டி சந்துரு

தேவன்



ஆர். மகாதேவன் ('தேவன்') 8—9—1913ல் திருவிடைமருதூரில் பிறந்தார். அவ்வூரில் உயர்தரக் கல்வியும், பின்னர் கும்பகோணம் அரசாங்கக் கல்லூரியில் பி.ஏ. பட்டமும் பெற்றார். சிறிது காலம் பள்ளி ஆசிரியராகப் பணியாற்றிய பின், 'ஆனந்தவிகட'னில் உதவி ஆசிரியராக சேர்ந்தார். பிறகு, 1949-ஆம் ஆண்டு முதல் 1957-ஆம் ஆண்டு வரை நிர்வாக ஆசிரியராக இருந்தார் 23 ஆண்டுகாலம் அப்பத்திரிகையில் பல்வேறு சுவையான கதைகள், கட்டுரைகள் எழுதி, சிறந்த பத்திரிகை எழுத்தாளர்களில் ஒருவராக விளங்கினார். நகைச்சுவை நிறைந்த இவருடைய எழுத்துக்களில் 'துப்பறியும் சாம்பு', 'ராஜாமணி' முதலிய படைப்புகள் மிகப் பிரபலமானவை.

தேவன் சென்னைத் தமிழ் எழுத்தாளர் சங்கத் தலைவராக இரண்டு முறை பதவி வகித்து, சிறந்த தொண்டாற்றினார். பத்திரிகை எழுத்துத் துறையில் அவர் கையாளாத உத்திகளே இல்லையென்று சொல்லும் முறையில் அவர் எழுதி வந்தார். 1957-ஆம் ஆண்டு மே மாதம் 5-ந் தேதி தேவன் தம்முடைய 44-வது வயதில் இறைவனடி எய்தினார்.

# பதிப்புரை

தமக்கென ஒரு வழி வகுத்துக் கொண்ட எழுத்தாளர்களில் 'தேவன்' ஒருவர். கல்கிக்குப் பின்னர் திறம்படவும், தரம் குறையாமலும் ஆனந்த விகடன் பத்திரிகைக்குப் பொறுப்பேற்றுப் பலவருடங்கள் நடத்தியவர் தேவன். அன்னாரின் படைப்புகளைப் போல் எளிமை, இளமை, பண்பு, நயம் அனைத்தும் வாழ்க்கையிலும் கடைப்பிடித்தவர்.

நவீனம், கட்டுரை, சிறுகதை, சுற்றுலா இவற்றில் எதையும் அழகு படுத்தி, பட்டை தீட்டி, ஒளிவிடும் வைரத்தைப்போல் வடித்துத் தந்தவர் தேவன். தேவனின் துப்பறியும் கதைகள் தனி வழியில் தோன்றியவை; பிரசித்தமானவை.

ஏறக்குறைய ஐம்பது ஆண்டுகளுக்கும் மேல் தமிழிற்கு ஈடு இணையற்ற தொண்டாற்றி, பத்திரிகைகளுக்கே ஒரு வழிகாட்டியாகத் திகழும் 'ஆனந்த விகட'னை உருவாக்கி, தமிழ் முழங்கும் வீடுகளில் வசிப்பவர்களின் வாழ்க்கையில் அதனை ஓர் அம்சமாக்கிவிட்ட அதிபர் திரு. எஸ். எஸ். வாசன் அவர்களுக்கு எங்கள் நன்றி உரித்தாகும்.

'தேவன்' படைப்புக்கள் பலவற்றைத் தொடர்ந்து வெளியிடும் வாய்ப்பு அளித்த 'தேவன் அறக்கொடையின'ருக்கும் எங்கள் நன்றி உரித்தாகும். தேவனின் ஏனைய பல நூல்களையும் வெளியிட இருக்கும் எங்கள் ஆக்கத்திற் [illegible] ஆதரவும் [illegible]

—பதிப்பாளர்

3?400
4978311

# ஸி. ஐ. டி. சந்துரு

## இரண்டு அதிசயமான பேட்டிகள்

மனித சுபாவங்களில் எண்ணற்ற வகைகள் இருக்கின்றன. அவற்றில் மிகப் பெரும்பாலானவை ஒரே திசையை நோக்குபவை. ஒரு சின்னக் காரியம் செய்து விட்டுப் பெரும் புகழ் பெற விரும்புவர்கள், அதைப் பற்றி அடிக்கடி பேசுகிறவர்கள், ஒரு சில இடங்களில் தலையைக் காட்டி விட்டுப் புகைப்படத்திலும் புகுந்துகொள்பவர்கள், தன் அருமை பெருமைகளை இன்னும் உலகம் கண்டு கௌரவிக்கவில்லை என்று நிரந்தரமாகக் குறை சொல்பவர்கள்—இந்த மாதிரி ரகங்களைச் சேர்ந்தவர்கள் தான் பெரும்பான்மைக் கட்சியை அலங்கரிப்பவர்கள். ஹாஸ்யமாக எழுதுவதற்கு இவர்கள் தருகிற விஷயம் வேறு யாருமே கொடுக்க மாட்டார்கள்.

ஸி. ஐ. டி. சந்துரு ஒரு தனி ரகம். ஏன், அவன் தன்னந் தனி ரகம் என்றுகூடச் சொல்லலாம். அவன் எந்த இடத்திலும் சந்தர்ப்பத்திலும் சுய விளம்பரத்திற்காகக் காத்து நின்றதில்லை; ஆனால், அவன் பெயர் அடிக்கடி பத்திரிகையில் வந்து [illegible] இடத்தி லாவது அவன் முகத்தை [illegible] படத்தைத் தேடிப் பிடித்துப் பிரசுரம் செய்தார்கள்.

29/05/2011 12:41

அழைப்புகள் அனுப்பிய இடத்தில் அவனுக்காகக் காத்துக் கொண்டிருந்த போது. அவனை முன் பின் அறியாத பதினைந்து இடங்களில் அவன் சுற்றிக் கொண்டிருப்பான். குதிரைப் பந்தய மைதானத்திலும் அவனைப் பார்க்கலாம்; அதே தினத்தில் கதா காலட்சேபங்களிலும் ஒரு மூலையில் அவனைக் காணலாம். ஞாயிற்றுக்கிழமை காலைகளில் ஏலம் நடக்கும் இடங்களில் நிற்பான்; மாலை வேளையில் மூர்மார்க்கெட்டில் பழைய புஸ்தகங்களை அலசிக் கொண்டு பொழுது போக்குவான். மண்ணடிப் பக்கம் ஏதேனும் ஒரு தண்ணீர்ப் பந்தலின் மண் தரையில் குத்திட்டு உட்கார்ந்து 'சீரான'த்திற்குச் சட்னி கேட்பதும் உண்டு; மவுண்ட்ரோட் பெரிய ஓட்டலில் ஏர்-கண்டிஷன் செய்த அறையில் மெத்தை விரித்த நாற்காலியில் சாய்ந்த படி "புரூட்-ஸாலட்" சுத்த மோசம் என்று புறங்கைபால் தள்ளுவதும் அவனுக்கு சகஜம்தான்.

எல்லோரும் எதையாவது பார்க்க ஓடிக் கொண்டிருக்கும்போது, உட்கார்ந்துகொண்டிருப்பான்; எல்லாரும் நின்று யோசிக்கும்போது, நிற்க நேரம் இல்லை என்று 'டாக்ஸி'யில் விரைந்து செல்வான். ஆனால், எந்தக் காரியம் என்றாலும் சாதனையாவது என்னவோ சந்துருவுக்குத்தான்.

தினசரிப் பத்திரிகையை எடுத்தால், எல்லாரும் வழக்கமாக வாசிக்கும் பகுதிகளை அவன் வாசிக்கவே மாட்டான். குறிப்பிட்ட சில விளம்பரங்களை உன்னிப்பாகப் படிப்பான். சிறிய எழுத்துக்களில் வரும் செய்திக் குவியல்களைப் பார்ப்பான். பெரிய விஷயங்களைத் தெரிந்து கொண்ட மாதிரி தலையாட்டித் திருப்தி தெரிவிப்பான். அதே பத்திரிகைகளில் கொலைக் கேஸ்களைப் படித்து விட்டுப் பரிகாசமாகச் சிரிப்பான். "கோபாலசாமிக் கவுண்டன், சந்திரகூடம் பிள்ளையைக் கத்தியால் குத்தினான். தீர்ப்புச் சொன்ன பாவத்திற்காக ஜட்ஜ் சங்கரப்பாவின் பெயருக்கு முதல் ஸ்தானம் கொடுத்திருக்



கிறார்கள்" என்பான். சந்துரு ரொம்பவும் சிரித்து, "இதோ 'மாதர் சங்க' ஆண்டு விழாவுக்கு அடுத்த செய்தி, தெப்பக்குளத்தில் ரங்கம்மாள் (27) மிதந்த செய்தி பிரசுரமாகியிருந்தது. யாரையா இவர்களுக்கு நகைச்சுவை போதாது என்கிறது!" என்று கேட்பான்.

அவன் அடுத்தபடி என்ன செய்வான், அவன் வாயிலிருந்து என்ன வார்த்தை வரும் என்று யாருக்குமே சொல்லத் தெரியாது. அவனுக்கே தெரியுமோ என்னமோ என்றுகூட யோசிக்கும்படி இருக்கும். ஆனால் அவன் சொன்ன பிறகு எல்லாரும் ஆச்சரியப்படுவார்கள். அவன் மட்டும் கல்லுப் பிள்ளையார் போல இருப்பான். அவன் வார்த்தைகளில் வேகம் இருந்தது; கனம் இருந்தது; பேசினால் முகத்தைப் பெயர்க்கிற மாதிரி இருக்கும். அதைக் கண்டு எல்லாருமே அஞ்சினார்கள். அவன் ஆபீஸில் மேலதிகாரிகளுக்குக் கூட அச்சம்தான். 'சந்துரு' என்றால் ஜாக்கிரதையாக, வேறு யாரையாவது அனுப்பிப் பேசச் சொன்னார்கள். இவனிடம் அப்படி என்ன அசாதாரணமான சக்தி இருக்கிறது என்று ஒரு முடிவு செய்வதற்குள் அந்தச் சக்தியைக் காட்டி விடுவான்.

ஒரு தடவை பார்த்துவிட்டால் மறக்க முடியாத உருவம் அவனுடையது. 'அழகு' என்று ஏமாந்து விட வேண்டாம். ஏதோ ஒரு கவர்ச்சி மட்டும் இருந்தது. நல்ல உயரம், கொஞ்சம் குட்டையாக இருந்திருந்தால் ஆச[illegible] பருமன் என்று சொல்லி விடுவோம். இப்போது அந்[illegible] குறை இல்லை. மூக்கு கூர்மையாக இருக்கும்; கண்விழிகள் நேரில் பார்க்க முடியாதபடி உள்ளடங்கிக் காணும். எனினும், பார்வையால் குத்தும் திறன் அவற்றிற்கு உண்டு. சட்டையைக் கழட்டினால் மார்பெல்லாம் இரும்பு என்று தோன்றும்படி [illegible] இருக்கும். யாரையேனும் சந்துரு ஒரு முறை கு[illegible] என்று சிலர் சொல்லுவதுண்டு: அவன் யாரையும் [illegible] வீழ்த்தினதாகச் செய்திகளில் காண முடியாது.

29/05/2011 12:42

இவன் உண்மையிலேயே அத்தனை கெட்டிக்காரனா, இவனுடைய மூளை எப்படி வேலை செய்கிறது என்று அனேகர் சிந்தனை செய்திருக்க வேண்டும். ஒரு கேள்வி கேட்டு முடிப்பதற்குள் அவன் பதில் கொடுத்திருக்கிறான். எதிர்பாராத விஷயங்களைத் திடும் என்று சொல்லி திகைக்கச் செய்திருக்கிறான். இந்த வகையில் பிறர் பார்த்துத் தன்னை மேதாவி என்று சொல்ல வேண்டும் என்று அவன் காத்திருந்ததில்லை. ''என்னைவிட மேதாவி இடையாது!'' என்று திடமாக அவனே சொல்லிக் கொண்டிருக்கிறான். அவன் செய்த காரியங்களோ எந்தவித பரிசிரமமும் இல்லாமல் நடைபெற்றதாகத் தோன்றினவாகையால், அவனைப் பார்த்து ஒரு 'வந்தனம்' கூறக்கூடத் தயங்க வேண்டி வந்தது. அவனும் தனது வெற்றிகளைப் பற்றி அதிகம் நினைப்பவனாகத் தோன்றவில்லை. சென்னை நகரம் எல்லாம் அவன் பெருமை பாடிக் கொண்டிருந்த சமயம், சிந்தாதிரிப்பேட்டையில் அவன் ஜாகையில் இரண்டாம் மாடிப் பெஞ்சியில் விரித்த ஜமக்காளத்தில் காலை நீட்டிப் படுத்து, பெரிய கொட்டாவியாக ஒன்றை வெளியிட்டு, நித்திரையில் ஆழ்ந்துவிடுவான். உலகத்தைப் பார்த்துப் 'பயித்தியக்காரர்களா!' என்று ஏசுவது போல் குறட்டைகளை அனுப்பிக் கொண்டிருப்பான்.

அவன் ஜாகை இருந்த அறையே ஒரு விசித்திரம். அதன் ஜன்னலடியிலேயே நாற்காலியைப் போட்டுக் கொண்டு அவன் உட்கார்ந்து விட்டால் தெருவெல்லாம் தெரியும். அந்த இடத்தில் இருந்தபடியே போவோர் வருவோரையெல்லாம் கண்காணிக்கலாம். ''ஐயா, அரை ஜன்னலுக்குத் தானா கம்பி? பந்தோபஸ்து போதாதே!'' என்று கேட்டால், ''உங்கள் வீடுகளில் திருடர்களையும், போக்கிரிகளையும், கதவுக்குத் தாழ்ப்பாளும் பூட்டும் போட்டுத் தடுத்து வைத்திருக்கிறீர்கள். நான் அவர்களை வரவேற்கிறேன்; அவர்கள் தானே என் தொழிலை வளம் படுத்துகிறவர்கள்!'' என்பான்.



இனி ஸி. ஐ. டி. சந்துரு நம் கதையில் தாராளமாகப் பிரவேசிக்கலாம்.

போலீஸ் ஸ்டேஷனில் சந்துருவுக்கென்று ஓர் இடம் உண்டு. அது ஒரு மூலை. அங்கிருந்தபடி வருபவர்கள் போகிறவர்கள் எல்லாரையும் அவனால் கவனிக்க முடியும். அதற்காகவே பார்த்து இடம் பிடித்துக்கொண்ட மாதிரி இருக்கும் அது. ஆனால், சந்துரு கவனிக்கிறானா என்பது வேறு விஷயம்.

காலை எட்டுமணி இருக்கும். சந்துரு தனது இடத்திற்கு வந்து விட்டான்; ''சாமிநாதன்!'' என்று கூப்பிட்டான்;

ஒரு கான்ஸ்டபிள் வந்து ஒரு 'ஸலாம்' அடித்துவிட்டு நின்றான். சந்துரு அவனை அரைக் கண்ணால் பார்த்துவிட்டு, ''எத்தனை ஜாக்கிரதையாக நீ இங்கே காவல் காத்துக்கொண்டிருக்கிறாய்! உன்னையும் ஏமாற்றிவிட்டு, இத்தனை குப்பை என் மேஜைமேல் வந்திருக்கிறது. பார்த்துக்கொள்!'' என்றான்.

''மன்னிக்கணும், ஸார்!''

''பேசப்படாது...இப்போ நீதான் எனக்கு ஒரு தண்டனை கொடுக்கணும். ராயர் ஹோட்டலிலிருந்து ஆறு இட்டிலி, ஒரு 'சேர்' காபி வரணும், சும்மா ஆமை வேகத்திலே ஓடிவரணும். ஜல்தி! முடியுமா! குளிர்காலத்தில் உனக்கு முழங்காலில் ஒரு 'பிடிப்பு' வருகிறது உண்டே...?''

''அதெல்லாம் இப்போ இல்லை, ஸார்!''

''நீ ராயர் ஹோட்டலில் பூரி உருளைக்கிழங்கை வைத்து வேட்டையாடிக்கொண்டு நிற்கப்படாது என்பதற்காக ஞாபகப்படுத்தினேன். உன் முழங்கால் பிடிப்புக்காக நான் கவலைப்படுகிறேன் என்று நினைத்துக்கொண்டு விடாதே!''

எட்டே கால் [illegible] ஸ்டேஷனுக்குள் [illegible]

29/05/2011 12:42

வேலை இருக்கிறதா?'' என்று கேட்டார், வந்ததும் வராததுமாக.

சந்துரு புன்னகை செய்து கொண்டே இருந்தான். ''சாமிநாதனை ராயர் ஹோட்டலுக்கு அனுப்பியிருக்கிறேன். உங்களுக்குச் சம்மதமானால், நம் இரண்டு பேர் கையிலுமே கொஞ்சம் வேலை இருக்கும்! ஆறு இட்டிலி வருகிறது!'' என்றான்.

பழகிப் பழகி, கோபாலனுக்குச் சந்துருவின் குணம் முற்றும் அத்துப்படி ஆகியிருந்தது. வேறொரு மேல் அதிகாரியாக இருந்தால், இம்மாதிரி பேசுவதில் தப்பர்த்தங்கள் ஏற்பட்டிருக்கும். ஏன், சந்துருகூட இம்மாதிரி பதில் கூறியிருக்க மாட்டான். இவர்கள் இருவரும் ஒருவர் யோக்யதாம்சத்தைப் பற்றி மற்றவர் அறிந்திருந்தார்கள். கோபாலன் சிரித்தார். ''அதை அப்புறம் கவனித்துக் கொள்ளலாம். என் வீட்டைத் தேடிக்கொண்டு ஒரு ஆசாமி வந்துவிட்டார். புத்தம் புதிதாக ஒரு 'கதை' சொல்கிறார். ரஸமாக இருக்கிறது. நீ ஒரு தரம் கேட்டு, அது எத்தனை சதவிகிதம் உண்மை என்று கண்டுபிடித்து, அவரை அனுப்பி வை...என்ன?'' என்றார்.

''இப்படி அனுப்புங்கள் அவரை. ராயர் ஹோட்டலிலிருந்து சாமிநாதன் வந்தால், நீங்களே மடக்கிக்கொள்ளலாம்...எங்கே இருக்கிறார், உங்களையே கவர்ந்துவிட்ட அந்தக் கற்பனைக் கதாசிரியர்?'' என்றுகேட்டான் சந்துரு.

கோபாலன் அறைக்குள் சென்று விட்டார். சந்துருவை இப்போது சுமார் நாற்பது வயதுள்ள ஒருவர் நெருங்கி வந்து ஒரு கும்பிடு போட்டார். ''எனக்காக நீங்கள் ஒரு நிமிஷம் அவகாசம் கொடுக்க வேண்டும்!'' என்று விநயமாகக் கேட்டுக் கொண்டார்.

ஒருமுறை சந்துரு அந்தப் புதிய ஆசாமியை ஏற இறங்க நிதானித்தான். ''உட்காருங்கள், ஐயா!



உட்காருங்கள்! மணிக்கு அறுபது நிமிஷம் அவகாசம் தருகிறேன். அதற்காகத் தயங்கவே தேவை இல்லை...''

சந்துருவின் எதிரே உட்கார்ந்து கொண்டு, அவன் முகத்தில் பரிகாசம் அதிகமாக இருந்ததா, கவனம் அதிகமாக இருந்ததா என்று கண்டு கொள்ள முடியாமல் திணறினார் அந்த ஆசாமி. சந்துரு கண்களை மூடிக்கொண்டான்; ''மூந்தா நாள் கஜேந்திர சபா நாடகம் எப்படி இருந்தது? அதைச் சொல்லுங்கள் முன்னாடி!'' என்று கேட்டான்.

திடுக்கிட்டு அவர், ''நீங்கள் நாடகத்திற்குவந்தீர்களா? என்னை அங்கே பார்த்தீர்களா?' என்று கேட்டபடி பாதி எழுந்துவிட்டார்

கால்களை நன்கு விறைப்பாகச் சந்துரு நீட்டி ஒரு நீண்ட கொட்டாவி விட்டான். ''நான் நாடகங்களுக்கே வருவதில்லை. விமர்சனங்களைப் படித்து விடுவேன்; ஒரு மாதிரி புரிந்து கொள்வேன். ஆனால், நீங்கள் வரும்போது 'கம்'மென்று அடித்த வாசனையை, டிக்கெட்டில் தோய்த்துக் கொடுக்கிறார்கள். மூன்று நாளைக்கு அது அகலுவதில்லை. உம்மைப் பார்த்தால், என் மாதிரி அப்பாவியாக, 'ஸெண்ட்' பூசிக்கொள்ளாத பேர்வழியாகக் காண்கிறது. ஆகையால், வாசனை டிக்கெட் கொடுத்த நாடகத்துக்குப் போயிருந்தீர்களோ என்று கேட்டேன்... மற்றபடி எல்லோரும் செளக்கியம்தானே?''

சற்று அசந்துவிட்டார் அந்த ஆசாமி. ஒருவாறு சமாளித்துக்கொண்டு, ''எதிர்பாராத ஒரு சம்பவம் எனக்கு நேற்று நிகழ்ந்து விட்டது...'' என்று தொடங்கினார்.

''இப்போதும் கூடத்தான் நடக்கிறது...நாம் இருவரும் இந்தச் செவ்வாய்க்கிழமை பகல் எட்டரை மணிக்கு இங்கே சந்திக்கப் போகிறோம் என்பது மட்டும் எதிர்பார்த்த விஷயமோ? ஆகையாலே, எதிர்பார்த்தது, எதிர்பாராதது இரண்டுமே நாமாக [illegible]!''

சிறிது முகம் [illegible] நான் [illegible] படித்தவன் இல்லை. சற்றுக் காது கொடுத்துக் கேட்க

29/05/2011 12:42

முடியுமானால், எனக்குத் தெரிந்ததை மளமளவென்று ஆரம்பித்துச் சொல்லி விடுகிறேன்!" என்றார்.

"எப்போது ஆரம்பிக்கப் போகிறீர்களோ! அது எப்படி யானாலும் தயவு செய்து சொன்னதை மட்டும் திருப்பிச் சொல்லாதீர்கள், நான் தூங்கி விடுவேன்."

சந்துரு கெட்டியான ஆள் என்பதை அவர் ஊகித் திருக்க வேண்டும்; ஆகவே, விஷயத்துக்கு வந்துவிட்டார். சந்துருவும் கண்களை மூடிக் கொண்டான்.

"என் பெயர் தாமோதரன். நான் இந்தப் பட்டணத் தில் எட்டு வருஷமாக ஒரு பிரபல மருந்து ஷாப்பில் அலுவலாக இருந்து வருகிறேன். யாரைக் கேட்டாலும் என்னைப் பற்றி நல்ல வார்த்தை மட்டுமே சொல்லு வார்கள். நேற்று வரை ஒரு தப்புத்தாண்டா விவகாரங் களில் நான் தலையிட்டவன் இல்லை, நீங்களும் விசாரித்து கொள்ளலாம்."

"தேவை இல்லை. உங்கள் பெயர் எங்களுடைய ஜாபி தாவில் இல்லை—அதாவது, தாமோதரன் என்பது உங்கள் பெயராக இருந்தால்?...மேலே சொல்லுங்கள். மிஸ்டர் தாமோதரன்!"

"நீங்கள் வேடிக்கையாகப் பேசுகிறீர்கள்!"

"வழக்கமே இல்லை. இந்தத் தொழிலில் இருந்து இருந்துஎடுத்ததற்கெல்லாம் எனக்குச் சந்தேகம். மன்னிக்க வேண்டும்" என்றான் சந்துரு.

"நேற்று மாலையில் நான் சென்ட்ரல் ஸ்டேஷனுக்கு ஆறு மணிக்குச் சென்றேன்..."

"யாராவது நண்பர்கள் உறவினர்கள் வந்தார்களா?"

"இல்லை! நான் பொழுது போவதில்லை என்றால் ரயிலடிக்குப் போவது வழக்கம். அங்கே என்னைஅறியாமல் பொழுது போய்விடும். சற்றுப் பிளாட்பாரத்தில் பெஞ்சி யில் உட்காருவேன். புஸ்தகக்கடைகளில் சுற்றுவேன். அதே போல் நேற்று நான் போன சமயம் சரியாக ஆறு மணி. மெயில் வந்துநின்றது, பிரயாணிகள் எல்லோரும் இறங்கிப்



போன பிறகும் நான் உட்கார்ந்திருந்தேன். என் பக்கத்தில் அப்போது ஒருவர் வந்து உட்கார்ந்தார்..."

"முன் பின் பரிச்சயம் இல்லாதவர்தானே?"

"ஆமாம்! புது ஆசாமி. ஐம்பது ஐம்பத்திரண்டு வயது மதிக்கலாம். ஸூட்டும் கோட்டும் அணிந்திருந்தார். என்னை ஐந்தாறுமுறை உற்றுக் கவனித்ததிலிருந்து ஏதோ கேட்க விரும்புகிறார் என்று நான் ஊகித்தேன். சிறிது நேரத்திற்குப் பின் என்னைக் கேட்டே விட்டார். 'நீங்கள் இந்த ஊர்தானே? என்ன உத்தியோகம்? எங்கே ஜாகை?' என்ற விவரங்களையெல்லாம் தெரிந்து கொண்டதும், 'என்னை வித்தியாசமாக நினைத்துக் கொள்ளாவிட்டால் ஒரு வேண்டுகோள் செய்துகொள்வேன். உங்களால் எனக்கு ஒரு காரியம் ஆகவேண்டும். செய்ய முடியுமா?' என்று வினவினார்.

"என்னைத் தேர்ந்தெடுத்து அவர் வேண்டியது எனக்கு ஒரே வியப்பாக இருந்தது. மனிதரைப் பார்த்தால் நல்ல ஸ்திதியில் கண்யமாக இருப்பவர் என்று தோன்றியது. 'முடிந்தால் செய்கிறேன்' என்று வாக்குக் கொடுத்தேன்.

"ஒன்றும் இல்லை; நான் இந்த மெயிலில்தான் இறங்கி னேன், இன்றே எழும்பூரில் திருநெல்வேலி எக்ஸ்பிரஸில் ரயில் ஏற வேண்டியிருக்கிறது. இன்னும் அதற்குச் சரியாக ஒன்றேகால் மணி நேரமே இருக்கிறது. இடையில் தியாக ராய நகரில் மிக முக்கியமான அலுவல், நானே போய்க் கவனிக்க வேண்டியது ஒன்று எனக்கு இருக்கிறது. ஆகை யால் எனக்குப் பதில் நீர் தயவு செய்து டவுனில் என் வீட்டிற்குச் சென்று நான் குறிப்பிடும் ஒரு பொருளைக் கொண்டு வந்து தர முடியுமா?' என்று கேட்டார்."

"முடியாது என்று நீர் சொல்கிறதுதானே! வீண் வம்பையெல்லாம் வி[illegible] போலீஸ்காரன்களுக்குப் [illegible] னேன் இப்போது?" என்றான் சந்துரு.

29/05/2011 12:43

''பார்வைக்குப் பெரிய மனிதராக இருந்தார். தவிர அவர் வீட்டுக்கே போய் வரச் சொன்னார். எனக்கு அப்போது அவகாசம் இருந்ததாகவும் ஒப்புக் கொண்டிருந்தேன். தர்ம சங்கடமான நிலைமையில் அகப்பட்டுக் கொண்டுவிட்டேன். சென்னையில் அவர் வீட்டுச் சாவியைக் கொடுத்தார். வெகு நன்றாக அடையாளம் சொன்னார். முக்கியமாக, நான் அந்த வீட்டைத் திறப்பதைப் பார்த்து, அக்கம் பக்கத்து ஜனங்கள் என்னைத் திருடன் என்று எண்ணிக் கொள்வார்களே என்று ஜாக்கிரதையாகப் போனவுடன் கதவை அடைத்துக் கொள்ளச் சொன்னார்; மூன் பக்கத்து விளக்குகளைப் போடக் கூடாது என்று எச்சரித்தார். சுவரில் பொருத்தி வைக்கப்பட்ட இரும்புப் பெட்டி இருக்கும் இடத்தைச் சரியாகக் குறிப்பிட்டு, அதன் சாவியையும் கொடுத்து, அதன் உள்ளே இருந்து தோல் பையை எடுத்துக் கொண்டு திரும்பும்படி சொன்னார்.''

''அந்த வீடு காலி என்று சொல்லும்?''

''அதை அப்புறம்தான் நான் தெரிந்து கொண்டேன்! ஒவ்வொன்றாக மெள்ள மெள்ள நான் சிக்கிக் கொண்டு விட்டேன். அவர் என்னை முற்றும் நம்பினார். விரும்பினால் நான் அந்தப் பையுடன் ஓடியிருக்கலாம் அல்லவா? அவர் இஷ்டப்படி நான் தோல் பையுடன் திரும்பி வந்தவுடன் எனக்கு ஐம்பது ரூபாய் வெகுமதி வழங்கப் போவதாகவும் கூறினார். நான் ஒப்புக்கொண்டு போனேன்...''

'' 'டாக்ஸி' வைத்துக்கொண்டு போனீர்... அல்லவா?''

''ஆமாம்; 'டாக்ஸி'யில் போக வரப் பணமும் அவரே கொடுத்தார்.''

''அச்சா!... அப்புறம் நீர் 'டாக்ஸி'யை வீட்டு வாசல் வரை கொண்டு போகாமல், தெரு முனையிலேயே அனுப்பி விட்டீர்?''

''உங்களுக்கு அது எப்படித் தெரியும்?''



''எனக்கு வயது நாற்பத்திரெண்டு. மூப்பத்தாறு வருஷமாக ஏற்பட்ட பழக்கத்தினால் அதைத் தெரிந்து கொண்டேன். அக்கம் பக்கத்து வீடுகளுக்குத் தெரியாமல் போகிறவன், 'டாக்ஸி'யில் வாசலில் போய் இறங்கலாமா? நீர் கதவை ஸர்வ ஜாக்கிரதையாகத் திறந்தீர். உள்ளே அவர் விவரித்தபடியே எல்லாம் இருந்தன. இரண்டு அறைகளைத் தாண்டி, மூன்றாம் அறையில் சுவரிலிருந்த இரும்புப் பெட்டியைத் திறந்தீர். அதில் பையும் இருந்தது. அதைக் கையில் எடுத்துக் கொண்டீர்... அதுவரை சங்கடம் ஏதும் இல்லையே?''

''இல்லை. நீங்கள் சொல்வது வாஸ்தவம்! அதுவரை நானும் விளக்குப் போடவே இல்லை. பையை எடுத்துக் கொண்டு விளக்குப் போடப் போன சமயம்தான் புழக்கடையில் இருவர் பேச்சுக் குரல் கேட்டது. நான திடுக்கிட்டுப் போனேன். என்னைத் தவிர வேறு யாரோ அந்த வீட்டுக்குள் பின்புறமாக வருகிறார்கள் என்று தெரிந்ததும என் ரத்தம் எல்லாம் உறைந்து போயிற்று. 'ஏதடா வப்பு? ஒருவேளை நம்மை அனுப்பி வைத்த ஆசாமி போக்கிரியாக இருப்பானோ? இப்போது மாட்டிக் கொண்டால் என்ன ஆகிறது!' என்று கிலி பற்றிக் கொண்டது. எதற்கும் இப்போது நட்ட நடுவில் நின்று யார் கையிலும் சிக்கிக் கொள்ளக்கூடாதென்று உள்ளுணர்வு எச்சரிக்கை செய்தது. சட்டென்று அப்படியே ஓடி ஒரு பீரோவின் பின்னால் ஒளிந்துகொண்டேன்.

''இரண்டே நிமிஷத்திற்கெல்லாம் பேசிக் கொண்டு வந்தவர்கள் இருவரும் அந்த அறைக்குள்ளேயே பிரவேசித்து விட்டார்கள். எனக்கு முழங் கால்கள் இரண்டும மடமடவென்று முட்டிக் கொண்டன. எங்கே கண்டுபிடித்து விடுவார்களோ என்ற திகில். இருவரிலே ஒருவன் இதற்குள் விளக்கைப் போட்டுவிட்டான். அறையெல்லாம் ஜாஜ்வல்யமாகப் பிரகாச[illegible] கொண்டுவிட்டான் செல்[illegible] என்று ஒருவன் குரல் கேட்டது ஏமாற்றத்துடன்.

29/05/2011 12:43

''எங்கே போய்விடுவான்...அல்லது எங்கேதான் போய் விடட்டுமே! பிடிக்கமுடியாதா அவனை! இடுப்பை முறித்து விட மாட்டேனா நான்!'' என்றான் மற்றவன். அப்பா! அவன் குரல் மனிதக் குரலே இல்லை. விலங்கின் உறுமலாகவே இருந்தது.

''நான் திறந்து போட்ட இரும்புப் பெட்டியைப் படார் என்று அவர்களில் ஒருவன் சாத்தினான். மறுபடி கர்ஜனைக் குரலில், 'இந்த வீட்டை ஒரு சோதனை போடுவோமா? எவனாவது ஒண்டிக் கொண்டிருந்தால், வெளியே இழுத்து நாலு முறுக்கு முறுக்கினால் உண்மையைக் கக்கி விடுகிறான். இனிமேல் விஷமம் வைத்துக் கொள்ளாதே என்று செல்வராஜுவுக்கு ஒரு பாடம் கற்பித்த மாதிரி இருக்கும்'' என்றான்.

''செல்வராஜு என்ற பெயர் பற்றி உமக்குச் சந்தேகம் இல்லையே?'' என்று வினவினான் சந்துரு கண்களைத் திறந்து.

''நிச்சயமாகச் சொல்ல முடியாது ஸார்! எனக்கு இருந்த பயத்தில் காது, மூக்கு எல்லாம் செயலற்றுப் போய் விட்டன. தவிர, இந்தப் பெயர் அவ்வளவு முக்கியம் என்று எனக்கு அப்போது தோன்றவில்லை. எந்த நிமிஷம் அவர்கள் தேடிக் கொண்டு வந்து, பீரோவுக்குப் பின்னால் இருந்த என்னைக் கண்டுபிடித்து இழுத்துக் கையை முறுக்குவார்களோ என்று நெஞ்சு அடித்துக் கொண்டது. கொன்று போட்டாலும் கேள்வி முறை இல்லை அல்லவா! நல்ல வேளையாக மற்றவன், 'விடப்பா! இங்கே நிற்பதற்கு நாம் அங்கே போய் நின்றாலும் பிரயோசனம் உண்டு. இங்கே இருப்பானா எவனாவது? மேலும் விளக்குப்போட்டு இருப்பதைப் பக்கத்து வீட்டுக்காரன் எவனாவது பார்த்தால் வம்பு!' என்று புத்தி சொன்னான். எனக்கு ஒருமுறை நன்றாக வியர்த்து விட்டது. தலைக்கு வந்த ஆபத்து இப்படிப் போயிற்றே என்று ஆறுதல் ஏற்பட்டது. இருவரும் விளக்கை அணைத்துக்கொண்டு, வந்த வழியே திரும்பி போனார்கள். போகும் போது, நான் மெள்ள எட்டிப் பார்த்தேன். இரண்டு பேர்தான். ஒருவன் உயரமாக வாட்டசாட்டமாக இருந்தான்; மற்றவன் குள்ளன். அதோடு பருமன் இல்லாமல் சிறு கூடாக இருந்தான்.



''அவர்கள் சென்ற பதினைந்து நிமிஷத்திற்குப் பிறகு நான் வெகு ஜாக்கிரதையுடன் வெளியே வந்தேன்.

''முன்போலவே கதவைப் பூட்டிச் சாவியை எடுத்துக் கொண்டு, வெளியேறி, தெரு முனைக்கு வந்த பிறகுதான் வெளிச்சத்தில் மணியைப் பார்த்தேன். சரியாக முப்பத்தைந்து நிமிஷம் அந்த வீட்டில் இருந்திருக்கிறேன்! இன்னும் திருநெல்வேலி எக்ஸ்பிரஸ் கிளப்ப முப்பத்தைந்து நிமிஷங்களே இருந்தன. ஒரு 'டாக்ஸி' பேசி எழும்பூருக்கு விரைந்தேன். ரயில் புறப்படப் பதினைந்து நிமிஷங்களே இருந்தன,

''நான் எடுத்த பையை மேல் துணியில் சுற்றி வைத்துக் கொண்டு அங்கும் இங்குமாக அலைந்து அந்த ஸூட் ஆசாமியைத் தேடினேன். அங்கே காணோம். ஆனால் என்னைத் திடுக்கிட வைத்தது வேறு ஒரு விஷயம். நான் பீரோவின் பின்னால் ஒளிந்து கொண்டிருந்த சமயம் இரண்டு ஆட்கள் வந்து போனார்களே, அவர்களை அங்கே பார்த்தேன்! அவர்கள் இருவருடைய முகத்தை அதற்கு முன்பாக நான் அறிந்ததில்லை என்றாலும், முதுகுப்புற அடையாளமே போதுமானதாக இருந்தது. சந்தேகம் இல்லை. அவர்களே தான் அந்த வீட்டிற்குள் வந்தவர்கள், குள்ளமாக வந்தவன் குரலும், ஆஜானுபாகுவாக இருந்தவனின் கர்ஜனையும் காட்டிக் கொடுத்து விட்டன. என்னை அவர்களுக்குத் தெரியாதாகையால் நான் தைரியமாக அவர்களைக் கவனி[illegible] வரை அவர்களும் அங்கிருந்து நகரவில்லை; நானும் என் கண்காணிப்பை நிறுத்தவில்லை.

29/05/2011 12:43

''மூன்று ரயில்களும் கிளம்பிச் செல்லும்வரை ஸ்டேஷனிலேயே நின்று பார்த்துவிட்ட பிறகே என் வீட்டுக்குத் திரும்பினேன் அந்த ஸூட் ஆசாமி வெளியிலும் இல்லை. கடைசி கடைசியாக ஸென்ட்ரல் ஸ்டேஷனுக்கும் சென்று ஒரு சுற்றுச்சுற்றினேன். வீண் அலைச்சல். வேறு வழியின்றி அந்தப் பையை என் வீட்டுக்கே கொண்டு வந்து, பீரோவில் வைத்தேன்...மறுபடி அந்த டவுன் வீட்டைத் தேடிப் போய் கதவைத் திறந்து, இரும்புப் பெட்டியில் வைப்பது ஆபத்தாகி விடும் என்று பயந்து விட்டேன்.''

சந்துரு அவரையே பார்த்துக் கொண்டிருந்துவிட்டு, ''நீர் பயந்தது மிகவும் சரி! இப்போது அந்தப் பை உம்மிடம் தானே இருக்கிறது?'' என்று கேட்டான்.

''இல்லை...''

''நான் எதிர்பார்த்ததுதான். இருந்தால் என்னிடம் இப்போது வர மாட்டீர்களே?... மேலே நடந்த கதையைச் சொல்லுங்களேன்!''

''கதை ஒன்றும் இல்லை. காலையில் எழுந்து பார்த்தேன். அதாவது, என் மனைவிதான் முன்னாடி பார்த்தாள் பீரோவை யாரோ திறந்திருக்கிறார்கள். மற்ற எல்லாம் வைத்தது வைத்தபடி இருக்க, அந்தப் பையை மட்டும் காணோம்!''

''விட்டது சனியன்! போய்ப் படுத்துக் கொண்டு குறட்டை விடும்!''

''அதென்ன அப்படிச் சொல்கிறீர்கள்! களவு போன விஷயத்தை 'ரிப்போர்ட்' செய்திருக்கிறேன். நாளைக்கு அந்த ஸூட் ஆசாமி என்னிடம் வந்து 'என் பையைக் கொடு' என்றால் நான் என்ன செய்யட்டும்!''

''மரியாதைராமன் கதையைப் படிக்கச் சொல்லும்! அல்லது அவனை இங்கே அழைத்து வாரும். நான் என்ன செய்யலாம் என்று கற்றுக் கொடுக்கிறேன். நீர் போன வீடு லிங்க செட்டித் தெருவில் 1036ம் நெம்பர்தானே? 'அது உம்முடைய வீடா?' என்று நான் அவனைக் கேட்கிறேன். அவன் ஓட்டம் பிடிப்பான்.''



''அப்படியென்றால்?''

''கனகய்யா செட்டிக்கும் சுந்தரய்யா செட்டிக்கும் நடக்கிற வியாஜ்யத்தில் அந்த வீடு மூன்று மாசமாகப் பூட்டிக்கிடக்கிறது. நீர் அந்த ஸூட் ஆசாமியின் பெயரைக் கேட்கவில்லையே?''

''இல்லை, அது ஒரு பிசகு...''

''ஒரு பிசகா? இதுவரை இரண்டாயிரம் பிசகு பண்ணியிருக்கிறீர்! என்னைக் கேட்டால் நீர் இங்கே வந்து இதெல்லாம் சொல்கிறதே ஒரு பிசகு என்பேன்!''

''அப்படிச் சொல்லிவிட்டால் நான்...''

''நீர் நேற்று இரவு அந்தப் பையை உம்முடைய வீட்டுக்குக் கொண்டு போனது ஒரு பெரிய பிசகு. அதை பீரோவில் வைப்பதற்குப் பதிலாக அடுக்களையில் வைத்திருந்தாலாவது இன்னொரு பெரிய பிசகு செய்யாமல் இருந்திருக்கலாம்; கவலை இல்லாமல் தூக்கம் போட்டது ஒரு பிசகு. அந்தப் பையில் என்ன இருந்தது என்றாவது திறந்து பார்த்தீரா?''

''இல்லை; அது நாணயமாகாது என்று சும்மா இருந்து விட்டேன்...''

''கனமாக இருந்ததா?''

''இல்லை... அதிக கனமும் இல்லை; லேசும் இல்லை.''

சந்துரு வெகு நேரம் மௌனமாகத் தலையை ஆட்டிக் கொண்டிருந்தான். ''இன்ஸ்பெக்டர் கோபாலனிடம் எல்லாம் சொல்லிவிட்டீர்கள் அல்லவா?'' என்று கேட்டான்.

''ஆமா...அப்புறம்தான் அவர் உங்களைப் பார்த்துச் சொல்லும்படி ஆக்[illegible]

29/05/2011 12:44

''நீங்கள் ஒன்று செய்யுங்கள். நடந்தது இப்படியே இருக்கட்டும். அந்த வீட்டுச் சாவிகளை என்னிடம் இப்படி

ஒப்புவித்து விடும்... அவையாவது திருட்டுப் போகவில்லையே! நல்லவேளை! நான் கவனித்துக் கொள்கிறேன்... உமது பெயர் விலாசம் எல்லாம் குறித்துக் கொடுத்துவிடும்; ஸூட். ஆசாமி உம்மிடம் வந்து எப்போதாவது பையைக் கேட்டால் நடந்ததைச் சொல்லி விடலாம். அவன் உம்முடைய பேரில் குற்றம் கண்டுபிடிக்க முடியாது. பையைக் குறிப்பிட்ட இடத்தில் நேரத்தில் இருந்து வாங்கிக் கொள்ள வேண்டியது அவனுடைய பொறுப்பு. அவன் அதைச் செய்யத் தவறி விட்டதால், நஷ்டத்தை அவனும் ஏற்க வேண்டியதுதான். அதுவே முறை. அவன் பெயர் விலாசம் எல்லாம் கேட்டு எனக்கு உடனே எழுதிவிட வேண்டியது உம்முடைய பொறுப்பு... ஞாபகம் இருக்குமா?''

''கட்டாயம் செய்கிறேன். அது என் கடமை. ஒருகால் அவன் வராமலேயே கூட இருக்கலாம் அல்லவா!''

''நீரும் நம்மைத் தேடிக் கொண்டு வராமலேயே கூட இருந்துவிடலாம்...உமக்கும் தொந்தரை இல்லை; எனக்கும் நிம்மதி.''

அப்போது வந்த இடத்திற்கே இன்ஸ்பெக்டர் கோபாலன் வந்து விட்டார். ''கதையைக் கேட்டீரா? என்ன தோன்றுகிறது உமக்கு, சந்துரு?'' என்று கேட்டார்.

''விஷயங்கள் நிறைய நடந்திருக்கின்றன. இந்த 'ஸார்' அழகாக, கோவையாகச் சொன்னார். ரொம்ப கெட்டிக் காரர்கள் சாமான்யமான காரியங்களைக் கவனிப்பதில்லை; அதுமாதிரி இவர் அந்தப் பையை அப்படித் திறந்து மூடியிருந்தால் பாதி 'கேஸ்' தீர்ந்திருக்கும். ஸூட்காரரர் பெயரைக் கேட்டுக் கொண்டிருந்தால், ஏதோ ஒரு பிடிப்பாவது இருக்கும்...முழுக்க முழுக்க இவர் கதா காலட்சேபமாகவே நடத்தி, பையையும் பறிகொடுத்துவிட்டு வந்து நிற்கிறார்.''

''அது சரி. அவருக்கு என்ன சொல்லப் போகிறாய் இப்போது?''



''என்ன சொல்ல முடியும்? ஒன்று, இதோடு இந்தக் கேஸ் பூர்த்தியாகி விடலாம்; அல்லது, இதுவே மற்றொரு பெரிய கேஸுக்கு ஆரம்பம் என்றும் சொல்லலாம். எல்லாரும் பொறுத்திருந்து பார்க்க வேண்டியதுதான்.''

''ஆல்-ரைட்! நீயே கவனித்துக் கொள்ளு இவரை! தெரிந்ததா?''— இன்ஸ்பெக்டர் நிற்காமலே போய் விட்டார்.

''ரொம்பவும் வந்தனம்; நானும் வருகிறேன். மிகவும் தொந்தரவு கொடுத்து விட்டேன், மன்னிக்க வேணும்'' என்றார் அந்த ஆசாமி எழுந்து நின்று.

''தொந்தரவு கொடுத்தது ஒரு பெரிய காரியம் இல்லை. நான்தான் கேட்டுக்கொண்டிருக்கத் தயாராக இருக்கிறேனே. இன்னும் ஏதாவது விஷயங்கள் ஞாபகம் வந்தால் சொல்லுங்கள். 'டாக்ஸி'யில் செல்லும்போது, யாராவது உம்மைப் பின்பற்றினதாகத் தோன்றியதா?''

''எனக்கு அப்படி ஒரு சந்தேகமும் ஏற்படவில்லை. அதனால் நான் கவனிக்கவில்லை.''

''அந்த 'டாக்ஸி'யும், பிறகு உங்களை வீட்டில் கொண்டு சேர்த்த 'டாக்ஸி'யும் ஒன்றல்லவே?''

''இல்லவே இல்லை.''

''ஸூட்காரன் உங்களைப் பிடித்து ஒரு வேலை ஏவுவதற்கு ஏதாவது காரணம் தென்படுகிறதா?''

''நானே தீவிரமாக யோசித்துப் பார்த்து விட்டேன்; விளங்கவில்லை.''

''அவன் உடனே எழும்பூரில் ரயில் ஏறப் போவதாகக் கூறினானே,பக்கத்தில் பெட்டி படுக்கைகள் இருந்தனவா?''

''மன்னிக்க வேண்டும். நான் கவனிக்கத் தவறி விட்டேன்.''

''எத்தனை விஷயங் [illegible] போகட்டும்; இப்போது போய் வாரும். இன்றைக்கு இத்தனை போதும்.''

29/05/2011 12:44

''இனிமேல் உங்களுடைய யோசனைப்படி நான் நடந்து கொள்கிறேன்.''

சந்துரு நிமிர்ந்து பார்த்தான்; அது உங்கள் இஷ்டம். இல்லாவிட்டால், என் யோசனையின் பலன் எதுவும் கிடைக்காது! இன்றைய தேதியைப் போட்டு, 'ஸி.ஐ.டி. சந்துருவின் பொன் மொழி' என்று உங்கள் 'டயரி'யில் கூடக் குறிப்பிட்டு வைத்துக் கொள்ளலாம்.''

அன்று பிற்பகல் வழக்கம்போல் அவன் தன் ஜாகைக்குப் போய்வந்த பின்பு போலீஸ் ஸ்டேஷனில் இன்ஸ்பெக்டர்கள் நாலைந்து பேர் ஸி.ஐ.டி. சந்துருவை அணுகி இன்ஸ் பெக்டர் கோபாலன் அழைத்து வந்த புதிய 'கேஸை'ப் பற்றி விசாரித்தார்கள், ''இப்போது சொல்லும்படி அதில் பிரமாதமாக இல்லை; ஒன்று அந்தக் 'கேஸ்' இன்றோடு தீர்ந்துவிட்டது; இல்லையோ, நாளைக்குப் பெரிதாக ஆரம்பமாகிறது— ஆகவே இப்போது அதை எடுத்து நாம் ஆராய்வதில் உபயோகம் இல்லை'' என்று அவர்களிடம் சொல்லி விட்டான்.

மாலை ஆறு மணிக்குத்தான் அவன் வீட்டுக்குத் திரும்பினான். தன் அறைக் கதவைத் திறந்ததுமே, வாசற்படியில் சற்று நின்று உள்ளே நிதானித்தான்.

மத்தியானம் அடுக்காக இருந்த காகிதக்கட்டுகள் கீழே இறைந்து கிடந்தன. மேஜை டிராயர்களை இழுத்துத் திறந்து, உள்ளேயிருந்த 'பைல்'களை வாரிவெளியே யாரோ வீசியிருந்தார்கள். நாற்காலி ஒன்று கவிழ்ந்து கிடந்தது.

மூலையில் இருந்த பீரோவின் பூட்டை உடைத்து, பல நாட்களாகச் சேர்த்திருந்த குறிப்புகளைக் கீரை போல் உதிர்த்திருந்தார்கள்.

சந்துரு ஏறின வழியே திரும்பி மாடிப் படிக்கட்டில் ஏழெட்டுப் படிகள் இறங்கி, கீழே குடித்தனம் இருந்தவரின் பெண் சம்பாவை அழைத்தான். எட்டு வயதுப்



பெண் என்றாலும், வெகு சூடிக்கை அவள். சந்துரு எதையும் அவளிடந்தான் விசாரிப்பான்.

''யாரேனும் என்னைத் தேடிக்கொண்டு வந்தார்களா குழந்தை? உனக்குத் தெரியுமா?'' என்று கேட்டான்.

''இங்கேயேதான் நான் இருக்கிறேன். இந்த வழியாக யாரும் வரவில்லை!'' என்று பதில் கொடுத்தாள் அவள்.

''அதுதான் கெட்டிக்காரத்தனமாகப் பதில் சொல்கிறது. இங்கே நான் இரண்டு மணி நேரம் வேலையாக இருக்கப் போகிறேன். யார் வந்தாலும் நீ நிறுத்திவிட வேண்டும். சமர்த்தல்லவா!'' என்று அனுப்பினான் முதுகில் தட்டி. ஒரு சிறு முக்காலியை இழுத்துப் போட்டுக்கொண்டு உட்கார்ந்து காகிதங்களை அடுக்க ஆரம்பித்துவிட்டான்.

எங்கோ கெடியாரம் ஏழும் அடித்து; ஏழரையும் அடித்து விட்டது. சம்பா மேலே வந்தாள். ''மாமா! இரண்டு பேர் வந்திருக்கிறார்கள் உங்களைப் பார்க்க!'' என்று அறிவித்தாள்.

''பெயர்?''

''சொல்ல மாட்டான் என்கிறார்கள்.''

''முரடர்களா? கையிலே துப்பாக்கி, கன்னக்கோல், சம்மட்டி, கத்தி ஏதானும் கொண்டு வந்திருக்கிறார்களா?''

''அதெல்லாம் இல்லை, மாமா! ஜார்ஜெட் புடவை கட்டிக்கொண்டு ஒரு மாமி... அவள்கூட ஒருத்தர்...''

''யார் மாதிரி இருக்கிறாள் அவள்?''

''நான் முகத்தைச் சரியாகப் பார்க்கவில்லை. எங்கக்கா பத்மாதான் அவளைப் பார்த்து முகத்தைச் சுளித்துக் கொண்டு உள்ளே போனாள். அதிலிருந்து அவள் ரொம்ப அழகாக இருக்கவேண் [illegible] இல்லையா?''

''உன்னிடமே நான் துப்பறியும் வேலை கற்றுக்கொள் கிறேன், சம்பா!—அந்த 'மாமா' எப்படி இருக்கிறார்?''

29/05/2011 12:44

''டாக்டர் மாதிரியும் இருக்கிறார்; வக்கீல் மாதிரியும் இருக்கிறார்... பத்மா அவரை அந்த மாமியின் காதலன் என்று சொல்கிறாள்...''

''எது, ரொம்ப சர்ச்சை நடந்திருக்கிற மாதிரி இருக்கிறதே! அவர்கள் என்னைப் பார்க்க வேண்டும் என்கிறார்களா?''

''ஆமாம்... 'இப்போது முடியாது. வேலையாக இருக்கிறார்' என்றேன். அந்த மாமிதான் சொன்னாள்: 'எப்படியானும் உடனே பேசியாக வேண்டும். கொஞ்சம் போய்ச் சொல்லு' என்கிறாள். உடனே பத்மா என்னிடம், 'சந்துரு மாமா இந்தப் பெண்ணைப் பார்த்துவிட்டால் மாடிப்படியெல்லாம் இறங்கி வரவேற்கவே வந்துவிடுவார்' என்கிறாள்.''

''பத்மாவிடம் நான் பிறகு பேசிக் கொள்கிறேன். முதலில் அவர்களை இங்கே வரச்சொல்!'' என்றான் சந்துரு.

இரண்டு நிமிஷங்களுக்குப் பிறகு அவர்கள் இருவரும் அறையில் பிரவேசித்தார்கள்.

சம்பா வர்ணித்தது அவ்வளவும் உண்மைதான்; பத்மா முகத்தைச் சுளித்ததும் மிகவும் நியாயமேதான். இந்த மாதிரி பிரமாத அழகிகளைக் கண்டு சாதாரணப் பெண்கள் பொருமுவதும் இயற்கையே. சந்துரு பெண்களின் முக லட்சணங்களை ஆராய்ந்து கொண்டிருக்கும் பேர்வழி இல்லை; அவன் மனக்கதவு அந்தத் துறையில் அடைபட்டுத் துரு ஏறிவிட்டது. எனினும், இவளைப் போன்ற ஒரு பேரெழில் கொண்ட மங்கையை அபூர்வமாகத்தான் காண முடியும் என்பதை உணர்ந்து கொண்டான்.

இருபது முதல் இருபத்திரண்டு வரை அவள் வயதை மதிக்கலாம். நடையிலேயே ஒரு அடக்கம் தெரிந்தது; குழந்தை போன்ற சங்கோஜமும் பயந்த சுபாவமும், அவள் அழகுக்கு ஒரு மெருகு கொடுத்தமாதிரி அமைந்துவிட்டன. உடுத்தியிருந்த புடவை மிக விலை பெற்றதுதான்; ஆனால்,



அதில் டாம்பீகம் இல்லை. சுருள் சுருளாக இருந்த கேசம், ரோஜா இதழைப் போன்ற மேனி, மான் குட்டியினுடைய கண்—இப்படியெல்லாம் அவளை ஒரு கவிஞன் வர்ணித்திருப்பான். சந்துரு உட்கார்ந்தபடி முகத்தை நிமிர்த்தி, புருவத்தை நெரிக்காமல், ''வாருங்கள்!'' என்றான்.

அந்தப் பெண்ணின் பின்னால் வந்த இளைஞனுக்கு இருபத்தெட்டு வயதிருக்கும். அவனும் கைகூப்பி, ''வணக்கம்'' என்றான்.

சந்துரு இருவரையும் பார்த்துப் புன்முறுவல் செய்து விட்டு, ''மிக அவசரமான விஷயமாகப் பார்க்கவேண்டும் என்று சொன்னீர்களாம்...இங்கே இப்போதே சொல்லலாம் அல்லது, ஒத்திப்போட்டு நாளைக்குக் காலையிலும் சந்திக்கலாம். என் அறை, ஒழுங்கு செய்யாமல் கிடக்கிறது...'' என்றான்.

அந்தப் பெண்மணிதான் பேசினாள் ''அதனால் பரவாயில்லை... உங்களுக்குத் தொந்தரவுகள் அதிகம் இருக்கும். இருப்பினும் எங்கள் கவலை ஒன்றை உங்கள் காதில் இன்றே போட்டு வைத்துவிட விரும்பி வந்திருக்கிறோம்.''

''கவலையா?... உட்காருங்கள்! என் வரையில் நின்று கவலைப்படுவதைவிட உட்கார்ந்து கொண்டு கவலைப் படுவது சௌகரியம் என்பேன். இரண்டாவது, கவலைப் படாமலே இருப்பது மிகவும் உத்தமம்... எங்கே, இப்போது தள்ளுங்கள் என் பக்கம் உங்கள் கவலையை!'' என்றான் சுவாதீனத்துடன்.

''எனக்கு அனுமதி கொடுங்கள்...மிஸ் இந்திரா மிகவும் மனம் இடிந்து போயிருக்கிறாள். ஆகையால், தெளிவாக அவளால் உரைக்க முடியாது'' என்று இளைஞன் முந்திக் கொண்டான். ''இவளுடைய சிறிய தகப்பனாரைப் பற்றி நீங்கள் கட்டாயம் [illegible] செங்கல்வராய பிள்ளை என்று பெரிய [illegible]

29/05/2011 12:45

பேட்டையில் அவருக்குப் பங்களா இருக்கிறது. புரசை வாக்கத்தில் அவர் 'பிஸினஸ்' நடக்கிறது...''

''எனக்குப் பெரிய மனுஷர்களைப் பற்றித் தெரியாது; மன்னிக்க வேண்டும்; விவரங்கள் சொன்னால் இனிமேல் தெரிந்து கொள்கிறேன்!'' என்று காகிதங்களை அடுக்கினான் சந்துரு. ''சொல்லுங்கள், மிஸ்டர் நாராயணன்! ஏன் நிறுத்திவிட்டீர்கள்!'' என்றான்.

திகைத்து விட்டான் இளைஞன். ''என் பெயர் தெரியுமா உங்களுக்கு?''

''சற்று முன் வரை தெரியாது. அதோ சட்டைப் பையில் நீட்டிக்கொண்டிருக்கும் கார்டில் விலாசத்தைப் பார்த்ததும் ஊகித்தேன்... நீங்கள் செங்கல்வராய பிள்ளைக்கு எப்படி உறவினர்?''

''நான் உறவினன் இல்லை. இந்திரா எனக்குக் கல்லூரியில் சிநேகிதம் ஆனாள், அதிலிருந்து எங்களுக்குள் பழக்கம் உண்டு.

''பிள்ளை அவர்கள் கண்ணே இல்லாதவர்; இன்னும் உங்களைக் கல்யாணம் செய்து வைத்துப் பார்க்கவில்லை... போகட்டும், பின்னால் அவருக்குப் புத்தி வருகிறதா, பொறுத்துப் பார்ப்போம்! இப்போது உங்கள் கவலை அது இல்லை...''

''இப்போது இல்லை... இந்திரா சில வாரங்களாக அவளுடைய சிறிய தகப்பனார் விஷயமாகக் கவலைகொண்டிருக்கிறாள். அவர் வழக்கம் போல் இல்லை. சிடுசிடுவென்று விழுகிறார். யாருடனும் சரியாகப் பேசுவதில்லை. தூங்குவதில்லை; 'பிஸின'ஸைக் கவனிப்பதில்லை. இந்திராவின் தமையன் கணேசனுடன் சண்டை போட்டு, அவனை வீட்டை விட்டு வெளியே போகும்படி கூச்சல் போடுகிறார். இத்தனை நாளும் இருந்த மாதிரி இல்லை அவர்! ஏதோ ஒரு 'பயம்' அவரைச் சூழ்ந்து கொண்டிருக்கிறது என்று சம்சயிக்க வேண்டியிருக்கிறது...''



''அது என்ன பயம் என்று ஸ்ரீமதி இந்திரா சொல்லினால் கேட்கலாமா?''

இந்திராவின் குரல் வெகு இனிமையாக இருந்தது. ''சித்தப்பா இரவு படுத்தால் காலை வரை எழுந்திருக்க மாட்டார். அவர் சிரிப்பு வீடெல்லாம் அதிரும். முக்கியமாக அண்ணா கணேசனிடமும் என்னிடமும் மிகவும் பிரியமாக இருப்பார். இப்போதெல்லாம் இரவு வேளைகளில் நடமாடுகிறார். தோட்டத்தில் உலாவுகிறார். சிறு சப்தம் கேட்டாலும் நடுங்குகிறார். வருகிற கடிதங்களை எல்லாம் தனிமையில் கொண்டு வைத்துக் கொண்டு வாசிக்கிறார்; உடன் கிழித்துப் போடுகிறார். முக்கியமாக அண்ணன் கணேசனை கண்ணெதிரில் காண மாட்டேன் என்கிறார்... பழைய சித்தப்பாதானா என்னும்படி இருக்கிறது...''

''ஏதேனும் உடல் நலம் பாதிக்கப்பட்டிருக்குமா?''

''கேட்டுப் பார்த்தோம். வைத்தியரை நெருங்க வொட்டேன் என்று பிடிவாதம் செய்கிறார். 'வெளியூர் சென்று வாருங்கள்' என்று கூடக் கெஞ்சினோம். ஒன்றும் பலன் இல்லை. அதுவும் முந்தாநாள் இரவு இரும்புப் பெட்டியைத் திறந்து, ஏதோ ஒரு தோல் பையைக் காணோம் என்று ஆர்ப்பாட்டம் செய்திருக்கிறார்! அடேயப்பா! இதுவரை அவர் அப்படிக் கூச்சல் போட்டு நான் கண்டதில்லை. நாலு பேர் அணைத்துப் பிடித்துக் கொள்ள வேண்டியிருந்தது. ஆவேசம் வந்தவர் போல் குதித்தார். அதன் பிறகு ஒரே படுக்கை; அனத்தல், ஜுரம்... அப்படி எத்தனை பணம் நஷ்டமானாலும் போகட்டும் என்கிறேன்; 'உனக்கென்ன தெரியும்' என்று சீறுகிறார்...''

''ஓஹோ!...இப்போது நான் செய்யக்கூடியது என்ன?''

''களவு போன பையை மீண்டும் கிடைக்கும்படி ஏதேனும் நடவடிக்கைகள் எ[illegible] சமாதானம் அடைவார். [illegible] பேசலாம்...உங்கள் உதவியை நாடிக்கொண்டு வந்தோம்.''

29/05/2011 12:4

டெலிபோன் மணி 'கணகண'வென்று அடித்தது. சந்துரு ரிசீவரைக் காதில் எடுத்து வைத்துக் கொண்டு, ''ஹெல்லோ... யார் அது?'' என்று கேட்டான்.

''நான் யார் என்பது அவசியம் இல்லை...சந்துருதானே பேசுகிறது?'' என்று குரல் கேட்டது.

''அப்போ அதுவும்கூட அவசியம் இல்லை!'' என்றான் சந்துரு.

''இன்று காலை ஒரு மடையன் வந்து ஒரு தோல் பை காணாமல் போனது பற்றி உளறினானா?''

''எல்லாம் தெரிந்த மேதாவி ஒருவருக்கு நான் பதில் சொல்லித்தான் ஆக வேண்டுமா?''

''தேவை இல்லை. இப்போது வேறு இரண்டு முட்டாள்கள் வந்து உட்கார்ந்து பிதற்ற ஆரம்பித்துவிட்டார்களா?''

''உங்கள் உபாஸனா தேவதை இட்சிணியா? அல்லது வெறும் கற்பனையா?''

''இரண்டும் இல்லை! யமன்! இந்த விவகாரங்களில் நீ தலையிட்டுக் கொள்ளாதே! எச்சரிக்கை செய்யவே அழைத்தேன். இவர்களை உடனே அனுப்பிவிடு. தெரிந்ததா? அனுப்பவில்லை என்றால் எனக்குத் தெரியும். அப்புறம் நான் உன்னை வந்து 'பேட்டி' காண்பேன். என் பெயர்தான் சொல்லிவிட்டேனே?—யமன்!''

''மிகவும் வந்தனம். எனக்குச் சம்பளம் கொடுக்கிறவர்களின் ஆக்ஞைகளைக் கேட்கவே நேரம் போதவில்லை... அப்புறம் நீங்கள் சௌக்கியந்தானே! நானும் கயிறு வாங்கி வைக்கிறேன். ஆமாம், கயிறு! எங்கள் போலீஸ் இலாகாவில் மனித 'யமன்'களைக் கயிற்றால்தான் கழுத்தில் கட்டித் தொங்கவிடுவோம்... உடம்பு பத்திரம்!''

டெலிபோனை வைத்து விட்டுச் சந்துரு அவர்களைப் பார்த்துப் புன்னகை செய்தான். ''என் சிநேகிதன் ஒருவன்



பேசினான். எப்போதும் அவனுக்கு வேடிக்கை விளையாட்டுதான்'' என்றான்.

இந்திரா அவனை ஒரு கணம் சந்தேகத்துடன் நோக்கினாள். பிறகு, ''உங்களைப் பங்களாவுக்கு அழைத்துப் போய்க் காட்ட வேண்டும் என்றே இப்போது நாங்கள் வந்தோம். சித்தப்பாவுக்கு ஏதோ பெரிய ஆபத்து நெருங்கிக் கொண்டிருக்கிறது. நீங்கள் ஒரு முறை வருகிறீர்களா?'' என்று கேட்டாள்.

''பேஷாக வருகிறேன்... இப்போதே வருகிறேன்'' என்று உற்சாகமாக எழுந்துவிட்டான் சந்துரு.

# சில அவசியமான அறிமுகங்கள்

சந்துருவைப் பின்தொடர்ந்து நாராயணனும்இந்திராவும் மாடிப்படி இறங்கி வந்தார்கள். அப்போது வாசல் வராந்தாவில் சம்பாவும், பத்மாவும், அவர்கள் வருகையை எதிர்பார்ப்பவர்கள் போல் நின்று கொண்டிருந்தார்கள். ''சம்பா! நான் கொஞ்சம் வெளியே போய் வருகிறேன்—குழந்தை! யார் கேட்டாலும், 'எங்கேயோ போயிருக்கிறார் எப்போ வருவாரோ தெரியாது' என்று சொல்லு. டெலிபோன் அடித்தால் நீ பயப்படாதே! அது சும்மா அடிக்கட்டும்; அதை எடுத்துக் கேட்டால் இன்னம் பயமாக இருக்கும்!'' என்றான் சந்துரு. பிறகு இந்திராவின் பக்கம் திரும்பி, ''சம்பாவிடம் ஒரு காரியம் சொன்னால் அதை நாம் மறந்துவிடலாம்'' என்றான்.

இதற்குள்ளாக, பத்மா மூன்று முறை இந்திராவைப் பார்த்து மூக்கைச் சுளித்து விட்டாள். அவளையும் சந்துரு இந்திராவுக்கு அறிமுகம் செய்து வைத்தான். ''இந்தக் குழந்தை ரொம்பசமர்த்து. எத்தனை சமர்த்தோ அத்தனை அழகு என்றால் பார்த்து 29/05/2011 12:4 கெட்டிக்காரி. இந்த வீட் ... ஜா

வைத்துக் கொண்டிருக்கிறான் என்று பெயர்தான். உண்மை எஸ். ஐ. டி. நம்முடைய பத்மாதான்!'' என்றான் வேடிக்கையாக. பத்மா அவனுக்கும் முகத்தைச் சுளித்துக் காட்டினாள்.

இதற்குள் ஒரு பெரிய 'பாண்டியாக்' மோட்டார் கார் சத்தம் செய்யாமல் வாசல் எதிரே வந்து கம்பீரமாக நின்று விட்டது. நாராயணன் இப்போது சந்துருவை அந்த வண்டியில் ஏறிக் கொள்ளும்படி அழைத்தான்.

டிரைவருக்குப் பக்கத்தில் நாராயணன் உட்கார்ந்து கொள்ள, பின் ஸீட்டில் சந்துருவும் இந்திராவும் அமர்ந்து கொண்டார்கள். காரில் இருந்த மெத்தைகளும், அது ஓடும் போது சற்றும் குலுங்காமல் நலுங்காமல் அளித்த சுகமும், செல்வச் சீமான்களின் வெளி வாழ்க்கையின் பெருமைகளையே சுட்டிக்காட்டின. இந்திரா ஏதோ சொல்லத் தொடங்குமுன் சந்துரு டிரைவரைப் பார்த்து, ''உன்னை நான் இதற்கு முன் எங்கேயோ சந்தித்திருக்கிறேன்... இல்லையா?'' என்று கேட்டான்.

நாராயணனும் இந்திராவும் உன்னிப்பாகக் கவனித்தார்கள். டிரைவருக்குங்கூடச் சற்றுத் தூக்கி வாரிப் போட்டது. ''இருக்க முடியாதுங்க...நான் இந்தப் பக்கமே இல்லை'' என்றான் அவன்.

''ஓ! சரிதான்! அப்படியானால் நீ கந்தப்பன் இல்லை, கந்தப்பன் என்று எனக்குத் தெரிந்த ஒரு ஆசாமி உண்டு. கிட்டத்தட்ட உன்னைப் போலவே இருப்பான்.''

''என் பெயர் கன்னையன்!'' என்று ஓர் உறுமலாக டிரைவரின் பதில் கிடைத்தது.

சந்துரு சிறிது நேரம் மௌனமாக இருந்தான். இவ்வளவு பெயர் போன ஒரு துப்பறிபவன் எதற்காக ஒரு தவறான ஜோஸ்யம் செய்தான் என்பது இந்திராவுக்கும் நாராயணனுக்கும் ஆச்சரியமாக இருந்தது. ஆனாலும், இதற்கு ஏதோ காரணம் இருக்கவேண்டும் என்பதை



மட்டும் ஊகித்துக் கொண்டார்கள். சந்துரு தொடர்ந்து, ''கன்னையன்! நல்லவேளை நீ கந்தப்பனாக இல்லையே! அவனாக இருந்தால், நாங்கள் காரில் ஒரு வார்த்தை பேசிக் கொண்டு வருவதென்பது முடியாது. பத்திரிகையில் விளம்பரம் போடுவதைவிட துரிதமாக விஷயம் வெளியில் பரவி விடும்! இங்கே டிரைவராக இருப்பவன் காதைச் செவிடாக்கிக் கொண்டிருக்காவிட்டால், உத்தியோகம் அடிக்கடி மாறிக் கொண்டே இருக்கும். இப்போது இந்திரா அவர்கள் கொஞ்சம் விஷயங்களை விவரமாகச் சொன்னால் சௌகரியமாக இருக்கும். நடுவில் டெலிபோன் ஒன்று வந்து, வீட்டிலேயே விஷயம் பூராவையும் கேட்டுக்கொள்ள முடியாமல் செய்து விட்டது... நான் அறிந்தவரையில் மிஸ்டர் நாராயணனுக்கும் செங்கல்வராய பிள்ளைக்கும் அவ்வளவு பொருத்தம் போதாது என்று ஊகிக்கிறேன்...'' என்று நிறுத்தினான்.

''நீங்கள் ஏன் அப்படி நினைக்கிறீர்கள்?'' என்றான் நாராயணன்.

''துப்பறிவதில் இது முதல் பாடம், மிஸ்டர் நாராயணன்! இங்கே இந்திரா என்னைச் சந்திக்க வருகிறாள். அவளுடன் சிறிய தகப்பனார் வரவுமில்லை; அது அவசியமே இல்லை என்றும் நினைக்கிறார். அவர் ஸ்தானத்தில் நீங்கள் வருகிறீர்கள். எனவே, இந்த விஷயத்தில இந்திராவுக்குத் தைரியம் சொல்லிக் கொடுப்பவர், சித்தப்பாவின் நண்பராக இருக்க முடியாது. ஏன், உங்களை அவர் வீட்டிற்குள்ளேயே அனுமதிக்க மாட்டாரே!''

''நீங்கள் சொல்வது உண்மை. இப்போதுகூட நான் வழியில் இறங்கிக் கொள்ளலாம் என்றுதான் உத்தேசித்திருக்கிறேன். அந்தப் பங்களா வாசற்படியில் கால் வைத்தால் வெட்டி விடுவதாக அவர் சபதம் செய்திருக்கிறார்.''

சந்துரு சிரித்தான். ''வாசற்படி வழியாக வராதீர்கள்; ஜன்னல் வழியாக வாருங்[illegible] வதைக் கேட்டு விடுகி[illegible]

29/05/2011 12:45

பங்களாவில் காலடி வைத்தவுடன் யார் யாரைச் சந்திக்கப் போகிறேன் என்பதை முன்னதாகத் தெரிந்து கொண்டு விடலாமே!''

இந்திரா தொண்டையைக் கனைத்து விட்டுக் கொண்டாள்: ''சித்தப்பா பெரிய பங்களாவாகக் கட்டி விட்டார். அதில் இருப்பவர்கள் தொகை என்னவோ சொற்பம்தான். சித்தப்பா பர்மாவிலும், மலேயாவிலும் இருந்து நிறையச் சம்பாதித்துக்கொண்டு எட்டு வருஷத்துக்கு முந்தி இங்கே வந்தார். என் தகப்பனார் காலமான சமயம் அது. அண்ணா கணேசனையும் என்னையும் சித்தப்பாவிடம் ஒப்புவித்து விட்டு அவர் கண்ணை மூடினார். எங்கள் சொத்தெல்லாம் சித்தப்பாவின் மேற்பார்வையில் தான் இன்றைக்கும் இருக்கின்றன.''

''அது நியாயம்தான்... அப்புறம்?''

''எங்கள் குடும்பத்தில் எல்லோருமே இரண்டு பெண்டாட்டிக்காரர்கள் என்று சொல்வார்கள். என் தகப்பனாரின் மூத்த தாரத்தின் மகன்தான் அண்ணன் கணேசன்; அவள் இறந்த பிறகு என் தாயார் இரண்டாவதாக வாழ்க்கைப்பட்டாள். என் தாயாரும் இப்போது இல்லை. கணேசன் மூத்தாள் பிள்ளை என்றாலும், என்மீது உயிராக இருப்பான்; எனக்காகப் பரிந்து கொண்டு அப்பாவிடம் அநேகம் தடவை சண்டைக்குப் போயிருக்கிறான்.''

''நல்ல பிள்ளை... இந்தக் காலத்தில் அப்படி இருப்பவர்கள் அபூர்வம்.''

''சித்தப்பாவிற்கும் இரண்டு தாரங்கள். மூத்தாள் மலேயாவிலேயே ஏதோ ஒரு ரயில் விபத்தில் இறந்து விட்டாள். பிறகு அவர் மணம் செய்து கொள்ளாமலேயே இருந்து, இங்கே வந்த பிறகுதான் திலகவதியைக் கல்யாணம் செய்து கொண்டார். எனக்கும் திலகவதிக்கும் ஏழு வயதே வித்தியாசம். சற்றைக்கெல்லாம் அவளை



நீங்கள் சந்திக்கப் போகிறீர்கள். உண்மையிலேயே சித்தியின் அழகுக்கும் பேச்சுக்கும் எல்லாரும் அடிமையாகி விடுவார்கள். வேடிக்கை வேடிக்கையாகப் பேசுவாள்; எப்போதும் குதூகலமாக இருப்பாள்; என்னிடம் எத்தனை பிரியம் வைத்திருக்கிறாள் என்கிறீர்கள்! 'வயதானவருக்கு இரண்டாம் தாரமாக வாழ்க்கைப் பட்டிருக்கிறாளே இந்த அழகி' என்று நான் படுகிற மாதிரி வேதனை அவள் படுவதாகத் தெரியாது. எல்லாரும் துக்கமாக இருக்கும் இடத்தில் திலகம் இருந்தால் போதும், எப்படியோ சிரிக்க வைத்து விடுவாள்.''

''அத்தனை பிரியம் அவளிடம் நீங்கள் வைத்திருக்கிறீர்கள்...இப்போது அவருக்காவது தாங்கள் என்னைத் தேடி வந்ததில் சம்மதம் இருக்குமா?''

''நான் அவளை அபிப்பிராயம் ஒன்றும் கேட்கவில்லை; சித்தப்பாவைத்தான் நான் கேட்டேன்; அப்போது திலகவதியும் இருந்தாள். சித்தப்பா ''இதெல்லாம் போலீஸ் வரை போக வேண்டிய விஷயம்இல்லை; நீ உன் வேலையைப் பார்த்துக் கொண்டு போ!'' என்று கண்டிப்பாகச் சொல்லி விட்டார். திலகவதி பேசவே இல்லை. நான் பிறகு அண்ணாவிடம் போய்க் கேட்டேன்.''

''அவர் என்ன சொன்னார்?''

''என் அண்ணாவை நீங்கள் நேரில் கண்டு விட்டால், அவன் எப்படி என்று தெரிந்துகொள்ளுவீர்கள் அவனுக்குச் சில மாதங்களாக ஒரு 'லயன்ஸ் பித்து' பிடித்திருக்கிறது. அவனாகவே ரேடியோ செய்கிறதும், வீடெல்லாம் கம்பிகளைப் பொருத்துகிறதும், 'கர்புர்' என்று சத்தத்தைக் கிளப்புவதுமாகப் பொழுதுபோக்குகிறான். இப்போது எது சொன்னாலும் அவ[illegible]இல்லை. இப்படிச் சித்தப்பா படுத்து வி[illegible] செய்யச் சொல்கிறாய்!'' என்று கேட்கிறான். 'திருட்டு நடந்து விட்டதே' என்றால், 'நாம் திருடி வைத்ததை இன்னொருவன் திருடியிருக்கிறான், போ!' என்கிறான்.

உங்களைப் பார்த்து உதவி கேட்கலாமா என்றபோது, 'தேவை யென்று தோன்றினால் கேள்; இல்லையென்றால் விட்டு விடு. நான் சொன்னால் கேட்டுவிடப் போகிறாயா?' என்கிறான்.''

''என்ன படித்திருக்கிறார் உங்கள் அண்ணன்?''

''பி எஸ் ஸி. பாஸ் செய்திருக்கிறான்; மிகவும் சூடிக்கையானவன் என்று பெயர் வாங்கினவன். எல்லா ருடனும் நன்றாகப் பழகுபவன்...''

''அவருக்கும் திலகவதிக்கும் மன வேற்றுமை ஏதும் கிடையாது?''

''அதுதான் எனக்குத் தெரியாத புதிர். அண்ணன், சித்தியை லட்சியம் செய்யவே மாட்டான். ஒரே வீட்டில் இருந்தாலும்கூட ஒருவரையொருவர் தெரிந்து கொண்ட வர்கள் மாதிரியே இராது. அதுவும் சித்தி அடிக்கடி பாட்டுக் கச்சேரி, நடனம் என்று போய்விடுவாள்; வீட்டில் தங்கும் போதும் அண்ணனுடன் அவள் நேருக்கு நேர் பேசிக் கொண்டிருப்பவள் இல்லை...''

''ஆனால், மனஸ்தாபம் என்று எதுவும் இதுவரை ஏற்பட்டது கிடையாது?''

''இல்லை.''

''ஒரு போதும் எதற்கும் சண்டை போட்டுக் கொண்ட தில்லை.''

''எனக்குத் தெரிந்து இல்லை.''

''உங்களுக்குத் தெரியாமல்?''

இந்திரா ஒரு புன்னகை செய்து கொண்டான். ''துப்பறிபவர்களே பொல்லாதவர்கள்; எதை நாம் வேண் டாம் என்று நினைக்கிறோமோ, அதைத்தான் குடைந்து குடைந்து கேட்பார்கள்! ஒரு சமயம் சண்டை போட்டிருக் கிறார்கள். மூன்று நான்கு வருஷங்களுக்கு முன் திலகவதியின் தகப்பனார் வீட்டுக்கு விருந்தாளியாக



வந்தார். வந்தவர், நிரந்தரமாக உட்கார்ந்துவிடுவார் என்ற சந்தேகம் ஏற்படும்போல் இருந்தது. அப்போது அண்ணா அதற்குப் பலமாக ஆட்சேபணை செய்தான்...''

''சித்தப்பாவுக்கு அதில் ஆட்சேபணை இல்லையோ?''

''அவர் தலையிடாமலே இருந்தார். பிறகு அண்ணா சொல்வது சரி என்கிற மாதிரி நடந்து கொண்டார். சித்திக்கு இதில் பெருங் கோபம். ஒருநாள் ஏக இரைச்சல், சண்டை எல்லாம் நடந்தன. அண்ணாவே தன் மூட்டை யைக் கட்டிக்கொண்டு, 'என் சொத்தைப் பிரித்துவிடுங்கள்; நான் சுழன்று கொள்கிறேன்' என்று கிளம்புவதாக இருந் தான். ஏன், அவனுடைய பெட்டிகள், 'ஹோல்டால்' எல்லாவற்றையும் வாசல் ஹால்வரை கொண்டு வைத்து விட்டான். சித்தியும் பிடிவாதமாக, 'போகிறவர்கள் போகட்டும்; யாரையும் வற்புறுத்தி இங்கே இருக்கச் சொல்லவில்லை' என்று இரைந்தாள். சித்தப்பாதான், சித்தியின் அப்பாவைக் காலைப் பிடிக்காத வரை கெஞ்சி, போகும்படி செய்தார். ஏதோ பணம் கொடுத்து அனுப்பி யிருப்பார் என்று கூட நான் நினைத்தேன். இந்த விவ காரத்தில் தலையிடாமல் நான் ஒதுங்கியிருந்து விட்டேன்.''

''திலகவதியின் தகப்பனார் எப்படிப்பட்டவர் வர்ணியுங்கள், கேட்கலாம்!''

''மிகவும் சாமான்யமானவர். பார்வைக்குக் கஷ்டப் பட்டவராகத் தோன்றும் முகத்தில் அருளே இருக்காது; என்னை மன்னித்து விடுங்கள்; ஏதோ குற்றம் செய்து விட்டவர் மாதிரி திருதிருவென்று அவர் விழிப்பார்; யாரையும் நம்பமாட்டார். மகளைத் தவிர ஒருவருடனும் வார்த்தை யாடமாட்டார். யாரையேனும் கண்டால், எதிரில் நில்லாமல் போய்விடுவார். நமக்கே அவரிடம் ஒரு நல்ல அபிப்பிராய[illegible] உத்தியோகம் செய்தார். இவருடை[illegible]சித்தப்பா[illegible] பார்த்து மணம் செய்து கொண்டார் என்பதெல்லாம் ஒரே விசித்திரமாக இருக்கும் எனக்கு...''

29/05/2011 12:46

''அதனால், உங்கள் அண்ணாவின் மேல் அவருக்கு ரொம்பக் கோபம் இருக்கும். சரி, அவர் பெயர் என்ன தெரியுமா?''

''பஞ்சநதம் என்று சொல்லக் கேள்வி. அதைக்கேட்டுத் தெரிந்து கொள்ள முகாந்திரம் இல்லை. ஏதோ ஒருகடிதம் அவருக்கு வந்ததிலிருந்து நான் அதை ஊகித்துக் கொண்டேன். ஆ! இன்னும் ஒரு சமாசாரம் எனக்கு ஞாபகத்துக்கு வருகிறது. இந்தத் தகராறுகள் ஏற்படு வதற்கு முன்பு, திலகவதியின் அப்பாவைத் தேடிக்கொண்டு யார் யாரோ பங்களாவுக்கு வந்தார்கள்! அவரும், சில சமயம் அவர்களை வீட்டில் வைத்துப் பேசுவார். சில சமயம் வெளியே அழைத்துக் கொண்டு போவார்... அவரையே பிடிக்காதபோது அவர் சிநேகிதர்களை எப்படி அண்ணாவுக்குப் பிடிக்கும்?''

''இப்போ பஞ்சநதம் எங்கே இருக்கிறார்?''

''எங்களுக்குத் தெரியாது. அன்றைக்கு வீட்டை விட்டுப் போனவர் இதுவரை திரும்பவில்லை; தமது மகளைப் பார்க்கக்கூட வரவில்லை. அவளும் சேர்ந்தே தம்மை விரட்டி விட்டதாக அவர் எண்ணமாக இருக்கலாம். நீங்கள் இப்போது இருப்பவர்களைப் பற்றித் தானே கேட்டீர்கள்! போனவர்களைப் பற்றியெல்லாம் சொல்கிறேன். என் அண்ணா உங்களிடம் 'வெட்டொன்று துண்டுரெண்டா'கப் பேசினால்கூட நீங்கள் பொருட்படுத்தக் கூடாது.''

''மின்சார வேலைகள் செய்கிறவர், 'ஷாக்' அடிக்கிற மாதிரி பேசலாம்என்பதும் எதிர்பார்க்க வேண்டியதுதான்.''

''அப்புறம், எங்கள் வீட்டிற்கு ஒரு விருந்தாளி வந்திருக்கிறார். சித்தப்பாவிற்கு மிகவும் வேண்டியவர் அவர். மிஸ்டர் மதுரநாயகம் என்று அவருக்குப்பெயர். பங்களூரில் இருந்து வந்திருக்கிறார். சுமார் இருபது நாளாகத் தங்கி வருகிறார். அநேகமாக அவருக்குத் துணைபோல் அருகில் இருந்து கவனித்துக் கொள்கிறவர் அவர்தான்.



''இதற்கு முந்தியும் பல தடவைகள் வந்திருப்பவர் என்று சொல்லுங்கள்.''

''ஊம் ஹூம்! அவர் வந்ததே இல்லை, இதுவே முதல் தடவை. ஆனால் சித்தப்பா மட்டும் பங்களூரில் அவரைப் போய்ப் பார்ப்பது உண்டாம்; அவருடன் தங்குவது உண்டாம். நல்ல பணக்காரர் என்று சித்தப்பா அடிக்கடி சொல்லுவார். வயது நாற்பது சொல்லலாம்; அவரானால் முப்பத்தெட்டு என்று சொல்லுவார்.''

''உங்கள் அண்ணாவுக்கும் அவருக்கும் எப்படி உறவு?''

''கண்ணெதிரில் அவர் வந்தால் அண்ணா தலையை ஆட்டுவான். மற்றபடி நெருங்க மாட்டான். சித்தப்பாவுக்கு வேண்டியவர் என்று திலகவதி மரியாதையாக இருக்கிறாள். அவரானால், என் சித்தப்பாவைக் கண்டிக்கிற மாதிரி கூட உரிமையுடன் நடந்து கொள்ளுவார். நான் அவர் எதிரிலே கூட நிற்பதில்லை; அவர் அநேகமுறை பேச முயற்சித்தும், நான் இடம் கொடுக்கவில்லை.''

இப்போது நாராயணன் சந்துருவின் பக்கம் நன்றாகச் சாய்ந்து ஆங்கிலத்தில், ''இந்த மதுரநாயகத்திற்கு இந்திராவைக் கல்யாணம் செய்து வைக்க வேண்டும் என்று ஒரு எண்ணம்கூட செங்கல்வராய பிள்ளைக்கு இருக்கிறது'' என்றான்.

''அப்படியானால், மதுரநாயகத்தின் மூத்த சம்சாரம் சம்மதிக்க வேண்டாமா?'' என்று கேட்டான் சந்துரு.

''அவர் இன்னும் 'தனி'யராகத்தான் இருக்கிறார். சித்தப்பாவுக்கு அவருடைய ஆஸ்தியின் மேல் இருக்கிற மதிப்பினால், வயது அதி[illegible] ஏற்ற கணவர் என்று நிச[illegible]

''அதற்காக, பாவம், உம்முடைய காலைப் போய் வெட்டுகிறேன் என்கிறார்...உம்ம்......உங்க சித்தப்பா

29/05/2011 12:46

எப்படி என்று சொல்வதைக் கடைசி கடைசியாக வைத்துக் கொண்டு இருக்கிறீர்கள் அல்லவா?'' என்று சந்துரு கேட்டான், நாராயணன் நீட்டிய சிகரெட் பெட்டியை ஒரு கையினால் புறக்கணித்தபடி.

''சித்தப்பா சென்னைக்கு நல்ல பணக்காரராக வந்தார். எங்களுக்கு இதுவரை ஒரு குறை வைத்ததில்லை. கேட்டதையெல்லாம் கொடுத்திருக்கிறார். புரசையில் அவர் ஒரு 'பிஸினஸ்' நடத்துகிறார் என்றேனே, அதில் நல்ல லாபம் கிடைக்கிறது. என் சித்தியிடம் இருநூற்று நாற்பது பட்டுப்புடவைகள் இருக்கின்றனவென்றால் எத்தனை தாராளமென்று பார்த்துக் கொள்ளுங்கள். தன்னம்பிக்கையுடன் தைரியமாகப் பேசுவார்; தமது மாமனாரை வெளியே அனுப்பினபோதுகூட, எத்தனை தென்பாகப் பேசினார்! திடீர் என்று நாலு நாள் முந்தி ஒரு பையைக் காணோம் என்றவுடன், நிலை கலங்கிப் போய் விட்டார். பழைய சித்தப்பாகவே அவர் இல்லை. அவர் விழிப்பதைப் பார்த்தாலே அச்சமாக இருக்கிறது. இரைச்சல் போடுகிறார்! மனிதர்களை வெறுத்து விரட்டுகிறார். உங்களிடம் கூட ஒருவேளை மரியாதைக் குறைவாக—''

''துப்பறிபவர்களுக்கு மரியாதை கொடுப்பவர்களைக் கண்டால்தான் பயம் அதிகம். நீங்கள் கவலைப்பட வேண்டாம்! அப்புறம், வேலைக்காரர்கள், சமையல்காரர்கள் என்று இப்படி இருப்பார்களே பங்களாவில்?''

''அண்ணாமலை இருக்கிறான்; மிகவும் விசுவாச முள்ளவன் அவன்; உயிர் போனாலும் ஒரு தகாத காரியம் செய்யமாட்டான். தவசுப் பிள்ளை சங்கரன்; அவன் சுத்த பயந்தாங்கொள்ளி. அதுவும் திருடன் வந்து போனான் என்று காதில்பட்டது முதல், அவன் 'எங்கேனும் போய் விடுகிறேன்' என்று உளறிக் கொண்டிருக்கிறான். இதோ கன்னையன் நமக்கு நம்பகமானவன்.''



சந்துரு ஆசனத்தில் நன்றாகச் சாய்ந்து கொண்டு, ஒரு கணம் கண்ணை மூடி ஆலோசனை செய்வதுபோல இருந்தான். பிறகு, இந்திராவை நோக்கி, ''உங்கள் வீட்டில் ஒவ்வொருவர் ஒவ்வொரு விதமாக இருக்கிறார்கள் என்று தெரிகிறது. புது விதமான ஆசாமி நான் ஒருவன் பாக்கி என்று என்னையும் அழைத்துச் செல்கிறீர்கள்! மிஸ்டர் நாராயணன்! என்னைப் பற்றி நீங்கள் கேள்விப்பட்டிருப்பதாகச் சொன்னீர்கள். நான் கொஞ்சம்கூட இங்கிதம் தெரியாதவன் என்பதையும் அறிந்து கொண்டிருக்க வேண்டுமே!'' என்றான்.

நாராயணன், ''உங்கள் குணத்தை விமர்சனம் செய்வது இப்போது எங்கள் வேலையல்ல. இந்திராவின் மனத்தில் பல அச்சங்கள் தோன்றியிருக்கின்றன. அவைகளை நீங்கள் நிவர்த்தி செய்து தர வேண்டும்'' என்று கேட்டுக் கொண்டான்.

''முக்கியமாக, மதுரநாயகம் அவர்கள் செங்கல்வராய பிள்ளைக்கு மருமகனாக வந்துவிடாதபடி இப்போது நான் பாதுகாக்க வேண்டும் அல்லவா?'' என்று சொன்னான் சந்துரு.

''உங்களிடம் உண்மையை மறைப்பதில் பிரயோசனம் இல்லை. அப்படி ஏதேனும் நடந்து விடுவதாக இருந்தால், என்ன செய்வதென்று தெரியாமல் நாங்கள் இருவரும் திணறிக் கொண்டிருக்கிறோம்... அதன் பொருட்டு எனக்கு நீங்கள் என்ன வேலை ஏவினாலும் செய்யக் காத்திருக்கிறேன்.''

''எனக்குத் தெரிகிறது, நாராயணன்! ஆனால், துப்பறியும் வேலையில் ஒரு சங்கடத்தையும் சொல்கிறேன். 'அல்ஜிப்ரா' என்று க[illegible]காகக் கொடுத்[illegible]மாக[illegible] திருப்பார்கள். ஒரு ப[illegible] 'எக்ஸ்' என்பதன் மதிப்பு கொண்டு வந்தால் கடைசியில் 'எக்ஸ்' என்பதன் மதிப்பு 'சைபர்' என்ற விடை கிடைக்கும். இத்தனை பொழுதை

29/05/2011 12:47

வீணாக்கினதெல்லாம் இந்த 'சைப'ருக்குத்தானா என்று தோன்றும். அதே மாதிரி ஒரே வழியாக இதிலும் வேலை செய்துகொண்டே போய்ப் பார்த்தால், வெட்ட வெளியில் வந்து நிற்போம். அந்த வேலையைச் செய்கிறேன் என்கிறீர்களே!"

"எப்படியும் உங்களுக்கு உதவி செய்யலாமே என்று ஆசைப்பட்டேன். இதோ பங்களா நெருங்கிவிட்டது! நான் இறங்கியாக வேண்டும்."

"சரி! நீராக வேலை வேண்டும் என்று கேட்டதால் ஒன்று கொடுக்கிறேன். இதோ ஒரு விலாசம் இருக்கிறது. இங்கே 'தாமோதரன்' என்று ஒரு பேர்வழி இருக்கிறார். இவரைக் கண்டு, நாளைக் காலை என்னைப் போலீஸ் ஸ்டேஷனில் வந்து பார்க்கும்படித் தகவல் சொல்லும்."

நாராயணன் ஒரு கும்பிடு போட்டுவிட்டு இறங்கிக் கொள்ள கார் பங்களா தோட்டத்தினுள் புகுந்தது. நூறு கஜ தூரம் இருந்த 'க்ரோட்டன்ஸ்' வரிசைகள் வழியேஓடி, பெரிய வாசலின் முன் நின்றது.

'மோஸேய்க்' தளவரிசை போடப்பட்ட விஸ்தாரமான வராந்தாவில் மின்சார வெளிச்சம் குளுமையுடன் விழுந்து கொண்டிருந்தது. இந்திரா இறங்கின சமயம், வாசலில் கண்யமான தோற்றத்துடன் ஒருவர் நின்று கொண்டிருந்தார். சந்துருவுக்கு அவரை மதுரநாயகம் என்று அறிமுகம் செய்வித்து, "இவர்தான் நான் நேற்று சொல்லிக் கொண்டிருந்த ஸி. ஐ. டி. சந்துரு அவர்கள் நம் வீட்டைப் பார்க்கட்டும் என்று அழைத்து வந்தேன்!" என்றாள்.

மதுரநாயகம் தமது கையைச் சந்துருவிடம் கொடுத்துக் குலுக்கினார். "பேஷாக வாருங்கள்! இந்திராவுக்கு உங்களைத் தருவிக்க வேண்டுமென்று மிகவும் ஆவல்— அவள் விருப்பப்படியே செய்திருக்கிறாள். உள்ளே வரலாமே!" என்று ஹாலுக்கு அழைத்துச் சென்றார். இருவரும் இரு நாற்காலிகளில் உட்கார்ந்துகொண்டார்கள்.



"சித்தி வந்துவிட்டாள் அல்லவா?" என்று விசாரித்தாள் இந்திரா.

"வந்திருக்க வேண்டும் என்று நினைக்கிறேன். நான் கூட இப்போதுதான் வந்தேன்" என்றார் மதுரநாயகம்.

இந்திரா சட்டென்று சந்துருவின் பக்கம் திரும்பி, "அப்படியானால் ஒரு நிமிஷம் பேசிக் கொண்டிருங்கள். சித்தியை அழைத்துக்கொண்டு ஓடி வந்துவிடுகிறேன்!" என்று குழந்தைபோல கூறிவிட்டு, மாடிப்படிகளில் ஓடினாள்.

சந்துருவும் மதுரநாயகமும் தனியே இருந்தார்கள். சிறிது நேரம் சந்துரு அவரைக் கவனிக்காதவன் போலும், ஆழ்ந்த சிந்தனை செய்பவன் போலும் இருந்துவிட்டு, "ஆமாம்! மிஸ்டர் மதுரநாயகம்! உங்கள் மோதிரம் நல்ல வேலைப்பாடாக இருக்கிறதே! தாய்லாந்தில்தான் இப்படி அபூர்வமான கட்டிட வேலை செய்கிறார்கள் என்று கேள்விப்படுகிறேன்; அங்கே வாங்கினதுதானா இது?" என்று கேட்டான்.

"அப்படித்தான்!" என்றார் மதுரநாயகம்.

"நீங்கள் அங்கே சென்றிருந்த சமயம் வாங்கினீர்கள் போலும்!"

"செங்கல்வராயன் ஒரு சந்தர்ப்பத்தில் எனக்கு இதைக் கொடுத்தார்!"

"ரொம்ப ஆசையாக வைத்திருக்கிறீர்கள்... ஆனால் அதில் ஒரு கல் உதிர்ந்திருக்கிறது. மறுபடி போகிறவர்களாகப் பார்த்து அதே போன்ற கல்லைப் பொருத்தித் தர செய்து தருவிக்க வேண்டும்... அல்லது இங்கேயே நன்றாகத் தேடிப் பார்க்கவேண்டும்."

"நான் அவ்வளவு தூரம் லட்சியம் செய்கிறவன் இல்லை. இதையே கழட்டி உள்ளே வைத்துவிடுவேன்."

மதுரநாயகம் வெடுக்கெ[illegible] தமது பையில் போட்டுக்[illegible] புன்னகை மேலும் விரிந்தது; "உங்களிடம் தனிமையில் ஒரு

29/05/2011 12:

வார்த்தை; இந்திரா என்னிடம் இங்கே ஒரு திருட்டு நடந்ததாகச் சொல்லி அழைத்து வந்திருக்கிறாள். அவள் தகப்பனார் விருப்பத்திற்கு எதிராகவே இதைச் செய்திருக்கிறாள். வருவதில் எனக்கு இஷ்டம் இல்லை; நிர்ப்பந்தத்தின் மேல் வந்திருக்கிறேன். நீங்கள் செங்கல்வராய பிள்ளையின் ஆப்த நண்பர் என்ற முறையில், எனக்குத் தனிமையில் ஏதேனும் உதவி செய்ய முடியுமா?'' என்று கேட்டான்.

மதுரநாயகம், ''உண்மையாகவே என்னைக் கேட்கிறீர்களா?'' என்றார்.

''பின் என்ன, விளையாட்டா?''

''நான் யோசனை சொன்னால் நீங்கள் அதன்படி நடப்பீர்களா என்பதுதான் எனக்குச் சந்தேகம்... செங்கல்வராய பிள்ளையிடம் ஒரு தோல் பை இருந்ததே நிச்சயம் இல்லை? அது கெட்டுப் போனது என்பதைப் பற்றி அப்புறம் பேசவே தேவையில்லை. பிள்ளை என்னுடைய ஆப்த நண்பர். நீங்கள் ஸி. ஐ. டி. யைச் சேர்ந்தவர். ஒளிக்காமல் நான் சொல்கிறேன். நீங்களும் வெளிவிட்டு விடக்கூடாது. என் நண்பனுக்குச் சில சமயங்களில் சித்தப் பிரமை வருவதுண்டு. அதுவும், மலாயாவில் அடிக்கடி வந்திருக்கிறது. ஒன்று கிடக்க ஒன்று சொல்வான். எதையாவது நினைத்துக்கொண்டு வேறு எதையாவது பேசுவான். ஜுர வேகத்தில் அவன் பிதற்றியதை வைத்துக்கொண்டு இந்திரா அவசரப்பட்டு உங்களைத் தொந்தரவு செய்துவிட்டாள் என்று நான் நினைக்கிறேன். ஒரே விஷயம்! யாராவது எப்போதாவது காணாமல் போவதாகச் சொல்லப்படும் பொருளைப் பார்த்திருக்கிறார்களா என்று கேளுங்கள்... வெறும் கற்பனை'' என்றார் மதுரநாயகம்.

அவர் அதைச் சொல்லும்போது சந்துரு அவர் முகத்தையே கவனமாகப் பார்த்துக்கொண்டிருந்தான். அவருடைய பேச்சில் ஒரு அழுத்தம் இருந்தது; பிறரை நம்ப வைக்கும் சக்தி இயங்கியது. ஒரு பழக்கமாக ஒரு



வாக்கியம் முடியும்போது மெள்ள இடது கண்களை மட்டும் அவர் மெள்ள மூடிமூடித் திறந்தார். அதனால் அவரிடம் ஒரு மதிப்பும் உண்டாயிற்று.

''அவருடன் நன்றாகப் பழகியிருக்கும் உங்களுக்குத் தெரியாததை யாரும் சொல்லிவிடப் போவதில்லை... நான் வந்து விட்டேன்; எல்லாருடைய திருப்திக்காகவும் பங்களாவை ஒரு சுற்றிச் சுற்றிவிட்டுப் போகிறேன்... இந்த ஊருக்கு வந்த பிறகுதான் செங்கல்வராய பிள்ளைக்கு புத்தி ஒரே நிதானமாக இருந்திருக்கிறது என்றும் சொல்கிறீர்கள்?''

''ஆமாம்... அநேக வருஷங்களுக்குப் பிறகு இப்போதுதான் பழைய கோளாறு தலைகாட்டுகிறது.''

''அப்படிச் சொல்லுங்கள்!... உங்களைப் பார்த்தவுடனேயே நான் இங்கே எனக்கு வேலை இல்லையென்று தெரிந்து கொண்டுவிட்டேன். இரண்டு மேதாவிகளுக்கு ஒரே இடத்தில் வேலை இருக்க முடியாதல்லவா? ஒருவர் ஒதுங்கிவிட வேண்டியதுதானே?'' என்று சிரித்தான் சந்துரு.

மதுரநாயகத்திற்கு இந்தப் பேச்சு எங்கேயோ 'சுருக்'கென்று தைத்தது. சுடச் சுட ஒரு பதில் கொடுக்கலாம் என்று எண்ணின சமயம், சந்துருவே, ''ஹா! அவர்கள் அதோ வந்துவிட்டார்கள்...'' என்றான். மதுரநாயகம் அங்கே இருப்பதை அடியோடு மறந்துவிட்டவன்போல், ஸ்திரீகள் வரும் திசையையே நோக்கினான்.

மாடியிலிருந்து இந்திராவுடன் இறங்கி வந்த ஸ்திரீதான் திலகவதி—அந்த வீட்டு எஜமானி என்பதில் யாருக்கும் சந்தேகம் இருக்க முடியாது.

பார்வைக்கு வெகு [illegible] பதினைந்து முறை பார்க்க வேண்டு[illegible] அடக்கமான அழகு இல்லை அவளுடையது. ஒருவித பகட்டு, படாடோபம் அதிலே இருந்தது. 'நான் நன்றாக

இருக்கிறேன். என்னை முறைத்துப் பாருங்கள். நான் அலங்காரம் செய்து கொண்டு வந்திருக்கிறேனே, அதைக் காண உங்களுக்குக் கண் இல்லையா?' என்று அதட்டிக் கேட்பதுபோல் இருந்தது அவள் நடை! படம் பிடித்துப் பார்த்தால் இந்த சோபை குன்றியே காணும். பத்தில் ஒரு பங்கு எழில்தான் அதில் வரும். முழு வனப்பையும் எதிரில் பார்க்கவேணும்—பளிச்சென்ற சிரிப்பு, இமைகளின் சுழற்சி புருவத்தின் வளைவுகள், தலையின் குலுக்கல்—எல்லாம் ஒரு புதிய பாணி.

சந்துருவை அவள் முதலில் நோக்கியதும் ஒருகணம் மௌனமாக நிதானித்தாள். பிறகு, "வாருங்கள்! நம் வீட்டுக்கு நீங்கள் வருகிறது, ஒரு பெருமை என்றில்லாவிட்டாலும் எங்களுக்கெல்லாம் நல்லது, ஒரு தென்பு!" என்றபடி எதிரில் வந்து உட்கார்ந்தாள். பிறகு இந்திரா உட்காருவதற்கு ஒரு நாற்காலியைக் காட்டினாள்.

சந்துரு அவளிடம் ஒன்றுமே பதில் சொல்லவில்லை. தலையை ஒருமுறை குனிந்து நிமிர்ந்து, "நீயே பேசுகிறதையெல்லாம் பேசு; நான் கேட்டுவிட்டுப் போகிறேன்" என்கிற தோரணையில் விறைப்பாக உட்கார்ந்தான்.

மதுரநாயகம் மெள்ள எழுந்தார். "நீங்கள் பேசிக் கொண்டிருங்கள். நான் இப்படியே தோட்டத்தில் சுற்றிக் கொண்டிருக்கிறேன்... மிஸ்டர் சந்துரு! நாம் அப்புறம் சந்திக்கலாமே!" என்றார்.

"பேஷாக! இங்கேயும் சந்திக்கலாம்; வெளியிலேயும் சந்திக்கலாம்... ஒரே ஒரு விஷயம்; அந்த மோதிரத்துக்கு ஏற்ற கல் தேவையானால் என்னால் தருவித்துத் தரமுடியும். என் நண்பன் ஒருவன் தாய்லாந்தில் இருக்கிறான்."

"அவசியம் இல்லை..."

"காலதாமதம் இல்லாமல் தருவித்துத் தருகிறேன்... நான் ஒரு கடுதாசு போட்டால் போதும்..."



"வேண்டாம்!... சிரமப்படாதீர்கள்!" என்று மதுரநாயகம் அங்கிருந்து வெளிப்பட்டார்.

சந்துரு இந்திராவை அர்த்த புஷ்டியுடன் கவனித்து "ஒரு வேண்டுகோள்...ஸ்ரீமதி திலகவதி அவர்களுடன் ஐந்து நிமிஷம் நான் பேசப் போகிறேன். அவர்கள் சொல்வதை வேறு யாரும் கேட்க விரும்ப மாட்டார்கள் என்றும் எனக்குத் தோன்றுகிறது..." என்றான்.

இந்திராவின் கண்கள் அகல விரிந்தன. 'தவலையே இந்த மனிதன்! நான் அழைத்துக் கொண்டு வந்திருக்க, என்னை ஒதுக்கிவிட்டு விசாரணை செய்கிறானே' என்பது போன்ற பாவம் அதில் தெரிந்தது. எனினும் மாறாக மந்தகாசத்துடன் அங்கிருந்து நகர்ந்தாள்.

திலகம் குனிந்தபடியே, நீண்ட இமைகளை உயர்த்தி ஒரு வெட்டு வெட்டினாள். "நான் துப்பறியும் கதைகளில் ஸி.ஐ.டி.களைப் பற்றிப் படித்திருக்கிறேன். இன்றுதான் நேரில் பார்க்கிறேன். இந்திரா உங்களைத் தேடிக்கொண்டு சென்றிருக்கிறாள் என்பது நான் ஊகித்ததுதான். நீங்கள் இங்கே வருவது வீண்பிரயாசை என்பது எனக்குத் தெரியும். இருந்தாலும், உங்களை நேரில் கண்டு, எப்படி இருக்கிறீர்கள் என்று அறிந்து கொள்ள விரும்பியே நான் அவளைத் தடுக்கவில்லை" என்றாள்.

சந்துரு சிறிதும் சிரிக்கவில்லை. கடுகடுப்பான முக பாவத்தை மாற்றாமலே, "துப்பறியும் ஆட்கள் சர்க்கஸ் விலங்குகள் மாதிரி...வேண்டிய வித்தைகள் செய்யும் புலியும் சிங்கமும்; ஆனால், சற்று அசந்திருந்தால் கையையோ உடலையோ ருசி பார்த்துவிடும். என்னை நீங்கள் பார்க்க விரும்பியது போலவே, நானும் உங்களைச் சந்திக்கவே வந்தேன்... காணாம[illegible] நீங்கள் எனக்கு ஏதேனும் சொல்லலாமா!" என்று கேட்டான்.

''எனக்குத் தெரிந்ததை நான் மறைக்காமல் கூறுகிறேன். தோல் பை ஒன்று இருந்ததும் வாஸ்தவம், அது காணாமல் போய் விட்டதாக என் வீட்டுக்காரர் துடிதுடித்ததும் வாஸ்தவம். ஆனால், உண்மை என்னவென்றால், அது அன்றும் இன்றும் இந்த வீட்டிலேயேதான் இருந்திருக்கிறது. எப்படியோ இடம் மாறி மறுபடி அகப்பட்டு விட்டது. அதைப் பற்றி இனி ஒரு வம்பும் இல்லை.''

''அதை இந்திராவிடம் சொன்னீர்களா?''

''சொல்ல வேண்டாம் என்பது என் கணவரின் உத்தரவு. ஏனென்றால் பண்டம் அவருடையது. இதை ஏன் உங்களிடம் தெரிவிக்கிறேன்? நீங்களும் வெளியிடமாட்டீர்கள் என்ற நம்பிக்கையுடன்தான். ஒரு பண்டம் காணாமல் போயிருந்தது, திரும்பக் கிடைத்தது என்ற விவரம் வெளியே பரவினால், மற்றொரு பண்டம் நிரந்தரமாகக் காணாமல் போவதற்கும் வழி உண்டென்று ஆகிறது. இப்போ நமக்கு லாபமும் இல்லை, நஷ்டமும் இல்லை. அதோடு விட்டு விடுவோமே...''

''உங்களைக் கண்டதில் என் வேலை வெகு எளிதாகி விட்டது. இந்திரா கொஞ்சம் படபடப்பான பெண் என்று இப்போது தெரிந்து கொண்டேன்...''

''கொஞ்சமா! நீங்கள் அவளைத் தெரிந்து கொள்ளவில்லை. அவள் வாயில் ஒன்றுமே நிற்காது.''

''அதையும் கவனித்தேன். ஆமாம்... உங்கள் தகப்பனார் பஞ்சநதம் எங்கிருக்கிறார்? அவரைப் பற்றிக் கூட நான் அவளை விசாரித்தேன்.''

''நீங்கள் இப்போது அவரைப் பற்றி விசாரிக்கத்தான் வந்திருக்கிறீர்களா?''

''இல்லை. அந்த எண்ணம் இங்கே புறப்பட்டு வருகிற வரையில் இல்லை. அவர் எங்கே இருக்கிறார் என்று உங்களுக்குத் தெரியாத வரையில் எனக்கும் தெரியத் தேவை கிடையாது.''



சந்துரு மேலும் மேலும் பேசவே, நிலகிந்தின் முகத்தில் அதிருப்தி பரவி வந்தது. ''என் தகப்பனாரைப் பற்றி நான் பேசப் போகிறதில்லை... நாங்கள் ஏழைகள்; பரம்பரை ஏழைகள். பணக்காரர் ஒருவருக்கு நான் வாழ்க்கைப் பட்டிருக்கிறேன் என்பதில் என் உறவுக்காரர்களுக்கு மட்டும் இல்லை; இங்கேயும் வயிற்றெரிச்சல் அதிகம் இருக்கிறது. என் தந்தை இங்கே வந்திருப்பதை நானும்தான் விரும்பவில்லை; அவர் தங்காமல் போனது எனக்கும் இஷ்டம்தான். இதையெல்லாம் போய் இந்திரா உங்களிடம் விஸ்தரிக்க வேண்டுமா?''

''நீங்கள் ஒரு தவறு செய்து விட்டீர்கள்! இந்திரா சொல்லவில்லை; நான்தான் கேட்டேன். அது போகட்டும். தோல் பை காணாமல் போயிற்றென்னார்களே, அதில் என்ன இருந்தது?''

''ஏதோ முக்கியமான ஆபீஸ் காகிதங்கள் இருந்திருக்கலாம்...''

''எல்லாமே இப்போது அகப்பட்டுவிட்டன அல்லவா?''

''பை அகப்பட்டால் அவைகளும் அகப்பட்டதாகத்தானே அர்த்தம்? உங்களைப்போல் நான் விசாரிக்கவில்லை.''

''நான் செங்கல்வராய பிள்ளையிடம் விவரங்கள் கேட்கலாமா?''

''நான் அதைத் தடுக்க முடியாது; அவர் கொடுக்கும் பதிலுக்கு நான் ஜவாப்தாரியாகவும் இருக்க முடியாது.''

''ஏன்?''

''அவர் என்ன சொல்வாரோ! முதலில் நீங்கள் வந்திருப்பது தெரிந்தாலே கோபிப்பார் என்று அஞ்சுகிறேன்.''

''கோபிக்க வேண்டும் [illegible]ருப்பது. கோபம் வந்தால் அநேகம் பேர் உண்மையைச் சொல்லி விடுவார்கள்...''

''எனக்கு அந்த மாதிரி அனுபவங்கள் கிடையாது.''

''பார்த்துக் கொண்டேயிருங்கள்; பிறகு, நான் வீட்டையும் ஒரு சோதனை போடலாம் என்று இருக்கிறேன்.''

திலகவதியின் முகத்தில் பீதி படர்ந்தது. அவசரமாக, ''எதற்கு அது? என் வார்த்தையில் நம்பிக்கை இல்லையா?'' என்று வினவினாள். சந்துரு அவள் முகத்தையே ஆராய்ந்து கொண்டே, ''இந்திராவின் திருப்திக்காக!'' என்றான்.

''அது அவசியமே இல்லை என்று நான் நினைக்கிறேன். அப்புறம் உங்கள் இஷ்டம்.''

''மதுரநாயகத்தைப் பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன சொல்ல முடியுமா?''

''என்னைப் பற்றி அவர் ஒரு அபிப்பிராயம் கொடுத்திருப்பார் என்று நான் நினைக்கிறேன்...''

''நான் அவரைக் கேட்கவில்லை. உங்களுக்கு இஷ்டமானால் எனக்கு உதவி செய்யலாம்.''

''உங்களுக்கு உதவி ஒன்றும் தேவை இராது; கிடைக்கவும் கிடைக்காது. ஆனால், நான் இந்த வீட்டில் யாரையும் நம்புகிறதில்லை என்ற முடிவு செய்து விட்டேன்!''

''என் ஒரே ஒரு ஏமாற்றம், நீங்கள் என்னிடமும் அவநம்பிக்கை கொண்டிருப்பதுதான்... போகட்டும், நாம் மேலே போகலாமா? பிள்ளை அவர்களுடன் இரண்டு வார்த்தை பேசிவிட்டு—''

சந்துரு எழுந்துவிட்டான்; மாடிப்படியில் இந்திராவும் வந்து சேர்ந்து கொண்டாள்.

ஒரு விசாலமான அறை; பெரிய பெரிய ஜன்னல்கள். அதில் ஒரு பிரம்மாண்டமான இரும்புப் பெட்டி ஆறடி உயரத்திற்கு நின்றது.

கனத்தமெத்தை போட்ட ஒரு கட்டிலில்செங்கல்வராய பிள்ளை படுத்திருந்தார். வாசற்படியில் வந்து நின்றவர்



களைக் கண்டதும் வெறிக்கப் பார்த்தார். மறு விநாடி குபீர் என்று எழுந்து உட்கார்ந்துகொண்டு செக்கச் செவேல் என்ற கண்களால் எல்லோரையும் எரித்து விடுகிற மாதிரி பார்த்தார்.

''இதென்ன இது! மனுஷன் சற்றுநேரம் நிம்மதியாகப் படுக்கக்கூடாது!'' என்று உடனே ஒரு கூச்சல் போட்டார்.

ஐந்தாறு தினங்களாக க்ஷவரம் செய்து கொள்ளாத தால் வெளுப்பும் கறுப்புமாக மயிர் வளர்ந்து முகம் நன்றாகவே இல்லை. அரைப் பகுதியான வழுக்கை தலை; மிகுதியுள்ள பாகத்தில் கேசம் கலைந்து 'பம்'மென்று பம்ப விட்டுக் கிடந்தது. அவர் போட்டிருந்த வெள்ளைச்சட்டையில் பித்தான் கழன்று, மார்பகம் எலும்பு தெரிய இளைத்துத் தெரிந்தது.

மற்றவர்களைக் கீழே போய் இருக்கும்படி சைகை செய்து அனுப்பிவிட்டு சந்துரு மட்டும் பக்கத்தில் படுக்கையின்மீது சுவாதீனமாக உட்கார்ந்து கொண்டான்.

''மிஸ்டர் பிள்ளை! என் பெயர் சந்துரு. உங்கள் நண்பனாக வந்திருக்கிறேன்'' என்றான்.

பிள்ளை ஒரு கோட்டை அறையாக அறைந்துவிடுபவர் போல் காட்சி தந்தார். ''எனக்கு இனி நண்பன் தேவை இல்லை...'' என்றார்.

''மதுரநாயகத்துடன் பேசிக் கொண்டிருந்தேன்...''

'என்ன பேசிக் கொண்டிருந்தாய்? என்ன பேசினாய்? போ வெளியே!''—சித்தம் ஸ்வாதீனம் இல்லையென்றது ஓரளவு உண்மைதானோ?—என்று தோன்றும்படி இருந்தது குரல்.

''அப்படிக் கோபிக்க[illegible]ள் [illegible]காகவே இங்கே இருப்பதாகச் சொன்னார். நான்கூட அதற்காகவே வந்தேன். இந்திரா என்னை அழைத்தாள். உடனே ஓடி வந்து விட்டேன்.''

29/05/2011 12:48

பிள்ளை முகத்தில் இருந்த வெறிக்களை சற்றே குறைந்தது. "அது ஓர் அசட்டுக் குழந்தை; அதைக் கேட்டுக் கொண்டு வந்தாயே! நீ போலீஸ்தானே?"

"ஆமாம். ஆனால் இப்போது உத்தியோக முறைமையில் வரவில்லை. உங்களுக்கு உதவி செய்ய நான் தயார் என்று சொல்லவே வந்தேன்!"

பளீர் என்று அறை கொடுத்த மாதிரி பதில் வந்துவிட்டது. "எனக்குப் போலீஸ் உதவி தேவை இல்லை... போ வெளியே!"

"அப்படிப் பேசிவிட்டால் சரியா? ஒரு முக்கியமான தோல் பை காணாமல் போய்விட்டதாக இந்திரா கூறினாள்."

"ஆமாம், போயிற்று! அதனால் உனக்கு என்ன ஐயா!...போனால், எனக்கு நஷ்டம், நான் அனுபவித்து விட்டுப் போகிறேன். உன்னைக் கூப்பிட்டு 'எடுத்துத் தா' என்று சொல்கிறேனா?"

"நாங்களும் முயற்சி செய்து பார்க்கலாம் அல்லவா?"

"போலீஸ் மூலம் எனக்கு அந்தப் பை கிடைப்பதில் இஷ்டம் இல்லை. என் உயிருக்கு ஆபத்து வந்தாலும்கூடப் போலீஸ் உதவி எனக்கு வேண்டாம்... எழுந்துபோ!"

"நீங்களும் படித்தவர்; இப்படிப் பேசினால்—"

சந்துருவின் கண்கள் அறையைச் சுழன்று சுழன்று வட்டமிட்டுக் கொண்டிருந்தன. சிறு மேஜை மீதிருந்த மருந்து சீசாக்கள், ஜன்னல்கள், இரும்புப் பெட்டி இருந்த இடம் எல்லாவற்றையும் மனத்தில் வாங்கிக் கொண்டன. சடார் என்று தனது பூட்ஸின் நாடாவைக் கட்டுவதுபோல் ஒரு நிமிஷம் சந்துரு குனிந்தான். கீழே கசங்கிக் கிடந்த காகிதத் துண்டு ஒன்றை அவர் காணாதபடி கையில் எடுத்துக்கொண்டு, கைக் குட்டை எடுக்கும் பாவனையில் சராய்ப் பைக்குள் அதை அடக்கம் செய்து கொண்டான்.



"ஏனையா! என் வீட்டில் திருட்டுப் போச்சு; உண்மை. அதோடு முக்கியமான காகிதங்களும் போய்விட்டன; உண்மை. ஆனால், உன்னுடைய உதவி தேவை இல்லை என்றால், பின் ஏன் உட்கார்ந்து கழுத்தை அறுக்கிறாய்!" செங்கல்வராய பிள்ளை ஒரே கர்ஜனையாகச் செய்தார்; அவர் குரல் நாலைந்து அறைகளுக்கு அப்பாலும் கேட்டிருக்கவேண்டும்.

சந்துரு எழுந்து வணக்கம் செய்தான். "வருகிறேன் மிஸ்டர் பிள்ளை! நான் வருகிறேன்!" என்றான் விறைப்பாக.

"வர வேண்டாம். வர வேண்டாம்!" என்று மீண்டும் கூச்சல் போட்டுக் கொண்டே தொப்பென்று படுக்கையில் சாய்ந்துவிட்டார் பிள்ளை.

அறையின் வெளியில் வந்து நின்ற சந்துரு எல்லாவற்றையும் மனத்தில் சுழற்றினான்.

"தோல் பை என்பதே இருந்ததில்லை. எல்லாம் சித்தப்பிரமை" என்றார் ஆப்த நண்பர் மதுரநாயகம்.

"தோல் பை காணாமல் போயிருந்தது என்னவோ வாஸ்தவம். ஆனால், அது இப்போது அகப்பட்டுவிட்டது" என்றாள் திலகவதி—வீட்டின் எஜமானி.

"திருட்டுப் போனதுஉண்மை; ஆனால், அது எனக்குப் போலீஸ் மூலம் கிடைக்க வேண்டாம்" என்று கூச்சல் போடுகிறார் வீட்டின் எஜமானர்.

இந்திராவோ, "அதை எப்படியோ மீட்டுத்தாருங்கள். அப்போதுதான் வீட்டு எஜமானனுடைய கவலை தீரும்" என்று வேண்டிக் கொள்கிறாள்.

ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமாகச் சொல்கிறார்கள். எல்லாருடைய பேச்சும் அந்தரங்கமாகவே இருக்கிறது. யாரை நம்புவது, யாரை வி[illegible] ஒரே ஒருவன் பாக்கியிருந்தான்-க[illegible] திரியான ஆசாமி' என்று எச்சரிக்கை செய்திருக்கிறான்

29/05/2011 1

இந்திரா. எதற்கும் அவனையும் 'பேட்டி' கண்டுவிடுவது என்று நிமிர்ந்தான் சந்துரு. 'கட்டு குட்'டாக ஒரு ஆள்காரன் நின்றான். அண்ணாமலை என்கிற வேலைக்காரன் அவன்.

''எஜமான்! பெரிய ஐயா அறையிலே நீங்கள் இருக்கிறதாகச் சொல்லி சின்ன அம்மா அனுப்பினாங்க. கீழே வர்றீங்களா?'' என்று கேட்டான்.

''இல்லை, அண்ணாமலை! இப்போது என்னை நீ இந்த வீட்டில் கணேசன் என்பவரிடம் அழைத்துக் கொண்டு போ!''

''அதுக்கு முன்னதா, கணேஷைக் கண்டுபிடிச்சாகணுமே!'' என்று அண்ணாமலை தயங்கியபடி தலையைச் சொறிந்து முணுமுணுத்தான். பிறகு உரக்க, ''என் பின்னாலே வாங்க; எங்கே இருக்கிறார், கண்டுபிடிக்கலாம்!'' என்றான்.

இருவரும் மற்றொரு மாடிப் படிக்கட்டு ஏறிச் சென்றார்கள். முன்னே ஒரு அறை தென்பட்டது. அதில் விளக்கேற்றப்படாமல் ஒரே அந்தகாரம்.

''நீங்கள் உள்ளே போய்க் குந்திக் கொள்ளுங்கள். அதுதான் கணேஷ் இருக்கிற அறை அவரை நான் பார்த்து அழைத்து வருகிறேன்...'' என்றான் அண்ணாமலை.

''இப்போ எங்கே அவர்?''

''எங்கே போயிடப் போறார்! இங்கெத்தான் எங்கேயானும் ரேடியோ கம்பியை வைச்சுக் கொண்டு நிற்பாரு. அதிலே ஒரே பயித்தியம்... நீங்க சும்மா வாங்க...நான் விளக்கைப் போடறேன்!'' என்று அறைக்குள் முன்னாடி சென்று சுவிட்சை அழுத்தினான்.

ஜகஜ்ஜோதியாக ஒரு பிரகாசம் அங்கே ஏற்பட்டது. உள்ளே கால் வைத்த சந்துரு அங்கே கண்ட காட்சியில் சற்றுத் திகைத்து நின்றான். ''அடி அம்மா!'' என்று வாய் விட்டுக் கூவி விட்டான், அண்ணாமலை.



சந்துரு மண்டியிட்டுக் கீழே உட்கார்ந்து, கீழே கிடந்த மனிதனின் தலையைச் சட்டென்று மடியில் எடுத்து வைத்துக்கொண்டான். அண்ணாமலையை நிமிர்ந்து பார்த்து, ''இவர்தான் கணேஷா?'' என்று வினவினான்.

''ஐயோ! இவர்தானுங்களே! ஏன் இப்படி—இவருக்கு என்னெங்க...''

''பேசாதே! பதறாதே! ஓடு சீக்கிரம்! கூஜாவில் தண்ணீர் எடுத்துக்கொண்டு வா!' என்று உத்தரவு கொடுத்தான் சந்துரு. கீழே கிடந்தவன் கடும் தூக்கத்தில் இருந்தவன்போல் காணப்பட்டான். மூச்சு மட்டும் மெல்லிய இழையாக வந்து கொண்டிருந்தது.

அண்ணாமலைக்காகக் காத்திருந்த நேரத்தில் தன் நிஜார்ப் பையில் அடக்கம் செய்திருந்த காகிதத் துண்டைப் பிரித்து விளக்கொளியில் படித்தான். மூன்றே வரிகள் தெளிவாக இருந்தன. சுருக்கமான வாசகம்:

''சந்துரு வந்து கொண்டிருக்கிறான்... அவனை ஏவி விட்டாயோ, நாளைக்குக் காலை நீ உயிரோடு இருக்க மாட்டாய். உன் அருகிலேயே இருந்து நான் கவனிக்கிறேன், ஜாக்கிரதை!''

இரண்டு முறை படித்த பின், மாடிப்படியருகில் எல்லாரும் வரும் அரவம் கேட்கவே, சட்டென்று காகிதத்தைத் திரும்பப் பையில் வைத்துக் கொண்டு கணேசன் மீது கவனத்தைத் திருப்பினான் சந்துரு.

## ஓர் இரவில் நடந்த பல சம்பவங்கள்

எங்கோ ஒரு கெ[illegible] 'டண்' என்று ஒன்பது மணி அடித்[illegible] த[illegible] தன் மடியில் வைத்துக் கொண்டு ஈரக் கைக்குட்டையினால் அவனுடைய நெற்றியை மெள்ளத் துடைத்துக்கொண்டு

இருந்தான் சந்துரு. அதே சமயம் அவனுடைய கண்கள் அந்த அறையில் வந்து சூழ்ந்து நின்று கொண்டிருந்தவர் களைக் கவனிக்கத் தவறவில்லை.

திலகவதிதான் முதலில் ஓடி வந்தாள். அண்ணாமலை சென்று கணேசன் மூர்ச்சையாகக் கிடந்த விஷயத்தைச் சொன்ன சமயம், அவள் நகைகளுக்கு நாய் தோலினால் பாலிஷ் ஏற்றிக் கொண்டிருந்தாள். அப்படியே அவை களைப் போட்டுவிட்டு, மாடிக்கு ஓட்டமாக ஓடி வந்து விட்டாள். நெஞ்சும் மார்பும் அவளுக்குப் படபடவென்று அடித்துக்கொண்டன; இரு மாடிப் படிகட்டுகளைத் தாவித் தாவி ஏறி வந்ததனால், மேல்மூச்சு வாங்கியது. கீழே கிடந்த கணேசனையும், அருகில் உட்கார்ந்திருந்த சந்துருவையும் ஒரு கணம் பார்த்தாள்; பிறகு அவள் நயனங்கள் அந்த அறை முழுவதும் யாரையோ எதிர் பார்த்த மாதிரி துழாவின. அதனால் திருப்தி அடைந்தவை போல், மீண்டும் சந்துருவின் முகத்தில் வந்து நின்று அதன் பாவத்தை ஆராய்ந்தன.

அவளைப் பின்தொடர்ந்து விரைந்து வந்த இந்திரா, "ஐயோ, அண்ணாவுக்கு என்ன?" என்று கலங்கிக் கூவி விட்டாள். அப்போதே அண்ணாமலை ஒரு பேலாவில் தண்ணீர் கொண்டு வந்துவிடவே, "ஒன்றும் இல்லை. இப்போது உங்கள் அண்ணாவே பேசுவார். எல்லா விவரங் களும் சொல்லுவார். சற்றுப் பொறுமையாக இருக்க வேண்டும்" என்று சந்துரு கூறி, தனது கைக்குட்டையை ஜலத்தில் நனைத்துக் கொண்டான். இரண்டு முறை அதை கணேசனுடைய கண் இமைகளில் பிழிந்தான்.

"என்னது! என்ன நடந்துவிட்டது? யார் கீழே விழுந்து விட்டது?" என்று கேட்டுக்கொண்டே மதுரநாயகம் அந்த அறைக்குள் நுழைந்தார். அவருக்கு எல்லாரும் விலகி வழி விட்டார்கள்.

சந்துரு அவரைப் பார்த்துச்சிரித்தான்: "என்ன நடந்து விட்டது என்பதை இவர் கண்விழித்த பிறகுதான் தெரிந்து



கொள்ள வேண்டியிருக்கும். விளக்கையும் அணைத்து விட்டு, இவராகவே இப்படி மூர்ச்சை அடைந்திருப்பார் என்று நம்புவதற்கு இடம் இல்லை. ஆகையால், இவரைக் கீழே பிடித்துத் தள்ளின பேர்வழி இப்போது முன் வந்து நடந்ததை விசாரித்தாலும்கூட உடனே நமக்கு விஷயம் விளங்கிவிடும்" என்றான்.

இந்திரா கையைப் பிசைந்து கொண்டிருந்தாள். "அண்ணாவுக்கு ஆபத்து ஒன்றும் இல்லையே?" என்று திரும்பத் திரும்பக் கேட்டாள்.

"ஒன்றும் இல்லை என்று நினைக்கிறேன். எதற்கும் டெலிபோனில் உங்கள் வீட்டு டாக்டரை அழைத்து விடுங்கள்; அவரும் உங்கள் திருப்திக்குப் பார்த்து விடட்டும்..." என்று சந்துரு பதில் சொல்லவும் இந்திரா நிற்காமல் கீழே ஓடினாள்.

மதுரநாயகம் தமது கைக் கடியாரத்தைப் பார்த்தார். "சரியாகப் பன்னிரண்டு நிமிஷங்களுக்கு முன்பு நான் தோட்டத்தில் உலாவிக் கொண்டிருந்தபடி மேலே பார்த்தேன். இந்த அறையில் விளக்கு எரிந்து கொண் டிருந்தது. எட்டு நாற்பத்தெட்டுக்கும் ஒன்பதுக்கும் இடை யில் ஏதோ நடந்திருக்கிறது... யாரெல்லாம் வந்தார்கள் இங்கே?" —மதுரநாயகத்தின் குரலும் சம்பாஷணையும், அவர் சந்துருவின் நட்பைப் பெற விரும்புபவராகவும் தம்மால் இயன்றவரை அவருக்கு உதவி செய்யத் தயாராக இருப்பவராகவும் காட்டுபவையாக இருந்தன.

ஆனால், சந்துரு அவரைக் கடுமையாகப் பார்த்தான். அவன் கண்களில் சிநேக பாவம் இல்லை. "நிச்சயமாக நான் ஒருவன் வந்தேன் [illegible] கிறேன்" என்றான் சந்துரு.

மதுரநாயகம் உதட்டைக் கடித்துக் கொண்டதை அவன் ஓரக் கண்ணால் கவனித்துக் கொண்டான்.

"ஆ! கொஞ்சம் இமை அசைந்த மாதிரி இல்லை?" என்று கேட்டாள் திலகவதி. வந்தது முதல் இதுவரை அவள் வாயைத் திறந்து ஒரு வார்த்தைகூடப் பேசவில்லை.

"கண் இமை அசைந்தது உண்மைதான். மண்டையில் இடது பக்கமாக ஒரு அடி விழுந்திருக்கிறது. (கையால் தடவி) இதோ புடைத்திருக்கிறது தெரிகிறது. ஆனால் அதனால் ஒன்றும் பிராணாபாயம் இல்லை. சற்றைக் கெல்லாம் எழுந்து கொண்டு விடுவார். பாருங்கள்" என்று அவளுக்குப் பதில் சொன்னான் சந்துரு.

இந்திரா டெலிபோன் செய்து விட்டதாக அறிவித்துக் கொண்டு மேலே வந்து விட்டாள். "டாக்டர் பதினைந்து நிமிஷத்தில் வருகிறார்...எப்படி இருக்கிறது அண்ணாவுக்கு?" என்று கேட்டாள். சந்துரு அவள் முகத்தைப் பார்த்துவிட்டு மௌனமாக இருந்தான்.

மதுரநாயகம் அவள் பக்கம் திரும்பி, 'ஒன்றும் பயம் இல்லை. இதோ விழித்துக்கொண்டேயிருக்கிறார்!" என்றார்.

அண்ணாமலை இதற்குள் தலையைப் பல முறைகள் குறுக்கி விட்டான். "யாருங்க இவரைப் போய் இப்படிச் செய்வது? ஏன் இப்படிச் செய்யணும்?" என்று வெகுளியாகக் கேட்டான்.

"அதைக் கண்டுபிடிக்கறதுக்குத்தான் நான் மதுரநாயகம் எல்லாரும் இங்கே வந்திருக்கிறோம்...கண்டு பிடித்த உடனே உன்னிடம் சொல்கிறோம். நம்ப டிரைவர் கன்னையன் எங்கே? கீழேதான் இருக்கிறானா?" என்று கேட்டான் சந்துரு

"நான் கவனிக்கவில்லை எஜமான்!" என்றான் அண்ணாமலை. மேலும், "கூப்பிட்டாரட்டுங்களா?" என்று கேட்டுக் கீழே போகத் தயாராக நின்றான்.

"வேண்டாம்; நீ எனக்குத் துணையாக இங்கேயே இரு!" என்றான் சந்துரு கண்டிப்புடன்.



அதற்குள் கணேசன் ஒரு முனகலுடன் புரண்டு, தலையைச் சந்துருவின் மடியில் இரண்டு முறை உருட்டினான். "ஆ! அண்ணாவைப் பாருங்கள்?" என்று இந்திரா குனிந்து கொண்டு பார்த்தாள். எல்லோருமே வியப்புடன் கவனித்தார்கள்.

கணேசன் கண்களை நன்றாகத் திறந்து எல்லாரையும் ஒருமுறை வெறிக்கப் பார்த்தான். "நான்—நான்—நான்—" என்று குழறிவிட்டு, அவசரமாக எழுந்திருக்க முயற்சி செய்தான்.

"மெள்ள! மெள்ள!" என்றபடி மதுரநாயகம் உதவி செய்ய முன் வந்தார்.

"அதற்குள் எழுந்திருக்க முயற்சி செய்ய வேண்டாம்; முதலில் உட்காருங்கள்!" என்று சந்துரு முதுகைத் தாங்கிக் கொள்ள, கணேசன் பல முறைகள் கண்களை மூடி மூடித் திறந்தான்.

"அண்ணா! உனக்கு என்ன பண்ணுகிறது? ஏன் இப்படிக் கீழே கிடந்தாய்?...அண்ணா...இந்திரா இதைக் கேட்கும்போதே அவளுடைய குரல் உடைந்தது. துயரம் அவள் நெஞ்சை அமுக்குகிறது என்பதை யாவரும் உணர்ந்தார்கள்.

"இரு...கொஞ்சம் இரு... நினைவுபடுத்திப் பார்த்துக் கொள்கிறேன்!" என்று இரு கைகளாலும் தலையைப் பிடித்துக் கொண்டான் கணேசன். நெற்றியில் காணப்பட்ட சுருக்கங்களும், முகத்தில் இருந்த வேதனையும் மிகவும் சிரமத்துடன் அவன் சிந்தனை செய்கிறான் என்பதையே காட்டின.

சந்துரு ஆழ்ந்த பெருமூச்சு ஒன்று விட்டான். "இவர் இந்த வீட்டில் மற்றவர்கள் மாதிரி இல்லை என்பது உண்மைதான். எல்லாரும் நான் கேட்குமுன்பே பதில் தயாராக வைத்துக் [illegible] தான், ஒரே ஒரு [illegible] கொண்டு சொல்கிறேன்' என்கிறார்!" என்றான்

29/05/2011 12:50

மதுரநாயகம் அவனை விறைத்துப் பார்த்தார்: ''என்ன ஆரம்ப முதலே நீங்கள் எல்லார் பேச்சிலும் அவநம்பிக்கையுடன் தொடங்குகிறீர்கள் என்று தோன்று கிறதே!'' என்றான்.

''இந்தக் காலம் அப்படி! எங்கள் தொழிலில் நாங்கள் எல்லாரும் ஹரிச்சந்திரர்களாக இருந்தாலும் கட்டுபடி யாகாது. மற்றவர்கள், அந்த மகாராஜாவையே பின்பற்று வதாக இருந்துவிட்டாலும் எங்களுக்குப் பிழைப்பு கிடையாது. ஆகையாலே, கோபித்துக் கொள்ளாதீர்கள்! நாம் ஒருவருக்கொருவர் ஒத்தாசை செய்துகொண்டி ருப்பதுதான் நல்லது, நியாயம்!'' என்றான்.

சந்துருவின் ஹாஸ்யத்தை கணேசன் ரசித்தவன் போலவே புன்னகை செய்துகொண்டிருந்தான்.

''இப்போது எப்படி இருக்கிறது? கொஞ்சம் காபி போட்டுக் கொண்டு ஓடி வரட்டுமா, அண்ணா?'' என்று அன்புடன் விசாரித்தாள் இந்திரா.

''ஒன்றும் வேண்டாம்! எனக்கு என்ன வந்துவிட்டது இப்போ?''

சந்துரு உடனே, ''அதைத்தான் சொல்லிக்கொண்டே யிருக்கிறேன். உங்களுக்கு ஒரு ஆபத்தும் இல்லை; டாக்டர் வந்தவுடனும் அதைத்தான் சொல்லப்போகிறார்... ஆனால் ஏன் இப்படி விழுந்து கிடந்தீர்கள் என்பதை நீங்கள்தான் எங்களுக்குச் சொல்ல வேண்டும்?'' என்றான்.

''அதைக் கேட்கத் தானே காத்துக் கொண்டிருக் கிறோம்?'' என்று மதுரநாயகம் அருகில் குத்திட்டு உட்கார்ந்து, அவன் முதுகைத் தடவினார்.

''அடப் பாவமே! எதற்காக இப்படி எல்லாரும் பயப் படுகிறீர்கள்?...நான் கால் தடுக்கி விழுந்திருக்கிறேன், இருட்டில்!''

''ஆனால், மண்டையில் புடைத்திருக்கிறதாமே! அண்ணா?''



''ஓ! அதுவா! வரும்போது இங்கே மேஜையின்மீது என் மண்டை மோதியிருக்கிறது. அவ்வளவேதான்!''

''ஒருத்தரும் உன்னை அடித்து—'' என்று இந்திரா கவலையுடன் வினவினாள்.

''அடிப்பதாவது, கடிப்பதாவது! யார் சொல்கிறது? நானாக விழுந்தேன். மேஜை மண்டையில் இடித்திருக் கிறது...''

'''மேஜை' என்ற புனைப் பெயருள்ள ஆசாமி யாரேனும் இந்த வட்டாரத்தில் இருக்கிறார்களா?'' என்று கேட்ட சந்துரு கேலியாக.

''நீங்கள் யார் என்றே எனக்குச் சொல்லவில்லையே இன்னும்?'' என்று கணேசன் விசாரித்தான்.

''என் பெயர் சந்துரு. துஷ்டர்கள் எல்லோரும் 'ஸி. ஐ. டி. சந்துரு' என்று பெயர் சொல்லுவார்கள், மதுர நாயகம் போன்ற நல்லவர்கள் எல்லாம் 'துஷ்டரைக் கண்டால் தூர விலகு' என்கிறபடி, என்னை நெருங்க விடமாட்டார்கள். ஆனால் நான் யாரானாலும் லேசில் விடுவதில்லை. உங்கள் சித்தப்பாவைக்கூடச் சும்மா விடவில்லை. இதோ வீட்டிற்கு விருந்தாளியாக வந்திருக் கிறேன். எல்லாரிடமும் பேசி விட்டுப் போகலாம் என்று ஒரு தீர்மானம் செய்திருந்தேன். உங்களுடன் பேச முடியாமல் போகுமே என்று ஆரம்ப முதலே எனக்குப் பயம். ஏனென்றால், அதற்குள் ஒன்று, நான் சறுக்கி விழுந்தாக வேண்டும்? அல்லது, நீங்கள் சறுக்கி விழுந்தாக வேண்டும்.''

டிரைவர் கன்னையன் வந்து நின்றான். ''என்னை அழைத்ததாகச் சொன்னாங்க!'' என்று சந்துருவைப் பார்த்து உறுமினான்.

''ஆமாம், காரில் நான் ஒரு காகிதத்தைத் தவறிப் போட்டு வந்துவிட்டதாக எண்ணிவிட்டேன். நல்லவேளை அது என் பையிலே [illegible] விஷயம்!'' என்றான் ச[illegible]

29/05/2011 12:50

''சரிங்க!'' என்று விறைப்பாகத் திரும்பினான் கன்னையன். அங்கே கணேசன் அடிபட்டு உட்கார்ந்திருப்பதும் மற்றவர்கள் கூடியிருப்பதும் அவனுக்கு லட்சியமாகத் தோன்றவில்லை.

அவன் தலை மறைந்ததும், ''கன்னையன் ஒரு அற்புதமான ஆள்... அவனைப் பார்த்தால், எனக்கு விளக்கெண்ணெய் குடித்த வாய்க்குச் சர்க்கரை போட்டுக்கொண்ட மாதிரி இருக்கிறது. அவனை எங்கேயோ நான் சந்தித்திருக்கிறதாக ஞாபகம்'' என்று சந்துரு மெல்லச் சொன்னான்.

கணேசன் சுறுசுறுப்பாக, ''நீங்கள் இதற்குமுன் கன்னையனைப் பார்த்திருக்கிறீர்களா? எங்கே? எப்போது?'' என்று வினவினான்.

''இந்த வீட்டுக்கு வந்ததும் எனக்கும் 'ஞாபக மறதி' என்ற வியாதி பற்றிக் கொண்டுவிட்டது; உடனே சொல்லத் தெரியவில்லை?'' என்றான். பிறகு மெதுவான குரலில், ''மகா மேதாவி அவன். நான் ஆள் அனுப்பு முன்பே 'என்னை அழைத்தீர்களா' என்று கேட்டுக் கொண்டு வந்து விட்டான் பாருங்கள்! அதோடு விட்டு விடுங்கள் அதை!'' என்று முடித்தான்.

பதினைந்து நிமிஷங்களுக்குப் பிறகு கணேசன் மெல்ல எழுந்துநின்றான். ''டாக்டர் இன்னும் வரக்காணோமே?'' என்று திலகவதி சொன்னதற்கு, ''வராவிட்டாலும் பரவாயில்லை. கணேசனுக்கு இப்போது டாக்டர் அவசியம் இல்லை. இன்றிரவு நன்றாகத் தூங்கினால் போதுமானது! நான்கூட அவருடன் ஒன்றும் பேசித் தொந்தரவு செய்யப் போவதில்லை!'' என்று பதில் கொடுத்துவிட்டான் சந்துரு.

இந்தச் சமயம் சமையற்காரன் வந்து எல்லோருக்கும் இலை போட்டுத் தயாராக இருப்பதாகத் தெரிவிக்கவே, சந்துரு, ''எனக்கு உத்தரவு கொடுங்கள்!'' என்று தலைக்கு மேல் கையைத் தூக்கிக் கும்பிட்டான்.



கணேசன் அவனுடைய கையைப் பிடித்துத் தன்னுடைய கையுடன் பிணைத்துக்கொண்டு, ''நன்றாகச் சொன்னீர்கள்! நீங்கள் சாப்பிடாமல் போவதாவது! அது ஒருகாலும் நடக்காது!'' என்றான்.

மதுரநாயகம் பழக்கமான புன் சிரிப்புடன், ''இன்றைக்கு அவர் சொல்கிறபடி கேட்டு விடுங்கள்! அதுதான் சரி!... அதற்குள் டாக்டரும் வந்து விடுவார். திருப்தியாகிவிடும்'' என்றார்.

இந்திராவின் கண்களில் தேங்கியிருந்த எண்ணங்களை சந்துரு புரிந்துகொண்டிருக்க வேண்டும். ''நீங்கள் இந்த வீட்டில் சாப்பிட்டால் மட்டும் போதாது; இங்கேயே இன்றிரவு துணையாக இருக்க வேண்டும். எனக்கு ஏதோ நடக்கும் என்று பயமாக இருக்கிறது. எங்களை இந்தச் சமயம் கைவிட்டு விடாதீர்கள்!'' என்று அந்தக் கண்கள் பேசின.

திலகவதி ஒன்றுமே பேசவில்லை, ஏதோ ஒருவித விவரிக்க இயலாத அச்சம், பயம், அவளைப் பிடித்திருந்தது போல் தோன்றியது. அடிக்கடி சந்துருவின் முகத்தைப் பார்த்தாள்! நாலா மூலைகளையும் கவனித்தாள்; ஜன்னல் அருகே சென்று தோட்டத்தை அடிக்கடி எட்டிப் பார்த்தாள். அவள் கண்கள் எதையோ காண வேண்டும் என்று துழாவித் துழாவி தயங்கின. தமாஷாகப் பேசுபவள் என்று இந்திரா வர்ணனை செய்ததற்கு நேர் எதிராக இருந்தன அவள் நடத்தையும் சுபாவமும்.

எல்லாரும் சாப்பாட்டுக்குக் கீழே இறங்கி வந்தபின், கணேசன் முன்னைவிடத் தெம்பாகக் காணப்பட்டான். அவனுக்கு ஏற்பட்டிருந்த அதிர்ச்சி பூராவும் மறைந்து விட்டதாகவே தோ[illegible] நண்பன் போல் பேசின[illegible] நான் பார்த்தது இல்லையே ஒழிய; அதிகம் கேள்விப் பட்டிருக்கிறேன்...'' என்றான்.

29/05/2011 12:50

சந்துரு தலையை ஆட்டினான். "என்னை யாரும் பார்க்கக் கூடாதென்றே நான் ஒளிந்து கொள்கிறேன். என்னைப் பற்றி யாரும் கேள்விப்படக் கூடாதென்று எப்படி எல்லாருடைய காதையும் பொத்த முடியும்!" என்றான்.

"பத்திரிகைகளில் நீங்கள் கண்டுபிடித்திருக்கிற கேஸ்களைப் பற்றிய விவரங்கள் வராமல் தடுக்க முடியுமா?"

"என்னைக் கேட்டால் பத்திரிகையில் வருகிற எந்தச் செய்தியையும் நம்பக் கூடாது என்றுதான் சொல்லுவேன். ஆமாம் 'நாளைக்கு மழை' என்று போடுகிறார்கள்; வெயில் காய்கிறது. 'திங்கள் கிழமை—நல்ல செய்திகள்' என்று வார பயன் போடுகிறார்கள்! ஒரு டஜன் உறவினர்கள் வீட்டில் கூட்டம் போட்டு கும்மாளி அடிக்கிறார்கள். இதற்கப்புறம் பத்திரிகையில் வருகிற செய்திகளை நம்பலாமா, சார்!... நான் நம்ப மாட்டேன்!" என்றான்.

கை அலம்புகிற 'பேஸின்' அருகே இந்திரா நின்று கொண்டிருந்தாள். அவள் முகத்தைக் கவனித்து, "ஒரு லவல் இருக்குமா?" என்று உரக்கக் கேட்டுக் கொண்டே சந்துரு போனான். "எங்கே! நீங்கள் சொல்லவேண்டியதை மடமடவென்று கொட்டி விடுங்கள்!" என்று மெதுவாகச் சொன்னான்.

"நான் டாக்டருக்கு 'டெலிபோன்' செய்யவே இல்லை" என்றாள் இந்திரா.

"அது எனக்குத் தெரியும். அப்புறம்..." என்றான் சந்துரு.

"எப்படி?"

"டாக்டர் என் இன்னும் வரவில்லை என்று அங்கே எல்லாரும் விசாரித்தார்கள். நீங்கள் மட்டும் அது பற்றிப் பேசவே இல்லை..."

"நீங்கள் மிகவும் கெட்டிக்காரர் என்னால் டெலிபோன் செய்ய முடியவில்லை. நான் சென்றபோது,



ஹால் விளக்கு அணைந்திருந்தது. என் காலடிச் சத்தம் கேட்டு யாரோ ஓட்டமாக ஓடின மாதிரி இருந்தது. அண்ணாவை அடித்த மாதிரி யாராவது என்னையும் இருட்டில் தாக்கலாம் என்று பயந்து நான் பேசாமல் மேலே திரும்பி விட்டேன். அந்தச் சந்தர்ப்பத்தில் அதைச் சொன்னால் திலகவதி பயந்து போவாள்."

"டாக்டர் வராவிட்டால் பரவாயில்லை என்கிறேனே! கால் தடுக்கிக் கீழே விழுந்திருக்கிறார். சற்று மயக்கம் நான் நல்ல வேளையாக அந்தச் சமயம் போயிருக்கிறேன் வீணாக அலட்டிக் கொள்ளத் தேவை இல்லை!" என்றான் சந்துரு, ஏனோ குரலை உயர்த்தி.

இப்படி சமயா சந்தர்ப்பமில்லாமல் அவன் பேசுவதன் காரணத்தை ஒரே நொடியில் இந்திரா புரிந்து கொண்டாள். அவர்களை நோக்கி மதுரநாயகம் வந்து கொண்டிருந்தார். சநதுரு வெகு சகஜமாக, "இந்தா இவரும் இருக்கிறார். உங்கள் குடும்பததுக்கு மிகவும் வேண்டியவர். அண்ணாவைக் கவனித்துக் கொள்கிறார்... எதற்கும் பயப்படாதீர்கள்!" என்றான்.

மதுரநாயகம் பக்கத்தில் வந்து, "இன்னுமா கவலை? கணேசனே ஒன்றும் இல்லை என்று சொலலி விட்டாரே!" என்றார்.

"முதலில் சித்தப்பாவைப் படுக்கையோடு தள்ளி விட்டது; இப்போது அண்ணாவுக்கு ஆபத்து... அடுத்தபடி என்ன நடக்குமோ என்று பயமாக இருக்கிறதே!" என்றாள் இந்திரா.

"உங்களுக்காவது பயம் ஏதும் இல்லையே, மிஸ்டர் சந்துரு?" என்று கேட்டார் மதுரநாயகம்.

"மிஸ்டர் மதுரநாயக[illegible] பார்த்ததில்லை. இன்று [illegible] விஷயம் தெரிந்தவர் யாரேனும் ஒருவர் உண்டென்றால் அது நீங்கள்தான் என்று எனக்குப் பட்டுவி[illegible]து. (சநதுரு

29/05/2011 12:51

கூடத்தில் சாப்பிட உட்கார்ந்து கொண்டிருந்த கணேச னையும், ஒரு மூலையில் கண்ணாடி எதிரில் நின்று தலையைச் சரிசெய்து கொண்டிருந்த திலகவதியையும் பார்த்துக் கொண்டான்.) உங்களுக்கு நான் ஒன்று சொல் கிறேன். ஒரு மனிதன் பணம் படைத்தவனாகப் பிறந்து விட்டாலும் சரி—அல்லது, நமது செங்கல்வராய பிள்ளை மாதிரி நிறையப் பணம் சம்பாதித்து விட்டாலும் சரி— என்றோ ஒரு நாள் யாரோ ஒருவன் அதைத் தேடிக் கொண்டு வருவான் என்பது நிச்சயம். பணத்திற்கு வாசனை உண்டு. எல்லா வாசனையையும் விடக் கடுமை யான மணம் அதனுடையது. தானாகவே அவனுக்கு எதிரி கள் முளைப்பார்கள்... வருவார்கள்...''

''ஆமாம்... அப்படி நம் செங்கல்வராய பிள்ளைக்கும் எதிரிகள் இருப்பதாக நினைக்கிறீர்களா? இருந்தால், நாம் அவர்களைத் தடுக்க வேண்டாமா?''

''பேஷாக! அதற்கு உபாயம் என்னவென்றால், சும்மா கையைக் கட்டிக் கொண்டு இந்த வீட்டில் உட்கார்ந்து இருக்க வேண்டியதுதான். கண்ணை மட்டும் மூடக்கூடாது எதிரி வரும்போது 'கப்'பென்று குரல்வளையைப் பிடித்துக் கொள்ள வேண்டும்... லகுவான வழி...''

''நான் அந்த மாதிரி நினைத்ததில்லை...''

''எப்படி நினைக்க முடியும்? நீங்களும் ஸி.ஐ.டி. சந்துருவா! இல்லையே!'' என்றான் சிறிது ஏளனமாகவே.

''அதுதான் எப்போதும் உங்கள் 'முறை' என்று சொல்லுங்கள்!''

''நான் 'முறை' என்று தனிப்பட ஒன்று வைத்துக் கொண்டு வேலை செய்வதே இல்லை. அவ்வப்போது சந்தர்ப்பத்துக்குத் தகுந்த மாதிரி என் முறையை மாற்றிக் கொள்ளுவேன். முன் காலத்திலே சித்திரகாரர்கள் ஒரு நகத்தையும் மயிரையும் வைத்துக் கொண்டு ஒரு அழகிய ராஜகுமாரியின் படத்தைத் தத்ரூபமாக எழுதினார்கள்



என்பார்கள்; துப்பறியும் கதைகளைப் படித்தால், ஒரு 'ஸ்குரு' ஆணியைக் கொண்டே கொலை செய்தவன் பேர் சாரங்கபாணி; அவனுக்கு வலது கையிலே மோதிர விரல் இல்லை; அவன் பெண் ஜாதிக்கு இடது கண்ணில் ஒச்சம் என்றெல்லாம் கண்டுபிடித்துச் சொல்லுவார்கள். அதெல் லாம் என் 'முறை' இல்லை. செங்கல்வராய பிள்ளையிடம் ஒரு பண்டம் இருந்தது என்று வைத்துக்கொள்வோம். அதை ஜாக்கிரதையாகக் காவல் செய்து வைத்துக் கொள்ள அவருக்குத் திறமை இல்லையென்றால் நான் தான் என்ன செய்ய முடியும்?''

மதுரநாயகம் இடுப்பில் கையை வைத்துக்கொண்டு சந்துருவை வழி மறிக்கிற மாதிரி நின்று கொண்டார். ''அப்படி ஒரு முடிவு கட்டிவிடலாமா? இங்கே ஒரு சின்னக் கேஸ் இருக்கிறது எடுத்துக் கொள்வோம்'' என்று ஆரம்பித்தார்.

''நான் சின்னக் கேஸ்களை எடுத்துக் கொள்கிற வழக்கமே இல்லை; அதற்காக மூளையைச் செலவு செய் வதும் இல்லை. எனக்கு அற்பத் திருடர்களைப் பிடித்துச் சிறைச்சாலைக்குள் தள்ளும் பிரமை இல்லை. யோசனை செய்து, திட்டம் போட்டுக் கொண்டு நடத்துகிற பெரிய ஆசாமிகளோடு போராட வேண்டும் என்பதுதான் ஆசை. ஒரு பெரிய புதிராக நம் கையில் வந்து சேர வேண்டும் அதில் உள்ள சிக்கல்களை எடுத்து எறிய வேண்டும் என்பது என் லட்சியம். வெறும் ஸி.ஐ.டி.யாக இருப்பதில் எனக்குப் பெருமை இல்லை. அதில் கலைஞன் ஆக இருக்கவே விரும்புகிறேன்.''

மதுரநாயகம் ஒரு பெருமூச்சு விட்டார். ''நீங்கள் பேசு கிறது கூட ஒரு கலையாக இருக்கிறது. இப்படியே இதை யெல்லாம் குறிப்பு எடுத்[illegible] பத்திரிகைக்கு அனுப்ப வே[illegible] கூட இருக்கிறது. எனக்கும் ஒரு எழுத்தாளனாக வேண்டும் என்ற ஆசை உண்டு.''—மதுரநாயகம் எப்படியேனும்

சந்துருவின் அபிமானத்தைப் பெற வேண்டும் என்ற நோக்கத்துடன் குழைவாகப் பேசினார்; ஆனால் அத்தனையும் வியர்த்தம் என்று சந்துருவின் பதில் உடனே வெளிப்படுத்தியது.

''ரெப்போதே வேண்டிய அளவு எழுந்தாளர்கள் இருக்கிறதாக நான் கேள்விப்படுகிறேனே!'' என்றான் சந்துரு.

''உங்களுடன் பேசிக் கொண்டிருந்தாலே போதும், பொழுது போகிறதே தெரியாது!'' என்று மதுரநாயகம் சிரித்தார் தமது தோல்வியை ஒப்புக் கொள்ளாமலே.

மறுபடியும் ஏதேனும் சாட்டையடியாகச் சந்துருவின் பதில் விழுந்துவிடுமோ என்று அஞ்சினாள் இந்திரா. சற்று ஒதுங்கி நின்றவர், சமீபம் வந்து, ''சாப்பிட நேரமாகிக் கொண்டிருக்கிறது... அவர்கள் காத்திருக்கிறார்களே, வர லாமா?'' என்று ஞாபகப்படுத்தினாள்.

சந்துரு, ''இதோ வந்துவிட்டேன். சாப்பிட்டுக் கொண்டு பேசுவது என் வழக்கமே இல்லை... ஒன்றை முடித்துக் கொண்டுதான் மற்றொன்றுக்கு வரவேண்டும். ஆகையாலே, மிஸ்டர் மதுரநாயகம்! உலகத்தில் துப்பறிகிற வனாயிருந்தாலும் சரி, கொள்ளைக்காரனாயிருந்தாலும் சரி, சிலந்திப் பூச்சியைப் பின்பற்றுங்கள் என்பதே என் உபதேசமாயிருக்கும். சிலந்திப் பூச்சி கொசுவைத் தேடிக் கொண்டு அலைகிறதா? கிடையாது; வலையை விரித்துக் கொண்டுஉட்கார்ந்துகாத்திருக்கிறது! எப்படி?'' என்றான்.

''பேஷ்! சபாஷ்! உங்களோடு பேச வேண்டும் என்ற ஆவலைத் தூண்டி விடுகிறீர்கள்!''

''இருக்கட்டும்: நல்ல பிள்ளையாக இருந்து காட்டி னால் அப்புறம் ஒரு சமயம் வேண்டிய அளவு நாம் பேச லாம். சம்பாஷணை என்பது கலை; அந்தக் கலைக்கு நான் தான் தியாகராஜர், தீட்சதர், சாமா சாஸ்திரிகள்... அதை வேண்டுமானாலும் குறிப்பு வைத்துக் கொள்ளுங்கள்! பிற்பாடு பேசலாமே!''



''நிச்சயம்தானே அந்த வார்த்தை?''

''இல்லை... நாம் நிச்சயம் என்றால்தானே, நம் வார்த்தைக்கு ஓர் உறுதி சொல்லலாம்.''

''சாப்பாடான பிறகு போய் விடுவீர்கள் அல்லவா?''

''அதுவும் இல்லை... ஆரம்பத்தில் அப்படித்தான் நினைத்துக்கொண்டு வந்தேன். இன்றிரவு இங்கேயே தங்கி விட்டுக் காலையில் போவது என்று இப்போது தீர்மானித்து விட்டேன்!'' என்றான் சந்துரு கண்டிப்பாக.

மதுரநாயகம் வாயடைத்து நின்றுவிட்டார். அவர் முக் கியமாகக் கேட்க விரும்பிய கேள்வி அதுதான் போலும்!

''வாருங்கள், நேரமாகிறது!'' என்று கணேசன் அழைத்தான். இலைகளில் சமையற்காரன் மளமளவென்று பரிமாறத் தொடங்கிவிட்டான்.

சந்துரு அன்றிரவு பங்களாவில் தங்குகிறான் என்ற செய்தியை ஒவ்வொருவர் ஒவ்வொரு விதமாக ஏற்றுக் கொண்டார்கள். கணேசன் ஒருமுறை நிமிர்ந்து பார்த்து விட்டு மௌனமாகி விட்டான். இந்திராவின் முகத்தில் உண்மையிலேயே ஒரு பிரகாசம் தெரிந்தது; தன் சித்தப்பா வுக்கு வரக்கூடிய ஆபத்தில் பெரும்பகுதி நீங்கிவிட்டது போல் அவள் உள்ளம் பூரித்தாள். திலகவதி மெல்ல உதட்டைக் கடித்துக் கொண்டாள்; தனக்குள் ஏதோ ஒரு தீர்மானத்துக்கு வரமுடியாமல் திணறுவதுபோல் அவள் உடல் துடித்தது. முகத்தில் கவலையின் ரேகைகள் ஓடின. இரண்டொரு வார்த்தைகளைத் தவிர யாரும் பேசவில்லை. மதுரநாயகம் சந்துருவின் அருகிலே உட்கார்ந்து கொண்டு சம்பாஷிக்க முயற்சிப்பதும், பின் சந்துருவின் வழக்கம் ஞாபகம் வந்தவர் போல் அடக்கிக் கொள்வதுமாக இருந்தார். அண்ணாமலை [illegible] இத்தனையெல்லாம் விரித்துவிட்டு சந்துருவுக்கு [illegible] கூறினார். இதற்குக் காத்திருந்தவன்போல் சடார் என்று சந்துரு எழுந்துவிட்டான். ''நாளைக் காலையில் நாம் எல்லோரும்

29/05/2011 12:51

சந்திப்போம்... மிஸ்டர் மதுரநாயகம்! 'நிச்சயமான வார்த்தைதானா?' என்று இதைக் கேட்காதீர்கள்... மிஸ்டர் கணேஷ் நீங்கள் அதற்குள் தடுக்கி விழவும்கூடாது. ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்... நான் வருகிறேன்!'' என்றுபுறப்பட்டான். அண்ணாமலை அவனை இரண்டாம் மாடிக்கு அழைத்துச் சென்று, கணேசனின் அறைக்கு அப்பால் இருந்த சிறு அறையில் விட்டுச் சென்றான்

இப்போது மணி பதினொன்று அடித்தது. கதவைத் தாளிட்டுக்கொண்டு, அந்த அறையில் குறுக்கும் நெடுக்கு மாக நடந்தான் சந்துரு. அதுவும் கணேசனுடைய அறை தான்; பழைய கடிதங்களும், 'பைல்'களும், புஸ்தகங்களும் இறைந்து கிடந்தன. வெகு நாட்களாக சுத்தம் செய்யப் படாததால், மூலைகளில் குப்பை குவிக்கப்பட்டிருந்தது.

அண்ணாமலை ஒரு டம்ளரில் சுடச்சுடப் பால் கொண்டு வந்து வைத்துவிட்டு, ஏதேனும் உத்தரவு உண்டா என்று கேட்டு நின்றான்.

''பாலில் தூக்க மாத்திரை போட்டிருக்கிறாயா, அண்ணாமலை?'' என்று கேட்டான் சந்துரு வெகு சாதாரணமாக.

திடுக்கிட்டு, ''அது ஏன்? எதற்கு அப்படிக் கேட் கிறீங்க?'' என்று கேட்டான் அவன்.

''மாத்திரை போட்டுக் கொள்ளாவிட்டால் நான் தூங்குவதில்லை!'' என்று சொல்லிக்கொண்டு, ஒரு சிறு பச்சை மாத்திரையை வாயில் போட்டுக் கொண்டு அதன் பின் பாலை அருந்தினான். இப்படிப் பேசிவிட்டு, பிறர் முகத்தைக் கூர்ந்து நோக்குவது அவன் வழக்கம். அண்ணாமலை காலி டம்ளருடன் அங்கிருந்து அகன்றான்.

கட்டில் பழைய மரக் கட்டில்; பல தடவை மெத்தையைத் தூக்கிப் போட்டான் சந்துரு. அடியில் கொத்துக் கொத்தாகக் கம்பிகள் ஓடிக் கொண்டிருந்தன. ஏன் இந்தக் கம்பிகள்? இவைகளின் உபயோகம் என்னவாக இருக்கும்?



ஒரு க்ஷணத்தில் ஞாபகம் வந்துவிட்டது. கணேசனுக்கு 'விஞ்ஞானப்பித்து' உண்டு. மின்சார வேலைகளில் கெட்டிக்காரன் என்று இந்திரா கூறியிருந்தாள் அல்லவா? ஒருவேளை இதுவே கணேசன் 'ஆராய்ச்சிக் கூட'மாக இருக்குமோ? கணேசன் ஒரு காரியப் பித்து என்று அவனுக்குத் தோன்றியது. கட்டிலின் அடியில் உட்கார்ந்து ஒவ்வொரு கம்பியாக அதன் எதிரிலுள்ள கம்பியுடன் பிணைத்துக்கொண்டே வந்தான். பதினைந்து நிமிஷங் களில் அந்த வேலை முடிந்தது. தலைமாட்டில் ஒரு 'ஸ்விட்ச்' இருந்தது; அதையும் போட்டான். ஒரு சப்தமும் கேட்கவில்லை. ஒருவேளை இந்த அறையைவிட்டு, தன் சொந்த அறைக்கே ஆராய்ச்சிகளை அவன் மாற்றிக் கொண்டிருக்கலாமோ!

படுக்கையில் படுத்தபடி சந்துரு அன்று நடந்தவற்றை யெல்லாம் மனத்தில் ஓடவிட்டான். பங்களாவில் அவன் கண்ட பல பேர்களைப் பற்றி அபிப்பிராயங்களை மோத விட்டான்; மதுரநாயகம் — திலகவதி — செங்கல்வராய பிள்ளை — கணேசன் — இவர்களில் யாரை நம்பலாம்? இடையில் தாமோதரமும், நாராயணனும்கூட அவன்மனத் திரையில் ஓடினார்கள், அடுத்தபடி அண்ணாமலையும் கன்னையனும் வரிசையாக வந்தார்கள்... மனிதர்கள் எத்தனை மாறுபட்ட அபிப்பிராயம் கொண்டவர்கள்! ஒவ்வொருவருக்குப் பிடித்தது ஒன்று, ஒவ்வொருவருக்கு அபிப்பிராயம் ஒன்று என்று எத்தனை வித்தியாசங்கள்.

சந்துருவுக்குக் கண்ணைச் சுழட்டியது! ஒரு தூக்கம் போடலாம் என்று திரும்பிப் படுத்தான். நித்திராதேவியும் அவனை இறுக அணைத்துக் கொண்டிருக்கவேண்டும்.

திடுதிப்பென்று விழிப் [illegible] காரணம் என்று அவனால் அப்போது [illegible] வில்லை. ஆனால் ஏதோ ஓர் அரவம்தான், அதுவும் அவன் அறைக்குள்ளேயே கேட்டுத்தான் நித்திரைக்கு பங்கம்

29/05/2011 12:52

ஏற்பட்டிருக்க வேண்டும். உடம்பைச் சிறிதும் அசைக்காமல் படுத்தபடியே கவனித்துக் கேட்டான். அறைக் கதவையும் ஜன்னலையும் அவனே தாழ்ப்பாள் போட்டிருந்தான்; சந்தேகமே இல்லை. பின் அறைக்குள் சப்தம் கேட்ட மர்மம் என்ன? யார் எப்படி நுழைந்திருக்க முடியும்? மேலும் ஒரு நிமிஷம் நிசப்தமாகக் கழிந்தது. 'கர் கர் கர்' என்ற சப்தம் இப்போது தலைமாட்டிலிருந்து வந்தது. யாரோ ஒருவர் நாற்காலியைச் 'சரசர' வென்று இழுப்பது போல் தொடர்ந்து கேட்டது; பின்னர் ஒரு பெருமூச்சு... நீண்ட பெருமூச்சு யாரோ விடுவது அவன் செவிகளை எட்டியது. கண்களை மட்டும் உயர்த்திப் பார்த்தான். தலைமாட்டில் யாருமே இல்லை! பின் சப்தம் வந்த காரணம்! அது எங்கிருந்து வந்தது? வெகு அருகிலே, கட்டிலின் பக்கமாக, காதில் வந்து சொல்வது போல் கேட்டது. அப்புறம் யோசனை செய்ய அதிக நேரம் இல்லை.

பரிச்சயமான ஒரு பெண் குரல் கெஞ்சிக் கேட்டது. ''அப்பா! அப்பா! உன்னை நான் இங்கே 'வராதே' என்று எத்தனை தரம் சொன்னேன்?''

''உன்னைப் பார்த்து விட்டுப் போகவே வந்தேன். இப்போது போய் விடுகிறேன்!'' என்று பதில் சொல்லியது கரடுமுரடான ஒரு ஆண் குரல்.

''ஐயோ! என்னைப் பார்க்காவிட்டால் என்ன?... இரைந்து பேசாதீர்கள், அப்பா!...ஐயோ, ஏன் இன்றைக்கு தேர்ந்தெடுத்து நீங்கள் வரவேண்டும்!''

''ஹூம்! நன்றாக இருக்கிறதே உன் வரவேற்பு. உனக்காக இதுவரை நான் பட்டிருக்கிற கஷ்டம் எல்லாம் மறந்து பேசுகிறாயே!—''

''இப்போது என்னைப் பெரிய கஷ்டத்தில் கொண்டு விடுகிறீர்கள், அப்பா!...இன்றைக்குச் சந்துரு வந்திருக்கிறான். சந்துரு! அவனைப் பார்த்தாலே பயமாக இருக்கிறது. எல்லாம் தெரிந்தவன் மாதிரி பேசுகிறான்.



அவன் கண்கள் குத்துகின்றன. கதறி விடலாமா என்று வருகிறது...கணேசனை அடித்தது நீதானே அப்பா!''

''சீ! நாக்கை அடக்கிப் பேசு! நான் இப்போதுதான் உன் வீட்டிற்குள் வருகிறேன்...உன்னைப் பார்க்கவே வந்தேன். அவனை எதற்கு அடிக்கப் போகிறேன்?''

''இல்லை...எனக்குத் தெரியும்... நீங்கள் என்னைப் பார்க்க வரவில்லை. பணம் கேட்க வந்திருக்கிறீர்கள்! என்னிடம் பணம் இல்லை! காலணா கிடையாது...வீட்டில் திருடுபோய், கலங்கிக் கிடக்கிறார்கள். இந்திரா சந்துருவைக் கூட்டி வந்து, அது வேறு கலவரம். கணேசன் என்ன சொல்லிவிடுவானோ என்று அச்சமாக இருக்கிறது...''

''அவன் சொன்னால், சீவி விடுவேன் சீவி! யார் அவன் மதுரநாயகம்?''

''பழைய சிநேகிதனாம்...என்னை ஒரு மாதிரி பார்க்கிறான்; அவனைக் கண்டாலே நெஞ்சை உலுக்குகிறது...''

''அப்படியானால், நான் இங்கேயே வந்து இருக்கிறேன்; ஒரு நாள் அவன் மென்னியை முறித்துவிடுகிறேன் எனக்குக்கூட அவன் நல்லவனாகப் படவில்லை.''

''அப்பா! நீங்கள் பேசாமல் போய்விடுங்கள். போதும்! அவனைக் கல்யாணம் செய்துகொள்ளப் போகிறவள் இந்திரா. நீங்கள் என்னைப் பற்றிக் கவலைப்பட வேண்டாம்.''

''அப்படியா சமாசாரம்! பழைய சிநேகிதன், பிள்ளைவாளின் அண்ணன் மகளுக்கு மாப்பிள்ளையாக வருகிறான் இதில் என்ன விஷயம் தெரிகிறது உனக்கு? யோசித்துப் பார்.''

''எனக்கு நீங்கள் இங்கே இருக்கிற வரையில் ஒன்றுமே தோன்றாது...''

''நன்றி கெட்ட பெண் [illegible] எனக்கு இப்போது ஆயிரம் ரூபாய் தேவை. [illegible] வருஷத்திற்கு இந்தப் பக்கம் வரமாட்டேன்.''

29/05/2011 12:5

''என்னிடம் பணமே கிடையாது என்றேனே!''

''பணம் வேண்டாம்; ஒரு நகையாவது கொடு; விற்று ஏற்பாடு செய்து கொள்கிறேன்.''

''விற்கிறபோது நீங்கள் மாட்டிக்கொள்ள வேண்டியிருக்கும்; எனக்கு இங்கே கல்தா கிடைக்கும்; உண்மை சொல்லாவிட்டால் நீங்கள் ஜெயிலுக்குப் போகவேண்டி வரும்.''

''நீ கொடுக்கவில்லையென்றால், திரும்பத் திரும்ப இங்கேதான் வந்து கொண்டிருப்பேன். எனக்கு வேறு போக்கிடம் ஏது!''

அப்போது தடதடவென்று கதவு தட்டப்படும் சப்தம் கேட்டது. ''சீக்கிரம்! சீக்கிரம்! அந்த பீரோவுக்குப் பின்னால் ஒளியுங்கள்!'' என்ற அவசர உத்தரவு ஒன்றைப் பெண் குரல் கொடுத்தது. மறுபடி கதவைத் தட்டும் சப்தம் கேட்டது.

''சித்தி! சித்தி!''

''ஏன்? யாரது?''

''நான்தான் இந்திரா! ஏதோ பேச்சுக் குரல் கேட்ட மாதிரி இல்லையா?''

''எனக்குத் தெரியவில்லையே! நான் நல்ல தூக்கத்தில் இருந்திருக்கிறேன்; ஒன்றுமே கேட்கவில்லை, இந்திரா...!''

''உன் விளக்கைப் போட்டுப் பார், சித்தி! ...கதவைத் திறக்கிறாயா?''

''நீ போய்ப் படுத்துக்கொள். இந்திரா! நம் வீட்டில் சந்துரு இருக்கிற வரையில் நாம் கவலைப்பட வேண்டாம். ஒருகால் சந்துருவே யாருடனாவது பேசிக் கொண்டு நடந்திருப்பார். கதவைத் தாழ்ப்பாள் போட்டுக்கொண்டு படுத்துக்கொள். மணி இரண்டரை ஆகிறது...''

''சித்தப்பாவைப் பார்த்தாயா, சித்தி?''



''பார்த்து விட்டுத்தான் படுத்துக் கொண்டேன். நன்றாகத் தூங்குகிறார்.''

சிறிது நேரம் நிசப்தம் நிலவியது. மறுபடி மெல்லிய குரல், ''அப்பா! அப்பா! வெளியே வாருங்கள்!...பார்த்தீர்களா, எத்தனை ஆபத்து இங்கே! கதவைத் திறக்கச் சொல்கிறாளே இந்திரா! இனிமேல் நீங்கள் இந்தப் பக்கம் வரக்கூடாது... மெள்ளப் போய் விடுகிறீர்களா?'' என்றது.

''கொஞ்சமாவது பணம் இல்லாமல் நான் போனால் முத்தையன் என் கழுத்தை நெறித்து விடுவான். ஐந்நூறு ரூபாயாவது இப்போது கொடு...''

''ஐந்நூறு இல்லை. நூறு இருநூறு பார்க்கிறேன், நீங்கள் சந்தடி செய்யாமல் ஹாலில் போய் இருங்கள். ஐந்து நிமிஷத்தில் வருகிறேன். நடுவில் உங்களுக்கு ஏதேனும் தடை இருந்தாலும், ஆட்கள் எதிர்ப்பட்டாலும் நின்று அகப்பட்டுக் கொள்ளக்கூடாது! எப்படியோ ஒரே ஓட்டமாக ஓடித் தப்பித்துக் கொள்ள வேண்டும்... இன்னொரு சமயம் பணம் வாங்கிக் கொள்ளலாம்...''

''எனக்கா நீ சொல்லித் தருகிறாய்? நேற்றுப் பிறந்த பிள்ளையா நான்? அல்லது, உனக்கு ஒரு சங்கடம் நேரும்படி செய்துகொண்டு நிற்பேனா? ஹஹ் ஹஹ் ஹா!...''

சந்துருவுக்கு எல்லாம் விளங்கிவிட்டது. அந்தப் பெரிய பங்களாவில் ஏதோ ஒரு அறையில் நடந்துகொண்டிருந்த சம்பாஷணையைத் தான் அவன் அப்போது கேட்டுக் கொண்டிருந்தான்! கணேசன் ஒரு பெரிய 'வேலை' செய்து வைத்திருந்தான். அந்த வீட்டில் அறைக்கு அறை ரகசியமாக மின்சாரக் கம்பிகளைப் பொருத்தி, தன் அறையில் இருந்தபடியே அங்கேயே நடக்கும் சம்பாஷணைகளைக் கேட்க அவன் செய்திருந்த ஏற்பாடு அது! அவன் 'பித்தே' அல்ல; பெரிய கெட்டிக்கார[illegible]

29/05/2011 12:

இந்தச் சம்பாஷணையெல்லாம் [illegible] அவள் தந்தையும் பேசிக்கொண்டது. அதைக் கேட்ட பின்,

திலகவதியின் கவலையைச் சந்துரு புரிந்து கொண்டான். கணேசன் அவள் தந்தையைப் பற்றிய ரகசியங்களை அறிந்து கொண்டே, அவனை வீட்டில் ஏற்றக் கூடாதென்று பிடிவாதம் பிடித்திருக்கிறான். அந்தத் தகப்பனும் அசந்தர்ப்பமாக இப்போது வந்து அவளுடைய நிம்மதியைக் கலைக்கிறான். அவன் யார்? அவன் செய்த குற்றம் என்ன? நேரில்—பகலில்—அவன் பகிரங்கமாக வரக்கூடாத காரணம் என்ன? கணேசன் விரட்டி அடிப்பதன் மர்மம் என்ன?— இவைகளைக் கண்டு பிடிக்க வேண்டுமானால், முன்னதாக திலகவதியின் தந்தையின் பூர்வோத்தரங்களை அறிந்துகொண்டாக வேண்டுமே! அதற்கு ஒரு சந்தர்ப்பமும் இதோ இருக்கிறதே!

கட்டிலில் இருந்த 'ஸ்விட்'சை முன்னிருந்தபடியே திருப்பிப் போட்டு விட்டு, சந்துரு கட்டிலிலிருந்து கீழே குதித்தான். அவன் இப்போது திலகவதியின் தகப்பனை முந்திக் கொண்டு ஓடி, கீழே ஹாலை அடைந்து காத்திருந்தால், அவனைப் பார்க்க முடியும்.

இரு மாடி படிக்கட்டுகளையும் மளமளவென்று கடந்து கீழே இறங்கினான் சந்துரு. துரிதமாகவும், சந்தடியின்றியும் நடக்கப் பழக்கப்பட்டவனாகையால், மூன்றே நிமிஷங்களில் வெளி ஹாலில் வந்து நின்றான்.

அவன் அவசரப்பட்டதற்கு மற்றொரு காரணமும் உண்டு. சந்துரு கேட்டதுபோலவே, கணேசனும் அவன் அறையில் இருந்தபடி கேட்டிருக்க வேண்டும் அல்லவா? அப்படியெனில், அவனும் ஹாலுக்கு வருவதற்கு விரும்புவான் என்று எதிர்பார்க்க வேண்டியதுதானே?

விளக்குகள் இல்லையாகையால், ஒரே அந்தகாரம் சூழ்ந்திருந்தது. 'டக் டக்' என்ற கெடிகார ஓசையைத் தவிர, வேறு சப்தம் ஏதும் இல்லை. எந்த நிமிஷமும் திலகவதியின் தகப்பன் வந்துவிடலாமாகையால், மாடியின் அடியிலே சிறு இடத்தில் பதுங்கியபடி காத்திருந்தான்



சந்துரு. காத்திருந்து பழக்கம் இல்லாதவர்களுக்கு ஐந்து நிமிஷங்கள் ஐந்து யுகங்களாகத்தான் தோன்றும். சந்துருவின் மனம் அந்த அவகாசத்தில் தீவிரமாக யோசனையில் ஈடுபட்டிருந்து......

மெள்ள, மெள்ள, மாடிப் படியில் யாரோ ஒருவன் இறங்கி வந்தான். கடைசியில் அந்த ஆசாமி ஹாலில் குறுக்கே நடந்தான். குள்ளம்தான்; ஐந்தடி நாலு அங்குலமே உயரம், உடலும் சிறு கூடாக இருந்தது. வயது ஐம்பது ஐம்பத்திரண்டு மதிக்கலாம். பயந்தும் பதுங்கியுமே நடந்து, ஹாலின் கோடியில் தொங்கிய திரைச் சீலையின் பக்கம் சென்றான் அவன். தேள், பூரான் முதலிய விஷ ஜந்துக்களைக் கூடத்தின் நடுவில் விட்டாலும், எதிரிகள் மீதுள்ள பயத்தினால், ஓரங்களிலே ஒண்டும்; அல்லது ஓட்டி ஓடும். இந்த மனிதனும், சமூகத்தின் கோபத்துக்குப் பயந்து, ஓரங்களில் பதுங்குபவனாகக் காணப்பட்டான்.

அந்த மனிதன் முகத்தைச் சந்துரு நன்கு பார்க்க முடியாதவாறு அவன் அதைக் கவிழ்த்துக் கொண்டும் திருப்பிக் கொண்டும் சென்றான்.

மேலும் இரண்டு நிமிஷங்கள் சென்று இருக்கும். அவனைத் தொடர்ந்து ஒரு ஸ்திரீயும் ஹாலுக்கு வந்து விட்டாள். அவள் திலகவதி என்பதை ஒரே நொடியில் சந்துரு ஊகித்துக் கொண்டான். அவள் கையிலே இருந்த காகிதங்கள் நூறு ரூபாய் நோட்டுகள் என்பதையும் எளிதில் சொல்லிவிட முடிந்தது. அவற்றை அந்த மனிதனிடம் கொடுத்தனுப்பவே அவள் நெருங்கிக் கொண்டிருந்தாள். இன்னும் நாலே அடிகள்; அவனும் திரும்பி வந்து அவளிடம் பெற்றுக் கொண்டிருப்பான். அந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு அவன் முகத்தை நேரே பார்த்து விட [illegible] தலையை நன்றாக நீட்டிப் பார்த்தான்.

29/05/2011 12:5

அந்தச் சமயம் பார்த்து யாரும் எதிர்பாராத ஒரு சம்பவம் நிகழ்ந்து விட்டது. ஹாலில் இருந்த டெலிபோன் ''கிர்ர்ர்ர்ங்... கிர்ர்ர்ர்ங்... கிர்ர்ர்ர்ங்...'' என்று உரத்து அலறத் தொடங்கியது. நிசப்தமான இரவு வேளையில் அந்த ஒலி கத்தி கொண்டு கிழிப்பது போல் இருந்தது. இருவருமே அதிர்ச்சி ஏற்பட்டவர்கள் போல் பிரமித்து நின்று விட்டார்கள். டெலிபோனை எடுத்துப் பேசி விடுவோமா என்ற தீர்மானத்துடன் சற்றே திரும்பினாள் திலகம். ஆனால் மறுகணத்தில் அவள் தீர்மானத்தை மாற்றிக் கொண்டாள். மாடியில் யாரோ தடதடவென்று இறங்கி வரும் சப்தம் கேட்டது; ஓட்டமாக ஓடி, அந்த மனிதனுடன் கூடத் திரைக்குப் பின் அவள் ஒண்டி ஒளிந்து கொண்டாள்.

திரைச் சீலையின் ஆட்டம் ஓய்ந்த பாடில்லை; ஹாலில் ஒரு மனிதன் வந்து விட்டான்; கையோடு மின்சார விளக்கையும் பொருத்தி, ஹாலெல்லாம் வெளிச்சத்தைப் பரப்பி விட்டான். டெலிபோன் அடியில் நின்றவன் இப்போது கணேசன்! ரிஸீவரை எடுத்துப் பேசினான்.

''ஹெல்லோ!... யாரது?... உம்!... யார் வேணும்?... ஸி. ஐ. டி. சந்துருவா? அவர் இப்போது யாருடனும் பேச முடியாது... மேல் மாடியில் படுத்திருக்கிறார்; நன்றாகத் தூங்குகிறார்...எழுப்ப முடியாது... இப்போது மணி என்ன தெரியுமா? காலையில் கூப்பிடுங்கள்...''—டக்கென்று கீழே வைத்து விட்டான் ரிஸீவரை!

''இந்த நிசி வேளையில் என்னைக் கூப்பிடுவது யரர்? நான் இங்கே இருக்கிறேன் என்பது எப்படி வெளி மனிதருக்குத் தெரியும்?'' என்று சந்துரு குமுறினான். ஆனால், அப்போது அவன் இருந்த நிலையில் செய்யக் கூடியது ஒன்றும் இல்லை.

கணேசன் சற்று நேரம் அங்கேயே தயங்கினான். ஒரு வேளை ஹாலைச் சோதனை போட்டுத் திலகவதியையும் அவள் தந்தையையும் அம்பலப்படுத்தி விடலாம் என்ற



நோக்கமாகஇருக்குமோ என்று சந்துரு சந்தேகப்பட்டான். ஏனென்றால், சந்துரு கேட்டதை யெல்லாம் அவனும் கேட்டு இருந்தால், அப்படித்தானே அவன் செய்யவேண்டும்? கணேசனுடைய திருஷ்டி நாலாபுறமும் பாய்ந்தது. சந்துருவைக்கூட அது கண்டுகொள்கிற மாதிரி தயங்கியது. கடைசியில், ஐந்து நிமிஷங்களுக்குப் பிறகு, கணேசன் வந்த வழியே திரும்பி மாடிப்படி ஏறினான்.

ஒரு நீண்ட பெருமூச்சு திலகவதியிடமிருந்து சந்துருவை வந்து எட்டியது. அவளும், அவள் தகப்பனும் வெளியே வந்தார்கள். திலகவதி வாசற்கதவைத் திறந்து, தகப்பனை வெளியே அனுப்பினாள். இரண்டு நிமிஷங்களுக்குப் பிறகு தொலைவில் நாயின் குரைப்பிலிருந்து, அந்த மனிதன் விரைந்து ஓடுகிறான் என்பதை உணர முடிந்தது. திலகவதி உள்ளே திரும்புமுன், சந்துருவும் மறைவிடத்திலிருந்து வெளியேறி, தன் அறைக்குத் திரும்பிவிட்டான்...

அங்கே அவனுக்கு ஓர் ஆச்சரியம் காத்து இருந்தது. விளக்கைப் போட்டவுடன் அவனுடைய கட்டிலின்மீது ஓர் ஆசாமி உட்கார்ந்திருந்ததை அவன் கண்டு சிறிது பின் வாங்கினான்.

''யார் நீ?''

''நான் ஸார், நாராயணன்! தாமோதரனைக் கண்டு ஒரு தகவல் சொல்லும்படி என்னை அனுப்பினீர்களே? அங்கே நடந்ததைச் சொல்லவே வந்தேன்...'' என்றான்.

''ஆமாம்... அதற்கு இந்த வேளையா பார்த்தீர்கள்?'' என்று வினவினான் சந்துரு.

''விஷயம் மிக அவசரமானது, உடனே உங்களுக்குத் தெரிந்தாக வேண்டும் என்று ஓடி வந்தேன்...''

''அதற்கு இங்கே எப்படி வந்தீர்கள்?''

''உங்களுடைய யோ[illegible] வழியாக வர முடியா விட்டால், ஜன்னல் வ[illegible]ாக

29/05/2011 12:5

வருகிறது தாலே' என்று நீங்கள் 'ஹண்ட்' கொடுக்கவில்லையா?... இப்போது கதவைத் தாழ்ப்பாள் போட்டுவிட்டு, என் பக்கத்தில் சீக்கிரமாக வந்து உட்காருங்கள்!'' என்றான் நாராயணன்.

# நாராயணனுக்கு ஏற்பட்ட அனுபவம்

போலீஸ் ஸ்டேஷனில் சந்துருவிடம் தகவல்களை எல்லாம் சொல்லிவிட்டு வெளியே வந்த தாமோதரன், பஸ்ஏறி டவுனுக்குச் சென்றான். பலவிதமான குழப்பங்கள் அவன் மனத்தைப் பிடித்துக் கொண்டு உலுப்பின. ஒருசமயம், சந்துருவிடம் இதையெல்லாம் சொன்னது பிசகோ என்ற சஞ்சலம் அவனைக் கலக்கியது. சந்துருவின் இடக்கான பேச்சுக்கள், ஏளனமான நகைப்பு, கண்களின் கூர்மை, ஒளிவு மறைவு இல்லாமல் காட்டிய சந்தேகம் எல்லாம் ஒன்றன் பின் ஒன்றாக அவன் ஞாபகத்திற்கு வந்தன.

''போலீஸ் ஸ்டேஷனுக்குப் போயிருக்கத் தேவை இல்லையோ!'' என்று ஒருபயமும், ''போனதனால் என்ன! நாளைக்கே ஒரு அபயம் என்றால், தொடர்ந்து அவர்களைக் கண்டு உதவி கேட்கலாமே!'' என்று சமாதானமும் மாறி மாறி வந்து கொண்டிருந்தன. ''ஆனால், அந்தச் சந்துரு நம்மைவிடக் கெட்டிக்காரனாக இருக்கிறானே!'' என்ற கவலையும் குறுக்கிட்டது.

பாய்க் கடைக்கு அருகிலேயே பஸ்ஸிலிருந்து இறங்கி, அவன் ஒரு ரிக்ஷாவை அமர்த்திக் கொண்டு அதில் உட்கார்ந்து கொண்டான். பஸ்ஸிலிருந்து இறங்கும்போதே, தன்னைச் சுற்றிலும் ஒருமுறை யாரேனும் கவனிக்கிறார்களா என்பதை நிச்சயம் செய்து கொண்டான். அவன் அறிய யாரும் அந்த வட்டாரத்தில் இல்லை. ரிக்ஷா சென்ற ரஸ்தாவில் பெரும்பாலும் மருந்துக் கடைகளே இருந்தன.



காலை வேளையாகையால், அநேகம் கடைகள் திறக்கப் படவே இல்லை; சிலவற்றில் அப்போதே சிப்பந்திகள் வந்து கொண்டிருந்தார்கள். 'கல்பமணி ட்ரக் ஸ்டோர்ஸ்' என்று ஆங்கிலத்தில் பலகை தொங்கிய ஒரு கடைக்கு எதிரே ரிக்ஷாவை நிறுத்தச் சொல்லி, அதனுள் சுவாதீனமாக நுழைந்தான் தாமோதரன்.

கடையின் வாசலைத் தாண்டியதும், இருபுறமும் கள்ளிப் பெட்டிகள் அடுக்கப்பட்டு ஒருவர் உள்ளே செல்ல ஒருவர் வெளியே வருவதற்கான இடைவெளி இருந்தது.

'கல்பமணி'யின் உட்புறத்தில் உள்ள ஹாலில் ஏழெட்டுப் பீரோக்களும், அவைகளில் மருந்து சீசாக்களும் காணப்பட்டன. வற்றலாக ஒருவன் அங்குமிங்கும் நடந்து கொண்டிருந்தான். தாமோதரனைக் கண்டதும் சற்று பயந்தவன் போல் காட்டி, ''இன்றைக்கு வெகு சீக்கிரம் வந்துட்டீங்களே!'' என்று கேட்டு இளித்தான்.

''இல்லை கோவிந்தா! இன்றைக்கு நான் வரப்போகிறதில்லை. வீட்டில் தங்கி இருக்க வேண்டிய வேலை இருக்கின்றது... எங்கே 'முதலாளி?' இன்னும் வரவில்லையோ?'' என்று கேட்டான். 'முதலாளி' என்னும்போது அந்தக் குரலில்இருந்த உதாசீனத்தைக் கோவிந்தன் கவனித்திருக்க வேண்டும். வற்றிச் சுருக்கம் விழுந்த அவன் தாடைகளில், ஒரு புன்முறுவலின் ரேகை தோன்றி மறைந்தது.

''வந்துவிட்டாரு... பின்புறம் 'கோடவு'னில் இருக்கிறார். கூப்பிடட்டுமா?'' என்று கேட்டான் கோவிந்தன்.

''வேண்டாம்... நானே போய்ப் பார்த்துச் சொல்லிவிட்டு, வருகிறேன்!'' என்று கண்ணைச் சிமிட்டி விட்டு தாமோதரன் பின்கட்டுக்குச் சென்றான்.

முற்றும் வழுக்கை விழுந்த தலை; மௌட்யத்தின் சின்னமான முகம்; பருத் [illegible] உடல்; ஆனால் தளர்ந்த ச[illegible] பல பாகங்களில் அழுக்கு; நெற்றியில் அரும்பின வியர்வை.

இந்தத் தோற்றத்துடன் 'முதலாளி' அங்கே காட்சி அளித்தார். தாமோதரனைக் கண்டதும் வாரிச் சுருட்டிக் கொண்டு எழுந்தார்.

தாமோதரன் அவரை ஒரு கணம் கவனித்துப் பார்த்தான். சிரிப்பை அடக்கிக் கொண்டு, '' 'முதலாளி'! இன்றைக்கு நான் ஆபீஸுக்கு 'மட்டம்' போடப் போகிறேன்! அநேகமாக வீட்டிலேயேதான் இருப்பேன்'' என்றான்.

'முதலாளி' முகத்தைத் துடைத்துக்கொண்டு முன்னே வந்தார். ''அதற்கென்ன! உங்கள் சௌகரியப்படி செய்யுங்களேன்!'' என்றார்.

''அப்படியென்றால், நீர் இங்கே வந்து பதுங்கிக் கொண்டிருந்தால் சரிப்பட்டு வராது... அதைச் சொல்லத் தான் இப்போது நான் வந்தேன்...''

''தெரியாதா? சொல்லவேண்டுமா எனக்கு? இப்போது போய் உட்கார்ந்து விடமாட்டேனா?''—'முதலாளி'யின் பேச்சில் சற்றாவது தைரியமோ, தெம்போ காணப்படவில்லை.

''போலீஸிலிருந்து என்னைப் பற்றி விசாரித்து ஏதேனும் தகவல் வரலாம். ஒரே மட்டாக உளறி அடித்துக் கொண்டு விடப் போகிறீர்கள். நான் அங்கே ஒரு 'புகார்' செய்துவிட்டு வந்திருக்கிறேன். வந்து கேட்டால், 'தாமோதரன் என்பவர் இங்கே குமாஸ்தாவாக இருப்பவர் தான்; இன்று லீவு எடுத்துக்கொண்டு வீட்டில் இருக்கிறார். தேவையானால் போய்ப் பாருங்கள்!' என்று அடித்துப் பேசுங்கள். ஒன்றும் பயம் இல்லை; 'உங்கள்' கடைக்கு அபாயம் வந்து விடவில்லை.''

''அதற்கென்ன... அப்படியே செய்து விட்டால் போச்சு!''

''முன்னாடி உங்கள் இடத்தில் போய் உட்காருங்கள். அதை நான் கண்ணால் பார்த்து விட்டுப் போகிறேன்...



கல்பமணி டிரக் ஸ்டோர்ஸ் முதலாளி குருசாமி நாய்க்கர் என்றால் இப்படியா இருக்கிறது?''

''ரொம்பப் பகட்டாக இருந்தாலும் அபாயகம் இல்லை?'' என்றார் 'முதலாளி'.

''ரொம்ப அழுமூஞ்சியாக இருந்தாலும் பிரயோசனம் இல்லை!'' என்று சொல்லிவிட்டு, தாமோதரன் வெளியே வந்தான். அதற்குள் கடையினுள் இரண்டு மூன்று பேர் மருந்துகள் வாங்க வந்து விட்டார்களாகையால், தாமோதரன் உரத்த குரலில், ''கோவிந்தா! 'முதலாளி' வந்து கொண்டேயிருக்கிறார். அதுவரை கவனித்துக் கொள்!'' என்று ஆக்ஞையிட்டு வெளியே வந்தான்.

கடை வாசலில் அவன் ரிக்ஷாவில் மீண்டும் ஏறிய போதுதான் முதன் முறையாக ஒரு சந்தேகம் எழுந்தது. 'கல்பமணி ட்ரக் ஸ்டோர்'ஸுக்கு நான்கு கடைக்கு அப்பால் ஒரு மோட்டார் நின்று கொண்டிருந்ததை அவன் கவனித்தான். அதன் உடலில் இரு வர்ணங்கள் பூசப்பட்டிருந்தன—மேல் பாகத்தில் சிவப்பும், கீழ்ப் பாகத்தில் கருநீலமும். இதே வண்டியை பஸ்ஸிலிருந்து இறங்கும் போதும் பார்த்ததாக அவனுக்கு ஒரு ஞாபகம். எதற்கும் முன் ஜாக்கிரதையாக இருந்து விடுவதே நலம் என்று, தாமோதரன் தன் ரிக்ஷா இரண்டு பர்லாங்க் தூரம் சென்று ஒரு முக்கில் திரும்பியதும் இறங்கிக்கொண்டு, அங்கிருந்த 'டாக்ஸி'யில் கப்பென்று ஏறிக்கொண்டான். ''விடு நுங்கம்பாக்கத்திற்கு!'' என்று அவசர உத்தரவுப் பிறப்பித்தான். 'டாக்ஸி' உடனே கிளம்பி விட்டது.

சென்ட்ரல் ஸ்டேஷனைத் தாண்டி அது சென்றபோது மெள்ள தாமோதரன் திரும்பிப் பார்த்தான். அவன் பின்னால் அந்தச் சிவப்பு-நீலம் மோட்டார் தொடரவில்லை. 'சீ! என்ன அசட்டு பயம்! யாரையோ கண்டு எதற்காக இப்படி அலறிக்[illegible] என்று தன்னையே பரிகாசம் செய்து கொண்டான். ''அப்படி நம்மைக் கறுவிக்கொண்டு துரத்துபவர் யார்? உலகம் அறிய

29/05/2011 12:5

என்ன குற்றம் செய்துவிட்டோம்?'' என்று மனத்தையும் திடம் செய்துகொண்டான். எழும்பூர் ஸ்டேஷனை நெருங்குகிறபோது மறுபடி ஒரு முறை அகஸ்மாத்தாகப் பின்னால் நோக்கினான். 'பக்'கென்றது அவனுக்கு. அதே வண்டி—வெகு தொலைவில்— வந்து கொண்டிருந்தது. பின்தொடர்கிறானோ? 'ஏன், சந்தேகம் நிவர்த்தி செய்து கொண்டு விடலாமே!' என்று டாக்ஸி டிரைவருக்கும், ''விடு, புரசைவாக்கத்திற்கு!'' என்று ஒரு புதிய உத்தரவு கொடுத்தான்.

எழும்பூர் ஓவர்-பிரிட்ஜின்மீது ஏறி இறங்கி, பூந்தமல்லி ரோடை அடைந்ததும், டாக்ஸியை ஒரு ஓரமாக நிறுத்தச் சொல்லி, பத்து நிமிஷம் காத்திருந்தான். உண்மையில் அந்த வண்டி பின்தொடருவதானால், இப்போது அவனைத் தாண்டிச் சென்றே ஆகவேண்டும் அல்லவா? அப்படித் தாண்டிச் சென்ற பின், திருப்பி ஓட்டச் சொல்லாமே! நேரம் ஆக ஆக, தாமோதரன் நெஞ்சில் தெம்பு ஏறியது. அந்தக் கார் வரவே இல்லை; அவன் கொண்டது வீண் பிரமைதானோ? அந்த க்ஷணமே புரசைவாக்கத்தில் சுற்றும் யோசனையைக் கைவிட்டு, தாமோதரன் நுங்கம்பாக்கத்தில் தன்னுடைய ஜாகைக்கே வண்டியை ஓட்டும்படி சொன்னான். அப்படியே அவனைப் பின்பற்றி அந்த மோட்டார் வந்திருந்தாலும் அதைத் திக்கு முக்காடச் செய்து விட்ட பெருமை அவனுக்கு இருந்தது.

தாமோதரன் வசித்த தெருவில் திரும்பியது 'டாக்ஸி', அவன் குறிப்பிட்ட வீட்டின் வெளியேயும் நின்றது. ''அப்பாடா!'' என்று ஒரு பெருமூச்சு பாதி வெளி வந்திருக்கும். படுவேகமாக அந்தப் பழைய மோட்டார் வந்து எதிர்ச்சாரியில் நின்றுவிட்டது. அதிலிருந்துஇறங்கிய வரைக் கண்டவுடனே, தாமோதரனின் சப்தநாடியும் ஒடுங்கிவிட்டதெனலாம். ஏனென்றால், முதல் நாள் இரவு சென்ட்ரல் ஸ்டேஷனில் அவனைக் கண்டு, லிங்கி செட்டித் தெருவில் ஒரு வீட்டுச் சாவிகளையும் கொடுத்து, தோல்



பையுடன் எழும்பூர் ஸ்டேஷனில் சந்திக்கும்படி சொன்ன அதே ஆசாமிதான் அந்த வண்டியிலிருந்து இறங்கினார்.

''குட்மார்னிங்!'' என்று சொல்லிக் கொண்டு வந்து வெகு சுவாதீனமாகக் கையையும் நீட்டினார்.

தாமோதரனின் உடலில் ஒரு நடுக்கம் ஏற்பட்டு, அது கை வரையிலும் பரவியது; அவனுடைய கையைப் பற்றிக் கொண்டிருந்த அந்த ஆசாமிக்குக்கூட அது தெரிந்திருக்க வேண்டும்! ''மிஸ்டர்! உங்களை அகஸ்மாத்தாக இன்று காலையில் பார்த்தேன், வழியில் நிறுத்தி வைத்துப் பேச எனக்கு விருப்பம் இல்லை. நேராகவே வீட்டுக்கு வந்து விட்டேன்; வருகிறீர்களா, உள்ளே போகலாம்!'' என்று அழைத்தார்.

டாக்ஸிக்காரனுக்குப் பணம் கொடுத்து அனுப்பினான் தாமோதரன். அவனுக்கு உடலெல்லாம் 'குப்'பென்று வியர்த்துவிட்டது; உடலில் ஏற்பட்ட பதட்டம் நிற்கவே யில்லை. பலவித நோய்கள் சேர்ந்து தாக்கினால் ஏற்படும் பலவீனத்தை அவன் அப்போது உணர்ந்தான். எது நடக்கக் கூடாதென்று விரும்பினானோ, அது நடந்துவிட்டது! இப்போது இந்த ஆசாமிக்கு அவன் என்ன பதில் சொல்லுவது! எப்படி அவனைச் சமாதானமாக அனுப்புவது?

''உள்ளே போகலாமே?'' என்றார் அந்த மனிதர் சற்று அதிகாரமாகவே.

தாமோதரன் அந்த மனிதரை மாடிக்கு அழைத்துச் சென்றான். கீழே அவனுடைய மனைவி ஜன்னல் வழியே இருவர் ஏறிச் செல்வதைக் கவனித்தாள். முக்கியமாக தாமோதரனின் கலவரம் அவளுக்குப் புலனாகியிருக்க வேண்டும். ''சங்கரா! சங்கரா!'' என்று கூப்பிட்டாள். கிட்டத்தட்ட அவளுடைய முக ஜாடையுடன் ஐந்தாறு பிராயம் இளையவனான ஒரு ஆண் பிள்ளை அங்கே வந்து, ''என்ன அக்கா?'' என்று [illegible] கைகளைத் துடைத்துக்கொ[illegible]

"உன் அத்தான் மாடிக்குப் போகிறார். கூடவே ஒரு ஆளும் செல்கிறான். அவர் கவலைப்படுகிற மாதிரி படுகிறது. எதற்கும் நீ போய் நின்று கொள்" என்று எச்சரிகை செய்தாள்.

மாடி அறையை அடைந்ததும், தாமோதரன் அந்த ஆசாமியை உட்கார்ந்து கொள்ளும்படி கூறி, ஒரு நாற்காலியை இழுத்துப் போட்டுக் கொண்டு எதிரில் தானும் ஒரு நாற்காலியில் உட்கார்ந்து கொண்டான். பிறகு, வந்த ஆசாமியே முன்னதாகப் பேசட்டும் என்று காத்திருந்தான்.

"நேற்று உங்களுக்கு அனாவசியமான தொந்தரவு கொடுத்துவிட்டேன். கடைசியில் நான் எழும்பூரில் வந்து ரயில் ஏறவே முடியவில்லை. தியாகராய நகரில் ஒரு வேலை இருந்ததாகச் சொன்னேன் அல்லவா? அது எதிர் பார்த்ததை விட அதிக நேரம் இழுத்துவிட்டது" என்றார் அவர்.

"ஓஹோ!... சரிதான்..." என்றான் தாமோதரன் சுருக்கமாக.

"இன்று மாலைதான் போகிறேன்!"

"பேஷாகச் செய்யுங்கள்!"— தீவிரமாக அவன் மனம் யோசனை செய்து கொண்டிருந்தது.

"அவ்வளவுதான் விஷயம்... இனிமேல் நீங்கள் எடுத்து வந்த பையையும், வீட்டுச் சாவியையும் என்னிடம் சேர்ப்பித்து விடுங்கள். நான் போகிறேன்..."

தலையைச் சொறிந்து கொண்டான் தாமோதரன். துணிச்சலாக, "நான் இப்போது உங்களிடம் மன்னிப்புக் கேட்டுக்கொள்ள வேண்டியிருக்கிறது. சாவிகளை வாங்கிக் கொண்டேனே ஒழிய, என்னால் அந்த வீட்டிற்குப்போகவே முடியவில்லை. மனது இடம்கொடுக்கவில்லை. சாவிகளைத் திருப்பிக் கொடுத்து விடலாம் என்று முடிவு செய்து வெகு நேரம் எழும்பூர் ஸ்டேஷனுக்கு வந்து காத்திருந்து விட்டுத்



திரும்பினேன்...என்னை நீங்கள் மன்னிக்க வேண்டும்!" என்றான்.

அவர் தலையை மெல்ல ஆட்டி ஒரு புன்னகையை வருவித்துக் கொண்டார்; "ஒப்புக் கொள்கிறேன்...ஒப்புக் கொள்கிறேன். சிலருக்கு அப்படி மனச்சாட்சி பயமுறுத்து வதும் சகஜம்தான்...ஆனால் நான் செய்யச் சொன்ன காரியத்தில் பின்வாங்கும்படி ஏதும் இல்லை, அதில் கௌரவ ஹானியான விஷயமே கிடையாது...போகட்டும்; உங்கள் இஷ்டப்படி செய்ததில் சந்தோஷமே! அந்தச் சாவிகளைக் கொடுத்துவிடுங்கள்; இனி நானே போய்க் கவனித்துக் கொள்கிறேன்!"

"அந்தச் சாவிகள் என்னிடம் இப்போது இல்லை!" என்றான் தாமோதரன் கூடியவரை தெம்பாக.

"எங்கே? காணாமல் போய்விட்டதாகச் சொல்லப் போகிறீரா, என்ன?"

"ஆமாம்; நேற்று ராத்திரி வழியில் எங்கோ அவை களை நான் தவறவிட்டு விட்டேன். அதற்காக உங்களைப் பார்க்கவும் வெட்கப்படுகிறேன்."

"அதுவும் சகஜந்தான்...நாம் மறுபடி எங்கே சந்திக்கப் போகிறோம் என்கிற எண்ணத்தில் நீர் கவலைப் பட்டிருக்கக் கூட மாட்டீர்!"

"அப்படி இல்லை. நேற்றெல்லாம் நான் தூங்கவே இல்லை!"

"த்ஸொ! த்ஸொ! உமக்கு எத்தனை சங்கடம் என்னால் வந்து விட்டது...உம்ம்ம்...நீர் தூங்கவில்லை என்பதுதான் என் மனசை மிகவும் வருத்துகிறது!... அவ்வளவுதானே!"

இத்தனை லகுவில் இந்த ஆசாமி எழுந்து போகிறார் என்பதை தாமோதரனால் 29/05/2011 12:5 உ... யில் அவர் எழுந்தே விட்டார். அந்த ... பையை ... கைகளை விட்டுக் கொண்டு ஏதோ யோசனை செய்பவர்

போல் ஒரு கணம் தயங்கினார். மறுகணம் அந்தக் கைகள் விறைப்பாகி விட்டன. கண்கள் ஒரு பயங்கரமான ஒளி தோன்றியது; பற்களைக் கடித்துக் கொண்டார். ''ஓய்! தாமோதரன்! நான் முழு முட்டாள் என்று நினைத்து விட்டீர் இல்லையா?'' என்று கேட்டார், தலையை ஆட்டி! குரல் ஒரே சீற்றமாக வந்தது.

தாமோதரன் கலங்கி விட்டான். அவன் கண்கள் நாலா புறமும் துழாவின. தொண்டை அடைத்துக் கொண்டு வந்தது. பெரிய நடிகனாக அல்லவா இருந்தார் அந்தப் பேர்வழி? தாமோதரன் மனம் பூரிக்கும் சமயம், ஒரே முட்டாக அமுக்குகிறாரே, கசக்குகிறாரே!

''தாமோதரன்! எனக்கு எல்லாம் தெரியும். நேற்று நான் சொன்ன பிரகாரமே நீர் அந்த வீட்டுக்குப் போயிருந்தீர். அந்தப் பையுடன் எழும்பூருக்கும் வந்திருந்தீர். என்னிடம் சேர்ப்பித்துவிட வேண்டும் என்ற நல்ல எண்ணத்துடன் அங்கே அலைந்ததும் உண்மை... இப்போது ஏன் புளுகுகிறீர்?''

தாமோதரன் மீண்டும் தயங்கினான்.

''உம்ம்ம்... வீணாக மேலும் பொய் சொல்ல வேண்டாம்! இதுவரையில் உம்மை நான் ஆழம் பார்த்தேன் அவ்வளவுதான்! சீக்கிரம் வரட்டும் விஷயம்! என்னைவிடக் கெட்டிக்காரரர் என்று எண்ணி ஏமாந்து விடாதீர்! ஜாக்கிரதை!''

''ஐயா! உண்மையைக் கூறுகிறேன், அது திருடு போய் விட்டது!'' என்றான் தாமோதரன் கெஞ்சும் குரலில்.

அவநம்பிக்கையுடன் அவர் உதடுகளை மடக்கிக்கொண்டார்: ''திருட்டுப் போய் விட்டதா! எப்படி? எப்போது?''

''நேற்று இரவு நான் அதைக் கொண்டு வந்தது உண்மை. இந்தப் பீரோவில் வைத்ததும் உண்மை. யாரோ பீரோவை உடைத்துத் திறந்து அதை அடித்துக் கொண்டு போய்விட்டார்கள்!''



''வைத்த இடத்தைப் பார்க்கவில்லை! அதை முன்னாடியே என்னிடம் சொல்கிறதற்கென்ன, சுத்த மடையன்!''

''அதை எப்படியும் கண்டுபிடித்து விடலாம் என்று நான் நினைத்தேன்!''

''நினைத்தீரா! ஹூம்!... ஏன் ஐயா, அதற்குத்தான் இன்று காலையில் போலீஸ் ஸ்டேஷனுக்கும் சென்று இருந்தீரோ?''

''ஆமாம்...''

''போலீஸ்காரன் குடைந்து குடைந்து உம்மைக் கேட்டிருப்பானே! சாவிகளைக்கூட அங்கேதான் தொலைத்து-விட்டு வந்தீர், இல்லையா? வாயைத் திறந்து பேசும்!''

''உண்மையைச் சொல்லி விடுகிறேன்; அதுவும் அப்படித்தான்... நான் செய்யக்கூடியது வேறு ஒன்றும் இல்லை. நான் சத்தியமாகச் சொல்லுகிறேன். யாரோ அதைக் கொண்டு போய் விட்டார்கள்.''

இதற்குள் அந்தப் பேர்வழியின் உடம்பு கெட்டிப் பட்டது போலும், முகத்தில் கொலைக் குறி தோன்றி விட்டது போலும் தாமோதரன் உணர்ந்து நடுங்கினான். அடுத்தபடி அவர் தன் மென்னியைப் பிடித்து நெறித்துக் கொன்றாலும் கேள்வி முறை இல்லை என்று ஒரு பீதி பற்றிக் கொண்டது.

ஃ ஃ ஃ

''அத்தான்! என்னைக் கூப்பிட்டீர்களா?'' என்று அந்தச் சமயத்தில் கேட்டுக் கொண்டு நுழைந்தான் மைத்துனன் சங்கரன்.

''இல்லை...இல்லை...'' என்று குழறினை தாமோதரன், அவன் அங்கிருந்து போய் விடாமல் இருக்க வேண்டுமே என்று மிகவும் விரும்பினான்.

ஒரே கண்ணோட்டத்தில் சங்கரன் ஏதோ அசாதாரணமான நடவடிக்கைகள் அ[illegible] என்பதை ஊகித்துக் கொண்டவனாக, ''காபி கூட[illegible]

29/05/2011 12:5

சாப்பிடாமல் போய்விட்டீர்களே என்று மேலே வந்தேன்... ஏதோ கோபமாகப் பேச்சு வார்த்தை காதில் விழுந்தது'' என்று நிறுத்தினான்.

''கோபம் ஒன்றும் இல்லை, சங்கரா! நேற்று ராத்திரி இந்தப் பீரோவை யாரோ உடைத்து, எல்லாவற்றையும் வாரி இறைத்துவிட்டுப்போனதை நான் இவரிடம் சொல்லுகிறேன். இவருக்கு நம்பிக்கை வரமாட்டேன் என்கிறது!... நீயாவது சொல், அப்பா!''

''அத்தான் சொல்வது முழுதும் நிஜம்!'' என்றான் சங்கரன் அழுத்தம் திருத்தமாக. அவன் பேச்சில், தாமோதரனுடைய குரலில் இருந்த தயக்கம் இல்லை. உண்மையைச் சொல்கிறான் என்ற நம்பிக்கை தொனித்தது.

வந்திருந்த ஆசாமி சிறிது கண்களை மூடி சிந்தனை செய்தார். ''பின் யார் எடுத்தது? அதையாவது சொல்லித் தொலையுங்கள்!'' என்றார்.

''எனக்கு எப்படித் தெரியும்?'' என்று தொடங்கின தாமோதரனை நிறுத்தினான் சங்கரன். ''நடந்ததைச் சொல்லி விடுகிறோம். யாரோ இரண்டு பேர் நேற்று ரயிலடியிலேயே வட்டமிட்டதாக அத்தான் கூறினார். அவர்களே கூடப் பின் தொடர்ந்து வந்து எடுத்திருக்கலாம்...''

''யார் ஐயா அந்த இரண்டு பேர்?''

தாமோதரனுக்கு இதற்குள் சிறிது தெம்பு வந்து விட்டது! ''ஒருவன் உயரமாக வாட்ட சாட்டமாக இருந்தான்; மற்றவன் குள்ளமாகச் சிறுகூடாக இருந்தான். அவர்கள் இரண்டு பேரையும் நான் விங்கிச் செட்டித் தெரு வீட்டிற்குள்ளும் பார்த்தேன். நான் வாசல் வழியே சென்ற போது அவர்கள் புழக்கடை வழியே வந்திருக்கிறார்கள்... நல்லவேளை, நான் முன்னாலேயே பையை எடுத்திருந்தேன். அப்போது என்னை அங்கே கண்டிருந்தால் கொன்றே போட்டிருப்பார்கள். இதையெல்லாம் நான்



பெருமையாகச் சொல்லிக் கொள்ளவில்லை; ஆனால் எத்தனை பெரிய ஆபத்தில் அதை எடுத்து வந்திருக்கிறேன்.''

''அட சட்! சும்மா இரும்! பையை எடுத்து என் கையில் கொடுத்து விட்டீரே! பேச்சைப் பார்! பெருமை அடித்துக் கொள்ளவில்லையாம்!... உம்ம்ம்... நீங்கள் இரண்டு பேருமாகச் சேர்ந்து சொல்கிற கட்டுக்கதையை நான் இப்போது நம்புகிறேன் என்றே வைத்துக் கொள்ளுவோம். அந்த ஆட்களை எங்கே சென்று நான் தேடுகிறது?''

''அத்தானும் நானும் சும்மா இருக்க மாட்டோம்!''

''இல்லாமல்தான் போலீஸில் போய் எழுதி வைத்துவிட்டு வந்திருக்கிறாரே!... செய்ததெல்லாம் தப்புதண்டா! வாயை மூடய்யா!''

தாமோதரன் நன்றாகவே துணிந்து விட்டான்! ''ஓயாமல் விரட்டுகிறீரே! உம்முடைய காரியமும் நாணயமான காரியம் இல்லை. என்னிடம் ஒரு பெரிய பொய் சொல்லித்தான் அனுப்பியிருக்கிறீர். 'அந்த வீடு உமக்குச் சொந்தம் இல்லை; வியாஜ்யத்தில் இருக்கிறது' என்று நானும் கேள்விப்பட்டிருக்கிறேன். ஆகையால், கொஞ்சம் நிதானத்துடன் பேச வேண்டும் என்பதை ஞாபகம் வைத்துக் கொள்ள வேண்டும்!''

''ஓஹோ! போலீஸ் கொடுத்த தைரியமோ இது! என்னை நீர் சரியாகத் தெரிந்து கொள்ளாமல் பேசுகிறீர், தாமோதரன்! ஆமாம்! நான் மிகவும் துஷ்டன்! பெரிய போக்கிரி! கண்களை மூடிக் கொண்டு சாவிகளை உம்மிடம் நான் கொடுத்துவிடவில்லை; கொடுத்தது முதல் என் கண் காணிப்பில் வைத்துக் கொண்டிருக்கிறேன். இப்போதைக்கு உங்கள் பேச்சை நம்புகிறேன். என்னிடம் ஏதாவது பேத்துமாத்து வைத்துக் கொண்டிருக்கிறீர்கள் என்று தெரிந்ததோ, பொல்லாதவனாக இருப்பேன்...''

''பேஷாக இருந்துவிட்[illegible] நாங்கள் குறுக்கே நிற்க மாட்டோம்!''

29/05/2011 12

''நான் இப்போது போகிறேன்... போயே போய் விட்டேன் என்று நினைத்துவிட வேண்டாம். அந்தப் பை அப்படியே என்னிடம் வந்து சேர ஜவாப்தாரி நீங்கள்தான். சேர்ப்பித்தால் அள்ளிக் கொடுப்பேன்; இடையில் விளை யாட்டு நடந்ததோ, இரக்கம் காட்டாமல் வஞ்சம் தீர்த்துக் கொன்வேன். எங்கே போய் ஒளிந்தாலும் விடமாட்டேன்.''

''எங்களுக்குப் புரிந்துவிட்டது!'' என்றான் சங்கரன்.

அவர் இறங்கிச் சென்றார். இருவரும் பெருமூச்சு விட்டு ஒருவரை யொருவர் பார்த்துக் கொண்டார்கள். மோட் டார் புறப்பட்ட பிறகு தாமோதரனுக்கு ஒரு யோசனை திடீர் என்று வந்தது. சந்துரு கேட்டு வைக்கச் சொல்லி யிருந்தபடி அவருடைய பெயரையும், விலாசத்தையும் விசாரித்து வைத்துக் கொள்ள அவன் மறந்து போய் விட்டான்!

சங்கரனைப் பார்த்து, ''நல்ல சமயத்தில் நீ வந்து சேர்ந்தாய்! தனியாக நான் அகப்பட்டுக் கொண்டால் அவன் கொலை செய்யவும் அஞ்ச மாட்டான்'' என்றான் தாமோதரன்.

''இவன் மேலே வரும்போதே அக்கா எச்சரித்து விட்டாள். நானும் தயாராகவே இருந்துவிட்டேன். இன்றைக்குச் சாயந்திரம் நான் சினிமாவுக்குப் போகலா மென்றிருக்கிறேன், அத்தான்!''

''போய்விட்டு வாயேன்!''

''அக்காவையும் அழைத்துக் கொண்டு போகிறேன்... உங்கள் சமாசாரம் எப்படி?''

''நம்ம கடை ஏழு மணிக்கு மூடுகிறான். அதுவரை நான் இங்கே தான் இருக்கிறேன். அப்புறம் 'முதலாளி' யுடன் அரை மணி நேரம் எனக்கு முக்கியமான ஒரு வேலை இருக்கிறது. போய் வர வேண்டும்... ஆனால் பரவாயில்லை. அதற்குள் ஒன்றும் நடந்து விடாது!'' என்றான் தாமோதரன்.



நிச்சயம் நடக்கப்போகிறது என்பதை அவன் அப்போது உணர்ந்து கொள்ளவில்லை.

ஃ ஃ ஃ

மேலே குறிப்பிட்ட சம்பவங்கள் நடந்த அதே தினம் மாலை தியாகராய நகர் ஹோட்டல் ஒன்றில் இரண்டு பேர் ஒரு மூலையைத் தேடிப் பிடித்து உட்கார்ந்து கொண்டு, மூறுகல் தோசைகளுக்கு 'ஆர்டர்' கொடுத்தார்கள். அவைகள் தயாராகி வருவதற்குள் தங்களுக்குள் சம்பாஷ ணையை முடித்துக் கொள்வதென்று தீர்மானித்தார்கள்.

அவர்களில் ஒருவன் ஆஜானுபாகுவாக இருந்தான்; மற்றவன் குள்ளமாக இருந்தான்; தாமோதரன் மட்டும் இவர்களைப் பார்த்திருந்தால் ஓரேசணத்தில் அடையாளம் கண்டு சொல்லியிருப்பான்.

''அடுத்தபடி என்ன யோசனை சொல்கிறாய் நீ! உன் பேச்சைக் கேட்டுக் கொண்டு அந்த 'ஸேபி'ல் கொண்டு போய்ப் பையை வைத்தேன். அந்த வீட்டிலேயே நூறு இடம் இருக்கிறது. அல்லது, இந்த ஊரில் இரண்டு லட்சம் வீடுகள் இருக்கின்றன. எங்கே வைத்தால் உடனே பறி போகுமோ அங்கே வைக்கச் சொன்னாய்! உன் புத்தியே புத்தி! முதல் தோல்வி, மூன்றும் தோல்வி என்று ஆகி விட்டது. அங்கும் இல்லை; ஸ்டேஷனிலும் ஆள் கிடைக்க வில்லை; நேற்று பீரோவைத் தேட்டைப் போட்டிருக் கிறாய்; அதிலும் இல்லை என்று கைவிரிக்கிறாய்!'' என்று குறை சொன்னான் பெரிய ஆள்.

''என் மேல் குற்றம் சுமத்தாதே! நீ மட்டும் என்ன செய்திருக்கப் போகிறாய்? இதைவிடப் புத்திசாலித்தன மாக 'அடுத்தபடி என்ன' என்று கேட்டபடி அதற்கு வா!... இன்னமும் அந்தப் பை தாமோதரனிடம்தான் இருக்கிறது; அதுவும் அந்த வீட்டில்தான் இருக்கிறது...'' என்றான் குள்ளன்.

29/05/2011 12

''கையில் கிடைத்தால் அன்றி அது எங்கே இருந்தால் நமக்கு என்ன?''

''கிடைப்பதற்குத்தான் வழி செய்கிறேன். இன்றைக்கு சாயங்காலம் மறுபடி நான் போகிறேன். அந்த வீட்டில் இரண்டு பேர் சினிமாவுக்குப் போகிறார்கள்; தாமோதரன் மட்டும் இருக்கிறானோ அல்லது அவனும் வெளியில் போகிறானோ! எப்படி இருந்தாலும் நான் இன்றைக்குப் போகிறேன் அங்கே!''

''அவனைக் குத்தித் தள்ளுவாயா? மயக்க மருந்து கொடுப்பாயா? அறையைத் தேடுவதற்கு என்ன உபாயம் வைத்திருக்கிறாய்? 'மயிலே, மயிலே! இறகு போடு' என்றால் போட்டு விடுமா?''

''சந்தர்ப்பத்துக்குத் தகுந்த மாதிரி நான் நடந்து கொள்வேன். அடி, குத்து என்றால் இந்தச் சிங்கம் பயப் படாது. ஒரு காரியத்தில் இறங்கிவிட்டால், உயிரைத் திருணமாக மதிக்கும் என்பதை மட்டும் மறந்து விடாதே!''

''நான் வரத் தேவை இல்லையா?''

''வரலாம், ஆனால், வெளியே இருந்தாலே போதும்! ஏழாவதுமணிககு அங்கே இருப்பேன்!'' என்றான் குள்ளன். மூறுகல் தோசைகள் வந்துவிடவே, பேச்சை நிறுத்திக் கொண்டு அவைகளில் கவனம் செலுத்தினார்கள்.

ஃ ஃ ஃ

ஐந்தே முக்கால் மணிக்கு சங்கரன் தனது தமக்கை யுடன் சினிமாவுக்குக் கிளம்பி விட்டான். முப்பத்தைந் தாவது தடவையாகக் குள்ளன் அந்தத் தெருவில் குறுக்கும் நெடுக்குமாக நடந்து விட்டு எதிர்ப்புறத்து மதில் சுவரில் ஏறி நின்று பார்த்தான். தாமோதரன் தன் அறையில் நின்று சட்டைப் பித்தான்களைப் போட்டுக் கொள்வதும், கண்ணாடி முன் நின்று தலையை வாரிக் கொள்வதும் தெரிந்தது. ஐந்து நிமிஷங்களுக்குப் பிறகு அவனே மாடிப் படிகளில் இறங்கி வந்து, தெரு வாசற்படியில் நின்றான். அவனுடைய கண்களில் படாமல் குள்ளன் ஒரு மூலையில் பதுங்கி நின்று கவனித்துக் கொண்டிருந்தான்.



தான் வெளியே செல்வதை ஒருவரும் கவனிக்கவில்லை என்பதை ஊர்ஜிதம் செய்து கொண்டவன் போல் சட்டென்று இறங்கி வேகமாக நடந்தான் தாமோதரன். அவன் தெரு மூலை திரும்பிய உடனே குள்ளன் எதிர்ச் சருகில் பாய்ந்து வாசற் கதவைத் தள்ளிக்கொண்டு அந்த வீட்டின் உள்ளே பிரவேசித்து விட்டான்.

வாசலிலேயே மாடிப்படிகள். சந்தடியின்றி ஏறிக் கடைசிப்படியில் நின்று ஏதேனும அரவம் கேட்கிறதா, தன் வருகையை யாரேனும் கவனிக்கிறார்களா என்று உன்னிப் பாகக் கவனித்தான். இல்லை, 'தாமோதரன் ஒருவேளை திரும்பி வந்தால்' என்ற அச்சம் கொண்டவன் போல் சில நிமிஷங்கள் சுவரோடு சுவர் ஒட்டியும் நின்றான். அது போன்ற பயங்கள் அனாவசியம் என்று நிச்சயம் செய்து கொண்டு நிஜார்ப் பையிலிருந்து ஒரு கொத்துச் சாவிகளை உருவி எடுத்து, கதவின் சாவித் துவாரத்தில் புகுத்தினான். ஒத்துக் கொள்ளவில்லை. இரண்டு, மூன்று, நான்கு சாவிகள் சேராமல் போகவே, சிறிது நேரம் கலங்கி நின்றான். பிறகு ஒரு சாவியுடன் ஒரு மெல்லிய கம்பியை யும் பிணைத்து லாவகமாக அதைத் திருப்பினான். 'மளக்' கென்று பூட்டு புரண்டு கொடுத்தது. ஒரே உதையில் கதவைத் திறந்துவிட்டான். இனிமேல் அங்கே சிறிது நேரத் திற்குக் குள்ளன்தான் ராஜா; அவன் வைத்ததுதான் சட்டம்! இஷ்டம்போல அங்கே தேடிப் பார்க்கலாம.

எதிர்ச் சருகில் தன் சகாவுக்குத் துணை நின்று கொண் டிருந்த பெரிய ஆளுக்கு ஒரு ஆசை தோன்றியது. இவ்வளவு எளிமையுடன் நடைபெறும் காரியத்தில் தானும் பங்கெடுத்துக் கொண்டால் என்ன, முழுக் கியாதியையும் குள்ளனே பெற்றுக்கொள்ள விட்டுவிடுவானேன் என்பதே அவன் எண்ணம். இதைத் [illegible] ஒரு அடி முன் எடுத்து [illegible] அடியைப் பின்னால் இழுத்துக்கொண்டான். எதிர்பாராத

அபாயம் ஒன்று நெருங்கிக் கொண்டிருந்தது. ஆம்! அந்தத் தெருவின் மூலையில் ஓர் இளைஞன் திரும்பி விட்டான். வெகு மிடுக்காக நடந்து வந்தான். பெரிய ஆளின் மனத்திற்குள் ஏதோ ஒன்று 'இவன் தாமோதரத்தின் வீட்டுக்குத்தான் வருகிறான்!' என்று எச்சரித்தது. ஆனால், எப்படி அதைக் குள்ளனுக்கு அறிவிப்பது? ஒருவேளை இந்த இளைஞன் தாமோதரனுக்குத் தெரிந்தவனாக இருந்து, குள்ளனை மடக்கிவிட்டால்? ஒரு ஆறுதல், குள்ளன் அவ்வளவு லகுவில் அகப்பட்டுக் கொள்ளுபவன் இல்லை. நன்றாகச் சண்டை போடுவான்; வளைந்து வளைந்து ஓடுவான். ஜன்னல் வழியாக வெளியே ஏறிக் குதிப்பான்; கூரைகளைத் தாண்டுவான். ஜலதாரைக் குழாய்களைப் பற்றிக்கொண்டு சரசரவென்று குரங்குபோல் இறங்கி விடுவான்... எப்படியோ தப்பித்துக் கொள்ளுவான்...

அவன் பயந்தபடியே அந்த இளைஞன் வீட்டு நம்பரை பார்த்துக் கொண்டு நின்றான். யாரையேனும் விசாரிக்கலாம் என்ற நோக்கத்துடன் சுற்று முற்றும் நோக்கினான். அதில் யாரும் தென்படாமல் போகவே, தானாகவே விசாரித்துக் கொள்ளலாம் என்று திடமாக மாடியில் ஏறினான். 'டக் டக்' என்று பூட்ஸின் சப்தம் மாடிப் படிக் கட்டுக்களில் ஒலித்தது. வெளியே செய்வதென்னவென்றறியாமல் நகத்தைக் கடித்துக்கொண்டு நின்று கவனித்தான் பெரிய ஆசாமி.

மேலே, அறைக் கதவைத் திறநது அப்போதுதான் அடி வைத்திருந்தான் குள்ளன். மின்சார விளக்கைப் போடலாமா, வேண்டாமா என்று அவன் நிச்சயத்துக்கு இன்னும் வரவில்லை. மாடிப் படியின் மீது ஆள் ஏறி வருவது அவன் செவிகளில் வந்து மோதிற்று. உடலெல்லாம் திடீர் என்று ஒரு நடுக்கம் எடுத்தது. "தாமோதரனே திரும்பி விட்டானா?" இருக்காது. அவன் 'பூட்ஸ்' அணிந்து செல்லவில்லை என்பது ஞாபகம் வந்தது. வருபவன் தெரிந்தவனோ, தெரியாதவனோ தைரியத்தைக் கைவிடாமல்



அவனைச் சந்தித்துச் சமாளித்துத்தான் ஆக வேண்டும்! இது போன்ற சந்தர்ப்பங்கள் அவனுக்குப் புதிதும் இல்லை.

ஒருவிதமான முடிவு செய்வதற்குள் அந்த இளைஞன் மேல் படியை வந்து அடைந்து விட்டான்; அறையின் இருட்டிலிருந்து, வெளியே படியில் நின்ற ஆளைக் குள்ளன் நன்றாகப் பார்த்தான். தெரு விளக்கு ஒன்றின் பரவலான வெளிச்சம் மாடிப் படியிலிருந்த இருளின் தீவிரத்தைச் சிறிது குன்றச் செய்திருநதது. இளைஞனுடைய தயக்கம், இந்த வீட்டிற்கு அவன் முதன் முறையாக வருகிறான் என்பதையும் அவனுக்கு வெளிப்படுத்தியது.

ஃ ஃ ஃ

வந்தவன் யாரும் இல்லை. சந்துரு கொடுத்த விலாசத்தை வைத்துக் கொண்டு, தாமோதரனைத் தேடி வந்த நாராயணன்தான். அவன் சென்றது முதல் நடந்த விவரங்களையே சந்துருவிடம் அவன் விவரமாகக் கூறத் தொடங்கினான்.

"நிதானமாகவே சொல்லலாம்; நான் கேட்கிற கேள்விகளுக்கும் பதில் சொல்லிக்கொண்டே வரலாம்; பொழுது விடிய இன்னும் மூன்று மணி அவகாசம் இருக்கிறது" என்றான்.

"நீங்கள் சொல்லுவதன் அர்த்தம் எனக்குப் புரிகிறது. விடிந்தால் இந்த வீட்டு எஜமானவர் என்னைப் பார்த்து விடுவார். தலையைச் சீவி விடுவார் என்பதைத்தானே ஞாபகப்படுத்துகிறீர்கள்?" என்று கேட்டான் நாராயணன்.

"அது மட்டும் இல்லை. பகல்வேளையில் எந்த விஷயம் சொன்னாலும், 'சப்'பென்று தோன்றும். இருள் இருக்கும் போதே சொன்னால், இரண்டு பங்கு 'மவுஸ்' உண்டு. ஒரு பிசாசுக் கதையை இரவு பத்து மணிக்குக் கேட்பதற்கும், பகல் பன்னிரண்டு மணிக்குக் கேட்பதற்கும் எத்தனை வித்தியாசம்!... எங்கே, ஆ[illegible]தரன் வீட்டைத் தேடிக் கொண்டு [illegible] அப் போது மணி ஏழரை..."

''ஆமாம். நான் சென்றபோது வீட்டின் வாசற்புறம் விளக்கு ஒன்றும் இல்லை. வெளி வாசற்படியைத்தாண்டின வுடனேயே இடப்புறம் மாடிப்படி. நான் அதில் ஏறிச் சென்றேன். மேலே சென்றதும் அறைக் கதவு திறந் திருந்தது; ஆனால் வெளிச்சம் இல்லை. 'தாமோதரம் இருக்கிறாரா?' என்று கேட்டேன்.''

''அது பிசகு! 'மிஸ்டர் தாமோதரம்!' என்று அடித்துக் கூப்பிட வேண்டும். தெரிந்த இடங்களுக்குப் போகிறபோது தயங்கிப்பேசலாம்; தெரியாத புதிய இடங்களில் தென்பாக நடந்து கொள்ள வேண்டும். துப்பறிபவர்களுக்கு இதுவே முதல் பாடம். அப்புறம்?''

''உடனே பதில் வரவில்லை, இருட்டில் ஒரு ஆள் நிற்பதுபோல் மட்டும் தெரிந்தது. சற்று நேரம் சென்ற பின்பே, 'யார் அது?' என்று பதில் வந்தது. 'நான் தாமோதரத்திடம் ஒரு விஷயம்தெரிவிக்க வந்திருக்கிறேன்' என்று பதில் சொன்னேன். உடனே அந்த அறையில் விளக்கைப் போட்டு விட்டான் அவன். வெளிச்சத்தில் குள்ளமாக ஒரு ஆள் மட்டும் நின்றான்.''

''சரி! அவன தாமோதரன் இல்லை. வேறு யாரோ ஒரு ஆள்—என்ன நடந்தது! மளமளவென்று சொல்லும்!''

''என்ன விஷயம்; என்னிடம் தெரிவியுங்கள்!'' என்று அவன் அழைத்தான். நான் அப்படி ஒரு வார்த்தையில் முடித்துக்கொள்ள விரும்பவில்லை. இரண்டாவது, அவன் இருந்த அறை, சூழ்நிலை எல்லாவற்றையும் கவனித்து உங்களிடம் தெரிவிக்க வேண்டும் என்ற ஆர்வத்துடன் உள்ளே நுழைந்து விட்டேன். அவன் உட்காரச் சொல்லு முன் ஒரு நாற்காலியில் உட்கார்ந்து, 'தாங்கள் தானே தாமோதரன்?' என்று கேட்டேன்...''

''மிகப் பெரிய இமாலயத் தவறு. அப்புறம்?''

''அவன், 'ஆமாம்; நான்தான்!' என்றான்...''

''கஜப் போக்கிரி!''



'' 'உமக்கு ஸி. ஐ. டி. சந்துருவைத் தெரியும் அல்லவா? அவர் உங்களை நாளைக் காலை போலீஸ் ஸ்டேஷனுக்குத் தவறாமல் வரவேண்டும், அவரைக் காணவேண்டும் என்று தெரிவிக்கச் சொன்னார்' என்றேன். அவன் திருதிருவென்று விழித்ததைக்கண்டதும், 'ஏன்! சௌகரியப்படும்அல்லவா?' என்றேன். 'என்னை வரச் சொல்லியிருக்கமாட்டாரே அவர்!' என்றான் அவன். 'உங்களையேதான்! நீங்கள் தானே தாமோதரன்?' என்று கேட்டேன். 'தாமோதரன் நான்தான். ஆனால், போலீஸில் எனக்கு யாரையும் தெரியாதே! நீங்கள் கவனப்பிசகாக—' என்று ஆரம்பித்து, என்னை ஏற இறங்கப் பார்த்தான். 'இல்லை; உங்களையே தான்! அவர் உங்கள் பெயரையும் விலாசத்தையும் சொன்ன திலிருந்து உங்களுக்குள் ஏற்கெனவே பரிச்சயம் இருக்க வேண்டும் என்றல்லவா நான் நினைத்தேன்?' என்றேன். அவன் என்னையே கூர்ந்து கவனித்து, 'ஓ! சந்துருவா!... சந்துரு வரச் சொன்னாரா? சரிதான், சரிதான், அதை முன்னாடியே சொல்லக்கூடாது? வேறொன்றும் விசேஷம் இல்லையே! நான் அவசியம் வந்து பார்க்கிறேன் என்று சொல்லுங்கள்...காலையில் பார்த்தால் போதும் அல்லவா?' என்றான். எனக்கு நம்பிக்கை போய் விட்டது. அங்கிருந்து என்னை விரட்டுவதற்காகவே அவன் அப்படி வேஷம் போடு கிறான் என்று எனக்குப் பட்டது.''

''இப்போதுதான் கொஞ்சம் புத்திசாலித்தனம் மினுக் மினுக் என்கிறது உமக்கு...அப்புறம்?''

''அப்புறம் நான் எழுந்திருக்கவில்லை. அந்த அறையில் ஒரு பெரிய பீரோ இருந்தது. சுவரில் பல பெரிய படங்கள் மாட்டியிருந்தன. ஒரு திறந்த அலமாரியில் மருந்து புட்டிகள் அடுக்கியிருந்தன. ஓரமாகக் கிடந்த மேஜையின் மேல் காகிதங்கள் கிழிந்தபடி கிடந்தன.''

''துப்பறிபவர்கள் [illegible] விஷயங்களையே கவனிப்பார்கள்; இதரர் [illegible] உப [illegible] மில்லாத விஷயங்களின் ஜாபிதாவைச் சேகரித்து வைத்துக்

கொண்டு சங்கடப்படுவார்கள்! போகட்டும்; அவன் தாமோதரன் இல்லை என்றால் உம்மை அதிக நேரம் அறையில் உட்கார்ந்திருக்க அனுமதித்திருக்கமாட்டானே.''

''அது உண்மை. அவன் சாடையாக என்னை அனுப்பப் பல முயற்சிகள் செய்தான். 'இப்போதுதான் வருகிறேன்; மிகவும் அலுப்பு. சற்று படுக்கலாம் என்றிருக்கிறேன்' என்றான். 'வேறே ஒன்றும் இல்லையே...சரி?' என்று சம்பாஷணையை முடித்தான். நான் சண்டித்தனமாக அறையைச் சுற்றிச் சுற்றிப் பார்த்துக்கொண்டிருந்தேன். நான் அங்கே இருப்பதை விரும்பாதவன்போல் படபடத்துப் போனான்.''

''மிஸ்டர் நாராயணன்! நீர் கெட்டிக்காரர் என்பதை ஒப்புக்கொண்டு விடுகிறேன். வாசகர் பொறுமையைச் சோதித்துத் தொடர்கதை எழுதும் யோக்யதாம்சம் உம்மிடம் இருக்கிறது அடுத்தபடி என்ன நடந்தது என்பதைக் கேட்க நான் மட்டும் காத்திருக்கவில்லை. கதவுக்கு வெளியில் கூட ஒருவர் காத்துக் கொண்டு நிற்கிறார்... மேலே தொடர்ந்து பேசலாம்'' என்றான் சந்துரு.

நாராயணன் சட்டென்று எழுந்து கதவைத் திறக்க விரைந்தான். அவன் கையைப் பிடித்துச் சந்துரு நிறுத்தினான். ''தேவை இல்லை. கதவுகளில் இருக்கும் துவாரம் சாவி மாட்டவே செய்யப்படுவது; காதுகளை மாட்டுவதற்கல்ல; இதுவரை நின்ற ஆசாமி அதை உணர்ந்து கொண்டு நகர்ந்து விட்டார். இப்போது நீங்கள் போய்ப் பார்த்தால் அங்கே இருக்க மாட்டார்... மேலே நடத்துங்கள் காலட்சேபத்தை!''

''அப்புறம்தான் ஆச்சரியமானதொரு சம்பவம் நடந்தது. அந்தக் குள்ள ஆசாமி அறைக் கதவைச் சாத்தி விட்டிருந்தான். நான் பார்த்துக் கொண்டிருந்தபோதே மெள்ள அந்தக் கதவு திறந்து கொண்டது. மூன்றாவது ஆசாமி ஒருவன் பூனை போல் சந்தடியின்றி உள்ளே நுழைந்து கொண்டிருந்தான்.



''அவனைப் பார்த்ததுமே எனக்குப் 'பகீர்' என்றது. ஏனென்றால், அவன் முகத்தில் குரோதம் கொதித்துக் கொண்டிருந்தது. கண்களில் நெருப்புப்பொறியே பறந்தது. உதட்டைக் கடித்துக் கொண்டு நின்ற அவனை நான் இரண்டாம் முறை பார்த்தபோது, வலக் கையில் பிடித்திருந்த ஒரு கூரிய கத்தி கண்ணில் பட்டது. எந்தக் கொடுஞ் செயலுக்கும் அஞ்சமாட்டான் அவன் என்று எண்ணி விட்டேன்.

'' 'நீங்கள் யார்?' என்று கர்ஜனை செய்தான் அவன்.''

''நான் ஸி. ஐ. டி. சந்துருவிடமிருந்து வருகிறேன். தாமோதரன் அவரை வந்து பார்க்க வேண்டும் என்று சொல்லி அனுப்பினார். இதோ இவரிடம் நான் வந்து—' என்று நிறுத்தினேன்.

''அதற்குள் அந்தப் புது ஆள், 'இவனா தாமோதரன்! அப்படியா சொன்னான் இவன்?' என்று குதித்தான். குள்ளன் மறு வினாடியே தாவி விட்டான். எதற்காக அப்படித் தாவினான் என்பதை நான் பிறகுதான் உணர்ந்து கொண்டேன். புது ஆசாமியின் கையிலிருந்த கத்தியைக் காணவில்லை. எத்தனை வேகத்துடன் அதை வீசி யெறிந்திருந்தானோ அறியேன். அது குள்ளனை நோக்கிப் பாய்ந்திருக்கிறது! அவன் நகர்ந்து கொள்ளவே நாற்காலியில், ஆழப் பதிந்து விட்டது. நான் நடு நடுங்கிப் போய் ஒரு மூலையில் ஒண்டிக் கொண்டேன்.

''குள்ளனும் புது ஆசாமியும் அறையைச் சுற்றிச் சுற்றி ஓடினார்கள். ஒருவரை ஒருவர் சரியான 'பிடி'யாகப் பிடிக்கச் சமயம் பார்த்துத் துரத்தினார்கள். ஒரு தடவை புதியவன் குள்ளன் தாடையை நோக்கி ஓங்கி ஒரு குத்து விட்டான். அதுமட்டும் பட்டிருந்தால் அத்தனை எலும்புகளும் நொறுங்கியிருக்கும். கண்மூடிக் கண் திறப்பதற்குள் குள்ளன் குனிந்து கொள்ளவே, [illegible] தடவிக் கொண்டு சென்றது. மறுபடி மின்னல் வேகத்தில் குள்ளன் நிமிர்ந்து மற்றவன் விலாவில் குத்தினான். அந்த

29/05/2011

அடியின் அதிர்ச்சியில் அவன் சிறிது கலங்கிவிட்டான். இந்தச் சமயம் பார்த்துக் குள்ளன் அறை வாசற் கதவை நோக்கிப் பாய்ந்தான். ஆனால், புதுப் பேர் வழி நொடியில் அதை எதிர்பார்த்து, வலக்காலை நீட்டி, ஓடும் குள்ளன் காலைத் தட்டி விட்டான். மடார் என்று சாய்ந்துவிட்ட குள்ளன் மேல் விழுந்து அவன் கழுத்தை நெறிக்கக் கைகளைக் கொண்டு போனான். சிறிதுநேரம் யார் வெற்றி பெறுவார்கள் என்று சொல்ல முடியாதபடி புரண்டார்கள்; கைகள் நெருங்கவொட்டாமல் தடுத்தபடி, கால்களாலேயே குள்ளன் 'விண் விண்' என்று உதைத்தான். பதினைந்து உதைகளை வாங்கிக் கொண்ட பின் மற்றவன் சிறிது சோர்வு அடையவே, அவனைப் புரட்டி மேலே உட்கார்ந்து 'தொப்' 'தொப்'பென்று அடிகளை மழையாகப் பொழிந்தான் குள்ளன். இந்தக் குள்ளனுக்கு இத்தனை பலமா, இத்தனை நெஞ்சழுத்தமா என்று நான் அதிசயப்பட்டுக் கொண்டிருக்கையிலேயே, சடார் என்று தாவி வந்து, நாற்காலியில் பதிந்திருந்த கத்தியைக் குள்ளன் பிடுங்கிக் கொண்டான்.

"இதோ உன்னை ஒழித்து விட்டேன்! தீர்ந்தாய்!" என்று அதை அவன் வீசவும் புதிய ஆசாமி சுவரோரமாகப் பதுங்கினான். குள்ளன் கையிலிருந்து கத்தி புறப்பட்டால், நிச்சயம் எதிராளியின் மார்பில் அது பாய்ந்திருக்கும்; என் கண்ணெதிரில் ஒரு கொலை நடந்திருக்கும். நான் திடீரென்று குள்ளனுடைய கத்தி பிடித்த கையைப்பிடித்து நிறுத்தினேன். ஆனால் அதற்குள் அவன் அதை வீசத் தயாராகி விட்டான். கையிலிருந்து புறப்பட்ட கத்தி, குறி தவறி மேல் நோக்கிப் பாய்ந்தது. சுவரில் தொங்கிய ஒரு படத்தின் கயிற்றில் தாக்கி, அதை அறுத்துவிட்டது. கீழே நின்ற மற்றவன் தலையில் அது 'மடார்' என்று விழுந்து விட்டது. அப்படியே சுருண்டு விட்டான் அவன். அந்தப் படத்தின் பின்னாலிருந்து மற்றொரு பண்டமும் விழுந்தது.



"அதுதான் அந்தத் தோல் பை! மிஸ்டர் நாராயணன்! அதை நீர் எடுத்துக் கொண்டு வந்திருக்கிறீரா! வந்திருந்தால் இன்றே செங்கல்வராய பிள்ளையைப் பிடித்திருக்கும் சங்கடங்களைத் தீர்த்துவிடலாம்!" என்றான் சந்துரு.

"உங்களுக்கு எப்படித் தெரியும் அது?"

"தாமோதரன் வீட்டுக்கு ஸ்ரீ நாராயணன் சென்றால் இப்படி ஏதாவது நடக்கும் என்கிற ஊகம் என்று வைத்துக் கொள்ளுமே!"

"கடைசியில் அந்தத் தோள் பையைக் குள்ளன்தான் எடுத்துக் கொண்டான். அதை நான் பிடுங்க யத்தனித்தது உண்மை. அதற்குள் அவன் ஜன்னல் கதவைத் திறந்து கீழே வீசினான். அங்கே தயாராக நின்ற ஒருவன் அதைப் பிடித்துக் கொண்டான். நான் கண்ணிமைப்பதற்குள் குள்ளன் வாசற்படி வழியே தடதடவென்று வெளியேறி விட்டான். படம் தலையில் விழுந்ததால் மயங்கி விழுந்த ஆசாமியை நான் கவனித்து உட்கார்த்தி வைத்தேன். அவன்தான் உண்மை தாமோதரன் என்று அறிந்துகொண்டேன். நான் முதலில் பார்த்த ஆசாமி யாரோ ஒரு எதிரி."

"அது கிடக்கட்டும். தாமோதரன் நாளை என்னை வந்து பார்ப்பதாகச் சொன்னானா!"

"இல்லை; இந்தக் குள்ளனைப் பற்றிய தகவல் இல்லாமல் உங்களைக் காண்பதில் பிரயோசனம் இல்லை என்று சொல்லிவிட்டான்."

ஃ ஃ ஃ

அறையின் வாசற் கதவு இப்போது தடதடவென்று இடிக்கப்பட்டது. "ஸார்! கொஞ்சம் திறவுங்கள்... ஸார்! ஸார்!" என்று குரல் கேட்டது.

சந்துரு நாராயணனைக் குறிப்பாகப் பார்த்து, "நீங்கள் வந்த வழியே இப்போ[illegible]... அதற்கு முப்பது விநாடி அவகாசம் கொடுக்கிறேன்!" என்றான் கண்டிப்பாக.

29/05/2011 1

நாராயணன் தலை மறைந்ததும், கதவைத் திறந்து ஒரு பெரிய கொட்டாவி விட்டு, "யார் அங்கே? என்ன விஷயம்?" என்று கேட்டான் சந்துரு.

"நான்தான் மதுரநாயகம்! செங்கல்வராய பிள்ளையை அவர் அறையில் காணவில்லை. எங்கும் தேடிவிட்டேன். பங்களாவிலேயே இல்லை அவர்... கொஞ்சம் வருகிறீர்களா!" என்றார் மதுரநாயகம்.

அவர் முன்னால் இந்திராவும் திலகவதியும் திகில் நிறைந்த முகத்துடன் நின்று கொண்டிருந்தார்கள்.

# பற்பல கேள்விகளும் சிற்சில விடைகளும்

செங்கல்வராய பிள்ளை அந்தப் பங்களா எதிலும் காணப்படவில்லை என்று மதுரநாயகம் அறிவித்தபோது, சந்துரு திடுக்கிட்டுப் போவான் என்று அவர் எதிர்பார்த்திருந்தால் முற்றும் ஏமாந்துதான் போயிருக்க வேண்டும். இந்திராவின் முகத்தில் இருந்த கலவரமும், திலகவதியின் துயரம் தோய்ந்த கண்களும்கூடச் சந்துருவை அசைக்கவில்லை.

"ஓஹோ! அப்படியா?... செங்கல்வராய பிள்ளையைத் தானே இப்போது காணோம் என்கிறீர்கள் நீங்கள்! என்னைக் கேட்டால், அவர் நான்கு நாளைக்கு முன்பே போயிருக்க வேண்டியவர் என்றுதான் நான் சொல்லுவேன்!" என்றான்.

"என்னங்க, அப்படி ஒரு வார்த்தை சொல்றீங்க?" என்று கேட்டாள் திலகவதி சிறிது கோபத்துடன்.

"நான் காரணம் இல்லாமல் ஒரு வார்த்தைகூடப் பேசுகிறதில்லை. நமக்கெல்லாம் தெரிந்ததைவிட, அவருக்கு



நண்பர்கள் அதிகம் இருக்கிறார்கள். மிஸ்டர் மதுரநாயகம் தாம்தான் மிகவும் ஆப்தர் என்று பாதுகாப்புக்காக இங்கே அருகிலே வந்து தங்கிக் கொண்டிருக்கலாம். ஆனால், பிள்ளையவர்களை அழைத்துப் போய்த் தங்கள் அருகே வைத்துக் கொண்டு பந்தோபஸ்து செய்ய விரும்பும் நண்பர்கள் பலரும் அவருக்கு இருக்கிறார்கள் என்றுதான் நான் ஊகிக்கிறேன்."

"இது நிஜம்தானா?" என்று கேட்டார் மதுரநாயகம்.

"இது என் ஊகம் என்றுதான் சொல்லிவிட்டேனே! என் ஊகத்திற்கும் நிஜத்திற்கும் அதிக வித்தியாசம் இருப்பதில்லை என்பது என் அனுபவம்..."

"அவருக்கு ஆபத்து ஒன்றும் இல்லாமல் இருக்க வேண்டுமே!" என்று கேட்டாள் திலகவதி.

"ஆபத்து என்பது எப்போது யாருக்கு ஏற்படும் என்று சொல்ல முடிவதில்லை. எதற்கும் நாம் தயாராக இருந்து விட வேண்டியதுதான்!" என்று சந்துரு பதில் கூறினான்.

மதுரநாயகம் இந்தப் பேச்சைச் சிறிதும் ரசிக்கவில்லை. "அதிருக்கட்டும், மிஸ்டர் சந்துரு... இப்போது நாம் செய்ய வேண்டியது என்ன என்பதைச் சொல்லுங்கள்!" என்று சிறிது கடுமையாகவே கேட்டார்.

"நான் உங்களைத் திரும்ப ஒரு கேள்வி கேட்டு விடுகிறேனே! நம்மால் என்ன செய்து கொள்ள முடியும்? தெரிந்தால் சொல்லுங்களேன்!" சந்துரு உட்கார்ந்து கொண்டு விட்டான்.

"என்ன ஸார்! ஒரு மனிதர் திடீர் என்று காணாமல் போயிருக்கிறார் என்று நான் வந்து சொல்கிறேன்."

"அவர் காணாமல் போயிருக்கிறார் என்பதை நான் எப்படி ஒப்புக் கொள்ள முடியும்! அவரே தமது முழு மனத்துடன் நடந்து வெளியே சென்றிருந்தால், காணாமல் போனதாக ஆகிவிடுமா? [illegible] எதுவும் தரை நிச்சயம் இல்லையே!"

29/05/2011 12:5

"அவருக்கு வெளியில் அபாயம் எதுவும் நேராமல் பார்த்துக் கொள்ள வேண்டிய பொறுப்பு நம்முடையது அல்லவா?"

"இந்த வீட்டுக்குள் அவருக்கு அபாயம் அதிகமாகிப் போய், வெளியில் இருப்பதே நல்லது என்று அவர் நினைத்திருந்தால், நாம் அதை ஆட்சேபிக்க முடியுமா?"

"வேடிக்கைதான் மிஸ்டர் சந்துரு! எனக்கு ஒரு விஷயம் மட்டும் உங்களிடம் ஆரம்பத்திலிருந்தே சரியாக விளங்கவில்லை" என்றார் மதுரநாயகம்.

"உங்கள் அடக்கமான சுபாவத்தை நான் ஓயாமல் வியந்து கொண்டேயிருக்கிறேன். உங்களுக்கு ஒரு விஷயம் மட்டுமா விளங்காமல் இருக்கிறது! எத்தனையோ விஷயங்கள்..."

இந்திரா இப்போது குறுக்கிட்டாள்; "மிஸ்டர் சந்துரு! சித்தப்பாவைக் காணோம் என்றது முதல் எங்கள் இருவர் மனதும் படுகிற கவலை கொஞ்சம் அல்ல. நீங்கள் தயவு செய்து உடனே அவரைத் தேடுவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம். உங்கள் கண் எதிரில் அவர் காணாமல் போவது என்பதை எங்களால் நம்ப முடியவில்லை..." என்றாள். அவளுடைய குரலில் இருந்த சோகம் சந்துருவையும் இளக வைத்திருக்க வேண்டும்.

"எனக்குத் தெரிகிறது மிஸ் இந்திரா! ஆனால், நான் இங்கே வந்திருப்பது துப்பறியும் நண்பனாகத்தான்! போலீஸ் உத்தியோகஸ்தன் என்ற முறையில் நடந்து கொள்ளவேண்டிய நிர்ப்பந்தமும் இப்போது வந்து கொண்டே இருக்கிறது. வீடு பூராவும் சோதனை போடப் போகிறேன்; பிறகு ஒவ்வொருவரையும் சரமாரியாகக் கேள்விகளும் கேட்கப் போகிறேன். உடனே போலீஸ் ஸ்டேஷனுக்குத் தகவல் கொடுக்கவும் செய்வேன். உன் சித்தி திலகவதி அம்மாளிடம் நான் எடுத்த காரியத்தை முடிப்பேன் என்று தைரியம் சொல்லுங்கள். மிஸ்டர்



மதுரநாயகம்! நான் தயார்; வீட்டை ஒருமுறை என்னுடன் சுற்றிப் பார்த்து விடுங்கள்!" என்றான்.

முதலில் அவர்கள் செங்கல்வராய பிள்ளையின் அறைக்கே சென்றார்கள். அன்று முதலில் சந்துரு பார்த்த நிலையிலேயே இருந்தது அறை. அதே மருந்து சீசாக்கள், பழங்கள், கட்டிலில் விரித்தபடி மெத்தை, சாத்தியபடி பீரோ, இரும்புப் பெட்டி. தலையணைகூட இடம் மாறவில்லை.

"மதுரநாயகம்! நீங்கள் வந்து பார்த்தபோதுகூட இப்படித்தானே இருந்தது?" என்று கேட்டான் சந்துரு.

"நீங்கள் இங்கே இருக்கிறபடியால், ஒன்றையும் தொடக் கூடாது, நகர்த்தக் கூடாது என்ற அறிவு எனக்கு இருந்தது. அதிலிருந்து தெரிந்து கொள்ளுங்கள்..." என்றார் மதுரநாயகம்.

"மதுரநாயகம்! இந்த அறையை நாம் பார்த்ததிலிருந்து இரண்டு விஷயங்களில் ஒன்று நடந்திருக்கவேண்டும் என்று நாம் நினைக்கலாம். ஒன்று, செங்கல்வராய பிள்ளை தமது இஷ்டப்படியே எழுந்து வெளியே சென்றிருக்கலாம்; இரண்டாவது, அவரைச் செயலற்றுப் போகும்படி செய்து, அப்படியே அலக்காக யாரேனும் தூக்கிக் கொண்டு போயிருக்கலாம். இரண்டு சந்தர்ப்பங்களிலும் இந்த அறையிலுள்ள பொருள்கள் நலுங்காமல் வைத்தது வைத்தபடி இருப்பதற்கு முகாந்தரம் உண்டு... அல்லவா?"

திலகவதியின் உடல் ஒரு முறை குலுங்கியது. அவள் முகத்தை மூடிக் கொண்டாள்.

"நீங்கள் ஸ்திரீகளைப் பயமுறுத்தக் கூடாது!" என்றார் மதுரநாயகம்.

"பிள்ளை அவர்களைக் காணோம் என்பதைவிடப் பயங்கரமான பேச்சு அல்லவே அது? நாம் இப்போது விஷயத்தை எல்லாக் கோணங்களிலிருந்தும் பார்த்து விடுவது நல்லது—அதாவது, செங்கல்வராய பிள்ளையைக் காணோம் என்பது நிச்சயமான

29/05/2011 12

''அது பற்றி நீங்கள் நிச்சயம் செய்து கொள்ள வேண்டும் என்றுதான் நான் உங்களையே அழைத்தேன். என்வரையில் வீடு பூராவும் மூலை முடுக்கு விடாமல் பார்த்துவிட்டேன். தோட்டமெல்லாம் தேடித் தேடிப் பார்த்தேன். எல்லோரையும் எழுப்பிக் கேட்டேன். கணேசன் மட்டும் இப்போது தோட்டத்தில் இன்னும் சுற்றிக் கொண்டிருக்கிறார்.''

''சந்துரு எதையும் காதில் வாங்கிக் கொண்டவனாகத் தெரியவில்லை. உற்றுஉற்றுப் பார்த்துக்கொண்டிருந்தான். ஜன்னல் அருகில் சென்று வெளியே எட்டிப் பார்த்தான். பீரோவைத் தட்டினான். அதன் கதவுகளைக் கவனித்தான். ஒரு மெல்லிய நாடாவின் சிறிய பாகம் கதவின் அடியில் வெளியே நீட்டிக் கொண்டிருந்தது. அதைப்பற்றி இழுத்த போது, சுமார் ஒரு கஜ நீளத்திற்கு அது வெளியே வந்தது.

திலகவதி அதைக் கவனித்துவிட்டு, ''ஓ! அது மருந்து 'பாக்' செய்துவரும் நாடா!'' என்றாள்.

''நீங்கள் வழக்கமாக மருந்துகள் வாங்கும் கடை இது தானா?'' என்று கேட்டபடி சந்துரு அந்த நாடாவை உற்று நோக்கினான். திரும்பத் திரும்ப ஒரே வாசகம் அதில் அச்சடிக்கப்பட்டிருந்தது— 'கல்பமணி ட்ரக் ஸ்டோர்ஸ்'... 'கல்பமணி ட்ரக் ஸ்டோர்ஸ்.'

''ஆமாம்! இங்கிருந்து அவர்களுக்கு டெலிபோன் செய்தால் மருந்துகளை அனுப்பி விடுவார்கள்'' என்றாள் திலகவதி.

மதுரநாயகம் அதை எட்டிப் பார்த்தார். ''இப்படிக் கொடுங்கள் அதை!'' என்று கையையும் நீட்டினார்.

''இது என்னிடமே இருக்கட்டும்!'' என்று சந்துரு ஒரு கண்டிப்புடன் அதைச்சுருட்டிப் பையில் வைத்துக்கொண்டு ''இங்கே நாம் தெரிந்து கொள்ளக்கூடியது ஒன்றும் இல்லை



என்று நினைக்கிறேன். வேறு அறைகளைப் பார்க்கலாமா என்று கேட்டான்.

அடுத்த இரண்டு அறைகளும் திலகவதியும் இந்திராவும் படுத்துக் கொண்டிருந்தவை. திலகவதியின் அறைக்குள் சந்துரு நின்று கொண்டு, அவளைச் சில கேள்விகள் கேட்டான். ''கொஞ்சம் யோசித்துப் பதில் சொல்லுங்கள். கடைசி கடைசியாக நீங்கள் உங்கள் புருஷரைப் போய்ப் பார்த்தது எப்போது?''

''பதினொரு மணி இருக்கலாம். அப்போது அவர் ஒரு முறை பால் சாப்பிடுவது வழக்கம். நானே கொடுப்பேன்.''

''இன்றைக்கும் கொடுத்தீர்களா?''

''ஆமாம், கொடுத்தேன்.''

''வழக்கம் போல் சாப்பிட்டாரா?''

''ஆமாம்.''

''அப்போது அவரிடம் எவ்வித மாறுதலும் காணப்பட வில்லையே?''

''வழக்கம் போலவே இருந்தார்.''

''படபடப்பு, கோபம், அதிர்ச்சி, பயம் ஒன்றும் இல்லை?''

''என் வரையில் அப்படி எதுவும் இருந்ததாகப் பட வில்லை.''

''உங்களுடன் பேசினாரா?''

''அவர் அதிகம் பேசுவது கிடையாது. 'போதும்' 'வேண்டாம்' என்பதைத் தவிர எதுவும் சொல்வதில்லை.''

''உங்கள் அறைக்கு அவர் வருவதில்லை?''

''இல்லை. வந்து எத்தனையோ மாதங்கள் ஆகி விட்டன.''

''தோல்பை காணாமல் போயிற்று என்கிறீர்களே— சற்றுப் பொறுங்கள். கேள்வியைப் பூராவும் கேட்டுவிடு கிறேன்—அன்றைக்கு அவர் [illegible] இருந்ததற்கும் வித்தியாசம் தெரிந்ததா?

29/05/2011 12

"எந்த விஷயமானாலும் அனாவசியமாக அலட்டிக் கொள்கிற சுபாவம் கொண்டவர் அவர்... இன்று அவர் மிகவும் சாதாரணமாக இருந்தார். அமைதியாக இருந்தார் என்றுகூடச் சொல்வேன்."

"மனத்தைச் சமாதானப்படுத்திக்கொண்டு ஏதோ ஒரு முடிவு செய்துகொண்டவர் மாதிரி இருந்தார் என்று அதைச் சொல்லலாமா?"

"எனக்கு அதெல்லாம் கண்டு சொல்லத் தெரியாது. என் வரையில் வழக்கம்போல் இருந்தார்.

"உண்மையாகச் சொல்லுங்கள். என்னைப் பற்றி விசாரித்தாரா?"

"இ...ல்...லை."

"பரவாயில்லை; நான் வருத்தப்பட மாட்டேன். நடந்ததைச் சொல்லுங்கள்!"

"நீங்கள் வந்ததில் அவருக்கு இஷ்டம் இல்லை. கொஞ்சம்கூட அவர் விரும்பவில்லை. ஆகையால் 'நீங்கள் போய் விட்டீர்களா' என்று கேட்டது உண்மை. நான் அவரிடம் பொய் சொன்னேன்;—போய்விட்டதாக. இல்லா விட்டால், அவர் தூங்கியிருக்கவே மாட்டார்."

"சரி. தூங்கினார் என்பதாவது உங்களுக்குத் தெரியுமா?"

"நான் தூங்கிவிட்டேன். ஆகையால் தெரியாது!"

"நடுவில் எழுந்திருக்கவே இல்லை?"

"இல்லை; அதாவது மதுரநாயகம் வந்து கதவைத் தட்டி என் புருஷரைக் காணோம் என்று சொல்லும் வரையில்!"

"நடுவில் சப்தம் எதுவும் உங்கள் காதுக்கு எட்ட வில்லை?"

"இல்லை. நிச்சயமாக இல்லை."

"நன்றாக நினைத்துப் பார்த்துக் கொள்ளுங்கள்! நீங்கள் விழித்துக் கொள்ளவே இல்லையா?"



திலகவதி கடைக்கண்ணால் ஒருமுறை இந்திராவைப் பார்த்தாள். இந்திரா புருவத்தை உயர்த்தினாள். தொண்டையைக் கனைத்துக்கொண்டு திலகவதி, "என்னை ஒருமுறை இந்திரா கதவை இடித்துக் கூப்பிட்டதாக நினைவுக்கு வருகிறது. ஏதேனும் சப்தம் கேட்கிறதா என்று அவள் விசாரித்தாள். நான் தூக்கக் கலகத்தில் 'ஒன்றும் கேட்கவில்லை. படுத்துக்கொள்!' என்று அனுப்பினதும் ஞாபகம் வருகிறது" என்றாள்.

"அறைக் கதவை திறக்கவே இல்லையே?"

"இல்லை. நான் உடனேயே தூங்கிப்போய் விட்டேன்."

சந்துரு 'உம்ம்ம்' என்று தனது ஐந்து ஜோடி விரல்களையும் தாளம் போட்டான். பிறகு இந்திராவின் பக்கம் திரும்பி, "உங்கள் அறைக்கு இனி நாம் போகலாமா?" என்று கேட்டான்

அறையை வெகு நேர்த்தியாக வைத்திருந்தாள் இந்திரா. மேஜையின்மீது அநேக புஸ்தகங்கள் அடுக்கப் பட்டிருந்தன. ஒரு அலங்காரமான 'டேபிள் லாம்ப்' எரிந்தது. படித்துக் கொண்டிருக்கிறாள் என்பதற்கு அடையாளமாக ஒரு நாவல் பிரித்தபடியே கிடந்தது. சந்துரு அதை எடுத்துப் புரட்டினான். புத்தகத்தின் தலைப்பு இருந்த பக்கத்தில் 'நாராயணன்' என்ற பெயர் காணப் பட்டது. புன்னகை செய்துகொண்டு திருப்பி வைத்து விட்டு, "பக்கம் 138-ல் நிறுத்திருப்பதைப் பார்த்தால், வெகுநேரம் படித்திருக்க வேண்டும் என்று ஊகிக்கிறேன்." என்றான்.

"ஆமாம்; இன்று வாங்கின புத்தகம்தான் அது."

"ஆழ்ந்து படித்திருக்கிறீர்கள். ஆகையால், யாரேனும் சப்தம் செய்திருந்தாலும், உங்கள் காதுக்கு எட்டாமல் இருக்க முடியாது."

"அப்படி சொல்ல முடியாது. புத்தகம் சுவாரஸ்யமாக இருந்தது."

"அப்போது உங்கள் காதை எட்டின சப்தம் மிகவும் பலமாக இருந்திருக்க வேண்டும்."



29/05/2011 12

இந்திரா, "உங்கள் கேள்விக்குத் தப்பமுடியாதுதான் யாரோ இருவர் பேசுகிற மாதிரி சப்தம் வந்தது உண்மை. ஆனால் எனக்கு அது பிரமையாகக் கூட இருந்திருக்கலாம். நான் எதற்கும் சித்தியை எழுப்பி விசாரிப்போம் என்று அவருடைய அறைக் கதவைத் தட்டினேன். சித்தி விழித்துக் கொண்டு, என்னைப் போய்க் கவலைப்படாமல் படுக்கச் சொன்னார். கதவைச் சாத்தி விட்டுப் படுத்துக் கொண்டேன்!" என்றாள்.

"அப்புறம் உங்கள் காதில் பேச்சுக் குரல் கேட்க வில்லை!"

"இல்லை."

"கதவு திறந்து சாத்திக் கொள்ளும் சப்தம் ஏதேனும்."

"இந்த வீட்டில் அது சகஜம். சில சமயம் அண்ணா கதவைப் படீர் என்று சாத்துவான்; அப்பா அறையின் ஜன்னல் கதவு அடித்துக் கொள்ளும். கீழே சமையற்கட்டில் அலமாரி மூடப்படும். அதையெல்லாம் பொருட்படுத்திக் காரணம் கேட்டுக் கொண்டிருந்தால், இந்த வீட்டில் இரவு தூக்கமே போய்விட வேண்டியதுதான்."

"இப்போது நீங்கள் கேட்டது பேச்சுக் குரல்தான்?"

"பேச்சுக் குரல் மாதிரி இருந்தது என்றேனே!"

"இதற்கு முந்தி இப்படிக் கேட்டதே இல்லையே?"

"நான் இன்றுதான் அதிகநேரம் புத்தகத்தை வைத்துக் கொண்டு உட்கார்ந்தேன். வழக்கமாகத் தூங்கி விடுவேன். சித்தியும் மதுரநாயகமும் வந்து என்னைக் கூப்பிட்டபோது கூட நான் கொஞ்சம் அயர்ந்து விட்டேன்."

"இரவு வேளையில் இந்த வீட்டில் டெலிபோன் அடிப்பது வழக்கம் உண்டோ?"— கடைக் கண்ணால், திலகவதிக்குத் தூக்கிவாரிப் போடுவதைக் கவனித்துக் கொண்டே இந்திராவின் பக்கம் முகத்தைத் திருப்பிக் கொண்டான் சந்துரு.

"இரவில் அடிப்பதில்லை. தவிர, டெலிபோன் கீழே இருக்கிறது. யாரேனும் கூப்பிட்டாலும், அண்ணாவின் அறையிலும் அந்த சப்தம் அடிக்கும்; அவன் உடனே பேசி விடுவான்."

"நேற்று இரவு டெலிபோன் ஒன்றும் வரவில்லையே?"

"இல்லை" என்றாள் இந்திரா.

"உங்களுக்கும் கேட்டிராது?" என்று திலகவதியைப் பார்த்தான்.

"நான் தான் அயர்ந்து தூங்கிவிட்டேனே!" என்றாள் அவள் சந்துருவின் முகத்தைப் பாராமலேயே; மிகவும் சிரமப் பட்டு முகபாவம் மாறாமல் வைத்துக் கொள்ள முயன்று கொண்டிருந்தாள் என்பதை அவன் கவனித் தான்.

எல்லாரும் கீழே இறங்கிச் சென்றார்கள். கண்களைக் கசக்கிக் கொண்டு அண்ணாமலை நின்றான். "நல்ல தூக்கமோ?" என்று கேட்டான் சந்துரு.

"எழுவெடுத்த தூக்கமுங்க. சனியனாக வந்திச்சு! பெரிய எசமான் போன இடம் தெரியவில்லை. இந்த நாய் கிட்ட ஒரு வார்த்தை சொல்லாம காலைக் கீழே வைக்க மாட்டார்...இன்னைக்குத் திடுதிப்பென்று—"

"சற்று இரு! கேட்டதற்குப் பதில் சொல்! ஐயா கீழே இறங்கி வந்திருந்தால் உனக்குத் தெரிந்திருக்கும் அல்லவா?"

"நிச்சயமுங்க! வந்து பக்கத்திலே நின்று, கைத் தடியாலே தட்டுவாருங்களே; திடுக்கிட்டு முழிச்சுக்கு வேன்..."

"அப்படித் தடிகொண்டு எழுப்பினால்தான் நீ எழுந் திருப்பாய், இல்லையா?...இருக்கட்டும்; கடைசியாக உன் எஜமானை எப்போது பார்த்தாய்?"

"பத்தரை மணி இருக்குமுங்க. 'ஏய் அண்ணாமலை! காலைக்குடையுது. அமுக்குடா!' இன்னாரு. அமுக்கினேன்."

"எவ்வளவு நேரம்?"

"ஒரு பத்து நிமிஷம் இ[illegible] வலிக்கிற இடத்திலே அமுக்கத் தெ[illegible] காட்டியும்' இன்னு விரட்டி விட்டார். கீழே வந்தேன்."



29/05/2011 12

"வழியிலே யாரையேனும் கண்டாயா? வழக்கத்துக்கு விரோதமாக ஏதேனும் சந்தேகப்படும்படியாக நடந்ததா?"

"எனக்கு என்னாங்க சந்தேகம்? இதோ இந்த ஐயா (மதுரநாயகத்தைக் காட்டி) மேலே வந்துகொண்டிருந்தார். ஆ! ஒரே ஒரு விஷயம். மறந்துட்டேனுங்க. சொல்லட்டுங்களா!"

"சொல்லு! அதைக் கேட்கத்தானே நான் காத்திருக்கிறேன்!"

"மதுரநாயகம் ஐயா கோபித்துக் கொள்ளக் கூடாது. அவங்க மேலே போயிருந்தப்போ, அவர் அறைக்குள்ளே நான் எட்டிப் பார்த்தேன்...கோபித்துக்கொள்ளக்கூடாது. இந்த ஏழையை வேலையிலிருந்து நீக்கக் கூடாது..."

"அட! சொல், அப்பா!... மிஸ்டர் மதுராயகம்! உங்களுக்கு ஆட்சேபம் இல்லையே?"

"சொல்லட்டும் அவன் அப்புறம்தானே எனக்கு ஆட்சேபம் உண்டா இல்லையா என்று சொல்ல முடியும்?"

அண்ணாமலை தயங்கினான். சந்துருவின் முகத்தைப் பார்த்தபடியே, "நான் மெள்ள உள்ளே எட்டிப் பார்த்தேனுங்க!"

"அதை இரண்டு தரம் சொல்லிவிட்டாய். அங்கே எதையானும் கண்டாயா?"

"கண்டது உண்டுங்க. ஒரு ஆளு நின்று கொண்டிருந்தானுங்க சுமார் ஆறடி உயரம் இருப்பான். கட்டுமஸ்தா இருந்தான். இதற்கு முந்தி அவனை நான் எங்கேயும் பார்த்ததில்லை."

"என்ன செய்து கொண்டிருந்தான்?"

மதுரநாயகம் ஏளனமாக சிரித்ததையும் காதில் வாங்கிக் கொள்ளாமல் அண்ணாமலை, "அது என்ன செய்தானோ? நின்னுக்கிட்டிருந்தான்!" என்றான்.

"அவன் முகத்தைப் பார்த்தாயா?"



"அது தானே இல்லை!...முதுகைக் காட்டிக்கிட்டு நின்றான். பார்த்துக்கிட்டிருக்கையிலேயே 'பொக்'கென்று விளக்கையும் அணைத்து விட்டான்..."

"ஏதோ சினிமா பார்த்துவிட்டு வந்து அண்ணாமலை அதை நம் வீட்டில் நடந்ததாகச் சொல்கிறான்!" என்றார் மதுரநாயகம் கேலிச் சிரிப்புடன்.

மதுரநாயகத்திடம், "ஒருவேளை நீங்கள்மேலே வந்த சமயம் உங்கள் அறைக்குள் யாரேனும் நுழைந்திருக்கலாம் அல்லவா?" என்று கூறிவிட்டு, "நீ இதை ஏன் என்னிடம் உடனே வந்து சொல்லவில்லை?" என்று கேட்டான் சந்துரு.

"அதெப்படிங்க! வீட்டு எஜமானைத் தாண்டி எஜமானியம்மாளிடமும் சொல்லாமல் உங்க கிட்டே வரது? தவிர, இவரு (மதுரநாயகம்) வீட்டு மனுஷருக்கு மேலாகப் பழகப்பட்டவரு. அவர் அறையிலே வர்ரவங்க சிநேகிதராகத்தானே இருக்க வேண்டும் என்று எண்ணி விட்டேன்..."

"இப்போது மட்டும் அவர் சிநேகிதர் இல்லை என்று எப்படித் தெரிகிறது?"

அண்ணாமலை சிறிதும் தயங்கவில்லை. "எஜமானனைக் காணவில்லை என்றால் நாம் எல்லார் மேலேயும் சந்தேகப்படவேண்டியதுதானே? இப்போ உங்க மேலே கூட எனக்குச் சந்தேகம்தான்!" என்றான்.

அத்தனை பேரும் சிரித்தார்கள். மதுரநாயகம் அதிலமாகவே சிரித்தார். "என் அறையில் ஒரு ஆள் இருந்தான் என்று சொல்கிறானே, அதைவிட வேறு வேடிக்கை இருக்க முடியாது!" என்றார்.

"விளக்கை அணைத்தவுடன் நீ போய்விட்டாயா?"

"ஆமாம். தவசுப்பிள்ளையிடம் மட்டும் ஒருவார்த்தை சொல்லி வைத்தேன்..."

"உன் எஜமானிடம் போனவன் அதைச் சொல்லாமல் இருந்தது பெரிய பிசகு...

29/05/2011 12:5

"நான் சொல்லப் போனால், அயர் அதை ஒரு பிசகு என்பாங்க. இந்த வீட்டு விவகாரம் உங்களுக்கு என்னாங்க தெரியும்?" என்றான் அண்ணாமலை தலையைச் சொறிந்தபடி.

"சரிதான்! சும்மா இரு! கேட்ட கேள்விக்குப் பதில் சொல்லிவிட்டு நிறுத்திக் கொள்!" என்று திலகவதி கடுமையாக அவனை அடக்கினாள்.

சந்துரு முகவாய்க் கட்டையைத் தடவிக்கொண்டான். "மிஸ்டர் மதுரநாயகம்! நாம் உங்கள் அறையில் போய்ச் சற்று உட்கார்ந்து கொண்டு, அங்கே மேற்கொண்டு பேசலாம். பிறகு தொடர்ந்து தேடலாம்!" என்று அழைத்தான்.

மதுரநாயகத்துக்குக் கொடுக்கப் பட்டிருந்த அறை மிகவும் விஸ்தாரமாக இருந்தது. நான்கைந்து நாற்காலிகள் ஒரு சோபா, மேஜை, அலமாரி எல்லாம் அங்கே இருந்தன. அறையில் இருந்த மூன்று மின்சார தீபங்களும் ஏற்றப்பட்டு அறையின் வெளிச்சம் பகல்போல் இருந்தது.

மதுரநாயகமும் சந்துருவும் இரு நாற்காலிகளில் அமர்ந்து கொள்ள, திலகவதியும் சித்ராவும் எதிரே உட்கார்ந்து கொண்டார்கள்.

அண்ணாமலை இடையில் போய், தவசுப்பிள்ளையை அழைத்து வந்து விட்டான். இருவரும் அங்கேயே ஒதுப்புறமாக நின்றார்கள்.

சந்துரு அண்ணாமலையை, "இந்த அறையில்தானே நீ ஒரு ஆளைப் பார்த்ததாகச் சொல்கிறாய்?" என்று கேட்டான்.

"ஆமாம்! பார்த்தேன். எத்தனை வாட்டி கேட்டாலும், உண்மைதான் இந்த வாயில வருமுங்க!..."

"நீ மட்டும் தான் அவனைப் பார்த்தாய் அல்லவா?"

"அது உண்மை."

"அவன் எங்கே போயிருப்பான்?"

"நமக்கு என்னாங்க தெரியும்?"



"வீட்டை விட்டே போயிருக்கலாமோ?"

"இங்கே, இல்லாட்டி, அப்படித்தான் நடந்திருக்கும்" என்றான் அண்ணாமலை. சந்துரு அவனை அதோடு விட்டு, "என்னங்க, தவசுப்பிள்ளை! நான் சில கேள்விகள் கேட்கலாமா?" என்று திரும்பினான்.

தவசுப்பிள்ளை குளிர் ஜுரம் வந்தவன்போல் ஒரே நடுக்கமாக நடுங்கிக் கொண்டிருந்தான். "கே...கே... கேளுங்க!" என்றான்.

"அண்ணாமலை உன்னிடம், ஒரு புது ஆள் உள்ளே இருப்பதாகச் சொன்னது வாஸ்தவந்தானே?"

"எனக்கு இந்த வீட்டைவிட்டுப் போய்விட வேண்டும் என்கிறது ரொம்ப நாளாகவே எண்ணமுங்க! உங்கள் கிட்டச் சொல்கிறேன்... எனக்குக் கொஞ்சம் கூடப் பிடிக்கல்லை..."

"கேட்ட கேள்விக்குப் பதில் சொல்! ஒரு புது ஆள் இருப்பதாகச் சொன்னது வாஸ்தவமா?"

"அது இவரு சொல்லியா தெரியணும்? ஒரு மாசமாக, இந்த வீட்டிலே ஏதேனும் இப்படி ஓர் உபத்திரவம்தான். மாடிமேலே ஆள் ஓடுகிற மாதிரி, கதவு திறந்து கொள்கிற மாதிரி, தோட்டத்திலே செடிகள் மறைவிலே பதுங்கியிருக்கிற மாதிரியெல்லாம் தெரியும். இந்த வீட்டு எஜமானரு கூட இப்படி ராவேளையில் தோட்டத்திலே நடக்கிறது உண்டு. நமக்கு ஏன் இந்த வம்புகள் எல்லாம்?"

"நிறுத்து! பழைய கதைகள் எல்லாம் நான் உன்னைக் கேட்கவில்லை இப்போது. இன்று ராத்திரி உனக்கு ஏதேனும் புதிதாகத் தெரிகிறதா?"

"என்னத்தை நான் சொல்றதுங்க?"

"என்னையே கேள்வி கேட்கிறாயே!"

"நம்மை உட்டுடுங்க. எஜமான்! நீங்கள்ளாம் பெரிய பெரிய போலீஸ்காரங்க. நாம ஏழை..."

"அடசட்! நீ என்ன அறியாதபிள்ளையா? இன்றைக்கு ஏதாவது சந்தேகப்படும்படி

''தெரியுது. அதோடே விடுங்க!''

''நான் மிகவும் பொல்லாதவனாக இருப்பேன். நீ என்னுடன் விளையாடுகிற மாதிரி தோன்றுகிறது. போலீஸாரிடம் விஷயத்தை ஒளிப்பது பெரிய தவறு! குற்றவாளிக்கு ஒத்தாசை செய்கிற மாதிரி ஆகும் அது... ஆமாம்! அதற்கும் ஜெயில் தண்டனை உண்டு...இப்போது சொல்!''

''நம்மை ஜெயில்லே போட்டு விடுங்க. எஜமான்! அங்கே போய்ட்டா நிம்மதி! வெளியே இருந்தால்தான் அவன் இவன் தொல்லை, பயம் எல்லாம். அங்கே வேளா வேளைக்குச் சாப்பாடு...''

''நீ மரியாதைக் குறைவாகப் பேசுகிறே!''

''மரியாதைக் குறைவாகப் பேசினதுக்காகத் தூக்குத் தண்டனைங்களா? இழுத்துக்கிட்டுப் போங்க! தொலையட்டும் பாழும் ஜன்மம்!''

''பேசாதே! ஓர் ஆசாமியிடம் எனக்குச் சந்தேகம் ஒன்று வந்தால் எது வேணாலும் செய்யலாம்.''

''ஓ!—எம்மேல சந்தேகம் வந்துட்டுதுங்களா அதுக்குள்ளார? ஓஹோ!''

''இதென்ன இவன் பெரிய முட்டாளாக இருக்கிறானே!''

''அது சரியான வார்த்தை! அப்படியே முடிவு கட்டி நம்மை அனுப்பி விடுங்க! இந்த ஊடே வாண்டாம்!''

சந்துரு தொண்டையைக் கனைத்துக் கொண்டான். ''தவசுப்பிள்ளை! கொஞ்சம் நிதானம் படுத்திக் கொள்! உன்னை யாரும் எதுவும் செய்யவில்லை.''

''போலீஸ்கூட நமக்கு ஒரு பேச்சும் தேவை இல்லை?''

''நீ பேச வேண்டாம். ஐயா! நான் கேட்டதுக்குப்பதில் சொல். அது போதும். நேற்று இரவு நீ படுத்தபோது எத்தனை மணி?''

''நான் கவனிக்கவில்லை.''



''ரொம்ப உபயோகமாகப் பதில் சொல்லி விட்டாய்! நீ படுத்த பிறகு என்ன செய்தாய்?''

''எல்லாரும் என்ன செய்வாங்க? தலைகாணி மேலே தலையை வைத்தேன்!''

''உடனே தூங்கி விட்டாயா?''

''கேட்கணுமா?''

''நன்றாகத் தூங்கினாயா? நடுவில் ஏதேனும்...''

''தூக்கம் கலைந்தது உண்டு.''

''எதனால்?''

''நம்மை யாரோ துரத்துகிற மாதிரி சொப்பனம், விழித்துக் கொண்டேன்.''

''சொப்பனத்தையெல்லாம் போலீஸ் ஆபீஸரிடம் சொல்லிக் கொண்டிருக்கத் தேவை இல்லை இங்கே!'' என்றார் மதுரநாயகம்.

''இல்லை, சொல்லட்டும்! அதிலேயும் ஏதேனும் விஷயம் இருக்கும்... தவசுப்பிள்ளை! நீ கண்டது சொப்பனம்தான் என்கிற வரையில் நிச்சயமா?''

''ஆமாம்! ஆனால் விழித்துக் கொண்டபோது, என் அறையில் யாரோ ஓர் ஆள் மாதிரி இருந்தது. நான் அசையாமல் படுத்துக் கொண்டபடியே கண்ணைத் திறந்து பார்த்தேன். உண்மையிலேயே ஓர் ஆள் நின்றான்.''

''நீ என்ன செய்தாய்?''

''நான் அப்போது இல்லவேஇல்லை. ஐயா! பயத்திலே செத்து விட்டேன்; என் இருதயம் நின்று ரத்தம்கூட உறைஞ்சு போச்சு! அப்புறம் நான் என்ன செய்கிறது?''

''சரி; அந்த ஆள் என்ன செய்தான்?''

''எதையோ தேடுகிற மாதிரி நின்றான். பல இடங்களில் கை வைத்துப் பார்த்தான் [illegible]ய் விட்டான்.''

''அப்புறம் நீ என்ன செய்தாய்?''

"அந்த ஆள் போன பிறகு விளக்கைப் போட்டு அவன் நின்ற இடத்தில் நின்று தேடின இடங்களில் தேடி—"

"வெளியே பார்க்கவில்லையே?"

"அது தவசுப்பிள்ளைக்கு வேலை இல்லீங்களே!"

"ஒரு சமயம் பார்த்தால் ரொம்ப பயந்த ஆளாக இருக்கிறாய்; ஒரு சமயம் தைரியமாகப் பேசுகிறாய்! என்ன சமாசாரம்?"

"எனக்குத் திருடன் என்றால் பயம்—மற்ற யாரிடமும் பயம் இல்லை!"

சந்துரு சிரித்துக்கொண்டே மதுரநாயகத்திடம், "ஒரு ஆசாமி வந்திருந்ததாக அண்ணாமலை சொல்கிறான். அண்ணாமலையைத் தவிர அவனை வேறு யாரும் கண்டதாகத் தெரியவில்லை. இவன் வேறு ஓர் ஆள் அறைக்குள் வந்ததாகச் சொல்கிறான்?" என்றான்.

"அண்ணாமலைகூட நம் தவசுப் பிள்ளை மாதிரி சொப்பனம் கண்டிருப்பான்!" என்றார் மதுரநாயகம்.

"ரொம்ப சரி! உங்களையே நான் ஒரு கேள்வி கேட்க வேண்டும் என்று விரும்புகிறேன். இன்று செங்கல்வராய பிள்ளை காணாமல் போவார் என்பது உங்களுக்குத் தெரிந்த விஷயமா?"

"வேறொருவர் இதே கேள்வி கேட்டால் நான் கோபித்துக் கொண்டிருப்பேன். வேறு கேள்வி உண்டானால் கேளுங்கள்!"

சந்துரு எல்லோரையும் ஒருமுறை பார்த்தான். அவன் முகத்திலிருந்த புன்னகை மறைந்து, பார்வை கடுகடு வென்று ஆகிவிட்டது. "நான் தெளிவாகச் சொல்லி விடுகிறேன். யாரும் வருத்தப்படக் கூடாது. இந்தப் பங்களாவுக்கு நானாக வரவில்லை. அழைக்கப்பட்டே வந்திருக்கிறேன். யாருக்கும் முக்கியமாக வீட்டு எஜமானனுக்கு அபாயம் எதுவும் நேராமல் பாதுகாக்கவே இங்கு



வந்தேன். ஆனால், என்ன நடந்திருக்கிறது? எதிர்பார்த்த ஆபத்து ஏற்பட்டு விட்டது. எஜமானரைக் காணோம்!"

"அதற்கு நாங்கள் யாரும் உம்மை ஜவாப்தாரியாக்க முடியாது!" என்றார் மதுரநாயகம்.

"அது உண்மையாக இருக்கலாம். ஆனால், இங்கே ஒவ்வொருவரும் ஜவாப்தாரியாக இருப்பதுபோல் நடந்து கொள்வதுதான் எனக்குத் திருப்தி அளிக்கவில்லை. உங்களில் யாரையும் உண்மையைச் சொல்லும்படி நான் வற்புறுத்த முடியாது. எனக்கு உதவி செய்ய நீங்கள் ஒத்துழைப்பீர்கள் என்று எதிர்பார்த்தேன். அதற்கு நேர் மாறாக, உங்களுக்குத் தெரிந்த விஷயங்களையே எனக்கு மறைக்கிறீர்கள். ஒவ்வொருவரும் ஏதோ ஒன்றை ஒளிக்கிறீர்கள் என்று எனக்குப் படுகிறது."

திலகவதி தலையைக் குனிந்துகொண்டாள்; அண்ணாமலையும் தவசுப்பிள்ளையும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள். மதுரநாயகம் சந்துருவிடம் கண்டிப்பான குரலில், "நீங்கள் ஆரம்ப முதலே எல்லாரையும் சந்தேகப் படுவதன் விளைவுதான் அது..." என்றார்.

"உங்களைப் பற்றி எனக்குச் சந்தேகமேகிடையாது!" என்றான் சந்துரு பளிச்சென்று.

"சந்தேகம் இல்லையென்றால், தாராளமாகக் கூறி விடுங்கள்...குற்றம் சாட்டி விடுங்கள்! நானே இங்கே நடக்கிறதற்கெல்லாம் காரணம் என்றும் சொல்லி விடுங்கள்... ஆனால், நீங்கள் சாட்டும் குற்றம் ஒவ்வொன்றையும் ருசுப்பிக்க வேண்டும்..."

சந்துரு கண்ணை மூடிக் கொண்டான்.

"எந்தக் காரியத்தை எடுத்துக் கொண்டாலும், கண்டு உணர முயன்று உழைத்துக் கடைசியில் ஸ்தாபிக்க எனக்குத் தைரியம் உண்டு. இந்[illegible]ய

அதற்குமேல் அவன் பேசவில்[illegible] மூடிக் கொண்டான். பளபளவென்று ஜன்னல் வழியே ஒரு

29/05/2011 1

பண்டம் பறந்து வந்தது. சந்துருவுக்கும் மதுரநாயகத்துக்கும் நடுவில் 'டொக்' என்ற சப்தத்துடன் அது பாய்ந்து சுவரில் பதிந்தபடி நின்றது! ஜன்னலுக்கு வெளியே ஒரு முகம் அவசரமாகத் தோன்றி மறைவதைச் சந்துரு மட்டுமே பார்த்தான்.

அங்கிருந்தவர்கள் எல்லாருமே ஓர் அதிர்ச்சி அடைந்தார்கள். அறைக்கு வெளியே இருந்த அந்தகாரத்தில் யாரோ ஒருவன் தோன்றியிருக்கிறான். குறி பார்த்துக் கத்தி ஒன்றைக் கடும் வேகத்தில் உள்ளே வீசி விட்டான். அதுதான் சுவரில் பாய்ந்துவிட்டது! யார்அவன்? எத்தனை பெரிய ஆபத்து அது? திலகவதியும் இந்திராவும் மூர்ச்சை அடையும் நிலைக்கு வந்து விட்டார்கள்.

மதுரநாயகத்தின் முகத்தில் பயம் தோன்றியது. "சந்துரு! இரண்டே அங்குலம் தவறியிருந்தால், உமது மண்டை போயிருக்கும்!" என்றார்.

சந்துரு வெறுமனே சிரித்தான். சிறிதும் முகம் மாறாமல், "எனக்கு இது சகஜம்தான்; என்னைத் தீர்த்து விட நினைப்பவர்கள் எல்லாருமே இரண்டங்குலம் தவறி விடுகிறார்கள். அதைக் கண்டால்தான் எனக்குப் பிடிக்கவே இல்லை. சில சந்தர்ப்பங்களில் எதிரிகள் பயந்து கொண்டு எனக்குப் பக்கத்தில் இருப்பவரைத் தீர்த்து விட்டுப் போவது உண்டு. இந்த மாதிரி சமயங்களில் நான் ஒரு கப் காபி சாப்பிட்டு விடுவேன்!" என்றான்.

மதுரநாயகம் ஒரு பெருமூச்சு விட்டார். "இப்போது என்ன செய்யப் போகிறீர்கள்?" என்றார்.

"என்ன செய்வதா? அறைக்குள் இத்தனை பேருக்கு நடுவில், வெளிச்சத்தில் உட்கார்ந்திருக்கும் எனக்கே இத்தனை ஆபத்து என்றால், தோட்டத்தில் அலைந்து கொண்டிருக்கும் கணேசனுக்கு எத்தனை சங்கடங்கள் நேரலாம்! அவரைப் போய்ப் பார்க்க வேண்டும்..."



"தோட்டத்தில் யாருமே இல்லை ஸார்" என்றான் அண்ணாமலை.

மதுரநாயகம் தலையை ஆட்டினார்.

"அப்பப்பா! இன்று ஒரு ராத்திரிக்குள் இந்த வீட்டில் ஒரு மனிதனுக்குப் பயித்தியம் பிடித்துவிடும்! செங்கல்வராய பிள்ளையை நாம் தேடிக் கொண்டிருக்கிறபோது, கணேசனும் காணாமல் போனால்..."

"இரண்டு பேரையும் சேர்த்துத் தேடுகிறேன்; கண்டு பிடிக்கிறேன்; திலகவதிக்கு என் வாக்குறுதி இருக்கிறது. எப்படியேனும் அவள் புருஷனைக் கொண்டு வந்து சேர்க்கிறேன் என்று. கணேசனைக் காணோம் என்றால், இந்திராவுக்கும் என் வாக்குறுதி உண்டு..."

"தோட்டத்தில் தேடிப் பார்க்கலாம். என்னுடன் வருகிறீர்களா?" என்று கேட்டார் மதுரநாயகம்.

"நீங்கள் தேடுங்கள், அண்ணாமலையையும் அழைத்துக் கொண்டு போங்கள்... நான் என் அறையில் சென்று சிறிது நேரம் சிந்தனை செய்யப் போகிறேன்."

"கணேசனைப் பார்த்தால் நான் உங்களிடம்அழைத்து வரட்டுமா?"

"தேவை இராது. கணேசனை நீங்கள் கீழே பார்க்கப் போகிறதில்லை!" என்று கூறிவிட்டு, "இந்திரா! நீங்கள் சித்தியுடன் போய் உங்கள் அறையில் இருங்கள். எந்தக் காரணத்தைக் கொண்டும், பொழுது விடியும் வரையில் கதவைத் திறக்க வேண்டாம்!" என்றான்.

ஸ்திரீகளை அறையில் கொண்டு விட்டு சந்துரு மாடியில் தன் அறைக்கு ஏறினான். அண்ணாமலையும் மதுரநாயகமும் தோட்டத்திற்குச் சென்றார்கள். தவசுப்பிள்ளை தன் படுக்கையை நாடிக்கொண்டு சென்றான். அந்த அறையில் அந்தகாரம் சூழ்ந்துகொண்டது.

தனது அறைக்குச் சென்ற சந்துரு, கதவைத் தாழ்ப்பாள் போட்டு விட்டு,

29/05/2011 1

அருகிலே நகர்த்திக் கொண்டான். அதில் அமர்ந்து தோட்டத்தினுள் ஊன்றிக் கவனித்தான்.

சிறிது நேரத்தில், கவிந்திருந்த இருளையும் தாண்டி பங்களாவைச் சுற்றி இருந்த மோட்டார் பாதையைப் பார்க்கும் அளவு கண்கள் சக்தி பெற்றன. எங்கும் நிலவிய நிசப்தமும், கரு நிறத்தில் காட்சி தந்த மரம் செடிகளும், சற்றுமுன் நடந்த சம்பவங்களும் வேறு யாராக இருந்தாலும் உள்ளத்தில் திகிலை எழுப்பியிருக்கும். அந்த வீட்டில்தான் எத்தனை மர்மங்கள் அடங்கிக் கிடந்தன!

வைத்த கண் வாங்காமல் யாரையோ எதிர்பார்த்தவன் போல், வெறிச்சோடிக் கிடந்த அந்தப் பாதையையே கவனித்துக்கொண்டிருந்தான் சந்துரு. இருபது நிமிஷங்கள் சென்று விட்டன. இன்னமும் சந்துரு நகரவில்லை. காத்திருந்து பழக்கப்பட்ட உரம் பெற்ற நெஞ்சாகையால், சற்றும் சளைக்காமல் பொறுமை இழக்காமல், அப்படி இருக்க முடிந்தது.

மெல்லிய சப்தம்தான்; செடிகள் ஆடுவது போன்ற சிறு சலசலப்பு சப்தம் அவன் காதை எட்டியது. அந்தச் சமயம் பார்த்துப் பாதையில் நடந்து வந்து கொண்டிருந்தார் மதுரநாயகம். அவர் மட்டுமே வந்தார்; கூட அண்ணாமலை இல்லை.

செடிகள் ஆடின இடத்திற்கு வந்து, மெல்லத்தாண்டியும் இருப்பார்; செடிகளை விலக்கிக் கொண்டு, ஆஜானுபாகுவாக ஓர் உருவம் வெளிப்பட்டது. பூனை போல் அடிவைத்து அவரைப் பின்பற்றியது. எந்த க்ஷணமும் அவர் மேல் பாய்ந்து, மென்னியை இறுகப் பிடித்து விடலாம். ஆனால் எதிர்பாராத விதமாக ஒரு உலர்ந்த சருகின் மேல் அவன் கால் வைத்திருக்க வேண்டும்; மதுரநாயகம் மதுகணம் மின்னல் வேகத்தில் திரும்பி விட்டார். பின்னால் நிற்கும் உருவத்தைப் பார்த்ததும் "அட நீயா!" என்றார் பிரமித்து.

"நானேதான்!" என்று பதில் கொடுத்தது அந்த உருவம்!



மதுரநாயகம் காத்திருக்கவில்லை. தம்மைவிட உயரமும் பருமனும் உள்ள ஆளைச் சமாளிக்க, அவர் சட்டென்று குனிந்து, அவன் வயிற்றில் வேகமாக முட்டினார். இதை அவன் எதிர்பார்த்திருக்க முடியாதாகையால், நிலைகலங்கியிருக்க வேண்டும். அதே பிடியில் தாவி, கழுத்தைச் சுற்றி ஒரு கையைக் கொடுத்து அவனைக் கீழே சாய்க்க முயன்றார்; சந்துரு அவருடைய பலத்தையும் தைரியத்தையும் வியந்து கொண்டிருக்கும்போதே, மற்றவனும் சமாளித்து விட்டான். இருவரும் இப்போது கீழே விழுந்து புரண்டார்கள். ஒருவர் மற்றவர் மென்னியை நெரிக்க முயன்று பார்த்தார்கள். கண்ணை மூடிக்கொண்டு ஒருவரையொருவர் தாக்கிக் கொண்டார்கள். 'தப், திப்' என்று அடிகள் பொழிந்தன; குத்துகள் சொரிந்தன. இருவருக்கும் ஒரே லட்சியம்—ஒருவரை மற்றவர் அங்கேயே தீர்த்துவிடுவது என்ற பிடிவாதம்.

முடிவு என்ன ஆகும் என்று சந்துரு தீர்மானம் செய்வதற்குள், கீழே விழுந்தவன் மேல் மதுரநாயகம் உட்கார்ந்திருந்தார். மேலும் சந்தேகத்துக்கு நான்கு குத்துகளைப் பரிமாறிவிட்டு, மேல் மூச்சு வாங்க எழுந்து நின்று, அசைவற்றுக் கிடந்த அந்த உருவத்தைத் நோக்கினார். அதே சமயம் வெளியே அரவம் கேட்கிறதா என்று அவர் செவிகள் ஜரூராக இருந்தன.

இரண்டு நிமிஷங்கள் இப்படி...மறுபடி மதுரநாயகம் சுறுசுறுப்பு அடைந்துவிட்டார்! மூர்ச்சையாகக் கிடந்த உருவத்தின் கைகளுக்கு அடியில் தன் கைகளைக் கொடுத்துச் சரசரவென்று இழுத்துக்கொண்டு போய், மீண்டும் செடி மறைவுக்குள் தள்ளினார்; உடன் தானும் மறைந்து கொண்டார்.

வழியில் கிடந்த கைக்குட்[illegible] என்ற யோசனையை அவர் [illegible] அந்த வழியே அண்ணாமலை வந்தான், சுற்று முற்றும் பார்த்

29/05/2011 12

தான். கைக்குட்டையை எடுத்துக் கண்ணெதிரில் பிரித்துப் பார்த்தான்.

சந்துரு நாற்காலியைத் தள்ளிவிட்டு, அங்கிருந்து அவசரமாக எழுந்தான். அறைக் கதவை திறந்து, வேகமாக மாடிப் படியில் இறங்கினான். சுமார் பதினைந்து படிகள் இறங்கி இருப்பான். அதற்குள் அந்தக் காம்பவுண்டில் எங்கேயோ 'டுமீல் டுமீல்' என்று இரண்டு வேட்டுகள் தீர்ந்தன. அந்தப் பயங்கர ஒலி பரவி எல்லா இதயத்திலும் ஓர் அதிர்ச்சியை உண்டாக்கியது.

சந்துருவும் ஒரு நிமிஷம் நின்று விட்டான். பிறகு, மடமடவென்று படிகளில் இறங்கினான்.

# சங்கரனுக்கு ஏற்பட்ட விபத்துகள்

ஒவ்வொருவருக்கு ஒவ்வொருவிதமாக அதிர்ஷ்டங்கள் வாழ்க்கையில் வாய்ப்பது உண்டு. ஒருவருக்கு நல்ல உத்தியோகம் கிடைத்திருக்கும்; ஒருவருக்கு ரூபவதியான மனைவி கிட்டியிருப்பாள்; ஒருவருக்கு பணத்தை வாரிக் கொடுக்கும் மாமனார் வாய்த்திருப்பார்; ஒருவருக்குப் போகிற இடமெல்லாம் மரியாதைகள் நடந்தபடி இருக்கும் ஒருவருக்கு நிலபுலன்கள் இருக்கும்; மற்றொருவருக்கு வாசாலகம் இருக்கும். ஜீவிதத்தில் வேறெந்த விதமான குறைபாடுகள் எத்தனை ஏற்பட்டிருந்தாலும்; ஏதேனும் இப்படி ஒரு அதிர்ஷ்டத்தை ஞாபகப்படுத்திக் கொள்வது காலத்தை ஓட்டுவதற்குப் பெரிதும் உதவுகிறது.

தாமோதரனின் அதிர்ஷ்டம் என்னவென்றால் அவனுக்கு வாய்த்த மைத்துனன் சங்கரன்தான். தனது தமக்கை புருஷனிடம் ஆயிரம் குற்றம் குறைகளை அவன் கண்டான். எனினும், அவனிடம் சங்கரன் வைத்திருந்த விசுவாசம் எள்ளளவும் குறைந்ததில்லை.



தாமோதரன் அவனை வாயில் வந்தபடி திட்டியிருக்கிறான். இரண்டொரு தடவை மென்னியைப் பிடித்துத் தள்ளியிருக்கிறான். முகத்தில் கதவை அறைந்து சாத்தியிருக்கிறான்; இவை எதுவும் அவனுடைய பக்தியைக் குன்றச் செய்ததில்லை. எந்த ஆபத்தானாலும், அவனுக்காக உயிரைக் கொடுக்கச் சித்தமாக இருந்தான்; அவனுடைய நலனே தன்னுடைய நலன் என்று திடமாகக் கருதியிருந்தான்.

முதல் நாள் இரவு தாமோதரன் ஒரு தோல் பையுடன் வந்து, நடந்த விஷயங்களைச் சொன்னதும், சங்கரன் கண்களை அகல விரித்தான். ''அத்தான்! இதை நீங்கள் கையில் எடுத்துக் கொண்டா அலைந்திருக்கீங்க? யாரேனும் பார்த்திருந்தால்—'' என்று கேட்டான்.

''பார்த்திருந்தால் என்ன! ஒன்றும் நடந்திருக்காது! இதுபோல் லட்சம் பைகள் இந்தச் சென்னைப் பட்டணத்தில் வைத்திருக்கிறார்கள்...'' என்றான் தாமோதரன்

''இருந்தாலும், இதன் சொந்தக்காரனுக்கு அடையாளம் ஏதேனும் தெரியாமல் போய் விடுமா? பாருங்க! அதோ நீளமாக ஒரு கோடு குறுக்கே விழுந்திருக்கிறதே!''

''அட சும்மா இருப்பா! இதை எங்கே வைக்கலாம் என்று நான் மூளையைக் குழப்பிக் கொண்டிருக்கிறேன்.''

''மூளைக்கு அதிக வேலை கொடுக்காதீங்க! ரொம்ப சாதாரண இடம்தான். ரொம்ப ஜாக்கிரதையாகவும் இருக்கும்! நீங்க பீரோவிலேதானே வைக்கலாம் என்று இப்போ யோசிக்கிறீங்க!''

''ஆமாம்... வேறே இடம்?''

''அத்தான் கெட்டிக்காரரு; ஆனால் சில சமயங்களிலே அவருக்குத் தவறான யோசனைகள்தான் வரும். பாருங்கள்; இன்னிக்கு இராத்[illegible] வ[illegible] முதலில் என்னசெய்வான்? பீரோவைத்தான் உடைப்பான்.

29/05/2011 13:0

அவன் கையில் முதல் முதலாக அகப்படுவதும் இந்தப் பையாகத்தான் இருக்கும்...இல்லை. போலீஸ்காரங்களே ஒரு 'ஸெர்ச்' போடறோம் என்று வராங்க...''

''சீ! வாயை மூடு! போலீஸாம்! இங்கே கால் வைச்சுடு வாங்களா! அதுவரை நான் தூக்கம் போட்டுக்கொண்டிருப் பேனா! உன்னோடு பேசிப் பிரயோசனம் இல்லை...விடு.''

''அத்தான்! அதைச் சும்மா மேஜை மேலே போட்டு வைங்க...ஒருத்தரும் திரும்பிக்கூடப் பார்க்க மாட்டாங்க!''

''ஏ! சும்மா இரு! உன்னைக் கேட்கிறபோது மட்டும் பேசு!''

''எங்கே வேணா வையுங்க, அத்தான்! பீரோவிலே மட்டும் வாணாம்!'' என்றான்சங்கரன் சிறிதும் அஞ்சாமல்

''சரி; உன் வேலையைப் பார்த்துக் கொண்டு போ!''

''என்னைக் கேட்டால் அதோ உயர மாட்டியிருக்கிற படத்துக்குப் பின்னால் நான் வைப்பேன்!'' என்றான் சங்கரன்.

தாமோதரனுக்குத் தன் மைத்துனன் சொல்லுவதில் அனுபவ பூர்வமான உண்மை இருக்கிறதென்று புரிந்தது. எப்படியும் அந்தப் பையைத் திருப்பித் தர வேண்டியிருக்கும் என்று அவன் அறிவான். அவனை எதற்காகத் தேர்ந்தெடுத்து ஓர் ஆசாமி அனுப்பினான் என்பது மர்மமாக இருப்பினும், ஏதோ ஆழ்ந்த விஷயம் அதில் மறைந்திருக்கிறதென்பதை அவன் உணர்ந்து கொண்டிருந்தான். எப்படியும் அந்தப் பைக்காக ஒரு தகராறு நடக்காமல் விடாது என்று உள்ளுணர்வு உணர்த்தியது. ரயிலடியில் அவன் கண்ட இருவரும்லகுவில் விட்டுச் செல்பவர்கள் இல்லை. விடாக் கண்டர்கள் என்று முகத்தில் எழுதி ஒட்டியிருந்தது! சங்கரனைக் கொண்டே பையைப் படத்தின் பின்னால் ஒளித்து வைக்கச் செய்தான் தாமோதரன். அன்றிரவு அவன் அறையிலிருந்த பீரோவை யாரோ திறந்து தேடியிருந்தார்கள். சங்கரன் வாக்கு



அப்படிப் பலித்திருந்தது. தாமோதரன் போலீஸில் போய் தெரிவித்ததுகூட ஓரளவு சங்கரன் பிடிவாதத்தினால் தான்.

''உங்களுக்கு இதெல்லாம் தெரியாது, அத்தான்! நீங்கள் ஜாக்கிரதையாக இல்லையோ ஆபத்து வந்து நிற்கும். இனிமேல் உங்களைத் தனியாக விடவே கூடாது என்று எனக்குத் தோன்றுகிறது'' என்று அன்பையும் கலந்து எச்சரிக்கையாகப் பேசினான் அவன்.

அதற்குத் தகுந்தாற்போல் அன்று டாக்ஸியில் தாமோதரத்தைத் துரத்திக் கொண்டு பழைய ஆசாமி வந்ததும், கடுமையாகக் கேட்டதும், 'கெட்டுப் போய் விட்டது என்று சொல்லித் தப்பித்துக் கொள்ள நினைக் காதே' என்று பயமுறுத்தியதும் நடந்த சம்பவங்கள். அப்போதேகூட அவன் 'பை'யைக் கொடுத்திருப்பான். அதில் இருப்பது என்ன என்று சாவகாசமாக உட்கார்ந்து பார்த்து அதற்குத் தகுந்தவெகுமதியைக் கறந்து வாங்கலா மென்ற ஆசை அவனுக்கு அப்போது பிறந்து விட்டது. மேலும் அவன் 'எத்தனை பொல்லாதவன்' என்பதையும் பரீட்சித்துப் பார்த்துக் கொள்ளலாம் அல்லவா?

மாலையில் சங்கரன் தன் தமக்கையுடன் சினிமாவுக்குச் சென்றுவிட்டான். தானும் போவதா வேண்டாமா என்று வெகுநேரம் தாமோதரன் யோசனை செய்தான்.

'போய்த்தான் வரலாமே' என்று புறப்பட்டான். இரண்டு தெருக்கள் திரும்பிய பின், மெள்ள ஓர் எண்ணம் தோன்றியது. 'சங்கரனும் இல்லை; வேறு யாரும் இல்லை. இப்போது அந்தப் பையை எடுத்து வைத்துக் கொண்டு குடைந்தால் என்ன?'

தெருவின் முக்கத்திலேயே நின்று யோசித்தான்; பத்து நிமிஷங்களுக்குப் பிறகு மருந்[illegible]ம் எண்ணத்தைக் கைவிட்டு, மெள்ள [illegible] திரும்பினான்.

29/05/2011 1

நான்கு வீடுகளுக்கு அப்பால் வரும்போதே மாடியில் விளக்கு எரிவதைக் கவனித்து விட்டான் தாமோதரன். 'அதற்குள் திரும்பியிருக்க மாட்டானே சங்கரன். அப்படியானால் பூட்டின கதவைத் திறப்பவன் யார்? துணிச்சல் மிகுந்த ஆளாகத்தான் இருக்க வேண்டும்.'

மாடிப்படியின் அடியில் ஒரு கள்ளிப் பெட்டி கிடந்தது. அதில் அநேக சிறு ஆயுதங்கள் இருந்தன. சிறு உளிகள், ரம்பங்கள், சுத்தியல்கள் முதலியன. அவைகளில் துழாவி ஒரு கத்தியைப் பொறுக்கிக்கொண்டு பூனை போல் மேலே சென்றான். உள்ளே நடக்கும் சம்பாஷணையை நின்று உற்றுக் கேட்டான். அவன் திரும்பியதும் எத்தனை புத்திசாலித்தனம் என்பதை உணர்ந்து கொண்டதுடன் நாராயணன் வெளியே செல்லு முன்பே தான் பிரவேசித்து விடுவதே விவேகம் என்றும் முடிவு செய்தான்.

அப்புறம்தான் சந்துருவிடம் விவரித்தபடி அந்த அறையில் சண்டை நடந்தது. தாமோதரன் தலையில்படம் அறுந்து விழுந்ததும் குள்ளன் தோல்பையுடன் கம்பி நீட்டியதும், அவனுக்குக் கெட்ட கனாக்கள் போலவே தோன்றின. நாராயணன் சென்ற பிறகு நாற்காலியில் உட்கார்ந்து மேற்கொண்டு என்ன செய்யலாம் என்று அறியாது குழம்பினான். சங்கரன் மேல் அவனுக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. "அந்த முட்டாள் பேச்சைக் கேட்டுக் கொண்டுதானே படத்தின் பின்னால் பையை ஒளித்தேன். அங்கு அது இருந்ததால்தானே இவ்வளவு லகுவாக அது எதிரி கையில் சிக்கி விட்டது. சீச்சீ!" என்று வெறுத்துக் கொண்டான்.

பிறகு கோபத்தில் முகம் சிவந்தது. "அதுதான் போகட்டும்! இவனுக்குச் சினிமா என்ன வேண்டிக் கிடக்கிறது; இன்றைக்குப் பார்க்காவிட்டால் தலை முழுகிப் போய்விடுமோ! வரட்டும் சொல்கிறேன்! இன்றோடு தொலைத்துவிடுகிறேன்" என்றுகறுவிக்கொண்டிருந்தான்.

ஃ ஃ ஃ



சினிமாவில் இடைவேளை விட்ட சமயம் சங்கரன் தன் தமக்கையிடம் இதோ வருகிறேன் என்று ஜாடை காட்டிவிட்டு, வெளியே வந்தான். அவன் மனத்திலும் ஒரு வேதனை உறுத்திக் கொண்டிருந்தது. அன்று தாமோதரனைத் தேடி வந்த ஆசாமி நன்றாக உடுத்தி கண்யமானவன் போல் தோற்றம் அளித்தான் எனினும், மிகவும் கெட்டவன் என்ற அபிப்பிராயமே சங்கரனுக்கு ஏற்பட்டிருந்தது.

'எதற்காக இந்த அத்தான் முட்டாள்தனமானவேலைகளையெல்லாம் ஏற்றுக் கொள்ளவேண்டும்?' என்று மனம் நொந்தான். 'இப்போது ஏதேனும் புதிய அபாயத்தில் சிக்கிக் கொண்டு திண்டாடுகிறாரோ! நான் தனியே விட்டு வந்தது தவறா! யாரேனும் கத்தியால் குத்தி விட்டால்? மென்னியை நெரித்துவிட்டால்! குண்டுக்கட்டாக தூக்கிக் கொண்டு போய் ஒரு பாழுங் கிணற்றில் வீசி விட்டால்—' இப்படியெல்லாம் எண்ணிஎண்ணி மனம் சஞ்சலம் அடைந்திருந்தான். படம் ஓடுவதே அவன் மனத்தில் பதியவில்லை.

உப்பு சப்பற்ற படம் அது. ஒரு காதலி அழுது கொண்டிருக்க, காதலன் அவளைச் சமாதானம் செய்கிறான். இருவர் முகங்களும் பார்க்க யோக்யதை இல்லை. சம்பாஷணையில் இருந்த விரசமும் நடிப்பு என்று நினைத்து அவர்கள் செய்த கோணங்கிகளும், இதைக் கண்டு ரசித்துக் கைதட்டிச் சிரித்த அப்பாவி மக்களும்—எழுந்து வெளியே வந்துவிடுவோமா என்ற அருவருப்பையே உண்டாக்கின சங்கரனுக்கு. இடைவேளையை ஒரு வரப்பிரசாதமாக ஏற்று, தியேட்டருக்கு வெளியே இருந்த வெற்றிலை பாக்குக் கடையை நோக்கி வந்தான்.

வந்தவன் சட்டென்று பின்வாங்கினான். அவனுக்கு முன்னால் இருவர் அந்தக் கடையின் வெளிச்சத்தில் போய் நின்றார்கள். உயரமான ஆள்; [illegible] ஆள்; உயரமான ஆளை அவன் எங் [illegible]. சமீபத்தில் பார்த்தானே? அட எங்கே? சங்கரன் ஒரு மர

நிழலில் ஒதுங்கி யோசனை செய்தான். ஆ! ஞாபகம் வந்து விட்டது. அன்று அவன் சினிமாவுக்கு விட்டை விட்டுக் கிளம்பி வந்தபோது, அந்தத் தெருவிலேயே எதிர்ச்சாரி வீடு ஒன்றின் வாசலில் நின்றான். அவனைப் பார்த்த கண்கள் குள்ளன்மீது தயங்கின. அவன் விலாவுடன் அழுக்கியபடி ஒரு பொருளை வைத்திருந்தான். ஹா! அப்படியும் இருக்குமா?

ஒரு மர நிழலிலிருந்து அடுத்த மர நிழலுக்குத் தாவி னான் சங்கரன். இப்போது அது நன்றாகத் தெரிந்தது. அது ஒரு தோல் பை என்பது மட்டும் அல்ல; அவன் அதில் எதிர்பார்த்த கீறலும் இருந்தது. அது எப்படி இவர்கள் கைக்கு மாறியது? அத்தான் தாமோதரன் நிச்சயம் கொடுத்திருக்க மாட்டார். அவரை அடித்துப் பிடுங்கி யிருக்க வேண்டும்; அல்லது அவர் இல்லாத சமயம் கொள்ளையடித்திருக்க வேண்டும். எத்தனையோ பத்திர மாக ஒளித்து வைத்தும்கூட எடுத்துவிட்ட எமகாதகர் களான இவர்கள் யாராக இருக்கலாம்?

எண்ணங்கள் மீண்டும் சுழன்றன. அத்தான் நேற்று ரயிலடியில் கண்டதாகச் சொன்ன இருவரும் இவர் களாகவே இருக்கலாமோ? அவர்களுடைய லட்சியமும் இந்தப் பைதானே?

சங்கரன் வேடிக்கை பார்த்துக் கொண்டு நிற்கவும் இல்லை; ஹேஷ்யங்கள் செய்துகொண்டு பொழுது போக்க வும் இல்லை. சோடா சாப்பிட்டு, பின் மலைவாழைப் பழங்களை விலை பேசி, வெற்றிலை கேட்டுக்கொண்டு அவர்கள் நின்றார்கள். அங்கிருந்து நகர்ந்துவிட்டால், மீண்டும் பையுடன் அவர்களைப் பார்ப்பது சங்கடம் ஆயிற்றே!

திரும்ப சினிமாக் கொட்டகைக்குள் ஓடினான். தன் தமக்கையின் காதோடு, 'எனக்கு மிக அவசர வேலை இருக் கிறது. படம் முடிந்த பிறகு நீ ரிக்ஷா அமர்த்திக்கொண்டு



வீட்டுக்குப் போய்க்கொள். நான் முன்னோ பின்னோ வந்து சேருகிறேன். அத்தானிடம் மட்டும் 'அவர் காரிய மாகத்தான் போயிருக்கிறேன்' என்று சொல். கோபித்துக் கொள்ளப் போகிறார்' என்றான். அவள் பதிலைக் காதில் வாங்காமலேயே வெளியே ஓட்டமாக வந்துவிட்டான்.

அவன் வந்த சமயம் வெற்றிலை பாக்குக் கடைக்கு வெளியில் யாருமே இல்லை. எங்கோ சென்றுவிட்டார்கள் அவர்கள் இருவரும். சங்கரன் கடைக்காரனிடம் விசாரித் தான். "நான் கவனிக்கவில்லை...ஏன் உனக்குத் துட்டுப் பாக்கியோ?" என்று கேட்டான் அவன்.

"ஆமாம்..." என்று மழுப்பிக் கொண்டே சங்கரன் உத்தேசமாக ஒரு பக்கம் ஓடினான். இரண்டு பர்லாங் ஓடிய பின் அதிர்ஷ்டவசமாக அவர்களைப் பிடித்தான்; அப்புறம்தான் மனத்தில் அமைதி ஏற்பட்டது. இனி மெள்ள நடக்கலாம். வெகு அருகில் நெருங்கின சமயம் அவர்கள் பேச்சுகள்கூட இரண்டொன்று காது வரை எட்டியது. குள்ளனைப் பெரியவன் 'ஏழு' என்று அழைத் தான். 'ஏழுமலை'யின் சுருக்கமாக இருக்கலாம். பெரிய வனை குள்ளன் 'ரத்தினம்' என்று கூப்பிட்டான்.

இருவரும் நடந்து கொண்டிருந்தார்கள். தங்களை யாரும் பின் தொடருவார்கள் என்ற சந்தேகமே அவர் களுக்கு இல்லையாகையாலோ என்னவோ அலட்சியமாகச் சென்றார்கள்; சங்கரனுக்கும் சங்கடம் இல்லாமல் இருந் தது. ஆனால் அவர்கள் எத்தனை தூரம்தான் நடக்கப் போகிறார்கள்? பல பஸ்கள் அவர்களைத் தாண்டிச் சென்றன. ஒன்றிலாவது அவர்கள் ஏறுகிறதாக இல்லை. பெரிய பாலமும் வந்தது. அதிலும் அவர்கள் நடந்து சென்றார்கள். பத்தே கஜம் பின்னால் சங்கரன் பின் தொடர்ந்து கொண்டிருந்தான். அவன் பொறுமையைச் சோதிக்கவே அவர்கள் அப்படிச் செய்கிறார்களா? பின் னால் 'கிர்ர்ர்' என்று சப்தமிட்[illegible]

29/05/2011 13:

ரிக்ஷா' வந்தது. அவனைத் தாண்டிக்கொண்டு அவர்களை நெருங்கியது; அவர்கள் இருவரும் அப்போதுதான் சங்கரனுக்குத் தூக்கிவாரிப் போடும்படி ஒரு காரியம் செய்தார்கள். அந்த ஆட்டோ ரிக்ஷாவில் பக்கத்துக்கு ஒருவராக இருவரும் ஏறிக்கொண்டுவிட்டார்கள். 'கிர்ர்' என்று இன்னும் பயங்கர சப்தத்தை எழுப்பிக்கொண்டு அது ஓடத் தொடங்கியது

பெரியதொரு ஏமாற்றத்தின் பிடியில் சிக்கித் திணறினான் சங்கரன். எத்தனையோ முன்னெச்சரிக்கைகளுக்குப் பின்பும் அவர்களைத் தப்பவிடுவதென்றால்! ரஸ்தா நீண்டு ஓடியது; வெகு தொலைவில் ஆட்டோ ரிக்ஷாவின்சிவப்பு விளக்கு வர வரச் சிறிதாகி மறைவதைக் கண்டு சங்கரன் பெருமூச்சு விட்டான்; அவன் வயிற்றில் வேதனை எடுத்தது. எடுத்த காரியத்தைக் கைவிட்டு இனி திரும்ப வேண்டியதுதானா?

அவன் நின்ற இடத்திலிருந்து நூறு கஜம் பின்னால் ஒரு 'பஸ் ஸ்டாப்' இருந்தது. அதை நோக்கி இரண்டு பஸ்கள் வந்து கொண்டிருந்தன. 'வந்ததுதான் வந்தோம் கடைசி வரையும் பார்த்துவிடலாம்' என்றதொரு தீர்மானத்துடன், பின்னோக்கி விரைந்து ஓடி, அப்போதே புறப்பட்டுக் கொண்டிருந்த ஒரு பஸ்ஸில் தாவி ஏறினான் சங்கரன். பன்னிரண்டு நிமிஷங்களில் அது தியாகராஜ நகரின் கோடியில் போய் நின்றது. எல்லாப் பிரயாணிகளுடன் சங்கரனும் இறங்கினான்.

'கிர்ர்ர்' என்ற சப்தம் அருகிலே வந்தது. ஏதோ ஒரு ஆட்டோ ரிக்ஷா நெருங்கிக் கொண்டிருந்தது. காலிவண்டி அது. ஒருவேளை அவர்களை விட்டு விட்டுத் திரும்பும் அதே வண்டியாக இருந்தாலும் இருக்குமா? ஆவலுடன் அதை "ஹை! ஆட்டோ ரிக்ஷா! இப்படி வா!" என்று அழைத்தான்.

"நம்ம வரமுடியாது சாமி! புரசைவாக்கம் போகிற வண்டி!"



சங்கரன் அருகிலே சென்றுவிட்டான்: "நான் வண்டியில் வருவதற்குக் கேட்கவில்லை. இப்போது இரண்டு ஆசாமிகளைக் கொண்டு விட்டாய் அல்லவா?"

"ஆமாம்... அதுபத்தி உனக்கு என்ன?"

"அவர்களை எங்கே கொண்டு விட்டாய்?"

"கையை எடு சாமி, வண்டிமேலேருந்து! இங்கே உன் கேள்விக்கெல்லாம் பதில் சொல்லி நிப்பாட்டிக்கிட்டிருந்தா என்ன ஆவுது! ஒரு நாள் வாடகை ஆறு ரூவாயாச்சே!"

சங்கரன் கையில் ஒரு முழு வெள்ளி ரூபாய் தென்பட்டது; அது ஆட்டோ ரிக்ஷா டிரைவரின் கைக்கும் மாறி விட்டது. "எனக்காக ஒரு நிமிஷம் நின்று சொல் அவர்கள் எங்கே போனார்கள்?"

"நம்மைப் போலீசு கிலிசிலே மாட்டி விடமாட்டியே?"

"சேச்சே! உன்னை எனக்குத் தெரியவேதெரியாதே!"

"சாட்சி சம்மன்னு கூப்பிட்டியானா, என் தொழில் போயிடும். ஒரு நாளு பூரா விழுந்து விழுந்து ஓட்டினாலும் இரண்டு ரூபா கிடைக்கல்லே..."

"அவங்க ரெண்டு பேரும் நம்ம சொந்தக்காரங்கதான்! சும்மாச் சொல்லு! ஒண்ணும் வராது!"

"அதோ வலக்கையிலே மூணாம்தெரு இருக்குதில்லே, அங்கே ரூம்கள் கட்டி வாடகைக்கு விடறாங்க. அங்கே இறங்கியிருக்கிறாங்க... சீக்கிரம் போனா பிடிக்கலாம். சாப்பாட்டுக்குத் திரும்பணும்னு பேசிக் கொண்டு போனாங்க!"

"நீ போ இனிமேல்! பயந்த மாதிரியாக இருக்கிறாய்!" என்றான் சங்கரன் எகத்தாளமாக. 'ஆட்டோ'வின் மேல் வைத்திருந்த கையை அவசரமாக எடுத்துக் கொண்டு, 'விடு உன் வண்டியை" என்றபடி எதிர்த் திசையில் நடந்தான்.

ஆட்டோ ரிக்ஷாவின் [illegible] உண்மைதான். குறிப்பிட்ட தெருவின் [illegible] 'ப' அறைகளுடன் மாளிகை போன்றதொரு கட்டடம்

29/05/2011

வடிவத்தில் இருந்தது. பலவற்றில் விளக்குகள் எரிந்து கொண்டிருந்தன. மாடி அறைகளைச் சுற்றி வெளிப்புறத்தில் ஒரு வராந்தா நீளமாக ஓடியது. அதில் காற்றுக்காக வந்து நிற்பவர்களை அண்ணாந்து பார்த்தான் சங்கரன். பல பாஷைகள், பழக்கவழக்கங்கள் உள்ளவர்களும் குடி இருந்தார்கள் என்று நொடியில் ஊகித்தான். சிலதினங்கள் வந்து தங்குவதற்கும், நகரில் அலுவல்கள் ஆனதும் திரும்புவதற்கும் வசதியாக அந்த அறைகள் ஏற்பட்டவை.

இத்தனை அறைகளில் மாடியிலோ கீழேயோ, எதற்குள் அவர்கள் சென்றார்களோ? இன்னும் வெளியேறி இருக்க முடியாது என்பது மட்டும் நிச்சயமாக அவனுக்குப் பட்டது. மாடிப் படியை அடைந்ததும், ஏறுவதைப் பற்றி மனத்துக்குள் சர்ச்சை செய்து கொண்டு நின்றான். மாடியில் சுற்றி வரும்போது, அவர்கள் வெளியேறி விட்டால்! அப்போதே படிகளில் இருவர் இறங்கி வந்தார்கள். குரலிலிருந்தே, தான் எதிர்பார்த்து வந்தவர்கள்என்று தெரிந்து, படிக்கட்டு நிழலில் ஒதுங்கியபடி கவனித்தான். அதிர்ஷ்ட தேவதைக்கு மனசார ஒரு கும்பிடு போட்டான்.

படிக்கட்டுக்கு அருகிலே ஆபீஸ் அறை. அதன்வெளியே நின்று, உள்ளே எழுதிக் கொண்டிருந்த குமாஸ்தாவின் மேஜை மீது சாவியைப் போட்டான் குள்ளன். "ஏ! பதினேழாம் நம்பர்... சாப்பிடப் போகிறோம்... ஜாக்கிரதை..." என்றான். வெளியே செல்லும்போது அங்கே சாவியை ஆபீஸ் அறையில் கொடுத்துவிட்டுப் போவது ஒரு வழக்கம் உண்டு போலும்.

இரண்டு பேரும் வெளியே செல்வதற்குள் சங்கரன் மனத்தில் முதல் தரமான யோசனை உதயமாகிவிட்டது. சரசரவென்று ஆபீஸ் அறைக்குள் சென்றான். குமாஸ்தா தலை குனிந்து இன்னும் எழுதிக் கொண்டேயிருந்தான்.

"சார்! எனக்கு மாடியில் ஒரு அறை தேவை..." என்றான்.



"அறை ஏதும் காலியில்லை. நாளன்றைக்கி வா!"—
தலையை நிமிராமலே குமாஸ்தா பதில் சொன்னான.
"ஒன்று இருக்கிறது ஸார்! 23-ம் நம்பர்..." உத்தேச
மாக ஒரு 'அடி' இது. சங்கரன் கை மேஜை மீது கிடந்த
சாவியுடன் விளையாடிக் கொண்டிருந்தது.
"சொன்னால் சொன்னதுதான்... அது 'ரிசர்வ்' ஆகிப்
போனது...நாளன்றைக்கு வா!" குனிந்த தலை அப்படியே
இருந்தது.
"அதுவரை நான் எங்கே போய் நிற்கிறது? ஏற்
கெனவே அறை வைத்துக் கொண்டிருப்பவர் யாராவது
எனக்கு இடம் கொடுப்பார்களா?"—இப்போது சாவியால்
காதைக் குடைந்து கொண்டிருந்தான் சங்கரன்.
"அது நமக்குச் சொல்லத் தெரியாது. அது அவரவர்
இஷ்டம்... நான் சிபார்சு செய்ய முடியாது!"
"நான் முயற்சி செய்து பார்க்கிறேனே!" சாவியை
இடுப்பில் சொருகிக் கொண்டிருந்தான் சங்கரன்.

"அதற்கு ஆட்சேபம் சொல்ல முடியுமா?" அந்த
ஆசாமி தமிழன் இல்லை. முதல் தடவையாகத் தலையை
நிமிர்த்தி சங்கரனைப் பார்த்து இளித்தான். "மூழு ரூம்
தேவையானால் இங்கு 'ரிஸர்வ்' செய்துட்டுப் போங்க.
நாளன்னைக்குப் பொழுதுக்கு மேலே வந்தால் தரோம்!
ஒன்று இல்லே, ஒன்பது அறை தரோம்."
"வந்தனம். ஆனால், நான் மேலே போய் யாராவது
என்னை—"
"பேஷ்ஷா பார்க்கலாம். நாம் குறுக்கே நிற்க
மாட்டோம். இன்னும் மூன்று மணி நேரத்திற்கு இந்த
நாற்காலியை விட்டு அந்தாண்டை இந்தாண்டை நகர
முடியாது. ஆமா!"
சங்கரன் புத்திசாலி ஆகையால், படபடப்பு, உள்ளத்
துடிப்பு எதையும் காட்டிக் [illegible] அவனுக்கு
வேண்டிய சாவி கிடைத்துவி[illegible]

29/05/2011 13

இரண்டு பேரும் எங்கே சாப்பிடச் சென்று விட்டார்கள்; குறைந்தபட்சம் அரை மணியாவது பிடிக்கும். அவர்கள் திரும்ப தலையைச் சொறிந்து கொண்டு அங்கேயே நின்றான்; பிறகு வாசற்படியில் இரண்டுமூன்று நிமிஷங்கள் தயங்கினான்; அப்புறம் மாடிப்படி வரை வளர்ந்தான். ஆபீஸ் குமாஸ்தாவின் கண்ணுக்குத் தெரியாமல் திரும்பியதும், ஒரு குதி குதித்தான்; மூன்று படிகளுக்கு ஒரு காலாகத் தாவி மாடியை அடைந்தான்.

"17-ம் நம்பர் அறை மட்டும் அல்ல, அதன் இரு பக்கத்து அறைகளும் கூடப் பூட்டப்பட்டிருந்தன. சங்கரன் ஒருகால் ஓசையை எழுப்பினாலும் கூட, பக்கத்து அறைக்காரர்கள் சந்தேகப்பட்டு வருவார்கள் என்ற பயம் இல்லை. அதிர்ஷ்ட தேவதை சங்கரன் பக்கம் முற்றிலும் இருந்தது என்றே தோன்றியது.

ஒரே நொடியில் அறைக் கதவைத் திறந்து, பூட்டையும் கையில் எடுத்துக் கொண்டான். அறைக்குள் சென்றதும், கதவைக் கையோடு சாத்தினான். எந்த நிமிஷம் அரவம் கேட்டாலும் தப்பித்து ஓடத் தயாராக இருப்பதற்காக, மார்க்கம் தேடியவாறு அந்த அறையைச் சுற்றிக் கண்ணோட்டம் விட்டான்; அறை வாசற் கதவுக்கு நேர் எதிரே மற்றொரு கதவு. அதைப் பூட்டிருக்கவில்லை. வெறும் தாழ்ப்பாள் மட்டுமே போட்டிருந்தது. அறையில் ஒரே ஒரு கட்டில்; அதன் மீது மிக அழுக்கான ஒருமெத்தையும் தலையணையும், கீழே ஒரு 'ஹோல்டால்' விரித்தபடி இருந்தது; அதன் கயிறு பாதி சுற்றியும் சுற்றாமலும் கீழே கிடந்தது. ஒரு மண் கூஜா, பித்தளை டம்ளர்; கும்பலாகச் சில துணிகள்—

சங்கரன் பின்புறத்து வாசலின் கதவுகளில் ஒன்றைத் திறந்து வெளியே நோக்கினான். மூன்றடியில் ஒரு வராந்தாவும், இடுப்பு உயரத்தில் ஒரு கைப்பிடிச் சுவரும் தென்பட்டன. அப்பால் தோட்டமும், தோப்புகளும், தொலைவில் தார் ரஸ்தாவில் கார்கள் ஓடிக் கொண்டிருந்ததும் அங்கிருந்து தெரிந்தன. கதவை முன் போலவே சாத்திவிட்டு சங்கரன் தான் வந்த காரியத்தில் முனைந்தான்.



* * *

அரை மணி நேரம் சென்ற பின்பும் கூட சங்கரனால் வெற்றி காண முடியவில்லை; ஆனால் சிறிதும் தயங்காமல் வேலை செய்தான். அறை எங்கும் பார்த்து விட்டான்; டிரங்குப் பெட்டியிலிருந்து ஒவ்வொரு துணியாக எடுத்துப் போட்டுத் துழாவி விட்டான். அதன் அடியில் கள்ள அறை ஏதேனும் இருக்குமோ என்றும் தட்டிப் பார்த்துவிட்டான். ஏமாற்றம்! எங்கும் இல்லை, இல்லைதான். இப்படி ஒரு சந்தர்ப்பம் நேரும் என்று அவன் எதிர்பார்க்கவே இல்லை.

என்ன விந்தை இது! அவர்கள் இருவரும் அந்தப் பையுடன் நுழைந்திருக்கிறார்கள்; வெறும் கையுடன் வெளியேறியிருக்கிறார்கள். பின் அந்தப் பை மட்டும் எங்கே மாயமாக மறைந்து போயிருக்கும்?...

இப்போதுதான் அவனுக்கு ஒரு பீதி பிறந்தது. நேரமோ ஓடிக்கொண்டிருந்தது. எந்தச் சந்தர்ப்பத்திலும், சாப்பிடப் போனவர்கள் திரும்பி விடலாம். அவர்களிடம் அகப்பட்டுக் கொண்டால், என்ன வேண்டுமானாலும்செய்வார்கள் அவர்கள். கால்கள் வலித்தன; உள்ளத்துடன் கைகளும் சோர்ந்தன. தொப்பென்று மெத்தையில் உட்கார்ந்து, தலையணைமேல் சாய்ந்தான். மறு நிமிஷம் வாரிச் சுருட்டிக் கொண்டு எழுந்தான்.

தலையணையின் உறையைக் கழட்டி எறிந்து விட்டு, தையலின் மீது திருஷ்டியைத் திருப்பினான். ஆ! இத்தனை நேரம் ஏன் தோன்றவில்லை. இந்தத் தலையணையின் தையலைப் பிரித்து, பை[illegible] மறு[illegible] அவசரமாகத் தைத்திருக்கிறான் [illegible]. அவன் மூளையே மூளை!

29/05/2011 13:

இனி மூச்சுவிட அவகாசம் இல்லை. கீழே மண்டியிட்டு உட்கார்ந்து மளமளவென்று தையலைப் பிரித்தான்; பஞ்சோடு பஞ்சாக அந்தத் தோல்பையும் இருந்தது அதை வெளியே இழுத்த போது கீழெல்லாம் பஞ்சு உதிர்ந்தது. நாலாபுறமும் பறந்தது...இனி ஓட வேண்டும்...ஓட்டம்! ஓட்டம்!...

மெள்ள மெள்ள, ஒரு கரம் சர்ப்பம்போல் சங்கரன் கழுத்தை வளைத்துக் கொண்டு வந்தது. அவன் இடுப்பில் ஒரு முழங்கால் முட்டுக் கொடுத்ததையும் உணர்ந்தான். மறுகணம் அவன் முதுகில் 'பளிச்' சென்று ஒரு வலி எழுந்தது. முதுகெலும்பே முறிந்திருக்குமோ என்று பயம் ஏற்பட்டது. கண்கள் ஒரு கணம் பார்வை இழந்துவிட்டன எனலாம். மறுகணம் அவன் இரண்டு கஜத்திற்கு அப்பால் குப்புற விழுந்தான். படார் என்று அவன் மண்டை தரையில் மோதியது. பிரக்ஞையுடன் குஸ்தி போட்டான்; அதில் தோல்வியே கண்டான். கண்ணெதிரே உலகமே இரண்டு விட்டது.

ஃ ஃ ஃ

மறுபடி கண்ணை விழித்தபோது, ஒரு நாற்காலியில் அவன் உட்கார்ந்திருப்பதை உணர்ந்தான். அவனாக உட்கார்ந்திருக்கவில்லை. 'ஹோல்டா' லைச் சுற்றிக் கட்டியிருந்த வயிறு அவனை வலுவாகப் பிணைத்துக் கொண்டிருந்தது. ஒரு இம்மியும் அசைய முடியாதபடி அவ்வளவு கெட்டி! முன் நடந்த சம்பவங்கள் ஞாபகத்திற்கு வரச் சில நிமிஷங்கள் பிடித்தன. நன்றாகப் பார்வை வந்ததும் குள்ளன் முகம்தான் முதலில் புலனாயிற்று.

சங்கரனுடைய இதயம் ஒரு கணம் அடித்துக் கொள்ளவில்லை. ஆஹா! இன்னும் இரண்டே நிமிஷம் அவகாசம் இருந்திருந்தால் பையுடன் எங்கேயோ போயிருப்பானே!

படுக்கை மேல் அதோ கிடந்த அந்தத் தோல்பை மறுபடி ஒரு சந்தர்ப்பத்தில் அவனுடைய கையில் கிட்டுமா? குள்ளன் மீண்டும் ஒரு முறை இப்போது போல் ஏமாறு



வானா? எத்தனை அற்புதமான சந்தர்ப்பம் விதிவசத்தால் வீணாகி விட்டதே!

"என்னங்க! மோப்பம் நல்லாப் பிடிச்சு வந்திருக்கீங்களே!" என்றான் குள்ளன் கேலியாக. "என்ன சமார்த்தியம்! என்ன நடிப்பு! அந்த ஆட்டோ ரிக்ஷாக்காரன் என்னைக் கண்டு சொல்லாத போனா, ஐயா இதுக்குள்ளே கம்பி நீட்டியிருப்பீங்க இல்லையா?"

"அடப்பாவி!" என்றான் சங்கரன். ஒரு ரூபாயையும் வாங்கிக் கொண்டு மோசம் செய்திருக்கிறானே அவன்!

"அலட்டிக்காதீங்க! நான் இரண்டு ரூபா கொடுத்தேன். கூலிக்கு மோசம் செய்கிறவங்களே அப்படித்தான். இங்கே பத்து ரூபாய் கொடுத்தால், எதிரியைக் காட்டிக் கொடுப்பான்; எதிரி பதினைந்து ரூபா கொடுத்தால் நம்மையே காட்டிக் கொடுப்பான்...உலகத்திலே பற்றுக் கொள்ள வேண்டிய பாடம் ஆச்சே அது! போகட்டும். இங்கே வந்து என்ன செய்கிறீங்க?"

"நான் சொல்ல வேண்டுமா? உனக்குத் தெரியாமலா கேட்கிறாய்?"

"உம்ம்...இந்தப் பையைத் தட்டிக்கொண்டு போகப் பார்க்கிறே! அது நடக்காது..."

"நிச்சயம் சொல்கிறதற்கில்லை; சற்றுமுன் அநேகமாக நடக்கிறதற்கு இருந்தது..."

'ஏழு' சிரித்தான். "நடந்ததா? நாங்க ரொம்ப வேலை செய்து இதைச் சம்பாதித்திருக்கிறோம். லகுவில் கொடுத்து விடுவோமா?"

"நாங்களும் வேண்டிய வேலைகள் செய்திருக்கிறோம்."

"அதைப்பத்தி இப்போ பேசவாணாம். அனாவசியம்!... பை என் கையில் இருக்கிறது; ஆகையாலே அது என்னுடையது."

"அது நியாயம், அந்தப் [illegible] முயற்சி நான் தொடர்ந்து [illegible] அது என்னுடையதாகி விடும்!"

29/05/2011 13

"ஏய்! உன்னைக் கட்டிப் போட்டு, நான் பேசுகிறேன். என்கிட்டச் 'சவுடால்' அடிக்கிறே! திருட்டு நாயே!" குள்ளன் பளீர் பளீர் என்று இருமுறை சங்கரனின் கன்னத்தில் அறைந்தான். "உன்னை நான் இங்கேயே கொன்று போட்டுவிடப் போகிறேன். உயிரோடு வெளியே போனால்தானே முயற்சி செய்வே?...என் சிநேகிதன் வரட்டும்..."

"சீ! நிறுத்து உன் பேச்சை!" என்றான் சங்கரன் அசைந்து கொடுத்து.

"ஒன்றும் செய்துகொள்ள முடியாது. இந்தச் சமயத்திலே நான் உனக்கு ஒரே ஒரு கருணை காட்டுகிறேன். இதோ இந்தக் கத்தியால் சாகிறாயா?... அல்லது, இந்தத் துப்பாக்கியால் சாக விரும்புகிறாயா?... 'துப்பாக்கி ஏது? பொம்மைத் துப்பாக்கி' என்று நினைத்து விட்டாயா? இதனால் உன் நெஞ்சை நூறு சுக்கல்களாகப் பிளப்பேன்..."

"இதெல்லாம் பட்டணத்தில் நடக்கிற காரியமா?"

"ஏய்! நடுத்தெருவிலே நான் நடத்துவேன். நீ என் எதிரி. எதிரிக்கு மருந்து ஒன்றே ஒன்றுதான். தீர்த்துவிடு! நான் உன்னை 'ஓடிப்போ' என்றாய் ஓடுகிற ஆள் இல்லை. என்னை விடாமல் துரத்தி வந்திருக்கிறாய்; உன் வேலை எல்லாம் காட்டுகிறாய். மறுபடி காட்டாதபடி நான் உன்னைச் செய்துவிடப் போகிறேன்.

சங்கரன் துடித்தான். நாற்காலியோடு ஆடினான். "ஏய்! ஏய்! என்னைத் தொட்டாயோ ஜெயிலுக்குப் போவாய்! தூக்கு மேடை!"

"தம்பி அதெல்லாம் அகப்பட்டுக்கொள்கிற முட்டாள்களுக்கு. இதோ இந்த டிரங்குப் பெட்டிக்குள் நீ மறைந்து போவாய்; டிரங்குப்பெட்டி எட்டடி ஆழத்தில் மறையும்."

ஃ ஃ ஃ

வெளியே ஏதோ அரவம் கேட்டிருக்க வேண்டும். அப்போது குள்ளன் சட்டென்று பின்புறத்துக் கதவைத் திறந்து வெளியே எட்டிப் பார்த்தான். அவன் சந்தேகம் தீரவில்லை. வராந்தாவுக்குச் சென்று இருபுறமும் பார்த்தான். சங்கரன் விடுவித்துக்கொள்ள முடியாது என்று நம்பி விட்டான். கீழே ஏதோ மோட்டார் வந்த சப்தம்; கலகல வென்று ஜனங்கள் பேச்சுக் குரல் திறந்த கதவு வழியே வந்தது.

சங்கரனுக்கு இப்போது ஒரு ஆசை—ஒரு வெறி உண்டாயிற்று. இனியும் தப்பலாம் என்ற சிறு நம்பிக்கை பிறந்திருந்தது. இரண்டு முறை அவன் ஏற்கெனவே முயன்றதில் இடது கைக் கட்டு தளர்ந்திருந்தது. குள்ளன் எதிரே இல்லாத சமயம் மூன்றாம் முறை கையை உதறி வெளியே இழுத்து விட்டான். மறுகணம் அந்தக் கையை நீட்டி கத்தியை எடுத்து, 'பட்' 'பட்' டென்று நாலே வெட்டுகளில் விடுவித்துக்கொண்டு எழுந்தும் விட்டான். எழுந்த சமயம் தான், நாற்காலிக்கும் காலுக்கும் பிணைக்கப்பட்டிருந்த கட்டுபூராவும் விடுபடாமையால் நாற்காலி நகர்ந்து சப்தம் எழுப்பி விட்டது. குள்ளன் திடுக்கிட்டு உள்ளே ஓடி வந்தான்.

அதற்குள் சங்கரன் படுக்கையிலிருந்த பையை அள்ளிக் கொண்டு, வலக் கையில் கத்தியுடன் தயாராக நின்றான்.

"முட்டாள்! என்னிடம் விளையாடாதே!" என்று எச்சரித்தான் குள்ளன்.

"உன்னைத் தீர்க்காமல் நான் எப்படி வெளியே போக முடியும்? இந்தக் கத்தியால் என்னைக் குத்துவதாகச் சொன்னாய்! உன் உயிரை இதைக் கொண்டே முடிக்க வைக்கிறேன்!" என்று பதில் கொடுத்தான் சங்கரன்.

குள்ளன் நகராமல் நின்று கொண்டிருந்தான்; சங்கரனும் சளைக்காமல் நின்று கொண்டிருந்தான். தலைக்கு மேல் மின்சார விளக்கின் வெளிச்சம்...யார் முதலில் நகர்வது என்று அறியாமல் வெகு நேரம் நின்றார்கள். எப்படியும் குள்ளன் துப்பாக்கியில் கை வைத்துவிட்டால் தனக்கு அ[illegible] ...கரன்



29/05/2011 13:

அறிவான் சற்று நகர்ந்தாலும் கத்தியை எறிந்துவிடுவான் என்று குள்ளன் எதிர்பார்த்தான்.

பதினைந்து நிமிஷங்கள் அப்படியே நின்றார்கள். அதன் பின், வெளியே காலடி ஓசை கேட்டது. "ஏழு! அங்கே என்ன செய்கிறாய், விளக்கைப் போட்டுக் கொண்டு!" என்று கேட்டுக் கொண்டு வெளியே வந்து விட்டான் ரத்தினம். கதவையும் அவன் தட்டினான்.

எதிரிகள் இருவரும் இந்த நிலை இனி நீடிக்கமுடியாது என்று உணர்ந்திருக்க வேண்டும்! தன்மீது பாய்வதற்கான முஸ்தீப்புகளைச் சங்கரன் செய்கிறான் என்று குள்ளன் தீர்மானித்து விட்டான்; இந்தத் தீர்மானத்தில் சிறிது அவசரப்பட்டு, வாசற்படிக்கு அப்பாலிருந்து நகர்ந்தும் விட்டான்.

சங்கரன் பாய்ந்தது உண்மை! ஆனால் அவன் சென்றது குள்ளனை நோக்கி அல்ல. எலெக்ட்ரிக் விளக்குகளின் 'ஸ்விட்ச்' இருக்கும் திசையில் ஓடி, அறையை இருளடையச் செய்து விட்டு, அங்கிருந்து குள்ளன் நின்ற வாசற்படிக்குத் தாவினான். அது திறந்திருந்தது, சௌகரியமாகி விட்டது; கண் மூடிக் கண் திறப்பதற்குள் வராந்தாவை அடைந்தான். இந்த மாதிரி நடக்கும் என்று எதிர்பாராத குள்ளன் சிறிது ஏமாந்தே போனான்.

இடது கையில் பையை அமுக்கியபடி வராந்தாவோடு ஓடி, ஒரு திருப்பத்திற்கு வந்தான். அருகே ஒரு மாமரம் தனது நீண்ட கிளையை அந்தப் பக்கம் சாய்த்திருந்தது. ஒரே தாவில், சங்கரன் மரத்தின் கிளையில் இருந்தான். இரண்டு நிமிஷங்களுக் கப்பால் எதிர்க் கிளை வழியாக அடுத்த காம்பவுண்டுக்குள் இறங்கி விட்டான்.

அங்கே நாற்காலியை இழுத்துப் போட்டுக் கொண்டு இரண்டு ஸ்திரீகள் வம்பு பேசிக் கொண்டிருந்தார்கள். மரத்திலிருந்து அவர்கள் எதிரே ஒரு ஆள் குதிக்கவும்



மிரண்டு போனார்கள். கூச்சல் போடுவதற்குக் கூட நா புரள மறுத்தது.

"ஆழு ஆழு! திருடன்! திருடன்!" என்ற அவர்களில் சற்றுத் தைரியசாலியான அம்மாள் குரல் கொடுக்கத் தொடங்கினாள்.

நின்றால் ஆபத்து என்று சங்கரன் அறிவான். வாசற் புறம் சென்றாலும் யாரிடமேனும் அகப்பட்டுக் கொள் வான். பல கேள்விகளுக்குப் பதில் சொல்ல வேண்டி வரும். எனவே, புழக்கடைப் பக்கம் ஓட்டாக ஓடினான் புதிதாகப் போடப்பட்டிருந்த இரு பாத்திகளை இரக்கமின்றி மிதித்துக் கொண்டு காம்பவுண்டுச் சுவர்மீது தாவி, அதன் மேலேயே சென்றான். ஐந்தாறு வீடுகளுக்கும் சேர்த்துப் போடப்பட்ட சுவர் அது. ஒரு கணம் திரும்பிப்பார்த்தான். அவன் விட்டு வந்த மாடியில் இருந்த அறைகளில் எல்லாம் விளக்குகள் எரிய, வராந்தாவில் ஜனங்கள் நின்றார்கள். "அதோ! அதோ!" என்று சிலர் கையைக் காட்டினார்கள்.

குள்ளன் பிடியிலிருந்து தப்பினதில் மிகவும் ஆறுதல் சங்கரனுக்கு. டிரங்குப் பெட்டியில் அல்லவா அடைத்து விடுவதாகச் சொல்லியிருந்தான்! அந்த ஆறுதல் ஒரு கணமே இருந்தது. சுவர்மீது ஓடும்போதே வலப்புறம் பார்த்தான்; அவன் இதயம் மறுபடி ஒரு கணம் நின்றது. சுமார் இருபது கஜத்துக்கு அப்பால் வலப்புறமாக குள்ளன் ஓடி வந்து கொண்டிருந்தான்.

இதற்குள் நாலைந்து வீடுகள் தாண்டியிருப்பான் சங்கரன். தைரியமாக இடப்புறமாகக் குதித்து, அந்த வீட்டின் தோட்டத்தில் ஓடினான். பின்புறமெல்லாம் அந்த வீட்டில் இருள் அடைந்திருந்தது. ஏதேனும் கேளிக்கைக்குச் சென்றிருந்தார்களோ, என்னவோ! அவன் எதை அள்ளிக் கொண்டு போனாலும் கேள்வி முறை இல்லை! வாசற் புறம் ஒரு நாய் கட்டியிரு[illegible] அதன் அருகே உட்கார்ந்திருந்த ஒரு கிழவா, "சும்மா இரு.

ப்ரௌனி!'' என்று அதை அதட்டி இழுத்துப் பிடித்துக் கொண்டார். உறுமலின் காரணம் என்னவென்று அவர் திரும்பிப் பார்ப்பதற்குள் சங்கரன் அடர்ந்த ஒரு செடியின் பின்னால் மறைந்து கொண்டான்.

குள்ளன் கடு வேகமாக வந்துவிட்டான். சங்கரன் ஒளிந்து கொண்டிருப்பான் என்பதை அவன் எதிர்பார்க்க வில்லை. ஆதலால், அவன் திரும்பாமலே வாசற்புறம் சென்று விட்டான்.

''ப்ரௌனி'', ''லொள்...லொள்'' என்று பெரிதாக ஆரம்பித்து விட்டது. கிழவரும் திரும்பி இப்போது குள்ளனைப் பார்த்து விட்டார்.

''யாரையா நீ?'' என்று அதட்டினார்.

''ஒரு திருட்டுப் பயல் இங்கே ஓடி வந்திருக்கிறான்'' என்றான் குள்ளன்.

''திருட்டுப் பயலா! நீதான் திருட்டுப் பயல்!... 'ப்ரௌனி!' உம்ம்ம்!''

ஒரு 'லாவு' லாவிட்டது 'ப்ரௌனி'. குள்ளனின் சட்டையின் அடிப்பாகமும் கையும் அதன் வாயில் சிக்கிக் கொண்டன.

''விடுங்க ஐயா!'' என்றான் குள்ளன்.

''இரு! திருடன் வந்திருக்கிறான் என்றா சொல்கிறாய்! உனக்கு வழி சொல்கிறேன்!... விடாதே 'ப்ரௌனி!'', என்று அவர் வாசல் பெரிய 'கேட்'டை அணுகி, ''ஏ நாணி! ஏ கோதண்டன்! வாங்கடா எல்லாரும்!'' என்றார் உரத்த குரலில்.

''ப்ரௌனி தன் வாயை எடுத்து விட்டுப் பற்களை மட்டும் பயங்கரமாகத் திறந்து கொண்டு குள்ளன் எங்கும் போக மாட்டாமல் சுற்றிச் சுற்றிக் குரைத்துக் கொண்டு குதித்தது.

சங்கரனுக்கு இதை விட நல்ல சந்தர்ப்பம் எங்கே கிடைக்கப் போகிறது! வந்த வழியே திரும்பினான்.



தோட்டத்துச் சுவரைத் தாண்டி மற்றொரு தோட்டத்தில் நுழைந்து, ஒரு வேலியைக் கடந்து, வீடு கட்டக் கடக்கால் எடுக்கப்பட்டிருந்த மனைக்கட்டில் புகுந்து வெளியே வந்தான்.

அது ஒரு சிறிய தெருதான். அருகில் எங்கோ கதா காலட்சேபம் நடந்து முடிந்திருக்க வேண்டும். ஜனங்கள் பெருங் கூட்டமாக, கலகல வென்று பேசிக் கொண்டு வெளியே வந்தார்கள். அவர்களுடன் ஒரே நொடியில் கலந்து கொண்டான் சங்கரன்.

கூட்டத்தில் ஒரு பகுதி ரயில்வே ஸ்டேஷனுக்குச் சென்றுகொண்டிருந்தது. அதோடு சங்கரனும் ரயில் ஏறினான். அடுத்த ஸ்டேஷனில் இறங்கினான்.

உடம்பெல்லாம் நோவெடுத்தது. மரத்தில் ஏறியதில் பல இடங்கள் சிறாய்த்தும், ஆடை கிழிந்தும் இருந்தது. கயிறால் கட்டப்பட்டதில் கைகளில் எல்லாம் தழும்பேறி யிருந்தது. பலவிதமான அதிர்ச்சிகள் அடுத்தடுத்து ஏற்பட்ட தன் காரணமாகத் தலையைச் சுற்றியது. சிறு வலியும் கண்டிருந்தது.

ஆனால், இத்தனை சங்கடங்களையும் பொறுத்துக் கொள்ளலாம்; அவன் கையில் அந்தப் பை இருந்ததே தாமோதரன் அதைக் கண்டதும் எத்தனை சந்தோஷப் படப் போகிறான்!

ஒரு ரிக்ஷாவை அமர்த்திக் கொண்டு அதில் ஏறினான். நுங்கம்பாக்கத்தில் விலாசத்தைச் சொல்லிவிட்டுச் சாய்ந்து விட்டான். ஒரு சிறு தூக்கம் கூடப் போட்டிருப்பான்.

''சாமி! எந்த வீடு?'' என்று ரிக்ஷாக்காரன் குரல் அவனை எழுப்பியது.

''வலப்பக்கத்தில் மூன்றாவது வீடு... [illegible] பெயிண்ட்... வாசலில் மாடிப்படி...''

அவன் சொல்லி முடிப்பதற்குள் தெரு முனையில் ஒரு டாக்ஸி திரும்பியது. அதன் இரு தலை விளக்குகளும்

29/05/2011 13:02

ப்ரௌனி!'' என்று அதை அதட்டி இழுத்துப் பிடித்துக் கொண்டார். உறுமலின் காரணம் என்னவென்று அவர் திரும்பிப் பார்ப்பதற்குள் சங்கரன் அடர்ந்த ஒரு செடியின் பின்னால் மறைந்து கொண்டான்.

குள்ளன் கடு வேகமாக வந்துவிட்டான். சங்கரன் ஒளிந்து கொண்டிருப்பான் என்பதை அவன் எதிர்பார்க்க வில்லை. ஆதலால், அவன் திரும்பாமலே வாசற்புறம் சென்று விட்டான்.

''ப்ரௌனி', ''வொள்...வொள்'' என்று பெரிதாக ஆரம்பித்து விட்டது. கிழவரும் திரும்பி இப்போது குள்ளனைப் பார்த்து விட்டார்.

''யாரையா நீ?'' என்று அதட்டினார்.

''ஒரு திருட்டுப் பயல் இங்கே ஓடி வந்திருக்கிறான்'' என்றான் குள்ளன்.

''திருட்டுப் பயலா! நீதான் திருட்டுப் பயல்!... 'ப்ரௌனி!' உம்ம்!''

ஒரு 'லாவ்' லாவிட்டது 'ப்ரௌனி'. குள்ளனின் சட்டையின் அடிப்பாகமும் கையியும் அதன் வாயில் சிக்கிக் கொண்டன.

''விடுங்க ஐயா!'' என்றான் குள்ளன்.

''இரு! திருடன் வந்திருக்கிறான் என்றா சொல்கிறாய்! உனக்கு வழி சொல்கிறேன்!... விடாதே 'ப்ரௌனி!'', என்று அவர் வாசல் பெரிய'கேட்'டை அணுகி, ''ஏ நாணி! ஏ கோதண்டன்! வாங்கடா எல்லாரும்!'' என்றார் உரத்த குரலில்.

''ப்ரௌனி தன் வாயை எடுத்து விட்டுப் பற்களை மட்டும் பயங்கரமாகத் திறந்து கொண்டு குள்ளன் எங்கும் போக மாட்டாமல் சுற்றிச் சுற்றிக் குரைத்துக் கொண்டு குதித்தது.

சங்கரனுக்கு இதை விட நல்ல சந்தர்ப்பம் எங்கே கிடைக்கப் போகிறது! வந்த வழியே திரும்பினான்.



தோட்டத்துச் சுவரைத் தாண்டி மற்றொரு தோட்டத்தில் நுழைந்து, ஒரு வேலியைக் கடந்து, வீடு கட்டக் கடக்கால் எடுக்கப்பட்டிருந்த மனைக்கட்டில் புகுந்து வெளியே வந்தான்.

அது ஒரு சிறிய தெருதான். அருகில் எங்கோ கதா காலட்சேபம் நடந்து முடிந்திருக்க வேண்டும். ஜனங்கள் பெருங் கூட்டமாக, கலகல வென்று பேசிக் கொண்டு வெளியே வந்தார்கள். அவர்களுடன் ஒரே நொடியில் கலந்து கொண்டான் சங்கரன்.

கூட்டத்தில் ஒரு பகுதி ரயில்வே ஸ்டேஷனுக்குச் சென்றுகொண்டிருந்தது. அதோடு சங்கரனும் ரயில் ஏறினான். அடுத்த ஸ்டேஷனில் இறங்கினான்.

உடம்பெல்லாம் நோவெடுத்தது. மரத்தில் ஏறியதில் பல இடங்கள் சிராய்த்தும், ஆடை கிழிந்தும் இருந்தது. கயிறால் கட்டப்பட்டதில் கைகளில் எல்லாம் தழும்பேறி யிருந்தது. பலவிதமான அதிர்ச்சிகள் அடுத்தடுத்து ஏற்பட்டதன் காரணமாகத் தலையைச் சுற்றியது. சிறு வலியும் கண்டிருந்தது.

ஆனால், இத்தனை சங்கடங்களையும் பொறுத்துக் கொள்ளலாம்; அவன் கையில் அந்தப் பை இருந்ததே தாமோதரன் அதைக் கண்டதும் எத்தனை சந்தோஷப் படப் போகிறான்!

ஒரு ரிக்ஷாவை அமர்த்திக் கொண்டு அதில் ஏறினான். நுங்கம்பாக்கத்தில் விலாசத்தைச் சொல்லிவிட்டுச் சாய்ந்து விட்டான். ஒரு சிறு தூக்கம் கூடப் போட்டிருப்பான்.

''சாமி! எந்த வீடு?'' என்று ரிக்ஷாக்காரன் குரல் அவனை எழுப்பியது.

''வலப்பக்கத்தில் மூன்றாவது வீடு... பச்சைப் பெயிண்ட்... வாசலில் மாடிப்படி...''

அவன் சொல்லி முடிப்பதற்குள் [illegible] டாக்ஸி திரும்பியது. அதன் இரு [illegible]

ஜாஜ்வல்யமாகப் பிரகாசித்துக் கண்களைக் கூசச்செய்தன. ரிக்ஷாக்காரன் தெருவின் வலப்புறம் வண்டியைத் திருப்பும் சமயம், 'டாக்ஸி' ரிக்ஷாவின் மேல் மோதுகிற மாதிரி வந்து விட்டது. டாக்ஸிக்காரன் வெகு லாவகமாக வீட்டுக்கும் ரிக்ஷாவுக்கும் நடுவில் தன் வண்டியை நிறுத்தி, "என் ஐயா, கண்ணு மண்ணு தெரிஞ்சு வண்டி ஓட்டுகிறாயா? இத்தனை நேரம் என்ன ஆகியிருக்கும்" என்று அதட்டினான்.

"அவர்களை ஒன்றும் சொல்லாதே! சும்மா விடு!" என்று சமாதானமாகக் கூறிய வண்ணம் டாக்ஸி கதவைத் திறந்து கொண்டு ஒரு ஆசாமி இறங்கினார்.

சங்கரன் திடுக்கிட்டான். அன்று காலை தாமோதரனிடம் வந்து கண்டித்துப் பேசி விட்டுப்போன அதே ஆசாமி, எப்படியும் பையை எடுத்துத் தருவதாக அவர்கள் வாக்களித்திருந்த பேர்வழி. "இவன் எங்கே வந்தான் இந்த அசந்தர்ப்ப வேளையில்!"

சங்கரன் அவனைப் பார்த்து விழித்தான்; இந்தச் சமயத்திலா பையுடன் வெற்றி வீரனாக வரும்போதா அவன் வரவேண்டும்! இதுகாறும் உதவி செய்த அதிர்ஷ்ட தேவதை எங்கே சென்றாள்; வெலவெலத்துப் போனான் அவன்.

"ஓ! நீங்கள் தானா!...அடேடே...எனக்காக எத்தனை சிரமப்பட்டிருக்கிறீர்கள்! கையில் தோல் பை இல்லாமல் திரும்புவதில்லை என்று பிரதிக்ஞையோ! இப்படிக் கொடுங்கள் அதை!"

கையை நீட்டி விட்டார். சங்கரன் தன் கையைப் பின்னுக்கு இழுத்துக் கொள்ளுமுன் அவர் அதைப் பிடுங்கிக் கொண்டுவிட்டார். மறுகணம் திறந்த டாக்ஸி கதவின் வழியாக உட்கார்ந்து, படீர் என்று கதவைச் சாத்தி, "விடு வண்டியை!" என்று உத்தரவிட்டார்.

சங்கரன் பாய்ந்தான். அவனுக்கு முன்னதாக அந்த டாக்ஸி பாய்ந்து, ஐந்து விநாடிகளில் தெருவைக் கடந்து, கண்ணுக்கு மறைந்து போய்விட்டது.

# விறுவிறுப்பான சில சம்பவங்கள்

சந்துருவிடம் தாமோதரன் வீட்டில் தனக்கு ஏற்பட்ட அனுபவங்களையெல்லாம் கூறி முடித்த பின்னர், நாராயணன் அவசர அவசரமாகத்தான் வெளியேறினான். ஆனால் ஜன்னல் வழியாக முன்பு லகுவாக ஏறியது போல் இறங்குவது இல்லை. யாரேனும் இறங்குவதைப் பார்த்து விடலாகாதே என்றபயமும் அவனுக்குஇப்போதுஇருந்தது. வெகு ஜாக்கிரதையாக ஒரு காலுக்குப் பின் ஒரு காலை வைத்து இறங்கித் தரையை வந்து சேர இருபது நிமிஷங்களுக்குமேல் பிடித்தன.

அங்கிருந்து பதினைந்தடி தூரத்தில் மோட்டார் ஷெட்டும், அதன் அருகிலே தட்டு முட்டு சாமான்கள் போடப்படும் சிறு அறையும் இருந்தன. நாராயணன் பங்களாவிலிருந்து வெளியேற வேண்டுமானால், ஒன்று, இந்த அறையைப் பிரதட்சிணமாகச் சுற்றிக் கொண்டு சென்று பின்புறத்தில் காம்பவுண்டுச் சுவரை அடைந்து ஏறிக் குதிக்க வேண்டும்; அல்லது, பாதையின் குறுக்கே சென்று எதிர் பக்கத்துச் சுவரோரமாகப் போய்த் தாண்ட வேண்டும். இவைகளில் எதை மேற்கொள்ளலாம் என்று சற்றுச் சிந்தனை செய்வதற்குள் காலடிச் சப்தம் கேட்டுச் சட்டென்று சுவரோரமாகச் செடியின் மறைவில் பதுங்கிக் கொண்டு உன்னிப்பாகக் கவனித்தான். யாரோ பாதையில் வருகிறார்கள்!

காலடிச் சப்தம் மெள்ள மெள்ள நெருங்கியது. ஆள் அருகே வந்ததும் உருவம் கணேசனுடையது என்று தோன்றியது. ஆனால், அவன் நடையில் லேசாக ஏதோ ஒரு வித்தியாசமும் கூடவே தோன்றியது. வருபவன் கணேசன்தானா? அல்லது வேறு யாரேனுமா?

கிட்டவும் நெருங்கி விட்டான். அந்த ஆசாமி கைக்குட்டையால் முகத்தைத் துடைத்துக் கொண்டான். மறைவிடத்திலிருந்து பார்த்த நாராயணனுக்கு இப்போது நிச்சயமாக அவன் கணேசனே தான் என்று ஊர்ஜிதமாகிவிட்டது. நாராயணன் தன்னைக் கவனிக்கிறான் என்ற சந்தேகம் சிறிதுமின்றி அவன் பாதை நடுவே ஏதோ யோசனையுடன் நின்றான். பிறகு தட்டுமுட்டு சாமான் கிடக்கும் அறையைத் திறந்து அதனுள் சென்று விட்டான்.

தான் தப்பித்துக் கொள்வதற்கு இதைவிடச் சிறந்த சந்தர்ப்பம் அகப்படாதென்று தீர்மானித்துக் கொண்டு நாராயணன் பாதையின் குறுக்கே பாய்ந்தோடி, எதிர்ப்புறத்தில் இருந்த செடி மறைவைத் துணைகொண்டு சிறிது தூரம் நடந்து காம்பவுண்டுச் சுவரைத் தாண்டி வெளியே குதித்தான். இதுவரை தன்னை எவரும் பார்க்கவில்லை என்ற சந்தோஷம் அவனுக்கு கொஞ்ச நாழிகை ஏற்பட்டது. ஆனால் மறுகணமே தன்னை நோக்கி வரும் ஓர் ஆசாமியைக் கண்டதும் அது மறைந்து விட்டது.

அவனை நெருங்கி வந்த ஆள் ஐம்பது வயதைத் தாண்டியவனாக இருந்தான் குள்ளமாக, தளர்ந்த உடல் கட்டுடன் காணப்பட்டான். முகத்திலிருந்து சாயல், பல கஷ்ட நஷ்டங்களைக் கண்டு உலகின் துயரங்களை ருசி பார்த்தவன் என்பதற்கு எடுத்துக்காட்டாக இருந்தது. அவன் நடையில் மனிதனுக்குப்பயந்த ஒரு விலங்கினுடைய பதுக்கலும் காணப்பட்டது. தன்னைக் காண அவன் வருகிறதாகத் தான் அறிந்து கொள்ளவில்லை என்று பாசாங்கு செய்ய விரும்பினான் நாராயணன்; எனவே எதிர்த் திசையில் நடக்கத் தொடங்கினான்.

"கொஞ்சம் நில்லுங்கள்! உங்களைத் தேடிக்கொண்டு தான் நான் இப்போது வந்து கொண்டிருக்கிறேன்..." என்று குரல் கொடுத்தான் அந்தப் பேர்வழி.



"என்னையா! உன்னை எனக்குத் தெரியாதே!" என்று நிற்காமல் பதில் சொல்லிவிட்டு; மேலும் நாராயணன் நடக்க முயற்சித்தான்.

மற்றவன் ஓட்டமாக ஓடி வந்து தோளைப் பிடித்துக் கொண்டான். "அப்படி என்னை உதறிவிட்டுப் போக நான் உம்மை விடப்போவதில்லை. நீர் யார் என்று எனக்குத் தெரியும்! இந்தக் காம்பவுண்டின் வழியாக இப்போது ஏறிக் குதித்ததையும் நான் பார்த்துக் கொண்டு தான் இருந்தேன்..." என்றான்.

"அதனால் என்ன இப்போது? உன்னைப் போலீஸ்காரன் என்று நினைத்து என்னை ஏமாந்து போகச் சொல்கிறாயா?... போ. ஐயா! உன் மிரட்டலுக்கெல்லாம் பயப்படுகிற ஆள் நான் இல்லை!"என்றான் நாராயணன்.

"சற்றுப் பொறும்! உமக்கு நான் நண்பன் என்பதைத் தெரிந்து கொள்ளாமல் பேசுகிறீர்: நீர் இப்போது இந்திராவைப் பார்த்து விட்டுத் திரும்புகிறீர் இல்லையா?"

நாராயணன் நின்றான். இந்த ஆள் விஷயம் தெரிந்தவனாக இருக்க வேண்டும் என்று அவனுக்குப் பட்டது. அதற்குள் அவன், "அல்லது ஸி. ஐ. டி. சந்துருவையாவது பார்த்துவிட்டு வரப் போயிருப்பீர்! ஒப்புக் கொள்ளும்" என்றான்.

"அப்படியே இருக்கட்டும்...உனக்கும் அதற்கும் என்ன சம்பந்தம்? என்னை நிறுத்துவதன் காரணம் என்ன?"

"எனக்கு உம்மால் ஓர் உதவி ஆகவேண்டியிருக்கிறது. அவசரமாக எனக்கு ஒரு இருபது ரூபாய் தேவை..."

நாராயணன் சிரித்தான்: "அழகாக இருக்கிறதே!பகல் வேளையாக இருந்தால் நீயே இரண்டணா கேட்பாய்; இரவில் ஒருவன் தனியாக அகப்பட்டுக் கொண்டால் இருபது ரூபாயாகக் கேட்கலாம் [illegible] தெரியுமே, உங்கள் பரம்பரை! போ ஐயா!

29/05/2011 1

"மிஸ்டர் நாராயணன்! என்னைப் பிச்சைக்காரன் என்று நினைத்து விடாதீர்! நான் பிச்சைக்காரனும் இல்லை; இப்போது உம்மைக்கேட்டது இனாமும் இல்லை. இரண்டே நாளில் உம்மைத் தேடிவந்து திருப்பிக்கொடுத்து விடுவேன். இந்த நிமிஷத்தில் நான் இனாமாகவும் இருபது ரூபாயைப் பெற்றுக் கொண்டு போக மாட்டேன்..."

"எங்கள் ஊரில் நரிக் குறவன் வருவான். 'இரண்டு ரூபாய் கொடுங்கள்; சூரியன் மலை வாயில் விழுவதற்குள் ஒரு பலம் கோரோஜனை, ஒரு மான் கொம்பு, ஒரு புலித் தோல் மூன்றும் கொண்டு வந்து கொடுக்கிறேன். என்னை நம்புங்கள்' என்று சொல்வான்..."

"நீர் சிறுபிள்ளை மாதிரி பேசிக் கொண்டிருந்தால் உபயோகம் இல்லை; இந்த வீட்டில் உள்ள நல்லவர்களுக்கெல்லாம் என்னால் இப்போது ஒரு உபகாரம் செய்ய முடியும். உன்னை நான் இங்கே சந்தித்திரா விட்டால், நானே உள்ளே சென்றிருப்பேன்."

"குதித்திருந்தால் நேரே கணேசன் பிடியில் சிக்கிக் கொண்டிருக்க வேண்டும்; பதினைந்தாவது நிமிஷம் போலீஸ் 'லாக்கப்'பில் இருக்க வேண்டும்..."

"எனக்கும் இந்தப் பங்களா சமாசாரம் கொஞ்சம் தெரியும்! கணேசன் போலீஸ்காரனை அழைத்துவிட மாட்டான் என்பது தெரியும்! ஒரு மணிக்கு முந்தி ஒரு டெலிபோன் வந்ததும் எனக்குத் தெரியும். அது ஸி. ஐ. டி. சந்துருவுக்கு வந்தது. கணேசன் போனை எடுத்துப் பேசி, 'சந்துருவை எழுப்ப முடியாது. அவர் எங்கே இருக்கிறாரோ!' என்று சொல்லி முடித்துவிட்டான்."

"ஏது! உள்ளே இருந்து வருகிற ஆசாமி மாதிரி பேசுகிறாய்; மறுபடி உள்ளே பிரவேசிப்பேன் என்றும் பயங்காட்டுகிறாய்... நீ யாரப்பா?..."

"அப்படித்தான் நான் பேசுவது. நான் யார் என்பது அவசியம் இல்லை. நான் இப்போது வீணாகக் கால விரயம்



செய்துகொண்டிருப்பதில் பலன் இல்லை. இந்த வீட்டில் ஒரு பை—முக்கியமான ஒரு தோல் பை—காணாமல் போய் விட்டதால் அரண்டு போயிருக்கிறார்கள். அது எங்கே இருக்கிறது என்று எனக்குந் தெரியும். அந்த விவரத்தை நான் சொல்ல முடியும். அதற்காக வேணும் நீர் கொஞ்சம் பணம் கொடுத்து உதவ முடியுமா என்றுதான் கேட்கிறேன்!"

"இப்போது உனக்குப் பணம் மிகவும் தேவை என்று எனக்குத் தெரிகிறது..."

"உண்மை. இன்றைக்கு நான் வெறுங் கையுடன் திரும்பக் கூடாது. திரும்பினால் என் உயிர் போய்விடும்."

"என்னிடம் இருபது ரூபாய் இல்லை."

"பத்து ரூபாய் கொடுங்கள்; எட்டுருபாய் கொடுங்கள்; போதும்! நான் அதற்குப் பதிலாக அந்த அற்புதமான தகவலைக் கொடுக்கிறேன். அகஸ்மாத்தாக எனக்கு அது கிடைத்தது! அதன்படி நடந்து கொண்டால் உம்முடைய இந்திரா சந்தோஷப்படுவாள்; சந்துருவுக்கு ஒரு தொல்லை தீர்ந்ததாக ஆகும். செங்கல்வராய பிள்ளைக்கு உடனே உடம்பு குணமாகும்; அந்த அயோக்யன் மதுரநாயகம் வீட்டை விட்டு வெளியேறுவான்..."

"ஏது, ஏது...எல்லாரையுமே தெரியுமா, உனக்கு?"

"பணத்தைக் கொடும். நான் என் வேலையைப் பார்க்கிறேன்; நீர் உம்முடைய காரியமாகப் போகலாம். நேரே லிங்கிச் செட்டித் தெருவுக்குப்போம். 1036-ம் நம்பருக்குப் பக்கத்தில் ஒரு சிறு சந்து இருக்கிறது; அதில் சென்று மறுபடி இடதுபுறம் திரும்பி நான்கு வீடுகள் வாரும். 1032ம் நம்பர் வீட்டுக்குப் பின்புறம் அது. இந்த மதில் சுவரைத் தாண்டினவருக்கு அது ஒன்றுமே இல்லை; பின் புறச் சுவரைத் தாண்டிவிட்[illegible] உள்ளே செல்வதில் ஒரு கஷ்டமும் இல்[illegible] நடந்துகொண்டால், எளிதில் பை, வெகு ஜாக்கிரதையாக

29/05/2011 1

பண்டத்துடன் திரும்பலாம். அடி குத்துக்குத் தயாராகப் போக வேண்டும்; ஓடி வரவும் அஞ்சக்கூடாது... எங்கே பணம்?'

நாராயணன் மனத்தில் ஒரு சந்தேகம் எழுந்தது. 'இவன் யாராக இருக்கும்?'—சட்டை ஜேபியில் கை விட்டவன் யோசனை செய்தபடி தயங்கினதை அவன் கவனித்தான். "ஹா! நான் யார் என்று மறுபடி யோசனையோ! அதுதான் தேவை இல்லை என்றேனே. நான் சொல்கிற விஷயம் புரட்டு இல்லை; உடனே போனால் வெற்றியுடன் திரும்பலாம். சந்தேகமே வேண்டாம்!"—கையை நீட்டிக் கொண்டே இருந்தான்.

நாராயணன் பத்து ரூபாய் நோட்டு ஒன்றை அவன் கையில் வைத்தான். "நீ சொன்ன விஷயம் உண்மை என்றால், இதைத் திருப்பித் தரத் தேவை இல்லை. எனக்கு வெற்றி கிடைத்ததென்றால், நாம் மறுபடி சந்திக்கும் போது மேலும் ஒரு பத்து ரூபாயை நானே தருகிறேன்...!" என்றான்.

நீட்டின பணத்தை 'லபக்' கென்று பற்றிக்கொண்டான் அந்த மனிதன். மறுகணம் ஓடும் காலடி ஓசைதான் கேட்டது நாராயணனுக்கு; அவன் மறைந்துவிட்டான். 'அடுத்தபடி செய்யவேண்டியது என்ன? அந்த மனிதனுடைய பேச்சை எவ்வளவு தூரம் நம்பலாம்? ஓரளவு நம்பலாம் என்பதற்கு ஆதாரமாக அவன் நடத்தை இருந்தது. அவன் இஷ்டப்பட்டிருந்தால், நாராயணனைக் கேளாமலேயே பர்ஸ் பூராவையுமே பிடுங்கிக் கொண்டு போயிருக்கலாம்; அப்படி அவன் செய்யவில்லை. அந்தப் பங்களா விஷயங்கள் பூராவுமே தெரிந்தவனாக அவன் இருந்தான்; தவிர, நண்பனாகவும் காண்பித்துக் கொண்டான்.

எல்லாவற்றிற்கும் மேலாக, லிங்கிச் செட்டித் தெருவில் ஒரு வீட்டை அடையாளம் சொல்லி, அங்கே போய்ப் பையை எடுத்துக்கொள்ளும்படியும் கூறினான். 'சந்துருவை டெலிபோனில் அழைத்து, இந்த விஷயத்தைக் கூறினால்



என்ன?' என்று எழுந்த எண்ணத்தை ஒதுக்குப்புறமாகத் தள்ளினான் நாராயணன். இந்த ஆள் சொன்னது உண்மையெனில் சந்துரு டெலிபோனிலும் அகப்படமாட்டான்.

தன் முயற்சியினாலேயே பையை மீட்டு எடுத்துக் கொண்டு வந்து சந்துருவின் கையில் கொடுத்து இந்திராவின் முகத்தைப் பார்ப்பதில் உள்ள பெருமை அதில் கிடையாது என்று அவனுக்குத் தோன்றியது.

மறு நிமிஷம், அவன் மரத்தின் ஓரமாக ஒளித்து வைத்திருந்த சைக்கிளை எடுத்துக்கொண்டு அதில் தாவி ஏறினான். பதினைந்து நிமிஷங்களுக்குப் பிறகு டவுனை நோக்கி வெகு வேகமாகப் 'பெடல்' செய்து கொண்டிருந்தான்.

ஃ ஃ ஃ

சைனா பஜாருக்கு அருகில் ஒரு போலீஸ்காரன் அவனை நிறுத்தியதில் சில நிமிஷங்கள் தாமதமாயிற்று. ஒன்றும் இல்லை; விளக்கு அணைந்து போயிருந்தது. போலீஸ் ஜவானிடமே நெருப்புப் பெட்டி கடன் வாங்கி அதை ஏற்றிக்கொண்டு, சென்னை ரஸ்தாக்கள் படுமோசமாகி வருவதை அந்த ஜவானிடம் புகார் செய்து, "என்னங்க; இப்படித் தூக்கித் தூக்கிப் போட்டால், எந்த விளக்கும் அணைந்துதான் போகும்!" என்று சொல்லி விட்டு மீண்டும் ஏறிக்கொண்டான் நாராயணன்!

இரவில் அந்த நேரத்தில் 'எஸ்பிளனேட்' பகுதி ஜன சஞ்சாரமற்றுத் தோற்றம் அளித்தது. சில பெருச்சாளிகள் மட்டும் தைரியமாகக் குறுக்கும் நெடுக்குமாக ஓடின. ஒரு கொழுத்த பெருச்சாளி நாராயணன் சைக்கிளைக் கவிழ்த்து விடுகிறமாதிரி குறுக்கே ஓடி, லேசான காயத்துடன் தப்பித்துக் கொண்டது. வானத்தில் தொங்கிய தாரகைகள், அந்நேரத்தில் பார்ப்பதற்குச் சிறிது அச்சத்தைக்கூட எழுப்பின. அஸ்தமித்துக் கொண்டிருந்த அர்த்த சந்திரனைப் பாராமலே சைக்கிளை ஓட்டினான் நாராயணன். அதன் உருவமும் வர்ணமும் ஒரு பயங்கரமான சூழ்நிலையை உண்டாக்கிக் கொண்டிருந்தன. நெருங்க

29/05/2011 1

நெருங்க, சமுத்திரத்தின் அலையோசை மட்டுமே நிசப்தத்தைக் கவனித்துக் கொண்டிருந்தது.

நாராயணன் லிங்கிச் செட்டித்தெருவில் திரும்பினான். 1032ம் நம்பர் வீட்டு வாசல் பூட்டப்பட்டுக் கிடந்தது. எங்கும் விளக்கின் ஒளியே இல்லை. "இதிலா இருக்கும் என்றான் அவன்!" என்ற சந்தேகத்துடன் நான்கு வீடுகளுக்கு அப்பாலுள்ள சந்தினுள் திரும்பினான். சொன்னபடியே சந்து இடப்புறம் வளைந்தது. 1032-ம் நம்பர் வீட்டின் பின்புறத்தில் நாராயணன் சைக்கிளைச் சாத்திவிட்டு அண்ணாந்து பார்த்தான். முன்புறத்தைப் போலவே பின்புறமும் அந்தகாரத்தில் ஆழ்ந்திருந்தது. அவனைப் பார்த்து ஒரு தெரு நாய் மட்டும் இரண்டு நிமிஷம் குரைத்துவிட்டு அப்பால் ஓடியது.

மீண்டும் தயக்கம்: 'திரும்பிவிடலாமா இதனுடன்' என்று யோசனை. 'வந்தது வந்தோம்; உள்ளே சென்று சோதனை செய்யாமல் போகவேண்டாம்' என்றொரு ஆசை. 'இப்படிப் பூட்டிய வீட்டினுள் நுழைவது சட்ட விரோதம் அல்லவா? என்றொரு பயம். ஆனால், தான் செய்யும் காரியம் தர்மவிரோதம் இல்லை. தனது காதலி யின் க்ஷேமத்துக்காகவே என்றொரு தைரியம்.

கடைசியில் நாராயணன் துணிந்து வீட்டினுள் பிரவேசித்துவிட்டான். கூடியவரை சப்தமே செய்யாமல் நடந்தான். மிகவும் பழமையான வீடு. அவன் குதித்தது ஒரு பெரிய முற்றம். அங்கே ஒரு கிணறும், தாழ்வாரமும்; தாழ்வாரத்தில் பலவகைப்பட்ட இரும்பு சாமான்களைக் கொண்டு கொட்டிக் குவித்திருந்தார்கள்.

நாராயணன் தனது ஜேபியிலிருந்து சிறியதொரு 'டார்ச்'விளக்கை எடுத்து வெளிச்சம் அடிச்சுப் பார்த்தான். இரண்டு மூன்று எலிகள் விழுந்தடித்துக்கொண்டு ஓடி, சாமான் குவியலுக்குள் ஒளிந்து கொண்டன. சூரிய ரச்மி கண்டு வெகுகாலம் ஆகியிருக்கும் போல்



தோன்றிய தாழ்வாரத்தில் துர்க் கந்தமும், பலவிதமான பயங்களை எழுப்பும் நிச்சப்தமும் காத்திருந்தன.

'டார்ச்' விளக்கை அணைத்து மறைத்துக் கொண்டு, மெள்ள அடிமேல் அடி வைத்துத் தாழ்வாரத்தைத்தாண்டி உள்ளே சென்றான்.

கீழெல்லாம் தும்பும் தூசியும்; சுவரெல்லாம் ஒட்டடை தொங்கியது; வெகு காலம் கவனிப்பாரற்றுப் பூட்டிக் கிடந்த வீடு அது என்பதற்கு வேண்டிய எல்லா ருசுக்களையும் கண்டான் அவன். இரண்டு பெரிய கூடங் களைத் தாண்டியதும், வீட்டின் முன்புறத்து அறைகளை அடைத்து விட்டான்! அங்கே சற்றுத் துப்புரவாகக் காணப்பட்டன எல்லாம்.

தலைக்கு மேல் மாடியின் தளம். 'டார்ச்'சை ஒருமுறை அடித்துப் பார்த்ததில் காரையெல்லாம் பெயர்ந்து, இரைந்து பேசினால்கூடத் தலையில் கொட்டிவிடுமென்பது போல் காட்சி தந்தது. அந்த வீட்டில் இதுவரை யாரும் தென்படவில்லை. ஒரு பேச்சுக் குரல் இல்லை.

எதிரே மாடிப் படி தென்பட்டது. அதன் கதவு ஒரே நாதாங்கியில் சாய்ந்தபடி நின்றது 'மாடி ஏறிப் போகலாமா? அங்கும் இப்படித்தான் நிர்மானுஷ்யமாக இருக்குமா? அல்லது, மனிதர்கள் இருந்து தானாகவே அபாயத்தில் தலை கொடுத்த மாதிரி ஆகிவிடுமா?' என்று தீவிரமாக எண்ணினான். 'இவனையே அவர்கள் 'திருடன்' என்று பிடித்துக் கொடுக்கலாம்; அல்லது அவர்களே திருடர்களாக இருந்து, இவனைக் கொன்று போடலாம்; அல்லது ஒருவர் கூட இல்லாமல், நாராயணன் பத்து ரூபாயை யாரோ வழிப் போக்கனிடம் பறி கொடுத்து ஏமாந்த சோணகிரியாகவும் இருக்கலாம்.

இந்த எண்ணங்களுக்குத் திடீர் என்று ஒரு முற்றுப் புள்ளி வந்து விழுந்தது.

திடுக்கிட்டு நின்றான் நாராயணன். யாரோ உயரே நெருப்புக்குச்சி பற்ற வைத்த சப்தம் கேட்டுவிட்டது.

29/05/2011 13:0

தொடர்ந்து ஒருவன் நடப்பதுபோல் காலடிச் சப்தமும் வந்தது. "ஓஹோ! மாடியிலா இருக்கிறார்கள் மனிதர்கள்."

பூனை போல் அடிமேல் அடி வைத்து நாராயணன் உயரே ஏறினான். ஒவ்வொரு படியிலும் குப்பை மண்டிக் கிடந்தது. நடுவில் படிக்கட்டு ஒரு திருப்பம் திரும்பியது. மேல் படியை அடைந்ததும் வெகு ஜாக்கிரதையாக எட்டிப் பார்த்தான். நீண்ட நடைபாதை; அதில் யாரும் இல்லை. மூன்று அறைகள். முதல் அறையின் கதவு நன்றாகத் திறந்து கிடந்தது. இரண்டாவது அறையின் கதவுகள் சாத்தியிருந்தன; மூன்றாம் அறைக்குக் கதவுகளே இல்லை!

நடைபாதையில் நின்ற நாராயணன் முதல் அறையினுள் நின்று கவனித்தான்; ஒரு சப்தமும் கேட்க வில்லை. உயரே மின்சார விளக்குகளைப் பொருத்தும் கம்பிகள் தொங்கினவே தவிர, ஒரு விளக்குகூட இல்லை. அந்த அறையில் இருந்தபடி ஒன்றும் காதில் விழாது; நிற்பதில் பிரயோசனம் இல்லை. அதேபோல் தான் மூன்றாவது அறையும். இரண்டாம் அறையின் கதவுக்கு வெளியே நின்று, மெல்ல கையை வைத்தான். "டக்!" என்ற சப்தத்துடன் கதவு நகர்ந்து கொடுத்தது; ஆனால், திறந்து கொள்ளவில்லை.

"யார் அங்கே?" என்ற அதட்டல் உள்ளே இருந்து கேட்கவே, நாராயணன் அரண்டு போய்விட்டான். அவன் உடலெல்லாம் வெல வெலத்தது. இரண்டே தாவலில் மூன்றாம் அறையினுள் புகுந்து மறைந்து நின்று கவனித்தான். 'சடார்' என்று ஆத்திரமாக அறைக் கதவு திறக்கப் பட்டது. "யார் அங்கே! மரியாதையாக வந்துவிடு வெளியே!" என்று ஒரு கரகரத்த குரல் கோபமாகக் கேட்டது.

"நீ வா, ஐயா, உள்ளே! வெறும் பிரமை! இங்கே எவன் வருவான் இந்த வேளைக்கு! ஹஹ்ஹா?!" என்று உள்ளேயிருந்தபடி மற்றொருவன் அவனைக் கேலி செய்து அழைத்தான்.



"கதவு சத்தம் கேட்டதே!"

"பழைய கதவு; தானாகவே சத்தம் போடும். அல்லது காற்றடித்திருக்கும். இப்படித்தான் நம் வீட்டில் ஒரு வலை பீரோ உண்டு. இருந்தாற்போலிருந்து இரவில் 'டக், டுக்' என்று அதில் சப்தம் கேட்கும். திருடன் வந்துவிட்டானோ என்று பயந்து போவார்கள்..."

மறுபடி கதவு சாத்தித் தாழ்ப்பாள் போடப்படும் சப்தம் கேட்டது. நாராயணனுக்கு போன உயிர் திரும்பி வந்த மாதிரி இருந்தது. மெள்ள வெளியே வந்து, மறுபடி அந்த அறைக் கதவுக்கு எதிரே நின்றான். அதைத் தொடாமல்தான்! உள்ளே ஏதோ அற்ப வெளிச்சம் இருந்திருக்க வேண்டும்; அது சாவி துவாரத்தின் வழியே தெரிந்தது. நாராயணன் குனிந்து உள்ளே பார்த்தான்.

இரண்டு நிமிஷங்களுக்குப் பிறகு அறைக்குள் இருந்த தெல்லாம் அவனுக்கு விளக்கமாகத் தெரிந்தன. இரு நாற்காலிகள்; ஒரு மேஜை; மேஜையின்மீது ஒரு மெழுகு வர்த்தி எரிந்தது. இருவர் அவனுக்கு முதுகைக் காட்டிய படி உட்கார்ந்திருந்தார்கள். இடது புறம் இருந்தவன் உடையினாலும், முகக் களையினாலும் நாகரிக ஆளாகத் தோன்றினான். ஐம்பது வயதுக்குக் குறைவில்லை. முகத்தில் சிறிது கவலைக் குறி; ஆனால் அது சோகமாக இல்லை. வலது புறம் இருந்தவன் நல்ல உடற்கட்டுள்ளவன்; தெம்பாக இருந்தான். முப்பத்தைந்து வயதை மதிக்கலாம். ஆனால் மற்றவனுக்கு அடங்கி நடப்பவனாகவே சொல்லும்படி இருந்தது அவன் தோற்றம். அவன் கையில் தான் ஒரு தோல் பை இருந்தது.

"எப்படி அதை வாங்கினேன் தெரியுமா? அசந்து போய் விட்டான் அந்தப் பயல்!... காலையில் போய்க் கேட்ட போது 'திருட்டுப் போய் விட்டது' என்று மூக்கால் அழுதான். சால்ஜாப்பு சொல்கிறான் என்று நினைத்து விட்டேன்; ஆனால் அது உண்மைதான் என்று அப்புறம் தெரிந்தது!" என்றான் பெரியவன்.



29/05/2011

''நம் கையை விட்டுப் போய்விட்டால், திரும்ப வருகிற வரைக்கும் அது நம்ம பண்டம் இல்லை என்கிறேனே! இப்போ நீங்கள் மட்டும் அவனிடம் அப்படிப் பிடுங்காமல் இருந்தால் மரியாதையாக கொண்டு வந்து கொடுத்திருப்பான் என்கிறீர்களா! நிச்சயம் இல்லை!''

''நான் மட்டும் விட்டு வைப்பேனா! எட்டு மணியிலிருந்து அந்த வட்டாரத்தில் நான் சுற்றிக் கொண்டிருக் கிறேனே! கடைசியில அது வீண் போகவில்லை...என்ன! இப்பொழுதே பிரித்து விடுவோமா? அல்லது அவரும் வரட்டுமா?''

''அவரு பாட்டுக்கு வரட்டும். அதற்குள்ளே நாம் பிரித்து வைத்துக் கொள்ளுவோம். அவருக்குத் தெரியாமல் நாம் அள்ளிக் கொண்டு போய்விடப் போகி றோமா?''

''இத்தனை நேரம் காத்திருந்தோம்; இன்னும் சற்று பார்த்து விடுவோமே என்று நினைத்தேன். சரி, இப் போதே பிரிப்பதானால், வெளிச்சம் போதாது. இன்னும் இரண்டு மெழுகு வர்த்தியைக் கொளுத்தி வை. அவர் வாசல் வழியாகத்தான் வருவார். சாவி கொடுக்கிறேன். வருகிற சமயம்தான் இதுவும்.''

மறுபடி நாராயணன் பழைய பிசகையே செய்து விட்டான். அவனையும் அறியாமல் அவன் தலை லேசாகக் கதவில் இடித்து விட்டது. கதவு 'டக்!' என்று ஒரு சப்தத்தை எழுப்பியது. அப்போதே இருவரும் திடுக்கிட்டு நிமிர்ந்து எழுந்து விட்டதைக் கவனித்தான் நாராயணன். முக்கியமாக சின்னவன் ஒரு துள்ளு துள்ளினான். இனி மூன்றாவது அறைக்குப் போவதற்கு அவகாசம் இல்லை. எனவே, முதல் அறையில் பாய்ந்து, கதவின் இடுக்கில் சுவரோடு சுவராக ஒட்டி நின்று கொண்டான் நாராயணன். பயத்தில அவன் நெஞ்சு செம்மட்டிகொண்டு அடித்தது.

அவர்களுக்கு இப்போது சந்தேகம் அதிகமாயிருக்க வேண்டும். எனவே அறைக் கதவைப் படீர் என்று திறந்து கொண்டு இருவரும் வெளியே வந்து நின்றார்கள்.



''நிச்சயம் யாரோ இங்கே வந்திருக்கிறார்கள்... நன்றாகப் பார்த்தாக வேண்டும்!'' என்றான் சின்னவன்.

''நீ இவ்வளவு நிச்சயமாகச் சொல்வதைப் பார்த்த பிறகு எனக்கும்தான் சந்தேகம் வந்துவிட்டது. ஆனால், இங்கே வருவதற்கு நம்மைத் தவிர யாருக்குத் தெரியும்?''

''ஏன் இதற்கு முன் உங்களுள்ளான் வரவில்லையா? அவன் தோழன் வரவில்லையா?''

''இன்றைக்கு வருவானேன்!... சரி, அதைப்பற்றி இப்போது என்ன சர்ச்சை! சந்தேகம் தீர நாம் இருவரும் சுற்றிப் பார்த்துவிடலாம்...நீ மேலே பார்; நான் கீழே சுற்றிக்கொண்டு வருகிறேன்.''

பதிலுக்குக் காத்திராமல் பெரிய ஆசாமி மாடிப் படியில் இறங்கத் தொடங்கி விட்டான். முதல் அறையில் ஒளிந்து கொண்டிருந்த நாராயணன் எந்த நிமிஷமும் அதனுள் சின்னப் போவழி வந்துவிடுவான் என்று எதிர் பார்த்தான். நேருக்கு நேர் போர் என்று நடந்தால் இரண்டே நிமிஷத்தில் நாராயணனைக் கீழே தள்ளி ஏறி நிற்கும் பலம் மற்றவனுக்கு இருந்தது. இதை நாராயணன் நன்கு அறிந்திருந்தான். விதி என்ன செய்யுமோ என்ற அச்சத்துடன், சற்றும் அசையாமல் மூச்சை அடக்கிக் கொண்டு காத்திருந்தான்.

அவனும் முதலில் நாராயணன் ஒளிந்திருந்த அறை வாசற்படியில்தான் வந்து நின்றான். ஒரு முறை மெள்ள வாயால் 'விஸில்' அடித்தான். 'இங்கே எவன் இருக்கப் போகிறான்' என்று உரக்கச் சொல்லிக் கொண்டான்! பிறகு அதை விட்டு மூன்றாம் அறையைப் பார்க்க சென்றான். 'கதவின் பின்னால் எட்டிப் பார்ப்பான், கையைப் பற்றிக் கரகரவென்று இழுத்து வெளியே எறிவான். ஒரே குத்தில் மூர்ச்சையடையச் செய்வான்' என்றெல்லாம் எதிர்பார்த்த நாராயணன் ஏமாந்துபோட்ப் போனான் என்று சொல்ல [illegible]ம் இருக்கிற அளவு மூளையைக் காணோமே!' என்று அவன் எண்ணி விட்டான்.

29/05/2011 1

அதற்குள் அந்த ஆள் மூன்றாம் அறையையும் பார்த்துக் கொண்டு மாடிப்படியில் இறங்கத் தொடங்கி விட்டான். 'ஒரு வேளை தன் சகாவுக்குத் துணையாகவும் போகலாம்! இந்த அம்சம் நாராயணனுக்குத் தெம்பு அளித்தது. எத்தனை பெரிய மடையன் அவன்!' என்று நாராயணன், தைரியமாக வெளிப்பட்டான். வேறு யாரும் மாடியில் இல்லை என்ற தெம்புடன் எதிரிகளின் அறைக் குள்ளேயே புகுந்து விட்டான். மெழுகுவர்த்தி வெளிச்சத் தில் மேஜை மீது அவசரமாக ஒரு கண்ணோட்டம் விட்டான்.

அப்போது மறுபடி அவன் மனத்தில் ஒரு சோர்வு ஏற்பட்டது. அவன் எதிர்பார்த்தபடி அவர்கள் அத்தனை முட்டாள்கள் அல்ல; கையோடு அந்தப் பையையும் கொண்டு போயிருந்தார்கள். விட்டு வைத்திருந்தால், அவனுக்கு எத்தனை சௌகரியம்! அதை எடுத்துக் கொண்டு வந்த சுவடு தெரியாமல் இறங்கி ஓடி விடலாம் அல்லவா? வெற்றி என்பது எளிதில் கிடைப்பதில்லை. கொஞ்சம் பிரயாசைப்பட்டால்தான் கிடைப்பதுண்டு போலும்!

மாடிப்படியில் காலடிச் சப்தம் கேட்டு விட்டது. மீண்டும் நாராயணனுக்குக் கஷ்ட காலம். அதை அவன் எதிர்பார்க்கவில்லை. எனவே, அவன் அப்போது செய்யக் கூடியதையே செய்தான். ஒரு கணத்தில் மெழுகுவர்த் தியை அணைத்து விட்டு ஒதுக்குப்புறமாக ஓடி நின்றான். அறையில் இருள் சூழ்ந்து கொண்டது. இப்போது வெளிப் பட்டால் நிச்சயம இருவரில் ஒருவரை அவன் எதிர்ப்பட்டுத் தான் ஆக வேண்டும்! ஒரே ஒரு சந்தர்ப்பம்—விளக்கேற்ற மறுபடி எதிரி வெளியே சென்றால்தான் உண்டு.

ஆனால் ஆரம்ப முதலே, நாராயணன் போட்ட திட்டங்கள் வேறு; நடந்தது வேறு. முதல் அறையில் வந்து தேடினவன் நாராயணனைக் கதவு மறைவில் கண்டு விட்டான். எனினும், இருட்டில் என்ன ஆயுதத்துடன் எப்படித் தாக்குவானோ என்று எச்சரிக்கையாக, வெளி யேறி விட்டான். மேலும், எதிரியை ஜரூர் செய்யாமல்



இருக்க முதல் அறையைத் தேடுவதுபோல் போக்குக் காட்டி மாடிப் படியிலும் இறங்கியிருக்கிறான். மாடிப்படியில் அவன் இறங்கியது நாலே படிகள் தான்! இருட்டில் இருந்த படியே நாராயணன் வெளிப்பட்டதையும், நடு அறையில் மெழுகுவர்த்தி வெளிச்சத்தில் நின்றதையும் கவனித்து விட்டுப் புன்னகை செய்திருக்கிறான். எதிரியிடம் ஆயுதம் ஏதும் இல்லை என்று இப்போது திருப்தியடைந்தவனாகவே திரும்ப வந்திருக்கிறான்.

நாராயணன் விளக்கை ஊதி அணைக்காமல் இருந்தால் கட்டாயமாக ஒரு அடி மண்டையில் விழுந்து அநேக மாதங் கள் அவனை ஏதேனும் ஒரு ஆஸ்பத்திரியில் தூங்க வைத் திருக்கும். இருட்டிலே எதிரியின் குறி தவறிவிட்டது. இரண்டாம் முறையாக ஒரு குத்து ஆகாயத்தில் பறந்து வந்தது. நாராயணன் பக்கவாட்டில் சடார் என்று குனிந்து கொண்டதனால் இரண்டாம் முறையும் தப்பித்துக் கொண் டான்; ஆனால், அதே சமயம் எதிரியின் கால் அவன் தோள் பட்டையில் 'சொடேர்' என்று தாக்கி அவனைப் பலமாகத் தள்ளியது. இரு முழங்கால்களையும் கைகளையும் ஊன்றிக் கொண்டு கீழே விழுந்தான்.

இருட்டு; எந்த நிமிஷம், எந்த இடத்தில் அடுத்த அடி விழுமென்று சொல்வதற்கில்லை. அந்த நிலையில், எதிரி யின் கால்கள் அவனது விலாவை வருடிக் கொண்டிருந்தன. இரு கை விரல்களும் அவனுடைய கைகளைத் துழாவிக் கொண்டு மேலே வந்து தொண்டையைக் கைப்பற்ற முயன்று கொண்டிருந்தன.

நாராயணன் அவ்வளவு லகுவாகத் தன் கழுத்தை அந்த விரல்கள் பிடித்து கொடுத்து விடவில்லை. விரைவாக நகர்ந்து கொண்டு, அதே கைகளைப் பற்றியவாறு அவன் தோள் வரை தனது கைகளைக் கொண்டு சென்றான். அப்பா! அந்தக் கைகள் தான் [illegible] ஒரு உத்தேசமாக முகம் எங்கு [illegible] ன் நாராயணன் ஓங்கி ஒரு குத்து விட்டான். அது எதிரியின்

29/05/2011 13

காதிலோ கன்னத்திலோ பட்டிருக்க வேண்டும். மறுகணமே அந்த ஆசாமியிடமிருந்து ஒரு முனகலை அது வருவித்து விட்டது.

ஆனால், அடுத்த விநாடி, சுமார் இரு நூறு பவுண்டு நிறையுள்ள ஓர் உருவம் நாராயணன் மேல் விழுந்து, அவனைத் தரையோடு தரையாக அழுக்கியது. விரல்கள் மென்னியை நெரித்தன; அவன் மார்பெலும்புகள் கனம் தாங்க மாட்டாமல் திணறின. அவன் முகத்தில் உஷ்ணமான மூச்சுக் காற்று விசிறி போட்டது போல் அடித்தது. வர வர விரல்களின் அழுத்தமும் அதிகமாகி வந்தது.

இதை மேலும் அனுமதித்தால் இன்னும் ஐந்தே நிமிஷங்களில் நாராயணனுக்கு மூச்சு முட்டிப் பிரக்ஞை போய்விடும். அந்த நிலையில் அவன் கழுதைப் பற்றியிருந்த விரல்களை அகற்ற முயன்றான். எங்கிருந்தோ ஓர் அசாதாரணமான பலத்தை வருவித்துக்கொண்டு, ஒரு புரட்டுப் புரட்டி அவனை அப்பால் தள்ளிவிட்டு எழுந்து நின்றான்.

முழுவதும் எழுந்திருக்குமுன் எதிரி தாக்கிக்கொண்டு வந்துவிட்டான். தலையால் ஓங்கி ஒரு முட்டு; ஆனால், இருட்டில் மீண்டும் குறி தவறிவிட்டது; மேஜையின் முனையில் மண்டை தாக்கிவிட்டது. அதனால் இரண்டுவித நஷ்டம் எதிரிக்கு. ஒன்று நாராயணனுக்குச் சமாளித்துக் கொள்ள அவகாசம் கிடைத்துவிட்டது; இரண்டாவது, எதிரிக்கு மண்டைக்கு ஏற்பட்ட விபத்தால் அது சுற்றியது.

ஒரு நிமிஷம் போர் நிறுத்தம்; பின்னர் இரு காளைகள் தாக்கிக் கொள்வது போல ஒருவரையொருவர் எதிர்த்தார்கள். நாராயணன் காலால் உதைத்த ஒரு உதை விலாப்புறத்தில் எதிர்பார்த்ததைவிடப் பலமாகப் பட்டு விட்டது. காற்றுப் போன மோட்டார் டயர் மாதிரி 'புஸ்' ஸென்று உட்கார்ந்துவிட்டான் அந்தக் குண்டன். 'நாமா ஜயிக்கிறோம் இந்தச் சண்டையில்!' என்று நாராயணனுக்கே சிறிது நேரம் நம்பிக்கையில்லை. இருட்டு உதவியது. எனவே மறுபடி தாக்கினான். உட்கார்ந்துவிட்ட எதிரியின்



மண்டையில் 'மொட்டு' 'மொட்'டென்று மாற்றி மாற்றி இரு கைகளாலும் குத்தினா; குத்திக் கொண்டேயிருந்தான். அவனோ தலையைக் குலுக்கிவிட்டு உறுமினான். ஒரே ஒரு முறை மட்டும் எதிரி கையைச் சுழற்றி அடித்த அடியை நாராயணன் வாங்கிக்கொண்டு அறைக்கு வெளியே போய்க் குப்புற விழ வேண்டி வந்தது. எதிரிக்கு மட்டும் சிறிது தெம்பு மிகுதியிருந்தால், தொடர்ந்து சென்று நாராயணனைத் தாக்கி எறிந்திருக்கலாம். ஆனால் அவன் சக்தி அதற்குள் மங்கிவிட்டது. அவன் பேசாமல் இருட்டில் உட்கார்ந்து நீண்ட மூச்சுகள் விட்டுக் கொண்டிருந்தான்.

நாரயணனுக்கு இனிமேல் அறைக்குள் காலை வைக்கப் பயம். எந்த இடத்தில் இருந்தும் எதிரி தாக்கலாம் தவிர வாசற்படியை நெருங்கினாலே தன் இருப்பிடத்தைக் காட்டிக் கொள்ள வேண்டி வரும்.

தவிர, அவன் அங்கே இனி தாமதிக்கக் கூடாது! கீழே சென்ற ஆள் எந்த நிமிஷமும் திரும்பி விடலாம்... ஆனால், வந்த காரியம் பலிதமாகவில்லையே! எங்கே அந்தத் தோல் பை? அதை எப்படி எடுப்பது? இப்போது யார் கையில் அது இருக்கிறது?

நாராயணன் மடமடவென்று மாடிப்படியில் இறங்கினான். நான்கு படிகளுக்குப் பிறகு ஐந்தாம் படியில் கால் வைத்த சமயம், அவன் கால் படியில் இல்லை, தோல் பை மீது இருந்தது! 'ஓஹோ! அதை இங்கேயா வைத்துவிட்டு அவன் சண்டைக்கு வந்திருக்கிறான்!'

நாராயணன் அதைக் கைப்பற்ற முடியாமல் அப்படியே வழுக்கி விழுந்தான்; வந்த வேகத்தில் மூன்று நான்கு படிகள் விதம் தள்ளிக்கொண்டு போயிற்று. படித் திருப்பத்தில் சுவரோடு மோதிக் கொண்டால் மட்டுமே அந்த வேகத்தைத் தடுக்கலாம்.

அவன் சுவரில் மோதிக் கொள்ளவில்லை. எதிரே வந்து கொண்டிருந்தான் பெரிய ஆசாமி

29/05/2011

மெள்ளத்தான் வந்து கொண்டிருந்தான். நாராயணன் சூறைக்காற்று போல் பறந்து வந்து கொண்டிருந்ததைக் கண்டதும், அவசரமாகத் திரும்பினான். அதற்குள் தன் முழு பலத்துடன் அவன்மீது விழுந்து நாராயணன் கீழே விழாமல் சமாளித்துக் கொண்டான். நாராயணனுக்குப் பதிலாக அந்த ஆசாமி மிகுதி மாடிப் படிகளில் உருளத் தள்ளப்பட்டான்.

நாராயணனுடைய மூளை முற்றும் விழிப்புடன் இருந்தது. மேலே திரும்பிப் பார்த்தான். உயரே எதிரி இன்னும் எழுந்திருக்கவில்லை. இரண்டே படிகளுக்கு மேலே தோல் பை கிடந்தது. ஒரு 'லாவில்' அதை எடுத்துக் கொண்டான். கீழே மாடிப்படிக்கு அடியில் பெரிய ஆசாமி தரையில விழுந்து இடுப்பைப் பிடித்துக் கொண்டிருந்தான். அவன் எழுந்திருக்க ஐந்து நிமிஷமாவது பிடிக்கும். தவிர வேறு மூன்றாவது பேர்வழி ஒருவனையும் அவர்கள் எதிர் பாரததிருந்தார்கள். அவன் வந்துவிட்டால் என்ன ஆகும் என்று சொல்வதற்கில்லை. வந்தகாரியம் ஆனபிறகுநிற்பது உசிதமே இல்லை என்ற விவேகத்துடன் நாராயணன் வந்த வழியே ஓடினான். புழக்கடைச் சுவரைத் தாண்டி வெளியே இறங்கி, சைக்கிளில் ஏறிக் கொண்டான்.

சந்தைக் கடந்து தெருவுக்கு வந்தான். 1036-ம் நம்பர் வீட்டிலிருந்து பார்த்தால், நாலாவது வீட்டு வாசலில் இப்போது ஓர் ஆசாமி நிற்பது தெரிந்தது. நன்றாகப் போர்த்திக் கொண்டு இருந்தான். ஆகவே அடையாளம் கண்டுகொள்ள முடியவில்லை. இரு புறமும் பார்த்துவிட்டு ஒரு சாவியை எடுத்துப் பூட்டைத் திறந்தான். பிறகு வீட்டினுள் நுழைந்து, கதவைச் சாத்தித் தாழ்ப்பாள் போட்டான்.

நாராயணனுக்குச் சிரிப்பு வந்தது. அவன் அப்போது வந்தது நாராயணன் கையில் இருக்கும் பையைக் குடை வதற்காக! இரு சகாக்கள் அதை வைத்துக்கொண்டு



உள்ளே காத்திருப்பார்கள் என்று எதிர்பார்த்து வந்தான். ஆனால், அதை நாராயணன் எடுத்துக் கொண்டு தப்பி விட்டான்! இனி, சகாக்களுக்கு உடம்பைப் பிடித்துவிட்டு, ஆசுவாசப் படுத்துவதுதான் அவன் செய்யக்கூடிய காரியம்.

மற்றொரு திகில் நாராயணனைப் பற்றிக் கொண்டது. இந்தக் கோஷ்டியில் மூன்று பேர்தான் என்பது என்ன நிச்சயம்! இன்னும் எத்தனை பேரோ! அவர்கள் யாரேனும் அவனை வழி மறித்துப் பிடுங்கிக் கொண்டால்! ஆகவே, வந்த வழியே செல்லாமல் வேறு சந்துபொந்துகளில் புகுந்துதான் போக வேண்டும்!

இந்த யோசனை மிகவும் சிறந்த யோசனை என்பதில் சந்தேகம் இல்லை. ஏனெனில் 'ஏழு'ம் ரத்தினமும் 'எஸ்பிளனேட்' வட்டாரத்தில் சுற்றிச் சுற்றி வந்து கொண்டிருந்தார்கள்.

சுமார் ஒன்றரை மணி நேரத்திற்குப் பிறகு நாராயணன் வியர்வை ஆறாகப்பொழிய, தேனாம் பேட்டையில் செங்கல்வராயபிள்ளை பங்களா வாசலில் சைக்கிளிலிருந்து இறங்கினான். விரைவில் பொழுது விடி வதற்கான எல்லா அறிகுறிகளும் தென்பட்டன. சில் லென்ற காற்றும் அடித்தது. தொலைவில் கோழிகள் கூவின. கீழ்த் திசையில் விண்மீன்கள் ஒளி மங்கிக் காணப் பட்டன. நாராயணன் தலை நிமிர்ந்து வெற்றி வீரனாக உள்ளே சென்றான். செங்கல்வராய பிள்ளை தலையைச் சீவி விடுவார் என்ற பயம் அவனுக்கு இல்லை. அவருக்கே ஒரு உதவி செய்து கொண்டு வந்திருக்கிறான். இந்தப் பை அவர் கவலையை நீக்கும். இந்திராவின் முகத்தை மலரச் செய்யும்; சந்துருவின்பால் அவன் கௌரவத்தை உயர்த்தும்!

அவன் ஹாலில் நுழைந்தான். அண்ணாமலை எதிர்ப் பட்டு, அவர்கள் எல்லாரும் மாடியில் வராந்தாவில் இருப்பதாகச் சொன்னான்.

29/05/2011 13:

மதுரநாயகம் இருந்தார்; திலகவதி அம்மாள். இந்திரா சந்துரு எல்லாரும் இருந்தார்கள். ஒருவராவது உட்கார வில்லை. நின்றபடி உலாவுவதும் பேசுவதுமாகவே இருந்தார்கள்.

நாராயணன் வந்ததை முதல் முதலாகச் சந்துருதான் கவனித்தான். "வாருங்கள், வாருங்கள்! எங்களுக்கெல் லாம் பலத்த போட்டி ஏற்பட்டு விட்டது! துப்பறியும் வேலையில் அப்படி இறங்கிவிட்டீர்கள், போங்கள்!" என்று கையை நீட்டிப் பையை வாங்கிக் கொண்டான். பிறகு ஒரு ஸ்டூலை இழுத்துப் போட்டுக்கொண்டு அதில் உட்கார்ந்தான்.

"மிஸ்டர் நாராயணன்! துப்பறியும் வேலையில் பெரிய வெற்றி பெரும் தோல்வியாகவும் மாறுவது சர்வ சகஜம்... அதாவது, நேர் தலை கீழாகப் போகும். ஆகையால் சந்தோஷமோ, துக்கமோ, பெருமையோ, மனச்சோர்வோ அடையவே கூடாது. மதுரநாயகம் உங்களுக்கும்தான் இந்த வார்த்தை! நாம் எல்லோரும் பேசிக்கொண்டிருந்த போது ஒரு கத்தி வந்து விழுந்ததே, அது எனக்கு என்று சொன்னீர்கள்! ஆனால், அது உங்களை உத்தேசித்து வந்தது! இதோ பாருங்கள். இப்போது இந்தப் 'பை' வந்திருக்கிறது. எத்தனையோ கஷ்டப்பட்டு நமது நண்பர் நாராயணன் இதைக் கொண்டு வந்திருக்கிறார். உயிரைத் திருணமாக மதித்துச் சம்பாதித்துக் கொண்டு வந்திருக் கிறார். திலகவதியம்மாள்! இது வந்த வேளையில் செங்கல்வராய பிள்ளை இல்லையே என்று நீங்கள் வருத்தப்படுகிறீர்கள். எனக்குத் தெரியும்! இது வந்ததும் வராததும் ஒன்றுதான்; யாருக்கும் பயன் இல்லை!"

"ஏன் அப்படிச் சொல்கிறீர்கள்?" என்று கேட்டாள் இந்திரா.

"இது நாராயணனின் பெரிய தோல்வி. 'இந்தப் பையைத் தேடிக்கொண்டு நான் போகட்டுமா?' என்று நாராயணன் ஒரு வார்த்தை என்னைக் கேட்டிருந்தால்



நான் 'வேண்டாம்; சும்மா வீட்டில் போய்ப் படுத்துத் தூங்குங்கள்!' என்று சொல்லியிருப்பேன்."

"ஏன்?"

"இதில் யாருக்கும் உபயோகமான பண்டம் இருக்கும் என்று நான் எதிர்பார்க்கவில்லை. ஒரு வேளை, தவசுப் பிள்ளைக்கு உபயோகமாக இருக்கலாமோ என்னமோ!" என்று சொல்லி அந்தப் பையைத் திறந்து கவிழ்த்தான்.

தரையில் 'பொல பொல'வென்று கிழிந்த காகிதக் குப்பை கொட்டியது.

நாராயணன் அதில் கொஞ்சம் எடுத்துப் பார்த்து விட்டு, 'அத்தனையும் வெற்றுக் காகிதம்!' என்று விளக்க மாகச் சொல்லிக் கீழே எறிந்தான்.

## செங்கல்வராய பிள்ளை சென்ற விதம்

நடு நிசியின் நிசப்தத்தைக் கலைத்துக் கொண்டு 'டுமீல! டுமீல்!' என்று இரண்டு வேட்டுச் சப்தங்கள் எழுந்ததைக் கேட்டதும், பங்களாவில் இருந்த அனைவரும் திடுக்கிட்டு விட்டார்கள் அல்லவா? அது சமயம் மாடிப் படியில் வெகு வேகமாக ஓடி வந்து கொண்டிருந்த சந்துரு கூடத் திகைத்து நின்று விட்டான்.

சற்று முன்பு வரை சந்துரு தனது அறை ஜன்னலின் பக்கத்தில் உட்கார்ந்தபடி கீழே மதுரநாயகம் மெள்ளவந்து கொண்டிருந்ததையும் அவரைப் பின்னாலிருந்து வந்த ஓர் ஆசாமி தாக்க முயன்றதையும், இருவரிடையிலும் மௌன [illegible] மாகவும் துரிதமாகவும் [illegible] கடைசியில் மதுரநாயகம் தன்னை [illegible]

29/05/2011 13:

வீழ்த்திச் செடி மறைவுக்குள் இழுத்துச் சென்றதையும், அவ்வழியே அண்ணாமலை வந்து வழியில் கிடந்த ஒரு கைக்குட்டையைக் கைப்பற்றிக் கொண்டு போனதையும் ஒன்று விடாமல் கண்டு விட்டே ஓடி வந்தான். வரும் போதுதான் வேட்டுச் சத்தம் கேட்டு அவனை இரண்டு நிமிஷம் நிறுத்தி வைத்து விட்டது. மீண்டும் அவன் தொடர்ந்து ஓடி, வாசற் கதவுகளைத் திறந்து கொண்டு, தோட்டத்தை அடைவதற்குள் சுமார் பத்து நிமிஷங்கள் வரை ஆகியிருக்கும்.

வாசற்படிக்கு வெளியே சந்துரு சில விநாடிகள் தயங்கி நின்றான். எந்த இடத்திலிருந்தாவது அவனுக்கு ஆபத்து நேரலாமோ என்ற எண்ணம் சிறிது நேரம் அவன் மனத்தைக் குழப்பியிருக்க வேண்டும்; ஆனால், அது சில விநாடிகளே தான். பிறகு சந்துரு முன்னதாக மதுரநாயகம் சண்டை போட்ட இடத்திற்குத்தான் விரைந்து சென்றான். தரையில் இருவர் கட்டிப் புரண்டு தாக்கிக் கொண்டதற்கு அடையாளங்கள் பல தென்பட்டன. அடுத்தபடியாக, மதுரநாயகம் மற்றொருவனை இழுத்துக் கொண்டு சென்ற பக்கம் கவனத்தைச் செலுத்தினான். பல இடங்களில் செடிகள் வளைந்தும் முறிந்தும் காணப்பட்டன. ஆனால், அங்கே மதுரநாயகமோ வேறு யாரோ இப்போது தென்படவில்லை. சற்று முன்பு இருந்திருந்தாலும், பத்து நிமிஷங்களுக்குள் ஓடி ஒளிந்திருக்க வேண்டும்.

மதுரநாயகம்கூட மறைந்து கொண்டிருக்கலாம்; அடிபட்டவன் எப்படி ஓடினான் என்று சந்துரு சிறிது நின்று நிதானித்தான். சுற்று முற்றும் பார்த்துப் பார்த்துத் தேடினான். பலன் ஒன்றும் இல்லை. வெகு விரைவில் அவர்கள் சென்றிருந்தால் ஒழிய, அவ்வளவு சீக்கிரத்தில் மறைந்து கொண்டிருக்க முடியாது.

"ஒருகால் கீழே விழுந்து விட்டவனுக்கு நண்பர்கள் இருந்து அவனை அப்புறப்படுத்தியிருக்கலாமோ?.. அல்லது மதுரநாயகமே தம்மை உத்தேசித்து அவனை மறைத்



திருக்கலாமோ?" — இரண்டில் ஒன்றின் காரணமாகவே அந்த ஆசாமியை இப்போது காண முடியவில்லை!

சந்துரு வெளியே வந்தான். மறுபடி சண்டை நடந்த இடத்திற்கே திரும்பி, சிறிது யோசனையில் ஆழ்ந்தான். மேலும் இரண்டு நிமிஷங்கள் சென்றிருக்கும். அண்ணாமலை வேகமாகத் திரும்பிக் கொண்டிருந்தான். சந்துருவை அங்கே அவன் எதிர்பார்க்கவில்லை. ஆகையால் கண்டதும் திடுக்கிட்டுப் போய் விட்டான். "ஐயா! நீங்களா!" என்று கூவிவிட்டான்.

"ஆமாம்! நானேதான் அண்ணாமலை! இப்போது தான் வருகிறேன்...இரண்டு வெடிச் சத்தம் கேட்கவில்லை இப்போது?" என்று கேட்டான் சந்துரு.

"நான் தோட்டத்தின் கோடியில் இருந்து வருகிறேன்" என்று மழுப்பினான் அண்ணாமலை.

"நான் சொல்கிற சப்தம் நீ அடுத்த பேட்டையிலிருந்து வந்தால் கூடக் கேட்டிருக்க வேண்டுமே...உன் காதில் ஒன்றுமே விழவில்லையோ?"

அண்ணாமலை தலையைச் சொறிந்து கொண்டான். "ஏதோ சப்தம் கேட்ட மாதிரியும் இருந்துச்சுங்க! இங்கே சுற்று வட்டாரத்திலே கொக்கு சுடற வழக்கம் உண்டு. அதுமாதிரி எவனாவது..."

"கொக்கின் தலையில் வெண்ணெயை வைத்துப் பிடிக்கிறவர்களைப் பற்றித்தான் எனக்கு இங்கே அனுபவம் உண்டு...உன் காதில் வேட்டு சப்தம் கேட்கவே இல்லையே?"

"அப்படி இல்லை. நானே உங்களைக் கேட்கலாமுன்னு நினைத்தது உண்டு! அதற்குள்ளே நீங்க என்னைக் கேட்டு விட்டீங்க!" என்று மறுபடி மழுப்பினான்.

சந்துரு அண்ணாமலையைப் பார்த்து ஒரு விஷமப் புன்னகை செய்தான். "நீ ரொம்ப நல்லவன்; உன் எஜமானி அம்மா எனக்கு வேண்டிய அளவு சொல்லியிருக்கிறார்கள்...உன்னைப் ப[illegible] சொந்த ஊர்தான் ஞாபகம் வருகிறது. நான் [illegible]

29/05/2011 13:

ஜில்லா. அங்கே ஒரு ஆளு உன் மாதிரியே இருப்பான்; அசைப்பிலே பார்த்தால் நீ என்றுதான் சொல்ல வேண்டும். அவன் கிட்டே ஒரு குணம், சதா பொய் சொல்லிக் கொண்டேயிருப்பான். நூறு பேச்சுக்கு ஐந்தாறு பேச்சு மட்டுமே நிஜம் இருக்கும்.''

''என்னாங்க எசமான், என்னைப் பார்த்து...''

''இரு! அவசரப்படாதே! அவனுக்கு ஊரில் என்ன பெயர் தெரியுமா, அரிச்சந்திரன்! 'இதென்ன கேலிக்காக இப்படிப் பெயர் வைத்துக் கூப்பிடுகிறீர்களா?' என்றுநான் கேட்டேன். அப்படி இல்லை என்று உடனே தெரிந்து விட்டது. எங்கள் ஊரில் சாதாரணமாக மற்றவர்கள் பேசினால் நூறு பேச்சுக்கு இரண்டு அல்லது ஒன்றுதான் நிஜம் இருக்கும். அப்போ இவன் எத்தனை பெரிய யோக்யன்!... அப்படி அதை வைத்துப் பார்க்கணும். ஒரு தொழிலில் இருக்கிற ஒருவன் பெரிய போக்கிரியாக இருக்கிறான்; ஆனால் ஜனங்கள் அவனைக் கோயிலில் வைத்துக் கும்பிட வேண்டுமென்கிறார்கள். ஏன்? அதே தொழிலில் இருக்கிற மற்றவர்கள் அத்தனை படு போக்கிரியாக இருந்து விடுகிறார்கள்.''

''ஐயா! நான் படித்தவன் இல்லிங்க.''

''நீ எதற்கும் பயப்படாதே! இந்த வீட்டில் உன்னை விட நம்பகமான ஆள் யாரும் இல்லை என்பதில் எனக்குச் சந்தேகம் கிடையாது...எங்கே, சொல்! இப்போது நீ எதற்காகத் தோட்டத்தில் சுற்றுகிறாய்?''

''அதற்குள் மறந்துவிட்டீங்களே! நம்ம கணேச ஐயாவை இட்டுவரச் சொல்லி நீங்களே என்னை அனுப்பவில்லையா?''

''ஓஹோ! நான் அனுப்பினேனா? அப்படியா சமாசாரம்? இந்த வீட்டிற்கு வந்ததிலிருந்து எனக்கு ஞாபகசக்தி அதிகமாக வளர்ந்துவிட்டது. கணேசனைத் தோட்டத்தில் காண முடியாது. ஏனென்றால் அவர் அங்கே இல்லை—

என்று சொன்னதாக எனக்கு ஞாபகம். அப்படியானால் மதுரநாயகமும் இங்கேதான் சுற்றிக் கொண்டிருக்கிறார் என்று சொல்லு!''

அண்ணாமலை பதில் கூறுமுன் பின்னாலிருந்து ஒரு கனைப்புச் சப்தம் கேட்டது. மதுரநாயகமே அவர்களை நோக்கி வந்து கொண்டிருந்தார். ''என்னைத் தேடுகிறீர்களா, மிஸ்டர் சந்துரு! இதோ வந்து கொண்டேயிருக்கிறேன்!'' என்றார் அவர் உற்சாகமாக.

''ஒன்றும் இல்லை. இரண்டு துப்பாக்கி வேட்டுகள் கேட்ட மாதிரி இருந்தது. ஒரு வேளை நான் சொப்பனம் கண்டிருக்கிறேனோ என்று சந்தேகம். அதைப்பற்றித்தான் அண்ணாமலையைக் கேட்டுக் கொண்டிருக்கிறேன். உங்கள் காதிலும் பட்டிருக்குமே?''

''நான் கவனித்ததாகச் சொல்ல முடியாது. இந்தப் பக்கம் சில சமயங்கள் மோட்டார்கள் அப்படி வெடிச் சப்தம் போல் செய்வதுண்டு.''

''ஓஹோ! அப்படியும் இருக்கலாம்; என் புத்திக்கு எட்டவில்லை. அது நீங்களும் கணேசனைத் தேடிக்கொண்டு தான் சுற்றி வருகிற மாதிரி நினைக்கிறேன்.''

''அதுமட்டும் இல்லை; என் நண்பர் செங்கல்வராய பிள்ளையைக் காணோம் என்ற பிறகு என் மனத்தில் சஞ்சலம் அதிகமாகி விட்டது!''

''உண்மை, உண்மை!''

''என் நிலைமையும் மிகவும் இரண்டுங் கெட்டானாகி விட்டது. அவர் திரும்பும் வரை நான் இந்த ஊரில் இருக்க வேண்டியவனாகி விட்டேன்; அவர் இல்லாத வீட்டில் நான் தங்கியிருப்பது நியாயமும் இல்லை; ஆனால், நண்பனாகிய நான் பெண்டுகளை நிர்க்கதியாக விட்டுச் செல்லலாமா என்று வேறு மனம் அடித்துக் கொள்கிறது.''

''உண்மை...உண்மை...அடேடே! உங்கள் கையில் சிறாய்த்திருக்கிறதே! எங்கேயோ இருட்டில் விழுந்திக்

20/05/2011

கிறீர்கள் போல் தோன்றுகிறது. நானே இப்போதுதான் பார்க்கிறேன்; முகத்தில் வேறு ஒரு காயம்; ஏதேனும் முள் கீறிவிட்டதா? சட்டையில் பெரிய அழுக்கு. கொஞ்சம் கிழிந்தும் காண்கிறது'' என்று சந்துரு அவரை உன்னிப்பாகக் கவனிப்பதுபோல் பாசாங்கு செய்து பேசத்தொடங்கி விட்டான்.

மதுரநாயகம் அப்போதுதான் அவைகளை உணர்ந்தவர்போல் பார்த்துக் கொண்டார். ''சற்றுமுன் ஒரு குழியில் காலை வைத்து விட்டேன்; அப்படியே விழுந்து விட்டேன்...'' என்றார்.

''முன்னாடி அதைக் கவனியுங்கள்... உள்ளே போங்கள்! இரவு வேளையில் நீங்கள் தனியாக இப்படிச் சுற்றி வருவது சரி அல்ல...யாராவது ஒரு எதிரி உங்களை வேறு யாரோ என்று நினைத்துத் தாக்கிவிட்டால்? என்ன தான் சமாளித்துக் கொள்வீர்கள் என்றாலும், அபாயமும் இருக்கிறதல்லவா?''

மதுரநாயகம் ஒரு மாதிரியாகச் சந்துருவைப் பார்த்தார். ஆனால் அந்த முகம் நிஷ்களங்கமாக இருந்தது. சந்துரு தொடர்ந்து பேசினான். ''இப்படித்தான் என் நண்பர் ஒருவர் தோட்டத்தில் உலாவிக் கொண்டிருந்தார் - பங்களூரில்...ஓஹோ எங்கள் ஊர்கூட பங்களூர்தானே?... திடீர் என்று விரோதி ஒருவன் அவர் மென்னியை நெரிக்க வந்துவிட்டான். ஒருவிநாடி தவறியிருந்தால் அவர் தீர்ந்தே போயிருப்பார். தெய்வ சங்கல்பமாகச் சட்டென்று திரும்பி பார்த்துவிட்டார். அதனால் இன்றைக்கும் இருக்கிறார் அவர். எதற்கு சொல்ல வருகிறேன் என்றால்—''

''நான் சீக்கிரம் போய், என் உடையை மாற்றிக் கொண்டு வருகிறேனே!'' என்றார் மதுரநாயகம்.

''எதற்குச் சொல்ல வருகிறேன் என்றால், இரவு வேளையில் யாருமே தனியாகச் சுற்றுவதை நான் விரும்ப மாட்டேன். அதுவும் செங்கல்வராய பிள்ளையின் நண்பர் ஆகையால் அபாயம் அதிகம்...''



''நான் இதோ வருகிறேன்'' என்று மதுரநாயகம் பங்களாவுக்கு விரைந்தார்.

* * *

சந்துரு தனது திருஷ்டியை இப்போது அண்ணாமலையின் பக்கம் திருப்பினான் - ''உன்னிடம் ஒரு சமாசாரம்! நான் உள்ளேயிருந்து ஓடி வந்தேன் அல்லவா? அவசரத்தில் கதவைச் சாத்தும் போது விரலை வைத்து நசுக்கிக் கொண்டு விட்டேன்...''

''ஐயோ சாமி! மருந்து போட்டுக் கொள்ளலாம்— வாங்க உள்ளே! இதை முன்னேயே சொல்லக் கூடாதா?'' என்று பதறினான் அண்ணாமலை.

''உஸ்ஸ்... இதற்கெல்லாம் மருந்து ஒன்றும் வேண்டாம். ஒரு சின்னத் துணி இருந்தால் போதும்... உன்னிடம் ஒரு கைக்குட்டை இருந்தால் கொடுத்து வையேன்; பிறகு நான் திருப்பி விடுகிறேன்...''

''உள்ளே வாங்க... வேண்டிய துணி இருக்குது.''

''அதெல்லாம் சொல்லாதே!... கையில் இருப்பதை விட்டு உள்ளே தேடுவானேன்? சும்மா என்னிடம் கொடுத்துவை, இந்தக் கைக்குட்டையை! அப்புறம் உனக்கு என்று திருப்பி விடுகிறேன்'' என்று சந்துரு கையை நீட்டி அண்ணாமலை இடுப்பில் சொருகிக் கொண்டிருந்த கைக்குட்டையை வெடுக்கென்று எடுத்துக் கொண்டான். சற்று முன் அதைத்தான் அவன் கீழேயிருந்து பொறுக்கியெடுத்திருந்தான்.

''அது என்னுடையது இல்லை, சாமி!''

''அதனால்தான் நான் அத்தனை சுவாதீனமாக எடுத்துக் கொள்கிறேன். இதற்காக நீ ஏன் பின்னால் சங்கடப்பட வேண்டும்?''

அண்ணாமலை பரிதாபமாகச் சந்துருவைப் பார்த்தான். சந்துரு அவனைப் பாராமல் ஆகாயத்தை அண்ணாந்தபடி கைக்குட்டையை ஆள்காட்டி விரலில் சுற்றிக்கொண்டு, ''என் கவலையெல்லாம் செங்கல்வராய



29/05/2011 1

பிள்ளையைப் பற்றிக்கூட இல்லை...கணேசன் எங்கே போய் விட்டார். ஜாக்கிரதையாகத் திரும்ப வேண்டுமே என்பது ஒன்று...வேட்டுச் சப்தத்தைக் கேட்டு அரண்டு போய் ஸ்திரீகள் அறையிலிருந்து வெளிப்பட்டுவிடக் கூடாதே என்பது இரண்டு; வா, போகலாம் நாமும்!" என்று அழைத்தான்.

அண்ணாமலை திரும்பித் திரும்பிப் பார்த்துக் கொண்டே சந்துருவைப் பின் தொடர்ந்தான்.

ஃ ஃ ஃ

சந்துரு எதிர்பார்த்தபடியே திலகவதியும் இந்திராவும் துப்பாக்கி வெடிச் சப்தம் கேட்டுப் பயந்து விட்டார்கள். அறையிலிருந்து வெளிப்பட்டு, மாடி ஹாலில் எல்லா விளக்குகளையும் ஏற்றிக் கொண்டு நட்ட நடுவில் நின்றார்கள். இருவர் உடலும் பயத்தினால் நடுங்கிக் கொண்டிருந்தன.

சந்துருவைப் பார்த்த பிறகே இருவருக்கும் உயிர் திரும்பி வந்தது எனலாம். அப்போது ஏற்பட்ட ஆறுதலில் இந்திரா கதறியே விட்டாள்; "ஸார், ஏன் இப்படி எங்கள் குடும்பத்தை ஏதோ ஒன்று பிடித்து ஆட்டுகிறது! ஏன் இந்தப் பயங்கரங்கள் தொடர்ந்து நடக்கின்றன? அவைகள் இப்போது நடப்பானேன்... சித்தப்பா எங்கே போய் விட்டார் என்று ஏதாவது விளங்குகிறதா? அண்ணா கணேசனையும் காணவில்லையே!... உங்களுக்கு ஒன்றுமே தெரியாதா? அல்லது, சொல்லக் கூடாதென்று மறைத்து வைத்துக் கொண்டிருக்கிறீர்களா?" என்று கேட்டாள்.

சந்துரு பின் கையைக் கட்டிக்கொண்டு உலாத்தினான். "மிஸ் இந்திரா! நீங்களும் திலகவதியம்மாளும் சிறிது காலத்திற்கு மிகவும் தைரியமாக இருந்தாக வேண்டும். இப்போது யாருக்கும் எவ்வித ஆபத்தும் இது வரை வந்து விடவில்லை. இனி மேல் வராமல் பாதுகாக்க வேண்டியது என் பொறுப்பு...நோயாளியின் வீட்டுக்கு வைத்தியன் வருகிறான்; நோயாளி தன் கஷ்டங்களை எல்லாம் ஜாபிதா போட்டுச் சொல்கிறான். அஜீரணம்,



குமட்டல், இருமல், ஜலதோஷம், கால் குடைச்சல், முதுகு வலி என்று பல கோளாறுகள். வைத்தியன் ஏதேனும் ஒன்றுக்கு மருந்து கொடுத்தால்; மற்றொன்று முறைத்துக் கொள்கிறது. அல்லது, புதிதாக ஒன்று தலை எடுக்கிறது. எதிர்க்கப் போனால் வேகம் அதிகமாகிறது. நான் துப்பறிகிறவன்; பல ரகசியங்கள் அடங்கின காரியத்தில் தலையிடுகிறேன். நான் இங்கே வந்திருக்கிற காரணத்தினாலேயே, ஒவ்வொன்றும் வக்கரித்துக் கொண்டு தலை விரித்தாடுகிறது. என்ன ஆடினாலும், நாம் ஜாக்கிரதையாக இருந்து விட்டால் எல்லாம் தாமாகவே அடங்கி விடும்" என்று சற்று நிறுத்தினான்.

மதுரநாயகம் இப்போது முகத்தைக் கழுவிக் கொண்டு சட்டையை மாற்றிக் கொண்டு வந்துவிட்டார். இருந்தும் முகத்தில் ஒரு பெரிய கீறல் மட்டும் தெரிந்தது.

சந்துரு தொடர்ந்து, "என்னுடைய வேலை சுலபமாவதற்கு நான் உங்களிடம் எதிர்பார்ப்பது ஒன்றே ஒன்று மட்டும் உண்டு. உண்மையை ஒளிக்காமல் சொல்லிவிட வேண்டும். அப்போதுதான் நான் மேற்கொண்டு துணிச்சலாக இறங்க முடியும்" என்று கூறி, குறிப்பாக திலகவதியையும் மதுரநாயகத்தையும் பார்த்தான்.

திலகவதி கண்களை மூடிக்கொண்டாள். மதுரநாயகம் வாசற்பக்கத்தைப் பார்த்தார்.

வெளி அறையில் யாரோ தடதடவென்று வரும் சப்தம் கேட்டது. அண்ணாமலை ஓடிப்போய்ப் பார்த்துவிட்டு கணேசனுடன் திரும்பி வந்தான். கணேசன் இருந்த நிலை எல்லாரையும் சிறிது திடுக்குறச் செய்தது. அவன் தலை அலங்கோலமாகக் கலைந்திருந்தது; கண்கள் சிவந்து காணப்பட்டன. எந்த நிமிஷமும் மூர்ச்சையாகி விழுந்து விடுபவன் போல் காணப்பட்டான்.

"அண்ணா! நீ எங்கே போயிருந்தாய் இத்தனை நேரம்?" என்று கூவினாள் இ

29/05/2011 1

கணேசன் ஒரு முறை சந்துருவைப் பார்த்தான். "நீ எப்படித் திரும்பி வந்தாய் என்று கேட்டிருந்தால் அது சரியான கேள்வியாக இருக்கும்!" என்றான். பிறகு, தாங்காமல் கீழே உட்கார்ந்து விட்டான்.

"அண்ணா! நீ ஏதேனும் சாப்பிடுகிறாயா?...சூடச் சூடக் கொஞ்சம் காப்பி போட்டுக் கொண்டு ஓடி வரட்டுமா?" என்று இந்திரா கேட்டாள். திலகவதி ஓரக் கண்ணால் பார்த்துக் கொண்டேயிருந்தாள்.

"எனக்கு இப்போது ஒன்றும் தேவை இல்லை...என் மனத்தில் இருப்பதை—நான் கண்ணால் கண்டதை—இங்கே எல்லாரிடமும் சொல்லிவிட்டால், எனக்கு மன நிம்மதி ஏற்பட்டுவிடும். சித்தாப்பாவைப் பற்றிய சமாசாரம்தான் உடனே கவனிக்க வேண்டிய விஷயம்...மிஸ்டர் சந்துரு! நீங்கள் இங்கே இப்போது இருப்பது எனக்கு எத்தனை சந்தோஷம் தெரியுமா!" என்றான்.

சந்துரு உற்சாகம் காட்டவும் இல்லை. அசிரத்தை யாகவும் இல்லை. "சொல்லுங்கள். மிஸ்டர் கணேசன்! உங்களுக்கு உதவி செய்யத்தானே நான் வந்திருக்கிறேன்!" என்றான் சுருக்கமாக.

கணேசன் ஒரு முறை நெற்றியை அழுக்கிக் கொண்டான். மூளையில் கலைந்து போயிருந்த பல எண்ணங்களை ஒருமிக்கச் சேர்த்துக் கொள்ள முயல்வது போல் தோன்றியது அது. சந்துருவை மீண்டும் ஒரு முறை பார்த்து விட்டுச் சொல்லத் தொடங்கினான்.

"நேற்றிரவு நாம் எல்லோரும் படுக்கைக்குச் சென்ற பின், எனக்கு வெகுநேரம் வரையில் தூக்கமே வரவில்லை. வீட்டில் யாரோ நடமாடுவது போலவும், என்னவோ மர்ம மான காரியங்கள் நடந்து கொண்டிருப்பது போலவும் எனக்குத் தோன்றிக் கொண்டேயிருந்தது. படுக்கையில் எழுந்து உட்கார்ந்து கொண்டேன். சந்துருவிடம் சென்று என் சந்தேகங்களைச் சொல்லலாமா என்று அநேக



தடவைகள் நான் நினைத்துக் கொண்டேன். ஆனால் ஒரு காரணமும் இல்லாமல் போய் நிற்பது பயித்தியக்காரத் தனம் என்று தோன்றவே அந்த ஆசையை அடக்கிக் கொண்டேன்.

"வர, வர, என் சஞ்சலம் அதிகமாகிக் கொண்டே வந்தது. மிஸ்டர் சந்துரு! நான் உங்கள் அறைக்கு வந்தேன் நீங்கள் அங்கே இல்லை என்னை மன்னிக்க வேண்டும்; உண்மையை நான் சொல்லி விடுகிறேன்."

"பேஷாகச் சொல்லுங்கள். நான் இல்லை என்பது வாஸ்தவம்தான். அறையில் படுத்துத் தூங்குவதற்காக நான் இங்கே வந்திருக்கவில்லையே!" என்றான் சந்துரு. அதை அவன் சொல்லும்போது, திலகவதியின் உடம்பில் ஒரு குலுக்கல் காணப்பட்டது.

கணேசன் தொடர்ந்து சொன்னான்: "நான் மெள்ளக் கீழே இறங்கி வந்தேன். அப்போது 'கணகண'வென்று டெலிபோன் மணி அடிக்கத் தொடங்கிவிட்டது. வாசல் ஹாலுக்கு வந்ததும், எனக்கு மனத்திற்குள் ஒரு பயம் தோன்றியது. அதற்குக் காரணம் என்ன இருக்குமோ, நான் அறியேன். ஹாலில் என்னைத் தவிர, வேறு யார் யாரோ இருந்தார்கள் என்று தோன்றியது, நான் கடைக்கண்ணால் இரு புறமும் பார்த்தேன். மிஸ்டர் சந்துரு! நீங்கள் இருந் தீர்கள்; ஒளிந்து கொண்டிருந்தீர்கள். என்ன காரணத்திற் காக என்று நான் அறியேன்; அதைத் தெரிந்து கொள்வதும் என் வேலை இல்லை."

"ரொம்ப சரியான தீர்மானம்..."

"டெலிபோனை நான் எடுத்துப் பேசினேன். ஸி.ஐ.டி. சந்துரு அங்கே இருக்கிறாரோ!" என்று ஒரு குரல் கேட்டது அது யார் என்று சொல்லவில்லை. நீங்கள் மாடி அறையில் இருந்தால் நான் உடனே போய் அழைத்து வந்திருப்பேன். அருகிலேயே இருக்கும்போது, எப்படிக் கூப்பிடுவது? அதனால், உங்கள் வேலைக்கு என்ன குந்தகம் ஏற்படும் என்பதை நான் அறிவது எப்படி? ஆகையால் 'உங்களிடம்

பேச முடியாது' என்று டெலிபோனை வைத்துவிட்டேன். அது உங்களுக்குத் தெரிந்த விஷயமாக இருக்க வேண்டும்.''

''மேலே சொல்லுங்கள்... கேட்டுக் கொண்டிருக்கிறோம்...'' என்றான் சந்துரு.

''நான் திரும்ப என் அறைக்குச் சென்றுவிட்டேன்; நீங்களும் உங்கள் அறைக்குச் சென்று விட்டீர்கள். நான் உட்கார்ந்து யோசனை செய்தேன், உங்களுடன் பேச எனக்கு அநேக விஷயங்கள் இருந்தன. பகல் வரை அதையெல்லாம் ஒத்திப்போடாமல் அப்போதே உங்கள் அறைக்கு வந்துவிடலாமா என்று நினைத்தேன். பதினைந்து நிமிஷங்களுக்குப் பிறகு மெள்ள நான் கதவைத் திறந்து கொண்டு வந்தேன். அப்போது உங்கள் அறைக் கதவுக்கு வெளியே ஒரு ஆள் குனிந்து ஒட்டுக் கேட்டுக் கொண்டிருந்தான். எக்காரணத்தினாலோ, நான் நெருங்குவதற்கு முன்பு அவன் துள்ளி ஓடி மாடிப்படியில் இறங்கினான்.

''இப்போது உங்களைச்சந்திப்பதைவிட இந்த ஆளைக் கவனிப்பது அவசியம என்று எனக்குத் தோன்றியது. நான் மெதுவாகப் பின் தொடர்ந்து மாடி இறங்கினேன். கடைசிப் படியண்டை அவனுக்காக மற்றொருவன் காத்திருந்தான். இரண்டு பேரும் என்னவோ ரகசியம் பேசிக் கொண்டார்கள்; எத்தனை முயன்றும் அவர்கள் சம்பாஷணை என்னை எட்டவில்லை. இருவர் கண்ணிலும் படாமல நடவடிக்கைகளைக் கவனித்தாலே போதும் என்று எனக்குத் தோன்றியது.

சற்று நேரத்திற்கெல்லாம் அவர்கள் சித்தப்பாவின் அறையை நோக்கி நடந்தார்கள். நான் அங்கே சென்ற போது, சித்தப்பாவின் அறைக் கதவு சாத்தியிருந்தது; உள்ளே அவர்களுடைய பேச்சுக் குரல் கேட்டது.

''வெளியே கார் காத்திருக்கிறது. மளமளவென்று வந்து விடுகிறதுதான் நல்லது!'' என்றது ஒரு குரல்.

''அதெல்லாம் சரிப்படாது...நான் என் இஷ்டம்போல் வருகிறேன். இரவு மணி என்ன ஆகிறது, பார்த்தீர்களா!



உங்களுக்குப் பயித்தியம்தான் பிடித்திருக்கிறது'' என்றார் சித்தப்பா.

''மற்றவன் இப்போது கடுமையாகச் சொன்னான்: 'பயித்தியம் பிடித்ததாகவே இருக்கட்டும். என் கையில் என்ன இருக்கிறது, பார்த்துக் கொள்ளுங்கள். வேண்டிய அவகாசம் கொடுத்துவிட்டோம். இனி எங்களுக்கு இரவும் ஒன்றுதான், பகலும் ஒன்றுதான். மறுத்தால் இங்கேயே கொலை செய்து விடுவோம்' என்றான.

''சித்தப்பா அதற்கு, 'அங்கே போய் நீங்கள் கொல்ல மாட்டீர்கள் என்று என்ன நிச்சயம்?' என்று கேட்டார்.''

''பொன் வாத்தைக் கொல்வதற்கு நாங்கள் முட்டாள்களா? என் நல்ல வார்த்தைக்கு மரியாதை வைத்து எழுந்திருந்து வாருங்கள்! வீண் கலாட்டா வேண்டாம்!'' என்றான்.

''ஒரு விநாடியில் எனக்கு நிச்சயமாகிவிட்டது, எப்படியும் சித்தப்பாவை அவர்கள் கொண்டு போய்விடுவார்கள். நான் கூச்சல் போட்டாலோ, அல்லது தடுத்தாலோ, முதல் முதலில் சித்தப்பாவுக்குத்தான் அபாயம் காத்திருக்கிறது. ஒரே குத்தில் அவரைக் கொன்று விடலாம். ஆகையால் நான், அவர்கள் அறியாமல் கவனிப்பது ஒன்றுதான் சிறந்த உபாயம் என்று தீர்மானித்து விட்டேன். அதற்கு நான் அவர்கள் காரில் உடன் செல்லவேண்டும்.

''அப்படியே அவர்களை விட்டுவிட்டு நான் கீழே ஓடினேன். பங்களாவுக்கு வெளியே சென்ற பின்புதான், அவர்கள் முன் யோசனை எனக்குத் தெரிந்தது. கார் ஒன்று கேட்டைத் தாண்டி இருபத்தைந்து கஜத்திற்கு அப்பால் நின்றது; நான் அதை அணுகின சமயம், அதன் உள்ளே யாரும் இல்லை.

''அதன் பின்புறம் ஒளிந்துகொண்டு நாலாபுறமும் பார்த்த போது, சிறிது அப்பால் ஒரு சிவப்புப் புள்ளி தெரிந்தது. சிகரெட் ஒன்றைப் பற்ற வைத்துக்கொண்டு ஒரு ஆள் நிற்கிறான். ஒரு வேளை

29/05/2011

ராகவும் இருக்கலாம். நான் செய்வதைத் தயங்காமல் செய்தேன். கார் மிகப் பெரிய கார்; அதற்குத் தகுந்தாற் போல், 'லக்கேஜ்' வைப்பதற்கான இடமும் விசாலமாக இருந்தது. மெள்ள அதைத் திறந்து பார்த்தேன். காலியாக இருந்ததுடன், நான் தாராளமாக அதில் பதுங்கிக்கொள்ள முடியும்.

''டிரைவர் தொலைவில் இருக்கும்போதே சந்தடி செய்யாமல் அந்தக் கதவை நன்றாகத் திறந்து, உள்ளே பதுங்கிக்கொண்டு, கதவையும் நானே மெள்ளச் சாத்திக் கொண்டேன்.

''மறு நிமிஷம் என் நெஞ்சு 'திக்திக்' என்று அடித்துக் கொண்டது. டிரைவர் காரை நோக்கி ஓடிவரும் காலடி ஓசை எனக்குக் கேட்டது. நான் நுழைவதைப் பார்த்து விட்டுத்தான் வருகிறானோ என்று நடுநடுங்கி விட்டேன். ஆனால் நான் பயந்திருக்கவே தேவை இல்லை. பங்களாவி லிருந்து மூன்று பேர் வந்து கொண்டிருந்ததைப் பார்த்து விட்டே அவன் வந்தான்.

''கொஞ்சம் திறந்து வெளியே பார்க்க முயற்சித்தேன். இருவருக்கு நடுவில் வந்தவர் சித்தப்பா என்று தெரிந்து விட்டது. அவர் பிடிவாதம், சண்டை, கோ தாபங்கள் எல்லாம் போய், பெட்டிப் பாம்பாக அடங்கி வந்தார். காருக்குள் அவர் உட்கார்ந்ததும், மற்ற இருவரும் இரு பக்கங்களில் காவலாக அமர்ந்திருக்க வேண்டும். இரு பக்கத்துக் கதவுகளும் 'டபார்' என்று சாத்தப்பட்டன. காரும் புறப்பட்டது. எந்த இடத்திற்கு அவர்கள் போகி றார்கள் என்பதை அறிய நான் எவ்வளவோ முயற்சித்தும், தெரிந்து கொள்ள முடியவில்லை. வெகு வேகமாக ஓட்டி னான் வண்டியை; நிசி வேளையாகையால் ஜன நடமாட்ட மும் இல்லை.

''சுமார் அரை மணி ஓடிய பிறகு ஒரு 'கேட்'டில் திரும்பி மீண்டும் ஐந்தாறு நிமிஷங்கள் ஓடி, ஒரு பங்களா



வாசலில் நின்றது. எல்லாரும் இறங்கினார்கள். சோலை போல் மரங்கள் அடர்த்தியாக இருந்திருக்க வேண்டும். வேறு மனிதர்கள் அங்கே இருந்ததாகவும் எனக்குத் தெரிய வில்லை இவர்களேதான் போய்க் கதவைத் திறந்தார்கள்; விளக்கை ஏற்றவே இல்லை!

''நான் சிறிது தைரியத்தை வருவித்துக்கொண்டு என் கதவைத் திறந்துகொண்டுவெளிவரலாம் என்று உத்தேசித் தேன். ஆனால், நான் எவ்வளவு முயன்றும்கூட, கதவைத் திறக்க முடியவில்லை! ஏனென்றால் அதன்மீது டிரைவர் சாய்ந்தவாறு சிகரெட் பற்ற வைத்துக் கொண்டிருந்தான்; இது நான் எதிர்பார்க்காத சங்கடம். அங்கே மட்டும் நான் இறங்க முடிந்திருந்தால், மறுபடி அந்தக் காரில் வந்து ஏறியிருக்கத் தேவை இல்லை. காலை வரையில் அங்கேயே ஒண்டியிருந்து விட்டு, விடிந்ததும் போலீசுக்குத் தகவல் கொடுத்திருப்பேன்.

''என்ன செய்வதென்று அறியாமல், திகைத்தபோது, சட்டென்று கதவின் கனம் குறைந்தது. டிரைவர் நகர்ந்து கொண்டிருக்க வேண்டும் என்று நான் ஊகித்தேன். அதற்குக் காரணம் உள்ளே சென்றவர்களில் ஒருவன் திரும்பி விட்டான். நான் காதைக் கொடுத்துக் கேட்டேன். டிரைவருக்கு ஏதோ ஒரு உத்தரவு கொடுத்தான். அது அவசர உத்தரவு.

''ஒரு க்ஷணத்தில் அவன் ஓடி 'டிரைவிங் ஸீட்டி'ல் உட்கார்ந்து விட்டான். நான் உள்ளே ஒரு சாக்கு மூட்டை போல் நிலை புரியாது உருண்டேன். என் மண்டையில் இரும்புக் கதவு பல முறை மோதியது. மோட்டாரை ஓடித்து ஓட்டிக் கொண்டு அவன் வெளியேறினான். கடுவேகம்; வரும்போது காட்டிய நிதானம் இல்லை; ரஸ்தாவில் இருந்த ஒவ்வொரு மேடு பள்ளங்களிலெல்லாம் கார் குதித்தது. அதற்கேற்றாப்போல் என் மண்டையும் 'டக்டக்' என்று கூரையின் மீது மோதியது. சிறிதும் நேரம் நான் பிரக்ஞை யிழந்துகூடப் போய்

29/05/2011

" 'சரக்' கென்று அது நின்றது. நின்ற இடம் வீடல்ல; நடு ரஸ்தா. டிரைவர் இறங்கினான். காரில் கோளாறு ஏற்பட்டுத்தான் முன்புறம் செல்கிறான் என்று நினைத்தேன். அவன் பின்புறமே வந்தேன். நான் ஒளிந்திருந்த கதவைத் தூக்கித் திறந்தான்.

"மிஸ்டர்! நீங்கள் புறப்பட்ட இடம் வந்து விட்டது... இறங்கிக் கொள்ளலாமா!...உங்களுக்கு ரொம்ப சிரமம்!" என்றான் கேலியாக.

"நான் வாரிச் சுருட்டிக் கொண்டு கீழே குதித்தேன். அவனைப் பார்த்து விழிப்பது தவிர, வேறு ஒன்றும் என்னால் அப்போது செய்ய முடியவில்லை. அந்தச் சந்தர்ப்பத்தில், நிர்மானுஷ்யமான இடத்தில் என்னை வெட்டிப் போட்டிருந்தால்கூடக் கேள்வி இல்லை.

"ஒன்றும் அலட்டிக் கொள்ளாதீர்கள்! நீங்க உள்ளேயிருந்து வரபோதே நான் பார்த்து விட்டேன். பின்னாலே ஏறிக்கிட்டிங்க; "கம்"னு இருந்துவிட்டேன். அவங்ககிட்டச் சொன்னால், உம்மைக் கீழே தள்ளி வண்டியை நாலு முறை ஏற்றி ஓட்டச் சொல்லுவாங்க. நம்ம வண்டியிலே கொலை கிலை சரிப்படாது. அப்புறம், ஒரு சங்கடம், நீங்க எங்கேனாச்சியும் இறங்கி, தலையைக் காட்டி, அபாயத்திலே மாட்டிப்பிங்கன்னே, கதவு மேலே சாய்ந்து கொண்டிருந்தேன். அதுவும் நல்லதாப் போச்சு. மெள்ள இறக்கி விட்டுட்டேன். நடையைக் கட்டுங்க. இதெல்லாம் உங்களுக்கு இனிமேலே வேணாம். பொல்லாப் பசங்க அத்தனை பேரும்!" என்றான்.

"அடப் பாவி!" என்றேன்.

"இன்னமும் ஒண்ணு! யார்கிட்டேயும் இதையெல்லாம் உளறி வைக்காதீங்க. போனது வந்தது எல்லாம் 'கப்சிப்'னு இருக்கட்டும். ஒண்ணையும் கண்டுக்காமே நிம்மதியா இருங்க!' என்றான்."

சந்துரு கணேசனைப் பார்த்தான். "ஆமாம்! மோட்டார் நம்பரைப் பார்த்துக் கொண்டு வந்திருப்பீரே!" என்று கேட்டான்.



"பார்த்தேன். அதை டிரைவர் பார்த்துச் சிரித்து விட்டு, 'இதைப் போய் யாரிடமும் சொல்லி வைக்காதீங்க. இது நம்ப நம்பர் இல்லை. ஹைக்கோர்ட் ஜட்ஜ் ஒருத்தர் வண்டியின் நம்பர்!' என்றான்."

"அண்ணா! உனக்கு எத்தனை ஆபத்து!" என்றாள் இந்திரா நீண்ட பெரு மூச்சு விட்டு.

"அதனால் நீங்கள் எடுத்துக்கொண்ட சிரமம் எல்லாம் வியர்த்தம் என்று சொல்லுங்கள்!" என்று கேட்டான் சந்துரு.

"அப்படி ஒரேயடியாகச் சொல்லிவிட முடியாது. கார் டிரைவரை நான் எங்கே கண்டாலும் அடையாளம் கண்டு சொல்லிவிட முடியும். அவன் முகத்தை நன்றாகப் பார்த்து வைத்திருக்கிறேன்."

"சென்னைப் பட்டணத்தில் பதினைந்து லட்சம் முகங்கள் இருக்கின்றன" என்றார் மதுரநாயகம். இது வரை அவர் மௌனமாகக் கேட்டுக் கொண்டிருந்தார்.

கணேசன் மதுரநாயகம் பக்கம் திரும்பி, எரிகிறாப் போல் கண் ஒளியை அவர்மீது வீசினான். "உங்களைப் பற்றி ஒரு வார்த்தை அவர்கள் பேசிக் கொண்டது என் காதில் விழுந்தது" என்றான்.

"என்ன அது?"

"உங்களைத் 'தார் தாரா'கக் கிழித்துப் போட வேண்டும் என்றிருக்கிறார்கள். 'செங்கல்வராயபிள்ளைக்கு வந்த அத்தனை ஆபத்துக்கும் காரணம் மதுராயகம்' என்றார்கள்!"

"அது உண்மைதான்...எதிரிகளுக்கு எதிரியா இருக்கிறேன் அல்லவா?" என்றார் அவர்.

"இப்போது நாம் நம்மைப் பற்றிப் பேசிக்கொண்டு கால தாமதம் செய்வதில் பிரயோசன[illegible] சந்துரு அவர்கள் சம்பாஷணைக்கு ஒரு முற்[illegible] வைத்தான்.

29/05/2011

திலகவதி முகத்தை நிமிர்த்தி, ஆமாம்! இப்போது அவரை மீட்டுக் கொண்டு வருவது எப்படி என்று யோசனை செய்வதே நல்லதல்லவா?'' என்று கேட்டாள்.

''மிஸ்டர் கணேசன் கொண்டு வந்த தகவல்கள் ஒரு வழியில் உபயோகமானவைதான்; மற்றொரு வழியில், காட்டில் கண்ணைக் கட்டிவிட்ட மாதிரி இருக்கிறது. சென்னைப் பட்டணத்தில் எந்தப் பங்களாவென்று நாம் போய் இப்போது தேட முடியும்?''

''ஆமாம்! உடம்பை ஒடுக்கி, மூச்சை அடக்கி, உயிருக்குத் துணிந்து நான் போனேன். எப்படியோ அந்த டிரைவர் என்னைக் கண்டு கொண்டு விட்டான்.''

''உயிரோடு விட்டானே, அதைச் சொல்!'' என்றாள் இந்திரா.

''இப்படித் துஷ்டர்கள் மத்தியிலும் இரண்டொரு பஞ்சு மனம் படைத்தவர்கள் இருப்பதாலேயே துஷ்டர்கள் மாட்டிக் கொள்கிறார்கள்.'' என்று சந்துரு கூறி, ''மிஸ்டர் கணேசன்! நீங்கள் போய்ச் சற்றுத் தூங்கிவிட்டு வாருங்கள். பிறகு மற்ற விஷயங்கள் பேசலாம்!'' என்றான்.

கணேசன் சென்ற பிறகு அறையில் நிசப்தம் குடி கொண்டது. சந்துரு பின் கையைக் கட்டிக் கொண்டு அங்கும் இங்குமாக மறுபடி உலாவினான்.

திலகவதி திடீர் என்று, ''ஆமாம்! ஒரு போலீஸ் உத்யோகஸ்தர் இருக்கும்போதே, ஒரு வீட்டில் இம்மாதிரியெல்லாம் நடக்கலாமா? அதை அனுமதித்தால் போலீஸ் இலாகாவுக்கு அவமதிப்பு இல்லையா?'' என்று கேட்டாள்.

சந்துரு நின்று அவளை நிதானித்துவிட்டு, ''நான் இங்கே வந்திருப்பது உத்தியோக பூர்வமாக இல்லை. மிஸ் இந்திரா என்னை அழைத்தார்; வந்தேன். தவிர செங்கல்வராயபிள்ளை போலீஸ் உதவி தேவையே இல்லை என்று வேறு சொல்லிட்டார்; நான் இருந்தது அவர் விருப்பத்துக்கு மாறாகத்தான். மூன்றாவதாக, எனக்கு நீங்கள் எல்லாம் எத்தனை உதவி செய்திருக்கிறீர்கள்?—



அவரவர்கள் மனச்சாட்சியைக் கேட்டுப் பார்க்க வேண்டும்'' என்றான்.

''நீங்கள் எல்லாரிடமும் உண்மையையே எதிர்பார்த்து விட்டால், உண்மையைக் கண்டு பிடிக்க வேண்டிய நிர்ப்பந்தமே இராதே? அதற்கு யாரும் உங்களை அழைக்கவே வேண்டாமே!'' என்றார் மதுரநாயகம்.

''உண்மை. வேண்டிய அளவு திரித்துச் சொல்லுங்கள்! ஆனால், எங்களுக்கும் சிடுக்கைப் பிரிக்க அவகாசம் தேவை. இப்போது செங்கல்வராயப் பிள்ளையைக் காணோம். இனி செய்ய வேண்டிய வழி என்னவென்றால் நான் இப்படித்தான் சொல்வேன். கொண்டுபோன ஆசாமி, ஒன்று, அவரை வைத்துச் சம்ரட்சணை செய்ய வேண்டும்; அல்லது, அதற்கு நம்மைப் பணம் கேட்க வேண்டும் சம்ரட்சணை செய்கிறவனானால், அவரை உபயோகித்துக் கொள்ளுவான். அதனால் வரும்படிக்கு வழி செய்வான். அந்த வகையில் இன்றைக்கு இல்லாவிட்டாலும் சில தினங்களில் எங்களிடம் சிக்குவான். நம்மைப் பணம் கேட்கிறவனாக இருந்தால், வெகு விரைவில் நம்முடன் தொடர்பு வைத்துக் கொளவான். ஆ! அதோ டெலிபோன் அடிக்கிறது! கேளுங்கள், திலகவதி அம்மாள்! உங்கள் கணவர் சமாசாரமாகவே இருக்கலாம்'' என்றான்.

திலகவதி டெலிபோனை எடுத்துப் பேசினாள். ''ஆ... உம்...உம்... சௌக்கியமாயிருக்கிறாருங்களா! உம்...உம் ஆ! இருபதாயிரம் ரூபாய்! ஐயோ! சொல்றேனுங்க!'' டெலிபோன் வாயைப் பொத்திக்கொண்டு, ''ஐயா! அவரை விட்டுடறாங்களாம்...இருபதாயிரம் ரூபாய் கொடுக்கணுமாம்! ஒப்புக் கொள்றேனுங்கன்னு சொல்லி விடட்டுமா'' என்று சந்துருவிடம் சுதறினாள்.

''அவசரப்படாதீர்கள்! நிதானப்படுத்திக் கொள்ளுங்கள்! எங்கிருந்து பேசுகிறார்களாம்?'' என்றான் சந்துரு.

திலகவதி மறுபடி கேட் [illegible] மூன்று நாளைக்குள்ளேயா! சொல்ல மாட்டீங்களா?...

29/05/2011 13

சந்துருவை இங்கிருந்து அனுப்பி விடணுங்களா?... ஆ!...ஆ...!''

திலகவதி சந்துரு பக்கம் திரும்பினாள். ''அதெல்லாம் சொல்ல முடியாதாம். இருபதாயிரம் கொடுத்தால், மூன்று நாளைக்குள் — நீங்கள் சம்பந்தப்படக் கூடாதாம்— அவரைக் கொண்டு வந்து விடுவார்களாம்.''

''எங்கே கொண்டு வந்து கொடுக்க வேண்டுமாம்?''

''அதை அவர்களே சொல்லுவார்களாம்.''

''இன்னும் பேசிப் பாருங்கள்!''

''ஐய; போனை வைத்துவிட்டாங்களே!''

சந்துரு மறுபடி உலாத்தினான். அந்தச் சமயத்தில் தான் நாராயணன் பையுடன் அங்கே வந்து சேர்ந்தான். சந்துருவும் அதை வாங்கிக் கவிழ்த்தான்.

''பார்த்தீர்களா! எந்தச் சிகிச்சைக்கும் கட்டுப்பட மாட்டேன் என்கிறது வியாதி! நீங்கள் இருபதாயிரம் ரூபாயைக் கொடுக்கிறீர்கள்; அவர்களும் பெற்றுக் கொள் கிறார்கள்; நானும் சம்பந்தப்படாமல் இருக்கிறேன். பிள்ளை அவர்கள் பத்திரமாக வந்து சேருவார் என்பது என்ன நிச்சயம் இருக்கிறது! பணமும் போய். அவரும் திரும்பவில்லை என்றால், யாரைக் கேட்பீர்கள்!''

''அவர் வந்துவிடுவார்; நிச்சயம் வந்துவிடுவார்...'' என்றாள் திலகவதி.

''உலகம் அத்தனை லகுவான விஷயம் இல்லை, அம்மணி. நீங்கள் ஆத்திரத்தில் சொல்கிறீர்கள்! உங் களைப் பணம் கேட்டவர்கள் யோக்யர்கள் என்று ஒரு போதும் நம்பவேண்டாம். அதெல்லாம் ''நாடி ஜோஸ்யம்''பார்க்கிறமாதிரி. இருபத்தைந்து ரூபாய் பணம் கொடுத்து நாடி பார்த்தால் 250 ரூபாய்க்கு யந்திரம் வாங்கு என்பார்கள். பிறகு நானூறு ரூபாயில் ஔஷத காண்டம், எழு நூற்றைம்பது ரூபாயில் ஞான காண்டம் பார்த்து, ஆயிரம் பேருக்கு அன்னம் போடச் சொல்லு



வார்கள். அதே மாதிரி இருபதாயிரம் ரூபாய் கொடுத் தால், விஷயம் முடியாது; அது அடுத்தபடி நாற்ப தாயிரத்திற்கு வழி வகுக்கும்... திலகவதியம்மாள் நான் ஒப்புக்கொள்ள மாட்டேன்.''

''பின் என்ன செய்யலாம் என்கிறீர்கள்! அதையாவது சொல்லுங்கள்'' என்று திலகவதி பரிதாபமாகக் கேட்டாள்.

''பணம் கேட்பதன் மூலம், சில ஆசாமிகள் நம்மை நெருங்குகிறார்கள். அவர்களைக் கவனிக்க வசதி ஏற்பட் டிருக்கிறது. இப்போது வந்த டெலிபோன் நமக்கு ஒரு சுபசூசகம் என்பேன். மிஸ்டர் கணேசன் இப்போது இங்கே வந்தால், இரண்டொரு விஷயங்கள் விசாரிப்பேன். தூங்கி விட்டாரா, பாருங்கள்!'' என்றான்.

நாராயணனும் இந்திராவும் மாடிக்கு விரைந்தார்கள், போன வேகத்தில் திரும்பி விட்டார்கள். அவர்கள் முகம் வெளிறிப் போயிருந்தது.

''என்ன!'' என்று கேட்டாள் திலகவதி.

''அண்ணாவின் அறைக் கதவு உள் தாழ்ப்பாள் போட்டிருக்கிறது! என்ன இடித்தும் பதில் இல்லை. ஆனால் உள்ளே ஏக சப்தமாக இருக்கிறது. நாற்காலியை உடைக்கிறமாதிரியும், ஒருவரையொருவர் அடித்துக் குத்திக் கொள்கிற மாதிரியும் கேட்கிறது. சாமான்கள் எல்லாம் உடைபடுகின்றன. அங்கே ஒரு பெரிய யுத்தம் நடக்கிறமாதிரி இருக்கிறது. கொஞ்சம் உடனே வருகிறீர் களா?'' என்றாள் இந்திரா.

மறுகணம் சந்துருவைப் பின் தொடர்ந்து மதுரநாயக மும் திலகவதியும் மாடிக்கு ஓடினார்கள். இந்திராவும் நாராயணனும் ஒரு நிமிஷம் நின்று ஒரே ஒரு வார்த்தை பேசிக் கொண்டுவிட்டு, மேலே [illegible]ள்.

29/05/2011 13

# மீண்டும் அந்தக் குள்ளன்!

உலகத்தில் எத்தனை விதமான மனிதர்கள் இருக்கிறார்களோ, அத்தனை விதமான ஜாதகங்களும் இருக்கின்றன. ஒரு முகம் எப்படி மற்றொரு முகத்தைப்போல இருப்பதில்லையோ, அப்படியே ஒரு ஜாதக பலன மற்றொன்றைப் போல் இருப்பதில்லை. பெரிய ரயில்வே ஜங்ஷனிலிருந்து செல்லும் வெவ்வேறு இருப்புப்பாதைகளில் ஏதேனும் இரண்டு சிறிது தூரம் வரை சேர்ந்து செல்கிறது உண்டு; சிறிது தூரம்தான். இரு ரயில் தொடர்கள் அவைகளில் செல்லும் போது ஒன்றிலுள்ள பிரயாணி மற்றொன்றில் இருக்கும் வேறொரு பிரயாணியுடன் சிரித்துப் பேசிக் கொண்டு வரலாம்—சிறிது நேரத்திற்குத்தான்.

இப்படியே வாழ்க்கையில் இருவர் சேர்ந்து ஒரே மாதிரி அனுபவங்கள் பெறுவது போன்றும், வெற்றித் தோல்விகளை அனுபவிப்பது போன்றும், ஒரு பிரமை ஏற்படுவது சகஜமே. ஒவ்வொருவர் வாழ்க்கையும் ஒவ்வொரு விதமானது. ஒரே கதியில் சென்று கொண்டிருக்கும் இருவரில் ஒருவரை விதி 'சடார்' என்று உயர்த்தும். மற்றவரைத் தாழ்த்தும்; வேடிக்கைகள் எல்லாம் செய்யும். இருவருக்கும் பெரிய அதிர்ஷ்டத்தைக் கண்ணெதிரே காட்டும் ஒருவருக்கு அதைப் பற்றிக்கொள்ள அவகாச கொடுக்கும்; மற்றவர் நெருங்கும் சமயம் பார்த்து எதிர்பாராதபடி பின்னுக்கு இழுக்கும்.

சங்கரனுடைய 'அதிர்ஷ்டம்' கடைசியில் அவனைக் காலைவாரி விடுவதா இருந்தது. இளம் வயதினன் ஆனாலும் அவன் பிடிவாதக்காரன். எப்படியேனும் தமது தமக்கையின் புருஷனுக்கு ஏமாற்றம் இல்லாமல் அந்த பையைத் திருப்பிக் கொண்டுபோய்ச் சேர்ப்பித்துவிட வேண்டும் என்ற உறுதி அவனுக்கு இருந்தது. தவிர, அவன் மனத்தில் ஒருகுறை இருந்து வேதனை அளித்தது. மேற்படி



பை தானே காணாமல் போனதற்குக் காரணம் என்ற தாபமே அது.

முதன் முதலாக, அவன்தான் பையை பீரோவில் வைக்கக்கூடாது என்று தடுத்தவன்; மறுதினம் அது திருட்டுப் போகாமல் இருந்ததற்காகச் சந்தோஷமே கொண்டான்; ஆனால், அந்த சந்தோஷம் நீடித்திராமல் பை எப்படியோ எதிரியின் கைக்குப் போய்விட்டது; தான் வீட்டில் காவல் இல்லாமல் சினிமாவுக்குச் சென்றதுதான் காரணம் என்று தாமோதரன் மிகவும் கோபிப்பான் என்று அவன் எதிர்பார்த்தான். மேலும் அவனுக்கே என்ன ஆபத்தோ என்று பயந்தான். அந்தக் கோபத்தை ஓரளவு தணிக்க இரண்டாவது சந்தர்ப்பம் ஒன்று கிடைத்தது. அதிலும் அவன் 'முக்காலே மூன்று வீசம் முக்கால் வீசம்' வெற்றி பெற்று, வீட்டு வாசற்படியை அடைந்துவிட்டான். கைக்கு எட்டியது வாய்க்கு எட்டவில்லை, கடைசி கடைசி விநாடியில், 'அதிர்ஷ்டம்' வேறு திசையில் திரும்பிவிட்டது. டாக்ஸியில் வந்தவன் ஒரு நொடியில் அதைப் பறித்துக் கொண்டு போய்விட்டான். சங்கரன் இதயம் செத்து விட்டது.

மாடி ஏறுவதற்கே அவனுக்குக் கால் எழவில்லை. மெள்ள மெள்ள ஏறினான். அறைக் கதவைத் திறந்து கொண்டு மெள்ள எட்டிப் பார்த்தான், தாமோதரன் நாற்காலியில் குந்திட்டு உட்கார்ந்து தலையை முழங்கால்களில் நட்டுக் கொண்டிருந்தான். சங்கரன் வந்ததே அவனுக்குத் தெரியாது!

''அத்தான்!'' என்றான் மெள்ள. ''என்ன உங்களுக்கு?'' என்று கேட்டான்.

''அட சை! உன்னைப் போன்ற பயல்களுக்குச் சோறு போட்டு வீட்டில் வைத்து வளர்க்கிறேனே எனக்கு இதுவும் வேண்டும்; இன்னமும் வேண்டும்'' என்றான் [illegible] எரிச்சலுடன்.



29/05/2

''அத்தான்! நான் சினிமாவுக்குப் போனது பிசகுதான், நீங்கள் போ என்று உத்தரவு கொடுத்த பிறகுதானே நான் புறப்பட்டேன்; அதுவும், அக்கா மிகவும் ஆசைப் பட்டாள்!''

''உன் அக்காவைக் கொண்டுபோய்க் குளத்தில் தள்ளு! போ! ஒரு கல்லையும் கட்டித் தள்ளு!... இங்கே ஆள் உயிர் பிழைத்ததே ஒரு ஆச்சரியம்!... எங்கே அவள் கூட்டிடு இங்கே?''

சங்கரன் அருகில் போய் நின்று கொண்டான். அது சமயம் அவன் அக்காள் வராதது எத்தனை நல்லது என்று எண்ணிக் கொண்டு மெதுவாக, நடந்த விவரங்களைச் சொன்னான். வெற்றிலை பாக்குக் கடையில் குள்ளனையும் அவன் தோழனையும் கண்டதையும், தோல் பையை அடையாளம் தெரிந்து கொண்டு பின் தொடர்ந்ததையும், காத்திருந்து சாமர்த்தியமாக மாடி அறைக்குள் சோதனை போட்டுப் பையைக் கைப்பற்றியதையும், அசந்தர்ப்பமாகக் குள்ளன் திரும்பி விட்டதையும் சொன்னான்.

அவன் சொல்லச் சொல்ல, தாமோதரன் நாற்காலியில் நிமிர்ந்து உட்கார்ந்து கொண்டான்; கால்களைத் தொங்கப் போட்டான்; பிறகு, சங்கரன் சுவரேறிக் குதித்து ஓடிய விவரங்களைச் சொல்லத் தொடங்கியதும் எழுந்து அறையில் அப்படியும் இப்படியும் உலாவினான். கடைசியில், ''அத்தனை சிரமத்துடன் சேகரித்து வந்த பை இப்போது எங்கே?'' என்ற பாவனையில் அவனை ஏற இறங்கப் பார்த்தான். கடைசியில், அந்த வீட்டு வாசற்படியிலேயே அதைப் பறிகொடுத்த வயிற்றெரிச்சலைச் சொன்னதும், துள்ளிக் குதித்தான்.

''சங்கரன்! நீ பெரிய முட்டாள்டா!... அப்படி லகுவாகக் கைவிட்டது சுத்த தப்பு!'' என்றான்.

''நான் எதிர்பார்க்கவே இல்லை, அத்தான்! ஏதோ கார் திரும்புகிறது என்று நினைத்தேன். அந்த டிரைவர் என் முகத்தைப் பார்த்து வெளிச்சத்தை அடித்ததில் சிறிது



நேரம் வெலவெலத்துப் போய்விட்டேன். என்ன நடக்கிறது என்று தெரிந்து கொள்வதற்குள் அந்த 'டாக்ஸி' பறந்து போய்விட்டது. இன்று காலையில் வந்து உங்களை மிரட்டினானே அதே ஆசாமிதான் என் கையிலிருந்து பிடுங்கிக் கொண்டு விட்டான். அத்தான்! அவன் பார்வைக்குத் தளர்ந்தவன் போல் இருக்கிறானே ஒழிய நல்ல பலசாலி! நாம் அவனிடம் இனிமேல் மிகவும் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்...!'' என்றான்.

''ஹூம்!'' என்று உறுமினான் தாமோதரன். ''இனி மேல் எதற்கு அவனிடம் ஜாக்கிரதையாக இருக்கிறது! அல்வாத் துண்டு போல் உன் கையிலிருந்து வாங்கிக் கொண்டுபோய் விட்டான் அவன்! நம்மை அவன் லட்சியம் செய்துகொண்டு மறுபடி தேடி வரப் போகிறானா? முட்டாள்!'' என்று தாமோதரன் மேலும் இரண்டு முறை அப்படியும் இப்படியுமாக நடந்தான். அவன் உள்ளத்தில் இருந்த படபடப்பு நன்கு வெளியாயிற்று.

சட்டென்று தாமோதரன் நின்றான். ''சங்கரன்! வேறொரு பெரிய ஆபத்தில் நாம் சிக்கிக் கொண்டிருக் கிறோம்! உன்னை அந்தக் குள்ளனுக்குத் தெரிந்திருக்க வேண்டும்—என் வீட்டைத் தேடிக் கொண்டு வந்திருக்கிற வனுக்கு உன்னை யார் என்று தெரியாமலா போகும்? எத்தனை நேரமாக நீயும் நானும் வெளியே போக வேண்டும் என்று காத்திருந்தானோ!''

''அப்படியானால், நான் அக்காளைச் சினிமாவுக்கு அழைத்துக் கொண்டு போனது எத்தனையோ நல்லது. நான் அவளுடன் தங்கியிருந்தால்...''

''நான் சொல்ல வந்தது வேறு. குள்ளன் இப்போது உன்னிடம்தான் பை சிக்கிக் கொண்டிருக்கிறது என்று நம்பிக் கொண்டிருப்பான். அவனுக்கு எதிராக வேலை செய்கிறவர்கள் நாம் என்று கறுவி[illegible] போய்விட்டது என்றால் நம்பவும் [illegible]

29/05/2011

சும்மா விடமாட்டான்; கொலைக்கு அஞ்சாதவன், முரடன். வெகு சீக்கிரத்தில் அவனை நாம் இங்கே எதிர்பார்க்க வேண்டும். அல்லது வேறெங்கேனும் காத்திருந்தும் பழி தீர்ப்பான்...உஷாராயிருக்க வேண்டும்!''

''நான் பார்த்துக் கொள்கிறேன்; அத்தான்! நீங்கள் மட்டும் தனியாக எங்கும் போக வேண்டாம்...''

தாமோதரன் சிரித்தான்: ''அப்படி ஒளிந்து தப்பித்துக் கொள்ள முடியுமா?'' என்றான். பிறகு சங்கரன் இல்லாத சமயம் அங்கே நடந்த விவரங்களை யெல்லாம் ஆதியோடந்தமாகச் சொன்னான்.

''அத்தான்! உங்களுக்கு எங்கேனும் அடிபட்டிருக் கிறதா? நான் இருந்தால், அந்தப் பயல் மென்னையை முறித்து வாசலில் வீசி இருப்பேன். உங்கள் மேல் கை வைத்திருக்க மாட்டான். வேறொரு ஆசாமி இருந்தான் என்கிறீர்களே; அவனும் குள்ளன் கூட்டாளியாக இருப்பானோ?''

தாமோதரன் தலையைப் பலமாக ஆட்டினான்! ''அவன் ஸி. ஐ. டி. சந்துருவிடமிருந்து வந்திருக்கிறான். நான் போய் சந்துருவிடம் சொன்னேன் அல்லவா? என்னை மறுபடி பார்க்க வேண்டும் என்று அவன் சொல்லி அனுப்பி இருக்கிறான். அகஸ்மாத்தாக அவன் வந்தது, குள்ளனுக்குப் பெரிய தொந்தரையாகி விட்டது. அவன் வேலையைத் தாமதப்படுத்தி விட்டது. அந்த நாராயணன் வந்திரா விட்டால், குள்ளன் வந்து போனதே எனக்குத் தெரியாமல் இருக்கும். ஒருவேளை குள்ளன் என்னைத் தீர்த்தும் இருக்கலாம்...''

''சந்துரு எதற்கு அத்தான், உங்களை மறுபடி கூப்பிட வேண்டும்?''

''எனக்கு என்ன தெரியும்? நானா துப்பறிகிறவன், ஏதேனும் புதிய தகவல் கிடைத்திருக்கலாம்; அல்லது ஒன்றுமே இராது. மேலே கேள்வி கேட்டுக் குடைந்து



மிரட்டலாம் என்ற காரணமாகவும் இருக்கலாம். போலீஸ் காரர்கள் எப்படி என்று சொல்கிறது!''

''அவனை நீங்கள் போய்ப் பார்க்க வேண்டாமா?''

''பார்க்க வேண்டியதுதான்; ஆனால், நாராயணன் கண் எதிரில் குள்ளன் பையை எடுத்துக் கொண்டு ஓடியிருக் கிறான்; ஆகையால், பை அதுவரை என்னிடமே இருந்திருக் கிறது என்று ஆகிறது; சந்துருவிடம் நான் உண்மையை மறைத்ததாகவும் ஆகிறது. அந்த நிலையில் என்னை அவன் மேலும் மேலும் குடைந்து கேட்டால் என்ன செய்வது? மறுபடி பை கிடைக்கும் வரையில் அவனை நான் பார்ப்பதற்கில்லை — கிட்டத்தட்டக் கிடைத்தது; நீ கைவிட்டு விட்டு வந்து நிற்கிறாய்!''

''நான் ஒரு காரியம்செய்கிறேன். ஸி ஐ.டி. சந்துருவை நான் போய்ப் பார்க்கிறேன். 'உங்களுக்கு நன்றாக அடிபட்டிருக்கிறது' என்று ஆரம்பிக்கிறேன். பை படத்தின் பின்னால் இருந்தது. நமக்குத் தெரியவே தெரியாது. பீரோவிலிருந்து அதை அகற்றிய ஆசாமியே அங்கே ஒளித்திருக்க வேண்டும். அவனே அடையாளமாக அதை எடுத்துச் செல்லவே வந்திருக்க வேண்டும் என்று சொல் கிறேன். அதற்கு மேல் நான் அதைக் கைப்பற்றச் செய்த முயற்சிகளையெல்லாம்—''

''ஒரு முறை போலீஸிடம் போனது பிசகென்று நான் வருந்திக் கொண்டிருக்கிறபோது, மறுபடியும் போகிறேன் என்கிறாயே! நீ உண்மையைச் சொன்னாலும், அவர்கள் நம்ப மாட்டார்கள்...''

''இல்லை, அத்தான்! உங்களுக்கும் எனக்கும் ஆபத்து ஏதேனும் நேர்ந்தாலும், சந்துரு குள்ளனைப் போய்ப் பிடிக்க வேண்டுமே?...குள்ளன் விடாக்கண்டன், அத்தான்! நமக்கு வெகு விரைவில் ஆபத்து இருக்கிறது!''

தாமோதரன் கண்களை மூடிக் [illegible]

செய்தான். ''சரி, அதை அப்புறம் பார்த்துக் [illegible]

29/05/2011

வோம். உன் அக்காள் இன்னும் திரும்பவில்லையே?'' என்று கேட்டான்.

''வருகிற சமயம்தான்! ரிக்ஷா வைத்துக் கொண்டு வரும்படி சொல்லிவிட்டு வந்தேன். நான் போய்ப் பார்த்து விட்டு வரட்டுமா?''

தாமோதரன் கெடிகாரத்தைப் பார்த்தான். ''இன்னும் பதினைந்து நிமிஷத்திற்குள் அவள் வராவிட்டால், போய்ப் பார்க்க வேண்டியதுதான் நீ இப்போது கீழ சென்று எனக்கு ஒரு டம்ளரில் ஜலம் கொண்டு வா... மரண தாக மாக இருக்கிறது... முடிந்தால், சுட வைத்துக் கொண்டு வா!'' தாமோதரன் மறுபடி நாற்காலியில் கால்களைத் தூக்கிட்டுக் கொண்டு யோசனையில் உட்கார்ந்துவிட்டான்.

ஃ ஃ ஃ

கீழே இறங்கி வந்த சங்கரன், வாசற்படியண்டை சற்றுத் தயங்கினான், மாடிப் படிக்கட்டின் அடியில் யாரேனும் ஒளிந்து கொண்டிருக்கிறார்களா என்று பார்த்து நிச்சயம் செய்து கொண்டு, வெளிப்புறத்து முன் கதவைத் தாளிட்டான். பிறகு, வாயில் கதவைத் திறந்து கொண்டு உள்ளே சென்றான். தைரியமாகத்தான் காலடி வைத்தான்; விளக்கு 'ஸ்விட்'சை அமுக்கி, அறையெங்கும் பிரகாசத் தைப் பரப்பினான். ஜன்னல்மீது வைக்கப் பெற்றிருந்த ஒரு எலெக்ட்ரிக் 'ஹீட்'டரை எடுத்து வந்து அதன்மீது ஒரு டபராவில் ஜலத்தை வைத்துச் சூடேறச் செய்தான்.

ஜலம் கொதிப்பதையே பார்த்திருந்த சங்கரனுடைய உள்ளுணர்வு, ஏதோ பின்னால் நடந்து கொண்டிருக்கிற தென்பதை எச்சரித்தது. சட்டென்று திரும்பினால் அபாயம் என்பதையும் சங்கரன் உணர்ந்தான்.

அவன் பின்னே அடுக்களை இருந்தது. அதன் கதவு சாத்தியிருந்தது. இப்போது மெள்ளத் திறந்து கொண்டது! ஓர் ஆள் அதன் வழியே வெளிவரும் அளவு திறந்து கொண்ட பின், ஓர் உருவம் பதுங்கியபடி உள்ளே வந்தது. சங்கரனுக்கு அநேகமாக வந்த ஆசாமி யார் என்று புரிந்து



விட்டது. தியாகராஜ நகர் விடுதி அறையில் பின்னே வந்து, கழுத்தைச் சுற்றி ஒரு கரம் இறுக்கியதும் முழங்காலில் வைத்து வளைத்து எறியப்பட்டதும் மனத்தில் மின்னல் போல் பளிச்சிட்டன...எந்த விநாடியும் எந்தவிதமான ஆபத்தும் நேரிடலாம்! குள்ளன் கத்தியை வீசிக் கீழே தள்ளலாம்; அப்போது காட்டியபடி துப்பாக்கியை உபயோகித்து, ஒரே மட்டாகத் தீர்த்து விடலாம்; அல்லது மேலே பாய்ந்து, மென்னியை நெரித்துக் கொல்லலாம்... அப்போது சங்கரனுக்கு அங்கே யாரும் துணை இல்லை! உயரே தாமோதரனுக்கு இந்தத் தகவலை எப்படித் தெரிவிப்பது? அவன் வந்தால், அவனுக்கும் ஆபத்து; ஒருக்கால் அவளைக் குள்ளனின் கூட்டாளி அப்போதே மடக்கிக் கொண்டிருந்தால்!

மற்றும் ஒரு பயங்கர எண்ணம்; அவன் தமக்கை வீடு திரும்புகிறசமயம், சங்கரனுக்கு வந்த ஆபத்தில் அவளுக்கும் பங்கு கிடைத்து விட்டால்! சங்கரன் மனத்தில் பல எண்ணங்கள் மின்னிவிட்டன; இடியோசைகள் கேட்டன.

''அப்படியே இரு!...நகராதே!...வாயைத் திறக்காதே! கூச்சல் கீச்சல் போட்டாயோ, உன்னை என்ன செய்துவிடு வேன் என்பது தெரியாது'' என்று ஒரு குரல் கேட்டது. மெள்ளத்தான் கேட்டது என்றாலும் என்ன கொடூரம்! என்ன பயங்கரம்!

சங்கரன் தொண்டை வரை வந்த பயத்தை விழுங்கினான்; அவன் கண்கள் விறைக்கப் பார்த்தன. அங்கேயே அசையாமல் உட்கார்ந்திருந்தான். எதிரியின் பிடியில் நன்றாகச் சிக்கியிருக்கிறோம் என்பதை அவனால் மறுக்க முடியாது இப்போது.

குள்ளன் பிறகு அடி அடியாக நெருங்கினான் சங்கரனைச் சுற்றி வந்து எதிரில் நின் [illegible] நீட்டியிருந்த கரம் ஒன்றில், நாலு [illegible] கண்ணாடிக் குழாய் ஒன்று இருந்தது; குள்ளன் முகத்தில்

29/05/2011

தந்திரம், வஞ்சம் தீர்த்துக் கொள்கிறோம் என்ற மகிழ்ச்சி, ஏமாற்றம் அடைந்ததைப் பற்றிய ஆத்திரம் எல்லாம் இருந்தன.

''இது அக்னித் திராவகம்! ஏதாவது வம்பு செய்தாயோ... பார்த்துக் கொள்! இதில் ஒரு சொட்டுக்கூடக் கீழே விழாது! ஆமாம், அவ்வளவும் உன் மேலேதான்!'' என்றான் குள்ளன்.

சங்கரன் வயிற்றில் 'பகீர்' என்றது. எந்தக் குள்ளனைப் பற்றி அதி ஜாக்கிரதையாக இருக்க வேண்டும் என்று ஆசைப்பட்டானோ, அவனிடமே அகப்பட்டுக் கொண்டு விட்டான்! அதுவும் எப்படி?

மனோதர்மத்தில் பல பயங்கரக் கற்பனைகள் ஓடின. அக்னித் திராவகம் உடம்பில் வாய்க்கால்களாக ஓடி, சதையைக் கொளுத்தித் தின்று அறுத்துச் செல்வதை அவனால் சிந்தனை செய்து பார்க்கவும் முடியவில்லை. பிழைத்தாலும் பல காலம் ஆஸ்பத்திரியில் கிடக்க வேண்டி வரும். துர்ப்பாக்கியத்தை எண்ணினான். முகம் எல்லாம் விகாரமாகி, கண்டோர் அருவருக்க வாழ்க்கையெல்லாம் வெட்கி மறைந்து வாழும் அவல நிலையை நினைத்தான். உடல் ஒரு முறை குலுங்கியது.

''என்ன! பயமாக இருக்கிறதோ! இந்தப்பயம் எல்லாம், ஹோட்டல் அறைக்குள் நுழைந்து களவாட எண்ணும்முன் வந்திருக்க வேண்டுமே! யாருடன் விளையாடுகிறோம் என்று தெரியாமல் காலை வைத்தாய் அல்லவா, மடசாம்பிராணி! அதற்கு அடையாளம் நீ சாகிற வரையில் இருக்கும்படி செய்கிறேன்...!'' என்றான் குள்ளன்.

''சும்மா அளக்காதே! முதலில் என் அத்தானுடன் விளையாடினது நீதான் என்பது ஞாபகம் இருக்கட்டும்!'' என்றான் சங்கரன் போலி தைரியத்துடன்.

''அதைப்பற்றிப் பேசாதே! வீணாகக் கதை வளர வேண்டாம்...உன் கதையை நான் முடித்துவிடப்



போகிறேன்... உன்னைத் தனியாகப் பார்க்க வேண்டும் என்று வந்திருக்கிறேன். எங்கே அந்தப் பையை எடு வெளியே!''

4 928311

''என்னிடம் இல்லை அது!''

''சரி... அப்புறம்?''

''நான் சொல்லி விட்டேன்; பொய் பேசும் பழக்கம் என்னிடம் இல்லை!''

''எனக்கும் அந்த வழக்கம் கிடையாது...உன்னிடம் இல்லையென்றால், உன் அத்தானிடம் இருக்கிறதென்று சொல்லப் போகிறாயா?''

''அவரிடமும் இல்லை. அவருக்காகத்தான் நான் அதைக் கொண்டு வந்தேன். இரண்டு பேருக்கும் இல்லாமல் அது போய் விட்டது!... நடுவில் ஒருவன் வந்து குதித்து—''

சங்கரன் நிறுத்தினான்; குள்ளன் வெகு அருகில் நெருங்கி விட்டான். ''ஏய்! இதில் இருக்கிறது அக்னித் திராவகம் என்று சொன்னேன், ஞாபகம் இருக்கிறதா? மறுபடி ஞாபகப்படுத்த வேண்டுமா?... அக்னித் திராவகம் என்றால், சந்தனாதித் தைலம் இல்லை, 'குளுகுளு'வென்று இருப்பதற்கு...என் கூட்டாளி வெளியே காத்திருக்கிறான். ஒரு வார்த்தை சொன்னால் உன்னை என் அறையில் கட்டிப் போட்ட மாதிரி கட்டிப் போடுவான். உன் உச்சந் தலையில் சொட்டுச் சொட்டாக இதை விடுகிறேன். ஒவ்வொரு சொட்டும் ஒரு அங்குலம் தின்று கொண்டு போகும்; மூளையில் இறங்கிப் பரவும். அதைச் சரியான வழியில் வேலை செய்ய வைத்து, உண்மையைக் கக்கும்படி செய்யும்... அப்புறம் முகத்திலே கொட்டுவேன்; கன்னமெல்லாம் வாய்க்கால்கள் ஓடும். உள்ளே வெள்ளெலும்பு தெரியும். கண்களைத் திறந்து, இடது கண்ணுக்கு ஒரு சொட்டு, வலது கண்ணுக்கு ஒரு சொட்டு...

''நிறுத்து!'' என்று கூவினான் சங்கரன் அருவருப்புடன்.

29/05/2011

''அப்புறம் காதுகளுக்கு ஒவ்வொரு சொட்டு விடுவேன். அதைப் போட்டுக் கொண்டால், ஒட்டுக் கேட்கிற கெட்ட எண்ணம் ஓடிப் போய்விடும்...உன்னை நல்லவனாகச் செய்ய இந்த ஒரு சீசா போதும்... ஆனால் ஓட முயற்சித்தாயோ குறி பார்க்காமல் வீசி விடுவேன்; கண்ட இடங்களில் சிதறும்...''

''திறந்து ஐயா! என் மேல் வேண்டுமானால் ஊற்றி விடு... அதனால் பை கிடைத்து விடாது. நான் உன்னிடமிருந்து பையைக் கொண்டு வந்தது வாஸ்தவம். ஆனால், இந்த வீட்டு வாசலில் அதைப் பறித்துக் கொண்டு போய் விட்டான் ஒருவன், டாக்ஸியில் வந்து—''

''அது யார் ஐயா!... நம்மிடம் நீ திருடுகிறாய்; உன்னிடம் வேறொருவன் திருடுகிறான்...''

''இது சத்தியம் ஒரு டாக்ஸியில் ஒருவன் வந்தான்; அவனை என் அத்தானுக்குத் தெரியும். இன்று பகலில் ஒரு முறை நேரில் வந்து கேட்டு எச்சரித்துவிட்டுப் போனான்...''

''என்னை நம்பச் சொல்கிறாயா உன் கட்டுக் கதையை?''

''உன் இஷ்டம்! அரை மணி முன்பு வந்திருந்தால் உன் கண்ணாலேயே அதைக் கண்டிருப்பாய்!''

''அப்படிச் சொல்லி, சிலபேர் தப்பித்துக் கொண்டிருக்கிறார்கள்!''

''அதற்கு மேல் நான் என்ன சொல்ல முடியும்? உன் இஷ்டம் போல் செய்து கொள்!''

''இருக்கட்டும்; என்னிடம் பறித்து, இன்னொருவனிடம் பறி கொடுப்பதில் உனக்கு என்ன லாபம்?''

''இப்படி நடக்கும் என்று யார் கண்டார்கள்? என் அத்தானுக்கு உதவி செய்ய நான் விரும்பினேன்...''

மெள்ளச் சங்கரன் எழுந்தான். ''ஏய்! ஜாக்கிரதை! உடம்பைக் கெடுத்துக் கொள்ளாதே! ஜாக்கிரதை! வீசி விடுவேன்; அப்புறம் அழுவாய்!'' என்று எச்சரிக்கை செய்தான் குள்ளன்.



ஃ ஃ ஃ

சங்கரன் எழுந்ததற்கு ஒரு காரணம் இருந்தது. ''ஒரு டம்ளர் வெந்நீர் கொண்டுவர இத்தனை நேரமா!'' என்று கூச்சல் போட்டுக் கொண்டு தாமோதரனே மாடியிலிருந்து இறங்கி வந்து விட்டால் இந்தக் குள்ளன் அவன்மீது திராவகத்தை ஊற்றி விடுவான் என்ற அச்சம் அவன் உள்ளத்தில் தோன்றியது. 'அத்தான் வராமல் இருக்க வேண்டுமே' என்று விரும்பினான்.

மாடியில் இறங்கி வரும்போது ஒரு ஜன்னலைத் தாண்டி வரவேண்டும். எப்போதும் அதன் நான்கு கதவுகளும் அடைத்தே இருக்கும்; மேல் பக்கத்துக் கதவு ஒன்றின் மூலையில் ஒரு சிறு துவாரம் இருக்கும். சிறிய துவாரம் தான், ஆனாலும் சில சமயங்களில் அதன் வழியே வாசல் புற ஹாலில் யார் இருக்கிறார்கள் என்பதை வெளியில் இருந்தபடியே பார்க்கமுடியும். எதேச்சையாகச் சங்கரனின் பார்வை அந்த ஜன்னலின் பக்கம் சென்றது. உடனே அவன் உடலில் ஒரு முறை மயிர்க்கூச்செறிந்து விட்டது. அந்தத் துவாரத்தில் அவன் ஒரு கண்ணைக் கண்டான்.

அது யாருடைய கண்? தாமோதரனுடைய கண்ணா? அல்லது, குள்ளனின் கூட்டாளியின் கண்ணா? இந்தச் சந்தேகம் ஒரு நொடியில் தீர்ந்து விட்டது. குள்ளனின் கூட்டாளி என்றால், அவன் புழக்கடை வழியாகத்தான் வரவேண்டும்; வாசற்பக்கம் கதவைச் சங்கரனே சாத்திக் கொண்டு வந்திருக்கிறான். தாமோதரனாக இருந்தால், சங்கரனைத் தப்புவிக்க ஏதேனும் ஒரு உபாயம் கண்டு பிடிப்பான்.

சங்கரனுடைய தயக்கத்தையு[illegible] தோன்றிய மகிழ்ச்சிக் குறியையும் குள்ளன் கவனித்து விட்டான். உடனே அவன் பார்வையில் ஒரு கொடுமை

29/05/2011

வந்து குதித்தது. குரலில் மீண்டும் அழுத்தம் வந்தது. ''எங்கே பார்க்கிறாய்?... உலக்குத் துணை வரும் என்று எதிர்பார்க்கிறாயா?... என்ன அங்கே? யாராவதும் நிற்கிறார்களா?'' என்று குள்ளனும் அவன் பார்த்த திசையில் நோக்கினான்.

இப்போது ஜன்னல் துவாரத்தில் அந்த கண் இல்லை! தாமோதரன் பூனைப்போல் மாடிப் படிகளை இறங்கி, அடியில் இருந்த பெட்டியைச் சந்தடி செய்யாமல் திறந்து, உள்ளே ஓர் ஆயுதத்தைத் தேடிக் கொண்டிருந்தான்.

ஒரு கணம் குள்ளன் திரும்பி ஜன்னலில் லயித்ததைப் பயன்படுத்திக் கொண்டு விட்டான் சங்கரன். ஒரே பாய்ச்சலில் அடுக்களை வாசற்படியை அடைந்து, அதன் கதவை இழுத்துத் தாழ்ப்பாளிட்டான்; இதனால், எதிரியின் கூட்டாளி (எவனாவது இருந்தால்) அவன் ஒத்தாசைக்கு உள்ளே வர இயலாமல் செய்வதாகும் அல்லவா?

குள்ளன் சீறினான். தன் கையிலிருந்த குழாயை உயரப் பிடித்து, ''விளையாடுகிறாயா நாயே! எத்தனை தரம் சொல்லிவிட்டேன் உனக்கு? என்னைத் தெரிந்து கொள்ளவில்லை இன்னும்!... திற அந்தக் கதவை! உடனே திறந்து விடு... உடனே திற!... வீசி விடுவேன்!'' என்றான்.

சங்கரன் மெள்ளச் சிரித்துக் கொண்டேயிருந்தான் இப்போது. ஏனென்றால், காரியங்கள் அவன் விரும்பியபடியே நடந்து கொண்டிருந்தன. தாழ்ப்பாளிடாத வாசலில் கதவுக்கு முதுகைக் காட்டிக் கொண்டு நின்றான் குள்ளன். அந்தக் கதவை அங்குலம் அங்குலமாகத் தாமோதரன் திறந்து விட்டான். அவன் கையில் முக்கால் கஜத்தில் ஒரு இரும்புக் குழாயைப் பிடித்திருந்தான். அற்புதமான ஆயுதம்!

''வீசு!... வீசுடா, குள்ளா!'' என்றான் சங்கரன் அப்பால் பாயத் தயாராக.

மறுகணம் குள்ளன் வீசினான்; வீசும்போதே தாமோதரனின் ஓங்கிய அடி அவன் மண்டையைக் குறி



பார்த்து வந்து, தோள் பட்டையை வெகு பலமாகத் தாக்கியது. சங்கரன் அப்பால் குதித்தான். ஒரு சொட்டுக் கூட அக்னித் திராவகம் அவன் மேல் படவில்லை. ஆனால், தரையிலும், இடையே கிடந்த ஒரு முக்காலியிலும் சிதறி திகுதிகுவென்று புகைவிடத் தொடங்கியது.

குள்ளன் நியாயமாக சங்கரன் மேல் தாவியிருப்பான்; தோளில் விழுந்த அடி அவனை வீழ்த்தியது. அவன் மேல் விழுந்த தாமோதரன், அவன் கையிலிருந்த கண்ணாடிக் குழாயைப் பிடுங்க யத்தனித்தான். குள்ளன் அதில் மிச்சமிருந்த இரண்டொரு சொட்டுக்களையாவது தாமோதரன் முகத்தில் கொட்டிவிடப் பிரம்மப்பிரயத்தனம் செய்து பார்த்தான். இந்தச் சங்கடமான நிலையில் சங்கரன் உதவிக்கு ஓடி வந்து விட்டான்.

ஓங்கி ஒரு குத்து குள்ளனின் இடுப்பை நோக்கிக் குத்தவே, அவன் தாமோதரன் மீதிருந்த பிடியைத் தளர விட்டு, இரண்டடி அப்பால் போய் விழுந்தான். விடுதலை பெற்ற தாமோதரன், எழுந்து ஓட்டமாக ஓடி, அலமாரி ஒன்றின் மேலிருந்த கத்தியைத் துழாவி எடுக்க முயன்றான். கீழே சிதறிய திராவகம் ஒரு துணியில் பற்றிக்கொண்டதைச் சங்கரன் கவனித்து, அதை அணைக்க என்ன செய்யலாம் என்று திரும்பினான்.

குள்ளன் மூளை யாவருக்கும் முன்னதாக வேலை செய்தது. அவன் தனது தோள் வலியையும் லட்சியம் செய்யாமல் எழுந்தான். சங்கரனும், தாமோதரனும் தங்களைத் தாக்கவே குள்ளன் முயலுவான் என்று எதிர்பார்த்துச் சட்டென்று தயாரானார்கள். ஆனால், அப்பேர்ப்பட்ட எண்ணம் அவனுக்கு இல்லவே இல்லை!

அடுக்களை அறைக் கதவைத் [illegible] உள்ளே ஓடித் திரும்ப அதை அ[illegible] இருவருடைய வியப்பும் நீங்குமுன் படீர் என்று புழக்கடை கதவு சாத்தப்படுவதும், குள்ளன் ஓடும் காலடி ஓசையும் அவர்கள் காதை எட்டின...

29/05/2011

குள்ளன் தப்பித்துக் கொண்டு வெளியேறியதற்கு ஐந்து நிமிஷங்களுக்குப் பிறகு தாமோதரனும், சங்கரனும் அதிர்ச்சி தீர்ந்து சுயநிலை அடைவதற்கு முன் வாசற் கதவு தடதடவென்று இடிக்கப்பட்டது. தாமோதரன் கதவைத் திறந்ததும், அவன் மனைவி நின்று கொண்டிருந்தாள்.

எரிக்கிற மாதிரி அவளைத் தாமோதரன் பார்த்தான். ''ஓஹோ! உனக்குச் சினிமா பார்க்காவிட்டால் சரிப்பட வில்லையோ!'' என்று கர்ஜித்தான்.

அவள் பொல பொலவென்று கண்ணீரைக் கொட்டினாள். ''நான் உயிருடன் வந்தது பெரிய காரியம்! சங்கரன் என்னைத் தனியான விட்டுப் போன பிறகு நான் எழுந்து வந்து விடலாமா என்று நினைத்தேன். ஆனால் இன்று காலை உங்களை ஒரு ஆள் வந்து அதட்டிவிட்டுப் போனானே, அதிலிருந்து தனியே வருவதற்குப் பயமாக இருந்தது. படம் முடிந்த பிறகு எல்லோருடனும் சேர்ந்து வருவதே சரி என்று தங்கிவிட்டேன்; படம் முடிந்தது. வெளியிலே வந்து விலாசத்தைச் சொன்னேன்.

''ஒரு பர்லாங் ரிக்ஷாக்காரன் வந்திருப்பான். யாரோ ஒருவன் ஆஜானுபாகுவாக எதிரே வந்தான். ரிக்ஷாக்காரன் தலையில், 'பளீர் பளீர்' என்று அறைந்தான். 'திருட்டு நாயே! நான் சொல்கிற இடத்திற்கு இந்த வண்டியை ஓட்டு!' என்றான். நான் நடுநடுங்கிப் போனேன்...''

''ஐயய்யோ! நான் அங்கே இல்லாமல் போனேனே, அக்கா!'' என்று குதித்தான் சங்கரன்.

''கேள் பூரா சமாசாரத்தையும்! நீ எங்கே என்று போய் இருக்கப் போகிறாய்!... அப்புறம் என்ன நடந்தது!'' என்றான் தாமோதரன்.

''நான் கூச்சல் போடலாம் என்று வாயெடுத்தேன். அந்தப் பெரிய ஆள், 'வாயைத் திறந்தாயோ, வீட்டுக்கு உன் பிணம்தான் போகும். நான் சொல்கிற வரைக்கும்



அப்படியே ரிக்ஷாவில் உட்கார்ந்திருக்க வேண்டும்'' என்றான். ''அவன் கையில் கத்தி ஒன்று பளபளவென்று இருந்தது. அதை மறைத்து வைத்துக் கொண்டான். நான் வாயைத் திறக்கவில்லை...''

''மளமளவென்று சொல்...அந்தப் பக்கம் யாருமே வரவில்லையா?''

''தெருவில் ஒரு முனை அது. ஒருவர்கூடத் தென்பட வில்லை. தவிர, ரிக்ஷாவையும் சுவரையும் பார்க்கத் திருப்பி வைத்துக் கொண்டு விட்டதால், நான் அதில் உட்கார்ந் திருப்பது யாருக்குமே தெரிய நியாயம் இல்லை. அந்தப் பெரிய ஆளைப் பார்த்தாலே நெஞ்சு 'திக் திக்'கென்று எனக்கு அடித்துக் கொண்டது.''

''அப்புறம்?''

''இருபத்தைந்து நிமிஷம் ஆகியிருக்கும். தெருவில் குள்ளமாக ஒரு ஆள் ஓடிவந்தான். அவனை இந்தப் பெரிய ஆள் 'என்ன, ஏழு! எப்படி? காயா, பழமா?' என்று கேட்டான். ''கால் பழம்; முக்கால் காய்... அங்கே நின்றது போதும், வா!'' என்று அழைத்தான். 'நமது அம்மாளுக்குத் துணை நின்றுகொண்டிருந்தேன். நீ வருவதற்குள் அவருக்கு ஆபத்து நேரிட்டுவிடக் கூடாதல்லவா? அவர் கூச்சல் போட்டிருந்தால், இந்த கத்திக்கு வேலை இருந்திருக்கும். நல்லவேளை சும்மாதான் இருந்தேன்' என்றான். பிறகு அவன் ரிக்ஷாக்காரன் கன்னத்தில் 'பளீர்' என்று மறுபடி ஒரு அறை வைத்து, 'இவங்களை எங்கே கொண்டு போக வேண்டுமென்கிறார்களோ அங்கே கொண்டு போய் விடு. நடுவில் தகராறு செய்தாய், அல்லது கூலி கேட்டாய் என்று தெரிந்தால், உன்னை இரண்டாகக் கிழித்துப் போட்டு விடுவேன், போ' என்று அதட்டிவிட்டுப் போனான்.''

''எங்கே அந்த ரிக்ஷாக்காரன்?''

''அவன்தான் இறங்கினதும் கூலி[illegible]க் கேட்காமல் வண்டியை இழுத்துக் கொண்டு ஓடிவி[illegible]

29/05/2011

தாமோதரன் முகத்தில் பல மாறுதல்கள் ஏற்பட்டன. "இதை இனி மேல் முற்றவிடக் கூடாது. சங்கரா! நீ ஒரு காரியம் செய்! சந்துருவை எப்படியோ சந்தித்து, பையைப் பற்றிய விவரங்களைச் சொல்லிவிட்டு வா! நாம் அதைப் படத்தின் பின்னால் ஒளித்து வைத்தோம் என்கிற ஒரு விவரம் மட்டும் வெளியிட வேண்டியதில்லை. எப்போது நம் கையை விட்டுப் பை போய்விட்டதோ, நமக்கு அந்தப் பயம் இல்லை" என்றான்.

சங்கரன், "இருக்கட்டும், அத்தான், அதை எப்படியாவது நான் கொண்டு வராவிட்டால் பாருங்கள்!" என்று ஒரு சவால் விட்டான்.

"இருக்கட்டும், நீ கொண்டு வருகிறது!... இப்போது நான் சொல்கிறபடி சீக்கிரம் செய்... எப்படியாவது சந்துருவிடம் தெரிவித்துவிடு."

"அவன் வீட்டுக்குப் போகிறேன்..."

"வீட்டில் பார்! இல்லையென்றால், செங்கல்வராய பிள்ளை பங்களாவில் கூப்பிட்டுப்பார்... ஒருகால் அங்கே அவன் இருக்கலாம்."

தாமோதரன் சொல்லபடிதான் சங்கரன் செங்கல்வராய பிள்ளை வீட்டிற்குப் 'போன்' செய்தான். செய்த சமயம் அசந்தர்ப்பமாக இருந்தது. சந்துரு ஒரு பக்கம் ஒளிந்து கொண்டிருக்க, எதிர்ப்புறததில் திலகவதியும் அவள் தந்தையும் ஒளிந்து கொண்டிருக்க, நடுவிலே கணேசன் 'போனை' எடுத்து, 'சந்துருவுடன் பேசுவது சாத்தியம் இல்லை' என்று சொல்லிவிட்டான்.

இது சமாசாரம் தாமோதரனுக்குக் கிடைத்ததும் அவன் அவசரமாக உடை உடுத்திக் கொண்டான். "சங்கரன்! நீயும் உன் தமக்கையும் மாடி அறையில் வெகு ஜாக்கிரதையாக இருக்க வேண்டியது. நான் அவசர காரியமாக வெளியில் போகிறேன். அநேகமாக விடியும் முன் திரும்பி வந்து விடுகிறேன்... மிகவும் முக்கியமான காரியம் இது!" என்றான்.



"நீங்கள் பத்திரமாக இருக்க வேண்டுமே!" என்று சங்கரன் கவலைப்பட்டான்.

தாமோதரன் தன்னிடம் ஒளித்து வைத்திருந்த ஒரு துப்பாக்கியைக் காட்டினான். "இதனால் யாரையும் சுட்டுக் கொல்ல முடியாது; ஆனால், இது கிளப்புகிற சத்தத்தில் எத்தனையோ காரியங்களைச் சாதித்துக் கொள்ளலாம். நான் காலை ஏழு மணிக்குள் திரும்பா விட்டால் நீ போலீஸ் ஸ்டேஷனுக்குப் போய் இன்ஸ்பெக்டர் கோபாலனிடம் நடந்த விவரங்களையெல்லாம் சொல்லி விடு" என்றான்.

தாமோதரன் அரை மணி நேரத்திற்குள் தேனாம் பேட்டையில் செங்கல்வராய பிள்ளை பங்களாவின் அருகில் இறங்கிக் கொண்டு, ரிக்ஷாவை அனுப்பி விட்டான். பங்களாவில் வாசற்புறமாகச் செல்லாமல், பின்புறமாக சுவரோரமாக ஒட்டினாப்போல் சென்று, ஒரு சிறு வாசலை அடைந்தான். கதவைத் திறப்பதும் உள்ளே நுழைவதும் அரை நொடியில் நடந்துவிட்டன. அது அவனுக்குச் சாவ சகஜமான விஷயமாகவே காணப்பட்டது.

செடி மறைவில் பதுங்கிப் பதுங்கி, செங்கல்வராய பிள்ளையின் அறையின் கீழே போய் நின்றான். வீட்டில் ஜனங்கள் இன்னும் படுக்கச் செல்லவில்லை என்று ஊகித்தான். அவன் சென்ற சிறிது நேரத்திற்குள் பல அறைகளில் விளக்கு எரிவதைக் கண்டதும் அவர்கள் யாரையோ வீட்டைச் சுற்றித் தேடிக் கொண்டிருக்கிறார்கள் என்பதை அறிந்து கொண்டான். செடி மறைவில் இருந்தபடியே மேலும் கவனித்தான்.

ஓர் அறையில் வெகு நேரம் விளக்குகள் எரிந்ததிலிருந்தும், நிதானமாகச் சம்பாஷணைகள் நடந்ததிலிருந்தும், எல்லாரும் அங்கே உட்கார்ந்து பேசுகிறார்கள் என்று ஊகித்தான். சந்துருகூட அங்கே[illegible]

செடி கொடிகளில் சலசல[illegible] தாமோதரனுக்கு இரண்டடிக்கு அப்பால் ஓர் உருவம்



29/05/2011 1

ஏதோ பெரியதொரு குற்றம் செய்துவிட்ட மாதிரியும், பின்னால் யாரோ துரத்தி வருகிற மாதிரியும் துள்ளி ஓடியது.

இப்போது யாரேனும் பங்களாவிலிருந்து தோட்டத்தினுள் வருவார்கள் என்று எதிர்பார்த்தான் தாமோதரன். எனவே, தன் ஒளிவிடத்தை மாற்றி இன்னும் வசதியான ஓர் இடத்தில் பதுங்கிக் கொண்டான். அவன் எதிர்பார்த்தபடியே நடந்தது. சிறிது நேரத்திற்கெல்லாம் மதுரநாயகம் வெளிப்பட்டு வந்தார். மெள்ள மெள்ள தாமோதரன் ஒளிந்து கொண்டிருக்கும் இடத்திற்கு அருகே வந்து விட்டார். அதுவரை திடுக்கிடாத தாமோதரன், இப்போது திடுக்கிடும்படி ஒரு சம்பவம் நடந்தது சற்று முன் ஓடிவந்த உருவம் அவனுக்கு ஐந்தாறு கஜத்துக்கு அப்பாலிருந்து புறப்பட்டு, மதுரநாயகத்தைப் பின்பற்றியது.

சந்துரு மாடி ஜன்னலில் உட்கார்ந்தபடி கண்ட அதே காட்சியை, தாமோதரன் செடி மறைவில் இருந்து பார்த்தான். மதுரநாயகத்தின் பிடியில் அந்த ஆசாமி திணறி மயக்கம் அடைந்ததையும், அவனை ஒரு கண நேரத்தில் மதுரநாயகம் செடி மறைவில் இழுத்துப் போட்டதையும், அண்ணாமலை வந்து கைக்குட்டையை எடுத்துச் சென்றதையும் கண்டான்.

தாமோதரன் துணிந்து ஒரு காரியம் செய்தான். தன் கையிலிருந்த துப்பாக்கியை உயர்த்தி இருமுறை சுட்டான். "டுமீல்! டுமீல்!" என்று வேட்டுச் சப்தம் எழுந்தது. அதனால் அவன் எதிர்பார்த்த பலன் கிட்டிவிட்டது. மதுரநாயகம் திரும்பிப் பாராமல் எதிர்த்திசையில் ஓடினார்; அண்ணாமலை எங்கோ ஓடிப் பதுங்கிக் கொண்டான். ஒரு முகூர்த்த காலத்திற்கு எல்லாருமே செயலற்றுப் போய் விட்டார்கள் என்ற உணர்ச்சி ஏற்பட்டது. தாமோதரன் கீழே விழுந்து கிடந்த உருவத்தைத் தூக்கித் தோள்மேல் சாத்திக் கொண்டு வேகமாக நடந்தான். இரண்டு நிமிஷங்களுக்குப்பின் அவன் மோட்டார் ஷெட்டின் அருகில்இருந்த சின்ன அறைக்கு வெளியே நின்றான்.



ஒரே உதையில் கதவு திறந்து கொண்டது. உள்ளே அந்தகாரம் இருந்தும், பழக்கப்பட்டவன்போல் பிரவேசித்தான். தன் சுமையைக் கீழே கிடத்தினான். தானும் அருகில் உட்கார்ந்து கொண்டு, கதவைத் திரும்பவும் மூடினான்.

தாமோதரனுக்கு இதற்குப்பிறகுதான் பெரும் சோர்வு உண்டாயிற்று. காலையிலிருந்து அவன் செய்திருப்பவை அநேக வேலைகள், அவன் குள்ளனுடன் சண்டை போட்டிருக்கிறான்: இரவெல்லாம் விழித்திருக்கிறான். அமளி அடங்கும்வரையில் சற்று ஓய்வு எடுக்கலாம் என்று எண்ணி, சுவரோரமாக உட்கார்ந்து சாய்ந்தான்! இரு கொட்டாவிகள் விட்டான், சிறு குறட்டைகள் தொடர்ந்தன. ஐந்து நிமிஷங்களுக்குப் பிறகு ஒருமிக்க அயர்ந்து விட்டான்.

மறுபடி அவன் கண் விழித்தபோது, அச்சிறு அறைக் கதவு திறந்திருந்தது. அவன் தூக்கிக் கொண்டு வந்திருந்த ஆசாமியை அங்கே காணவில்லை. மூர்ச்சை தெளிந்து அவன் எழுந்து போயிருக்க வேண்டும் என்று நினைத்தான்.

வெளியே எட்டிப் பார்த்தான். பொழுது விடியும் நேரம் நெருங்கிவிட்டது. பங்களாவின் உருவம் வான வெளிக்கு எதிராகத் தெள்ளெனத் தெரிந்தது மூன்றாம் மாடியில் ஓர் அறையில் விளக்கு எரிந்து கொண்டிருந்தது. அந்த அறை ஜன்னல்கள் திறந்தபடி இருந்தன.

தாமோதரன் உற்றுக் கவனித்தான். அவன் திருஷ்டி அங்கேயே லயித்தது. இரண்டு உருவங்கள் அடிக்கடி ஜன்னலண்டை வந்து போயின. அங்கே நடப்பது என்னவென்று அறிந்துகொள்ள அதிக நேரம் பிடிக்கவில்லை.

சம உயரமும் பருமனும் உள்ள இருவர் சண்டை போட்டுக் கொண்டிருந்தார்கள். வர வர அந்தச் சண்டை உக்ரமாக ஆகிக்கொண்டி[illegible]ருவரும் தாக்கிக் குத்துவதும், கீழே தள்ள முயற்சிப்பதுமாகச் சுற்றிச் சுற்றி ஓடிக்கொண்டிருந்தார்கள்.

29/05/2011 13:

# 'எஜமான்' விஜயம் செய்கிறார்

சென்னை நகர எல்லைக்குச் சில மைல்களுக்கு அப்பால் ஓர் ஏகாந்தமான பிரதேசத்தில் மிகப் பிரம்மாண்டமானதொரு மாளிகை இருக்கிறது. அதைச் சுற்றியுள்ள காம்பவுண்டுச் சுவரைக் கொண்டே ஒரு சிறு பங்களா கட்டிக் கொண்டு விடலாம் என்று நகரத்து ஜனங்கள் சொல்லுவார்கள்.

பகல் வேளையில் அதற்கு வெளியே ஒரு பர்லாங்கு தூரம் தள்ளி நின்று பார்ப்பவர்களுக்கு, உள்ளே தொலை தூரத்தில் பச்சைப் பசேல் என்ற மரங்கள் வரிசை தெரியும்; அதற்கும் அப்பால் 'ஆகாச வர்ண'ப் பூச்சுடன் கூடிய பங்களாவும், அதன் வர்ண மாடி ஜன்னல்களும் தெரியும். இத்தனை பசுமைக்கிடையே சூரிய வெப்பம் தென்படாமல் வசிக்கக் கொடுத்து வைத்த மகாராஜன் எவனோ என்ற எண்ணமும் அடுத்துத் தோன்றும்.

இரவு காலத்தில் அந்தப் பக்கம் செல்கிறவர்கள், அதே திசையில் நோக்கினால், ஒவ்வொரு ஜன்னலும், உள்ளே எரிந்து கொண்டிருக்கும் ஜாஜ்வல்யமான மின்சார விளக்குகளின் பிரதிநிதியாக விளங்குவதைக் காணாமல் இருக்க முடியாது: சுற்றியுள்ள வெளியிலேயே விளக்கு ஸ்தம்பங்களில் பச்சை விளக்குகள் பிரகாசிக்க, பங்களாவின் மேல் மாடியில் கம்பீரமாக ஒரு ஸ்தம்பத்தில் எழும்பி நின்று, தன்னந் தனியாக, தானே ஏக சக்ராதிபதி யென்று விளம்பரம் செய்வதேபோல் ஒரு 'மெர்க்குரி' தீபம் ஒளியை வீசிக் கொண்டிருக்கும்.

யாரேனும் இருவர் அந்தப் பிராந்தியத்திற்குச் சென்றால், அந்த மாளிகையைப் பற்றி உரையாடாமலும் இருக்க முடியாது. ''ஏன் ஐயா! என்றைக்காவது



உள்ளே சென்று பார்த்திருக்கிறீர்களா?'' என்று ஒருவர் மற்றவரைக் கேட்கலாம். அதற்கு மற்றவர், ''நானாவது! உள்ளே போவதாவது! அதற்கெல்லாம் நமக்கு அந்தஸ்து ஏது! ஒரு வருஷத்துக்கு முந்தி இதைக் கட்டின கண்ட்ராக்டரின் குமாஸ்தா நமக்கு வேண்டியவன்; அவன் சொல்லித்தான் கேள்வி; இது மாதிரி கட்டடம் இதற்கு முந்தி இருந்ததில்லை என்கிறான். கோட்டை என்றால், இதுதான் கோட்டை என்கிறான்.''

வெளியூர்க்காரர்கள் அந்தப் பக்கத்தில் வந்து நின்று பார்த்துவிட்டு ஆச்சரியத்தில் திறந்த வாயை மூடவும் மறந்து போயிருக்கிறார்கள். ''அடேயப்பா! பணக்காரர்கள் என்றால் இப்படி ஒரு வாழ்க்கையா வாழ்கிறார்கள்! அம்மாடி!'' என்று பிரமித்துவிட்டு, ''யார் இது, இத்தனை பணத்தில் கொழிப்பவர்?'' என்று விசாரித்திருக்கிறார்கள்.

அப்படி விசாரிப்பவர்கள் எல்லாருக்கும் ஒரே பதில் தான் கிடைத்திருக்கிறது; ''சிங்கப்பூரில் வைர வியாபாரம் செய்து வண்டி வண்டியாகப் பணம் சம்பாதித்தவர்... சுந்தரம் பிள்ளை என்று பெயர்...பெரிய ஆள்... இங்கே பங்களா கட்டிக் கொண்டு வந்திருக்கிறார்'' என்பதே அந்தப் பதில்.

பொது மக்கள் பேசிக்கொண்டது அவ்வளவும் உண்மை தான். காம்பவுண்டுக்குள் எட்டிப் பார்த்தாலே, முன்னே தோன்றிய அலங்காரத் தோட்டத்தைக் கண்டு பிரமிப்பு அடைய வேண்டும். தோட்டக்காரர் ஒரு மந்திரவாதி: நினைத்த இடங்களில் இஷ்டப்பட்ட அளவில் அவர் புஷ்பங்களைத் தருவித்திருந்தார்! 'கம்'மென்ற சுகந்தம் அந்தப் பிரதேசமெங்கும் பரவியிருந்தது. பெரிய இரும்பு 'கேட்டு'களைத் திறந்தால் எதிரே வெள்ளை வெளே ரென்று துப்புரவானதொரு சிமெண்டு ரஸ்தா, இருமருங்கிலும் 'க்ரோட்டன்ஸ்'கள் தலை ஆட்ட, நீண்டு கிடந்தது.

பங்களா வாசலில் '[illegible] கண்ணாடி போல் பெரிய[illegible]

தாண்டி உள்ளே சென்றால் ரத்ன கம்ளத்தை ரப்பர் குமிழ்கள் தாங்கி நிற்கின்றன. காலை வைத்தால், சுகமாக அமுங்கிக் கொடுத்தன; இதன் மீது காலால் நடக்கலாமா என்ற அச்சத்தை எழுப்பின. அனாவசியமாக வர்ணப் படங்கள் எதுவும் சுவரில் இல்லை. ஒரு குளுமையை உணரும்படி செய்ய, என்ன வெல்லாமோ செய்திருந்தார்கள். ஹாலில் கிடந்த ஸோபாக்களும் நாற்காலிகளும் அன்று தான் 'வார்னிஷ்' செய்யப்பட்டவைபோல பளபளவென்று இருந்தன. 'கண்ணாடி' இத்த மூன்று வட்ட மேஜைகள்; சுவரோரமாக ஒரு உயரமான முக்காலில் டெலிபோன்; உயரே பெரியதொரு கெடியாரம்... சிவப்புச் சலவைக் கல்லினால் இழைத்த மாடிப் படி.

எல்லாம், 'பணம் பணம்' என்று நம் காது கிழியக் கூச்சல் போடுவது போன்று இருந்தன. அள்ளி அள்ளிச் செல்வத்தை வாரி வழங்கி இருந்தால்தான் இந்தக் காட்சியை உருவாக்கியிருக்க முடியும்...

மாடியில் ஏறிவிட்டவர்களுக்கு இன்னும் மயக்கமூட்டும் காட்சி காத்திருக்கிறது. மீன்கள் கண்ணாடிக் கூண்டுகளில் ஆனந்தமாக நீந்தி விளையாடி வருகின்றன.

தரையில போட்டிருப்பது ரத்ன கம்பளமாக இருக்குமா அல்லது வெல்வெட்டாக இருக்குமா என்ற சம்சயம் ஒவ்வொருவருக்கும் ஏற்பட்டே ஆகவேண்டும். அருமையான ஸோபாக்கள். அவற்றிலே சகஜமாக வீற்றிருக்கும் பாக்யம் பெற்ற பேர் இருவர். ஒருவர் சுந்தரம் பிள்ளை, மற்றொருத்தி சுந்தரி.

ஃ ஃ ஃ

சுந்தரம் பிள்ளைக்கு உயர்ந்தால் ஐம்பதுவயதிருக்கும்; தலையில் நரை இங்கும் அங்குமாகக் காண இப்போதுதான் தைரியம் கொண்டிருந்தது. அவருடைய முகத்தில் 'ரிம், லெஸ்' மூக்குக்கண்ணாடி; அழகுக்காகவே போடப்பட்டது. அவருடைய செல்வத்துக்கு ஆயிரம்பேர் எதையும் படித்துச் சொல்லக் காத்திருப்பார்கள். உடைகளில் டாம்பீகம்



இல்லை; வெள்ளை வெளேர் என்ற மெல்லிய வேஷ்டியும் ஒரு ஜிப்பாவும்தான். ஆனால் செல்வந்தர்கள் எதை உடுத்தினாலும் அதற்குக் கௌரவம் ஏற்பட்டுவிடும் அல்லவா? ஆகவே, அந்த உடைக்கும் மதிப்பு ஏற்பட்டது; அதிகப் பருமன், ஊளைச் சதை என்ற உபத்திரவம் ஏதும் இல்லை; மெலிந்தவர் என்ற அவப்பெயரும் கிடையாது. தென்பு உள்ளவர் என்று பார்த்த மாத்திரத்தில் சொல்லி விடலாம்.

அவர் முகத்திலே இரு பாவங்கள் இருந்தன. ஆழ்ந்த கண்களும் அகன்ற நெற்றியும் இவர் ஒரு அறிவாளி என்று எடுத்துக் காட்டின. ஆனால் அதே கண்களில் பல தடவைகளில் தோன்றிய கூர்மையான பார்வையும், மெல்லிய மீசையும் முன் துருத்திய முகவாய்க் கட்டையும், 'இவன் ஒரு போக்கிரி; மேலே தோன்றுவதெல்லாம் வெறும் வேஷம் என்று அறிவித்தன. அந்த உதடுகள் கொஞ்சவும் கொஞ்சும். கனல் பறக்கும் கடும் மொழிகளையும் கக்கும் என்றும் ஊகிக்க முடிந்தது.

சுந்தரம் பிள்ளை அலங்காரம் ஏதும் செய்து கொள்ளவில்லை. தங்க ஆபரணம், வைர மோதிரம் ஏதும் அவர் மீது இல்லை; எனினும் நினைத்த மாத்திரத்தில் பல லட்சங்களைப் புரட்டும் சக்தி பெற்றவர் என்பதை எப்படியோ அவருடைய பாவனைகள் காட்டிக் கொடுத்தன.

சுந்தரியை அவருடைய மனைவி என்று சென்னை வாசிகள் சொன்னார்கள். சிற்சில விஷயங்கள் எத்தனை ரகசியமானாலும் எப்படியோ வெளியே பரவி பெரும் வதந்தியாகி விடுகின்றன. சுந்தரியைப் பத்து வருஷங்களுக்கு முன் சுந்தரம் பிள்ளை வெளிநாட்டில் சேர்த்துக் கொண்டார் என்றும், மணம் என்று அவர்களுக்கு நடைபெறவில்லை என்றும், சுந்தரம் பிள்ளையின் ஆதரவுக்கு அந்த ஸ்திரீ வருமுன் வேறு பெயர் கொண்டிருந்தாள் என்றும், சுந்தரம் பிள்ளையே அப்படி அவள் பெயரை மாற்றி அமைத்தார் என்றும் [illegible] கள். சுந்தரிக்கு இந்தப் பக்கத்[illegible] இல்லை

29/05/2011 13

என்பதாலும், சுந்தரம் பிள்ளை பெரிய தனவந்தர் என்பதாலும் இதுபற்றிய பேச்சு மேற்கொண்டு வளரவில்லை. அவர்கள் இருவரும் மிகவும் அந்யோந்யமாக வாழ்ந்தார்கள். அவள் சொன்னதை அவர் மீறியதில்லை என்றும் கூட ஜனங்களிடையே பேச்சு இருந்தது. ஆனால் அதையும் தடுத்துச் சில வதந்திகள் இருந்தன. சுந்தரிக்கும் சுந்தரம் பிள்ளைக்குமிடையே அபூர்வமாகப் பெரும் தகராறுகள் நிகழ்வது உண்டென்றும், அப்போது சுந்தரம் பிள்ளை வெகு மோசமாக நடந்துகொள்வார் என்றும் அந்த வதந்திகள் வெளியிட்டன.

சென்னையில் மாளிகை கட்டிக்கொண்ட பின்புகூட, வைர வியாபாரத்தைப் பிள்ளை அவர்கள் தொடர்ந்து நடத்தினார். ஆனால், அவர் ஒன்றிரண்டு 'காரட்' வைரங்களைக் கண்ணாலும் பார்ப்பதில்லை. நூற்றுக்கணக்கில் தான் அவர் கவனிப்பார் என்றும் சொல்லப்பட்டது.

இந்தப் பகிரங்க வதந்திகளுக்குப் பின்னால் ரகசியமான வதந்தி, குறிப்பிட்ட வட்டாரங்களில் உலாவியதும் உண்மை. சுந்தரம் பிள்ளையை நெருங்குவது அபாயம், எதற்கு துணிந்தவர் என்பதே அது. இதையொட்டிச் சில கதைகளையும் கூறினார்கள். அவரை எதிர்த்துக் கொண்ட பேர்வழி தொலைந்து போன மாதிரிதான் என்றார்கள். அவர் இஷ்டப்பட்டால் அவருடைய ஆட்கள் எதிரிகளை இருந்த இடம் தெரியாமல் நிர்மூலமாக்க முடியும் என்று அச்சத்துடன் பேசிக் கொண்டார்கள். சுந்தரம்பிள்ளையின் புன்சிரிப்பிலே நெருப்பு ஒளிந்து கொண்டிருக்கிறது என்று கூறி, கூடியவரை அநேகர் ஒதுங்கிக் கொண்டார்கள். அவரைப் பற்றிய இனம் தெரியாத ஒரு பயம் பலரிடமும் இருந்தது. அவர் என்ன செய்தார் என்று நேரிடையாகக் குற்றம் சாட்ட முடியாமற் போனாலும், அவரை நெருங்காமல் இருப்பது நல்லது என்று நம்பினார்கள். எனவே, சுந்தரம் பிள்ளையின் பங்களாவிற்கு வெளியார் செல்வது



குறைவு: அதைப் பிள்ளை அவர்களும் விரும்பினார்கள் என்று சொல்லும்படி அங்கே காரியங்கள் நடைபெற்றன.

ஃ ஃ ஃ

சுழலும் நாற்காலியில் நன்றாகச் சாய்ந்து கொண்டு ஆகாயத்தைப் பார்த்தபடி சுந்தரம் பிள்ளை யோசனையில் இருந்தார். அவர் சாதாரண விஷயங்களுக்கெல்லாம் கவலைப்பட்டு, மனத்தை அலட்டிக் கொள்வதே இல்லை. பெரிய தவறுகள், எதிர்பாராத சம்பவங்கள், பலமான நஷ்டங்கள் ஏற்படும் போதுதான் அவர் அப்படிச் சிந்தனையில் மூழ்குவார்.

'கிணு கிணு' வென்று அடித்த டெலிபோன் மணி அவரது 'நிஷ்டை'யைக் கலைத்தது. ரிஸீவரை எடுத்துக் காதில் வைத்துக் கொண்டார். "ஹலோ! யார்! அது! சுந்தையாவா?...என்ன சமாசாரம்?" என்று அலட்சியமாகக் கேட்டார்.

அவர் காதிலே விழுந்த பதில் புருவத்தை நெரிக்கும்படி செய்தது. கண்களில் ஓர் அசாதாரணமாக கொடூர ஒளியைத் தருவித்தது. அதிகக் கவனத்துடன் பேசினார். ஆனால், மனத்தில் தோன்றிய எண்ணங்களைக் குரல் காண்பித்துக் கொடுக்கவே இல்லை. அதில் இருந்த சாந்தம் மாறவே இல்லை. "என்ன சொல்கிறாய்?...எஸ் ஐ.டி. சந்துருதானே? செங்கல்வராய பிள்ளை பங்களாவுக்குப் போயிருக்கிறானா? அதற்கென்ன இத்தனை பதட்டம்? பேஷாகப் போகட்டுமே!...உம்ம். நீ ஒன்றும் கவலைப் படாதே! அதைப்பற்றி நான் 'தம்பி'யிடம் பேசிக்கொள்கிறேன். 'சந்துருவின் அறையை நன்றாகப் பார்த்து விட்டேன்' என்று தானே சொல்கிறாய்! அதில் ஒன்றுமே இராதென்று எனக்குத் தெரியும்; அதெல்லாம் உனக்கு 'ட்ரெய்னிங்' என்று வைத்துக்கொள். ஜாக்கிரதையாக இரு; அகப்பட்டுக் கொண்டு, எனக்குத் தொந்தரவு கொடுக்காதே! பிறகு நான் உன்...
என்று ரிஸீவரைக் கீழே வைத்துவிட்டு இரண்டு முறை

29/05/2011 1

தாற்காலியிலேயே சுழன்றார். பிறகு மேஜை மேல் இருந்த மணியை அடித்தார். ஒரு பொடியன் வந்து நின்றான்.

"ஓடிப்போய், எங்கிருந்தாலும் 'தம்பி'யை உடனே இங்கே வரச் சொல்!" என்றார் பிள்ளை.

பையன் சிட்டாய்ப் பறந்து விட்டான். பத்து நிமிஷத்திற்கெல்லாம் 'தம்பி' அறையில் நுழைந்தான்.

'தம்பி' யாருக்குத் தம்பி என்று நிச்சயம் சொல்ல முடியாது; அத்தனை ஆஜானுபாகுவாக இருந்தான் அவன்! அவனுடைய முண்டாக்களும், விரிந்த மார்பும், தடித்த கழுத்தும் அவனை ஒரு கடோத்கஜனோ என்று கூறும்படி இருந்தன. சுந்தரம் பிள்ளை அவன் வந்தும்கூட, பாராதவர் போல் சிறிது நேரம் அமர்ந்திருந்தார். பிறகு சட்டென்று நிமிர்ந்து, "தம்பி! உனக்கு இன்றைக்கு ரொம்ப வேலை இருக்கும் என்று ஊகிக்கிறேன்" என்றார்.

"சொல்லுங்கள்!" என்று 'தம்பி' தனது இரு புஜங்களையும் பிடித்துவிட்டுக் கொண்டான்.

"நேற்று நான் அந்த முட்டாள் செல்வராஜை அனுப்பினது மகா பிசகாகப் போய்விட்டது. உன்னை அனுப்பியிருக்க வேண்டும். காதும் காதும் வைத்தாற்போல செய்ய வேண்டிய ஒரு காரியத்தைப் பகிரங்கமாக நடத்தி விட்டான். காலையில் இங்கே வந்து மூக்கால் அழுகிறான். முட்டாள், வெட்டிப் புதைத்துவிடலாமா என்று வந்தது."

'தம்பி' உதட்டைக் கடித்துக் கொண்டான். "நாம் ஏற்பாடு செய்கிற காரியங்களில் தவறு நடப்பது இது வரையில் கிடையாது. இப்போதுதான் முதல் தடவையாக நான் அப்படிக் கேள்விப்பட்டிருக்கிறேன்!" என்றான்.

சுந்தரம் பிள்ளை, அவனை மேலே பேசிக் கொண்டிராமல் அடக்கும் தோரணையில், "ஒரு பிசகு நடந்து விட்டது. அதைத் தொடர்ந்து தொண்ணூறு பிசகுகள் நடக்கப் போகின்றன. அந்த மடையன் தாமோதரன்



காலையில் எழுந்ததும் எழுந்திராததுமாகப் போலீஸில் போய்த் தகவல் கொடுத்திருக்கிறான்" என்றார்

"அதுவும் நாம் கேள்விப்படுகிற விஷயம் இல்லை!" என்றான் 'தம்பி'.

"அதெல்லாம் போகட்டும். இன்றைக்கு, இப்போது ஸி. ஐ. டி. சந்துரு செங்கல்வராய பிள்ளையின் பங்களாவுக்குப் போயிருக்கிறான் என்று தகவல் கிடைத்திருக்கிறது."

"ஒரே ஒரு வார்த்தை சொல்லுங்கள். நான் போய் இங்கே மூட்டை கட்டிக் கொண்டு வந்து விடுகிறேன்!"

சுந்தரம்பிள்ளை சிரித்தார்: "அது அவ்வளவு லகுவான காரியம் இல்லை. அவசரப்பட்டு ஒரு சிறு தவறு செய்யப் போக, தலைக்கே ஆபத்து வந்து சேரும். தவிர, நமக்கும் போலீசுக்கும் இப்போது என்ன தகராறு? ஒன்றும் இல்லையே! இந்திரா போய் அழைக்கிறாள்; சந்துரு போகிறான். நம்மை எதிர்க்க வேண்டும் என்று அவன் போகவில்லையே! அப்படி எதிர்க்க வந்தால் அப்புறம் நீ சொன்ன 'வைத்தியம்' செய்ய வேண்டியதுதான்; அப்போது பார்க்கலாம். அதற்கிடையில், இன்று ராத்திரி ரொம்ப ஓட்டம் பிடி இருக்கும் என்று எதிர்பார்க்கிறேன். குள்ளன் சும்மா இருக்க மாட்டான்; மறுபடி தாமோதரத்திடம் முயற்சி செய்வான்; என் வரையில் பை தாமோதரத்தின் வீட்டை விட்டுப் போகவில்லை என்று நிச்சயமாகத் தெரியும். அவர்களிடம் பை சிக்கியிருந்தால் குள்ளனும் ரத்தினமும் மூஞ்சியைத் தொங்கப் போட்டுக் கொண்டு ஏன் நிற்கிறார்கள்?"

"அது சரி..." என்றான் 'தம்பி'.

"செல்வராஜுக்கு இன்று நான் கொடுத்த சூடு சரியான சூடு. அவன் 'பை'யை [illegible] காலடியில் போடாத வரையில் அவனுக்கு ஆபத்து [illegible] என்று சொல்லி விட்டேன்!"

29/05/2011

'தம்பி' சட்டையை மடக்கிக் கொண்டான். ''ஏதானும் நம்மிடம் விளையாடினால் நான் பார்த்துக் கொள்கிறேன்'' என்றான்.

''அதிருக்கட்டும். சந்துரு அங்கே இருப்பதால் எப்படியும் செங்கல்வராய பிள்ளையைச் சரிப்படுத்தி, பேச வைத்து விடுவான் என்று யோசனை செய்கிறேன். அது ஒரு முக்கிய விஷயம்...''

''அதுதான் நான் சந்துருவைக் கொண்டு வருகிறேன் என்கிறேன்.''

''அது தவறு என்று நான் சொல்கிறேன். செங்கல்வராய பிள்ளையைக் கொண்டு வந்து விடு; பை கிடைக்கிற மட்டும் அவன் யாரிடமும் பேச வேண்டியதில்லை.''

''அப்படியே!'' என்றான் 'தம்பி'. ஏதோ ஒரு காபி ஹோட்டலுக்குப் போய் ஒரு சிற்றுண்டி பொட்டலம் வாங்கிக் கொண்டு வரச் சொல்வது போல் இருந்தது அவனுக்கு.

''எங்கே அவனை வைக்கப் போகிறாய்?''

''இங்கே வர வேண்டாம் அந்த ஆசாமி. தனியாகச் சின்ன பங்களாவில் வைத்து விடலாம். அந்தப் பக்கம் ஆள் நடமாட்டம் அதிகம் இல்லை.''

''காதுங் காதும் வைத்த மாதிரி நடக்க வேண்டும்!''

''சொல்ல வேண்டுமா?'' என்றான் 'தம்பி'. அவன் திரும்பிச் சொல்லும்போது சுந்தரம்பிள்ளை மறுபடி கூப்பிட்டார். ''ஒன்று சொல்ல மறந்து விட்டேன். செல்வராஜ் மேல் கண்காணிப்பு இருக்கட்டும். ஒரு முறை பை கெட்டுப் போனதற்கு நான் சும்மா விட்டுவிட்டேன் என்று அவனுக்குத் தைரியம் ஏற்பட்டிருக்கும். இரண்டாம் முறை அது அவன் கையில் அகப்பட்டால் நேரே கொண்டு வரமாட்டான்.''

''நான் பார்த்துக் கொள்கிறேன். ஏதாவது 'தில்லு முல்லு' நடந்தால், எழுந்திருக்காதபடி போட்டு விடுகிறேன்!''



சுந்தரம் பிள்ளை மறுபடி புன்முறுவல் பூத்தார். ''ஒரு சிறு ஊசியால் எடுக்க வேண்டிய விஷயம், கோடாலி கொண்டு பிளக்கும்படியாகப் பன்னிரண்டு மணி அவகாசத்தில் வளர்ந்து விட்டது. சரி, செங்கல்வராய பிள்ளையை அழைத்து வர யார் போகிறது?''

''சுந்தையாவையும் பக்கிரியையும் நான் அனுப்புகிறேன். நானே போகிறதானாலும் போகிறேன்.''

''அது அவசியம் இல்லை. நீ செல்வராஜைக் கவனி, தாமோதரன் மேலேயும் ஒரு கண் வைத்துக் கொள்... மறுபடி அந்தப் பக்கம் ஒரு தவறு நடக்கக் கூடாது.''

''நடக்காது'' என்றான் 'தம்பி', உறுதியுடன். பிறகு வெளியேறினான்.

மூன்றாம் மனிதர் ஒருவர் இவர்களிடையேயுள்ள உறவைப் பற்றிச் சிந்தனை செய்திருந்தார்களானால், சில நிமிஷங்கள் திகைத்திருப்பார்கள்; வெகு நேரம் முடிவு காணாமல் கலங்கியிருப்பார்கள். பெரும் பணக்காரரான சுந்தரம் பிள்ளைக்குச் செல்வம் திரட்டும் திறன் இருந்தது; 'தம்பி'யிடம் உடல் கட்டு இருந்தது. சுந்தரம் பிள்ளையை அவன் முஷ்டியால் ஒரு தட்டுத் தட்டினால், அவர் சவாசனம் போட்டுக்கொண்டு கிடக்க வேண்டியவர்தான். ஆனாலும் சுந்தரம் பிள்ளை 'தம்பி'யிடம், ஒரு பழகின வேட்டை நாய்க்கு உத்தரவு போடுவது போலவே பேசினார்; அவனும் எதையும் செய்யத் தயாராக இருந்தவனாகவே பணிவுடன் நடந்து கொண்டான்.

மிக மிகக் கூர்ந்து நோக்கும் கண்களுக்குச் சுந்தரம் பிள்ளையின் நெஞ்சாழத்தில் இந்தத் 'தம்பி'யிடம் சிறிது பயம் தங்கியிருந்தது என்பது [illegible] ஒரு நாள், 'தம்பி' முறைத்தால், [illegible] குழி தோண்டி வைத்திருக்க வேண்டும் என்ற எண்ணம் அந்தப் பயத்துடன்கூட ஒண்டி ஒளிந்து வளர்ந்துகொண்டிருந்தது.

'தம்பி'யின் பணிவுப் போர்வைக்குள்ளே ஒரு இறு அடங்கிய பாவம் இருந்தது. 'என்னால் எல்லாக் காரியங்களையும் சாதித்துக் கொள்கிறாய். உன்னிடம் பண பலம் இருப்பது உண்மை. ஆனால், உன் ஆயுள் பலம் என் கையில் இருக்கிறது. என் கையால் யாரைத் தட்டினாலும் சுருண்டு விழ வேண்டியவன்தான். என்னை நீ கவனிக்கிற வரை தான் உன் சேவகன்; அவ்வளவே!'' என்ற மமதை அதில் இருந்தது.

ஃ ஃ ஃ

இரவு வளர்ந்து கொண்டிருந்தது. சுந்தரம் பிள்ளை மாடி ஹாலில் போய் உட்கார்ந்தார். 'தம்பி'யிடம் ஒரு காரியத்தை ஒப்புவித்துவிட்டால், அவர் அதன்பின் கவலை கொள்வதே இல்லை. 'தம்பி' சொன்னால் சொன்னபடி செய்வான்; அவனால் நடக்காத காரியம் என்றால், வேறு எவராலுமே நடக்காது. அத்தனை துணிச்சல் உண்டு. சாமர்த்தியம் உண்டு அவனுக்கு. தன் உயிரை லட்சியம் செய்யாமல் நடந்து கொள்வான். எனினும் இன்று அவர் மனதில் பல சஞ்சலங்கள் தோன்றின.

இன்று வரை அவருடைய காரியங்களில் போலீஸ் தலையிட்டது இல்லை. போலீஸ் வரை சென்று குற்றம் சாட்டும் தைரியசாலிகள் யாரும் இல்லை! 'தம்பி'யும் அவர்களை அதுவரை அனுமதித்ததில்லை! இப்போது அவர் சற்றும் விரும்பாத வகையில் காரியங்கள் நடந்து கொண்டிருக்கின்றன. வேறொரு வழியாகப் போலீஸுடன் —வி. ஐ. பி. சந்துருவுடன் அவர் மோதிக் கொள்ள வேண்டிய நிலைமை ஏற்பட்டு விட்டது.

சந்துரு கெட்டிக்காரன் என்பதை அவர் அறிவார்; பலருடைய பெயர்களைப் பற்றிய குறிப்புகள் அவன் நோட் புஸ்தகத்தில் இருந்தன என்பதையும் அவர் கேள்விப்பட்டிருக்கிறார். ஒரே ஒரு முறை அவனை ஒரு டீ பார்ட்டியில் அவர் நேரில் சந்தித்த சமயம், அவனுடைய பேச்சிலிருந்து



தமது பெயரையும் அவன் விடவில்லை என்று கண்டு கொண்டார்.

சந்துருவை அவர் அருகில் காண வேண்டி வந்தபோது சந்துருவாக அவருக்கு ஒரு 'நமஸ்தே' போட்டான்.

''தங்களை இதற்கு முன் பார்த்ததில்லையே'' என்று சுந்தரம் பிள்ளை மெள்ள நகர முயன்றார்.

சந்துரு அப்போது ஒன்றும் பதில் கூறவில்லை; வெறுமனே சிரித்தான். சிறிது நேரத்திற்கெல்லாம் அவர் மறதியாக விட்டுச் சென்ற பிரம்பைக் கொணர்ந்து கொடுத்து, ''இதோ எடுத்துக் கொள்ளுங்கள். என்னைப் பார்த்ததில்லை; அடையாளம் கண்டு கொள்வதுகூட தங்களுக்குத் துர்லபம். ஆனால், நான் தங்கள் பிரம்பை முதற் கொண்டு அடையாளம் கண்டு வைத்திருக்கிறேன்!'' என்றான் குறும்பாக.

''ரொம்ப சந்தோஷம்'' என்றார் பிள்ளை.

''அனாவசியமாக உங்களை நான் சந்தோஷப்படுத்த விரும்பவில்லை. என் தொழில் முறையில்தான் உங்களைத் தெரிந்து வைத்துக் கொண்டிருக்கிறேன்!'' என்றான் சந்துரு மறுபடி.

''நான் போலீசார் குறிப்பு வைத்துக் கொள்ளும்படி எதுவும் செய்வதில்லை!'' என்றார் அவர்.

''அந்தப் பொறுப்பை நீங்கள் எங்களுக்கு விட்டு விடுங்கள்... பிரம்பு ஜாக்கிரதை! விலை உயர்ந்ததாக இருக்கும் போலிருக்கிறது!'' என்றான்.

சுந்தரம்பிள்ளை முகம் சிவந்தது; உஷ்ணமாகப் பதில் சொல்ல வாயெடுத்தார். சந்துரு ஒரு கும்பிடு போட்டான்; ''மன்னிக்க வேண்டும்; இது மரியாதை தெரியாத பிராணி. வைர வியாபாரிகளுடைய பிரம்பு வைரம் பாய்ந்ததாக இருக்கும் என்றொரு வசனம் [illegible] சொல்லிவிட்டு அப்பால் போனான்.

29/05/2011 1

சுந்தரம்பிள்ளையின் சிவந்த முகம் வெளிறிப் போயிற்று. அன்று காரில் ஏறியதும், பிரம்பின் வெள்ளிக் குமிழியைத் திருகித் திறந்து கவிழ்த்தார். மூன்று பெரிய வைரங்கள் அதனுள்ளிருந்து விழுந்தன. 'சந்துரு அதைத் தெரிந்துதான் பேசினானா. அல்லது குருட்டாம்போக்கில் எறிந்த கல்தானா' என்பதை அவரால் கண்டு கொள்ள முடியவில்லை

இது நடந்து பல மாதங்கள் ஆகிவிட்டன; அவர் சந்துருவைப் பார்க்கவில்லை; சந்துருவும் அவரை நெருங்கினவன் இல்லை. இப்போது அவன் செங்கல்வராய பிள்ளை வீட்டுக்குச் செல்வதானால், மீண்டும் தம்மிடம் வந்து மோதிக் கொள்ளுவானோ என்று சிறிது வேதனைப் பட்டார்.

பத்து மணிக்குச் சுந்தரி வந்து சோபாவில் ஒய்யாரமாகச் சாய்ந்தாள். வாய் நிறைய வெற்றிலை; வாசனைகளின் சுகந்தம் 'கம்'மென்று அடித்துப்பரவியது. தலையை மட்டும் திருப்பிக் கடைக்கண் நோக்கைப் பிள்ளையின் பக்கம் வீசினாள்.

அவர் அசையவில்லை. இன்னும் சிந்தனை கலையவில்லை என்பது நெற்றியின் சுருக்கங்களில் தெரிந்தது.

"என்ன இப்போது பெரிய யோசனையாம்! உங்களுக்கு வர வர, 'பிஸினஸ்' மோகம் பிடித்துவிட்டது; போதுமே; கொஞ்சம் அனுபவித்து நன்றாகத்தான் வாழுங்களேன்" என்றாள்.

அவர் காதில் அது விழவில்லை.

"ஆமாம் யோசனை செய்தால், ஏன் இப்படி நெற்றியெல்லாம் கறுத்துப் போகிறது! 'தம்பி'யிடம் சொல்லிவிட்டு நிம்மதியாக இருக்கிறதை விட்டு முகத்தைக் கோண வைத்துக் கொள்கிறீர்களே!"

"சற்று சும்மா இரு! சற்று நிம்மதியாக இருக்க விடமாட்டாய்?"



"அதுதான் இத்தனை நேரம் நிம்மதியாக இருந்தாகிவிட்டதே!... ஒரு பெரிய விஷயம் கேளுங்கள்; நான் இன்றைக்கு 'டான்ஸ்' கச்சேரிக்குப் போயிருந்தேனா?"

"எனக்குத் தெரியாது. (அவளைப் பார்த்துப் புன்சிரிப்புச் சிரித்து) உனக்கும் டான்ஸ் ஆட ஆசை வந்து விட்டது அவ்வளவு தானே!"

"இல்லை. எனக்கு ஒரு 'நெக்லஸ்' மேலே ஆசை வந்து விட்டது."

"என்னைக் கேட்பானேன்! வாங்கிக் கழுத்தில் மாட்டிக்கொள். பக்கத்தில் டெலிபோன் இருக்கிறது. மறந்து விட்டதா? (கடிகாரத்தைப் பார்த்து) இனி நாளைக்கு ஒன்பது மணிக்குத்தான் கடை திறப்பார்கள். மணி பத்து அடித்துப் பதினைந்து நிமிஷம் ஆகிவிட்டது.

"எனக்கு ஒன்றும் வேண்டாம்!"

"இதென்ன சுந்தரி? இப்போ இதென்ன பேச்சு? மனுஷன் கிடந்து உழல்கிறது தெரியவில்லை?"

"போய்! உங்களுக்கு என்ன கவலை?"

"என் 'பிஸினஸ்' கவலை... நீ போய், புத்திசாலி மாதிரி படுத்துக் கொள்... மணி ஆகிறது."

"நன்றாயிருக்கிறதே! மூணு வருஷத்துக்குள்ளே அலுத்துவிட்டதா உங்களுக்கு? 'மணி ஆனால் என்ன? எத்தனை வேண்டுமானாலும் ஆகட்டுமே? நாம் தான் ராஜா ராணி!' என்று சொன்ன அதே வாய் இப்போது—"

"ஏய்! சும்மா இருக்க மாட்டே?" என்று அதட்டி உருட்டி விழித்தார் சுந்தரம் பிள்ளை.

அந்தப் பார்வையில், அந்தக் குரலில் ஒரு கணம் நடுநடுங்கி விட்டாள் சுந்தரி. "அதிகம் பேசினாயானால் சவுக்கை எடுத்துக் கொண்டு வந்து வாங்கி விடுவேன்!" என்றார் அவர் தொடர்

"உயிரையே வாங்கி…



29/05/2011 13:1

''தம்பி வரட்டும். தேவையானால் அதை அவனிடம் சொல்லி ஏற்பாடு செய்கிறேன்... புத்தி கிடையாது. மனுஷக்கு வேதனை, கவலை, வேலை—''

''உங்களுக்கு எப்போது வேதனை, கவலை, வேலை என்று இல்லாத வேளை உண்டு?'' என்று முணுமுணுத்த படி எழுந்தாள் சுந்தரி. சுந்தரம்பிள்ளையின் முகத்தில் இருந்த கோபக் குறியிலிருந்து மேலும் அங்கே தங்கியிருப்பது உசிதம் இல்லையென்று அவள் ஊகித்து விட்டாள். எழுந்தவள் போயும் இருப்பாள். ஆனால், அப்போதே 'கண கண'வென்று டெலிபோன் மணி அடித்து விட்டது.

இரண்டு நிமிஷம் மௌனமாகக் கேட்ட பின்பு சுந்தரம் பிள்ளையின் முகத்தில் இருந்த கோபம் மறைந்தது. ''தம்பி! நான் சொல்கிறபடி செய்!'' என்று அதட்டினார். குள்ளன் ஓடிவிட்டான் என்கிறாய். சங்கரன் டெலிபோனில் பேசிவிட்டுத் திரும்பிப் போயிருக்கிறான் என்கிறாய். சங்கரன் சுறுசுறுப்பான ஆளாயிருக்கிறான், ஆபத்து! பின்னால் வருத்தப்படுவோம். அவன் வெளியே நடமாடிக் கொண்டிருக்கத் தேவை இல்லை... வீட்டில் போய் இங்கே அழைத்துக்கொண்டு வந்துவிடு...'' என்றார்.

மறுபடி 'தம்பி' ஏதோ கேட்டார்.

''அனாவசியமாகக் காயப்படுத்தாதே!... அடிக்காதே... அவசியமானால் மண்டையில் மெள்ள ஒரு தட்டு, ஒரே ஒரு தட்டு. அதற்குமேல் வேண்டாம். தாமோதரனை இப்போதைககு விட்டு விடு. சங்கரன் இல்லாவிட்டால் அவன் செத்த பாம்பு! அவனை நான் பார்த்துக் கொள்கிறேன்... சங்கரன் இங்கே வரவேண்டும். அரை மணியில் வரவேண்டும்... ரைட்!''

டெலிபோனைக் கீழே வைத்தார். சுந்தரியைப் பார்த்தார். ''எனக்குக் கவலை என்ன என்று கேட்கிறாயே, அதைத்தான் 'தம்பி' இங்கே அழைத்துக் கொண்டு வரப் போகிறான். நீயே உட்கார்ந்து உன் கண்ணால் பார்த்துக் கொண்டிரு!'' என்றார்.



'தம்பி' கேட்டது என்னவோ அரைமணி; இருபத்தைந்து நிமிஷங்களிலேயே அவன் ஆஜராகி விட்டான். மோட்டாரிலிருந்து சங்கரனைக் கழுத்தைப் பிடித்துத் தள்ளிக் கொண்டு சுந்தரம் பிள்ளையின் முன்னே வந்து நிறுத்தினான், இம்மாதிரியான சம்பவங்கள் மிகவும் சகஜம் என்றதுபோல் சுந்தரம் முகம் மாறி உட்கார்ந் திருநதார். அவர் சங்கரனைப் பார்த்தபோது, பரம சாதுவாகவே அவன் காணப்பட்டான். எதிர்ககவோ முறைக்கவோ அவனிடம் இருந்த சக்தியெல்லாம் செத்துப் போய், இருந்ததாகத் தோன்றவில்லை.

தலையை ஆட்டினார் பிள்ளை. ''வழியில் இந்த ஆளினால் தொல்லை உண்டா?'' என்று கேட்டார்.

''அதிகமாக இல்லை, எடுத்த எடுப்பிலேயே ஒரு தட்டுத் தட்டும்படி செய்து விட்டான்!'' என்று 'தம்பி' பதில் சொன்னான்.

''அப்புறம்?''

''வழியில் ஒரு முறை உச்சந்தலையில் தட்டும்படி இருந்தது. மெள்ளத்தான் தட்டினேன்!''

சுந்தரிக்குக்கூட அந்தச் சமயம் முகமலர்ச்சி ஏற் பட்டது. 'தம்பி'யைப் பெருமையுடன் பார்த்தாள்.

சங்கரனை நோக்கியபடி சுந்தரம், ''என்ன சின்னப் பையன் நீ! எங்களையெல்லாம் வம்புக்கு இழுக்கிறாயே! என்ன ஆகும் தெரியுமா?'' என்று ஒரு நண்பனுடன் பேசுவதுபோல் குழைவாகக் கேட்டார்.

சங்கரன் உடலை விறைத்துக் கொண்டான்; ''தொல்லை கொடுப்பது நான் இல்லை; நீங்களும் உங்கள் ஆட்களும் தான் என்பது என் அபிப்பிராயம். நான் என் வேலையைப் பார்த்துக்கொண்டு இருக்கிறேன்; என்னால்-''

''உஸ்ஸ்... இந்த வீட்டிற்குள் வந்து விட்டால், ஒரே ஒரு அபிப்பிராயம்தான் உண்டு [illegible]ய மாகத்தான் இருக்கும்.''

29/05/2011

"நான் யாரையும் யோசனை கேட்கவில்லை. இப்போது இந்தத் தடியன் எதற்காக என்னை இங்கே கொண்டு வந்து நிறுத்தியிருக்கிறான் என்று தெரிய வேண்டும். அதற்கு முன் நீங்கள் யார் என்று தெரிய வேண்டும்."

மறுபடியும் புன்முறுவல் பூத்தார் பிள்ளை. "நீ அதையெல்லாம் தெரிந்து கொள்ளாமல் இருப்பதே உன் உடம்புக்கு நல்லது. அந்த விஷயங்கள் தெரிந்து, நீ வெளியிலும் இருந்தால், ஏதாவது எக்கச்சக்கத்தில் மாட்டிக் கொள்ளுவாய்; வீணாக ஆபத்துக்கள் வரும்... இப்போதைக்குக் கொஞ்ச காலம் நான் சொல்கிற இடத்தில் பத்திரமாக இருந்து விட்டுப் போ!"

"இது உங்கள் சிறைச் சாலையோ?..."

"உன் இஷ்டப்படி வைத்துக் கொள் இதை!"

"என்னை முன்னாடி வெளியே அனுப்புங்கள். இல்லையோ, அப்புறம் சங்கடப்படுவீர்கள்! நீங்கள் யாராக இருந்தாலும் சரி. ஆமாம்!... என் அத்தான் லகுவில் விட மாட்டார்..."

வாய் விட்டுச் சிரித்தார் பிள்ளை: "உன் அத்தான்கூட அநேகமாக இங்கே சீக்கிரத்தில் வர வேண்டியிருக்கும். அவருடைய காரியங்கள் எனக்குத் திருப்திகரமாக இல்லை! ரொம்ப விளையாடுகிறார்..."

"ஓஹோ! இந்தப் பெரிய இடத்திலிருந்துதான் எல்லாச் சட்டமும் ஆரம்பமாகிறதோ?" என்று கேட்டான் சங்கரன்.

"ஆமாம்! வாயை அடக்கிக் கொண்டிராவிட்டால் உன் முடிவும்கூட இங்கேதான்... 'தம்பி'! கொண்டு போ இந்த நாயை!"

பிள்ளையின் முகத்திலிருந்த சிரிப்பு கடுமையாக மாறி விட்டது. "என் காரியங்களுக்கு எவன் எதிரில் வந்தாலும், அகற்றி விடுவேன் அகற்றி! தெரிந்ததா? இப்போதே உன்னை நான் பாழுங் கிணற்றில் தள்ளி மூடினாலும் கேட்பார் கிடையாது. தெரிந்து கொள்!" என்று அதட்டினார்.



ஒரு கணம் சங்கரன் உடற் சோர்வு அதிகமாகி விட்டவன் போல் காணப்பட்டான். அதையொட்டி, 'தம்பி'யின் பிடியும் சற்றே தளர்ந்திருக்க வேண்டும். ஒருமுறை திமிறி, சங்கரன் அவனிடமிருந்து முழுவதும் விடுபட்டான். அப்படி விடுபட்டவன், தாவிக் குதித்து சுந்தரம் பிள்ளையைத் தாக்குவான் என்று நினைத்த 'தம்பி' மறுமுறை ஏமாந்தான். சங்கரன் மான்போல் பாய்ந்து மாடிப்படியை அடைந்தான். தடார் என்று மாடிக்கதவைத் தன் பின்னால் சாத்தி, வெளிப்புறம் தாழ்ப்பாள் போட்டான். இதனால் அவர்கள், துரத்தி வருவதை ஓரளவு தடுக்கலாம் என்று அவன் எதிர்பார்த்தான்.

மாடிப்படியின் அடியில் ஒரு ஆள் நின்று கொண்டிருந்தான்; அவன் சங்கரன் வருவதை எதிர்பார்த்திருந்தால் தயாராகவே இருந்திருப்பான். ஓடி வந்த சங்கரன் அவன் முதுகின் மேலேயே குதித்தான். இருவரும் ஒருகணம் தரையில் விழுந்தார்கள். சங்கரன் முதலில் எழுந்தான்! அதிர்ச்சியில் மற்றவன் தலை சுற்றியிருக்க வேண்டும். அடுத்தபடி அந்த ஆளின் முதுகுப்புறமும் விலாவிலும் சங்கரன் கொடுத்த இரு உதைகளில் அவன் சுருண்டு போய் விட்டான். மறு நிமிஷம் சங்கரன் வராந்தாவைத் தாண்டி கேட்டை நோக்கி ஓடத் தொடங்கினான்.

சுமார் பத்து கஜம் ஓடுவதற்குள்ளேயே 'திக்'கென்றது சங்கரனுக்கு. சுந்தரம் பிள்ளை வெளியே எல்லா விளக்குகளையும் போட்டு விட்டார்; அவன் ஓடுவது மாடியில் இருந்தவர்களுக்குத் தெரியும்.

அவன் 'கேட்'டை அடையும்போது, அதை அடைத்துக் கொண்டு அவன் எதிர்பார்த்தபடி ஒரு தடித்த ஆசாமி குறுக்கே நின்றான்.

"வழியை விடு!" என்றான் சங்கரன்.

"எங்கள் எஜமானன் உத்தரவின்றி யாரும் வெளியே போகிறதற்கில்லை!" என[illegible]

29/05/2011 13:14

"இப்போதைக்கு நான்தான் உன் எஜமான்! நகரு!"

ஒரு கத்தியைக் காட்டினான் அந்தக் குண்டோதரன். "சொருகி விடுவேன், சொருகி! மரியாதையாக உள்ளே திரும்பிப் போ!... யாரிடம் விளையாடுகிறாய்!" என்று திருப்பிக் கேட்டான். சங்கரன் தலை தொங்கியது. மரியாதையாகத் திரும்பி மூன்றடியும் வைத்தான். "அது தான் சமர்த்துப் பிள்ளை!" என்ற குண்டோதரன், ஒரு கணத்தில் தன் பிசகை உணர்ந்து கொண்டான்.

குபீர் என்று கீழே குனிந்த சங்கரன், ஒரு சிறிய பூந்தொட்டியைக் கையில் எடுத்துத் தன் எதிரியை நோக்கி வீசிவிட்டுப் பாய்ந்தான். பூந்தொட்டி அவன் மண்டையில் படவில்லை. தோள் பட்டையில்தான் தாக்கியது. எனினும் அவனை நிலை தடுமாறச் செய்தது. அந்த அதிர்ச்சியில் கையில் பிடித்திருந்த கத்தி கீழே விழுந்தது. இந்த மாதிரி ஒரு சந்தர்ப்பத்தையே எதிர்பார்த்த சங்கரன், அவனைத் தாண்டிக்கொண்டே கேட்டை நோக்கி ஓடினான். ஆனால், குண்டோதரன் அதற்குள் ஒருவாறு சமாளித்துக்கொண்டு, சங்கரனைத் துரத்திப் பிடித்து அவன் மேலும் ஓடாமல் இறுகக் கட்டிக் கொண்டான். கரடியின் பிடியாக இருந்தது அது; சங்கரன் திணறினான்.

அகஸ்மாத்தாக அவன் திருஷ்டி தொலைவில் பங்களாவின்மீது விழுந்தது. 'தம்பி' இப்போது உயரே ஒரு தண்ணீர்த் தாரையைப் பற்றிக் கொண்டு இறங்க முயன்று கொண்டிருந்தான். நிற்க நேரம் இல்லை. தனது வலது காலை எதிரியின் முழங்கால்களுக்கு இடையில் கொடுத்து, பலமாகத் திருப்பினான் சங்கரன். இது நல்ல பலன் அளித்தது. இருவரும் சேர்ந்தாற்போல் தொப்பென்று கீழே விழுந்தார்கள். நல்ல காலமாக, குண்டோதரன் மேல் விழுந்திருந்தான் சங்கரன். அவன் கையருகே தரையில் கத்தி கிடந்தது. அதை எடுத்து, அதன் கைப்பிடியால் 'மொட்டு மொட்'டென்று ஐந்தாறு முறை குண்டோதரன்



தலையில் மொத்தி விட்டான். பலன் இருந்ததெனினும் பூர்ண பலன் கிட்டவில்லை. எதிரி தன் கால்களை உபயோகித்து, சங்கரனின் வயிற்றை நோக்கிப் பலமாக உந்தித் தள்ளினான். அந்தத் தாக்குதலில் நாலு அடி அப்பால் போய் விழுந்த சங்கரன், மீண்டும் நிராயுதபாணியாகிவிட்டான்.

குண்டோதரன் கணத்தில் எழுந்து விட்டான். கத்தியையும் பொறுக்கிக் கொண்டு, கீழே கிடந்த சங்கரனை நோக்கி வந்தான். எந்த வினாடியும் அவன் சங்கரனைக் குத்திப் போடலாம்; சங்கரனுக்கோ முற்றும் திராணி போயிருந்தது. எழுந்து ஓட பலம் இல்லை.

எதிரி நெருங்கு முன் நாலு கால்களால் தோட்டத்தில் ஓடி, அநேக பூந்தொட்டிகள் வைத்திருந்த ஒரு மேஜையின் பின்னால் ஒண்டிக் கொண்டான். தற்காலிகமான பாது காப்புதான். எதிரி விடாமல் துரத்தினான். பெஞ்சியின் எதிர்ப்புறம் வந்து விட்டான். மூன்று விநாடிகளில் பிடித்து விடலாம்; அல்லது அங்கிருந்தபடியே கத்தியை வீசலாம். 'தம்பி' வேறு இப்போது இறங்கி அவனை நோக்கி ஓடி வந்துகொண்டிருந்தான்; அவன் காலடி ஓசையும் நெருங்கத் தொடங்கிவிட்டது.

சங்கரன் தன் பலத்தையெல்லாம் வருவித்துக்கொண்டு அந்த மேஜையையே பிடித்துத் தள்ளிக் கவிழ்த்தான். ஆறு பூந்தொட்டிகளைத் தாங்கி நின்ற அந்த மேஜை நிலை பெயர்ந்து ஆடியது. தனக்கு வரும் ஆபத்தை அறிந்த குண்டோதரன் நகர்ந்து ஓடமுயன்றான். அதற்குள் மேஜை சாய்ந்து அவன் முழங்கால்கள் மீது விழுந்தது. அத்தனை பூந்தொட்டிகளும் அவன் முதுகின் மேல் கவிழ்ந்தன. அந்த அடியில் எழுந்திருக்க மாட்டாமல் அவன் கிடந்தான்.

மறுநிமிஷம் பயித்தியம் பிடித்தவன்போல் சங்கரன் நடந்து கொண்டான். அருகிலே இருந்த ஒரு மரக் கட்டையை எடுத்து, பத்தடிக்...

29/05/2011

'தம்பி'யின் முகத்தில் அடித்தான். 'அம்மாடி!' என்ற முனகல் அந்த அடியின் பலத்திற்குச் சாட்சி சொல்லிற்று. கத்தியைக் கையில் எடுத்துக் கொண்டு, அவன் பின்னால் வந்த மூன்று பேரை அப்படி நிறுத்தினான். 'கேட்'டை இழுத்துத் திறந்து மறுபடி சாத்தினான்.

வெளியே இருள்... ஓட்டமாக ஓடினான். இருநூறு கஜம் ஓடிய பிறகு, யாரேனும் பின்பற்றுகிறார்களோ என்ற சந்தேகம் வந்துவிட்டது. ரஸ்தாவை விட்டு இறங்கி, அங்கிருந்த ஒரு மதகடியில் ஒண்டிக் கொண்டு விட்டான்.

அவன் அவ்வாறு செய்தது மிகவும் புத்திசாலித்தனமான காரியம் என்று ஆகிவிட்டது. ஐந்து நிமிஷங்களுக்குள் இரண்டு மோட்டார் வண்டிகள் பங்களாவிலிருந்து கிளம்பி 'விர்' 'விர்'ரென்று ஓடின; அவனைத் தேடிக் கொண்டுதான் போகிறார்கள் என்பதை அவன் ஊகித்துக் கொண்டான். இரண்டு ஆட்கள் சைக்கிளில் வந்தார்கள். மதகடியில் நின்று பேசினார்கள்.

''இந்தப் பக்கம்தான் போனான் என்று என்ன நிச்சயம்? நாம்தான் பத்து நிமிஷத்திற்குள் புறப்பட்டு விட்டோமே!'' என்றான் ஒருவன்.

''பெரிய ஆள் அவன்! 'தம்பி'க்கே டிமிகி கொடுத்திருக்கிறான்?'' என்றான் மற்றவன்.

''மறுபடி 'தம்பி'யின் கையில் அகப்பட்டால் தீர்ந்தான் அவன்; திருகிப் போட்டு விடமாட்டானா!'' என்றான் முதல் ஆள்.

''முதலில் அவன் அகப்படட்டும். போன வண்டிகள் திரும்பி விட்டன!'' என்று எச்சரிக்கை செய்தான் இரண்டாம் ஆள்.

மோட்டார்கள் இப்போது மெல்லத் திரும்பி வந்தன. மதகடியில் ஒரு வண்டியை நிறுத்தி, ''எங்கே போயிருப்பான்! காணோமே!'' என்று யாரோ கேட்டார்கள்.



''ஒரே ஒரு வழி இருக்கிறது. போய் டார்ச் விளக்குடன் வந்தால் முயற்சி செய்து பார்க்கலாம்!''

இரண்டு சைக்கிள்களும் கார்களும் நகர்ந்தன. சங்கரன் மதகின் அடியிலிருந்து வெளியே வந்து ஒரு நீண்ட பெருமூச்சு விட்டான். அவன் அபாயம் இன்னம் நீங்கவில்லை. ஏன், அதிகமாகிக் கொண்டு வருகிறது. மறுபடி அவர்கள் விளக்குகளுடன் வந்தால், முதலில் இந்த மதகடியில் நிச்சயம் பார்ப்பார்கள். பலர் கையில் சிக்கினால் தப்ப முடியாது. எங்கேனும் அவன் உடனே இடம் மாற வேண்டும்.

அவன் தப்ப வேண்டுமானால், ஒரே ஒரு மார்க்கம்தான் உண்டு. அதற்கு அவன் மீண்டும் அந்தப் பங்களாவின் அருகிலேயோ, அதன் உள்ளேயோ இருப்பது ஒன்றுதான் வழி. அவர்கள் தேடாமல் விடும் அது ஒன்றுதான்.

சங்கரனுக்கு இதைவிட நல்லதொரு திட்டம் தோன்றவில்லை. மெள்ள நகர்ந்து, பங்களாவின் பின்புறத்தை அடைந்தான். காம்பவுண்டுச் சுவரோரமாக நடந்து வரும் போதே வெளியே வளர்ந்திருந்த ஒரு புன்னை மரம் தென்பட்டது. ஒரு காலை அதன் கீழ்க் கிளையில் வைத்து எழும்பிப் பார்த்தான். பின்புறம் ஒரே இருளாக இருந்தது. உள்ளே தாவிக் குதிப்பதில் சங்கடம் ஏதும் இல்லை.

சங்கரன் இழந்த மிகப் பழைய மோட்டார் ஒன்று மூலையில் கிடந்தது. அதனுள் ஏறி, பழம் மெத்தைகளிலிருந்த தூசியைத் தட்டிவிட்டுப் படுத்தான். மணி பன்னிரண்டு எங்கோ அடிப்பது காதை எட்டியது.

தாமோதரனுக்கிருந்த அலுப்பைவிட அதிகம் அவன் பங்கு. இரண்டு விநாடிகளில் க[illegible] கண்ணை விழித்தபோது, பொழுது விடிவு[illegible] இருட்டு...அவன் அங்கே இருப்பான் என்று யாரும் இது வரை சந்தேகிக்கவில்லை.

29/05/2011

மெள்ள மெள்ள வெளியே எட்டிப் பார்த்தான். செடிகள் ஓரமாக முன்புறம் ஊர்ந்து வந்து வாசற்படியைக் கவனித்தான். முன் விளக்கு மட்டும் மங்கலாக எரிந்து கொண்டிருந்தது. அப்போதுதான் ஒரு மோட்டார் வந்து நின்று மூன்று பேர் அதனின்றும் இறங்கிக் கொண்டிருந் தார்கள். அவர்களிடையே ஒரு இளம் பெண்ணையும் கண்டான். மிக அழகியாக இருந்தாள் அவள்.

விருப்பத்திற்கு மாறாக அவள் கொண்டுவரப்பட்டிருக் கிறாள் என்பதை ஒரு கணத்தில் சங்கரன் புரிந்து கொண்டான்... அவள் யார் என்பது அவனுக்குத் தெரியாது.

செங்கல்வராய பிள்ளையின் பங்களாவில், இந்திரா வைக் காணோம் என்று திலகவதியும் நாராயணனும் அப்போது தேடிக்கொண்டிருந்தார்கள்.

## "ஏஜமான்" உத்தரவுப்படி!

கீழேயிருந்தபடி மாடி அறையை நோக்கிய தாமோதரன் சில நிமிஷங்கள் வரை ஸ்தம்பித்துப் போய் நின்றான். அந்த நிமிஷங்களில் அவன் மூளையும் வேலை செய்ய மறுத்தது. அவன் செய்ய வேண்டியது என்ன என்று தெரியாமல் ஏற்பட்ட தவிப்பினால் திணறினான்.

உயரே மாடி அறையில் இருவர் சண்டைப் போட்டுக் கொண்டிருந்தார்கள். ஒவ்வோர் சமயம் ஜன்னல் அருகே வரும்போது, ஒருவரை யொருவர் தாக்கிக்கொள்ளும் வேகத்திலிருந்து, இருவரில் ஒருவர் தீர்ந்தாலொழியச் சண்டை நிற்காது என்று அவனுக்கு நிச்சயமாகத் தோன்றியது. இத்தனை அமர்க்களமும் பங்களாவில் இதரருக்குத் தெரியாமல் இருக்குமா?—என்று அவன் வியந்தான்.



ஏதோ ஒரு தீர்மானம் அவனுக்கு விரைவில் வந்து விட்டது. அவன் இருந்த சிறிய அறையிலிருந்து வெளிப் பட்டு பின்புறத்தில் இருந்த சிறு கொட்டகையை அணுகி னான். அதன் சாய்ந்த கூரைக்கு சிமெண்ட் ஷீட்டுகள் போட்டிருந்தார்கள். ஒரு கணம் மறுபடி யோசனை; பிறகு தாமோதரன் அந்தக் கூரைமீது தாவி விட்டான். அதிலிருந்து மொட்டை மாடிக்கு ஏறுவது லகுவான விஷயமே. இன்னும் ஒரு மாடி ஏறினால்தான் சண்டை நடக்கும் தளத்தை அடைய முடியும். அதற்கு வழியை ஆராய்ந்தான். வீட்டினுள் நுழைய முடியாதபடி கதவுகள் எல்லாம் தாளிடப்பட்டிருந்தன. மொட்டை மாடியிலிருந்து வெளியே எட்டிப் பார்த்தபோது, சுவர் ஓரமாக இரண்டரை அடி அகலத்தில் ஓடிய ஸன்-ஷேட் தென்பட்டது. நடப்பதற்கு வசதியுடன் இருந்தது. அதன்மீது குதித்துச் சிறிது தூரம் சென்றால், தலைக்கு மேல் மற்றொரு 'ஸன்-ஷேட்' அதேபோல் வீட்டைச் சுற்றி ஓடியது. வீட்டிற்கு அலங்காரமாகக் கட்டப்பட்டது. ஏறிக் குதிப் பதற்கும் உபகாரமாக இருந்தது. ஒரு தண்ணீர்க் குழா யைப் பற்றிக்கொண்டு அதன் மேலேயும் ஏறி ஓடினான். அதைப் பாதி சுற்றி வருவதற்குள்ளாக குறிப்பிட்ட ஜன்னல் வந்துவிட்டது.

உள்ளே எட்டிப் பார்த்தான். பார்த்துக் கொண்டே இருந்தான்; இருவர் கீழே விழுந்து கட்டிப் புரண்டு கொண் டிருந்தார்கள். சம உயரம், சம கனம்; இருவர் முகத்திலும் கூட ஒரே சாயல் சிருஷ்டியில் எத்தனை எத்தனையோ கோடி ஜனங்கள் இருக்கிறார்கள்; ஆனால் இருவருடைய முகம் ஒன்றைப் போல் ஒன்று இருப்பதில்லை என்று நிச்சயத்துடன் சொல்லிவிடலாம். சில சமயங்களில் சிறிது சாயல் இருப்பது உண்டு; ஆனால் அப்படியே இருந்தது என்பது கிடையாது. இந்தச் சட்டத்திற்கு ஒரே ஒரு விதி விலக்கு இருக்க வேண்டும் என்று தாமோதரன் அப்போது எண்ணிக் கொண்டான். சண்டை போட்டுக்

தவர்கள் இருவரும் ஒரே மாதிரி இருந்தார்கள். அதே உடற்கட்டு, அதே அங்கங்கள், அதே முகபாவம், அதே மூக்கு முழி எல்லாம்; இந்த ஆச்சரியம் அவனை இரண்டாம் முறையாக ஸ்தம்பிக்கச் செய்தது. அடித்துக் கொள்வதில் கூட அல்லவா ஒற்றுமை இருந்தது! கண்ணாடிக்குள் தோன்றும் பிரதிபிம்பமும் அதன் அசலும் குஸ்தி போட்டுக் கொள்வதுபோல் தோன்றியது அவனுக்கு. ஆனால் மிக மிகச் சிறிய வித்தியாசமும் அவ்வப்போது அவன் மனதில்பட்டது. அது விவரிக்க முடியாதது. ஆனால், ஊன்றிக் கவனிப்பவர்கள் கண்களுக்குத் தப்பாது. கணேசனிடம் இல்லாத ஒரு முரட்டுத்தனம், வேகம், ஆத்திரம், அசூயை, பொறாமை எல்லாம் அவன் எதிரியிடம் காணப்பட்டன.

ஏதோ ஒரு திரைப்படக் காட்சியில் நடைபெறுவது போல் இருவரும் சில சமயங்களில் தாக்கிக்கொண்டார்கள்; சில சமயம் ஒருவர் பிடியில் ஒருவர் அகப்பட்டுக் கொள்ளாமல் ஒதுங்கினார்கள். இந்த விளையாட்டு சிறிது நேரம் நடைபெற்றது. திடீரென்று இந்தப் பாய்ச்சுக் காட்டல் முற்றுப் பெற்று விட்டது. கணேசன் வலது முஷ்டி ஆகாயத்தில் பறந்து, இரும்புக் குண்டின் கனத்துடன் மற்றவன் பின் மண்டையை முட்டியது. அவன் திணறி, தலை சுழல நின்றான். அந்த அதிர்ச்சியிலிருந்து அவன் சமாளித்துக் கொள்ளுமுன், மளமளவென்று ஐந்தாறு குத்துகள் தொடர்ந்து விழுந்து விட்டன. கடைசியாக முகவாய்க்கட்டையை கடப்பாரை கொண்டு இடிப்பது போன்று விழுந்த அடி அவனை முழங்காலுக்குக் கீழ் கால்கள் வெட்டுப்பட்டவன் போல் கீழே சாய்த்தது. இனி ஒரு க்ஷணம் தாமதித்தாலும் அபாயம் என்பது தாமோதரனுக்கு விளங்கிவிட்டது. அப்போதே அவன் அந்த ஜன்னல் வழியே உள்ளே குதித்தான்.

மூன்றாவது ஆசாமி ஒருவன் உள்ளே பிரவேசித்ததைக் கணேசன் சில விநாடிகளுக்குப் பின்னரே தான் கவனித்தான்.



அதை உணர்ந்து கொண்டதும், உண்மையிலேயே அவன் முகம் வெளிறடித்துப் போயிற்று: இந்தச் சண்டையில் வெற்றி பெற்றதுடன் கவலை தீர்ந்தது என்றிருந்த அவன், மறுபடி புதிதாக ஒரு சண்டையில் ஈடுபட்டுச் சமாளிக்க வேண்டும் என்பது மனச் சோர்வை உண்டாக்கியிருக்க வேண்டும். தாமோதரன் வயதானவன் தான்; உடலில் தளர்ச்சியின் குறிகள் தென்பட்டன. எனினும் களைத்திருந்த கணேசன் அவனுக்கு ஈடு கொடுப்பது சிரமம் என்றே எண்ணினான்.

தாமோதரன் நெருங்கிக் கொண்டிருந்தான்; கணேசன் தன் தலையைக் குலுக்கி விட்டுக் கொண்டு, எதிர்நோக்கியிருக்கும் ஆபத்தைச் சமாளிக்க மூளையைத் தயாராக்கிக் கொண்டான். தாமோதரன் ஒரு நொடியில் பக்கத்தில் வந்து, கணேசன் எதிர்பாராத ஒரு வேலை செய்தான். தன் முழங்காலைத் தூக்கி, கணேசனின் அடிவயிற்றில்ஒருமுட்டு முட்டினான். அதனால் முன்புறம் மடிந்துவிட்ட கணேசன் முகவாய்க்கட்டையில் 'சதக்' என்ற சப்தத்துடன் ஒரு குத்து விழுந்தது. இரு தாக்குதல்களை ஏக காலத்தில் சமாளிக்க மாட்டாமல், நிலை தடுமாறினான் கணேசன்; தலை கழுத்தில் ஒட்டாமல் ஆடியது; அவன் கரங்கள் துடித்தன. கால்களால் தத்தித் தத்திக் கீழே விழுந்து விடாமல் நிற்க முயன்று பார்த்தான்.

தாமோதரன் அதைக் கண்டு வெற்றிப் புன்னகை செய்தான்; ஆனால் மூன்று விநாடிகளே அந்தப் புன்னகைக்கு ஆயுட்காலம். கணேசன் ஏமாற்றி விட்டான் என்பதை அவன் விலாவில் விழுந்த உதை நிரூபணம் செய்தது. அதன் வேகத்தில் ஒரு அரைப் பிரதட்சணம் சுற்றியபோது, மறுபடி ஒரு உதை இடுப்பின் கீழ் தாக்கி, அவனை நான்கடிக்கு அப்பால் குப்புற விழச் செய்தது. ஒரு நீண்ட பெருமூச்சுவிட்டு, அவன் எழுந்திருக்கமாட்டாமல் [illegible] தனது வலது காலை முதுகில் வை[illegible] நின்றான்.

இந்த இடைக்காலத்தில்தான் அறைக்கு வெளியே வீட்டு ஜனங்கள் கூடி விட்டார்கள். "கதவைத்திற! உடனே திற! இல்லையோ, உடைத்துக் கொண்டு வருவோம்!" என்று அதட்டினார் மனோநாயகம். அதைத் தொடர்ந்து 'தட தட' வென்று கதவு இடிக்கப்பட்டது. 'காலை எடுத்து விட்டுக் கதவைத் திறப்பதா, அல்லது இருந்தபடியே குரல் கொடுப்பதா?' என்று கணேசன் யோசனை செய்தான். மிகவும் அபாயகரமான நிலையில் இருந்து அவன் அப்போது தான் விடுபட்டிருக்கிறான்; இரண்டு ஆட்களை ஒருவர் பின் ஒருவராக வீழ்த்தியிருக்கிறான், பெரிய காரியம் என்பதில் சந்தேகமில்லை.

அவனை தலைக்கு மேல் ஏதோ சுழன்று நிழல் போல் ஆடியது; அப்போதுதான் அவனுக்கும் தன் முதல் எதிரியைச் சிறிது நேரம் கவனியாமல் விட்டுவிட்டோம் என்ற ஞாபகம் வந்தது. இனிமேல் ஞாபகம் வந்து என்ன பயன்? தாமோதரனுடன் சண்டை நடக்கும்போதே அவன் விழித்துக் கொண்டு விட்டான். சாமர்த்தியமாகத் தன் தலையை திமிர்த்தாமலேயே, அறையைச் சுற்றிக் கண்ணோட்டம் விட்டான. தாமோதரனும் கணேசனும் ஒருவரையொருவர் தாக்கிக் கொண்டிருந்ததைக்கூட அவன கவனிக்கவில்லை; யார் ஜயித்தாலும், அவன் தயாராக இருந்துவிடுவதென முடிவு செய்து கொண்டான். நாலு அடிக்கு அப்பால் ஒரு நாககமர நாற்காலி இருந்தது. சிறியதுதான் எனினும் அழுத்தமான கால்கள்; உட்காரும் பலகையும் கனமாக இருந்தது. அதையே தற்காலிக ஆயுதமாக உபயோகித்தால் என்ன!

ஒரே கணம்தான் இந்த யோசனை. இதற்குள் தாமோதரன் கீழே கிடந்தான். ஏதோ ஒரு சமஸ்தான மன்னன், தான் வேட்டையாடிய புலியின்மீது காலை வைத்துக் கொண்டு, தினசரிப் பத்திரிகையில் வெளியாக வேண்டிய புகைப் படத்துக்குக் காத்து நிற்பது போல் கணேசன் 'போஸ்' கொடுத்து நின்றான். அவன் முதுகுப்



புறமே கிடந்தானாகையால் எதிரியின் சேஷ்டைகளை அறிந்து கொள்ளவில்லை. சிறிதும் சந்தடி இன்றி அவன் எழுந்து, நாற்காலியின் ஒரு காலைப் பிடித்துத் தலைக்கு மேல் தூக்கி வேகமாகச் சுழற்றினான்.

கணேசன் தன் ஆபத்தை உணர்ந்து சடார் என்று திரும்பினான். மண்டையை நோக்கித் துரிதமாக இறங்கிக் கொண்டிருந்த மர நாற்காலியிலிருந்து நகர்ந்து ஓடித் தப்ப அவகாசம் போதாது. எனவே, இரு கைகளை மட்டும் பாதுகாப்புக்காகத் தலைக்கு மேலே தூக்கினான். கைகளிலும் விழுந்து மண்டையிலும் அடி விழுந்தது. கைகள் தடுத்திரா விட்டால், ஒருகால் மண்டை உடைந்தே போயிருக்கலாம். இப்போது அவனை மூர்ச்சை அடையவே செய்தது. தாமோதரன் மேலிருந்த கால் பலமிழக்க, கணேசன் சாய்ந்தான்.

மின்னல் வேகத்தில் விடுபட்ட தாமோதரன் இப்போது எழுந்தான். மற்றவனைக் கையைப்பற்றி, "இனிமேல் இங்கே நிற்கக்கூடாது! ஓடி வா!" என்று ஜாடை காட்டி, அவசர அவசரமாக ஜன்னல் வழியே இறங்கினான். தோட்டத்தை அடையுமுன் 'படார்' என்ற பலத்த சப்தம், அறைக்கதவு உடைக்கப்பட்டு விட்டது என்பதை அறிவித்தது. இருவரும் ஐந்து நிமிஷங்களுக்கு அப்பால் இட்டி வாசல் வழியாக பங்களாவினின்றும் வெளிப்பட்டுத் தெருவில் நடந்தார்கள்.

யார் கண்ணிலும் தென்படாமல் சீக்கிரம் அங்கிருந்து தப்ப வேண்டும் என்ற ஒரே நோக்கத்துடன் இருவரும் விரைந்தார்கள். அறைக்கதவை உடைத்த பின்னர், வீட்டு ஜனங்கள் கணேசனைச் சூழ்ந்துகொண்டு சிகிச்சை செய்கிற நேரத்தில், தாமோதரன் நுங்கம்பாக்கத்தில் இருந்து விட்டால் நலம் என்று ஆசைப்பட்டான். அவனுக்கு இப்போது மனைவி யையும் மைத்துனனையும் பற்றிய கவலை வந்து விட்டது. சங்கரன் சிறு பிள்ளை; ஆபத்து களை லட்சியம் செய்யாமல் கிளம்பிவிடும் சுபாவம் அவனுடையது.

29/05/2011 13

கிழக்கே வெளுத்துக் கொண்டிருந்தது. அதிகாலைக்கு உரித்தான ஜிலுஜிலுவென்ற காற்று அடித்தது. இருவரும் பெருநடை போட்டுச் சென்று கொண்டிருந்தார்கள்.

பின்னால் ஒரு டாக்ஸி மெல்ல வந்து கொண்டிருந்தது. வாடைக் காற்று முகத்தில் அடிக்காமல் டிரைவர் ஒரு கம்பளி மப்ளரை முகமெல்லாம் மூடிக் கொண்டிருந்தான். அவன் பக்கத்தில் முக்காடிட்ட ஒரு கனத்த ஆள் அமர்ந்திருந்தான். இவர்களைக் கண்டதும், 'டாக்ஸி'க்காரன் மெள்ள ஊர்ந்தான்.

''வண்டி நுங்கம்பாக்கம் வருமா?'' என்று வினவினான் தாமோதரன். வண்டி உடனே நின்றது.

''பேஷாக! ஏறிக்கொள்ளுங்கள்!'' அருகில் இருந்த ஆள் சொல்லி, உட்கார்ந்தபடியே பின் கதவையும் திறந்துவிட்டான். இருவரும் பேசாமலே ஏறிக் கொண்டார்கள்.

வண்டி பறந்தது. ஒரு மைல் தூரம் சென்ற பிறகு, சரியான பாதையில் செல்லவில்லை என்பதைத் தாமோதரன் கவனித்தான். ''டிரைவர்! ஊருக்குப் புதிதா நீ! நுங்கம்பாக்கம் என்று சொன்னேன்; வில்லிவாக்கம் இல்லை!'' என்று கூவினான்.

டிரைவர் மௌனமாக, வண்டியின் வேகத்தைக் குறைக்காமல் ஓட்டினான். பக்கத்திலிருந்த ஆள் சிறு நகையாக நகைத்தான். ''நாங்க ஊருக்கும் புதிசு இல்லை; நீங்களும் நமக்குப் புதிசு இல்லை. எஜமான் உத்தரவுப்படி செய்கிறோம்!'' என்றான் கேலியாக.

''யார் எஜமான்!'' என்று கேட்டான் மற்றவன்.

''நம்ம மூன்று பேர் எஜமானனும்தான்...! உங்களை எங்கே இருந்தாலும் கூட்டி வரும்படி அவர் உத்தரவு. 'எங்கேடா காண்கிறது இந்தக்காலை வேளையிலே' என்று நான் கலங்கிக்கொண்டு வரேன; குறுக்கே வந்து நிக்கிறீங்க! காட்டேசி மாதிரி...! என்ன யோசிக்கிறீங்க. அண்ணே! என்னை இன்னும் தெரியல்லே?... நான்தான் 'தம்பி!' '' என்று தனது முக்காட்டை விலக்கிக் காட்டினான்.



'தம்பி'யின் முகத்தைப் பார்த்ததும், அவன் கொடூரமான கண்களையும் கேலிச் சிரிப்பையும் கண்டும் தாமோதரன் நடுங்கினான்.

''குதிக்கலாம், ஓடலாம் என்று மட்டும் ஆசைப்பட்டு வைக்காதிங்க...ஆமாம்! கதவைப் பூட்டியிருக்கிறோம். வண்டி வேகம் இப்போ 65 மைல்'' என்றான் 'தம்பி' எச்சரிக்கையாக.

ஃ ஃ ஃ

சுந்தரம் பிள்ளையின் மாளிகையில் விளக்குகள் எல்லாம் முன் போலவே எரிந்து கொண்டிருந்தன. தம்முடைய அறையில்தான் அவர் உட்கார்ந்து கொண்டிருந்தார். அருகில் இருந்த சோபாவில் சுந்தரி முன் போலவே சாய்ந்து கொண்டிருந்தாள். ஒரே ஒரு மாறுதல்; பெரிய மாறுதல் அது. அவர்கள் இருவர் முகத்திலும் இருந்த சந்தோஷம் அடியோடு மறைந்துவிட்டது.

சுந்தரம் பிள்ளை புன்சிரிப்பு சிரிப்பதுபோல் பாசாங்கு செய்து கொண்டிருந்தார். ஆனால், அவர் நெற்றியிலிருந்த சுருக்கங்களும், கண்களில் இருந்த கொடுமையும், கலைத்துவிட்டிருந்த கிராப்பும் அவருடைய நெஞ்சிலே ஓயாது எழும்பிக் கொண்டிருந்த கனலுக்கு அத்தாட்சியாக விளங்கின. அவர் சுந்தரி அருகே இருப்பதை உணர்ந்ததாகவே தோன்றவில்லை. 'தோல்வி' என்பது அவருடைய அகராதியில இல்லாத வார்த்தை; 'நினைத்தது நடந்தது' என்பதே அவருக்குத் தவறாமல் ஏற்பட்ட அனுபவம்; அவருடைய அபிப்பிராயத்திற்கு எதிராக ஒருவன் நடந்தான் என்று அவர் கேள்விப்பட்டதில்லை. அவருடைய ஆட்களில் ஒருவனால் சொன்னபடி நடக்க முடியவில்லை என்பதை அவர் பொறுக்க மாட்டார்.

29/05/2011 1

'தம்பி'யை அவர் எத்தனையோ பெரிய வேலைகளில் ஈடுபடுத்தியிருக்கிறார் போனில் கூப்பிட வேண்டியதுதான்.

"'தம்பி!' இன்ன இடத்தில் இன்ன காரியம் நடக்க வேண்டும்", அல்லது, " 'தம்பி!' இந்த ஆசாமி நமக்கு வேண்டாதவன்" என்று ஒரு பேச்சு சொல்ல வேண்டியது தான்; அப்புறம் அது பற்றி அவர் மறந்துவிடலாம். அத்தனை நம்பகமானவன் 'தம்பி' ஒருமுறை குறி தவறாதவன். அப்பேர்ப்பட்ட ஒருவன், அவர் எதிரில் இன்று ஒரு சின்னப்பயலை நழுவவிட்டான்! அது ஒரு பிசகு. பிசகு என்பதை அவர் காதுகள் கேட்க விரும்பவில்லை.

ஒரு கணம் முகம் எல்லாம் சுருங்கியது. "ஒரு வேளை சங்கரலிங்கமும் 'தம்பி'க்கும் பேச்சுவார்த்தை ஒப்பந்தம் என்று இருந்து, இருவரும் அவர்முன் ஒரு நாடகமே நடத்திக் காட்டியிருப்பார்களோ!" என்ற சந்தேகம் எழுந்து ஊசலாடியது. "இருக்காது!" என்று சமாதானம் செய்து கொண்டார் அவராகவே. சந்தேகம் ஏற்பட்டதற்கும், அது அழிந்ததற்கும் எவ்விதக் காரணமும் இல்லை. அவர்கள் நடத்திய தொழிலின் சாபக்கேடுதான் அது. இந்த நிமிஷம் பரமமித்ரர்களாக இருப்பவர்கள், மறு நிமிஷம் ஜன்ம வைரிகளாக மாறுவது அதில் சகஜம்தான்.

அவர் கண்ணாலே கண்டார்—கடோத்கஜன் போன்ற ஒரு ஆளை, அந்தச் சின்னப் பயல் கீழே தள்ளியதை. 'வெறும் முரட்டு பலம் மட்டும் போதாது' என்று அறிவு திரும்பத் திரும்பச் சொல்லியது. சொற்ப பலத்தை மூளையுடன் உபயோகித்துக் காணும் பலன், வெறும் தடித்தனத்தினால் கிடைக்கும் பலனைவிட எத்தனையோ பங்குமேல்!

சுந்தரி அவரையே கவனித்துக் கொண்டிருந்தாள். அந்த முகத்தின் மாறுதல்களைக் கொண்டே, மனத்தில் பாயும் பல்வித எண்ணங்களையும் புத்தகம்போல் படித்தாள். ஒரு குறும்பு நகை அவள் முகத்தில் விளையாடியது.

"என்னங்க! 'தம்பி' சமர்த்தைப் பார்த்துவிட்டோமே சற்று முன்னாலே!" என்றாள் மெள்ள.

"நீ சும்மா இரு! உன்னை நான் இங்கிருந்து போகச் சொன்னேனா, இல்லையா? ஏன் வந்தாய்?"



"இருக்கலாம் நான் இருந்தால் உங்களுக்கு என்ன இடைஞ்சல்?"

"உனக்குப் பதில் சொல்லத் தேவை இல்லை. நீ இருப்பது தப்பு! எழுந்து உள்ளே போ!"

"இங்கே நடப்பதெல்லாம் தப்பாக இருக்கிறதே! அதோட இந்த ஒரு தப்பும் சேர்ந்து கொள்ளட்டுமே!"

"சுந்தரி! நாலு வருஷம் நான் உன் வேதனையைப் பொறுத்துக் கொண்டுவிட்டேன். என் பொறுமை தீர்ந்து விட்டது. இனிமேலும் பொறுக்க மாட்டேன். உனக்கு ரொம்ப இடம் கொடுத்துப் போச்சு. ஆமாம்!"

"இ-ட-ம் கொடுத்துப் போச்சு!" என்று அழகு காட்டினாள் சுந்தரி

சுந்தரம் கடுங்கோபமாக எழுந்துவிட்டார். அவள் கையை முரட்டுத்தனமாகப்பற்றி இழுத்து அவளைச் சோபாவிலிருந்து கீழே தள்ளினார். அவள் தன்னை விடுவித்துக்கொள்ளச் செய்த முயற்சிகளையெல்லாம் பயனற்றதாக்கி, தரதரவென்று இழுத்துச் சென்று அறைக்கு வெளியே வாசற்படிக்கு அப்பால் கொண்டுவிட்டு, "இங்கே மறுபடி நீ தலை காட்டினாயோ, நான் கொன்றுவிடுவேன். கொன்றுவிடுவேன் என்றால், நிச்சயம் உன் உயிரை வாங்கி விடுவேன்...போ!" என்று கர்ஜனை செய்தார்.

சுந்தரி மறுபடி முரண்டு செய்தாள். சுந்தரம் சொன்னபடியே பொறுமை இழந்து, கையை ஓங்கிப் பளார் என்று அவள் கன்னத்தில் வைத்தார். அந்த அதிர்ச்சி நீங்கு முன் தொடர்ந்து பிடரியிலும், தோளிலும் இரண்டு அறைகள் விழுந்தன. "போ! இன்றைக்கு இது போதும்! நிற்காதே!" என்ற எச்சரிக்கையுடன் தம் இடத்திற்குத் திரும்பிவிட்டார் வாசற்படியில் நின்றபடியே ஐந்து நிமிஷங்கள் சுந்தரி விம்முவதை அவர் கவனித்தார். அதன்பின் அவள் சென்றுவிட்டாள் என்று ஊகித்து பழையபடி [illegible] ஆழ்ந்தார். அரைமணி நேரம் நிச்சிந்தையாக [illegible]

29/05/2011

எதிரே 'தம்பி' வந்து நின்றான். ஒன்றுமே சொல்லாது தலை குனிந்து நிற்பதிலிருந்தே சென்ற காரியம் 'காய்' என்று அவர் உணர்ந்து கொண்டார். "எனக்கு வெட்கமாக இருக்கிறது. 'தம்பி! இன்றைக்கு நடந்தது நாலுபேருக்குத் தெரிந்தால் என்ன சொல்லுவார்கள்! ஒரு வாண்டுப் பயல், நம்மை ஏமாற்றியிருக்கிறான்...அவன் எங்கே போனான் என்று யாருக்குமே தெரியவில்லையா?"

"இல்லை" என்றான் 'தம்பி' சுருக்கமாக.

"அவனைக் கொண்டு போக வேறு யாரேனும் காத்திருந்தார்களா?"

"நிச்சயமாக அப்படி இல்லை. ஓடித்தான் தப்பித்துக் கொண்டிருக்கிறான்."

"பத்து நிமிஷத்திற்குள் எங்கே ஓடிவிட முடியும்? என்னிடம் கதையா சொல்கிறாய், எங்கேயும் பார்த்து விட்டீர்களா?"

"ஒரு இடம் பாக்கி இல்லை."

"இதென்ன ஐயா, மர்மமாக இருக்கிறது! சுற்றுப்புறம் எல்லாம் ஒரே மைதானம்; ஒளிய ஒரு இடம் கிடையாது. விளக்கைப் போட்டுக்கொண்டு தேடி விட்டு வந்து 'காணோம்' என்கிறீர்களே! அப்புறம் உங்களை எதற்குத் தான் நான் நம்புகிறது? அப்புறம் செங்கல்வராய பிள்ளையைக் காணோம் என்பார்கள். நான் இருக்கிறதா, ஓடிப் போவதா உங்களை நம்பி விட்டு?"

"செங்கல்வராய பிள்ளை ஒரு நாளும் எங்கும் போய் விடமாட்டார். இந்தப் பயல் இப்படி ஓடுவான் என்று நான் எதிர்பார்க்கவே இல்லை..."

"அவன் கூடத்தான் நீ இன்றைக்குப் பார்த்துப்பிடித்து கொண்டு வருவாய் என்று எதிர்பார்க்கவில்லை; அதற்காக அவன் தப்பி ஓடாமல் இருந்தானா? நன்றாக இருக்கிறதே நீ காட்டுகிற காரணம்; இத்தனை நாள் நடக்காத பிசகுகள் இப்போது ஒன்றன் பின் ஒன்றாக நடக்கின்றன..."



"நான் என்ன செய்வேன்?"

இதைக் கேட்டதும் சுந்தரம் பிள்ளையின் முகம் செக்கச் செவேல் என்று சிவந்தது. உதடுகள் துடித்தன. அபரிமிதமான கோபம் அவர் உடலை உலுக்கியது.

"அதை மட்டும் என்னிடம் பேசாதே! 'நான் என்ன செய்வேன்!'... அப்படிச் சொன்னால் வேலை செய்ய யோக்கியதை இல்லை என்று அர்த்தம்! கையாலாகாதவன் களை வைத்துக் கொண்டு நான் என்ன செய்கிறது? 'தம்பி'?" என்று கூச்சல் போட்டார்.

"எப்படியாவது அவனைப் பிடித்துக்கொண்டு வந்து உங்கள் முன்னால் நிறுத்துகிறேன்" என்றான் 'தம்பி.'

"அப்படித்தான், 'எப்படியாவது பையைக் கொண்டு உங்களிடம் சேர்த்து விடுகிறேன்' என்று 'இவன்' சொன்னான். என்ன ஆயிற்று? இன்றைக்கு வரை அது கிடைத்ததா?

'தம்பி' உதட்டைக் கடித்துக் கொண்டான். சுந்தரம் பிள்ளையுடன் பேசிப் பிரயோசனம் இல்லை. அவர் கொடுக்கிற வெகுமதிகள் விசுவாசத்துக்காகவே இல்லை. வெற்றிக்காக மட்டுமே, வெற்றி காண்பித்தால் வெகுமதி; இல்லையோ, தண்டனை. அதில் ஈவிரக்கம் காட்டுவதற்கு இதயம் அவரிடம் இல்லை. இன்றைக்குத் 'தம்பி' வேண்டியவன்; நாளைக்கே அவனைத் தீர்த்துக் கட்ட இன்னொரு ஆசாமி முளைத்து விடலாம். அவரால் ஆகாத காரியம் இல்லை; பணம் செய்கிற வேலை அது!

'தம்பி' சிறிது நேரம் பதில் சொல்லவில்லை. பிறகு "நான் என்ன செய்ய வேண்டும் என்று உத்தரவு ஆக வேண்டும்" என்றான்.

"என்ன செய்கிறதா? நான் சொல்லித்தர வேண்டுமா உனக்கு? உனக்கு இனிமேல் ஒரே ஒரு வேலைதான்' தாமோதரனையோ, சங்கரனையோ எங்கே கண்டாலும்

29/05/2011

என்னிடம் கொண்டு வந்து சேர்க்க வேண்டியதுதான் அந்த வேலை."

"அவர்கள் திமிரினார்களானால் அங்கேயே மண்டையை உடைத்துப் போட்டு விடுவேன்...அதற்கு உங்கள் அனுமதி தேவை" என்றான் 'தம்பி'.

சுந்தரம் பிள்ளை இதற்குப் பதில் ஒன்றும் சொல்லாமல் கண்களை மூடிக்கொண்டார். இம்மாதிரியான சுபாவம் அவருக்கு உண்டு. பதில் சொன்னால் தன் கையாளுக்கு இடம் கொடுத்துப்போகும், தலைக்குமேல் ஏறி உட்கார்ந்து கொள்வான் என்ற சம்சயம் உண்டாகையால், "எனக்கு அக்கறை இல்லை; உன் இஷ்டப்படி செய்...இதையெல்லாம் என்னிடம் சொல்லிக் கொள்ளாதே!" என்ற அர்த்தத்தில் கண்ணை மூடிக்கொள்வார். எதிராளி அவ்விடம்விட்டு நகர்ந்து செல்லும் வரையில் கண்களைத் திறக்கமாட்டார்.

'தம்பி' சென்றுவிட்டான்; அவன் உள்ளம் இருண்டு போய்க் கிடந்தது. விவரிக்க இயலாத கலவரம் ஒன்று அவனைப் பற்றிக் கொண்டிருந்தது. சங்கரன் தப்பி ஓடினது என்னவோ அவனுடைய பிசகு இல்லை; அஜாக்கிரதையும் இல்லை. அது 'விதி' என்று அவன் நினைத்தான்! ஆனால், சுந்தரம் பிள்ளை அதை ஒப்புக் கொள்ள மறுத்தார்; பிசகு என்று சாதித்தார். பிசகு செய்தால் அவரிடம் பிழைப்பது அரிது. அவருக்கு அதிருப்தி என்றால், எப்படி தண்டிப்பார் என்று நிச்சயமாகச் சொல்லமுடியாது. சிரித்துக்கொண்டே எத்தனையோ பேருக்குக் குழி பறித்திருக்கிறார்! 'தம்பி' தலையைச் சொறிந்து கொண்டான். சுந்தரம் பிள்ளை இஷ்டப்பட்டால் அந்தத் தலை அங்கே இல்லாமல் வேறெங்கேனும் உருண்டு கொண்டிருந்தாலும் இருக்கலாம்.

சுந்தரம் பிள்ளை டெலிபோனை எடுத்து ஒரு நபரை அழைத்தார். வெகு நேரம் மணி அடித்துக் கொண்டே இருந்தது. பொறுமையாகக் காத்திருந்தார். அவருக்குப்



பொறுமையாகவும் இருக்க முடியும்; க்ஷண நேரத்தில் கோபம் கொள்ளவும் தெரியும். 'ஹல்லோ!' என்று குரல் கேட்டதும், ரிஸீவரையும் தமது உதடுகளையும் சேர்த்து ஒரு கையினால் மூடிக்கொண்டு, வெகு ரகசியமாகப் பேசினார். "யார்?...நாயர் தானே பேசறது?" என்று கேட்டார்.

"ஆமாம்!"—குரலும் பேசும் விதமும் நபர் பற்றிச் சந்தேகமில்லை என்பதை அறிவித்தன.

"உன்னால் சீக்கிரம் ஒரு காரியம் ஆக வேண்டும் எனக்கு?"

"ஆக்ஞையிட்டால், செய்யக் காத்திருக்கிறேன்..."

"நம்ம 'தம்பி' வர வர சுகம் இல்லை..."

"ஓ! ஓ! ஓ!"

"ஆமாம்! எனக்குத் திருப்தி இல்லை; இன்றைக்கு ஒரு பெரிய பிசகு செய்துவிட்டான். அது பிசகா, அல்லது துரோகமா என்று எனக்கு நிச்சயமாகத் தெரியவில்லை இன்னும்..."

"த்ஸோ! த்ஸோ! த்ஸோ!"

"அவனை நீ கவனித்துக் கொள்ள வேண்டும். துரோகம் செய்கிறான் என்றால், என்னமாதிரி நாம் நடந்து கொள்ளவேண்டும் என்று உனக்குச் சொல்லவேண்டுமா?"

"தேவை இல்லை; தேவை இல்லை! நான் உடனே கவனிக்கிறேன்...அப்புறம் அடுத்த ஆக்ஞை என்ன?"

"தேனாம்பேட்டை பங்களாவிலிருந்து செங்கல்வராய பிள்ளையைக் கொண்டு வந்து சேர்த்து விட்டோம்."

"என் காதிலே விழுந்துட்டது. கந்தையா சொன்னான்."

புருவத்தை உயர்த்தி உதட்டைக் கடித்துக்கொண்டார் சுந்தரம் பிள்ளை. அவர் முகபாவத்தை நாயர் கண்டிருந்தால் சிறிது கலங்கியே இருப்பார். கந்தையாவுக்கு வாய் வளர்ந்து கொண்டு வருகிறது; சீக்கிரத்தில் அதையும் மூட [illegible] வேண்டியதுதான். ஆனால், இ[illegible]

29/05/2011

வேலைகள் காத்திருக்கின்றன. இருக்கட்டும் என்று நினைத்துக்கொண்டு, "'தம்பி' ஒரு பிசகு செய்து விட்டான். அதனால் சில தொந்தரவுகள் தொடர்ந்து ஏற்படும் என்று நினைக்கிறேன்" என்று நிறுத்தினார்.

"நாயரிடம் சொல்லி விடுங்கள். பார்த்துக் கொள்கிறான். உங்களுக்குக் கவலையே வேண்டாம்..."

"ஸி. ஐ. டி. சந்துரு இப்போது செங்கல்வராய பிள்ளை பங்களாவில் போய் முகாம் போட்டிருக்கிறான்."

"அதையும் கேள்விப்பட்டேன். அவனைக் கொண்டு வந்து நிறுத்த வேண்டுமா? உம்ம்ம்...போலீஸ் கூட நாம் நேருக்கு நேர் நிற்பது வாடிக்கை இல்லை என்று சொல்லுவீர்களே!"

"அதைச் சொல்லவில்லை. அவன் போயிருப்பது செங்கல்வராய பிள்ளையின் மகள் இந்திராவுக்காக..."

"சரி!"

"இந்திரா கூட இருந்து தூண்டுகிற வரையில் சந்துரு சும்மா இருக்கமாட்டான். அவளை நாம் கொண்டுவந்து விடவேண்டும்."

"எப்போது?"

"நாயர்! எப்போது என்று கேட்கிறதானால், நானே நாளைக்கு ஏற்பாடு செய்யமாட்டேனா? இப்போது நடந்தாக வேண்டும், இங்கிருந்து தப்பியோடிப் போன பயல் சந்துருவைப் போய்ச் சேருகிறதற்குள் அவள் இங்கே வந்தாக வேண்டும்."

"உம்... எங்கே வரவேண்டும்?"

"இங்கே நம் பங்களாவுக்கு வந்துவிட்டால், பிற்பாடு நான் பார்த்துக் கொள்கிறேன்!"

"சரி. நீங்கள் அதை மறந்திடுங்க...நான் கவனித்துக் கொள்கிறேன்!"

நாயரின் குரல் கணீர் என்று கேட்டது. சுந்தரம் பிள்ளைக்குத் தெம்பு அளித்தது. அந்தக் குரலிலிருந்து



மட்டும் ஆள் எப்படி இருப்பான் என்று கணிப்பதானால், ஆறரை அடி உயரத்தில் ஒரு முண்டன் என்றுதான் தோன்றும். நேரில் பார்த்தாலோ, முற்றும் ஏமாற்றம். வற்றின உடலாக, நாலரை அடியே இருப்பான் நாயர். அவன் நடப்பதையும் விழிப்பதையும் பார்த்தால், 'இவனா இப்படிப் பேசுவான்? இவன்கூட ஒரு துஷ்டத்தனம் செய்வானா?' என்று ஆச்சரியம் மேலிடும். கிராதக நெஞ்சம் படைத்த அசுரர்களுக்கும் முதுகில் மண் காட்டும் துஷ்டன் அவன்; காசுக்கு எதையும் செய்ய அஞ்சாத போக்கிரி; அடுத்துக் கெடுக்கும் அக்கிரமக்காரன். அவனையும் சுந்தரம் பிள்ளை நம்புவதில்லை; ஜாக்கிரதையாக இருப்பார்; அதிகமாக உபயோகித்துக் கொள்வதானால் கைமேல் காசும் அதற்கு மேல் பணமும் வைப்பார். 'தம்பி'யின் மேல் சந்தேகம் வரவேதான் நாயரிடம் போக வேண்டிய நிர்ப்பந்தம் அவருக்கு இப்போது வந்தது.

நாயர் ஐந்து நிமிஷத்திற்கெல்லாம் வெளியே வந்து விட்டான். சைக்கிளை எடுத்துக் கொண்டு இரண்டு தெருவுக்கு அப்பால் இருந்த கந்தையாவை எழுப்பினான். "முக்கிய காரியம்...வண்டி வேண்டியிருக்கும்; நீயும்கூட வர வேண்டும்; புறப்படு!" என்றான்.

கந்தையா அவரைத் தூக்கத்தில் "எதற்காக?" என்று உறுமினான்.

"பிற்பாடு அதெல்லாம் கேட்டுத் தெரிந்து கொள். 'எஜமான்' உத்தரவு! போன் வந்துவிட்டது...எங்கே, நேரமாக்குகிறாயே!" என்றான் நாயர்.

பதினைந்து நிமிஷங்களில் மோட்டார் ஏற்பாடாகி விட்டது. கந்தையாவும் நாயரும் பின்ஸீட்டில் உட்கார்ந்து கொண்டார்கள். தேனாம்பேட்டையை நோக்கி வண்டி ஓடியது.

"'இன்றைக்கு இரண்டாம் முறை இது!" என்றான் கந்தையன்.

29/05/2011

''அதே இடத்திற்கு; அதே மாதிரி வேலைதான். அப்பனை நீ அழைத்துப் போனாய்; நான் மகளை அழைத்துக்கொண்டு வருகிறேன்'' என்றான் நாயர் இளித்து.

''இது அவசியமா? 'எஜமான்' எனோ அரண்டுபோய் இப்படி அவசரப்படுகிறார் என்று நினைக்கிறேன்.''

'' 'எஜமான்' காரியங்களைப்பற்றி நான் நினைக்கிறதே இல்லை. அதனால் உபயோகம் இல்லை!'' என்றான் நாயர்.

''சந்துருவிடம் பயமா?''

''எனக்கு உன்னுடன் பேசப் பயமாயிருக்கிறது!'' என்று நாயர் சம்பாஷணையை முடித்துக்கொண்டேன்.

கதவை உடைத்துக்கொண்டு உள்ளே பிரவேசித்த மதுரநாயகமும் சந்துருவும், கீழே கிடந்த கணேசனையும், அறை முழுதும் அலங்கோலமாகக் கிடந்த நிலையையும் கண்டார்கள். கணேசன் முன் இரவில் கிடந்ததற்கும், இதற்கும் பெரிய வித்தியாசம் இருந்தது. அப்போது அவன் தூங்கினவன்போல் காணப்பட்டான்; இப்போது இறந்தவன் போலவே கிடந்தான்

மார்பில் சட்டென்று கையை வைத்துப் பார்த்தான் சந்துரு.

''உயிர் இருக்கிறதா? அண்ணா பிழைப்பானா?'' என்று அலறினாள் இந்திரா.

''யாரேனும் கீழே போய்க் கொஞ்சம் தண்ணீர் கொண்டு வரவேண்டுமே! சீக்கிரம்'' என்றான் சந்துரு.

இந்திரா ஒரு துள்ளு துள்ளினாள். யாரும் தடுத்து நிறுத்துமுன் அவளே கீழே ஓடிவிட்டாள். இரண்டு மாடிகள் இறங்கித் தரையில் கால் வைத்த சமயம், கீழே படியருகில் ஒளிந்திருந்த நாயர் அவளைப் பூனைபோல் பின்பற்றினான்.

ஒருவித வாசனையுடன் கைக்குட்டை தன் முகத்தை மூடுவதை இந்திரா உணர்ந்தாள்; அவள் பலத்தையெல்



32440 4928 251

லாம் யாரோ ஆகர்ஷித்து, வெறும் [illegible] அவளைக் கீழே தள்ளுவது போன்ற ஒரு பிரமை உண்டா[illegible] தோய்ந்தன. கீழே விழும்போது மண்டை டமார் என்று கீழே முட்டும் என்று நினைத்தாள். ஆனால், விழு முன் இரு கரங்கள் அவளைத் தாங்கிக் கொண்டன.

அதன்பின் அவள் விழித்துக் கொண்ட போது, ஒரு மோட்டாரில் அவள் சென்று கொண்டிருந்தாள். இரு புறமும் இரு ஆட்கள் உட்கார்ந்திருந்தார்கள். இருவரையும் இதற்கு முன் அவள் கண்டதே இல்லை.

ஆபத்து! அதை நினைக்கையிலேயே தலை சுழன்றது. மறுபடி அவள் பிரக்ஞை இழந்தாள். மோட்டார் ஒரு குலுக்கலுடன் நிற்கவும் இரண்டாம் முறையாக விழிப்பு வந்தது. சொப்பனத்தில் நடப்பதுபோல் அவள் சுந்தரம் பிள்ளையின் பங்களா வாசலில் கால் வைத்தாள்.

ஃ ஃ ஃ

செடி மறைவிலிருந்தபடி சங்கரன் கவனித்தான். காரிலிருந்து இறங்கிய பெண் மிகுந்த அழகியாக இருந்தாள். அது மட்டும் அல்ல; அவளிடம் ஒரு தள்ளாட்டம், தூக்க மயக்கமும் காணப்பட்டது. ஒரு கணத்தில் சங்கரன் முடிவு செய்து விட்டான்; ஏதோ மயக்க மருந்தைக் கொடுத்து அவளைப் பலாத்காரமாகத் தூக்கிக்கொண்டு வந்திருக்கிறார்கள் என்று.

சங்கரனுடைய நெஞ்சில்கோபம் அலை போல் பொங்கி எழுந்தது. 'யார் இவர்கள்? இஷ்டம்போல் ஒருவரைப் பிடித்து வருவதற்கும் அடைத்துப் போடுவதற்கும்!' என்று சீறினான். அன்றிரவு 'தம்பி'யின் கையில் அவனுக்கு ஏற்பட்ட அநுபவங்கள் ஞாபகம் வந்தன. அவனாவது ஆண்பிள்ளை, திமிறிக் கொண்டு ஓடிவர முடிந்தது. ஓர் இளம் பெண் இவர்கள் கையில் சிக்கிக்கொண்டால் மீள வழி ஏது:—பொழுது புலர்ந்த பின் போய்விடுவது என்ற எண்ணத்தை அவன் மாற்றி[illegible]

29/05/2011

பெண்ணைப் எப்படியாவது விடுதலை செய்வித்து விட்டுத் தான் வெளியேறுவது என்று உறுதி செய்து கொண்டான்.

அங்கே நின்று கொண்டிருப்பது அபாயகரமானது; யாரேனும் பின்புறமாக வரலாம். வீட்டிற்குள் பிரவேசித்து அந்தப் பெண்ணை எங்கே அடைத்து வைக்கிறார்கள் என்பதை அவன் அறிய வேண்டும். அடைக்கப்பட்டவளோடு தப்பித்துக்கொள்வதுதான் சிறந்த வழி. நேரம் ஆக ஆக, பந்தோபஸ்துகள் அதிகமாகக் கூடும்... சங்கரன் மறுபடி வீட்டின் பின்புறத்தை அடைந்து விட்டான்.

குசினி போன்றதொரு அறையின் பின்புறக் கதவு திறந்திருந்தது. அதில் இப்போது ஓர் அடுப்பைப் பற்ற வைத்திருந்தான் தவசுப்பிள்ளை. எட்டிப் பார்த்த சங்கரன் கண்ணுக்கு, அறைகாலியாகத் தென்பட்டது. ஒரு வேளை தவசுப்பிள்ளை ஜலம் கொண்டு வரக் குழாயடிக்குச் சென்றிருக்கலாம், அல்லது பண்டங்கள் கொண்டுவர உள்ளே போயிருக்கலாம். எப்படியும் திரும்பி விடுவான். காலதாமதம் ஆகாது. அதற்குள் அந்த அறையில் நுழைந்து இருட்டான ஒரு நடைபாதையைக் கடந்து, பல மூட்டைகள் அடுக்கியிருக்கும் அறைக்குள் வந்து சேர்ந்தான். அவன் வருகையால் கலவரமடைந்து பல எலிகள் நாலா மூலைகளுக்கும் ஓடின. அடுத்தபடி என்ன செய்வது?

கிறீச் என்ற சப்தத்துடன் ஓர் அறைக் கதவு திறந்து கொண்டது. அறையில் பரவியிருந்த இருட்டும், ஒரு கள்ளிப் பெட்டியுமே, சங்கரனைக் காட்டிக் கொடுக்கவில்லை. பருத்த தொந்தியுடன், கஷ்குமுஷ்கென்று ஒரு கறுத்த ஆள் வெளிப்பட்டு, ஏதோ பாட்டை முனகிக் கொண்டே குசினிக்குள் சென்றான். 'ஓஹோ! இவன்தான் தவசுப்பிள்ளையோ!'—பிற்பாடு வெளியேறுவதானால், இவனைச் சமாளித்து விட்டுப் போக வேண்டியிருக்கும்.

தவசுப்பிள்ளை வந்ததில் ஒரு சௌகரியம் ஏற்பட்டு விட்டது; அவன் திறந்து வைத்த கதவின் வழியாக



இன்னும் உள்ளே செல்லலாம். சங்கரன் அவ்வாறே செய்தான். மூன்று நான்கு அறைகளைத் தாண்டியபின், மறுபடி பதுங்க வேண்டிய நிர்ப்பந்தம் வந்தது. இருவர் பேசிக் கொண்டு வந்தார்கள்; அவர்கள் டீ குடிக்க வருபவர்கள். அருகில் நெருங்கியதும், காரிலிருந்து இறங்கினவர்களே என்பது சங்கரனுக்குத் தெரிந்து விட்டது.

"அருமையான பெண் இல்லை?" என்று கேட்டான் ஒருவன்.

"தங்கக் கிளி! (மெதுவாக) சுந்தரம் பிள்ளை விட மாட்டான்!" என்றான் மற்றவன்.

"இங்கே ஒரு சுந்தரி இருக்குதே! அது சும்மா இருக்குமா?"

"நமக்கேன் இந்த வம்பு? யார் காதிலாவது விழுந்தால், குரல் வளையைப் பிடித்து உலுக்கி விடுவான்!"

சங்கரனுக்கு இன்னும் அந்தப் பெண் அடைபட்டிருக்கும் அறை தெரியவில்லை. இடதுபுறம் தெரிந்த பாதையில் சிறிது தூரம் சென்றதும், வழி தவறிவிட்டதை உணர்ந்தான். அந்தப் பாதை ஒரு சிறிய மாடிப் படிக்கட்டில் வந்து நின்று விட்டது. அவசரமாக, ரகசியமாக வெளியேற இந்தப் படிக்கட்டு உதவலாம். இம்மாதிரி வீடுகளுக்கு அது மிக அவசியம். அந்தப் படிகளின் மீது சந்தடியின்றி ஏறினான் சங்கரன். இருண்ட ஒரு அறையினுள் அது கொண்டு விட்டது. எங்கும் நிசப்தம். வெளியில் அத்தனை அழகாகக் காணப்பட்ட மாளிகையினுள் இப்படியும் ஒரு சிறு அறை இருக்குமா என்று ஆச்சரியப் பட்டான் அவன்.

பகிரங்கமாகப் பேசும்போது சுத்தமாகக் காணப்படுபவர்கள் பலர் இப்படி அந்தரங்கத்தில் வெகு அசுத்தமாக இருப்பதை நினைத்துக் கொண்டான். வானம் தெளிந்தது; நட்சத்திரங்கள் எல்லாம் மறைந்து, சூரிய ஒளி பரவத் தொடங்கி விட்டது. அவன் நிற்கக் கூடாது.

அங்குமிங்கும் சுற்றினான், கடைசியில் ஒரு ஜன்னல் தென்பட்டது. அதனுள் எட்டிப் பார்த்தபோது இந்திரா

29/05/2011

தன்னந்தனியே உட்கார்ந்திருந்தாள், தலையில் கையை வைத்தபடி. ''உஸ்ஸ்...இப்படி வா!'' என்றான் சங்கரன்.

இந்திரா நிமிர்ந்து பார்த்தாள். அவளுக்கு நம்பிக்கை இல்லை. இவனே மற்றொரு எதிரியாக இருப்பானோ என்று பயப்பட்டாள்.

''நான் உனக்கு விடுதலை அளிக்க வந்திருக்கிறேன். எப்படி உள்ளே வரலாம்?'' என்று கேட்டான் சங்கரன்.

போன நம்பிக்கை திரும்பியிருக்க வேண்டும். ''அதோ! கதவு வெளிப்புறம் தாழ்ப்பாள் போட்டிருக்கிறது...'' என்றாள் இந்திரா.

சங்கரன் கதவின் பக்கம் அடைய கூரைமீது ஏறிக் குதிக்கவேண்டி வந்தது; பதினைந்து நிமிஷங்கள் இதில் விரயமாயிற்று. அழுத்தமான தாழ்ப்பாள். அறையைத் திறந்ததும், இந்திரா எழுந்து வந்தாள். தூக்க மயக்கம் பெரும் பகுதி நீங்கியிருந்தது. ''என் பின்னே வா!'' என்று சங்கரன் அவளை அழைத்துக் கொண்டு வந்தான்.

மாடிப்படிகளில் இருவரும் இறங்கினார்கள். இருண்ட பாதைக்கும் வந்தார்கள். அதற்கு மேல் போக முடியவில்லை, அறையில் இப்போது மனிதர்கள் அரவம் கேட்டது. இருவரும் பதுங்கினார்கள். சங்கரனின் பொறுப்பு இரண்டு மடங்காகி விட்டது; ஆனால் அந்தப் பெண் ஆபத்துக்கு ஆளாகக் கூடாது. ஏழெட்டு நிமிஷங்களுக்குப் பிறகு, சங்கரன் மீண்டும் தொடர்ந்தான்; இந்திரா சுறுசுறுப்புடன் பின்பற்றினாள். சாமான் அறையில் அவளை ஒளித்து விட்டுக் குசினியில் எட்டிப் பார்த்தான்.

தவசுப்பிள்ளை அங்கே இருந்தான். நன்றாக விழித்துக் கொண்டிருந்தான். அந்த இடத்தை விட்டு அகலுவான் என்ற நம்பிக்கை அவனுக்கு இல்லை. திரும்பி வந்து இந்திராவிடம், ''நான் ஒரு யுக்தி செய்கிறேன். அது பலித்தால், தவசுப்பிள்ளை இங்கிருந்து உள்ளே போவான். நீ உடனே தோட்டத்துக்குள் போய்விட வேண்டும். நான்



வந்து சேர்ந்து கொள்கிறேன். அப்புறம் ஓட்டம் இருக்கவே இருக்கிறது. ஒரு வேளை நான் அகப்பட்டுக் கொண்டால் நீ எனக்காகத் தாமதிக்கக் கூடாது. ஓடிவிட வேண்டும்'' என்றான்.

இந்திரா பதில் கூறு முன் அவன் உள்ளே ஓடிவிட்டான். இரண்டு அறைகளுக்கு அப்பால், பல பித்தளை வெண்கலப் பாத்திரங்கள் மடமடவென்று சரிவது போன்ற சப்தம் கேட்டது. தான் ஒளிந்திருந்த இடத்திலிருந்து இந்திரா பார்த்தாள். தவசுப் பிள்ளை குசினியை விட்டு எழுந்து, பாத்திரங்கள் விழுந்த காரணத்தை அறிய ஓடினான். இப்போது இந்திராவுக்குச் சங்கரனின் யுக்தி புரிந்தது. இருந்தாலும் சங்கரனை ஆபத்தில் விட்டு ஓட மனம் இல்லை. தவிர, அவனால் உதவியின்றி ஓடுவது சாத்தியமாக இராது. எனவே, சங்கரன் வந்தபோது இந்திரா அங்கேயே இருப்பதைக்கண்டு கோபித்துக்கொண்டான். ''சீக்கிரம்!...ஜல்தி!...அடடா! சொன்னபடி செய்யக் கூடாது?'' என்று கடிந்து கொண்டு குசினியைத் தாண்டித் தோட்டத்திற்குள் விரைந்தான். அவர்களுக்கு இருந்தது சில விநாடிகளே! தவசுப்பிள்ளை திரும்பித் தோட்டத்தில் அவர்கள் ஓடுவதைக் கண்டுவிட்டால், எல்லாரையும் எச்சரிக்கை செய்து விடுவான்.

காம்பவுண்டுக்குள் சுவர் எதிரே நின்று, ஒரு கணத்தில் மரக்கிளையைப் பற்றிக் கொண்டு, சங்கரன் அதன்மீது தாவினான். இந்திராவினால் அவன் வந்த வேகத்தில் பின் தொடர இயலவில்லை. சில அடிகள் பின் தங்கி, சுவரருகில் வரும்போது மேலே நின்ற சங்கரன் குனிந்து, அவள் பற்றிக்கொள்ளத் தன் கையை நீட்டினான். இதுவரை யாரும் பார்க்கவில்லை. சங்கரன் போட்ட திட்டங்கள் திருப்திகரமாக நடைபெற்று வந்தன.

இந்திரா தன் நிலைமையை உணர்ந்தாள்; அது அவளுக்குப் பலமே அளித்தது. சங்கரன் கையைப் பற்றிக் கொண்டு, சுவரில் ஏறிவிட்டாள். ஆனால் கீழே ஏழடி குதித்தாக வேண்டும்; கால் முறியுமோ, கை முறியுமோ.

29/05/2011 13

சங்கரன் சுவர் முகட்டில் உட்கார்ந்து, அதைப் பிடித்துக் கொண்டு இரு விநாடிகள் தொங்கினான்; பிறகு தொப்பென்று குதித்து, அருகே நின்று, தன் தோள்மீது கால்வைத்து இறங்கும்படி சைகை செய்தான். இந்திரா தயங்கினாள்.

"சொல்கிறபடி கேள்! தவறினால் இருவருக்கும் ஆபத்து! ஜல்தி! ஜல்தி!"

இந்திரா இறங்கும் போது சற்றுத் தடுமாறி விட்டாள். ஆனால் தரையில் மோதிவிடாதபடி சங்கரன் அவளைக் காப்பாற்றி, "இனி நிற்கக் கூடாது! எந்த வினாடியும் தவசுப்பிள்ளை கண்டு கொள்வான். மாடி அறை காலி என்றால், நாலாபுறமும் தேடுவார்கள்!" என்றான்.

சங்கரனும் இந்திராவும் ஓடினார்கள். மரங்களின் ஓரமாகச் சென்றார்கள்; ஜன நடமாட்டம் இன்னும் ஆரம்பமாகவில்லை ஓடி வழக்கம் இல்லாத இந்திராவுக்கு மேல் மூச்சு, கீழ்மூச்சு 'வாங்கியது. எங்கேனும் சற்று உட்கார்ந்து இளைப்பாறினால் தேவலை!' என்று நினைத்தான். ஆனால் சங்கரன் நிற்பதே அபாயம் என்று எச்சரித்தான் மூச்சைப் பிடித்துக் கொண்டு இன்னும் சிறிது தூரம் ஓடிவிட்டால் அப்புறம் நிச்சிந்தையாக இருக்கலாம்.

வெகு நேரத்திற்குப் பிறகு, முதல் ஆசாமி அவர்கள் கண்ணில் தென்பட்டான். அரும்பு மீசையும் வெள்ளைச் சட்டையுமாக; பார்த்தவுடன் பட்டணத்தான் என்று சொல்லும்படி இருந்தான். அவன் இவர்களைக் கூர்ந்து கவனித்துக்கொண்டு போனான் ஒரு விநாடி.

"இனி ஆபத்தில்லை" என்று சங்கரன் சொல்ல நினைத்த சமயம், அந்த ஆள் இரு கைகளையும் ஆகாயத்தில் தூக்கி, வீசிக் காட்டினான். சந்தேகத்துடன் நோக்கின சங்கரன் அடர்ந்த மரங்களுக்கிடையில் ஒரு சிறு பங்களா இருப்பதை அப்போதே கண்டான். வெகு சாமர்த்தியமாக அதைச் சுற்றித் தோட்டம் வளர்த்திருந்தார்கள்.



இந்த 'சமிக்ஞை'க்கு என்ன அர்த்தம் என்று ஊகிப்பதற்குள், இரண்டு பேர் அவர்களை நோக்கி ஓடி வந்தார்கள்.

"வாருங்கள் பங்களாவுக்கு!" என்று அழைத்தார்கள்.

"யார் பங்களா?" என்றான் சங்கரன்.

"இதுவும் நம் எஜமான பங்களா தான! நீங்கள் அங்கே இருப்பதும் இங்கே இருப்பதும் ஒன்றுதான். கலாட்டா செய்யாமல் வந்துவிடுங்கள்!" என்றான் அவர்களில் தடியனாக இருந்தவன்.

சங்கரன் இந்திராவைப் பார்த்தான். அந்த அரும்பு மீசைக்காரன் குறும்புச் சிரிப்புச் சிரித்தான். "உங்கள் மாதிரி இதுக்கு முந்தி ஆளுங்க ஓடியிருக்கிறாங்க. ஆகையால், எஜமான் அவங்களை வரவேற்கிறதற்கென்றே இப்படிக் கட்டி வைத்திருக்கிறார்!" என்றான்.

"எஜமானை மீறி யாரும் தப்பினதில்லை தெரிந்து கொள்!" என்று ஒரு தடியன் சங்கரன் கழுத்தில் கை கொடுத்து முன்னே தள்ளினான். இந்திரா உள்ளம் உட்கார்ந்து விட்டது.

## சந்துரு மனத்தைத் திறக்கிறான்

தண்ணீர் கொண்டு வருவதற்கென்று கீழே ஓடிய இந்திரா பத்து நிமிஷங்கள் ஆகியும் மேலே திரும்பி வராமற்போகவே, சந்துரு அண்ணாமலையைப் பார்த்து, "ஏன் ஐயா நிற்கிறே! நீயும் போகிறதுதானே?" என்று அதட்டினான்.

சந்துருவின் கோபத்தைக் கண்டு, நாராயணனும், மதுரநாயகமும் கூடத் திடுக்கிட்டார்கள். அவன் குரலில் இருந்த கண்டிப்பு எல்லாரையும் குற்றம் சாட்டுவதே போல் இருந்தபடியால், 'தாங்கள் சென்றிருக்க வேண்டியவர்கள்



29/05/2011 13

கடமையொன்று தவறி விட்டோம்' என்று உணர்ந்த கொண்டவர்கள்போல் காணப்பட்டார்கள்.

"ஏன்! இந்திராவுக்கு ஏதேனும் ஆபத்து..." என்று ஆரம்பித்தான் நாராயணன்.

அண்ணாமலை அவசரமாகக் கீழே சென்று கொண்டிருந்தான். சந்துரு அவனைப் பார்த்தபடியே, "நாம் எல்லோருமே பின் புத்திக்காரர்கள் என்பதைப் பின்னால் தான் தெரிந்து கொள்ளுகிறோம்... இப்போ இந்த அண்ணாமலையை அனுப்பினதுகூட அனாவசியம் என்று நினைக்கிறேன்" என்றான்.

"என்ன ஸார், அப்படிச் சொல்கிறீர்கள்?" என்று மதுரநாயகமும் நாராயணனும் ஏக காலத்தில் கேட்டார்கள்.

"மிஸ் இந்திராவுக்கு ஏதேனும் அபாயம் நேரிடுகிறது என்று இருந்தால், இதற்குள் அது நடந்தாகியிருக்க வேண்டும். அண்ணாமலை மட்டும் இல்லை, நாம் அத்தனை பேரும் இனிமேல் போய்க்கூடப் பிரயோசனம் இல்லை. ஆரம்பத்திலேயே அவளைப் போக அனுமதித்தது பிசகு. நாம் எல்லோருமே குற்றவாளிகள்தான்!" என்று சந்துரு நிதானமாகப் பதில் சொன்னான்.

அவர்கள் இருவரும் சந்துருவைக் கடுமையாக, வெட்டுகிற மாதிரி பார்த்தார்கள். ஒரு விதத்தில் அவர்களுக்கு ஆத்திரம்கூட வந்தது.

சந்துரு அதைக் கவனித்த மாதிரியே காட்டிக் கொள்ள வில்லை; குனிந்து மயக்கமுற்றுக் கிடக்கும் கணேசனைப் பார்த்தான். "நீங்கள் எனக்குக் கொஞ்சம் உதவி செய்தா இவரைச் செளகரியமாக ஒரு மெத்தையில் கொண்டு படுக்க வைத்து, உயிர் பிழைக்க முயற்சி எடுக்கலாம் என்று நினைக் கிறேன். அதற்குள் அண்ணாமலை திரும்பி விடுவான். இந்திராவும் வந்து விடலாம். இந்த அறை வேண்டாம் இவருக்கு. நான் இருந்த அறையில் தாற்காலிகமாக இருக்கட்டும்..." என்றான்.



இரண்டு நிமிஷங்களுக்குப் பிறகு, அசைவற்றுக் கிடந்த கணேசனை அவர்கள் மூவருமாகச் சேர்ந்து சந்துருவின் அறைக்குக் கொண்டு போனார்கள். அப்போதுதான் அண்ணாமலை ஒரு சொம்பில் ஜலத்தை எடுத்துக்கொண்டு விரைந்து வந்தான். அவன் முகம் வெளிறிக் கிடந்தது. ஏதோ பயங்கரமான செய்தியை வெளியிடத் தயாராக இருக்கிறான் என்று தோன்றியது.

"ஐயா! ஐயா!... சின்ன எஜமானி அம்மாளை எங்கும் தேடிப் பார்த்துவிட்டேன். காணோம்... எங்கே போயிருக்கிறாங்க என்று தெரியவில்லை!" என்றான்.

மதுரநாயகமும் நாராயணனும் சந்துருவை நோக்கினார்கள். அவன் அண்ணாமலையை ஏறிட்டுப் பார்த்து, "அத்தனை நிச்சயமாக 'காணோம்' என்று சொல்லி விட்டாயே?... நன்றாகத் தேடிப் பார்த்து விட்டாயா?" என்று கேட்டான்.

"தேடி விட்டேனுங்க... எனக்கு மனசிலே ஏதோ ஒரு சஞ்சலம் தோணுதுங்க—அவங்க இந்த வீட்டிலே இல்லை என்று நான் நம்பறேனுங்க..." என்று குழறினான்.

"அடே அப்பா! இந்த வீட்டில் துப்பறிபவர்கள் தொகை அல்லவா அதிகமாகிக் கொண்டு வருகிறது! அண்ணாமலை, உனக்கு ஏன் இந்தப் பயம்? உன் மனதில் இருக்கிறதை ஒளிக்காமல் சொல்லு!" என்று கேட்டான் சந்துரு, அவனைக் கேலியாகப் பார்த்து.

அண்ணாமலை மறுபடி தயங்கினான். பிறகு, "எனக்கு தோணுதுங்க!" என்றான்.

"உன் பேச்சை நான் நம்பவே மாட்டேன், அண்ணா மலை. போலீஸ்காரரிடம் உண்மையை ஒப்புக்கொண்டு விட வேண்டும் என்று உனக்குத் தெரிய வேண்டாமா? இந்திராவை யாரேனும் தூக்கிக் கொண்டு போயிருந்தாலும் அவள் கூச்சல் போட்டுடுவாள்; நம் காதுக்கு எட்டியிருக்கும். அவளுக்கு யாரிடமும் பயம் கிடையாது. பயம் இருந்தால் என்னை இந்த வீட்டுக்கு அழைத்திருக்க

29/05/2011

மாட்டான். அண்ணாமலை, உண்மையைச் சொல்! உனக்கு ஏன் இந்தச் சந்தேகம்?''

அண்ணாமலை மறுபடித் தயங்கினான்.

சந்துரு தன் கையிலிருந்த ஜலத்தைக் கணேசன் முகத்தில் தெளித்தபடி, ''இவரை மயக்கத்திலிருந்து தெளிவிக்க, நாம் குளிர்ந்த ஜலத்தை உபயோகிக்கிறோம் மிஸ்டர் மதுரநாயகம்! இது சாதாரண அனுபவம். அதே போல் நினைவுடன் இருப்பவரை மயக்க நிலைக்குக் கொண்டு வரவும் நமக்கு வழி தெரியும்! குரல்வளையைப் பிடித்து அமுக்கி, மண்டையில் தடியால் தட்டி, நன்றாக இருப்பவனைக் கீழே வீழ்த்தி, கிழித்த நார் மாதிரி கிடத்தி விடலாம். இரண்டும் நாம் கற்றுக் கொண்டிருக்கிறோம்'' என்றான்.

மதுரநாயகம் பதில் சொல்லவில்லை. தலை குனிந்து கீழே நோக்கிப் பார்த்தார். நாராயணன் பரபரப்புடன், ''இந்திராவை இப்படி யாரேனும் செய்திருப்பார்கள் என்கிறீர்களா?'' என்று துடிதுடித்துப் போனான்.

''நம் நாட்டில் பெண் பிள்ளைகளை இப்படித் தூக்குவது என்பது ஏற்படவில்லை; மேல் நாட்டுக் கதைகளில்தான் அதைப் படிக்கிறோம். இங்கே உயர்ந்தால், மயக்க மருந்து கொடுத்திருப்பார்கள்... என்ன அண்ணாமலை! நம்ம நாராயணன் டாக்டருக்குப் படித்திருக்கிறான் என்கிறார். இருந்தும், உன்னிடமிருந்து வீசும் 'குளோரோபாரம்' மணத்தை அவர் இன்னும் தெரிந்து கொள்ளவில்லையே! நீ கீழே கிடந்து பொறுக்கிய கைக்குட்டையைக் கொடுத்து விடு, அவர் ஆராய்ச்சி செய்யட்டும். பிறகு இங்கே கணேசனைச் சோதனை செய்து, அவர் எழுவதற்கு எத்தனை நாள் பிடிக்கும் என்று பார்க்கலாம்!'' என்றான்.

திலகவதி இரு கைகளாலும் வாயைப் பொத்திக் கொண்டாள்; ''ஐய்யோ! இந்திராவுக்கு மயக்க மருந்து கொடுத்துக் கொண்டு போய் விட்டார்கள்? இங்கே யாரும்



கேட்பார் இல்லையா?'' என்று கதறினாள். சந்துரு சமாதானப்படுத்தினான்.

''ஒன்றும் பயப்படாதீர்கள்!... நான் இங்கே இருந்து கவனிக்கிற வரையில் யாருக்கும் அபாயம் வந்துவிடப் போகிறதில்லை. அப்படி எத்தனையோ சந்தர்ப்பங்கள் ஏற்பட்டு விட்டன. நான் இல்லையென்றால் மிஸ்டர் மதுரநாயகத்தின் மீது அந்தக் கத்தி பாய்ந்திருக்கலாம். இதோ மிஸ்டர் கணேசனுக்குப் பிராணாபாயம் ஏற்பட்டிருக்கலாம். 'செங்கல்வராய பிள்ளை காணாமல் போய் விட்டாரே' என்று நீங்கள் கேட்கலாம். என் உதவியை நாடாதது மட்டும் அவர் சென்றதற்குக் காரணம் இல்லை; அவருக்கே இப்போது வெளியேற வேண்டிய காரணங்கள் இருந்திருக்கின்றன. மயக்க மருந்தின் உதவி இல்லாமல் நடந்திருக்கிறார் என்று நான் நினைக்கிறேன். (நாராயணனைப் பார்த்தபடி) நடந்து விட்ட விஷயங்களைப்பற்றிப் பேசிப் பிரயோசனம் இல்லை. அடுத்தபடி என் வேலை மிஸ் இந்திராவைத் திரும்பக் கொண்டு வந்து இந்த வீட்டில் சேர்க்க வேண்டியதுதான்!'' என்றான்.

ஒருவரும் பதில் சொல்லவில்லை. கல்லாகச் சமைந்து விட்டவர் போல் இருந்தார்கள். இதற்குள்ளாக, சந்துரு கணேசனுடைய முகத்தில் சொம்பு ஜலத்தையும் தெளித்து விட்டான். இருந்தும் பலன் எதுவும் காண முடியவில்லை. மெல்லிய இழையாக மூச்சு வந்து கொண்டிருந்ததே ஒழிய, அவன் கண்களைத் திறந்து பார்க்கவே இல்லை.

திலகவதியின் முகத்திலிருந்த ஆச்சரியக் குறி மேலும் தெளிவாகியது. ''எல்லாம் பதில் சொல்லி விட்டீர்கள்! இனி மேலே இந்தக் குடும்பம் ஆகிற கதி என்ன? அதைச் சொல்லுங்கள்!'' என்று சந்துருவைக் கேட்டாள்.

''அதைப் பற்றித்தான் நான் க[illegible]டிருக்கிறேன்... மிஸ்டர் மதுரநாயகம்! நீங்கள் [illegible] டாக்டரைப் போனில் அழைத்துப் பேச முடியுமா?'' என்று கேட்டான் சந்துரு.

29/05/2011

மதுரநாயகம் பேசாமல் நகர்ந்தார்.

''அண்ணாமலை! இன்னொரு சொம்பு ஜலம்கொண்டு வா! சீக்கிரம் வரட்டும்!'' என்று அவன் உத்தரவு கொடுத்ததும், அண்ணாமலை சிறிது தயங்கிவிட்டு, சொம்புடன் கீழே ஓடினான்.

சந்துரு திலகவதியைப் பார்த்துப் புன்முறுவல் செய்தான். ''நீங்கள் சொன்னதெல்லாம் என் மனத்தில் நன்றாகப் பதிந்து விட்டன. சற்று நேரத்தில் நாம் ஹாலில் போய் உட்கார்ந்து மனம் விட்டுப் பேசலாம். இனிமேல் நான் கண நேரமும் அசிரத்தையாக இருக்க முடியாது. முதலில் மதுரநாயகத்தை இங்கிருந்து அனுப்பப் போகிறேன். அவர் இனி இங்கு தங்கியிருக்கத் தேவை இல்லை; தங்குவது உசிதமும் இல்லை. உங்களுக்கு உதவியாகவும் துணையாகவும் நான் ஒரு பெண்மணியை அனுப்பப் போகிறேன். நான் அனுப்பினவள் அவள் என்பது வெளியில் தெரிய வேண்டாம்; ரகசியமாக இருக்கட்டும் அது; உங்கள் உறவினராக இருக்கட்டும் அந்தப் பெண்மணி. இந்த ஏற்பாட்டை அந்தரங்கமாகச் சொல்ல வேண்டும் என்றே இப்போது இரண்டு பேரை வெளியே அனுப்பினேன்...பதில் பேசாதீர்கள்! அதோ வந்து விட்டார் மதுரநாயகம்!...'' என்று எச்சரித்தான் சந்துரு.

மதுரநாயகம் வரும்போதே உதட்டைப் பிதுக்கிக் கொண்டும், கையை விரித்துக் கொண்டும் வந்தார். ''டெலிபோன் வேலை செய்யவில்லை. யாரோ கம்பியை நறுக்கியிருக்கிற மாதிரி தோன்றுகிறது! என்ன செய்யலாம்?'' என்று சந்துருவைப் பார்த்துக் கேட்டார்.

சந்துரு தலையை ஆட்டினான். கணேசனைக் கவனிக்க நான் டாக்டரை அனுப்புகிறேன். அந்தப் பொறுப்பை என்னிடம் விட்டு விடுங்கள் மிஸ்டர் மதுரநாயகம்! இப்பொழுது பொழுது விடிந்து விட்டது; நான் திரும்ப வேண்டியவன்தான்... அதற்குமுன் சிறிது



நேரம் நாம் எல்லோரும் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளைக் கொஞ்சம் யோசனை செய்துகொண்டு விட்டோமானால், நன்றாக இருக்கும். நமக்குள் ஒரு ஒத்துழைப்பு இருக்கும். மிஸ் இந்திரா திரும்புவதற்கான வழிகளை நாம் எடுக்கவேண்டும். அதன் பின் நாம் தேவையானபோது சந்தித்துக் கொள்ளலாம்...''

மதுரநாயகம் உதடுகளை அதிருப்தியுடன் வளைத்துக் காட்டினார். ''நீங்கள் சொல்வதெல்லாம் சரிதான். மிஸ் இந்திரா காணாமல் போயிருக்கிறார் என்பதைவிடப் பெரிய விஷயம் வேறு இல்லை. எனினும் கணேசனை இந்த மாதிரி அபாயகரமான நிலையில் நாம் விட்டுவிட்டுக் கீழே போய்ப் பேசிக் கொண்டிருப்பது சரியாகுமா? அவருக்கு மறுபடி அபாயம் நேர்ந்தால் அதற்குப் பொறுப்பாளி நாமே அல்லவா? தவிர, அவர் மூர்ச்சை தெளிய வழி ஏதேனும் உடனே செய்ய வேண்டாமா?'' என்று மதுரநாயகம் கேட்டார்.

தலையை மெதுவாகச் சந்துரு தாழ்த்தினான்.

''நமக்கு அந்தப் பொறுப்பு நிச்சயம் உண்டு. எல்லாரையும்விட நான் அதை அதிகம் உணர்கிறேன். டாக்டரைத் தருவிக்க ஏற்பாடுகளைச் செய்ய வேண்டியது மிக அவசியம்தான்... அதற்காக மறுபடி அவருக்கு ஆபத்து காத்திருக்கிறதென்பதை ஒப்புக் கொள்ளவே மாட்டேன்!'' என்றான்.

''நேற்று இரவு ஒரு முறை இவர் கீழே விழுந்து கிடந்தார் அல்லவா? அப்போதே இவரை யாரோ தாக்கியிருக்கிறார்கள் என்று நான் சந்தேகித்தேன்; இரண்டாம் முறையாக இப்போது அதைவிடப் பலமாக அடிபட்டுக் கிடக்கிறார்... நாம் தனியே விட்டுச் சென்றால், மூன்றாம் முறையும் ஏன் நடக்காது?'' என்று கேட்டார் மதுரநாயகம்.

''தங்களுக்கு அத்தனை [illegible]ால் நீங்களே அருகில் இருந்து காவல் காப்பதைப் பற்றி எனக்கு

29/05/2011 1

ஆட்சேபம் இல்லை. ஆனால், இரவு வேளையில் ஒருவன் ஒளிந்து வந்து தாக்குவதற்கும், சூர்ய வெளிச்சத்தில் வந்து அதே காரியத்தை முயற்சிப்பதற்கும் வித்தியாசம் உண்டு. நீங்கள் தைரியமாக வாருங்கள், மதுரநாயகம்! மோட்டாரை அனுப்பி டாக்டரைத் தருவிப்போம். இடையில் மேற்கொண்டு நடவடிக்கைகளைப் பற்றிப் பேசி முடிவு செய்வோம்...'' என்று அழைத்தான்.

ஃ ஃ ஃ

பெரிய பங்களா அது. செங்கல்வராய பிள்ளை இருந்த காலத்தில் அவருடைய குரல் வீடெல்லாம் வியாபித்து நிரம்பியிருக்கும். அதைத் தொடர்ந்து அண்ணாமலையும் கணேசனும் ஒலிப்பார்கள். இந்திராவும் திலகவதியும் அந்த வீட்டின் நிழல்கள் போல் இருந்தார்கள். கணேசன் எங்கோ ஓரிடத்தில் உட்கார்ந்து, எதையோ தட்டிக்கொண்டும் கொட்டிக் கொண்டும் இருப்பான். வீட்டிற்கு வருவோரும் போவோரும் ஏராளம். சந்தடிக்குக் குறைவே இல்லை.

இப்போது அங்கே இரண்டு பேர் இல்லை; செங்கல்வராய பிள்ளை இல்லை; அவர் மகளும் இல்லை. அதனால், வீடே சோபை இழந்து, அழுத கோலமாக இருந்தது. அவர்களுக்கு என்ன ஆபத்தோ, எங்கே சிக்கி என்ன துன்பம் அனுபவிக்கிறார்களோ, அடுத்தபடி என்ன ஆபத்து நேருமோ என்றதொரு பயங்கரம் தலைக்கு மேல் ஆகாயத்தில் சஞ்சாரம் செய்து கொண்டிருந்தது. மிகுதியிருந்தவர்கள் ஒருவரை ஒருவர் சந்தேகத்துடன் பார்த்துக் கொண்டார்கள். பரஸ்பர அவநம்பிக்கையுடன் வீட்டில் ஓர் இரவுக்குள் நடந்தவற்றில் ஒவ்வொருவர் பங்கு என்னவாக இருக்குமோ என்று சம்சயம் கொண்டார்கள்.

தவசுப்பிள்ளை எல்லோருக்கும் காபி கொடுத்து விட்டுச் சென்றான். திலகவதி ஒரு நாற்காலியில் அயர்ந்து கொண்டாள். எதிரே, இரு நாற்காலிகளில் மதுரநாயகமும் நாராயணனும் உட்கார்ந்து கொண்டார்கள். அண்ணாமலை ஐந்தாவது நாற்காலியைக் கொண்டு



போட்டும், சந்துரு அதில் உட்கார மறுத்து விட்டான். அவனிடம் இதுவரை காணப்படாத ஒரு உறுதி தென்பட்டது. பின் கையைக் கட்டிக் கொண்டு, அவர்களைப் பார்த்துப் பேசத் தொடங்கினான்.

''நேற்று இரவு நான் இங்கே வந்தபோது, சில காரியங்கள் நடக்கும் என்று எதிர்பார்த்து வந்தேன். நான் எதிர்பார்த்தபடி நடந்திருக்கிறதா, அல்லது குன்றவாக நடந்திருக்கிறதா என்று இப்போது என்னால் சொல்ல முடியாது. என் வருகை வழக்கமாகச் சில்லரைச் சலசலத்துப் போகச் செய்யும். அதுவே நடந்திருக்கிறது.

''நான் கடுமையாகப் பேசுகிறேன் என்று என்மீது குறை கூறுகிறீர்கள். நான் ஒரு கேஸ் விஷயமாக வந்தேன்; உங்கள் எல்லாருடைய உதவியையும் பெறலாம் என்று நம்பிக் கொண்டு வந்தேன். எனக்குக் கிடைத்தது என்ன? ஒருவராவது என்னிடம் முழு உண்மையைச் சொல்லவில்லை. நாட்டு வைத்தியனிடம் கையைக் காட்டி, அவனாக என்னென்ன கோளாறு என்று கண்டுபிடித்துச் சொல்லட்டும் என்று காத்திருப்பது நம் ஊர் வழக்கம்தான்; நீங்கள் அதையும்விட மோசமாக என்னிடம் நடந்து கொண்டிருக்கிறீர்கள். நன்றாக உடைத்துப் பேசிவிடுகிறேன். தோல் பையே இல்லை என்றார் மதுரநாயகம்; காணாமல் போன பை அகப்பட்டு விட்டது என்றாள் ஸ்ரீமதி திலகவதி செங்கல்வராய பிள்ளை. 'பை காணாமல் போனது உண்மை; ஆனால், உன் தலையீடு தேவை இல்லை!' என்றார் என்னிடம். கணேசன் மூர்ச்சை போட்டுக் கீழே விழுந்துவிட்டு, பேசாமல் தப்பித்துக் கொண்டார். இதெல்லாம் போகட்டும், அதற்குப்பின் நடந்தவற்றைக் கேளுங்கள்.

''நடு இரவிலே திலகவதி தன் அறையைவிட்டு வெளியே வரவே இல்லை என்று சொன்னாள். இது உண்மையா?... திலகவதியாரே! உங்கள் [illegible] கொண்டு சொல்ல வேண் [illegible]

29/05/2011 13:

''மதுரநாயகம் அவர்களே! செங்கல்வராயபிள்ளையைக் காணோம் என்று நீங்கள் வந்து என்னிடம் சொன்னீர்களே. முதல் முதலில் நீங்கள் அதைக் கண்டுபிடிப்பானேன்? உங்களுக்குத் தெரிந்ததே அவ்வளவுதானா? எப்படி அவர் காணாமல் போனார் என்பது தெரியாதா உங்களுக்கு...? போகட்டும். தோட்டத்திற்கு வந்தீர்களே. அங்கே கண்டதையெல்லாம் சொல்லி விட்டீர்களா? நடந்ததையெல்லாம் ஒளிக்காமல் தெரியப்படுத்தினீர்களா? நீங்கள் பிள்ளை அவர்களின் உண்மையான நண்பன் என்றால், அவருக்குச் செய்திருக்க வேண்டிய உதவிகள் எல்லாம் செய்து விட்டீர்களா? நெஞ்சைத் தொட்டுப் பாருங்கள்!

''அண்ணாமலை! நீ மதுரநாயகத்தின் அறையில் ஒரு ஆளைப் பார்த்ததாகச் சொன்னாயே; உண்மையில் அவனை உனக்குத் தெரியாதா? இதற்கு முன் பார்த்ததே இல்லையா? எங்கே தவசுப்பிள்ளை? அவர் அரிச்சந்திரராக நடந்து கொண்டாரா!

''உங்களுக்குத் தெரிந்ததை எல்லாம் அவ்வப்போது எனக்குச் சொல்லியிருந்தால், உதவியாக இருக்காதா? போகட்டும்; நான் உங்கள் உதவி, தயவு எதையும் கேட்கப் போவதில்லை; எனக்கு அவை தேவையும் இல்லை; எனக்காகவே கண்டு பிடித்துக் கொள்ளத் தெரியும்.

''மிஸ்டர் மதுரநாயகம்! உங்களுக்கு இன்னமும் இரண்டொரு கடமைகள் உண்டு. உங்கள் நண்பர் காணாமல் போனபிறகு இந்த வீட்டில் தங்குவது நியாயம் இல்லை என்பதைப் பற்றி நான் இப்போது குறிப்பிடவில்லை. நீங்களாகவே ஒதுங்கிவிடுவீர்கள். ஆனால், நீங்கள் சென்னையை விட்டுப் பதினைந்து தினங்கள் போகக்கூடாது. அது என் வேண்டுகோள். இரண்டாவதாக, நான் விரும்புகிறபோது, நீங்கள் என்னை வந்து காண வேண்டும். அதிகார தோரணையில் நான் கேட்கவில்லை. யாரையும் சந்தேகிக்க எனக்கு உரிமை உண்டு. ஆனால், நான்



இப்போது அவ்வாறு செய்யப் போவதில்லை. உங்கள் விலாசம் எனக்குத் தெரியும்படி இருக்கட்டும்!'' சந்துரு சிறிது நிறுத்தி, ஒரு மூச்சு வாங்கிக்கொண்டு தொடர்ந்து சொன்னான்.

''ஸ்ரீமதி திலகவதி அவர்களே! உங்களுக்கு இங்கே யார் துணை என்ற கவலை இருக்கலாம். அதற்கு நீங்களே ஒரு ஏற்பாடு உடனே செய்து கொள்வது நலம் என்று நான் சொல்லுவேன். பெண் துணை ஒன்று இல்லாமல் இருக்கக் கூடாது; தவிர, உங்கள் குடும்ப விஷயத்தில் தலையிடுவதற்கு மன்னிக்க வேண்டும்! உங்கள் தகப்பனாருடன் எவ்விதமான பேச்சு வார்த்தையும் இந்தச் சந்தர்ப்பத்தில் நீங்கள் வைத்துக் கொள்ளக் கூடாது. இதை ஓர் எச்சரிக்கையாகக் கொண்டு, அவரிடமும் தெரியப்படுத்தி விட வேண்டும். இதில் தவறினீர்களோ, பெரிய ஆபத்துக்கள் நேரும். நான்கூட உங்களைக் காப்பாற்ற முடியாது.

''அண்ணாமலை! நீ நல்லவன்; ஆனால், நல்லது நடக்கும் என்று உண்மையை மறைத்திருக்கிறாய்! பேசாதே! எனக்கு எல்லாம் தெரியும்! தவசுப்பிள்ளையிடமும் சொல்! நான் இந்தத் தொழிலில் அதிகம் கற்றுக் கொண்டது, உண்மையை என்ன என்று கண்டுபிடிப்பதை விட, பொய் யார் சொல்லுகிறார்கள் என்பதுதான். ஆகையால், யார் என்னை ஏமாற்ற நினைத்தாலும் அவர்களே கடைசியில் ஏமாந்து போவார்கள்.

''என்ன அப்படித் திமிராகப் பேசுகிறேனே, எனக்கு என்ன தெரியும் என்று அத்தனை பேரும் நினைக்கிறீர்கள்—மிஸ்டர் நாராயணன் உட்பட நான் சொல்லுவது உண்மையே தவிர, வேறில்லை என்பதற்கு அத்தாட்சியாக நீங்கள் எல்லாரும் தயவுசெய்து மேலே மாடிககுச் சென்று பாருங்கள். மிஸ்டர் கணேசன் மூர்ச்சை நன்றாகத் தெளிந்து உட்கார்ந்து கொண்டிருப்பார். அவருக்கு எப்போதோ சுய நினைவு வந்துவிட்ட
தைரியமாக விட்டு விட்

29/05/2011 13:

அழைத்தேன். அநேக விஷயங்களை என்னிடம் சொல்லக் கூடாதென்பது அவர் விருப்பம். அதன்படி அவர் என் எதிரில் கண் திறக்கவில்லை. அது தேவையும் இல்லை. அவர் எண்ணத்தைத் தெரிந்து கொண்ட நான் டாக்டரையும் தருவிக்கவில்லை. அது அநாவசியம்!...அவர் நேற்றிரவு பூராவும் உறங்கவில்லை... இங்கே நடந்து கொண்டிருந்த காரியமும் அவருக்குத் தெரியும்; வந்தவர்கள் போனவர்கள் எல்லாம் அவர் அறிவார்.

''தவிர உங்கள் எல்லாருக்கும் அவரைப் பற்றிப் பொதுவாக ஒரு எச்சரிக்கை செய்துவிட்டுப் போகிறேன். எத்தனையோ மாதங்களாக, எந்த அறையில் யார் என்ன பேசிக் கொண்டாலும் அவர் காதுக்கு எட்டிவிடும்—எப்படி என்று கேட்கிறீர்களா! அவர் கம்பிகளுடன் விளையாடி, ரேடியோவைப் பற்றிப் படித்ததன் பலனே அது. கண்களால் காணாமல் ரேடியோ நாடகம் போல், இந்த வீட்டு நடப்புகளை இருந்த இடத்தில் இருந்தபடியே அவர் அறிந்திருக்கிறார். நாராயணனும் இந்திராவும் பேசியவை, செங்கல்வராய பிள்ளையும் திலகவதியும் பேசியவை, அண்ணாமலையும் தவசுப்பிள்ளையும் பேசியவை, ஏன் திலகவதியும் பஞ்சநதமும் பேசியவைகூட...''

திடீரென்று திலகவதி மயக்கமாக நாற்காலியில் சாய்ந்துவிட்டாள். சந்துரு உடனே பேச்சை நிறுத்திக் கொண்டு, பின் கையைக் கட்டியபடி சிறிது யோசனையில் ஆழ்ந்தான். அண்ணாமலைதான் ஓடி தவசுப்பிள்ளையிடமிருந்து ஒரு விசிறியைப் பிடுங்கிக் கொண்டு வந்தான்; தவசுப் பிள்ளையும் பின்தொடர்ந்து வந்து, அவள் பின்னால் அருகே நின்று கையைப் பிசைந்தான்.

மதுரநாயகம் நாராயணனைப் பார்த்தார். நாராயணன் மதுரநாயகத்தைப் பார்த்து விழித்தான். சந்துரு சற்றும் அலட்டிக்கொள்ளவில்லை. அலட்சியமாக ஒரு அடி முன் வைத்து, ''நான் வருகிறேன்! இனிமேல் இங்கிருப்பதில் லாபம் இல்லை. தேவையானால் நான் எங்கிருப்பேன்



என்று உங்களுக்குத் தெரியும்... வருகிறேன்!'' என்று சொல்லிவிட்டு, யார் பதிலுக்கும் காத்திராமல் பங்களாவிலிருந்து வெளியே வந்தான்.

ஃ ஃ ஃ

வெளியே வந்த சந்துரு, பதினைந்து நிமிஷம் வேகமாக நடந்து, விடியற்காலத்தில் முதன்முதலாக ஓடும் ஒரு பஸ்ஸைத் தாவிப் பிடித்து ஏறிக் கொண்டான். சிலுசிலுவென்று வாடைக் காற்று அடித்தது. வண்டியில் டிரைவரையும் கண்டக்டரையும் தவிர வேறு யாரும் இல்லை.

சந்துரு ஒரு மூலையில் உட்கார்ந்து கொண்டான். கண்டக்டர் அவனைச் சிறிது நேரம் விறைத்துப் பார்த்து விட்டு அருகில் வந்து ''டிக்கெட்!'' என்றான்.

''நான் இன்னம் எங்கே போகிறதென்று நிச்சயம் செய்யவில்லை... நல்ல காப்பி எங்கே கிடைக்கும். சொல்! அந்த இடத்திற்கே டிக்கெட் கொடு, வாங்கிக் கொள்கிறேன்!'' என்றான்.

கண்டக்டர் சிறிது நேரம் திகைத்தான். அவன் எத்தனையோ விதமான பிரயாணிகளுடன் பழகியிருக்கிறான். இடத்தைச் சொல்லி எங்கே இருக்கிறதென்று கேட்டவர்களை அவனுக்குப் பழக்கம் உண்டு; இடம் சொல்லத் தெரியாமல் திண்டாடினவர்களையும் அவன் அறிவான்; குறிப்பிட்ட இடத்தில் இறங்காமல் அடுத்த 'ஸ்டாப்'பில் அவன் இறக்கிவிட்டபின் மன்னிப்புக் கேட்கிற பேர்களும் எத்தனையோ பேர் இருந்திருக்கிறார்கள். 'நல்ல காபி கிடைக்கும் இடம்' என்று டிக்கெட் கேட்டவர்களை இதுவரை அவனுக்குத் தெரியாது.

''என்னங்க தமாஷ் செய்றீங்க?'' என்றான் உஷ்ணமாக.

''கோபித்துக் கொள்ளாதே, கந்தசாமி! நான் யோசியாமல் கேட்டுவிட் [illegible]

29/05/2011 13:

சாப்பிட உனக்குச் சந்தர்ப்பம் ஏது?... உன் பெயர் எனக்கு எப்படித் தெரியும் என்று மூளையைக் குழப்பிக் கொள்ளாதே! சில்லறை கொடுக்கவில்லை என்று புகார் சொல்லிக் கொண்டு ஒரு ஆசாமியுடன் போன வருஷம் நீ ஸ்டேஷனுக்கு வந்திருக்கிறாய்; ஞாபகம் இருக்கிறது. என்னுடைய கெட்ட குணம், ஒரு ஆசாமியை ஒரு முறை பார்த்தால் முகத்தையும் மறக்கிறதில்லை; பெயரையும் கூட மறக்கிறதில்லை...''

''ஸார்!... ஸார்!...''

''சும்மா இரு என்கிறேனே! அந்தப் 'பாஸஞ்சர்' பேச்சையும் நான் நம்பவில்லை; உன் பேச்சையும் நம்பவில்லை. சில்லறை விஷயம்...என்னை நீ 'ஸிடி கேப் பக்கம் இறக்கிவிடு. அங்கே காபி அருமையாக இருக்கும்; இது போன்ற விடியற்காலை வேளையில் இட்லியும் கொத்சும் வெகு சுகம்...என்றைக்காவது ஒருநாள் நீயும் ஒரு கை பார்த்து விடு!'' என்று சந்துரு சில்லறையைக் கொடுத்தான்.

கண்டக்டர் டிக்கெட்டைக் கொடுத்து விட்டுப் பேசாமல் இடத்தில் போய் உட்கார்ந்து கொண்டான். சந்துருவைப் பாராததுபோல், சட்டைப் பையிலிருந்து ஒரு டைரியை எடுத்துப் பிரித்தான்.

''கந்தசாமி!'' என்று அழைத்தான் சந்துரு. ''உன்னால் எனக்கு ஒரு உபகாரம் ஆகவேண்டுமே'' என்றான்.

கந்தசாமி சிறிது அரண்டு போயிருந்தான். சந்துருவின் குரலும் கண்களும் அவனை மிகவும் மிரட்டியிருந்தன. ''சொல்லுங்கள்!'' என்றான், 'டைரி'யைப் பையில் திரும்ப வைத்து.

''நான் மற்றொரு கெட்ட வழக்கமும் வைத்துக் கொண்டிருக்கிறேன். அதாவது, டிக்கெட் வாங்கின இடத்தில் இறங்குவதில்லை. சமய சந்தர்ப்பத்தைப் பார்த்துக் கொள்வது வழக்கம். அநேக சமயங்களில்



இரண்டு 'ஸ்டாப் முன்னால் இறங்கி விடுவேன்; சில சமயங்களில் தூங்கிப் போய், இரண்டு 'ஸ்டாப்' தாண்டியும் இறங்குவேன். நீ செய்ய வேண்டியது, நான் எங்கே இறங்கினாலும் அதைக் கவனிக்கக் கூடாது; யாராவது என்னைப் பற்றி விசாரித்தால் சொல்லவும் கூடாது...'' என்றான்.

''நமக்கு ஏன் அந்த வேலையெல்லாம்!... நம்ம 'ட்யூடி'யைச் செய்துக்கிட்டு நாம் போறோம்...'' என்றான் அவன்.

''அதுமட்டும் போதாது; நான் உன்னிடம் வந்து என்னைப் பற்றி யார் விசாரித்தார்கள் என்று கேட்டாலும் பதில் சொல்ல வேணும்...சரி, வேறு விஷயம் பேசுவோம்; உன் குழந்தைக்கு இப்போ மூன்று வயசாகிறதா? அதைச் சொல்!''

கண்டக்டர் திடுக்கிட்டான்; திருதிருவென்று அவனைச் சந்தேகத்துடன் பார்த்தான்.

''பயப்படாதே, கந்தசாமி! வெறும் ஊகம்! கேட்டால் சிரிப்பாய். சற்று முன் உன் சட்டைப் பையிலிருந்து எடுத்தாயே ஒரு 'டைரி' அதன் பின்னால் நீ, உன் பெண்ஜாதி, குழந்தை மூன்று பேரும் ஒரு படத்தில் இருக்கிறீர்களே! அதிலிருந்து கேட்டேன். நான் போலீஸ்காரன்; வேண்டாததை யெல்லாம் கவனிப்பேன்; நீ சும்மா உட்கார்ந்திரு!''

அதற்குப்பிறகு கண்டக்டர் சந்துரு இருந்த திசையைத் திரும்பித் திரும்பிப் பார்த்துக் கொண்டு, ஒரே ஞாபகமாகத் தான் இருந்தான். என்றாலும், சந்துரு எங்கே எப்போது இறங்கினான் என்பது அவனுக்குத் தெரியவில்லை. புதிய பிரயாணிகள் ஏறி, அவர்களுக்கு அவன் டிக்கெட் கொடுக்கும்போது, அவன் மெல்ல நழுவியிருக்க வேண்டும். 'பொல்லாத மனிதன்!' என்று நினைத்துக் கொண்டான்.

ஃ

அந்தச் சமயம் அந்தப் பொல்லாத மனிதனுக்கு ஒரு ஹோட்டலில் பலமாக உபசாரம் நடந்து கொண்டிருந்தது.

29/05/2011 13:

முதலாளியே அருகே நின்று கவனித்தார். காபியை மிகவும் ரசித்துச் சாப்பிட்ட பிறகு சந்துரு, ஒரு மூலையைத் தேடி மறைவாக உட்கார்ந்து, ஒரு காகிதம் பென்சிலை எடுத்து வைத்துக் கொண்டான்.

ஹோட்டல் முதலாளியை சமிக்ஞை செய்து அழைத்து, "நான் உம்ம லாப நஷ்டக் கணக்கைப் போட்டுப் பார்த்துத் தொல்லை கொடுக்கப் போகிறேன் என்று உளறி அடித்துக் கொண்டிருக்காதீர்! இது நம்ம சொந்த விஷயம். ஆகையால் அரை மணிக்கு இங்கே யாரும் தலை காட்டக்கூடாது. அதற்குப் பிறகு ஒரு கப் காபி கொடுத்து, இரண்டு பங்கு 'பில்' போட்டு என்னிடம் வாங்கிக் கொள்ளும். என் மாதிரி தினம் நூறு பேர் இங்கே வந்து இவ்வளவு நல்ல காப்பி சாப்பிட்டுவிட்டுப் போனால், உமக்கு எப்படிக் கட்டுபடியாகும், பார்க்கலாம்!" என்றான்.

பிறகு, தாமோதரனைச் சந்தித்தது முதல் நடந்த காரியங்களைப் பற்றிக் காகிதத்தில் சில குறிப்புகளைச் செய்து கொள்ளத் தொடங்கினான்.

ஃ ஃ ஃ

தாமோதரன் அவனாகவே போலீஸ் ஸ்டேஷனுக்கு வந்து ஒரு நூதனமான கேஸைக் கொடுக்கிறான். தானாகவே வலுவில் மாட்டிக் கொள்ளுவது போல் இருக்கிறது அது. சாதாரணமாக அப்படி யாரும் செய்வதில்லை. அதற்குக் காரணம் என்ன? தாமோதரனுக்கு யாரிடமோ பயம் ஏற்பட்டிருக்க வேண்டும்; போலீஸ் உதவியும் இருக்கட்டும் என்றே அவ்வாறு அவன் நடந்து கொண்டிருக்கிறான்.

ஆனால், அவன் முற்றும் உண்மை பேசவில்லை; தன்னிடமிருந்து பை திருட்டுப் போய்விட்டது என்றபோது அது அவன் வீட்டிலேயே இருந்திருக்கிறது! ஏன் அதை அவன் அப்படி அப்போது ஒளிக்க வேண்டும்? கேள்வி நெ. ஒன்று.



1. தாமோதரன் தொழில் செய்யும் இடம், அதைப் பற்றிய தகவல்கள் அவனுக்குத் துணை யாரேனும் இருக்கிறார்களா என்ற விவரங்கள் கவனிக்க வேண்டியவை.

2. ரயிலடியில் தாமோதரனிடம் பையைக் கொடுத்த ஆசாமி யார்? அவன் செங்கல்வராய பிள்ளைக்காக வேலை செய்தானா? அல்லது, வேறு யாருக்காகவேனும் வேலை செய்தானா? நாராயணன் அந்தப் பையை எடுத்து வர லிங்கிசெட்டித் தெரு வீட்டுக்குச் சென்றபோது, மேற்படி ஆசாமியும் சகா ஒருவனும், மூன்றாவது பேர்வழி ஒருவனை எதிர்பார்த்தார்களே; அவன் யார்?

3. ரயிலடியில் குள்ளமாக ஒருவனும் நெட்டையாக ஒருவனும் சுற்றியதாக தாமோதரன் சொல்கிறான். குள்ளமாக ஒருவன் தாமோதரனைத் தாக்கினதாகவும்; பையுடன் ஓடினதாகவும் நாராயணன் சொல்கிறான். இவனே ரயிலடி குள்ளாக இருந்தால், பையை அடித்துக் கொண்டு போவதில் வேறொரு ஏஜென்ஸி வேலை செய்கிறது என்பது ஊர்ஜிதமாகிறது. இவர்கள் பின் இருந்து நடத்தும் எஜமான் யார்?

4. திலகவதி எதையெல்லாமோ மறைத்துப் பேசுகிறாள். அவள் தகப்பன் ஒருவன் ரகசியமாக வந்து போகிறான்; அவன் ஒரு பழைய கைதி. திலகவதிக்கும் கணேசனுக்கும் இடையே பரஸ்பர சந்தேகம். திலகவதி காணாமல் போன பை கிடைத்து விட்டது என்று சொன்னாள்; அதன் மர்மம் என்ன? சந்துரு மேற்கொண்டு நடவடிக்கை எடுக்காமல் நிறுத்த வேண்டும் என்பதே அல்லவா?

5. பஞ்சநதம் நல்லவனாகவே இருக்கிறான் என்று வைத்துக் கொள்வோம்! அவன் தோழன் மாரிமுத்துவுக்காக ஏதேனும் செய்யும்படி நிர்ப்பந்தம் ஏற்பட்டிருக்குமா? 'பை' விஷயமாக அவன் சம்பந்தம் எத்தனை தூரம்? கவனிக்க வேண்டிய புள்ளிகள் இரண்டு பேரும்.



29/05/2011

6. கணேசன் ஒரு பெரிய புதிர். அவனுக்குத் தெரியாத விஷயம் இல்லை. ஆனால், அவன் யார் கட்சி? செங்கல்வராய பிள்ளையின் 'ரகசிய'ங்கள் எல்லாம் தெரிந்து அவரையும் அவன் மிரட்டலாம்; திலகவதியின் காரியங்களைத் தெரிந்து கொண்டு அவளுக்கும் தொந்தரவு கொடுக்கலாம். வெளியில் அவன் நடவடிக்கை எப்படி? யோக்யனா? அயோக்யனா? இரண்டு முறைகள் அடிபட்டு விழுந்ததாகத் தெரிந்தது. முதல் முறை எப்படியானாலும், இரண்டாம் முறை உண்மையாகத் தாக்கப்பட்டிருக்கிறான். இரண்டு முறையிலும் மூர்ச்சை தெளிந்தும் அவன் சந்துருவிடம் பேச விரும்பவில்லை. ஏன்?

7. மதுரநாயகம் என்பவன் யார்? உண்மையில் அவன் செங்கல்வராய பிள்ளையின் நண்பன்தானா? அல்லது காரண காரியங்களுடன் நண்பன்போல் பாசாங்கு செய்கிறானா? சந்துருவிடம் விரோத பாவத்துடன் இருப்பதன் காரணம் என்ன? விவரங்கள் தெரிய வேண்டும். திலகவதிக்கு இவன் முன்னால் பரிச்சயமானவனா? 'பையே இல்லை' என்றும் 'செங்கல்வராய பிள்ளைக்குச் சித்தப்பிரமை வருவது உண்டு' என்றும் இவன் சாதிப்பதன் மர்மம் என்ன?

8. மதுரநாயகத்துக்கும் சந்துருவுக்கும் இடையில் ஒரு கத்தி வந்து விழுந்திருக்கிறது. அது வந்த காரணம் என்ன? கணேசனுடன் சண்டை போட்டவனும் மதுரநாயகத்தைத் தாக்கியவனும் இருவரும் ஒருவன்தானா? இரு சந்தர்ப்பங்களிலும் அந்த ஆள் உடனே மறைந்திருக்கிறான். அப்படி அவன் தப்பித்துக் கொள்வதற்கு அவனுக்குக் கூட்டாளியாக ஒருவன் உண்டென்றால் அவன் அந்தப் பங்களாவில் இருந்திருக்க வேண்டும்; அல்லது, நல்ல அனுபவமுள்ளவனாக இருக்க வேண்டும். இரு சந்தர்ப்பங்களிலும் அவனுடைய நண்பனாக ஒருவன் இருந்தாக வேண்டும். அந்த உதவி ஆள் அண்ணாமலையா? தவசுப்பிள்ளையா? அல்லது, வேறு யாரேனுமா?



9. அண்ணாமலை ஒரு புதிய ஆசாமியைப் பார்த்ததாகச் சொல்கிறான்; தவசுப்பிள்ளையும் அதேபோல் ஒத்துப் பாடுகிறான். இரண்டு பேரும் பொய் சொல்கிறார்களா? அல்லது, உண்மையைச் சிறிது மறைத்து வெளியிடுகிறார்களா?

10. கன்னையன் எப்படி? அவன் பூர்வாசிரமம் என்ன?

11. செங்கல்வராய பிள்ளையும் இந்திராவும் காணாமல் போனார்கள் என்றால் அவர்களைக் கொண்டு போன பேர்வழி யார்? இந்தப் பல கட்சிகளில் எதைச் சேர்ந்தவன் அவன்?

(சந்துரு முகவாய்க்கட்டையைத் தடவி விட்டுக் கொண்டு தனது ஜிப்பாப் பையில் கையை விட்டு, இரு பொருள்களை வெளியே எடுத்தான். ஒன்று, கசங்கிப் போன காகிதம்; மற்றொன்று ஒரு கைக்குட்டை.)

12. செங்கல்வராய பிள்ளையை எச்சரித்து வந்து விழுந்த அந்தக் காகிதத்தை வீசியவன் யார்? (கைக்குட்டை அண்ணாமலையிடம் கேட்டு வாங்கினது) அதற்கு உடையவன்தான் மதுரநாயகத்தைத் தாக்கியவன்... இரு சிறு தடயங்கள்; ஆனால் வெகு தூரம் உதவி செய்யக்கூடியவை...

காகிதத்தை மடித்து பையிலடைத்துக் கொண்டு சமிக்ஞை செய்தான். அது வருமுன் சில ஆசாமிகளைப் பேட்டி காண்பதென்று தீர்மானமும் செய்துவிட்டான்.

காபியைக் குடித்ததும் வேறொரு யோசனை உதயமாயிற்று. அது அவனுடைய ஜாகையைப் பற்றி, ஒரு முழு இரவுக்குள் அங்கே என்ன நடந்திருக்கும் என்று யோசனை செய்தான்.

அவனுக்கு நள்ளிரவில் டெலிபோன் செய்தவன் ஒருவன் இருக்கிறான்; அவன் யாராக இருக்கலாம்? யாரோ ஒருவ[illegible] ஒனுக்கு எதிராகச் சந்துரு இப்[illegible] தொடங்கிவிட்டான்; அவனுடைய கையாளர்களில் ஒருவனை

29/05/2011

தன்னை விரைவில் வந்து சந்திக்கலாம்; அல்லது வந்தே இருக்கலாம்.

சந்துரு 'பில்' பணத்தைக் கொடுத்துவிட்டு ஹோட்டலிலிருந்து வெளியேறினான். பதினைந்து நிமிஷங்களுக்குப் பிறகு தனது வீட்டு வாசலில் இறங்கி, நேரே மாடிக்குப் போகாமல், கீழே போட்டிருந்த பெஞ்சியில் உட்கார்ந்து, சம்பாவை அழைத்தான்; அவளுடன் கூடவே பத்மாவும் வந்தாள்.

''ஒரு சந்தோஷ சமாசாரம்.. இன்றுகாலை இந்திராவை யாரோ கொண்டு போய்விட்டார்கள்! கண்டுபிடிக்க வேண்டிய வேலையை நான் ஏற்றுக் கொண்டிருக்கிறேன்... பத்மா! அழகாக இருப்பதன் சங்கடத்தைப் பார்த்துக் கொள்! சம்பா! இங்கே வா! நல்ல காபியாக இரண்டு 'கப்' கொண்டுவா!'' என்றான்.

''இரண்டு எதற்கு, மாமா?'' என்று கேட்டாள் சம்பா.

''மாடியில் ஒரு 'மாமா' வெகு நேரமாகக் காத்துக் கொண்டிருக்கிறார். அவருக்குக் காபி கொடுக்க வேண்டாமா?'' என்றான்.

''உங்கள் மாடிக் கதவு பூட்டியபடியே இருக்கிறது! எங்களுக்குத் தெரியாமல் உங்கள் அறைக்கு ஒருவர் போய் விடமுடியுமோ?'' என்று கேட்டாள் பத்மா.

''அந்த 'நண்ப'ருக்கு வாசற்படி வழியாக நுழைந்து வழக்கம் இல்லை... நீ காபியைக் கொடேன், சீக்கிரம்! நான் தான் அவருக்கு அதைக் கொடுக்க வேண்டும். நீங்கள் இங்கேயே இருந்து விடுங்கள். பெண்களைக் கண்டாலே அவருக்குப் பிடிக்கிறதில்லை!'' என்றான்.

மாடி அறையில் சந்துரு காபி டம்ளருடன் நுழைந்த போது, ஈஸிசேரில் சாய்ந்து அரைக் கண் மூடிக்கொண்டிருந்த ஓர் உருவம் திடுக்கிட்டு எழுந்தது. சந்துரு புன்முறுவல் பூத்தான்.



''அலட்டிக்கொள்ளாதீர்கள்! அப்படியே அசையாமல் இருந்து விடுவது நல்லது என்று நான் சொல்வேன்'' என்றான் சந்துரு.

ஈஸிசேரில் உட்கார்ந்தபடி நாயர் சந்துருவைப் பார்த்தான். அவனுக்கு ஏனோ பேச வாய் எழவில்லை

சந்துரு, ''இரவெல்லாம் கண் விழித்திருக்கிறீர்கள். நல்ல அசதி! முன்னாடி காபியைச் சாப்பிடுங்கள், பிறகு பேசலாம்! இங்கே உங்களைக் காண வேண்டும் என்று அவசரமாகத்தான் வந்தேன்; அப்படியும் நேரமாகி விட்டது'' என்று காபியை வைத்தான்.

நாயர் ஒரு முறை பெருமூச்சு விட்டான்; ''நான் வந்த காரியத்தைச் சொல்லி விடுகிறேன்!'' என்றான்.

''நானே சொல்கிறேன்... உங்களுக்கு ஏன் சிரமம்? என்னை எச்சரிக்கை செய்யத்தானே, வந்திருக்கிறீர்கள்? ஒன்று வைத்துக் கொள்ளுங்கள்; என்னை அடிக்கடி எச்சரிக்கை செய்ய வேண்டாம். முதல் தடவைக்குப் பிறகு நான் எதையுமே காதில் போட்டுக் கொள்வதில்லை!

''என் எஜமான் உத்தரவு அது!''

''அடுத்த உத்தரவையும் நடத்துங்கள்!'' என்றான் சந்துரு.

நாயர் ஒரு சிறு அசைவு செய்வதற்குள் சந்துரு வேங்கைபோல் அவன்மீது பாய்ந்து அவன் கையிலிருந்த கத்தியைப் பிடுங்கி விட்டான். ஆனால் முகத்தில் சிறிதும் கோபமில்லை.

''நான் செய்கிறேன் ஒரு எச்சரிக்கை! நினைத்தால் இப்போது உன்னை இங்கே குத்திப் போடலாம். அல்லது போலீசில் பிடித்துக் கொடுக்கலாம். என்னைத் தாக்க வந்த கத்தியே உன்னைக் கிழித்து விடும். நீ யார் என்று எனக்குத் தெரியாது; உன் எஜமான் எவன் என்று நான் மூளையைக் குழப்பிக் கொள்ள மாட்டேன். இரண்டு பேருக்கும் 24 மணி அவகாசம் கொடுக்கிறேன். அதற்குள் ஒழுங்காக நடந்து கொண்டால், இதுவரை செய்த பிசகு

களை மன்னிப்பேன். இப்போது ஓடு! ஓடிப்போய் உன் எஜமானிடம் சொல்லு!'' என்றான்.

நாயர் ஒரு கணத்தில் ஜன்னலை நோக்கித் தாவினான் அவனைப் பிடிக்க சந்துரு முயற்சி செய்யவில்லை. குரங்கு போல் இறங்கி, இரண்டு நிமிஷத்தில் மறைந்து விட்டான்.

கத்தியை மேஜைக்குள் எறிந்துவிட்டு, ''பத்மா இந்த 'மாமா'வுக்கும் காபி வேண்டாமாம்! ஆறிப்போகிற தற்குள் கீழே எடுத்துக் கொண்டு போ!'' என்று சந்துரு குரல் கொடுத்தான்.

## கணேசன் தரும் தகவல்கள்

போலீஸ் ஸ்டேஷனின் சிகப்புக் கட்டடத்தை வெளியி லிருந்து நோக்குபவர்களுக்கு அதனுள் சட்டமும் கண்டிப்பும் அதட்டலும் சாட்டையுமே இருப்பதாக ஒரு பிரமை உண்டாகக் கூடும். ஈரமற்ற பேச்சுக்களும், இதய மற்ற மனிதர்களும் அங்கே அதிகம் நடமாடுகிறார்கள் என்று நினைக்கலாம். எல்லாரையும் சந்தேகப் பார்வை யுடன் நோக்கி, யார் பேச்சையும் நம்பத் தயாராக இல்லாத அதிகாரிகளே அங்கே இருப்பதாக ஊகம் செய்து கொள்ளலாம்

ஆனால், இன்ஸ்பெக்டர் கோபாலனும், ஸி. ஐ. டி. சந்துருவும் நடத்திக் கொண்டிருந்த சம்பாஷணையைக் கவனித்தவர்கள் யாரும், இத்தகைய எண்ணங்களை அந்த க்ஷணமே உதறி விடுவார்கள் என்பதில் சந்தேகம் இல்லை.

ஸ்டேஷனுக்கு வந்ததுமே சந்துரு இன்ஸ்பெக்டரு டைய பிரத்தியேக அறைக்குச் சென்று அவருடன் ஒரு மணி அவகாசம் பேசினான். முதல் நாள் மாலையிலிருந்து



காலையில் வீடு திரும்பி நாயரைத் தனது அறையில் சந்தித்தது வரையில் எல்லா விவரங்களையும் சொல்லி நிறுத்தினான். கோபாலன் உல்லாசமாகக் கேட்டுக்கொண் டிருந்து விட்டு, ''உன் அபிப்பிராயம் ஏதேனும் வெளியிடு வாய் என்று எதிர்பார்த்தேன், ஒன்றையும் காணோமே!'' என்று கேட்டார்.

சந்துரு முகவாய்க்கட்டையைப் பலமாகத் தேய்த்துக் கொண்டான். ''இந்தச் சமயத்தில் எனக்குப் பலவித அபிப்பிராயங்கள் இருக்கின்றன. ஆகையால்தான் உங்களிடம் எதையும் குறிப்பாகச் சொல்ல முடியாமல் இருக்கிறது!'' என்றான்.

கோபாலன் சிரித்தார். ''விஷமக்காரன் ஆயிற்றே நீ!... நீ சந்தித்த இவர்களில் யாராவது ஏற்கெனவே பரிச்சய மானவர்களாகக் காண்கிறதா?'' என்று கேட்டார்.

''பஞ்சநதம் என்கிற பெயர் எனக்கு அரை குறையாக ஞாபகம் வருகிறது. அது ஞாபகம் வந்ததற்குக் காரணம் 'மூத்து' என்கிற பெயர்தான். அதைப் பஞ்சநதம் பேச்சில் நான் கண்டெடுத்தேன். இந்த 'மூத்து' என்கிற ஆள் அவன் சகாவுடன் இரண்டு வருஷம் தண்டனை அடைந் திருக்கிறான், சமீபத்தில்தான் வெளி வந்திருக்கிறான். கோர்ட் ரிக்கார்டுகளிலிருந்து பார்த்தால் புரிந்து விடும்... இந்த ஆளுடன் சேர்ந்து ஜெயிலுக்குப் போனவன் பஞ்ச நதமாக இருந்து விட்டால், மெள்ள அதைப் பிடித்துக் கொண்டு முன்னேறிப் பார்க்கலாம்...''

கோபாலன் மணியை அடித்து விட்டார், எதிரே வந்து நின்ற கான்ஸ்டபிளிடம் ஒரு 'பைல்' நம்பரைக் குறிப் பிட்டு அதைச் சீக்கிரமாகக்கொண்டு வரும்படி ஆக்ஞை யிட்டார்.

''அப்புறம்?''

''முன் ஜாக்கிரதையாக நான் எடுத்துக் கொண்ட இரண்டொரு முறைக[illegible] சொல்லி [illegible] விடுகிறேன். திலகவதி [illegible]

கிறான். இதை ஒரு சந்தர்ப்பமாகப் பயன்படுத்திக் கொண்டு பஞ்சநதம் அங்கே அடிக்கடி போகலாம்; அல்லது வேறு எவரேனும் அந்த வீட்டில் பிரவேசிக்கலாம். திலகவதியும் என்னிடம் உண்மையைச் சொல்லவில்லை. இரு வகையிலும் பாதுகாப்பாக இருக்கட்டும் என்று மிஸ் சரளாவை அங்கே அனுப்பி வைப்பதென்று தீர்மானம் செய்து அவளுக்கும் ஆள் அனுப்பி விட்டேன்.''

''உனக்குச் சரளா என்றாலே பூனைக்குட்டி விச்வாசம்!''

''போகிற இடங்களில் பூனை மாதிரி அந்த அம்மாளும் நடந்து கொள்கிறாளே! அதையும் நாம் ஒப்புக்கொண்டு தானே ஆகவேண்டும்! இரண்டாவதாக, மதுரநாயகத்திற்கு ஒரு எச்சரிக்கை மட்டும் செய்திருக்கிறேன். அவருக்கு காவல் போடுகிறதற்குப் பதிலாக அவருடைய கையாள்களுக்குக் காவல் ஏற்பாடு செய்யலாம் என்று நினைக்கிறேன். என் மதிப்பில், அவர் ஒரு பெரிய 'கை', எத்தனை ஜாக்கிரதையாகக் கவனித்தாலும் ஒதுங்கி, நழுவி விடுவார்.''

''தாமோதரனைப் பார்க்க போக வேண்டாமா?... அவன் தானே நம்மிடம் 'கேஸ்' கொண்டு வந்தது?''

''இத்தனையெல்லாம் நடந்த பிறகு, தாமோதரன் நமக்கு அகப்படுவானா என்பது சந்தேகம்தான். நம்மிடம் வந்து பேசும்படி அவனை விட்டு வைத்திருக்கமாட்டார்கள் என்று நினைக்கிறேன். ஆனால், அவனுடைய வீட்டையும் 'ஷாப்'பையும் கூடக் கொண்டு போக முடியாதல்லவா? அங்கே அகப்பட்டதை ஆராயலாம். தாமோதரன்கூட ஒரு பெரிய புள்ளி என்பது என் ஊகம்.''

''பெரிய குழப்பமாக இருக்கிறதே! இந்தக் கோளாறுகளுக்கிடையில், செங்கல்வராய பிள்ளையும் இந்திராவும் காணாமல் போயிருக்கிறார்கள் என்று சொல்கிறாய்!...''

''அதுதான் எனக்குக் கொஞ்சம் மனச் சாந்தி அளிக்கிற விஷயம். அவர்கள் இருந்தால், இன்னும் எதிரிகளின் ஓட்டபாட்டம் அதிகமாக இருக்கும். குளறுபடிகள் சமாளிக்க



முடியாமல் போகும். என்னைக் கேட்டால், அவர்கள் காணாமல் போயிருப்பதைக் கொண்டுதான் கேஸை லகுவாக முடிக்கலாம்...''

''ஏது, எல்லாவற்றையும் நீ ஒருவனே நின்று நடத்தி விடுவாய் போலிருக்கிறதே, சந்துரு!''

''இன்ஸ்பெக்டர்! நான் உங்களிடம் செய்து கொள்கிற விண்ணப்பம் ஒன்று உண்டு.''

''என்ன அது?''

''எனக்கு ஒரு வாரம் லீவ் தேவை. இந்தக் கேஸ் பற்றி இதுவரை யாரும் போலீஸில் புகார் செய்யவில்லை; ஆகையால் இந்த இலாகா சம்பந்தப்பட்டவரை ஒன்றுமே நடவடிக்கை எடுக்கவில்லை. என்னால் ஒரு வாரத்திற்குள் இந்தக் குளறுபடிகளை ஒழுங்கு செய்ய முடியாவிட்டால், நானே நேரில் வந்து புகார் செய்து கொள்கிறேன்...''

கோபாலன் மேஜைமீது உற்சாகமாக கையைத் தட்டினார். ''இந்திரா அத்தனை பெரிய அழகியா?'' என்றார்.

''இந்தக் கேஸ் அத்தனை ருசிகரமானதாக இருக்கிறது?''

''எனக்குக் கவலை ஒன்றிருக்கிறதே, சந்துரு! இதில் பல ஆட்கள் நடமாடுகிறார்கள், அத்தனை பேரும் உயிருக்கு அஞ்சாத ஆட்கள் என்றும் தெரிகிறது; உன் வீட்டிற்கு வேறு வரத் தொடங்கியிருக்கிறார்கள். ஏதாவது ஆபத்து வந்து விடாமல் இருக்கவேண்டுமே உனக்கு!''

சந்துரு சிரித்தான். ''எனக்கு உயிர் போய் விட்டால், அதோடு ஜாதகத்தில் இருக்கிற நம்பிக்கையைக் கைவிட்டு விடுகிறேன்... முக்கியமாக ஒன்று சொல்ல மறந்து விட்டேனே! ஓடி ஒளியக் கூடிய ஆட்களில் ஒருத்தன், தேனாம்பேட்டை பங்களாவில் தவசுப்பிள்ளையாக இருப்பவன்... அவன் ரயிலேறினால் மட்டும் நிறுத்தும்படி ஒரு ஆள் போட வேண்டும். [illegible]ம் செய்யத் தேவையில்லை!''

29/05/2011

கோபாலன் மறுபடி மணியை ஓங்கித் தட்டினார். "ஒரு 'பைலை'க் கேட்டால் எத்தனை நேரம்!" என்று கூச்சல் போட்டார்.

இரண்டு நிமிஷங்களுக்குள் கான்ஸ்டபிள் ஒரு பெரிய 'பைலு'டன் ஓடி வந்து மேஜைமீது அதை வைத்தான். சந்துரு அதை அவசர அவசரமாகப் புரட்டி, தேவையான இடத்தைத் திருப்பிக்கொண்டு விட்டான்; பிறகு கோபால னுக்கு அதைப் படித்தான்.

"முத்து" மாரிமுத்து என்ற முழுப் பெயர். நண்பர்களுக்கு முத்தையன். வயது நாற்பத்தெட்டு. கறுப்பு நிறம். கண்கள் ரத்தச் சிவப்பு. இடது கண்ணில் ஒரு ஒச்சம். முகவாய்க்கட்டையில் சந்திர வட்டம் போன்ற ஒரு ஆழமான வடு; ஆறடி உயரம்; 180 பவுண்டு எடை; மூக்கு சப்பை; மேற்புறம் உடைந்து நசுங்கிக் காணப்படுகிறது. முன் பல் இரண்டில் தங்கக் கட்டடம்; தலையில் குச்சி குச்சியாக மயிர்.

ஆரம்ப காலத்தில் குஸ்தி பயில்வான். முப்பது வயதில் கடைத்தெருவில் ஒரு சச்சரவில் ஓர் ஆளைக் குத்திக் குறை உயிராக்கியதற்கு ஆறு மாதத் தண்டனை. முப்பத்தி ஆறாம் வயது முதல் நாற்பத்தொன்றாம் வயதுவரை மலாயாவில் கூலி நாற்பத்தொன்றாம் வயதிலிருந்து சென்னையில்! குறிப்பிட்ட வேலை ஏதும் இல்லை. நாற்பத்தாறில் 'சந்திர விலாஸ்' பங்களாவில் புகுந்து கத்தியைக் காட்டி மிரட்டி, ஆறாயிரம் ரூபாய் பெறுமானமுள்ள பொருள்களைக் கொள்ளை அடித்த காரணத்துக்காகச் சிறைவாசம் இரண்டு வருஷம்... தேதிக்கு விடுதலை பெற்றிருக்கிறான். இவனுடைய கூட்டாளி பஞ்சநதம்; இதே தண்டனை; சேர்ந்தாப் போலவே விடுதலை."

"எனக்குக்கூட இந்த ஆளை ஞாபகம் இருக்கிறது... இவன் கேஸ் நடக்கிறபோது நான் பார்த்திருக்கிறேன். உம்ம்ம்...'பஞ்சநத'த்தைப் பற்றிக் குறிப்பு இருக்கிறதா, பார்!" என்றார் இன்ஸ்பெக்டர்.



"அதிகமாக இல்லை என்று எனக்கு ஞாபகம்... இதோ பாருங்கள்; படிக்கிறேன்!"

'பஞ்சநதம் வயது ஐம்பத்திரண்டு. உயரம் ஐந்தடி நாலு அங்குலம். பருமனும் இல்லை. ஒல்லியும் இல்லை. நூற்று நாற்பது பவுண்டு கனம். அவலட்சணமான முகம். இடது பக்கத்து பல் ஒன்று மேல் வரிசையில் உடைந்திருக்கும். கறுப்பும் வெளுப்புமாக மீசை. முன் தலையில் வழுக்கை, வெளிப்புறம் நீட்டிய காதுகள்."

'சென்னையில் சிறு வியாபாரம்; நாற்பதாவது வயதில் சிங்கப்பூரில் கடை வியாபாரத்தில் நஷ்டம். நாற்பது வயதிலிருந்து நாற்பத்தாறு வயது வரை விவரம் இடையாது. மனைவி இல்லை. ஒரு மகள் உண்டு. நாற்பத்து ஆறாவது வயதில் சிறைத் தண்டனை;—'போர்ஜரி' மோசடி செய்ய முயன்றதாக நாற்பத்தி எட்டாம் வயதில் விடுதலை. ஐம்பதில் மீண்டும் கூட்டாளி 'முத்து'வுடன் தண்டனை, ஐம்பத்திரண்டில் விடுதலை...கத்தி பிடிக்கிற ஆள் இல்லை; பயந்த சுபாவம்.

"ஏது! ஒரு 'சர்ட்டிபிகேட்'டுடன் முடிகிறதே. அந்தப் பெண்தான் இந்தத் திலகவதி என்று தெரிகிறது. இல்லையா? அதெப்படி செங்கல்வராயப்பிள்ளை இந்தப் பெண் பிள்ளையைக் கல்யாணம் செய்து கொண்டார்?"

"அதை ஆராயப் போகிறபோது இந்தக் கேஸின் சிடுக்குகள் கொஞ்சம் கலையவும் ஆரம்பிக்கும் என்று நினைக்கிறேன். யாரை விசாரணை செய்தாலும் பொய் சொல்கிறார்கள். பலாச் சுளையை எடுக்கக் கையில் நல்லெண்ணெயைத் தடவிக் கொள்ள வேண்டும்; பிசின் ஒட்டாமல் பிரித்து விடலாம். இங்கே பொய் ஒட்டாமல் தகவல்களை வரவழைக்கச் சாதுர்யம் வேண்டியிருக்கும்; சாமர்த்தியம் வேண்டியிருக்கும். பார்க்கலாம்."

கான்ஸ்டபிள் மறுபடி வந்து ஒரு 'ஸல்யூட்' அடித்து விட்டு "மிஸ் சரளா வந்திருக்காங்க" என்று அறிவித்தான்.

29/05/2011

மிஸ் சரளாவுக்கு இருபத்தெட்டு வயது இருக்கும். ஒரு மனித உடலுக்கு எத்தனை சதை அத்தியாவசியமோ அவ்வளவேதான் அவளுக்கு இருந்தது. பார்த்தவுடனே "ஓ! இவர் மிகவும் படித்தவர்" என்று தோன்றும்படி முகத்தில் ஒரு குறுகுறுப்பு காணப்பட்டது. கூர்மையான மூக்கு! அழகிய வாய். கண்களில் ஒளி, எதிரில் நிற்பவரை ஊடுருவிப் பாயும் சக்தி வாய்ந்ததாக இருந்தது. அரையில் ஒரு சாதாரண நூல் புடவையே உடுத்தியிருந்தாள். எனினும், அதற்கு ஒரு சோபை இருந்தது. நகைகள் அதிகம் தேவை இல்லை என்று மனப்பான்மை கொண்டவளாகக் காட்டின, அவள் அணிந்திருந்த ஆபரணங்கள்.

கோபாலனையும் சந்துருவையும் பார்த்துப் புன்னகை செய்தாள் சரளா. "இன்றைக்கு எனக்கு அழைப்பு வரும் என்று நான் எதிர்பார்த்தேன். அதன்படியே வந்தது!" என்றாள் சுருக்கமாக.

"அதெப்படி உங்களுக்குத் தெரிந்தது? எனக்கே இன்று காலையில்தானே அந்த எண்ணமே தோன்றியது?" என்று கேட்டான் சந்துரு.

"நாங்கள் ஸ்திரீகள். எங்கள் பொழுது முழுவதையும் 'நாளைக்கு என்ன நடக்கும்?' என்று யோசனையிலேயே செலவு செய்பவர்கள். முன் கோரிக்கையாகத் தயாராக இருப்பவர்கள். நேற்று மாலை ஸ்ரீமான் சந்துரு அவர்கள் ஒரு பெண்ணுடன் காரில் பிரயாணம் செய்கிறார் என்று எனக்குத் தெரிந்தது, உடனே நான் யோசனை செய்தேன். சந்துரு மிகவும் புத்திசாலி. சாதாரண அழகுக்கெல்லாம் மயங்குகிறவர் இல்லை. அவர் ஒரு பெண்ணுடன் போகிறார் என்றால்; அது பெரிய கேஸாக இருக்கவேண்டும். அவரைக் கவர்ந்த பல அம்சங்கள் இந்தக் கேஸில் இருக்க வேண்டும். 'ஒரு பெண் சம்பந்தப்பட்ட விஷயத்தில் மற்றொரு பெண்ணின் உதவி இல்லாமல் இவர் என்ன செய்து விடுகிறார், பார்க்கலாம்' என்று காத்துக்கொண்டு இருந்தேன். எதிர்பார்த்தபடியே அழைப்பு வந்து விட்டது!"



"ஏது! சந்துருவுக்கு மேல் துப்பறியத் தொடங்கி விட்டார், மிஸ் சரளா!" என்றார் கோபாலன் உற்சாகமாக.

"இல்லை. ஒருகாலும் சாமர்த்தியத்தில் மிஸ்டர் சந்துருவின் அருகில்கூட நான் வரமுடியாது. சங்கீதத்தில் கேள்வி ஞானம் என்பார்கள். அதில் எப்போதாவது குருவை சிஷ்யன் மிஞ்சினான் என்று கேட்டிருக்கிறீர்களா? அப்படித்தான் நானும். மிஸ்டர் சந்துரு, என்னைத் தருவித்த காரியம் என்னவென்று சொல்லலாமா?"

"பேஷாகச் சொல்கிறேன். மிஸ் சரளா! ஒரு சிக்கலான கேஸில் உங்களுடைய உதவி தேவையாக இருக்கிறது."

"சந்துரு அவர்களுக்கு உதவி செய்வது ஒரு பாக்யம்! அவர் சம்பந்தப்பட்டதெல்லாம் சிக்கலாகத்தான் இருக்கும் என்பதும் நிச்சயம்! எந்த வகையில் சிறியவளான என் உதவி தேவையானாலும் சமர்ப்பணம் செய்யத் தயார்!"

"உங்களை நான் ஒரு பெண்மணிக்குத் துணையாக அனுப்ப உத்தேசித்திருக்கிறேன். அவள் இப்போது ஒரு ஆபத்தான நிலையில் இருக்கிறாள். எந்தத்திசையிலிருந்து ஆபத்து வரும் என்று சொல்வதற்கில்லை. நீங்கள் அங்கே போலீஸ் இலாகா அனுப்பிய உதவியாளராகப் போவதாக யாரும் தெரிந்து கொள்ளக்கூடாது. அந்தப் பெண்ணுடைய உறவினள் என்ற முறையில் போகிறீர்கள்."

"இந்த விவரங்களே எனக்குப் போதும், மிஸ்டர் சந்துரு! 'அந்தப் பெண்மணி யார்? அவளுக்கு என்ன விதமான ஆபத்து? நான் செய்ய வேண்டியது என்ன?' இதையெல்லாம் தெரிந்து கொள்ளலாமா?"

கோபாலன் சிரித்தார்: "மிஸ் சரளா! நீங்கள் ஒருநாள் என் வீட்டுக்கு வந்து என் மனைவி லட்சுமியிடம் பேச வேண்டும் என்று மிகவும் ஆசைப்படுகிறேன். அவளுக்கு நான் எத்தனை விவரங்கள் சொன்னாலும் போதாது என்கிறாள். உங்களுடன் கொஞ்சமாவது பழகினால், புத்தி வரும் என்று நினைக்கிறேன்

29/05/2011 13

''என்னைப் பரிகாசம் செய்கிறீர்கள், இன்ஸ்பெக்டர். சந்துருவிடம் விஷயம் வருவிக்க வேண்டுமானால் இப்படித்தான் பேசவேண்டும் ஏதேனும் நானாக மேலும் கேட்டால், அவருக்குக் கோபம் வரும். 'எல்லாவற்றையும் என்னிடமே கேட்டுக் கொண்டு, அங்கே போய் என்ன புரட்டுகிறது?'' என்று எரிந்து விழுவார். 'போதும்' என்றால்தான மளமள வென்று பேசுவார்.''

''உங்களுக்குள் இருக்கிற சங்கேதம் எனக்கு ஒன்றுமே புரிகிறதில்லை. எங்கே, சந்துரு! எனக்கு ஒரு அவசர 'கேஸ்' இருக்கிறது. நான் போக வேண்டும்! மிஸ் சரளாவிடம் விவரங்களைச் சொல், நானும் கேட்கிறேன்!'' என்றார்.

சந்துரு தொண்டையைக் கனைத்து விட்டுக் கொண்டான். கதை சொல்கிற பாணியில் ஆரம்பித்தான். ''பஞ்சநதம், பஞ்சநதம் என்கிற ஒரு மனிதருக்கு அழகான பெண் ஒன்று உண்டு. அவள் பெயர் திலகவதி. பஞ்சநதம் பார்ப்பதற்கு லட்சணமாக இல்லை. எனினும், குப்பையில் தோன்றிய குந்துமணியாகத் திலகவதி விளங்கினாள். அவள் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து, எல்லா ஆடவர்களுக்கும் ஒரு மயக்கத்தை ஊட்டினாள். அவளை மணந்து கொள்ள இளைஞர்கள். 'நான் நீ' என்று போட்டி போட்டுக் கொண்டு வந்தார்களா என்ற விவரம் எனக்குச் சரிவரக் கிடைக்கவில்லை. ஊகித்துக் கொள்ள வேண்டித்தான் இருக்கிறது.

''பஞ்சநதம் ஒரு அற்ப வியாபாரம் செய்தார்; அதிலும் அவர் நஷ்டம் அடைந்தார். பெண்ணுக்கு ஆஸ்தி அவளது அழகு ஒன்றுதான் என்று அதன் மூலம் ஊர்ஜிதம் செய்தார்.

''எத்தனையோ அதிசயங்கள் நடக்கின்றன உலகத்தில். திலகவதியின் மணமும் ஓர் அதிசயம். ஒரு பணக்காரர் அவளை மணந்து கொண்டார். செங்கல்வராய பிள்ளை என்பவர் அவர். மலாயாவில் பணம் திரட்டிக் கொண்டு வந்து தேனாம்பேட்டையில் பெரிய பங்களாவை அமைத்துக் கொண்டு, திலகவதியுடனும், தமையன் மகன் கணேசன், மகள் இந்திரா இவர்களுடனும் வாழ்ந்து



வருகிறார். அதாவது, மூந்தா நாள் வரை; அந்தக் குடும்பத்தில் திடீரென்று ஒரு குழப்பம் ஏற்பட்டது; வீட்டிலிருந்து ஒரு பை காணாமல் போய், அதன் விளைவாகப் பல அசந்தர்ப்பங்கள் நிகழ்ந்தன. நேற்றிரவு முதல் திலகவதியாருக்கு இரண்டு துயரங்கள். ஒன்று, செங்கல்வராய பிள்ளையைக் காணோம். இரண்டு, இந்திராவை யாரோ கொண்டு போய் விட்டார்கள். யாரோ எதிரிகள் வேலை செய்கிறார்கள் என்பதில் சந்தேகம் இல்லை.

''அந்த வீட்டில் கணேசனும் அவளுமே பாக்கி. வேலைக்காரன், டிரைவர், தவசுப்பிள்ளை என்று மூன்று பேர் இருக்கிறார்கள்; அவர்கள் யார், எந்தக் கட்சி என்பது விளங்காமலே இருக்கிறது.

''பஞ்சநதம் நமக்குத் தெரிந்து இரண்டு முறை ஜெயில் வாசம் செய்தவர். இதோ இந்த 'பைலி'ல் அவருடைய பூர்வ சரிதத்தைப் பற்றித்தான் படித்துக் கொண்டிருந்தோம். அவர் வரலாம், அவருடன் தோழன் ஒருவன் பழைய 'கேடி'யும் வரலாம்.

''கணேசன் என்ன செய்வான் என்று சொல்வதற்கில்லை. அவனுக்கு ரேடியோ ஜாலங்கள் செய்யத் தெரியும். அவன் விஷயமாகவும் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்.

''மிஸ் சரளா! நீங்கள் போகிற காரியத்திற்கு இத்தனை விவரங்கள் தெரிந்தாலே போதும். நீங்கள் திலகவதிக்குக் காவல்; அதோடு நடக்கிற விஷயங்களைக் கவனித்து எனக்குத் தெரிவிக்க வேண்டிய பொறுப்பு ஏற்றுக் கொள்கிறீர்கள். நீங்களும் வெகு ஜாக்கிரதையாக இருக்கவேண்டும்; யாரையும் நம்பக் கூடாது!'' என்றான் சந்துரு.

சரளா வெண்கலச் சிரிப்புச் சிரித்தாள். ''நான் சந்துரு அவர்களையே நம்ப மாட்டேனே! என்னை அனுப்புவதில் வேறு எத்தனை சூட்சமங்கள் [illegible] அளந்து பேசுவதிலேயே எனக்கு [illegible]'' என்றாள்.

29/05/2011

''மிஸ் சரளா செலகிறார் என்பதே எனக்குப் பாதி கேஸ் ஜயமான மாதிரி... அதனாலதான் அவரிடம் பாதி விஷயம் சொல்லி அனுப்புகிறேன்!'' என்றான் சந்துரு.

''போக்கிரி! போக்கிரி!'' என்று சந்துருவின் முதுகைத் தட்டி விட்டு கோபாலன் எழுந்தார். மிஸ் சரளா இருவருக்கும் ஒரு பெரிய கும்பிடு போட்டுவிட்டு அங்கிருந்து நகர்ந்தாள்.

ஃ ஃ ஃ

பதினொன்றரை மணிக்கு இரண்டு கான்ஸ்டபிள்களுடன் சந்துரு போலீஸ் ஜீப் ஒன்றில் லிங்கி செட்டித் தெருவுக்குச் சென்றான். 1936-ம் நம்பர் வீட்டு வாசலில் இறங்கிக் கொண்டு தன் கையோடு கொண்டு வந்திருந்த சாவியினால் பூட்டைத் திறந்தான். வாசலில் ஒரு ஜவானைக் காவல் வைத்துவிட்டு, மற்றவனுடன் உள்ளே பிரவேசித்தான்.

முன்கட்டு எல்லாம் தாமோதரன் கூறியபடியதான் இருந்தது; இரும்புப் பெட்டி இருந்த அறையில் சிறிது தாமதித்தான். குப்பை படிந்த தரையில் ஏராளமான காலடிகள், அநேகர் நடமாடியிருப்பதற்குச் சாட்சியாகப் படிந்திருந்தன. இரும்புப் பெட்டியையும் திறந்து பார்த்தான்; அது காலியாக இருந்தது. எனினும் உட்புறம் 'வார்னிஷ்' மங்காமல் பளபளவென்று இருந்தது. கையை விட்டுத் துழாவினான்.

'அதில் எவன் இருக்கப் போகிறது? இவர் பெரிதாகத் தேடுகிறாரே!' என்று மனத்திற்குள் நினைத்த கான்ஸ்டபிள் க்ஷண காலம் திகைத்தான். வைத்ததை எடுக்கிற மாதிரி, ஒருசிறு விஸிட்டிங் கார்டைச் சந்துரு அதிலிருந்து எடுத்து, வெளிச்சத்தில் பிடித்துப்படித்துக் கொண்டிருந்தான். அதில் இருந்த விலாசத்தை மௌனமாகவே கவனித்துப் பையில் அந்தக் கார்டைப் பத்திரப்படுத்திக்



கொண்டான். பிறகுகான்ஸ்டபிள் பக்கம் திரும்பி, ''எந்த அற்ப விஷயமாயிருந்தாலும், நிச்சயம் உபயோகம் இல்லை என்று தெரிந்திருந்தாலும்கூட, கடைசியாக ஒரு தடவை அந்த ஊர்ஜிதம் செய்து கொள்வது என் வழக்கம்.

அநேக சமயங்களில் அந்த வழக்கம் எனக்கு உதவி செய்திருக்கிறது. 'இந்தக் காலி அறையை இந்த மனிதன் எதற்குத் துழாவுகிறான்!' என்றுதானே இப்போது நீ நினைத்தாய்? நான் துழாவினது சௌகரியமாகப் போய் விட்டது'' என்றான்.

''அப்படி நான் நினைக்கவில்லை, ஸார்!'' என்று கான்ஸ்டபிள் முனகினான்.

''எனக்குக் கொலை செய்கிறவர்களைக்கூட பிடிக்கும். பொய் சொல்கிறவர்களை மட்டும் பிடிக்காது!... பேசாமல் வா, பின்கட்டுக்கு!'' என்றான்.

நாராயணன் பின் கட்டை வெகு நன்றாகவே முன்பு வர்ணனை செய்திருந்தான். சந்துரு அவனுக்கு ஒரு பாராட்டு வழங்கியிருப்பான்—நாராயணன் மட்டும் அருகில் இருந்தால், மேல் நோக்காக ஒரு கண்ணோட்டம் விட்டு, பிறகு திரும்பி வந்து மாடிக்கு ஏறினான். ஒரு அறையில் மேஜையும் இரண்டு நாற்காலிகளும் கிடந்தன. எரிந்த மெழுகுவர்த்திகள் இறைபட்டன. மாடியில் மின்சார வசதி இல்லை என்பதற்கு அடையாளமாக, வெறும் கம்பிகள் மட்டும் தொங்கின. சில மணிகளுக்கு முன்பு அங்கே இருவருக்கிடையே கடும் போராட்டம் நடந்திருப்பதற்கு அறிகுறி எதையுமே காணோம் அங்கிருந்தவர்கள் யாராக இருப்பினும், பின் வருபவர்கள் சற்றும் சந்தேகம் கொள்ளாதபடி... வெகு கவனத்துடன் காலி செய்து கொண்டு போயிருந்தார்கள்.

சந்துரு மொட்டை மாடிக்கு ஏறிச் சென்றான். நல்ல உயரமான மாடி அது. அங்கிருந் [illegible] மாடிகள் வட்டாரத்தில் இருந்த நூற்றுக்கணக்கான



29/05/2011

தென்பட்டன. 'அடா! இது எத்தனை உயரம்!' என்று அவன் ஆச்சரியப்பட்டான். வெகுவெகு தொலைவில் இதே போன்று ஒரு மாடி தெரிந்தது. இங்கே ஒரு ஆள் இரவு வேளையில் நின்று கொண்டு, அங்கேயும் ஒரு ஆள் நின்றால் தலைக்கு ஒரு தீப்பந்தத்தை ஏற்றி வைத்துக் கொண்டு என்ன வேண்டுமானாலும் பேசலாமே! 'இந்த வீட்டில் கடைசியாகக் குடி இருந்தவர் யாரோ! விசாரிக்க வேண்டும்' என்று மனத்திற்குள் குறிப்பு செய்து கொண்ட படியே கீழே இறங்கினான்.

வெளியே கான்ஸ்டபிளுடன் ஒரு ஆசாமி நின்று, உள்ளே வரப் பெருமுயற்சி செய்து கொண்டிருந்தான். "இந்த வீடு விலைக்கு வர்ரதாகச் சொல்றாக... கொஞ்சம் பார்க்கலாம் என்று வந்தால், விடமாட்டேன் என்கிறாயே!" என்றான் அந்த ஆள். ஆஜானுபாகுவாக இருந்தான். பார்வைக்கு முரடன் என்று தோன்றியது.

"விலைக்கு வர விடில்லை, இன்ஸ்பெக்டர் ஐயா வந்திருக்காங்க என்கிறேன், காதிலே ஏறல்லே!... போ, ஐயா!" என்றி கான்ஸ்டபிள் வழி மறைத்துக் கொண்டிருந் தான்.

"இன்ஸ்பெக்டர் ஐயாகிட்டே நீ போய்ச் சொல்!" என்றான் அவன்.

"நமக்கு ஏன் அந்த வம்பு தும்பெல்லாம்! இந்த இடத்தைவிட்டு அப்பால் ஒரு அடிவைக்க நமக்கு அதிகாரம் இல்லை... தேவலையே, இங்கே உன் உத்தரவு கேட்கற துக்கு நமக்கு சர்க்காரிலே சம்பளம் தரவில்லை" என்று உறுதியுடன் சொன்னான் கான்ஸ்டபிள்.

"அட, சும்மாக் கூடவா வீட்டைப் பார்க்கக் கூடாது?"

"கூடாது என்றுதானே என்னை நிப்பாட்டியிருக் கிறாங்க... இந்தா! நகரு! ஐயாவே வராங்க!"

சந்துரு வந்து விட்டான்; கான்ஸ்டபிளும் புகார் செய்தான். ஒரு கணம் சந்துரு அந்தப் புதிய ஆசாமியைப் பார்த்தான். "என்ன அதிர்ஷ்டம்! என்ன அதிர்ஷ்டம்!



நான் வீட்டைத் திறக்கிறேன்; அதற்குள் அதை வாங்க ஒரு 'கிராக்கி' என்றால், பெரிய ஆச்சரியம் இல்லை; இது விஷயம் பரவினால் விலை போகாத வீடுகளுக்கெல்லாம் நம்மைக் கூப்பிடுவார்களே!" என்றான்.

"நான் ஒரு முறை பார்க்க அனுமதிக்க வேண்டும்!" என்று கேட்டான் அவன்.

"நான் பார்த்தாகி விட்டது; அப்புறம் நீர் பார்ப்பதில் உபயோகம் இல்லை, மன்னிக்க வேண்டும்! உள்ளே ஒன்றும் இல்லை, கான்ஸ்டபிள்! கதவை இழுத்துத் தாழ்ப்பாள் போட்டுப் பூட்டு!... ஜீப்பைக் கூப்பிடு!" என்று உத்தரவுகள் கொடுத்து விட்டு அந்த ஆளின் காதோடு "இதெல்லாம் என்ன வேஷம்; வீடு வாங்க வருவதானால், வேஷம் போட்டுக் கொள்ளவா வேண்டும்? உன் மீசை தனியே ஆடிக் கொண்டிருக்கிறது; பகல் வேளையில் இந்த வேஷம் எடுக்காது... இரவு வேளையில் வந்து பார்!" என்று சொல்லி சடக்கென்று அந்த மீசையைப் பிடுங்கி ஆகாயத்தில் எறிந்து, லாவகமாகப் பிடித்து, "இந்தா பிடி! உன் மூஞ்சிக்கு இதுதான் பாக்கி!" என்று அவன் கையிலேயே கொடுத்தான். சற்றும் பதிலுக்குக் காத்திராமல், தயாராக வந்த ஜீப்பில் தாவி ஏறிக் கொண்டான்.

"யாருங்க அந்த ஆளு?" என்று கேட்டான் ஒரு கான்ஸ்டபிள்.

"வீடு வாங்க வந்தவன் இல்லை; வீடு கூட்ட வந்தவன். மீசையை எடுத்தவுடன் அவனுக்குப் பெயர் வேறு; கொஞ்ச தூரம் சென்று, சந்து திரும்பினால் அவன் கூட்டாளி ஒருவன் நின்று கொண்டிருப்பான்! நமக்கு அங்கே போக இப்போ அவகாசம் இல்லை. வேறு வேலை இருக்கிறது. வண்டியை விடு!" என்றான்.

லிங்கி செட்டித் தெரு வீட்டைச் சோதனை போட்டுக் கொண்டு தன் ஜாகைக்குச் சந்துரு திரும்பியபோது சம்பா அவனை வரவேற்றாள். "மாமா! ஒரு மோட்டாரில்

29/05/2011 13:

உங்களை தேடிக் கொண்டு ஒருவர் வந்து விட்டுப் போனார். நீங்கள் போலீஸ் ஸ்டேஷனில் இல்லை என்று விசாரித்துக் கொண்டுதான் இங்கே வந்தாராம்!''

''சம்பா! பாக்கியை நான் சொல்லி விடுகிறேன். அவர் பெயர் 'கணேசன்' என்று சொன்னார்; மறுபடி மாலையில் வருகிறேன் என்றார்... சரிதானே!''

''போங்கள், மாமா! வழியில் நீங்கள் அவரைப் பார்த்துப் பேசிவிட்டு, பெரிய துப்பறிந்த மாதிரி பாசாங்கு செய்கிறீர்கள்... எனக்குத் தெரியாதோ!'' என்று சம்பா கேட்டாள்.

''உனக்குத் தெரியும் என்று இன்னொரு விஷயம் சொல்கிறேன், சம்பா! இன்று மாலை அந்த கணேசன் மறுபடி வரப்போகிறார். என்னுடன் பேசிக் கொண்டிருப்பார். நீ அப்போது வாசலையே கவனித்துக்கொண்டு இருக்க வேண்டும். இரண்டு பேர் நம் வீட்டுக்கு முன் இப்படியும் அப்படியுமாக உலாத்திக் கொண்டிருப்பார்கள். சரியாகப் பன்னிரண்டு முறை அவர்கள் நடந்த பிறகு, மேலே வந்து நீ எனக்குத் தகவல் கொடுக்க வேண்டும்'' என்றான்.

''ஓ! சொல்கிறேனே!'' என்று சம்பா துள்ளிக் குதித்துக் கொண்டு உற்சாகமாக ஓடினாள்.

ஃ ஃ ஃ

சொன்னால் சொன்னபடி கணேசன் வந்துவிட்டான்; சந்துரு அவனை எதிர்பார்த்துக் காத்துக் கொண்டிருந்தான். எனினும், அதைச் சிறிதும் காட்டிக் கொள்ளவில்லை.

''வாருங்கள், மிஸ்டர் கணேசன்! உங்கள் உடம்புக்கு ஒன்றும் இல்லையே; பாவம். நேற்று இரண்டு முறை அதிர்ச்சிகள் உங்களுக்கு!'' என்று வரவேற்றான் சந்துரு.

''நான் எங்கள் குடும்பத்தைப் பற்றி உங்களிடம் சில விஷயங்கள் பேச வேண்டும் என்று நேற்று முதல் முயற்சி செய்கிறேன். சந்தர்ப்பம் சரியாக அமையவில்லை. ஆகையால், இன்று காலையில் உங்களை இங்கே சந்தித்துப் பேசிவிடுவது என்று வந்தேன்...''



''குழந்தை சொன்னாள்! நீங்கள் தாராளமாகப் பேசலாம். இங்கே மின்சாரக் கம்பிகள், ஒலி பெருக்கிச் சாதனங்கள், ரேடியோக் கருவிகள் எதுவும் கிடையாது. நம் பேச்சுக்கள் நமக்குள்ளேயே இருக்கும்...''

''நீங்கள் அதைக் கண்டு பிடித்து விட்டிருப்பீர்கள் என்பதை நான் நேற்றிரவில் உங்களை ஹாலில் கண்ட போதே ஊகித்து விட்டேன். அந்த மாதிரி ஒரு சாதனம் செய்து கொள்ள வேண்டியது அவசியமாக இருந்தது. அதை நீங்கள் பிற்பாடு ஒப்புக் கொள்வீர்கள்... திலகவதியின் தகப்பன் வருவதை நான் ஆட்சேபித்தது என் குடும்ப நலனுக்காக. அந்த மனிதன், இன்னமும் கெட்ட சகவாசம் வைத்துக் கொண்டிருக்கிறான்; அவன் வறுமை நீங்கவில்லை. அவனுடைய தோழர்கள் வரத் தொடங்கி விட்டார்கள். நான் என் சித்தப்பாவுடன் அவன் விஷயமாகச் சண்டை போட்டேன், உண்மை!''

''நான் ஆட்சேபிக்கவில்லை.''

''திலகவதி கோபித்துக் கொண்டாலும் எனக்கு லட்சியம் இல்லை. அதேபோல், மதுரநாயகம் எங்கள் வீட்டில் இருப்பதில் எனக்கு இஷ்டம் இல்லை. அவன் ஒரு தடவை திலகவதியிடமே தகாத முறையில் பேசத் தொடங்கவும், நான் அகஸ்மாத்தாக—''

''உங்கள் இயந்திரங்கள் மூலம்—''

''கேட்டு, ஓடிப்போய் அவனை அறைந்து வெளியே விசிறினேன். என் தகப்பனாருக்கு ஆப்தன் என்ற ஒரே காரணத்தினால் நான் அதோடு விட்டு விட்டேன்...!

''அதற்காகத் திலகவதி உங்களிடம் நன்றி தெரிவித்தாளா?''

''இல்லை; நான் எப்போது சித்தப்பாவிடம் பிரஸ்தாபிப்பேனோ என்று மேலும் அவள் என்னிடமிருந்து ஒதுங்கிக் கொள்கிறாள். மதுரநாயகம் என் தங்கையை மணக்கலாம் என்று மனப்பால் குடிக்கிறான். [illegible] நான் பார்த்துக் கொள்ளுவேன்! ஆமா[illegible]

29/05/2011

''அது போகட்டும்! உங்கள் சித்தப்பாவும் நீங்களும் சௌஜன்யம்தானே?''

''அதில் என்ன சந்தேகம்? அவர் நிலவரங்கள் பூராவும் எனக்குத் தெரியும்.''

''அவர் சொல்லியா? அல்லது—''

''எப்படியோ, எனக்குத் தெரியும் என்பது அவருக்குத் தெரியும்.''

''பை ஒன்று காணாமல் போயிற்றே! அதைப் பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன? சொல்லவே இல்லையே!''

''அது திருட்டுப் போனது உண்மை. திருடியவர் யார் என்று தெரியவில்லை.''

''மதுரநாயகம், பஞ்சநதம்—இப்படி யார் பேரிலாவது சந்தேகம் உண்டா உங்களுக்கு?''

''நான் எப்படிச் சொல்ல முடியும்?''

''சரி, நான் உங்களைப் பார்க்க வந்தபோது மூர்ச்சையாகக் கிடந்தீர்களே அப்போது நீங்களாக விழுந்தீர்களா? யாரேனும் தள்ளி விழுந்தீர்களா?''

''இரண்டும் இருக்கலாம். ஏதேனும் சொல்லி, அப்போது பெண்களைப் பயமுறுத்த நான் விரும்பவில்லை!''

''எனக்கு வந்த டெலிபோனை நீங்கள் தடுத்தது நியாயமா?''

''என் சித்தியை உத்தேசித்து நான் அப்போது செய்யக் கூடியது வேறு என்ன?''

''சரி நான்... மேலே சொல்லுங்கள்!''

''கொஞ்ச நாட்களாகவே என் சித்தப்பா சஞ்சலமா இருந்தார். அவருக்கு வியாபாரம் சரியாக நடக்கவில்லை. கடன்காரர்கள் தொல்லை அதிகமாகி இருக்கிறது. தவிர, மதுரநாயகம் வந்து உட்கார்ந்து கொண்டு விட்டானா? அவனை எப்படி நகர்த்துவது என்ற கவலை வேறு. இப்படி அல்லல்பட்டுக் கொண்டிருந்தபோது, பை வேறு காணாமல் போய்விட்டது. எல்லாமாகச் சேர்ந்து அவரைத் தடுமாறச் செய்து விட்டன.''



''த்ஸொ! த்ஸொ!''

''ஆனால், அவரை வீட்டை விட்டே அப்புறப்படுத்திக் கொண்டு போவார்கள் என்று நான் எதிர்பார்க்கவே இல்லை. ஏதோ நாவல்களில் நடக்கிற மாதிரி நடந்து விட்டது அன்று. ஒரு பை காணாமல்போய், பின் அவருக்கே இப்படி நேரும் என்று யார் கண்டார்கள்?''

''நீங்கள் முயற்சி செய்தால், அவர் கொண்டு போகப் பட்ட இடம் எது என்று கண்டுபிடிக்கலாம்?''

''இரவு காலம்; நான் பார்த்ததும் ஓர் இடுக்கு வழியாக. இப்போதும் நான் முயற்சி செய்யலாம்; செய்யவும் போகிறேன். ஆனால், நிச்சயம் சொல்ல முடியாது...''

''நீங்கள் எல்லா அறைகளிலும் நடப்பதைக்கேட்க ஒரு விசை வைத்திருக்கிறீர்களே, அதனால்கிடைத்த பலாபலன்களை நான் அறியலாமா? விருப்பம் இருந்தால் மட்டும் சொல்லுங்கள், போதும்!''

ஒரு கணம் கணேசன் நிதானித்தான்; ''எனக்கு என் சித்தப்பாவின்மீது சந்தேகம் உண்டு. எனக்கும் இந்திராவுக்கும் என்று எங்கள் தந்தை வைத்து விட்டுச் சென்ற சொத்துக்குப் பாதுகாப்பாளராகச் சித்தப்பா இதுவரை இருந்து வருகிறார். அது பத்திரமாக இருக்கிறதா என்று அறிந்து கொண்டிருக்க, நான் இந்த முறையைக் கையாண்டேன்.''

''சித்தப்பா சரியாகப் பார்த்துக் கொள்கிறாரா?''

''அப்படித்தான் நினைத்துக் கொண்டிருக்கிறேன்.''

''சித்தப்பாவுக்கு நஷ்டகாலம் என்கிறீர்களே, கவனிக்க வேண்டாமா?... போகட்டும், அவருக்கு விரோதிகள் இருக்கிறார்களா?''

''இங்கே யாரும் இருப்பதாக நான் அறியேன்.''

''மதுரநாயகத்தின் மேல் குறிப்பாக ஏதேனும் சந்தேகம் வைத்திருக்கிறீர்களா?''

''அவன் கைகார ஆசாமி

கொண்டால், மென்னியை முறித்துப் போடுவேன்.

29/05/2011

''அவனுடைய கையாட்கள் யாரேனும் வருவது உண்டா?''

''எனக்குத் தெரியாது.''

''இன்று விடியற்காலை உங்களை ஒரு ஆள் தாக்கினான் அல்லவா?''

''வாஸ்தவம்.''

''அவனை முன்பின் தெரியுமா?''

''தெரியாது. நான் அறைக்குள் நுழைந்ததும் திடீரென்று என் மேல் அவன் வந்து விழுந்தான்.''

''தாக்கினவன் ஒருவன்தானே?''

சற்று நிதானித்து, ''முதலில் ஒருவன் தாக்கினான்; அவனை வீழ்த்தினேன்; பிறகு இரண்டாமவன் வந்தான். அவனுடன் சண்டை போட்டுக் கொண்டிருந்தபோது, முதல் ஆசாமி என்னை அடித்துத் தள்ளிவிட்டான்.''

''எங்கேனும் மறுபடி காண நேர்ந்தால், அவர்களை அடையாளம் கண்டு சொல்ல முடியுமா?''

''நிச்சயம் சொல்வதற்கில்லை; முயற்சி செய்யலாம்.''

''முன்புகூட அந்த மாதிரிதான் பதில் சொன்னீர்கள்... இந்திராவை முதலில் கண்டுபிடிக்க வேண்டும்; அதற்கு உங்கள் உதவி தேவை.''

''பூர்ணமாக இருக்கிறது; எப்போது வேண்டுமானாலும் நான் தயார்.''

''உங்களிடம் கேட்க இன்னும் இரண்டொரு கேள்விகளே பாக்கியிருக்கின்றன... அண்ணாமலை யோக்கியன் தானே?''

''யாரையும் பற்றி நான் சொல்ல முடியாத நிலையில் இருக்கிறேன். கன்னையன், தவசுப்பிள்ளை இவர்கள் முகத்தைக்கூட நான் சரியாகப் பார்த்ததில்லை; வெளியே கண்டாலும்கூட அடையாளம் தெரியாது எனக்கு.''

''அதுவும் ஒருவிதத்தில் நன்மைதான்! எனக்கு நீங்கள் ஒரு காகிதத்தில் ஒரு விஷயம் எழுதிக் கொடுங்கள்'' என்று



சந்துரு ஒரு காகிதத்தையும் பென்சிலையும் அவனிடம் கொடுத்தான். பிறகு, ''எழுதுங்கள்: 'நாளைக்குக் காலை சந்துரு வந்து கொண்டிருக்கிறான். உன் அருகிலேயே இருந்து ஜாக்கிரதையாகக் கவனிக்கிறேன்'' இவ்வளவு போதும். இப்படிக் கொடுங்கள்! இதை நான் எப்படியாவது இந்திராவிடம் சேர்ப்பித்து, அவளைத் தைரியமாக இருக்கச் செய்கிறேன்'' என்று சந்துரு அந்தக் கடிதத்தைத் தன் கையில் வாங்கிக் கொண்டான்.

''ஏது, இந்திரா இருக்குமிடம் தெரிந்த மாதிரி பேசுகிறீர்களே!'' என்று கணேசன் கேட்டான்.

சந்துரு பதில் சொல்லுமுன், சம்பா மேலே வந்து விட்டாள். சந்துருவைப் பார்த்து, ''மாமா! வாசலில் அந்த இரண்டு பேரும் பன்னிரண்டு தடவை இப்படியும் அப்படியும் போய்விட்டார்கள். அதைச் சொல்லவே நான் வந்தேன்!'' என்றாள். சந்துரு அவள் முதுகைத் தடவிக் கொடுத்து, ''பேஷ்! அதுதான் கெட்டிக்காரி என்பது! மிஸ்டர் கணேஷ்! எனக்குப் பிடிக்காத இரண்டு பேர் வாசலில் காத்திருக்கிறார்கள். எனக்குச் செய்கிற கெடுதலை உங்களுக்கும் செய்து விடுவார்கள். இந்தக் குழந்தை புழக்கடை வழியாக உங்களுக்கு வழிகாட்டி அனுப்பி விடுவாள். இவ்வளவு தூரம் உண்மையாக என்னிடம் பேசியதற்கு வந்தனம்!'' என்றான் சந்துரு ஒரு கண்ணைச் சிமிட்டி.

கணேசன் எழுந்து சம்பாவுடன் கீழே சென்ற பின்னர், சந்துரு தன்னிடம் இருந்த வேறொரு காகிதத் துண்டை எடுத்துப் பிரித்தான்; அதில்,

''சந்துரு வந்து கொண்டிருக்கிறான். அவனை ஏவி விட்டாயோ நாளைக்குக் [illegible] இருக்க மாட்டாய்... உன் அருகிலேயே இருந்து நான் கவனிக்கிறேன், ஜாக்கிரதை!'' என்ற வாசகம் இருந்தது.

29/05/2011 13

இரு எழுத்துக்களையும் கூர்ந்து ஒப்பிட்டுப் பார்த்து, தலையை ஆட்டித் திருப்தி அடைந்து, டெலிபோனை எடுத்தான். ஒரு நம்பரை அழைத்து, "யாரது அங்கே! சஞ்சீவியா! நம் வீட்டுப் பின்புறமாக ஒரு ஆளை அனுப்பிக் கொண்டிருக்கிறேன். அவன் பின்னால் கொஞ்சம் போய் உடனே கவனிக்க வேண்டுமே! ஆமாம்! உடனே!... ஆல்ரைட்!" என்று ரிஸீவரைத் திரும்ப வைத்தான்.

சம்பா திரும்பி வந்தான். வேறொரு காகிதத்தில், மளமளவென்று பின்வருமாறு எழுதினான்:—

"அன்புடையீர்!

நீங்கள் இருவரும் ஒரு மணி நேரமாக வாசலில் நின்று காத்திருந்தது வியர்த்தம். என்னைப் பேட்டி காண வந்த ஆசாமி புழக்கடை வழியே போய்ப் பதினைந்து நிமிஷங்கள் ஆகின்றன. ஒன்று, நீங்கள் இனி வீட்டுக்குப் போய் விடலாம். அல்லது இங்கே வந்து என்னிடம் பேசிக் கொண்டிருக்கலாம். எது உசிதமோ அப்படிச் செய்யுங்கள்.

—சந்துரு."

இந்தக் கடிதத்தைச் சம்பாவிடம் கொடுத்து, "பதினேழாம் தடவையாக அந்தத் தடியர்கள் நம் வீட்டு வாசற்படியைத் தாண்டும்போது இதைக் கொடுத்து விடு; நான் தூங்கப் போகிறேன். யார் வந்தாலும் 'இல்லை' என்று சொல்லி விடு!" என்றான்.

சம்பா கடிதத்துடன் கீழே ஓடினான்.

## பயம் தலைகாட்டுகிறது!

சம்பாவைக் கீழே அனுப்பி விட்டுத் திரும்பவும் நாற்காலியில் வந்து உட்கார்ந்து கொண்ட சந்துரு, ஓய்வு எடுத்துக் கொள்ளப் போகிறவனாகக் காணப்படவில்லை. சுறுசுறுப்பாக இருந்தே பழகி விட்டவர்களுக்கு, ஓய்வு



என்பது ஒரு தண்டனையாகவே வந்து சேரும். அந்தத் தண்டனையினால் ஏற்படும் வேதனையைத் தாங்க மாட் டாமல் அவர்கள் திணறுவார்கள். அதுதான் சந்துருவின் நிலை;

யோசனை செய்து யோசனை செய்து மூளைக்கு வேலை கொடுத்து வருபவர்களை நிம்மதியாகத் தூங்க வைக்க முடியாது. எழுதி எழுதிப் பழகினவன் கை பேனாவையே நாடும். தன் எண்ணங்களை, அபிப்பிராயங் களை, விமர்சனங்களை வன்மையுடன் பேனா முனையின் மூலமாகத்தான் வெளியிட முடியும் என்று விரல்கள் துடி துடிக்கும், வங்கப் பழமொழி ஒன்று உண்டு; 'மசி'யை 'அஸி'யைவிடப் பலமாகக் கையாள முடியும் என்பது அது. 'அஸி' என்றால் கத்தி. கத்தியின் கூர்மையும், வளையும் தன்மையும், மெருகும் அதைப் பிடித்தவன் செயல் திறனும் யாவருக்கும் தெரியும். 'மசி'யைக் கொண்டு எழுத்தாளன் 'அஸி'யின் தன்மையையும் மிஞ்சி விடலாம் என்பதே பொருள்.

சிந்தனை செய்பவன், அடுக்கடுக்காகத் திட்டங்கள் போடுபவனுடைய மூளை நரம்புகள் கடியாரம் போல் வேலை செய்து கொண்டேதான் இருக்கும். அவற்றை நிறுத்துவதும் முடியாது; நிறுத்தினாலும் அபாயம். 'ஆழ்ந்த உழைப்பே உண்மையான ஓய்வு' (Intense work is the real rest) என்ற அனுபவ பூர்வமான உண்மையைக் கண்ட பெரியவர்கள் எத்தனையோ பேர் நம்மிடையே இன்றும் வாழ்ந்து வருகிறார்கள்.

சந்துருவின் தொழில் மூளைக்கு வேலை கொடுப்பது. மளமளவென்று எத்தனையோ காரியங்கள் நடந்த பின்னர் அவன் ஓய்வெடுத்து உட்காரப் போவதாக அறிவித்தான். உட்கார்ந்தும் கொண்டா[illegible] ஓய்வை அவனால் கொடுக்க முடி[illegible] விரல் வேலை செய்தது.

29/05/2011 13:

சந்துரு எத்தனையோ வழக்குகளைக் கையாண்டு, புதிர்களையெல்லாம் அவிழ்த்து விட்டிருக்கிறான். அநேகமாக அவன் அந்த நாற்காலியில் உட்கார்ந்தபடியே, தெருவில் போவோர் வருவோர்களைப் பார்த்துக் கொண்டே அநாயாசமாக எத்தனையோ சிடுக்குகளைச் சரி செய்து தந்திருக்கிறான். இப்போதும், அந்த நாற்காலியிலேயே அவன் உட்கார்ந்து கொண்டான்.

முதல் முதலாக தாமோதரன் போலீஸ் ஸ்டேஷனுக்குள் வலிய வந்து, தனக்கு நேர்ந்த அனுபவங்களைச் சொன்ன போது சந்துரு இரண்டில் ஒன்றுதான் எதிர்பார்த்தான்: அதையும் இன்ஸ்பெக்டர் கோபாலனிடம் பகிரங்கமாகச் சொன்னான். "இதோடு இந்தக் 'கேஸ்' பூர்த்தியாகி விடலாம்; அல்லது, இதுவே மற்றொரு பெரிய கேஸுக்கு ஆரம்பம் என்றும் சொல்லலாம்" என்பதே அவனுடைய வாசகம். அன்று மாலை ஆறு மணிக்குச் சந்துரு தனது ஜாகைக்குச் சென்றபோது, அறையை யாரோ சோதனை போட்டிருந்தார்கள். கண்டபடி காகிதங்களையும் 'பைல்'களையும் அறையெங்கும் வாரி இறைத்திருந்தார்கள் என்பதைக் கண்டதுமே, "சரிதான்; 'கேஸ்' வலுக்கிற வகையைச் சேர்ந்ததுதான்" என்று ஊகித்துக் கொண்டு விட்டான். இந்திராவும் நாராயணனும் அழைத்ததுமே ஒரே தீர்மானம் செய்து விட்டான்— 'இது பழுத்த கேஸ்' என்று.

சந்துருவுக்கு அவனுடைய இலாகாவின் மூலம் ஆயிரம் சௌகரியங்கள் கிடைக்கும்; விரலை அசைத்தாலே கேட்ட உதவியும் ஒத்துழைப்பும் ஓட்டமாக வந்து சேரும்; அவன் வார்த்தைக்கு அபார மதிப்பு உண்டு. இன்ஸ்பெக்டர் கோபாலன் யாரிடமாவது மிகவும் பொறுப்பான வேலையை ஒப்புவிப்பார், அதி முக்கியமான விஷயங்களைச் சொல்வார் என்றால், அது சந்துருதான். எனினும் கூட, சந்துருவுக்கு ஆத்மார்த்தமான ஒரு ஆசாமி உண்டு.

பயம் தலைகாட்டுகிறது!



சஞ்சீவி என்ற இளைஞன் அவன். [illegible] காலத்தில் ஏராளமான துப்பறியும் கதைகளைக் கரைத்துக் குடித்தவன். ஒரு துப்பறியும் நவீனத்தை [illegible] கொடுத்தால், பதினைந்து பக்கங்களோ, [illegible] கொலை நடந்த வரையிலோ படித்த பின்னர் 'டக்'கென்று முதல் கதை எப்படிப் போகும், முடியும் என்றெல்லாம் சொல்லி விடுவான். கடைசிப் பக்கத்தைப் புரட்டிப் பார்த்தால், அது சரியாகவே இருக்கும்! அப்படிக் கதை ஆசிரியர்கள் மனத்தை அளந்து எடை போட்டு வைத்திருக்கும் நிபுணன் அவன்.

சஞ்சீவி படித்த புத்தகங்களையெல்லாம் மனத்தில் திரும்ப வருவித்துக் கொண்டு ஆராய்ந்து பார்த்தான். அவைகளையெல்லாம் விட வாழ்க்கையென்னும் புத்தகம் மிகவும் ருசிகரமானது என்பதை உணர்ந்தான். ஒரு பேராசிரியர் கூறியிருக்கிறார்: "நாம் விஷயங்களைப் பார்க்கிறோம்; விஷயங்களுக்குள் பார்ப்பதில்லை!" (We look at things; we do not look in to things.) அதைத் தமது லட்சியமாகக் கொண்டவன் ஸி. ஐ. டி. சந்துரு என்பதை அவன் வரையில் தெரிந்து கொண்டான். எனவே சந்துருவின் பெயரைக் கேட்ட மாத்திரத்தில் ஒரு பக்தியே கொண்டிருந்தான்!

ஏதோ ஒருபொதுக் கூட்டத்தில், சஞ்சீவியின் பக்கத்தில் ஸி. ஐ. டி. சந்துரு உட்கார்ந்திருந்தபோதுதான், முதல் முதலாக இருவருக்கும் நேரிடையான பரிச்சயம் ஆயிற்று; ஒரு பெரியவருடைய திருஉருவப் படத்தைத் திறந்து வைத்து ஒரு பிரமுகர் உற்சாகமாகப் பேசிக் கொண்டிருந்தார். அவர் பேச்செல்லாம் பெரியவர் குணாதிசயங்களையும் ஆற்றலையும் பற்றி அல்[illegible]படி கௌரவித்துக் கொண்டும் பா[illegible]ந்து வந்தார் என்பதைப் பற்றியே இருந்தது! "என்னைக் கண்டு விட்டால் பரம சந்தோஷம் அவருக்கு தம் வீட்டில்தான் தங்க வேண்டும் என்பார்! முதல் தரமான மல்கோவா

மாம்பழத்தை நறுக்கிக் கொடுத்து 'நீதான் சாப்பிட வேண்டும்' என்று வாயில் ஊட்டாத குறையாக உபசரிப்பார். ஒரு சமயம் எனக்குத் தலைவலி வந்து விட்டது; தம் கையாலேயே 'டைகர் பாம்' கொண்டு வந்து தேய்த்தார் என்றால்!'' என்று பிரசங்கி மெய்ம்மறந்து பேசிக் கொண்டிருந்தார். சந்துரு சஞ்சீவியின் தோளை மெள்ளத் தொட்டு, ''நாம் இன்னும் சற்றுத் தங்கினால், உமக்கு நான் 'டைகர் பாம்' தடவி விட வேண்டிய நிலை வந்துவிடும். நான் வருகிறேன்'' என்று எழுந்தான்.

சஞ்சீவியும் சந்துருவுடன் வெளியே வந்துவிட்டான்; அப்போதுதான் சந்துருவை அவன் நன்றாகக் கவனித்தான்.

சந்துரு புன்னகையுடன், ''உமக்கும் நமக்கும் ஒரே அபிப்பிராயம் இந்தப் பேச்சாளரைப் பற்றி! நாளைக்கு என் திருவுருவப் படத்தை நீர் திறக்க வேண்டி ஒரு சந்தர்ப்பம் வந்தால், என்னைப் பற்றி என்ன சொல்லலாம் என்று தீர்மானித்து வைத்துக்கொள்ள இதுவே சந்தர்ப்பம். 'நாங்கள் இரண்டு பேரும் ஒரே மேஜையில் காபி சாப்பிட்டோம்' என்றாவது சொல்லிக் கொள்ளலாம். வாருங்கள், ஒரு கப் காபி சாப்பிட்டு வைப்போம்!'' என்றான்.

சஞ்சீவி தயங்கினான், முன்பின் அறியாத ஆசாமி அழைக்கிறானே என்று. ''சும்மா வாருங்கள்! பரீட்சைகள் தான் முடிந்து விட்டனவே!—அதிலும் கணக்குப் பரீட்சையில் நீர் எதிர்பார்த்த 'நிரம்' வந்து விட்டது! ஜமாய்த்து விட்டு வந்திருக்கிறீர்!'' என்றான் சந்துரு.

சஞ்சீவி திடுக்கிட்டான்.

''ஒன்றும் அலட்டிக் கொள்ள வேண்டாம். நான் ஒளிந்திருந்து உம்மைப் பார்க்கவில்லை. உம் முகத்தைப் பார்த்தே நீர் 'காலேஜ்' மாணவன் என்று சொல்லி விடுவேன். இப்போது பரீட்சை காலம் என்பதைத் துப்பறிந்து சொல்லத் தேவையில்லை. கண்விழித்துப் படித்திருக்கிறீர். சிவப்பாயிருக்கிறதே விழிக்கிடையில் எல்லாம்...



இன்றோடு பரீட்சை தீர்ந்து விட்டதால்தானே பொதுக் கூட்டத்துக்கு வருகிறீர்?''

''நான் எதிர்பார்த்த 'நிரம்' வந்து விட்டது என்கிறீர்களே, ஸ்வாமி?''

''கட்டை விரலில் சிறு குறிப்பு ஒன்று எழுதிக் கொண்டிருக்கிறீர்கள். அதெல்லாம் பிள்ளைகளுக்கு சகஜம்தான். யாரிடமும் சொல்ல மாட்டேன். எதிர்பார்த்தது வராவிட்டால், இங்கே வந்து நிற்க மனது நிம்மதிப்படாது...வாரும்! கெட்டிக்காரர் நீர்!... உமக்கு ஊரில் கல்யாணம் நிச்சயமாகிக் கொண்டிருக்கிறது. அதைச் சொல்வதும் வெகு லகு. மூந்தா நாள் தந்திச் சேவகனுக்கு எட்டணாவைத் தூக்கிக் கொடுக்க உமக்கு எப்படி மனசு வரும்!'' என்றான்.

''ஸார் ஸார்! உங்கள் பெயரை மட்டும் நான் கேட்டிருக்கிறேன்; பார்த்ததில்லை. இதற்குள் என்னைப்பற்றி எத்தனை விஷயங்கள் சொல்கிறீர்கள்!''

''அதில் ஒன்றும் ஆச்சரியம் இல்லை; என் வழக்கம் அது!''

சந்துரு இருந்த தெருவில் எதிர்ச்சருகில், ஆறாவது வீட்டில் சஞ்சீவி இருந்தான். சந்துரு அவனை எத்தனை நாளாகக் கவனித்துக் காத்துக் கொண்டிருந்தானோ! இன்று இப்படி ஆரம்பித்த ஒரு நட்பு வளர்ந்தது; சஞ்சீவிக்குக் கல்யாணம் ஆயிற்று; சந்துரு வாழ்த்து அனுப்பினபோது அவனுக்கு, ''உங்கள் மாமனாரிடம் சொல்லி, ஒரு அலாரம் கெடிகாரம் வாங்கிக்கொள்ளுங்கள். ஏன் என்று கேட்டால், 'ஒரு துப்பறிகிறவன் எனக்கு நண்பனாகி விட்டான். இரவில் கண்ட வேளைகளில் விழித்துக் கொள்ளச் சொல்லுவான்' என்று சொல்லி வையுங்கள். உமக்குப் பிரயோசனம் இல்லாவிட்டாலும், அது எனக்காவது உபயோகமாக இருக்கும்'' என்று எழுதினான்.

இதற்குப் பிறகு, சஞ்சீவிக்கு [illegible] ...ளா சுவே காட்சி அளித்தான். ''ஒரு துப்பறிபவனுக்குச் சிறந்த

29/05/2011 13

முறையில் உதவியாளனாக இருக்க வேண்டும் என்றால் அவன் கூடவே சுற்றிக் கொண்டிருந்தால் பயன் இல்லை. அவன் இல்லாத இடத்தில் இருந்து, அவன் கவனம் செலுத்த முடியாத சமயத்தில் கவனித்து அவனுக்கு விஷயங்களைச் சொல்வதுதான்'' என்று சந்துரு உபதேசம் செய்தான். அநேக சந்தர்ப்பங்களில் சஞ்சீவிக் கென்றே பல 'வேலை'களும் கொடுத்திருக்கிறான் சந்துரு.

அன்று காலையில் தேனாம்பேட்டை பங்களாவிலிருந்து திரும்பி வந்தபோது சந்துரு ஒரு முறை சஞ்சீவியின் ஜாகையை நிமிர்ந்து பார்த்தான். மேல் மாடியில் நின்று கொண்டிருந்தான் சஞ்சீவி. சந்துரு பார்க்கும்போதே, சஞ்சீவி ஒரே ஒரு விரலைத் தூக்கி, வலது காதில் தட்டிக் காண்பித்தான். 'உன் அறையில் யாரோ ஒரு ஆசாமி இருக்கிறான்' என்பது அதன் பொருள். பிறகு விரல்களை மடித்து, சுண்டு விரலை மட்டும் நீட்டிக் காட்டினான். 'ஆசாமி குள்ளமாக இருக்கிறான்' என்று சந்துருவுக்கு அது சமிக்ஞை. அதைப் பாராதது போலவே பார்த்துக் கொண்டு சந்துரு தன் வீட்டுக்குள் நுழைந்து மேலே போகாமல் தயங்கினான். 'யாரேனும் இருப்பார்கள்' என்பது அவன் எதிர்பார்த்ததுதான். அதை நிச்சயப் படுத்தியது சஞ்சீவியின் சமிக்ஞை. எனவே, ஒரு டம்ளர் காபியுடன் மாடி ஏறினான்.

அறையில் காத்திருந்த நாயரை அந்த க்ஷணமே அவன் கட்டிப் போட்டிருக்க முடியும். ஆனால், நாயர் என்பவன் ஒரு நீண்ட வடத்தின் ஒரு மெல்லிய முனையே. அவனைப் பற்றிக் கொண்டே போய், ஆதியாக உள்ள கள்ளனைப் பிடிக்க வேண்டும். இவனையே இறுகப் பிடிப்பதால், தொடர்பு அறுந்து போகும். மற்றும் சந்துருவினுடைய ஒரு அனுபவம், எதிரி முனையில் ஒரு கல்லலை உண்டாக்கி விட்டு, சும்மா உட்கார்ந்திருந்தாலே போதும். ஒவ்வொரு வராக அவனை நோக்கி வருவார்கள்; தாமாக வெளிப் படுத்திக் கொள்ளுவார்கள்.



கணேசன் வரலை எதிர்பார்த்தான் சந்துரு. சந்துரு தம் மூளையை உபயோகித்து உண்மையைக் காண்பதற்கு இடம் கொடாமல், குழப்பவே அவன் விரும்புவான் என்றும் ஊகித்தான். ஏனென்றால் கணேசன் விரும்பியிருந்தால் எப்போதோ சந்துருவுக்கு உதவி செய்திருக்கலாம். அப்படி அவன் செய்யவில்லை; இப்போது செய்வான் என்று நம்ப வும் தேவை இல்லை. கணேசனுடன் பேசிக் கொண்டிருக் கும்போதே சஞ்சீவி தன் மாடியில் நின்றபடி ஒரு சமிக்ஞை செய்தான். ஆள்காட்டி விரலையும் நடுவிரலையும் காட்டி, வலது காதில் ஐந்தாறு முறை தட்டிக் காண்பித்தான். 'இரண்டு ஆட்கள் அப்படியும் இப்படியுமாக உலாத்து கிறார்கள்' என்ற அந்தச் செய்தியையும் புரிந்து கொண்டான் சந்துரு. பிறகு கணேசனை வச்சரித்து அனுப்பி, அவன் பின்னேயும் சஞ்சீவியை அனுப்பி வைத்தான்.

இருபத்திரண்டு வயதிருக்கும் சஞ்சீவிக்கு நல்ல உரமுள்ள தேகம். கல்லூரியில் ஓட்டப் பந்தயங்களில் பரிசு பெற்றிருக்கிறான். கணேசன் வெளிப்பட்ட மூன்று நிமிஷங் களுக்குள் சஞ்சீவியும் தன் ஜாகையிலிருந்து புறப்படுவதைச் சந்துரு கவனித்துப் புன்முறுவல் செய்து கொண்டான்.

ஃ ஃ ஃ

சந்துரு சிந்தனைகளை மீண்டும் ஓடவிட்டான். கணேசனைப் பின்பற்றிச் சென்ற சஞ்சீவியை அவன் பூர்ண மாக நம்பலாம். சந்துருவைக் குழப்பிவிட்ட பிறகு அடுத்த படி அவன் செய்ய வேண்டும் என்று நினைக்கிற காரியம் முக்கியமானதாகவே இருக்கும்; அது சஞ்சீவிக்குத் தப்பாது.

இரண்டாவது, 'அவன் கண்காணிக்க வேண்டியவர் மதுரநாயகம்—இந்த மனிதருடன் திலகவதியும் சம்பந்தப் பட்டிருக்கிறாள். இந்த இருவ[illegible]யம் என்ன என்பதை அவன் கண்டு[illegible]யங் கள் வெகு சிலவே ஆரம்பத்தில் இந்திரா தன் வீட்டில்



29/05/2011 1

இருந்தவர்களை அறிமுகம் செய்வித்த போது, "என் சித்தப்பாவுக்கு வேண்டியவர் என்று மதுரநாயகத்திடம் திலகவதி மரியாதையாக இருக்கிறாள்; அவரானால், உரிமையுடன் நடந்து கொள்கிறார்" என்று சொல்லியிருக்கிறாள். அவர் பணக்காரர் என்றும், செங்கல்வராய பிள்ளையின் ஆப்த நண்பர் என்றும் சொல்லப்படுகிறது; எந்த உரிமையில் இந்த வீட்டில் அவர் இருந்தார் என்பதை ஆராயவேண்டும். அவருக்கு அங்கே எதிரிகள் இருந்தார்கள் எனில் அவர்கள் யார்?

மூன்றாவதாக, தவசுபபிள்ளை, கைகாரப் பேர்வழி. அவன் மதுரநாயகத்துக்கு எதிரியா? நண்பனா? பொறுத்துப் பார்க்க வேண்டும். தவசுப்பிள்ளையைப் பின் பற்ற ஏற்பாடு செய்தாகி விட்டது.

துஷ்டர்கள் கெட்ட காரியங்கள் செய்து கொண்டேதான் போவார்கள்; எத்தனை கேட்டாலும் பதில் சொல்ல மாட்டார்கள்; ஒப்புக்கொள்ள மாட்டார்கள். உண்மையை வருவிக்க ஒன்று, அவர்கள் கையை முறுக்க வேண்டும்; அல்லது அவர்களுக்கு யாரிடம் பயமோ, அவர்களைக் கிளப்பிவிட வேண்டும். அப்போது துஷ்டர்கள் சங்கத்தில் சலசலப்பு ஆரம்பித்து விடும். அந்தத் துறையில் சந்துரு வேலை செய்ய விரும்பினான்; வேறு எந்த 'நாடா'வைப் பற்றிக்கொண்டு பிரயத்தனம் செய்து பார்க்கலாம் என்று நினைத்தபடி, மறுபடி சட்டையின் வேறொரு பையில் கைவிட்டு, ஒரு நீண்ட நாடாவையே வெளியில் எடுத்தான்.

அது செங்கல்வராய பிள்ளை அறையிலிருந்து பொறுக்கி எடுத்தது. 'கல்பமணி ட்ரக் ஸ்டோர்ஸ்' என்ற பெயர் அதில் திருப்பித் திருப்பி அச்சடிக்கப்பட்டிருந்தது. திலகவதி அங்கிருந்துதான் வழக்கமாக மருந்து வாங்குவது என்று கூறியதையும் நினைவு படுத்திக் கொண்டான். மருந்து கட்டி வந்த நாடாதான் இது; எப்போது வந்திருக்கிறது? டெலிபோனை அருகில் இழுத்து, அந்த மருந்துக் கடையை அழைத்தான் சந்துரு.



"கொர்ர...கொர்ர...கொர்ர... கொர்ர்ர்—" என்று ஒரு நிமிஷம் மணி அடித்தபின், கிணற்றிலிருந்து கேட்டது போன்ற ஒரு குரல், "யார் அது?" என்று கேட்டது.

சந்துரு அதற்குப் பதில்சொல்லாமல், "'கடை' முதலாளி இருக்கிறார்களா?" என்று திருப்பிக் கேட்டான்.

"முதலாளிதான் பேசுகிறது. நீங்க யாருங்க?"

"உங்கள் பெயர் என்ன?"

"கு—கு — குருசாமி நாய்க்கர்... நீங்க யாருங்க பேசறது?"

"நாங்க போலீஸ்!...செங்கல்வராய பிள்ளை வீட்டிலிருந்து பேசுகிறோம். அவர் மருந்து உங்க கடையில் வாங்குகிறதுதானா?"

ஒருகணம் நிசப்தமே இருந்தது. பிறகு "ஆமாமுங்க... அதுலே தவறு ஒண்ணும் இல்லீங்களே!" என்று பதில் வந்தது.

"தவறு இருந்தால் நான் டெலிபோனில் பேசிக் கொண்டிருக்க மாட்டேன்...அங்கேயே வந்திருப்பேன். கடைசியாக எப்போ மருந்து அனுப்பினீர்கள், சொல்ல முடியுமா கொஞ்சம்?"

"இ-இ-இ-இதோ!...ஏ கோவிந்தா! இங்கே ஓடியா!... வாய்யா, போலீசுலே கூப்பிடறாங்க!"

சற்று நேரம் சந்துருவின் காதில் வேறெதுவுமே கேட்கவில்லை. இரண்டு நிமிஷங்களுக்குப் பிறகு முதலாளியின் குரல் கேட்டது; இப்போது முன்னைவிடத் தெம்பாக இருந்தது அது. "நமக்குச் சொல்லத் தெரியல்லீங்க" இங்கே நம்ம கடையிலே குமாஸ்தா ஒருத்தர் இருக்கிறார்.. தாமோதரன் என்று பேரு. இன்றைக்கு லீவு எடுத்துக் கொண்டு வீட்டிலே இருக்கிற[illegible] சம் தருகிறேன், வீட்டிலே போய்[illegible] இங்கே அனுப்புறது, வாங்கிறது, விக்கிறது எல்லாம்...

சந்துரு டெலிபோனைக் கீழே வைத்தான். 'கல்பமணி ட்ரக் ஸ்டோர்ஸ்' தாமோதரன் வேலை செய்யும் இடம். அவன் முதலாளி ஒரு பயந்தாங்கொள்ளி மனிதன். தாமோதரனோ அதற்கு நேர்எதிர். செங்கல்வராய பிள்ளை எதற்காகக் கல்பமணி ட்ரக் ஸ்டோர்ஸுடன் வியாபார தொடர்பும் வைத்துக்கொள்ளவேண்டும்?—ஊரில் ஆயிரக் கணக்கான கடைகள் இருக்கும்போது? அதுவும், அருகாமையில் நல்ல கடைகள் இருக்கும்போது? காரணம் அகப்படவில்லை.

பிள்ளையின் வீட்டில் தோல் பை ஒன்று காணாமல் போகிறது. ரயிலடியில் தாமோதரனிடம் ஒருஆசாமி தோல் பை ஒன்றைக் கொண்டு வருவதற்கு வழிவகைகளைச் சொல்கிறான். இந்தத் தாமோதரன், செங்கல்வராயபிள்ளை வாடிக்கைக் கடையில் அலுவல் பார்ப்பவன்...இவைகளுக்குள் என்ன தொடர்பு? நடுவில் நின்று பையைக் கொண்டுவரச் சொன்ன ஆசாமி யார்? அதேசமயம் அந்தப் பையைத் தட்டிக் கொண்டு போக இருவர் ஆயத்தம் செய்திருக்கிறார்களே! அவர்களுக்கு எப்படி அன்று அந்தப் 'பை' வருகிறது என்ற உளவு தெரியும்? எப்படி அவர்கள் லிங்கி செட்டித் தெரு வீட்டுக்குச் சென்றார்கள்? இதற்கெல்லாம் உளவு சொல்லிக் கொண்டிருக்கும் ஆசாமி செங்கல்வராய பிள்ளை பங்களாவிலேயே இருந்தாக வேண்டும். அப்படி எனில் அவன் யார்?...அப்படி யாவரும் விரும்பித் தேடும்படி அந்தத் தோல் பையில் இருந்தது என்ன!

சந்துரு தலையைக் குலுக்கி விட்டுக்கொண்டு நிமிர்ந்து உட்கார்ந்தான். பல சிறுசிறு வேர்கள் கிளம்பி வருகின்றன; எல்லாம் ஆணிவேரை வந்து எட்டினால்தான் இந்தக் குழப்பங்களுக்கெல்லாம் அஸ்திவாரம் எதுவென்று தெரியும்.

வாசற்கதவு 'டட்டட்' என்று மெள்ள இடிக்கப்பட்ட சப்தம் கேட்டது. சிறிதும் நகராமல் சந்துரு பொறுத்துக் கேட்டான். மறுபடி 'டட்டட்' என்று தொடர்ந்து கேட்டது.



எழுந்து சென்று கதவைத் திறந்ததும், இரண்டு பேர் வாசற்படிக்கு வெளியே நின்று கொண்டிருந்தார்கள். ஒருவனுக்குச் சுமார் ஐம்பது வயதுக்கு மேல் இருக்கும். சற்றுக் கொழுத்த தேகம். அநேகமாக வழுக்கையான தலையில் வெள்ளைமயிர்கள் சிறுசிறு கொத்தாக இருந்தன மேனி சிவப்பு; அவன் அணிந்திருந்த கறுப்புக் கண்ணாடி வெய்யிலுக்காகவா, அல்லது முகத்தை மறைக்கவா என்று சொல்லமுடியாது. மஞ்சள் புஷ்—கோட்டும், மஞ்சள் நிஜாரும் அணிந்திருந்தான். பேச்சு 'கணீர்' என்று ஸ்பஷ்டமாக இருந்தது; வார்த்தை வார்த்தையாகப் பேசினான்.

அவன் பின்னால் ஒடிசலாக, உயரமாக ஒரு பையன்—இருபத்தைந்து வயதுக்குள் மதிக்கலாம்—நின்று கொண்டிருந்தான். முகத்தைச் சற்று நேரம் பார்ப்பதற்குள் 'இது அசடா! அல்லது, போக்கிரியா? அல்லது கோமாளியா?' என்ற சந்தேகம் உண்டாகி விடும். மிரள மிரள விழித்தான் அவன்; கைகால்கள் ஓயாமல் ஏதோ சேஷ்டைகள் செய்தன. மூக்கையும் உதடுகளையும் எப்படி எப்படியோ சொருகி வளைத்துக் காட்டினான்; கைகளை முறுக்குவதும் பிரிப்பதுமாக இருந்தான். யாரும் பார்க்காத திசையைப் பார்த்து. ஹாஸ்யம் இல்லாத சந்தர்ப்பத்தில் இளித்தான்.

"தாங்கள் சந்துருதானே?" என்று கேட்டான் பெரியவன்; சின்னவன் உதடுகளைச் சுருட்டி, வாயைக் கோணங்கி காட்டினான்.

"இல்லை என்று நான் சொன்னால் நீங்கள் நம்பித் திரும்பிப் போய்விடுவீர்களா?" என்று திருப்பிக் கேட்டான் சந்துரு.

"என் பெயர் ராஜமாணிக்கம்."

"நான் இன்னும் கேட்கவில்லை தங்களை...வந்த காரியம்?"—கடுமையாகவே இருந்தது சந்துருவின் குரல்.

இதற்குள் சின்னவன் ஒரு [illegible] அங்கே பறந்து கொண்டிருந்த [illegible]யைப் பிடிக்க முயன்றான்.

29/05/2011 1

''வெங்கு! உன்னைத்தானே! ...இங்கெல்லாம் விஷமம் செய்யக்கூடாது; சமர்த்தாக இருக்கவேண்டும். 'ஸார்' கோபித்துக் கொள்வார்... (சந்துருவிடம்) வெங்கு என் மருமகன்; வயசாகி விட்டது; விளையாட்டுத்தனம் மட்டும் போகவில்லை!'' என்றான் பெரியவன்.

''உங்கள் பெயரை இவனுக்கு வைத்திருக்கவேண்டும்... மாணிக்கமாக இருக்கிறான்!'' என்றான் சந்துரு.

''ஏதேனும் விளையாட்டுப் பொம்மை இருந்தால் வையுங்கள்; அப்புறம் அவன் இந்தப் பக்கம் திரும்ப வேண்டாம்; சும்மா இருப்பான்!''

சந்துரு சிரிக்காமல், ''ஆகட்டும்; இருக்கிறதா பார்க்கிறேன். நீங்கள் உட்கார்ந்து கொண்டு, வந்த காரியத்தைச் சொல்லலாமே?'' என்றான்.

பெரியவன் உட்கார்ந்து கொண்டான்; சந்துரு எதிரே தன் நாற்காலியில் அமர்ந்து கொள்ள, வெங்கு மட்டும் நின்றபடி அடுத்த சேஷ்டை என்ன செய்யலாம் என்று ஆகாசத்தையும் பூமியையும் மாறி மாறிப் பார்த்துக் கொண்டிருந்தான்.

''நான் வந்த காரியம் மிகவும் முக்கியமானது, மிஸ்டர் சந்துரு!''

''இந்தப் பைத்தியத்தைக் கூட்டிக்கொண்டு வந்த போதே, அதை நான் ஊகித்து விட்டேன்!'' என்றான் சந்துரு.

''அப்படிச் சொல்லாதீர்கள்...பையன் என் தமக்கை மகன்; என் பொறுப்பில் விட்டிருக்கிறார்கள். கொஞ்சம் விஷமம் ஜாஸ்திதான்; விளையாட்டுத்தான். ஆனால், அதற்காக ஒருத்தருக்கு ஒரு கெடுதல் செய்ய மாட்டான்...''

''சந்தோஷம்! அடுத்த தடவை வருகிறபோது, அவனுடன் விளையாட ஒருகுழந்தையைத் தருவித்துவைத்துக் கொள்கிறேன். ஆனால், முன்னதாகச் சொல்லிவிட்டு



மட்டும் வாருங்கள். திடுதிப்பென்று வந்து வைத்தால் பிள்ளை குட்டி இல்லாத நான் எங்கே போவேன்!''

பெரியவன் சற்று விறைத்து உட்கார்ந்து தன் கெடிகாரத்தைப் பார்த்துக் கொண்டான். ''நான் ஒரு முக்கியமான காரியமாக வந்திருப்பதாகச் சொன்னேன் அல்லவா?'' என்று கேட்டான்.

''பையன் விஷயமாக இருந்தால், என்னிடம் சொல்ல வேண்டாம். குணசேகரம், திருவிடை மருதூர், சோளிங்கபுரம் என்று க்ஷேத்திரவாசம் அவனுக்கு அவசியம்; போலீஸில் சும்மா சாட்டை மட்டும்தான் வைத்துக் கொண்டிருக்கிறோம்; இந்தக் கேஸுக்கு அது பிரயோசனப்படாது...உங்களுக்கு வேறு குறை இல்லையே!''

''விஷயம் வேறு என்கிறேன்! இதைக் கவனியுங்கள்!'' என்று சொல்லி, தன்னிடம் இருந்த ஒரு பெரிய மணி பர்ஸைத் திறந்தான். புத்தம் புதிய நூறு ரூபாய் நோட்டு ஒன்றை வெளியே இழுத்து, மேஜை மேல் அதைப் பரப்பினாற்போல் வைத்தான். பிறகு மற்றொன்றை அதே போல் எடுத்து அதன்பக்கத்தில் வைத்தான். இப்படி மூன்றாவது, நான்காவது, ஐந்தாவது நோட்டுகளை அடுக்கி, தனது ஐந்து விரல்களையும் அவற்றின் மேல் வைத்துப் பிடித்துக் கொண்டு சந்துருவின் முகத்தைக் கூர்ந்து பார்த்தான். கையையும் காலையும் அவசர அவசரமாக முறுக்கிவிட்டுக் கொண்டு, உதடுகளைப் பரபரப்பாகச் சப்புக் கொட்டிக் கொண்டு நின்ற வெங்குவைச் சந்துரு ஒரு முறை கவனித்து விட்டு, அசிரத்தையாக மேஜையை உற்று நோக்கினான்.

''ஐந்து நூறு!'' என்று சொல்லி, ராஜமாணிக்கம் தனது மணிபர்ஸை மூடித் தன்னிடம் பத்திரம் செய்து கொண்டான். பிறகு, ''இத்தனை பணமும் உங்களுடையது. எடுத்து வைத்துக் [illegible]ன்.

''ஏன்? இதெல்லாம் உங்களுடைய [illegible] பணம் தானா? இத்தனை தாராளமாகக் கொடுக்கிறீர்களே!''

29/05/2011 13:

''அதில் ஆட்சேபணை என்ன?''

''எனக்குக் கொடுப்பானேன்! தர்ம சத்திரங்கள், ஸ்தாபனங்கள் இருக்கின்றன. அங்கே கொடுக்கலாமே! நான் ஏகாங்கி! இதை வைத்துக்கொண்டு என்ன செய்கிறது? அதுவே ஒரு பெரிய தவிப்பாய்ப் போய்விடும். தவிர, ஒன்றும் இல்லாதபோதே என் அறைக்கு ஜன்னல் வழியாகப் பக்காத் திருட்டுப் பயல்கள் வந்து போகிறார்கள். இது வேறு இருந்து விட்டால் சாதாரணத் திருடர்கள் கூட வர ஆரம்பித்து விடுவார்கள்!'' என்றான்.

''விளையாட்டு இல்லை. இது பண விஷயம் இத்தனை பணமும் உங்களுக்காக ஒதுக்கி வைத்தது. பணத்தைப் பெற்றுக் கொள்ள நிபந்தனை அற்பம், சொற்பம். நீங்கள் யாரையும் தேடக் கூடாது. யாரும் உங்களுக்கு அகப்படவும் மாட்டார்கள்; யாருக்காகவும் வேலை செய்யவும் உமக்கு அவகாசம் கிடையாது; இருந்தாலும் ஏற்றுக் கொள்ள முடியாது; நீர் கண்ணால் யாரையும் பார்க்கவில்லை; காதால் எதையும் கேட்கவில்லை. உமக்கு வேலை வேறு நிரம்ப இருக்கிறது...அவ்வளவே! எடுத்து வைத்துக் கொள்ளும் பணத்தை! நேரமாக்க வேண்டாம்...''

சந்துரு பணத்தை விறைத்துப் பார்த்தான். அந்தச் சமயம் பார்த்து வெங்கு ராஜமணிக்கத்தின் விலாவில் குத்தினான். ''அடே சும்மா இரு. முக்கிய விஷயம் பேசிக் கொண்டிருக்கிறோம், உன் வால்தனம் எல்லாம் வெளியே வைத்துக் கொள்!'' என்று அவனை எச்சரிப்பது போல் பார்த்துவிட்டு, ''மிஸ்டர் சந்துரு! அனாவசியமாக நீர் யோசனை செய்து கொண்டிருக்க வேண்டாம் என்றுதான் நான் வந்திருக்கிறேன்...'' என்றான்.

''உம்மை எனக்குத் தெரியாதே, ராஜமாணிக்கம்! நீர் வந்திருப்பது எனக்கு ஒன்றும் விசேஷம் இல்லை...''

''இருக்கட்டும்; பணத்தைப் பாரும். அதில் கூட விசேஷம் இல்லையா? அற்பவிஷயம் நான் கேட்பது! பணத்தைச் சும்மா கொடுக்கிறோம். இதற்காக நீர் ஒரு வேலை



செய்ய வேண்டாம். நன்றி தெரிவிக்கக்கூட வேண்டாம்; நாங்கள் எதிர்பார்க்கவில்லை; ஒன்றுமே செய்யாமல் இருந்துவிட வேண்டியது...,கப்சிப்...யார் என்ன கேட்டாலும் 'முடியாது' என்று ஒரே வார்த்தை. இப்படி நாலுவார காலம் தள்ளிவிடும். மறுபடி நான் இதேமாதிரி இன்னொரு ஐந்நூறு கொண்டு வருகிறேன்...வெகு எளிதாக நடந்து விடும் காரியம்!''

''டபார்!'' என்று கையை ஓங்கி மேஜைமீது அறைந்தான் வெங்கு. தூக்கி வாரிப் போட்டது இருவருக்கும்.

சந்துரு பல்லைக் கடித்தபடி, ''யாருக்காக ஐயா, இத்தனைக் கரிசனம்!'' என்று கேட்டான்.

''எனக்காகத்தான்; என்னுடைய சௌகரியத்துக்காகத்தான் என்று சொன்னேனே!'' என்று ராஜமாணிக்கம் பசப்பினான்.

''உமக்கு ஏன் இத்தனை அக்கறை?''

''இது என் தொழில், பிறர் க்ஷேமத்துக்காக வேலை செய்வேன். உம்முடைய க்ஷேமமுந்தான் என் கவலை இப்போது...நான் ஒரு 'பிஸினஸ் ஏஜெண்ட்' என்று நினைத்துக் கொள்ளுவேன்!''

''உம்மைப் பற்றி என்ன நினைத்துக் கொள்ளுவது என்று எனக்குச் சொல்லித்தர வேண்டிய அவசியம் இல்லை. பட்டணத்தில் வேலை செய்கிறவர்களுக்குத்தான் சம்பளம். வேலை செய்யாமல் இருப்பதற்கு எனக்குப் பணம் தருகிறேன் என்கிறீரே!''

''ஆமாம்; அது அப்படித்தான். உம்மால் ஒரு ஆசாமிக்குத் தொந்தரை. அந்த ஆசாமி என் நண்பன்; அவனுக்குத் தொந்தரவு இல்லாமல் செய்ய நான் உதவி செய்கிறேன்.''

''யார் ஐயா, அந்தப் புனிதமான நண்பன்? நமக்கும் அவர் பெயர் தெரிந்திருக்க... பதிய வைத்துக்கொள்கிறேன்!''

29/05/2011 13:

ராஜமாணிக்கம் என்று பெயர் சொன்னவன் ஐந்து நூறு ரூபாய் நோட்டுகளையும் சரசரவென்று பொறுக்கினான். சேர்த்து முனையோடு முனை சரியாக அடுக்கினான். அப்படியே சந்துருவின் அருகிலே மேஜையில் தள்ளி, "முன்னாடி உள்ளே எடுத்து வைத்துக் கொள்ளுங்கள், இதனால் ரொம்ப நன்மை உண்டு" என்றான்.

"யாருக்கு நன்மை? எனக்கா? உம்முடைய ஆசாமிக்கா? நீர் எல்லாவற்றிலும் பாதிப் பாதி சொல்லி நிறுத்திக் கொள்கிறீரே, ராஜமாணிக்கம்; உங்கள் பெயரில் கூடப்பாதிதான் நிஜமாக இருக்குமோ என்னமோ!" என்று சிரித்தான் சந்துரு, நோட்டுகளைத் தொடாமலேயே.

பெரியவனுடைய முகம் ஒரு கணம் கறுத்தது. காதுகள் கூடச் சிவந்தன. சவுக்கடி வாங்கினவன் போல் ஒரு தோற்றம்... தான் கசப்பான ஓர் உண்மையைச் சொல்லி விட்டதைச் சந்துரு உணர்ந்தான். உணர்ந்து அதற்காக ஆனந்தப்பட்டான். மறுகணம் எப்படியோ அத்தனை கோபத்தையும் அடக்கிக் கொண்டு "நாம் இப்போது சத்தியத்தைப் பற்றிப் பேசவில்லை. என் பேர் ராஜமாணிக்கமாக இருக்கட்டும் மாணிக்கவேலுவாக இருக்கட்டும். அல்லது வேலுச்சாமியாக இருக்கட்டும். அதைப்பற்றி நீர் கவலைப்படத் தேவை இல்லை. இது நிஜமான பணம்; நாடகத்தில் பால் குடித்ததற்காக, அது போஷாக்கு அளிக்காமல் இருந்துவிடுமா? என்றைக்கும் பணம் பணம் தான்; அதன் மதிப்பை நீர் பெறவேண்டுமானால், சில நிபந்தனைகள்..." என்று தொடங்கினான்.

"செங்கல்வராய பிள்ளையும் இந்திராவும் தனித் தனி இடங்களில்தானே இப்போது இருக்கிறார்கள்?" என்று திடீரென்று கேட்டு வைத்தான் சந்துரு.

ராஜமாணிக்கம் ஒரு சில விநாடிகள் அதிர்ச்சி அடைந்தவன் மாதிரி இருந்தான். தனக்கு ஒன்றுமே புரியவில்லை என்று சாதிப்பது போலவும் காட்டிக்கொண்டான். பிறகு



தலை நிமிர்ந்து, "சந்துரு! நீர் இந்த விவகாரங்களில் உம்முடைய தலையை ரொம்ப நுழைத்துக் கொண்டிருக்கிறீர் என்று தெரிகிறது. உம்முடன் பேசிப் பயன் காண முடியாது என்றும் தோன்றுகிறது..." என்றான்.

"உமக்குத் தோன்றுகிறதை யெல்லாம் சொல்லும்; நான் கேட்டுக்கொண்டே இருக்கிறேன். எனக்கும் பொழுது போகிறமாதிரி இருக்கும்."

ராஜமாணிக்கம் பதில் சொல்லாமல் சிறிது நேரம் சிந்தனையில் ஆழ்ந்திருந்தான். அருகே நின்று நகத்தைக் கடித்துக் கொண்டிருந்த வெங்கு தனது முஷ்டியால் அவன் பின் கழுத்தில் ஒரு குத்துக் குத்தி, "என்ன ஐயா வீண் யோசனை வேண்டிக் கிடக்கிறது! பேசுகிறதானால் பேச வேண்டும். பிரயோசனம் இல்லையானால் எழுந்து வருகிறதானால் எழுந்துவர வேண்டும். சந்துரு ஸாரும் நீயும் வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தால், தண்டத்துக்குப் போது போகவில்லை?" என்றான்.

ராஜமாணிக்கம் அவனை அறைந்து விடுகிற மாதிரி பார்த்து விட்டு சந்துருவிடம், "சரி! நான் வருகிறேன்! என் நண்பனுடன் பேசிப் பார்க்கிறேன்; அவர் அபிப்பிராயம் தெரிந்து கொண்டு மேற்கொண்டு நடவடிக்கைகளைக் கவனிக்கிறேன். இன்னமும் நாம் இருவரும் ஒத்துப் போக வழி இருக்கிறது. நான் மறுபடி உம்மிடம் பேசும் வரை, எல்லாம் வைத்தது வைத்தபடி இருக்கட்டும்... சரிதானே?"

சந்துரு கற்சிலை மாதிரி உட்கார்ந்திருந்தான். சரி என்றும் சொல்லவில்லை, மாட்டேன் என்றும் சொல்லவில்லை. ராஜமாணிக்கமும் பணத்தை எடுத்துக் கொள்ளவில்லை. 'சர்'ரென்று அதை இழுத்து நடு மேஜையில் வைத்தான். 'இது இங்கே இருக்கட்டும்! நீர் வைத்துக் கொள்ளும் ஞாபகத்துக்கு. [illegible] வேலை முடிந்தது" என்றான்.

29/05/2011 13:

வெங்கு இரண்டடிகள் பின்னே தொடர்ந்து வர, ராஜமாணிக்கம வாசற்படியைத் தாண்டி, மாடிப் படியில் இறங்கினான். சந்துரு அசையாமலே உட்கார்ந்திருந்தான்.

ராஜமாணிக்கம் நாலைந்து படிகள் இறங்கும் வரை தயங்கிக் கொண்டிருந்த வெங்கு, பக்கவாட்டில் நண்டு போல் திரும்பவும் சந்துருவின் மேஜையண்டை நகர்ந்து வந்தான். நீண்ட கையை விட்டு, அந்த நோட்டுகளை 'சரக்'கென்று இழுத்து அள்ளிச் சட்டைப்பையில் திணித்துக்கொண்டு, சந்துருவைப் பார்த்து இளித்தான்.

''ஏ! வெங்கு! வா!...எத்தனை நேரம்!'' என்று கீழேயிருந்து ராஜமாணிக்கத்தின் குரல் கேட்டது.

திரும்ப நண்டு போல பக்கவாட்டிலே ஓடி, வாசற்படியில் நின்று ஒரு முறை சந்துருவுக்கு அழகு காட்டி விட்டு, மளமளவென்று இறங்கி ஓடியே போய்விட்டான்.

அவர்கள் இருவரும் சென்றதுமே சந்துரு டெலிபோன் பக்கம் திரும்பினான். இதுவரை காத்திருந்தது போல் அதுவும் 'கண கண' வென்று ஒலிக்கத் தொடங்கியது.

''ஹெல்லோ...யார் பேசுகிறது?'' என்று கேட்டான் சந்துரு.

ஒரு பெண் குரல்—புதிய குரல்—பதில் சொல்லியது. ''நான் யார் என்பது இருக்கட்டும். பிறகு சொல்கிறேன். உங்களைப் பார்க்க வந்திருந்த இரண்டு பேர்களும் போய் விட்டார்களா? இன்னும் இருக்கிறார்களா?''

''போகிறார்கள்...போய்க் கொண்டே இருக்கிறார்கள்.''

''அப்படியானால், உங்களை நான் வந்து பார்க்க வேண்டுமே! சீக்கிரம் காணவேண்டுமே!''

''நீங்கள் யார் என்பதைச் சொல்லவில்லையே!''

''அதை நேரில் சொல்கிறேன், ஒரு முக்கியமான விஷயம்...ஒரு பேராபத்து...நீங்கள் மனது வைத்தால் தவிர்க்கலாம். இங்கிருந்து டெலிபோனில் பேசுவதற்கில்லை... எங்கே உங்களைப் பார்க்கலாம்?...ஒரு இடம் சொல்லுங்கள்...''



''நீங்கள் எங்கிருந்து பேசுகிறீர்கள்?''

''அதையும்கூட நேரில் தான் சொல்லவேண்டும். நான் உங்களை எங்கே வந்து பார்க்கலாம்? உங்கள் வீட்டுக்கு வர மாட்டேன்; அங்கே கூடக் 'காவல்' இருக்கிறது...முக்கியமான விஷயம்...அவசரம்!...''

திடீரென்று அவள் குரல் நின்றது. யாரோ அவள் வாயைப் பொத்தி மேலே பேச முடியாமல் அடக்கின மாதிரி இருந்தது.

'பட்'டென்று ஒரு சத்தம் கேட்டது.

''ஹெல்லோ! ஹெல்லோ!'' என்று பலமுறை சந்துரு கூப்பிட்டுப் பார்த்தான். பதில் ஏதும் கிடைக்கவில்லை.

பேசிக் கொண்டிருந்தவரை யாரோ திடீர் என்று தாக்கி, டெலிபோன் சம்பாஷணையைத் தடுத்து முற்றுப் பெற வைத்திருக்க வேண்டும் என்று ஊகிப்பதைத் தவிர, அப்போது சந்துரு செய்வதற்கு ஒன்றும் இல்லை.

# ஆபத்தும் பேராபத்தும்

சங்கரனும், இந்திராவும் கொண்டு போகப்பட்ட பங்களா மிகச் சிறியதுதான் என்றாலும், அதில் வசதிகளுக்கு ஒன்றும் குறைவில்லை. ஒரு குடும்பம் சௌகரியமாக வாழலாம் என்பதைச் சங்கரன் கவனித்தான்.

அவனை நெட்டித் தள்ளிக் கொண்டு சென்ற தடியன், கழுத்தை இடப் புறமோ வலப்புறமோ திருப்ப முடியாமல் கெட்டியாகப் பிடித்துக் கொண்டே போய் அவனை மாடிப் படிகளின்மீது ஏற்றினான். இந்திரா வேறு வழியின்றிப் பின் தொடர்ந்தாள். மாடியில் இரண்டு அறைகள் இருந்தன. இரண்டு இரும்புக் [illegible] உடனேயே தெரிந்து கொண்டு விடலாம். யாரையேனும்

29/05/2011 13:24

கொண்டு பலாத்காரமாகச் சிறை வைக்கும் நோக்கத்துடனேயே அந்த அறைகள் கட்டப்பட்டிருந்தன என்று கூட ஊகிக்கும்படி இருந்தன.

அறை வாசற்படியை அடைந்ததும் அந்தத் தடியன் சங்கரன் எதிர்பாராத விதமாக, அவன் கழுத்தில் இருந்த கையினாலேயே ஒரு தள்ளு தள்ளினான். அந்த வேகத்தில் எட்டடிக்கு அப்பால் போய்ச் சங்கரன் விழுந்தான். இரு முழங்கால்களும் பலமாகத் தரையில் தாக்கப்பட்டபடியால் அவன் எழுந்திருப்பதற்கே ஐந்து நிமிஷங்கள் பிடித்தன.

"நாயே! தப்பி ஓடி விடலாம் என்று கனவு கண்டு கொண்டிருந்தாயாடா? எங்கே போக முடியும் உன்னாலே ஒரு பெண் பிள்ளையையும் இழுத்துக் கொண்டு ஓட உனக்கு என்ன தைரியம்!"— தடியன் கையை ஓங்கிக் கொண்டு அறைய முன்வந்தான். ஒரு வேளை அவன் அறைந்திருந்தால் சங்கரனும் அவனைத் திருப்பி அறைய முயற்சி செய்து, அங்கே ஒரு சிறு போர் நிகழ்ந்திருக்கும். அறை மூலையிலே வந்து நின்ற இந்திரா, கண்களை அகல விழித்து, இம்மாதிரி நிலையில் என்ன செய்வதென்று அறியாமல் திகைத்து நின்றாள். ஆனால், அப்பேர்ப்பட்டதொரு காட்சி அங்கே யாரும் காண்பதற்கில்லை.

ஒரு ஆள் ஒரு நாற்காலியைச் சுமந்து வந்து போட, அவனைப் பின் பற்றி அங்கே சுந்தரம்பிள்ளை பிரவேசித்து விட்டார். ஏதோ ஒரு மந்திர சக்தியினாலோ, அல்லது மின்சார அதிர்ச்சியினாலோ தாக்குண்டவன் போல் தடியன் தனது ஓங்கின கரத்தைத் தொங்கப் போட்டு, ஒதுங்கி மரியாதையாக நின்று கொண்டான். இந்திரா சுந்தரம் பிள்ளையை முதல் முறையாகத்தான் காண்கிறாள் எனினும் 'இந்த ஆசாமி ஓர் எஜமான் ஸ்தானத்தை வகிப்பவன்; எல்லாருடைய நெஞ்சிலும் பயத்தை வருவிப்பவன் என்பதை எளிதில் ஊகித்துக் கொண்டாள். எனவே அச்சத்துடன், அவனைப் பார்த்தாள். சங்கரனுக்குச் சுந்தரம் பிள்ளை தரிசனம் தருவது இரண்டாம்



முறை. எனவே, அவரை அருவருப்புடன் பார்த்து விட்டு, முகத்தை அப்பால் திருப்பிக் கொண்டான்.

சுந்தரம் பிள்ளை நாற்காலியில் உட்கார்ந்து கொண்டு ஒரு முறை சுற்றிப் பார்த்தார். நிலைமையை அறிந்து கொள்வதற்காகவும் அது இருக்கலாம். சில விநாடிகள் அதிகமாகவே இந்திராவின் முகத்தில் அவர் பார்வை தயங்கி நின்றது. எனினும், அப்போது அதில் விசேஷமாக அக்கறை கொண்டதாகத் தெரியவில்லை. தம் மனத்தில் உள்ளதை மறைத்துக் கொள்வதிலும், பேசுவதிலும் சுந்தரம் பிள்ளை கைதேர்ந்தவர். சங்கரனை மீண்டும் பிடித்து வந்தது ஒரு பெரிய சாதனை என்பதை அவர் ஒப்புக்கொள்ளுவதாகவும் காண்பித்துக் கொள்ளவில்லை. தமக்கு இது சர்வ சாதாரணம், அவருடைய ஆட்கள் தங்கள் கடமையைச் செய்திருக்கிறார்கள் என்ற அலட்சிய பாவனை முகத்தில் தென்பட்டது. உயர்ந்ததை ஒப்புக் கொள்ளுவதனால் பிற்பாடு இந்த ஆட்களுக்குச் சலுகைகள் காட்ட வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும் என்பதை அனுபவ பூர்வமாக உணர்ந்தவராகையால், முகத்தை அதற்கேற்றபடி மாற்றி வைத்துக்கொண்டார். தடியன் கையை ஓங்கிச் சங்கரனை அடிக்கவிருந்ததைக்கூட ஒப்புக் கொள்வதாக இல்லை, அவர் முகபாவம்,

ஒரு சிகரெட்டைக் கொளுத்திக் கையில் வைத்துக் கொண்டு, புருவத்தை நெறித்தபடி இரண்டாம் முறையாகச் சங்கரனை நோக்கினார். 'பலே! நல்ல ஓட்டங் காட்டினாயடா! சின்னப் பயலாக இருந்தாலும், என் தடியர்கள் இரண்டு பேருக்கு மீசையில் மண்காட்டினாயே, அதை நான் மெச்சிக் கொள்கிறேன்' என்கிற பாவனையில் ஒரு விஷமப் புன்னகை [illegible] முகத்தில் விளையாடியது. சிறிது தான், மறுபடி பழைய அகங்கார பாவம் முகத்தைச் சூழ்ந்து கொண்டது.

29/05/2011 13:24

''என்ன! இப்போ என்ன சொல்கிறான் இவன்! மறுபடி ஓடுகிறதாக ஏதேனும் உத்தேசம் இருக்கிறதா?'' என்று இடக்காகக் கேட்டார்.

''எங்கே ஓடுகிறது, எஜமான்! ஒரு வார்த்தை சொன்னால், எலும்பையெல்லாம் நொறுக்கிக் கூடையில் வாரிக் கொண்டாந்திருப்பேன்!'' என்று சொன்னான் தடியன்.

சுந்தரம் பிள்ளை அதை ரசிக்கவில்லை. வெறும் பேச்சு! நேற்று நழுவ விட்டு விட்டு, இப்போது கதைக்கிறான்!' என்ற நினைப்பில் முகத்தை சுணங்கினார்.

சங்கரன் பல்லைக் கடித்துக் கொண்டு, முஷ்டிகளை இறுக்கினான். ''எங்களை எதற்காக வழி மறிக்கிறீர்கள்! என்ன உரிமை இருக்கிறது உங்களுக்கு இங்கே கொண்டு வந்து தள்ள!'' என்று அதட்டிக் கேட்டான்.

''உரிமை ஹஹ்ஹா!'' என்று சிரித்தார் சுந்தரம் பிள்ளை. ''உரிமையையா கேட்கிறாய்! என்னிடமா கேட்கிறாய்? எந்த உரிமையுடன் என் காரியங்களுக்கு நீ குறுக்கே வந்தாய்? அதை நான் முன்னாடி கேட்க வேண்டும் என்றிருக்கிறேன்...தோல் பையுடன் என்ன விளையாட்டு விளையாடியிருக்கிறாய் நீ!''

''விளையாடினதெல்லாம் மற்றவர்கள்தான்! வலுவில் வந்து எங்களுக்குத் தொந்தரவு கொடுத்தார்கள். அதனால் எங்களுக்கு ஏற்பட்டிருக்கிற தொல்லை கொஞ்ச நஞ்சமில்லை. தவிர, இதில நீங்கள் சம்பந்தப்பட்டிருக்கிறீர்கள் என்று நாங்கள் கண்டோமா? அல்லது, எனக்கு முன்பின் தான் தெரியுமா? இரண்டாம் முறையாக நீங்கள் என்னைத் தொந்தரை செய்கிறீர்கள்!''

''தொந்தரை! யாருக்கு யார் தொந்தரை! பையா! இந்த மாதிரி என்னிடம் பேசினால் உன்னை நான் நினைத்தால், பாழுங்கிணற்றில் தள்ளி மூடிவிடுவேன!''

''நேற்றே ஒரு முறை அதைச் சொல்லிவிட்டீர்கள். ஞாபகம் இருக்கிறது. இப்போது இரண்டாம் தடவை, அடிக்கடி தள்ளிப்பழக்கப்பட்ட ஆசாமி என்று தெரிகிறது.



ஆனால், நான் சும்மா விழமாட்டேன்; உம்மையுங்கூட இழுத்துக் கொண்டுதான் விழுவேன்! உம்முடைய மண்டையைப் பிளந்து விட்டுத்தான் விழுவேன்!''—சங்கரன் முஷ்டியை முகத்துக்கு நேரே தூக்கி, பலமாக அசைத்துக் காட்டினான்.

சுந்தரம்பிள்ளை அவனைப்பார்க்கவில்லை. தடியனைப் பார்த்து, ''இவன் கைகளைப் பின்னால் சேர்த்துக் கட்டு; ரொம்ப ஆட்டுகிறான்! எனக்குக் கோபம் வந்தால், தோள் பட்டையோடு கைகளை வெட்டி எடுத்து விடுவேன் என்று சொல்லு!'' என்றார். இரண்டே நிமிஷத்தில் 'தடியன்' தன் வேலையை முடித்தான்.

சங்கரன் ஏளனமாக நகைத்தான். ''பராக்ரமசாலிகள்! பின் கையைக் கட்டி விட்டு, வீரம் பேசப் போகிறீர்கள்! தூ! தூ!'' என்று துப்பினான்.

தடியன் முஷ்டி 'படீர்' என்று ஒரு முறை சங்கரன் முகவாய்க்கட்டையைத் தாக்கியது. பற்கள் மோதிக் கொள்ளும் சப்தம் கேட்டது. மளமளவென்று சங்கரன் முகத்தில் குத்து விழுந்த இடம் வீங்கத் தொடங்கிவிட்டது. 'ஐயோ!' என்று இந்திரா கூவிவிட்டாள். இரண்டாம் முறையும் குத்துவதற்குத் தயாராக இருந்தான் தடியன். சுந்தரம் பிள்ளையின் ஆக்ஞையை எதிர்பார்த்துத் திரும்பினான்.

சுந்தரம் பிள்ளை தடியனைக் கையமர்த்தி நிறுத்தினார். ''உனக்குத் தனி ஆவர்த்தம் பிற்பாடு கொடுக்கிறேன். இப்போ, நான் இவனைச் சில கேள்விகள் கேட்டுப் பார்க்கிறேன்... நீ அப்படி நகர்ந்து நில்!'' என்று ஆக்ஞையிட்டுவிட்டு, ''கேள்விக்குப் பதில் வருமா?'' என்று சங்கரனைக் கேட்டார்.

''கேள்வி கேட்க வேண்டியது நான்! பதில் சொல்ல வேண்டியது நீர்!'' என்றான் சங்கரன் சற்றும் அஞ்சாமல்.

''சிறுபயல் நீ! பயம் இல் [illegible] சொல்: சந்துருவிடம் என்ன சொல்வதற்குப்போனாய் நீ?

29/05/2011 13:2

''அதைச் சந்துருவிடமே கேட்டுத் தெரிந்துகொள்ளும். தவிர, நான் சொன்னதை உள்ளபடி இப்போது கூறினாலும் யார் நம்பப் போகிறார்கள்! 'பொய்! பொய்!' என்பீர்! அந்தப் 'பொய்'யைக் கேட்கவே தேவை இல்லையே!''

''நீ ரொம்பத் தொல்லை கொடுக்கிற நாய்! உன்னை நான் நம்ம வீட்டிலேயே கட்டிப் போட்டு வைக்கப் போகிறேன்!''

''அதையும்தான் முயற்சி செய்து பார்த்தீர்களே?'' என்றான் சங்கரன்.

''ஒருமுறை நடந்த பிசகு மறுபடி நடக்காது!''—சுந்தரம்பிள்ளை சற்றுத் தாழ்ந்து பேசினார்.

''தவறுகள் அடிக்கடி நடந்துகொண்டேயிருக்கின்றன. இந்த அம்மாளைக் கொண்டு வந்து இங்கே அடைப்பது தான் எத்தனை பெரிய தவறு! அவரை உடனே விடுதலை செய்தால் அன்றி, தவறு வளர்ந்து கொண்டே போகும்...''

''சீ! நாய்! சும்மா இரு!... அதிகமாகப் பேசாதே! கடைசியாக ஒரு வார்த்தை சொல்! அந்தப் பையைத் திறந்து நீ விஷமம் செய்தாயா, இல்லையா?''

''எனக்கு முந்தி அதைக் கையாண்ட ஆளிடம் கேட்க வேண்டிய கேள்வி அது. ஆகவே பதில் கிடையாது!''

''நீ திமிர் பிடித்தவன்! உன்னை நான் சரியானபடி தண்டித்துப் பதில் வாங்குகிறேன்...உன் அத்தானை உன் எதிரில் நிறுத்தி, சூடு போட்டுத் தருவிக்கிறேன்!''

சங்கரன் திமிறினான். ''என் அத்தான் மேல் விரல் வைத்தாயோ, அந்த க்ஷணமே உன் உயிர் போகும். நீ யாராக இருந்தாலும் சரி!... இந்த உயிர் எனக்கு லட்சியம் இல்லை... பழிக்குப் பழி வாங்குவேன்!...''

சுந்தரம் பிள்ளை பெரிய ஹாஸ்யத்தைக் கேட்டவர் போல் சிரித்தார். அவர் சங்கரனை எப்படி மடக்கலாம் என்பதைக் கண்டுபிடிக்கவே முயன்றார். அதற்கு இப்போது ஒரு பதில் கிடைத்துவிட்டது. தாமோதரனைக் கொண்டு



வந்து முன்னால் நிறுத்தி, சித்திரவதை செய்தால், இந்தப் பயலைக் கொண்டே விஷயங்களைக் கக்க வைக்கலாம் என்று கண்டு கொண்டார். அவருக்கு ஒரு சந்தேகம்—இந்திராவுக்கும் சங்கரனுக்கும் எப்படிப் பரிச்சயம், எத்தனை காலமாக என்பது பற்றி ஒரு சமயம், அவர்கள் ஒருவரையொருவர் அப்போதே சந்தித்தவர்களாக இருக்கலாமோ என்று எண்ணினார். தம்மீதுள்ள விரோத பாவத்தினால், அவளைக் காப்பாற்றச் சங்கரன் முன் வந்திருக்கலாம் அல்லவா?... எல்லாவற்றிற்கும் அடியில், சங்கரனைப் பற்றி ஒரு 'அபிப்பிராயம்' அவர் நெஞ்சாழத்தில் இருக்கத்தான் செய்தது. சின்னவனாக இருந்தாலும் கெட்டிக்காரப் பயல்! தைரியசாலி! சாமர்த்தியசாலி! அவனை எப்படி அடைத்தாலும் தப்பித்துக் கொள்கிறான்...அதிஜாக்கிரதையாக இருக்க வேண்டும...

'தடிய'னைப் பார்த்தார். ''இவனை இப்படியே விட்டு வை...ஒன்றும் அடிக்கத் தேவை இல்லை. நான் வேறு வழி வைத்திருக்கிறேன்; மண்டி போட வைக்க. இந்தப் பெண்ணை அடுத்த அறைக்கு அனுப்பு! இவர்கள் இரண்டு பேருக்குமே இப்போது நான் ஒரு எச்சரிக்கை செய்கிறேன். இந்த அறையை விட்டுத் தப்பித்துக் கொள்ளலாம் என்று மட்டும் நினைக்காதீர்கள். முயற்சி செய்தீர்களோ, ஆபத்து! என் ஆட்கள் கண்மண் பார்க்காமல் வெட்டிப் போடுவார்கள்...தப்பி ஓடுகிறவர்களுக்கு இரக்கம் காட்ட வேண்டாமென்பது என் உத்தரவு. வேண்டுமானால், உங்கள் அறைகளின் ஜன்னல் வழியாக வெளியே பாருங்கள். அவர்கள் வீட்டைச் சூழ்ந்து கொண்டு நிற்கிறார்கள்... அவ்வளவுதான் நான் சொல்லுவேன்!'' சுந்தரம் பிள்ளை எழுந்து விட்டார்.

இந்திராவை அவர் இப்போது மறுபடி நோக்கினார்; ''உங்கள்மீது எங்களுக்கு [illegible]லை. [illegible] காலத்துக்கு இங்கே இ[illegible] வேண்[illegible] தடையின்றி நடக்கும். உங்களுக்குஒருவிதமான சௌகரியக்

குறைவும் இல்லாமல் பார்த்துக் கொள்வோம். ஏதேனும் குறை இருந்தால் நீங்கள் தாராளமாக எனக்குத் தெரிவிக்கலாம். உடனே பரிகாரம் காணும்படிச் செய்கிறேன்!'' என்றார்.

''என்னை உடனே விடுவிக்கப் போகிறீர்களா, இல்லையா?'' என்று கேட்டாள் இந்திரா.

''அதுதான் சொல்லி விட்டேனே!'' என்று புன்னகை செய்தார் சுந்தரம் பிள்ளை.

''இந்தச் செயலுக்காக மிகவும் வருந்தப் போகிறீர்கள்!''

''அது பின்னால் பார்த்துக் கொள்ளலாம். நீங்கள் என் இல்லத்தில் இருக்கும் வரை எங்களுக்கும் வரை சந்தோஷம்!''

நிற்காமல் சுந்தரம் பிள்ளை வெளியேறிவிட்டார். ஒரு ஆள் உள்ளே வந்து இந்திராவை அடுத்த அறைக்கு வரும்படி அதிகமாகக் கூறினான். மறுத்தால் பலவந்தமாகக் கொண்டு போகப்படும் நிலையை எதிர்பார்த்த இந்திரா ஒருமுறை சங்கரனைப் பார்த்துவிட்டு, அந்த ஆளைப் பின் தொடர்ந்தாள்.

தடியனும், சங்கரனும் தனியே இருந்தார்கள். ''என்னடா சொல்றே நாயே!'' என்று கேட்டான் தடியன்.

''உன் குரைப்பு என் காதில் இனிமேல் விழாது'' என்றான் சங்கரன்.

'பளார்' என்று ஒரு அறை அவன் கன்னத்தில் வைத்து, ''உன் திமிரையெல்லாம் வடித்து விடுகிறேன் வடித்து!'' என்று கர்ஜித்தான் தடியன்.

''உன் எஜமான் எதிரில் இந்தத் துணிச்சல் எங்கே போயிருந்தது. என் கையைக் கட்டிவிட்டு அடிக்கிறாயே; வெட்கமாயில்லை உனக்கு! சீ, மானங்கெட்ட பயல்களா; எத்தனை நாளைக்கு இந்தப் பிழைப்பு!'' என்று கேட்டான்.

மறுபடியும் ஒரு அறை கொடுத்தான் தடியன்.



''ஏய்! நன்றாக அடியடா! மறுபடி உன் 'எஜமான்' வருகிறபோது என் முகத்தைப் பார்க்கட்டும்... உன் முகத்தையும் பார்க்கட்டும்!'' —மின்னல் வேகத்தில் சங்கரன் தன் காலால் தடியனுடைய முழங்காலை வெடுக்கென்று உதைத்து விட்டான். உதையின் பலம் வெகு அதிகமாக இருக்க வேண்டும். தவிர, அந்த உதையைத் தடியன் எதிர் பார்க்கவில்லை. ஆகையால், அடிபெயர்ந்த மரம் போல் 'தொப்'பென்று விழுந்து விட்டான்.

மறுகணம் ஜிவ்வென்று சிவந்து முகத்துடன் வாரிச் சுருட்டிக் கொண்டு எழுந்தான்... ''ஏய்! ஏய்!'' என்று குத்துவதற்குத் தயாராக முஷ்டிகளை ஓங்கியும் விட்டான்.

''என்ன இங்கே சண்டை உங்களுக்குள்ளே...! வா, ஐயா! அவனைச் சும்மா விடு! அதெல்லாம் அவங்க கவனித்துக் கொள்கிறாங்க! அதுக்கு மேலே நாம் என்ன செய்யப் போகிறோம்!... உன்னை 'எஜமான்' அவசரமாகக் கூப்பிடுறு!... விடு அதோடே!'' என்று கூப்பிட்டுக் கொண்டு ஒரு ஆள் வந்து விட்டான்.

தடியன் கோபம் மறைந்தது; சங்கரனைப் பார்த்துத் தலையை ஆட்டிக் கறுவினான்: ''இரு, இரு! உன்கிட்டே உதை தின்னாமல் நீ சாவப் போகிறதில்லை!'' என்றான்.

மற்றவன் அவனுடைய கையைப் பற்றி இழுத்து, ''கிடக்கிறான்! அப்பாவி! என்னைக் கேட்டால், ஒரு நல்ல சாப்பாடு போட்டு, ஹல்வா, ஜிலேபி, குலோப்ஜான் எல்லாம் கொடுத்து, 'பாவி, இதுக்கெல்லாம் கொடுத்து வைக்காம சாவறியே!' என்று கேட்டு விட்டுக் கொல்லணும் இவனை!'' என்று சொல்லிக் கொண்டே தடியனை அழைத்துப் போனான்.

சங்கரன் இருந்த அறைக் கதவை அறைந்து சாத்தி, வெளிப்புறம் பூட்டிக் கொண்டு போனார்கள்.

தனியே விடப்பட்ட சங்கரன் [illegible] முயற்சி செய்து பின் [illegible] கொண்டான். எனினும் வெகு நேரம் கட்டப்பட்டிருந்த

29/05/2011 13:2

தால் கைகள் மரத்துப் போயிருந்தன; சுய உணர்வு பெற அரை மணி நேரம் பிடித்தது. அறையினுள் ஒரு இரும்புக் கட்டிலும் ஒரே ஒருகனத்த போர்வையும், இரு தலையணைகளுமே இருந்தன. ஒரு ஜன்னல் அடியில் ஒரு மண் பானையும் பித்தளைக் குவளையும் கிடந்தன. பானையில் இருந்த ஜலம் அடைந்திருந்த குளிர்ச்சியிலிருந்து, அது குறைந்த பட்சம் இருபத்து நான்கு மணி நேரமாவது இருந்திருக்க வேண்டும் என்று ஊகித்தான். இரு டம்ளர்கள் ஜலத்தைப் பருகி, முகத்தையும் அதனால் துடைத்துக் கொண்ட பின்பு, அவனுக்குச் சிறிது தெளிவு ஏற்பட்டது.

சங்கரன் இருந்த நிலைமை மிக மோசமானது என்பதில் சந்தேகம் இல்லை. அது ஒரு சிறைச்சாலையே. ஜன்னல்களில் எல்லாம் இரும்புக் கம்பிகள் நெருக்கமாக இருந்தன. ஒரே கதவும் கெட்டியான பர்மா தேக்கு மரத்தில் கனமாகச் செய்யப்பட்டிருந்தது. உயரே தளம். தேக்கு மரச் சட்டங்கள் போடப்பட்டு, பதினோரடி உயரத்தில் இருந்தது. பொறியில் அகப்பட்ட எலியின் நிலையில் இருந்தான் அவன்.

நேரம் சென்று கொண்டே யிருந்தது. யோசித்து யோசித்து அவனுக்கு மண்டையை வலித்தது. ஜன்னல்கள் வெளிச்சத்துடன், அறையில் சதுரமாக சூரிய வெளிச்சம் விழுந்து, மணி ஏற ஏற, அறையின் மத்திய பாகத்தை நோக்கிச் சென்று கொண்டிருந்தது.

சரியாக நடுப்பகலில், அந்த வெளிச்சம் நெட்டக் குத்தலாக அறையின் மையத்தில் இறங்கியது. திடீர் என்று ஒரு யோசனை உதயமாகி விட்டது சங்கரனுக்கு. இதுவும் ஒரு வழிதானா? நடக்குமா? பரீட்சை செய்து பார்க்கலாமா?—

அறைக் கதவைத் திறந்து கொண்டு, தவசுப்பிள்ளை ஒரு தட்டில் பிசைந்த சாதத்துடன் வந்தான். அவன் பின் பாதுகாப்புக்கு இரண்டு ஆட்கள் அறைக்கு வெளியே நிற்பதைச் சங்கரன் கவனித்தான். அவர்கள் வரா



விட்டாலும் இப்போது ஓடித் தப்பித்துக் கொள்ளும் எண்ணம் சங்கரனுக்கு இல்லை. ஓடினால், ஓடுவதானால், இந்திராவுக்கு ஒரு ஏற்பாடு செய்து விட்டுத்தான் போக வேண்டும். அவன் பெயரைக்கூட இன்னும் அவளிடம் சொல்லவில்லையே! தவிர, சுந்தரம் பிள்ளை எச்சரிக்கை செய்தபோது, அவர் வார்த்தைகளிலிருந்த அழுத்தம், அவர் உண்மையே பேசுகிறார் என்பதைக் காட்டுவதாக இருந்தது.

''தம்பி! என்னை 'டிமிக்கி' கொடுத்தாயே!'' என்றான் தவசுப்பிள்ளை.

''ஒன்றும் பேச வேண்டாம்... 'எஜமான்' உத்தரவு!'' என்று ஞாபகப்படுத்தினான் வெளியே இருந்த ஆட்களில் ஒருவன். தவசுப்பிள்ளை மௌனமாகி விட்டான்.

அப்படியே தவசுப்பிள்ளை பேச்சு கொடுத்திருந்தால் கூட, சங்கரன் பதில் சொல்லும் நிலையில் இல்லை. அவன் மனம் தீவிரமான ஒரு திட்டத்தைப் போட்டுக் கொண்டிருந்தது. மறுபடி எப்போது இவர்கள் கதவை அடைத்துக் கொண்டு வெளியே செல்வார்கள் என்றுதான் காத்திருந்தான். அவர்கள் உள்ளே இருந்த ஒவ்வொரு நிமிஷமும் ஒவ்வொரு யுகமாகத் தோன்றியது. கடைசியில் அவர்கள் வெளியேறியதும் ஒரு நீண்ட பெருமூச்சு விட்டான்.

ஃ ஃ ஃ

கதவு சாத்தப்பட்டது. உடனே சங்கரன் அறையெங்கும் மூலை முடுக்குகளையெல்லாம் தேடித் தேடித் துழாவலானான். ஒரு சிறு இரும்புப் பட்டம் கிடந்தது; அதை எடுத்துச் சோதனை செய்து அரை மனத்துடன் இடுப்பில் சொருகிக் கொண்டான். மறுபடி தேடியதுபோது, விரல் பருமனில் எட்டங்குல நீளத்தில் ஒரு இரும்புக் கம்பி அகப்பட்டது. அதையும் இடுப்பில் சொருகிக் கொண்டான்.

ஞாபகமாக ஓடி, அறையின் உட்புறத் தாழ்ப்பாளைப் போட்டு வந்தான். சாவித் [illegible] வெளிப்புறம் சாவியைச் சொருகியிருந்தப[illegible] இருந்த[illegible] அதை ஒன்றும் செய்து கொள்வதற்கில்லை. அடுத்தபடி

29/05/2011 13:

யாக, அதிக சப்தம் செய்யாமல், இரும்புக் கட்டிலை, அறையின் மத்திய பாகத்துக்கு இழுத்தான். மூன்றரை அடி அகலமும் சுமார் ஆறு அடி நீளமும் இருந்தது அது; ஆனால் வெகு பளுவாக இருந்தது. அதை நெட்டக் குத்தலாக நடுவே நிறுத்துவதற்குள் அவன் மிகவும் பிரயாசைப்பட்டு விட்டான்

அதன்பின், நாற்காலியை அதன் அருகே இழுத்துப் போட்டு, அதன் இரு கைகளின் மேலும் கால்களை வைத்து ஏறினான். பிறகு, கட்டிலை வெகு லாகவமாகப் பிடித்துக் கொண்டு, நாற்காலியின் சாய்மானச் சட்டத்தின் மேல் இரு கால்களையும் வைத்து ஏறி ஒரு சர்க்கஸ் வேலையே செய்தான்.

கடைசிக் கட்டம், நாற்காலியிலிருந்து கட்டிலின் மேல் தாவுவது. ஏறும்போது, கட்டில் குடை சாய்ந்ததோ, அந்தச் சத்தத்தில் வீடு பூராவும் அங்கே வந்து கூடி விடும். மிகமிக ஜாக்கிரதையாகச் சங்கரன் ஏறினான்; ஏறியவுடனேயே, உயரேயுள்ள குறுக்குச் சட்டங்களைப் பிடித்து நிதானப் படுத்திக் கொண்டு, வெளிச்சத்திற்காகக் கண்ணாடி பதித்து வைக்கப்பட்டிருக்கும் துவாரத்தின்மீது கவனம் செலுத்தினான்.

கீழே இருந்து பார்க்கும்போது சதுரமாக இருந்த அந்தத் துவாரம் சிறியதாகத் தோன்றியது. இப்போது அருகில் பார்த்தபோது தெளிவாகத் தாராளமாக அவன் நுழையும் அளவுக்கு இருந்தது. அவன் தலையை நுழைத்து உச்சந் தலையினால் கண்ணாடியை ஒரு முட்டு முட்டினான். மெள்ளத்தான்; ஆனாலும், மனத்திற்கு இன்பமும் ஆறுதலும் அளிக்கும் ஒரு சப்தத்துடன் அது நகர்ந்து கொடுத்தது. மறுபடி ஒரு முட்டு; கண்ணாடி அலக்காக இடம் பெயர்ந்து நகர்ந்து விட்டது! ஆனால் நாலாபுறமும் அதைப் பதிய வைத்திருந்த காரை கரடு முரடாக நீட்டிக் கொண்டிருந்தது.

சங்கரனுடைய சந்தோஷம் சொல்லி முடியாது. இடுப்பில் சொருகி இருந்த இரும்புப் பட்டத்தையும் கம்பியையும் வெளியே எடுத்தான். அரை மணி நேரம் முனைந்து வேலை செய்தான். வியர்வை ஆறாக வழிவதையும், கைகளில் சிறாய்த்து ரத்தம் கசிவதையும்கூட லட்சியம் செய்தவன் இல்லை அவன். ஓரங்களை ஒழுங்கு செய்தான். அதன் வழியே தலையை விட்டு வெளியே நோக்கினான். அவன் கண்டது வெறும் மொட்டை மாடி; கைப்பிடிச் சுவர் கூடக் கிடையாது. யாரும் அங்கே ஏறுவதற்கு நேரான வழி கிடையாது; அதுவும் சௌகரியம்தான்; ஆனால் அங்கிருந்து வெளியே தப்பித்துக் கொள்ள மார்க்கம்?



சங்கரன் வந்த வழியே திரும்பினான். அதே கவனத்துடன் தரையில் இறங்கி, கட்டிலையும் நாற்காலியையும் அவை இருந்த இடங்களில் போட்டு விட்டுத் தீவிரமாக யோசனையில் ஆழ்ந்தான். வெளியேறுவதென்றால், அஸ்தமனத்திற்குப் பின்னரே அது சாத்தியமாகும். பகலில் எத்தனை ஜாக்கிரதையாக இறங்கினாலும் யார் கண்ணிலேனும் படாமல் தப்ப முடியாது.

கட்டிலில் கிடந்த 'பெட்ஷீட்'டைப் பார்த்ததும் ஒரு புதிய யோசனை தோன்றியது. இதையே ஒரே நீளத்தில் கிழித்து, முறுக்கி, ஒரு கயிறாகச் செய்து கொண்டு, ஒரு முனையை மழைத் தாரை விழுவதற்கு விடப்பட்டிருக்கும் துவாரம் ஒன்றில் கொடுத்து, இரும்புக்கம்பியைக் குறுக்கே கட்டி விட்டால்—ஒரு நூலேணி மாதிரி ஆகிவிடுமே!

பிறகு கணக்குப் போட்டான். அவன் இருந்தது முதல் மாடி. இரண்டாம் மாடியின் தளம் இருபத்திரண்டு முதல் இருபத்திநான்கு அடி வரையில் இருக்கும். இவன் செய்யும் நூலேணி உயர்ந்தால் பத்தடிக்கு மேல் வராதே? விரல்களிலிருந்து நகங்களையெல்லாம் கடித்துத் துப்பி, மூளையைச் சவுக்கால் அடித்தான், பத்தடி ஆழத்தைக் குதித்துத்தான் ஆக வேண்டும். கீழே சிமெண்ட் தரையோ, கடப்பைக் கல்லோ, வேறெதுவோ இருந்து, அதன்மீது அவன் குதித்தால் எத்தனை சத்தம் கே[illegible]

29/05/2011 13:

ஒருகால் அவன் எலும்பு முறிந்து போனால்? அல்லது, காவலாளிகள் கையில் சிக்கிக் கொண்டால்? யோசனை தடைப்பட்டு நின்றது.

சங்கரன் சாய்ந்து கொண்டான். சடக்கென்று நிமிர்ந்து, கட்டிலில் இருந்த இரு தலையணைகளையும் நிதானித்தான். ''ஓ! இங்கே இருக்கிறதே வழி! ஏன் இதுகாறும் தோன்றவில்லை? தலையணைகளை முன்னே எறிந்துவிட்டு, அவற்றின் மேல் குதித்தால், அடிபட்டு விடுமோ? அல்லது சத்தம்தான் கேட்டு விடுமா!''

ஃ ஃ ஃ

மாலை நெருங்கியது. அறையில் மெள்ள இருள் பரவியது. சுந்தரம் பிள்ளையும் வரவில்லை; அதற்குக் காரணமும் தெரியவில்லை. ஒருகால் தாமோதரன் அகப் பட்டிருக்க மாட்டான்; அல்லது, இரவில் வரலாம் என்று ஒத்திப் போட்டிருக்கலாம்; அல்லது, வேறு எதிர்பாராத காரணங்களும் இருக்கலாம். மறுபடி சுந்தரம் பிள்ளையைச் சந்திக்கும்போது மட்டும் அபாயம் எப்போதையும்விட அதிகமாக இருக்கும் என்பதில் சந்தேகமில்லை. இடையில் இந்திரா எப்படி இருக்கிறாளோ! அவளைக் கண்டு தைரியம் சொல்லக்கூட இயலாத நிலையில் விட்டுப் போவதா? என்ற எண்ணமும் பளிச்சிட்டது.

எங்கோ ஏழு மணி அடித்தது. ஜன்னல் வழியே பார்த்த போது, தொலைவில் தெரிந்த ரஸ்தாக்களில் ஓடும் மோட் டார் வண்டிகளின் முன் விளக்குகளை அவன் கண்டான். எப்படியோ தப்பித்துக்கொண்டு மெயின்ரோடைப் பிடித்து விட்டால், அப்புறம் பயம் துளிக்கூட இல்லை.

சங்கரன் ஒருமுறை தன் இஷ்ட தெய்வத்தைப் பிரார்த்தனை செய்து கொண்டான். பிறகு கட்டிலை முன் போலவே நிமிர்த்தி நிறுத்தினான். தலையணைகளையும் பெட்ஷீட்டால் முறுக்கிய கயிற்றையும் தலையில் சுமந்து கொண்டான். நாற்காலியை அருகே இழுத்துப் போட்டுக் கொண்டு, பழையபடி மெள்ள ஏறினான். இப்போது



கட்டிலில் ஏறியபோது, அது ஆடிய பேயாட்டத்தில், நிச்சயம் கீழே விழுந்துவிடுவோம் என்று பயந்தேவிட்டான். வெறும் ஆளாக ஏறுவதற்கும், தலையில் சுமையுடன் ஏறு வதற்கும் வித்தியாசம் உண்டல்லவா?

முதல் முதலாகத் தலையணைகளையும், கயிற்றையும் வெளியே துவாரம் வழியே தள்ளிவிட்டு, அவன் பின்னரே நுழைந்தான். திட்டமெல்லாம் யோசனை என்ற முறையில் வெகு எளிதாக்கப்பட்டதென்றாலும், செய்து பார்க்கும் போது வெகு கடினமாக இருந்தன. முக்கியமாக, அந்தத் துவாரம் வழியே வெளியே செல்வது அநேகமாக இயலாது என்றே தோன்றி விட்டது. கைகளை உபயோகித்து எழும்ப முடியாத நிலையில், பல நிமிஷங்கள் அந்தத் துவாரம் வழியே தொங்கினான். தப்புவது என்ற எண்ணத்தையே கைவிட்டு விடுவோமா என்ற மனத் தளர்ச்சிகூட எட்டிப் பார்த்தது. உடலை வளைத்து, மூச்சை இறுகப் பிடித்து, எப்படியோ வலது கையை விடுவித்துக்கொண்டான். பிறகு கை சோர்ந்து போகும் அளவு வேலை செய்து, இடது கைக்கு விடுதலை வாங்கிக் கொடுத்தான். இரு கைகளும் தளத்துக்கு மேல் வந்தபின் ஒரு பெருமூச்சு விட்டான். 'அப்பாடா! இனி கவலை இல்லை! இரு கைகளையும் வைத்து எழும்பி விடலாம்'... எழும்பியும் விட்டான்.

நேரே எழுந்து நின்றால், யார் கண்ணிலும் பட்டு விடலாம் என்று தவழ்ந்தபடியே சென்றான். பதினைந் தடிக்கு அப்பால் அதேபோல் ஒரு கண்ணாடி. அதனுள் எட்டிப் பார்த்தால் இந்திராவின் அறையுள் பார்க்க முடிந்தது. இந்திரா சோர்ந்து படுத்திருந்தாள்; முகம் கைகளுள் பதிந்து மறைந்திருந்தது. இரண்டடிக்கு அப்பால் ஒரு பருமனான ஸ்திரீ காவலுக்கு உட்கார்ந்திருந்தாள். இந்த நிலையில் அவன் எந்தச் செய்தியையும் அவளுக்குக் கொடுக்க இயலாது. எப்படியோ, தப்பித்துச் சென்று சி. ஐ. டி. சந்துருவிடம் தகவலைச் சொல்லிவிட வேண்டும். அப்புறம் கவனித்துக் கொ...

29/05/2011 13:2

தளத்தின் ஓரமாக வந்தான். கீழே அவன் எதிர்பார்த்த படி இருபதடிக்குக் குறையாத ஆழம். மெள்ள ஒரு தலையணையைப் போட்டான். சத்தம் அதிகம் இன்றி அது விழுந்தது. அதைப் பின் தொடர்ந்து மற்றொன்றையும் அனுப்பினான். அது முதல் தலையணையை ஒட்டினாற் போல் விழுந்தது. சிறிது நேரம் உன்னிப்பாகக் கவனித்தான். ஒரு சந்தடியும் இல்லை. அதுவரை அதிர்ஷ்டமே.

'பெட்ஷீட்'டை முறுக்கிய கயிற்றின் ஒரு நுனியில் இரும்புப் பட்டத்தை மாட்டி, அதைச் சுவர்த் துவாரத்தில் பொருத்தி, நூலேணிபோல் தொங்க விட்டான். அதிக நேரம் தாமதியாமல் மளமளவென்று இறங்கினான். கயிற்றின் இறுதியை அடைந்ததும், கணக்கில் ஏதோ தவறு இருந்திருக்க வேண்டும் என்ற திகில் உண்டாயிற்று. பத்தடிக்கு மேலேயே குதிக்க வேண்டிய தூரம் இருந்தது! என்ன செய்வது? மீண்டும் மேலே ஏறுவதென்பது இப்போது நினைக்க முடியாத காரியம்; குதிப்பது என்ன ஆபத்தில் கொண்டு விடுமோ!—இப்படி ஒரு புரியாத நிலையில் தத்தளித்த சங்கரனுக்கு அந்தக் கயிறே ஒரு தீர்மானம் செய்து கொடுத்தது.

'மளக்'கென்று அது எங்கோ அறுந்து போயிற்று. இதுகாறும் அவன் கனத்தைத் தாங்கியதே ஒரு பேரதிசயம் என்று நிருபிப்பது போல் இருந்தது அது! கீழே விழுந்தான் சங்கரன்; ஆனால், தலையணையின் உதவியால் அடிபட வில்லை; ஒரு அதிர்ச்சியை மட்டும் தவிர்க்க முடியவில்லை.

உட்கார்ந்து விட்ட சங்கரன், பதினைந்து நிமிஷம் தன் நிலைமையை நிதானித்தான். அவன் அநேகமாக வெற்றி பெற்று விட்டான்!

ஃ ஃ ஃ

சங்கரன் உட்கார்ந்திருந்த இடத்திற்கும் வாசற் படிக்கும் இடையில் இருபத்தைந்து அடிகளே இருக்கும். ஆனால் அதில் பதினைந்தபடி தூரம் வெளிச்சமாக இருந் தது. அதைத் தாண்டும்போது யாரேனும் நிச்சயம் வந்து



விடுவார்கள். தவிர, வாசற்படிக்கு அப்பால் ஒரு ஆள் காவலாக நின்றுகொண்டிருந்தான். இதற்கு முன் அவனைச் சங்கரன் பார்த்ததில்லை. எனினும், சங்கரனை அவன் வெளியில் விடமாட்டான்; வழி மறிப்பான்... முக்காலே மூன்று வீசம் கிணறு தாண்டி விட்டான்.

வாசலில் ஒரு கார் வந்து நின்றது. அதிலிருந்து சுந்தரம் பிள்ளை இறங்கினார். அவர் பின்னே—சங்கரன் உடல் துடிதுடித்தது!— தாமோதரம் இறக்கப்பட்டான். அவன் இப்படி அப்படி நகராதபடி இரு முரடர்கள் இரு பக்கமும் நடந்தார்கள். பிறகு கார் நகர்ந்து விட்டது.

உள் வாசற்படியண்டை வந்ததும் சுந்தரம் பிள்ளை நின்று அவர்களை முன்னே அனுப்பினார். ஒரு நிமிஷம் நெற்றியைத் தடவி ஏதோ யோசனை செய்தார். வெளியே காவல் நின்ற ஆளைச் சமிக்ஞை செய்து அழைத்து மெதுவாக என்னவோ சொன்னார். அதைக் கேட்டுவிட்டு அவன் விரைந்து உள்ளே ஓடினான். அவனைப் பின் தொடர்ந்து சுந்தரம் பிள்ளையும் சென்றார்.

சங்கரன் இதயத்தில் பல எண்ணங்கள். இன்னும் பத்து நிமிஷம் அவன் தாமதித்தாலுங்கூட, சங்கரன் தப்பித்துக் கொண்டு விட்டான் என்பதை அவர் கண்டு பிடித்து விடுவார். தேடுவதென்று தொடங்கி விட்டால் அகப்பட்டுக் கொள்வதைத் தவிர வேறு வழி இல்லை. இப்போது தாமோதரத்துக்கு ஏதேனும் அபாயம் நேருமோ என்றால், நேரக்கூடும். அதுவும் சங்கரன் பிடிபட்டால் அதிக அபாயம் இருக்கிறது. எனவே, பின்தங்கி பிடிபடுவதனால், நன்மை யும் இல்லை; கெடுதியும் அதிகம்.

மேலும், வாசற்புறம் இப்போது அதிர்ஷ்டவசமாகக் காலியாக இருக்கிறது. இந்தச் சந்தர்ப்பத்தை நழுவ விட்டால், வேறு சந்தர்ப்பம் கிடைப்பது அரிதினும் அரிது.

பல்லைக் கடித்துக்கொண்டு சங்கரன் எழுந்தான். தைரியமாக நடந்து, வெளிச்சத்தைத் தாண்டி,

29/05/2011 13:

'கேட்'டைக் கடந்து விட்டான். உடல் எல்லாம் மயிர்க் கூச்செறிந்தது. எத்தனை பெரிய ஆபத்து அது! சுரணம் தப்பினால் மரணம். ஒரு க்ஷண நேரம் காம்பவுண்டுச் சுவரின் ஓரம் பதுங்கி நிதானித்தான்; மறு க்ஷணம் வேகமாகத் தெரு ஓரமாக ஓடிக் கொண்டிருந்தான்.

இதற்குள் நன்றாக இருட்டிவிட்டது. பத்தடி தூரத்தில் வருபவர் கூடத் தெரியப் பிரமேயம் இல்லை. வயல் வரப்புகளின் குறுக்கே அவன் விழுந்தடித்து ஓடலானான். நடுநடுவே நின்று திரும்பிப் பார்த்தான். அந்தச் சிறிய பங்களாவில் எவ்விதப் பரபரப்பும் தெரியவில்லை. வாசற்புறம் எரிந்த விளக்கில் ஜன நடமாட்டம் கூடக் காணோம். இன்னும் அவன் ஓடி விட்டதைக் கண்டு கொள்ளவில்லை போலும்!

இருபது நிமிஷம் ஓடின பிறகு தார் ரோடை அடைந்தான் சங்கரன். அவன் வந்து சேருவதற்கும், ஒரு பஸ் வருவதற்கும் சரியாக இருந்தது. டவுன் செல்லும் பஸ் அது. கையைக் காட்டியதும், டிரைவர் நிறுத்தி விட்டான். தாவி ஏறிக் கொண்ட சங்கரனிடம் கண்டக்டர், ''ஏன் ஐயா! 'ஸ்டாப்'பிலே நிக்காமே, துரைக் கணக்கா கண்ட இடத்திலே வண்டியை நிப்பாட்டிறியே!'' என்று சினந்து கொண்டான்.

சங்கரனுக்கு இருந்த உள்ளப் பூரிப்பில் அதைக் குற்றமாகவே எடுத்துக்கொள்ளத் தோன்றவில்லை. ஒரு ரூபாய் நோட்டைக் கொடுத்து விட்டுச் சில்லறை வாங்கிக் கொள்ளக்கூட மறந்து விட்டான் அவன்! எப்படியோ ஓட வேண்டும்; சந்துருவைக் காண வேண்டும்; நடந்ததையெல்லாம் சொல்ல வேண்டும்; அன்றிரவே அப்போதே வந்து, தாமோதரத்தையும் இந்திராவையும் மீட்க வேண்டும்! இடையில் ஒரு எண்ணம். அவன் தப்பிவிட்டதைக் கண்டு சுந்தரம் பிள்ளை எப்படியெல்லாம் குதிப்பான்; சீறுவான்; அவன் ஆட்களைக் கண்டிப்பான்! அந்தத் தடியன் அப்புறம் ஒருமுறை வந்து அறையப் போவதாகச் சவால் விடுத்தானே! எத்தனை ஏமாற்றம் அவனுக்கு!



மவுண்ட் ரோடை பஸ் அடையும்போது எட்டரை மணி. சங்கரன் இறங்கியதை அங்கே ஒதுப்புறமாக நின்ற இரண்டு ஆசாமிகள் கவனித்து ஒருவருக்கொருவர் ஜாடை செய்து கொண்டார்கள். இதைச் சங்கரன் அறியவில்லை. அறிந்து கொண்டிருந்தால், அப்படி அவன் அந்தச் சந்தின் வழியே சென்றிருக்கவே மாட்டான்.

அந்த இருவரும் வேகமாகச் சங்கரனைப் பின்தொடர்ந்தார்கள். நிர்மானுஷ்யமாக இருந்தது. சந்து நடுவில் சென்ற சங்கரன் இருபுறமும் இரு ஆட்களும் வருவது கண்டு திரும்பிப் பார்த்தான். இரு ஆட்களும் அவன் இரு கைகளையும் தங்கள் கைகளுடன் கோத்துக் கொண்டார்கள்.

''பேசாமல் வந்து விடு! இல்லையோ, இங்கேயே குத்திப் போட்டு விடுவோம்!'' என்றான் ஒருவன்.

மற்றவன், ''அது கூடத் தேவை இல்லை. கழுத்தை நான் நெரித்துவிட மாட்டேனா?'' என்றான்.

சங்கரன் மாறி மாறி இருவரையும் பார்த்தான். புதிய முகங்கள் அல்ல அவைகள். 'ஏழு'ம், ரத்தினமும் எப்படியோ அவனைக் கைப்பற்றி விட்டார்கள். ஒரு ஆபத்தில் தப்பி, மற்றொரு பேராபத்தில் சிக்கிக் கொண்டதைச் சங்கரன் உணர்ந்தான். நெஞ்சு வரண்டது. ''ஐயோ! சுந்தரம் பிள்ளை வீட்டில் அத்தான் கதி? அந்தப் பெண் என்ன ஆவது?''

சங்கரன் தலைமேல் ஒரு யானை தன் காலை வைத்தது போல் ஒரு பிரமை ஏற்பட்டது. அப்புறம் எடுக்க மறுத்தது அது. பிறகு, அவன் கால்களை யாரோ அவனுக்குத் தெரியாமல் வெட்டிவிட்ட மாதிரியும் இருந்தது. ஆனால் அவன் கீழே விழவில்லை. அவன் உடம்பே காற்றில் பறந்து செல்கிற மாதிரி இருந்தது. நினைவு சுழன்று கொண்டே இருந்தது.

குள்ளன் யாரிடமோ சொல்லிக் கொண்டிருந்தான்—''இவரு நம்ம பெரியம்மா மகன் [illegible] தான் மயக்கம் வரும். இதற்காக [illegible]

29/05/2011 1

தில்லை. அண்ணாச்சியோ நானோ இவரு எங்கே போனாலும் கூடவே வருவோம்... சீக்கிரம் ஒரு வண்டி பாருங்க! அரை மணி தூங்கினார்னா, அப்பாலே எழுந்திடுவாரு!'' என்று.

வண்டியில் அவனை யாரோ கிடத்தினார்கள். குதிரையின் குளம்புச் சப்தம் கேட்டது; அதன் கொண்டையில் கட்டின கோழி இறகுகள் ஆடுவது தெரிந்தது; அடிக்கடி வண்டி ஓட்டத்தில் பக்கவாட்டில் அவன் இடித்துக் கொண்டான். ஆனால் கை கால்களை நகர்த்தவோ, வாய் திறந்து ஒரு வார்த்தை பேசவோ சக்தி இழந்து போயிருந்தான்.

# ஸி.ஐ.டி சந்துரு

## 2

**தேவன்**



29/05/2011 13:52

# சியாம்லால் சாந்திலால் ஸேட்

தேனாம்பேட்டை பங்களாவிலிருந்து சந்துரு விடை பெற்றுக்கொண்டு சென்ற சில நிமிஷங்களுக்கெல்லாம், நாராயணன் எழுந்தான். மதுரநாயகத்தைப் பார்த்து லேசாக ஒரு புன்னகை செய்தான்; பிறகு திலகவதியிடம், "நான் மேலும் இங்கேயே தங்கியிருப்பதில் பிரயோசனம் இல்லை. இன்று முதல் என் ஒரே லட்சியம் இந்திராவையும் அவள் தகப்பனாரையும் இந்த வீட்டில் கொண்டு வந்து சேர்த்து, மறுபடி இங்கே பழைய நிலையை ஏற்படுத்துவது தான். அதற்கு என்னால் ஆனவரை முயற்சி செய்வேன். என் உயிருக்கே ஆபத்து வரும் என்றாலும் உறுதியைக் கைவிட மாட்டேன். ஸி. ஐ. டி. சந்துரு மட்டும் அல்ல, வேறு யாருடைய உதவி தேவையானாலும் பெற்றுக் கொண்டு, காரியத்தைச் சாதித்துக் கொண்டே திரும்பு வேன். வெற்றி கிடைக்கும் என்று எனக்கு நம்பிக்கை இருக்கிறது!" என்றான்.

திலகவதி பதில் ஒன்றும் கூறவில்லை. ஒரு முறை மூச்சை இழுத்து, கண்களை மூடித் திறந்தாள். அதன் பொருள், "செய்து பாருங்கள்; எனக்கு ஆட்சேபணை இல்லை...ஆனால், அது உங்களால் முடியுமா? முடியாது என்றுதான் எனக்குத் தோன்றுகிறது!" என்பதாக இருக்கலாம்.

நாராயணன் பங்களா ஹாலைத் தாண்டி வெளியே வரும்போது, தவசுப்பிள்ளையைச் சந்தித்தான். நாராயணனை எதிர்பார்த்துக் காத்திருந்தவன் போல் காணப்பட்டான் அவன்.

"ஸார்!... ஸார்!... உங்களிடம் ஒரு வார்த்தை!" என்று அழைத்தான்.

நாராயணன் திரும்பினான்.

"அந்தப் போலீஸ்காரன் போய்விட்டான் அல்லவா?"

''சந்துருவையா கேட்கிறாய்? அவர் போய் விட்டார்.. அவர்மேல் உனக்கென்ன அப்படி ஒரு கோபம்?''

''அவன் வந்ததிலிருந்துதான் தொல்லைகளே ஆரம்பம். வீட்டு எஜமானனைக் காணோம்; சின்ன எஜமானியைக் காணோம்; எனக்கு அதெல்லாம்கூட வருத்தம இல்லை. இரண்டு பேரைக் காணோமே என்று கவலைப் படக்கூட இங்கே ஆள் கிடையாது. இது பெரிய பணக்காரங்க வீடு!''

''தவசுப்பிள்ளை! உம்முடைய பேச்சே எனக்குப் புதிராக இருக்கிறது. வீட்டில் திலகவதி அம்மாள் இல்லையா? அவர்களுக்கு இல்லாத அக்கறை இங்கே யாருக்கு வந்தது?'' என்று நாராயணன் கடுமையாகக் கேட்டான்.

''நாங்கள் ஏழைகள். பணக்காரர்கள் விஷயம் தெரியாதவங்க, பெரிய மனுஷங்க வீட்டிலே, தகப்பன் என்ன செய்யப் போறான்னு மகனுக்குத் தெரிகிறதில்லை; மருமகன் மருமகளுக்குத் தெரியாது; கேட்டுத்தான் சொல்லவேண்டும். சம்சாரம், 'வந்தாயா? போனாயா?' என்று கேட்க மாட்டாள். அவள் காரியம் அவளுக்கு. இந்த வீட்டிலே நடக்கிறது என்ன?... யார் ஐயா, இந்த மதுரநாயகம்! பெரிசா வந்து குந்திக்கிறானே, யாராவது விசாரிச்சாங்களா? உங்க போலீசுதான் விசாரித்ததா? அவனுக்கு என்ன அத்தனை சலுகை?''

''ஏது நீ பெரிய மாஜிஸ்ட்ரேட் மாதிரி பேசுகிறாயே!''

''நாம் கோர்ட், கிரிட் போனவங்க இல்லை. கண்ணாலே பார்க்கிறதை, மனசாலே நினைத்துப் பார்க்கிறோம். இங்கே நடக்கிறது நல்லாவே இல்லை.''

''என்னை என்ன செய்யச் சொல்கிறாய் இப்போது?''

''ஒன்றும் செய்ய வேண்டாம். போலீசுக்காரர் புத்திசாலியாக இருந்தால், உம்மை இந்த மதுரநாயகத்தைக் கவனிக்கச் சொல்லி இருப்பார். அவர் சொல்லா விட்டாலும், நான் சொல்றேன்-கவனியுங்கள்! அனுபவத்தின் மேலே சொல்றேன்.''



நாராயணன் சிறிது நேரம் தயங்கி நின்றான். முதல் நாள் இரவு இதே தவசுப்பிள்ளைதான் சந்துருவிடம் ''இடக்கா''கப் பேசினான்; சிறிதும் உதவி செய்வதாக இல்லை இவன் தந்த பதில்கள். சந்துருகூட ஏன் அவ்வளவு நேரம் பொறுமை இழக்காமல் இருந்தான் என்று அவன் ஆச்சரியப்பட்டது உண்டு. இப்போது, வெகு நிதானமாக அந்த வீட்டு எஜமானுக்கு, எஜமான் மகளுக்கும் ஆதரவாகப் பேசுகிறான்! இவனை நண்பன் என்று கொள்வதா? விரோதி என்று கொள்வதா?''

''தவசுப்பிள்ளை?'' என்று அழைத்தான் நாராயணன்.

''ஏனுங்க?''

''நேற்று பல காரியங்கள் இங்கே நடந்து விட்டன. சாதாரணமாக, தலையைச் சுற்ற வைக்கும் அளவுக்கு அவை வேகமாக நடந்து விட்டன.''

''இருக்கலாம். எனக்குச் சுபாவமாகவே, தலைச் சுற்றல் உண்டு.''- தவசுப்பிள்ளை இப்போது ஏனோ மாறிப் பேசினான்; சில வினாடிகளுக்கு முன் இருந்த ஆளாக இல்லை அவன்.

''மற்றவர்கள் யாரும் கவனிக்காத விஷயம் ஏதேனும் உன் கண்ணில் பட்டதா?''

''அதை விடுங்க! மற்றவங்க கண்ணில் படுவதே என் கண்ணில் படுவதில்லை.''

''யார் மேலாவது உனக்குச் சந்தேகம் உண்டா? இருந்தாலும் என்னிடம் சொல்லு, நான் ஜாக்கிரதையாக இருக்கிறேன்...''

''நீங்கள் ஜாக்கிரதையாக இருக்கத் தேவையே இல்லைங்க..உங்களை யார் என்ன செய்துவிடப் போகிறாங்க?'' என்று தவசுப்பிள்ளை சிரித்தான். அதில் கேலியும் தொனித்தது.

திலகவதி அம்மாள் ஜாக்கிரதையாக இருப்பதற்காக வழி செய்ய வேண்டாமா?''

"இத்தனை ஆண்பிள்ளைகள் எதிரில் இரண்டு பேர் மறைந்திருக்கிறார்கள்..நாம் காபந்து பண்ணுகிறதிலே என்ன இருக்கப் போகிறது! நீங்கள் கவலைப் படாம போய் வாங்க, என்னையே எவனாவது தூக்கிக்கொண்டு போனால் என்ன ஆகிறது. அதைச் சொல்லுங்கள்..." என்று தவசுப்பிள்ளை ஏளனமாகச் சொல்லிவிட்டு, தானே பெரிய ஹாஸ்யம் செய்து விட்டது போல் சிரித்துக் கொண்டே உள்ளே சென்றான்.

நாராயணன் ஐந்து நிமிஷம் தயங்கிக் கொண்டு நின்றான். பிறகு பங்களாவிற்கு வெளியே வந்து விட்டான். தவசுப்பிள்ளை ஒரு புதிர், அதை அப்புறம் கவனிக்கலாம் என்று எண்ணிக் கொண்டான்.

பதினைந்து நிமிஷங்களுக்குப் பிறகு மதுரநாயகம் பங்களாவிலிருந்து வெளிப்பட்டு, வேகமாக நடந்து வந்தார். நாராயணன் ஒதுப்புறமாக அவர் வருகைக்குக் காத்திருப்பதை அவர் கவனிக்கவில்லை. ஆழ்வார்பேட்டை வரையில் நடந்து, யாரையோ எதிர்பார்ப்பவர் போல் தயங்கி நின்றார். அவரையே பார்த்தபடி அரைமணி நேரம் நாராயணனும் நின்றிருப்பான். அநேகமாக பொறுமை இழக்கும் வரை காத்து நின்ற பிறகே, நாராயணனுக்குப் பலன் கிடைத்தது!

மதுரநாயகம் திடீர் என்று வந்து சேர்ந்து கொண்ட இரண்டு ஆட்களுடன் பேசிக் கொண்டிருந்தார். "அந்த ஆட்களில் ஒருவனைச் சட்டென்று அடையாளம் கண்டு கொண்டான் நாராயணன். சந்துருவின் ஆக்ஞையின்படி தாமோதரத்தின் விலாசத்துடன் அவனைத் தேடிக் கொண்டு சென்ற போது, மாடியில் அவனுக்குப் 'பேட்டி' அளித்தவன் அவன்; கத்தியை வீசி எறிந்து, படத்தை அறுத்து, தோல் பையுடன் ஓடிய அதே ஆசாமி! அவன் எங்கே இங்கே வந்தான்? அவனுடன் இருக்கும் கூட்டாளி யார்? அவ்விருவருக்கும் மதுரநாயகத்துக்கும் நட்பு உண்டா? அப்படியானால், தோல் பையைக் கைப்பற்றி



மதுரநாயகத்திடம் கொடுக்கவா அவர்கள் அப்படி அலைந்தார்கள்! அது உண்மையெனில், நண்பர் என்று சொல்லிக் கொண்டு செங்கல்வராய பிள்ளை வீட்டில் மதுரநாயகம் இருந்ததெல்லாம் பாசாங்கா? புரளியா? இதற்கெல்லாம் பதில் யார் சொல்லுவார்கள்? ஒரு வேளை ஸி ஐ டி. சந்துருவுக்குத் தெரிந்திருக்குமோ?

கண்ணிமைப்பதற்குள் மூவரையும் அங்கே காணோம். நாராயணன் ஓட்டமாக ஓடிப் போய்ப் பார்த்தான். அவர்கள் அப்போதுதான் தெரு மூலையில் ஒரு டாக்ஸியில் ஏறிக் கொண்டிருந்தார்கள். டாக்ஸி புறப்பட்டு விட்டது. இனி அவர்களைப் பின்பற்றுவதென்பது முடியாத காரியம்...

திகைத்துப் போன நாராயணனுக்கு ஒரே ஒரு வழிதான் இருந்தது. ஓடிப்போய், டாக்ஸி புறப்பட்ட இடத்தில் இருந்த வெற்றிலை பாக்குக் கடையை அடைந்தான். கடைக்காரனிடம் ஒரு 'ஸோடா'வை உடைத்துத் தரச் சொல்லி விட்டு, "ஒரே நிமிஷம் தவறி விட்டேன்...ஓட்டமாக வந்தேன்; அதற்குள் போய் விட்டார்கள்..." என்று குறைபட்டுக் கொண்டான்.

"யாருங்க?" என்று கேட்டான் கடைக்காரன்.

"இப்போ 'டாக்ஸி'யில் போனவங்க நமக்கு வேண்டியவங்க. என்னைத் தேடிக் கொண்டுதான் போகிறாங்க. நான் இங்கே நிற்கிறேன். எங்கே போகிறாங்க என்று தெரியவில்லை" என்றான் நாராயணன்.

"ஓ! இவங்களா! நீங்க கையைத் தட்டினா நிப்பாட்டியிருப்பேனே வண்டியை!"

"அப்படி இல்லை...ஒரு ஆசாமி ரொம்பப் பெரிய மனிதர். கையைத் தட்டுகிறது மரியாதை இல்லை."

"ஏன், உங்களுக்கு இப்போ அவங்க எங்கே போகிறாங்கன்னுதானே தெரியணும்? நான் அவுங்க பேச்சைக் கேட்டுக் கொண்டேதானே இருந்திருக்கிறேன்!"

நாராயணன் ஒரு பாக்கெட் சாக்லேட் வாங்கிக் கொண்டான். "அது தெரிந்தால்கூட எனக்குப் போதும்.." என்றான்.

"அந்த ரெண்டு ஆளுங்களும் மவுண்ட் ரோடிலே இறங்கிக்கிறானுங்க...அந்த ஐயா டவுன்லே கோவிந்தப்ப நாய்க்கன் தெருவுக்குப் போகிறார். வேறே டாக்ஸி பிடித்து வேகமாகப் போனீங்கன்னா, அங்கே பிடித்துக் கொள்ளலாமே?"

கடைக்காரன் சொல்லி வாய் மூடவில்லை: ஒரு டாக்ஸி பறந்து வந்து கொண்டிருந்தது; விரைந்து போய் அதை நிறுத்தி நாராயணன் ஏறிக்கொண்டான். டவுன் பக்கம் போகிற வண்டி, சற்றுத் தாமதம் ஆகிவிட்டபடியால் டிரைவர் பறந்து கொண்டிருந்தான். அவன் காட்டின் முரட்டுத்தனமும் ஆவேசமும், நாராயணன் மனத்தில் இரு விதத்தில் கவலைகளை உண்டாக்கின. ஒன்று, எங்கேனும் மோதி உயிர்ச் சேதம் ஏற்பட்டாலும் ஏற்படலாம்; அல்லது மதுரநாயகம் போய்ச் சேருவதற்கு முன்னமேயே போய் அவர் கண்ணெதிரில் படுகிற மாதிரி நிற்கலாம்... இரண்டும் விரும்பத்தக்கதல்ல.

நாராயணன் சென்றடைந்த சமயமும், மதுரநாயகத்தின் டாக்ஸி ஒரு சாதாரணமாக நகைக் கடையிலிருந்து புறப்படுவதும் சரியாக இருந்தன. அந்தக் கடைக்குள் தான் மதுரநாயகம் இறங்கி நுழைந்திருக்க வேண்டும் என்பதில் சந்தேகம் இல்லை நாராயணனுக்கு. தான் வந்த டாக்ஸியை அனுப்பிவிட்டு, கடை வெளியில் தயங்கினான்—உள்ளே போகலாமா, வேண்டாமா என்று.

கடையின் பெயர் "சியாம்லால் சாந்திலால் ஸேட் தங்கம் வைர நகை வியாபாரிகள்" என்று போட்டிருந்தது. வெளிப் பார்வைக்கு வெகு சாமான்யமாகத்தான் இருந்தது சிறிது நேரம், நாராயணன் வெளியே தயங்கி நின்று பார்த்தான்; மதுரநாயகம் வெளியே வருவதாக இல்லை. **"இவருக்கு இந்தக் கடையில் இத்தனை நேரம் என்ன**



வேலை இருக்க முடியும்?" என்று சிந்தனை செய்தான் 'ஒருகால் அவர் உள்ளே இல்லையோ? எதற்கும் உள்ளே போய் விடுவது; மதுரநாயகம் அங்கே இருந்து விட்டால் "சவரன் விலை என்ன?" என்று விசாரிக்க வந்ததாகச் சொல்லி விட்டால் போகிறது' என்று மனத்தைத் திடம் செய்து கொண்டான்.

கடையின் வெளிப்புறம் சாமான்யமாக இருக்க, உட்புறம் விசாலமாகத் தோற்றம் அளித்தது. பெரிய ஹால்; அதில் சதுர மெத்தை போட்டு உட்கார்ந்திருந்தார் முதலாளி. கறுப்புக் கண்ணாடி, கறுப்பு வெஸ்ட்கோட். வெள்ளைச் சட்டையில் தங்கப் பித்தான்கள் அணிந்திருந்தார். முகத்திலே கரிய மீசையும் தாடியும், உதடுகளையும் கன்னங்களையும் மறைத்தன. தலையில் அடர்ந்து வளர்ந்திருந்த கேசம் சுருண்டு சுருண்டு முன் நெற்றியில் புரண்டு, முக ஜாடையை மறைத்தது. முகபாவம், உட்கார்ந்திருந்த தோரணை எல்லாம் அவரே முதலாளி என்று காட்டியது. அருகே நின்ற குமாஸ்தா காட்டிய பயமும் பக்தியும், முதலாளி கொஞ்சம் முரட்டு முன் கோபக்காரராக இருக்கலாமோ என்றும் தோன்றும்படி செய்தது.

நாராயணன் அங்கே பிரவேசித்தபோது, முதலாளியும் குமாஸ்தாவும் ஏதோ பேசிக் கொண்டிருந்தார்கள். நாராயணன் ஒருகண்ணோட்டம் விட்டான். 'ஸேட்'டுக்குப் பின்னால் ஒரு அறை; அதன் கதவு திறந்திருந்தது. எனினும் இரு திரைகள் தொங்கின. அவை காற்றில் ஆடும்போது, அங்கே சோபாக்களும், மெத்தை தைத்த நாற்காலிகளும் புலனாயின. ஆனால், உள்ளே யாரும் இல்லை. ஒருகால் இடம் மாறி நுழைந்து விட்டோமோ என்று நாராயணன் திகைத்தான்.

ஸேட் தலையை நிமிர்த்தி, "யார்! என்னாவேணும்?" என்று விசாரித்தார் - கீச்சுத் தொண்டையில்.

"என் நண்பன் ஒருவர் இங்கே வந்த மாதிரி இருந்தது..."

''நண்பர் நண்பர்!... இங்கே யாருமே வரவில்லையே... கடை திறந்த முதல் யாரும் வரவில்லை... என்ன ஜேராம், யாரேனும் வந்தாங்களா?''

''யாரும் வரவில்லை, ஸார்!'' என்றான் குமாஸ்தா.

முதலாளி தாடியை ஒரு முறை தடவி விட்டுக் கொண்டார். ''யார் உன் நண்பர்? இடம் மாறி வந்து விட்டே?'' என்றார்.

''இல்லை; வாசலில் டாக்ஸி நின்றதைக் கவனித்து விட்டுத்தான் வந்தேன்.''

''நீ உன் நண்பர் உள்ளே வந்ததைப் பார்த்தாயா?''

''இல்லை...அவர் பின்னாலேயே நான் வந்திருக்கிறேன். திடீர் என்று எப்படி அவர் மறைந்தார் என்று தெரியவில்லை.''

ஸேட் கடகடவென்று சிரித்தார். ''மந்திரம், மாயம், ஒண்ணும் இல்லை...அடுத்த கடைக்குப் போயிருப்பான். அல்லாட்டி, வழியிலே இறங்கியிருப்பான். நீ கவனமாயில்லை'' என்றார்.

நாராயணன் ஒரு 'நமஸ்தே' போட்டுவிட்டு வெளியே வந்தான். அந்தச் சிறு கடைக்கு மாடிகூட இல்லை. மதுரநாயகம் எங்கே போய்விட்டார்? 'ஸேட்'டின் கேலிப் புன்னகை அவன் மனத்தை ஏனோ வேதனை செய்தது.

மறுபடி வெளியே வந்து வெகு நேரம் நின்றான். கால் மணிக்குப் பிறகு ஜேராம் ஏதோ காரியமாக வெளியில் வந்தவன் நாராயணன் இன்னும் நிற்பதைப் பார்த்து, ''இன்னுமா காத்திருக்கிறீங்க?'' என்று கேட்டுவிட்டுப் போனது சங்கோஜமாகக்கூட இருந்தது.

மேலும் நிற்பதில் லாபம் இல்லை என்றவாறு நாராயணன் நினைத்த சமயம், ஒரு கார் கடை வாசலில் வந்து நின்றது. ஒரு முறை கண்ணைக் கசக்கிவிட்டுக் கொண்டு நாராயணன் பார்த்தான். துளிகூட ஐயம் இல்லை; செங்கல்வராயபிள்ளை வீட்டுக் கார்; கன்னையன் ஓட்டி. அதிலிருந்து இறங்கி உள்ளே சென்றாள் திலகவதி.



பகட்டாக உடுத்திக்கொண்டு கையில் ஒரு சிறு பெட்டியும் வைத்திருந்தாள். அவளுடைய நடையிலிருந்தும் நிதானத்திலிருந்தும் இங்கே அவள் வருவது இது முதல் தடவை இல்லை என்பதையும் அவன் ஊகித்தான். ஆஹா! இங்கே மதுரநாயகமும் வருகிறார்; திலகவதியும் வருகிறாள். தேனாம்பேட்டை அனுபவத்தின்படி இவர்கள் இருவரும் நண்பர்கள் என்று சொல்வது ஆகாது. ஆனால், இருவர் வருவதும் ஒரு கடை என்று நினைத்தான்.

கடைக்கார ஸேட் நிச்சயம் பொய் சொல்லித்தான் ஏமாற்றியிருக்கிறான். மதுரநாயகம் அங்கே வந்தது உண்மை; இப்போது அவர் அங்கேயில்லை என்றால், வேறு வழியாக வெளியேறியிருக்கலாம். ஆனால் எதற்காக ஸேட் பொய் சொல்ல வேண்டும்? அதற்கு அவசியம் என்ன? ஒருகால் மதுரநாயகம் அவனை எச்சரித்திருப்பாரோ?

உள்ளே சென்ற திலகவதி வெளியே வரும் வரையில் இருந்துவிட்டு, மறுபடி உள்ளே போய் விசாரிக்கலாம் என்ற எண்ணம் அவனுக்குத் தோன்றியது.

நாராயணன் நின்று கவனித்த இடம் ஒதுப்புறமானது. எனவே அவனைக் கவனிப்பவர்களோ, சந்தேகிப்பவர்களோ இல்லை. எனினும், அன்று காலை முதலே 'நின்று காத்திருப்பது' அவன வேலையாகி விட்டபடியால் அதை ஒரு தொல்லையாகவே மதித்தான். 'இத்தனை நேரம் அவளுக்கு இங்கே என்ன வேலை அப்படி!' என்று முணுமுணுத்தான். நேரம் சென்று கொண்டிருந்தது.

உள்ளே சென்ற திலகவதியை ஸேட் பார்த்து ஒரு கும்பிடு போட்டார். ''உட்காருங்க, அம்மா!'' என்று உபசாரம் செய்தார், போலி மரியாதையுடன்.

திலகவதி ஸேட்டின் முகத்தை ஒரு கணம் கவனித்தாள். பிறகு, ''நாலைந்து நாட்களாகவே நான் வர வேண்டும் என்று பார்க்கிறேன்...முடியவில்லை, வீட்டில் பல தொல்லைகள்'' என்றாள்.

ஸேட் தலையை ஆட்டினார்: ''இருக்கும்; இருக்கும்! பெரிய மனிதர்கள் வீடு என்றால் அப்படித்தான் இருக்கும்...'' என்றார்.

''நான் அந்த வைர நகையை இப்போது கொண்டு வந்திருக்கிறேன்...பார்க்கிறீங்களா! ஐந்து நிமிஷத்தில் அனுப்பி விடுங்கள். நான் சீக்கிரம் வீடு திரும்பிவிட்டால் தேவலை''

ஸேட் தாடியைத் தடவி விட்டுக் கொண்டார். 'பார்க்கிறேன், பார்க்கிறேன்... ஆனால், பணம் உடனே கிடைக்காது. நான் ஏற்பாடு செய்துதான் தரவேண்டும்!'' என்றார்.

''என்ன ஸேட் அப்படிச் சொல்லி விட்டால் என் கதி என்ன? உங்களிடம் நாலாயிரம் ரூபாய் இல்லை என்றால், அப்புறம் யாரிடம்''

''எல்லோரும் அப்படி ஒரு வார்த்தை சொல்லி விடறாங்க, அது தப்பு! நம்ம பணம் ஊரெல்லாம் இறைஞ்சு கிடக்கு; அவனவன் சொன்னா(ல்) சொன்னபடி பணம் தரதில்லே... நாம மட்டும் கேட்டவுடனே கொடுத்து விடணம்; முட்டை கட்டி வச்சுக் கொண்டிருக்கணம்... ஆனா, உங்கள் மாதிரி வேறே!''

திலகவதி தனது சிறு பெட்டியைத் திறந்து, ஒரு வைர ஆபரணத்தை ஸேட் கையில் கொடுத்தாள். வர்ண ஜாலங்களை அது கொட்டியது. எவராயிருப்பினும் அதை ஒரு ஆசையுடன் பார்ப்பார்கள். ஸேட் சகஜமாக வாங்கினார். கைகளில் வெகு அலட்சியமாகப் பிடித்தார். ''வைரம் தானே?'' என்று கேட்டார் கண்ணைச் சிமிட்டி.

திலகவதியின் கண்கள் சிவந்தன. ''அசல் 'ப்ளுஜாகர்' என் புருஷர் நேரே ஆண்ட்வெர்ப்பிலிருந்து தருவித்தார். என்ன யோசிக்கிறீங்க?''

''அவருக்குத் தெரியும் அல்லவா, இது இங்கே வருகிற சமாசாரம்?''



''அவருக்கு ஆட்சேபணை இல்லை என்று நான் சொல்லுகிறேன்.''

தனக்குத் தானே புன்னகை செய்து கொண்டார் ஸேட்! ''மாலையில் வாருங்கள், பணம் தருகிறேன்!'' என்றார்.

''இல்லை, நான் மறுபடி வருவதற்கில்லை'' என்று கண்டிப்பாகக் கூறினாள் திலகவதி.

சாதாரணமாக ஸேட் நகையைத் திருப்பிக் கொடுத்து விடுவார் என்றே எதிர்பார்த்திருக்கவேண்டும். ஒரு க்ஷணம் அதையே பார்த்துக் கொண்டிருந்தார், பிறகு, ''ஜேராம்! இவங்க கிட்ட மூவாயிரம் கொண்டு வந்து கொடு! ஜல்தி!'' என்றார்.

''நாலாயிரம்'' என்றாள் திலகவதி.

''மூன்றாயிரம்...ஒரு ரூபாய் கூட மேலே வராது!'' என்றார் ஸேட்.

''ஒரு ஐந்நூறு கூடப் போட்டுத் தாருங்கள், பாதி விலையாவது வரட்டும்'' என்று கேட்டாள் திலகவதி.

''மூன்றாயிரம். இஷ்டமானால் வைத்துக் கொள்கிறேன்; இல்லையானால், உங்கள் புருஷரை இங்கே அனுப்புங்கள். நான் பேசிக்கொள்கிறேன்!''

''ஏதோ கொடுங்கள்! உங்கள் இஷ்டம்!'' என்றாள் திலகவதி.

ஃ ஃ ஃ

நாராயணன் முதுகில் ஒரு கை மெல்லத் தட்டியது. திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தான். கணேசன் சந்தடி செய்யாமல் வந்து நின்று கொண்டிருந்தான்.

''யாருக்காக இங்கே காத்திருக்கிறீர்கள்?'' என்று கேட்டான் அடுத்து.

நாராயணன் திணறியபோது, ''ஒன்றும் பதில் தேவையில்லை, என் சித்தி வந்திருக்கிறாள் ஸேட் கடைக்கு. அவள் வரத் தேவையே இல்லை. என்னிடம் ஒரு வார்த்தை சொன்னாலே போதும்; ஆனால் சொல்ல

மாட்டானே! என் மேல் துவேஷம்...கடன் வாங்க வருகிறான்! ஹூம்!'' என்றான்.

''உங்கள் சித்தப்பா நிரம்பப் பணம் வைத்திருப்பாரே! இவர் இங்கே வரவேண்டிய காரணம்?''

''அது அவர்களைக் கேட்டால்தான் தெரியும்...நாம் இருவரும் இங்கே நிற்பதை அவள் பார்த்தால் நன்றாக இராது. என்னுடன் வாருங்கள். போகலாம்!'' என்று அழைத்தான்.

''மிஸ்டர் கணேசன்! மிகவும் வந்தனம். உங்கள் குடும்ப சமாசாரம் எனக்குப் புரிவதே சிரமமாக இருக்கிறது. சற்று முன் மதரநகயகம் இந்தக் கடைக்குள் நுழைந்தார். பிறகு விசாரித்தால், வரவே இல்லை என்று ஸேட் ஒரேயடியாக மறுக்கிறான்.''

''நான்கூட கவனித்தேன். ஸேட் கடைக்குப் பின் வாசல் உண்டு. வேண்டப்பட்டவர்கள் ஒரு வழியே நுழைந்து மறு வழியே போகிறது சகஜம்தான். இதைக் கேட்டுக் கொண்டிருப்பது சரியும் இல்லை...நான் சந்துருவைப் பார்க்கப் போகிறேன். நீரும் வருகிறீரா?''

''இல்லை; அவரிடம் சொல்வதற்கு என்னிடம தகவல் ஒன்றுமில்லை'' என்றான் நாராயணன.

கணேசன் சரேலென்று பிரிந்து, அங்கிருந்து அகன்றான். மூன்று நிமிஷங்களுக்குப் பிறகு திலகவதி வெளிப்பட்டாள். இடதுபுறமோ வலதுபுறமோ பார்க்காமல் காரில் ஏறிக் கொண்டாள்? அது புறப்பட்டு வேகமாக ஓடித் தெருமுனையில் மறைந்தது. நாராயணன் நின்று கொண்டே இருந்தான்.

ஃ ஃ ஃ

சங்கரன் தப்பித்துக்கொண்டு ஓடுவதற்கும் ஒரு மணி முன்பாகவே சுந்தரம் பிள்ளை அவன் அறைக்கு வந்திருக்க வேண்டியவர்தான். தாமோதரத்தை அழைத்து வர ஏற்பாடுகள் செய்து அவர் விரும்பியபடி கொண்டு வந்தாகி விட்டது. போட்ட திட்டம் நடைபெறாதபடி அவர்



மனதைச் சஞ்சலப்படுத்தும் விஷயம் ஒன்று நடந்து கொண்டேயிருந்தது. அது தான் சுந்தரியின் குரோதம்.

ஒரு காலத்தில் சுந்தரி கைவிட்டுவிடாமல் இருக்க வேண்டுமே என்று அவர் ஆயிரம பதினாயிரம் செலவு செய்திருக்கிறார். அப்போது அவள் மோகத்தில் அவர் தோய்ந்திருந்தார். இப்போது அவள் பேச்சு அவருக்குச் சலித்து விட்டது; முக வசிகரம் குன்றியபடி தோன்றியது; அவளுக்குக் கவர்ச்சி குறைந்து விட்டது. இனி அவளை விட்டொழிக்க ஆயிரம் பதினாயிரம் செலவு செய்யத் தயாராக இருந்தார்; சுந்தரிதான் விடாமல பிடித்துக் கொண்டிருந்தாள். சமீப காலத்தில் அவள் கொடுத்த தொல்லைகளை அவரால் பொறுக்க முடியவில்லை.

எப்படியோ அவளுக்கு இந்திரா வந்திருக்கும் சமாசாரம் எட்டி விட்டது. உடனே கேள்வி மேல் கேள்வியாகக் கேட்டுக் குடைந்தாள். சுந்தரம் பிள்ளை பொதுவாக மௌனம் சாதித்தார். கடைசியில் பொறுமை இழந்து பளார் பளார் என்று அறைந்து விட்டு வெளியே போய் விட்டார்.

நாள் முழுவதுமே விம்மி விசும்பிக்கொண்டு கிடந்தாள் சுந்தரி. எனினும் சுந்தரம் பிள்ளைக்கு 'அவள் கொட்டம் அடங்கியிராது. வர்மம் வைத்து ஏதேனும் விஷயம் செய்வாள்' என்ற சந்தேகம் தோன்றியது. அவளை அதோடு விட்டால், தலைக்கே ஆபத்து வந்துவிடும் என்று பயந்தார்.

எங்கெல்லாமோ சுற்றிவிட்டுத் திரும்பிய சுந்தரம் பிள்ளை, மாடி அறைக்கு மெல்லச் சென்றார், பூனை போன்ற அடிகள் வைத்துச் சென்றதன் காரணம், சுந்தரி என்ன செய்துகொண்டிருக்கிறாள் என்பதைக் கவனிக்கவே பசப்பு வார்த்தைகளால் அவளை அப்போதைக்குச் சமாதானம் செய்து,அவள் பின்னால் அயர்ந்த சமயம் வாரி எறிந்து விடலாம் என்ற எண்ணமும் அவருக்கு உண்டு. மற்ற விவகாரங்கள் உளழலாக இருந்துவரும் இந்தச் சமயத்தில் அவளையும் கலாட்டா செய்ய விட்டுக் கொண்டிருந்

தால், அவரால் சமாளிக்க முடியாது. எனவே, கேட்டதை வாங்கிக் கொடுத்து, கொஞ்சம் அதிகமாகவே சலுகை காட்டி அடக்கி வைத்துக்கொண்டு, மற்றக் குழப்பங்கள் நீங்கியபின் ஒரே முட்டாக நசுக்கி விடலாம்; சுந்தரம் பிள்ளை இதற்காகவென்று தமது வதனத்தை வெகு சுமிக யாக வைத்துக்கொண்டார்; அதில் புன்னகைகளை நெளிய விட்டுக் கொண்டார்.

சுந்தரி அவள் அறையில் இல்லை; எழுந்து போய் அவருடைய அந்தரகக அறையில் இருந்தாள். டெலி போனில் பேசிக் கொண்டிருந்தாள்! அதுவும் யாரிடம்?-ஸி. ஐ. டி. சந்துருவிடம்! திடுக்கிட்டார் சுந்தரம் பிள்ளை. 'எல்லாருமே ஏன ஸி. ஐ. டி. க்காரனிடம போகிறார்கள்?' என்று உதட்டைக் கடித்துக் கொண்டார்.

''...முக்கியமான விஷயம்...அவசரம்'' என்று அவள் சொல்லும்போதே, ஒரு கையால் முரட்டுத்தனமாக அவள் வாயைப் பொத்தினார், மறு கையால் டெலிபோன் ரிஸி வரைப் பிடுங்கி வீசி எறிந்தார். என்ன நடக்கிறதென்று அவள் ஊகித்துக் கொள்ளுமுன், கையைப்பற்றி ஒரு சுழட்டு சுழட்டி இடத்திலிருந்து இழுத்து, ஒரு சுடக்கு சுடக்கி விட்டார். சுந்தரி பின்னடையாகத் தத்தளித்து ஓடி, அந்த வேகத்திலேயே ஒரு சோபாவில் விழுந்தாள். அப்படி இன்றித் தரையில் மட்டும் மண்டை மோதி யிருந்ததோ, பிழைத்திருப்பது துர்லபம்.

''எச்சக்கலை நாயே! உன்னை நான் என்ன செய் கிறேன், பார்! என் வீட்டில், எனக்கே துரோகம் செய் கிறாயா!'' என்று கூவி, முஷ்டியைத் தூக்கிக் காட்டினார் பிள்ளை.

''எனக்கு நீங்கள் துரோகம் செய்தால்—''

காலால் எட்டி ஒரு உதை; சுந்தரியின் கால் குதிரை எலும்பில் பட்டு, அவள் துடிதுடித்துப் போனாள்.

''எழுந்திரு! உம்...எழுந்திரு!''



''நான் மாட்டேன்!''

''உன்னைக் கண்டம் கண்டமாக நான் அறுக்கச் சொல்கிறேன்! என்னிடமா விளையாடுகிறாய்!...ஏய்! யார் அங்கே! கூப்பிடு நாயரை!''

மூன்று நிமிஷத்தில் ஒரு ஆள் ஓடி வந்தான். அவனைப் பின் பற்றி நாயரும் வந்தான். ''இந்த உதவாக் கரையைப் பின் கட்டு அறையில் போட்டுப் பூட்டு. சோறு தண்ணி எதுவும் கிடையாது. கூச்சல் போட்டால், மண்டை யில் தட்டி அடக்க வேண்டியது. தப்பித்துக் கொண்டு போக முயற்சி செய்தால் அங்கேயே வெட்டிப் போடு! ஓடி விட்டாள் காணவில்லை என்று ஏதேனும் பசப்பினாயோ, உனக்கும் அத்தனை தண்டனையும் கிடைக்கும்...''

மறுபடி பாய்ந்து அவள் கரத்தைப் பற்றினார். சரசர வென்று இழுத்து விட்டார், பத்தடி அப்பால் போய்க் கதிகலங்கி நின்றாள். ''போ! மரியாதையாகப் போ! இல்லையோ உயிருடன் இருக்க மாட்டாய்!'' என்றார். பிறகு மடமடவென்று மாடிப்படி இறங்கி வெளியே வந்து காரில் ஏறினார்.

ஃ ஃ ஃ

சங்கரனும் இந்திராவும் அடைக்கப்பட்டிருந்த சிறிய வீட்டை அவர் அடைந்ததும், அவருக்கு ஒரு யோசனை தோன்றியது. கீழே ஓர் அறையைக் காலி செய்து, அதில் சுந்தரியை அடைத்து விட்டு, இந்திராவைப் பெரிய மாளிகைக்கே அழைத்துப் போய்விட்டால்?—வாசலில் இருந்த காவலாளியை முன்னால் அனுப்பி, அந்த அறை யைத் தயார் செய்யச் சொன்னார். அது வரை தாமோதரம் தனது காவலாளிகளுடன் வாசல் ஹாலில் நிறுத்தி வைக்கப் பட்டான். அவர் அழைக்கும் போது மேலே வந்தால் போதும் என்று சுந்தரம் பிள்ளை ஆட்களுக்கு உத்தரவு கொடுத்து விட்டு மாடி ஏறினார்.

இரண்டு நிமிஷங்களுக்குப் பிறகு, சுந்தரம் பிள்ளை யின் குரல் வெகு ஆத்திரத்துடன் மேலிருந்து ஒலித்தது. ''உபயோகமற்ற முட்டாள்களா'' 'அவன் போக்கிரிப்பயல்'

தழுவிவிடுவான்' என்று எத்தனை தரம் நான் எச்சரித்தேன்! நன்றாயிருக்கிறது நீங்கள் காவல் காக்கிற லட்சணம்! தூ! தூ! அவ்வளவு பேரையும் கழுவில் ஏற்ற வேண்டும்!'' என்று சத்தம் போட்டுக் கொண்டு கீழே வந்தார். அவர் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்தன.

கண் மூடிக் கண் திறப்பதற்குள் ஆட்கள் எல்லாம் கூடிவிட்டார்கள். வீடெங்கும் தேடலானார்கள். வெளி 'கேட்'டில் நாலு ஆட்கள் தேடினார்கள். தாமோதரத்தின் மீது கவனம் தளர்ந்தது. இது போன்ற ஒரு சந்தர்ப்பத்தையே அவன் எதிர்பார்த்திருந்தான். அதைப் பயன்படுத்திக் கொண்டான்.

அவன் பின்னால்தான் வீட்டு மின்சார விளக்குகளின் 'மெயின் ஸ்விட்ச்' இருந்தது. அதைக் கடைக்கண்ணால் கவனித்துக்கொண்டே சுந்தரம் பிள்ளையின் ஆத்திரத்தையும், ஆட்களின் துடிதுடிப்பையும் கண்காணித்து வந்தான். சரியானதொரு சந்தர்ப்பத்தில் 'கிளிக்' என்ற சப்தம் கேட்டது. எல்லா விளக்குகளுமே அணைந்து அந்தகாரம் சூழ்ந்தது!

தாமோதரத்தின் பக்கத்தில் இருந்த இரு ஆட்களும், தங்கள் தலையில் இரு செம்மட்டிகள் தாக்குவதை உணர்ந்தார்கள். இரண்டாம் அடியில் கீழே சாய்ந்தார்கள். மாடிப்படி அருகே நின்ற சுந்தரம் பிள்ளை, யாரோ காலை வாரி விடுவதை அறிந்து, யாதும் செய்து கொள்வதற்குமுன் கீழே விழுந்தார் எழுந்திருக்க முயன்றபோது அவர் முதுகின் மீது ஒரு கால் அழுத்தமாக வைக்கப்பட்டதும், அதோடு சற்று நினைவையே இழந்துவிட்டார்.

'தபதப'வென்று தாமோதரம் மாடி ஏறிவிட்டான். மேலும் இருட்டுதான். இரு அறையில் ஒன்று காலி! மற்றொன்றைத் தட்டினான். கதவைத் திறந்த ஸ்திரீயிடம் ''சீக்கிரம் கீழே போ! எஜமான் விளக்கு வேண்டும் என்கிறார். ஒன்றை எடுத்துக்கொண்டு ஓடு! ஓடு!'' என்றான்.



தாமோதரத்தை முன் பின் பார்த்திராத அந்த ஸ்திரீ, அவனும் ஒரு ஆள் என்று எண்ணி, கீழே விரைந்தாள். தாமோதரன் ஒரே விநாடியில் இந்திராவை அடையாளம் தெரிந்து கொண்டான் - அவளை அவன் தேனாம்பேட்டை பங்களாவில் பார்த்திருக்கிறான்.

''உஸ்ஸ்...பயப்படாதே! என்னுடன் ஓடி வா! தப்பி விடலாம்'' என்றான்.

இந்திரா ஒருவாறு நிலைமையை ஊகித்துக்கொண்டு, வெளியே வந்தாள். இருவரும் மாடியின் பின்புறம் ஓட்டமாக ஓடினார்கள்.

சில விநாடிகளே அவர்களுக்கு அவகாசம் இருந்தது என்பதை இருவருமே உணர்ந்திருந்தார்கள்.

# 'தம்பி'யின் தீர்மானம்

மனத்தின் இயல்பு ஒரு புரியாத புதிர். இருவர் நல்லவர்களாகவோ, கெட்டவர்களாகவோ, ஒரு மனத்தினராக வெகுகாலம வாழ்ந்திருக்கலாம்; தொடர்பு கொண்டிருக்கலாம். அவர்கள் அண்ணன் தம்பிகளாக இருக்கலாம்: இணைபிரியாத நண்பர்களாக இருக்கலாம்;ஒரே தொழிலில் பங்குதாரர்களாக இருக்கலாம்; உறுதியான பரஸ்பர நம்பிக்கையின் பயனாகப் பல காரியங்களைச் சேர்ந்தே சாதித்திருக்கலாம்.

ஆனால், இவர்களிடையே நம்பிக்கை கழட்டிக் கொள்ளும்படி எப்போதேனும் சந்தேகம் சிறிது உதித்து விட்டாலும், பிறகு நம்பிக்கை ஆடுகிற பல்லின் கதியையே அடையும். ஆட்டம் கண்ட பல் தரும் தொல்லை கொஞ்சம் நஞ்சம் இல்லை. ஓயாத வேதனை; மீண்டும் ஆட்டத்தைப் பரீட்சை செய்து பார்க்க வேணும் என்ற துடிதுடிப்பு,

அந்தப் பல்லின் பலத்தை அடிக்கடி சோதனை செய்ய வேண்டும் என்ற கட்டுக் கடங்காத ஆவல் - கடைசியில் பல் உதிர்ந்து விடும் வரை ஓய்ச்சல் ஒழிவில்லாத சேஷ்டைகள் தான்.

இதே நிலையில்தான் சுந்தரம் பிள்ளையும் 'தம்பி'யும் இப்போது தவித்தார்கள். சுந்தரம் பிள்ளைக்கு எண்ணற்ற காரியங்களைச் சாதித்துக் கொடுத்தவன் 'தம்பி' பிள்ளை அவர்கள் டெலிபோனை எடுக்க வேண்டியது: ''ஹெல்லோ 'தம்பி!' பிள்ளை பேசுகிறேன்!'' என்று ஒரு காரியத்தைச் சொல்ல வேண்டியது; எத்தனை பெரிய காரியமாக இருக் கட்டும்மே அப்புறம் அதைக் கட்டோடு மறந்துவிடலாம் - சுந்தரம் பிள்ளை காரியம் நடந்து விட்டது என்ற சாந்தத் துடன் படுக்கையில் படுத்துத் தூங்கிவிடலாம். 'தம்பி' நடத்தி வைப்பான். இதுதான் அவர்களுக்குள் ஏற்பட்டி ருந்த வழக்கம்.

முதல் தடவையாக 'தம்பி' காரியத்தில் தவறி விட்டான். சங்கரன் தப்பி ஓட, காரியம் தவறினது என்னவோ எதிர்பாராத ஒரு விஷயம்; எனினும் கூட, சுந்தரம் பிள்ளையின் மனத்தில் சந்தேகம் என்ற வித்து விழுந்துவிட்டது. அதை அவர் அடக்கி வைத்திருந்தால் கூட 'தம்பி' அரண்டிருக்க மாட்டான். பிள்ளை கையோடு கையாக நாயரைத் தருவித்து விட்டார்!

''நாயர்'' என்னும் பெயர் 'தம்பி'க்கு நஞ்சு, தன் பரம எதிரியாக அவனைத் 'தம்பி' கருதினான். ஒரு காலத்தில் தன்னைச் சுந்தரம் பிள்ளை காலைவாரி விட எண்ணினால் இந்த நாயரையே கருவியாக உபயோகிப்பார் என்று அவன் எதிர்பார்த்திருந்தும் உண்மை. அதில் தவறும் இல்லை. இப்போது சந்தேகம் என்ற நஞ்சு அவன் நெஞ்சிலே தினவை உண்டாக்கியது. இந்தச் சந்தேகம் உண்மைதானா என்று சோதனை செய்து பார்க்க விரும்பினான். தாமோதரம் அவன் கையிலே அகப்பட்டான். அதில் சுந்தரம் பிள்ளை திருப்தி காட்டவில்லை. தாமோதரத்தை உபயோகித்துக் கொள்ளலாம் என்ற நிலையில்கூட, 'தம்பி'



யைப் பார்த்து அவர் ஒரு புன்னகை செய்யவில்லை; அந்தப் புன்னகைக்குக் காத்திருந்த 'தம்பி' ஏமாற்றத்தால் புழுங்கினான்.

இந்திராவைக் கொண்டு வந்து வைத்தது, அவள் தப்பி யோட முனைந்தது இரண்டையும் அவன் தூரவிருந்தே கவனிக்க வேண்டியிருந்தது. அருகே நெருங்க அவனுக்கு அதிகாரம் கொடுக்கப்படவில்லை. எப்படியேனும் சங்கரனை அணுகி, என்றும் மறக்க முடியாதபடி தாக்க வேணும், தன்னை ஆட்டிவைத்த ஆட்டத்துக்குப் பழிக்குப் பழி வாங்க வேணும் என்ற ஆசை பூர்த்திகூட அடைய இயலாதபடி அவனை ஒதுக்கிவிட்டார்கள். இடையில் இரண்டொரு முறை சுந்தரம் பிள்ளையின் முன்னிலையில் அகஸ்மாத்தாக அவன் எதிர்பட நேர்ந்தபோதும், அவர் முகத்தைச் சுளித்து அப்புறமாகத் திருப்பிக் கொண்டது, தன்மீது வீண் பகை கொண்டிருக்கிறார் என்ற எண்ணத் தையே ஊர்ஜிதம் செய்தது.

'தம்பி'க்கு ஆத்திரம் பிறந்துவிட்டது. விரைவில் 'எஜமானத் துரோகம்' செய்யத் துணியும் அளவுக்கு அது வளர்ந்தது. அவன் உடனே செய்யக் கூடியது ஒன்று இருந்தது. சுந்தரம் பிள்ளைக்கு வேறு வகையில் தொல்லை கொடுக்க வேண்டும் என்பதே அந்த எண்ணம். அதுபற்றித் தீவிரமாக யோசனை செய்தான்.

அவன் மனக்கண்முன், முதல் முதலாக எழுந்த உருவம் சுந்தரியினுடையது ஒட்டத்தட்ட அவனுடைய நிலை யிலே தான் அவளும் இருந்தாள். சுந்தரி அன்று ஆசை நாயகி; இன்று அவள் ஸ்தானத்தில் இந்திரா புகுந்திருக் கிறாள். 'தம்பி'க்குப் பதில் 'நாயர்'; சுந்தரிக்குப் பதில் 'இந்திரா' ஏன் 'தம்பி'யும் சுந்தரியும் சேர்ந்து தங்கள் குறைகளுக்குப் பரிகாரம் காணக்கூடாது? சுந்தரியுடன் அவன் பேசுவதில் இதுவரையில் தடை ஏதும் இல்லை அவனுக்கு.

'தம்பி'யின் வரவு சுந்தரிக்கு ஓரளவு ஆறுதல் அளித்தது என்றுகூடச் சொல்லலாம். 'தம்பி' இந்திராவைப் பற்றிச்

கூறியதில் முதல் பாதி அவள் அறிவாள். செங்கல்வராய பிள்ளையின் மகள் இப்போது சுந்தரம்பிள்ளையின் திட்டங்களில் ஏற்பட்ட சில தவறுகளின் காரணமாக அவளை நிர்ப்பந்தமாகக் கொண்டுவர வேண்டியிருக்கிறது என்று அவள் அறிந்து கொண்டிருந்தாள். ஸி.ஐ.டி. சந்துரு என்ற பிரபல துப்பறிபவனுடைய விரோதம் இதனால் ஏற்பட்டு விட்டது. என்றாவது சில அபாயங்கள் அதன் மூலம் விளையலாம் என்றும் மனத்திற்குள் பயந்தாள். சுந்தரம்பிள்ளை அடிக்கடி 'அவன் கிடக்கிறான்!' என்று சந்துருவை அலட்சியமாகப் பேசினாலும் கண்களின் ஆழத்தில் சிறிது அச்சம் இருந்தது என்பதைக் கவனிக்கத் தவறவில்லை.

'தம்பி' கொண்டு வந்த செய்திகள் அவளை உண்மையிலேயே கலவரப்படுத்தி விட்டன. சுந்தரம் பிள்ளை இப்போது ஏற்படுத்திக் கொண்டிருக்கிற விரோதங்கள் அவரைக் கவிழ்த்து விடும் என்று பயங்காட்டினான். தவிர ''நாயர் சமாசாரம் அவனுக்குத் தெரியும். அவன் பேச்சை சுந்தரம் பிள்ளை நம்புகிறார். அவன் வேலை செய்கிறான் என்பதும் உண்மை. ஆனால், சுத்தியின் முனையை இவர் மேலும் திருப்பத் தயங்க மாட்டான் அவன். எங்கே காச அதிகம் கிடைக்கிறதோ, அந்தக் கட்சி பேசுவான். இருதயம் என்பதைக் காட்டவேமாட்டான். அப்பேர்ப்பட்ட ஆட்கள்தான் தேவை அவருக்கும்!'' என்றான்.

சுந்தரிக்கும் நாயரிடம் நல்ல அபிப்பிராயம் இல்லை, அவள் ஒருத்திக்குத்தான் தெரியும். நாயரின் உள் அந்தரங்கம். சுந்தரம் பிள்ளையின் முன்பு, அவர் கண் பார்வையில் நாயாக ஒடுங்கிக் கிடப்பான்; தலை குனிந்து நடப்பான் பக்தனாக வேஷம் போடுவான். ஆனால், பிள்ளை பார்க்காத சமயம் சுந்தரியை அவன் நோக்கும் கண் பார்வையை அவள் சந்தித்திருக்கிறாள். அதிலே எத்தனை விஷம், துர் எண்ணங்கள, துரோக சிந்தனை எல்லாம் மண்டிக் கிடந்தன எனறு எடை போட்டே வைத்திருந்தாள். சுந்தரம் பிள்ளை என்று சக்தியை இழந்து விடுகிறாரோ,



தமது பலஹீனத்தை வெளிப்படுத்துகிறாரோ அன்றே நாயரின் அடிமையாக அவள் மாற வேண்டியதொரு கஷ்ட காலம் உண்டென்று அவள் உணர்வு எச்சரித்தது. முன்பு எப்போதேனும் இதைச் சுந்தரம் பிள்ளையிடம் அவள் கூறியிருந்தால், அவர் நாயரை ஒதுக்கியிருப்பார்! இன்று சுந்தரியையே ஒதுக்கத் திட்டங்கள் போட்டு, பகிரங்கமாகப் பேசும்போது அவர் காதில் இது ஏறுமா? அவள் அவமானப் படுவது ஒன்றுதான் மிகுதியாக இருக்கும்!

'தம்பி' கூறிய இரண்டாவது விஷயம் அவளை மேலும் கலவரப்படுத்தியது. இந்திரா வெகு விரைவில் சுந்தரியின் ஸ்தானத்தை எட்டி விடுவாள் என்பதே அது. 'தம்பி' பக்குவமாகச் சொன்னான்; ''இனி நீ செய்வதெல்லாம், பேசுவதெல்லாம், கேட்பதெல்லாம் சுந்தரம் பிள்ளைக்குக் குற்றமாகவே இருக்கும். பார்த்துக்கொண்டு வா!'' என்றான்.

''அதையும்தான் பார்த்து விடலாம்!'' என்றான் சுந்தரி சீறிக்கொண்டு, அவள் முகத்தில் கோபம் ஜ்வலித்தது.

''நாளைக்குக் காலையில் இந்திரா இந்த மாளிகைக்கு வந்து விடுவாள்! சுந்தரம் பிள்ளையை வாய் நிறையத் திட்டுவாள். அதையெல்லாம் வாழ்த்தாக ஏற்றுக்கொண்டு, உன்னை அவள் எதிரில் அவமானம் செய்வார் சுந்தரம் பிள்ளை எப்படி இருக்கும், பார்க்கலாம்.''

''அப்படி அவர் இந்திராதான் தமக்கு வேண்டும் என்றால், வெளிப்படச் சொல்லி விடட்டும். நான் நாளைக்கே வெளியேறி விடுவேன். எங்கோ எப்படியோ பிழைத்துக் கொள்கிறேன்!''

''நீ குழந்தை மாதிரி பேசுகிறாய்! அப்படி உடனே நீ தேவை இல்லை என்றும், இந்திராதான் வேண்டும் என்றும் தள்ளி விடுவானா! கொஞ்சம் கொஞ்சமாக, உன்னை இல்லாத சங்கடங்களுக்கெல்லாம் உட்படுத்தி, வாட்டி வதக்கி, ஈட்டிகளால் குத்துகிற மாதிரி பேசி, நீயாகவே 'நான் போகிறேன்' என்று கதற வைத்து, அப்புறம்

அனுப்புவான். அதற்குள் நீ நிராணி செத்து, அழகுஒழிந்து மூக்காலே மூணு வீசும் பிரேதமாகப் போய் விடுவாய்...''

''நான் என்ன செய்யலாம்? எனக்கு வேறு வழியே இல்லையா? கேட்டு விடட்டுமா அவரை?''

''கேட்டால் உடனே ரகளைதான்; பதில் ஒன்றும் கிடைக்காது. நாமாக ஏதேனும் ஒரு வழி செய்துகொண்டு விட வேண்டியதுதான்.''

''இருப்பதற்கா! போவதற்கா?''

''நான் ஒளிக்காமல் சொல்லி விடட்டுமா? எனக்கு இனி மேல் சந்துருவிடமிருந்து சுந்தரம் பிள்ளை தப்புவார் என்ற நம்பிக்கை இல்லை. இன்று இல்லாவிட்டால், அடுத்தவாரம் அவன் வந்து விடப்போகிறான் இங்கே; தாமோதரம்' அவனுடன் ஒரு ஆள், சங்கரன், இந்திரா, செங்கல்வராய பிள்ளை ஆக ஐந்து பேரை எத்தனை நாள் பூட்டி வைக்க முடியும்? எந்த மூலை முடுக்கிலாவது ஒரு சிறு செய்தியைப் பிடித்துக்கொண்டு வந்து சந்துரு சுருக்கை மாட்டி விடுவான். முன்னாடி நானே சந்துருவைக் கண்டு பேசி விடலாமா என்று நினைக்கிறேன். இன்னும் முடிவு செய்யவில்லை.''

சுந்தரி தன் கட்டை விரலை 'வெடுக்' 'வெடுக்'கென்று கடித்துக்கொண்டிருந்தாள். ''நீ சொல், இப்போது என் கதி?'' என்று கேட்டாள்.

''நம் இரண்டு பேர் கதியையும் சேர்த்துத்தான் நான் பேசுகிறேன். உனக்கு முன் என்னைச் சுந்தரம் பிள்ளை ஒழித்து விடுவார். நாயரை ஏன் விட்டு விட்டார் என்றால், எந்தச் சமயம் முதுகில் கத்திக் குத்து விழுமோ, தெரியாது. எந்த நிமிஷமும் எதிர்பார்த்திருக்க வேண்டியதுதான்.''

'தம்பி' சிறிது ஆவேசமாகத்தான் பேசினான். எனினும், தன் நிலைமையை ஒருவாறு நன்கு ஆலோசனை செய்தே பேசினான் என்று சொல்ல வேண்டும்.

சுந்தரி தலையில் கையை வைத்துக்கொண்டு யோசனை செய்தாள். ஒரு காலத்தில் சுந்தரம் பிள்ளையின் துணைவி



என்ற வகையில் அவள் பலம் மிக அதிகமாக இருந்தது: சுந்தரம்பிள்ளையே அவளுக்குச் சிசுருஷை செய்தால் அவள் பேச்சிக்குச் செல்வாக்கு மிகுந்து காணப்பட்டது. இன்று சுந்தரம் பிள்ளையிடமிருந்து பிரிந்து விடும்போது அவள் பலவீனம் எத்தனை மோசமானது என்பதை ஊகித்தாள். அவள் ஓடினால்கூட, திரும்பி இழுத்து வந்து, கட்டி வைத்துச் சவுக்கடி கொடுக்கும் சக்தி பிள்ளைக்கு உண்டு என்பதை உணர்ந்தாள்: அந்த நிலையிலே அவள் நடுங்னாள்.

''செய்வதை மிகவும் ஜாக்கிரதையாகச் செய்ய வேண்டுமே!'' என்று கேட்டாள் சுந்தரி.

''எனக்குத் தெரியாதா?'' என்றான் 'தம்பி'. பிறகு, ''நான் வருகிறேன். எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்பதற்காகவே வந்தேன்!'' என்றான்.

சுந்தரியுடன் பதினைந்து நிமிஷம்பேசிவிட்டுத் 'தம்பி' வருவதை நாயர், கவனித்தான். ஆனால் இப்படி ஒரு சம்பாஷணை அவர்களிடையே நடக்கும் என்பதை அவன் எதிர்பார்க்கவில்லை, 'தம்பி'யின் நடவடிக்கைகளிலிருந்து அவன் யாரையும் சந்தேகிக்கவில்லை என்று தீர்மானமே 'நாயர்' செய்திருந்தான்.

சுந்தரி மிகவும் கலங்கி விட்டாள். சஞ்சல மனத்துடன் அன்றெல்லாம் உலாவினாள். எந்த நிமிஷமும் சுந்தரம் பிள்ளை இந்திராவுடன் சல்லாபம் செய்து வருவதாக எண்ணி, உள்ளம் எரிந்தாள். சுந்தரம் பிள்ளைக்கு எத்தனையோ ரகசியங்கள உண்டு. ரகசியமாக இருக்கும் வரை அவள் அவரைத் தொந்தரவு செய்ததில்லை. இப்போது ரகசியத் திரையை விலக்கிக் கொண்டு அவர் பகிரங்கமாக விளையாடுவதை அவளால் சகிக்க முடியவில்லை.

மாலையில் ஒரு யோசனை உதயமாகியது. ஸி.ஐ.டி. சந்துருவிடம் இருவரை அனுப்பி, அவனை 'விலைக்கு வாங்கிவிட' செய்யப்படும் யோசனை அவன் காதுக்கு

லட்டியது. என் சந்துருவை கூப்பிட்டு, ஜாக்கிரதை என்று எச்சரிக்கக் கூடாது?'—என்று சிந்தனை செய்தாள். 'அது துரோகமில்லை' என்றது அவள் மனசாட்சி. ஏதேனும் ஒரு தனி இடத்துக்கு அவனைத் தருவித்து! தான் இன்னார் என்பதைக் கூறாமலே ஒரு 'கோடி' காட்டி விட்டால் என்ன? குறைந்த பட்சம் சுந்தரம் பிள்ளையைச் சந்துரு வந்து ஒரு நாள் ஒரு முறை பேட்டி காணட்டுமே! அதில் என்ன பிழை? இந்திராவுக்கு விடு தலை, சுந்தரம் பிள்ளைக்கு ஒரு அதிர்ச்சி; இரண்டும் சித்திக்கட்டுமே!

சுந்தரம் பிள்ளை அருகே எங்கும் இல்லை என்ற நிச்சயம் செய்து கொண்டு டெலிபோனை எடுத்தாள். சந்துருவின் குரல் கேட்கும் வரை அவள் மனம் படாத பாடுபட்டது. 'அதிஜாக்கிரதையாகப் பேச வேண்டும்; அவன் பொல்லாதவன்; எப்படியோ விஷயங்களைக் கிரகித்துக் கொண்டு விடுவான்" என்றெல்லாம் திடம் செய்து கொண்டாள் மனத்தை. ''இரண்டு ஆட்களும் போய் விட்டார்களா?'' என்று விசாரித்துக் கொண்டாள். அதுவரை எல்லாம் எதிர்பார்த்தபடி சென்று விட்டன. அவள். முக்கியமான பேச்சை ஆரம்பித்த போதுதான், சுந்தரம் பிள்ளையின் முரட்டுக் கைகள் அவளை ஒரு புறமும் டெலிபோனை ஒரு புறமுமாக விசிறி அடித்தன. நாயரைக் காவலாளியாகக் கொண்ட சிறைச் சாலையில் அவளைக் கொண்டு தள்ள உத்தரவு போட்டு விட்டு அவர் சென்றார்.

இது ஒன்றுமே தெரியாத 'தம்பி' சூர்யாஸ்தமனத் திற்குப் பிறகு சந்துருவின் வீட்டைத் தேடிக் கொண்டு சென்றான். இருட்டுவதற்கு முன்பாக அங்கே செல்ல அவன் கால்கள் கூசின். யாரேனும் பார்த்து விடுவார்கள் என்ற அச்சம் ஒருபுறம். வேணுமென்றே மூன்று முறைகள் பக்கத்துத் தெருவில் எல்லாம் சுற்றிச் சுற்றி வந்து, யாரும் தன்னைப் பின் தொடர்ந்து வரவில்லை என்பதை ஊர்ஜிதம் செய்து கொண்டான்.



சந்துரு மாடியில் இருந்தான் என்பதை விசாரித்துக் கொண்டு, சம்பாவின் மூலம் அனுமதியும் பெற்றுக் கொண்டு மாடி ஏறினான். காலை நீட்டிக்கொண்டு நாற் காலியில் சாய்ந்திருந்த சந்துரு, 'தம்பி'யின் பிரவேசத் தைக் கடைக் கண்ணால் கவனித்தான்; சற்றுதான். ஆனால், கால்களை மடக்கியோ, கைகளை நீட்டியோ, வேறெந்த முறையிலோ சிறிதும் அவன் வந்திருப்பதைப் பொருட்படுத்தியதாகக் காட்டிக் கொள்ளவில்லை. அறை யினுள் வழக்கமாக வரும் பூனை அல்லது நாய்க்குட்டி வந்தால் எப்படி அசிரத்தையுடன் இருப்போமோ, அந்தப் பாவத்தையே சந்துருவிடம் கண்டான், 'தம்பி'.

இது ஒரு வகையில் அவனுக்குப் பெரிய அதிர்ச்சியே. தன்னிடமிருந்து புதிய விஷயங்களைக் கிரகித்துக் கொள்ளச் சந்துரு ஆவலாக இருப்பான், யார் என்று விசாரித்து உபசரிப்பான், 'பயப்படாதே' என்று தட்டிக் கொடுப்பான் என்றெல்லாம் ஆசைகளுடன் வந்த 'தம்பி', தன் மனத்தையே மாற்றிக் கொள்ளும் அளவுக்கு ஏமாற்றம் அடைந்தான். 'ஏது' இந்தச் சந்துரு, சுந்தரம் பிள்ளையையும் அலட்சிய பாவத்தில் ஜீரணம் செய்கிற ஆளாக அல்லவா இருப்பான் போலிருக்கிறது?' என்று எண்ணி, தான் கூற வேண்டியிருந்ததை வெகு சுருக்க மாகக் கூறி விட்டு, வெளியேறி விட வேண்டியதே நல்லது என்றொரு தீர்மானமும் செய்து கொண்டான்.

'தம்பி' கைதூக்கிக் கும்பிட்டான். இருந்தபடியே சந்துரு ஒரு கண்ணை மட்டும் சற்றே சிமிட்டி, அதை ஏற்றுக் கொண்டதாக பாவனை காட்டினான். 'சீ!' என்று வந்தது 'தம்பி'க்கு. ஐந்து நிமிஷம் ஆகியும் 'உட்கார்' என்று ஒரு வார்த்தை சொல்லவில்லை சந்துரு.

''உங்களைப் பார்த்துப் போகலாம் என்று வந்தேன்'' என்று தானாகவே ஆரம்பித்தான் 'தம்பி'.

ஈரமற்ற கரகரத்த குரல். வெகு அசட்டையாக ''என்ன விசேஷம்?'' என்று சந்துருவிடமிருந்து வந்தது.

'தம்பி' தானாக அருகில் நெருங்கினான். "இப்போது நீங்கள் ஒரு கேஸில் வெகு மும்முரமாக இருக்கிறீர்கள் என்று அறிந்து கொண்டேன்..."

"உனக்குத் தெரிந்து ஒன்று; என் கணக்குப்படி ஒன்பது எந்தக் கேஸைப் பற்றி நீ என்னிடம் பேச வந்திருக்கிறாய் என்று நான் கண்டேன்!"

ஒரு முறை 'தம்பி' மூச்சை உள்ளுக்கு வாங்கிக் கொண்டான். அடுத்த பேச்சுப் பேசாமலே திரும்பி விடலாமா என்று கூட அவனுக்குத் தோன்றியது. 'வந்தது வந்து விட்டோம். இரண்டு வார்த்தையோடு போகலாம்' என்று மறுபடி எண்ணி, "ஒரு தோல் பை—விஷயமாக நீங்கள் வேலை செய்கிறீர்கள் அல்லவா?" என்றான்.

"நான் அதை நிறுத்தி விட்டேனே! இப்போது அது எனக்குப் பழைய கேஸ்..."

"இருக்கலாம்; அந்தப் பங்களாவில் இரண்டு பேர் காணாமல் போயிருக்கிறார்கள் அல்லவா?... அவர்கள் விஷயமாக மேற்கொண்டு தகவல் கிடைத்திருக்குமா என்று தான்..."

"தகவல் கிடைத்திருந்தால், நான் உன்னிடம் சொல்வேன் என்று நினைத்து வந்திருக்கிறாயா? அப்படியென்றால், வேண்டிய தகவல் கிடைத்திருக்கிறது; ஆனால் ஒன்றையும் உன்னிடம் சொல்வதற்கில்லை. நீ யார் என்று என்னிடம் அறிமுகம் செய்து கொண்டு வீண் பொழுது போக்க வேண்டாம். உன்னை எனக்குத் தெரியும்! எதற்கு இங்கே வருகிறாய் என்றுகூட நினைத்தேன்!" என்றான் சந்துரு கண்டிப்பாக.

"இந்திரா எங்கிருக்கிறாள் என்று நான் சொல்லலாம் என்று வந்தேன்..."

"தேவை இல்லை; எனக்கே தெரியும். தவிர அதைக் கண்டு சொல்ல ஒரு ஆள் வேலை செய்து கொண்டிருக்கிறான்; அவனுக்கு நான் கூலி கொடுக்கப் போகிறேன். உன்னிடம் நான் அதை எதிர்பார்க்கவில்லை..."



"செங்கல்வராய பிள்ளை என்ன சங்கடத்தில் இருக்கிறார், தெரியுமா?"

"சங்கடப்படுகிற காலம் வந்தால் படட்டும்; எனக்கு அந்தச் சமாசாரமும் தேவை இல்லை. அப்புறம்?"

"நேற்று ராத்திரி ஒரு ஆசாமி உங்களுக்கு டெலிபோன் செய்தான். நீங்கள் பேசினீர்களோ, என்னவோ! சங்கரன் என்ற அந்த ஆளும் இப்போது இவர்களைப் போலவே சங்கடப்படுகிறான்."

"சங்கரனைப் பற்றி நான் கவலைப்படவில்லை. அதிர்ஷ்டமும் ஆயுளும் இருந்தால் அவன் தப்பித்துக் கொள்ளுவான்..."

"உங்களுக்கு உபகாரமாக இருக்கலாம் என்று வந்தேன்; உதறி விடுவதென்றால் நான் போய்விடுகிறேன்."

சந்துரு எழுந்து உட்கார்ந்தான். "உன்னை நான் இருக்கச் சொன்னேனா? உனக்கு நான் சொல்லி அனுப்பினேனா? அல்லது,உன் தயவுதேவை என்று கேட்டேனா? நீ தாராளமாக எப்போதோ போயிருக்கலாம். நில்! உனக்குத் தெரியாத சமாசாரம் எனக்கு ஒன்று தெரியும்... கேட்கிறாயா?"

'தம்பி' இரு புறமும் பார்த்தான். சந்துருவைக் கோட்டை அறையாக அறைந்து விடலாமா என்று வந்தது ஆத்திரம். உதட்டைக் கடித்து அடக்கிக் கொண்டான்.

சந்துரு சிரித்துக் கொண்டே, "என்னை எத்தனையோ பேர் தாக்க வேண்டும்; என் தலையைச் சீவ வேண்டும்; என் நெஞ்சை நெறிக்க வேண்டும் என்று ஆசைப் பட்டிருக்கிறார்கள். அதற்கெல்லாம் நான் தயாராக இருந்துவிடுவது வழக்கம். நீ நுழைந்தபோதே நான் தயாராகி விட்டேன் என்று தெரிந்துகொள். அப்புறம், நான் சொல்ல வந்த விஷயம், ஒரு ஸ்திரீ எனக்கு டெலிபோன் செய்தாள், ஐந்து நிமிஷம்தான் இருக்கும். அவள் என்னைத் தனியே கண்டு பேசவேண்டும் என்று விரும்பினாள்—உன் மாதிரி என்று வைத்துக் கொள்ளேன். "சில முக்கியமான விஷயங்கள் சொல்ல வேண்டும்; எங்கே

சந்திக்கலாம்?'' என்று கேட்டாள். நான் பதில் கூறுவதற்குள் யாரோ அவள் வாயைப் பொத்தி, டெலிபோனையும் பிடுங்கி விட்டார்கள். உன்னுடன் சம்பந்தப்பட்ட கூட்டாளியாக இருந்தால், இங்கே காலதாமதம் செய்து கொண்டு நிற்காதே! ஓடு! இந்த மாதிரி ஆபத்து சமயங்களில், கூட்டாளிகள், ஒருவரையொருவர், காட்டிக் கொடுப்பது சகஜம். என்னைப் பற்றி, என் கேஸைப் பற்றி மறந்து விடு. யாராவது காத்திருந்து உன்னைப் பின்பற்றி வருகிறார்களா என்று கவனித்துக் கொண்டு ஓடு! சீக்கிரம் ஆகட்டும்.. மேலே ஒன்றும் சொல்ல வேண்டாம். எனக்குக் காது திடீர் என்று செவிடாகிவிடும். ஓடினால் நீயும் பிழைக்கலாம்; ஒரு வேளை உன் கூட்டாளியும் பிழைக்கலாம். ஜல்தி! எனக்கும் தூக்கம் வருகிறது!'' என்று முடித்து, சந்துரு திரும்பிப் படுத்துக் கொண்டான்.

'தம்பி'யின் உடல் வெடவெடத்தது. சுந்தரி, சுந்தரம் பிள்ளையிடம் அகப்பட்டுக்கொண்டு விட்டாளோ! ஏதேனும் உளறியிருப்பாளோ! என்ன வேதனை இது!— 'சந்துரு பொய் சொல்ல மாட்டான்' என்று அவன் மனம் திடமாக நம்பியது. நிற்காமல் மடமடவென்று கீழே இறங்கினான்! திரும்பிப் பாராமல் ஓடினான்..

மிஸ் சரளா தேனாம்பேட்டை பங்களாவுக்கு வந்தது முதலே, திலகவதிக்கு நெஞ்சினுள் ஒரு இனம் புரியாத திகில் பிறந்திருந்தது. ஸேட் கடைக்குச் சென்று விட்டுத் திரும்பும் வரையில், அவளுக்குச் சரளா வருவாள் என்ற ஞாபகம் இல்லை; ஸி. ஐ. டி. சந்துரு அவ்வளவு விரைவில் ஒரு 'துணை'யை ஏற்பாடு செய்வான் என்று அவள் எதிர்பார்க்கவில்லை. வீட்டினுள் காலடி வைக்கும் போதே, சரளா என்ற ஒருத்தியின் கண்காணிப்பு ஆரம்பமாகி விட்டது என்பதை அவள் உணர்ந்தாள். 'துணை' என்பது பெயருக்குத்தான். உண்மையில் சரளா அவளுக்கு ஒரு 'காவ'லாகவும் இருந்து, நடப்பனவற்றையெல்லாம் கவனிப்பாள் என்று இப்போது புலனாகி விட்டது.



''நல்ல வேளை! வெளியில் செல்லு முன் வந்து வைக்காமல் இருந்தாளே!'' என்ற ஒரு ஆறுதலுடன் உள்ளே சென்றாள்.

இருவருடைய அறிமுகமும் வெகு சுருக்கமாகவே அமைந்தது. ''உங்களுக்கு ஒரு துணை இப்போது அவசியம் என்று சந்துரு திடமாக நம்புகிறார் என்றால், அதற்குத் தகுந்த காரணம் இல்லாமல் இராது. ஆகையால், கூடிய வரையில் நீங்கள் இருக்கும் இடத்தைச் சுற்றியே நான் வந்து கொண்டிருக்கிறேன். சிறிது காலத்திற்குத்தான். சந்துரு மேற்கொண்டு கேஸை நடத்தி வருவதால், வெகுவிரைவில் முடிவு காண்போம் என்பதில் சந்தேகம் இல்லை..'' என்றாள் சரளா.

சரளாவின் குரலில் இருந்த கண்டிப்பு, திலகவதிக்குச் சிறிது அதிருப்தியை உண்டாக்கவே செய்தது. ஆனால், அவளுடைய நன்மைக்கு என்று செய்யப்படும் காரியம் ஒன்றைத் தடுப்பதில் தனக்கு உரிமை இல்லை என்று உணர்ந்தவள் போல், மௌனமாக இருந்துவிட்டாள்.

சரளா சற்று நேரமும் சும்மா இருக்கவில்லை. பங்களாவைச் சுற்றி வந்தாள். அங்குள்ள அறைகளை எல்லாம் பார்வை இட்டாள். கணேசன் இல்லை என்ற காரணத்திற்காக, அவன் அறையையும் சோதனை போடாமல் விடவில்லை. அண்ணாமலையைத் தருவித்து, ''நீ மிகவும் யோக்யன் என்று எஜமான் அம்மாள் அடிக்கடி சொல்லி விட்டாள். இந்த வீட்டில் எஜமானி வந்து சேரும் வரையில் வேறொரு தொல்லையும் ஏற்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டியது நம் பொறுப்பு!'' என்றாள்.

தவசுப்பிள்ளையிடம் அவள் பேசினது வேடிக்கையாக இருந்தது. ''தவசுப்பிள்ளை! இந்த வீட்டில் எங்கேயாவது கொஞ்சம் விஷம் கிடைக்குமா?'' என்று கேட்டாள். தவசுப் பிள்ளை வாயடைத்துப் போய் நின்றான்.

''ஆமாம்... எந்த விஷமானாலும் பரவாயில்லை. எலி பாஷாணமானாலும் பரவாயில்லை. இருக்கிறதையெல்லாம் என்னிடம் கொடுத்து விடுங்கள்!''

"இங்கே அதெல்லாம் கிடையாது... எதற்குக் கேட்கிறீர்கள்?"

"நான் உங்கள் எஜமானியம்மாளுக்கு நெருங்கின உறவுக்காரி. இங்கே இவர் துணை வேண்டும் என்று கேட்டதாலேயே வந்திருக்கிறேன். நேற்றிரவு ஆட்களை அப்படி அப்படியே தூக்கிக்கொண்டு போயிருக்கிறார்கள் என்று அம்மாள் சொல்கிறார். நான் வந்த பிறகு, நான் விழித்துக் கொண்டிருக்கும்போது அப்படி நடக்காது. ஆனால், அதற்கு முன்னே விஷத்தைக் கொடுத்து மயக்கியே கொண்டு போய் விடலாம் அல்லவா?"

"நான் இருக்கிற வரைக்கும் அப்படி நடக்காது அம்மா!"

"ரொம்ப சந்தோஷம்! உன்னுடைய வேலை காயமாக இருப்பதற்கு நல்ல காரணம் இருக்கிறது. எதற்கும் சமையலில் ஜாக்கிரதை; நம் எதிரிகள் நினைக்கும் வழிகளை நாமும் எதிர்பார்த்து, முன் எச்சரிக்கையாகப் பந்தோபஸ்து செய்து கொள்ளலாம் அல்லவா?"

தவசுப்பிள்ளை ஒரு மாதிரி சிரித்துவிட்டுப் போனான். அப்பால் போய் அண்ணாமலையிடம், 'இதேதடா! வாலு போச்சு, கத்தி வந்த வியாபாரமாக இருக்கிறது. ஸி.ஐ.டி.க் காரனைவிட இவள் மோசமாக இருக்கும்போல் இருக்கிறதே!" என்று முணுமுணுத்தான்.

"நமக்கென்ன வந்தது! சொன்னதைச் சொன்னபடி செய்துவிட்டு நடந்துகொள்!" என்று உபதேசம் செய்து வைத்தான் அண்ணாமலை.

மணி மேலே மேலே நகர்ந்தது. அஸ்தமனம் வரை ஒன்றும் விசேஷமாக நடக்கவில்லை. திலகவதி பிற்பகலில் வெகுநேரம் தூங்கினாள்; சரளாவுக்கு அது ஆச்சரியமாக இருந்தது. முதல் நாள் பூராவும் விழித்த அசதியாக இருக்கும் என்றாலும், திலகவதியிடம் காணப்பட்ட நிச்சிந்தை அவளைத் திகைக்க வைத்தது. செங்கல்வராய பிள்ளைக்கு என்ன ஆயிற்றோ என்ற கவலை சற்றேனும் இருப்பவளாக அவள் காண்பித்துக் கொள்ளவில்லை.



செங்கல்வராய பிள்ளை அவளைச் சரியாக நடத்தாமல் மிகுந்த மனவருத்தங்களுக்கு ஆளாக்கி விட்டதால், விச்ராந்தியாக இருப்பதே நல்லது என்று நினைத்து விட்டாளா? அல்லது, அவரைப் பற்றிய அந்தரங்கமான தகவல் ஏதேனும் கிடைத்திருந்தால், அவர் சௌக்யமாக இருக்கிறார் என்று சமாதானம் அடைந்து இப்படி இருக்கிறாளா? அல்லது, நடக்கிறது நடக்கட்டும் என்று துணிந்து விட்டாளா?—சரளாவால் எதையும் திடமாகக் கொள்ள முடியவில்லை.

மாலை நீங்கி, இரவு நேரம் வந்த பிறகு ஒரு புதுவிதமான சூழ்நிலை ஏற்படத் தொடங்கியது. திலகவதியின் தைரியம் ஓரளவு அவளைக் கைவிட்டதாகத் தோன்றியது. மிரள மிரள விழித்தாள். சாதாரணமாகச் சரளாவிடம் நெருங்கியிருந்து வந்தவள், ஒதுங்கத் தொடங்கினாள். சரளா இதைக் கவனித்தாள்; ஆனால் காண்பித்துக் கொள்ளவில்லை. இரவு ஒன்பது மணிக்கு மேல் சரளா ஒரு நாவலை வைத்துக்கொண்டு படித்துக் கொண்டிருப்பது போல் பாசாங்கு செய்த சமயம், முதல் எச்சரிக்கை அவளுக்குக் கிடைத்தது. ஜரூர் ஆனாள்.

தவசுப்பிள்ளை மாடிக்கு வந்தான். திலகவதி எங்கிருக்கிறாள் என்று கண்ணோட்டம் விட்டான். சரளா புத்தகத்தில் ஆழ்ந்திருந்தாள் என்று கண்டு, திலகவதியின் அருகில் வந்து தன் தலையைத் தடவிக் காண்பித்தான். பிறகு, பரம சாதுவைப்போல கீழே இறங்கிப் போய் விட்டான்.

திலகவதி பதினைந்து நிமிஷங்கள் வரையில் சும்மா உட்கார்ந்திருந்தது, தவசுப்பிள்ளை வந்து போனதைச் சரளா மறந்து போவதற்காகவே என்பதைப் பற்றிச் சந்தேகம் இல்லை; ஆனால், சரளா அது ஒன்றையே நினைத்து, எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள். திலகவதி சாமர்த்தியமாக மௌனம் சாதிப்பதைக் கவனித்து, 'உங்களிடம் ஒரு வார்த்தை. எனக்கு லேசாகத் தலைவலி

யாக இருக்கிறது. சற்று நேரம் படுத்தேனானால் நின்று விடும். நீங்களும் வந்துவிட்டால் நல்லது. என்னிடம் ஒரு கெட்ட குணம். தூங்க ஆரம்பித்தால், கும்பகர்ணிதான். எந்தச் சமயம் வேண்டுமோ, உடனே தயங்காமல் நீங்கள் எழுப்பிவிட வேண்டும்...'' என்று கேட்டுக் கொண்டாள். திலகவதி இதற்குச் சம்மதித்த ஒரு அவசரத்தைக் கண்டு, சரளா சிறிதும் ஆச்சரியம் கொள்ளவில்லை. சொன்னால் சொன்னபடி, படுக்கையில் படுத்த மூன்றாவது நிமிஷம், சரளா கண் அயர்ந்து விட்டாள்; மேலும் சில நிமிஷங்களுக்குப் பின், மெல்லிய குறட்டைகளையும் திலகவதி கேட்டாள்.

எதற்கும் இன்னும் கொஞ்சம் அவகாசம் கொடுத்துப் பார்த்து, நிச்சயம் சரளா தூங்கிவிட்டாள் என்ற நிச்சயத்துடன், திலகவதி எழுந்து அறைக்கு வெளியே வந்தாள். பூனைபோல் அடிமேல் அடி வைத்துக் கீழே இறங்கி, மதுரநாயகத்திற்கென்று கொடுக்கப்பட்டிருந்த அறைக்குள் வந்து விளக்கைப் போட்டாள். அங்கு யாரும் இல்லை. ஒரு கணம் தயங்கிவிட்டு வெளியே வந்தாள். அதற்கு அடுத்த அறைக்குச் சென்று விளக்கை ஏற்றினாள். சோபா நாற்காலியில் இருட்டில் உட்கார்ந்திருந்த ஒரு ஆசாமி துள்ளிக் குதித்தான்.

திலகவதியைக் கண்டதும், ''அட நீதானா! உயிர் போய் உயிர் வந்தது. யாரோ என்று கேட்டான் அவன்.

''சும்மா இரு அப்பா! லகுவாய்ச் சொல்லிவிடுகிறாய்! ஒரு பெண் எனக்குக் காவலுக்கு வந்திருக்கிறாள்; அவள் தூங்கினால்தானே வரலாம்? இல்லாவிட்டால் சந்துருவிடம் போய்விடும், நீ இங்கே வந்திருக்கும் சமாசாரம்!''

''சரி...பேசிக் கொண்டிருக்க வேண்டாம்... பணம் கொண்டு வந்திருக்கிறாயா?'' என்று அவசரமாக வினவினான் பஞ்சநதம்.



''நெஞ்சில் ஈரம் இல்லாமல் பேசுகிறாயே, அப்பா! பணம் தரத்தான் போகிறேன். ஆனால் இதுவே கடைசித் தடவை இனிமேல் இங்கு ஒரு ரூபாய் கிடைக்காது. ஆயிரம் ரூபாய் கொண்டு வந்திருக்கிறேன்... அதற்கு எவ்வளவோ கஷ்டப்பட்டேன்...''

''சும்மா புளுகாதே! மூவாயிரம் கொண்டு வந்தாய், எனக்குத் தகவல் கிடைத்தது...ஏமாந்து போகிற ஆள் இல்லை நான்!'' என்றான்.

திலகவதி சீறினாள். ''ஐயாயிரமே கிடைத்தது; அதை உனக்குக் கொடுத்துவிட வேண்டுமா? நீ சம்பாதித்த பணமா? எதைக் கொடுத்தால் என்ன, அப்படியே முத்தையன் கையில் கொடுப்பாய். உன்னை நன்றாக வளைத்துப் போட்டிருக்கிறான் அவன். ஆயிரம்தான் கொடுப்பேன்...இதோ அதையும் வைத்துவிட்டேன் இஷ்டமானால் எடுத்துக் கொள்...''

''திலகவதி!''

''பேசிப் பிரயோசனம் இல்லை. இன்னமும் ஒன்று! மறுபடி பணம் கேட்டுக்கொண்டு இங்கே வரக்கூடாது. நான் ஆபத்தில் இருக்கிறேன். உன் மாப்பிள்ளை போன இடம் தெரியவில்லை. அவர் வந்தால் என்னை என்ன சொல்லுவார் என்றும் தெரியவில்லை...''

''என்ன சொன்னாலும் அதற்கு நான் பதில் சொல்லித் தருகிறேன்...இப்போது சொல்; பை சமாசாரம் என்ன?''

''அதையெல்லாம் பற்றி நீ கவலைப்பட வேண்டாம்!''

''நாராயணன் கொண்டு வந்த பையில் குப்பைதானே இருந்தது!''

''அதைப்பற்றி உனக்கென்ன என்று கேட்கிறேனே! அவ்வளவை வைத்த பணத்தை எடுத்துக்கொண்டு போ! அவ்வளவையும் உன் தோழனிடம் பறி கொடுத்துவிட்டு மறுபடி இங்கே வந்தால், என்னால் ஒன்றும் முடியாது. மறுபடி இந்த வீட்டைப்பற்றி நீ ஒரு சொத்தையும் கொள்ள வேண்டாம். கூடியவரை நீ வராமல் இருப்பதே நல்லது.

என்னைக் கவனித்துக்கொள்ள எனக்குத் தெரியும்...'' என்று மடமடவென்று பேசினாள்.

''ஓ! அப்படி என்னை ஒதுக்குகிறாயா?''

''ஒதுக்குகிறேனோ, இல்லையோ! இங்கே நீ வருகிற ஒவ்வொரு சமயமும் எனக்கு ஆபத்து...வந்து நேரமாயிற்று சரளா எழுந்துவிட்டால், நான் ஒழிந்தேன். ஒருவேளை இங்கே வந்துதான் ஒட்டுக் கேட்டுக்கொண்டிருக்கிறாளோ! இந்தப் பணத்தை நீ எடுத்துக்கொண்டு போகிறாயா? நான் போய் விடட்டுமா?''

இலகவதிக்கு உண்மையிலேயே அச்சம் வந்துவிட்டது. சரளா அவளைப் பின்பற்றி வந்து அவ்வளவையும் கவனிக்கிறாள் என்று எப்படியோ ஒரு ஊகம் செய்துவிட்டாள். அவள் மட்டும் அப்போதே திரையைத் தள்ளிவிட்டுப் பார்த்திருந்தால், அது எத்தனை சரியான ஊகம் என்பதையும் அறிந்திருப்பாள்.

அதற்குச் சந்தர்ப்பமே இல்லை; ஏனென்றால் பந்து போன்ற ஒரு கனத்த பண்டம் குறி பார்த்து அறையினுள் வீசப்பட்டது. அது உயரத் தொங்கிய மின்சார விளக்கில் மோதி, அதைத் தூள் தூளாக உடைத்து, அறையை அந்தகாரத்தில் ஆழ்த்தியது.

இலகவதியும் பஞ்சநதமும் சரேல் என்று பாய்ந்து பணத்தைக் கைப்பற்ற முனைந்தார்கள். அவர்கள் இருவர் கைகளும் சந்தித்தன. அவற்றிற்கிடையில், மூன்றாவது கை ஒன்று அந்தப் பணத்தைப் பற்றிக்கொண்டு தடதட வென்று அங்கிருந்து ஓடியது.

சரளா மின்னல்போல் தனது ஒளிவிடத்திலிருந்து தாவினாள். வந்த வழியே திரும்பி, தன் அறையை அடைந்து படுக்கையில் விழுந்து முன்போலவே போர்த்திக் கொண்டுவிட்டாள்.

இலகவதி திரும்பியபோது, சரளா முன் போலவே மெள்ளக் குறட்டை விட்டுக்கொண்டிருந்ததைக் கண்டாள்.

# நாராயணன் சிறிது துப்பறிகிறான்

சியாம்லால் சாந்திலால் ஸேட் கடைவாசலுக்கு எதிரே நாராயணன் நின்றுகொண்டேயிருந்தான். அந்தக் கடையில் அதிகமான ஜனநடமாட்டம் இருந்ததாகக் காணவில்லை; அதுவும் நாராயணன் குறிப்பாகக் கவனிக்கக் கூடியவர்கள் யாருமே வரவில்லை. ஒரே ஒரு ஆசைமட்டும் நாராயணனுக்கு இருந்தது; அன்றே மறுபடி ஒரு முறை அந்த மதுரநாயகம் வர மாட்டானா, அவனை அப்போதாவது இன்னமும் ஜாக்கிரதையுடன் பின்பற்றலாமே என்பதுதான் அந்த ஆசை.

ஓரிடத்தில் காத்து நிற்பது என்பது எத்தனை சிரம சாத்தியமான காரியம், அதற்கு எத்தனை பொறுமை வேண்டும் என்பதையெல்லாம் ஒவ்வொரு விநாடியும் அவன் உணர்ந்தான். இப்போது தன்னை நாராயணன் ஒரு வகையில் ஜாக்கிரதை செய்து கொண்டிருந்தான். மறுபடி அந்த ஸேட்டின் சேவகன், ஜோராம் வெளியே வந்தால், கண்ணில் படாமல் ஒதுங்கிக் கொள்ள அவன் தயாராக இருந்தான். ஜோராம்தான் அந்த வகையில் எவ்விதச் சிரமும் கொடுக்கவில்லை.

இடையில் ஒரு முறை மட்டும் நாராயணன் சாப்பாட்டுக்குச் செல்ல வேண்டியதிருப்பதும் இருந்தது; அது சமயம், கண்காணிப்பு இல்லாமல் போய்விடுமே, மதுரநாயகம் வந்து போய்விட்டால் என்ன செய்வது என்ற கவலை நாராயணனுக்கு ஏற்பட்டது. அதையும் ஒரு எளிய வழியில் சமாளித்துக் கொண்டான். எதிர்ச் சருகில் இரண்டு கடைக்கு அப்பால் ஒரு சாப்பாட்டு ஓட்டல் இருந்தது. அதன் மாடி அறையில், ஜன்னல் ஓரமாக ஒரு மேஜையைப் பிடித்து விட்டால், இந்தக் கடை வாசலிலும் ஒரு கண் வைத்துக் கொண்டு, சாப்பாட்டையும்

கவனிக்கலாம். இதில் சிறிது சிரமம் இருந்தது. ஜன்னல் ஓரத்து மேஜை கிடைப்பதுதான் அவ்வளவு எளிதாக இல்லை. ஒருவர் சாப்பிட்டுக் கொண்டிருந்தார்; அந்த இடம் காலியாவதற்கு மற்றொருவர் காத்திருந்தார். நாராயணனின் விடா முயற்சியே கடைசியில் வெற்றி பெற்றது. ஒரு மணிவரை நின்று அங்கே இடத்தைப் பற்றிக் கொண்டான்.

அவன் சாப்பிட்டு முடியும் தறுவாயில்தான் அவன் எதிர்பார்த்த காரியம் நடந்தது. அன்று காலையில் மதுரநாயகத்துடன் பேசிவிட்டுப் பிரிந்த குள்ளனும் நெட்டை ஆளும் திடீரென்று ஸேட்டின் கடை வாசலில் நின்றார்கள்; ஆனால் உள்ளே பிரவேசிக்கவில்லை. ஜோராம்தான் வெளியில் வந்து அவர்களுக்குப் பதில் சொன்னான். "மதுரநாயகம்!... மதுரநாயகமா கேட்கிறீங்கோ?... அவர் இன்றைக்குக் கடைப் பக்கம் வரவே இல்லை!" என்றான்.

ஜோராம் பொய் சொல்கிறான். நாராயணன் கண் எதிரில் பார்த்திருக்கிறான், மதுரநாயகம் டாக்ஸியிலிருந்து இறங்கி நுழைந்ததை. ஒருகால் நாராயணன் தவறிப் போய்க் கேட்டிருந்தாலும், இந்த இரண்டு ஆட்களும் அதே மாதிரி பிசகு செய்ய மாட்டார்களே! ஆகையால், மதுரநாயகத்துக்கும் அந்த 'ஸேட்' கடைக்கும் ஏதோ ஒரு சம்பந்தம் இருக்கவேண்டும் என்பதில் சந்தேகம் இல்லை! அந்த இரு ஆட்களும் அவரை அங்கேவந்து விசாரிப்பதோ, சந்திப்பதுகூட ஒரு வழக்கமாக இருக்க வேண்டும். ஜோராமினுடைய பார்வையிலும் பேச்சிலும், அவர்கள் இருவரும் அவனுக்குப் புது முகங்கள் என்று தோன்றுபவையாக இல்லை. மதுரநாயகத்தின் பெயரையே கேட்டதில்லை போல் ஸேட் பாசாங்கு செய்திருக்கிறான்! ஏன் அப்படி? 'இருக்கட்டும், விடுவதில்லை' என்று நாராயணன் மனத்தைத் திடம் செய்து கொண்டபோது, அவன் இதயம் மறுபடி தளர்ச்சி அடைந்தது. அந்த இருவரும் இப்போது



அவன் இருந்த ஹோட்டலை நோக்கியே நடந்தார்கள்! ஐந்து நிமிஷங்களுக்கெல்லாம் அவர்கள் மாடி ஏறியும் வந்து விட்டார்கள்.

குள்ளன் கண்களில் அவன் பட்டால் அரை நொடியில் அவனை அடையாளம் கண்டு கொள்வான் என்ற திகில் நாராயணனுக்கு ஏற்பட்டது. கூடியவரைதான் இருப்பதை அறிவித்துக் கொள்ள விரும்பாதவனாக, வெளிப்புறம் எதையோ பார்க்கிறவன் போல் பாசாங்கு செய்துகொண்டு, ஜன்னல் வெளியே முகத்தைத் திருப்பிக் கொண்டான். அவர்கள் நாராயணன் எதிர்பார்க்கவும் இல்லை; கவலையும் வேறு விதமாக இருந்தது. இருவரும் ஒரு மேஜையில் இரு நாற்காலிகளில் எதிர் எதிராக உட்கார்ந்து கொண்டார்கள். அதிர்ஷ்ட வசமாகக் குள்ளன் நாராயணன் பக்கம் முதுகைத் திருப்பிக்கொண்டு உட்கார்ந்து கொண்டான்! நெட்டையன் மட்டுமே அவனைக் கவனிக்க முடியும்.

நாராயணன் அவசரம் ஏதும் இன்றிச் சாப்பிட்டான். முடியுமானால், அவர்கள் இருவரும் எழுந்து செல்லும்வரை தங்கிவிடுவது என்றுகூட ஒரு திட்டம் போட்டு விட்டான். ஹோட்டல் ஸர்வர் அதற்கு இடம் கொடுக்காமல் அவசரப்படுத்தினான். எப்படியும் அவர்கள் சம்பாஷணையில் சிறிதளவும் கேட்டுவிடுவதென்ற தீர்மானத்துடன் நாராயணன் காதைத் தீட்டிக்கொண்டு காத்திருந்தான். ஆரம்பத்தில் குள்ளன் ஏதேதோ விளங்காத விஷயங்களைப் பற்றித்தான் பேசினான். சட்டென்று, "ஆமாம்! தாமோதரம் எங்கே போயிருப்பான்!" என்று கேட்டான்.

தாமோதரம் என்ற பெயர் நாராயணன் உடம்பில் ஓர் உணர்ச்சியை உண்டாக்கியது; உன்னிப்பாகக் கவனித்தான்.

"தெரியவில்லை! நேற்று ராத்திரி கடைசியாக நீ பார்த்ததுதான்! அப்புறம் எனக்குத் தகவல் இல்லை!"

குள்ளன் பல்லைக் கடித்துக் கொண்டு பேசினான்; "அவன் மச்சான் சங்கரன் மட்டும் இல்லை என்றால், தாமோதரம் இன்றைக்கு லதேச்சையாக இருக்கமாட்டான்; அந்தப் பையையும் அவன் கைபட நான் விட்டிருக்க மாட்டேன். 'ஷாப்'பில் போய் விசாரித்துப்பார்க்கலாமா?"

"வேண்டாம் விடு, இப்போ... அவனுடன நமக்கென்ன வந்தது?"

"அவனுடன் ஒன்றும் இல்லை; அந்தச் சங்கரன் பயலுடன் எனக்கு இருக்கிறது! என்ன தைரியம்! நம் கண்ணெதிரில் பையைக் களவாடிக்கொண்டு போயிருக்கிறானே; நான் திராவகத்தை வைத்துக்கொண்டு மிரட்டுகிறேன்; அந்த வாண்டுப் பயல் சிரித்து மழுப்பி, என்னை ஏமாற்றியிருக்கிறான்."

நெட்டையன் 'ஹா ஹா'வென்று சிரித்தான். "இரண்டு தரம் மூக்குக்கு மண் காட்டி விட்டான் உனக்கே!"

"மூன்றாம் தடவை அவன் என்னிடம் மாட்டிக் கொள்ளட்டும்... தீர்த்து விடுகிறேன், தீர்த்து. இரண்டு முறை கொஞ்சம் இரக்கம் காட்டினேன். அதுவே நமக்கு ஆபத்தாகப் போய் விட்டது..."

"மூன்றாம் தடவை அவன் உன் கையில் அகப்பட்டு விடுவானா?"

"ஏன்?"

"நீ பிடிப்பதற்குள் அவன் வேறு பெரிய 'கை'களிடம் சிக்கியிருக்க மாட்டானா! சின்னப்பயலாக இருந்தும், பெரிய விஷயங்களிலே தலையை விடுகிறானே! அது கூடாது அல்லவா?"

இதற்குக் குள்ளன் சிரித்தான். "நீ சாப்பிடு, அண்ணே வேலை நிரம்ப இருக்கிறது. சங்கரனைப் பிடிக்கணும் என்கிறது மட்டும் இல்லை. மதுரநாயகத்தைக் கண்டு பேசியாகணும். அவரும் அல்லவா நமக்கு அகப்பட மாட்டேன் என்கிறாரு! கையிலே பணத்தட்டு அதிகமாகி விட்டது; இவரு சும்மா 'பணம் வருது, வருது' என்றுகோடி



காட்டிக் கொண்டிருந்தால் ஆச்சா? எத்தனை நாள் நாம் இங்கே அலைகிறது? ஒரு வழியாக, எடுத்த வேலை ஆச்சு, என்று முடித்துவிடவேண்டாம்..."

"அதுதான் ஆரம்பமே மோசமாப் போச்சே! (குனிந்து) முதல் நாள் பையிலே கை வைக்கத் தவறினோம். அப்புறம் எல்லாமே தவறு. போகிற இடம் எல்லாம் கோளாறு. எனக்கு முதல் முதல்லே, அந்த லிங்கி செட்டித்தெரு வீட்டு விவகாரம் வரை விடறதே பிடிக்கவில்லை நான் மதுரநாயகத்திட்டே முட்டிக்கொண்டேன், ஞாபகம் வருகிறதா?"

"அடே! உன் யோசனையை யார் கேட்கிறா! ஓட, பிடிக்க, அடி உதைபட, கத்திக் குத்து வாங்கிப் போலீஸிடம் மாட்டிக்க, நீயும் நானும் தேவை. ஜோரா சொஜ்ஜியும் அல்வாவும் சாப்பிட, சோபாவிலே 'பான்' அடியிலே படுக்க, ஸில்க் சட்டை போட, மோட்டார் வண்டியிலே ஜம்னு போக, இதுக்கெல்லாம் அவங்க பிறந்தாங்க..."

"ஏய்! நாம் செய்கிற வேலைக்கு உள்ள பணத்தை இவங்க எண்ணிக் கீழே வைக்கட்டும்! இவங்களுக்கு மேலே ஜோரா வாழத்தெரியும் நமக்கு!" என்றான் நெட்டையன். பேசுகிற உற்சாகத்தில், அவன் குரல் எழும்பிவிட்டது. வேறு யார் காதிலேனும் விழுந்துவிடப் போகிறதே என்ற பாவனையில் சட்டென்று திரும்பிய குள்ளனின் திருஷ்டியில், தன்னை மறந்து கேட்டவாறு உட்கார்ந்திருந்த நாராயணன் முகம் தென்பட்டுவிட்டது. முகத்தை வேறு திசையில் திருப்பிக் கொள்ளக்கூட அவகாசம் இல்லை அவனுக்கு. சட்டென்று எழுந்து, கையலம்பும் 'பேஸி'னுக்குச் சென்று அங்கிருந்தபடியே கீழே இறங்கினான்.

சில விநாடிகள் வரை குள்ளனும் நெட்டையனும் நாராயணன் சென்ற திசையையே நோக்கிக் கொண்டிருந்தார்கள் மௌனமாக. அந்தப் பார்வைகளில் இருந்த கூர்மை அவனுடைய முதுகை ஊடுருவிச் சென்றிருக்க

வேண்டும்! ஏனென்றால், எவ்வளவுதான் அலட்சியமாக நடை போட்டு நாராயணன் வெளியே சென்றான் என்றாலும் அவன் கால்கள் பின்னுக்கு இழுத்தன. 'நாம் அவ்விருவருடைய கவனத்தையும் கவர்ந்து விட்டோம் அவர்கள் நம்மையே கவனிக்கிறார்கள்' என்ற உணர்வு அவன் அங்கமெல்லாம் தெரிந்தது.

நாராயணன் வெளியேறிய இரண்டு மூன்று நிமிஷங்கள்வரை அந்த இருவரிடையே நிசப்தம் நிலவியது. இப்படி ஒரு முட்டாள்தனம் செய்துவிட்டோமே என்ற ஏக்கம் அவர்கள் பார்வையில் இருந்தது.

''யார் இவன்?...தெரிகிறதல்லவா?'' என்று கேட்டான் குள்ளன்.

''தெரியாமல் என்ன! தாமோதரத்தின் வீட்டில் பையை எடுத்து வர நீ போயிருந்தபோது, உன்னைப் 'பேட்டி' காண வந்தவன்தான், நான் வெளியில் இருந்து கவனித்தேன்!''

''இப்போது நான் அதைக் கேட்கவில்லை உன்னை... இவன் சந்துருவின் ஆள் இல்லையா?''

''என்னை ஏன் கேட்கிறாய்! நீ அவனுடன் பேசிக் கொண்டிருந்திருக்கிறாய்! நீதான் தாமோதரம் என்று அவன் நினைத்துக்கொண்டு, உன்னைப் போலீஸ் ஸ்டேஷனுக்கு வரும்படி சந்துரு உத்தரவு போட்டிருப்பதாக வேறு சொல்லியிருக்கிறான். இன்னமும் என்னையே சந்தேகம் கேட்டால்!''—நெட்டையன் குரலில் இருந்த வெறுப்பைக் குள்ளன் புரிந்துகொண்டு விட்டான்.

''எதற்காக இப்போது அவ்வளவு கடுகடுப்பு உனக்கு!''

''எதற்காகவா! கொஞ்சம்கூட சந்தர்ப்பம் தெரியாமல் நடந்து கொள்ள உன்னைப் பார்த்துப் பிடிக்க வேண்டும்! அன்றைக்குப் பார்த்த ஒரு ஆள் உன் பின்னால் உட்கார்ந்து கொண்டு கவனிக்கிறான். உரக்க உரக்க என்னென்ன பேசிவிட்டாய்!''



''நான் ஒன்றும் பேசிவிடவில்லை. நீதான் அவனைப் பார்த்தபடி உட்கார்ந்திருந்தாயே. எனக்கு ஒரு எச்சரிக்கை செய்யக் கூடாது?''

''ஒரு பிசகை எடுத்துச் சொன்னால், அதைத் திருப்பி என் தலையில் சுமத்தத் தயாராக இருக்கிறாய்! நீ கற்ற வித்தையெல்லாம் அவ்வளவுதான்! பையைச் சங்கரனிடம் கோட்டைவிட்டாய்; அது உன் முட்டாள் தனம்! அப்புறம் அவனைப் போய் மிரட்டிவிட்டு, ஓட்ட ஓட்டமாக ஓடி வந்தாய். இப்போ மனசில் இருக்கிறதையெல்லாம் கொட்டிவிட்டாய்!''

''என்ன நடந்து விட்டது இப்போ?''

''இவ்வளவும் சந்துரு காதுக்கு எட்டும்; அவனுக்கு ஒரு முனை அகப்பட்டால் போதுமே; வந்து விடுவானே!''

''இதெல்லாம் வீண் பயம்! இருக்கட்டும்; இந்த நாராயணனையே கொண்டுபோயவிடுகிறேன், அப்புறம்?''

''சங்கரனைக் கொண்டு போக வேண்டும்; நாராயணனைக் கொண்டு போக வேண்டும்—நடக்கிற காரியமாக இருந்தால் பேசு!''

''தானாக வந்து மாட்டிக்கொள்வார்கள், பார்! இந்தக் குள்ளன் மனது வைத்தால், ஏழு லோகத்தில் எதில் இருந்தாலும் கொண்டு வருவான்...இதற்காக நீ சாப்பிடாமல் எழுந்திருக்காதே!'' என்றான்.

வெளியே வந்த நாராயணனுக்கு மனத்தில் நிம்மதியே இல்லை. குள்ளனும் நெட்டையனும், மதுரநாயகத்திடம் பணம் எதிர்பார்க்கிறார்கள், தோல் பை விஷயத்தில் சம்பந்தப்பட்டவர்கள், இதில் எப்படியோ மதுரநாயகத்திற்குத் தொடர்பு உண்டு என்ற விஷயங்கள் ஏற்கனவே ஊர்ஜிதமானவைதான். இவர்கள் மூவருக்கும் ஜோட் கடைக்கும் சம்பந்தம் உண்டு என்பதை இப்போது தெரிந்து கொண்டான். அதோடு வெளியில் இனி காத்திருந்தால்

ஜோராம் கண்ணில் படுவது மட்டும் இல்லை; இந்த இரு துஷ்டர்கள் பார்வைக்கும் தப்ப முடியாது. மேலும் நின்றால் ஏதேனும் ஆபத்து நேரிடும் என்று அவனை உள்ளுணர்வு எச்சரித்தது.

எனவே, அங்கே காத்திருப்பதைக் கைவிட வேண்டும் என்று ஒரு தீர்மானம் செய்துகொண்டு, காலதாமதம் இன்றி அங்கே நின்ற ஒரு ரிக்ஷாவில் ஏறிக்கொண்டான். ரிக்ஷா சென்று கொண்டிருக்கும்போதே, குள்ளனின் சம்பாஷணையின் இதர பகுதிகளும் ஞாபகத்துக்கு வந்தன. தாமோதரத்திடமும் சங்கரனிடமும் குள்ளன் கொண்டுள்ள ஆத்திரத்தை நினைவுபடுத்திக் கொண்டான். அவர்கள் இருவருமே தோல் பை விஷயத்தில் இவர்களுடைய திட்டத்திற்குக் குறுக்கே வந்து விட்டார்கள். ஆரம்ப முதல் இவர்கள் தோல்-பையை ஆராய முடியாமல் செய்திருக்கிறார்கள். 'சங்கரன்' என்ற பெயர் நாராயணனுக்குப் புதிது. தாமோதரத்தின் மைத்துனன் அவன் என்பதும் தெரிகிறது. குள்ளனை அவன் சரியானபடி ஆட்டி வைத்திருக்கிறான். அவன் மீது வஞ்சம் தீர்த்துக்கொள்ளக் குள்ளன் துடியாகத் துடித்துக் கொண்டிருக்கிறான். சங்கரனை எச்சரிக்கை செய்து வைத்தால் என்ன! — என்ற ஆசை நாராயணனுக்கு ஏற்பட்டது.

ரிக்ஷாவை நிறுத்தச் சொல்லி இறங்கி, நாராயணன் நேராகத் தாமோதரத்தின் வீட்டுக்குச் செல்லும் நோக்கத்துடன் பஸ் ஏறினான். 'ஒருகால் அவனோ சங்கரனோ வீட்டில் இல்லாவிட்டால்?' என்ற எண்ணமே அவனுக்குத் தோன்றவில்லை.

தாமோதரத்தின் வீடு வெறிச்சோடிக் கிடந்தது. நாராயணன் வெகு நேரம் கதவைத் தட்டிய பிறகு; தாமோதரத்தின் மனைவி கதவைத் திறந்து, நாராயணனைச் சில நிமிஷங்கள் சந்தேகத்துடன் நிதானித்தாள் கடைசி வரையில் சந்தேகம் தீராமலேயே, "வீட்டில் ஆண் பிள்ளைகள் இல்லை!" என்றாள்.



"நான் தாமோதரத்தை உடனே பார்த்து ஒரு செய்தி தெரிவிக்க வேணும் என்று வந்திருக்கிறேன். அவர் எங்கு இருப்பார்?" என்றான் நாராயணன்.

"எனக்குத் தெரியாது!" என்றாள் அவள் சுருக்கமாக.

"சரி! சங்கரன் என்பவர் யார்?"

"யார் என்றால்? அவன் என் தம்பிதான்!"

"அவரையாவது பார்த்து, உடனே ஒரு விஷயம் சொல்ல வேணுமே..."

"அவனும் இல்லை, வந்தால் நீங்கள் தேடினதாகச் சொல்கிறேன்..." என்று அவள் சொன்னாளே தவிர, நாராயணனை யார் என்று விசாரிக்கவில்லை.

நாராயணன் துடித்துக் கொண்டிருந்தான். அவள் எங்கே உள்ளே போய் விடுவாளோ என்று, "அம்மா! தாமோதரத்திற்கும் சங்கரனுக்கும் இரு எதிரிகள் இருக்கிறார்கள். அவர்கள் பேச்சை நான் அகஸ்மாத்தாகச் சற்று முன் கேட்க நேர்ந்தது. உடனே எச்சரிக்கை செய்ய வேணும் என்று ஆசைப்பட்டு நான் இங்கே ஓடி வந்திருக்கிறேன்!" என்றான்.

நாராயணனின் முகபாவமும் அவன் குரலில் இருந்த நயமும் அந்த ஸ்திரீக்குச் சிறிது நம்பிக்கை ஊட்டியிருக்க வேண்டும். சட்டென்று கதவை நன்றாகத் திறந்து, நாராயணனைக் கூடத்திற்கு அழைத்தாள். ஒரு நாற்காலியை இழுத்துப் போட்டு உட்கார்ந்து கொள்ளச் சொன்னாள்.

சுருக்கமாகவும் தெளிவாகவும் தான் கேட்ட குள்ளன்—நெட்டையன் சம்பாஷணையைச் சொன்னான் நாராயணன். "சங்கரன் என்பவர் தீரச் செயல்கள் செய்திருக்கிறார். குள்ளனை இரண்டு முறை மண்டி போட வைத்திருக்கிறார். பழி வாங்குவதற்கென்று குள்ளன் கறுவிக் கொண்டிருக்கிறான். சங்கரனுக்கு ஒருவித கெடுதியும் ஏற்படக் கூடாது என்று நான் வந்திருக்கிறேன்!" என்றான். பிறகு அந்த அம்மாள் ஏதேனும் சொல்லுவாளா என்று எதிர்பார்த்தான்.

அவள் வெகு சாமர்த்தியசாலியாக இருந்தாள். தன் வீட்டில் நடந்ததாகச் சொல்லப்பட்ட எந்தச சம்பவத்தை யும் அவள் ஒப்புக் கொள்ளவில்லை. சும்மா கேட்டுக் கொண்டாள் 'தாமோதரத்திடமும் சங்கரனிடமும் எல்லா வற்றையும் சொல்கிறேன்' என்று மட்டுமே கூறி நிறுத்திக் கொண்டாள். ஆனால் அவர்கள் எங்கே இருக்கிறார்கள் என்பதைப் பற்றித் தெரிந்ததாகவோ, கவலைப்படுவ தாகவோ காட்டிக் கொள்ளவில்லை.

''மிகவும் வந்தனம் உங்களுக்கு. அங்கங்கே ஒரொரு நல்லவர்களும் இருக்கிறார்கள். அதனால்தான் கெட்டவர்கள், துஷ்டர்கள், கொள்ளைக்காரர்கள் எல்லாரும் போடுகிற திட்டங்கள் எல்லாம் அப்படி அப்படியே பலிப்பது கிடையாது'' என்று அவள் கடைசி யாகச் சொன்னது. நாராயணனை, 'போய் வாருங்கள்' என்று சொன்ன மாதிரி இருந்தது.

அதற்குமேல் அங்கே தாமதிக்கவோ, விஷயங்கள் கிரகிக்கவோ இயலாத நிலை ஏற்பட்டு விட்டது நாராயணனுக்கு. எழுந்து விட்டான். சுற்றிலும் உள்ள சுவர்களிலெல்லாம் படங்கள் தொங்கின. இரண்டு மூன்று படங்களில் தாமோதரத்தை அடையாளம் எளிதில் கண்டு கொண்டான். இருபத்தி நான்கு வயதுள்ள ஓர் இளைஞன் படத்தைப் பார்த்து, ''இது யார்?'' என்று கேட்டான்.

அந்த ஸ்திரீயின் முகத்தில் மறுபடியும் ஒரு கணம சந்தேகத்தின் சாயை தோன்றி மறைந்தது. சில விநாடிகள் அவள் பதில் சொல்லவில்லை. 'சொல்லாமல் இருப்பதால் பலன் ஏதும் இல்லை' என்று ஊகித்தவள் போல், ''ஏன், என் தம்பிதான்!'' என்றாள் கடைசியாக.

''நான் அவரை இதற்குமுன் பார்த்ததில்லை! ஒருகால் வழியில் எங்கேனும் சந்தித்தாலும், நானே அவரை எச்சரித்து வைக்கிறேன்'' என்றான். பிறகு அங்கிருந்து புறப்பட்டான்.



நாராயணன் கேட்டுக்கொண்ட அடுத்த கேள்விகள்— சங்கரன் எங்கே? தாமோதரம் எங்கே?— என்பவைகளே. நாராயணனுக்குத் தெரிந்து செங்கல்வராய பிள்ளை அவர் பங்களாவிலிருந்து மறைந்திருக்கிறார்; தொடர்ந்து இந்திரா மறைந்திருக்கிறாள். இப்போது இந்த இருவரும் காணப்படவில்லை என்றால், அவர்கள் இருவரையும் கொண்டு போனவர்களேதான் இதற்குக் காரணமா? இதற்குச் சரியான விடை சொல்லக்கூடியவன் ஸி. ஐ. டி. சந்துருதான். ஆனால், அவன் அப்படி லகுவில் பதில் சொல்லி விடுவதில்லையே.

ஒன்று மட்டும் நிச்சயம்; குள்ளனும், நெட்டையனும் இன்னமும் சங்கரனையும் தாமோதரத்தையும் தேடு கிறார்கள். எனவே, அவர்கள் இதில் சம்மந்தப்பட்ட வர்கள் என்று சந்தேகம் இருப்பதற்கு நியாயம் இல்லை. அவர்களைப் பின்பற்றினால், மேலும் சில தடயங்கள் அகப் படலாம் அல்லவா? எப்படியேனும் விரைவில் இந்திராவைக் கண்டு பிடித்து, மீட்டு வர வேண்டும்—

நாராயணன் மாலையெல்லாம் அலைந்து திரிந்தான். எங்கேனும் மீண்டும் குள்ளனும் நெட்டையனும் தென்பட மாட்டார்களா என்ற ஆசை அவனை விடவே இல்லை. கை கால்கள் சோர்ந்து போயின; ஆனால், உள்ளத்தில் மட்டும் இளைப்பு இல்லை.

இரவு சுமார் ஒன்பது மணி இருக்கும்; நாராயணன் மவுண்ட் ரோடில் ஒரு பஸ்ஸில் தாவி ஏறினான். கடைசித் தடவையாக ஒரு முறை சுற்றிப் பார்த்துவிட்டுப் பின் சந்துருவுக்கு அன்றைய சமாசாரங்களை டெலிபோன் செய்துகொண்டு, அன்று வேலையை நிறுத்திக் கொள்ள லாம் என்ற எண்ணத்துடன்தான் பஸ்ஸில் ஏறினான். டிக்கெட்டை வாங்கிக் கொண்டு, வண்டியில் இருப்பவர் களை ஒவ்வொருவராகக் கவனித்து வரும்போது, ஒரு இளைஞனின் முகம் எங்கோ பார்த்தமாதிரித் தோன்றியது.

எங்கே? இளைஞன் மிக இளைத்து வாடியிருந்தான். உடைகளில் அழுக்கு ஏறியிருந்தது; தலை வாராமல் பரட்டையாக இருந்தது. ஏனோ அவனிடம் ஒருவித பரபரப்பு தென்பட்டது. 'பஸ்ஸின் வேகம் போதவில்லையே' என்று தாபப் படுபவன் போல் அவன் காணப்பட்டான்.

நாராயணன் தலையைச் சொறிந்து கொண்டு யோசித்துப் பார்த்தான்; அந்த இளைஞனையும் பார்த்தான் எந்தச் சந்தர்ப்பத்தில் கண்டோம் என்று ஞாபகம் வரவில்லை. ஆனால், பேசினதாகவோ பழகினதாகவோ மனம் கூறவில்லை... நாராயணன் அவனையே உற்று நோக்கியும்கூட அவன் சிறிதும் அதை உணர்ந்தவனாகக் காணவில்லை. தன் சிந்தனைகளிலேயே ஆழ்ந்தவனாக இருந்தான் அவன். அடிக்கடி வெளியில் எட்டிப் பார்ப்பதும், தான் இறங்கும் இடம் வந்து விட்டதா என்று கவனிப்பதுமாகவே இருந்தான்.

கடைசியில் அவன் இறங்கினான், தன்னைச் சுற்றியிருப்பவர்களைச் சற்றும் லட்சியம் செய்யாமல் நடந்து, அருகில் இருந்த குறுகிய தெருவில் இறங்கி இருளில் மறைந்தான், பஸ் கண்டக்டரும் ஊதலை ஊதி 'ரைட்' கொடுத்து விட்டான். அதுவரையும்கூட அந்த இளைஞன் யார் என்று நாராயணனுக்கு மனத்தில் நிச்சயம் ஏற்படவில்லை.

பஸ் நகரத் தொடங்கிவிட்டது. நாராயணன் வெளியே பார்த்துக் கொண்டேயிருக்கையில் அவன் நெஞ்சில் 'திக்' கென்று ஓர் உணர்ச்சி ஏற்பட்டது. எந்த இருவரை அன்று பிற்பகல், மாலையெல்லாம் தேடித் தேடித் திரிந்தானோ, அவர்கள் இருவரும் இப்போது பஸ் அருகே வேகமாக நடந்து வந்து கொண்டிருந்தார்கள். அவர்கள் பஸ்ஸுக்குள் உட்கார்ந்திருந்த நாராயணன் பக்கம் திரும்பக்கூட இல்லை. அதிலிருந்து இறங்கிச் சென்ற இளைஞனைப் பின்பற்றி, அதே தெருவிற்குள் விரைவாக இறங்கினார்கள்: துரித நடைபோட்டு அவனைப் பிடிக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் செல்பவர்கள் போல் அவர்கள் காணப்பட்டார்கள்.



32401

குள்ளனும் நெட்டையனும் யாரையோ பின்பற்றிச் சொல்கிறார்கள்...... அவன் யாராக இருக்கும்?

ஒரு மின்னல் வெட்டுப்போல் [illegible] சிட்டுவிட்டது. 'சடார்' என்று அந்த [illegible] எங்கே பார்த்திருக்கிறோம் என்ற ஞாபகம் வந்துவிட்டது. தாமோதரம் வீட்டுக் கூடத்தில் மாட்டியிருந்த படத்தில் கண்ட உருவம் அவனுடையது......சங்கரன்!

சங்கரனை எச்சரிக்க வேண்டும் என்ற பழைய ஆர்வம் மீண்டும் எழுந்துவிட்டது. அதுவும் இப்போது இந்த இரு கயவர்களும் அவனை என்ன செய்வார்களோ என்ற திகிலும் உடன் பிறந்தது. எப்படியேனும் அவனைக் காப்பாற்ற வேணும் என்ற உறுதியுடன் எழுந்தான் நாராயணன்.

''உட்காரய்யா, உன் இடத்திலே! வண்டி புறப்பட்ட பிற்பாடு இறங்கக் கூடாது!'' என்றான் கண்டக்டர்

''இல்லை, கொஞ்சம் தயவு செய்! நான் இறங்க வேண்டிய இடம் இதுதான்!'' என்றான் நாராயணன்.

கண்டக்டர் குறுக்கே நின்றான். ''ஏன் ஐயா! எத்தனை வாட்டி நான் கத்தினேன்! யாரை வேணுமானாலும் கேட்டுப் பார்! அதுவரைக்கும் நல்லா உறங்கிகிட்டு இருந்துவிட்டு வண்டி புறப்பட்ட பிற்பாடு எழுந்திருக்கிறயே! அடுத்த 'ஸ்டாப்'பிலே இறங்கிக் கொள்!'' என்றான்.

நாராயணன் மேலும் முயற்சி செய்து பார்க்கவே, ''உட்காரய்யா!'' என்று பிரயாணிகளில் இரண்டொரு வரும் கண்டக்டருடன் சேர்ந்து கொண்டார்கள். நாராயணனின் உடல் எல்லாம் எரிந்தது. ஏன் அவனுக்கு இதற்குமுன் சங்கரனின் அடையாளம் தெரியாமல் போயிற்று; இரண்டு துஷ்டர்களும் அவனைப் பின்பற்றத் தொடங்கிய பிறகுதான் மூளையே வேலை செய்திருக்கிறது!

பஸ் ஓடிக்கொண்டேயிருந்தது. 'அட! ஒரு 'ஸ்டாப்'புக்கும் அடுத்ததற்கும்தான் எத்தனை தூரம்! இரண்டு பர்லாங்கா! சை!' என்று வெறுத்துக் கொண்டான். 'பஸ்

மறுபடி நின்ற உடனே தாவிக் குதித்து வந்த வழியே திரும்ப ஓடினான். உடலெல்லாம் வியர்த்தது; மேல் மூச்சு கீழ் மூச்சு வாங்கியது.

சங்கரன் சென்ற தெருவை அடைந்தபோது, அதில் ஜன நடமாட்டம் அதிகம் இல்லை. மளமளவென்று நடந்தான். தெரு நடுவில் ஒரு வீட்டுத் திண்ணையில் யாரோ இரண்டு பேர் உட்கார்ந்து வம்பு பேசிக் கொண்டிருந்தார்கள். நாராயணன் அவர்களை அணுகி, ''குள்ளமாகவும் நெட்டையாகவும் இரண்டு ஆசாமிகள் இந்தப் பக்கம் போனார்களா?'' என்று விசாரித்தான்.

ஒருவன் 'ஹ!' என்று சிரித்தான். மற்றவன், ''என்னைத்துங்க?'' என்று ஏளனமாகக் கேட்டான்.

நாராயணன் கோபத்தை அடக்கிக்கொண்டு, ''சற்று முன்புதான் என்று சொல்கிறேன்; உயர்ந்தால் பத்து நிமிஷங்கள் முந்தி இருக்கும்...... அவர்களுக்கு முன்னால்! ஒரு இளைஞன் போயிருப்பான். தெரிந்தால் சொல்லுங்கள்!'' என்றான்.

''ஓ! மூன்று பேரா! ஒருத்தனுக்குக்கூட மயக்கம் வருதே அடிக்கடி! உங்களுக்கு அவர்களைத் தெரியுமா?

''மயக்கம் வந்ததா ஒருவனுக்கு? யார் அவன்?'' என்று வினவினான் நாராயணன்.

''இவர் நம்மையே கேள்வி கேட்கிறாரே, இளம் வயசுக்காரனுக்குத்தான் மயக்கம் வந்தது. ஜட்கா வண்டியில் தூக்கிப் போட்டுக்கொண்டு, 'இதோ' போகிறார்கள்... ஓடிப் போனால் பிடிச்சுடலாம்...'' என்றான் இரண்டாமவன்.

நாராயணன் நிற்கவில்லை! தெருக்கோடி வரை ஓடினான். அங்கிருந்து மற்றொரு கோடியில் ஒரு ஜட்கா திரும்பிக் கொண்டிருந்தது தெரிய வந்தது. அதை ஓடிப் பிடிப்பதென்பது முடியாது. மற்றொரு வாகனத்தில் துரத்தித்தான் பிடிக்க முடியும். எதிரே வந்த சைக்கிள் ரிக்ஷாவை அழைத்து, ''ஓடு! வேகம்! அதோ அந்த ஜட்காவைப் பிடித்தால், இரட்டைக் கூலி தருகிறேன்!'' என்றான்.



ரிக்ஷா பறந்தது. மூன்று தெருக்கள் தாண்டிய பின்னர் ஒரு வீட்டு வாசலில் ஜட்கா நின்று கொண்டிருந்ததை நாராயணன் கண்டு விட்டான். குள்ளன்தான் கூலி கொடுத்துக் கொண்டிருந்தான். நாராயணன் முன் ஜாக்கிரதையுடன் தெரு முனையிலேயே இறங்கிக் கொண்டு, ஜட்கா நகர்ந்து செல்லும் வரை காத்திருந்தான். பிறகு அந்த வீட்டை அணுகினான்.

வாசற்கதவு தாளிடப்பட்டிருந்தது நாராயணன் எதிர்பார்த்ததுதான் இது. இந்த வீட்டினுள்ளே இரு கயவர்களும் சங்கரனும் இருக்கிறார்கள். சங்கரனுக்கு என்ன சித்திரவதை நடக்குமோ? அதை நாராயணனால் தடுக்க முடியுமா?—யோசனை செய்து பார்த்தான்.

ஒரு போலீஸ்காரனை அழைத்து வந்துவிட்டால் என்ன? —மறுபடி ஒரு சந்தேகம்; ஒரு வேளை சங்கரன் உள்ளே இல்லாமல் போய்விட்டால், எத்தனை பெரிய அசட்டுத்தனம்! அவன் கண்ணால் சங்கரன் வண்டியில் கொண்டு செல்லப்பட்டதைக் காணவில்லை.

அவனாகவே உள்ளே பிரவேசித்தால்! ஆபத்து இருக்கலாம்! அதே சமயம் நன்மையும் ஏற்படலாம்! தெரு வெளியில் வந்து வீட்டை நிதானித்தான். மொட்டை மாடியுடன் கூடிய சிறிய வீடு. மாடியை எளிதில் அடைந்து விடலாம். அதற்கேற்றாற்போல் தெருவில் ஜன நடமாட்டமும் இல்லை. நாராயணன் மனத்தைத் திடம் செய்துகொண்டு, ஏறுவதற்கு முயற்சிகளைத் தொடங்கின சமயம் எதிர்பாராத ஒரு காரியம் நடைபெற்றது.

வாசற் கதவு திறக்கப்படும் சப்தம் காதை எட்டியது. மறு நிமிஷம் குள்ளனும், நெட்டையனும் வெளிப்பட்டார்கள். அவர்கள் கண்ணில் படாமல் நாராயணன் ஒண்டிக் கொள்வதற்குத் தேவையான அவகாசம் மட்டுமே இருந்தது. வெளியே வந்த இருவரும், வாசலில் வந்து ரகசியமாகப் பேசிக் கொண்டார்கள். இருவரும் இரு பக்கங்களில் பிரிந்து நடந்தார்கள்.

தாளிடப்படாத கதவு! ஆஹா! வீட்டினுள்ளே பிரவேசிக்க எட்பேர்ப்பட்ட அபனான சந்தர்ப்பம்! நாராயணன் கதவை மெள்ளத் திறந்துகொண்டு உள்ளே நழுவிவிட்டான்.

எங்கும் நிசப்தம்! இருட்டு! தடவிக்கொண்டே கூடத்தை அடைந்தான். இரண்டு கட்டில்களும் இரண்டு சாய்வு நாற்காலிகளும் மட்டுமே அங்கே கிடந்தன. மற்றபடி மனித அரவமே இல்லை.

அடுத்த அறை; அதனுள் காலை வைத்தான். 'முணுக் முணுக்' கென்று ஒரு சிறு தீபம் எரிந்தது. தரையில் ஒரு விரிப்பின்மீது சங்கரன் கிடந்தான். மெள்ள மூச்சு வந்து கொண்டிருந்தது. இன்னும் உயிர் இருக்கிறது. அதுவரை சந்தோஷம்! எப்படி இவனை அப்புறப்படுத்துவது? யோசனை செய்ய வேண்டும் ஆற அமர! எந்த நிமிஷமும் அந்தக் கயவர்கள் இருவரும் திரும்பி விடுவார்கள்! அதற்குள் எங்கேனும் ஒளிந்துகொண்டுவிட வேண்டும். பிறகு, மெள்ள காரியங்களைத் தொடங்க வேண்டும்.

நாராயணன் நிமிர்ந்தான். ஒரு நிழல் படிந்தது. வாசற்படியிலே குள்ளனும், நெட்டையனும் நின்றார்கள், புன்சிரிப்புடன்.

"தம்பி! உன்னை நாங்கள் தேடிப் பிடிக்கணும் என்று இருந்தோம். நீயாக வந்து சேர்ந்தாயே! எத்தனை வேலை மிச்சம் எங்களுக்கு!" என்றான் குள்ளன்.

நாராயணன் சற்று நேரம் வாயடைத்துப் போனான். பிறகு தைரியத்தை வருவித்துக்கொண்டு, "இவனை நான் என்னுடன் அழைத்துப் போக வேண்டும் என்று வந்திருக்கிறேன்!" என்றான்.

குள்ளன் மறுபடி சிரித்தான்; 'பேஷாகச் செய்வோம்! என் திட்டத்திற்கும், உன் திட்டத்திற்கும் அதிகம் வித்தியாசம் இல்லை. நான் உன்னை இவனோடு அனுப்பப் போகிறேன். இரண்டும் கிட்டத்தட்ட ஒன்றுதானே!" என்று கேட்டான்.



நாராயணன் எழுந்திருக்க முயன்ற சமயம், குள்ளன் கையிலிருந்து ஒரு சாண் நீளமுள்ள உருட்சியான தடி வெகு வேகமாகத் தன்னை நோக்கிவருவதை உணர்ந்தான். 'பட்' என்ற சப்தத்துடன் அது அவன் மண்டையில் தாக்கியது. அந்த அறையே அவன் கண்முன் சிறிது நேரம் சுழன்றது. கண் எதிரே ஒரு நீர்ப் படலம் தெரிந்தது. அதைத் தொடர்ந்து ஒரு காரிருள் கவ்விக் கொண்டது.

நாராயணன் தன் நினைவிழந்து தரையில் மூர்ச்சையாகிச் சாய்ந்துவிட்டான்.

நெட்டையன் குள்ளன் முதுகில் தட்டினான்; "நல்ல வேளை! நீ அந்த சைக்கிள் ரிக்ஷா தெருக் கோடியில் நிற்பதைக் கவனித்தாய்! இல்லையோ, இவன் நம்மை ஜீரணமே செய்திருப்பான்!" என்றான்.

"போகிறது! ஒரு போதாவது நான் செய்தது 'சரி' என்று ஒப்புக்கொள்கிறாயே!" என்றான் குள்ளன் குரோதத்துடன்.

ஃ ஃ ஃ

சந்துருவின் ஜாகையிலிருந்து புறப்பட்ட 'தம்பி'யின் மனத்தில் குழப்பம் மிக அதிகமாக இருந்தது. சந்துருவை டெலிபோனில் அழைத்தவள் சுந்தரியாகத்தான் இருக்க வேண்டும் என்ற ஊகமே கடைசிவரை நிலைத்து நின்றது. அவளை டெலிபோனில் பேசவொட்டாமல் தடுத்தவர் சுந்தரம் பிள்ளையாகத்தான் இருக்க வேண்டும் என்றும் தோன்றியது அவனுக்கு. சந்துரு செய்த அலட்சியங்களை எல்லாம்கூட இப்போது ஏற்பட்டிருந்த மனக் கலவரத்தில் அவன் மறந்துவிட்டான். சுந்தரியைக் காப்பாற்ற வேணும் என்னும் எண்ணத்தைவிட அவள் சுந்தரம் பிள்ளையிடம் என்னவெல்லாம் உளறி விட்டாளோ என்ற பயம் மேலோங்கி யிருந்தது.

'தம்பி' சுந்தரம் பிள்ளையின் பங்களாவைப் போய் அடைவதற்குள் அவன் மனம் மூவாயிரம் தடவை அங்கே சென்று திரும்பிவிட்டது. டாக்ஸி ஊர்ந்து செல்வதாகவே

தோன்றியது. அங்கே தனக்கு எவ்வித வரவேற்பு கிடைக்குமோ என்று அஞ்சினான். சுந்தரம் பிள்ளை இம்சை செய்வதென்று ஆரம்பித்து விட்டால், அவரை யமன்கூட மிஞ்ச முடியாது என்பதை அறிவானாகையால், அவன் நெஞ்சு நடுங்கியது. 'திடீரென்று ஏன் இந்தக் கஷ்ட காலம் நமக்கு!' என்று ஏங்கினான்; பரிதவித்தான், நாயரின் வற்றின முகம் மனக் கண்ணெதிரில் எழுந்தது; நெஞ்சம் எல்லாம் பற்றி எரிந்தது. பல்லைக் கடித்து, 'நாயரே எனக்கு இப்போது நேர்ந்திருக்கிற கதி உனக்கும் விரைவில் ஏற்படும்' என்று சபித்தான். இந்த மாதிரி சமயங்களில் கயவர்கள்கூடத் தங்கள் சாபம் பலிக்கும் என்று கனவு காண்பது சகஜம்!

ஒரு மட்டாக, சுந்தரம் பிள்ளையின் பங்களா வாசலை அடைந்து விட்டான். வெளியே யாரும் அவனைத் தடை செய்யவில்லை. நீண்ட பாதை வழி சென்று வாசற்படியில் காலை வைத்தான். அங்கே நிலவிய நிசப்தம், சிறிது தெம்பூட்டியது. சந்துரு குறிப்பிட்ட ஆசாமி வேறு யாராக வேனும் இருப்பாளோ? இதுகாறும் வீண் பயமும் பிராந்தியும் கொண்டு, அனாவசியமாகக் கலங்கிவிட்டானோ?

தெம்பாக மேலே இரண்டு அடிகள் வைத்தான். எங்கிருந்தோ நாயர் தோன்றினான். "நாயர்! எஜமான் இருக்கிறாரா?" என்று கேட்டான் 'தம்பி'.

"இல்லை!" என்றான் நாயர் விறைப்பாக.

"பின், எஜமானி அம்மாளைப் பார்த்துவிட்டுப் போகிறேன்!" என்று மேலும் ஒரு அடி வைத்தான்.

" 'தம்பி!' நின்று கொள்! எஜமான் இல்லாத சமயம் நீ இங்கே வரத் தேவை இல்லை" என்றான் நாயர், குரலில் எவ்வித மாற்றமும் இன்றி.

"யார் சொன்னது அப்படி?"

"நான் சொல்கிறேன்! போதாதா? அப்புறம் யார் சொல்ல வேண்டும்?"

"நீ யார்! எஜமானி அம்மாளைப் பார்க்கலாகாதென்று தடை செய்ய நீ யார்?" என்று 'தம்பி' விறைத்தான்.



"நமக்குள் இப்போது தகராறு வேணாம், தம்பி. மரியாதையாக வெளியே நில்! எஜமானி அம்மாளும் உன்னைப் பார்க்க மாட்டாள், நீயும் ஒரு அடி உள்ளே வைக்கக் கூடாது!"

"பெரிய உத்தரவாக இருக்கிறதே! எத்தனை நாழியாக உனக்கு இங்கே இந்த நாட்டாண்மை."

"வீணாகப் பேச வேண்டாம்! வெளியே நட! எஜமான் வந்த பிறகு வா!"

"இப்போதே பேசினால்?"

நாயர் தன் மடியிலிருந்து ஒரு நீண்ட கூர்மையான கத்தியை எடுத்தான். "நான் சர்க்கஸில் இருந்திருக்கிறேன், நீ மறந்திருக்கமாட்டாய்!" என்றான் அதைப் பார்த்தபடி.

'தம்பி'யின் முகம் சிவந்தது, பேசாமல் திரும்பி நடந்தான். அப்படியானால் சுந்தரிக்கு ஏதோ அபாயந்தான்; அவளுக்கு அபாயம் என்றால், அதில் அவனுக்கும் அல்லவா பங்கு உண்டு.

'தம்பி'யின் கால்கள் நடந்தன. அவனையும் அறியாமல் அவன் சின்ன பங்களாவை நோக்கி நடந்தான். அதற்கு ஒரு பர்லாங் தூரத்தில் வரும்போது ஏனோ, அதன் விளக்குகள் எல்லாம் ஏககாலத்தில் அணைந்தன. நின்று, யோசனை செய்தான் 'தம்பி'. அங்கே ஏதோ ஒரு விசேஷம் நடந்து கொண்டிருக்கிறது...என்னவென்று தெரியவில்லை. எங்கும் விளக்குகள் எரியும்போது, அங்கே மட்டும் ஒருமிக்க அணைவானேன்?

வாசற்புறமாகப் போக அவனுக்குத் தைரியம் இல்லை! பின்புறமாகச் சென்றான். நன்றாக இருட்டிவிட்டிருந்தது. காம்பவுண்டுக்கு வெளியே நின்று மாடியை நிமிர்ந்து நோக்கினான்.

முதலில் ஒரு ஆள் இறங்கினான். பின்புற மொட்டை மாடியிலிருந்து அவன் கூரைமீறு குதித்தான். அவனைப்பின் பற்றி ஒரு பெண் இறங்கினாள். 'தம்பி' நின்ற தூரத்திலிருந்தபடியே, ஆண் தாமோதரம் என்றும், பெண் இந்திரா

என்றும் கண்டு கொண்டான். இவர்கள் தப்பித்துக் கொள்கிறார்களா? எப்படி?

சாதாரண காலமாக இருந்தால், அவர்களைத் தடுத்து நிறுத்த எல்லா முயற்சிகளும் எடுத்திருப்பான் 'தம்பி'. இப்போது, சுந்தரம் பிள்ளைமீது ஆத்திரம் கொண்டிருந்த நிலையில், 'போகட்டும்' என்று சும்மா இருந்து கவனித்தான். மேலும் மூன்று நிமிஷங்கள் சென்றன. இதற்குள் அவர்கள் தரையில் இறங்கியிருப்பார்கள்... மேலும் ஐந்து நிமிஷங்கள்... ஏன் இன்னும் வெளியே வரவில்லை? நடுவில் ஏதேனும் அவர்களுக்குச் சிக்கலா? 'தம்பி' திகைத்தான்.

அவன் திகைப்புக்கும் காரணம் இருந்தது! இறங்கியவர்கள் இருவரும் தாமோதரமும் இந்திராவும்தான். அவர்கள் லகுவாகத் தோட்டத்தையும் அடைந்து, பின்புற வாசலையும் அணுகிவிட்டார்கள். அந்த வாசலை அவர்கள் திறந்து விட்டால், அப்புறம் ஓட வேண்டியதுதான். ஆனால் அவர்களை முந்திக்கொண்டு அதை வேறொருவர் திறந்து விட்டார். அதன் வழியே ஒரு பரிச்சயமான உருவம் உள்ளே பிரவேசித்தது. அவர்கள் பிரமித்து நிற்கையிலேயே, சுந்தரம் பிள்ளை இடுப்பில் கை வைத்தவாறு முகத்தில் கோபமும் ஏளனமும் சேர்ந்து தோன்ற, குறுக்கே நின்றார்.

## கணேசன் என்னும் புதிர்

சந்துருவின் ஜாகையிலிருந்து வெளிப்பட்ட கணேசன் திரும்பிப் பாராமலேயே சென்றான். அவன் மனத்தில் எழுந்த எண்ணங்களுக்குக் கணக்கு வழக்கு இல்லை. எல்லாவற்றிற்கும் மேலாக, "எத்தனை கைகாரனாக இருக்கிறான் இந்தச் சந்துரு!" என்ற எண்ணம் மேலோங்கி இருந்தது.

சந்துருவுடன்தான் பேசியது அனைத்தையும் திரும்ப ஒரு முறை நினைத்துப் பார்த்தான். அவைகளிலிருந்து என்னவெல்லாம் சந்துரு ஊகித்துக்கொண்டிருக்க முடியும்



என்றும் ஆராய்ந்தான். 'வெகு ஜாக்கிரதையாகத்தான் நான் பேசிவிட்டு வந்திருக்கிறேன்; ஒன்றும் பயம் இல்லை' என்று சமாதானமும் செய்துகொண்டான். ஆனாலும் நெஞ்சாழத்தில் "சந்துரு அவன் காண்பித்துக் கொள்வது போல் அத்தனை வெகுளியா? ஒரு காலும் இல்லை; நம்மைப் பற்றியும் சில சந்தேகங்கள் வைத்திருப்பான். அவன் முகபாவம் எல்லாம் முழுப் பாசாங்கு!" என்று ஒரு அச்சமும் இருந்தது.

சந்துருவுக்கு தேனாம்பேட்டை பங்களாவில் அமைக்கப் பட்டுள்ள மின்சார விசைகளைப் பற்றித் தெரியும். அதை நாஸூக்காகக் கேட்டு, அதிகம் வளர்த்தாமல் விட்டு விட்டான். மதுரநாயகத்தைப்பற்றி விசாரித்து விட்டான்; ஆனால், அதிகமாகக் குடையாமல் விட்டுவிட்டான். வீட்டு வேலைக்காரர்களைப் பற்றி அபிப்பிராயம் சொல்லச் சொல்லி கேட்டுக் கொண்டான். எல்லாவற்றிற்கும் பிறகு, ஒரு சிறு துண்டுக் கடிதம் வேறு எழுதி வாங்கிக் கொண்டான்......அது எதற்காக? கெட்டிக்காரனான கணேசனுக்கு அதைப்பற்றி அப்போதே யோசனை செய்யத் தோன்றவில்லை. முட்டாள் மாதிரி, கேட்டவுடனே எழுதிக் கொடுத்து விட்டான். அதை வைத்துக்கொண்டு சந்துரு என்ன செய்ய முடியும்? ஏதாவது அதில் வேலைத்தனம் இருக்குமோ?

'இந்திராவிடம் சேர்ப்பித்து விடுகிறேன்' என்று அவன் சொன்னது வெறும் புரட்டாக இருக்குமா? கணேசனின் கையெழுத்தைப் பரிசோதனை செய்வதாக உத்தேசம் இருந்திருக்கும் என்றால் அதற்கு முகாந்தரம் என்ன! —கணேசன் நடந்துகொண்டேயிருந்தான். மனத்தில் ஒரு திகில் பிறக்கவே நடையும் தானாகத் துரிதமாகியது.

ஃ ஃ ஃ

சஞ்சீவி இதற்குள் அவனைப் பின்பற்றத் தொடங்கியிருந்தான். கணேசனுடைய சஞ்சலம் ஓரளவு அவனுக்குச் சௌகரியமாகக்கூட அமைந்தது. ஒருமுறைகூடத் திரும்பிப் பாராமல் செல்பவனைத் தொடர்ந்து செல்வது எத்தனை எளிது!

கணேசன் அடிக்கடி தன் கைக் கடியாரத்தைப் பார்த்துக் கொண்டான். பிறகு நடையைத் துரிதமாக்கினான். பின் தொடர்ந்த சஞ்சீவி, எங்கோ குறிப்பிட்ட காலத்திற்குள் போய்ச் சேர்ந்துவிட அவன் விரும்புகிறான் என்பதை ஊகித்துக் கொண்டான். கணேசன் சட்டென்று ஒரு பாங்கியின் வாசல் முன்னே நின்றான். இரண்டு முறை தன்னைச் சுற்றிப் பார்த்துக் கொண்டான். யாரும் கவனிக்கவில்லை என்று திருப்தி செய்து கொண்டவன் போல் உள்ளே பிரவேசித்து விட்டான்.

மூன்று நிமிஷங்களுக்குப் பிறகு அதே பாங்கியினுள் சென்ற சஞ்சீவி, கணேசன் செக்குகள் மாற்றும் 'கௌண்ட'ரின் வெளியே நிற்பதையும், பாங்கு குமாஸ்தா ஏதோ கேட்பதையும் கவனித்தான். பல அலுவல்கள் நிமித்தமாக யார் யாரோ வந்திருந்தார்கள்; சூழ்ந்து நின்றார்கள்.

காலில் ஏதோ குத்திவிட்டதுபோல் குனிந்து, சஞ்சீவி ஒரு சிறிது தாமதித்து அங்கே நடக்கும் சம்பாஷணையைக் கேட்டான்.

''பாங்க் மூடுகிற நேரத்திற்கு வந்திருக்கிறீர்களே! சற்று முன் வந்திருக்கக் கூடாதா!'' என்று கேட்டான் குமாஸ்தா.

''நான் என்ன செய்வேன்! பறந்துதான் வருகிறேன். பணம் மிகவும் அவசியமாகத் தேவையாக இருக்கிறது. இல்லாவிட்டால், உங்களைத் தொந்தரை செய்வேனா?'' என்று கேட்டுக்கொண்டு நின்றான் கணேசன்.

ஒருமுறை 'செக்'கைக் குமாஸ்தா பார்த்தான். ''செங்கல்வராயப் பிள்ளையின் 'செக்' அல்லவா?'' என்றான்.

''ஆமாம்... என் சித்தப்பா அவர்... உங்களுக்குத் தெரிந்திருக்குமே!''

''தெரியும்...அடிக்கடி வருகிறவர்தானே நீங்கள்!...... ஆனால், பெரிய தொகையாக அல்லவா இருக்கிறது!''

''ஆமாம்! கொஞ்சம் பெரிய தொகைதான்...தங்கள் ஏஜெண்டிடம் வேண்டுமானால் கலந்து கொள்ளுங்கள்...



மிக மிக அவசரமாகத் தேவையாக இருக்கிறது... என்னை வாங்கி வரும்படி அனுப்பினார்.''

இதற்குமேல் அந்தப் பேச்சைக் கேட்டுக்கொண்டு தாமதித்தால், கணேசன் திரும்பிப் பார்த்துவிடுவான் என்று சஞ்சீவி, அருகிலே இருந்த பெஞ்சியில் போய் உட்கார்ந்தான். அந்தப் பெஞ்சியில் இரண்டு மூன்று பேர் உட்கார்ந்திருந்தார்கள். ஏற்கெனவே 'செக்'குகளைக் கொடுத்து விட்டுப் பணத்திற்காகக் காத்திருப்பவர்கள் அவர்கள்.

சஞ்சீவி உட்கார்ந்ததும், குமாஸ்தா 'செக்'கை எடுத்துக் கொண்டு ஏஜெண்டின் அறைக்குச் சென்றான். கணேசன் அங்கேயே பாங்கியின் உட்புற நடவடிக்கைகளை அசுவாரஸ்யமாகப் பார்த்துக்கொண்டு நின்று விட்டான். சஞ்சீவி இப்போது நுணிச்சலுடன் கவனிக்க இது வசதியாக இருந்தது.

சில நிமிஷங்களுக்கெல்லாம் குமாஸ்தா திரும்பி வந்து விட்டான்; மறுபடி இருவருக்கும் ஏதோ சம்பாஷணை நடந்தது. இதைச் சஞ்சீவியால் கேட்க முடியவில்லை; எனினும் குமாஸ்தா தலையைச் சொறிந்துகொண்டு ஏதோ ஒரு தர்மசங்கட நிலையை விளக்குவதுபோலும், கணேசன் பிடிவாதமாக, தான் சொன்னதையே சொல்லிக் கொண்டிருப்பது போலும் இருந்தது. இவர்களுக்குள் மெல்லிய குரலில் ஒரு வாக்குவாதமே நடந்து கொண்டிருந்தது: கடைசியில், பாங்கி குமாஸ்தாவே விட்டுக் கொடுத்தான்; மீண்டும் ஒருமுறை அவன் உள்ளே சென்று திரும்பி வந்தபோது கையில் ஐந்து சிறு கட்டுகள் இருந்தன. ஒவ்வொன்றும் பத்து ரூபாய்கள் நோட்டுக் கட்டு என்றால் ஐந்தாயிரம் ரூபாய்க்குச் 'செக்' கொண்டு வந்திருக்க வேண்டும் என்று சஞ்சீவி முடிவு செய்தான். செங்கல்வராய பிள்ளைக்கு ஐயாயிரம் ரூபாய் வெகு அவசரமாகத் தேவை; அதைக் கணேசன் பெற்றுக் கொண்டு போகிறான். முன்னதாக வந்து மற்றவர்கள் காத்திருக்கும்போது, பாங்கிக் குமாஸ்தா கணேசனுக்கு மட்டும் முதலில் பணம்

தருவதென்றால், கணேசனுக்கு அங்கே எத்தனை செல்வாக்கு இருக்க வேண்டும்!...

குமாஸ்தா இப்போது அந்த ஐந்து கட்டுகளையும் எடுத்துக் கொண்டு மறுபடி ஏஜெண்டின் அறைக்குச் சென்றான். திரும்புகையில் கையோடு ஒரு பழுப்புக் காகிதமும் கொண்டு வந்து, ஐந்து கட்டுகளையும் அதில் வைத்து ஒரே கட்டாகக் கட்டி, ஒரு புன்னகையுடன் கணேசனிடம் கொடுத்தான்.

கணேசன் மாடிப்படிகளில் இறங்கிச் செல்லும் வரையில் சஞ்சீவி தன் இடத்தை விட்டு நகரவில்லை. யாருக்கும் சந்தேகம் ஏற்படாத வகையில், மற்றவர்கள் பணம் பெற்றுக் கொள்ளுவதற்குச் சென்ற பின்னரே தன் இருப்பிடத்தை விட்டு எழுந்தான். மாடிப் படிகளை ஒரே ஓட்டமாகத் தாவிச் சென்று, வெளியே வந்து பார்த்தபோது, அத்தனை அவசரப் பட்டிருக்கத் தேவை இல்லை என்று தோன்றியது.

சஞ்சீவிக்கு ஒரு வேலை இருந்தது. இத்தனை பணத்தையும் வைத்துக்கொண்டு, கணேசன் அடுத்தபடி எங்கே செல்கிறான் என்று கண்டு பிடிப்பதே அது! பணத்தைக் கணேசன் அலட்சியமாகக் கையில் பிடித்திருந்தான். ஒருவேளை யாரிடமாவது, செங்கல்வராய பிள்ளையின் ஆக்ஞைப்படி அதைக் கொடுக்கப் போகிறானா? அப்படியானால் யார்?—சஞ்சீவிக்குத் தான் சந்துருவுக்கு ஒத்தாசையாக வந்திருக்கிறோம் என்பதில் பெருமை அதிகம். அதிலும், இப்போது சிறிது சிறிது விஷயம் அகப்பட்டுவதில் மிக மகிழ்ச்சி.

கணேசன் திருவல்லிக்கேணி பஸ் ஒன்றில் ஏறினான்; சஞ்சீவியும் பின்பற்றினான். அப்போதும்கூட கணேசன் கையில் அந்தக்கட்டு அப்படியே இருந்தது. நேரில் கண்டவர் எவரேனும் அதில் பணம் இருப்பதை அறிந்துகொண்டிருக்கலாமே ஒழிய, மற்றவர்கள் சிறிதும் சந்தேகிக்க முடியாது. திருவல்லிக்கேணியில் கணேசன் ஒரு ஹோட்டலில் சிற்றுண்டி அருந்தினான். வெளியே காத்திருப்போம் என்று ஒரு கணம் சஞ்சீவி எண்ணியது உண்டு; ஆனால்,



மறு யோசனையில் ஒருகால் இந்தக் கட்டைப் பெற்றுக் கொள்ள அந்த ஹோட்டலில் யாரேனும் காத்திருக்கலாமோ என்று தோன்றவே, அவனும் கூடவே புகுந்தான்.

சந்தேகங்கள் எல்லாம் சஞ்சீவியினுடையவையே. கணேசன் வெகுளியாகக் காட்சி தந்தான். அவன் யாரையும் எதிர்பார்த்தவனாகவுமில்லை; தான் பின்பற்றப்படுவதாகச் சம்சயம் கொண்டவனாகவும் இல்லை. இரண்டொரு முறை அவன் திருஷ்டி சஞ்சீவியின் மீதும் விழுந்தது; ஆனால் சற்றாவது அதில் அறிமுகத்துக்கான குறிகள் காணப்படவில்லை.

ஹோட்டலிலிருந்து 'பீச்'சுக்கு நடந்தான் கணேசன், கடற்கரை மணலிலே ஒய்யார நடை போட்டான், கையில் பணக் கட்டுடன். இவ்வளவு பெரிய தொகையுடன், அதையும் அலட்சியமாகக் கையில் பற்றிக்கொண்டு ஒருவன் வருவானா? அப்படியானால் அதன் காரணம்?—என்று சஞ்சீவி ஒரு கேள்வி கேட்டுக்கொண்டான். அதுவும், பாங்கியில் அவன் காது கேட்க, பணம் 'வெகு அவசரம், இன்றே தேவை இருக்கிறது அதற்கு' என்று கேட்டு வாதம் செய்து வாங்கிக் கொண்டுவிட்டு, இப்போது கடற்கரையில் சாவகாசமாக நடை போடுவானேன்! சஞ்சீவியின் சந்தேகம் ஊர்ஜிதமாவதற்கு உதவியாக, கணேசன் ஒரு காரியம் செய்தான். ஏகாந்தமான ஓர் இடத்தைப் பார்த்துப் பிடித்து, சிறிது நேரம் கடலைப் பார்த்தபடியே நின்றான். அருகே ஒரு படகின் பின்னே சஞ்சீவி உட்கார்ந்து அதைக் கண்கொட்டாமல் கவனித்தான். ஐந்நூறு தடவை தன் கையிலிருந்த பணக்கட்டை ஆகாயத்தில் தூக்கிப் போட்டுப் பிடித்தான் கணேசன். பிறகு சடார் என்று அந்த இடத்திலேயே உட்கார்ந்து கொண்டான்.

இரண்டு பர்லாங்குகளுக்கு அப்பால் சமுத்திரக் கரையில் ஜனங்கள் விளையாடுவது அங்கிருந்து தெரிந்தது. தொலைவில் ஒரு கப்பல் துறைமுகத்திலிருந்து புறப்பட்டு வானமுகப்பிலே மெள்ள மறைந்து கொண்டிருந்தது. ஜலக்கரையோடு இரண்டொருவர் வேகமாக நடந்து

சென்றார்கள். ஒரு பட்டாணிக் கடலைக்காரன் சிறிது நேரம் தொந்தரை கொடுத்து விட்டு, ஒன்றும் உபயோகம் இல்லை என்று அங்கே வட்டமிடுவதைக் கைவிட்டான். எங்கேனும் தனது இருப்பிடத்தைக் கண்டு அங்கேயும் வந்து வெளிப்படுத்தி விடுவானோ என்றுகூடச் சிறிது நேரம் சஞ்சீவி சஞ்சலம் அடைந்திருந்தான்.

ஃ ஃ ஃ

சூரியன் மலைவாயில் விழுந்துவிட்டான். கையெழுத்து மறையும் நேரம் வந்து பின் எங்கும் இருள் பரவத் தொடங்கி விட்டது. சமுத்திரத்தை ஒட்டி ஓடும் மெரீனா ரஸ்தாவில் மின்சார விளக்குகள் ஏற்றப்பட்டு விட்டன. இதுவரை கணேசனை யாரும் நெருங்கவில்லை. அவன் அந்த நோட்டுக்கட்டை இப்போது தன் அருகிலே இரண்டடிக்கு அப்பால் வீசிவிட்டு, கீழே மணலில் சாய்ந்து கண்ணையும் மூடிக்கொண்டிருந்தான். இஷ்டப்பட்டால், சஞ்சீவி அதை மெள்ள எடுத்துக் கொண்டு கூடப் போய் விடலாம். அப்படி அசைவற்றுக் கிடந்தான் கணேசன்.

இந்த நிலையில் சஞ்சீவிக்குக்கூட வெறுப்பு ஏற்படலாயிற்று. பொறுமை இழக்கும் நிலையில் அவன் வந்து கொண்டிருந்தான். இந்தக் கணேசன் எத்தனை நேரம் இப்படிக் கிடப்பது? அவன் எத்தனை நேரம் காத்திருப்பது?— இதற்கு முடிவுதான் உண்டா? யாரேனும் அவனைத் தேடி வருவார்களா? அல்லது, வரவே போகிறதில்லையா?

சஞ்சீவிக்குச் சடார் என்று ஓர் புதிய எண்ணம் தோன்றியது. கணேசன் நிச்சயமாகச் சஞ்சீவியின் மறைவிடத்தைப் பார்க்கவில்லை; பார்த்திருக்க முடியாது என்று அவன் நம்பினான். ஆனால், ஒருகால் அவனைத் தேடி வருபவன் பார்த்திருந்தால்? அதனாலேயே இது வரை நெருங்காமல் இருந்தால்?— அதுவும் உண்மையான காரணம்தான். அதையும் பரீட்சித்துப் பார்த்துவிடுவதென்று, சஞ்சீவி தன் இருப்பிடத்தை விட்டுப் புறப்பட்டான்; அப்பால் நடந்தான். ஆனால், எங்கு



சென்றாலும் சிறிதுகூட அவன் கணேசனிடமிருந்து தன் கண்களை அகற்றவில்லை.

இந்தக் காரியம்கூட வியர்த்தமே என்பதை சஞ்சீவி விரைவில் உணர்ந்தான். மேலும் அரை மணி ஆகியும் யாரும் நெருங்கவில்லை. கடைசியில் கணேசன் எழுந்து விட்டான்! உடையில் ஒட்டியிருந்த மணலையெல்லாம் தட்டி, ஒரு முறை சோம்பல் முறித்தான்; குனிந்து நோட்டுக் கட்டை எடுத்து, அதையும் தட்டினான். பிறகு வெகு இடமாக, சஞ்சீவியை நோக்கியே வரத் தொடங்கினான்.

'இதேதடா சங்கடம்!' என்று சஞ்சீவி பின்வாங்குவதற்கு முயற்சி செய்யுமுன் அவன் அருகே வந்து விட்டான். இனி சந்தேகம் இல்லை, அவனிடம் பேசவே வருகிறான் என்பதில்!

''மிஸ்டர்! உம்முடைய பெயர் எனக்குத் தெரியாது. என்னால் உமக்குத் தொல்லை அதிகம் இல்லையா?'' என்று கேட்டான் கணேசன்.

வாயடைத்து நின்றுவிட்டான் சஞ்சீவி. இம்மாதிரி ஒரு சம்பாஷணையையோ சந்தர்ப்பத்தையோ அவன் ஒரு போதும் எதிர்பார்க்கவே இல்லை!

கணேசன் புன்சிரிப்பு சிரித்துக் கொண்டேயிருந்தான். ''என்னை நீர் முழு முட்டாள் என்று எண்ணி விட்டீர்! அதில் எனக்கு வருத்தம் கொஞ்ச நஞ்சம் இல்லை. அந்த எண்ணத்தை மாற்றுவதற்காகவே இப்போது உம்முடன் நான் பேச வந்தேன். உம்மை என் பின்னால் அனுப்பினது யார் என்று எனக்குத் தெரியாது; அதைப்பற்றி நான் அக்கறை கொள்ளவும் இல்லை.''

சஞ்சீவி சற்றுத் துணிவுடன், ''எனக்கும் கூடத்தான் நீர் யார் என்று தெரியாது. உம்முடைய பின்னால் நான் வந்திருப்பதாக நீர் நினைத்தால் அதைவிடப் பெரிய தவறு நீர் செய்யப் போகிறதில்லை!'' என்றான்.

கடகடவென்று கணேசன் சிரித்தான். அதில் இருந்த கேலியும் ஹாஸ்யமும், சஞ்சீவியைக்கூடச் சேர்ந்து சிரிக்கச்

செய்தன. "மிஸ்டர்! என்னிடம் ஒரு வழக்கம் உண்டு. நான் தவறு செய்தால், அதைப் பிறர் கண்டு பிடித்துச் சொல்லும்போது, ஒப்புக்கொண்டு விடுவேன். நான் தோல்வி அடைந்தால், சங்கோஜப்படாமல் அதையும் பகிரங்கமாக ஏற்றுக்கொள்வேன். அதனால் ஒரு குறைவும் இல்லை. இவையெல்லாம் மிகவும் சிறந்த குணங்கள்... இப்போது விஷயத்திற்கு வருவோம். நீர் என்னைப் பின்பற்றி வரவில்லை என்று சொல்கிறீர்; அதை நான் நம்பவேண்டுமா?" என்று கேட்டான்.

"நான் உம்மைக் கட்டாயப்படுத்தவில்லை. அகஸ்மாத்தாக நீர் வந்த பாதையில் நான் வந்திருக்கலாம். கடற்கரை எல்லாருக்கும் சொந்தம்தானே!"

"இன்னமும் என்னைத் தெரிந்து கொள்ளவில்லை, மிஸ்டர்! நான் வெகு நேரமாகவே உம்மைக் கவனிக்கிறேன். பாங்க் வாசலில் பார்த்தபோது, உமக்கு ஒரு சோதனை வைத்தேன்...நீரும் வருகிறீரா என்று. வந்தீர்; பாங்கின் உள்ளே என் அருகில் நின்று முள் குத்தியது போலும், அதை எடுப்பது போலும், பாசாங்கு செய்து என் பேச்சைக் கேட்டீர். பிறகு பெஞ்சியில் உட்கார்ந்து என்னையே கண் கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தீர். 'போகட்டும். இவரை இன்னமும் சந்தேகப்படவேண்டாம். உண்மையிலேயே ஏதேனும் பாங்கில் காரியமாக வந்திருக்கலாம்' என்று அப்போதும் சும்மா இருந்தேன். உமக்குப் பாங்கியில் ஒரு வேலையும் இல்லை; என்னைப் பின்பற்றி வெளியே வந்தீர்..."

சஞ்சீவி ஏதோ சொல்ல வாயெடுத்தான். கணேசன் கையமர்த்தி அவனைப் பேசாமல் அடக்கிவிட்டுத் தானே தொடர்ந்து பேசினான்.

"பிறகு கடற்கரைக்கும் என்னுடன் வந்தீர் அதைக்கூட நான் சந்தேகக் கண்களுடன் நோக்கத் தேவையில்லை. அது கூட சகஜமான காரியம்தான். மேலும், என் பின்னாலேயே வந்து, அந்தப் படகின் பின் உட்கார்ந்து



கொண்டீர். அப்போதுதான் உம்முடைய பொறுமையைச் சோதனை செய்தேன்; அதில் வெற்றி பெற்றேன். உம்மை அந்த இடத்திலிருந்து கிளப்பினேன்."

"பெரிய வெற்றி கண்டு விட்டீர்; அதை என்னிடம் சொல்லி மனம் பூரித்துப் போங்கள்... அவ்வளவுதானே..."

"நான் அடைந்த ஒரு தோல்வியையும் கூறிவிடுகிறேன். ஒருகால் என் பணத்திற்காக ஆசைப்பட்டுத்தான் தொடர்ந்து வருகிறீர் என்று எண்ணி, இந்தக் கட்டை இரண்டடி அப்பால் எறிந்துவிட்டு உறங்குவதுபோல் பாசாங்கு செய்தேன். நீர் என் பணத்தை எடுத்துக் கொள்ளச் சிறிதும் முயற்சி செய்யவில்லை! நான் எதிர் பார்த்தபடி என் பணத்தின்மேல் நோக்கத்துடன் நீர் வரவில்லை. நான் யாரையேனும் சந்தித்து இந்தப் பணத்தைக் கொடுப்பேன் என்று பார்க்கவே நீர் வந்திருக்கலாம் அப்படி உமது எண்ணமாகவோ, உம்மை அனுப்பியவர் எண்ணமாகவோ இருந்தால், நான் அதற்கு ஒரு வழி கண்டு பிடித்து விட்டேன்..."

"எல்லாவற்றையும் நீரே சொல்லி விட்டால்..." என்று வினவினான் சஞ்சீவி.

"இன்னும் அதிகம் இல்லை. நான் யாரோ ஒருவரை எதிர்பார்த்துக்காத்துக்கொண்டிருப்பதாக நீர் நினைத்தால் உம்மை நான் ஏமாற்ற விரும்பவில்லை. இதுவரை என்னை யாரும் சந்திக்கவில்லை. இதோ அந்தப் பணக் கட்டும் இருக்கிறது. நீரே இதை வைத்துக் கொள்ளும். எந்த நேரமானாலும் இன்னும் தாராளமாக இங்கே இருந்து என்னைத் தேடி வருகிறவரிடம் சேர்ப்பித்து விடலாம்...!"

கணேசன் சட்டென்று அந்தக் கட்டைச் சஞ்சீவியிடம் கொடுத்துவிட்டு, நிற்காமல் நடந்து போனான். திகைத்து நின்ற சஞ்சீவியும், சில நிமிஷங்களுக்குப் பிறகு, அந்தக் கட்டுடன் ரஸ்தாவை நோக்கி நடந்தான். ஒரு தீபஸ்தம்பத்தின் வெளிச்சத்திற்கடியில் எடுத்துச் சென்று பிரித்தான்.

பத்து ரூபாய் நோட்டளவுக்கு அழகாகக் கத்தரித்துக் கட்டப்பட்ட வெற்றுக் காகிதங்கள் அதில் இருந்தன!

என்ன ஆச்சரியம்! பாங்கியில் நோட்டுகள் கட்டப் படுவதையும் பிறகு கணேசன் கையில் அந்தக் கட்டு கொடுக் கப்படுவதையும் அவன் கண்ணால் கண்டிருக்கிறான். அதன் பின் இந்த நிமிஷம் வரை அந்தக் கட்டு தன் கண்ணை விட்டு அகலாமல் பார்த்துக் கொண்டிருக்கிறான். எப்படி, எங்கே, எப்போது அது மாற்றப்பட்டது என்று அவனால் சொல்ல முடியவில்லை.

எல்லாவற்றையும்விட அவனுக்குச் சந்துருவை நினைத்த போது சங்கோஜம் அதிகம் உண்டாயிற்று. கொடுத்த வேலையை அவன் சரிவரச் செய்யவில்லை. சந்துருவிடம் போய் தான் ஏமாந்த விதத்தை எப்படிச் சொல்லுவான்?- தலை குனிந்தபடி சஞ்சீவி வீடு நோக்கித் திரும்பினான்.

ஃ ஃ ஃ

அறையில் கொண்டு தள்ளப்பட்ட சுந்தரிக்குச் சிறிது நேரம் என்ன செய்வதென்றே விளங்கவில்லை. தன்னைச் சுற்றிலும் நடப்பதெல்லாம் உண்மைதானே? சுந்தரம் பிள்ளை தன்னிடம்கூட—ஆசை நாயகி என்று மதிப்புடன் வாழ்ந்த தன்னிடம்கூட—இவ்வளவு கேவலமாக நடந்து கொண்டு விட்டானா? கேவலம்ஒரு சேவகனான நாயரிடம் தன்னை இழுத்துச் செல்லும்படி உத்தரவு கொடுக்கும் அளவுக்கு இழிவாக்கிவிட்டானா?—

அவ்வளவும் உண்மை, உண்மை தவிர வேறில்லை என்பது திரும்பத் திரும்ப நெஞ்சில் மோதியபோது, அவள் புழுவாகத்துடித்தாள் நாயர்! எத்தனை கெட்டவன் அவன்! எப்படி அவளைப் பார்க்கிறான், என்னவெல்லாம் பேசுகிறான்! இந்தச் சுந்தரம் பிள்ளையை நம்பினதற்கு இதுதான் அவள் காணும் பலனா? நினைக்க நினைக்க உள்ளம்பற்றி எரிந்தது.

கடைசியாகக் கதவைச் சாத்துக்கொண்டு செல்லும் போது, வாசற்படியண்டை நாயர் சிறிது தயங்கி நின்றான். அவள் முகத்தை ஏளனமாகப் பார்த்தான்! அதில் இருந்த



விகாரத்தின் அர்த்தத்தை அவள் புரிந்து கொள்ளாமல் இருக்க முடியவில்லை. 'சுந்தரம் பிள்ளையின் தயவில் நீ இருந்த போதே நான் உன்னிடம் பயம் கொள்ளவில்லை; அவன் மதிப்பை இழந்துவிட்ட உன்னையா நான் இனி விட்டு வைப்பேன்! என்பதே அதன் பொருள்.

நாயர் வெளியேறிய பின்பு, சுந்தரி கூண்டில் அடை பட்ட புலிபோல் அலைந்தாள். அங்கிருந்து வெளியேற வழி ஏதும் இல்லை என்பதை அவள் பரிசோதனை செய்து பார்க்கத் தேவை இல்லை. நாயரிடம் சற்று முரண்டு செய்தாலும் அவன் கண்டிப்பாக நடந்து கொள்ளுவான். துஷ்டன்! 'நம் கதியும் இப்படியா?' என்று கண்ணீர் பெருக்கினாள். ஜன்னல் வழியே வெளியில் பார்த்தால், பங்களாவின் தோட்டத்தின் பின்புறம் தெரியும். ஒருபுறம் ஓட்டை மோட்டார்; ஒரு புறம் பலவிதச் செடிகள் மண்டிக் கிடந்தன. இருளில் எல்லாமே கறுப்பாகத் தோன்றின.

சட்டென்று அவள் சிந்தனைகள் முடிவு பெற்றன. அறை வாசற்படியண்டை ஓடினாள், உற்றுக் கேட்டாள். கீழே உரக்க இருவர் பேசும் குரல். ஒன்று நாயர்! மற்றது 'தம்பி', ஹா! 'தம்பி' வந்து விட்டால் எப்படியோ ஒருவழி பிறக்கும். அவனையும் அவளையும் சேர்த்து இன்னம் சுந்தரம் பிள்ளை சந்தேகம் கொள்ளவில்லையே!

ஒவ்வொரு விநாடியும் 'தம்பி' மேலே வருவான் என்று அவன் காலடி ஓசையை எதிர்பார்த்துக் காத்திருந்தாள். வரவில்லை. ஐந்து, பத்து, பதினைந்து நிமிஷங்கள் ஆகிவிட்டன. நாயர் அவனை வரவொட்டாமல் தடுத் திருக்க வேண்டும். ஆனால், எப்படியும் அவன் உதவி அவளுக்குக் கிடைத்தே விடும்.

ஒரு கணம் வருந்தினாள். 'அடடா! என்ன அவசர புத்தியுடன் நடந்துகொண்டேன். 'தம்பியிடமே சந்துருவைப் பார்க்கும் வேலையை ஒப்படைத்து விட்டுச் சும்மா இருக்கக் கூடாதா? சுந்தரம்பிள்ளை நம்மைச் சமாதானப்படுத்தி நல்லதனமாக வைத்துக்கொள்ள என்னவோ ஒரு முயற்சி எடுத்துக்கொண்டு வரும் போது

அதையும் குட்டிச்சுவராக்கி, நம் நிலைமையையும் மோசமாக்கிக் கொண்டு விட்டோமே!' என்று ஏங்கினாள்.
மறுபடி ஜன்னலடியில் உட்கார்ந்து வெளியே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்த சமயம், மோட்டார் அருகே ஓர் உருவம் பதுங்கிப் பதுங்கி வெளிப்பட்டது. வெளியே வருவதும், பிறகு மோட்டாருக்குப் பின்னால் பின்வாங்குவதுமாக அது இருந்தது. யாரோ ஒரு மனிதன் என்பதில் சந்தேகம் இல்லை. ஒரு கால் 'தம்பி'யாக இருக்குமோ!

நெஞ்சம் எல்லாம் பால் வார்த்த மாதிரி ஒரு உணர்ச்சி! நான் இங்கேயிருப்பதை அவனிடம் எப்படித் தெரிவிப்பது? இங்கிருந்து குரல் கொடுப்பது முட்டாள்தனம். அவன் கேட்பதற்கு முந்தி பலர் கேட்டு விடுவார்கள்; அவன் வந்திருப்பதை வெளியிடுவதைத் தவிர வேறு பலன் காண முடியாது. என்ன செய்யலாம்? என்ன செய்யலாம்?'

மேஜையண்டை ஓடினாள். ஒரு காகிதத்தைக் கிழித்து அதில் சுருக்கமாக, "அபாயத்தில் இருக்கிறேன். என்னை இதோ மேலே உள்ள அறையில் பூட்டியிருக்கிறார்கள். உடனே உதவி செய்" என்று எழுதினாள். கிறுக்கினாள் என்று சொல்ல வேண்டும். அதைக் கசக்கி, பந்து போல் உருட்டி, தயாராகக் காத்திருந்தாள். அந்த உருவம் ஜன்னலுக்கு அருகாமையில் பதுங்கி வரும் சமயம், குறி தவறாமல் அதை வீசி எறிந்தாள்.

காகிதச் சுருள் அந்த ஆசாமியின் தோள் பட்டையில் தாக்கியது. திடுக்கிட்டுப் போய் உடனே நிமிர்ந்து அவள் முகத்தைப் பார்த்தான். அவள் அவசர அவசரமாகச் சமிக்ஞை செய்தாள். ஆனால், அந்த முகத்தைப் பார்த்ததுமே அவள் நெஞ்சம் உட்கார்ந்து போனது. அவன் 'தம்பி' இல்லை. அவள் அறியாத வேறு யாரோ ஒரு ஆடவன்...கணேசனை அவள் எப்படி அறிவாள்?

அந்த ஆடவன் அவளைப் பார்த்தான். பிறகு குனிந்து காகிதத்தைப் பிரித்து மிகுந்த சிரமத்துடன் படித்தான். மறுபடி அவளைப் பார்த்து, 'இது இந்திரா இல்லை' என்று



தீர்மானித்துக் கொண்டான். ஆனாலும், இந்தப் பங்களா பூராவும் தேட்டைப் போட்டு விடுவது என்ற எண்ணத்தை ஊர்ஜிதமே செய்து கொண்டான். வீட்டின் எஜமான் இல்லாத சமயம் என்பதை அறிந்துகொண்டவன் ஆயிற்றே.

ஃ ஃ ஃ

வெளியில் காவல் காத்திருக்கும் நாயருக்கும் தெரியாமல், குசியினால் கண்ணைத் திறந்து வைத்துக் கொண்டு உட்கார்ந்திருக்கும் தலைப்பிள்ளைக்கும் தெரியாமல், கணேசன் மாடியை அடைந்து விட்டான். விஸ்தாரமான ரத்ன கம்பளம் போட்ட ஹாலும் அற்புதமான மின்சார விளக்குகளும், பளிங்கு மேஜையும், சோபா செட்டுகளும் எத்தனை ரசிகன் சுந்தரம் பிள்ளை என்பதைக் காட்டின. அப்பால் இருந்த பெரிய அறையின் தோரணையிலிருந்து, அதுவே பிள்ளையின் அபிமான அறை என்று ஊகித்தான். கதவைத் திறந்துகொண்டு உள்ளே சென்றான். அம்மா! எத்தனை அலங்காரங்கள்! சுவரெல்லாம் விலை உயர்ந்த திரைகள் தொங்கின. ஜன்னல்களில் 'வெல்வெட் கர்ட்டன்'கள்; விளக்குகள் ஏற்றப்படாமல் இருக்கும் போதே, வெளியே, வெளியே எரிந்த மின்சார தீபங்களின் ஒளி அதனுள் பிரவேசித்து, மங்கின வெளிச்சத்தைப் பரவ விட்டிருந்தது. கணேசன் கதவை நன்றாகத் திறந்து கொண்டு உள்ளே சென்றான். சிறிது நேரம் அசந்து போனான்.

மாடிப்படியில் திடீரென்று பேச்சரவம் கேட்டது. "இழுத்துக்கொண்டு வாருங்கள், அந்த நாயை! நான் கேட்கிறேன் அவனைக் கேட்கிறபடி!" என்று ஒரு கர்ஜனை முன்னோக்கி வந்தது. கணேசன் இனி அறையிலிருந்து வெளிப்பட்டால், நிச்சயம் வருபவர்கள் கண்ணில் பட்டே தீர வேண்டும்.

'டக்டக்' கென்று ஹால் விளக்குகள் ஏற்றப்பட்டன. தடதடவென்று காலடிச் சப்தம்...

கணேசன் இப்போது அந்த அறையிலேயே எங்கேனும் பதுங்கிக் கொள்வதைத் தவிர வேறு மார்க்கம் இல்லை.

ஒரே தாவாகப் பாய்ந்து ஒரு ஜன்னலில் தொங்கிய வெல்வெட் திரைக்குப்பின் ஒண்டிக்கொண்டான். திரையின் சலனம் சரியாகக்கூட ஓய்ந்திருக்காது; சுந்தரம் பிள்ளை அறையில் நுழைந்து விட்டார்; பித்தானை அமுக்கி, அறையில் ஜாஜ்வல்யமான பிரகாசத்தை உண்டாக்கி விட்டார்.

கணேசன் இருந்த இடத்தில் மட்டும் அந்த வெளிச்சம் துளிக்கூட எட்டவில்லை. குரலிலிருந்தே என்ன நடக்கிறதென்று ஊகிக்க வேண்டிய நிலையில் அவன் இருந்தான். ஐந்து நிமிஷங்களுக்குப் பிறகு ஒருவாறு அறையில் இருப்பவர்களையெல்லாம் இந்த முறையினாலே தெரிந்து கொண்டு விட்டான்.

ஸோபாவில் சுந்தரம் பிள்ளை உட்கார்ந்திருந்தார். அவர் எதிரே தாமோதரத்தை இரு ஆட்கள் பிடித்தபடி நின்றார்கள். ஒரு ஸ்திரீயும் இருந்தாள். அவள் பேசவில்லை. ஆனால் அது இந்திராவாகத்தான் இருக்க வேண்டும். சுந்தரம் பிள்ளையின் பேச்சிலிருந்து அது தெரிந்தது...சரியானதொரு சந்தர்ப்பம்தான்; சாந்தமாக நின்று கவனிக்க வேண்டியதுதான்...

கணேசன் இப்படி நினைத்ததுதான் தாமதம், அவன் மீது ஒரு கையின் ஸ்பரிசம் ஏற்பட்டது. உடம்பெல்லாம் ஒரு குலுக்கு குலுக்கிவிட்டது. அந்த ஒளிவிடத்தில் அவனைத் தவிர வேறு யாரோ இருக்கிறார்கள்...அது யார்?

கணேசன் காதில் குரல் இரகசியமாக ஒலித்தது. ஆண் குரல்; முரட்டுத் தொண்டையை வெகு சிரமத்துடன் மிருது வாக்கிக்கொண்ட மாதிரி இருந்தது. "ஒன்றும் யோசனை செய்யாதே! நானும் உன் நண்பன்தான் பேசாமல் நடப்பதைக் கவனித்துக் கொண்டு இரு!' என்றது அந்தக் குரல்.

# சரளாவுக்கு ஏற்பட்ட இரு அதிர்ச்சிகள்

குறட்டை விடுகிற மாதிரி நீண்ட நேரம் பாசாங்கு செய்து கொண்டிருந்த சரளாவும் தூங்கவில்லை; அவள் தூங்கி விட்டதாக நம்பி, தன் படுக்கையில் படுத்த திலகவதியும் தூங்கவில்லை. இருவரும் வெகு தீவிரமாகச் சிந்தனை செய்து கொண்டிருந்தார்கள்.

சற்று முன்பு கீழே நடந்த எதிர்பாராத சம்பவம் இருவரையுமே திகைக்க வைத்திருந்தது. பஞ்சநதமும் திலகவதியும் பண விஷயமாகப் பேசிக்கொண்டதையெல்லாம் சரளா கேட்டு வந்த போது, அவள் ஒருத்தியைத் தவிர அங்கே யாரும் வரமாட்டார்கள் என்று எதிர்பார்த்தாள். கடைசி வரை இருந்து, தந்தையும் மகளும் என்ன முடிவு செய்கிறார்கள் என்பதை அறிந்து கொள்ளுவதில் அவள் அக்கறை கொண்டிருந்தாள். பேச்சுப் பராக்கில் ஏதேனும் ஒரு வார்த்தையேனும் தவறி வந்து, அந்த வீட்டில் நடைபெறும் மர்மங்களுக்கு விடை தராதா என்று காத்திருந்தாள்.

திலகவதி தனது தந்தை அந்த வீட்டிற்கு வருவதை விரும்பவில்லை. அவன் வருகையைக் கண்டு அச்சமே கொண்டாள் என்பதை எளிதில் அறிந்து கொண்டாள் சரளா. ஆனால் பஞ்சநதம், தான் உயிர் வாழப் பணம் பெற அங்கே வந்தான்; அதுவும் அவன் சகா முத்தையன் என்பவன் பிடியில் அகப்பட்டுத் திணறிக் கொண்டிருந்தான். அந்த நிர்ப்பந்தத்தாலேயே தன் மகளை ஓரளவு அதிகம் கடுமைப் படுத்தினான் என்பதையும் ஊகித்துக் கொண்டாள்.

ஆயிரம் ரூபாயைத் தூக்கி அவள் கொடுக்கிறாள்; பெரிய தொகை; அதை அவன் ஏற்கமறுக்கிறான். இன்னும் அதிகம் அவளிடம் இருக்கிறது என்பதைத் தெரிந்து வைத்துக் கொண்டிருக்கிறான். எப்படித் தெரிந்து கொண்டான் என்பதை அவளால் கண்டு கொள்ள முடியவில்லை. இவர்களிடையே வாக்குவாதம் நடந்து கொண்

டிருக்கும் சமயம், நான்காவது ஆசாமி ஒருவனும் அங்கே பிரவேசிக்கிறான். விளக்கையும் அணைத்துவிட்டு, தான் யார் என்பதைக் காண்பித்துக் கொள்ளாமல் அவன் இருட்டில் வருகிறான்.

அந்த ஆசாமிக்குச் சரளா ஒளிந்துகொண்டு கவனிப்பது கட்டாயம் தெரிந்திருக்க வேண்டும். அவன் யார்? வீட்டில் இருப்பவர்களில் ஒருவனா? அல்லது யாரேனும் வெளி ஆசாமியா?

சரளா, விளக்கு அணைந்தவுடனேயே வந்து விட்டாள். எதற்காக விளக்கு அணைக்கப்பட்டது என்பதைப் பற்றி அவள் அப்போது கவலைப்படவில்லை. அங்கே என்ன நடந்திருக்கும் என்று பார்த்துக் கொண்டு நிற்க வில்லை. மாடியில் தன அறைக்கு ஓடி விட்டாள். ஒரு வேளை சந்துரு அவளுடைய செய்கையை ஒப்புக்கொள்ள மாட்டான். ''திலகவதியின் பாதுகாப்புக்காக உன்னை நான் அனுப்பினேன். அவள் ஆபத்தில் சிக்கியிருக்கிறாள் என்று தெரிந்தும் கொண்டும் நீ எப்படி ஓடிப் போனாய்'' என்று அவன் கேட்கக்கூடும். 'நன்றாகக் கேட்கட்டுமே!' என்றது சரளாவின் மனம்.

இப்படியெல்லாம் சுமார் பதினைந்து நிமிஷங்கள் சரளா மனத்தைக் குழப்பிக்கொண்ட பிறகு, திலகவதியே அறையில் நுழைந்து விட்டாள். அவளுக்கு ஏதும் ஆபத்து இல்லை என்பதை ரகசியமாகக் கவனித்தாள் சரளா. அதோடுகூட, அவள் வசம் அந்தப் பணமும் இல்லை. எனவே, ஒன்று பஞ்சநதம் பணத்துடன் வெளியேறியிருக்க வேண்டும்; அல்லது புதிதாக வந்தவன் கைப்பற்றியிருக்க வேண்டும். திலகவதியின் முகபாவத்திலிருந்து எதையும் அறிந்துகொள்ள இயலவில்லை. எதற்கும் அன்றிரவுக்குள், சந்துருவை டெலிபோனில் அழைத்து நடந்தவரை அவனுக்குத் தெரிவித்துவிட வேண்டும் என்று விரும்பி னாள். எனவே, திலகவதி தூங்க வேணும் என்று காத்திருந்தாள்...

படுக்கையில் படுத்த திலகவதியின் மனத்தில், சற்று முன் நடந்த துரித சம்பவங்கள் மறுபடி ஓடின சரளாவுக்கு



ஒன்றுமே தெரியாது என்ற நம்பிக்கை சிறிதளவு மனச் சாந்தியை அளித்தது. எனினும் அவள் கொண்டு சென்ற பணம் பஞ்சநதத்தின் கையில் கிடைக்கவில்லை. அதற்கு முன் வேறொரு கரம் அதைப் பற்றிக் கொண்டு ஓடி விட்டது என்பது அவளை மிகவும் குழப்பியது. பின்னர் பஞ்சநதத்தை வெறும் கையுடன் திருப்பி அனுப்ப அவள் பட்ட பாடு கொஞ்ச நஞ்சம் அல்ல. சாதாரண காலமாக இருந்தால், அவள் கூச்சல் போட்டு வீட்டையே கூட்டி யிருப்பாள். இப்போது சத்தம் போட்டால், அவள் தகப்பன் வந்திருந்ததையும், அவனுக்குப் பணம் கொடுத்துக் கொண் டிருந்ததையும் ஒப்புக்கொள்ள வேண்டி வரும். எத்தனை தர்ம சங்கடமான நிலைமை இதெல்லாம்!

நேரம் ஓடிக்கொண்டேயிருந்தது. கீழே ஹாலில் இருந்த கடியாரம் மணி ஒன்று அடித்தது. 'சரளா தூங்கி விட்டாள்' என்று முடிவு செய்திருந்த திலகவதிக்குப் 'பக்' சென்றது. போர்வையை உதறிவிட்டு அவள் படுக்கையில் எழுந்து உட்கார்ந்தாள். திலகவதி சற்றும் அசையாமல், ஆழ்ந்த நித்திரையில் இருப்பது போல் படுத்தவாறு கவனித் தாள். இரண்டு நிமிஷங்களுக்குப் பிறகு, சரளா எழுந்து நின்று, திலகவதியை உற்றுப் பார்த்துத் திருப்தி அடைந்த வளாக, பூனைபோல் அடி வைத்து, அறைக் கதவைத் திறந்தாள்.

'சந்துரு அவளைத் துணையாகவும் அனுப்பி வைத் தான். தன்னைக் கவனிக்கும்படியும் அனுப்பி வைத்தான். சந்தேகம் இல்லை'—என்று திலகவதி ஊர்ஜிதம் செய்து கொண்டாள். திடீர் என்று மனத்தில் ஒரு திகில் பிறந்தது. ஒரு வேளை சரளாவுக்குப் பஞ்சநதம் வந்திருந்த சமா சாரம் தெரிந்திருக்குமோ?—'இராது!' என்று அவளே சமாதானமும் செய்துகொண்டு, ஐந்து நிமிஷ அவகாசம் கொடுத்து விட்டுச் சரளாவைப் பின்பற்ற முடிவு செய் தாள். என்னதான் செய்கிறாள் என்று பார்க்க ஓர் ஆவல் அவளைப் பற்றிக் கொண்டது.

சரளா கதவை மெள்ளச்சாத்திக்கொண்டு, நிச்சிந்தையாக மேலே நடந்தாள். மாடிப் படிகளில் அவள் இறங்கின விதம் அவளது பரந்த அனுபவத்துக்கு எடுத்துக் காட்டாக இருந்தது வேகமாகவும் நடந்தாள்; சிறிதும் சப்தம் எழுப்பாமலும் நடந்தாள் அதே சமயம் முன்னும் பின்னும் யாரேனும் வருகிறார்களா என்பதையும் கவனித்துக் கொண்டாள். மாடிப் படியின் அடியில் தயங்கி நின்று மீண்டும் செவிகளை உபயோகித்தாள், ஒருவரும் இல்லை.

டெலிபோன் அருகே சென்று, ரிஸீவரை மெள்ளத் தூக்கிக் காதில் வைத்துக் கொண்டாள். சப்தமே வரவில்லை. அதில் ஏதேனும் கோளாறா? ஒரு முறை அதைக் கீழே வைத்துவிட்டு மறுபடி முயற்சி செய்தாள். பழைய சமாசாரம்தான். எதற்கும் நம்பரைச் சுழட்டிப் பார்க்கலாம் என்று முயற்சி செய்தாள். ஒரு பலனும் இல்லை. ஐந்தாறு முறை அதைத் தட்டினாள். ஊம்ஹூ

அந்த நிமிஷத்தில் அவள் சற்று அச்சத்துடன் உணர்ந்து கொண்டாள் ஓர் உண்மையை. அந்தப் பங்களாவுக்கும் வெளி உலகத்திற்கும் தொடர்பு அறுந்து விட்டது! பொழுது விடிந்து டெலிபோன் ரிப்பேர் செய்தால்தான்? சந்துருவுடன் பேசலாம். யார் இவ்வாறு செய்திருப்பார்கள் அவள் பேசக் கூடாதென்று எதிரி யாரேனும் செய்த காரியமோ! அல்லது, அந்த வீட்டிற்கே வரப்போகும் அபாயத்தின் முற்குறியோ?

சரளா உதட்டைக் கடித்துக் கொண்டாள். சந்துரு அடிக்கடி சொல்வது மிகவும் சரியான வார்த்தை. சரளா எதிலும் பாதி வரை சரியாகச் செய்வாள் என்பான் அவன். இப்போது அவள் திலகவதியின் படுக்கை அறையைத் திறந்து போட்டுவிட்டு வந்திருக்கிறாள்; அவளும் தனியே இருக்கிறாள். எந்த அபாயமும் நேரிடலாம். பாதுகாப்பாக வந்தவள், இப்போது அவளையே காட்டிக் கொடுத்தவளாக இருக்க நேர்ந்து விட்டால்!...



இந்தச் சமயத்தில் சரளாவின் நாசியில் ஒரு லேசான வாசனை மோதியது. அறையெங்கும் ஒரு நறுமணம் பரவியிருக்கவேண்டும், அதிலே தாழம்பூவின் கந்தத்தை அவள் கண்டாள். மனம் வேறு காரியத்திலும் கவலையிலும் ஈடுபட்டிருந்தபடியால் இதுவரை அவ்வளவாக அதைப் பொருட்படுத்தவில்லை. இப்போது டெலிபோனில் பேச்சு சாத்தியம் இல்லை என்று ஏற்பட்டு, திரும்ப அறைக்குச் செல்ல வேண்டியது ஒன்றே வேலை என்று ஆன பின்பு, அந்த கந்தம் அவளுக்கு ஏதோ ஒரு சூசகமாகத் தோன்றியது. அந்த வீட்டில் தாழம்பூ 'ஸெண்ட்'டுடன் ஒருவன் நடமாடுகிறான். இப்போது டெலிபோனில் அவள் பேசும் சமயம் எங்கோ அருகே நிற்கிறான். 'அவனைச் சந்திக்க நேர்ந்தால், தைரியமாக இருக்கவேண்டும். சிறிதும் விட்டுக் கொடுக்கக்கூடாது; மனப்பிராந்தியைக் காட்டிக்கொள்ளக் கூடாது!' என்று தீர்மானம் செய்து, இதயத்தை இரும்போக்கிக் கொண்டாள்.

அவள் எதிர்பார்த்தது நடந்தது. அவள் பின்னே ஆள் அரவம் கேட்டது. சரளா திரும்பாமல் காத்திருந்தாள். மதுரநாயகம் ஒரு அசட்டுச் சிரிப்புடன் எதிரே வந்து நின்று, ''ஓஹோ டெலிபோனில் பேச வந்தீர்களோ?'' என்று கேட்டார்.

சில விநாடிகள் சரளா மதுரநாயகத்தையே விறைத்துப் பார்த்தாள். இதற்கு முன்பு அவரை அவள் பார்த்திருந்ததில்லை, சாதாரணமாக இரவு பன்னிரண்டு மணிக்குமேல் தனிமையில் ஒரு புதிய ஆசாமியை எதிர்பாராத இடத்தில் காணும்போது ஏற்படும் பயம் அவளுக்கு ஏற்பட்டதென்னவோ உண்மை. ஆனால், அந்தப் பீதியின் சாயல் முகத்தில் சிறிதும் பதிவாகவில்லை.

''நீங்கள் யார் என்று நான் கேட்கலாமா?'' என்று கேட்டாள் சரளா.

''உங்கள் ஒருவர் நீங்கலாக இந்தப் பங்களாவில் உள்ள அத்தனைப் பேரும் என்னை அறிவார்கள். மதுரநாயகம்

என்பது என் பெயர். இந்தப் பங்களா சொந்தக்காரரின் நண்பன் நான்'' என்றார் மதுரநாயகம்.

சரளா புன்சிரிப்பு சிரித்தாள்: ''நிசிவேளையில் வீட்டைச் சுற்றி வரும்போதே அப்பேர்ப்பட்ட ஒரு உரிமை உங்களுக்கு இருக்கவேண்டும் என்று நான் ஊகித்துக்கொண்டேன். நான்...வருகிறேன்'' என்று நகர முயன்றாள்.

மதுரநாயகம் அவளையே வெறித்துப் பார்த்தபடி ''தாங்கள் யார் என்பதைச் சொல்லவில்லையே எனக்கு?'' என்று கேட்டார்.

''தாங்கள் எப்படி இந்த வீட்டு எஜமானனுக்கு ஆப்த நண்பரோ, அதே போல் நானும் இந்த வீட்டு எஜமானி அம்மாளின் உறவினள். ஆகவே, தங்களுக்கு உள்ள உரிமை எனக்கும் உண்டு...'' என்று சரளா நாசூக்காகப் பதில் சொன்னாள்.

மதுரநாயகம் அவள் மேலே செல்லுமுன், ''அம்மணி! உங்களுடன் நான் சில வார்த்தைகள் பேச விரும்பி வந்திருக்கிறேன். பங்களாவில் திரிபவன் அல்ல நான்!'' என்றார்.

''பகலில் அவ்வாறு செய்வது உசிதம் என்று நான் கருதுகிறேன். தவிர, உங்களை இன்று காலை முதல் நான் இங்கே காணவில்லை. திலகவதி அம்மாள் வாய் மூலமாக நீங்கள் யார் என்று அறிந்து ஊர்ஜிதம் செய்துகொள்ளும் வரை எனக்கு உங்களுடன் பேச வேண்டிய அவசியம் இல்லை!'' என்று கடுமையாகப் பதில் கொடுத்தாள் சரளா.

''உங்கள் இஷ்டம்போல் ஆகட்டும். இப்போது நீங்கள் டெலிபோன் செய்ய வந்தீர்கள். யாருடன் என்று எனக்குச் சொல்லலாமா?''

''அதை நான் சொல்ல வேண்டிய நிர்ப்பந்தம்?''

''எதுவும் இல்லை! நீங்கள் சந்துருவுடன் பேச வந்தீர்கள் என்று நான் நினைக்கிறேன்.''

''யார் எது நினைத்தாலும், நான் ஆட்சேபணை செய்யும் வழக்கம் இல்லை.''



''என்ன பேச வந்தீர்கள் என்பதை நான் அறிந்து கொள்ளலாமா?''

''அதையும் உங்கள் ஊகத்துக்கே நான் விட்டுவிடத் தீர்மானித்திருக்கிறேன்!''

''சரி...அப்படியானால் என்னுடைய மற்றொரு ஊகத்தை உங்களிடம் சொல்கிறேன்; காதில் போட்டு வைக்கலாமா!''

''என் வழியை மறித்துப் பேசும்போது, காதைப் பொத்திக்கொள்வதைத் தவிர வேறு வழி என்ன இருக்கிறது? நீங்களே சொல்லுங்கள்...மணி இப்போது ஒன்றேகால்!''

''சி. ஐ. டி. சந்துரு நேற்றெல்லாம் இங்கே இருந்தார். இன்று உங்களை இங்கே அனுப்பி வேவு பார்த்து, டெலிபோன் செய்யச் சொல்லியிருக்கிறார். நான் கூறுவது உண்மைதானே?''

''நான் பதில் சொல்லித்தான் ஆக வேண்டுமா?''

''இல்லை, மௌனமே எனக்குப் போதும். இங்கே மதுரநாயகம் என்பவரைக் கண்காணித்து வா' என்றும் சொல்லி அனுப்பினார் அல்லவா?''

''அப்படியானால், அது உங்கள் கவலைதானே? நான் என்ன செய்யட்டும்?''

''அல்லது, பஞ்சநதம் திலகவதி இவர்களைப் பற்றி விவரங்களைச் சேகரிக்கச் சொல்லியிருப்பார்...''

''நான் உங்களுக்குச் சொல்லக்கூடியது எதுவும் இல்லை இப்படிக் கேட்டுக் கொண்டிருந்தால் பொழுது போய்க் கொண்டேயிருக்கும். நீங்கள் உண்மையில் மதுரநாயகமாக இருந்தால், இந்த வீட்டு எஜமானனின் நண்பராக இருந்தால், சந்துருவுடன் ஒத்துழைக்கலாமே! என்னை வழி மறித்து நிற்பானேன்?''

மதுரநாயகம் தலையைத்தடவி, கண்ணையும் சிமிட்டிக் கொண்டார். ''மிஸ் சரளா! நான் உங்களை வழி மறைக்கவில்லை. இந்த வீட்டில் வேவு பார்த்து, சந்துருவுக்குக் கையாளாக இருப்பதையும் ஆட்சேபிக்கவில்லை. சந்துரு

விடம் இப்போது பேச முடியாதபடி டெலிபோன் கம்பி துண்டாடப்பட்டிருக்கிறது என்று நினைக்கிறேன். நான் செய்தேன் என்று சந்தேகிக்க வேண்டாம். நான் கூற வந்தது, நான் சொல்லும் ஒரு சேதியை நீங்கள் சந்துருவிடம் அறிவிக்க வேண்டும்.''

''ஒரு கடிதம் எழுதிப் போடலாமே!''

''இல்லை; அவர் எப்போது இந்த வீட்டிற்கு உங்களை அனுப்பினாரோ, உங்கள் மூலமே அந்தச் செய்தி போகட்டும், சந்துரு என்மீது சந்தேகப்படுகிறார்...''

''அது அவர் சுபாவம்.''

''எனக்கு வட்சியம் இல்லை. என்னைப் பற்றிய விஷயங்களை அவர் அறிய முயற்சி செய்கிறார். அதற்காக நாராயணனைத் தூண்டிவிட்டிருக்கிறார்.''

''நாராயணனை எனக்குத் தெரியாது.''

''சந்துருவிடம் சொல்லுங்கள். எனக்கு அவருடைய வேலை எல்லாம் தெரியும்; அவர் மூளை வேலை செய்யும் விதத்தை நான் அறிவேன். எனவே, அவர் அடுத்தபடி என்ன செய்வார் என்பதும் எனக்குத் தெரியும்; அனாவசியமாக அவர் இந்தக் கேஸில் தலையிட்டுத் தொந்தரைக்கு ஆளாகப் போகிறார்.''

''அதுவும் சந்துருவின் வழக்கம்தான்.''

''மற்றவர்கள் பொறுத்துக் கொள்ளுவார்கள்; நான் மாட்டேன்...''

''அதற்குக்கூடச் சந்துரு ஆட்சேபணை சொல்லுவார் என்று நான் எதிர்பார்க்கவில்லை...''

''சந்துரு அனுப்பின ஆள் ஆகையால் அவர் தோரணையிலேயே பேசுகிறீர்கள். என்னைச் சந்துருவால் ஒன்றும் செய்து கொள்ள முடியாது!''

''சந்தோஷம்...அடிக்கடி சந்துருவுக்கும் வெற்றிகளையே கண்டு அலுத்திருக்கிறது. உங்கள் மாதிரி சிலர் தேவைதான். அவருக்கும் புத்தி வரும்.



''என்னிடம் விளையாட வேண்டாம், நான் அவரிடம் அகப்பட்டுக் கொள்வேன் என்று மட்டும் நம்ப வேண்டாம்! இந்த மதுரநாயகத்தின்மீது அவர் கை வைக்க முடியாது!''

''கொஞ்சம் எனக்கு வழிவிடுங்கள். நீங்கள் வந்திருக்கிற சமாசாரத்தைத் திலகவதியிடம் சொல்லுகிறேன்.''

''அத்தனைச் சிரமம் நான் உங்களுக்கு வைக்கப் போகிறதில்லை. ஏனென்றால், அவருடன் பேச வேண்டிய காரியம் எனக்கு ஒன்றும் இல்லை—சந்துரு அவர்கள்தான் அனாவசியமான சிரமங்கள் எடுத்துக்கொண்டு, புதிய சிரமங்களை விலைக்கு வாங்கிக் கொள்ளுகிறார்! அதை எச்சரிக்கவே நான் வந்தேன்...''

''நண்பர்களாகிய நாங்கள், சந்துருவிடம் அன்பு, மதிப்பு எதுவும் வைத்துக்கொள்வதில்லை. ஓரளவு பொறாமை மட்டுமே எங்களுக்கு உண்டு ஏன் என்றால் மனுஷன் எடுத்ததில் எல்லாம் வெற்றி காண்கிறார் உங்கள் மாதிரி மேதாவிகள் வந்து, அவரைத் தோற்கடிக்க வேண்டும். இப்போது அவர் எனக்கு இட்ட வேலையைச் செய்ய முயல்றேன். இயலவில்லை; திருப்புகிறேன. வழி விடுங்கள்!''

''அம்மணி! சந்துருவிடம் நான் கூறினதாகச் சொல்லுங்கள்! இந்த மதுரநாயகத்தை விரோதித்துக் கொண்டால், மிகவும் பொல்லாதவனாயிருப்பான்!''

''இருந்தே காட்டி விடுங்கள்! எனக்குத் திருப்தி... இப்போது ஞாபகம் வருகிறது; இந்த வீட்டில் இருப்பவர்கள் அத்தனை பேரையும் ஜாபிதா போட்டு அவர் எனக்குச் சொன்னார்; உங்கள் பெயரை மட்டும் ஏனோ விட்டு விட்டார்.

''ஆச்சரியமாக இருக்கிறது! தாமாகவே கவனித்துக் கொள்ளலாம் என்ற எண்ணமாகவும் இருக்கும்...நான் வருகிறேன்!'' என்ற சரளா இரண்டு அடிகள் வைத்தாள். பிறகு ஒரு குறும்புச் சிரிப்புடன், ''உங்கள் கோபம் ரொம்ப நியாயமானதுதான்'' என்றாள்.

"நான் பொறுமையுடன் இருந்திருக்கிறேன். ரொம்பக் கெட்டவன் நான்."

"எனக்கு அதுவும் தெரியும்!" என்றாள் சரளா.

"நான் வேறு ஆளாகவே இருந்து விடுவேன்!"

"அது அவருக்குத் தெரிந்திருக்க வேண்டுமே!"

சரளா வெகு துணிவுடன் பேசினாள். மதுரநாயகத்தைக் கோபமூட்ட வேண்டும் என்றே பேசினாளோ என்று நினைக்கும்படி இருந்தது அவள் குரல்.

அவள் பதிலில் இருந்த கேலி அவர் முகத்தைச் சிவக்கடித்தது. உதடுகள் துடித்தன. அவள்மீது பாய்ந்து மென்னியை நெரிப்பாரோ என்றுகூடத் தோன்றும்படி இருந்தது.

அந்தச் சமயம், மாடியிலிருந்து 'கிரீச்' என்றொரு அலறல் எழுந்தது. நீண்ட அலறல்; பயமும் கோபமும் அதனுள் சேர்ந்து காணப்பட்டன. எங்கும் வியாபித்து, யாரோ ஆபத்தில் சிக்கி விட்டார்கள் என்பதை அறிவித்தது அது. க்ஷணகாலம் மதுரநாயகம் திகைத்தார். அந்த க்ஷணத்திற்குள் சரளா, அவரைத் தாண்டிப் பாய்ந்து, விரைவாக மாடியில் ஏறிக் கொண்டிருந்தாள்.

ஃ ஃ ஃ

மாடிப்படியை நோக்கி, சரளாவைப் பின்பற்றி வந்து கொண்டிருந்த திலகவதிக்கு ஓர் அதிர்ச்சி காத்திருந்தது. தகப்பனை வீட்டை விட்டு வெளியேற்றி விட்டோம் என்ற அவள் நம்பிக்கை ஒரு கணநேரத்தில் சிதறுண்டது. அவளை எதிர்பார்த்து இரண்டு பேர் குறுக்கே நின்றார்கள்.

ஒருவன் அவள் தகப்பன் பஞ்சநதம்! மற்றவன் அவனுடைய சிறைச்சாலைக் கூட்டாளி, முத்தையன் என்பதைப் பார்த்த மாத்திரத்திலேயே அறிந்து கொண்டு விட்டாள். சுறுசுறுவென்று அடர்ந்த மீசை; கொழுத்த உடல்; குச்சி குச்சியாக இருந்த மயிரை ஒருவாறு அடக்கி வாரிவிட்டுக் கொண்டிருந்தான். சிவப்பேறின கண்கள்; சப்பை மூக்கு; அதன் மேற்புறம் நகங்கள். முகவாய்க் கட்டையில் சந்திர வட்டம்போல் ஒரு வடு. தடித்த



உதடுகள். சமயம் நேர்ந்தால் எந்தக் கொலைக்கும் அஞ்ச மாட்டான் என்று தோன்றும்படி இருந்த உருவம். தடித்த துணியில் பச்சைநிறச் சட்டை அணிந்து கொண்டிருந்தான். பானை போல் தொந்தி அதில் துருத்திக் கொண்டிருந்தது.

பஞ்சநதத்தை அவன் விருப்பத்துக்கு மாறாக முத்தையன் இழுத்து வந்திருக்கிறான் என்பதை அவன் பரிதாபமான பார்வை காட்டிக் கொடுத்தது. கைக் கெட்டியது வாய்க்கெட்டவில்லை என்பதுபோல் மகள் கொடுத்து அவன் பெற்றுக்கொள்ளுமுன் எப்படியோ ஆயிரம் ரூபாய் மாயமாக மறைந்துவிட்டது, அவன் நெஞ்சை அறுத்துக் கொண்டிருந்தது. இப்போது முத்தையன் அதை நம்ப முடியாது என்று சொல்கிறான்; 'அப்பனும் மகளுமாகச் சேர்ந்து பேசிக்கொண்டு என்னை ஏமாற்றப் பார்க்கிறீர்களா? நான் விடப் போகிறதில்லை!' என்கிறான். அதோடு மட்டும் இல்லை; பஞ்சநதத்தையே மறுபடி இழுத்துக்கொண்டு வந்துவிட்டான்.

அவர்கள், பங்களாவின் பின்புறமாக ஏறிக் குதித்து உள்ளே வந்து வெகு நேரமாகக் காத்திருக்கிறார்கள். சரளா வந்திருப்பது, பஞ்சநதத்தின் திட்டத்தில் இல்லாத விஷயம். எப்படியேனும் உன் மகளைத் தனியே தருவி. அவளிடம் நான் பேசிக் கொள்கிறேன். ஏதாவது குறுக்கே பேசினாயோ உன் மண்டை போயிடும்!' என்று முத்தையன் முரட்டுத்தனமாக, சொன்னதையே திருப்பித் திருப்பிச் சொல்லிக்கொண்டிருந்தான் பஞ்சநதத்திடம். பஞ்சநதத்திற்குத் தெரியும், ஒருபோதில்லாவிட்டால் ஒருபோது முத்தையன் இதயம் இல்லாமல் நடந்து கொள்ளுவான் என்று!

முத்தையன் பிடிவாதமும் பலித்தது; பஞ்சநதத்தின் பிரார்த்தனையும் ஈடேறியது. அறைக் கதவைத் திறந்து கொண்டு முதலில் சரளா வெளியே வந்தாள்; சந்தடியின்றி கீழே இறங்கிப் போனாள். இரு ஆசாமிகளும் பதுங்கி மௌனமாகக் காத்திருந்தார்கள். சிறிது அவகாசம் கொடுத்த பின்பு திலகவதியை எழுப்புவது என்ற

தீர்மானத்துக்கு வந்திருந்தார்கள். அது சமயம் அவர்கள் எதிர்பாராத படி திலகவதியும் வெளியே வந்து விட்டாள். சரளாவைப் பின்பற்ற அவளை அனுமதித்து விட்டால், அப்புறம் தனிமையில் சந்திப்பதென்பது இயலாத காரியம். மாடிப்படி அருகே வந்ததும், அவள் இறங்கு முன்பு முத்தையனும் பஞ்சநதமும் வழிமறித்து நின்றார்கள்.

"அப்பா!... உன்னை—உன்னை நான் அப்போதே போகச் சொன்னேனே!" என்று கேட்டாள் திலகவதி.

பஞ்சநதம் நாக்குழற, "நான் போய்விட்டேன் இவன்-முத்தையன்—" என்று தொடங்கினான்.

"நீ சும்மா இரு" என்று முத்தையன் அவனை அடக்கி, "இந்தா! உன் வேடிக்கை விளையாட்டுகளையெல்லாம் என்கிட்டே வைத்துக் கொள்ளாதே! ஆமாம்! எனக்கு வேண்டியது பணம். இவனை அனுப்பினேன்; திரும்பி வந்து என்னிடம் ஒரு கதை ஜோடித்துச் சொல்கிறான் கதை!" என்றான்.

"அப்பா சொல்வது உண்மைதான்!" என்று திலகவதி மெல்ல ஆரம்பித்தாள்.

"உஸ்ஸ்... உண்மையாகவே இருக்கட்டும். எனக்கு லட்சியம் இல்லை. பணம் என் கைக்கு வந்து சேரவில்லை... இப்போ சேரணும்..."

"இப்போ என்னிடம் வேறு பணம் இல்லை. என் புருஷர் எங்கோ சென்று விட்டார்; நான் கலங்கி இருக்கிறேன்!"

"அதெல்லாம் நமக்கு அக்கறை இல்லை. இப்போ பணம் வேணும். இவன் தரதாகச் சொன்ன தொகை கைமேல் வந்தாக வேணும்..." "நான் பெண்பிள்ளை; எங்கே போவேன் பணத்துக்கு?" என்றாள் திலகவதி. "எனக்கு என்ன தெரியும்! பணம் வேணும் எனக்கு! இல்லையோ, பஞ்சநதம் வண்டவாளம் ஊரெல்லாம் தெரியும்! அவன் மண்டை ஓட்டை உனக்குப் பார்ஸல் செய்து அனுப்புவேன்!"

"இதென்னங்க இப்படிப் பேசினால்—"



"இதுதான் நம்ம பாஷை... சீக்கிரம்! நேரமாகிறது! நீ மேபோன பெண் பிள்ளை மேலே வந்தாலும் போச்சு; நீ வெளியே விஷயத்தை விட்டாலும் போச்சு; ரெண்டு பேருக்கும் ஆபத்து..." திலகவதி சங்கடத்தில் சிக்கிக் கொண்டு தவித்தாள். ஆயிரம் ரூபாயைத் தொலைத்து விடலாம்; ஆனால் அவனுக்குச் சிறிது காலத்துக்குத்தான் அதனால் நிம்மதி ஏற்படும். அது செலவானவுடன் மறுபடி முத்தையன் வந்துவிடுவான்; அவன் தகப்பன் தலையைக் காட்டி, 'இதை உடைக்கட்டுமா, பணத்தைக் கொடுக்கிறாயா?' என்று கேட்பான்... வேறு வழி?

"எனக்கு நேரமாகிறது!" என்றான் முத்தையன். அவள் 'இல்லை' என்றால், அவனாகவே எடுத்துக் கொள்ளக் கூடியவன்தான்.

"என்னிடம் அவ்வளவு தொகை இல்லையே!" என்றாள்.

"இருக்கிறது, தெரியும்!" என்றான் முத்தையன் அழுத்தமாக. பஞ்சநதம் வழுக்கைத் தலையைத் தடவிக் கொண்டு பேந்தப் பேந்த விழித்தான்.

"நாளைக்கு வாருங்கள்; எப்படியோ பார்த்துத் தந்து விடுகிறேன்!"

"இன்றைக்கு வந்திருக்கிறதற்கு மரியாதையாக நடந்து கொள்!" என்று பிடிவாதமாகச் சொன்னான் முத்தையன்.

'ஹோ'வென்று கதறி அழவேண்டும் என்று இருந்தது திலகவதிக்கு. வீணாகக் காலந் தாழ்த்திக் கொண்டிருப்பதில் பயன் இல்லை என்று கண்ட அவள், "சரி இங்கே இருங்கள். என் புருஷர் அறையில் இருக்கிற பணத்தைக் கொண்டு வருகிறேன்" என்று கூறினாள்.

"கூட இருநூறு ரூபாய் போட்டுக் கொண்டு வா. சீக்கிரம் ஆகட்டும்!" என்று கேலியாகச் சிரித்தான் முத்தையன்.

அவர்கள் இருவரும் முன்போல் பதுங்கியிருக்க, திலகவதி செங்கல்வராய பிள்ளையின் அறைக்குச் சென்றாள். இரண்டே நிமிஷத்தில் அவள் திரும்பி

விடுவாள் என்று முத்தையன் எதிர்பார்த்தான். அவள் திரும்புமுன் சரளா மேலே ஏறி வராமல் இருக்க வேண்டுமே என்று பஞ்சநதம் பயந்தான்.

இருவரையும் ஏமாற்றிக்கொண்டு, 'கிரீச்' என்றதொரு பயங்கரமான ஓலம் அந்த இரவின் நிசப்தத்தைக் கிழித்துக்கொண்டு பங்களாவெங்கும் பரவியது.

அதுதான், டெலிபோன் அறையில் தர்க்கம் செய்துகொண்டு நின்ற சரளாவையும் மதுரநாயகத்தையும் திடுக்கிடச் செய்தது; சரளா மாடிக்கு ஓட்டமாக ஓடிவர, மதுரநாயகம், தோட்டத்துப் பக்கம் தாவிக் குதித்து மறைந்து கொண்டார்.

பஞ்சநதமும் முத்தையனும் மேல் மாடிக்குக் கடுவேகமாகச் சென்று, வந்த வழியே வெளியேறுவதே மேல் என்று எண்ணத் தொடங்கியதும், அந்த ஓலத்தின் பயனாகத்தான்.

அண்ணாமலை தூக்கம் கலைந்து பறந்துகொண்டு வர, தவசுப்பிள்ளை ஒரு கொட்டாவி விட்டபடி "என்ன நடக்கிறது?" என்று எங்கிருந்தோ கேட்டான்.

மூன்று முறை அந்த ஓலம் உயர்ந்த ஸ்தாயியில் ஒலித்துப் பின் ஓய்ந்தது.

சரளா இம்மாதிரி சமயங்களில் மனோதிடத்துடன் நடந்து கொள்ளப் பழக்கப்பட்டவள். எனவே, அவள் சப்தம் வந்த திசையை நோக்கி ஓடினாள். செங்கல்வராய பிள்ளையின் அறைக் கதவு திறந்திருந்தது. திலகவதி அங்கிருந்த இரும்புப் பெட்டியைத் திறந்துகொண்டு கீழே உட்கார்ந்திருந்தாள். பிரமை பிடித்தபடி இருந்தாள் அவள். ஓலமிட்டது அவள்தான்!

அன்று காலை அவள் அதில் கொண்டு வந்து வைத்த மூவாயிரம் ரூபாயில் எடுத்த பணம் ஆயிரம் ரூபாய் போக, மீதி இரண்டாயிரமும் மாயமாக மறைந்திருந்தது! அந்த அதிர்ச்சியே அவளைத் தன்னை மறந்து கூவும்படி செய்துவிட்டது. இனி எது நடந்தாலும் நடக்கட்டும், கூச்சல்



போட்டுவிடுவது என்றதொரு தைரியத்தைத் தாற்காலிகமாக ஏற்படுத்தியிருந்தது.

திலகவதியை மெல்ல ஆசுவாசப்படுத்தி, அண்ணாமலையை அனுப்பிக் குளிர்ந்த ஜலம் கொண்டு வரும்படி சொன்னாள் சரளா. "என்ன வீடு இது! சை!" என்று வந்தது அவளுக்கு.

திலகவதியிடம் ஆதியோடந்தமாகத் தான் மதுரநாயகத்தைக் கண்டு நடத்திய சம்பாஷணை விவரங்களைச் சொல்ல வேண்டுமென்று நினைத்தவள், இப்போது வாயடைத்துப் போனாள். இந்த நிலையில் திலகவதி எந்தச் செய்தியையும் ஏற்றுக்கொள்ளத் தகுதி வாய்ந்தவளாகக் காணப்படவில்லை. இரும்புப் பெட்டியை மூடி, அறையையும் சாத்தித் தாழ்ப்பாளிட்டுக் கொண்டு, மெல்லத் திலகவதியை அவள் படுக்கையில் கொண்டு வந்து கிடத்தினாள். அண்ணாமலையின் உதவி விசேஷமாக இருந்தது. தவசுப்பிள்ளை சீக்கிரமாக டீ தயாரித்து வருவதாகச் சென்றுவிட்டான்.

ஒரு சிறிது நேரம் சரளா திலகவதியைப் பார்த்துக் கொண்டே நின்றாள். பிறகு தன் கட்டிலில் உட்கார்ந்து, தலையணையில் சாய்ந்தாள்.

தலையணை ஏதோ முன்போல் மிருதுவாக இல்லை! மேடு பள்ளமாகவும் காணப்பட்டது. அதைப் பலமாகத் தட்டினாள். பிறகு அதையே உயர்த்திப் பார்த்தாள்.

ஒரு க்ஷணகாலம் அவள் மூச்சே நின்றுவிட்டது போன்ற உணர்ச்சி; கண்கள் காண்பது உண்மைதானா சந்தேகம்.

அவள் தலையணைக்கு அடியில் மூன்று கட்டு நோட்டுகள் இருந்தன. ஒவ்வொன்றும் ஓராயிரம் ரூபாய்க்குக் குறைவில்லை. அவை அங்கே எப்போது, எப்படி வந்தன? செங்கல்வராய பிள்ளையின் இரும்புப் பெட்டியிலிருந்தும், பஞ்சநதத்தின் கையிலிருந்தும் பறிக்கப்பட்ட பணம்தான் அது என்றால் அவள் தலையணைக்கு அடியில் அவை

எப்படி இடம் பெற்றன? அந்த மர்மம் என்ன? யார் எதற்காக வைத்தார்கள்?

அண்ணாமலையும் தவசுப்பிள்ளையும் திரும்பி வரும் அரவம் கேட்டு, சட்டென்று தலையணையைப் போட்டு முன்போல் மூடிவிட்டு, தீவிரமான சிந்தனையில் ஆழ்ந்தாள்.

# ஓட்டமும் பிடியும்

சங்கரன் தப்பி ஓடிவிட்டான். தாம் செய்த பந்தோபஸ்துகளையெல்லாம் துச்சம் என்று காட்டி விட்டான் என்பதை உணர்ந்தபோது சுந்தரம் பிள்ளையின் ஆத்திரம் அளவு கடந்து எழுந்தது. தமது ஆட்களுக்கெல்லாம் எவ்வளவோ கடுமையான ஆக்ஞை பிறப்பித்து, சங்கரனைப் பற்றி எச்சரித்திருந்தார். எனினும்கூட சரியான சந்தர்ப்பத்தில் இப்படி நடந்து விட்டது அவர் மனத்தை மிக வாட்டியது. அவருக்கு மானம் போன உணர்ச்சியே ஏற்பட்டது.

இதற்குக்கூட அந்தத் 'தம்பி'யே காரணமாக இருப்பானோ என்ற சந்தேகம் சிறிது தட்டிற்று. 'தம்பி' மட்டும் இல்லை; 'தம்பி'க்கு உடந்தையாகவும் அவருக்குத் துரோகம் செய்யும் எண்ணமுள்ளவனாகவும் வேறு யாரேனும் இருக்கலாமோ? வரவர, அவருடைய கட்டுக்கோப்பே தளர்ந்து கொண்டிருக்கிறதோ?—முதலில் தோல் பையைக் கைப்பற்றி வர அவர் அனுப்பிய ஆள் ஏமாந்து வந்தான். இரண்டாவதாக கையில் சிக்கிய ஆள் ஒருவனைத் 'தம்பி' தப்பி ஓட விடுகிறான். மூன்றாவதாக, அவருடைய ஆசைக் கிழத்தி என்று பெயர் பெற்ற சுந்தரியே அவனைக் காட்டிக் கொடுத்துச் சந்துருவுக்கு டெலிபோன் செய்கிறாள். இதோடு ஆயிரம் காபந்து செய்திருந்தும், சங்கரன் தப்பி ஓடியிருக்கிறான்; அவன் வெளியே சென்று, தமது பங்களாவைப் பற்றி சந்துருவைக் கிளப்பிவிட்டால் என்ன ஆகிறது? அபாயம் அல்லவா? அவன் போய்ச் சேருமுன் தடைசெய்து



அவனைக் கைப்பற்ற ஏற்பாடு செய்ய வேண்டும்; அவன் வாயை மூட வேண்டும்—துரிதமாக எண்ணங்கள் ஓடின— இதற்கு நாயர்தான் ஏற்ற ஆசாமி. நெஞ்சில் ஈரப்பசை இல்லாமல் நடந்து கொள்வான்? சத்தியைக் கையில் எடுத்து வீசினால், குறி தவறாமல் போய்ப் பாயும். சங்கரன் ஒரு வார்த்தை வெளியிடுமுன், காரியம் தீர்ந்தாக வேண்டும்.

சுந்தரம் பிள்ளை தமது ஆட்களை வாயில் வந்தபடி வைதுகொண்டு வரும்போதுதான் விளக்கைத் தாமோதரம் அணைத்துவிட்டு, தன்னைப் பிடித்துக் கொண்டிருந்த இரு காவலாளிகளை வீழ்த்தித் தள்ளிவிட்டு, மாடியில் பாய்ந்தான். எதிர்ப்பட்ட சுந்தரம் பிள்ளையும் காலை வாரிவிடப் படும் அனுபவம் பெற்றார். தாமோதரம் சண்டமாருதம் போல், அவர் முதுகின் மேலேயே ஒரு காலை வைத்துக் கொண்டு மாடிக்கு விரைந்தான்.

சங்கரன் தப்பி விட்டான் என்பதையும், சுந்தரம் பிள்ளையின் கோபத்துக்கு அதுவேதான் காரணம் என்பதையும் அந்த ஏமாற்றத்தின் பயனாக அவர் மேலும் கொடுமையாக நடந்து கொள்ளுவார் என்பதையும் தாமோதரம் அறிவான். சங்கரன் சாமர்த்தியசாலி, எப்படியேனும் சமாளித்துக் கொள்ளுவான் என்பது தாமோதரத்துக்குத் தெரிந்த விஷயம்தான். அவனுடைய ஒரே கவலை, எங்கேனும் சங்கரன் தன்னைப்பற்றி அறிந்துகொண்டு, விடுதலை செய்விக்கிறேன் என்று தங்கி, மாட்டிக்கொள்ளாமல் இருக்கவேண்டுமே என்பதுதான். அப்படி இல்லையேல் சங்கரனே சந்துருவிடமும் சொல்லிக்கொள்ளுவான்; அவன் தமக்கைக்கும் ஆறுதல் சொல்லுவான்; கூடிய சீக்கிரத்தில் விடுதலைக்கும் ஏற்பாடு செய்வான்.

தாமோதரம் எதிர்பார்க்காததும் ஒன்று உண்டு. அது தான், இந்திரா அந்தக் கட்டடத்தில் இருப்பாள் என்பது. செங்கல்வராய பிள்ளையின் மகள் அவள் என்பதை அவன் அறிவான்; அவளைத் தூக்கிக்கொண்டு வந்து சிறை வைக்கும் அளவுக்குச் சுந்தரம் பிள்ளை துணிச்சல் கொள்

வான் என்று தாமோதரம் எதிர்பார்க்கவில்லை. அவளை விடுதலை செய்விக்க வேண்டியது தன் கடமை என்று உணர்ந்தே, முன் கூறியபடி இந்திராவுடன் வெளியேற முயன்றான்.

இந்திரா தாமோதரத்தை இதற்கு முன்பு கண்டவள் இல்லை. ஆனால், கீழே நடந்த அமளியிலிருந்தும், சுந்தரம் பிள்ளை போட்ட கூச்சலிலிருந்தும் சங்கரன் தப்பிவிட்டான் என்பதை அவள் ஊகித்தாள். தனக்குக் காவல் இருந்த ஸ்திரீயைச் சாமர்த்தியமாக தாமோதரம் அனுப்பியதைக் கண்டு, அவன் தன்னைக் காப்பாற்ற வந்தவனே என்றும் மனத்தைத் திடம் செய்துகொண்டாள். அதற்கும் மேலாக அங்கே அடைபட்டுக் கிடப்பதனால் நல்ல பலன் எதுவும், ஏற்படப் போகிறதில்லை; தப்பித்துக் கொள்ள எந்த வழி தோன்றினும், அதை ஏற்றுக் கொண்டு முயற்சி செய்து பார்த்துவிடுவதே சிறந்தது என்று முடிவு கொண்டாள். அதன் பிரகாரமே, தாமோதரம் விரும்பியபடி அவனைப் பின்பற்றினாள். அந்தப் பங்களாவை விட்டுத் தப்பிவிட்டோம் என்று நினைத்துச் சிறிது சந்தோஷம் கொள்ளும் சமயம்தான், சுந்தரம் பிள்ளை எதிர்ப்பட்டு அவர்களை மடக்கி விட்டார்.

விளக்கு அணைந்ததும் சுந்தரம் பிள்ளை மேலும் அநேக சங்கடங்கள் நேரலாம் என்று எதிர்பார்த்தார். இருட்டில் கீழே தள்ளப்பட்டு, மிதிக்கப்பட்டு, மிதிக்கப்பட்டவுடன் சில நிமிஷங்கள் அவர் யோசனை செய்யும் திறனையே இழந்துவிட்டார். மீண்டும் சுயநிலை அடைந்து எழுந்ததுமே தாமோதரம் என்ன செய்வான் என்பதைச் சரியாக ஊகித்து விட்டார். அதாவது, இந்திராவைத் தப்புவித்துக்கொண்டு அவன் வெளியே ஓடப் பார்ப்பான். அதற்கு இரண்டே வழிகள் உண்டு. ஒன்று மாடியில்பின்புற வழியாக ஏறிக் குதித்து ஓடுவது! அல்லது வாசற்படி வழியாக தப்பித்துக் கொள்வது. இரண்டாவது வழியைத் தாமோதரம் கையாள மாட்டான். ஏனெனில், அங்கே ஆள்



படைகள் அதிகம் காவல் இருப்பார்கள். அவர்களை மீறிச் செல்வது என்பது இயலாத காரியம். எனவே, பின்புற வழியில் போய் நின்றால் நிச்சயம் அவர்களை மடக்கிவிடலாம்.

சுந்தரம் பிள்ளை இதற்கு யார் உதவியையும் நாடவில்லை. நேரே பின்புறக் காம்பவுண்டின் திட்டி வாசல் வழியே நுழைந்து, அவர்கள் இருவரின் வருகைக்காகக் காத்திருந்தார். அவர் காத்திருந்தது வீண் போகவில்லை.

தாமோதரம் தனியே இருந்தால், சுந்தரம் பிள்ளையுடன் ஒரு போர் நடத்தியிருப்பான். இப்போது இந்திராவை அழைத்து வந்திருந்தான். ஆகையால் மறு பேச்சின்றி, தன் தோல்வியை ஒப்புக் கொண்டு, சுந்தரம் பிள்ளையைப் பின்பற்றி பங்களாவின் வாசலை நோக்கி நடந்தான். இத்தனையையும் ஒண்டியிருந்து பார்த்துக் கொண்டிருந்த 'தம்பி', "இங்கே நமக்கு வேலை இல்லை. இது சமயம் சுந்தரம் பிள்ளை இங்கே இருக்கும்போதே சுந்தரியைப் போய்க் காண்பதால் லாபம் உண்டு. குறைந்த பட்சம் ஒரு மணி அவகாசமாவது பெரிய பங்களாவுக்குச் சுந்தரம்பிள்ளை திரும்ப மாட்டார்" என்று யோசித்தான்.

எனவே மறுபடி நடையைக் கட்டி, கணேசன் வருவதற்கு ஐந்து நிமிஷங்களுக்கு முன்னதாகவே பெரிய பங்களாவிற்குள் நாயர் கண்ணில் படாமலே சுந்தரம்பிள்ளையின் அறையினுள் பிரவேசித்துவிட்டான். சுந்தரியுடன் தப்பிச் செல்வது என்பது கைகூடுமானால் கைவசம் கொஞ்சம் பொருள் இருக்கட்டுமே என்று அந்த அறையில் பல பீரோக்களையும் திறந்து, திறந்து மூடிக்கொண்டிருந்தான். அந்தச் சமயத்தில்தான் கணேசன் அங்கே வந்து சேர்ந்தான். ஓர் ஆச்சரியமான சந்தர்ப்ப வசத்தால் 'தம்பி' அவசரமாக ஒளிந்துகொண்ட அதே திரைச்சீலையின் பின் கணேசனும் அடைக்கலம் கொள்ள நேர்ந்தது! அதைத் தொடர்ந்து, அந்த அறைக்குள் சுந்தரம் பிள்ளையும் நுழைந்துவிட்டார்.

இப்படியாக, சுந்தரம் பிள்ளை தாமோதரத்தையும் இந்திராவையும் அங்கே கொண்டுவரச் செய்து, கேள்விகள் போட்டு, விசாரணை செய்வதைக் கேட்கும் வாய்ப்பு

அவனுக்கும் கணேசனுக்கும் கிடைத்தது. 'தம்பி'க்கு முதலில் கணேசன் திரைச் சீலைக்குப் பின் வருவது அச்சத்தையே உண்டாக்கியது. அவன் நண்பனா விரோதியா என்று முதலில் ஊர்ஜிதம் செய்துகொள்ள முடியவில்லை. எங்கேனும் குரல் கொடுத்து, தான் ஒளிந்து கொண்டிருப்பதைக் காட்டிக் கொடுத்து விடுவானோ என்று பயந்தான்! சிறிது நேரம் நிதானமாக யோசித்த பின், அந்தப் பயம் அறவே நீங்கி விட்டது. 'தம்பி'க்குச் சுந்தரம் பிள்ளையின் கண்களில் படக்கூடாது என்று ஆதுரம் எத்தனை உண்டோ, அத்தனையும் கணேசனுக்கும் உண்டு; வேறு எவ்வளவு கருத்து வேற்றுமைகள் இருப்பினும், சந்தடி செய்யாமல் அங்கே ஒளிந்திருப்பதில் இருவருக்கும்ஒற்றுமை இருந்தாக வேண்டும். ஆகவேதான், கணேசனாகக் கண்டு கொண்டு திடுக்கிட்டுப் போகும் முன்பு, தானாகவே 'தம்பி' அறிமுகம் செய்து கொண்டான். ''பயப்படாதே! நானும் உன் நண்பன்தான்!'' என்று ஆறுதல்வார்த்தை கூறினான்.

கணேசன் தன்னை ஒளித்துக் கொண்ட காரணம், சுந்தரம்பிள்ளையின் கண்ணில் படக்கூடாதென்பதுதான். ஆனால், வேறொருவன் கண்ணில் படுவோம் என்பதை அவன் எதிர்பார்க்கவேயில்லை. எனவே, 'தம்பி'யின் கை மேலே பட்டதும் அவன் உடம்பு பயத்தினால் ஒரு முறை குலுங்கியது. ''என்ன புதிய ஆபத்தோ இது'' என்று அஞ்சினான். அந்த இருட்டில் யாரேனும் குத்தி விட்டால் என்ன ஆவது? அவன் கூச்சல் போட விரும்பியிருந்தால் கூட, தொண்டை ஒத்துழைக்கத் தயாராக இல்லை. அதிக நேரம் அவனுக்கும் யோசனை செய்து கொண்டிருக்க அவகாசம் இல்லை. 'தம்பி'யின் உத்தரவாதத்தை ஏற்றுக் கொண்டு, இருந்த இடத்தில் இருந்தபடியே அறையினுள் மேலே நடப்பதைக் கவனிக்கத் தொடங்கினான்.

சுந்தரம் பிள்ளை சௌகரியமாக ஒரு நாற்காலியில் சாய்ந்து கொண்டார். எதிரே தாமோதரத்தை இரண்டு ஆட்கள் பிடித்துக் கொண்டிருந்தார்கள். இந்திரா சற்று



ஒதுங்கினாற் போல் நின்றாள். அவள் முகபாவத்திலிருந்து 'தப்பித்துக் கொள்ளும் நோக்கம் எனக்கு எதுவும் இல்லை; விதி விட்ட வழி சென்று விடுவோம்!' என்றதொரு விரக்தியையே காண முடிந்தது. அதிலும் ஆச்சரியம் இல்லை; அவளுக்கு இரண்டு முறைகள் அங்கிருந்து தப்பித்துக் கொள்ளும் சந்தர்ப்பங்கள் நேர்ந்து விட்டன. இரு சமயங்களிலும் அவள் எதிர்பாராதபடி இருவர் காப்பாற்ற முன் வந்தார்கள். முதலில் சங்கரன்; இளைஞன் அவன்; மிகுந்த துடிதுடிப்புடன், தன் உயிரை லட்சியம் செய்யாமல் வந்தான்; ஆச்சரியமான யோசனைகள் சொன்னான், துணிச்சலுடன் அவைகளை நடத்தினான். அவளுடன் காம்பவுண்டுச் சுவரை ஏறிக் குதிக்கும் தறுவாயில்—கைக்குள் வெற்றி கிட்டிவிட்டது என்று மனப்பால் குடித்த சமயம், தோல்வி எதிரே வந்து நின்றது; அவனும் அவளும் மறுபடி சிறைபட்டார்கள். அவளுக்காக அவன் என்ன தண்டனைகள் அனுபவித்து விட்டானோ?

இரண்டாம் முறையாக தாமோதரம் அவளைக் காப்பாற்ற வந்து சேர்ந்தான். சங்கரனைப் போல் அத்தனை துணிச்சல் இல்லை என்றாலும், அவளுக்கு விடுதலை வாங்கித் தருவது என்பதைக் கருத்தில் கொண்டு விட்டான். அவனுடன் அவள் மாடியிலிருந்தே கீழே குதித்தாள். மறுபடி வெற்றி கிட்டும் சமயம் நெருங்கி விட்டது. அவள் பயந்தபடியே, அப்போதும் ஒரு தடை ஏற்பட்டது. சுந்தரம் பிள்ளையே எதிரே நின்று வழியை மறித்தார். அவள் அதிர்ஷ்டம் அப்படி என்று உள்ளம் சோர்ந்து விட்டாள். மூன்றாம் முறையாக அப்படி ஒரு சந்தர்ப்பம் வந்து சேரும் என்று எதிர்பார்க்கவில்லை, வந்தாலும், கடைசியில் அதில் தோல்வி காத்திராது என்பது என்ன நிச்சயம்? எனவே, மனத்தில் தெம்பில்லாமல் ஒருவிதச் சோர்வுடன் நின்றாள்.

சுந்தரம் பிள்ளை அடிக்கடி தனது முகத்தைத் திருப்பி பிரேம் இல்லாத மூக்குக் கண்ணாடியின் மூலம் அவள்

அழகைப் பருகினார்; முகபாவத்தைக் கவனித்தார். அப்போது சிறிது கனிவு தோன்றும் அவர் விழிகளில், திரும்ப தாமோதரத்தைப் பார்த்தால், எங்கிருந்தோ அவைகளில் ஒரு கொடூரம் வந்து கொட்டிவிடும்.

''என்னய்யா! உன் மனசிலே என்ன நினைவு! புழக்கடைப் பக்கமா இந்தப் பெண்பிள்ளையுடன் ஓடி விடலாம், யாரும் பார்க்க மாட்டார்கள் என்பதுதானே?'' —இந்தக் கேள்வி தாமோதரத்தைப் பார்த்துக் கேட்கப் பட்டது. சுந்தரம் பிள்ளை உதாசீனமாகப் பேசினார்.

தாமோதரம் சிறிதும் பயந்தவனாகக் காட்டிக்கொள்ள வில்லை. ''எனக்கு உம்மைத் தெரியாது; உமது பங்களா வையும் தெரியாது. ஏன், இந்த அம்மாளைப் பற்றியும் தெரியாது. என்னை எதற்காகக் கொண்டு வந்து அடைத் திருக்கிறீர்கள் என்றும் எனக்குத் தெரியாது!...'' என்றான்.

''தெரியாது, தெரியாது, தெரியாது என்று சொல்லித் தப்பிவிடலாம் என்கிற எண்ணமா? ஏன் ஐயா! உமக்கு ஒன்றுமே தெரியாது? 'தோல் பையை எடுத்து வருகிறேன். உம்மிடம் ஒப்பிக்கிறேன்' என்று ஒரு ஆளிடம் வீட்டுச்சாவி வாங்கிக் கொள்ளத் தெரியுமா? அல்லது, இருட்டு வேளை யில் பூட்டியிருக்கிற வீட்டிற்குள் நுழைந்து உமக்குச் சொந்த மில்லாத பண்டத்தைத் திருடி வரத் தெரியுமா......பதில் சொல்லுமேன்! அப்புறம் அதை அந்த ஆள் வந்து கேட்டால், ஆயிரம் பொய்கள் சொல்லத் தெரியுமா? ஏன், தெரியாத விஷயங்களை விட, தெரிந்த விஷயங்கள் அதிகமாக இருக்கின்றனவோ?''

தாமோதரம் உடனே பதில் சொல்லவில்லை. இரண்டு நிமிஷங்களுக்குப் பிறகு, ''இதையெல்லாம் என்னைக் கேட்க நீர் யார்? உமக்குப் பதில் சொல்ல நான் எப்படிக் கடமைப்பட்டிருக்கிறேன்? என்னைப் பலவந்தமாகப் பிடித்து அடைத்துப் போட உமக்கு என்ன உரிமை?'' என்றான்.



''ஹஹ்ஹஹ்ஹா!'' என்று சிரித்தார் சுந்தரம் பிள்ளை. ''இதை யெல்லாம் விட அதிக உரிமை ஒன்று எனக்கு இருக்கிறது. உன்னைப் பாழுங்கிணற்றில் தள்ளி மூடவும் என்னால் முடியும். அதைத்தான் நான் செய்யப் போகிறேன்!'' என்றார்.

''உம்மால் அது முடியாது என்று எனக்குத் தெரியும்! வெளியே எனக்கு வேண்டியவர்களும் இருக்கிறார்கள். என் மைத்துனன் சங்கரன் இருக்கிறான். உம்மைத் தூக்கிலே மாட்டி விட்டு மறு காரியம் பார்ப்பான். நீர் கேட்கிற தோல் பை என்னிடம் இல்லை. அதை நான் ஒரு போதும் உம் கையில் வாங்கியதில்லை; உமக்குத் திருப்பிக் கொடுப்ப தாகப் பேச்சும் இல்லை. எங்கிருந்தோ இன்றைக்குத் திடீர் என்று முளைத்து, என்னைத் தொல்லைப்படுத்தினால், உம்மைச் சும்மா விடமாட்டேன் நான்!...'' என்று தாமோதரம் திமிறினான். இரண்டு ஆட்களும் அவனைக் கட்டி வைத்துக் கொள்ள மிகவும் பிரயாசை எடுத்துக் கொண்டார்கள்.

''ஏன், இன்னும் இரண்டு பேரைத் தருவிக்கட்டுமா?'' என்று ஆட்களைப் பார்த்துக் கேட்டார் சுந்தரம் பிள்ளை.

அதற்கும் தாமோதரமே பதில் சொன்னான்: ''நீர் இருபது பேரைத்தான் தருவியுமேன்! என்னை ஒன்றுமே செய்ய முடியாது. அனாவசியமாக என் விரோதத்தை நீர் சம்பாதித்துக் கொள்கிறீர்! ஆமாம்! என்னை வீண் தொந்தரவுகளுக்கு உள்ளாக்கினீரோ, என் மைத்துனன் சங்கரன் சும்மா விட மாட்டான் என்பது மட்டும் இல்லை, ஸி. ஐ. டி. சந்துரு வந்து விடுவான்; விலங்கை மாட்டி விடுவான். ஆமாம்! இப்படி ஏதேனும் ஒரு தகராறு வரும் என்று நான் எதிர்பார்த்துத்தான், ஆரம்பத்திலேயே சந்துருவிடம் சொல்லி வைத்தேன். இத்தனை நேரம் சந்துருவே புறப்பட்டுக் கொண்டிருப்பான். ஜாக்கிரதை!'' என்றான்.

"சந்துரு" என்ற பெயரைக் கேட்டதும் சுந்தரம் பிள்ளை வெகுண்டார். அவர் முகம் 'ஜிவ்'வென்று சிவந்தது. "என்ன, மிரட்டுகிறாயா! நூறு சந்துருவை நான் சமாளிப்பேன். ஆமாம்! அவன் வர வேண்டும் என்றுதான் நானும் காத்துக் கொண்டிருக்கிறேன். உன்னுடைய மைத்துனன் பெருமை என்னிடம் வேண்டாம். சங்கரன் என்னும் இளைஞன் வாய் திறவாமல் பரமபதம் போய்ச் சேர நான் ஏற்பாடு செய்து விட்டேன். என் கையிலிருந்து தப்பின ஆள் வெளியே சென்று எனக்கு எதிராக வாயைத் திறந்தான் என்பது இது வரையில் கிடையாது!" என்றார். வெறும் புரளிதான் இது என்றாலும், நிஜம்போல் தோன்றும்படி அழுத்தத்துடன் பேசினார்.

தாமோதரத்திடமிருந்து நீண்ட பெருமூச்சுக்கள் எழுந்து கொண்டிருந்தன. அவனுடைய அங்கங்களெல்லாம் படபடத்துக் கொண்டிருந்தன. ஒரு மைல் ஓட்டப் பந்தயத்தை முடித்து விட்டு வந்த ஓர் இளைஞனைப்போல், அவன் உடம்பு ஆடியது.

சுந்தரம் பிள்ளையின் உள்ளம் மகிழ்ச்சியால் பூரித்திருக்க வேண்டும் ஒரு புன்னகை அவர் முகத்தைப் பிரகாசமாக்கியது. பெரிய சாதனை செய்தவர் போல், மெள்ள முகத்தைத் திருப்பி, இந்திராவைப் பார்த்தார். திடுக்கிட்டுப் போனார். அவள் வெளிறின முகத்திலே இருந்த கோபம் அவரை ஆச்சரியத்தில் ஆழ்த்தியது. அதன் மூலம் அவள் வெளிப்படுத்தின வெறுப்பு அவரைத் துணுக்குறச் செய்தது. "சீ! நீயும ஒரு மனித ஜன்மமா!" என்ற அருவருப்புடன் நோக்கினாள்.

சுந்தரம் பிள்ளை சிரித்து மழுப்ப முயன்றார். "ஏன், இந்திரா தேவி! உனக்கென்ன தாபம்! துஷ்டர்களுக்கேற்ற தண்டனையைக் கொடுத்துத்தானே ஆக வேண்டும்! சங்கரன் துஷ்டத்தனம் செய்தான்; நான் சிட்சை செய்தேன். என்னிடம் யார் துஷ்டத்தனம் செய்தாலும் சும்மா விடமாட்டேன்."



"துஷ்டத்தனம்!...நீர் இப்போது செய்வது என்ன? என்னையும் இந்தப் பெண்ணையும் அடைத்து வைக்கிறது துஷ்டத்தனம் இல்லையா?" என்றுகத்தினான் தாமோதரம்.

"அடக்கிப் பேசு! உன் குரலை உயர்த்தினால், நான் பயந்து விடுவேன் என்று எண்ணி விடாதே! ஒரேமுட்டாக உன் குரலை அடக்கி விடும் சக்தி எனக்கு இருக்கிறது! வீணாக என்னைக் கோபமூட்டாதே!" என்றார் விறைப்பாக.

"உம்முடைய கோபத்தையோ சந்தோஷத்தையோ நான் லட்சியம் செய்கிறவனாக இருந்தால், வேறு விதமாக நடந்து கொண்டிருப்பேன்...இந்த மாதிரி பேச்சுக்களைக் கண்டு மிரண்டு போகிறவர்கள் உம்மிடம் தயவை எதிர் பார்ப்பவர்கள் தான்! நான் உம்மிடம் கூலி வாங்கவும் இல்லை; கூலி எதிர்பார்க்கவும் இல்லை...என்னை உடனே அனுப்ப ஏற்பாடு செய்யும்!

"அனுப்பவா! உன்னை அனுப்ப வேண்டியது பாழுங் கிணற்றுக்கு! என் ஆட்களைப்பற்றிப் பேசினாய் அல்லவா? என் ஆட்களாக இருந்தால்கூட, என் இஷ்டத்துக்கு விரோதமாக நடந்து கொண்டால் உனக்குத்துணையாக அவர்களை அனுப்புவேன்; கேள்! 'தம்பி' என்றொரு ஆள் இருக்கிறான் என்னிடம். நேற்றுவரை அவன் யோக்கியன். நேற்றுத்தான் உன் மைத்துனனுடன் சேர்ந்து கொண்டான். சிலபோக்கிரித்தனங்கள் செய்தான். வெகு சீக்கிரத்தில் அவனுக்குத் துணையாகத் 'தம்பி'யை அனுப்பப் போகிறேன். சுகமாகப் போவான்; ஒரு அதிர்ச்சி இல்லாமல் போவான்... ஓ! உனக்குத் 'தம்பி'யைத் தெரிந்திருக்க வேண்டுமே! உன்னைக் கொண்டு வந்தவன்தான். அடாடா! உனக்கே அவன் நல்ல துணை ஆயிற்றே!" என்றார்.

"இந்தச் சவடால் பேச்சுக்களுக்கெல்லாம பயப்படுகிறவன் நான் இல்லை...நான் பாழுங் கிணற்றைப்பற்றியும் பயப்படவில்லை, உன் கதி என்ன ஆகும் என்றுதான் நான் யோசிக்கிறேன்!" என்றான் தாமோதரம்; அவனைப்பிடித்

திருந்த இரு ஆட்கள் பிடியிலும் அவன் துவண்டு போவது போல் காணப்பட்டான். மறு கணம் அவன் உடல் ஒரு விறைப்பு விறைத்தது. கைகளும் முஷ்டியும் இரும்பின் பலத்தைப் பெற்றன. இரு காவலாளிகளையும் உதறிவிட்டு சுந்தரம் பிள்ளையின் மீது பாய்ந்தான்.

அவருடைய இரு தோள்களையும் பற்றிக் கொண்டு முழங்காலை மார்பின்மீது வைத்து அமுக்கி, நாற்காலியையே கவிழ்த்துத் தள்ள முயன்றான். இன்னும் இருபது விநாடிகள் அவகாசம் கொடுத்திருந்தால், தனது லட்சியப் பூர்த்தியைத் தாமோதரம் அடைந்திருப்பான். ஆனால், அதற்குள் காவலாளிகள் விழித்துக் கொண்டு, தாமோதரத்தின்மீது பாய்ந்து, அவனை இழுக்க முயன்றார்கள். ஒருவன் தாமோதரத்தின் தலையில் 'மொத்து, மொத்' தென்று குத்தினான்; மற்றவன் அவனுடைய விலாவிலும் காலிலும் உதைத்தான். தாமோதரனுக்கு நான்கு ஆட்களின் பலம் அப்போது இருந்தது. தன்மீது விழும் அடிகளை அவன் வெகு நேரம் லட்சியம் செய்யவில்லை. சுந்தரம்பிள்ளை வலி தாங்க மாட்டாமல் ஊளையிடும் அளவுக்கு வந்துவிட்டார். அதன் பின்னர்தான் அவர்கள் நால்வரும் எதிர்பாராத ஆச்சரியம் ஒன்று நடந்தது.

ஜன்னலின் திரைச் சீலை ஒரு சுழற்காற்றில் சிக்கியது போல் ஆடியது. அதை அப்பால் தள்ளிக்கொண்டு இரண்டு பேர் உள்ளே குதித்தார்கள். வலப்புறமாகக் கையைப் பிசைந்தவாறு நின்று கொண்டிருந்த இந்திரா திடுக்கிட்டாள். அவர்கள் இருவரில் ஒருவன் கணேசன்—அவள் சகோதரன். தன்னை மீட்க கணேசன் வந்து விட்டான் என்று எண்ணின சமயம், ஏமாற்றம்போல், அவனும் அந்தக் கை கலப்பில் கலந்து கொண்டான். யார் எந்தக் கட்சி என்று சொல்ல முடியாதபடி ஒரே களேபரமான நிலைமை ஏற்பட்டு விட்டது.

மற்ற ஆள், முகத்தில் கைக்குட்டையைக் கட்டிக் கொண்டிருந்தான். அவன் நேரே இந்திராவின் பக்கம்



வந்தான். ''பயப்படாதே! என்னுடன் வா! பேசாமல் வா! சீக்கிரம் வா!'' என்றான். அவள் பதிலுக்குக் காத்திராமல் அந்த அறையிலிருந்து சரசரவென்று இழுத்துக்கொண்டே ஓடினான். அந்த வீட்டில் நன்கு பழகினவன்போல் சென்றான். ''இவனை நம்புவதா, விட்டுவிடுவதா?'' என்று அவள் முடிவு செய்யுமுன் ''நாயர்! நாயர்!'' என்று சுந்தரம் பிள்ளையின் குரல் ஆத்திரமாக எழுந்தது.

சட்டென்று 'தம்பி' இந்திராவை ஒரு மூலையில் இழுத்து, கதவை நன்றாகத் திறந்து தானும் மறைந்து கொண்டான். அப்படிச் செய்த இரண்டு விநாடிகளுக்குள் நாயர் பூனைபோல் மாடி ஏறி வந்து விட்டான்! அப்படியும் இப்படியும் பார்த்தான்.

''நாயர்! நாயர்! ஓடி வா!'' என்ற குரல் மறுபடி கேட்டது. சுந்தரம் பிள்ளை ஏதோ ஆபத்தில் இருக்க வேண்டும்.

நாயர் சப்தம் கேட்ட திக்கை நோக்கி விரைந்தான். அவன் நின்ற இடத்தில் இப்போது சுந்தரி நின்றாள். அவள் எப்படி அங்கே அந்தச் சமயத்தில் வந்தாள் என்பதைத் 'தம்பி'யால் ஊகிக்கமுடியவில்லை. ஆனால், அவனுக்கு ஓர் எண்ணம் தோன்றியது. இந்திராவைத் தன்னுடன் வைத்து கொள்வதற்குப் பதில், சுந்தரியிடம் ஒப்புவித்து விடுவது நலம். பெண்ணுக்குப் பெண் உதவி செய்து கொள்வாள்; தவிர, இந்திரா அங்கிருந்து தப்பித்துக் கொள்வதில் சுந்தரி அதிக அக்கறை காட்ட முடியும். எனவே, தன் மறைவிடத்திலிருந்து வெளிப்பட்டு ''சுந்தரி!'' என்றான்.

''ஹோ! நீயா?'' என்றாள் சுந்தரி.

''அதிகம் பேச நேரம் இல்லை. என்னைத் தீர்த்துக் கட்டச் சுந்தரம் பிள்ளை 'பிளான்' போட்டு விட்டார். நான் அகப்பட்டுக் கொண்டால் தொலைந்தேன்...அதோ அங்கே ஒரு போரே நடந்து கொண்டிருக்கிறது. அது முடிந்தால், உடனே நான் 'பலி' ஆகி விடுவேன். இதோ இந்திரா இருக்கிறாள். இவளைஎப்படியாவது வெளியேற்ற

வேண்டியது உன் பொறுப்பு, நீயும் கூடவே போய் விடு. இனி நமக்கு இங்கே நல்லது கிடைக்காது; பிராணாபாயம் தான்!... இரண்டு பேரும் ஓடுங்கள்... அதோ வழி!... நிற்காதீர்கள்!'' என்றான்.

இந்திரா நடுங்கிக் கொண்டிருந்தாள். 'தம்பி'யைச் சந்திக்கலாம் என்று சுந்தரி எண்ணியவள் இல்லை; தனது அறையிலிருந்து வெளிப்பட முடியும் என்று கனவு கூடக் கண்டவள் இல்லை. நாயர் வந்து அவளைத் தொந்தரவு செய்தான்; கேவலமாகப் பேசி, அவள் ரோஷத்தைக் கிளப்பினான். அப்போது அவனை அழைத்த 'எஜமான்' குரல் கேட்டது. போகும் அவசரத்தில் கதவைச் சரியாகப் பூட்டாமல் ஓடி வந்து விட்டான். அவனைப் பின் தொடர்ந்து வந்து சுந்தரம் பிள்ளையிடம் மற்றும் ஒரு முறை மன்னிப்பு கேட்கவே விரைந்துவந்துவிட்டாள். இப்போது 'தம்பி'யின் மூலம் கேட்ட விவரங்கள் அவளுக்கு அந்த வழியில் கதி மோட்சம் இல்லை என்பதையே காட்டின. 'தம்பி' சொன்ன படி செய்தால், ஏதோ தப்ப ஒரு மார்க்கமாவது உண்டு.

சுந்தரம் பிள்ளை மிகவும் பொல்லாதவர்; வெறுக்க ஆரம்பித்தால், ஆணிவேரை அறுக்காமல் விட மாட்டார்... ஓட்டம், ஓட்டம், ஓட்டம் ஒன்றே இனி வழி. தவிர இந்திரா அவளுக்குப் போட்டியாக வந்தவள்—அல்லது, கொண்டு வரப்பட்டவள். 'நாமே ஓடும்போது, அவள் எக்கேடு கெட்டால் என்ன?' என்ற எண்ணம் ஒரு கணம் தோன்றியது. ஆனால் மறுகணமே அதைக் கைவிட்டாள். 'தப்பி ஓடும் போது ஒருவருக்கு இருவராக இருப்பது நல்லதல்லவா? இருட்டு வேளையில் ஒரு பெண்ணுக்கு மற்றப் பெண் துணை ஆவாளே! தவிர, இந்திரா அவளுக்கு என்ன கெடுதல் செய்துவிட்டாள்? துஷ்டத்தனம் செய்ததெல்லாம் சுந்தரம் பிள்ளைதானே? இன்று அவரைச் சுந்தரி எவ்வளவு வெறுக்கிறாளோ அதற்குச் சிறிதும் குறையாமல் இந்திராவும் வெறுத்தாள். இருவரும் அங்கிருந்து தப்பித்துக்



32401
4

கொள்வதில் நாட்டம் கொண்டிருந்தான். ... யாக ஓடக்கூடாது?

''நிற்க நேரம் இல்லை... ஓடுங்கள்! நாயர் திரும்பி விட்டான். உங்களுக்கும் ஆபத்து! எனக்கும் ஆபத்து! ஜல்தி!'' என்று அவசரப்படுத்தினான்.

சுந்தரியும் இந்திராவும் சேர்ந்து ஓடுகிற வரையில், பார்த்துக் கொண்டிருந்து விட்டு, 'தம்பி' அப்பால் சென்றான்.

இந்திராவுக்கு அந்த வழி தெரியும். ஏற்கெனவே சங்கரனுடன் இறங்கின அதே மாடிப் படிதான். வழியெல்லாம் மங்கலான வெளிச்சம் இருந்தது. நல்ல காலமாக யாரும் எதிர்ப்படவில்லை. சுந்தரியின் கையை அவள் பற்றியபோது 'படபட'வென்று அது துடித்ததைக் கவனித்தாள். பயமா; எடுத்த காரியம் பலிதமாக வேண்டுமே என்ற கவலையா?

சுந்தரி பேசாமல் முன்னே சென்றாள். இருவரும் ஒருவர் பின் ஒருவராக மாடிப் படியில் இறங்கினார்கள், இரவில் இந்த வேளையில் வீட்டின் பின்புறத்தில் யாரும் இருக்க மாட்டார்கள். தோட்டத்துக்குள் சென்றுவிட்டால் அப்புறம் கவலை இல்லை.

பாதிப் படிக்கட்டு இறங்கி விட்டார்கள்; படிக்கட்டின் திருப்பம், 'பக்'கென்றது சுந்தரிக்கு. ஒரு அதிர்ச்சியுடன் நின்றாள்.

படிக்கட்டுகளின் அடியில் நாயர் உருவம் தெரிந்தது! அவர்களை எதிர்பார்த்துக் காத்து நிற்பதுபோல் அவன் காணப்பட்டான்.

இதுவரை அவன் அவர்களைப் பார்த்திராவிட்டாலும் கூட, இனி திரும்பினால், நிச்சயம் தெரிந்துகொண்டு விடுவான். மறுபடி மேலே செல்வதில் லாபம் இல்லை; ஆபத்துதான். அங்கே நிச்சயம் சுந்தரம் பிள்ளை காத்திருப்பார்!

இந்திராவின் நெஞ்சம் அடித்துக்கொண்டது. அவள் தப்பித்துக்கொள்ள முயல்வது மூன்றாம் முறை; மூன்றாம்

முறையும் அந்த வீட்டில் அவளைத் தடை செய்து ஒருவன் வந்து குறுக்கே நிற்கிறான்! நாயரை அவள் பார்த்தபோது, "ஐயோ! இப்படியும் ஒரு மனித உரு உண்டா? உலகத்தி லுள்ள பாப காரியங்கள் எல்லாம் உருண்டு திரண்டு வந்த மாதிரி இருக்கிறானே!" என்று நுணுக்குற்றாள். சுந்தரியின் தயக்கம் அவளுக்குத் தெரிந்தது.

ஒருவேளை 'தம்பி'யின் பேச்சைக் கேட்டது பிசகோ! நேர்ந்தது நேரட்டும் என்று தாமோதரத்துடன் தங்கியிருந் திருக்கலாமோ? அந்தத் 'தம்பி' இப்படி ஒரு இக்கட்டில் மாட்டி விட்டுவிட்டு நகர்ந்துகொண்டு விட்டானே!

இந்திரா எண்ணினதுதான் தாமதம், நாயர் தலைக் குப்புற மாடிப்படியில் விழுந்தான். அவன் எப்படி விழுந் தான் என்று யோசிக்குமுன், அவன் முகத்தை ஒரு சவுக்கத் தால் பிணைத்துக் கொண்டிருந்தான் 'தம்பி' நாயர் தன்னால் ஆன மட்டும் நெளிந்து, வளைந்து, திமிறித் தப்பித்துக்கொள்ள அரும்பாடு பட்டான். 'தம்பி'யின் முழங்கால் அவன் முதுகைக் கனமாக அழுத்திக் கொண்டி ருந்தது. ஒரு கை மென்னியை நெரித்தது.

ஒரு வழியாக நாயர் ஆட்டப்பாட்டங்கள் அடங்கிய வுடன், 'தம்பி' தலையை நிமிர்த்தி, சுந்தரியையும் இந்திரா வையும் பார்த்து, "போங்கள்!" என்று அவசரமாக ஜாடை செய்தான்.

இந்தச் சமிக்ஞையை உடனே ஏற்றுக்கொண்டு இருவரும் ஓட்ட ஓட்டமாகப் பின்புறம் சென்று, சுவரை அணுகினார்கள். அதை எப்படித் தாண்டுவது என்ற கவலைக்கு இடம் இல்லாமல் கணேசன் சுவரின்மேல் நின்று கொண்டிருந்தான்! இருவருக்கும் கைலாகு கொடுத்து வெளியே கொண்டு சேர்த்தான்.

இடம் நன்கு பழகினவன்போல், குறுக்குப் பாதையில் அழைத்துச் சென்று ரஸ்தாவை அடைந்தான் கணேசன். "மறுபடி யாரேனும் குறுக்கிடுவார்களோ!" என்று இந்திரா வின் உள்ளம் நிமிஷத்துக்கு நிமிஷம் பயந்து கொண்டிருந் தது. அப்படி ஒன்றும் நேரவில்லை.



பெரிய ரஸ்தாவில் ஓடிய ஒரு லாரியை நிறுத்தினான் கணேசன். ஏதோ பேசினான்; பிறகு "கொஞ்சம் தூரம் தான்... அப்புறம் 'டாக்ஸி' ஏற்பாடு செய்கிறேன்!" என் றான் ஸ்திரீகளிடம்.

லாரி பிரயாணம் முக்கால் மணி நடந்தது. அதன்பின் 'டாக்ஸி' அமர்த்தினான்.

"கணேஷ் அண்ணா! நம் பங்களாவிற்குத்தானே போகிறோம்!" என்று கேட்டாள் இந்திரா. அப்பாடா என்ற ஒரு பெருமூச்சு அவளுக்கு வந்தது.

"நம் பங்களாவா? அது எங்கே இருக்கிறது?" என்று கேட்டான் அவன், குரலில் கேலியும் பரிகாசமுமாக.

"என்ன, கணேஷ் அண்ணா, வேடிக்கை இது?"

"இப்போது வேடிக்கை செய்கிறது நான் இல்லை! நீ தான்! நான் கணேஷ் அண்ணா இல்லை!" என்றான் அவன் வெகு நிதானமாக.

இந்திரா கவனித்துப் பார்த்தாள். ஏனோ அவளையும் அறியாத பயம் ஒன்று பற்றிக் கொண்டது.

'டாக்ஸி' நாற்பது மைல் வேகத்தில் ஓடிக்கொண் டிருந்தது.

# சந்துரு அசைந்து கொடுக்கிறான்

'தம்பி' விடை பெற்றுக் கொள்ளக்கூடத் தாமதிக் காமல் வேகமாக வெளியேறிச் சென்றதும், தூங்கப் போவ தாகச் சொல்லிக்கொண்டு திரும்பிப் படுத்துக் கொண்ட சந்துரு, சடார் என்று எழுந்து உட்கார்ந்து கொண்டான். அவனுடைய முகத்தில் ஒரு மந்தஹாசம் தவழ்ந்து கொண்டிருந்தது.

"சம்பா! சம்பா! ஒரு டம்ளரில் குடிப்பதற்கு 'ஜில்' என்று தண்ணீர் எடுத்துக்கொண்டு ஓடி வருகிறாயா?" என்று அழைத்தான்.

''இதோ வருகிறேன், மாமா!'' என்று பதில் கொடுத்து விட்டு ஐந்து நிமிஷங்களில் மாடிக்கு வந்தாள் சம்பா.

அவள் முகத்தைச் சந்துரு வைத்த கண் வாங்காமல் பார்த்தான். ''ஆமாம், குழந்தை! நீ இன்னமும் தூங்காமல் இருக்கிறாயே! உடம்புக்கு ஆகுமா?'' என்று கேட்டான்.

''ஆமாம்! நீங்கள் மட்டும் இந்த இடத்தை விட்டு அகலாமலே இத்தனை யோசனை செய்கிறீர்களே, அது மட்டும் உங்கள் உடம்புக்கு ஆகுமா?'' என்று திருப்பிக் கேட்டாள் சம்பா.

''நீ கெட்டிக்காரி, சம்பா! நீ மட்டும் ஆண் பிள்ளையாகப் பிறந்திருந்தாயோ, துப்பறியும் இலாகாவில்கூட உன்னை யாரும் மிஞ்ச முடியாது...நான் இப்போது எதற்கு உன்னைக் கூப்பிட்டேன் என்றால், இனிமேல் இன்றைக்கு நீங்கள் யாரும் விழித்துக் கொண்டிருந்து, வருகிற பேருக்குக் கதவைத் திறக்க வேண்டாம். நானாக வந்து திறந்து கொள்கிறேன் என்று சொல்லத்தான்...''

''ஏன் மாமா?''

''உங்களால் முடியாது. நீயும் உன் அக்காள் பத்மாவும் மருதாணி இட்டுக் கொள்ளப் போகிறீர்கள். அப்புறம் தாழ்ப்பாளைத் திறக்கிறதும், கதவை மூடுகிறதும் முடியாது...''

''உங்களுக்கு எப்படித் தெரியுமாம் அது?''

''இதோ உன் தலையிலே ஒரு மருதாணிக் கொழுந்து மேய்ந்துகொண்டிருக்கிறது. அப்புறம் உன் அத்தங்காளுக்கு நாளன்றைக்கு கல்யாணம் என்று பத்திரிகை வேறு வந்திருக்கிறது. அப்புறம் நான் சொல்ல வேண்டுமா?''

''உங்களுக்குக் கொஞ்சம் மருதாணி கொண்டு வரட்டுமா?'' என்று குறும்பாகக் கேட்டாள் சம்பா. ''எங்கள் சித்தியா கட்டை விரலுக்கு மட்டும் இட்டுக் கொள்வார். யார் வந்து கேலி செய்தாலும் அவருக்கு லட்சியம் இல்லை.''



''துப்பறிகிறவர்கள் மருதாணி இட்டுக்கொள்ளத் தேவை இல்லை, சம்பா! எங்களுக்கு விரோதிகள் மிக அதிகம். சிறிது அஜாக்கிரதையாக இருந்தால் எந்தச் சமயமும் அவர்கள் கத்தியால் குத்தி, துப்பாக்கியால் சுட்டு, உடம்பில் பெரிய மருதாணிக் கறை செய்து விடுவார்கள். ரொம்ப ஆபத்து எங்கள் தொழில்!''

''ஓ!'' என்று வாயைத் திறந்தாள் சம்பா. 'இன்றைக்கு இன்னம் யாரேனும் துஷ்டர்கள் உங்களைப் பார்க்க வருவார்களா, மாமா?'' என்று கேட்டாள்.

''இரண்டு பேரை எதிர்பார்க்கிறேன்; யாரேனும் ஒருத்தராவது கட்டாயம் வருவார்...ஆனால், அவர்களில் துஷ்டர் யாரும் இல்லை; எனக்கு உதவி செய்கிறவர்கள்தான். நீ பயப்படாதே! துஷ்டர்கள் எல்லாரும் வந்துவிட்டுப் போய் விட்டார்கள். காலையிலே ஒரு நாயர் வந்திருந்தான். உன்னைக்கூடக் காபி கொண்டுவரச் சொல்லி, அப்புறம் வேண்டாம் என்றேனே! அவன் கத்தி விளையாட்டில் கெட்டிக்காரன்; கத்தியை எறிந்தால் குறி தவறவே மாட்டான்...''

''ஐயோ! நீங்கள் ஏன் மாமா, அவனுடன் தனியாக இருந்தீர்கள்!''

''கத்தி வருவதற்குள் நான் நகர்ந்து கொள்வதில் கெட்டிக்காரன். அவன் கத்தியை எடுக்கிறபோது, எங்கே அடிக்கப் போகிறான் என்று எனக்குத் தெரியும்; நான் ஒதுங்கிக்கொண்டு விடுவேன்...''

''ஆபத்து இல்லையா, மாமா?''

''துப்பறிகிற வேலையை எடுத்துக் கொண்டாலே ஆபத்து வந்து விடுகிறது, சம்பா! அப்புறம் கணேஷ் என்று ஒருவர் என்னைத் தேடிக்கொண்டு வந்தாரே, அவரை நான் நல்லவரா கெட்டவரா என்று இன்னும் நிச்சயமாகச் சொல்கிறதற்கில்லை. ஒரு சமயம் பார்த்தால் ரொம்ப நல்லவராக இருக்கிறார். ஒரு சமயம் வேறு மாதிரி இருக்கிறார்.''

''இரண்டு தடவை வந்தாரே, அவர்தானே?''

''அவரேதான்! பேசிப் பேசி என்னைக் குழப்பினார்; அவரை நான் ஏமாற்றப் பார்த்தேன். அவருக்கு அப்புறம் என்னை இரண்டு ஆசாமிகள் பார்க்க வந்தார்கள். ஒருவன் பணத்தை வைத்து, 'இதை எடுத்துக்கொள்ளப் போகிறாயா, இல்லையா?' என்று என்னை மிரட்டினான்.''

''நானாக இருந்தால் எடுத்துக்கொண்டு விடுவேன் மாமா!''

''நானாக இருக்கிறபடியால் எடுத்துக்கொள்ளவில்லை. ஏனென்றால், அவன் கூட வந்தவன், நான் எடுத்துக்கொண்டிருந்தால் என்னை அப்புறம் குத்தித் தள்ளியிருப்பான். அவன் எஜமானன் என்னைக் கேவலமாக எண்ணி இருப்பான்.''

''புதிர் மாதிரி பேசுகிறதற்குச் சந்துரு மாமாகிட்டப் போகணும் என்பாள் எங்கள் பத்மா!''

சந்துரு சிரித்துக்கொண்டான். ''கடைசி கடைசியாக ஒரு பெரிய தடியன் வந்தானே, அவன் பெயர் என்ன தெரியுமா?'' என்று கேட்டான்.

''குண்டோதரனா? கடோத்கஜனா?''

''இல்லை! 'தம்பி' என்று பெயர்; அப்படியானால் அண்ணன் எப்படி இருப்பான் என்று யோசித்துப் பார்த்துக்கொள். அந்த அண்ணன்கூட எனக்குச் சண்டை. அவனை நான் துப்பறிகிறேன்; என்னை அவன் மிதித்துவிடப் பார்க்கிறான்.''

''மாமா! இன்று பூராவும் சஞ்சீவி உங்களைப் பார்க்க வரவே இல்லையே! இவர் உங்களுக்கு வேண்டியவர் இல்லையா?''

''அதுதான் நானும் கவலைப்பட்டுக் கொண்டிருக்கிறேன், சம்பா! அவன் வந்துவிட்டுப் போனால், நான் இத்தனை நேரம் நிம்மதியாகத் தூங்கிப் போயிருப்பேனே! அப்புறம் நாராயணன் என்று ஒரு ஆள் நமக்கு வேண்டியவர், இந்திரா என்கிறவ ,டன் வரவில்லை? நீகூட அவரை



டாக்டரா, வக்கீலா என்று கேட்டாயே! அவரிடமிருந்தும் தகவல் இல்லை. எங்கேனும் ஆஸ்பத்திரியில் இருக்கிறாரா, சிறையில் அகப்பட்டுக் கொண்டாரா, இல்லை... சஞ்சீவி, நாராயணன் யாரேனும் ஒருவர் வருவார்...நீ கதவைத் திறக்க வேண்டாம் என்று சொல்லத்தான் கூப்பிட்டேன். இரண்டு கையிலும் நிறைய மருதாணி இட்டுக்கொள், காலையில் பட்டுமாதிரி என்னிடம் காட்ட வேண்டும்...உன் அக்காள் பத்மாவைத் தோற்கடிக்க வேண்டும்!'' என்றான்.

குழந்தைகளிடம் விளையாட்டாகப் பேசுவதில் சந்துரு காட்டுகிற உற்சாகம் அளவு மீறியிருக்கும். உலகத்தில் கள்ளங்கபடு இல்லாத ஆத்மாக்கள் என்ற அளவிலே அவர்களிடம் அவன் அன்பும் உற்சாகமும் மிகைப்பட்டிருக்கும்!

சம்பாவுடன் பேசும்போதே, வந்தவர்களைச் சந்துரு ஒரு முறை வரிசைக் கிரமமாக ஞாபகப் படுத்திக் கொண்டான்.

சஞ்சீவி வெகு நேரம் பொறுத்து வந்தான். மிகவும் சோர்வுடன் வந்தவன், சந்துருஎன்ன சொல்வானோ என்று பயத்துடனே கதவைஇடித்தான். அந்த இடியின் பலவீனத்திலேயே சந்துருவுக்கு நடந்ததைப் பெரும்பாலும் ஊகிக்க முடிந்து விட்டது. அவனை உற்சாகப்படுத்தி, அவனுடைய தோல்வியே, கேஸுக்கு அனுகூலமான பலன்களைக் கொடுக்கப் போகிறது என்றபடி பேச முடிவு செய்து கொண்டான்.

''வா, சஞ்சீவி! இப்படி உட்கார்!'' என்று குழைவாகவே சந்துரு அவனை நாற்காலியில் அமரச் சொல்லி அழைத்தான்.

சஞ்சீவி சிறிது வியப்புடன் வந்து உட்கார்ந்து கொண்டான்; மனத்தில் சமாதானம் இல்லை.

''பீச்சில் காற்று வாங்கியிருக்கிறாய்! உன்னைக் காற்றாடச் செய்தவன் கணேசன். இல்லாவிட்டால், உனக்கும் எனக்கும் கடற்கரையில் போய் உட்கார்ந்து பொழுது போக்க அவகாசம் எங்கே கிடைக்கப்போகிறது?' என்றான் சந்துரு.

''நீங்கள் கூட வந்தீர்களோ? அல்லது, யாரேனும் உங்களுக்கு வந்து விஷயத்தைச்சொன்னார்களோ?'' என்று கேட்டான் சஞ்சீவி திகைத்துப்போய்.

''இரண்டும் இல்லை... கணேசன் கூட என்னிடம் டெலிபோனில் பேசவில்லை...நீ கிராப்புத் தலையில் கொண்டு வந்திருக்கும் மணல்தான் சொல்லுகிறது. இருட்டுவதற்குமுன் வந்திருந்தால், யாரேனும் மணலைத் தட்டி விட்டிருப்பார்கள்; அல்லது, நீயாவது கண்ணாடியில் பார்த்துக்கொண்டிருப்பாய் இல்லையா?... அது போகட்டும் கடைசியில் கணேசன் உன்னை ஏமாற்றி விட்டான்... அவ்வளவுதானே சமாசாரம்?''

''அதை எப்படித் தெரிந்து கொண்டீர்கள்?''

''ஒன்றுமே நான் இன்னும் தெரிந்து கொள்ளவில்லை. கணேசனிடம் நீ வெற்றி கண்டிருந்தால், எனக்கு டெலிபோன்செய்திருப்பாய்;பூரா விவரங்களையும் நீ வருமுன்பே நான் தெரிந்து கொண்டிருப்பேன். அது போகட்டும்;எங்கே கதை சொல்கிறமாதிரி எல்லாம் வெளியில் எடுத்து விடு; முடியுமானால் நான் என் சந்தேகங்களைக் கேட்டுத் தெரிந்துகொள்கிறேன்...'' என்றான.

சஞ்சீவி விவரமாக நடந்தவற்றையெல்லாம் சொல்லிக் கொண்டே வந்தான். சந்துரு தன் இடத்தைவிட்டு எழுந்து பின் கையைக் கட்டிக்கொண்டு அப்படியும் இப்படியுமாக உலாவினான். அவன் மௌனத்தையும் முகபாவத்தையும் பார்க்கும்போது, உண்மையில் அவன் கேட்டுக்கொண்டு வருகிறானோ என்று சந்தேகப்படும்படிதான் இருந்தது. நடுநடுவில் இரண்டொருகேள்விகள் கேட்டதிலிருந்துதான், மிகமிகக் கவனமாக இருக்கிறான் என்று ஊகிப்பது சாத்தியமாயிற்று. சந்துருவின் இம்மாதிரி குணாதிசயங்களுக்குச் சஞ்சீவி அனுபவப்பட்டவன். ஆகையால், வெகு நன்றாகக் கூறி வந்தான். கூறி முடித்தபின் சந்துரு சில கேள்விகள் கேட்டுக் கொண்டான்.

''ஆமாம்...உன் காது கேட்கும்படி குமாஸ்தா, 'இது செங்கல்வராய பிள்ளையின் ''செக்'' அல்லவா!' என்று



கேட்டான் என்கிறாயே! அவன் சாதாரணமாகவே அப்படிக் கேட்டானா? உன் காதில் அது விழ வேண்டும் என்று கேட்டானா? யோசித்துச் சொல்!'' என்றான் சந்துரு.

''முதலில் அவன் சாதாரணமாகக் கேட்டதாகத்தான் நான் எண்ணியிருந்தேன். கடைசியில் கணேசன் என்னை ஆதிமுதல் கவனித்துச் சந்தேகித்ததாகச் சொன்னதைக் கேட்ட பிறகு—''

''பிறகு என்ன? கேட்டவன் பாங்கிக் குமாஸ்தா தானே? அவனுக்கு உன்மீது என்ன சநதேகம்?''

''ஸார்! கணேசன் பணம் வாங்கியது முதல், கடைசியில் அந்தக் கட்டை என் கையில் கொடுத்த வரை நான் அதிலிருந்து வைத்த கண் எடுக்கவில்லை. கணேசன் ஜாலவித்தைக்காரனாக இருந்தால்கூட என்னை ஏமாற்றியிருக்க முடியாது! அந்தக் கட்டு வெறும் காகிதக் கட்டு என்று ஆகிவிட்ட பிறகு, ஆரம்பத்திலேயே அவர்களுக்குள் ஏதோ தில்லுமுல்லு இருக்கிறதென்று நான் ஊகிக்கிறேன்!''

''சபாஷ்! சஞ்சீவி! இத்தனை ஊகங்கள் செய்து கொண்டு, ஏதோ தோல்வி அடைந்துவிட்ட மாதிரி தலையைத் தொங்கப் போட்டுக்கொண்டு இருக்கிறாயே! என்ன பயித்தியக்காரத்தனம் இது! அப்புறம்?''

''அந்தப் பாங்கிக் குமாஸ்தா என்னைப் பார்த்ததை நான் கவனிக்கவில்லை. ஆனால், கணேசனுக்கும் அவனுக்கும் ஏதோ ரகசியம் இருக்கிறது. பணம் என்று சொல்லி, வெற்றுக் காகிதத்தை அவன் கொடுத்திருக்கிறான். (கணேசன் விருப்பமே அப்படி இருக்கலாம்) அதைத் தெரிந்து கொண்டே கணேசனும் வாங்கிக் கொண்டு வந்திருக்கிறான். அந்தக் கட்டை என்னிடம் கடைசியில் சேர்த்து விட வேண்டும், என்னைத் திணற அடிக்க வேண்டும் என்ற எண்ணம் ஆதியிலேயே கணேசனுக்கு இருந்திருக்கிறது...''

''சபாஷ்! பலே! சபாஷ்!''

சஞ்சீவி உற்சாகமாக உட்கார்ந்து கொண்டான். ''எனக்குச் செங்கல்வராய பிள்ளையைத் தெரிந்திருந்தோ தெரியாமலிருந்தோ ஆக வேண்டியது ஒன்றும் இல்லை. ஆனால், உங்களுக்கு அவரைத் தெரிந்திருக்க வேண்டும். 'மாற்றப்பட்டது செங்கல்வராய பிள்ளையின் செக்' என்பதை நான் உங்களிடம் வந்து சொல்லுவேன், அல்லது சொல்லவேண்டும் என்ற எண்ணத்தின் பேரில், கணேசனும் குமாஸ்தாவும் ஒரு நாடகம் ஆடியிருக்கிறார்கள்!''

''பலேபா!'' என்றான் சந்துரு. தொடர்ந்து, ''உனக்கு தெரியாத ஒரு விஷயத்தை நான் இப்போது சொல்கிறேன். இந்தச் செங்கல்வராய பிள்ளை ஒரு பணக்காரர்; திடீரென்று காணாமல் போயிருக்கிறார். அவர் சென்ற இடம் யாருக்கும் தெரியாது. உயிருடன் இருக்கிறாரா என்பதும் தெரியாது. அவர் கையொப்பமிட்ட ஒரு 'செக்'கை, அவருடைய சகோதரரின் மகன் பாங்கிற்குக் கொண்டு வருகிறான்; மாற்றிக்கொண்டு போகிறான்; இதைக் கேட்டு நான் அதிர்ச்சி அடைய வேண்டும் என்று அவன் எதிர்பார்த்திருக்கலாம்... இருக்கட்டும். அந்தக் குமாஸ்தா எப்படி இருப்பான், சொல்?'' என்றான்.

சஞ்சீவி மளமளவென்று ஒரு சொற் சித்திரமே தீட்டிக் காட்டினான். ''ஐந்தரை அடி உயரம். நாற்பது வயதுக்கு மேல் இல்லை; தலையில் நரை கிடையாது; கிராப்; இரு நெற்றிப் பொட்டிலும் சிறிதும் வழுக்கை கண்டிருக்கும். கனமான பிரேம் போட்ட மூக்குக் கண்ணாடி.''

சந்துரு டெலிபோனை எடுத்து அந்த டிவிஷன் போலீஸ் ஸ்டேஷனை அழைத்தான். ''யார் அங்கே, ராமன்—டி.வி. ராமன்—இருக்கிறாரா? கொஞ்சம் வரச்சொல்லுங்களேன்-உம்! ஹலோ! ஒரு சின்ன விஷயம், மிஸ்டர் ராமன்! நான் தான் சந்துரு பேசறேன்! சௌக்யந்தானே? ஒரு சின்ன விஷயம் என்றேனே!''

மூன்று நிமிஷங்களில் சந்துருவுக்குத் தேவையான பதில் கிடைத்து விட்டது. ''நீங்கள் சடகோபனைச் சொல்



கிறீர்கள் என்று நினைக்கிறேன். ஆமாம்! நாலு வருஷமாக இருக்கிறார். இதற்கு முந்தி எங்கே இருந்தார் என்பது தானே?...ஒன் செகண்ட்...அவர் மலாயாவில் இருந்திருக் கிறார்; ஆமாம்! மலாயா! ஆறு வருஷத்துக்கு முந்தி... அங்கே என்ன செய்து கொண்டிருந்தார்? ஒன் செகண்ட் அங்கே ஒரு ரப்பர் எஸ்டேட்டிலே இருந்ததாகத் தெரிகிறது ஸார்!...அவ்வளவு போறுமா! நாளைக்கு வேண்டுமானால் மேற்கொண்டு தகவல்கள்—தேவை இல்லையா? ஆல்ரைட்''

சந்துரு சஞ்சீவியிடம் திரும்பினான். ''செங்கல்வராய பிள்ளை மலாயாவில் இருந்தவர்; பணம் சேர்த்தவர். கணேசனும் அங்கிருந்து வந்தவர்; பாங்கிக் குமாஸ்தா சடகோபனும் அங்கே இருந்திருக்கிறார்...என்ன தெரிகிறது?''

''சிநேகிதர்கள், அல்லது ஏதோ தொடர்பு இருக்கிறது என்று தெரிகிறது!'' என்றான் சஞ்சீவி.

''உன் ஊகம் சரியாக இருக்கலாம் என்று எனக்குத் தெரிகிறது. கணேசன் இப்போது துணிந்து விட்டான் என்றும் தெரிகிறது. நான் நாளைக்குக் காலையில் கண்டு, 'சஞ்சீவியை இப்படிச் செய்யலாமா!' என்று கேட்பேனே என்ற பயம் அவனுக்கு இப்போது இல்லை. அதாவது, நிலைமை முற்றி விட்டது; நெருக்கடி அதிகமாகிவிட்டது... நாராயணன் வந்து விஷயங்களைச் சொன்னால், நான் இருப்பிடத்தை விட்டு நகர்ந்து சுறுசுறுப்பாக வேலை செய்யச் சௌகரியமாக இருக்கும்...இந்த வீட்டுக் குழந்தை சம்பாகூட, பேச்சோடு பேச்சாக நான் ஏன் வெளியில்போய் வேலை செய்யவில்லை என்று கேட்கிறாள்!'' என்றான்.

''நாராயணன் என்பவர், உங்களைக்காரில் அழைத்துச் செல்ல வந்திருந்த இளைஞர்தானே?''

''அவரேதான்! உன்னைவிட அவருக்கு எதிரிகள் அதிகம். ஏனென்றால், அவர் எனக்காக வேலை செய்து வருகிறார் என்பதுடன்கூட, மிஸ் இந்திராவின் காதலர். அவனை விடுதலை செய்வேன் என்று விரதம் கொண்டிருக்

கிறார்...சரி... சரளாவிடமிருந்துகூட டெலிபோன் சமாசாரம் எதுவும் வரவில்லை. அழைத்துப் பார்க்கலாமா?'' என்று கேட்டு, தேனாம்பேட்டை பங்களாவின் நம்பரைச் சுழற்றினான்.

ஐந்தாறு முறை சுழற்றினான். எவ்விதச் சப்தமும் இல்லை.

''சஞ்சீவி! நான் இங்கே இன்று இரவுசிறிது தூங்கலாம் என்று நினைத்தேன். அதற்கு வழி இல்லை. நாம் இரண்டு பேரும் வெளியே செல்ல வேண்டியிருக்கிறது. கையோடு 'டார்ச் லைட்' ஒன்று எடுத்துக் கொள். என் கைத் தடியை நான் கொண்டு வருகிறேன். சென்னை வீதிகளில் கொஞ்சம் சுற்றிப் பார்க்கலாமே!'' என்றான்.

அவர்கள் இருவரையும் அனுப்பிவிட்டு, பத்மா கதவைத் தாளிட்டுக் கொண்டாள். இரண்டு கைகளிலும் மருதாணியை அப்பிக் கொண்டு நின்ற சம்பா, ''மாமா! ஜாக்கிரதை! உடம்பெல்லாம் மருதாணி பூசிக் கொள்ளாமல் வந்து சேருங்கள்!'' என்று குரல் கொடுத்தாள்.

''போக்கிரி! முழுப் போக்கிரி!'' என்று சந்துரு சஞ்சீவியின் கையைப்பற்றிக் கொண்டு வாசலில் இறங்கினான்.

முதலில் சங்கரனுக்குத்தான் நினைவு திரும்பியது. கண்ணைத் திறக்க அவன் அநேகம் தடவைகள் முயற்சி செய்து பார்த்தான்; முடியவில்லை, ஒரு பெரிய பாறாங்கல்லை ஒவ்வொரு இமையின்மீதும் ஏற்றி வைத்திருப்பது போன்ற பிரமையே உண்டாயிற்று. இந்த முயற்சியைத் தற்காலிகமாகக் கைவிட்டு, தன் விவகாரங்களைப் பற்றிய சிந்தனையில் இறங்கினான். மனத்திலே மெள்ள மெள்ளத் தெளிவு பிறக்கத் தொடங்கியது.

இந்திராவின் முகம் அவன்முன் ஓடியது. 'ஐயோ, பாவம்!' என்றுமனம் கனிந்தது. அவள் ஏதோ பங்களாவில் சிறைப்பட்டிருந்தது. அவன் அவளை விடுதலை செய்யப் போய் அகப்பட்டுக் கொண்டது, 'பெரிய மனிதன்' போல



வேஷம் போடுள் ஒரு துஷ்டன் தாமோதரத்தைக் கொண்டு வந்து சித்திரவதை செய்யப் போவதாக மிரட்டியது, அவன் அந்த அறையிலிருந்து வெகு சாமர்த்தியமாகத் தப்பியது, சந்துருவைக் காணலாம் என்று பஸ்ஸில் பிரயாணம் செய்தது—எல்லாம் ஞாபகம் வந்தன. மவுண்ட் ரோடில் ஜனசஞ்சாரமற்ற ஒரு சந்தில் யாரோ அவன் முகத்தில் எதையோ வைத்து அமுக்குகிறார்கள்—அதுவரையும்கூட நினைவு படுத்திக் கொண்டு விட்டான். அப்புறம் அந்தகாரம்!

ஏதோ அபாயம் வந்திருக்கிறது; எதிரிகள் கையில் சிக்கிக்கொண்டிருக்கிறான்; வெகு நிதானத்துடன் நடந்து கொள்ள வேண்டும்...... அவசரப்பட்டுக் கண்களைத் திறக்காதது கூட நன்மையே!

சுமார் பதினைந்து நிமிஷங்கள் சென்ற பிறகு, கண்களைத் திறக்கவும் முடிந்தது. அவன் கட்டாந்தரையில் கிடந்தான். சிறிய அறை; முணுக்முணுக்கென்று அரிக்கேன் லாந்தர் ஒன்று எரிந்தது. அந்த மங்கலான வெளிச்சத்தில் ஒரு கயிற்றுக் கட்டிலும், அதன்மேல் ஓர் உருவம் கிடப்பதும் தெரிய வந்தன. ஒரு வேளை அவனுக்குக் காவலாக யாரேனும் படுத்திருக்கிறார்களோ; அவன் இருந்த பலஹீன நிலையில், எதிர்த்துச் சண்டை போட்டுச் சமாளிப்பதென்பது அவனால் நினைக்க முடியாத காரியம். அவன் எப்படி அங்கே வந்தான்? யார் கொண்டு வந்திருக்கிறார்கள்? அவர்களுக்கு என்ன உத்தேசம்?—அவசரப் படக்கூடாது. பொறுத்திருந்து பார்க்க வேண்டும்!

மேலும் கால்மணி சென்றிருக்கும்; அறைக்குள் இரண்டு ஆட்கள் வந்து நின்றார்கள். ஒருவன் அரிக்கேன் லாந்தரைக் கையில் எடுத்துத் தூண்டி, வெளிச்சத்தை அதிகம் செய்துவிட்டு, சங்கரன் முகத்துக்கு நேராகப் பிடித்தான், சங்கரன் செத்தவன் மாதிரி கிடந்தான்.

''ஊம்ம்...... நாளைக்குக் காலைதான் மூர்ச்சை தெளியும் இந்த ஆளுக்கு! கவலையே இல்லை! சரியானபடி கொடுத்திருக்கிறேன் மருந்து!'' என்றான் அவன்.

"ஆள் பிழைப்பானா, பார்!" என்று சிரித்தான் மற்றவன்.

இரண்டு பேரும் அவனிடமிருந்து திரும்பி, கயிற்றுக் கட்டிலின் பக்கம் சென்று, அங்கே கிடந்த ஆளைப் புரட்டினார்கள். சங்கரன் இப்போது தைரியமாகக் கண்களைத் திறந்து பார்த்துவிட்டு மூடிக்கொண்டான். அவன் நெஞ்சு 'பக்' 'பக்'கென்று அடித்துக் கொண்டது. அவன் குள்ளனிடமும் நெட்டையனிடமும் அல்லவா இப்போது மாட்டிக் கொண்டிருக்கிறான்! லகுவில் விடமாட்டார்களே!

"இந்த நாராயணனுக்கு அடி பலமாக விழுந்து விட்டது! கால் அங்குலம் தள்ளி விழுந்திருந்தால், இவனையும் அவனையும் சேர்த்துச் சாக்கில் கட்டி பார்ஸல் செய்ய வேண்டியிருக்கும்... மரக்கட்டை மாதிரி கிடக்கிறான், பார்!" என்றான் குள்ளன்.

"அப்போ இங்கே வந்து நாம் நிற்பானேன்? போய்ப் படுக்கலாம், வா! காலையிலே மதுரநாயகத்தைக் கூட்டி வந்து காட்டலாம். அப்புறமும் அவன் வம்பு கிம்பு செய்தான் என்றால், அவனையும் மூன்றாவது சாக்கில் கட்ட வேண்டியதுதான்!" என்றான் நெட்டையன்.

பிறகு இருவரும் விளக்கை முன்போல் தணித்து வைத்து விட்டு வெளியே சென்றார்கள். அவர்களுடைய காலடிச் சத்தம் ஓய்ந்த பின்பும், சங்கரன் சிறிது நேரம் காத்திருந்தான். அப்போது அவன் சற்றும் எதிர்பாராத ஓர் ஆச்சரியம் நடந்தது.

கட்டிலில் கிடந்த நாராயணன் எழுந்து உட்கார்ந்தான். கண்களைக் கசக்கி விட்டுக் கொண்டு நாலா புறமும் பார்த்தான். பிறகு எழுந்து சங்கரன் அருகில் வந்து நின்று அவன் மார்பைத் தடவி, மூச்சையும் பரிசோதனை செய்தான். சங்கரனுக்கு மனதில் நிம்மதி பிறந்தது. அங்கே சிறைப்பட்டிருந்த இருவரும், குள்ளனும் நெட்டையனும் செய்த சூழ்ச்சிக்கு ஆளானவர்கள். இருவருக்கும் ஒரு பொதுவான லட்சியம் உண்டு—அங்கிருந்து தப்பித்துக்



கொள்ள வேண்டும். அதற்காக இருவரும் தங்கள் பொது எதிரிகளிடம் பாசாங்கு செய்திருக்கிறார்கள்!

சங்கரன் மெதுவாக எழுந்து உட்கார்ந்து கொண்டு நாராயணன் கையைப் பற்றிக்கொண்டான். சிறிது நேரம் இருவரும் பேசிக் கொள்ளவில்லை. அந்தப் பிடியிலேயே எல்லாம் பேசிக்கொண்டு விட்டதாக உணர்ந்தார்கள்.

அப்போது மணி என்ன இருக்கும் என்று ஊகிக்க முடியவில்லை. இருவருமே சிறிது நேரம் மூர்ச்சை அடைந்து கிடந்திருந்ததுபோல் தோன்றியது. உடனே வெளியேறுவது முடியாது. குள்ளனும் நெட்டையனும் உறங்கிய பிறகு முயற்சி தொடங்குவதே சிலாக்கியம்.

அறைக் கதவை அரை அங்குலம் திறந்துகொண்டு பார்த்த சங்கரனுடைய உற்சாகம் எல்லாம் பறந்தே போய் விட்டது. வெளியே தாழ்வாரத்தில் இரு எதிரிகளும் படுத்திருந்தார்கள். நெட்டையன் கால் கைகளை அசைத்ததிலிருந்து அவன் தூங்கவில்லை என்பது தெரிந்தது. அவர்களுக்கு அப்பால்தான் மாடிப்படி இருந்தது. தப்பி ஓடுவதென்றால், மாடிப்படி ஒன்றுதான் வழி. வாசற் கதவை எவ்வளவுதான் ஜாக்கிரதையாகத் திறந்தாலும் ஒரு 'லொடக்', ஒரு 'கிரீச்' என்ற இரண்டு சப்தங்களும் கேட்கும். எத்தனை ஆழ்ந்து தூங்கினாலும் இந்தக் கயவர்கள் விழித்துக் கொள்வார்கள்; ஒருவன் மயக்க மருந்தைச் சுவாசித்தவன்; மற்றவன் மூர்ச்சையாகக் கிடந்தவன். எனவே ஓட்டப் பந்தயத்தில் வெற்றி எதிரிகளுக்கே கிடைக்கும். உடனே துரத்திப் பிடித்து விடுவார்கள்.

மாடியில் ஏறிவிட்டால், மேற்கொண்டு வழி சுலபம். ஆனால், இவர்களைத் தாண்டி எப்படி மாடிப்படி ஏறுவது?

பிரமை பிடித்து உட்கார்ந்துவிட்ட சங்கரனின் தோளில் கையை வைத்தான் நாராயணன். "என்ன தயக்கம்?" என்று கேட்டான்.

"வழி இல்லை!" என்றான் சங்கரன்.

யோசனை செய்யத் தலையைத் தடவி விட்டுக் கொண்ட நாராயணன், தலையில் மாங்காய் போன்ற ஒரு மூண்டை அப்போதுதான் பார்த்தான். அவன் மயங்கிக் கிடந்த காரணம் புலனாயிற்று. மறுபடி அப்படி ஒரு அடி விழுந்தால், எழுந்திருப்பதென்பது இயலாத காரியம்.

இப்படி ஒரு குழப்பத்தில் அவர்கள் உட்கார்ந்திருந்த சமயத்தில் 'மடமட'வென்று அந்த வீட்டு வாசற் கதவு இடிக்கப்பட்டது. "ஸார்! வீட்டிலே இருக்கிறது யார்?" என்ற குரல் கேட்டது.

குள்ளனும் நெட்டையனும் குபீர் என்று எழுந்தார்கள். சங்கரனும் நாராயணனும் தங்கள் யதாஸ்தானத்திற்கு அவசரமாகப் பாய்ந்து, முன்போல் அசைவற்றுக் கிடந்தார்கள். இது மிகவும் சமயோசிதமான காரியம் என்பதை உடனே உணர்ந்தும் கொண்டார்கள், ஏனென்றால், முதல் காரியமாக துஷ்டர்கள் இருவரும் அந்த அறைக் கதவைத் திறந்து, சரி பார்த்துத் திருப்தி செய்து கொண்டார்கள். பிறகுதான் வாசற் கதவைத் திறக்க விரைந்தார்கள்.

போகும்போது தாழ்வாரத்து மின்சார விளக்கை ஏற்றி வைத்துவிட்டுப் போனார்கள்! ஆகையால், சங்கரனும் நாராயணனும் மாடிப்படியை அடைய அந்த வெளிச் சத்தைக் கடந்தாக வேண்டும். அதைக் கடந்து செல்லும் போது, எதிரிகள் கண்ணில் பட்டுவிட்டால்—

சங்கரன் நன்றாகத் துணிந்த கட்டை, வாசற் கதவைத் திறந்துகொண்டு நின்ற குள்ளனும் நெட்டையனும் யாரோ ஐந்தாறு பேருடன் விவாதம் செய்துகொண்டிருந்தார்கள். யாரோ ஒரு திருடன் நாலைந்து வீடுகளுக்கு அப்பால் ஒரு மாடியில் ஏறிக் குதித்திருக்கிறான். வீட்டுக்காரர் விழித்துக் கொண்டு விட்டார். கூச்சல் போட்டுப் பல பேரை எழுப்பி விட்டார். ஆட்கள் துரத்தி வர, திருடன் எங்கோ அந்தப் பக்கம்தான் வந்திருக்கிறான். அந்த வீட்டினுள்தான் அப்போது வந்திருக்க வேண்டும் என்பது அவர்கள் ஊகம் "திறவுங்கள், ஐயா! நன்றாகப் பார்த்து விடுவோம்! எங்கே



போய் விடுவான் அவன்!" என்று பலத்த குரல் ஒன்று அதிகாரமாகக் கேட்டது.

"நாங்கள் இன்னும் படுக்கவில்லை, கூடத்தில் உட்கார்ந்து அரட்டை அடித்துக்கொண்டிருந்தோம். ஒரு காக்காய் உள்ளே வந்துவிட முடியுமா?" என்றான் குள்ளன்.

நெட்டையன் குறுக்கே வழி மறித்து நின்று கொண்டு, "நீங்கள் போங்கள் அடுத்த வீட்டிற்கு. நாங்கள் இங்கே பார்த்துக் கொள்கிறோம்!" என்றான்.

வெளியே ஐந்தாறு பேர், "இது உங்களைப் பற்றிய விஷயமாக மட்டும் இருந்தால் கவலை இல்லை. நாங்களும் லட்சியம் செய்ய மாட்டோம். இந்தத் தெரு ஜனங்களுக்கே உயிருக்கு அபாயம், சொத்துக்கு ஆபத்து என்கிறபோது, ஒவ்வொருவர் வீட்டையும் நாங்கள் சோதனை போடுவோம். விடுங்கள் வழியை! போலீஸ்காரர்கள் வந்து கேட்டால் என்ன சொல்வீர்கள் அப்போது! அப்படியே இப்போதும் நினைத்துக் கொள்கிறதுதானே?" என்று அழுத்தமாகக் கேட்டார்கள்.

உள்ளே சங்கரன் நாராயணனின் கையைப் பற்றி இருந்தான்; "சீக்கிரம்! சீக்கிரம்!!... இதை விட்டால் வேறு சந்தர்ப்பம் இல்லை!" என்று அவசரப்படுத்தினான்.

"அவர்கள் வரட்டும்... நாம் அவர்களிடமே சொல்லிக் கொள்ளலாம்!" என்று நாராயணன் பதில் கூறினான்.

"இல்லை, மிஸ்டர்! நாம் இங்கே இருக்கிறோம் என்ற காரணத்தினாலேயே யாரையும் இவர்கள் உள்ளே வரவிட மாட்டார்கள். அப்படி நாமாகப் போனோமோ, 'இவர்கள் தான் சுவரேறிக் குதித்து வந்த திருடர்கள்' என்று சொல்லித் தப்பித்துக் கொண்டு நம்மைப் போலீஸ் கோர்ட்டுக்கு அனுப்புவார்கள்... யாரும்! மாடிப்படி வழி நாம் ஓடிவிடலாம்; தயக்கத்தை விட்டுத் தள்ளும்! நான் பார்த்துக் கொள்கிறேன்!" என்றான்.

வாசலில் கூச்சல் அதிகமாகிக் கொண்டிருந்தது. நெட்டையன் இன்னும பிடிவாதமாக வழிமறித்துக்

கொண்டிருந்தான். சங்கரனும் நாராயணனும் மாடிக்கு ஓடினார்கள்

மாடியில் ஏறிப் பார்த்தபோதுதான் அவள் செய்த காரியம் அத்தனை சரியானது இல்லையோ என்ற அச்சம் சங்கரனுக்கு ஏற்பட்டது. தெருவில் ஏற்பட்ட குழப்பத்தினால் அநேகவீடுகளில் விளக்குகளை ஏற்றிவிட்டார்கள். சில மாடிகளில் ஜன்னல் கதவுகளைத் திறந்து வைத்துக் கொண்டு, "என்ன விஷயம்?" என்று வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தார்கள்

"வாருங்கள், மிஸ்டர்! எந்த நிமிஷமும் நாம் இல்லையென்று தெரிந்தால், குள்ளன் தேடிக்கொண்டு கிளம்பி விடுவான். இப்படி ஏறுங்கள்!" என்று சங்கரன் சுவரின்மீது ஏறினான்; கைகொடுத்து நாராயணனையும் தன்னுடன் அழைத்துக் கொண்டான். இருவரும் சுவர்மீது நின்றது தெருவில் யார் கண்ணிலேயோ பட்டிருக்க வேண்டும். "அதோ; அதோ! இந்த வீட்டு மாடியில், பாருங்கள்! திருடன்! திருடன்!!" என்ற கூக்குரலை எழுப்பி விட்டான் அவன்.

இதுவரை தாக்குப் பிடித்துப் பார்த்த நெட்டையன் இனி தன் சாகசம் பலியாது என்று ஒதுங்கிக் கொண்டான். நதிப்பிரவாகம் போல் திமுதிமுவென்று ஜனங்கள் வீட்டுக்குள்ளே புகுந்தார்கள். வழியில் இருந்த ஒரு பித்தளைப் பாத்திரமும் தாம்பாளமும் இடறப்பட்டு, வெண்கலக் கடையில யானை புகுந்த சத்தத்தை நினைவூட்டின.

"ஓடி வாருங்க ஸார்! ஓடி வாருங்க! இல்லையோ, மாட்டிக் கொண்டோம்... ஏன் மாடி ஏறி ஓடுகிறோம் என்பதைப் போலீஸ் ஸ்டேஷனில் சொல்லவேண்டியிருக்கும். இல்லையோ, இந்த ஜனங்களே, நம் பேச்சைக் காதில் வாங்கிக் கொள்ளாமல் நொறுக்கி ஆஸ்பத்திரிக்கு அனுப்பி விடுவார்கள்!... அப்படியே கையைப் பற்றிக் கொண்டு தொங்கி, கீழே கூரையில் குதியுங்கள்!" என்றான்.

மாடிச் சுவருக்கும் அடுத்த வீட்டுக் கூரைக்கும் ஆறடி தாவது இருந்தும், சங்கரன் சப்தம் எழுப்பாமல் குதித்து



விட்டான். நாராயணனால் அவ்வளவு சீக்கிரம் தொடர்ந்து வரமுடியவில்லை. வியர்த்து விறுவிறுத்துப் போனான். குதித்ததும் பெரும் சப்தத்தை எழுப்பினான். அவன் காலடியில் ஓடுகள் நொறுங்கின.

சங்கரன், "வாரும்! வாரும்!... சீக்கிரம்... அதோ அந்த மாடியைப் பிடித்துப் பதுங்குகிற வரையில் அபாயம்... யாரும் பார்த்து விடக்கூடாது!" என்று அவசரப்பட்டான்.

யாரோ பார்த்து வீசிய ஒரு அரைக்கல் கடுவேகமாக வந்து, சங்கரன் காலுக்கு இரண்டு அங்குலம் முன்பு கூரையைத் தாக்கிவிட்டு, மடமடவென்று உருண்டது.

"குனியுங்கள்! அட; குனிய வேண்டும். ஐயா!..."

ஓட்டம்! ஓட்டம்... ஆயிற்று. இன்னும் ஐந்து கஜம்!

பல வீடுகளில் வாசலில் வந்து விட்டார்கள்... "திருடர்கள் கூரைமேல் ஓடுகிற அளவுக்கு ஊர் மோசமாகி விட்டதா?...ஏன் ஸார், போலீஸ்காரன்கள் எல்லாம் எங்கே போய்விட்டார்கள்?" என்று ஜனங்கள் பேசிக் கொண்டார்கள்.

"நம் வீட்டுக்கு வரட்டும், இந்த உலக்கையால் போட்டு விடுகிறேன்!" என்று ஒரு நோஞ்சல் ஆள் தன் மனைவியிடம் பிரதாபம் பேசிக் கொண்டிருந்தார்.

"தென்னை மரத்தில் கட்டிவிட வேண்டும்" என்று ஒருவர் தாம்புக் கயிறு தேடிக் கொண்டிருந்தார்.

நாராயணன் பின் தொடர சங்கரன், நிற்காமல் ஓடினான். சந்தடிகளை அவன் லட்சியம் செய்யவில்லை. அனுமான் போல் ஒரு மாடியில் தாவி, நாராயணனை மறுபடி கைதூக்கி எறிந்து விட்டான். ஆயுள் பூராவும் கூரை உச்சிகளிலும் மொட்டை மாடிகளிலும் சஞ்சாரம் செய்து பழக்கப்பட்டவன் போல் காணப்பட்டவன் அவன்.

ஒரு இடத்தில் நாராயணன் இடறி விழுந்து, காலில் காயம் பட்டுக்கொண்டு விட்டான். "பரவாயில்லை, வாரும்!" என்றான் சங்கரன். ரத்தம் வருவதைக் கண்டும் காணாதவன் போல் அவசரப்படுத்தினான்.

"அந்த நிஜத் திருடன் எங்கேயிருப்பான், தெரியவில்லையே! அவன் நமக்கு எதிர்ப்பட்டால்?" என்று கேட்டான் நாராயணன்.

"அதெல்லாம் அந்தத் திருடனுடைய கவலை அல்லவா? நீர் ஏன் மனத்தை அலட்டிக் கொள்கிறீர்?"

இதற்குள் அவர்கள் தெருக்கோடிக்கு வந்துவிட்டார்கள்... இனி இறங்கி ஓட வேண்டியதுதான். இதுவரை குழப்பம் இந்தக் கோடிக்கு எட்டவில்லை என்றாலும்கூட, தெருவில் இறங்கி எத்தனை வேகமாக ஓடினாலும், யார் கையிலேனும் சிக்கிக் கொள்வது நிச்சயம். சங்கரன் தெருவைக் கடந்து எதிரேயுள்ள சந்திற்குள் ஓடினான். ஜன சந்தடி அற்றுக் கிடந்தது அது. இரண்டு தெரு நாய்கள் உறுமத் தொடங்கின. மறுபடி ஒரு காம்பவுண்டுச் சுவர்; தழைத்திருந்த மரம்; ஒரே தாவலில் ஒரு வீட்டு மாடியின் 'போர்ட்டிக்கோ'வை எட்டிப் பிடித்தார்கள்.

அரைத் தூக்கத்தில் விழித்துக் கொண்ட ஒரு பாட்டி அம்மாள், உரத்துக் கூவத் தொடங்கினாள். நாராயணன் திக்பிரமித்து நின்று விட்டான். அவன் கால்கள் வெடவெடத்தன. சங்கரன் அந்த அம்மாள் அருகில் ஓடி "நான் இங்கே ஒன்றும் செய்ய வரவில்லை; வாயை மூடு! கப்சிப்! மறுபடி சப்தம் கேட்டதோ, போட்டு விடுவேன் போட்டு, உன் மண்டையில்!" என்றான்.

அம்மாள் நடுநடுங்கி மௌனமானாள். தொடர்ந்து ஓட்டம்... ஆறு வீடுகள் தாண்டி விட்டார்கள். அந்தக் கிழவியின் ஓலம், நிசப்தத்தைக் கிழித்துக்கொண்டு கிளம்பியது. சங்கரன் நாராயணனை நிறுத்தி யோசனை செய்தான்: 'கிழவி மோசம் செய்து விடுவாள் போலிருக்கிறது. இனியும் ஓடிக் கொண்டிருந்து ஊரையே எழுப்புவதில் லாபம் இல்லை. எங்கேனும் உடனே ஒண்டுவோம்" என்றான்.

அவர்கள் நின்ற இடத்துக்கு அருகே ஒரு வீட்டின் 'வெண்டிலேட்டர்' கதவு பாதி திறந்தபடி இருந்தது. ஓர் அறையில் மட்டும் வெளிச்சம். வீட்டின் இதர பாகங்கள்



எல்லாம் இருள் கவ்வியிருந்தது. இருவரும் அந்த 'வெண்டிலேட்டர்' வழியே அறையினுள் குதித்தார்கள். ஒரு மின்சார அதிர்ச்சியே ஏற்பட்டது போலிருந்தது அவர்களுக்கு.

ஒரு சிறிய வட்ட மேஜை. அதன்மீது கைகளை ஊன்றி இந்திரா சோகமே வடிவாக உட்கார்ந்திருந்தாள். எதிரே நின்றாள் சுந்தரி. அறையின் கதவு வெளிப்புறம் பூட்டப்பட்டிருக்க வேண்டும். ஏனெனில், சாவித் துவாரத்தின் வழியே சாவியின் முனை மட்டும் உள்ளே தெரிந்து கொண்டிருந்தது!

## 'தம்பி'க்குக் கிடைத்த வெகுமதி

சுந்தரம் பிள்ளையுடன் நெருங்கிப் பழகியவர்களுக்கு அவருடைய இரும்பு இதயம் நன்கு தெரியும். எதற்கும் அஞ்சாத புள்ளி அவர். அதுவும் சங்கடங்கள், இடையூறுகள், இடைஞ்சல்கள் என்று தமது திட்டங்களுக்கு வருகிறது என்றால் அவருக்கு ஒருவித ஆவேசமும், பிடிவாதமும் ஏற்படுவது வழக்கம். கையிலே கத்தி பிடித்துச் சண்டை போடுபவன், தோள் வலியினால் எதிர்த்து நிற்பவன் யாராக இருந்தாலும், அவருடைய அஞ்சாத நெஞ்சுக்கும் கருணையற்ற சுபாவத்துக்கும் வட்டி போட்டுத்தான் ஆக வேண்டும்.

'தம்பி'யிடம் முரட்டுப் பலம் இருந்தது; ஒரே குத்தில் எலும்புகளை நொறுக்கும் சக்தி அவனிடம் காத்திருந்தது. நாயரின் கையில் கத்தி ஏறிவிட்டால், ஆச்சரியமாக அது துள்ளி விளையாடும். அவன் விரும்பினால் உடம்பைத் தொட்டாப்போலும் அது விழும்; அல்லது நட்ட நடு மார்பிலும் ஆழப் பாய்ந்துவிடும். இந்த இருவரும் சுந்தரம் பிள்ளையின் ஆக்ஞைக்கு ஏற்றமாதிரி ஆடினார்கள் என்றால், அதற்கு அவருடைய உள்ளத்தின் பலத்தைத்தான் காரணமாகச் சொல்ல வேண்டும்.

இன்னொன்று, சுந்தரம் பிள்ளை தோல்வியே கண்டிராதவர், தொட்டதில் எல்லாம் வெற்றி கண்டு பழகிப் போனவர். அவர் அதிகாரம் செல்லவில்லை என்ற நிலைமை இப்போது முதல் தடவையாக வந்தபோது 'தம்பி'யின் முஷ்டி பலமுறை மோதியதுபோலும், நாயரின் கத்தி நொக்கெமங்கும் பாய்ந்ததுபோலும் அவருக்கு நோவெடுத்தது.

'தம்பி' சங்கரனைத் தப்பவிட்டான்; சுந்தரி வஞ்சத்தில் இறங்கினான்; பிறகும் ஒருமுறை சங்கரன் அவர் காவலை மீறிக்கொண்டு ஓடினான்; அவருடைய கோட்டையிலேயே அவருக்கு அவமானம்! அவருடைய ஆட்கள் எல்லாம் சித்திரப் பாவைகள்போல் நிற்க, தாமோதரம் தைரியமாக இந்திராவுடன் வெளியேறப் பார்த்தான். எப்பேர்ப்பட்ட அவமானம்! அவருடைய இதயத்தை வெந்நீரில் போட்டு யாரோ கொதிக்க வைப்பதுபோல் உணர்ந்தார். 'சரியானபடி தீர்த்துக் கட்டிவிடவேணும் தாமோதரத்தை' என்று தீர்மானம் செய்துகொண்டு வந்து உட்கார்ந்த சமயம், தாமோதரமே அவரைத் தாக்கத் தொடங்கிவிட்டான்! அவருடைய ஆட்கள் — கையாலாகாத கபோதிகளா அவர்கள்? அல்லது, எதிரிகளின் கையாட்களா—அந்தத் தாமோதரத்தைக் கிழித்துப் போடவில்லையே!

'தம்பி'யும் கணேசனும் திடும்பிரவேசமாக வந்து சேர்ந்து கொண்டது அவர்கள் யாரும் எதிர்பாராத சம்பவம். அந்தக் களேபரத்தில் 'தம்பி'யை யாரும் நன்கு கவனிக்கவில்லை! அவன் இந்திராவுடன் வெளியேறியதையும் கவனிக்கவில்லை. கணேசன் வேறு இடையிலே புகுந்து, ஒரு நொடியில் சுந்தரம்பிள்ளையை விடுவித்தான். இரண்டு ஆட்களும் தாமோதரத்தை அப்பால் இழுத்துச் சென்று பின் கையைப் பிணைத்தபடி கட்டிக்கொண்டு நின்றார்கள். சுந்தரம் பிள்ளை ஆவேசமாகத் திணறிக்கொண்டிருந்தார்; தாமோதரமும் பெருமூச்சு விட்டுக்கொண்டிருந்தான். கோதாவில் இரு பயில்வான்கள் ரோஷமான குத்துச்



சண்டை ஒன்று செய்துவிட்டு, இளைப்பாறுவதையே அந்தக் காட்சி ஞாபகமூட்டியது.

சுந்தரம்பிள்ளை ஒரு நிமிஷம் கணேசனைத் திரும்பிப் பார்த்தார்; அவன் முகம் அவருக்கு என்ன விதமான எண்ணங்களை எழுப்பினவோ, சொல்வதற்கில்லை. தமக்குப் பக்கபலமான ஒரு ஆள் அங்கே இன்னொருவன் தேவை என்றும் அவர் நினைத்திருக்கலாம்.

"நாயர்! நாயர்!" என்று உரக்க அழைத்தார்.

அந்த அபயக் குரல் எழுந்தவுடனே, கணேசன் ஒரு துள்ளுத் துள்ளினான். நாயர் வருவதற்குமுன் அவன் அங்கிருந்து அகன்றாக வேண்டும். இப்போது விட்டால் வேறு சமயம் கிடைப்பது அரிது. தாமோதரத்தை விட்டு இரு ஆட்களில் ஒருவரும் அவனைத் தடுக்க முடியாது; அப்படிச் செய்தால் தாமோதரம் திமிறிவிடுவான். மறுபடி பழைய களேபரம் தொடங்கிவிடும். சுந்தரம் பிள்ளையும் அவனைத் தடைசெய்யும் நிலையில் இல்லை. இப்போது நாயர் வந்து விட்டால் நிலைமை மாறிவிடும். எனவே, அவன் வருமுன் ஓடிவிட முடிவு செய்தான். இரண்டாவது நிமிஷம் அவன் ஒரு ஜன்னல் கதவைத் திறந்துவிட்டான். "நாயர்!" என்ற மூன்றாம் முறையாக சுந்தரம் பிள்ளை குரல் எழுப்பும்போது, கணேசன் அந்த ஜன்னலுக்கு வெளியே ஒரு 'ஸன் ஷேட்'டில் குதித்து, அதன் மேலேயே வீட்டைச் சுற்றி ஓடிக் கொண்டிருந்தான். ஓடும்போதே ஒருஜன்னல் வழியே எட்டிப் பார்த்தபோது, 'தம்பி'யிடம் பேசிவிட்டு வேறு திசையில் இந்திராவும் சுந்தரியும் ஓடுவதைக் கண்டுவிட்டான். "ஓஹோஹோ!... அப்படியா சேதி" என்று தலையை ஆட்டிக்கொண்டு மேலும் ஓடினான். "நான் உங்களை வெளியே அழைத்துக்கொண்டு போகிறேன்! அதைவிட வேறு எனக்கு என்ன வேலை?" என்று வீட்டின் பின்புறம் குதித்து, காம்பவுண்டுச் சுவருக்கு அருகே சென்று காத்திருந்தான்.

அவன் எதிர்பார்த்தபடி அவர்கள் இருவரும் வந்தார்கள்! பங்களாவுக்கு வெளியே அழைத்துக் கொண்டு போனான்.

ஆனால் இந்திரா எதிர்பார்த்தபடி அவனுடைய பங்களாவுக்கு அழைத்துச் செல்லவில்லை! டாக்ஸியில் வைத்து, அவன் இஷ்டப்பட்ட ஒரு விடுதிக்கு இட்டுச் சென்றான்...

நாயருக்குச் சிறிது நேரம் ஒரே திகைப்பாக இருந்தது. சுந்தரம் பிள்ளையின் குரல் கேட்டு ஓடிவந்த அவனுக்கு, அவர் அறையிலே கண்ட காட்சி திகைப்பூட்டியது. சுந்தரம் பிள்ளையின் கண்களில் தீப்பொறியே பறந்துகொண்டிருந்தது.

"நாயர்! என் வீட்டிலேயே எனக்கு என்ன மரியாதை நடக்கிறதென்பதைப் பார்த்தாயா?" என்று கர்ஜித்தார்.

"என்ன? என்ன நடந்துவிட்டது?" என்று பதறினான் நாயர்.

"இன்னும் என்ன நடக்க வேண்டும்! (தாமோதரத்தைக் காட்டி) இந்த நாய் என்மேல் பாய்ந்து கை போடுகிறது! அப்புறம் என்ன? ஹும்?"

நாயர் கத்தியை உருவினான். இடது ஆள்காட்டி விரலில் அதைக் கூர் பார்த்தான். அடி உதட்டைக் கடித்துக் கொண்டு, "ஒரே வார்த்தை சொல்லுங்கள், எஜமான். இந்த முனையை இவன் முதுகுப் பக்கம் தருவித்துக் காட்டுகிறேன்" என்றான் சுருக்கமாக.

"இரு! அதைப் பிற்பாடு செய்யலாம். ஜன்னல் பின்னாலிருந்து இங்கே இரண்டு ஆசாமிகள் குதித்தார்கள்...என் அறையில் ஒளிந்திருந்து, அவர்கள் குதித்தார்கள்..."

"எங்கிருந்தாலும் அவர்களை இந்தக் கத்தியில் கோத்துக்கொண்டு வருகிறேன்!..." என்றான் நாயர்.

சுந்தரம் பிள்ளையின் காதில் அது விழுந்ததோ, என்னவோ! உஷ்ணமாக மூச்சு விட்டுக்கொண்டிருந்தார் அவர். "நாயர்! நீ இதுவரை எங்கே இருந்தாய்?" என்று கேட்டார்.

"கீழே உங்கள் உத்தரவுப்படி அறையில் காவல் இருந்தேன்..."

"இப்போது அதை விட்டுவிட்டு வந்துவிட்டாய் அல்லவா!"



"கூப்பிட்ட குரலுக்கு ஓட்டமாக ஓடி வந்தேன், எஜமான்!..."

"அறையைப் பூட்டிவிட்டுத்தான் வந்திருக்கிறாய் அல்லவா?"

"ஓ!..." என்றான் நாயர் தலையை ஆட்டிக்கொண்டு. தலை என்னமோ சுவாரஸ்யமாக ஆடவில்லை, அவன் ஆக்ஞைப்படி நடந்து கொள்ளவில்லை. சுந்தரியிடம் விளையாடியிருக்கிறான். அதன் விளைவாக, குழம்பிப் போய்ப் பூட்டாமலே வந்து விட்டான். பகீர் என்று வயிற்றில் ஒரு நெருப்புக் கங்கு புறப்பட்டு உடம்பெல்லாம் பரவியது. அறைக் கதவை அவன் பூட்டவில்லை!

சுந்தரம் பிள்ளை அவன் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தார். அதில் ஏற்பட்ட விவகாரம் அவர் பார்வைக்குத் தப்பவில்லை. வெறுப்புடன், "போ! உன்னை நான் இப்போது இங்கே அழைத்தது பிசகு! போய் உன் வேலையைக் கவனி!" என்றார்.

நாயர் நிற்காமல் திரும்பினான். ஓடிப்போய், தான் அசட்டுத்தனம் போய்விடவில்லை என்பதைக் காண வேண்டும் என்ற ஆசை உந்தித் தள்ளியது. ஆனால் அங்கே அவன் பயந்தபடியே நடந்திருந்தது. சுந்தரி ஓடி விட்டாள்! "ஆஹா! நழுவி விட்டாளா? நான் விட்டு விட்டேனா?" என்று தாவினான். தப்ப ஒரே வழி, பின்புற மாடிப்படி அங்கே விரைந்து ஓடிக் காத்திருந்தான்.

அவனுக்கும் ஓர் அதிர்ச்சி. சுந்தரியுடன் இந்திராவும் தப்பி வருவாள் என்று அவன் எதிர்பார்க்கவில்லை. சுந்தரி ஒருத்தியானால், தலையை ஒரு கையால் பிடித்து, உள்ளே தள்ளிக் கொண்டுபோய் விடலாம். இரண்டு பேர், அதுவும் இந்திரா போன்ற ஒரு பெண் என்றால், முரட்டுத்தனமாக நடந்துகொள்ள மனம் ஒப்பவில்லை. யாது செய்யலாம் என்று தயங்கின சமயம், அவன் பிரச்னையை இடுப்பில் விழுந்த ஒரு உதையும், மண்டையில் தாக்கிய ஒரு குத்தும் தீர்த்து விட்டன. மாடிப்படியில், அவன் தலைக்குப்புற விழுந்தான். யார் தன்னை இப்படிச் செய்திருக்கக் கூடும்

என்று முதுகை வளைத்து, கழுத்தைத் திருப்பிப் பார்க்க எத்தனை முயன்றும் பயன் இல்லை. ஒருகால் 'தம்பி'யாக இருக்குமோ என்ற சந்தேகம்; அவனுக்கு அத்தனை தைரியம் வராது என்றதொரு நம்பிக்கை.

நாயர் கை கால்களை உதறி, திமிறி, புரண்டு படுக்கச் செய்த முயற்சிகள் யாவும் வீணாயின. மடமடவென்று சுந்தரியும் இந்திராவும் இறங்கி ஓடும் காலடிச் சப்தம் அவன் காதுக்கு எட்டியது. அவனால் ஒன்றும் செய்ய முடியாத நிலை. தவிர, அவன் மண்டை நாலைந்து முறை மாடிப் படிக்கட்டில் மோதியது. கண்கள் மூடிக்கொண்டன. எங்கும் இருள் கவ்விக்கொண்டது; கத்தலாம் என்றால், தொண்டை ஒத்துழைக்க மறுத்தது. கடைசி கடைசியாக யானை போன்ற ஒரு உருவம் முதுகில் கால் வைத்து மாடி மேல் ஏறுவதை உணர்ந்தான். அப்புறம் நினைவு அவனைக் கை விட்டுச் சென்றது.

சுந்தரியும், இந்திராவும் வெளியேறுமுன் அவர்களுக்கு ஏதேனும் இடையூறு ஏற்படலாம் என்று எதிர்பார்த்தான் 'தம்பி'. அப்படி ஏற்படுமாயின், தன்னால் ஆன உதவி செய்யலாம் என்றே வந்தான். அவர்களுக்குக் குறுக்கே நாயர் வந்து முளைப்பான் என்பதை மட்டும் அவன் எதிர் பார்க்கவில்லை. சுந்தரம் பிள்ளையுடன் நாயர் தங்கி விடுவான் என்ற அவன் ஹேஷ்யம் தவறாகி, 'தம்பி'யே அவனைத் தாக்கும் நிர்ப்பந்தம் ஏற்பட்டு விட்டது. உண்மையில், நாயர்மீது 'தம்பி'க்குக் கடும்துவேஷம் உண்டு என்றாலும், அவனுடன் சண்டை போடவோ, அவனை அடித்து வீழ்த்தவோ ஒருபோதும் விரும்பியதில்லை. ஆனால் எக்கச்சக்கமான ஒரு நிலையில், அவ்வாறு செய்வது தவிர வேறு மார்க்கம் இல்லை என்று ஆகிவிட்ட பின்னர், அவனால் ஆகக்கூடியது, நாயருக்குத் தன்னைத் தாக்கியவன் யார் என்பது தெரியாமல் பார்த்துக் கொள்ள வேண்டியதே. ஆகவே, ஒரு இம்மியளவுகூடத் தன் அடையாளத்தைக் கண்டு கொள்ளாதபடி அவனைப் பிரக்ஞை இழக்கச் செய்து விட்டு மாடியில் ஏறினான்.



சுந்தரம் பிள்ளைக்கு நாயர் சென்ற பிறகு சிறிது மனத் தெளிவு ஏற்பட்டது. 'நடந்தது நடந்து விட்டது. மேற் கொண்டு செய்ய வேண்டியது என்ன' என்று நினைத்துப் பார்த்தார். மேலும், பொழுது போய்க்கொண்டிருந்தால், தப்பிச் சென்ற சங்கரன் மோசம் செய்து விடுவான். எந்தப் போலீஸ் அதிகாரி வந்தாலும் அவர் பங்களா வரவேற்கத் தயாராக இருக்க வேண்டும். அதுதான் மிகமிக முக்கிய மான காரியம்.

சுந்தரம் பிள்ளை எழுந்தார். தாமோதரத்திற்கு இரண்டடி முன்னால் போய் நின்று, ''நாயே!'' என்றார்.

''அண்ணா!'' என்று பதில் கூறினான் தாமோதரம்.

'பளார்' என்று அவன் கன்னத்தில் சுந்தரம் பிள்ளை ஓர் அறை அறைந்து, ''இன்னமும் உன்னை விட்டு இந்தத் திமிர் போகவில்லையே?'' என்று கேட்டார்.

நன்றாக வலித்திருக்க வேண்டும் அந்த அறை. எனினும் சமாளித்துக் கொண்டான் தாமோதரன். ''நானே அதை உங்களிடம் கேட்கவேண்டும் என்று இருந்தேன்!'' என்றான்.

இன்னொரு அறை அதே வேகத்தில் முகத்தின்மீது இறங்கியது. ''நாயே! அடுத்தபடி உனக்கு என்ன நடக்கும் தெரியுமா?'' என்று கர்ஜித்தார் சுந்தரம் பிள்ளை.

''பாழுங்கிணற்றுக்கு அழைத்துக்கொண்டு போவீர்கள், அதற்கு நான் தயார்!... என்னைச் சின்ன பங்களாவில் வைத்துச் சித்திரவதை செய்யலாம் என்று நினைத்தீர்கள்; ஏமாற்றம்; இங்கே கஷ்டப்படுத்தி ஏதோ சாதிக்கலாம் என்று இட்டுக்கொண்டு வந்தீர்கள்; தோல்வி! மூன்றாவ தாக, பாழுங் கிணற்றடியில் என்ன நடக்கப் போகிறதோ, பார்த்து விடலாம். அங்கேயும் போலீஸ்காரன் வந்து விடுவான்!''

தமது காலால் சுந்தரம் பிள்ளை தாமோதரத்தின் முழங்காலுக்குக் கீழே வெடுக்கென்று உதைத்தார். ''உன்னை அத்தனை லகுவாக நான் கொல்ல மாட்டேன். நாயரைக் கூப்பிட்டு, உன் உடம்பில் அங்குலம் அங்குலமாகக்

கத்தி வீசச் சொல்வேன்... (ஆட்களைப் பார்த்து) இவனைக் கொண்டுபோய்த் தள்ளுங்கள். மறுபடி கோட்டை விட்டு விட்டுப் பல்லை இளிக்க வேண்டாம், ஜாக்கிரதை!'' என்று சொல்லி விட்டு நடந்தார்.

நேரே நாயர் காவல் காத்திருந்த அறைக்குச் சென்றார். அங்கே ஒரு அதிர்ச்சி. வெளியே நாயரும் இல்லை; அறையும் காலி! ''ஓ! சுந்தரி ஏமாற்றி விட்டாளா? அல்லது அவளை இடம் மாற்றி வைத்திருக்கிறானா?''—என்ற அவர் கேள்விக்குப் பதில் கூற அங்கே யாரும் இல்லை. திரும்ப மாடிக்கு நாலு எட்டில் விரைந்தார். 'இந்திரா எங்கே? அவளை இழுத்துச் சென்றவன் யார்?... ஒரு வேளை 'தம்பி'யாக இருக்குமோ?'

இரண்டு பேர் ஜன்னல் திரைக்குப் பின்னாலிருந்து வந்தார்கள் என்பது தெரியும் அவருக்கு. கணேசனை நன்றாகப் பார்த்தார். மற்றவனைப் பார்க்க முயன்றாரே ஒழிய, முடியவில்லை; தாமோதரம் அவர் பார்வையையே மறைத்துவிட்டான். அவன்தான் இந்திராவை இழுத்துக் கொண்டு சென்றிருக்க வேண்டும்... யார் அவன்?

மாடியில் அறை அறையாகத் தேடி ஓடினார். கடைசியில் பின்புற மாடிப்படியண்டை வந்தார். அப்போது தான் மேலே ஏறி வந்துகொண்டிருந்தான் 'தம்பி'. தெம்பாக வந்தான் அவன். ஒவ்வொரு அடியையும் நிதானமாக வைத்து, மேலே ஏறினான்.

சுந்தரம் பிள்ளைக்கு இப்போது அவரையும் அறியாமல் ஓர் அச்சம் பிறந்தது. 'நாம் தனியாக இருக்கிறோம்; பலசாலியாக ஒருவன் வருகிறான்; நாமும் அவனிடம் விரோபாவம் காண்பித்து வருகிறோம். இப்போ என்ன செய்வானோ?' என்ற கிலியின் சாயையே அது. ஆனால், அதிகாரத்தை விட்டுக் கொடுக்காமல் பேசி விடலாம் என்ற அசட்டுத் தைரியமும் இருந்தது.

சுந்தரம் பிள்ளையைப் பார்த்ததும் ஒன்றுமே அறியாதவன் போல் 'தம்பி' அவரை நிமிர்ந்து நோக்கினான்.



''யார் அங்கே? 'தம்பி'யா?'' என்று கேட்டார் சுந்தரம் பிள்ளை சகஜமாக.

''ஆம், எஜமான்!''

''எங்கிருந்து வருகிறாய் பின்புறமாக?''

''நீங்கள் இங்கே தனியாக இருப்பீர்கள் என்று நினைத்தேன். ஒரு விஷயம் சொல்லி விட்டுப் போகலாம என்று வந்தேன்... வேறு யாருக்கும் தெரிய வேண்டாம் என்று...''

''என்ன அது?''

''சந்துரு என்னைப் பார்த்தான், எஜமான்!''

''எதற்காக?''— அலட்சியமாகக் கேட்டார் அவர். ஆனால், மனத்திற்குள் விஷயத்தைக் கிரகிக்க வேண்டும் என்ற ஆவல் மண்டிக் கிடந்தது.

'தம்பி'க்கும் இது தெரியும். அவர் சந்துரு சொன்னதைக் கேட்கத் துடித்துக் கொண்டிருப்பார் என்பதில் அவனுக்குச் சந்தேகம் இல்லை எனில் விஷயத்தை விட்டால், வந்த வழியே திரும்பி விடுவார் என்பதையும் அறிவான். ஆகையால், ''உங்களிடம் அது பற்றிச் சாவகாசமாகப் பேச வேண்டும் நான்!'' என்றான்.

இதில் இரண்டு காரியங்கள் 'தம்பி'க்கு இருந்தன. சுந்தரம் பிள்ளையை மாடிப்படி வழி இறங்க அனுமதித்தால் நாயர் கீழே கிடப்பதைக் கண்டு விடுவார்; உடனே பலவித சந்தேகங்கள் கொள்ளுவார், இரண்டாவதாக, அவருடன் தனிமையில் பேசச் சந்தர்ப்பம் கிடைத்து விட்டால், எப்படியாவது அவர் மனத்திலிருந்து துவேஷத்தை அகற்றிவிடலாம் என்ற நம்பிக்கை 'தம்பி'க்கு உண்டு. நாபரையும் சரியானபடி பழி தீர்த்துக் கொள்ளலாம்.

சுந்தரம் பிள்ளை தயங்கினார். 'தம்பி'க்கு இணங்கினதாகக் காட்டிக்கொள்ள அவர் மனம் இடம் கொடுக்கவில்லை; இருந்தாலும், அவனை நழுவவிட—அதுவும் சந்துருவின் பெயரைச் சொன்ன பிறகு—உத்தேசம் இல்லை. எனவே, தாமாகவே திரும்புகிற மாதிரி மௌனமாகத் தம்

அறையை நோக்கி நடந்தார். 'தம்பி'யும் பின் தொடர்ந்தான்.

சுந்தரம் பிள்ளை நாற்காலியில் உட்கார்ந்து கொண்டார். ''நீ என்ன சொல்கிறே, 'தம்பி?' '' என்றார் உணர்ச்சியற்ற குரலில். அதில் அவர் அவனை மன்னித்ததாகவும் கொள்ள முடியாது; மன்னிக்கவில்லை என்றும் கொள்ள முடியாது.

''என்மீது உங்களுக்கு அனாவசியமாக ஒரு கோபம் வந்து விட்டது. நான் துரோகம் செய்துவிட்டதாக நினைத்து விட்டீர்கள்; அது தவறு, எஜமான்!'' என்றான் 'தம்பி'.

''நீயாக என்ன நினைத்துக் கொண்டிருக்கிறாயோ, நான் எதைக் கண்டேன்!'' என்றார் பிள்ளை.

''சங்கரனைத் தப்ப விட்டது என் பிசகே அல்ல, அவன் துஷ்டப் பையன். ஏன், நீங்கள் சரியான காவல் போட்டு, சின்ன பங்களாவில் அவனை அடைத்து வைத்தபோதுகூடத் தப்பி ஓடவில்லையா? அவனுக்கு இரட்டைக் காவல் போட வேண்டும்; மீறினான் என்றால் தீர்த்துவிட வேண்டும்!''

''ஹும்!'' என்றார் பிள்ளை. இது 'தம்பி'க்குச் சிறிது இடங்கொடுத்ததுபோல் இருந்தது.

''எந்த நிமிஷத்திலும், தூக்கமானாலும் விழிப்பானாலும், நான் எஜமானிடம் விச்வாசம் குறைந்தவன் இல்லை. நீங்கள் சங்கரன் விஷயத்தில் என் மேல் கோபமாக இருந்தபோது, நான் தாமோதரத்தையும் அவன் ஆள் ஒருவனையும் தூக்கிப் போட்டுக்கொண்டு வந்தேன். அதற்கு நான் உங்கள் உத்தரவைக்கூட எதிர்பார்க்கவில்லை. உங்களுக்குக் கெடுதல் செய்கிறவன் யாராக இருந்தாலும், எனக்கு எதிரி அவன், உங்களைப்பற்றிக் குறைவாகப் பேசுகிறவன் ஒருவனைப் பார்த்துக்கொண்டிருக்க மாட்டேன் நான்......''

ஒரு சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக்கொண்டு, வளைத்துப் போட்டுத் 'தம்பி' பேசுகிறான் என்பதைச் சுந்தரம் பிள்ளை



தெரிந்துகொண்டிருந்தார். ஆனால், சுய காரியத்தை முன்னிட்டு அவனைப் பேச அனுமதித்தார்.

''நீங்கள் எனக்குப் பதிலாக நாயரைத் தருவித்து விட்டீர்கள். என் மனம் பட்டபாடு தெரியுமா, உங்களுக்கு? நான் இருக்கும்வரை உங்களுக்கு நாயர் தேவையா? அவன் செய்கிற காரியத்தை நான் செய்யமாட்டேனா? உங்களிடம் நான் மனம்விட்டுச் சொல்கிறேன்; நாயரை நீங்கள் நம்பாதீர்கள்! அவன் சமயத்தில் காலை வாரி விட்டுவிடுவான். சற்று விரோதித்துக் கொண்டால் அவனே போலீஸுக்கு உளவு காட்டிக் கொடுத்துவிட்டு, நகர்ந்துகொள்வான். பணத்துக்காகத் துரோகம் செய்ய அஞ்சமாட்டான்......''

துணுக்குற்று நிமிர்ந்து உட்கார்ந்தார் சுந்தரம்பிள்ளை. 'தம்பி' பேசிக்கொண்டே போனான்: ''ஆமாம்! என்னை நம்புங்கள், நாயருக்கு இந்த வீட்டில் அதிக இடம் கொடுக்காதீர்கள் எஜமான்!''

''நீ என்ன, பேசிக்கொண்டே போகிறாயே! அப்படி என்ன செய்துவிட்டான் அவன்?''

''சுந்தரியை நீங்கள் தவறாக நினைத்துவிட்டீர்கள், எஜமான்! அவளுக்கு இந்த நாயரின் யோக்யதை பூராவும் தெரியும்!''

''சே! அந்தக் கழுதை பேச்சை நம்பச் சொல்கிறாயா? இப்போது ஓடிவிட்டது நாய்! நான் தடுத்திராவிட்டால் சந்துருவுக்கு உளவு காட்டிக் கொடுத்திருப்பாள் அவள்!''

''மனிதர்களுக்குக் கோபம், அவசரப் புத்தி இரண்டும் உண்டு, எஜமான்! சிலரால்தான், நிதானமாக இருக்க முடியும். சுந்தரிக்குக் கோபம் வந்ததென்றால், நீங்கள் நாயரிடம் வைத்திருக்கும் தகாத நம்பிக்கையும் சுந்தரியிடம் காட்டும் அலட்சியமும்தான் காரணம். இதற்கு மேல் வெட்ட வெளிச்சமாக எனக்குச் சொல்லத் தெரியவில்லை. எஜமான்!...''

''சந்துருவிடம் பேசுகிறாளே அவள்! ஹும்?''

''சந்துருவிடம் பேசியதெல்லாம் நாயர்தான். எஜமான் சந்துருவுக்கு இங்கே நடப்பதில் பாதி தெரியும் என்றால்

அதில் அவன் புத்திசாலித்தனம் ஒன்றும் வந்துவிடவில்லை! துரோகி நாயர் சதி செய்கிறான், எஜமான்!''

''ஜாக்கிரதையாகப் பேசு, 'தம்பி!''

''நான் சத்தியமாகப் பேசுகிறேன், எஜமான்! எனக்கு என்ன பயம்; இனிமேல் இந்த நாயை நீங்கள் கொன்று போட்டாலும் லட்சியம் இல்லை. உங்களுக்கு ஊழியம் செய்து, அதில் உயிர் போனால் நான் திருப்தி கொள்வேன். சந்துரு என்னைக் கேட்கிறான்— 'ஏய், உங்க சுந்தரம் பிள்ளை இன்னம் எத்தனை ஆட்களை எத்தனை நாளைக்குச் சிறை வைத்திருக்கப் போகிறதாக உத்தேசம்?' என்கிறான். நான் பதில் பேசவில்லை.''

''உம்ம்ம்...''

''மெல்ல நகர்ந்தேன். தோளில் கைவைத்தான். 'அடே எனக்கு உன்னைத் தெரியும்; உன்னைவிட நன்றாக உன் எஜமானனையும் தெரியும். போ! போய்ச் சொல். அதிகநாள் நடக்காது என்று!' என்கிறான். நாம் வெகு ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். அதுவும் நாயர்போல் ஒரு உளவாளியைப் பக்கத்தில் வைத்துக்கொண்டிருக்கிற போது—''

''நிச்சயமாக அவன் உளவாளி என்று உனக்குத் தெரியுமா?''

''நீங்களே கவனித்துத் திருப்தி கொள்ள வேண்டும். எச்சரிக்கை செய்ய வேண்டியது மட்டுமே என் கடமை!''

சுந்தரம் பிள்ளை சிறிது நேரம் மௌனமாக அடி உதட்டைச் சுவைத்துக் கொண்டிருந்தார். பிறகு தொண்டையைக் கனைத்துக் கொண்டு 'தம்பி'யின் முகத்தைப் பார்த்தார்.

இப்போது அவர் முகத்தில் மாற்றம் தெரிந்தது. பழைய சந்தேகம், துவேஷம், கோபம் யாவும் மறைந்திருந்தன. ஒருவிதக் கனிவுகூட 'தம்பி'க்குத் தென்பட்டிருக்க வேண்டும். அவன் உள்ளம் மலர்ந்தது. கடைசியில் வழிக்குக் கொண்டு வருகிறோம் என்று திருப்தி ஏற்பட்டது.



'''தம்பி'! இப்படி வா!... நீ சொல்கிறது உண்மையானால், நாம் கவலைப்பட வேண்டியதுதான்!''

அவர் எங்கேயோ அறைக்கு அப்பால் வெட்டவெளியை வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தார்.

''உண்மை, எஜமான்! சுந்தரி நிச்சயம் திரும்புவாள். இப்போது அசட்டுத்தனமாக ஓடியிருக்கிறாள் என்றாலும் கட்டாயம் வருவாள். அப்போது பல உண்மைகள் வெளியாகும். உங்களிடம் அவள் எதிர்பார்ப்பது அன்பு ஒன்றுதான்!''

தலையை ஆட்டினார் சுந்தரம் பிள்ளை; ''அவள் வரட்டும். எனக்கு ஆட்சேபம் இல்லை. எனக்கு நீ இப்போது உடனடியாக ஒரு காரியம் செய்ய வேண்டும்... இப்படி அருகில் வா!'' என்றார்.

'தம்பி' பக்கத்தில் வந்து நின்றான். ''நாயரை நான் சரியானபடி கண்காணித்துக் கொள்கிறேன். நீ எச்சரித்த பிறகும் நான் அசிரத்தையாக இருந்தால், முழு முட்டாள் என்பார்கள். அவனை எப்படித் தண்டிப்பது என்பது என் கவலை இனிமேல்... உனக்கு நான் வேறு மூன்று பெரிய வேலைகள் கொடுக்கிறேன்...''

''முப்பது வேலை கொடுங்கள், செய்யக் காத்திருக்கிறேன் எஜமான்! முன்னைப் போலவே என்னை அழைத்து, ''தம்பி! இதுதான் வேலை; கவனித்துக் கொள்!'' என்று ஆக்ஞை இட்டுவிட்டு, தூங்கப் போக வேண்டியது. நான் முடித்து வைப்பேன்...''

சுந்தரம் பிள்ளை கண்களை மூடிச் சிறிது சிந்தனையில் ஆழ்ந்தார். பிறகு, ''முதல்வேலை சங்கரனை எப்படியாவது இங்கே திரும்பப் பிடித்து வர வேண்டியது. அது உன் கடமை...'' என்றார்.

''செய்கிறேன், எஜமான்!''

''இரண்டாவது, இந்திராவை அழைத்துப் போன ஆள் யார் என்று கண்டுபிடித்து, இரண்டு பேரையும் இங்கே மீண்டும் போட வைக்க வேண்டும்.''

"நடந்து விட்டதாக நினைத்துக் கொள்ளுங்கள், எஜமான்!"

"மூன்றாவதாக, சந்துரு இந்தப் பக்கம் தலை காட்டினாலும், நீ நிர்த்தாட்சிண்யமாக நடந்து கொள்ள வேண்டும்!"

"என் கை காத்துக் கொண்டிருக்கிறது!" என்று முஷ்டியை இறக்கி, கையை உதறிக் காட்டினான் 'தம்பி'.

"இதற்கெல்லாம் அதிக அவகாசம் இல்லை தெரியுமா? உடனே நடக்க வேண்டும்!... உடனே?"

'தம்பி'யின் முகத்தில் ஒரு புன்னகை அரும்பியது' திருப்தியுடன் திரும்பினான்.

"நில்லு 'தம்பி'! மூன்று காரியத்திற்கும் மூவாயிரம் ரூபாய் வெகுமதி! போ, சந்தோஷமாக!" என்றார் சுந்தரம் பிள்ளை.

'தம்பி' அறையை விட்டு அகன்ற உடனே நாயரின் தலை ஒரு ஜன்னல் வெளியே தெரிந்தது. குரூரமான கண்கள் சுந்தரம் பிள்ளையின் கண்களுடன் ஏதோ பாஷை பேசின. பிறகு சடார் என்று மறைந்துவிட்டது அந்த முகம்.

வேகமாகச் சென்றுகொண்டிருந்த 'தம்பி' சிறிதுநேரம் வரை தனது சொந்த சாமர்த்தியத்தையும் பேச்சு வன்மையால் சுந்தரம் பிள்ளையை மடக்கிவிட்ட திறமையையும் நினைத்து நினைத்துப் பூரித்துப்போய், தன்னையே மறந்து நடந்தான். எத்தனை பெரிய வெற்றி அவனுக்கு! நாயரை அல்லவா வீழ்த்தி விட்டான்? சந்தேகத்தின் விதையை ஊன்றியாகிவிட்டது! நெருக்கமாக இருபுறமும் 'க்ரோட்டன்ஸ்' செடிகள் மரம்போல வளர்ந்திருந்தன. அவற்றையொட்டி வரும் நாயரின் காலடி ஓசையையும், இலைகளில் ஏற்பட்ட சலசலப்பையும் அவன் கேட்கவில்லை.

நாயர் பல்லைக் கடித்துக்கொண்டு நின்றான். இடது கரத்திலிருந்து வலது கரத்திற்குக் கத்தியை மாற்றிக் கொண்டான். குறி பார்த்து, அதை மூன்று முறை ஆட்டினான். கத்தி காற்றிலே பறந்தது; 'தம்பி'யின்



நெற்றிப்பொட்டில் அதன் கைப்பிடி 'சடார்' என்று தாக்கி விட்டுக் கீழே விழுந்தது.

ஆகாயத்தில் உள்ள நட்சத்திரங்கள் ஒரே நொடியில் பன்மடங்கு அதிகரித்துவிட்டது போன்ற காட்சி 'தம்பி'யின் கண்முன் க்ஷண நேரம் ஊசலாடியது. அப்படியே சுருண்டு தரையில் விழுந்தான்.

நாயர் ஓடிச் சென்று கத்தியைப் பொறுக்கிக் கொண்டான். 'தம்பி'யின் விலாவில் ஒரு உதை உதைத்து விட்டு சரசரவென்று வெட்டின மரத்தை இழுப்பதுபோல் அவனை இழுத்துச் செடிகள் ஓரமாகப் போட்டுவிட்டு நிச்சிந்தையாக பங்களாவை நோக்கி நடந்தான்.

மூன்று மணி அடித்து ஓய்ந்தது. தேனாம்பேட்டை செங்கல்வராய பிள்ளையின் பங்களாவில் திலகவதி படுக்கையில் எழுந்து உட்கார்ந்தாள். அவளையும் அறியாமல் அவளுடைய உடல் வெடவெடவென்று நடுங்கியது.

அன்றிரவு சம்பவங்கள்—எத்தனை பயங்கரமானவை!- அவள் மனக்கண்முன் ஒரு முறை ஓடின. யாருக்கும் தெரியாமல் அவள் மூவாயிரம் ரூபாயைப் பத்திரப்படுத்தி வைத்திருந்தாள். அவளுடைய தந்தையின் கஷ்டங்களை அவள் நன்கு அறிந்திருந்தாள். என்றோ செய்த குற்றங்களுக்கு அவன் பிராயச்சித்தமாகச் சிறைவாசம் செய்துவிட்டு வந்திருக்கிறான். சமூக விரோதியாகிவிட்டவன் அவன். இன்று அவன் எத்தனை மன்றாடி மன்னிப்புக் கேட்டாலும், உலகம் அவனை நம்ப மறுக்கிறது. திருடன் திருடன்தான். ஒதுங்கி ஒளிந்து வாழவேண்டிய நிர்ப்பந்தம் வந்துவிட்டது. அவன் சங்கடம் அதோடு மட்டும் விட்டபாடில்லை. பழங்கூட்டாளி ஒருவன் அவன் குரல்வளையைப் பற்றிக் கொண்டு விடமாட்டேன் என்கிறான். பணம், பணம், பணம்! தீராத பணதாகம் பிடித்து அலைகிறான் அவன். ஒருமுறை அந்தத் தாகத்தை அடக்கினாலும், மீண்டும் சிறிது நேரத்தில் ஆவேசத்துடன் அந்த 'தாகம்' ஊறிக்கொண்டு கிளம்புகிறது.

ஒரு ஆயிரம் ரூபாயைக் கொடுத்துத் தாற்காலிகமாக மனநிம்மதி பெறலாம் என்றால், குறுக்கே யாரோ ஒருவன் வந்து கைப்பற்றிக்கொண்டு ஓடிவிட்டான். சொல்லவும் மாட்டாமல் மெல்லவும் மாட்டாமல் தவித்த பஞ்சநதத்தை பார்க்கப் பரிதாபமாக இருந்தது. மாடியிலே வந்து பார்த்தாலோ, மீதமி இரண்டாயிரமும் வைத்த இடத்தி லிருந்து மறைந்து போயிருந்தது! யார்மீது அவநம்பிக்கை கொள்வது? போதாக் குறைக்கு இந்தச் சரளா வேறு காவலுக்கு உட்கார்ந்திருக்கிறாள்! 'மூணுக்'கென்றால், பத்து பங்கு பெருகி, சந்துருவின் காதில் போய் எட்டும்.

சரளாவைப் பார்த்தாள். லேசாக மூச்சு இழையிட, ஆழ்ந்த நித்திரையில் இருந்தாள் அவள். மெள்ளப் படுக்கையிலிருந்து இறங்கி, அறைக்கு வெளியே வந்தாள் திலகவதி. சந்தடி செய்யாமல் கதவைச் சாத்திக் கொண்டு மாடிப்படிக்கு வந்தாள். உடல் ஒரு முறை சிலிர்த்தது. முன்பு அந்த இடத்துக்கு வந்தபோதுதான் மாரிமுத்து காத்திருந்தான். இப்போது யாரும் இல்லை என்றாலும், பழைய நினைவு பயங்கர உணர்ச்சியைப் பரப்பியது.

மீதியிருந்த ரூபாய் இரண்டாயிரத்தையும் அவள் வேறொருவருக்காக வைத்திருந்தாள். அந்த நபர் மூன்று மணிக்குப் பெற்றுக்கொள்ள வருவார். அவரிடம் 'பணம் இல்லை' என்று சொல்ல வேண்டும். அவரும், மாரிமுத்து வைப் போலவே, "என்னிடம் கட்டுக்கதையா சொல்லு கிறாய்! இது எந்த ஊர் வேலைத்தனம்?... ஏமாந்து போகிறவன் நான் இல்லை; பணத்தைக் கீழே வைத்து விட்டுப் பேசு!" என்று சொல்லக் கூடியவர்தான். பிடிவாதக்கார மனுஷர்; லேசில் நகர மாட்டார்......

'சரளா' என்கிற அபாயம், நித்திரையிலிருந்து இடையில் விழித்துக் கொள்ளக் கூடாது. எழுந்து பின்பற்றி வந்து விட்டால், நிலைமை சமாளிக்க முடியாததாகிவிடும்...... அடிமேல் அடிவைத்துக் கீழே நடந்தாள் திலகவதி. மாடிப் படிகளைக் கடந்து சுவரோரமாகச் சென்று, மின்சார



விளக்கின் 'ஸ்விட்ச்'சைப் போட்டாள். வெளிச்சம் பரவியது.

அவள் முன் கிடந்த காட்சி, கண்களைப் பிதுங்கச் செய்தன; இதயம் சில்லிட்டது.

இரண்டு பேர்வழிகள் ஒருவரை யொருவர் எதிர்த்து நின்று கொண்டிருந்தார்கள். ஒவ்வொருவர் கண்களிலும் ஆத்திரமும் பொறாமையும் ஜுவாலை விட்டெரிந்தன. ஒருவரையொருவர் தீர்த்துக் கட்டிவிட வேண்டும் என்ற எண்ணத்துடன் இருப்பவர்களாகத் தோன்றியது.

ஒருவர் மதுரநாயகம்; மற்றவன் கணேசன்.

விளக்கு ஏற்றப்பட்டதும் இருவரும் தங்கள் கோபக் கண்களைத் திலகவதியின் பக்கம் சட்டென்று திருப்பி னார்கள். மூவர் வாயிலும் வார்த்தை எழவில்லை.

"திலகவதி! பேசாமல் உள்ளே போ!" என்று கர்ஜித்தார் மதுரநாயகம், சற்றுப் பொறுத்து.

"நானும் அதையேதான் சொல்ல விரும்புகிறேன். இங்கே நடக்கப் போவது எங்கள் சொந்த விஷயம்" என்றான் கணேசன்.

"இது என்னங்க!" என்று மிகுந்த சிரமத்துடன் திலகவதி கேட்டாள். இருவரையும் விரோதித்துக் கொள்ள முடியாத நிலையில் அவள் இருந்தாள் என்பது, முகத்தில் பரவிக் காணப்பட்ட பரிதாபத் தோற்றத்தினால் விளங்கியது.

"இவன் ஒரு அயோக்யன்!" என்றான் கணேசன்.

"நீங்கள் சற்று—"

"இவனை வெளியே போகச் சொல்லுங்கள், முன்னாடி!"

"அயோக்யன் வெளியே போகவேண்டும் என்றால், நீயே முன்னாடி போய்விடு!" என்றார் மதுரநாயகம்.

"பல்லை உதிர்ப்பேன்!" என்றான் கணேசன்.

"எனக்குத் தெரிந்த வித்தைதான் அதுவும்!" என்றார் மதுரநாயகம்.

''இரண்டு பேர் பேர்சையும் பரீட்சை பார்த்துவிட லாமே?'' என்று கணேசன் மறுபடி சட்டையை மடக்கிக் கொண்டான். மதுரநாயகம் சளைக்கவில்லை; அவரும் சட்டையை மடக்கிக் கொண்டார். தவிர்க்க முடியாத ஒரு சண்டையை அங்கே காண வேண்டி வரும் நிலைமை நெருங்கிக் கொண்டிருந்தது.

அந்தச் சமயம் தடதடவென்று வாசற்கதவு இடிக்கப் பட்டது. ''கொஞ்சம் கதவைத் திறக்கிறீர்களா!'' என்ற தீர்க்கமான குரல் கேட்டது.

மறுபடி மூவரும் ஸ்தம்பித்து நின்றார்கள். குரலைப் பற்றி சந்தேகமே இல்லை. மூவருக்கும் பரிச்சயமானது அது. ஸி. ஐ. டி. சந்துருவினுடையது! தெம்பும் அழுத்தமும் அதிலே தொனித்தன. கட்டாயம் கீழ்ப்படிந்து தான் ஆகவேண்டும்.

திலகவதி வாசற் கதவைத் திறப்பதற்கு இரண்டு அடி எடுத்து வைத்தாள். கணேசன் ஒரு பக்கமும், மதுரநாயகம் ஒரு பக்கமுமாக விரைந்து சென்று மறைந்தார்கள்.

மாடியில் உறங்கிக் கொண்டிருந்த சரளா வாசற்கதவு இடிக்கப்படும் சப்தமும் சந்துருவின் குரலும் கேட்டு விழித்துக் கொண்டாள். முதல் காரியமாகத் தன் தலையணையின் அடியில் கை வைத்து நோட்டுக் கட்டுகள் மூன்றும் இருக்கின்றனவா என்று துழாவினாள். கைகளில் எதுவும் தட்டுப்படவில்லை. படுக்கையிலிருந்து குதித்து விளக்கைப் போட்டுத் தலையணையைப் புரட்டிப் பார்த்தாள். காலி!

ஒருகால் கட்டில் அடியில் விழுந்திருக்குமோ என்று பல முறைகளும் தேடினாள். எங்குமே இல்லை.

உதட்டைக் கடித்துக் கொண்டு யோசனை செய்தாள். ஒருவேளை மூன்று கட்டுகள் இருந்தது கனவு தானோ என்ற சம்சயம் அவளுக்குத் தோன்றியது. ஆனால், அப்படி இருக்க முடியாதே! திலகவதிக்குப் பணம் பறிபோன தெல்லாம் உண்மை ஆயிற்றே!

வாசற் கதவு மீண்டும் இடிக்கப்பட்டது.

# மாரிமுத்துவின் விளையாட்டு

''நான் கணேஷ் அண்ணா இல்லை!'' என்ற பதில் கிடைத்ததும் இந்திரா திகைத்துப் போனாள். ஈச்வர னுடைய சிருஷ்டியில் ஒரு மனிதனைப் போல் மற்றொரு மனிதன் இருப்பதில்லை; இரட்டைப் பிள்ளைகளானாலும் கூடச் சிறிது வித்தியாசம் இருக்கத்தான் இருக்கும்.

இப்போது டாக்ஸியில் தன் அண்ணன் கணேசன் என்று அவள் நம்பி உடன் வந்த ஆசாமியை நன்றாக உற்றுப் பார்த்தபோது அவள் மனத்தில் ஒரு திகில் பிறந்தது. இது வரை அவள் காணாத ஒன்றைக் கண்டாள். 'கணேச அண்ணா'வின் நெற்றியில் இடது புருவத்திற்கு மேல் இரண்டங்குலம் நீளத்தில் ஒருவடு இருக்கும். குழந்தையாக இருந்த காலத்தில், கணேசன் தவழ்ந்து சென்று வாசற் படியில் தவறி உருண்டு விழுந்ததாகவும், அடியில் இருந்த ஒரு சந்தனக்கல் பட்டு ஆழமாக வெட்டிவிட்டதாகவும், அதன் பலனாக இந்த வடு ஏற்பட்டதென்றும் பல முறை சொல்லக் கேட்டிருக்கிறாள்.

அவளை அழைத்துச் சென்ற ஆசாமி தத்ரூபம் கணேசனைப்போலவே இருந்தான். மூக்கு, கண், உதடுகள், கன்னம் எல்லாம் கணேசன்தான். ஏன், தலையில் கிராப்பை வாரிவிட்டுக் கொண்டிருந்ததுகூட அவனைப் போலவே இருந்தது. இருட்டிலே, நெருக்கடியான சந்தர்ப்பத்தில் அவனைப் பார்த்தாள். ஆகையால், கணேசன் என்றே நம்பினாள். குரலில் சற்றே கரகரப்பு—அதை அவள் கவனிக்கவில்லை. ஆனால், எத்தனை எத்தனையோ வருஷங்களாக மறையாமல் இருந்து வரும் வடு, எப்படி திடீர் என்று மறைந்துபோகும்! மோட்டார் வண்டி ஒவ்வொரு லாந்தல் கம்பத்தையும் தாண்டிச் செல்லும் போது, உள்ளே 'பளிச்' 'பளிச்'சென்று வெளிச்சம் அடித் தது! அப்போது அந்த ஆசாமியின் முகமும் பிரகாசமாகத்

தெரிந்தது. ஒவ்வொரு தரமும் இந்திரா நெற்றியைக் கவனித்தாள். அந்த வடுவைக் காணோம்!

அப்படியென்றால் இவன் யார்? சில தினங்களாகவே கணேசன் வீட்டில் சந்திக்காததை அவள் ஞாபகப்படுத்திக் கொண்டாள். சந்தித்தாலும் நல்ல வெளிச்சத்தில் நேருக்கு நேர் நின்று அவன் பேசவில்லை. வேண்டும் என்றே அப்படி அவன் இருந்திருப்பானோ? அப்படியானால், அவள் அண்ணன் எங்கே? அவன் ஸ்தானத்தில் இந்தப் புதிய ஆசாமி ஏன் வந்து உட்கார்ந்து கொண்டிருக்கிறான்? தோல்பை திருட்டு, சிறிய தகப்பனார் காணாமல் போனது, அவளுடைய பல சங்கடங்கள், இவைகளில் இவனும் சம்பந்தப்பட்டவனாக இருப்பானா?

'பளீர்' என்றதொரு நினைவு வந்தது. கணேசனின் அறையில் நடந்த சண்டை அது! அண்ணன் கணேசனுக்கும் இந்தப் போலிப் பேர்வழிக்கும் நடந்த சண்டையாக இருக்குமோ அது? ஏன் இருக்காது? கணேச அண்ணனை விரட்டி விட்டு அவன் ஸ்தானத்தில் இவன் இருக்கிறானோ?

இந்திராவின் யோசனைகளையெல்லாம் அந்த ஆசாமி அப்படியே தெரிந்து கொண்டவனாக இருக்க வேண்டும்.

''என்ன யோசனை செய்கிறாய்! இவன் யார், எங்கிருந்து முளைத்தான் என்று தானே? அதெல்லாம் பெரிய விஷயங்கள். பெரிய விஷயங்களில் நீ சம்பந்தப்படக் கூடாது என்றுதான் சுந்தரம் பிள்ளை உன்னைக் கொண்டு வர ஏற்பாடு செய்தார். ஆனால், அவருக்கு வேறு எண்ணங்களும் திட்டங்களும் உண்டு. அவர் காரியங்கள் எல்லாமே தவறி நடந்து விட்டன. எனக்கு நீ பெரிய விஷயங்களில் தலையிடுவதில் இஷ்டம் இல்லை. உன்னை நான் ஒரு காரணத்திற்காக இப்போது 'காப்பாற்றி' அழைத்துக் கொண்டு வருகிறேன்...''

''என்ன காரணமோ அது?'' என்று கேட்டாள் இந்திரா.

''ஆதிகாரணம் அது. நான் அதைஇப்போது வெளியிட முடியாது. உன் சித்தப்பா விடுதலையாகி வந்த பிறகு



அதைச் சொல்லுவார். அதுவரை எங்களுடைய விருந்தினராக நீ இருக்க வேண்டும். உன்னை மட்டும்தான் அழைத்து வருவதாக என் ஏற்பாடு. இதோ இந்த அம்மாள் ஒரு காகிதத்தைச் சுருட்டி என்மேல் விசி எறிந்து, உதவி கேட்டார்; அப்புறம் உன்னுடன்கூட எனக்கு வேறு அவரையும் சேர்த்துக் கொள்வதைத் தவிர வந்துவிடலே வழி இல்லாமல் போய்விட்டது. இனி அவர் உன்னை விட்டுப் பிரிந்திருப்பது முடியாத காரியம்!'' என்று சிரித்தான்.

''நீங்கள் யார் என்று சொல்லலாம் அல்லவா?...''

''உன் அண்ணன் மாதிரி ஒருவன் என்று வைத்துக் கொண்டு விடலாமே! என்னால் ஒரு தொந்தரவும் இருக்காது.''

''என் அண்ணன் எங்கே இப்போது?''

''பரீட்சையில் நூற்றுக்கு நூறு மார்க்கு வாங்குகிற பழக்கமும் எனக்கு இல்லை! விருப்பமும் கிடையாது. ஆகையால் பாதிக் கேள்விகளுக்குப் பதில் சொல்லி விடுவேன், இது நான் பதில் சொல்ல முடியாத கேள்வி.''

''என்னை எங்கே அழைத்துக்கொண்டு போகிறீர்கள்?''

''நான் பதில் கூறாமலேயே தெரிந்து போய்விடப் போகிற சமாசாரம் அது!... தேனாம்பேட்டை பங்களாவுக்கு இப்போது போக முடியாது......... இன்னும் இரண்டு தினங்களுக்கு அந்தச் சிந்தனையே செய்யக் கூடாது...''

''நீங்கள் செய்கிறது மிகமிக அடாத காரியம்!''

''அது உன் அபிப்பிராயம் மட்டும் இல்லை. சுந்தரம் பிள்ளை அவர்களைக் கேட்டாலும், அப்படியே சொல்லுவார்; ஸி. ஐ. டி. சந்துருவும் கிளிப்பிள்ளை மாதிரி அதையே திருப்பிச் சொல்லுவார்... ஒரு வேண்டுகோள்; தயவுசெய்து என்னை மேலும் கேள்விகள் கேட்டுக் கொண்டிருக்க வேண்டாம்.''

''ஏன்? நீங்கள் செய்கிற நியாயமான காரியத்திற்கு—''

''அம்மணி! ஏதேனும் கேள்வி கேட்டு, என்னைப் பொய் சொல்லும்படி தூண்டாதே!'' என்றான் அவன்.

இதுவரை மௌனமாக ஒரு மூலையில் ஒண்டிக்கொண்டிருந்த சுந்தரி ஒரு பெருமூச்சு விட்டாள். சுந்தரம் பிள்ளையிடமிருந்து தப்பி வந்ததில் அவளுக்கு ஆனந்தம் சொல்லி முடியாது. வேறு வெளியே என்ன அபாயம் ஏற்பட்டாலும், அது சுந்தரப் பிள்ளை கொடுக்கும் தண்டனையைவிட அற்பமாகத்தான் இருக்கும். இப்போது அவள் பிரார்த்தனையெல்லாம், வேறெங்கு என்ன கஷ்டப்பட்டாலும் மறுபடி நாயர் காவலில் சிக்கிக்கொள்ளக் கூடாது என்பதுதான். "பாவி, எத்தனை பொல்லாதவன் அவன்!"—அவள் உடல் நடுங்கியது.

கணேசனைப்போல் இருந்த ஆசாமி அவளைப் பார்த்து நகைத்தான். "உங்கள் கஷ்டம் எனக்குத் தெரியும். சுந்தரம் பிள்ளை அடிக்கடி கூறும் பாழுங் கிணற்றை ஏமாற்றிவிட்டு வருகிறீர்கள் இல்லையா? அதில் திருப்தி தானே?" என்று கேட்டான்.

சுந்தரி பதில் சொல்லவில்லை. அவன் தொடர்ந்து, "நீங்கள் ஒன்றும் பேசத் தேவை இல்லை. நான் கொண்டு சேர்க்கும் இடத்தில் கலாட்டா செய்யாமல் இருந்தால், தானாக விடுதலை கிடைக்கும். இடையில் ஏதேனும் விஷமம் செய்தால்தான் ஆபத்து?" என்றான்.

சுந்தரியின் மனத்திற்குள் அவன் பேச்சில் நன்மை இருப்பதாகத் தோன்றியது. சுந்தரம் பிள்ளைக்கு அபாயம் நெருங்கியிருக்கிறது; அவர் அகலக் கால் வைத்து விட்டார்; அதிக எதிரிகளைச் சம்பாதித்துக் கொண்டு விட்டார். அவர் ஆட்களே அவரைக் கைவிடுகிறார்கள். நாயர் ஒருவனே அவரை கவிழ்த்துவிடக் கூடும். தவிர—அவள் உள்ளம் பூரித்தது!—'தம்பி' அவள் கட்சியில் வேலை செய்கிறான். விரைவில் சுந்தரம் பிள்ளையை நிர்மூலம் செய்துவிடுவதென்று கங்கணம் கட்டிக்கொண்டிருக்கிறான். அதனால், அவளுடைய பயம் விரைவில் நீங்கிவிடும்—

'டாக்ஸி நின்றது. அவர்கள் மூவரும் இறங்கினார்கள். இதுவரை இந்திரா டாக்ஸி டிரைவரைச் சரியாகக் கவனிக்கவில்லை. அவனும் தலையில் ஒரு பெரிய முண்டாசுக் கட்டி



யிருந்தான்; கழுத்தைச் சுற்றிக் கட்டியிருந்த மப்ளரும் அடி முகவாய்க் கட்டை வரை மறைத்தது. ஒரு வார்த்தைகூடப் பேசாமலே மௌனமாக வந்திருந்தான். ஒரே ஒரு சமயம் மட்டும் உண்டு அவனுக்கு. 'டாக்ஸி'யில் அவர்கள் ஏறும் போது என்ன இடத்திற்குப் போக வேண்டும் என்ற பேச்சே அவர்களிடையில் பேசப்படவில்லை; டிரைவரும் அவர்களை எதிர்பார்த்தவன் போலவே காத்திருந்தான்; இதெல்லாமே போலி கணேசனுடைய முன்னேற்பாடாக இருக்கலாமோ என்று அவள் எண்ணினாள்.

இப்போது விடை பெற்றுக் கொள்ளும்போது அவன் தன்னையும்மறந்து, "பதினைந்து நிமிஷத்தில் வருகிறேன், ஸார்!" என்று கூறி, டாக்ஸியை நகர்த்தினான். வாயை மூடியிருந்த துணியின் வழியே வந்த சொல் எனினும் இந்திராவுக்கு 'இந்தக் குரலை எங்கேயோ கேட்டிருக்கிறோம்' என்ற சந்தேகம் பிறந்து விட்டது... எங்கே? எங்கே?

இருட்டில் டிரைவரின் முகம் துளிக்கூடத்தெரியவில்லை. அந்தக் குரல் ஏன் அப்படிப் பரிச்சயமானதாக இருக்கிறது?

சுந்தரியும் இந்திராவும் வீட்டினுள் அழைத்துச் செல்லப்பட்டார்கள். யாரும் அங்கே குடியில்லை. ஓட்டடையும் குப்பையும் மண்டிக் கிடந்தன. மூன்று கட்டுள்ள பெரிய வீடு அது. நடுக்கட்டில் கல்யாணக் கூடம் ஒன்று இருந்தது; உயரே நாலாபுறமும் ஜன்னல்கள்; அவற்றின் வழியே ஆகாசமும், நட்சத்திரங்களும் தெரிந்தன. வீட்டிற்கு மாடி இல்லை என்பதை இந்திரா ஊகித்தாள்.

போலி கணேசன் ஓர் அறையைத் திறந்தான். "இது உங்களுக்காகத் தயாராகியுள்ள தனியான அறை; சௌக்கியமாக இருக்கலாம். மேஜை நாற்காலிகள் இருக்கின்றன!" என்றான்.

இரு ஸ்திரீகளும் அந்த அறையை நோக்கி நகரவில்லை.

"உங்கள் இருவரையும்தான் அதில் தங்கியிருக்கும்படி மிகவும் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன். எனக்கு

இன்று இரவு வேறு சில முக்கியமான அலுவல்கள் இருக்கின்றன. உடனே போக வேண்டும்'' என்றான் அவன்.

''எங்கள் சௌகரியம்போல் இருந்துகொள்கிறோமே!'' என்றாள் இந்திரா சிறிது மிடுக்காக.

''அப்படி இல்லை. நான் இல்லாத சமயம் இந்த அறையைப் பூட்டிக்கொண்டு போக வேண்டியிருக்கிறது.''

''அப்படியானால் இது எங்கள் சிறை என்று சொல்லுங்கள்!''

''அப்படியும் இல்லை. உங்களுக்குச் சிறைச்சாலை தேவையா, மயக்க மருந்து தேவையா என்று சொன்னால் அதன்படி நடந்து கொள்கிறேன். நான் இல்லாத சமயம் இங்கே எந்தவிதக் கலாட்டாவும் நடக்கக் கூடாது...''

''எங்கள் வார்த்தைகளில் நம்பிக்கை இல்லையா உங்களுக்கு?''

''வேண்டிய நம்பிக்கை இருக்கிறது. ஆனால், வெளி உலகத்தின் மீதுதான் நம்பிக்கை இல்லை... தாமதம் செய்யாமல் தயவு செய்து அந்த அறைக்குள் போகலாமா? நின்று அளவளாவிக்கொண்டிருக்க விருப்பம்தான்; ஆனால் நேரம் இல்லையே!'' என்றான்.

இந்திராவும் சுந்தரியும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள். 'பொழுது விடியும் வரை சொன்னபடி செய்து விடுவதே நலம்' என்று அவர்களுக்குள் ஒரு எண்ணம் அந்தப் பார்வையின் மூலம் பரிமாறிக் கொள்ளப் பட்டது. போலி கணேசன் அறையைப் பூட்டிக்கொண்டு வெளியேறினான்.

அறைக்குள் அடைக்கப்பட்ட இந்திராவின் மனத்தில் திரும்பத் திரும்ப டாக்ஸி டிரைவரின் குரல் ஒலித்துக் கொண்டே இருந்தது. சட்டென்று மின்னல் வேகத்தில் ஒரு சந்தேகம்! அப்படியும் இருக்குமா? இருககாது!—ஏன் இருக்காது? இந்தக் காலத்தில் யாரை நம்புவது?... அந்தக் குரல் அவள் வீட்டு டிரைவர் கன்னையனுடையது போலவே இருந்தது. ஏன், இப்போது நினைத்துப் பார்க்கும்போது உருவம்கூட, கிட்டத்தட்ட அவனுடையதுதான்...



அத்தனை தைரியமாக அவன் அங்கே வருவானா? 'சிறையில் தள்ளவும் எதிரியின் உளவாளியாக இருக்கவும், அவன் மனம் ஒப்புமா?'—மனத்தைக்குழப்பிக்கொண்டாள். பழைய நினைவு ஒன்று மேலே மிதந்து வந்தது.

முதன் முதலாக, அவள் நாராயணனுடன் ஸி. ஐ. டி. சந்துருவின் வீட்டுக்குச் சென்றாள். அப்போது காரை ஓட்டி வந்தவன் இந்தக் கன்னையன்தான். அவனைப் பார்த்ததும் சந்துரு எடுத்த எடுப்பில், இந்திரா பேசத் தொடங்குமுன், டிரைவரை உற்றுப் பார்த்து, ''உன்னை நான் இதற்கு முன் எங்கேயோ சந்தித்திருக்கிறேன், இல்லையா?'' என்று கேட்டான்.

டிரைவர் முகம் சிறிது மாறியது. ''இருக்க முடியாதுங்க! நான் இந்தப் பக்கமே இல்லை!'' என்று பதில் சொன்னான். ''ஓ! அப்படியானால் நீ கந்தப்பன் இல்லை. கந்தப்பன் என்று எனக்குத் தெரிந்த ஓர் ஆசாமி உண்டு. கிட்டத்தட்ட உன்னைப் போலவே அவனும் இருப்பான்'' என்று சொன்னான். இந்திராகூட, ''இவ்வளவு பெயர் போன ஒரு துப்பறிபவன் எதற்காக ஒரு தவறான ஹேஷ்யம் செய்தான்!'' என்று ஆச்சரியப்பட்டாள் ஏதோ ஒரு காரணமாக இப்படிப் பேசுகிறான் என்று மனத்தை ஆறுதல் செய்துகொண்டாள்.

இந்திரா இதை நினைவுபடுத்திக்கொண்டாள். அன்றே சந்துரு கன்னையனைச் சந்தேகித்திருக்கிறானே; அவன் ஏன் துஷ்டனாக இருக்கக் கூடாது? எதிரியின் கையாளாக ஏன் இருக்கக் கூடாது?

இன்னொரு சம்பவம் அடுத்தாற்போல் நினைவுக்கு வந்து விட்டது.

அன்றிரவு அண்ணன் கணேசன் அறையில் மூர்ச்சையாக விழுந்து கிடந்தான். மேஜையின் முனை நெற்றிப்பொட்டில் பட்டுவிட்டது என்று சாக்குச் சொன்னான். சந்துரு அவனை மடியில் எடுத்துப் போட்டுக்கொண்டு எல்லாரையும் கேள்விகள் கேட்டுக்கொண்டிருந்தான். மதுரநாயகம் கூடச் சந்துருவிடம் அன்று சிறிது கடுமையாகப் பேசினார்;

சந்துருவும் தமாஷாகவே அவரை அடக்கினான். அந்தச் சந்தர்ப்பத்தில் டிரைவர் கன்னையன் வந்து நின்று, "என்னை அழைத்ததாகச் சொன்னாங்க!" என்று சந்துருவைப் பார்த்து உறுமினான்.

"ஆமாம்; காரில் நான் ஒரு காகிதத்தைத் தவறிப் போட்டு வந்துவிட்டதாக எண்ணிவிட்டேன். நல்லவேளை, அது என் பையிலேயே இருக்கிறது!... அவ்வளவுதான் விஷயம்!" என்று சந்துரு பதில் சொல்லி அவனை அனுப்பி விட்டு, அவன் தலை மறைந்ததும், "கன்னையன் ஒரு அற்புதமான ஆள். அவனை எங்கேயோ நான் சந்தித்திருக் கிறதாக ஞாபகம்!" என்று மறுபடி சொன்னான்.

கணேசன் சுறுசுறுப்பாக எழுந்து, "நீங்கள் இதற்கு முன் கன்னையனைப் பார்த்திருக்கிறீர்களா? எங்கே? எப்போது?" என்று வினவினான்.

சந்துரு பாதி குறும்பாக, "இந்த வீட்டுக்கு வந்ததும் எனக்கு 'ஞாபக மறதி' என்ற வியாதி பற்றிக்கொண்டு விட்டது. உடனே சொல்லத் தெரியவில்லை! மகா மேதாவி கன்னையன், நான் ஆள் அனுப்புமுன்பே 'என்னை அழைத் தீர்களா?' என்று கேட்டுக் கொண்டு வந்துவிட்டான் பாருங்கள்!" என்றான்.

இந்த இரு சம்பவங்களையும் இந்திரா ஞாபகப் படுத்திக் கொண்டாள். சந்துரு ஆரம்ப முதலே கன்னையனைச் சந்தேகிக்கிறான். முதலில் அவன் எதிரில் விஷயங்களைப் பேச யோசனை செய்திருக்கிறான்; இரண்டாவதாக, தான் சொல்லி அனுப்பும் முன் அவன் வந்ததைக் குறிப்பிட்டிருக்கிறான். இன்று போலி கணேசனும் கன்னையனும் நண்பர்கள் என்று தெரிகிறது. அன்று கணேசன் அடிபட்டு விழுந்த சமயம் கன்னையன் ஓடி வந்தான் என்றால், எதற்காக வந்தான்? இந்திராவின் மனத்தில் ஒரு புதிய எண்ணம் உதயமாகி விட்டது.

கணேசன் அறையில் அப்போது ஏதோ ஒரு சம்பவம் நடக்கும் என்று எதிர் பார்த்திருக்கிறான் கன்னையன்



அதன் விளைவு என்ன என்று அறிய வேண்டும் அவன். சந்துரு அந்தச் சமயம் அங்கே இருப்பான் என்பதை அவன் எதிர் பார்க்கவில்லை. அவளும் நாராயணனும் சென்று சந்துருவை அழைத்து வந்தது, அவனுக்குக் கவலையையே மூட்டியிருக்கிறது. மேலும், சந்துரு அவனை அடையாளம் கண்டு கொள்வதாகச் சொன்னதும் சிறிது வேதனைப் படுத்தியிருக்கிறது. இப்போது மாடிக்குச் சென்று பார்க்க வேண்டும் என்ன நடந்திருக்கிறதென்று. எனவேதான், 'என்னைக் கூப்பிட்டீர்களாமே!' என்று கேட்டுக் கொண்டு வந்திருக்கிறான்.

இந்திரா மனத்தைத் துழாவித் துழாவிப் பார்த்தாள்— அன்று கீழே கிடந்தது கணேசனா? அல்லது போலி கணேசனா? அவளால் சொல்ல முடியவில்லை. அண்ணா அடிபட்டுக் கீழே கிடந்தான் என்றவுடன் பதட்டம் கொண்டு விட்டாள் அவள் அந்தப் பதட்டத்தில் அவளுடைய வழக்கமான நிதானமும் கவனமும் ஒதுங்கி யிருந்தன. சந்துரு என்ன நினைத்தான் என்று சொல் வதற்கு முடியாது. அவள் அப்போது தானே முதல் முதலாகக் கணேசனையே பார்க்கிறாள்! அதுவும் அவனை 'அண்ணா!' என்று அழைக்கும்போது எப்படி சந்தேகம் கொள்ள முடியும்!

சுந்தரியின் சிந்தனை வேறு வகையில் சுழன்று கொண் டிருந்தது. சரியான சமயத்தில் 'தம்பி' அவளைக் காப்பாற்றி விடுதலை வாங்கித் தர வந்தான்; சுந்தரம் பிள்ளையிடம் அவளைப் போலவே அவனுக்கும் அபாயம் உண்டு. எனவே, அவன் அவளுடைய கட்சியைச் சேர்ந்தவனாகிறான்.

இந்தச் சந்தர்ப்பத்தில் அவளுக்கு ஒரு சிறிது சந்தேகம் எழுந்தது. 'தம்பி'யை அப்படிப் பூர்ணமாக நம்பி விடலாமா? சுந்தரம் பிள்ளையிடம் மறுபடி சரணாகதி யாகி, அவளைக் கை விட்டு விட்டால்! சுந்தரம் பிள்ளையே அப்படி அவளைத் தம் வழிக்குக் கொண்டுவர முயன்றால், இதெல்லாம் எதிரிகள் கையாளும் சாணக்கியங்கள் தானே!... இல்லை; நாயர் இருக்கும்வரை அவர் ஒருபோதும்

'தம்பி'யை அணுக விடமாட்டார். 'தம்பி'யை அழிப்பதி லேயே கண்ணும் கருத்துமாக இருப்பார்.

அவள் ஊகம் மேலும் தொடர்ந்து பாதை வகுத்துக் கொண்டு சென்றது. ஒருகால் 'தம்பி' சுந்தரம் பிள்ளை யிடம் சிக்கிக்கொண்டு விட்டால், அவளைக் காப்பாற்று பவர் யார்? அவள் போகும் இடம் எது? அல்லது, 'தம்பி' அவருடைய வலையில் விழுந்து அவளை மறந்துவிட்டால்? பணத்தைக் கண்டதும் கொள்கைகளை மாற்றிக்கொள்ளும் பரம்பரை ஆயிற்றே 'தம்பி'!

தேனாம்பேட்டை பங்களாவிலிருந்து அவசர அவசர மாக வெளியேறிய பஞ்சநதமும் மாரிமுத்துவும், சுமார் இரண்டு பர்லாங்குகள் நடந்து வரும்வரையில் ஒன்றும் பேசவில்லை. மாரிமுத்துவுக்கு இருந்த கோபம், வார்த்தைகளைத் தடைசெய்து அமுக்கியது; பஞ்சநதத்தின் பயம் அவன் வாயை அடைத்துவிட்டது!

கடைசியில் மாரிமுத்துதான் மௌனத்தைக் கலைத்துப் பேசினான்; ''ஏன் ஐயா, என்னமோ 'பணம் கொடுத்து விடுவாள், நிச்சயம், சத்தியம்' என்றெல்லாம் அடுக்கி னாயே! எங்கே ஐயா பணம்? கடைசியில் உனக்கு மேலே எத்துக்காரியாக இருக்கிறாள் அவள்! உன் மகள் இல்லையா?'' என்று கேட்டான் மாரிமுத்து.

''அதெல்லாம் இல்லை... கொடுப்பதாகத் தானே சொல்லிவிட்டுப் போனாள் அவள்! அவன் இருந்தால் கண்டிப்பாகக் கொடுத்திருப்பாள்!'' என்றான் பஞ்சநதம்.

''ஏய்! யார்கிட்டே இந்தக் கதை என்கிறேன்! முதலில் உன் கையிலிருந்து யாரோ பணத்தைப் பற்றிக்கொண்டு போனதாகச் சொல்லிக்கொண்டு வந்தாய். அதுவே நம்ப முடியாத கதை. உன்னையும் என்னையும் தவிர, அங்கே திருடன் யார் வரப் போகிறான். உடனே மாடியில் பணம் திருட்டுப் போய்விட்டதாகச் சரடு விட்டு நடிக்கிறாள் உன் மகள்...... பொய் சொல்கிறதற்கு ஒரு அளவு வேண்டும், ஐயா!''



''இப்படியே நீ பேசிக்கொண்டு வந்தால், நான் என்ன பதில் சொல்லுகிறது?''

''ஒன்றும் நான் எதிர்பார்க்கவே இல்லை. எனக்குப் பணத்தை எடுத்துக் கொள்ளத் தெரியும் என்றுதான் எச்சரிக்கை செய்கிறேன். நான் எடுத்துக் கொள்ள ஆரம்பித்தேனோ, ஒரு பங்குக்குப் பத்து பங்கு எடுத்து விடுவேன்! அப்புறம் குறை கூறி மூக்கால் அழுது ஒரு பலனும் இல்லை... எந்தத் தலை குறுக்கே வந்தாலும் போட்டு விடுவேன் போட்டு! ஆமாம்!''

''அதை நீ எனக்குச் சொல்ல வேண்டியதில்லை. என் மகளுக்கும் சொல்ல வேண்டியதில்லை; அவள் கையில் இருந்தாலும் உன்னிடம் கொடுத்து விடுவாள்; என் கைக்கு எட்டினாலும் வைத்துக்கொண்டிருக்க மாட்டேன்...''

பொறுமை இழந்த மாரிமுத்து, ''அட சட்! சும்மா இரு ஐயா!'' என்றான்.

பிறகு இருவரும் பேசாமல் நடந்தார்கள். மாரிமுத்து வுக்கு அநேக கவலைகள். பணமுடை அவனை முக்கியமாக வருத்தியது. பஞ்சநதத்தின் நெஞ்சில் பாறாங்கல் சுமை வைத்ததுபோல் இருந்தது. ஒருபுறம் அவனுக்கு மாரிமுத்து வின் பிடுங்கல்; மற்றொன்று, அவனுடைய மகளைப்பற்றிய கவலை. அவளாவது நிம்மதியாக வாழ்வாள் என்று எதிர் பார்த்தான். அதற்கு ஆயிரம் குந்தகங்கள். அந்த வீட்டி லேயே புருஷன் சரியாக இல்லை. மற்றவர்களின் துவேஷம்; தந்தையாகிய அவனாலும் அவளுக்கு அமைதிக் குறைவு. போலீஸ் நடமாட்டம்...... ''இந்த மாரிமுத்துவை எறிந்து பேசிவிட்டால்தான் என்ன! எத்தனை நாளைக்கு இவனோடு தொல்லை! என்ன செய்து விடுவான் நம்மை? அப்படியே கொன்று போட்டாலும் போடட்டுமே; என் மண்டையோடு எல்லாத் தொல்லைகளும் தீரட்டுமே?''

சமயத்தில் கோழைகளுக்குக்கூட அசாத்திய தைரியம் பிறந்துவிடும், பஞ்சநதத்தைச் சூழ்ந்திருந்த தொல்லைகள் இந்தத் துணிச்சலை வளர்த்து விட்டன. ஆனால் அவனுக்குப் பேச அவகாசம் கிடைக்கவில்லை.

சட்டென்று மாரிமுத்து ஒரு வீட்டு வாசலில் நின்றான். பஞ்சநதத்தின் கையைப் பிடித்து, "இந்தா! உனக்குத்தான் உடம்பில் ரத்தம் இல்லை; மனத்தில் தைரியம் இல்லை. நீ என்னுடன் வர வேண்டாம். இந்த வீட்டை எனக்குத் தெரியும்; இதில் யாரும் இல்லை. நீ உள்ளே போய் இரு... ஒன்றும் பயப்படாதே; இது காலி வீடுதான்!...நான் மட்டும் போய் அடுத்த தெருவில் ஒரு வேலை செய்து கொண்டு திரும்புகிறேன் ஒருவேளை எனக்கு ஏதேனும் ஆபத்து என்றால், நீ வெளியே தலை காட்டவே வேண்டாம்; தெரிந்ததா? அல்லது, நான் முன்னாடி ஓடி வந்தேன் என்றால், நீ தயாராகக் கதவைத் தாழ்ப்பாள் போடாமல் வைத்திரு நான் வந்து சேர்ந்து கொள்கிறேன்......" என்று கூறிவிட்டு, அந்த வீட்டு வாசற் பூட்டைத் திறந்து பஞ்சநதத்தை உள்ளே அனுப்பினான். பிறகு தெருவில் ஓரமாக விசையுடன் நடந்து சென்றான்.

பஞ்சநதம் அந்த வீட்டிற்குப் புதிது மாரிமுத்துவிடம் பழகிப் பழகி, ஊரிலுள்ள காலி மனைகள் எல்லாம் தன்னுடையது என்றதொரு உணர்வு மட்டும் அவனுக்கு உண்டு. ஆகையால் ஒருவித சுவாதீனத்துடன் உள்ளே சென்றான். முன் கட்டு விளக்குகளை எல்லாம் போட்டுப் பார்த்தான். எங்கும் தூசும் தும்பட்டையுமாக இருந்தது. கீழே சிறிது கவனித்துப் பார்த்தபோது, பல காலடிச் சுவடுகள் தென்பட்டன. வெகு சமீபத்தில் யாரோ அங்கிருந்து போயிருக்க வேண்டும்; சுவடுகள் அவ்வளவு ஸ்பஷ்டமாக இருந்தன.

"மாரிமுத்து அதைக் காலி வீடு என்று எண்ணிக்கொண்டிருக்கிறான். ஆனால் ஜன நடமாட்டம் இருந்திருக்கிறது." பஞ்சநதம் தனக்குள் சிரித்துக் கொண்டான். மாரிமுத்து என்ற மூளை கெட்ட திருடனுக்கு அவன் இப்போது பயந்து நடுங்க வேண்டியிருக்கிறது! சொன்னபடி கேட்க வேண்டியிருக்கிறது! என்ன துர்ப்பாக்கியம்!

சுமார் அரை மணி வரை அங்கேயே தங்கி மாரிமுத்து திரும்புவானா என்று காத்திருந்தான். அவன் வருகிற வழியாக இல்லை. காத்திருக்கும் நேரத்தில், வீட்டை ஒரு



முறை சுற்றிப் பார்த்தால் என்ன? விளக்குகளை அணைத்து வெளிக் கதவைத் தாளிடாமல் விட்டு விட்டு, உள்ளே சென்றான்.

கல்யாண கூடத்திற்கு வந்தான். "இதுபோன்ற ஒரு வீடு சென்னைப் பட்டணத்தில் ஏன் காலியாக இருக்க வேண்டும்? மூன்று கட்டுக்கும் இருநூற்றுப் பத்து ரூபாய் வாடகை வாங்கலாமே!" என்று எண்ணினான். சின்ன திருடர்களை விசாரணை செய்து சிறையில் தள்ளும் சர்க்கார், அநியாய வீட்டு வாடகை வாங்கும் வீட்டுக்காரர்களை மட்டும் ஏன் விட்டு வைத்திருக்கிறது!

பஞ்சநதத்தின் எண்ணங்கள் தடைப்பட்டு நின்றன. அவன் காதில் பேச்சுக் குரல் விழுந்தது. சுற்றிச் சுற்றிப் பார்த்தான். சாவி மாட்டியபடி ஓர் அறை; சப்தம் அதனுள் இருந்துதான் வந்திருக்க வேண்டும். உன்னிப்பாகக் கேட்டான்; பெண்களின் குரல். அவன் வாழ்க்கையில் முதன் முறையாகத் துணிச்சலுடன் நடந்து கொண்டான் பஞ்சநதம். அந்த அறைக் கதவை மெள்ளத் திறந்து உள்ளே எட்டிப் பார்த்தான். பார்த்தவன் திடுக்கிட்டுப் போனான். இருவரில் ஒருத்தியை அவன் அறிவான்.

இந்திரா! அவள் எப்படி அங்கே வந்தாள்?

இந்திராவும் ஒரே கணத்தில் பஞ்சநதத்தை அடையாளம் கண்டு கொண்டாள். அவன் ஏன் அங்கே வர வேண்டும்? அவனுக்கும் கணேசனுக்கும்தான் போதவே போதாதே! ஒரு கால் போலி கணேசனும் அவனும் கூட்டாளிகளோ!

பஞ்சநதம் இதற்குள் கதவை நன்றாகத் திறந்து விட்டான். "இங்கே உங்களை யாரேனும் பலவந்தமாக அடைத்திருக்கிறார்களா?" என்று விசாரித்தான்.

"ஆமாம் நீங்கள்—" என்று ஆரம்பித்தாள் இந்திரா.

"அதெல்லாம் பிற்பாடு பேசிக் கொள்ளலாம். நீங்கள் இங்கிருந்து தப்ப விரும்பினால் உடனே வரவேண்டும். எந்த நிமிஷமும் வேறு ஆட்கள் வந்து விடலாம். வருகிறீர்களா?

வழிகாட்டுகிறேன்!'' என்றான். பஞ்சநதத்திற்கும் பயம் இருந்தது மாரிமுத்து எப்போது திரும்புகிறான் என்று சொல்கிறதற்கில்லையே!

''ஆஹா! வருகிறோம்!'' என்றாள் இந்திரா உற்சாகமாக.

''பின் உடனே வாருங்கள்! நிற்க நேரம் இல்லை...... பின்கட்டு வழியாக, ஒரு சந்தில் போய்விட்டால், அங்கிருந்து உங்களை நான் எளிதில் வீட்டுக்கு அனுப்பி விடுவேன்...''

பஞ்சநதத்தைப் பின் தொடர்ந்து புழக்கடைக்கு இருவரும ஓடினார்கள். கதவைத் திறந்து கொண்டு சிறிய தோட்டததில இறங்கினார்கள். பதுங்கிப் பதுங்கி ஓடி, வேலியைத் தாண்டி, குறுகிய சந்திற்கு வந்துசேர்ந்தார்கள். ''இந்தச் சந்துக் கோடிவரை உங்கள்கூட வந்து நான் உங்களை வண்டி ஏற்றுகிறேன். பிறகு திரும்பிவிடுகிறேன்'' என்றான் பஞ்சநதம்.

'வெண்டிலேட்டர்' வழியாக நாராயணனும், சங்கரனும், மீேழ சுந்தரியையும் இந்திராவையும் கண்டார்கள் அல்லவா? எப்படியேனும் வீட்டினுள் பிரவேசித்து, அவர்களுக்கு விடுதலை அளிக்க யோசனை செய்தார்கள். கூட ஒரு நிமிஷம் தங்கியிருந்து பார்த்திருந்தார்கள் எனில், பஞ்சநதம் அவர்கள் லட்சியத்தை ஈடேற்றிக் கொண்டிருப்பதைக் கண்டு உதவிகூடச் செய்திருப்பார்கள். ஆனால், பஞ்சநதம் அவர்களை அழைத்துச் செல்லும்போது, வீட்டினுள் நுழைய வழி எது என்பதைத்தான் ஆராய்ந்து கொண்டிருந்தார்கள். அவன் சந்தில் விரைந்து கொண்டிருந்தபோது புழக்கடைக் கதவை அணுகி, அது திறந்திருப்பதைக் கண்டு அதிசயப்பட்டார்கள்.

வீட்டுக்குள் பிரவேசித்து, கல்யாண கூடத்தை வந்து அடைந்து, சுந்தரியும் இந்திராவும் அடைக்கப்பட்டிருந்த அறையையும் கண்டார்கள். அதற்குள்ளாக, ஐந்து நிமிஷம் செல்வதற்குள் அந்த அறை காலியானது எப்படி? எப்படி



விடுதலை பெற்று அவர்கள் எங்கே சென்றிருப்பார்கள்! புழக்கடைக் கதவு திறந்திருந்ததன் மர்மம் அதுதானோ?

சுற்றிச் சுற்றி வந்து எங்கும் தேடினார்கள். எங்கும் காணோம், வீடு காலி! முற்றும் காலி!

தொலைவிலே ஓர் ஆரவாரம் எழுந்து, நெருங்கிக் கொண்டிருந்தது. அநேக ஜனங்கள் ஏக காலத்தில் எழுப்பிய பேரொலி அது! ஐயையோ! திருடனைத் துரத்திக் கொண்டு வருகிறார்கள் அவர்கள்! இதுவரை முற்றும் மறந்திருந்த பழைய ஞாபகங்கள் திரும்பின. ''வாசற்கதவு தாளிடப்பட்டிருக்கிறதோ என்னவோ!'' என்று இருவரும் முன் கட்டுக்கு வந்ததும், ஒரு புயற்காற்றில் அடிபட்டது போல் வாசற் கதவு 'மடார்' என்று திறந்து கொண்டதும் சரியாக இருந்தன.

மாரிமுத்து ஒரு யானை போல் உள்ளே வந்து விழுந்தான். ''சாத்து கதவை! உடனே சாத்து!'' என்று அலறினான்.

இயந்திரம் போல் நாராயணன் வாசற் கதவை உள்ளே தாளிட்டான். மாரிமுத்து எதிர்பார்த்தது பஞ்சநதத்தை! வேறு இரு புதிய முகங்களை அங்கே கண்டதும், மிரண்டு போனான்; வெறிக்க வெறிக்கப் பார்த்தான். பேச முடியாமல் மூச்சு முட்டியது. 'பஞ்சநதம், முட்டாள், கடைசியில் கைவிட்டு விட்டானா?' என்ற ஆத்திரம் பற்றிக் கொண்டு வந்தது.

நாராயணனும் சங்கரனும் உள்ளே வந்து விழுந்த முரட்டு ஆளைக் கண்டு திடுக்கிட்டார்கள். ஏக காலத்தில் இருவரும் அவன் யார் என்று ஊகித்து விட்டார்கள். சற்று முன் இரண்டு தெருக்களுக்கு அப்பால் ஜனங்கள் ஒரு திருடனைத் தேடினார்கள். அவனாகத்தான் இருக்க வேண்டும் இவன்.

ஜனங்கள் ஆரவாரம் நெருங்கியது. பயங்கரமான கூச்சல்கள், முழக்கங்கள்! ''இதோ! இதோ! இந்த வீட்டிற்குள்தான் அவன் போனான்! நாங்கள் பார்த்தோம்!'' என்று பல குரல்கள்,

தொடர்ந்து படபடவென்று கதவைப் பலர் தட்டினார்கள். ''திறக்கிறாயா! உடைத்துக் கொண்டு வரட்டுமா?'' என்று ஒருவன் குரல் கேட்டது. கதவைத் தவிடு பொடி செய்வது போல் பலக்கத் தட்டினார்கள் ஐந்தாறு பேர்.

சந்தில் விரைந்து கொண்டிருந்த பஞ்சநதம் நின்று கேட்டான். அவன் காதுக்கும் வந்து மோதியது ஆரவாரம். மாரிமுத்து ஏதோ பிசகு செய்து விட்டான்; அந்த வீட்டில் வந்து ஒண்டிக்கொள்ளும் போது, ஜனங்கள் சூழ்ந்து கொண்டு விட்டார்கள்.

'இனி அங்கே திரும்புவதனால் நன்மை இல்லை, அபாயமே' என்று உள்ளுணர்வு எச்சரித்தது. அதோடு ''மாரிமுத்து என்னை மன்னிக்க மாட்டானே! துரோகம் செய்ததாக என்னைக் கருவி, கொலல செய்துவிடுவானே'' என்ற பயமும் நெஞ்செல்லாம் பரவியது.

## தாமோதரத்தின் மனைவி

''கல்பமணி ட்ரக் ஸ்டோர்''வின் 'முதலாளி' குருசாமி நாயக்கர் கண்களைத் துடைத்து விட்டுக்கொண்டு பார்த்தார் சந்தேகமே இல்லை; அங்கே வந்து கொண்டிருந்தது தாமோதரத்தின் மனைவிதான். அவள் வந்த வேகம், முகத்தில் இருந்த படபடப்பு எல்லாம், மாடியிலிருந்து பார்த்துக்கொண்டிருந்த அவர் மனத்தில் ஒருவித அச்சத்தை உண்டாக்கின.

ஏற்கெனவே குருசாமி நாயக்கருக்குச் சிறிது பயம் உண்டு. தாமோதரம் வீட்டில் இருப்பதாகச் சொல்லி விட்டுப் போனதும், போலீஸார் கூப்பிட்டால் தகவல் அனுப்பும்படி சொன்னதும், நாயக்கரின் நிம்மதியை வெகுவாகக் குலைத்திருந்தன. 'போலீஸ்' என்ற வார்த்தை அவருக்குப் பிடிக்காத வார்த்தை.

தாமோதரம் பக்கத்தில் இருக்கும் வரை நாயக்கர் தெம்பாகவே இருப்பார்; அவன் இல்லை என்றால், அவருடைய தைரியம் ஆட்டம் காணுவது சகஜம்தான். அதற்கேற்றாப் போல், போலீஸ் ஸ்டேஷனிலிருந்து டெலிபோன் வந்ததா? 'செங்கல்வராய பிள்ளை வீட்டு மருந்தெல்லாம் வாங்குவது உங்களிடமிருந்துதானே!' என்று அவர்கள் கேட்டுவிட்டார்களா? 'தாமோதரம் வரும் வரையில், தாமும் வராமல் இருந்துவிட்டால் என்ன!' என்று எண்ணத் தொடங்கினார் அவர்.

தாமோதரம் வரவில்லை; அவனைப் பற்றிய தகவலும் இல்லை. வீட்டுக்கு ஆள் அனுப்பிக் கேட்கவும் மனம் இடம் கொடுக்கவில்லை. தமது வழுக்கைத் தலையைப் பல முறைகள் அழுத்தி அழுத்தித் தேய்த்துக் கொண்டார்; தாமோதரத்தைப் பலமுறை சபித்தார். ''இந்த 'முதலாளி' வேலையை நான் ராஜிநாமா செய்துவிடுகிறேன்! வேண்டிய தில்லை நமக்கு! நித்திய கண்டமாக, எப்போதும் பயந்து கொண்டு எத்தனை நாள் நான் காலம் கழிக்கிறது. மறுபடி தாமோதரம் வரட்டும்; கண்டிப்பாக நான் நகர்ந்து கொள்கிறேன் என்று சொல்லிவிட்டே போகிறேன்! எனக் கென்ன பயம்'' என்று முணுமுணுத்துக் கொண்டார்.

மருந்துக் கடைக்கு வருவோரும் போவோரும் அவருடைய கவனத்தை அப்பால் திருப்பி மனச் சாந்தியை ஏற்படுத்தினர். மனிதர் போக்குவரவு நடமாட்டங்கள் குறைந்து, நேரமும் ஆகத் தொடங்கிய பிறகு மறுபடி பழைய வேதனை திரும்பியது. இதற்கு முன்பு இரண்டு தடவைகள் குருசாமி நாயக்கர் அங்கிருந்து நகர்ந்துகொள்ள முயற்சி செய்திருக்கிறார். அந்தச் சமயங்களில் தாமோதரம் வேறு அலுவல்களில் கவனமா யிருக்கிறான், தன்னைக் கவனிக்க மாட்டான் என்று நம்பியே அவ்வாறு துணிந்தார். ஆனால், அந்தச் சந்தர்ப்பங்களில்தான் தாமோதரம் இரண்டு பங்கு அவர்மீது கண் வைத்திருக்கிறான்! முதல் தரம் ரயில் ஏறிவிட்டவரை, கன்றுக்குட்டியை இழுத்து வருவதுபோல் காதைப் பிடித்து இழுத்து வந்து தள்ளி விட்டான்; வாய் திறந்து பேசவில்லை என்றாலும், தாமோதரத்தின் கண்கள் பேசின. ''அடேய், மறுபடி இந்த

மாதிரி வேலை செய்தாயோ, சரியானபடி தண்டித்து விடுவேன்'' என்று அவை எச்சரிக்கை செய்தன.

அந்த எச்சரிக்கை இரண்டு வருஷங்கள் வரை காரம் போகாமல் இருந்தது. சென்ற வருஷம் இரண்டாம் முறையாக ஒரு முயற்சி செய்தார் நாயக்கர். கப்பல் ஏறிப் போய்விடுவதென்ற திட்டம் அது. கடைசி நிமிஷம் வரை காக்கைக்குத் தெரியாதபடி நடந்து கொண்டார். துறை முகத்துக்குச் சரியான சமயத்தில் போய்ச் சேர்ந்து கப்பலில் ஏறி விட்டார். புறப்படப் பதினைந்து நிமிஷங்களே இருந்தன. இனி பயம் இல்லை என்று நினைத்த சமயம், ஒரு ஆசாமி மெள்ள அவர் தோளில் தட்டினான். திடுக் கிட்ட குருசாமி நாய்க்கர், ''யார்?'' என்று கேட்டார்.

''பேசாமல் என் பின்னால் இறங்கி வந்துவிடு. உன்னை 'அரெஸ்ட்' செய்து கொண்டுவர என்னிடம் 'வாரண்ட்' இருக்கிறது. இங்கே கலாட்டா வேண்டாம் என்று நான் 'மப்டி'யில் வந்திருக்கிறேன்... பேசாமல் வா!'' என்றான் அவன்.

''நீ யார்?'' என்றார் குருசாமி நாயக்கர்.

''நீ அதை வற்புறுத்துவதானால், நீ யார் என்பதை நான் எல்லோருக்கும் எடுத்துச் சொல்லிக் கப்பலை 'டிலே' செய்யத் தேவையாக இருக்கும், வந்துவிடு!''

''என்னை எதற்காக 'அரெஸ்ட்' செய்கிறதாம்?''

''சும்மா வரமாட்டே... கள்ள நோட்டு விஷயம். தாமோதரத்தையும் முன்னாடி உள்ளே தள்ளி விட்டோம். மரியாதையாக வந்துவிட்டாயானால், உனக்கு ஒரு தொந்தரவும் இல்லை.''

குருசாமி நாயக்கருக்குத் திருப்தி, தாமோதரம் முன்னால் 'உள்ளே' சென்று விட்டான் என்று கேட்டதில். மளமளவென்று வந்து விட்டார். வெளியே தொலைவில் ஒரு கார் நின்றது. அதில் ஏறிக் கொள்ளும்படி அந்த ஆசாமி சொல்லி, டிரைவர் ஆசனத்தில் அமர்ந்து கொண்டான். பின் ஆசனத்தில், குருசாமி நாயக்கருக்குப் பக்கத்தில் இருந்த ஒரு ஆசாமி போலீஸ் தொப்பி ஒன்றை அணிந்து



அதனால் நெற்றியை மறைத்துக் கொண்டிருந்தான். கழுத்தைச் சுற்றி ஒரு சிவப்புத் துணியை நன்றாகச் சுற்றிக் கொண்டிருந்தான். மோட்டார் நகர்ந்ததும், அவன் தொப்பியைக் கழட்டிப் போட்டு, சிவப்புத் துணியையும் மாலைபோல் தளர்த்தி விட்டுக்கொண்டு கனைத்தான்.

''ஐயோ, தாமோதரம்!'' என்று அலறிவிட்டார் நாயக்கர்.

'' 'முதலாளி'! போன தடவை ரயில்; இந்தத் தடவை கப்பல்; மூன்றாம் தடவை ஏரோப்ளேன் என்று ஓடத் திட்டம் போட்டிருக்கிறீரா? நீர் எங்கே போனாலும் உம்மை நான் விட மாட்டேன். 'கல்பமணி ட்ரக் ஸ்டோர்ஸ்' முதலாளி வேலை உம்மை விடாது!'' என்று சிரித்தான் தாமோதரம்.

குருசாமி நாயக்கருக்குப் பேச நா எழவில்லை.

''உமக்கு நானே விடுதலை கொடுக்கிறேன், நீராக எதுவும் செய்ய வேண்டாம். மரியாதையாக வந்து நம் நடையில் உமது இடத்தில் உட்காரும். என்னை 'அரெஸ்ட்' செய்து விட்டார்கள் என்பதில் என்ன சந்தோஷம் ஐயா, உமக்கு! ஹும்?...''

''இல்லை!... அப்படி இல்லை...''

''பேசாமல் உட்கார்ந்து விடும், மூன்றாம் முறை தப்பி ஓடினீர் என்றால், நானே உம்மைப் பிடித்து, ஒரு சீசா மருந்தைப் புகட்டி அனுப்பியே விடுவேன்... தெரிந்ததா?... போய் இடத்தில் உட்காரும்!'' என்றான்.

இப்போது ஒரு வருஷமாக, வெளியேறும் எண்ணத்தைக் கைவிட்டு, குருசாமி நாயக்கர் கடையில் உட்கார்ந்து வருகிறார். தாமோதரமும் அதைப் பற்றிப் பேச்சு எடுக்கவில்லை. இப்போதுதான் அவனும் இரண்டு நாட்களாக இல்லை; அவருக்கும் தப்பித்துக் கொள்ளலாம் என்ற ஆசை பிறந்தது. அதுவும் ஒரு நாள் பூராவும் அவனிடமிருந்து தகவலே இல்லை என்ற பிறகு, அந்த ஆசையிலேயே தைரியமும் கலந்து கொண்டது.

குருசாமி நாயக்கர் அகப்பட்டதைச் சுருட்டிக்கொண்டு ஓடத் தீர்மானித்து விட்டார். அதற்காக அவர் கைவசம் உள்ள ரொக்கத்தைச் சேகரகம் செய்து மூட்டை கட்டி வைத்தார். ரயிலும், பிளேனும் அவருக்கு நம்பிக்கையூட்டவில்லை. வெகு தொலைவில் போய் விடாமல், எங்கேனும் அருகாமையிலேயே ஒரு ஜாகையில் சில தினங்கள் பதுங்கியிருந்துவிட்டுச் செல்வது சிலாக்யம் என்று பட்டது அவருக்கு. சுற்று வட்டாரங்களில் தேடவேண்டும் என்ற எண்ணம்கூட தாமோதரத்துக்கு முதலில் வராது அல்லவா?...

அப்படி அவர் ஆயத்தங்கள் செய்துகொண்டும், எங்கே இடையில் தாமோதரம் வந்து தொல்லை கொடுப்பானோ என்ற பயத்துடன் அவசர அவசரமாக மூட்டைகள் கட்டிக் கொண்டும் வெளியே எட்டிப் பார்த்துக்கொண்டும் இருந்த போதுதான் தாமோதரத்தின் மனைவி அவர் கண்முன் பட்டாள். அதற்கு முன் அந்த அம்மாள் அவரிடம் பேசிக் கொண்டு வந்ததே இல்லை; பேசியதும் இல்லை. இப்போது வருவதுகூட ஒருகால் தாமோதரத்தைத் தேடிக்கொண்டு தான் இருக்குமோ என்று ஒரு கணம் நினைத்தார்; 'அது அவ்வளவு சரியான ஊகம் இல்லை' என்று தோன்றியது. 'அவர் புறப்படுவதை எதிர்பார்த்து தாமோதரமே அனுப்பி விருப்பானோ?' என்பது அடுத்த ஊகம். உடல் நடுங்கியது. எதற்கும் தயாராக மூட்டைகளை மறைத்துவிட்டு, அவளை எதிர்பார்த்தார்.

தாமோதரம் திடீர் என்று தகவல் இன்றி வராமல் போனது அவனுடைய மனைவிக்குக் கலவரத்தை உண்டு பண்ணி இருந்தது. அவள் வீட்டு மாடி அறையில் நடந்த கலாட்டா, சங்கரன் செய்த சாகசங்கள், பிறகு அவனுக்கு ஏற்பட்ட அபாயங்கள், அவன் காணாமல் போனது, அடுத்து தாமோதரம் வீட்டுக்குத் திரும்பாமல் இருந்தது—எல்லாம் அவளுக்கு விவரம் அறியாத பயத்தை அளித்தன. தன் புருஷனும் சகோதரனும் சாமர்த்தியசாலிகள் என்பது அவள் கண்ட அனுபவ உண்மைகள். ஆனாலும், எதிரிகளின்



பலம் மிக அதிகமாயிருந்து சமாளிக்க முடியாமல் போய் விட்டால்—!

அந்தப் பாழாய்ப்போன தோல் பையைத் தாமோதரம் எடுத்துக் கொண்டு வந்து வீட்டில் வைத்ததே பெரும் அபசகுனம் என்று அவள் கருதினாள். அதனுடன், பல ஆபத்துக்கள் தொடர்ந்து வந்து விட்டன. அதை வீட்டில் கொண்டு வைத்த அன்றிரவே திருட்டு; சங்கரன் பேச்சைக் கேட்டு, படத்தின் பின்னால் ஒளித்ததனால், கத்தி வீச்சு, ஓட்டம், அடிதடி எல்லாம் வந்தன. அப்புறம் ஆயிரம் அபாயங்களைக் கடந்து, சங்கரன் அதைக் கைப்பற்றி வந்தும்கூடத் தன் வீட்டு வாசலிலேயே பறிகொடுக்க வேண்டி வந்தது. அதைத் தொடர்ந்து குள்ளன் ஒருவன் அக்னித் திராவகத்துடன் வந்து விட்டான். கடைசியில் இப்போது தாமோதரமும் சங்கரனும் சென்ற இடமே தெரியவில்லை.

பகலெல்லாம் தைரியமாக இருந்து விட்டாள்; எப்படியும் அஸ்தமனம் ஆவதற்குள் அவர்களில் ஒருவராவது வந்து தகவல் கொடுப்பார் என்று எதிர்பார்த்தாள். இருட்டி விட்டது. எட்டு மணி, ஒன்பது மணியும் ஆகிவிட்டது. பேச்சு மூச்சு இல்லை. ஒன்பதரை மணியும் ஆகிவிட்டால், மருந்துக் கடை சாத்தி விடுவார்கள். குருசாமி நாயக்கரை நேரில் கண்டு, ஏதேனும் தெரியுமா என்று விசாரிக்கலாம் என்று எண்ணினாள். அப்படி அங்கேயும் செய்தி யாதும் இல்லை என்றால், அவளுக்கு வீட்டுக்குத் திரும்பும் எண்ணம் கிடையாது. தனியே வீட்டில்இருக்க மனம் இடம் கொடுக்கவில்லை. எந்த ஆபத்தும் எந்த நிமிஷமும் நேரலாம். ஆகவே குருசாமி நாயக்கர் மூலம் ஒரு துணையை அழைத்துக் கொண்டு திரும்புவது; அல்லது மருந்துக் கடையிலேயே தங்கி விடுவது. கடையில் உள்ள ரகசிய அறைகள் அவளுக்குத் தெரியும். போலீஸ்காரர் வந்து தேடினாலும் அவைகளைக் கண்டு பிடிக்க முடியாது. தாமோதரம் அவளிடம் எல்லாம் விவரமாகச் சொல்லியிருக்கிறான். கேவலம் மருந்து விற்றுக்கொண்டு அதில்

கிடைக்கும் லாபத்தை எதிர்பார்த்துக்கொண்டிருந்தால், என்றைக்குப் பணக்காரனாக முடியும்?

ஒன்பது மணிக்குமேல் தாமோதரத்தின் மனைவி 'கல்பமணி ட்ரக் ஸ்டோர்'ஸை நோக்கிச் சென்றாள். அவள் ரிக்‌ஷாவிலிருந்து இறங்கும்போதே குருசாமி நாயக்கர் அவளைப் பார்த்து விட்டார். உள்ளே வந்ததும், கோவிந்தன் என்ற உதவியாள் கடையைச் சாத்துவதற்கான ஆயத்தங்கள் செய்து கொண்டிருந்ததைக் கவனித்தாள்.

''உங்கள் 'முதலாளி' இருக்கிறாரா?'' என்பதே முதல் கேள்வி. அதற்குக் கிடைத்த பதில் நாயக்கர் காதில் எட்டவில்லை.

''எங்கே, 'அவர்' இன்றைக்கு வரவே இல்லையா?'' என்று கேட்டாள் அடுத்தபடியாக.

கோவிந்தன் சடாரென்று மிகவும் பணிவுள்ளவனாக மாறிவிட்டான். பயபக்தியுடன், உடலை ஒடுக்கி, ''இன்றைக்கு வரவில்லைங்க, அம்மணி!'' என்றான்.

''கடையெல்லாம் பூட்டிக் கொண்டிருக்கிறாயோ?''

''ஆமாம்; ஒன்பது மணிக்கு மேலே தொடங்கினால் தான் ஒன்பதரைக்குப் பூட்டலாம்...''

''சங்கரன்கூட வரவில்லையோ!''

''இல்லை, அம்மணி.''

''இம்மாதிரி 'அவர்' இதற்கு முன்பு இருந்ததே இல்லையே!''

''எனக்குக்கூட அதுதான் ஆச்சரியமாக இருக்கிறது. கவலைப்பட வேண்டாம். ஆனால் இப்படி இருந்ததே இல்லைங்க...'' என்று தலையைச் சொறிந்து கொண்டான் கோவிந்தன். பிறகு அருகில் வந்து ரகசியமாக, ''போலீஸிலேருந்து 'முதலாளி'கிட்டப் பேசினாங்க. என்ன பேசினாங்கன்னு தெரியாது. இவரு நம்ம வீட்டு விலாசத்தைச் சொன்னார்...'' என்றான்.

''ஓஹோ!... அங்கே யாரும் வரவும் இல்லை; விசாரிக்கவும் இல்லை... அப்புறம் என்ன விசேஷம்?''



மாடியில் குருசாமி நாயக்கருக்கு வெளியே அவசரம் நேரமாகிறது அவர் புறப்பட. இந்தப் பெண்பிள்ளை இந்தச் சமயம் பார்த்து வந்தது அவருக்குச் சரிப்படவில்லை. 'பிளான்'கள் கெட்டுப் போகின்றன.

''கோவிந்தா! கீழே யாருடன் பேசுகிறாய்?'' என்று கேட்டு வைத்தார்.

''அம்மா வந்திருக்காங்க...இதோ வராங்க, அங்கே தான்!'' என்று பதில் குரல் கொடுத்தான் கோவிந்தன்.

''வேறே என்ன விசேஷம்?'' என்று கேட்டாள் அவள் நகராமல்.

இதற்குள் குருசாமி நாயக்கர் மாடியில் நடமாடுவது கேட்கவே, கோவிந்தன் பதில் பேசாமல் ஒரு காகிதத்தில் ஒரு வரி அவசரமாகக் கிறுக்கினான். ''இதோ இதுதான் அந்த மருந்தின் பெயர் நம்ம கடையில் இல்லை. காலையில் தருவித்துத் தரலாம்'' என்றான், அவளிடம் அதைக் கொடுத்து.

குருசாமி நாயக்கர் நாற்காலிகளை இழுத்துப்போடும் சப்தம் கேட்டது. மாடியில் ஏறும்போதே தாமோதரத்தின் மனைவி அந்தக் கடிதத்தைப் படித்துக்கொண்டுபோனாள்.

'' 'முதலாளி' மூட்டை கட்டுகிறார்'' என்று சுருக்கமாக இருந்த ஒரே வாக்கியத்தைப் படித்துவிட்டு, கோவிந்தனைப் பார்த்துத் தலையை அசைத்தாள். பிறகு மேலே சென்றாள்.

குருசாமி நாயக்கர் முதலில் அந்த அம்மாள் வருகையில் ஆச்சரியமே காட்டினார். பிறகு, வந்த காரியத்தைக் கிரகித்துக்கொள்ள விரும்பியவராக, நாற்காலியைக்காட்டினார் அதில் அவள் அலட்சியமாக உட்கார்ந்துகொண்டாள்.

''என் புருஷர் வீட்டுக்கு வரவில்லை. எனக்கு மிகவும் கவலையாக இருந்தது. நான் இங்கே புறப்பட்டு வந்தேன்!'' என்றாள் அவள்.

ஐந்தாறு முறை வாயைத் திறந்து திறந்து மூடினார் குருசாமி நாயக்கர். பிறகு புருவத்தை மட்டும் உயர்த்தி, வழுக்கையைத் தடவிக் கொண்டார். ''தாமோதரம் இங்கேயும் வரவே இல்லையே!'' என்று சொல்லி, 'வரா

விட்டால் நான் என்ன செய்யக்கூடும்!'' என்கிற மாதிரி பார்த்தார்.

''அங்கேயும் வரவில்லை. ஏதேனும் ஒரு இடத்தில் தகவல் கொடுக்காமல் அவர் இருந்தது இல்லை. கவலைப் பட்டுக்கொண்டு வந்தேன்!'' என்றாள் அவள். நாற்காலி யில் அவள் உட்கார்ந்த விதம் ஸகுவில் எழுந்திருப்பாள் என்பதைக் குறிக்கவில்லை. நாயக்கருக்கு ஆத்திரம் பற்றிக் கொண்டு வந்தது.

''நான் என்ன செய்யலாம் என்கிறீங்க? போலீஸில் புகார் செய்யலாம். ஆனால், அதைத் தாமோதரம் விரும்பா விட்டால்! நான் இப்போது யோசிக்கிறது அதுதான்!''

அவள் இன்னும் நன்றாக நாற்காலியில் நகர்ந்து உட்கார்ந்து கொண்டாள். ''சொல்கிறேன், கேளுங்கள்! நான் வீட்டில் தனியாக இருக்கிறேன். ஒரு வேளை 'அவ'ருக்கு ஏதேனும் ஆபத்து என்றால், அடுத்தபடி எனக்கும் ஆபத்து வரலாம். நான் அங்கே இருப்பது சரி இல்லை!''

''உங்கள் உறவுக்காரர் வீடு ஏதேனும் இருந்தால் இன்றிரவு—''

''ஒரு உறவுக்காரனும் இல்லை; இருந்தாலும் நான் என்ன காரணத்தைச் சொல்லிக் கொண்டு போவேன்! இன்றைக்கு இங்கே நீங்களும் கோவிந்தனும் இருக்கிறீங்க. நான் இங்கேயே தங்கி விடுகிறேன். விடியற்காலம் எழுந்து போகிறேன்.''

''அது எப்படி முடியும்? கடை சாத்த வேண்டாமா?''

''வேண்டியதில்லை. நான் இப்படியே உட்கார்ந்திருக் கிறேன். 'அவர்' வருகிற வரையில் எனக்குத் தூக்கம் வராது!''

குருசாமி திகைத்துப் போனார். 'இந்தப் பெண் பிள்ளைக்கு இத்தனை பிடிவாதமா?' என்று எண்ணி மாய்ந்தார். ''அடக்ஷ்ட காலமே! இந்த மண்ணை உதறி விட்டு நாம் வெளியே போக நினைத்த வேளையிலா இந்த 'ஜங்காலகி' வர வேண்டும்!'' என்று வாயோடு சபித்தார். அவள் முகத்தைப் பார்க்கவே அவருக்குப் பிடிக்கவில்லை.



''நீங்கள் சாப்பிட்டுவிட்டு வருகிறதானால் வாருங்கள் நான் இருக்கிறேன். உங்களுக்குச் சௌகரியம் இல்லை என் றால், கோவிந்தன் இருக்கட்டும்'' என்றாள் அவள். எரிகிற நெருப்பில் எண்ணெய் வார்த்தமாதிரி இருந்தது அவள் பேச்சு.

''இதென்னங்க கடையில் தங்குவார்களா?'' என்றார் மெள்ள.

''அங்கேதான் தங்குவார்கள். வேறு எங்கே போவது? என்னை யாரும் இங்கே இருப்பேன் என்று எதிர்பார்க்க மாட்டார்கள். காலையில் எப்படியும் 'அவர்' வந்து விடுவார்; அல்லது, சங்கரனாவது வருவான்.''

தர்ம சங்கடமான நிலைமை இது. குருசாமி நாயக்கா கடைசி ஆயுதத்தைப் பிரயோகித்தார். ''அம்மணி! நான் இந்தக் கடையின் முதலாளி—''

''தெரியும்; நீங்கள் 'முதலாளி' தான்; என் வீட்டுக்காரர் உங்களுக்கு அந்த வேலையைக் கொடுத்திறார். பேசாமல் சொன்னபடி கேளும். கீழே டெலிபோன் இருக்கிறது. நான் இஷ்டப்பட்டால் போலீஸை அழைத்து, 'கல்பமணி ட்ரக் ஸ்டோர்ஸ் முதலாளி, அகப்பட்டதை மூட்டை கட்டிக் கொண்டு கம்பி நீட்டப் பார்க்கிறார்' என்று சொல்லிவிட லாம். வேண்டாம் என்று பார்க்கிறேன்! உங்களுக்குச் சம்மத மானால் இருங்கள்; இல்லாவிட்டால் போங்கள். எனக்கு ஒன்றுமே தெரியாது என்று மட்டும் நினைத்துவிட வேண்டாம்!'' என்றாள். பேச்சில் படபடப்பே இல்லை. தைரியத்தினால் ஏற்படும் நிதானமே தொனித்தது.

நாயக்கருக்கு உடலெல்லாம் வெலவெலத்துப் போயிற்று. 'தாமோதரம், எங்கும் போய் விடவில்லை; இதோ எச்சரிக்கை செய்ய அனுப்பிவிட்டானே இவளை!' என்று மனம் வெதும்பினார்.

'முதலாளி'யின் முகத்தில் கண்ட பீதி அவளை மேலும் தெம்பாகப் பேச வைத்தது. ''நீங்கள் சாப்பிட்டுவிட்டு

வரலாம். எனக்கு ஆட்சேபணை இல்லை. நான் இங்கே இருக்கிறேன். ஒருகால் அவரே வந்தாலும் வந்துவிடலாம்!'' என்றாள் அவள்.

நாயக்கர் சொன்னபடி கேட்டார். அவர் வெளியே சென்ற பிறகு கோவிந்தன் கதவையெல்லாம் தாளிட்டுக் கொண்டு மேலே வந்தான். தாமோதரத்தின் மனைவியிடம் நாயக்கர் கட்டி வைத்த மூட்டைகளையெல்லாம் காட்டினான். ''நீங்கள் வந்தது ரொம்பப் பொருத்தமாகப் போயிற்று. என்ன செய்வது என்று தெரியாமல் நான் திணறிக்கொண்டிருந்தேன். தாமோதரம் மட்டும் என்னிடம் ஜாடையாகச் சொல்லிவிட்டுத்தான் போயிருந்தார். நாயக்கரை என் கண் பார்வையில் வைத்திருக்கும்படி உத்தரவு போட்டிருந்தார்—இரண்டு தடவை அகப்பட்டுக் கொண்ட ஆசாமி ஆயிற்றே!'' என்றான்.

பதினொரு மணிக்கு நாயக்கர் சாப்பாட்டை முடித்துக் கொண்டு வந்து உட்கார்ந்தார். கோவிந்தன் ஒன்றும் தெரியாதவன் போல் கீழே மேஜைமீது சாய்ந்து சிறு குறட்டைகள் விடத் தொடங்கினான். மேலே வந்து உட்கார்ந்துகொண்டு நாயக்கர் வெகு நேரம் மௌனமாக இருந்துவிட்டு, ''உங்களுக்கு எல்லாம் தெரிந்திருக்க வேண்டும். நான் செய்ய நினைத்தது பிசகுதான். இரண்டு முறை என்னைக் கண்டித்திருக்கிறார். 'மூன்றாம் முறை மன்னிக்க முடியாது' என்றும் சொன்னார். நான்தான் தெரிந்து கொள்ளவில்லை..'' என்று ஆரம்பித்தார்.

''என்னிடம் எதற்காக இதையெல்லாம் இப்போது சொல்ல வேண்டும்? அவர் வந்த பிறகு சொல்லிக் கொள்ளலாமே!'' என்றாள் அவள்.

''தாமோதரத்திடம் எனக்கு மன்னிப்பு வாங்கித் தர வேண்டும் நீங்கள்!''

''முதலாளி எதற்காகக் குமாஸ்தாவிடம் மன்னிப்புக் கேட்க வேண்டும்? அந்தக் குமாஸ்தாவின் மனைவியின் சிபாரிசு வேறு தேவையா அதற்கு?'' என்று கேட்டாள் தாமோதரத்தின் மனைவி.



''அதுவும் தெரியாமல் நான் பேசிவிட்டேன். மன்னிக்க வேண்டும். நான் மூட்டை கட்டினது பிசகு; ஓடிப்போக வேண்டும் என்று நினைத்தது பிசகு; உங்களிடம் பேசினதும் பிசகு'' குருசாமி நாயக்கர் மண்டி போடும் நிலையில் இருந்து கெஞ்சினார். கடைக்கண்ணால் தாமோதரத்தின் மனைவி அவரைப் பார்த்து, ஒரு பக்கத்து உதட்டைச் சுழித்தாள். உதாசீனமாக ஏதோ சொல்லவும் வாயெடுத்தாள்.

''அப்படியே இருங்கள்! இரண்டு பேரும்தான்! ஒரு அடி அசைந்தாலும் தீர்த்து விடுவேன்!'' என்ற கடுமையான குரல் கேட்டு இருவரும் திடுக்கிட்டார்கள். ஒரு வேளை தாமோதரமே வந்துவிட்டானோ என்று ஏக காலத்தில் அவர்கள் திரும்பினார்கள்.

அறையின் ஒரு மூலையில் நாயர் நின்றான். உடலைப் பாதி வளைத்து வலது கையில் கூர்மையான கத்தியை ஆட்டியவாறு நின்றான். கத்தியின்மீது வெளிச்சம் பட்டு, 'பளிச்', 'பளிச்' என்று ஒளி விட்டது.

''நீங்கள் இரண்டு பேரும் அசையக்கூடாது. அப்படியே உட்காருங்கள்... ஏதேனும் என்னிடம் விளையாட்டு காட்டினீர்களோ, தயாதாட்சண்யம் பார்க்கமாட்டேன். இந்தக் கை கத்தியிலேயே பழகுவது. குறி தவறியே அறியாது!'' என்றான் நாயர்.

''நீ யார்?'' என்று கேட்டாள் தாமோதரத்தின் மனைவி. சப்தநாடியும் ஒடுங்கி, கிழித்துப் போட்ட நாராகக் கிடந்தார் குருசாமி நாயக்கர்.

''நான் யாராக இருந்தால் என்ன! இன்றைக்கு தாமோதரமும் சங்கரனும் எங்களிடம் இருக்கிறார்கள். நாங்கள் சொன்னபடி கேட்கிறார்கள். அவர்கள் இங்கே இருந்தாலும்தான் என்ன! நான் சொல்கிற மாதிரியே உத்தரவு போடுவார்கள்.. எங்கே, அப்படியே இருங்கள், பார்க்கலாம்!''

நாயக்கர் சிறிது தெம்பு வந்தவராக, ''இங்கே நீ என்ன செய்யப் போகிறதாக உத்தேசம்?'' என்று கேட்டார்.

"என் உத்தேசங்களை உன்னிடம் சொல்லிக் கொண்டிருக்க இப்போது அவகாசம் இல்லை. நான் இங்கேதான் இருப்பேன். எனக்கு 'எஜமான்' உத்தரவு கிடைக்கும் வரை நீங்கள் நகராமல் பார்த்துக் கொள்ளுவேன்!"

"உனக்குக்கூட 'எஜமான்' இருக்கிறானா!" என்று கேட்டாள் தாமோதரத்தின் மனைவி.

"இருக்கிறார். அவர் தற்போது உங்கள் வீட்டு மாடியில் இருக்கிறார். முக்கியமான காரியமாக இருக்கிறார். அவருடைய வேலைக்குக் குறுக்கே வந்த பலனைத் தான், தாமோதரமும் சங்கரனும் அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள்! நாயக்கர்! அசைகிறது என்ற வேலை மட்டும் வைத்துக்கொள்ள வேண்டாம்..."

நாயக்கர் மனத்தில் அப்போதுதான் கோவிந்தன் ஞாபகம் வந்தது "அடே, அவனுக்கு மேலே நடக்கிற விஷயம் தெரிந்தால், உதவி செய்ய வருவானே!" என்ற எண்ணமும் உண்டாயிற்று.

நாயர் புன்முறுவல் செய்தான். "கீழே இருந்த ஆள் தானே! அவருக்கு உங்கள் கடை மருந்து ஒன்றையே கொடுத்துக் குடிக்கச் சொன்னேன். நாளை பத்து மணிக்கு முன் எழுந்திருக்க மாட்டார். நிம்மதியாக அலட்டிக் கொள்ளாமல் உட்கார்ந்திருங்கள்" என்றான்.

நாராயணனும் சங்கரனும் சில விநாடிகளுக்கு அப்படியே ஸ்தம்பித்துப்போய் நின்று விட்டார்கள். அங்கே நடந்த விஷயங்கள் முற்றிலும் அவர்கள் எதிர்பார்த்ததே இல்லை. தங்களுக்குத் தெரிந்த இரு ஸ்திரீகளை அகஸ்மாத்தாகக் காண நேர்ந்து அவர்களை விடுதலை செய்ய உள்ளே வந்தால், இருவரும் மாயமாக மறைந்திருக்கிறார்கள்! அவர்களுக்குப் பதில் ஒரு தடியன் அவர்கள் மேலே வந்து விழுந்து அடைக்கலம் புகுந்து கொள்கிறான். வீட்டுக்கு வெளியே ஜனக் கூட்டம் கூச்சம் போடுகிறது. தாமதம் செய்தால் கதவை உடைத்து உள்ளே வரத் தயாராக இருந்தது அந்தக் கும்பல்.



இனி வாசல் கதவைத் திறப்பது என்பது நினைக்க முடியாத காரியம். புழக்கடைக் கதவைத் திறப்பதற்குள் அங்கே ஜனங்கள் சூழ்ந்து கொள்வார்கள். மாடியில் ஏறி, மறுபடி கூரை கூரையாகத் தாண்டும் வழி ஒன்று உண்டு. ஆனால் அதிலும் எத்தனை அபாயம்! அவர்கள் இருவரும் இதை நினைப்பதற்குள் மாரிமுத்து மாடிப் படியில் ஏறிக் கொண்டிருந்தான். அவனைப் பின்பற்றுவது என்றால், அவன் குற்றங்களுக்கும் உடந்தையாக இருப்பது என்ற அர்த்தம்தான் ஏற்படும். எனவே, நாராயணனும் சங்கரனும் கைகோர்த்துக் கொண்டு, பீடிவாதமாக மாடிப்படி ஏறுவதில்லை என்று முடிவு செய்து, புழக்கடைப் பக்கம் ஓடினார்கள்.

பின்னால் சென்ற நாராயணன் மீது ஒரு உருவம் மெல்ல உராய்ந்தது. அவன் உடல் சிலிர்த்தது. தாங்கள் மட்டுமே இருப்பதாக எண்ணி வந்தவனாகையால், பயந்து போனான். அது யாராக இருக்கலாம்? இருட்டில் கையை வீசிப் பார்த்தான். வாசற்படியில் முழங்கை மோதி, சுள்ளென்று நோவெடுத்தது.

'அம்மா' என்று உட்கார்ந்தான்.

"என்ன அங்கே?" என்று திரும்பி விட்டான் சங்கரன்.

இப்போது சங்கரன்மீது அந்த உருவம் பாய்ந்தது. தோள்பட்டைமீது நகங்களால் சிறாய்ந்தது. "அது என்ன!" என்று சங்கரன் கேட்டான்.

எதிரே இரு கண்கள் வீசும் ஒளியுடன் பிரகாசித்தன. 'மியாவ்' என்ற குரல் கொடுத்தது உருவம். இருவருமே ஒரு நிமிஷம், தங்கள் சங்கடமான நிலையையும் மறந்து வாய் விட்டுச் சிரித்து விட்டார்கள். ஒரு பூனையைக் கண்டு இருவரும் மிரண்டிருக்கிறார்கள்!

'மியாவ்! மியாவ்!' என்று கத்திக்கொண்டு பூனை முன்னே சென்றது. ஒருயோசனை இருவருக்கும் ஏக காலத்தில் உதயமாயிற்று. அதுவோ காலி வீடு; ஜன நடமாட்டம் இல்லை; பூட்டப்பட்டும்இருக்கிறது. ஒரு கொழுத்த பூனை

அந்த வீட்டுக்குள் எப்படி வந்திருக்கும்! புழக்கடைக் கதவு அடைத்திருக்கும்போதே, அது அந்த வீட்டினுள் வர ஒரு வழி வைத்துக் கொண்டிருக்க வேண்டும் அல்லவா?

சங்கரன் கீழே குனிந்து அந்தப் பூனையை மெள்ளத் தட்டிக் கொடுத்தான்; அதுவும் மெதுவாக 'மியாவ்' 'மியாவ்' என்றது. 'இதற்கா நாம் பயந்தோம்' என்று நினைத்த அவன் சிரித்துக் கொண்டான். பிறகு பூனையை மெள்ள முன்னே அனுப்பினான்.

விளக்குகளை ஏற்றக் கூடாது; ஜன்னல் வழியே வெளிச்சம் விழுந்தால், அவர்களைக் காட்டிக் கொடுக்கும் மாரிமுத்து மாடிக்குச் சென்றது ஒரு வகையில் இப்போது நன்மை. அவனை ஜனங்கள் கண்டு விட்டால், பிறகு இவர்களைப் பற்றிச் சிரத்தைக் கொள்ள மாட்டார்கள். மாடிக்குச் சென்றால், எப்படியேனும் யார் கண்ணிலாவது மாரிமுத்து பட்டுத்தான் தீர வேண்டும்.

பூனை மெள்ளச் சென்றது. மூன்றாம் கட்டில் இடது புறத்தில் ஒரு வாசற்படி; சிறிய கதவு, அந்தக் கதவின் அடியிலேயிருந்த பெரிய ஓட்டையில் புகுந்து பூனை அடுத்த வீட்டிற்குள் சென்றது. அது செல்லும்போது, முதுகில்பட்டு கதவே ஒரு முறை எழும்பி மறுபடி இடத்தில் விழுந்தது.

சங்கரன் நாராயணன் கையைப் பற்றி அருகில் இழுத்தான்; "நீங்கள் கீழே இருந்து தூங்குங்க! நான் மேலே உயர்த்துகிறேன். அப்படியே கதவைப் பெயர்த்து வைத்து விட்டுப் போய்விடலாம்!" என்றான்.

இருவரும் சேர்ந்து முனைந்தார்கள். கதவு நாதாங்கியில் எழும்பியது. ஆனால் அத்தனை லகுவாக அது கொள்ளவில்லை. கதவைக் குலுக்கும்போது ஏற்பட்ட சப்தம் அந்த வீட்டு ஜனங்களை—இதுவரை வாசல் கூச்சல்களில் எழுந்திராமல் இருந்தால்—எழுப்பிவிடுமே என்று அஞ்சினார்கள். மூன்றாம் முறை கதவை எழுப்பி, சங்கரன் மண்டையால் ஓங்கி ஒரு முட்டு முட்டினான்.



இருவர் கையையும் விட்டுக் கழன்று கதவு 'படார்' என்று கீழே சாய்ந்தது. எழுந்த சப்தத்தைக் கேட்டு இருவரும் திக்பிரமித்துப் போனார்கள். பத்துப் பதினைந்து பேர்கள் மேலே வந்து விழுந்து உடனே பிடித்துக் கொள்வார்கள் என்று எதிர்பார்த்தார்கள்.

ஐந்து நிமிஷங்கள் சென்றன. நிசப்தம். கதவை ஒரு நொடியில் தூக்கி மாட்டிவிட்டு, மெள்ள அந்த வீட்டினுள் பிரவேசித்தார்கள். அதுவும் மூன்று கட்டு வீடு. இரண்டாம் கட்டில் ஒரு கிழவர் கயிற்றுக் கட்டிலில் படுத்திருந்தார். அவருக்கு ஏதோ சிக்கு! கண்களை மூடிக்கொண்டும் சிறு இருமலாக இருமிக்கொண்டும் இருந்தார். ஆனால் அவர் காதுகள் வெகு கூர்மையாக இருந்திருக்க வேண்டும்.

"ஏண்டா பஞ்சு! ஒரு வாய் தீர்த்தம் கேட்டேனே! கொடுக்கக் கூடாதா?" என்று முனகினார்.

நாராயணன் சட்டென்று அருகில் இருந்த லோட்டாவில் குளிர்ந்த ஜலத்தை நிரப்பி அவர் வாயில் ஊற்றினான். மூன்று 'முழுங்கு'களுக்குப் பிறகு, "அப்பாடா! நீ மகராஜனாக இருப்பாயடா!" என்று கிழவர் மெள்ளக் கண்களைத் திறந்தார்.

சங்கரன் நாராயணனை அவசரமாக அப்பால் இழுத்தான். கிழவர் கண்கள் பஞ்சமடைந்து காணப்பட்டன. எனினும், ஒரு நிமிஷத்திற்குள் தம்முன் இருப்பவர்களைக் கூர்ந்து கவனித்தார். ஏதோ ஒரு மாதிரி பிரதிக்ஞை அவருக்குத் திரும்பிவந்தது. தலையை வெடுக்கென்று திருப்பி இருவரையும் நிதானித்தார். மறுகணம் "ஐயோ! திருடன்! திருடன்!" என்று கூவத் தொடங்கினார். கிழக் குரல்தான் எனினும், வாசல்வரை ஒலித்தது.

சங்கரன் பல்லைக் கடித்துக்கொண்டு நாராயணனுடன் வாசற்புறம் ஓடினான். அதற்குள் வாசலில் இருப்பவர்கள் உள்ளே திரும்பி வரும் அரவம் கேட்டது. சட்டென்று இருவரும் ரேழிச் சுவரோடு பதுங்கி ஒண்டினார்கள். அவர்களுடைய நல்லகாலமாக, அந்த வீட்டில் மின்சார விளக்குகள் இல்லை. "எங்கே திருடன்? எங்கே?" என்று உள்ளே

இரண்டு முரட்டு ஆடவர்கள் விரைந்து வந்தார்கள். நாராயணன் மூச்சைப் பிடித்துக்கொண்டு நின்று ஒடுங்கினான்; சங்கரனுடைய உறுதியான கரம் அவன் பதட்டத்தைச் சிறிதுதான் சமனம் செய்தது.

இருவரும் உள்ளே சென்றதும், மறுபடி சங்கரனைப் பின் தொடர்ந்து வாசற்புறம் நாராயணன் வந்தான். ஏராளமான ஜனங்கள், அங்கே தலையைக் காட்டினால், போயிற்று! உயிரோடு விடமாட்டார்கள். முன்னும் போக முடியாமல் பின்னும் திரும்ப முடியாமல் இருந்த சமயம், ரேழித் திண்ணையில் இருந்த பெரிய மரக்குதிர் கண்ணில் பட்டது. தாய்ச்சுவருக்கும் அதற்கும் இடையே ஓரடி இடைவெளியாவது இருக்கும். அதற்குள் இருவரும் புகுந்தார்கள். "அப்பாடா!"

ஆனால், அங்கேயும் நிம்மதியில்லை. பழைய பூனை அங்கே ஒண்டிக் கொண்டிருந்தது. 'மியாவ்!' 'மியாவ்!' என்று அது இப்போது வெளிப்பட்டது. எங்கே காட்டிக் கொடுத்து விடுமோ என்ற பயம் அவர்கள் இரத்தத்தை உறையச் செய்தது.

அதற்குள் உள்ளே சென்ற முரட்டு மனிதர்கள் இருவரும் வாசற்புறம் வந்துவிட்டார்கள். "இந்தப் பக்கம் யாரேனும் ஓடி வந்தார்களா?" என்று வீதியில் இருப்பவர்களைக் கேட்டார்கள்—சங்கரன் காதில் ஒவ்வொரு வார்த்தையும் ஸ்பஷ்டமாக விழுந்தது.

"இல்லை!" என்றன பல குரல்கள்.

"இரண்டு பயல்களாம்! தாத்தா சொல்கிறாரே! ஒரு பயல் அவருக்கு லோட்டாவில் தீர்த்தம் வேறு கொடுத்தானாம்!"

"தாத்தாவுக்கு மயக்கம்...சொப்பம் கண்டிருப்பார்..." என்றான் யாரோ ஒருவன்.

"அட சும்மா இரும், ஐயா! மேலே தண்ணீர் சிந்தியிருக்கிறது. லோட்டாவில் வேறு ஜலம் இருக்கிறது. நான் பார்த்தேன்"—இது ஒரு முரட்டு மனிதன்.



"என்ன யோசனை! உடனே வீடு பூராவும் சோதனை போட்டுப் பார்த்து விடுகிறது! எங்கே போய்விடுவான்கள்" என்றார்கள் ஐந்தாறு பேர்.

'திமு திமு'வென்று ஆட்கள் உள்ளே நுழையத் தொடங்கினார்கள். ஒரே குழப்பம், கூச்சல், ஆவேசம்! இது தான் சமயம் என்று சங்கரன் முன்னதாக நாராயணனைத் திண்ணையிலிருந்து குதிக்கச் சொன்னான்; அவன் கூட்டத்தோடு கலந்து நின்றான். சங்கரன் அவனை அடுத்து தொப்பென்று கீழ் குதித்தான்.

அந்தச் சமயத்தில் உள்ளே நுழைந்த ஒரு ஆள், "யார் ஐயா நீ?" என்று சந்தேகத்துடன் கேட்டுக்கொண்டு வழியை மறித்துவிட்டான்.

'வீட்டிலே திருடன்கள்—இரண்டு பேர்—அகப்பட்டு விட்டார்கள். எல்லாரும் பிடித்துக் கொண்டு விட்டார்கள். வெந்நீர் உள்பக்கத்தில் கட்டிப்போட்டிருக்கிறார்கள். உதைக்கின்றார்கள், இங்கேயும் எவனாவது இருக்கிறானா என்று பார்த்தேன்...காலி!" என்றான் சங்கரன்.

"அகப்பட்டுக் கொண்டு விட்டார்களா இரண்டுபேர்?"

"வகையாக! அடி சரியானபடி விழுகிறது; கேளுங்கள்—தொப், தொப்! வேண்டுமானால் நீங்களும் போய் இரண்டு போடலாம்!"

அந்த ஆசாமி உள்ளே விரைந்தான். சங்கரன் நாராயணன் கையைப் பற்றிக்கொண்டு வாசற்புறம் இழுத்தான். அங்கே இரண்டு பேர் ஆகாசத்தைப் பார்த்தபடி நகத்தைக் கடித்துக்கொண்டு நின்றார்கள். "திருட்டுப் பயல்கள் பிடிபட்டு விட்டார்கள் இரண்டு பேர்! 'தொமே தொமே' என்று வாங்குகிறார்கள், வேடிக்கை பார்க்கவில்லையா?" என்றான் சங்கரன் அவர்களிடம் உற்சாகமாக.

அவர்கள் இருவரும் வீட்டுக்குள் நுழைந்தார்கள். தெரு ஓரமாக ஒரு சைக்கிள் சாத்தப்பட்டிருந்தது. மணியும், விளக்கும், பிரேக்கும் இல்லாத வண்டி. யாரோ ஒரு அசடு

அப்படி நிறுத்திவிட்டு, உள்ளே வேடிக்கை பார்க்கச் சென்றிருக்கிறான்.

"ஏறுங்கள்! சீக்கிரம்!" என்றான் சங்கரன்.

நாராயணன் ஒரே பிரமையில் இருந்தான். சங்கரனின் சாமர்த்தியம், சமயோசிதம், துணிச்சல், ஆபத்துக் காலத்திலும் மனம் தளராமை எல்லாம் தலை சுற்ற வைத்தன. கடைசி கடைசியாக, அவன் 'திருடர்கள் பிடிபட்டு விட்டார்கள்! அடிவாங்குகிறார்கள்!" என்று ஒரு பெரிய பொய் சொல்லி அனுப்பினானே! முட்டாள் ஜனங்கள் அதைக் கேட்டு நம்பினார்களே!

"ஏறுங்கள்! நின்றோமோ இந்த வாகனமும் கை நழுவி விடும்!" என்று சங்கரன் அவசரப்படுத்தினான்.

சங்கரன் முன்னதாக ஏறி'பெடல்' செய்ய நாராயணன் பின்னால் தொத்திக் கொண்டான். ஓட்டத் தொடங்கிய பின் அந்த சைக்கிளில் மேலும் பல குறைபாடுகளை அவர்கள் கண்டார்கள். 'கடக் கடக்' என்ற சப்தம்; காற்று குறைவு; 'போர்க்' 'ஹாண்டில்' எங்கும் வளைவுகள்—ஒரு பக்கம் போக நினைத்தால் எதிர்ப்புறம்போகும் சுபாவம்...

இரண்டு மைல்களுக்கு மேல் போக முடியவில்லை, எங்கேயோ ஒரு கல் தட்டியது; முன் சக்கரத்தில் இருந்த சொற்ப காற்றும் விடுதலை பெற்றுக் கொண்டது. இனி நடப்பது தவிர வேறு வழியில்லை. சைக்கிளை ஒரு மூலையில் கொண்டு சாத்தினான் சங்கரன். பிறகு இருவரும் ஓடலானார்கள்.

சங்கரன் வீட்டை அடைந்ததும், நாராயணனையும் உள்ளே அழைத்தான். "காலையில் நீங்கள் போகலாம். இங்கே ஒரு பயமும் இல்லை; நிம்மதியாகத் தூங்கலாம்" என்று மேலே கூட்டிக்கொண்டு போனான்.

மாடி அறைக் கதவு தாளிடப்படவில்லை. ஒருவித ஆச்சரியத்துடன் 'ஸ்விட்'சை சங்கரன் போட, இருவரும் உள்ளே பிரவேசித்தார்கள்.

ஒரு நாற்காலியில் சாய்ந்தபடி சுந்தரம் பிள்ளை உட்கார்ந்து ஒரு புன்னகையுடன் அவர்களை வரவேற்றார்.

# மருந்துக் கடையில் ஒரு மர்மம்

'தம்பி' புரண்டு படுத்தான்; அவனுக்குச் சுய நினைவு நன்றாகத் திரும்பிவிட்டது. ஒரு நீண்ட பெருமூச்சு அவனிடமிருந்து வெளிவந்தது. ஆனால் கண்களைத் திறக்கவில்லை; அதற்கு முன்பாகக் காதுகளையே உபயோகித்தான். இது வெகு நாளைய அனுபவத்தில் ஏற்பட்டது.

கண்களைத் திறந்தால், எதிரி மண்டையில் மறுபடி போட்டுத் தூங்க வைத்து விடுவான் என்ற சந்தேகம் அவனிடம் வலுவாக இருந்தது. பழைய ஞாபகங்கள் வேகமாகத் திரும்பின! சுந்தரம் பிள்ளையிடம் பேசிக் கொண்டிருந்தது, மன்னிப்புக் கேட்டது, சுந்தரம் பிள்ளை தாராள மனப்பான்மையுடன் அவன் 'குற்ற'ங்களை மறப்பதாகக் கூறி முன்போலவே மேற்கொண்டு 'வேலை'கள் கொடுத்து அனுப்பியது, 'தம்பி' மனக்கோட்டைகள் கட்டியபடி வெளியே வந்தது—இவ்வளவும் நினைவு வந்தன. ஏதோ ஒன்று 'பொட்'டென்று மண்டையில் தாக்கியதையும் சுருண்டு விழுந்ததையும் உலகமே கண்முன் இருண்டு போனதையும்கூட அவன் ஞாபகப்படுத்திக் கொண்டான்.

யாரோ ஒரு வஞ்சகன் துரோகி வேலை செய்கிறான், அவன் யார்? நாயர் ஒருவனைத் தவிர வேறு யாராகவும் இருக்க முடியாது; அந்த நாயர் தானாகவே வந்து தாக்கினானா? அல்லது, சுந்தரம்பிள்ளையின் அதிகாரம் பெற்றுத் தாக்கினானா தானாகத் தாக்கி இருந்தால், அந்த நாயர் மாடிப்படி அறையில் மூர்ச்சை தெளிந்து எழுந்ததும் தன்னைத் தாக்கியது 'தம்பி'தான் என்று சந்தேகப்பட்டிருக்க வேண்டும்; காத்திருந்து வந்து மண்டையில் அடித்திருக்க வேண்டும். சுந்தரம் பிள்ளையின் உத்தரவுப்படி தாக்கியிருந்தான் என்றால், பிள்ளையே தன்னிடம் வஞ்சகமாய்ப் பேசி, 'ஆழம்' பார்த்து, வாயைப் பிடுங்கி, பிறகு இந்தத்

துரோகம் செய்திருக்க வேண்டும். இதில் இரண்டாவதுதான் நடந்திருக்க வேண்டும் என்று அவன் உள்ளுணர்வு கூறியது.

கண்களை மூடியபடி ஏதேனும் அரவம் கேட்கிறதா என்று நிதானித்தான். ஒன்றும் இல்லை. பிறகு கண்களை மெதுவாகத் திறந்தான். அவன் கிடந்த அறை, அவனுக்குப் புதிதே இல்லை. சுந்தரம் பிள்ளையின் சின்ன பங்களாவில் பின்கட்டில் இருந்தது அது. கெட்டியான கதவு, அழுத்தமான பூட்டு எல்லாம் உண்டு. கீழே ஜன்னல் ஏதும் இல்லையாகையால் இருள் கவ்வி இருந்தது. சிறிது நேரம் உற்றுக் கவனித்தான். அறையின் ஒரு மூலையில் கால்களும் கைகளும் அழுத்தமாக வரிந்து கட்டப்பட்டு ஓர் உருவம் கிடந்ததைக் கண்டான். சிறு சிறு முனகல்கள் மட்டுமே வெளி வந்து கொண்டிருந்தன. மெள்ள எழுந்து அருகே சென்று பார்த்தபோது, அது தாமோதரம் என்பதையும் தெரிந்து கொண்டான்.

சுந்தரம் பிள்ளையை எதிர்த்த தாமோதரமும், ஆதரித்த 'தம்பி'யும் ஒரே சிறைச்சாலையில் இருந்தார்கள்! இருவருக்கும் தம் உள்ளத்தில் அவர் ஒரே ஸ்தானம்தான் கொடுத்தார்! 'தம்பி'க்கு விஷயம் விளங்கிவிட்டது. இனியும் பிள்ளையை நம்பிக் கொண்டிருந்தால் அதோகதிதான்! எதிர்க் கட்சியில் தாராளமாகச் சேர்ந்து 'வேலை, செய்து' அழிப்பது ஒன்றுதான் அவன் செய்ய வேண்டியது...அன்று நாயர் செய்த பிசகு ஒன்று உண்டு. 'தம்பி' அவ்வளவு விரைவில் விழித்துக் கொள்வான் என்று அவன் எதிர்பார்க்கவில்லை. எதிர்பார்த்திருந்தால் வெறுங் காவலுடன் நில்லாமல், 'தம்பி'க்கும் காலையும் கையையும் கட்டிப் போட்டிருப்பான்!

'தம்பி' ஒரு நொடியில் தாமோதரத்தை விடுவித்தான். வெகு நேரமாக அந்த நிலையில் கிடந்திருந்தபடியால், தாமோதரத்தின் அவயவங்களில் உயிர் வருவதற்குக் காத்திருக்க வேண்டியிருந்தது. இருட்டில் ஒருவர் முகத்தை ஒருவர் நன்கு பார்த்துக்கொள்ள இயலவில்லை எனினும்,



தாமோதரம் தன்னை விடுவித்தவன் 'தம்பி'தான் என்பதை அறிந்துகொண்டான். 'தம்பி' மூர்ச்சை நிலையில் கொண்டு வரப்பட்டபோது பார்த்துக்கொண்டே இருந்திருக்கிறானே இருவரும் சிறிது நேரம் மற்றவனை எதிர்பார்த்துக் காத்திருந்தார்கள்.

''எவ்வளவு பேர் நமக்குக் காவல்?'' என்று கேட்டான் 'தம்பி' கடைசியில்.

''இரண்டு பேர் என்று நினைக்கிறேன். கடைசியில் ஒருவன்தான் இருந்தான். அவனும் இப்போதுதான் கதவைப் பூட்டிக்கொண்டு சென்றான். சீக்கிரமாகவே திரும்பி விடலாம்...''

''ஒருவனாக இருந்தால் சமாளித்துக் கொள்ளலாம். இரண்டு பேரானால் சண்டை போட வேண்டியிருக்கும். அவர்கள் கூச்சல் போட்டால், ஐந்தாறு பேர் கூடிக்கொள்வார்கள்!''

''இரண்டு பேராக இருந்தால் ஒருவனை என்னைக் கட்டிப் போட்ட மாதிரி கட்டிப் போடலாம்; மற்றவனை உன்னைத் தாக்கினமாதிரி தாக்கி, நித்திரைக்கு அனுப்பலாம்...''

''உஸ்ஸ்...'' என்றான் 'தம்பி' எச்சரிக்கையாக. பிறகு ஒரு மூலையில் தாமோதரத்தையும் தள்ளிக்கொண்டு பதுங்கினான்.

வாசற் கதவில் சாவி புரளும் ஓசை கேட்டது. தொடர்ந்து கதவு திறந்துகொண்டது. ஒரு கையில் ஹரிக்கேன் லாந்தருடன் ஒரு ஆள் நுழைந்தான்; மற்றொரு கை முதுகின் பின்புறம் மறைந்திருந்தது. அவன் உள்ளே வந்ததும், 'தம்பி' கிடந்த திசையில்தான் பார்த்தான்; இடம் காலி என்றதும் திடுக்கிட்டான்; கையில் இருந்த லாந்தர் கூட ஒருமுறை துள்ளியது. வாயைப் பிளந்தபடி மெள்ளத் திரும்பினான்...

விளக்கு வெளிச்சம் தன்மேல் படாதபடி, 'தம்பி' சுவரோரமாக நகர்ந்துகொண்டே இருந்தான். தாமோதரத்தை

அந்தக் காவலாளி பார்த்தபோது, 'தம்பி' நேர் பின்னே நின்று அவன் கையில் மின்னிய கத்தியைக் கண்டான்.

ஒரே பாய்ச்சலில் கத்தி பிடித்திருந்த கையின் மணிக்கட்டைத் 'தம்பி' கெட்டியாகப் பற்றிக்கொண்டான். லாந்தரைக் கீழே வைத்துவிட்டுக் காவலாளி திரும்ப முயன்றபோது, தாமோதரத்தின் கால் அவன் விலாவில் ஓர் உதை விட்டது. காவலாளி ஒருபுறம், கத்தி ஒருபுறமாகப் போய் விழுந்ததைக் கண்டு 'தம்பி' சிரித்தான்.

''பலே! சரியான உதை... அண்ணே! நான் தர்மயுத்தம் செய்யப்போகிறேன்... எழுந்திரு!'' என்று 'தம்பி' சவால் விட்டதைக் கேட்டுக்கொண்டே அவன் எழுந்தான்.

''கத்தியை எடுத்துக்கொள்! உம்ம்... அது எங்களுக்குத் தேவை இல்லை... உனக்கு இங்கே வேலை கொடுத்த நாயருக்கு நீ பதில் சொல்ல வேண்டுமே! எடுத்துக்கொள்!'' என்றான் 'தம்பி'.

உண்மை தானாக்கும் என்று அந்த ஆள் கத்தியை நோக்கிக் குனிந்தான்; அதைத் தொடுமுன் ஒரு ஆச்சரியம் நிகழ்ந்தது என்று உணர்ந்தான். இதுவரை தாமோதரத்தைச் சுற்றியிருந்த தாம்புக் கயிறு அவன்மீது விழுந்தது! மற்றொரு உதையை விலாவில் வாங்கிக்கொண்டு அவன் புரண்டபோதே, 'தம்பி' அதைப் பிணைத்துக் கொண்டிருந்தான். தேர்ந்த கைகள் வேலை செய்ய, சில விநாடிகளில் அந்த ஆள் கையையோ காலையோ அசைக்க முடியாத நிலையில் கிடந்தான்.

'தம்பி' அவனை ஒரு உருட்டு உருட்டிவிட்டு, ''நாங்கள் போகிறோம். போகுமுன் உனக்குச் சில சௌகரியங்கள் செய்து கொடுத்துவிட்டுப் போகிறோம். எங்களுக்கு நாயர் காட்டாத சலுகைகள் அவை. இதோ இந்த விளக்கு இங்கே உனக்குத் துணை. இரண்டாவது, இந்தக் கத்தியையும் இங்கே போட்டுவிட்டுப் போகிறேன். மிகவும் முயற்சி செய்தால் இந்தக் கத்தியினால் கயிற்றை அறுத்துக்கொள்ளலாம். ஆனால் அதற்கு வெகு நேரம் பிடிக்கும். மூன்றாவது நாயர் வந்தால், நீ அஜாக்கிரதையாக இருந்தாய் என்று



சந்தேகப்படுவான்; அல்லது எங்களுக்கு உடந்தையாக இருந்தாய் என்று சந்தேகித்து உன்னைக் கொன்றுவிட நினைப்பான். ஈவு இரக்கமற்றவன். ஆகையால், நீயும் சண்டை போட்டாய், என்னைச்சரியானபடி பந்தோபஸ்து செய்யாமல் போனது அவன் பிசகு என்று தெரியவேண்டும் 'தம்பி' பொல்லாதவன் என்பதை அவன் மறக்கவும் கூடாது. ஆகையால் இதை வாங்கிக் கொள்!'' என்று அவன் மண்டையில் ஓங்கி ஒரு குட்டு வைத்தான்.

''வாருங்கள், ஐயா! நமக்கு இனிமேல் இங்கே வேலை இல்லை!'' என்று 'தம்பி' தாமோதரத்தை அழைத்தான்.

இருவரும் சுந்தரம் பிள்ளையின் பெரிய பங்களாவை நெருங்காமலேயே பெரிதாகச் சுற்றிக்கொண்டு வந்தார்கள். எந்தச் சந்தர்ப்பத்திலும், அங்குள்ளவர்களின் கண்களில் பட விரும்பவில்லை. விஷயம் தெரிந்திருந்தால், அவர்கள் அத்தனை ஜாக்கிரதையாகக்கூட இருந்திருக்கத் தேவை இல்லை. தாமோதரத்தை அடைத்துவிட்டு, 'தம்பி'யையும் அவன் பின்னாலேயே அனுப்பிய பிறகு, சுந்தரம்பிள்ளையும் நாயரும் உட்கார்ந்து ஆலோசனை செய்தார்கள்.

அவருக்கு முதல் அபாயம் சங்கரன்தான். அவனைத் திரும்பக் கைப்பற்றியாக வேண்டும், அவன் இரண்டு இடங்களில் ஒன்றில் சிக்கிக் கொள்ளுவான். ஒன்று, தாமோதரத்தின் வீடு! அல்லது, 'கல்பமணி ட்ரக் ஸ்டோர்ஸ்' கட்டடத்து மாடி, இரண்டாவது இடத்தில் இருப்பது சந்தேகமே ஆகவே, நாயர் அங்கே சென்று ஒருகால் அவன் இருந்தால் வளைத்துக் கொள்ள வேண்டியது. சுந்தரம் பிள்ளை, தாமோதரத்தின் வீட்டுக்குச் சென்று அவனைக் கண்டு நேரில் நடவடிக்கை எடுத்துக் கொள்ளுவது. சுந்தரம் பிள்ளை, கடைசி மார்க்கமாக, சங்கரன் வாயை மூடப் பணம் கொடுக்கக்கூடத் தயாராக இருந்தார்!

இந்த மாதிரி ஒரு முடிவுக்கு வந்து அவர்கள் புறப்பட்டு விட்டார்கள். சுந்தரம் பிள்ளையின் கார் தாமோதரம் இருந்த தெருவின் பக்கத்துத் தெரு முனையில் நிறுத்தி

வைக்கப்பட்டது. நாயர் மருந்துக் கடைக்குச் சென்றபோது தாமோதரத்தின் மனைவியையும் குருசாமி நாயக்கரையும் சந்தித்தான்; நிறுத்தி வைத்துக் கொண்டான். சுந்தரம் பிள்ளை யாருமே இல்லாத தாமோதரத்தின் வீட்டு மாடியில் காத்திருந்தார். பொழுது போவதற்காக அங்கிருந்த மேஜை, பீரோ, அலமாரி எல்லாவற்றையும் திறந்து பரிசோதனை செய்து பார்த்தார். அவருக்குத் தேவையானது எதுவும் இல்லை. 'ஒருவேளை சங்கரன் வரமாட்டானோ?' என்று எண்ணி நாற்காலியில் வந்து உட்கார்ந்த சமயம் கீழே பேச்சரவம் கேட்டது. சங்கரன் வந்து கொண்டிருந்தான்; அவர் எதிர்பாராத மற்றொரு ஆசாமி நாராயணனும் பின்பற்றி வந்துகொண்டிருந்தான். எனவே, சங்கரனுக்கு அங்கே சுந்தரம் பிள்ளையைக் கண்ட அளவு அதிர்ச்சி, சுந்தரம் பிள்ளைக்கும் நாராயணனைக் கண்டதில் இருந்தது.

ஃ ஃ ஃ

இந்த விவரங்கள் யாதும் அறியாத தாமோதரம் 'தம்பி'யுடன் விரைந்து வந்துகொண்டிருந்தான். தன்னைக் காரில் ஏற்றிக்கொண்டு வந்து சுந்தரம் பிள்ளையிடம் ஒப்படைத்தவன் 'தம்பி'தான் என்பது தாமோதரத்துக்குத் தெரியாத விஷயம் இல்லை. இருப்பினும், இப்போது அவனை விடுவிக்கவும் வந்திருக்கிறான்! காலதேச வர்த்தமானங்களை முன்னிட்டு, எதிரியையும் நண்பனாகக் கருத வேண்டிய பிரமேயங்கள் ஏற்படுவது உண்டு. அப்பேர்ப்பட்டதுதான் இப்போதும் நேர்ந்திருப்பது. 'தம்பி'யிடமிருந்து சங்கரன் தப்பித்துக்கொண்டு விட்டான் என்ற செய்தியைக் கேட்டு, மனம் சாந்தி அடைந்தான் தாமோதரம். இந்திராவை வெளியே அனுப்பவும் 'தம்பி' உதவி செய்திருக்கிறான் என்றதும், ''அடே! நீங்கள் எதிர்க் கட்சியே மாறிவிட்டீங்க!'' என்றான்.

'தம்பி' யோசனை செய்தான். சுந்தரம் பிள்ளைக்குத் 'தம்பி' எதிரி; தாமோதரத்துக்குச் சுந்தரம் பிள்ளை எதிரி,



'எதிரி'யின் 'எதிரி' என்ற முறையில் இப்போது இருவரும் நண்பர்களே. ஒருவரை ஒருவர் காப்பாற்றிக் கொள்ள வேண்டியது மிகவும் அவசியம். எனவே, தோழமையுடன் ''எங்கே போகிறீர்கள்'' என்று கேட்டான் 'தம்பி'.

''உங்களையே நான் கேட்க வேண்டும் என்று இருந்தேன் சம்மதமானால் என் வீட்டுக்கு வரலாம்...'' என்றான் தாமோதரம். எனினும், அதைச் சொல்லும்போது அவன் மனத்திற்குள் அவ்வளவு திருப்தி இல்லை; உலகத்தில் எத்தனையோ 'நண்பர்கள்' இருக்கிறார்கள்; சிலரைத் தெருவோடு பேசி அனுப்ப வேண்டும்; சிலரைத் திண்ணையோடு நிறுத்திக் கொள்ள வேண்டும்; வெகு சொற்பமானவர்களைத்தான் கூடத்திற்கு அழைக்கலாம். 'தம்பி' வாசலோடு பேசிவிட்டுப் போக வேண்டிய ஆள். இப்போதுள்ள நிலைமையில்—நன்றிப் பெருக்கின் காரணமாக—கேட்டு விட்டான்.

'தம்பி' ஒப்புக் கொள்ளவில்லை. அவனுக்கும் தாமோதரத்திடம் மிக நெருங்க விருப்பம் இல்லை. ''தேவை இல்லை; நீங்கள் போங்கள்!'' என்றான். ஆனால் குரலில் இருந்த தயக்கம், மறுபடி நாயருடைய சேஷ்டைகளுக்குத்தான் இலக்காகி விட்டால் சங்கடமாயிற்றே என்பதை வெளிப்படுத்தியது.

''ஒன்று செய்யுங்கள். நம் 'ட்ரக் ஸ்டோர்'ஸுக்கு வந்து விடுங்கள்! காலையில் போய்விடலாம்! அங்கே யாரும் இருக்க மாட்டார்கள்; நம்மைக் கவனிக்கவும் மாட்டார்கள்...''

இரண்டு மைல் நடந்தபிறகு ஒரு 'டாக்ஸி'யைப் பிடித்தான் தாமோதரம். தன் தெரு முனையிலேயே டாக்ஸியை நிறுத்திவிட்டு, நடந்து வந்தார்கள் இருவரும். மருந்துக் கடையின் மாடியில் வெளிச்சம் தெரிந்ததைக் கண்டு, தாமோதரம் திகைத்தான். ''யார் இருப்பார்கள் இந்த நேரத்தில் இங்கே?'' என்று சிந்தனை செய்தான்.

''நான் வரவில்லை, ஐயா!'' என்றான் 'தம்பி' பயத்துடன்.

"சும்மா வாருங்கள்! ஏதோ வேடிக்கை நடந்துகொண்டிருக்கிறது. நாம் வாசல்வழி போக வேண்டாம்; பின் வழி போகலாம். நீங்கள் இருப்பதும் எனக்கு நல்லதுதான்" என்றான்.

இருவரும் வந்த வழியே திரும்பினார்கள். நூறு கஜ தூரம் நடந்த பிறகு, அடுத்த தெருவிற்கு இட்டுச்செல்லும் சந்து ஒன்றை வந்தடைந்தார்கள். அதன் வழியே சென்று, மற்றும் இரு சந்துகளில் திரும்பிய பின், 'கல்பமணி ட்ரக் ஸ்டோர்'ஸின் நேர் பின்புறத்தில் வந்து நின்றார்கள். தன்னிடம் இருந்த சாவியைக் கொண்டு தாமோதரம் கதவைத் திறந்துகொண்டு உள்ளே சென்றான்; 'தம்பி'யும் வந்த பிறகு, கதவை உட்புறம் இருந்தபடி அதே சாவியால் பூட்டிவிட்டு, பின் தொடரும்படி சமிக்ஞை செய்தான்.

தாமோதரம் ஒரே பேச்சைத் திரும்பத் திரும்ப முணுமுணுத்துக் கொண்டே வந்தான்.

"சந்தடி செய்யாமல் வாருங்கள்! நம்ம கடையில் இந்த நேரத்தில் விளக்கு எரிவது ஆச்சரியம்!"

முன் கட்டிற்கு வந்தபோது தாமோதரத்தின் திகைப்பு மேலும் அதிகமாயிற்று. கோவிந்தன் ஒரு பெஞ்சியில் கிடந்தான். மெள்ள மூச்சு வந்துகொண்டிருந்தது. ஆனால் பிரக்ஞை இல்லை. குனிந்து முகத்தண்டை தனது நாசியைக் கொண்டு போனான். ஒரு க்ஷண காலம் யோசனை செய்து, "மயக்க மருந்து!" என்று 'தம்பி'யிடம் சொல்லி, கீழே சுற்றுமுற்றும் கண்களை ஓட்டினான். இரண்டு அங்குல சதுரத்தில் ஒரு பஞ்சு கிடந்தது. அதை எடுத்து முகர்ந்த தாமோதரம் தலையை ஆட்டி 'தம்பி'யிடம் கொடுத்தான்.

இரண்டு பேரும் தலையை ஆட்டிக் கொண்டார்கள்.

'தம்பி'யை அங்கே நிறுத்திவிட்டு, தாமோதரம் மருந்து அறைக்குள் விரைந்தான். ஒரு அவுன்ஸ் கிளாஸில் ஏதோ ஒரு மருந்துடன் வந்து, அதைக் கோவிந்தன் வாயில் ஊற்றினான். ஒரு துணியை ஜலத்தில் நனைத்து அவன் முகத்தைத் துடைத்து விட்டான்.



கோவிந்தன் கண் விழித்தது ஓர் ஆச்சரியக் காட்சியாக இருந்தது. இரண்டு நிமிஷம் மிரள மிரள விழித்து, "நான் எங்கே இருக்கிறேன்? நீங்கள் எப்போது வந்தீர்கள்!" என்று கேட்டான் அவன்.

கோவிந்தன் தன்னை ஆசுவாசப்படுத்திக்கொள்ள தாமோதரம் பதினைந்து நிமிஷம் கொடுத்தான். பிறகு அவன் சொன்ன வரலாற்றைக் கேட்கத் தயாராக இருந்தான்.

குருசாமி நாயக்கர் 'ஓட்டம் பிடிக்க' ஏற்பாடுகள் செய்தது, தாமோதரத்தின் மனைவி அங்கே வந்து சேர்ந்தது, அவனிடம் விவரங்களை அவன் தெரிவித்தது, மாடியில் அவள் தங்கிவிடத் தீர்மானம் செய்தது—எல்லாவற்றையும் கோவிந்தன் சொல்லி, "ஆமாம்! நான் எப்படி மயக்கமாக இங்கே கிடந்தேன்? நாயக்கர் ஏதானும் செய்து விட்டாரா? அல்லது, வேறு யாரேனும்தான் என்னை இங்கே இப்படித் தள்ளிவிட்டார்களா?..." என்று கேட்டு ஆச்சரியப்பட்டான்.

"நாயக்கருக்கு அத்தனை துணிச்சல் கிடையாது—அதுவும் என் மனைவி இருக்கும்போது. தெருவில் நீ யாரையேனும் பார்த்தாயா?" என்று கேட்டான் தாமோதரம்.

"ஆ! நினைவு வருகிறது! குள்ளமாக ஓர் ஆள்; நம் கடைக்குமுன் பல தடவை நடை போட்டுக் கொண்டிருந்தான். யாருக்கோ காத்திருந்த மாதிரி இருந்தான்..."

"அது எப்போது?"

"குருசாமி நாயக்கரும், உங்கள் வீட்டுக்கார அம்மாளும் மாடியில் பேசிக் கொண்டிருந்தபோது—"

"நாயராக இருக்குமோ?" என்று சந்தேகப்பட்டுக் கேட்டான் 'தம்பி'.

"எனக்குத் தோன்றவில்லை. எதற்கும் நாம் நேரே மாடியில் ஏறவேண்டாம். அங்கே இன்னும் விளக்கு எரிகிறபடியால், அவர்கள் இருந்தாலும் இருக்கலாம்..."

''பின் எப்படிப் போகிறது?'' என்றுகேட்டான் 'தம்பி'.

தாமோதரம் 'தம்பி'யைச் சும்மா இருக்கச் சொல்லி, ''கோவிந்தன! இவரை அழைத்துப்போவதென்றால், அந்த வழி தயாராக இருக்குமா?'' என்று கண்ணால் ஜாடை செய்து கேட்டான்.

''அதெல்லாம் தாராளமாகப் போகலாம். நேற்றுகூட நான் கவனித்துவிட்டு வந்திருக்கிறேன்... அழைத்துக் கொண்டு போங்கள்!'' என்றான் கோவிந்தன்.

தாமோதரம் 'தம்பி'யிடம் திரும்பி, ''நாம் மாடிக்குப் போக ஒரு ரகசிய வழி வைத்திருக்கிறேன். எத்தனையோ பேருக்கு எத்தனையோ சமயங்களில் அது செய்திருக்கிற உதவியைச் சொல்லி மாளாது. அந்த வழியில் நான் புதிதாக யாரையும் அழைத்துச் செல்வது கிடையாது. நம் 'எதிரி'யைப் பின்னாலிருந்து தாக்க அது உபயோகப்படும். ஆகையால் இப்போது நான் உங்கள் விஷயத்தில் ஒரு விதி விலக்குச் செய்கிறேன். வாருங்கள்!'' என்று அழைத்துச் சென்றான்.

மருந்துக் கடையின் 'ஸ்டாக்கு'கள் சேமிக்கப்பட்டிருக்கும் அறையை அடைந்தார்கள்; அதை அடுத்து சிறு வாசற்படி; இருபுறமும் அட்டைப் பெட்டிகள் சுவர்போல் ஆள் உயரத்திற்கு அடுக்கப்பட்டிருந்தன. இடைவெளி வழியே மற்றோர் அறையினுள் நுழைந்து, மின்சார விளக்கைப் போட்டான் தாமோதரம்.

'தம்பி' திகைத்துப்போய் நின்றான். 'வெளிப்புறம் மிகச் சிறிதாகக் காணப்படும் கடையின் உள்ளே இவ்வளவு விஸ்தீரணமா?' என்ற திகைப்பே அது. அங்கே காணப் பட்டவை எல்லாமே பெரிய அளவில் இருந்தன. ஒரு மூலையில் மேடைமீது ஒரு புலிக்குட்டியின் பொம்மை; உடல் எல்லாம் நிஜரோமம், வர்ணம்கோடுகள், புள்ளிகள், அதன் கண்கள் வீசிய ஒளி, உண்மைப் புலிக்குட்டிதானோ என்ற பிரமையை உண்டாக்கியது. பெரிய மேஜை நாற்காலிகள், சுவரில் ஆறடி உயரத்தில் ஒரு கெடியாரம்



பொருத்தப்பட்டிருந்தது. மிகப் பழமையானதுதான்; எனினும் வர்ணம் மங்காது இருந்தது.

தாமோதரம் நின்றான். ''உங்களிடம் ஒரு விஷயம் கேட்டுக்கொள்ளுகிறேன். நாம் இப்போது ஒரு ரகசிய வழியாக மாடிக்குப் போகிறோம். நீங்கள் என்னுடன் வருவதில் ஆட்சேபம் இல்லை என்று நான் முன்னமேயே சொல்லிவிட்டேன். ஆனால் இந்த வழியை நான் எப்படித் திறக்கிறேன் என்பதைப் பார்க்கக் கூடாது. சற்று அப்படி திரும்பி நின்றால் உபகாரமாக இருக்கும். நம் கோவிந்தன் உங்கள் எதிரில் நின்று, எப்போது திரும்பலாம் என்று சொல்லுவான். தயை செய்யுங்கள்!'' என்றான்

'தம்பி' சொன்னபடி திரும்பிக் கொண்டான். கோவிந்தன் உடலில் வேங்கையின் வேகம் தெரிந்தது. ஒரு க்ஷணத்தில் 'தம்பி'யின் முன்னால் குதித்து, அவன்மீது ஒரு கண், கெடிகாரத்தின்மீது ஒரு கண்ணாக நின்று கொண்டான்.

கெடிகாரத்தினுள் கைவிட்டு,ஏதோ சில குமிழ்களைத் திருப்பினான் தாமோதரம்; இரண்டொன்றை அப்பால் தள்ளினான். பின்பு வெகு நிதானமாகக் கெடியாரத்தை நகர்த்தவும், அது ஸ்தானத்தை விட்டு நகர்ந்து ஒரு நீண்ட சதுரமான வாயிலை வெளிப்படுத்தியது.

''இப்போது நீங்கள் திரும்பலாம்!...இதன் உள்ளே நாலு அடி தூரம் சென்றவுடன் மாடிப்படி இருக்கிறது. இடதுபுறம், வலதுபுறம் திரும்பாமல், என் பின்னாலே வந்தால் மாடி அறைக்குப் போகலாம்.''

'தம்பி' தயங்கினான். ''ஒரு 'டார்ச்' விளக்கு. அல்லது நெருப்புப் பெட்டி இருக்குமானால்—''

''அவை எதையும் நான் இங்கே அனுமதிப்பதில்லை. இப்போது என் மீது நீங்கள் நம்பிக்கை வைத்துத்தான் ஆகவேண்டும். மேலே இருப்பது நாயர் என்றால், நம் இரண்டு பேருக்குமே நல்லது. வருகிறீர்களா—''

'தம்பி' தாமோதரத்தின் தோளில் இரு கைகளையும் வைத்துக்கொண்டு இருட்டில் பிரவேசித்தான். பின்னால்

கோவிந்தன் கடிகாரத்தைத் தள்ளி, குமிழ்களைத் திருப்பி முன்போல் நிறுத்தினான். காரிருள் பேரிருளாக மாறிவிட்டதாக எண்ணிக்கொண்டு, 'தம்பி' படிகளில் ஏறினான். அகலக் கட்டையான படிகள், அதிலும் செங்குத்து. மெள்ள மெள்ளத் தடுமாறி ஏறி மேல் படிக்கு வந்ததும், ஒரு சிறு அறையில் அவர்கள் இருந்தார்கள்.

தாமோதரம் இப்போது 'தம்பி'யின் வாயைப் பொத்தி, பேசவே கூடாதென்று எச்சரிக்கை செய்து மெள்ள அழைத்துக்கொண்டு போனான். அறைக் கோடியில் கீழேயிருந்த கடியாரம் போலவே ஒன்று அங்கேயும் இருப்பது 'தம்பி'யின் கண்களுக்கு மங்கலாகப் புலனாயிற்று. ஆனால் அதைத் தாமோதரம் என்ன செய்தான் என்று கண்டு கொள்ள முடியவில்லை. அவர்கள் முன் ஒரு வாசல் திறந்து கொண்டது உண்மை! ஆனால் ஒரு கறுப்புத் திரை தொங்கியது. அதன் வழியே, அப்பால் மின்சார விளக்கு எரிவதும், மனிதர்கள் இருப்பதும் தெரிந்தன.

தாமோதரம் மறுபடி ஒருமுறை 'தம்பி'யை எச்சரிக்கை செய்துவிட்டு, பதுங்கிப் பதுங்கி, திரையண்டை சென்றான்; 'தம்பி'யும் பின்பற்றினான். அந்த அறையில் நிலவிய நிசப்தத்திலே, அவர்கள் விடும் மூச்சு கூடப் பேரொலியாகக் கேட்டது. திரையின் அருகே நின்று உன்னிப்பாகக் கவனித்தபோது, உள்ளே குருசாமி நாயக்கரும், தாமோதரத்தின் மனைவியும் உட்கார்ந்திருப்பது முதலில் புலனாயிற்று. அடுத்தபடியாகத்தான் நாயர் கத்தியுடன் நிற்பதை அறிந்துகொண்டார்கள்; அவர்களுடைய அசாதாரண மௌனத்திற்கும் கலவரத்திற்கும் காரணத்தை உடனே உணர்ந்தார்கள்.

நிமிஷங்கள் நழுவிக்கொண்டிருந்தன; நாயர் சிலை போல் நின்றான்; உட்கார்ந்திருந்த இருவரும் அப்படியே அசையாமல் இருந்தார்கள்; திரைக்குப்பின் காத்திருந்தவர்களும் வாளா இருந்தார்கள்.

இந்தச் சமயத்தில்தான் 'தம்பி'யின் விரல் சொடுக்கிய சிறுசப்தமோ, தாமோதரத்தின் பெருமூச்சோ நாயர்காதை



எட்டியிருக்க வேண்டும். சடார் என்று ஜாக்கிரதையானான் அவன்; உடல் ஒரு முறை முள்ளம் பன்றியைப்போல் சிலிர்த்தது. நர மாமிசத்தை முகர்ந்துவிட்ட ராட்சசன் மாதிரி, நாலாபுறமும் திருஷ்டியைச் செலுத்தினான். அப்புறம் நடைபெற்றது தாமோதரத்தையே கூடத் திகைக்க வைத்தது. சூறாவளிபோல் 'தம்பி' திரையை அகற்றி விசிறிக் கொண்டு பாய்ந்து விட்டான். அவனால் அடக்க முடியவில்லை, ஆத்திரத்தை. நாயரின் கழுத்தில் இரு கைகளைக் கொடுத்து அவனை அப்படியே தலை கீழாக உயர்த்தி 'பல்டி' அடிக்கச் செய்தான். நாயரின் ஆகாயத்தில் ஒரு கணம் துழாவின.

கீழே அவன் மடார் என்று எறிந்து, கத்தி பிடித்த கரத்தின் மணிக்கட்டில் மீது தன் காலை வைத்து மிதித்தான். ஐந்தாறு முறை மிதித்ததும் கத்தியை நாயர் நழுவ விடவேண்டியதாயிற்று. "நாயே! உன் எலும்பை முறிக்கிறேன்" என்று அவன் மேலே விழுந்துவிட்டான்.

நாயரும் சாமான்யப்பட்டவன் இல்லை! சமயத்தில் புரண்டு கொடுக்கவே, 'தம்பி' தரையில் விழ நாயர் அவன் மேல் தாவி விட்டான். இப்போது 'தம்பி'யின் கழுத்து நாயரின் விரல்களில் சிக்கிக் கொண்டது.

சண்டை என்றால் குருசாமி நாயக்கருக்கு மயக்கம் வந்துவிடும். எனவே, அவர் இது சமயம் கீழே நழுவுவதே தமது உடல் நிலைக்கு நலம் என்று கருதிவிட்டார். ஆனால் அவர் கருத்தைச் செயலாக்கும்முன், கறுப்புத்திரை 'வெடுக்' 'வெடுக்'கென்று அறுக்கப்பட்டு விட்டது. தாமோதரம் தோன்றிவிட்டான். இதற்குள் 'தம்பி'யின் விழிகள் பிதுங்கத் தொடங்கிவிட்டன. முகம் சிவப்பேறி, நாக்கு உதடுகளிடையே விளையாடியது. சில விநாடிகள் தாமதித்தாலும் நாயர் அந்த உயிரை மாய்த்திருப்பான். தாமோதரம் இரண்டு எட்டில் வந்து, நாயரை ஆழம் பாய்ந்த ஒரு முள்ளைப் பிடுங்கி எறிவதுபோல் பிடுங்கி எடுத்தான்; அப்பால் தள்ளினான்.

விடுவிக்கப்பட்ட 'தம்பி' முன்னைவிட ஆவேசமாகச் சீறிக்கொண்டு கிளம்பினான். அவனை அப்போது யாராலும் நிறுத்த முடியாது. ஒரு ஆட்டுக் குட்டியைத் தூக்குவதுபோல் நாயரின் இடுப்பைப் பற்றி அவன் தூக்கினான். இருமுறை அப்படியும் இப்படியும் வீசினான். மூன்றாம் முறை, சுரங்க வாயினுள் எறிந்துவிட்டு, "தாமோதரம்! கதவைச் சாத்துங்கள்! அந்த நாய் நன்றாக வற்றி வடாமாகப் போன பிறகே கதவைத் திறக்கலாம்!" என்றான்.

அது அப்போது அவசியம் இல்லை என்று தாமோதரம் எண்ணியிருந்தாலும் ஆச்சரியம் இல்லை. இருபது படிகள் உருண்டு 'தொப்'பென்ற சப்தத்துடன் கீழே மோதிக் கொண்டுவிட்ட நாயர், எளிதில் ஏறிவர முடியாதுஎன்பதை அவன் அறிவான்.

நாயரின் கத்தியை எடுத்து வைத்துக் கொண்டு தாமோதரம் குருசாமி நாயக்கரைப் பார்த்தான். "என்ன 'முதலாளி'! உமக்கு இப்போ எந்த ஊருக்குப் போக வேணும். அதைச் சொல்லுங்க, கேட்கலாம்" என்று கேட்டான் ஏளனமாக.

இந்திராவையும் சுந்தரியையும் அழைத்துக்கொண்டு ஓடி வந்த பஞ்சநதம் ஐந்தாறு தெருக்களைச் சுற்றி வந்தான். குறிப்பிட்ட வீட்டிலிருந்து எவ்வளவு தூரம் செல்கிறோமோ அவ்வளவுக்கு நல்லது என்பது அவன் எண்ணம். விவேகமான எண்ணம் அது என்பதில் சந்தேகம் இல்லை. ஆனால், அந்தப் பிராந்தியத்தில் அவனுக்கு அவ்வளவு பரிச்சயம் போதாது என்ற காரணத்துடன், மாரிமுத்துவை மறுபடி சந்தித்துவிடக் கூடாதே என்ற பயமும் அவனுக்கு இருந்தது. இந்தக் குழப்பத்தினால் தானோ என்னவோ, அவன் சுற்றிச் சுற்றியே வந்து கொண்டிருந்தான்.

இப்போது போலீஸ்காரர்கள்கூட ஜனங்களின்உதவிக்கு வந்துவிட்டார்கள் என்று தோன்றியது. அவ்வப்போது போலீஸ் ஊதுகுழல் சப்தம் கேட்டு அவன் வயிற்றில்



அக்னியை வளர்த்தது. எப்படியேனும் இந்த இரு ஸ்திரீகளையும் விட்டுப் பிரிந்தால், அவன் ஓடி ஒளிய சௌகரியமாக இருக்கும்...

ஒரு முறை குற்றம் செய்தவன்; திருட்டுக் குற்றத்திற்காகச் சிறைவாசம் இருந்தவன் என்றால், போலீஸார் அவன் பேச்சை நம்புகிறதில்லை; முதலில் அவனைத்தான் சந்தேகிப்பார்கள்...அவன் சிக்கிக் கொண்டால், தீர்ந்தான் அதோடு. மறுபடி போலீஸ் ஊதுகுழல், அடுத்த தெருவில் கேட்டது; இரண்டு மூன்று பேர் ஓடுவதும் காதுகளை எட்டியது.

பஞ்சநதம் அந்தத் தெருவில் இருபுறமும் பார்த்தான். ஒரு வீட்டு வாயிற்கதவு திறந்திருந்தது. "இந்திரா! நீங்கள் இப்படி இருங்கள்...உள்ளே போகவேண்டும் என்ற தேவை கூட இல்லை. நான் சிறிது நேரம் ஒதுங்கியிருப்பது நல்லதென்று நினைக்கிறேன். உங்களுடன் இருந்தால், வீண் தொல்லை உங்களுக்குத்தான்...கால் மணியில் திரும்புகிறேன்!" என்றான்.

சுந்தரியோ இந்திராவோ பதில் கூறுமுன் பஞ்சநதம் ஓடிவிட்டான். மறுபடி போலீஸாருக்குப் பதில் சொல்லத் திராணி இல்லை; அதுவும் மாரிமுத்துவுடன் அகப்பட்டுக் கொண்டால்...நினைப்பதற்கே இல்லை அந்தப் பயங்கரம்! ஓடினான், ஓடினான். மூன்று தெருக்கள் ஓடிவிட்டான். மூச்சுத் திணற நின்றபோது, அந்தத் தெருக்கோடியில் ஜன நடமாட்டம் இருந்தது தெரிந்தது...மேலே செல்வதில் பிரயோசனம் இல்லை; ஆபத்தும்கூட. புதிய ஆள் என்று கண்டு கொண்டார்களோ, ஆயிரம் கேள்விகளுக்குப் பதில் சொல்லாமல் மீள முடியாது. திரும்புவோம் என்றால் மறு கோடியில் இரண்டு தலைகள் தோன்றி, அவன் தலையைச் சுழலச் செய்தன. சட்டென்று ஒரு வீட்டின் காம்பவுண்டுச் சுவருக்கு வெளியே இருந்த பெரிய விருட்சம் அவனுக்குச் சிறந்த மறைவிடமாகத் தோன்றியது.

அவன் அங்கே மறைந்து கொண்ட இரண்டு நிமிஷங்களுக்குள், இரு போலீஸ்காரர்கள் குழலை ஊதிக்கொண்டு

ஓடினார்கள். நல்ல காலமாக, அவன் இருந்த திசையில் கூடத் திரும்பவில்லை. ஒருவேளை தெருக்கோடியில் மாரிமுத்து அகப்பட்டுக் கொண்டிருப்பானோ? அதற்காகத் தான் ஓடுகிறார்களோ! அப்படி இருந்தால்கூட ஒருவிதத்தில் நலமே; இரண்டு மூன்று வருஷங்களுக்குத் 'தீட்டி' விடுவார்கள்! அதுவரை அவனுக்கு நிம்மதியே.

இத்தனை கஷ்டகாலத்திலும்கூட, பஞ்சநதத்திற்கு ஒரு புன்சிரிப்பு வந்தது. மாரிமுத்துவையும் அவனையும் சேர்த்துப் பிணைத்தவிதியை நினைத்து அவன் சிரித்தான். அன்றிரவுக்குள் அவர்கள் இருவரும் எப்படிப் பழகி விட்டார்கள்! மறுபடி போலீஸ்காரர்கள் அந்த வழி திரும்ப மாட்டார்கள்...

காம்பவுண்டுச் சுவரிலிருந்து அவன் பின்னால் 'தொப்' என்று ஓர் உருவம் குதித்தது. பஞ்சநதம் திரும்புவதற்குள், அவன் பிடரியில் ஒரு பலமான கை அழுக்கியது. "துரோகி! என்னையா ஏமாற்றலாம் என்று நினைத்தாய்! எங்கே போய் விடுவாய் நீ!" என்று ஒரு குரல் கேட்டது.

"ஐயோ! மாரிமுத்து!" என்று அலறி விட்டான் பஞ்சநதம். அதற்குமேல் அவன் பேச முடியாதபடி மூகவாய்க்கட்டையில் பலமாகஒரு குத்துவிழுந்தது. தாடை எலும்புகள் நொறுங்குவது போன்ற சத்தமும் கேட்டது

தொலைவில் போலீஸ் ஊது குழல்கள் மறுபடி கேட்டபடி இருந்தன.

## எதிரிகளிடையே தகராறு

நடுநிசியைத் தாண்டிய வேளை! இரண்டு அபலைகள் வயசான ஓர் ஆசாமியைத் துணையாகக் கொண்டு நடந்தார்கள். சுற்றிலும்உள்ள தெருக்களில் எங்கும் ஒரேசந்தடி



கூக்குரல்—'திருடன், திருடன்' என்று திமு திமுவென்று ஜனங்கள் ஓடும் காலடிச் சத்தம். அவர்கள் நெஞ்சு அடிக்கொரு முறை 'திக்திக்'கென்றது. இந்த நிலையிலே, துணைவரும் ஆளைப்பற்றியும் அந்த இருவருக்கும் அதிக நம்பிக்கை இல்லை. மனத்தில் தயக்கம் இருந்தும்கூட, காலடிகளை வேகமாக வைத்தார்கள்.

இந்திராவும் சுந்தரியும் பஞ்சநதத்தைப் பின்பற்றி, அவன் பேச்சை நம்பி ஏன் வந்தார்கள்? அத்தனை துணிவு அவர்களுக்கு எங்கிருந்து வந்தது? சாதாரணமான காலம் என்றால் அவர்கள் இருவருமே ஒரு அடிகூட முன் வைத்திருக்க மாட்டார்கள். அதுவும், இந்திராவுக்குப் பஞ்சநதத்தின் பூர்வோத்திரங்கள் ஓரளவு தெரியும். ஆதலால், நிச்சயமாக மறுத்திருப்பாள். ஏன், இப்படி ஒரு காலத்தில் அவனைத் துணையாகக் கொண்டு அவள் வழி நடப்பாள் என்று யாரேனும் சொல்லியிருந்தால், வாய்விட்டு நகைத்திருப்பாள், இன்று சந்தர்ப்பங்கள் பல சூழ்ச்சி செய்து அவளை எதிர்பாராத நிர்ப்பந்தங்களில் சிக்க வைத்து விட்டன.

அவள் அண்ணன்—கணேசன் என்று நம்பி வந்தவன் ஒரு போலி ஆளாகிவிட்டான். அவனிடமிருந்து தப்ப வேண்டும். எப்படியேனும் தப்பவேண்டும் என்ற ஆத்திரம்; மறுபடி ஒரு முறை சுந்தரம் பிள்ளையின் கையில் சிக்காமல் இருக்கவேண்டும் என்ற துடிதுடிப்பு; மறுபடி விரைவில் வீட்டை அடைந்து தன் நிலைமையை ஆற அமர இருந்து சிந்தனை செய்யவேண்டும் என்று ஆவல்—இவைகளின் காரணமாகவே அவள் புறப்பட்டு விட்டாள். நின்று நிதானிக்கவே இல்லை; அதிகமாக யோசனை செய்யவும் இல்லை.

சுந்தரியின் சமாசாரமே வேறு. அவள் மனக் கண்ணில் இரண்டு பயங்கரமான உருவங்கள் மாறி மாறி வந்து கொண்டிருந்தன. ஒன்று, சுந்தரம் பிள்ளை. இரண்டாவது நாயர். சுந்தரம் பிள்ளையைவிட நாயரிடமே அவள் அதிகம் பயம் கொண்டிருந்தாள். அதற்குக் காரணமும்

இருந்தது. நினைத்துப் பார்த்தால்கூட ஒரு விதத்தில் வேடிக்கையாக இருந்தது அவளுக்கு.

எங்கோ உயரே ஒரு பீடத்தில் ஒரு ஆசாமி உட்கார்ந்திருந்தான். அவன் துஷ்டன். அவனிடமிருந்து நாலா மூலைகளிலும் பரவுகிறது பயம் என்கிற அலை. ஒரு சிலந்திப்பூச்சி வலை பின்னி விட்டு நடுவிலே உட்கார்ந்து கொண்டு, பயத்தை நூல்கள் மூலமாகச் சுற்றிலும் அனுப்புகிற மாதிரி என்று வைத்துக் கொள்ளுவோமே! நடு ஆசாமி சிம்மாசனத்தைப் போட்டுக் கொண்டு திடமாக அமர்ந்திருக்கிறான்! அவன் ஒரு கையை அசைத்தானானால், ஐந்தாறு பேர்கள் ஓடி யாரோ ஒருவனை நசுக்குகிறார்கள்! இன்னொரு கையை அசைத்தால் இரண்டு பேர் வேறொருவன் குரல் வளையைப் பிடித்து அவனைக் கதறக் கதற வைக்கிறார்கள். தலையை ஆட்டுகிறான்; எங்கோ ஒருவனைக் குண்டுக் கட்டாகக் கட்டி, மயக்க மருந்தைக் கொடுத்து, காரில் போட்டுக் கொண்டு விரைந்து வருகிறார்கள்.

ஒரு ஆசாமியின் சக்தி இது; ஸில்க் சட்டை போட்டுக் கொண்டு, மூக்குக் கண்ணாடி அணிந்து கொண்டு புன்சிரிப்புச் சிரித்துக்கொண்டு இருக்கிறான் அவன். ஆனால் அத்தனையும் விஷம். 'இவனைக்கூட நம்பலாம்' நாயர் என்பவனை நம்பவே கூடாது; அவன் கைகளை அசைக்க வேண்டும் என்பதில்லை; தலையை ஆட்ட வேண்டும் என்பதும் இல்லை; அவனே கத்தி: அவனே அதை வீசுபவன். சுந்தரம் பிள்ளையின் ஆக்ஞைக்குப் பணிவதுபோல் அவன் காட்டுவதெல்லாம் பாசாங்கு. அதை அவள் அறிந்து கொண்டிருந்தாள். என்றோ ஒரு நாள் சுந்தரம்பிள்ளையின் மார்பிலேயே அந்தக் கத்தி பாயும்... சுந்தரம்பிள்ளை செயலில் இருக்கும்போதே அந்த நாயர் அவரிடம் சரியாக நடந்து கொள்ளவில்லை...இப்போது இட்டுச் செல்லும் பஞ்சநதம் யாராக இருந்தால் என்ன, அந்தச் சமயத்தில், அவன் துணையாக வந்தான்; சரியான சந்தர்ப்பம் அது. அவன் அளிக்கும் பாதுகாப்பு போதுமானது என்று நம்பினார்கள்.



ஆனால் இருவருமே ஏமாற்றம் அடைந்தார்கள். பஞ்சநதத்தைப் போலீஸ் ஊதுகுழல் மருள வைத்து விட்டது. அவன் தன்னைக் காப்பாற்றிக் கொள்ள இப்போது முனைந்தான். இந்த ஸ்திரீகளிடம் விடுதலை பெறுவதையே முதல் எண்ணமாக எண்ணினான். அவர்களை ஒரு வீட்டின் வாசலில் நிறுத்தி விட்டு, ஒளிந்து கொள்ள ஓடிவிட்டான். தனியே நின்ற இருவருக்கும் முதன் முறையாக ஒரு அச்சம் பற்றிக் கொண்டது. அது யார் வீடோ? கதவைத் திறந்து கொண்டு வீட்டுக்காரர் வந்து 'நீங்கள் யார்?' என்று கேட்டால், என்ன பதில் சொல்வது? —அதிக நேரம் அங்கே நின்று அவர்கள் யோசனைகளில் ஈடுபட அடுத்து வந்த சம்பவங்கள் இடம் தரவில்லை.

தெருக் கோடியில் இப்போதுமீண்டும் ஜன நடமாட்டம் தொடங்கி விட்டது; ஏழெட்டு பேர்கள் லாந்தரும் தடியும் தாங்கிக்கொண்டு ஒரு முனையில் தென்பட்டார்கள். வாசலில் நிற்பதைவிட, வீட்டினுள் செல்வது சௌக்கியம் என்று இந்திரா வாசற்கதவைத் தட்டினாள்; பதிலில்லை, மறுபடி அமுக்கித் தட்டினபோது, கதவு தானாகத் திறந்து கொண்டது. உள்ளே செல்லலாமா, கூடாதா என்று நிர்ணயம் செய்யுமுன் ஜனங்கள் நெருங்கிவிட்டார்கள். ஒரு கணத்தில் இந்திராவுடைய கையைப்பற்றி இழுத்துக் கொண்டு உள்ளே சென்று கதவைச் சாத்தினாள் சுந்தரி.

மட மட வென்று ஜனங்கள் தெருவோடு சென்று மறைந்தார்கள். அவர்கள் இந்த வீட்டைப் பார்த்துக்கூட இருக்க மாட்டார்கள். வேறெங்கோ நோக்கி விரைந்து கொண்டிருந்தார்கள் அவர்கள். அடுத்தபடியாக,'கதவைத் தான் திறந்து விட்டோம்; உள்ளே இருப்பது யார் என்று பார்க்கலாமே?' என்று இருவரும் சிறிது துணிவு கொண்டு ரேழிக்கு அப்பால் எட்டிப் பார்த்தார்கள்; ஒரு ஹால், அறை, முற்றம், மாடிப் படிக்கட்டு, இவைகள் இருந்தன. அங்கே எரிந்த ஹரிகேன் விளக்கு வெளிச்சத்தில் எல்லாம் காலி; ஜனங்கள் யாரும்இல்லை என்பதையேகண்டார்கள்,

இரவு காலத்தில், முன் பின் பார்த்திராத வீட்டில், இரு ஸ்திரீகள் நுழைந்து இப்படி நிற்பது உசிதமே இல்லை என்பது இந்திராவின் அபிப்பிராயம். ஒரு ஆபத்து காலத்தில் நம் நிலைமையைச் சொல்லி யாராயிருந்தாலும் உதவி கேட்பதில் தவறு இல்லை என்பது சுந்தரியின் தீர்ந்த முடிவு. இந்த இரு அபிப்பிராயங்களிலே எது சரி என்று முடிவு செய்ய அவர்களுக்கு வாய்ப்புஇல்லை. வாசற்படிக்கு வெளியே இருவருடைய குரல்கள் வெகு ஆத்திரமாகவும் பலமாகவும் கேட்கத் தொடங்கிவிட்டன. ஒருகால்தாங்கள் உள்ளே இருப்பதை அறிந்துதான் அப்படி இரு ஆசாமிகள் சர்ச்சை செய்துகொண்டார்களோ என்றுகூட ஒரு கணம் இந்திரா பயந்தாள். சில வினாடிகளுக்குள் அவர்கள் இருவருக்கும் ஒருபெரிய உண்மை தெரியவந்தது. அவர்கள் அடைக்கலம் புகுந்திருந்த அதே வீட்டில், சற்று முன்பு வரையில் அவர்களுக்குத் தெரிந்த நபர்கள் இருந்திருக்கிறார்கள்! இருவரும் கைதிகளாக இருந்திருக்கிறார்கள். ஒருவன் நாராயணன்; மற்றவன் சங்கரன், இருவரில் யாராக இருந்தாலும் இது போன்ற சந்தர்ப்பத்தில் அவர்களுக்கு உதவி செய்யத் தயங்க மாட்டான்.

இப்போது சண்டை போட்டுக்கொண்டிருந்தஇருவரும் இதுவரைநண்பர்களாக இருந்தவர்கள்; எந்தஅயோக்கியத்தனமாக இருந்தாலும் சேர்ந்தேசெய்திருப்பவர்கள், பணத்துக்காக எதையும் செய்யக்கூடிய கயவர்கள். இப்போது அவர்கள் எடுத்த காரியம் ஒன்று பலிதம் இல்லாமல் போகவேதான் ஒருவரை ஒருவர் திட்டிக்கொள்கிறார்கள். துஷ்டர்களுக்குள்ளேயே சண்டை.

''இவர்கள் இப்போது கதவைத் திறந்துகொண்டுவந்து விடுவார்களே! நாம் கண்களில் பட்டால் என்ன செய்வார்களோ?'' என்றாள் இந்திரா.

''பேசாமல் இரு; அவர்கள் கண்ணில் நாம் ஏன் பட வேண்டும்?'' என்று திருப்பிக் கேட்டாள் சுந்தரி.

''பின்? அவர்கள் உள்ளே வந்தால் பார்த்து விட மாட்டார்களா!''



''பார்க்காத இடம் இல்லாமல் போய்விடுமோ?''என்று சுந்தரி தைரியமாக இந்திராவை மாடிப் படிக்கட்டில் ஏறும்படி சொல்லி, தானும் பின்தொடர்ந்தாள்.

மாடியில் என்ன புதிய ஆபத்து இருக்குமோ என்று இந்திரா தயங்குமுன் வாசற் கதவை 'மடார்'என்று திறந்து கொண்டு, குள்ளனும் நெட்டையனும் உள்ளே வந்துவிட்டார்கள். அவர்கள் கண் மறைவாக 'பட் பட்'டென்று இரு ஸ்திரீகளும் மாடிப்படியிலேயே குனிந்து கொண்டார்கள்.

''பார்! வீட்டுக் கதவைத் திறந்து போட்டு விட்டு, வெளியே வந்து விட்டாயே! உன் மூளை ஒரே மந்திரமான இருக்கிறது!'' என்றான் குள்ளன்.

''சும்மா ஓட்டிக்கொண்டே போகாதே! நிறுத்து!... எதையோ நினைத்துக் கொண்டு எதையோ பேசாதே! என்னைக்கேட்டால் அந்த இரண்டு ஆட்களும் ஓடினது ஒரு விதத்திலே நல்லது என்று நான் சொல்லுவேன்...'' என்றான் நெட்டையன்.

''உன்னை வந்து ஒருத்தர் கேட்டால், அப்போது மட்டும் சொல்லு! ஒருத்தனும் கேட்கவும் மாட்டான்... தெரு ஜனங்களை வெளியே நிறுத்த சாமர்த்தியத்தைக் காணோம்! 'முடியாது' என்றால், முடியாதுதான். என்ன செய்து விடுவான்கள்!''

''இரண்டு பேரைப் பிடித்துத் தள்ள, பன்னிரண்டுபேர் இருந்தார்கள்...நினைச்சுப் பாரு! அவங்கள் உள்ளே வந்த போது அந்த இரண்டு ஆட்களும் இருந்து நம்மைக் காட்டிக் கொடுத்திருந்தால், என்ன கதி? என்ன கதி என்கிறேன்? நாம் இந்தப் பேட்டைக்குப் புதுசு...''

''அவங்க மட்டும் பழசு!...போய்யா!''

''அட! நிறுத்துங்கறேன்! நீ ஹோட்டல்லே தோல் பையைக் கோட்டை விடவில்லையா; சங்கரன் 'லபக்'குனு கொண்டு போனானே! வாயிலே விரலை வைத்துக்கடித்துக் கொண்டிருந்தாயே! முடிந்ததா உன்னால், அவனை ஓடிப் பிடிக்க!'' என்று கேட்டான் நெட்டையன்.

''என் கோபத்தை ரொம்பக் கிளறி விடறே, ஆமாம்!''

''ஹே! கோபம் வேறே!... அதே மாதிரி நமக்கும் கோபம் உண்டு...''

''அன்னிக்குத் தாமோதரன் வீட்டிற்குள்ளே போய், தேட்டை போட்டு தோல் பை கொண்டுவந்தவன் நான் என்கிறதுஞாபகம் இருக்கட்டும்! நீ வெளியேநின்ன ஆளு!''

''அதுக்காகத்தான் உடனே அதைக் கோட்டை விட்டாயோ?''—ஒரே எகத்தாளம்.

குள்ளன் பொறுமை இழந்து விட்டான். ஒரு பாய்ச்சல் பாய்ந்து, நெட்டையன் முகவாய்க்கட்டையில் குத்துவிட விரும்பிவிட்டான். மற்றவன் இதை எதிர்பார்த்தவனே ஆகையால், வெகு அலட்சியமாகக் குள்ளனைப் பிடித்து அப்பால் தள்ளி, ''வேண்டாம்! அதோடு நிறுத்திக்கொள்... உன் கோபத்தையெல்லாம் மதுரநாயகத்திடம் காட்டு! அவன்தான் அதற்குச் சரியான புள்ளி. நம்மகிட்டகாண்பித்தால் உன் உடம்புக்கு ஆகாது!'' என்றான்.

குள்ளனுடைய தோல்வி, அவனுடைய கோபத்தை மேலும் கிண்டிவிட்டிருக்க வேண்டும். ''நீ வெறும் ஆளு! ஏணி போலே வளர்ந்து விட்டால் ஆச்சா? மதுரநாயகத்திடம் நீதான் சாமர்த்தியமாக நடந்து கொள்கிறதுதானே! அவன் எதிரிலே கூழைக் கும்பிடு போடுகிறதில் குறைச்சல் இல்லை. என்னிடம் பெரிசாக வாய் வீச்சு வீசுகிறாயே!... வெறும் கோழை!''

நெட்டையன் உடல் அசையவில்லை; முகபாவம் மாறவில்லை. ஆனால் கால் ஒன்று வேகமாகச் சடார் என்று அரை வட்டம் அடித்தது; குள்ளன் இடுப்பைத் தாக்கியது. மறுகணம் குள்ளன் தரையில் மடார் என்று சாய்ந்து விட்டான். அவனை மேலும் தாக்க, எல்லா வசதிகளும் நெட்டையனுக்குத்தான் இருந்தது; எனினும், குள்ளன் சாமான்யப்பட்டவன் இல்லை. கீழே விழும் போதே நெட்டையன் முழங்காலைப் பற்றிக்கொண்டு மண்டையால் அவனை நான்கு முறை முட்டினான்.



நெட்டையன் வலி தாங்காமல் சிறிது தளர்ச்சி காட்டவும், மின்னல் போல் குள்ளன் அப்பால் தாவி, பின்புறம் சென்று மண்டையினாலேயே நெட்டையன் இடுப்பில் மோதி வயிற்றை இரு கைகளாலும் பற்றிக் கொண்டான், தன்னை விடுவித்துக்கொள்ள நெட்டையன் செய்த பிரயத்தனங்கள் ஒன்றும் பலிக்கவில்லை. ''வேண்டாம்! வீணாகக் கோபமூட்டாதே! திரும்பினேனானால், உன் மென்னியை முறித்துவிடுவேன்!'' என்று எச்சரித்தான்.

குள்ளன் பல்லைக் கடித்துக் கொண்டு, ''என் மென்னியையா! நீயா! அதுமட்டும் ஒருகாலும் நடக்காது! நம்மை உதைத்துவிட்டும் ஒரு பயல் பிழைத்திருக்க முடியுமா?'' என்று கேட்டான்.

அது எப்படி நேர்ந்தது என்பது இந்திராவுக்கும் சுந்தரிக்கும் தெரியாது. மின்னல் வேகத்தில் தாக்கிக் கொண்டிருந்த இருவரும் தரையில் கட்டிப் புரண்டார்கள். ஒரு சமயம் குள்ளன் கழுத்தை நெட்டையன் அமுக்கும் போது அவன் போய்விட்டான் என்றே தோன்றும். நெட்டையனைக் கீழே தள்ளி, அவன் கேசத்தைப் பற்றி இழுத்து இரு கைகளாலும் முகத்திலேயே அடுத்தடுத்து மொத்தி சளைக்கச் செய்தான் குள்ளன். அப்போது அவன் மூச்சு முட்டிப் போவான் என்று தோன்றும். மாறி மாறி இப்படிச் சிறிது நேரம் போர் நடந்த பிறகு, எப்படியோ குள்ளன் விடுவித்துக்கொண்டு, நெட்டையனிடமிருந்து ஓட ஆரம்பித்தான். அவனுக்கே இப்போது நெட்டையனை இம்மாதிரி நேரிடையாகச் சண்டை செய்து தோற்கடிக்க முடியாது என்று தோன்றியிருக்க வேண்டும்.

விடாமல் துரத்தினான் நெட்டையன். சுற்றிச் சுற்றி இருவரும் ஓடினார்கள். எப்படியெல்லாமோ பாய்ச்சுக் காட்டினான் குள்ளன். இடையில் அவர்கள் ஒருவர்மேல் ஒருவர் கையில் அகப்பட்ட பண்டங்களைத் தூக்கி எறிந்து கொண்டார்கள். இரண்டொரு சாமான்கள் இந்திராவும் சுந்தரியும் நின்ற இடத்தின் அருகிலேகூட வந்துவிழுந்தன. அப்போது அவர்கள் நடுங்கிப் போனார்கள்.

குள்ளனுக்கு ஒரு ஏமாற்றம். இத்தனை நேரமும் நெட்டையன் சளைக்காமல் இருப்பான் என்று அவன் எதிர் பார்க்கவில்லை. இப்போது ஓடிஓடி, குள்ளனுக்கே அலுப்பு வந்துவிட்டது. இந்த 'நண்பர்'கள் தங்களிடையேஏற்பட்ட விரோதம் இப்படி எதிர்பாராத விதமாக முற்றி, இத்தனை தீவிரத்தை அடையும் என்று எண்ணவில்லை. முற்றிவிட்ட பின்னர் பின்வாங்கவும் அவர்கள் விரும்பவில்லை. ஓடிக் கொண்டே இருந்த நெட்டையன் 'பளிச்'சென்று விட்டத்தில் சொருகியிருந்த ஒரு இரும்புக் கைத்தடியை உருவிக் கொண்டு விட்டான்.

அவனுடைய நீண்ட கரத்தில், அந்தக் கைத்தடியும் சேரவே, குள்ளனுக்கு அவன் வீச்சில் அகப்படாமல் சுற்றி ஓடுவதற்கு இடவசதி குறைந்து விட்டது. ஒரு கர்ஜனை செய்துகொண்டு குள்ளன் தாவி, மாடிப்படியண்டை வந்து மேலே ஓடித் தப்பித்துக் கொள்ள யத்தனித்தான்.

அப்போதுதான் முதன் முறையாக இரு ஸ்திரீகள் அங்கே ஒண்டிக் கொண்டிருந்ததையும், பாதையை மறித்த படி அவர்கள் இருப்பதையும் அவன் கண்டான்; கண்டதும் திடுக்கிட்டான்.

"யார்! யார் நீங்கள்!" என்று கேட்டுத் திணறினான்.

குள்ளன் ஓட்டம் தடைபட்டு நிற்கும் காரணத்தை அறிந்து கொள்ளாமலேயே நெட்டையன் கைத்தடியால் ஓங்கி ஒரு சுழட்டுச் சுழட்டிக் குள்ளன் முதுகில் பலமாகச் சாத்தி விட்டான். இரண்டாவது அடி விழுமுன் "அம்மா!" என்று சுருண்டு உட்கார்ந்தான் குள்ளன். அவன் உடலை வளைத்து, முனகி, அடியினால் ஏற்பட்ட நோவைக் காண்பித்தான். பேச நா எழவில்லை.

"நிறுத்து ஐயா நீ! ஒரு ஆளை ஏன் கொலை செய்கிறாய்!" என்று கேட்டாள் சுந்தரி. இந்திராகூட அவள் துணிச்சலைக் கண்டு திகைத்தாள்.

ஒரு கணம் பிரமித்து நின்று விட்டான் நெட்டையன். 'ஓஹோ! உங்களைக் கொண்டு நிறுத்தி யிருக்கிறானோ



குள்ளன்!" என்று சிரித்து, "வாருங்கள்! அம்மணிகளா! உள்ளே வாருங்கள்!" என்று கேலியாக அழைத்தான்.

"நாங்கள் எங்கும் இப்போது வரத் தயாராக இல்லை! உம்முடைய வேலையைப் பார்த்துக்கொண்டு போகலாம்!" என்றாள் சுந்தரி.

"ஓஹோ! என்னுடைய வீட்டுக்கு நீங்களாக அழையா விருந்தினர்களாக வந்திருக்கிறீர்கள். நான் அழைத்தால் வர மறுக்கிறீர்கள். அதைவிட மிஞ்சுகிறது உங்கள் அடுத்த வார்த்தை! என்னுடைய வேலையைத்தானே நான் செய்து கொண்டிருக்கிறேன்; இவனை அடித்து நொறுக்குவது என் வேலை!" என்று பதில் சொன்னான் நெட்டையன்.

"எப்படியோ போங்கள்! முதலில் எங்களுக்கு வழிவிட்டு நில்லுங்கள்! நாங்கள் வெளியே போக வேண்டும்!" என்று ஒரு அடி முன்னே எடுத்து வைத்தாள் சுந்தரி; இந்திராவும் பின் தொடரத் தயாரானாள்.

நெட்டையன் நன்றாகக் குறுக்கே நின்றான். "தாய் மார்களே! உங்களுக்கு இந்த வீட்டு விஷயம் ஒன்று சொல்ல விரும்புகிறேன். இங்கே எங்கள் அனுமதியின்றி யாரும் பிரவேசிக்கலாம். எல்லாருக்கும் 'வெல்கம்'தான். ஆனால் திரும்ப வேண்டுமென்றால், எங்களைக் கேட்டுக்கொண்டு தான் செல்ல வேண்டும்; ஒரு அடி எடுத்து வைப்பதற்கும் எங்களிடம் 'அவுட்பாஸ்' வாங்கிக் கொள்ள வேண்டும்..."

"—ஆகையால்?"

"போவதற்கு அனுமதி இல்லை என்பதை மரியாதையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்."

"ஏன்?"

"நாங்கள் காரணங்கள் சொல்லமாட்டோம். அதை போல் நீங்கள் எதற்காக இங்கே வந்தீர்கள் என்று காரணமும் கேட்க மாட்டோம்."

இந்திரா சற்றுத் தெம்புடன், "நீங்கள் செய்கிறது சட்ட விரோதமான காரியம். நாளைக் காலை போலீஸில் நாங்கள் புகார் செய்தால் என்ன ஆகும் தெரியுமா?" என்று கேட்டாள்.

நெட்டையன் கடகடவென்று சிரித்தான்; "சட்ட விரோதம்! யார் செய்வது முதலில் அந்தக் காரியத்தை! நாங்கள் சட்டத்தை மீறிக் காரியம் செய்யலாம்; அதைக் கேட்பவர்கள் நீங்கள் இல்லை. தவிர, போலீஸுக்குப் பயப்படுகிற புள்ளி நாங்கள் இல்லை..."

சுந்தரியும் பதிலுக்குச் சிரித்தாள்.

"நாங்கள், நாங்கள் என்று பேசிக்கொண்டே போகிறீர்களே! உங்கள் இரண்டு பேரையும் சற்று முன் பார்த்தவர்கள் கூட்டாளிகள் என்று சொல்லுவார்களா!" என்று கேட்டாள்

குள்ளன் இந்த வாக்குவாதத்தின்போது கீழே படுத்து உடம்பைத் திருகி வளைத்து மிகுந்த வலியினால் அவதிப்படுபவன்போல் காணப்பட்டான். ஒரு எறும்பை எடுத்துச் சிறிது நசுக்கி கீழே எறிந்தால், அது தட்டுத் தடுமாறி ஓடும் காட்சியையே அவன் செய்த சேஷ்டைகள் நினைவூட்டின. நெட்டையனும் அஜாக்கிரதையாக இருந்துவிடவில்லை; ஒரு கண்ணால் அவனைக் கவனித்துக் கொண்டேதான் இவர்களுடன் பேசினான். ஏதோ ஒரு சந்தர்ப்பத்தில் சிறிது அஜாக்கிரதையாக இருந்து விட்டான்; அதை நன்கு பயன்படுத்திக்கொண்டு விட்டான் குள்ளன். சிறிய இரும்பு உரல் ஒன்று ஒரு மூலையில் கிடந்தது. அதன் குழவி ஓரடி நீளத்தில், குட்டையாக, கனத்த குமிழுடன் இருந்தது. குள்ளன் குறி தவறாமல் அதை வீசிவிட்டான்.

நெட்டையன் பின் மண்டையில் அது தாக்கியது எப்போது என்று தெரியவில்லை. 'தொம்'மென்று அவன் உட்காருவதையும், இரும்புக் குழவி தாழ்வாரத்தில் உருண்டோடுவதையும்தான் இரு ஸ்திரீகளும் காண முடிந்தது. அடுத்தபடி குள்ளன் சிரித்துக்கொண்டு நின்றான்.

"நீங்கள் சிறிதுகூட பயப்பட வேண்டாம். உங்களைக் காப்பாற்ற வேண்டியது இனி என் பொறுப்பு. அதற்காக நான் உங்களை உடனே வண்டி வைத்து உங்களுடைய வீட்டுக்கு அனுப்பி விடுவேன் என்று நினைக்க வேண்டாம். எங்கள் சமாசாரம் பெரும் பகுதி உங்களுக்குத் தெரிந்து



விட்டது. ஆகையால் நாங்கள் வெளியேறும்வரை, உங்களை வெளியேற்ற முடியாது......தயவு செய்து போய் அந்த அறையில் உட்காருங்கள்!" என்றான்.

நெட்டையனுடைய கதி அவர்கள் மனத்தில் ஓர் அச்சத்தை எழுப்பி, குள்ளன் கொலைக்கும் அஞ்சாதவன் என்ற எண்ணத்தை உண்டாக்கி விட்டது. இருவரும் மௌனமாக நடந்து, முன்பு நாராயணனும் சங்கரனும் இருந்த அறையில் போய் அமர்ந்து கொண்டார்கள்.

முகத்தில் பலத்த குத்து வாங்கிக்கொண்ட பஞ்சநதம் நிலை கலங்கிப் போனான் என்பது உண்மை. ஆனால் விரைவில் சுதாரித்துக் கொண்டான். "மாரிமுத்து! இது என்ன வேலை? நான் என்ன செய்துவிட்டேன்? எதற்காக நீ என்னை அடிப்பது? அதற்குப் பதில் சொல்!" என்று அதட்டிக்கேட்டான்.

"எதற்காகவா! துரோகம் செய்து விட்டு ஓடுபவனை வேறு என்ன செய்வது என்று நீதான் சொல்லு!... இன்று உன் உயிர் உடலில் தங்கமாட்டேன் என்கிறது; அதனால் தான் என்னிடம் நீ விளையாடுகிறாய்! எத்தனை எச்சரிக்கை செய்து உன்னை நான் அந்த வீட்டின் வாசலில் விட்டுப் போனேன்! எனக்கே வெடி வைக்கத் துணிந்து விட்டாயே!" என்றான் பல்லைக் கடித்து.

அதற்குப் பஞ்சநதம் பயந்து போகவில்லை; அழுத்தம் திருத்தமாகவே பேசினான். "மாரிமுத்து! என்னைப் போட்டு வீணாக வருத்தாதே! ஒரு வழியாக உன் கையாலேயே என்னைத் தீர்த்து விடு! ஆமாம், நான் எத்தனை உண்மையாக நடந்து கொண்டாலும் நீ என்னை நம்பவில்லை. ஒன்று போலீஸ்காரன் கையில் பிடித்துக் கொடுத்து விடு; நாலு வருஷமோ, பத்து வருஷமோ உன் தொல்லை இல்லாமல் நிம்மதியாக இருக்கிறேன், இல்லை. இந்த இடத்திலேயே என் கழுத்தை முறித்து எறிந்துவிடு... எனக்கு லட்சியம் இல்லை!" என்றான்.

மாரிமுத்துவுக்கே அவனுடைய பேச்சு ஆச்சரியத்தை அளித்திருக்க வேண்டும். அவன் குரலின் தொனிப்பு, பேசுவ தெல்லாம் வாஸ்தவம் என்று வற்புறுத்தியிருக்க வேண்டும். ''ஓஹோ! உன்னைக் கொல்லச் சொல்கிறாயோ! அப்படி யாவது நான் தூக்கில் தொங்க வேண்டும் என்ற ஆசையா உனக்கு! ஹூம்!'' என்றான். அப்படிச் சொன்னானே ஒழிய பஞ்சநதம் அதுபோல் விரும்பவில்லை என்பதை அவன் அறிந்துகொண்டான்.

பஞ்சநதம் தன் தலையை அழுக்கிப் பிடித்துக்கொண் டான்; ''என் தலை விதியும் நன்றாக இல்லை, மாரிமுத்து! நீ காலி வீடு ஒன்று சொல்லிவிட்டுப் போனாய்! ஆனால், அங்கே இரண்டு பெண்கள் அடைபட்டுக் கிடந்தார்கள். அவர்களில் ஒருத்தி செங்கல்வராய பிள்ளையின் மகள். அவர்கள் இருவரும் இருந்தால் நீ வருவதற்கு இடைஞ்சலாக இருக்கும். தவிர, அவர்களும் வெளியேற ஆசைப் பட்டார்கள். ஆகையால்தான் புழக்கடைப்பக்கம் ஒடி சந்து முனையில் அவர்களைக் கொண்டு விட விரும்பினேன். அதற்குள்...''

''வேறு இரண்டு ஆட்கள் அந்த வீட்டில் என்னை எதிர் பார்த்து வந்து விட்டார்களாக்கும்!''

திடுக்கிட்டான் பஞ்சநதம். ''சத்தியமாய்ச் சொல் கிறேன் மாரிமுத்து! எனக்கு அது சமாசாரமே தெரியாது. நான் வந்த பிறகே அவர்கள் வந்திருக்க வேண்டும்; அல்லது நான் உள்ளே சென்றபோது ஒளிந்துகொண்டிருக்க வேண்டும்......''

''நீ சொல்றதையெல்லாம் நான் நம்ப வேண்டும் என்று சொல்?''

''அதுதான் முதலிலேயே உன்னை வேண்டிக்கொண் டேனே! உன் இஷ்டம்போல் இந்த உடம்பை வெட்டிப் போடு. குத்திப் போடு. நொறுக்கிப் போடு. ஆட்சேபம் இல்லை.''

''யார் நீ சொல்கிற தற்குருசு? நீதானே இருக்கிறாய்!''

''இல்லை; அந்த இரு பெண் பிள்ளைகளும் இருக் கிறார்கள். இந்தச் சமயம் நீயும் வா... அவர்களை ஒரு



வீட்டு வாசலில் நிறுத்தி வைத்துவிட்டு வந்திருக்கிறேன். போலீஸ் ஊதுகுழலைக் கேட்டு நான் அலறிப்போய் அவர்களைத் தனியே விட்டு இங்கு வந்தேன்...

மாரிமுத்து மௌனமாக நின்றான். இந்த அப்பாவிக் கிழவனை அடித்தோமே என்று வருத்தம்கூட இருக்குமோ என்னமோ!

பஞ்சநதம் தொடர்ந்து, ''வாயேன்! உன்னை அவர் களிடமே கொண்டு விடுகிறேன். நான் வாயைத் திறக்க வில்லை, அவர்களே நடந்ததைச் சொல்லுவார்கள். நான் பொய் பேசியிருந்தால், அங்கேயே கொன்று போடு!'' என்றான்.

இது சமயம் ஜன சந்தடியும் அந்த வட்டாரத்தில் ஓய்ந்திருந்தது. இருவரும் மெள்ள மரத்தின் மறைவிலிருந்து புறப்பட்டார்கள். சுவர் ஓரமாகவும் மரங்கள் அளித்த பாதுகாப்பின் உதவியுடனும் நகர்ந்தார்கள்.

பஞ்சநதம் குறிப்பிட்ட வீட்டை அடைந்தவுடன், வாசல்புறம் காலியாயிருந்ததைக் கண்டு திடுக்கிட்டான்; மாரிமுத்துவின் கண்களில் தோன்றிய கோப ஒளியைவிட இரு ஸ்திரீகளையும் அவன் காணாதது அதிகப் பீதி அளித் திருக்க வேண்டும். உடனே ஒரு யோசனை.

''மாரிமுத்து! நான் இப்படி ஒதுப்புறமாக ஒண்டிக் கொள்கிறேன். கதவை இடித்து விசாரி, அநேகமாக அவர்கள் இந்த வீட்டுக்குள்ளே சென்றிருக்கலாம்!'' என்றான்.

பலமுறை தட்டிய பிறகு, ''யார் அங்கே?'' என்று குள்ளனின் உறுமல் சப்தம் கேட்டது.

''கதவைத் திறவுங்கள்!''

''ஏன்!''

''ஒரு அவசர விஷயம்; திறவுங்கள் சீக்கிரம்.''

சிறிது நேரம் நிசப்தம். மறுபடி கதவைத் தட்டினான் மாரிமுத்து; ஐயா! ஒரு முக்கிய விஷயம்!''

முனகலுடன் வந்த குள்ளன் தாழ்ப்பாளைத் தள்ளி ஒருசிறிது கதவைத் திறந்தான், மாரிமுத்துவின் முகத்தைப்

பார்த்ததும், சட்டென்று கதவைச் சாத்தப் போனான். ஆனால் அவனை முந்திக்கொண்டு ஒரு காலை உள்ளே வைத்து "அவசரம் என்ன! பதில் சொல்லிவிட்டுச் சாத்துங்கள்; இங்கே இரண்டு பெண் பிள்ளைகள் நின்றார்களே அவர்கள் இப்போது எங்கே?" என்று கேட்டான் மாரிமுத்து.

"என்னைக் கேட்டால்?"

"பின் யாரைக் கேட்பது? அவர்கள் உள்ளே இருக்கிறார்கள் என்று நான் கேள்விப்படுகிறேன்!"

"நல்ல ஆள் ஐயா நீ! வெளியே போ முன்னாடி!"

"அந்தப் பெண் பிள்ளைகள் இங்கே இருக்கிறார்களா இல்லையா?"

"இல்லை என்று சொல்லிவிட்டேன்! மறுபடியும் சொல்கிறேன்!"

"என் சிநேகிதன் சொன்னானே..."

"அப்போது அவனைக் கேள்! இங்கே நிற்காதே!"

மாரிமுத்து கதவைச் சமயம் பார்த்து விசையுடன் உள்ளே தள்ளினான். குள்ளன் பதிலுக்கு எதிர்த்துத் தள்ளினான்.

இந்தத் தகராறு சிறிது நேரம் நீடிக்குமுன் மறுபடி ஜனங்கள் பேச்சரவம் கேட்டது. குள்ளன் வெகு சாமர்த்திய மாக ஒரு காரியம் செய்தான். கதவைச் சடார் என்று சாத்திவிட்டு, "திருடன்! திருடன்! ஓடி வாருங்கள்! இங்கே திருடன்!" என்று கூக்குரல் போட்டுக் குதிக்கத் தொடங்கினான்.

எத்தனையோ போக்கிரித்தனங்களைப் பார்த்திருந்த மாரிமுத்துவுக்கு இது புதிதாக இருந்தது. 'ஒரு வேளை இவன் உண்மைதான் சொல்கிறானோ! பஞ்சநதம் சொன்னது புளுகோ அல்லது, அந்தப் பெண்கள் வேறெங்கேனும் சென்றிருப்பார்களோ! என்றெல்லாம் எண்ணினான். இனி அங்கே அவன் தாமதிப்பது ஆபத்து; உள்ளே செல்வதிலும் பயன் இல்லை. குள்ளன் காட்டிக்கொடுத்து விடுவான். எனவே தெருவில் இறங்கி எதிர்த் திசையில் ஓடினான்.



குள்ளன் தைரியமாக நடுத்தெருவில் நின்றுகொண்டு "இதோ இந்தப் பக்கம் ஓடுகிறான்! இங்கே!" என்று ஜனங்களைப் பார்த்துக் கூவினான்.

அவன் மட்டும் திரும்பிப் பார்த்திருந்தானாகில், இப்போது திறந்து கிடந்த கதவின் வழியே பஞ்சநதம் வீட்டினுள்ளே செல்வதைக் கண்டிருப்பான். அவன் தப்ப அது தவிர வேறு வழியும் இல்லை. அவனுக்கு உதவி செய்ய எந்த ஆதரவும் இல்லை.

பஞ்சநதம் மாட்டிக் கொள்வானே என்ற கவலை சிறிதும் இன்றி, அவனை முற்றும் மறந்து மாரிமுத்து ஓடிக் கொண்டிருந்தான்.

# கோபாலனுடன் சில நிமிஷங்கள்

அன்று இன்ஸ்பெக்டர் கோபாலன் வீட்டுக்குத் திரும்பியபோது மணி பன்னிரண்டுக்கு மேல் ஆகிவிட்டது. தொப்பியைக் கழட்டி வைத்தவர், உடையைக் களையாமலே நாற்காலியில் சாய்ந்துகொண்டு யோசனையில் ஆழ்ந்தார். இதுபோன்ற சமயங்களில் அவரை நெருங்குவது, கேள்வி கேட்பது, மற்ற விஷயங்கள் விசாரிப்பது எதுவும் எவ்விதப் பலனையும் அளிக்காது என்பது அவர் மனைவி லட்சுமியின் அனுபவம். தீவிர மௌனமே சாதிப்பார் இன்ஸ்பெக்டர். ஆகையால், லட்சுமி நேரில் வராமலேயே இருந்து விட்டாள்.

ஒரே முறை மட்டும் உள்புறம் பார்த்து இன்ஸ்பெக்டர் "என்ன! யார் அங்கே?... இன்றைக்குச் சந்துரு வந்து விட்டு போனானா?" என்று கேட்டார்.

அநேகமாக, சிடுக்கான கேஸ் எது வந்தாலும் சந்துரு இன்ஸ்பெக்டருடன் கலந்து பேச இரவு எட்டு, ஒன்பது மணி சுமாருக்கு வந்து விடுவான். இரண்டு பேர் பேசிக் கொள்வதும் கேட்பதற்கே ரம்மியமாக இருக்கும். ஊர்

விவகாரங்களை அலசுவார்கள், மனித சுபாவங்களையெல்லாம் கொட்டி அளப்பார்கள். இப்படி நடந்தால், இதன் காரணம் என்ன, அடுத்தபடி என்ன எதிர்பார்க்கலாம் என்றெல்லாம் சர்ச்சை செய்வார்கள். கோபாலன் மிகுந்த உரிமையுடன் சந்துருவைக் கேலி செய்வதும் உண்டு. மிக மரியாதையுடன் சந்துரு திரும்ப அவரைப் பரிகாசம் செய்வான். இந்தச் சமயங்களில் இருவருக்கும் இடையே உள்ள பாந்தவ்யமும் அன்பும் வெளிப்படும்.

இன்று கோபாலனுக்கு ஒரு புதிய வேதனை. கள்ள நோட்டுகள் சில அவருடைய பார்வைக்கு வந்திருந்தன. எங்கிருந்து அவை வருகின்றன என்ற விவரம் ஏதும் தெரியவில்லை. சாதாரண வியாபாரிகள் இரண்டு மூன்று பேர், ஒரு பிரபல காபி ஹோட்டல், ஒரு சிறிய பாங்கி இவைகளிலிருந்து அவை கண்டுபிடிக்கப்பட்டன. உண்மையில், ஒரு பாங்கி குமாஸ்தா சந்தேகப்பட்டு, பதினைந்து நோட்டுகளைப் பரிசோதனை செய்ததில்தான் இதுவே ஆரம்பமாயிற்று. இன்ஸ்பெக்டர் கோபாலன் மேற்கொண்டு தொடர்ந்து புலன் விசாரணை செய்ய வேண்டும்.

இன்ஸ்பெக்டருடைய கேள்விக்கு லட்சுமி பதில் கூறினாள்; ''வரவே இல்லை! அவர் இந்தப் பக்கம் வந்து பதினைந்து நாட்கள் இருக்குமே!'' என்றாள்.

கோபாலன் மௌனமாகி, மீண்டும் யோசனையில் ஆழ்ந்து போவதற்குள், ''இப்போது ஏதாவது பெரிய கேஸோ?'' என்று அவள் கேட்டு வைத்தாள்.

''பெரிய கேஸ்! ஆமாம்!''—இன்ஸ்பெக்டர் முகவாய்க் கட்டையைச் சொறிந்து கொண்டார். ''சந்துரு அதை மூடி மூடி வைக்கிறதைப் பார்த்தால் ரொம்பப் பெரிதாக இருக்குமோ என்றுகூடத் தோன்றுகிறது...'' என்றார்.

''சந்துருவாகக் கண்டுபிடித்தாரா? தானாக வந்ததா?''

''இல்லை; வந்து மாட்டிக்கொண்டது. ஒரு ஆள் தானே வந்து புகார் செய்தான். சந்துரு புகுந்துவிட்டால், அது தானாகவே பெரிய கேஸ் ஆகிவிடும்...... அவன் வரவில்லை என்றோபே; அதுதான் ஆச்சரியமாக இருக்கிறது!''



இந்தச் சமயத்தில்தான் வாசற் கதவு இடிக்கப்படும் சப்தம் கேட்டது. லட்சுமி திறந்துவிட்டு ''நூறு ஆயுசு என்று நாங்கள் சொல்லுவோம். உங்கள் போலீஸில் நம்புவீர்களோ என்னவோ! இப்போது உங்களைப் பற்றித்தான் 'அவர்' பேசிக்கொண்டிருக்கிறார்...'' என்று சொல்லிக்கொண்டே திரும்பி வந்தாள்.

சந்துருவும் சஞ்சீவியும் உள்ளே பிரவேசித்தார்கள். நாற்காலியில் உட்கார்ந்து, சஞ்சீவியையும் உட்காரச் சொல்லிவிட்டுச் சந்துரு, ''ஏன், இப்போதுதான் ஸ்டேஷனிலிருந்து வருகிறீர்களோ?'' என்று கேட்டான்.

''ஆமாம்... அரைமணி இருக்கும்...'' என்றார் கோபாலன்.

''கள்ளநோட்டுக் கேஸ் ஏதானும் வந்துவிட்டதா?'' என்றான் சந்துரு அநாயாசமாக.

கோபாலன் சிறிது திடுக்கிட்டார்! ''ஏன், நீயும் ஸ்டேஷனுக்குப் போயிருந்தாயா?'' என்று கேட்டார்.

''இல்லை; நான் லீவில் இருக்கிறேன் என்பது உங்களுக்கு ஞாபகம் இல்லையா? லீவில் இருந்தால், ஆபீஸ் பக்கம் கால் வைப்பதில்லை, உங்கள் முகத்தில் இருக்கிற சுருக்கங்களைப் பார்த்தேன். முந்தாநாளே நான் அவைகளை எதிர்பார்த்து விட்டேன். என்னுடைய சில ஊகங்கள் சரி என்றால், இப்படித்தான் நடக்க வேண்டும்...''

''நீ என்ன சொல்கிறாய்?''

''தாமோதரம் என்ற ஆசாமி உங்களையும் என்னையும் தேடிக் கொண்டு வந்தபோது எனக்கு வேலை இருக்கிறது, உங்களுக்குக் கவலை வருகிறது! என்று முடிவு செய்துவிட்டேன்...அப்புறம் ரொம்ப விஷயங்கள் நடந்துகொண்டு வருகின்றன. நான் இப்போது உங்களைப் பார்க்க வரவில்லை இன்ஸ்பெக்டர்! உங்கள் நெற்றியின் ரேகைகளைப் பார்க்கவே வந்தேன், பார்த்துவிட்டேன்...''

இன்ஸ்பெக்டர் ஓங்கி மேஜைமீது கையைக் குத்தினார். ''அட என்னமோ புரியாதபடி பேசிக்கொண்டு

போனால் யாருக்கு லாபம், ஐயா? சொல்லேன் நடந்திருப்பதை! (மூன்று நான்கு நோட்டுகளை மேஜைமீது வீசி) இதெல்லாம் கள்ள நோட்டு என்று நம்மிடம் வந்திருக்கிறது. ஏதாவது உன்னால் சொல்ல முடியுமா?''

சந்துரு அவற்றைக் கையில் எடுக்கவே இல்லை. ''கள்ள நோட்டு வரும் என்று நான் எதிர்பார்த்தேன் என்றால் காரணத்தைக் கேட்கிறீர்கள்... மிஸ்டர் சஞ்சீவி! அந்த நோட்டுகளை எடுக்கவேண்டாம். இன்று பிற்பகல் எனக்கு ஐந்து நூறு ரூபாய் நோட்டுகளை ஒரு ஆள் இனாமாகக் கொடுப்பதற்குக்கொண்டு வந்தான். நான் ஏற்றுக்கொள்ளவில்லை. எல்லாம் இதே மாதிரி சரக்கு...''

''உம்?'' என்று வினவினார் கோபாலன்.

''நான் கையால்கூடத் தொடவில்லை. கண்ணால் பார்க்கக்கூட மறுத்தேன். வந்த ஆசாமி கெட்டிக்காரன். பிடிவாதமாக அப்படியே வைத்துவிட்டுப் போனால், நான் அவைகளைப் பரிசோதனை செய்வேன் என்று, கையோடு திருப்பி எடுத்துப் போக வேறொரு ஆளையும் கூடவே அழைத்து வந்தான்...''

''இரண்டு பேரையும் நீ சும்மாவிட்டு விட்டாயா?'' என்று கேட்டார் கோபாலன்.

''அவர்களைப் பிடித்து வைப்பதனால் பிரயோசனம் இல்லை என்று விட்டுவிட்டேன். தங்களை அனுப்பினவன் யார் என்று அவர்கள் வெளியிட மாட்டார்கள். அப்படி வெளியிட்டாலும், அந்த ஆள் ஜாக்கிரதையாகி விடுவான்; நாம் ஆரம்பத்திலிருந்தே கேஸை எடுத்துக் கவனிக்கலாம், நடு ஆட்களிடம் தகராறு வேண்டாம் என்று அனுப்பி விட்டேன். சில விஷயங்களைச் சொல்லலாமே என்று இங்கே வந்தேன். உங்களுக்கு அவகாசப்படுமா?''

''பேஷாக... ஏதானும் சாப்பிடுகிறீர்களா?'' டீ, காபி, ஓவல்டின்.''

''எதுவும் இஷ்டம்! அது தயாராகும்போது என் வரையில் நடந்தவற்றை முன்னாடி சொல்கிறேன். தவறு இருந்தால் குறுக்கே பேசலாம், ஆட்சேபணை இல்லை...''



லட்சுமி முதல் தரமான காபி கொண்டு வந்து வைத்தாள். அது வருவதற்குள் சந்துருதான் விங்கிச் செட்டித் தெரு வீட்டிற்குச் சோதனை செய்யப் போனது முதலாக கணேசன், ராஜமாணிக்கம்—வெங்கு ஜோடிகள் வந்தது, டெலிபோனில் கேட்ட அபயக்குரல், 'தம்பி'யின் வருகை, சஞ்சீவி கொடுத்த தகவல்கள் எல்லாவற்றையும் விவரமாகக் கூறி, ''அப்படி இருக்கிற விஷயத்திலே, துப்பறியும் தொழிலை எடுத்துக்கொண்ட என் பாடுதான் இப்போது மிகவும் கஷ்டமாகப் போய்விட்டது. ஒரு எழுத்தாளனிடம் சாதாரண விஷயம் கிடைத்தால் அதில் சரக்கு சேர்த்து ருசிகரமாக எழுதி விடுவான். விஷயமே மிக ருசியுள்ளதாக அமைந்து விட்டால், அதற்கு மேலும் ருசியூட்டுவது எத்தனை சங்கடம்! அதே மாதிரி இந்தக் கேஸில் சம்பந்தப்பட்டவர்கள் எல்லாரும் ஒரு வகையில் கெட்டிக்காரர்களாக இருக்கிறார்கள். ஒவ்வொருவரும் துப்பறிகிறவன் மாதிரி மூளையைச் செலவழித்து வேலை செய்கிறார்கள். ஆகையால், நான் பதுங்கியிருந்து வேலை செய்ய வேண்டி வந்துவிட்டது. நாலா மூலையிலும் ஆட்களிடம் பீதியைக் கிளப்பி, நன்றாகப் பொங்கவிட்டு, அது அடங்கின பிறகு பிரவேசித்தால்தான் பலன் உண்டு...'' என்றான்.

''அப்படி என்ன நடந்து கொண்டிருக்கிறது?''

''நீங்கள் ஆபீஸில் இருக்கிறீர்கள்; நான் என் அறையில் இருக்கிறேன். ஆனால், எதிரிகள் கோஷ்டிகளுக்குள் பெரிய மோதல் ஏற்பட்டு நடந்துகொண்டிருக்க வேண்டும் என்பது என் ஊகம். தாமோதரம் ஒருவன்தான் வந்தான்; ஆனால் அவனைக் கலவரப்படுத்திய பேர்வழிகள் அநேகர் இருக்கிறார்கள். ஒரு ஸர்க்கஸில் உள்ள அத்தனை துஷ்ட மிருகங்களையும் அவிழ்த்து விட்டால், என்ன நிலை உண்டோ, அது ஏற்படும் என்று நான் எதிர்பார்த்தேன்! முயற்சியும் எடுத்துக்கொண்டேன், அதையெல்லாம் என்னை அலட்டிக் கொள்ளாமலே செய்திருக்கிறேன், பலன் என்னவென்றால், கணேசன் சந்தேகப்படுகிறான்;

'தம்பி' பயப்படுகிறான்; தாமோதரம் உளறுகிறான்; இன்னும் யாரோ ஒரு ஆசாமி பீதி அடைந்து போய் செங்கல்வராய பிள்ளையையும் இந்திரானையும் கொண்டு போய் வைத்துக்கொண்டிருக்கிறான். மதுரநாயகம் இருப்போமா ஓடுவோமா என்று நிச்சயம் செய்ய முடியாமல் தவிக்கிறார்; இரண்டு துஷ்டப்பயல்கள் அங்கும் இங்குமாக அல்லாடுகிறார்கள்... தெரிந்து இத்தனை; தெரியாமல் இதைப்போல் நாலு பங்கு குழப்பத்தை. 'நான் இந்தக் கேஸில் பங்கு கொள்கிறேன்' என்று காட்டியே எழுப்பி விட்டேன். ஒருதரம் டெலிபோனில் எனக்கு எச்சரிக்கை! அடுத்தாப்போல் லஞ்சம் கொடுத்து வாயை மூட ஒரு முயற்சி... என்ன சொல்கிறீர்கள்?''

''நீ அல்லவா சொல்ல வேண்டும், சந்துரு!'' என்றார் இன்ஸ்பெக்டர் கோபாலன்.

சந்துரு நெற்றியைச் சுருக்கி விட்டுக்கொண்டு, கண்களை மூடிச் சிறிது நேரம் மௌனமாக இருந்தான். பிறகு ''இன்ஸ்பெக்டர்! நான் கவனித்த வரையில், மூன்று கோஷ்டிகள் இதில் வேலை செய்கிறார்கள். அவர்கள் தனித்தனியே வேலை செய்கிறார்கள். எல்லோருக்கும் மத்தியில் செங்கல்வராய பிள்ளை இருக்கிறார். இப்போது நேர்ந்திருக்கிறது என்னவென்றால், மூன்று கோஷ்டிகளும் வேலை செய்ய ஒரே சமயத்தைத் தேர்ந்தெடுத்துக் கொண்டிருப்பதுதான்...'' என்றான்.

''மேலே சொல்லிக்கொண்டே போ! சந்தேகம் இருந்தால் நிறுத்திக் கேட்போம்!'' என்று கோபாலன் உற்சாகப் படுத்தினார். அதற்குப் பிறகு சந்துரு அவர்கள் யாரையும் பார்க்காமல் கண்ணை மூடிக்கொண்டே பேசினான்.

''முதலில் நம்மிடம் புகாருடன் வந்த தாமோதரத்திலிருந்து ஆரம்பிக்கிறேன். அவன் பேசினதிலிருந்தும், நம்மிடம் நடந்து கொண்டதிலிருந்தும், அவன் ஒரு பேர்வழி என்று சாதாரணமாக யாரும் சொல்லுவார்கள். அவன் கடையில் குமாஸ்தாவாக மட்டும் இருந்தால், முதலாளி



யிடம் கேட்டுக்கொண்டு வருவான். முதலாளியைப் பார்த்தாலோ, ஒரே துடை நடுக்கம், பயந்தாங்கொள்ளி...எடுத்ததற்கெல்லாம் தாமோதரத்தின் பெயரைச் சொல்கிறான். டெலிபோனில் ஒரே நிமிஷத்தில் கண்டுவிட்டேன் இதை. அந்த மருந்துக் கடையில் உண்மையில் எஜமானாக இருப்பவன் தாமோதரம், அடிமையாக இருப்பவன் நாயக்கர்— அது என் ஊகம். இது சரிதானே என்று பிறகு பார்த்துக் கொள்ளலாம்.

ஒரு தோல் பை என்று தாமோதரம் சொல்லிக்கொண்டு வந்தான். அப்படி ஒரு பை என்றால் பணம், அல்லது பணம் பண்ணும் சாதனம் என்று என் பொல்லாத புத்தி எனக்குச் சொல்லுகிறது. தாமோதரம் அதைத் தான் வாக்களித்தபடி திருப்பிக் கொடுக்காமல் ஒளித்து வைக்கிறான் என்கிறபோதே அது நிச்சயம் ஆகிறது.

இந்தச் சமயத்தில் எனக்கு வேறு இரண்டு விதமான தடயங்கள் உதவி செய்கின்றன. பை காணாமல் போன செங்கல்வராய பிள்ளை வீட்டுக்கும் தாமோதரத்திற்கும் ஒருவித சம்பந்தம் இருந்திருக்க வேண்டும். பிள்ளையின் வீட்டில் இந்த ட்ரக் ஸ்டோர்ஸில்தான் குறிப்பாக மருந்து வாங்குகிறார்கள். இரண்டாவதாக, லிங்கச் செட்டித்தெரு வீட்டில் தோல் பை இருந்த இரும்புப் பெட்டிக்குள், இந்த ஸ்டோர் விலாசத்துடன் கிடந்த ஒரு 'கார்டு' எனக்கு அகப்பட்டது. ஆகவே யாரும் அறியாத வகையில் தாமோதரம் செங்கல்வராய பிள்ளையுடன் கூட்டாக இருக்கிறான்.

இன்ஸ்பெக்டர்! ஸார்! எனக்கு எப்போதும் கோணல் புத்தி. கெட்டதை நினைத்துவிட்டுத்தான் நான் நல்லதை நினைப்பேன். மருந்துக் கடை வைத்திருக்கும் தாமோதரம் ஏதோ ஒரு ரகசிய வியாபாரம் செய்கிறான். அதற்குச் செங்கல்வராயபிள்ளை உடந்தை என்று நான் ஊகித்தேன். இரண்டு பேரும் இரு கடைகள் நடத்துகிறார்கள். வெளிப்படையாக போர்டுகள் வெவ்வேறு தொழில்களைக் குறிப்பிட்டாலும், உள்ளே இருவருக்கும் பொதுவான ஏதோ ஒரு தொழில் நடக்க வேண்டும். அது சட்ட விரோதமாகவும்

இருக்கவேண்டும். நிறைய லாபம் அளிப்பதாக இருப்பதாலேயே, எதிரிகள் ஏற்பட்டிருக்கிறார்கள், அது என்ன? அப்படியே அதை நிறுத்திக்கொண்டு, தாமோதரத்தின் மற்ற வெளி விவகாரங்களைக் கவனித்துக் கண்டுபிடிக்க முயற்சிக்கலாம்.

நான் தேனாம்பேட்டை பங்களாவில் இரவில் தங்கிய சமயம் ஜன்னல் வழியே பார்த்துக்கொண்டே இருந்தேன். மதுரநாயகம் மெள்ள நடந்து வந்தார். திடீர் என்று முன்னே சென்று கொண்டிருந்த கணேசன்மீது பாய்ந்து, அவனைக் கீழே தள்ளிவிட்டார். கணேசனுக்கும் மதுரநாயகத்துக்கும் அத்தனை பகைமை எங்கிருந்து வந்தது என்று நான் அப்போது ஆச்சரியப்பட்டேன். ஏனென்றால் அதே இரவின் சில மணி நேரத்திற்கு முன்பு, கணேசன் அறையில் மூர்ச்சையாகக் கிடந்தபோது இதே மதுரநாயகம் பரிவுடன் இருந்திருக்கிறார்; இந்திராவின் அபிப்பிராயப்படி இவர்களுக்குள் எவ்விதமான பெரிய மனவேற்றுமையும் இல்லை. இந்தச் சிறிய காலத்துக்குள் எப்படி ஒருவரையொருவர் தாக்கிக்கொள்ளும்படி துவேஷம் வந்தது!

என்னிடத்திலேகூட கணேசன் இரண்டு விதமாகவும் இருந்திருக்கிறான். முதல் முதலில் நான் அவனுக்கு மூர்ச்சை தெளிவித்தபோது, விஷயங்களைச் சொல்ல அதிக ஆர்வம் காட்டவில்லை. இரண்டாவதாக, டெலிபோனில் என்னை யாரோ அழைத்தபோது, 'பேச முடியாது' என்று அவனே கூறி முடித்துவிட்டான். பிறகு, செங்கல்வராய பிள்ளையைப் பங்களாவிலிருந்து இருவர் பலவந்தமாகக் கொண்டு போனார்கள் என்னும் விவரங்களைச் சொன்னபோது, எனக்கு மதிப்புக்கொடுத்தான். நாலாம் முறையாக என்னை வீட்டில் சந்தித்து வலுவில் தகவல்கள் கொடுத்தபோது, எனக்கு அவநம்பிக்கையே ஏற்பட்டது. இதிலிருந்தெல்லாம் நான் ஒரு கணேசனை அல்ல, இரண்டு வித கணேசனைப் பார்த்து வருகிறேன் என்று சந்தேகம்வலுத்து வந்தது...''



வாய்விட்டுச் சிரித்தார் கோபாலன். ''என்னய்யா? கதை சொல்கிறாய் என்னிடம்! இந்திரா எதிரில் அவள் அண்ணன் என்று தெம்பாக ஒரு போலி ஆசாமி வந்துவிட முடியுமா?''

''ஒரு நிமிஷம் அவகாசம் வேண்டும், இன்ஸ்பெக்டர்! நான் கவனித்தவரையில் கணேசன் அநேகமாகக் கண்ணில் படாமல் ஒதுப்புறமாக இருந்தான். இருட்டு வேளையில், மங்கலான வெளிச்சத்திலேயே பார்த்தோம், இந்திரா அவனை நெருங்கியிருந்த இரண்டு சந்தர்ப்பங்களிலேயும் மிகுந்த படபடப்பாக இருந்தான். ஒரு தடவை அவன் மூர்ச்சையாகக் கிடந்தான்; மற்றொரு சமயம், யாரோ ஒருவனுடன் குஸ்தி போட்டு வீழ்த்தப்பட்டிருந்தான். இந்திராவிடம் என் சந்தேகத்தை நான் சொல்ல சந்தர்ப்பப் படவில்லை. என் சந்தேகத்திற்கு இன்னொரு காரணம் இருக்கிறது.

ஐந்தாறு வருஷங்களுக்கு முன் ஒரு கள்ளக் கடத்தல் கேசில் இரண்டு வருஷம் தண்டனை பெற்றான் கந்தப்பன் என்று ஒருவன். நான் அவனைப் பார்த்திருக்கிறேன். அதே ஆசாமி இப்போது அங்கே கன்னையன் என்ற பெயரில் டிரைவராக இருந்து வருகிறான். நான் விசாரித்தபோது 'இல்லை' என்றான்; வீட்டுக்கு வந்ததும் 'பைல்'களைப் புரட்டி அவன் போட்டோவைப் பார்த்து விட்டேன். ஒரே ஆள்தான். அவனைப் பார்த்தபோது எனக்குக் கணேசன் முகத்தையும் எங்கோ கண்ட ஞாபகம் திரும்பத் திரும்ப வந்து கொண்டிருந்தது. கணேசன் மூர்ச்சையாகக் கிடக்கிறான் என்றவுடன் கூப்பிடாமலேயே மேலே ஓடி வந்து விட்டான். கன்னியப்பனும் கணேசனும்—அதாவது, என் ஊகம் சரியானால்—ஒரு கணேசனும் கூட்டாளிகள்; அந்த வீட்டில் சேர்ந்து வேலை செய்கிறார்கள்.''

''அவ்வளவுதான் காரணங்களா?''

''இல்லை; நான் என் ஊகத்தை ஊர்ஜிதம் செய்து கொள்ள இன்னும் இரண்டு மூன்று சோதனைகள் செய்து இருக்கிறேன். செங்கல்வராய பிள்ளை அறைக்கு நான்

அமையா விருந்தினராகச் சென்ற சமயம் அவர்கட்டிலுக்கு அடியில் ஒரு காகிதத்தைச் சுருட்டிப் போட்டிருந்ததைக் கண்டெடுத்தேன். பூட்ஸை சரிசெய்து கொள்கிற மாதிரி நான் அதைப் பொறுக்கி எடுத்துப் பத்திரப் படுத்திக் கொண்டிருக்கிறேன். அதை யார் எழுதியிருக்கலாம் என்று நான் மண்டையைத் துருவிக் கொண்டிருந்தேன். ஒரு வீட்டில் ஒருவரைப் போல இரண்டு ஆசாமிகள் உலாவினால், அது கவனிக்க வேண்டிய விஷயம் அல்லவா? ஆகையால் சந்தேகத்தை எழுப்பாமல் கணேசன் கைப்பட ஒரு கடிதம் எழுதி வாங்கிப் பார்த்து விடலாம் என்று எனக்குத் தோன்றிற்று. கணேசனே என்னைப் பார்க்க வந்தபோது, ஒரு கடிதம் எழுதி தரச் சொன்னேன். இரண்டு கையெழுத்துகளும் ஒன்றாக இருக்கவே, இந்தக் கணேசன் இந்திராவின் அண்ணனாக இருக்க முடியாது என்று தீர்மானம் செய்து கொண்டு, சஞ்சீவியை அவன் பின்னால் அனுப்பினேன்.

செங்கல்வராய பிள்ளை கையொப்பத்துடன் ஒரு 'செக்'கைப் பாங்கியில் நீட்டி, ஐயாயிரம் ரூபாய் கேட்டான் அவன். இதைக் கேட்டவுடன் என் மூளையில் ஒரு பழைய விஷயம் பளிச்சிட்டது. முன்பு கன்னையன் ஜெயிலுக்குப் போன கேஸில், ஒரு ஜமீன்தாருடைய மாப்பிள்ளை மாதிரி வேஷம் போட்ட ஒரு ஆசாமியும் சிக்கிக் கொண்டான். குற்றம் ருசுவாகாதபடியால் அவன் விடுதலையாகிவந்தான். போலீஸ் எவ்வளவோ முயன்றும், அவனை இணைக்க முடியவில்லை. அவன்தான் இந்தக் கணேசன் என்று எனக்கு ஞாபகம். இவன் ஒரு நல்ல நடிகன் என்று பெயர் வாங்கினவன். ஐந்தாறு முறை போலீஸ் கண்காணிப்பிலும் இருந்து வந்திருக்கிறான்.

இந்த ஆள் கணேசன் போல் நடிக்கிறான். ஈச்வரனுடைய சிருஷ்டியில் வெகு அபூர்வமாக இரண்டுபேர் ஒரே மாதிரி இருந்து விடுகிறார்கள். சிறிது 'மேக்—அப்'பினால் ஊரை ஏமாற்றிவிட முடியும். அதைத்தான் செய்திருக்



கிறான் இவன் என்று எனக்குப் பட்டது. மேலும், கன்னையன் என்ற பழைய கூட்டாளியும் வந்து சேர்ந்தான். இருவரும் ஒரு பங்களாவில் ஒரு திட்டம் போட்டுக்கொண்டு புகுந்திருக்கிறார்கள். ஒருவன் டிரைவராக வெகு எளிதில் அமர்ந்து கொண்டான். மற்றவன் உறவினன் போலவே பிரவேசித்தான்? இத்தனை வசதிகள் இருக்கும்போது என்ன குறை என்று சாதாரணமாகத் தோன்றுகிறதல்லவா? ஒரு குறை இருக்கத்தான் செய்தது.

இந்தப் போலி ஆசாமிக்கு அவன் திட்டம் போட்டபடி உண்மை கணேசனை அப்புறப்படுத்த முடியவில்லை. எதிர்பாராத சமயங்களில் அவன் திரும்பத் திரும்ப எதிர்ப்பட்டு, இவர்கள் கட்டிய கோட்டைகளையெல்லாம் கலைத்துக் கொண்டே வந்தான். தவிர, மதுரநாயகம் வேறு இவர்கள் இருவரையும் சந்தேகப்பட்டு விட்டார்.

இன்னொரு விஷயம் ஞாபகப்படுத்திக் கொள்ளுங்கள். அன்று இரவு நான் தேனாம்பேட்டை பங்களா மாடியில் இருந்து பார்த்துக் கொண்டே இருந்தேன். போலி கணேசன் முன்னே செல்கிறான், பின்னால் வந்து மதுரநாயகம் அவனைத் தாக்கி வீழ்த்திவிட்டு ஓடுகிறான். அண்ணாமலை அவனைச் செடி மறைவில் இழுத்துப் போடுகிறான். ஒன்றுக்குள் ஒன்றாக மர்மங்கள், நான் சென்று பார்ப்பதற்குள் ஒரு துப்பாக்கி வேட்டு; செடிகள் மறைவில் யாரும் இல்லை; மாயமாக மறைந்துபோனான் வீழ்த்தப்பட்டவன். இது அப்படியே இருக்கட்டும். பின்னால் வருவோம்! அதன் பின் நடந்ததைக் கவனியுங்கள்.

அண்ணாமலையிடம் நான் ஒரு கைக்குட்டையை வாங்கிக் கொண்டேன் அல்லவா? இரண்டு விதமான ருசுக்கள் அது கொடுக்கிறது. முதலாவதாக: அதில் இருக்கும் வாசனை ஆரம்பத்தில் தாமோதரம் என்னைப் பார்க்க வந்தபோது அவனுடைய கைக்குட்டையில் ஒரு வாசனையை நான் கவனித்து, அவனிடமும் சொன்னேன்; அதே வாசனை இவனுடைய கைக்குட்டையில் இருக்கிறது. தாமோதரத்தின் பெயரின் முதல் எழுத்து இருக்கிறது.

ஆகையால், அவனுடைய அரவணைப்பில் இவன் வந்திருக்கிறான்; ஒருகால் அவனே பங்களாவினுள் இருந்து உதவி செய்திருக்கலாம் என்பதும் நான் எதிர்பார்த்ததுதான்.

தாமோதரம்—கன்னையன்—கணேசன் இவர்கள் ஒரு கோஷ்டி. குருசாமி நாயக்கர் என்பவன்தான் போர்ஜரி கேஸில் ஒரு வருஷம் சிறைவாசம் செய்தவன் என்பதை நீங்கள் கண்டுபிடித்துக் கொடுத்துவிட்டால், இந்த ஆசாமிகள் சேர்ந்து கொண்டு, என்ன செய்கிறார்கள் என்று நான் தவறில்லாமல் ஊகிப்பேன். 'கல்பமணி ட்ரக் ஸ்டோர்'ஸில் மருந்து மட்டும் விற்கவில்லை என்று நான் எழுதிக் கொடுப்பேன்...''

''பின், அங்கே கள்ள நோட்டு அடிபடுகிறதென்று உன் ஊகமோ?'' என்று கேட்டார் இன்ஸ்பெக்டர் கோபாலன்.

''அப்படித்தான்! போலி கணேசன் பாங்கில் 'செக்'கை கொடுத்துப் பணம் வாங்க வந்தானா, அல்லது காகிதம் வாங்கிப் போக வந்தானா என்றுதான் நான் இப்போது யோசனை செய்து கொண்டிருக்கிறேன்.''

சஞ்சீவி உடனே, ''மிஸ்டர் சந்துருவின் ஊகப்படி, மருந்துக்கடை முதலாளியாக குருசாமி நாயக்கர் இருக்கலாம். நோட்டு அடிக்கும் தொழிலுக்குத் தாமோதரம் முதலாளி, நாயக்கர் தொழிலாளி—'' என்றான்.

''அப்படியே வைத்துக் கொள்ளலாம். கணேசன் 'டிஸ்ட்ரிப்யூடர்'—விநியோகஸ்தர். இதில் செங்கல்வராய பிள்ளைக்கும் ஏதோ ஒரு சம்பந்தம் உண்டு; அதனால்தான் அவரை இந்தக் கோஷ்டி சூழ்ந்து கொள்கிறது. அதே சமயம் மதுரநாயகம் அங்கே வந்து உட்கார்ந்து கொண்டு, காரியத்தைத் தடை செய்திருக்கிறார். அவருக்கு இரண்டு கூட்டாளிகள்; எதற்கும் அஞ்சாத ஆசாமிகள். இதனாலெல்லாம் குழப்பம் உண்டாகிறது.

தாமோதரம் ஒரு பக்கம் வேதனைப்பட்டுக் கொண்டிருக்கிறான்; மதுரநாயகம் ஒரு பக்கம் சங்கடப்பட்டுக் கொண்டிருக்கிறார். மூன்றாவது ஆசாமி இடையில் சேத்திரமான ஒரு தோல் பையைத் தட்டிக்கொண்டு போக



ஏற்பாடு செய்திருக்கிறான்; அவன் கையில் அது போய்ச் சேருமுன் எத்தனையோ மாறுதல்கள்; அடிதடிகள் ஓட்டம் பிடிகள்; இடையூறுகள்...''

''அந்தப் பையில் என்ன இருந்தது என்று நீ சொல்கிறாய்!''

''கடைசியில் நான் எதிர்பார்த்தது இருந்தது—காகிதக் குப்பை! இடையில் யாரோ உண்மையான பொருளைக் கவர்ந்திருக்கிறார்கள். அதைத்தான் நான் கண்டுபிடிக்க வேண்டும்...''

''கண்டு பிடியேன்!''

''நான் கண்டுபிடித்து விட்டேன்!''

''என்ன, எது?''

சந்துரு விஷமமாகப் புன்னகை செய்தான்; ''நான் கண்டுபிடித்தேன் என்றால், உங்களிடம் வெளியிடுகிற மாதிரி இல்லை. அடுப்பில் உலை வைத்திருக்கிறோம்; இன்னும் சரியான 'பதம்' வரவில்லை. பரிமாறுகிற நேரம் எட்டவில்லை. குழப்பங்கள் நடந்துகொண்டே இருக்கின்றன. அதை எடுத்தவனும் ஒரு குற்றவாளிதான். அவனைக் கடைசியில் இழுத்து விடுவேன்...''

''மதுரநாயகம் இல்லை அது?''

''இல்லை. எடுத்திருந்தால், மேலும் அங்கே தங்கியிருக்க மாட்டார்; பிறருக்கு இடைஞ்சலாக உட்கார்ந்திருக்கவும் மாட்டார். அவரை விரட்டுவதற்குப் பல முயற்சிகள் செய்து விட்டார்கள் மற்றவர்கள். கத்தியை வீசிக் காட்டினான் ஒருவன், செங்கல்வராய பிள்ளையையும் இந்திராவையும் அப்புறப்படுத்திக் காட்டினான் ஒருவன். இப்போதும் அவர் அங்கே சுற்றிக் கொண்டிருந்தால், நேரிடையாகவே ஒருவன் தாக்குவான்.''

''யார் அந்த மதுரநாயகம்? அதைப்பற்றி நீ விசாரித்துப் பார்த்தாயா?''

''செங்கல்வராய பிள்ளை பணத்துக்கோ, பொருளுக்கோ ஏதோ ஒரு ஆபத்து வருகிறது என்று அறிந்து காப்பாற்றி, தமக்கு அதை எடுத்துக் கொள்ள வந்தவர்;

திலகவதி லயைத் திறந்து பேசினால், அநேக உண்மைகள் வரலாம்; அவள் பேச மறுக்கிறாள் நான் சரளாவை அனுப்பின காரணம், இப்போது மூன்று இடங்களிலிருந்து அந்த வீட்டின்மீது தாக்குதல் இருக்கும் என்றுதான். யாரும் குறுக்கிடாதபடி அநேகமாக டெலிபோன் கம்பி யைக்கூட வெட்டியிருப்பார்கள், பாருங்கள்!''

அவசரமாகக் கோபாலன் டெலிபோனை எடுத்து 'டயல்' செய்தார். இன்ஸ்பெக்டர் பல முயற்சிகள் செய்து பார்த்தும் தேனாம்பேட்டை பங்களாவுக்கும் அவர்களுக் கும் தொடர்பே ஏற்படவில்லை. கம்பெனிக்குப் 'புகார்' செய்து பார்த்தார்; அவர்களும் கையை விரித்து விட்டார்கள்.

''சந்துரு! அப்படியானால், அங்கே ஆபத்து ஒன்றும் இல்லையா? இங்கே உட்கார்ந்து கொண்டிருந்தால்—'' படபடப்பாகக் கேட்டார் கோபாலன்.

''நீங்கள அலட்டிக் கொள்ளாதீர்கள். நான் அங்கே தான் போய்க் கொண்டிருக்கிறேன் இப்போது. யாருக்கும் அபாயம் ஒன்றும் இராது. நான் இங்கே வந்த காரணங்கள் இரண்டு. முதலில், நான் ஜோடித்த கதையில் ஏதேனும் குறைபாடு தோன்றுகிறதா? அதைச் சொல்லுங்கள்!''

''நீ என்ன சொல்கிறாய்? 'கல்பமணி ட்ரக் ஸ்டோர்' ஸில் வேறு ஒரு தொழில—சட்ட விரோதமான தொழில்—நடக்கிறது என்பதுதானே? இப்போது நாம் என்ன செய்ய லாம்? காலையில்தான் ஸெர்ச்—வாரண்ட் எடுக்க வேண்டும்.''

''அதை எடுக்கிறபடி எடுங்கள்! இரண்டாவதாக, தாமோதரத்தின் தெருவுக்கு இரண்டு கான்ஸ்டபிள்களை அனுப்புங்கள் சுந்தரம் பிள்ளை பங்களாவின் அருகில் ஆறு பேர் 'மப்டி'யில் போய் இருக்கட்டும், இரண்டு இடங்களும் அநேகமாக கேந்திர ஸ்தானங்களாக இருக்கும என்று நான் எதிர்பார்க்கிறேன். சந்தேகப் படும்படியாக எது நடந் தாலும் அவர்கள் திருத்தட்டும...''



''தேனாம்பேட்டை பங்களாவுக்கு உன்னுடன் யாரும் வரத் தேவை இல்லையா?''

''வேண்டாம் என்று நினைக்கிறேன். சஞ்சீவி வரு கிறான் என்னுடன்...''

''எனக்கு நீ தனியாகப்போகிறேன் என்கிறாயே என்று கொஞ்சம் அதிருப்திதான். இன்று இரண்டு ஆசாமிகள் வந்து ஸ்டேஷனில் உன்னை விசாரித்தார்கள். உன்னைக் காணாமல் தமாஷாக, 'என்ன இன்ஸ்பெக்டர்! உங்கள் ஸி. ஐ. டி. சந்துருவை ஸி. ஐ. டி. வைத்துத்தான் தேட வேண்டுமோ?' என்று கேட்டார்கள்!''

''அதனால் பரவாயில்லை, ஸார்! நான் படுகிற கவலையே வேறு-இந்திராவும், செங்கல்வராய பிள்ளையும், உண்மை கணேசனும் தங்கில்லாமல் திரும்ப வேண்டும் என்பது அது.''

சஞ்சீவி குறுக்கிட்டு, ''நாராயணன் வேறு கவனித்துக் கொண்டிருக்கிறாரே! அவருக்கு இந்திராவைப் பற்றி எத்தனை அக்கறை—'' என்றான்.

சந்துரு புன்னகை செய்தான்; ''அதெல்லாம் காதலின் வேகத்தைப் பொறுத்தது என்று நான் இப்போது சொல்லு வேன். பார்க்கலாம, எதிர் பார்க்கலாம... இன்ஸ்பெக்டர்! இப்போது நான் வரலாமா?''

''இன்னும் நான் உன்னிடம் தெரிந்து கொள்ள வேண்டியது ரொம்ப இருக்கிறது!'' என்றார் கோபாலன் ஒரு கொட்டாவி விட்டு.

''ஏழே சூடு ஏற ஏற, மேலே தானாக வருகிறது. நானும் உங்களை இனி அடிக்கடி பார்க்க வேண்டுமே!'' என்று எழுந்து விட்டான் சந்துரு.

# 'அடியும் பிடியும் கடியும் ஆயினை!'

ஒரு பேராபத்திலிருந்து தப்பித்துக் கொண்டு விட்டோம்! இனி நம்மை எதிர்ப்பவரோ மறிப்பவரோ யாரும் இல்லை - என்ற உணர்வே சங்கரனுக்கும் நாராயணனுக்கும் அத்தனை கடும் தொல்லைகளுக்குப் பிறகும் தெம்பு அளித்துக் கொண்டிருந்தது என்று நிச்சயமாகச் சொல்ல வேண்டும். சங்கரனுடைய உள்ளத்தின் அடி ஆழத்தில் ஒரு வெட்கம்கூட உண்டு. இந்திராவைத் தனியே விட்டுவிட்டுத் தான் மாத்திரம் ஓடி வந்ததால் ஏற்பட்ட வெட்கமே அது. ஒரு வேளை அவன் அங்கேயே நின்று மறுபடி முயற்சி செய்திருந்தால், குள்ளன்—நெட்டையன் என்னும் கயவர்களின் கையில் சிக்கிக் கொள்ளாமல், இந்திராவையும் விடுதலை செய்து கொண்டு வந்திருக்கலாமோ என்ற ஆசையே அது.

அதன்பின்னர், அந்த ஆட்களிடமிருந்தும் தெய்வாதீனமாகத் தப்பி ஓடி வரும்போது இந்திராவையும் சுந்தரியையும் ஒரு வீட்டின் அறையில் தற்செயலாகக் கண்டது புதியதொரு உற்சாகத்தையும் நம்பிக்கையையும் ஊட்டியது. கடைசியில் எப்படியோ அவர்களாகவே தப்பி வந்து விட்டார்கள். இனி நாம் உதவி செய்யலாம் என்று எண்ணினான். அதுவும் விரைவில நிராசையாகிவிட்டது. அவர்களைப் போய்ச் சேருமுன் மறைந்து விட்டார்கள். சென்ற இடமே தெரியவில்லை அவனுக்கு.

கடைசியாக, சற்று நிதானப்படுத்திக் கொண்டு, வீட்டில் தங்கி ஓய்வும் எடுத்துகொண்டபின் மேற்கொண்டு நடவடிக்கைகளைத்தொடங்கலாம்என்று வீட்டை நோக்கி வந்தான் சங்கரன். நாராயணன் இப்போது ஒரு பக்க பலமாக அவனுக்குத் தோன்றினான்.

வீட்டில் தன் சகோதரி மட்டும் இருப்பாள் என்ற நம்பிக்கை இருந்தது. ஆனால், அவன் எதிர்பார்த்தபடி



அந்த அம்மாள் இல்லை! ஒரு வேளை தனியாக இருக்கிறோமே என்று எங்கேனும் சென்றிருக்கலாம் என்று ஊகித்து மாடிக்குச் சென்றால்-ஒரு அதிர்ச்சி காத்திருந்தது. எந்த ஒரு மனிதரை மறுபடி சந்திக்க வேண்டியதில்லை என்று சங்கல்பம் செய்து கொண்டிருந்தானோ, அந்த மனிதரே அங்கே உட்கார்ந்துகொண்டிருந்தார்! ஒருவிஷமப் புன்னகை அவருடைய முகத்தில் விளையாடிக் கொண்டிருந்தது. சுந்தரம் பிள்ளை அவர்களுக்கு எதிரே சுவாதீனமாக அமர்ந்திருந்தார்.

சுந்தரம் பிள்ளையின் உள்ளத்தைச் சங்கரன் நன்கு அறிவான். மேலுக்காக இருக்கும் குழைவுகளெல்லாம், உள்ளே இருக்கும் கெட்டியை மறைப்பவையே என்பதை அனுபவ பூர்வமாக உணர்ந்திருந்தான். தான் 'தம்பி'யிடம் அறை வாங்கியதும், சின்ன பங்களாவில் அடைபட்டபோது பெற்ற அனுபவங்களும் அவன் நெஞ்சத்தை விட்டு அகலவில்லை. ஒரு கால் தாமோதரம் வரும்வரை அவன் தப்பி ஓடிவராமல் இருந்தால், நிர்க்கதியான அவன் நிலையினால் என்ன விபரீதங்கள் நடந்திருக்குமோ என்று எண்ணிப் பார்க்கவும் பயந்தான். எனவே, இந்தப் புன்னகை அவனைச் சிறிதும் ஏமாற்றவில்லை.

நாராயணனுக்குச் சுந்தரம் பிள்ளையுடன் நேர்ப்பட்ட அம்மாதிரியான அனுபவம் இல்லை; அவன் அறிந்தவை எல்லாம் சங்கரன் வாயிலாகக் கேள்விப்பட்டவையே; அவைகள் உருவாக்கிய அச்சம் மட்டுமே அவன் மனத்தில் வியாபித்திருந்தது.

சிறிது நேரம் வரை சுந்தரம் பிள்ளையும் பேசவில்லை; இளைஞர்கள் இருவருக்கும் எதுவும் சொல்லத் தோன்றவில்லை. ஒருவரை யொருவர் பார்த்தபடி இருந்தார்கள். கடைசியில் சுந்தரம் பிள்ளைதான் மௌனத்தைக் கலைத்தார்.

''உட்கார்ந்து கொள்ளுங்கள்! உட்கார்ந்து கொள்ளுங்கள்! (சங்கரனைப் பார்த்து) உன்னைப் பார்க்க வேண்டும் என்று நான் வெகு நேரமாக வந்து காத்திருக்கிறேன்...

(நாராயணனைக் காட்டி) இவர் யார் தெரியவில்லை எனக்கு!'' என்றார்.

சங்கரன் இடக்காக, ''என் நண்பர்! நாராயணன் என்று பெயர். அயோக்கியர்கள், கயவர்கள், கொள்ளைக்காரர்கள் எல்லாரையும் ஒழித்துக் கட்டுவது என்று கங்கணம் கட்டிக்கொண்டு புறப்பட்டிருக்கிறார். உங்களை இப்போது சந்திக்கிறார்...'' என்றான்.

அவர் முகத்தில் புன்னகை மாறவே இல்லை. ''ஒஹோ அப்படியா! சந்தோஷம்! அப்படியானால் எனக்கும் அவர் நண்பராக இருப்பதில் ஆட்சேபம் இல்லை...சங்கரன்! நான் வந்த காரியம் தனிமையில் பேச வேண்டும் என்று...''

கண்களை அறையைச் சுற்றி சங்கரன் அவசரமாக ஓட்டினான். ''நீங்கள் இரண்டு காரியங்களை மனத்தில் உத்தேசம் வைத்துக்கொண்டு இங்கே வந்திருக்கிறீர்கள். தனிமையில் இந்த அறையைச் சோதனை போடுவது ஒன்று அது இதற்குள்ளாக நடந்துமுடிந்து விட்டதென்று நினைக்கிறேன். பலன் ஏதும் இருந்திருக்காது என்பது என் ஊகம்...''

''அப்படி இல்லை...! ஏதோ கொஞ்சம் இருந்திருக்கிறது'' என்று சிரித்தார் சுந்தரம் பிள்ளை.

''இரண்டாவது காரியம் என்ன என்பதை நீங்கள் என் நண்பர் நாராயணன் எதிரிலேயே சொல்லலாம். எங்களுக்குள் ரகசியம் கிடையாது; ஒளிவு மறைவு ஏதும் இல்லை. உங்கள் வீட்டில் சிறை இருக்கும் ஸ்ரீமதி இந்திராவை விடுதலை செய்ய வேண்டும் என்பது இவருடைய லட்சியங்களில் ஒன்றுதான்...''

''என் வீட்டில் யாரும் ஒருபோதும் சிறை இருந்ததில்லை!'' என்றார் சுந்தரம் பிள்ளை.

''இப்போது இல்லை என்பதை நானும் ஒப்புக்கொள்கிறேன். இந்திராவை நாங்கள் வேறு இடத்தில் சந்தித்து விட்டுத்தான் வருகிறோம்.''



சுந்தரம் பிள்ளை திடுக்கிட்டார்! ''எங்கே?'' என்று கேட்டார்.

''அது எங்கள் இருவருடைய ரகசியமாக இருக்கட்டும்''

''கூட யார் இருந்தார்கள்? உங்கள் வார்த்தையை நான் நம்புவது எப்படி?''

''அதுவும் எங்கள் ரகசியம்தான். எங்கள் பேச்சு எதுவானாலும் நீங்கள் நம்பித்தான் ஆக வேண்டும் என்று நாங்கள் கட்டாயப்படுத்தவும் இல்லை. இந்த அகால வேளையில் நாம் இதைப் பற்றிப் பேசிக் கொண்டிருக்க வேண்டிய அவசியமும் இல்லை. காரியமாக ஏதேனும் சொல்லுங்கள்!''

உதட்டைப் பிதுக்கிக்கொண்டார் பிள்ளை. ''என்னை நீ இன்னமும் சரியாகத் தெரிந்து கொள்ளவில்லை, சங்கரன்!''

''நன்றாகத் தெரிந்துகொண்டு விட்டேன்; உங்கள் கோட்டைக்குள் சிக்கிக் கொண்டவர்களைச் சித்திரவதை செய்வதில் வல்லவர். அது போகட்டும், நான் எப்பேர்ப்பட்டவன் என்பதையும் காண்பித்து விட்டேன்—இரண்டு முறைகள். அப்புறம்?''

சுந்தரம் பிள்ளையின் குரலில் ஒரு இரக்கம் சட்டென்று தோன்றியது. ''சங்கரன்! நான் இங்கே வந்திருப்பது உன்னுடன் சண்டை போடுவதற்கல்ல. ஒருவரை ஒருவர் குத்திக் காட்டிக்கொள்வதற்கும் அல்ல, வீணாகப் பொழுது போக்க வேண்டாம். நான் நன்றாக யோசனை செய்து பார்த்துவிட்டே வருகிறேன். நடந்து போனதெல்லாம் தவறுகள். இனி நாம் இருவரும்...''

''நான் ஒரு தவறுகூடச் செய்யவில்லை. சுந்தரம் பிள்ளை அவர்களே! தவறை ஆரம்பித்தவர்கள் நீங்கள். தொடர்ந்து செய்து வருபவரும் நீங்களே! சும்மா இருந்தவனைக் கட்டிப் பிடித்துக் கொண்டு போய்த் தொந்தரை செய்தீர்கள். அடித்தீர்கள்; திட்டினீர்கள்; வதைத்தீர்கள்; பாழுங் கிணறு ஒன்றை அடிக்கடி ஞாபகப்படுத்தினீர்கள்;

ஆகையால் இரு பக்கத்திலும் தவறு இருப்பதாக நான் ஒப்புக்கொள்ள முடியாது. 'நாம் இருவரும்' என்கிற பேச்சும் தேவை இல்லை.''

மீண்டும் புன்னகை; ''சரி! நீ சொல்கிறபடியே இருக்கட்டும். பிசகு என்மேல் என்று ஒப்புக் கொளகிறேன். என் ஆட்களுக்கு அதற்காகச் சரியானபடி தண்டனையும் நீ கொடுத்துவிட்டாய். போனது போகட்டும் என்று அதனால் தான் நான் சொல்கிறேன். இப்போதிலிருந்து புதிய பாடம், வேறு விதமான ஒப்பந்தம்...''

''விஷயத்துக்கு வாருங்கள். நீங்கள் மெல்ல மெல்லப் பேசுவதைப் பார்த்தால் இன்னும் யாரோ வரவேண்டும் என்று எதிர்பார்க்கிறீர்கள் போல் எனக்குச் சந்தேகம் உண்டாகிறது. நான் அத்தனை முட்டாள் அல்ல. வந்த காரியம் என்ன?''

''உன்னைப் பார்க்கத்தான் வந்தேன். எனக்கு உன்னால் ஒரு காரியம் ஆக வேண்டியிருக்கிறது...''

''சொல்லுங்கள் மேலே!''

''நீ என்னுடன் ஒத்துழைப்பதாக இருந்தால், உன்னையும் உன் தமக்கை புருஷனையும் குபேரனாக அடித்து விடுவேன்.''

''அது அவரைக் கேட்டுத்தான் சொல்ல வேண்டும். அவரை அனுப்பி வையுங்கள்! எனக்குக் குபேரன் ஆவதில் சந்தோஷம்தான்; அவர் அபிப்பிராயம் எப்படியோ?'' என்றான் சங்கரன் முடிவாக.

''அவரை அனுப்பி வைக்கத்தான் போகிறேன். எனக்கு அந்தத் தோல் பை வேண்டும். அதற்குப் பதிலாக உனக்கு என்ன வேணுமோ கேள், தருகிறேன்!''

''எந்தத் தோல் பை?'' என்றான் சங்கரன்.

''இதுதான் வேண்டாம் என்கிறேன். நான் உன்னிடம் அப்பட்டமாகக் கேட்கிறேன்; ஒளிவு மறைவில்லாமல் பேசுகிறேன். உன்னிடம் அது இருந்தது என்று எனக்குத் தெரியும்; உன் கையை விட்டுப் போன விதமும் தெரியும். கடைசியில் சந்துரு எதிரில் அது கவிழ்த்துக் கொட்டப்பட்ட போது, வெறும் காகிதக் குப்பைதான் இருந்தது என்பதையும் அறிவேன். இடையில் யாரோ அதனுள் இருந்த பொருளை அபகரித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதில சந்தேகம் இல்லை. நீயோ தாமோதரமோ அப்படிச் செய்திருக்கலாம் என்று நான் நினைக்கிறேன். ஒளிவு மறைவில்லாமல் பேசுவதற்காகக் கோபித்துக் கொள்ளக் கூடாது; நான் நினைக்கிறேன்!''



''நினைத்துக்கொண்டே இருங்கள்!'' என்று சீறினான் சங்கரன்.

''ஒரு சமயத்தில் யாரோ ஒருவர் அதில் விஷமம் செய்திருக்கிறார் என்பதையாவது நீ ஒப்புக் கொள்கிறாயா? அதைச் சொல்!''—மறுபடி அதே சிரிப்பு.

''எனக்குத் தெரியாததை நான் ஒப்புக்கொள்ளும் வழக்கம் எனக்குக் கிடையாது. எங்கள் வீட்டுக்குப் பை வந்து சேர்ந்தது என்றால், நாங்கள் விரும்பி அது வரவில்லை. எப்படியோ விதி வசத்தால் வந்தது. அதன் பின்னே ஆட்கள் துரத்தி வருவார்கள் என்பதும் தாமோதரத்துக்குத் தெரியாது...''

''தெரியாமல்தான் அதை அப்படி ஒளித்து வைத்தாரே?'' என்று கேட்டார் சுந்தரம் பிள்ளை.

''பழைய விஷயங்களைக் கிளற வேண்டாம் என்று நீங்களே சொல்லியிருக்கிறீர்கள். அன்று இரவே எங்கள் வீட்டில் சோதனை நடந்தது; பிறகு ஒரு குள்ளன் கத்தியைக் காட்டி, அதைத் தட்டிக் கொண்டு போனான்; மறுபடி என் முயற்சியில் அதைக் கொண்டு வந்தால், இதே வாசலில் டாக்சியில் வழி மறித்து அடித்துக்கொண்டு போனான் மற்றொரு ஆசாமி. தாமோதரத்தை வீண் தொல்லைக்கும் தொந்தரைக்கும் ஆளாக்கின அந்தப் பையைப் பற்றி நாங்கள் மறந்துவிட விரும்பினால், நீங்கள் அதையே எடுத்துப் பேசுகிறீர்கள்! ஒரு லட்சம் ரூபாய் கொடுத்தால்கூட நாங்கள் அதுபற்றிப் பேச்செடுக்க விரும்பவில்லை! வேறு விஷயம் இருந்தால் பேசுவோம். இது

எங்கள் வீடு உங்கள் மாளிகை இல்லை. இங்கே நாங்கள் எஜமானர்கள்! நீங்கள் விருந்தாளிதான்'' என்றான் சங்கரன்.

'ஜிவ்'வென்று சிவந்துகொண்டு வந்தது சுந்தரம பிள்ளையின் முகம். ஆனால் அரும்பிய புன்னகை மட்டும் அப்படியே இருந்தது. ''சங்கரன்! நீ சிறு பிள்ளை! இதில் மிகப் பெரிய விஷயம் இருந்தது என்பது தெரியாமல் பேசு கிறாய்! நான் ஒன்று கேட்டுக்கொண்டு வருவது என்பது என் வாழ்நாளில் இதுவே முதல் தடவை'' என்றார்.

''ஒருவருக்கு எல்லா விதமான அனுபவங்களும் ஏற் படுவது நன்மைதான். என்னைக் கேட்டால் நான மிகவும் சுகப்பட்டிருக்கிறேன;மிகவும் கஷ்டப்பட்டும இருக்கிறேன்'' என்றான் சங்கரன் சிறிதும் சளைக்காமல்.

சங்கரன் மேலே பேசாமல் இருக்கும்படி சுந்தரம் பிள்ளை கையமர்த்தினார். தாம் கையமர்த்தி விட்டால் பிறர் எவரும் பேசக் கூடாதென்ற ஆணவம் அதில் தோன்றியது. ''இப்பொழுது நீ என்ன சொல்கிறாய்...? எனக்கு அந்தப் பை கிடைக்குமா, கிடைக்காதா! நேர்ப்பட பதில் தேவை!'' என்றார்.

''பை இங்கே இல்லை என்பதைத் தெரிந்து கொண்ட பிறகும்கூட இப்படிக் கேட்பது சுந்தரம் பிள்ளை என்கிற மேதாவிதானா என்று நான் ஆச்சரியப்படுகிறேன். மேலும் அநேகக் காரியங்களை ஒரு பிழை இன்றி சாதித்துக்கொண் டிருக்கும் சுந்தரம் பிள்ளை அவர்களுக்கு, இன்னமும் அந்தத் தோல் பை எங்கே இருக்கிறதென்று தெரியவில்லை என்பது இரண்டாவது ஆச்சரியம்...''

'படார்' என்று மேஜைமீது ஒரு குத்து வைத்தார் பிள்ளை. ''சங்கரன்! அந்தப் பையில் இருந்த பொருளை நீங்கள் எடுத்து ஒளித்து வைத்துக் கொண்டிருக்கிறீர்கள். அதனால் உங்களுக்கு உபயோகம் இல்லைஎன்பது தெரியும். என்னிடம் கொடுக்க யோசனை செய்கிறீர்கள்!''

''அப்படியே இருந்தாலும் அது நாங்கள் தீர்மானம செய்து கொள்ள வேண்டிய விஷயம அல்லவா?''



''உஸ்ஸ்ஸ்...'' என்று சர்ப்பம் போல் சீறினார் சுந்தரம் பிள்ளை. ''செங்கல்வராய பிள்ளையை அருகில் வைத்துக் கொண்டால்தான், ஏதேனும் உருப்படியாகச் செய்வது சாத்தியமாக இருக்கும்.''

''செங்கல்வராய பிள்ளை இப்போது என் விருந்தின ராக இருக்கிறார்; பையில் இருந்த பொருள் உன்னிடம் இருக்கிறது. இரண்டும் சேர்ந்தாலே பலன் ஏற்பட முடியும். சரியான வெகுமதி கொடுப்பேன், கொடுத்து விடு...''

சங்கரன் நாராயணனுடைய முதுகில் தட்டி, ''ஹஹ்ஹா!'' என்று சிரித்தான். ''வெகுமதி! நீங்கள் கொடுக்கிறீர்கள்; பாழுங் கிணறு என்று சொன்ன வாயிலிருந்து வெகுமதி இப்போது வருகிறது!...'' என்றான்.

சுந்தரம் பிள்ளையின் மன ஆழத்தில் ஒரு கவலை சிறிது நேரத்திற்கு முன்பே தோன்றி வளர்ந்து வரத் தொடங்கியிருந்தது. நாயர் விரைவில் திரும்பி விடுவான் என்று அவர் எதிர்பார்த்தார்; அவன் வந்து விட்டால், இந்த இரு இளைஞர்களையும் மடக்கிப் போடுவது பெரிய காரியம் இல்லை. மேலும் சங்கரன் எப்படியோ, அவர் வேறொருவனை எதிர்பார்த்துக் காலங் கடத்துவதாகக் கண்டுபிடித்துச் சொல்லி விட்டான்! நாயரும் வருவதாகக் காணவில்லை; அவன் என்ன செய்து கொண்டிருக்கிறான் என்பது அவரால் ஊகிக்க முடியவில்லை. அதெல்லாம் போகட்டும். இப்போது இவர்களைத் தாண்டிச் செல்வ தென்றாலும் எளிது இல்லை.

எல்லாவற்றிற்கும் மேலாக ஒரு பயம் அவருக்கு ஏற்பட்டிருந்தது. சங்கரனுடைய உதவிக்கு யாரேனும் வந்து விட்டால், அப்புறம் அவர் வெளியேறுவது என்பதில்லை. சங்கரன் வாய் திறந்தால், அவருடைய பங்களாவைச் சோதனை போடவும், அவரையே போலீஸில் மாட்டி விடவும் கூடும். ஒருகால் தாமோதரமே திரும்பி விட்டால்......!

எத்தனை அலங்கோலமான நிலை ஏற்பட்டு விட்டது அவருக்கு! 'தம்பி'யின் துரோகத்தை நினைத்துப் பல்லைக்

கடித்தார். சுந்தரியின் நன்றி கெட்டத்தனம் நெஞ்சை எரிய வைத்தது. இருவரும் சேர்ந்துதான் சூழ்ச்சி செய்கிறார்கள் என்ற உணர்விலே உள்ளம் வெதும்பியது. 'எடுத்த காரியம் எல்லாம் வெற்றி' என்று இருந்த சமயம், 'நாம் செய்தோம், நாம் செய்தோம்' என்ற அகந்தை மிகுந்திருந்தார். இன்று 'தொட்டதெல்லாம் தோல்வி' என்னும் போது, ஒத்துழைப்பு என்பதுகாத வழி நகர்ந்து செல்லும் போது, கடவுள் என்று ஒரு சக்திதான் எல்லாவற்றையும் பின்னிருந்து நடத்தி வைக்கிறதோ என்ற சம்சயம் ஏற்பட்டு விட்டது. எத்தனை பலவீனம்! —என்று அந்த எண்ணத்தை உதறித் தள்ளினார்.

மாடிப் படியில் எங்கோ சிறு சப்தம் கேட்டது. காலடிச் சப்தம் போல் அது தோன்றியது. நாயராக இருக்குமோ என்ற சிறு நம்பிக்கை; ஆனால் எதிரியின் ஆட்களாக இருந்து விட்டால்?

சங்கரன் காதிற்கும் அந்தச் சத்தம் எட்டியது. புருவத்தை நெறித்தான். சுந்தரம் பிள்ளையே வந்திருக்க மாட்டார் என்ற நிச்சயம் இருந்தது ஒரு புறம். அவர் கூட்டாளி என்று ஒருவன் வந்துவிட்டால், அவரை மடக்குவது முடியாது. எனவே, எதற்கும் தயாராக இருக்க விரும்பினான்.

சுந்தரம் பிள்ளை ஒரு பெருமூச்சு விட்டார். "அப்படியானால் நான் போய் வருகிறேன். இன்று நான் தோல்வி பெற்றதாக எண்ண மாட்டேன். என்னை மறுத்துப் பேசிய உங்களுக்குத்தான் தோல்வி..." என்றார்.

சங்கரன் சட்டென்று, "அதெல்லாம் இருக்கட்டும். தாமோதரத்துக்கு என்ன வழி சொல்லுகிறீர்கள்? அதை இங்கே தீர்மானம் செய்துவிட்டு வெளியே காலை வையுங்கள். அவர் என் தமக்கை புருஷர். அவருக்குக் கிஞ்சித்து அபாயம் என்றாலும் நான் பழி வாங்குவேன். இன்றைக்கு உங்களிடம் சிக்கிக் கொண்டிருக்கிறார் அவர்—"

"அதுதான் தப்பித்துக் கொண்டுவிட்டார் என்கிறேனே!"



"அப்படியே இருக்கட்டும். தப்பித்துக் கொண்டால் முதலில் அவர் இந்த வீட்டுக்கே வருவார். அவர் வந்தபிறகு நீங்கள் போகலாம், ஆட்சேபம் இல்லை!"

"இரண்டு பேரும் சேர்ந்து கொண்டு என்னை—"

"அந்த எண்ணம் எங்களுக்கு இல்லை. எங்கள் வீடுதேடி வந்தவருக்குத் தீங்கு செய்வது எங்கள் வழக்கம் இல்லை!"

சுந்தரம் பிள்ளை, "அப்படியானால் நான் போக முடியாது. அப்படி ஒரு நிபந்தனை! அவ்வளவுதானே" என்று கேட்டார்.

"அதுதானே நீங்கள் எதிர்பார்க்க வேண்டியதும்!" என்று சங்கரன் கேட்டான். நாராயணன் இதுவரை மௌனமாகவே இருந்தவன், இதற்கு ஆமோதித்த மாதிரி தலையை ஆட்டினான்.

சுந்தரம் பிள்ளையின் முகம் சிறிதும் களை மாறவே இல்லை. "நான் நிராயுதபாணியாக வந்திருக்கிறேன் என்ற தைரியத்தில் நீங்கள் பேசுகிறீர்கள் உண்மையாக என் கையில் கத்தியும் இல்லை; துப்பாக்கியும் இல்லை! இதோ பாருங்கள்! ஒரு அவசியத்திற்கு, அவசரத்திற்கு, நான் வழக்கமாக இது போன்ற கண்ணாடி 'பல்ப்' ஒன்று மட்டும் எடுத்து வருவேன். என் எதிரிகளை அழிப்பதுடன் நானும் அழிந்து போவதென்று தீர்மானித்தால் இதை உபயோகிப்பேன். இந்த 'பல்ப்'பை ஓங்கி அடித்தேன் என்றால், அறை நிறைய விஷப் புகை பரவும் அதற்கு யாரும் தப்புவதென்பது முடியாது. அதை உங்களுக்கு நான் ஞாபகப்படுத்துகிறேன்!"...சுந்தரம் பிள்ளை சிரித்துக் கொண்டேயிருந்தார்.

"நீங்கள் சொல்வது நிஜம்தானா?" என்று கேட்டான் நாராயணன்.

"பரீட்சை செய்து பார்ப்பதில் எனக்கு ஆட்சேபம் இல்லை. உங்களுக்கு ஆட்சேபம் இல்லை என்றால், இங்கேயே போட்டு உடைக்கிறேன்... ஆனால், மாடிப்படியில் வந்து ஓசைப்படாமல் நிற்கும் உங்கள் நண்பரையும் கேட்டு வைத்துக் கொள்ளுங்கள்."

நாராயணனும் சங்கரனும் சட்டென்று திரும்பிப் பார்த்தார்கள். மாடிப்படியில் அப்போதுதான் ஏறி வந்து கொண்டிருந்த குள்ளனைக்கண்டு திகைத்துப்போனார்கள். அந்தச் சமயத்தில் சிறிதும் எதிர்பாராத நபர் ஒருவன் உண்டென்றால் அவன் 'குள்ளன்' தான்!

மாரிமுத்து தப்பித்துக்கொண்டு ஓடிய பிறகும் ஜனங்கள் அவனைப் பின்பற்றித் துரத்திச் சென்ற பிறகுமே குள்ளன் வீட்டுக்குள் நுழைந்தான். எங்கும் நிசப்தம், அவனால் தாக்கப்பட்டிருந்த நெட்டையன் ஸ்மரணை யின்றிக் கிடந்தான். அவன் எதிர்பார்த்ததை விட அடி பலமாக விழுந்துவிட்டது. காலை வரை அவனைப் பற்றிக் கவலை இல்லை. அந்த அறையிலேயே இன்னும் சற்று ஊன்றிக் கவனித்திருந்தால், மூலையில் கிடந்த பழைய மர பீரோவின் பின்னே ஒளிந்திருந்த பஞ்சநதத்தையும் குள்ளன் நிச்சயம் கண்டிருப்பான்.

குள்ளனுக்கு வேறு அவசர அலுவல்கள் இருந்தன. இந்திராவும் சுந்தரியும் என்ன வேண்டுமானாலும் செய்து கொள்ளட்டும்; எக்கேடு கெட்டுப் போகட்டும். அவனுக்கு இனி லட்சியம் இல்லை. நெட்டையனுடைய உறவுமுறிந்து விட்ட பின், எப்படியோ மதுரநாயகத்தை நெருங்கி, கிடைத்ததை வாங்கிக்கொண்டு அவன் ஓடவேண்டும். நினைவு பெற்றால் சும்மா விடமாட்டான். ஆ! அதற்கு முன் ஒரு வேலை இருந்தது! பழிக்குப் பழி! அந்தச் சங்கரனைக்கண்டு, ஆரம்பமுதல் கொடுத்த தொல்லைக்கும் அவமானத்துக்கும் வஞ்சம் தீர்த்துக் கொள்ளவேண்டும். போகிற போக்கில் அவனுக்கு ஒரு முத்திரை! நாளைக்கு நெட்டையன் விழித்துக்கொண்டாலும், சங்கரன் கதியைக் கேட்டு அவன் நெஞ்சு துணுக்குற வேண்டும்.

குள்ளனுக்கு அந்த வீட்டில் ஒரு இரும்புப் பெட்டி இருந்தது. பின் கட்டிலிருந்த அம்மியைப் புரட்டினால் ஒரு பள்ளம்; அதனுள் அந்தப் பெட்டி. அதில்தான் ஒரு சிறு கத்தை நோட்டுகள் இருந்தன. அவைகளைப் பத்திரம்



செய்துகொண்டான். திரும்ப கூடத்துக்கு வந்து அம்மணி களா! நீங்கள் கூச்சல் போடுவதானால் எனக்கு ஆட்சேபம் இல்லை. ஆனால், காலையில் அதை வைத்துக் கொள்ளுங்கள், அதுவரை நான் வாசலில் காவல் இருக் கிறேன்!'' என்று கூறிவிட்டு வெளியே வந்தான் குள்ளன். கதவைச் சாத்தியதும், வெளிப்புறம் பூட்டினதும் யாருக்குமே தெரியாது. அத்தனை ஜாக்கிரதையாகச் செய்தான்.

போலீஸ்காரர் யாரேனும் மடக்கிவிட்டால், அதுவும் பணத்துடன் அவன் அகப்பட்டுக் கொண்டால், பல கேள்வி களுக்குப் பதில் சொல்ல வேண்டி வருமே என்ற அச்சம் அவனுக்கு இருந்தது. எனவே சந்துகளாகப் பார்த்து விசையுடன் நடந்தான். மவுண்ட்ரோட்டில் நல்ல தூக்கத்தில் இருந்த ஒரு ரிக்ஷாக்காரனை எழுப்பி, தாமோதரத்தின் வீட்டுக்கு அடையாளம் சொன்னான்.

அந்த அகாலவேளையில் அந்த வீட்டு மாடியில் விளக்கு எரிவது ஆச்சரியமாக இருந்தது. எதிர்ச் சருகிலிருந்த ஒரு காம்பவுண்டுச் சுவர் மேல் ஏறிப் பார்த்தால், ஜன்னல் வழியே சங்கரன் முகம் தென்பட்டது. 'நாம் வந்த காரியம் பலிதமாகும், மனக் குறையின்றித் திரும்பலாம்' என்ற திருப்தியுடன் அவன் மாடிப் படிகளில் ஏறினான். அந்த வீட்டின் உள்புறம் அவனுக்கு ஏற்கனவே பரிச்சயமானது தான்.

உள்ளே பேச்சுக் குரல் கேட்டது; நெருங்கி வந்து நின்று கேட்டான். அந்தச் சுவாரஸ்யத்தில் தன்னையும் அறியா மல் முன்னே வந்து, சுந்தரம் பிள்ளையின் கண்களில் பட்டு விட்டான்...

'இனி ஒளிந்து கொள்ளத் தேவையில்லை' என்று குள்ளன் தெம்பாகவே வந்தான். அவன் இடையில் கூர்மை யான ஓர் ஆயுதம் இருந்தது. அது அளித்த மனோதைரியம் கண்களில் பிரதிபலித்தது.

சங்கரன் முகத்தைப் பார்த்ததும் ஆத்திரம் பொங்கி வந்தது. இரண்டு விதத்தில் சங்கரனைத் தீங்கு செய்தவனாகக் கருதினான். தோல் பையைத் தட்டிக் கொண்டு வந்தது ஒன்று! (அதனால் எத்தனை பணம் நஷ்டம்; ஒரு லட்சியமேபோய்விட்டது பிசுபிசுத்து!) நெட்டையனுடைய ஏச்சுக்கு ஆளாகி, அவனை ஜன்ம சத்துருவாக்கிக் கொண்டது மற்றொன்று. கோபத்தைச் சீற விட்டுக் கொண்டான்.

சுந்தரம் பிள்ளைக்கும் வெளியேற இதைவிட நல்ல தருணம் வேறில்லை என்று தோன்றியது. கையில் வைத்த "பல்பு"டன் எழுந்து நின்றார்.

சங்கரன் திகைப்பு அடங்குவதற்குள், குள்ளன் தனது இடையில் கைவைத்து, கத்தியை உருவி வீசுவதற்குத் தயார் செய்து கொண்டான்.

நாராயணன் வாயடைத்துப் போனான். இப்போது இரண்டு மிகக் கொடூரமான எதிரிகளின் முன்னிலையில் இருப்பதும், எந்த விநாடியும் பிராண பயம் காத்திருக்கிறது என்பதும் அவனைத் திக்பிரமிக்கச் செய்தன. இந்த மாதிரி அனுபவம் அவனுக்குப் புதிது. எனவே, வாயடைத்துப் போயிற்று. நெஞ்சு செம்பட்டி கொண்டு அடிக்க, நெற்றிப் பொட்டு புடைத்துவிட்டது.

சுந்தரம் பிள்ளை கம்பீரமாக எழுந்து நடந்தார். "நான் வருகிறேன்! சங்கரன்! நாராயணன்! முடிந்தால் மற்றொரு சமயம் சந்திக்கலாம்—என் பங்களாவில்! நாம் எல்லோரும் உயிருடன் இருந்தால்!..." என்று கூறி, குள்ளனை அலட்சியமாக ஒரு புன்னகையுடன் பார்த்தார். அந்தப் பார்வையின் தீட்சண்யத்தில் குள்ளன் கூடத் தன் காரியத்தை மறந்து விட்டான்.

மாடிப் படியில் அவர் கால் வைத்தபோது தான் சங்கரனுக்கும் உணர்வு வந்தது; குள்ளன் கத்தியைக் கெட்டியாகப் பிடித்து உதடுகளை இறுக்கி, பயங்கரமாகக் கண்களை உருட்டிக் கொண்டிருந்ததைக் கண்டான்.



"இந்த முறை குள்ளன் கைக் கத்திக்கு நான் பலியாக, வேண்டியதே!" என்று ஒரு பயம் பற்றிக்கொண்டது.

அப்போதுதான் எதிர்பாராத ஒரு சம்பவம் நடந்தது.

சுந்தரம் பிள்ளை போகிற போக்கில் கையில் இருந்த கண்ணாடி பல்பை வீசி விட்டுப் போனார்! 'டுமீல்'—ஒரு வித வாசனை பரவிக் கொண்டு மூவரையும் நிலை கலங்கச் செய்தது. சங்கரன் கண்ணெதிரே உலகம் ஆடியது! அந்த ஆட்டத்தின் உள்ளே குள்ளனும் ஆடினான்! தடுமாறினான்; அவன் கையிலிருந்த கத்தி குறி தவறி, எங்கோ சலசலத்த சத்தத்துடன் விழுந்தது. நாராயணன் அருகே சாய்வதும் தெரிந்தது. பின் அவனை அந்தகாரம் சூழ்ந்து கொண்டது.

# சந்துரு சிறிது பேசுகிறான்!

இன்ஸ்பெக்டர் கோபாலன் வீட்டை விட்டு வெளியே வந்ததும், சந்துரு தனது வலக்கரத்தைச் சஞ்சீவியின் இடது கரத்துடன் சேர்த்து அன்புடன் இணைத்துக் கொண்டான். "மெள்ள நடந்துகொண்டே சுகமான காற்றை அனுபவிக்கலாம், வா, சஞ்சீவி!—அதோடுகூட, இதுவரை தன் உதடுகளில் துடித்துக்கொண்டிருந்த கேள்விகளையும் நீ கேட்டுக் கொண்டே வரலாம். நானும் தங்கு தடையில்லாமல் பதில் சொல்லிக்கொண்டு வருகிறேன்" என்றான்.

சஞ்சீவி சிறிதுநேரம் மௌனமாக இருந்தான். பிரசித்தி பெற்ற துப்பறிபவன் சந்துரு; மிகப் பெரிய மனிதர்களையெல்லாம் நுனி நாக்கினால் தூக்கி எறிந்து பேசிப் பழக்கப் பட்டவன் என்று பெயர் பெற்றவன்; அவன் இப்படித் தன்னிடம் ஒரு பாசம் வைத்து நடந்து கொள்வது அவனுக்கு ஆச்சரியமாக இருந்தது. தவிர, தன் மன ஆழத்திலுள்ள கேள்விகளைக் கூடத் தெரிந்து கொண்டு பேசும் ஒருவனிடம் எதை எப்படி எவ்வளவு காலம் மறைக்க முடியும் என்ற அச்சம்...

''பயப்படாதே, சஞ்சீவி! உலகத்தில் இரண்டு விதமான ஆத்மாக்களுக்குச் சாதாரண மனிதர்களைவிட அதிக திட்சண்யமான திருஷ்டி உண்டு. ஒன்று, கடவுளிடமோ பராசக்தியிடமோ லயித்துப்போன மகான்கள்; இவர்களுக்குப் பிறர் சொல்லாமலேயே உள்ளுணர்வு கூறிவிடும்; எதிர்பாராத எச்சரிக்கைகள் அவர்களுக்குச் சாதாரணமாகவே ஏற்படும்; அவர்கள் மனம் தாமாகவே எதை ஏற்கலாம் எதை ஏற்கக்கூடாது, யாரை நம்பலாம் யாரை நம்பக்கூடாது என்று காட்டிவிடும். இரண்டாவது, என் போன்று மூளைக்கு வேலை கொடுத்து அதைக் கூர்மையாக்கிப் பழக்கி வைத்திருப்பவர்கள்; இதில் நூற்றுக்கு நூறு வெற்றி இராது; இதைக் கண்டே உலகம் பிரமிக்கிறதென்றால், ஆத்ம சாதனை செய்கிறவர்கள் பெருமை எத்தனை பெரிது!'' என்றான் சந்துரு.

சஞ்சீவி மேலும் மௌனமாக இருந்தான். அநேக சமயங்களில் சந்துரு இதுபோன்ற விசாரணைகளில் இறங்கி விடுவது வழக்கம்தான். ''அதிமேதாவி என்று பெயர் வாங்குகிறோம்! சென்ற இடங்களில் எல்லாம் புகழ்மாலை போடுகிறார்கள்; துஷ்டர்கள் கண்டு பயந்து ஓடுகிறார்கள்! இந்தப் பெருமையிலேயே நாளைத் தள்ளிக்கொண்டு வருகிறேனே! இதனால் என்ன லாபம்? உலகத்திற்குப் புதிதாக யாரும் செய்யாததாக நாம் என்ன நன்மை செய்கிறோம்? அதற்கு நம்முடைய நிரந்தரமான கைங்கர்யம் என்ன?'' என்று கேட்பான்.

''ஒரு குழந்தையுடனும் அதற்குச் சரியாக விளையாடுவான்; அந்தக் குழந்தைக்குத்தான் இன்னொரு குழந்தையுடன்தான் பழகிக் கொண்டிருக்கிறோம் என்று தோன்றும்படி இருக்கும். பெரிய பண்டிதர்களுடன் சர்ச்சை செய்வான்; நம்மைப் போலும் சற்று அதிகமாகவும் ஆராய்ச்சிகள் செய்த ஒரு கெட்டிக்காரன் இவன்'' என்று அவர்கள் நினைத்துக் கொள்ளும்படி இருக்கும் பேச்சு.



சந்துரு ஒரு விசித்திரமானவன். அவனுக்குக் கோபாலனிடம் ஒரு பக்தி; சில பேரிடம் ஆழ்ந்த பக்தி அப்படி விழுந்துவிடுகிறது. காரணம் என்னவென்று சொல்ல முடியவில்லை, அவர் மனைவி லட்சுமியைத் தன் சொந்தத் தமக்கை போல் நடத்துவான்; 'கல்யாணம் செய்து கொள்' என்று எத்தனையோ பேர் சொல்லியும், ''கிருஹஸ்தர்கள் படும் அவதியைக் கண்டு நான் அனுதாபம் கொள்வதோடு நிறுத்திக்கொள்கிறேன். என்னைப் பார்த்து ஒருவரும் இரக்கப்படும் நிலை ஏற்படக் கூடாது. இரண்டாவதாக, நன்றிகெட்ட பிள்ளைகளைப் பெற்றுவிட்டு, நான் எதற்காக வேறொருவன் முன்னிலையில் கண்ணீர் விட வேண்டும்? இந்த ஜன்மத்தில் இந்த மனிதன் இன்னொரு மனிதரிடம் தன் குறையைச் சொல்லி அழுதான் என்பது இல்லை!'' என்பான். இதெல்லாம் தமாஷாகச் சொல்கிறானா, உண்மையாகச் சொல்கிறானா என்பது யாருக்கும் தெரியாது.

சஞ்சீவியை அவன் அணைத்துக்கொண்டு சென்றபோது சொந்த மகனிடம் காண்பிக்கும் வாத்சல்யத்தைத் தான் காட்டினான். அவர்கள் இருவரும் கோபாலன் வீட்டிலிருந்து இப்போது சுமார் நூறு கஜம் நடந்து வந்திருப்பார்கள். ''எங்கே! உன் கேள்வியை நானே கேட்டுக் கொண்டு விடுகிறேன், ''இரண்டு கணேசன் இருப்பதாக இவர் ஒரு வெடி குண்டைத் தூக்கிப் போட்டுப் பேசுகிறாரே, இதென்ன குழப்பம்!'' என்றுதானே கேட்க விருப்பம்!''

''ஆமாம்!'' என்றான் சஞ்சீவி சிறிது தயக்கத்துடன்.

''இன்னொரு கேள்வியும் இருக்கிறது. கோபாலனிடம் நான் பூரா விவரமும் சொல்லி விட்டேனா என்பது. அப்படியென்றால், விடியற்காலையில் நாயர் வந்து போன விஷயம் ஏன் சொல்லவில்லை!— அப்படித்தானே?''

''அதுவும் வாஸ்தவம்!''

''நீ கெட்டிக்காரப் பையன். ஆகையால்தான் இன்னொரு கெட்டிக்காரன் பேச்சில் என்னென்ன குறை

பாடுகள் இருக்கின்றனவென்று உன்னிப்பாகப் பார்த்திருக்கிறாய்... இப்படி உட்காரலாம்; வா! பேசிப் பார்த்தால், எனக்கும் மனத்தைக் கொஞ்சம் தெளிவு செய்து கொண்டதாக இருக்கும்......''

இருவரும் ஒரு வீட்டு வாசலுக்கு வெளியில் கடப்பைக் கல் போட்டு ஆசனமாகக் கட்டியிருந்த சிமிட்டி பெஞ்சியில் உட்கார்ந்தார்கள். ''பகலில் பக்கம் பார்த்துப் பேசு; இரவில் அதுவும் பேசாதே'' என்பார்கள், இந்த வீடு அதற்கு விதிவிலக்கு, சஞ்சீவி! இங்கே வீட்டுக்காரரும் அவர் சம்சாரமும் 'டமார'ச் செவிடுகள். அதோடு நன்றாகத் தூங்குபவர்கள்...'' என்று சந்துரு, சஞ்சீவியின் முதுகில் தட்டினான்...

சஞ்சீவி, ''ஸார்'' நானும் நினைத்து நினைத்துப் பார்க்கிறேன். ஒரே குழப்பமாக இருக்கிறது...அவ்வப்போது சிறிது சிறிது புரியவும் புரிகிறது...'' என்றான்.

''ஒன்றும் பெரிய விஷயம் இல்லை; நிதானப்படுத்திப் பார்த்தால், அதிக வெளிச்சம் தெரியும். ஒரு கோஷ்டி சேர்கிறது. அது எப்படிச் சேருகிறது என்பதைப் பின்னால் பார்த்துக் கொள்வோம். அதில் இருப்பவர்கள் யார்? ஒரு நடிகன்; நன்றாக நடிப்பான்; பெயர் சந்தானம் என்று வைத்துக் கொள்வோம். ஏற்கெனவே வேறொருவர்போல் நடித்துக் குற்றம் செய்தவன்; அவன் ஒரு பணக்கார இடத்தில் உள்ள வேறொரு ஆசாமியைப் போலவே இருக்கிறான். இந்தச் சந்தர்ப்பத்தில் சாதாரணமாக நினைக்கக் கூடியது என்ன? நிஜ ஆளை அகற்றிவிட்டு, அந்த ஸ்தானத்தில் தான் உட்கார்ந்து அங்கே தன் கைவரிசையைக் காட்ட விரும்புவதுதானே? அப்படி அவனாக விரும்பாவிட்டாலும், அவனுடைய கோஷ்டியினர் அதை விரும்புகிறார்கள். அவன் தயங்கினாலும், நான் காப்பாற்றுகிறேன் என்று கோஷ்டித் தலைவன் உத்தரவாதம் செய்கிறான். அவனைப் பயன்படுத்திக் கொள்கிறான், இதில் இன்னொரு வேடிக்கை என்னவென்றால், பணக்கார இடத்திலே வீட்டுக்கு உடையவனாக இருப்பவனும் நல்லவன் இல்லை; அவனுக்குப் 'பூர்வசரித்திரம்' உண்டு. பல கெட்டவர்களுடன் பழகியிருக்கிறான். அவர்களில் சிலரிடம் பயம் இருக்கிறது. இந்தக் கோஷ்டி அந்தப் பயத்தைக் கொண்டு அவனைப் பிடித்து உலுக்க முயற்சிப்பது சகஜம்தானே?



சஞ்சீவி சந்துருவைச் சிறிது நிறுத்தி, ''ஸார், புதிரில் நான் சிடுக்கெடுத்துச் சொல்கிறேன். சரிதானா, பாருங்கள். சந்தானம் என்ற நடிகன் (மாஜி குற்றவாளி) செங்கல்வராய பிள்ளை பங்களாவில் புகுந்து கொள்ள முயற்சிக்கிறான். செங்கல்வராய பிள்ளை பேரில் ஏதோ புகார் இருக்கிறது. அது சந்தானம் சேர்ந்திருக்கும் கோஷ்டிக்குத் தெரியும்; அதைக் காட்டிக் காட்டிப் பயமுறுத்தி ஏதோ காரியம் சாதித்துக் கொள்ள வேண்டும். கணேசன் போலவே சந்தானம் இருப்பதால், அவனை அப்புறப் படுத்திவிட்டு, அந்த வீட்டினுள் இருந்து காரியத்தைச் சாதித்துக் கொள்ளப் பார்க்கிறான்...'' என்றான்.

''ரொம்ப சரி! இதற்கு அவனுக்குப் பக்கபலமாக, அந்த வீட்டிலேயே ஒரு டிரைவரை அமைத்துக் கொண்டிருக்கிறான். வேவு பார்ப்பது, பிறர் பேச்சைக் கவனிப்பது, உளவு சொல்வது, கோஷ்டித் தலைவனை அங்கே அனுமதிப்பது, இதுபோன்ற காரியங்களுக்கு அவன் உடந்தையாக இருக்கிறான்; இது என் ஊகம்தான்.''

''அதாவது, தலைவன் தாமோதரம் என்றால், கன்னையன் அவனுக்கு உதவி செய்து வருகிறான். வெகு நாளைய முயற்சிகளோ இவைகள்...''

''அப்படித்தான் நான் நினைக்கிறேன். திட்டம் நன்றாக இருந்தாலும், நடைமுறையில் சில இடைஞ்சல்களும் இருக்கின்றன. வீட்டில் இருக்கும் உண்மை கணேசன் சாமான்யப் பட்டவன் அல்ல; அவன் வீடெல்லாம் மின்சார விசைகள் வைத்து, இருந்த இடத்திலிருந்தே எல்லாவற்றையும் கிரகித்துக் கொண்டிருக்கிறான். வீட்டில் நடப்பதில் அவனுக்குத் தெரியாதது இல்லை! அது மட்டும்

அல்ல; என் ஊகம் சரியாக இருந்தால், இந்தப் போலி கணேசன் (அதாவது சந்தானம்) எத்தனை தூரம் போகிறான், பார்த்து விடுவது என்றும் முடிவு செய்திருக்கிறான்...''

''ஒரு சந்தேகம், செங்கல்வராய பிள்ளை வேறு வழியின்றி ஒப்புக் கொள்கிறார் என்று வைத்துக் கொள்வோம். திலகவதிக்கு இப்படி சந்தானம் என்றொருவன் இருக்கும் விவரம் தெரியுமா?''

''நன்றாகத் தெரியும். அறை அவள் என்னிடம் ஒளிக்கிறாள் என்று நான் நினைக்கிறேன். அவள் தகப்பனுக்கும் கணேசனுக்கும் ஆகாது என்ற காரணத்தினால் கணேசன் மீது வெறுப்பு ஏற்பட்டிருக்க வேண்டும்; இரண்டாவது, சந்தானத்திற்கும் பஞ்சநதத்திற்கும் ஏதேனும் நட்பு இருக்கலாம் என்பதும் என் சந்தேகம். அதோடு கூட செங்கல்வராய பிள்ளையே மனைவிக்கு, சந்தானத்தைத் தடை செய்ய வேண்டாம், அதனால் ஆபத்து வரும் என்று உத்தரவு போட்டிருக்கலாம்... எது எப்படி இருந்தாலும் சந்தானம் கணேசனை அப்புறப்படுத்தப் பிரயத்தனம் செய்தான் என்பது மட்டும் நிச்சயம். இப்போது உனக்கு நான் கணேசனும் சந்தானமும் மாறி மாறித் தோன்றியதை விளக்கமாகச் சொல்லி விடுகிறேன். இந்தக் கேஸின் ஒரு முக்கியமான பகுதி விளங்கி விடும்!'' என்று சந்துரு மேலும் சொன்னான்.

நான் முதன் முதலாகத் தேனாம்பேட்டைப் பங்களாவுக்குச் சென்றபோது கடைசியாகத்தான் கணேசன் அறைக்குச் சென்றேன். அங்கே ஒருவன் விழுந்துகிடந்தான். அவனையே 'கணேசன்' என்று நான் நினைத்தேன். அவனும் கூட, 'நானாக விழுந்தேன்; மேஜை மண்டையில் இடித்திருக்கிறது. அதனால் கொஞ்சம் கலங்கியிருக்கிறேன்' என்று சொல்லி விட்டான். டாக்டருக்கு டெலிபோன் பண்ணச் சென்ற இந்திரா, 'நான் சென்றபோது, யாரோ



ஓட்டமாக ஓடின மாதிரி இருந்தது. அண்ணாவை அடித்த மாதிரி என்னையும் இருட்டில் யாரேனும் தாக்கலாம் என்று பயந்த நான் திரும்பி விட்டேன்' என்று சொன்னாள். நான் அதை அலட்சியம் செய்த மாதிரி காட்டினேனே ஒழிய, வீட்டில் வேறொருவன் நடமாட்டம் இருக்க வேண்டும் என்று அப்போதே நினைத்து விட்டேன்.

அடுத்தபடி ஹாலில் நான் ஒளிந்து கொண்டிருந்த போது எனக்கு ஒரு டெலிபோன் வந்தது; அதை எடுத்து, 'சந்துருவிடம் பேசமுடியாது' என்று பதில் சொல்லி வைத்து விட்டான் கணேசன். அதன்பின் அவன் கண்கள் நாலா புறமும் சுறுசுறுப்பாகத் துழாவின. மனத்திற்குள் என்னையும் அறியாமல் ஒருபக்கம்-அடிபட்டு விழுந்தவனும் இவனும் ஒருவன் அல்ல என்பதே அது. அவனிடம் ஒரு பரபரப்பு துடிப்பு எல்லாம் காணப்பட்டது. முதலில் பார்த்தவன் கணேசன் என்றால், இவன் யார்?

மூன்றாம் முறையாக, நான் மதுரநாயகத்திற்கும் ஒரு ஆசாமிக்கும் சண்டை நடப்பதையும், அந்த ஆசாமி வீழ்த்தப்படுவதையும் கண்டேன். அண்ணாமலை அங்கே வந்தான்; கீழே கிடந்த கைக்குட்டையை எடுத்துக் கொண்டு மௌனமாக நடந்தான். இந்திராவின் அண்ணன் தான் என்றால், மதுரநாயகத்தை மறைத்தாலும் கூட, அண்ணாமலை கூச்சல் போட்டு, கணேசனுக்கு ஆபத்து என்பதைத் தெரிவித்திருப்பான்; என்னையாவது அழைத்திருப்பான். ஆகவே, இது போலி ஆசாமியாகவே இருக்க வேண்டும் என்பதே என் ஊகம். அதுவும் அவன் செடியின் மறைவிலிருந்து மறைந்து போன பின், ஒரு கூட்டாளியுடன் வேலை செய்கிறான் என்றும் ஊர்ஜிதம் செய்து கொண்டேன்.

நான்காம் முறையாக, வெகு அருகே கணேசனை நான் கண்டது, செங்கல்வராய பிள்ளை கடத்திச் செல்லப்பட்ட விவரங்களை வந்து அவன் சொன்னபோது. என்னிடம் அவன் பேசியது எல்லாம் உண்மை என்று எனக்குத்

தோன்றியது. விழுந்து கிடந்த ஆளும் இவனும் ஒரே ஆசாமி இல்லை என்பதை, இவன் நெற்றியில் கண்ட வடுவைக் கொண்டு நிச்சயம் செய்தேன். இவனை அப்புறப்படுத்த ஒரு முயற்சி நடைபெறுகிறது; உருவத்தில் தத்ரூபமான ஒரு ஆசாமி புகுந்து கொள்ளப் பார்க்கிறான் என்பதும் விளங்கியது. ஆனால், முழு விவரங்களும் தெரியுமுன் எது செய்தாலும் எக்கச்சக்கமாகி விடும் என்று நான் சும்மா இருந்து விட்டேன். அந்தச் சமயம் இந்திராவைக் கலக்கிக் குழப்பவும் விரும்பவில்லை.

மாடியில் நடந்த சண்டை எனக்கு ஆச்சரியமே அளிக்கவில்லை! கதவை உடைத்து உள்ளே சென்றபோது நான் கண்ட கணேசன் நெற்றியில் வடு இருந்தது! கணேசன் தன் சித்தப்பா விஷயம் கூறியபோதும், இங்கே வெற்றி வீரனாக நிற்கும்போதும், இந்திராவிற்குக் கணேசனைக் கவனிக்க நல்ல அவகாசம் இருந்தது. இவன் போலியாக இருந்தால், அவள் முகக்குறி காட்டியிருக்கும்; தவிர, கணேசனும் எதிரில் நின்று தெம்பாகப் பேசினான். எனக்கு நம்பிக்கை பிறந்தது; ஆனால், இதற்குப் பிறகு இவனை நான் இது வரை காணவில்லை!

என்னை வீட்டில் வந்து 'பேட்டி' கண்ட ஆசாமியின் பேச்சில் உண்மையின் நாதம் இல்லை. வீட்டு நிலவரங்கள் எல்லாம் நன்றாகத் தெரிந்து வைத்திருந்தான். எனினும் உண்மையின் நாதம் இல்லை. 'உன் அருகிலேயே இருந்து கவனித்துக் கொண்டிருக்கிறேன்' என்று அவன் செங்கல்வராய பிள்ளைக்கு எச்சரிக்கை செய்து எழுதியது உண்மை; அவன் கவனிக்காவிட்டாலும் அவன் ஆள் கன்னையன் கவனிக்கிறான்.

இத்தனை பெரிய தைரியசாலி ஒரு பிசகு செய்து விட்டான். என்னிடம் தன் சாமர்த்தியத்தைக் காட்டியது! பாங்கிலிருந்து வெற்றுக் காகிதக் கட்டை வாங்கி உன் கையில் கொடுத்து, எங்கோ ஒரு இடத்தில் ரூபாய் நோட்டுகள் அச்சாகின்றன என்பதைச் சொல்லாமல்



சொல்லிவிட்டான்! என் எண்ணம் உடனே 'போர்ஜரி' செய்கிற ஆட்களை நாடியது; மருந்துக் கடை குருசாமி நாயக்கர் ஏற்கெனவே தண்டனையடைந்தவர். தாமோதரத்தின் கைக்குட்டை இவனிடம் இருந்தது மேலும் நிச்சயமாக்கியது. செங்கல்வராயப் பிள்ளை, 'கல்பமணி ட்ரக் ஸ்டோர்'ஸுடன் தொடர்பு வைத்திருப்பதைப் பற்றியும் யோசனை வந்தது. அந்தக் கம்பெனியின் நாடா அவர் அறையிலும், 'விசிட்டிங்' கார்ட் தோல் பையிலிருந்த இடத்திலும் கிடந்ததை மறக்கக் கூடாது.

செங்கல்வராய பிள்ளைக்குக் கள்ள நோட்டு வியாபாரத்தில் சம்பந்தம் இருக்கிறது. எப்போது ஏற்பட்டதோ, அதைப் பற்றி அக்கறை இல்லை. ஏதோ ஒரு நிலையில் அதை அவர் நிறுத்த விரும்புகிறார்; கண்ணியமாக வாழ விரும்புகிறார். அல்லது பழைய கூட்டாளிகளை விட்டுவிலகவாவது விரும்புகிறார். ஆனால் அந்தச் சகவாசங்கள் அவரை விடேன் தொடேன் என்று மாட்டி இழுக்கின்றன.

ஒன்று, தாமோதரத்தின் தொடர்பு; இரண்டு மதுரநாயகத்தின் தொடர்பு; மூன்று சுந்தரம் பிள்ளையின் சகவாசம். மூன்று கோஷ்டியும் சேர்ந்து மேலே விழுகின்றன. வீட்டினுள் உட்கார்ந்து மதுரநாயகம் அவரைக் கட்டாயப்படுத்துகிறார். சந்தானம் புகுந்துகொண்டோ, அல்லது தாமோதரத்தால் புகுத்தப்பட்டோ, அவரை நகரவொட்டாமல் நிறுத்தி மசிய வைக்க முயல்கிறான்; இவர்களையெல்லாம்விட சக்தி வாய்ந்த சுந்தரம் பிள்ளை, அவரைத் தூக்கிக்கொண்டே போய்விடுகிறார்...''

''அத்தனை தூரம் தெரிந்தும் நீங்கள்...''

''அத்தனையும் ஊகம். சரியான ஊகமாகவே இருக்கும். ஆனால் ருசு தேவை. அவர்கள் ஒருவருடன் ஒருவர் மோதினால், ருசு தானாகப் பிறக்கும்.''

''திலகவதிக்கு எல்லாம் தெரியுமா?''

''அநேக விஷயங்கள் தெரிந்திருக்க வேண்டும். மதுர நாயகம் எந்த விதத்தில் செங்கல்வராய பிள்ளைமீது 'பிடி' வைத்திருக்கிறார் என்பது தெரிய வேண்டும்; சந்தானம் என்பவன் கணேசனை அப்புறப்படுத்துகிறான் என்பதையும் அவள் அறிந்து கொண்டிருப்பாள்; சுந்தரம் பிள்ளையைப் பற்றிக் கேள்விபட்டாவது இருக்க வேண்டும்.

இந்திரா காணாமல் போனதைப் பற்றி அவள் அதிகம் கலவரப்படவில்லை, அவள் நிலையே மிகவும் கேவலமாக இருப்பதுதான் அதற்குக் காரணம், அவள் தந்தை பஞ்சநதம் வேறு வந்து தொல்லை கொடுக்கிறான்; அவனுக்கும் துஷ்ட சகவாசம்; அதிலிருந்து விடுவித்துக் கொள்ள முயன்றும் முடியவில்லை. செங்கல்வராய பிள்ளை மாதிரியே அவன் சங்கடமும்! மாரிமுத்து அவனைச் சும்மா விடமாட்டான், தன் தகப்பனை மாரிமுத்துவிடமிருந்து விடுதலை செய்வித்துக் கொஞ்சம் பணத்தைக் கொடுத்துத் தலை மறைவாக வெளியூருக்கு அனுப்பிடவே திலகவதி விரும்புகிறாள். அதுதான் அவளால் முடியவில்லை...''

''ஐயோ, பாவம், பஞ்சநதம்! நீங்கள் சொல்கிறதைப் பார்த்தால், அப்பாவி மாதிரி தோன்றுகிறது!'' என்றான் சஞ்சீவி.

''அநேக சமயங்களில் அப்பாவிகள்தான் பெரிய காரியங்களைச் சாதிக்கிறார்கள். நான் மூன்று வித ஊகங்கள் செய்கிறேன். இப்போது கேள்:

1. திலகவதி வீட்டில் ஒருகால் நாம் பஞ்சநதத்தையே சந்திக்கலாம்.

2. அல்லது, மதுரநாயகம் ஏதேனும் பணம் கேட்டுக் கொண்டு நிற்பான்.

3. அல்லது, சந்தானம் என்னும் போலி கணேசன் வட்டமிட்டுக் கொண்டிருப்பான்.

இவர்களில் ஒருவரையொருவர் சந்திக்க நேர்ந்தால் களேபரம்தான்!''



''நீங்கள் சுந்தரம் பிள்ளையையோ, தாமோதரத்தையோ சேர்க்கவில்லையே!''

''சுந்தரம் பிள்ளை பெரிய ஆள். அவருக்கு ஆள்-கட்டு உண்டு. கூடியவரை நேரில்வந்து சிக்கிக்கொள்ளமாட்டார். இந்தப் பங்களாவுக்கு அவர்வரத்தேவையும் இல்லை; அவர் ஆளாக ஒருவன் இங்கே நிச்சயம் இருப்பான், இந்தக் கோஷ்டியில் அதிகம் பயந்த ஆசாமி தாமோதரம், தன் திட்டங்கள் தவறுகின்றன என்றவுடன் கலங்கி விட்டான். தோல் பை சட் சட்டென்று இடம் மாறினது உறுதியைக் குலைத்துவிட்டது. என்னிடம் ஓடி வந்துவிட்டான். இனி அவனைச் சுந்தரம் பிள்ளை வெளியே விட்டு வைக்க மாட்டார். ஆசாமி கண்ணில் அகப்படாததால், அவர் மேற் பார்வையில்தான் இருப்பான்.

நான் இந்தக் கேஸில் எதிர்பாராத சில நபர்களின் உதவியை எதிர்பார்த்திருக்கிறேன். நீஒன்று, நாராயணன், சங்கரன் என்கிற பையன் என் கசிட்க்கு உதவி செய்கிறீர்கள் மாரிமுத்து, குருசாமி நாயக்கர், பாங்கி குமாஸ்தா இப்படி எதிர்க்கட்சி ஆசாமிகள் நடவடிக்கையையும் கவனித்துக் கொண்டால் போதும்...வா, பார்க்கலாம்!''

சந்துரு எழுந்தபோது, கோபாலன் உத்தரவுப்படி இரண்டு ஜவான்கள் 'மப்டி'யில் ஜீப்பில் அந்தப் பக்கம் வந்து கொண்டிருந்தார்கள். சந்துருவையும் சஞ்சீவியையும் கண்டதும் வண்டியை நிறுத்தினார்கள்.

சந்துரு ''நான் சொன்ன இடங்கள் என்று மட்டும் நின்றுகொள்ள வேண்டாம். வழியில் மாரிமுத்து பஞ்சநதம் போன்ற ஆட்கள் உலாவிக் கொண்டிருந்தாலும் சந்தேகத்தின் பேரில் நீங்கள் ஸ்டேஷனுக்கு அழைத்துக்கொண்டு போகலாம்...கோபாலன் சொல்லியிருப்பார் என்று நினைக்கிறேன்...'' என்றான்.

''அப்படியே!'' என்றார்கள்.

ஏதோ ஒரு வேத வாக்குப் போல, சந்துரு தேனாம்பேட்டை பங்களாக் கதவை இடித்துக் கொண்டிருந்த

சமயம், மாரிமுத்து இருஜவான்கள் கையில் சிக்கிக்கொண்டு திணறினான்.

சந்துரு இரண்டாம் முறையாகக் கதவை இடித்த பிறகுதான் திலகவதி திறந்தாள். அவள் முகத்தில் பரவிக் கிடந்த கலவரத்தைச் சந்துரு பாராததுபோல் பாசாங்கு செய்துவிட்டு, "மன்னிக்க வேண்டும்! ஒரு முக்கியமான காரியம் இருப்பதாலேயே நான் இங்கே விரைந்து வந்தேன். உட்கார்ந்து கொள்ளலாமா?" என்று கேட்டுக்கொண்டே, அவள் பதிலுக்குக் காத்திராமல் ஒரு பிரம்புக் குறிச்சியில் அமர்ந்து கொண்டுவிட்டான். திலகவதியையும் எதிரிலிருந்த நாற்காலியில் உட்காரும்படி சைகை செய்தான்.

திலகவதி இரு புறமும் மருண்ட கண்களுடன் பார்த்தாள். மதுரநாயகமும் சந்தானமும் கண் பார்வையில் இல்லை என்று நிச்சயம் செய்து கொண்ட பின்னரே, நாற்காலியில் உட்கார்ந்தாள். சரளா இதற்குள் மாடியிலிருந்து இறங்கி வந்து, சந்துருவுக்கு வணக்கம் தெரிவித்து விட்டு, திலகவதியின் அருகில் நின்றுகொண்டாள்.

சந்துரு இருவரையும் ஒருமுறை நிறுத்தி நோக்கினான். பிறகு, "முதலில் நான் ஒரு வேண்டுகோள் செய்து கொள்கிறேன். நான் எடுத்துக் கொண்டிருக்கும் கேஸ் வெற்றிகரமாக முடிகிற தருணம் நெருங்கி வந்து கொண்டிருக்கிறது. செங்கல்வராய பிள்ளை சௌக்கியமாக வீடு திரும்ப வேண்டும் என்றால், திலகவதி அவர்களுடைய ஒத்துழைப்பு எனக்கு மிக அவசியம் வேண்டும்!" என்று நிறுத்திவிட்டு அவள் பதிலுக்குக் காத்திருந்தான்.

"என்னால் முடிந்த உதவி நான் செய்துகொண்டுதான் வருகிறேன்! இன்னமும் செய்வேன்!" என்றாள் திலகவதி.

உங்களால் முடிந்த அளவு செய்கிறீர்களா என்பதை நிர்ணயிக்க வேண்டியது தாங்கள் அல்ல. அந்தப் பொறுப்பு என்னுடையது...என்னிடம் நீங்கள் ஆரம்ப முதலே முழு உண்மையைக் கூறவில்லை. தங்கள் தந்தை வந்து பணம் கேட்பதை முற்றும் மறைத்து விட்டீர்கள். பிறகு அவரை வாசலில் கொண்டு விட்டதையும் சொல்லவில்லை."

"பெற்றவருக்குத் துரோகம் செய்வது என் சுபாவம் இல்லை."

"போகட்டும்; தோல் பையைப் பற்றி நீங்கள் என்னிடம் மறைத்துப் பேசியிருக்கிறீர்கள். கணேசனைப் பற்றியும் ஒரு வார்த்தை சொல்லவில்லை; மதுரநாயகம் யார் என்று எனக்கு அறிமுகம் செய்து வைக்கவில்லை."

"இரண்டும் என்னால் இயன்றவரை நான் செய்திருக்கிறேன்!" என்றாள் திலகவதி உஷ்ணமாக.

"மன்னிக்க வேண்டும். அநேகமாக இதுவே நான் இந்தப் பங்களாவுக்கு வரும் கடைசி முறையாக இருக்கும். ஆகையால், என்னை நீங்கள் கோபித்துக் கொண்டாலும் நான் அக்கறை கொள்ளப் போவதில்லை. ஒரு குடும்பத்தில் இரண்டு 'கணேசன்'கள் இருந்தும், ஒருவரை ஒருவர் வீழ்த்த முயன்றபோதும் என்னிடம் சொல்ல வேண்டாமா? அவர்கள் ஆடின நாடகம் எல்லாம் நான் தெரிந்து கொள்ள மாட்டேன் என்று நினைத்து விட்டீர்களா?"

"என் புருஷருக்கு நான் துரோகம் செய்வது சரியா, சொல்லுங்கள்!" என்று கேட்டாள் திலகவதி.

"அதுவும் போகட்டும்; மதுரநாயகத்தை நண்பர் என்று அறிமுகம் செய்து வைத்தீர்களே, அதுவாவது உண்மையா?"

"ஒரு விதத்தில் உண்மைதான்."

"இல்லை; அவர் ஜன்ம விரோதி என்பது உங்களுக்குத் தெரியாதா? உங்கள் புருஷனிடம் பணம் பறித்து அதனால் வாழும் பணக்காரர் என்று ஜாடையாகவேனும் எனக்குச் சொல்ல வேண்டாமா? மலாயாவில் திருட்டு வைர வியாபாரம் செய்து, கைதாகி, சிறைவாசம் செய்தவர் என்று உங்களுக்குத் தெரியாதா?"

"இதையெல்லாம் பற்றி என்னிடம் பேசிப் பயன் என்ன?" என்று கேட்டாள் திலகவதி.

''உங்கள் புருஷர் உயிருடன் வர வேண்டும், வாழ வேண்டும் என்றால், இவர்கள் சேஷ்டைகள் குறைய வேண்டும் அல்லவா? அது உங்களால் முடியவில்லை என்னும்போது, என் உதவியை நாட வேண்டாமா? போகட்டும்; இப்போது கொஞ்சம் அண்ணாமலையை இங்கே அழையுங்கள்!''

''அவன் எதற்காக?''

''ஒரு சிறு தகவல் வேண்டும்...''

திலகவதி அவனைக் கூப்பிடும் யோசனையுடன் இல்லை; ஆனால், அண்ணாமலையே அங்கே வந்து விட்டான். ''என்னைக் கூப்பிட்டீங்களா?'' என்று கேட்டான்.

''ஆமாம்! நான் இந்திராவின் வார்த்தையை நம்புகிறவன். நீ நல்லவன் என்று அவள் சொன்னாள், அது முற்றிலும் உண்மை. ஏனென்றால், நீ எல்லோருக்கும் நல்லவனாக இருந்திருக்கிறாய். நீ இப்போது எனக்கு நல்லவனாக இருகக வேண்டும். எங்கே, நம்ம கணேச ஐயாவை அழைத்து வா!''

''எனக்குத் தெரியாதுங்களே!'' அவர் எங்கே கிடக்கிறாரோ!''

''இதுதானே வேண்டாம் என்கிறது! இருக்கட்டும்; நான் அவரை அழைக்கிறபடி அழைக்கிறேன்... சரி! இப்போது சரளா அம்மாள் பேசட்டும்! அதைக் கேட்ட பிறகு, கணேசனைப் பற்றிப் பேசலாம்! எங்கே சரளா! தாங்கள் கண்டதையும் கேட்டதையும் கொஞ்சம் விவரமாகச் சொல்லலாமா? ஒன்றும் பயப்பட வேண்டாம்!'' என்று உற்சாகப்படுத்தினான் சந்துரு.

சரளா மளமள வென்று பேசினாள். அன்று முதல் நடந்ததையெல்லாம் விவரமாகக் கூறினாள். திலகவதி பஞ்சநதத்தைச் சந்தித்தது, பணம் கொடுக்கச் சென்றது, அங்கே நிகழ்ந்த திடுக்கிடும் சம்பவங்கள், பணத்தை யாரோ பறித்துச் சென்றது, அவள் டெலிபோன் செய்ய



முயற்சித்தது, அது அறுந்து போயிருந்தது, மதுரநாயகம் எதிர்ப்பட்டுப் பேசியது, திலகவதியின் பணம் களவு போனது, தலையணை அடியில் ரூபாய் நோட்டுக் கட்டுகள் இருந்தது, பின் அவை மாயமாய் மறைந்தது எல்லாவற்றையும் சொன்னாள்.

சந்துரு தரையைக் குனிந்து பார்த்துக் கொண்டிருந்தான். இதையெல்லாவற்றையும் அவன் எதிர்பார்த்தவனாகவே காணப்பட்டான். சட்டென்று நிமிர்ந்து, ''அண்ணாமலை! இந்த அம்மாள் சொன்னதையெல்லாம் கேட்டாயா? பணத்தை நீ பறிக்கவில்லையே!'' என்று கேட்டான்.

''ஐயா சாமி!'' என்றான் அண்ணாமலை திக்பிரமித்து.

''ஏன் அனாவசியமாகப் பயப்படுகிறாய், அண்ணாமலை! சரளாவின் தலையணைக்கு அடியில் பணத்தைப் பதுக்குபவனாக இருந்தால், அவன் இந்தக் குடும்பத்துக்கு வேண்டியவனாக இருக்க வேண்டும்; உண்மை நண்பனாக இருக்க வேண்டும், ஒருகால் சரளா இதைத் திலகவதியிடம் கூறி விட்டாலும், ஒன்றும் மோசம் போகாது என்ற நம்பிக்கையுடன் தானே வைக்க வேண்டும்? ஒன்று நீ செய்திருக்க வேண்டும்; அல்லது கணேசன் செய்திருக்க வேண்டும். அதுவும், திலகவதி தனது தந்தைக்கு வீட்டுப் பணத்தை எடுத்துக் கொடுத்து விடாமல் இருப்பதில் அவருக்கு உன்னைவிட அக்கறை அதிகம் அல்லவா?...... ஆகையாலே அவரை அழைத்து வா!''

''அவர் இங்கே இல்லீங்க! உண்மை!'' என்றான் அண்ணாமலை பிடிவாதமாக.

''அப்புறம் நானே போய்த்தான் அழைத்துவரவேண்டியிருக்கும். உன் அறைக்குள் நான் வந்து விட்டேனானால், என்னென்ன அகப்படுமோ! வருத்தப்படுவாய்! நான் போலீஸ்காரன், பார்!''

''என்னங்க நீங்க! தமாஷ் பண்ணினால்—''

''அண்ணாமலை! நீ யோக்கியமாக நடந்துகொள்ள வேண்டும். ஒருமுறை மதுரநாயகமும் ஒரு போலி ஆசாமியும் சண்டை போட்டதைக் கண்ணால் கண்டுவிட்டு உனக்குத் தெரியாது என்று சாதித்தாய். நானும் சும்மா விட்டு விட்டேன். இப்போது கணேசன் இல்லை என்கிறாய்! நீ இப்போது யாருடைய நண்பன் என்றே தெரியவில்லை எனக்கு! இந்திரா மிகுந்த ஆபத்தில் இருக்கிறாள்; இந்த க்ஷணம் கணேசன் முனைந்தாலே காப்பாற்றலாம் என்று சொல்ல நான் வந்திருக்கிறேன். காலந் தாழ்த்தினால் என்ன நேரும் என்று சொல்வதற்கில்லை''

''போங்க, ஐயா; நீங்கள் சொல்கிறது விளங்க வில்லை!''

''விளங்கவேண்டாம்! அதோ பின்னால்பார், கணேசனே வந்து நிற்கிறார்! அதற்கு என்ன சொல்கிறாய்?''

எல்லாருமே திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தார்கள். உண்மையில் கணேசன்தான் மாடிப் படியில் இறங்கி வந்து கொண்டிருந்தான்! அவன் இரண்டு இரவுகளில் மிக இளைத்துக் கருத்திருந்தான். வரும்போதே சந்துருவுக்கு ஒரு கும்பிடு போட்டான்.

சந்துரு பதிலுக்கு மரியாதை செய்து விட்டுக் கடுமை யாக, ''அண்ணாமலை! இனிமேல் சற்று ஒதுங்கி நில்!...... மிஸ்டர் கணேசன்! உங்களைப் போன்ற ஒரு பொறாமை சாலியையும் தைரியசாலியையும் நான் அபூர்வமாகத்தான் காண்கிறேன். ஒரு எதிரி உங்கள் வேஷத்தில் இந்த வீட்டில் நடமாடுகிறான் என்று தெரிந்திருந்தும், ஒளிந்து காத் திருப்பதென்றால், எத்தனை பொறுமை வேண்டும்! இப்போது சரளா கதை கதையாகச் சொன்னாள். என் ஞாபகம் நீங்கள் செய்த வேலையைப் பற்றித்தான்! ஏதோ ஓர் அறையில் உட்கார்ந்தபடி வீட்டில் நடக்கும் பேச்சை யெல்லாம் கேட்பவர் நீங்கள்! முடிந்தவரை நன்மை செய்து வருகிறவர்; ஆகையாலேதான் பஞ்சநதம் கையில் பணம் போய்ச் சேராமல் பிடுங்கிக் கொண்டீர்கள்; பிறகு மிகுதிப்



பணத்தையும் எடுத்துச் சரளா படுக்கை அடியில் கொண்டு வைத்தீர்கள்!''

கணேசன் ஒரு பெருமூச்சு விட்டான். ''என்னால் முடிந்ததைச் செய்தேன்...'' என்றான்.

''மறுபடி அந்தப் பணம் பூராவையும் யதாஸ்தானத் தில் வைத்துமிருப்பீர்கள்! போனது போகட்டும்! எனக்கு நீங்கள் உங்களுக்குத் தெரிந்த வரையிலாவது, இந்த நிலை யில் உண்மையைச் சொல்லுவீர்களா?'' என்று கேட்டான்.

திலகவதியின் உடல் படபடவென்று அடித்துக் கொண் டிருந்தது. எதைச் சொல்லுவானோ என்று பயம் அவளைப் பிடித்துக் கொண்டிருந்தது.

''மிஸ்டர் சந்துரு! நீங்கள் சாமர்த்தியசாலி. உங்களுக்குத் தெரியாததே இல்லை. என் வாக்குமூலமாக வரவழைக்க விரும்புகிறீர்கள். தயவு செய்து மன்னித்து விடுங்கள். இந்தக் குடும்பத்துக்கு எதிராக ஒரு வார்த்தை சொல்லாது இந்த வாய்... என் தங்கைக்கு ஆபத்து என்றீர்களே......!''

''சொன்னேன்; உம்மை வருவிப்பதற்காகத்தான் அப்படிச் சொன்னேன்; நீர் அருகில் இருந்தால் அந்த வார்த்தையைக் கேட்டுக் கொண்டு சும்மா இருக்க மாட்டீர் என்று எனக்குத் தெரியும். நிஜத்தில் உம்மைப்போல் வேஷம் போடுகிற ஆசாமி பாடுதான் திண்டாட்டம். அவன் கூட்டாளி தாமோதரம் அகப்பட்டுக் கொண்டு விட்டான்; போலீஸ் ஸ்டேஷனில் ஸ்டேட்மெண்ட் கொடுத்துக் கொண்டிருக்கிறான். இந்தப் பங்களாவில் அந்தப் போலி ஆசாமி புகுந்து கொள்ள முயன்றது, கள்ள நோட்டு விநியோகம் செய்தது எல்லாம் வெளிவருகிறது; பழைய 'கேஸ்' ஒன்றில் ருசுவாகாமல் அவன் தப்பினான்! இப்போது அப்படி முடியாது! ஓட வேண்டும்!...

கணேசன் கண்களைத் துடைத்துக் கொண்டான். ''சந்துரு! நான் இந்த வீட்டில் பதுங்கி ஒதுங்கிக் கொண்

டிருந்ததன் முக்கியமான காரணம். என் தங்கை இந்திராவை என் சிறிய தகப்பனார் பிடுங்கல் தாங்காமல், மதுரநாயகத்துக்குக் கட்டிக் கொடுத்து விடுவார் என்ற பயம் ஒன்று; அல்லது, சந்தானம் அவளைக்கொண்டுபோய் விடுவான் என்ற அவநம்பிக்கை ஒன்று. என் சிறிய தகப்பனார் எங்கள் சொத்துக்களைச் சூறையாடி இருந்தார். எனினும் எப்படியேனும் இந்திராவையாவது காப்பாற்றி நல்ல இடத்தில் அவளுக்கு மணம் செய்விக்க வேண்டும் என்றே நான் வெகு காலமாகப் பாடுபடுகிறேன்

திலகவதி அப்போது, ''எனக்கு மட்டும் அந்த அக்கறை இல்லையா?'' என்று கேட்டாள் குரோதமாக.

''இருக்கலாம்; ஆனால் இவர் என் சிறிய தகப்பனாருக்காகப் பல விஷயங்களைச் சகித்துக்கொண்டு போக வேண்டியிருந்தது. எனக்கு அப்படி நிர்ப்பந்தம் இல்லையே...! எனக்கு ஒரே ஒரு சந்தேகம் உண்டு. இங்கே கன்னையன் உளவாளி என்று நான் தெரிந்துகொண்டிருக்கிறேன். தவசுப்பிள்ளையாக இருப்பவனை என்னவென்று சொல்லத் தெரியவில்லை. உங்களுக்குத் தெரிந்தால் சொல்லுங்கள்'' என்று கேட்டான்.

சந்துரு புன்முறுவல் பூத்துக் கொண்டிருந்தான். ''வெகு லகுவான விஷயம் அது; முதல் நாள் நான் இங்கே வந்தவுடனே தீர்மானம் செய்த விஷயம் அது! இந்தக் கேஸில் சம்பந்தப்பட்டவர்களில் மிகவும் கெட்டிக்காரன் அவன்! என்னிடம் பேசும்போது, ஒன்று அவன் தேர்ந்த துப்பறிபவனாக இருக்க வேண்டும்; அல்லது நெளிவு சுளிவு தெரிந்த கொள்ளைக்காரனாக இருக்க வேண்டும் என்று தீர்மானித்தேன்...''

''அவன் யார்? என் சித்தப்பா அவனை அமர்த்திக் கொள்ளுவானேன், மிஸ்டர் சந்துரு?''

''அவசரப்படாதீர்கள்! அவர் அமர்த்துவதாவது? மதுரநாயகம் ஒன்றும் அடித்துக்கொண்டு போய்விடாதபடி



யும், சந்தானம் செங்கல்வராய பிள்ளையை மசித்துவிடாதபடியும் கண்காணித்துக்கொள்ள, சுந்தரம் பிள்ளை ஏற்பாடு செய்திருக்கும் ஆள் இவன். எனக்கே ஒரு ஆசை உண்டு. இந்தத் தவசுப்பிள்ளை, செங்கல்வராய பிள்ளை இங்கிருந்து அகற்றப்பட்ட பிறகுகூட ஏன் இன்னும் இங்கே இருக்கிறான் என்றுதான் நான் அறிய விரும்புகிறேன்.''

''நான் போய்ப் பார்த்து வரட்டுமா?'' என்று எழுந்தான் கணேசன்.

''தேவை இல்லை. கதவைத் தட்டிக்கொண்டு நான் வந்த பிறகு தங்கமாட்டான் என்று நினைக்கிறேன். நாம் அறியாமல் எவன் எங்கும் போய் விடவும்முடியாது'' என்று கூறும்போதே மாடியிலிருந்து இடிபோன்ற ஒரு பெரிய சப்தம் அவர்கள் காதை எட்டியது.

# சுந்தரம் பிள்ளையின் சுயரூபம்

தாமோதரத்தின் வீட்டிலிருந்துவெளிப்பட்ட சுந்தரம் பிள்ளை, வெளியே சற்று நேரம் சிந்தனையில் ஆழ்ந்தபடி நின்றார். நெஞ்சில் என்றும் இல்லாத ஒருகலக்கம் அவருக்கு அப்போது ஏற்பட்டிருந்தது. அவருக்கு மிக நெருக்கமானவர்கள், காரியங்களுக்குக் கை கொடுப்பவர்கள் என்று இருந்தவர்கள் ஒரே சமயத்தில் எதிரிகளாகிவிட்டது அவரைத் திகைக்கச் செய்தது. 'கால பலம்' போதவில்லை என்கிறார்களே, அது இதுதானோ?

முன்பெல்லாம் சுந்தரம் பிள்ளை, அவரிடம் சிக்கிக் கொண்டு, அவர் பிடியைத் தாளமாட்டாமல் திணறும் ஆத்மாக்களைப் பார்த்துக் கேலி செய்து சிரிப்பார். ''இந்த ஆசாமிக்கு ஜன்மச் சனி வந்துவிட்டது!'' என்பார். பிறருக்கெல்லாம் வந்து பிடித்து ஆட்டிய அதே ஜன்மச் சனி அவருக்கும் உண்டு என்று அப்போது உணர்ந்தவர்போல் தோன்றினார். சுந்தரி—கேவலம், ஒரு பெண் பிள்ளை—

அவரை எதிர்க்கிறான்! அவர் அரணைத் தகர்த்துக் கொண்டு ஓடி விட்டான். 'தம்பி'—எத்தனை நம்பக மானவன்! அவனே வெடி வைக்கிறான்; விரோதியாக மாறி விட்டான். நாயர் பொல்லாதவன் என்பதை அவர் அறிவார்; ஜாக்கிரதையாக அவனை உபயோகிக்க வேண்டும் என்று தெரிந்து அவ்வாறே செய்தார். அவன் இப்போது விழுந்து விட்டானா? அல்லது துரோகக் கும்பலுடன் சேர்ந்து சதி செய்கிறானா?

அன்பர்கள், தோழர்கள் என்று இருந்தவர்கள் இப்படி இருக்க, எதிரிகளின் பலம் வலுத்துக்கொண்டு வருகிறது. 'தம்பி' பிடித்துக்கொண்டு வந்தவர்கள் இருவர். தாமோதரம் ஒன்று; கணேசனைப் போல் 'போலி'யாக இருப்பவன் ஒன்று. இரண்டாமவன் எப்படியோமர்மமாகத் தப்பிவிட்டான். ஒருகால் 'தம்பி'யே சூழ்ச்சி செய்து அவனை விடுவிடுத்து விட்டானோ? அப்படியும் இருக்க லாம். முதல்வன் கண்ணெதிரிலேயே தந்பித்துக்கொண்டு போய்க் காட்டிவிட்டான். அவர் சிறை பிடித்துக்கொண்டு வர ஏற்பாடு செய்திருந்த ஒரு பெண் பிள்ளை—இந்திரா—அவள்கூடக் கம்பி நீட்டிவிட்டாள்! இதெல்லாம் அவர் விரித்த வலையின் பலவீனத்தைத்தானே காட்டுகின்றன?

எல்லாவற்றிற்கும் மேலாக, ஸி. ஐ. டி. சந்துரு! அவன் மௌனமாக இருந்து கழுத்தை அறுக்கத் தயாராகி வருகிறான். எங்கு திரும்பினாலும் சந்துருவின் முகம் அவருக்குத் தோன்றியது; பயமுறுத்தியது. கடைசி கடைசி யில் அவன்—சந்துரு — வெற்றியே கொள்வான் என்று அவர் அந்தராத்மா சொல்லிற்று.

அப்படி அப்படியே விட்டுவிட்டு ஓடினால் என்ன? இரண்டு மூன்று பிரச்சனைகள் குறுக்கிட்டன. செங்கல்வராய பிள்ளையின் வீட்டில் அவருடைய ஆள் ஒருவன் இருக்கிறான், அவன் தகவல் கொண்டுவருவான்—பிள்ளை பதுக்கி வைத்திருக்கும் பொருள்கள் எங்கே இருக்கின்றனவென்று கடைசி முயற்சியாக செங்கல்வராய



32401

பிள்ளையைக்கொண்டே அதைத் தெரிந்து கொள்ளலாம். மூன்றாவதாக, ஓடும்போது இந்திராவுடன் ஓடவேண்டும்... முடிந்தால், சந்தர்ப்பப்பட்டால் சுந்தரியைப் பழிக்குப் பழி வாங்க வேண்டும்!

ஓட்டம், ஓட்டம், வெகு விரைவில் அவர் ஓடவேண்டும்.

சுந்தரம் பிள்ளையின் கார் அவர் மனோவேகத்துடன் போட்டி போட முயன்றுகொண்டிருந்தது. வறண்டதொரு பாலைவனத்தில் நடுப்பகல் வெயிலில் நிற்காமலே வந்து விட்ட ஒரு பிராணி, தாகத்திற்கு ஒரே தாரையாக எப்படித் தண்ணீரை அருந்துவானோ, அப்படி அவருடைய கார் தெருக்களை அள்ளிக் குடித்துக் கொண்டு சென்றது.

நாயரை அவர் அநதச் சமயம் முற்றும் மறந்து போய் விட்டார்!

ஃ ஃ ஃ

'கல்பமணி ட்ரக் ஸ்டோர்ஸ்' மாடியில் நடைபெற்ற சிறு நாடகத்திற்குப் பிறகு, தாமோதரத்திற்கும் 'தம்பி'க் கும் எதிரே ஒரு பெரும் பிரச்சனை எழுந்து நின்றது.

'தம்பி'யின் மனத்தில் ஒரு ஆறுதல், ஏதோ ஒரு சந்தர்ப் பத்தில் தனது பரம வைரியான நாயரை மிதித்து, தூக்கி எறிய முடிந்தது என்பதே அந்த ஆறுதல். அவனை வீசி எறிந்ததில் சுந்தரம் பிள்ளையையே வீசியது போன்ற ஒரு ஆனந்தம் அவனுக்கு ஏற்பட்டது. அடுத்தபடி, அவன் யோசனை, மேலும் தாமோதரத்துடன் ஒட்டியிருக்க வேண்டுமா என்பதுதான். பல கோணங்களிலே பார்த்தும் அது அவ்வளவு அவசியம் இல்லை என்ற முடிவுக்கே வந்தான். ஒரு சமயத்தில் தாமோதரத்திற்கே தீங்கு இழைத்திருக்கிறான் 'தம்பி'. அவனைக் கூட்டிக் கொண்டு போய், சுந்தரம் பிள்ளைக்குச் சமர்ப்பித்திருக்கிறான்; அந்தச் சமயம் சுந்தரம் பிள்ளையால் நன்மை அடைய முடி யும் என்ற நம்பிக்கை அவனுக்கு இருந்தது. ஒருவேளை எல்லாம் சுந்தரம் பிள்ளையின் இட்டப்படி நடந்திருக்குமா

னால், தாமோதரம் இப்போது பாழுங்கிணற்றின் அடியிலே இருப்பான்! பின்னர் இவர்கள் இருவரும் ஒரே ஆபத்திலிருந்து தப்பியபோது நண்பர்களானார்கள்; அதே சாக்கில் நாயரையும் ஒரு 'கை' பார்க்க வாய்ப்புக் கிடைத்தது. 'தம்பி'யின் நெஞ்சாழத்தில் ஒரே ஒரு ஆசை—அந்த மாடிப்படியில் மறுபடி இறங்கி, நாயருக்கு மூச்சு இருக்கிறதா என்று பார்க்க வேண்டும் என்பது. 'ஒரு வழியாகத் தீர்த்திருந்தானானால், கவலை இல்லை; சுந்தரம்பிள்ளையையே எதிர்த்து, 'என்ன சொல்கிறே இப்போ!' என்று சவால்விட முடியும்! ஆனால், தாமோதரம் அதற்கு இடம் கொடுக்கமாட்டான்; அவன் முகத்திலிருந்தே 'தம்பி' அதை ஊகித்தான். அதிகம் தாமோதரத்திடம் பழகாமல் ஒதுங்குவதே நல்லது என்று எண்ணினான்.

இன்னொரு காரணமும் அந்தத் தீர்மானத்தை வலுவாக்கியது. 'கல்பமணி ட்ரக் ஸ்டோர்'ஸில் பாதாள அறைகள் இருந்தன! அங்கே ஏதோ ஒரு நூதனத் தொழில்—சட்ட விரோதமான காரியம்—நடைபெற்று வருகிறது. எந்த நிமிஷமும் அது போலீஸ் கண்காணிப்பில் வரும்; ஒரு வேளை குருசாமி நாயக்கர் வெளியேற முயற்சித்ததும் அந்தக் காரணமாக இருக்கலாம். இந்த விவகாரங்களில் மாட்டிக்கொள்ளத் 'தம்பி'க்கு விருப்பம் இல்லை.

தாமோதரம், குருசாமி நாயக்கரிடம் அதிகம் பேச்சுக் கொடுக்கும் முன்பு, 'தம்பி' பேசி விட்டான். "நான் போய் வருகிறேன். ஐயா! உத்தரவு கொடுங்கள்!" என்றான்.

"இங்கேயே தங்கலாம் என்றேனே!—ஒரே நிமிஷம்! எங்கள் 'முதலாளி'யிடம் இரண்டு வார்த்தை பேசிவிட்டு வந்துவிடுகிறேன்!" என்றான் தாமோதரம்.

"இல்லை; எனக்கு ஒருமுக்கிய விஷயம் ஞாபகம் வந்துவிட்டது. உடனே போய்க் கவனிக்க வேண்டும். நான் வருகிறேன். எனக்கு ஒன்றும் சிரமம் இல்லை. நாளை மறுபடி சந்திப்போம்!" என்றான் 'தம்பி'. பிறகு அதிக நேரம்



வம்பு வைத்துக் கொள்ளாமல், ஒரு கும்பிடு போட்டுவிட்டு, மடமடவென்று இறங்கி வந்து விட்டான்.

வெளியே வந்ததும், சுந்தரம் பிள்ளைக்கு ஏற்பட்டது போன்ற ஒரு திகில் உணர்ச்சியே அவனுக்கும் உண்டாயிற்று. இன்று தன்னந்தனியன் அவன். பாடுபட்டு விசுவாசத்துடன் அவன் உழைத்த சுந்தரம்பிள்ளை, அவனைக் கொன்று போட எங்கோ காத்திருந்தார். நாயர் பிழைத்தெழுந்தால், சும்மா இருக்க மாட்டான்; கடலுக்கு அடியில் 'தம்பி' ஒளிந்து கொண்டாலும் ஆகாயத்தில் பறந்தாலும் காத்திருந்து பழி வாங்கி விடுவான். ஸி. ஐ. டி. சந்துரு ஒருகால் சுந்தரம் பிள்ளையை மடக்கிவிட்டாலும், அவனுக்குச் சிறை வாசம் நிச்சயம். சுந்தரம் பிள்ளை காட்டிக் கொடுக்கத் தயங்க மாட்டார். சுந்தரி போன இடம் தெரியவில்லை; இந்த அவல நிலையில், அவள் உதவியாக இல்லாமல், ஒரு கால் கட்டாகக் கூட இருக்கலாம். அப்படியே அவளைக் கைவிட்டு விட்டு, கம்பியை நீட்டுவதே சிறந்த வழி என்று ஒரு சமயம் தோன்றியது.

நடந்துகொண்டே வந்தான் தெருவோடு. கால்கள் தொய்ந்தன. மண்டையில் வாங்கிய அடி இதுவரை கருணையுடன் தலைகாட்டாமல் இருந்தது. இப்போது 'முணுக், முணுக்'கென்று ஒரு நோவாக மாறிவிட்டது. உடம்பெல்லாம் சோர்வு. சற்று உடம்பைப் புரட்ட வேண்டும். பொழுது விடிந்துவிட்டால், அவன் தெருவோடு நிற்பதைப் பலர் கவனிப்பார்கள். அதற்குள் சரியான இடம் பார்த்துப் பதுங்க வேண்டும். அவன் செய்யக்கூடிய ஒரு நல்ல காரியம் இன்னும் இருக்கிறது. அந்தக் காரியம், சுந்தரம் பிள்ளை நெஞ்சைப் பிழிய வைத்து, உடலையும் நடுங்கச் செய்யும்.

செங்கல்வராய பிள்ளையை விடுதலை செய்வதுதான் அது! அதை அவனே செய்வதைக் காட்டிலும், வேறு யார் மூலமேனும் செய்வித்தால் இன்னும் நன்மை. அதற்கு நம்பகமாக யாரை அனுப்பவாம்?

ஒரு தெருவின் முனை திரும்பிக் கொண்டிருந்தான். 'தம்பி' அவனையும் அறியாமல் நடுத் தெருவுக்கு வந்து விட்டான். எதிரே ஒரு பர்லாங்குக்கு அப்பால் ஒரு மோட்டார் உறுமிக் கொண்டு திரும்பியது. பல இரவுகள் தூங்காதவன் கண்கள் போல் அதன் இரு முன் விளக்கு களும் ஜிவ்வென்று சிவப்பாகளரிந்தன. 'இந்தமோட்டாரை பயன்படுத்திக் கொண்டால் என்ன?' என்று 'தம்பி' நினைத்து, கையைக்காட்டினான். நிற்காமல், வேகத்தைக் குறைக்காமல், மோட்டார் வந்துகொண்டேயிருந்தது. சுமார் பத்து கஜத்துக்குள் வந்த பிறகு, இரு விளக்குகளும் 'குபீர்' என்று பிரகாசத்துடன் எரிந்து, அவன்மீது ஒரு ஜோதியையே அள்ளி வீசின. அந்த வெளிச்சத்தில், வண்டி யினுள் இருப்பவருக்கு, எதிரே நிற்பவன் 'தம்பி' என்பது நன்கு தெரிந்திருக்க வேண்டும்.

கண்மூடிக் கண் திறப்பதற்குள்ளாக, மோட்டார் வேகம் நான்கு மடங்கு அதிகமாகி விட்டது. அவன்மீது பாய்ந்து ஏறி நசுக்கும் ஒரே உறுதியுடன் அதை ஓட்டுபவர் விடுகிறார் என்பதையும் மின்னல் வேகத்தில் 'தம்பி' உணர்ந்து கொண்டான். வழியை விட்டுத் தாவிக் குதித்து எப்படியேனும் உயிர் தப்பி, அப்படி வண்டி ஓட்டுபவர் யார் என்று கண்டுபிடிக்க விரும்பினான். நினைத்த மாத்திரத் திலே மான் குட்டிபோல் துள்ளிப் பார்த்தான்; எனினும், உடம்பு காண்டாமிருகம்போல் இருந்தபடியால், இடுப்பின் பக்கமாக காரின் வலப்புறம் இடித்தது. அதே சமயம் காரில் 'ஸ்டீரிங்'கைப் பிடித்திருப்பவர் யார் என்பதைத் 'தம்பி' அடையாளம் கண்டுபிடித்துக் கொண்டான்.

சுந்தரம் பிள்ளையே அது! எத்தனை கோபம், ஆத்திரம், வஞ்சம் தீர்த்துக் கொள்ள ஆசை எல்லாம் அவரிடம் அவன் கண்டான்!

''அடபாவி!'' என்று கூச்சல் போட விரும்பினான். அந்தக் குரல் அவன் தொண்டையிலேயே நின்றது. இடுப் பில் பலமாகத் தட்டியது வண்டியின் முன்புறம்! அவன் ஒதுக்குப்புறமாக விழுந்தான். கால்களின் மீது ஒரு தேரின் கனத்துடன் சக்கரம் ஏறுவதை உணர்ந்தான்.



சுந்தரம்பிள்ளைக்கும் சிறிது குறை—யாரும் பார்க்காத இந்த அற்புதமான வேளையில் 'தம்பி'யின் மார்பிலேயே வண்டியை ஓட்டத் தவறி விட்டதில் வருத்தம். ஆனால் திரும்பவோ, நிற்கவோ மனத்துணிவு இல்லை. யாரேனும் அவரையும் அவர் கார் நம்பரையும் கவனித்து விடலாம். 'தம்பி' என்ன நிலையில் இருந்தான் என்பதைப் பற்றி இரண்டாம் முறை சிந்தனை செய்யாமலே வண்டியை வேகமாக ஓட்டினார். அப்படி அவர் செய்ததுகூட அவர் மட்டுக்கு விவேகமான செயல்தான். ஏனெனில், அவர் வண்டி தெருத் திரும்பிய இரண்டு நிமிஷங்களுக்குப் பிறகு மற்றொரு மோட்டார் வண்டி அதே தெருவுக்கு வந்தது. அதில் இருந்தவர்களுக்கும் ஏக அவசரம்தான்.

உள்ளே உட்கார்ந்திருந்தவன் சந்தானம்; சற்று முன்பு வரை போலி கணேசனாக இருந்தவன்; காரை ஓட்டி வந்தவன் கன்னையன். இருவருமே காலதாமதமின்றி ஓட வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுவிட்டதை உணர்ந்து கொண்டிருந்தார்கள். வெறுங்கையுடன் ஓடுவதில் பலன் இல்லை. ஏதோ அகப்பட்ட வரை சுருட்ட வேண்டும்! தேனாம்பேட்டை பங்களாவுக்கு அவன் வந்த காரியம் பலிதம் ஆகவில்லை. திலகவதியிடம் பணம் வாங்கலாம் என்றதற்கு இரண்டு இடையூறுகள்-மதுரநாயகம், சந்துரு. இவர்களில் பின்சொன்ன ஆசாமி வந்துவிட்டான் என்பது, அபாயம் வெகு அருகே நெருங்கிவிட்டது என்பதற்கு அறிகுறி. தாமோதரம் எங்கிருக்கிறானோ தெரியவில்லை; சந்துருவின் வார்த்தையை நம்புவதனால், அவன் போலீஸாரிடம்அகப்பட்டுக் கொண்டும், 'ஸ்டேட்மெண்ட்' கொடுத்துக் கொண்டிருக்க வேண்டும்! தாமோதரம் எவ்வளவு தூரம் தனக்கு எதிராகச் சொல்வான் என்று சந்தானத்தால் ஊகிக்க முடியவில்லை.

பணம் கொண்டுபோக ஒரே வழி உண்டு. 'கல்பமணி ட்ரக் ஸ்டோர்'ஸுக்கு விரைந்தால்—ஏதோ கொஞ்சம் அகப்படும். உடனே ஜாகைக்கு வந்தால், இந்திரா இருக்கிறாள்; சுந்தரியைப் பற்றி அவனுக்கு அக்கறை இல்லை... "இந்திரா" என்று நினைத்தவுடன் அவனுடைய முகம் பிரகாசமாயிற்று; நம்பிக்கைகள் எல்லாம் மீண்டும் துளிர்த்து விட்டன.

கன்னையன் காருடன் இரண்டு தெருக்களுக்கு அப்பால் காத்திருந்தான். ஓட்ட ஓட்டமாக வந்து ஏறிக் கொண்டு, ''விடு வண்டியை!'' என்றான் சந்தானம்.

''காயா? பழமா?'' என்று கேட்டான் கன்னையன். கடைசியில், காரியங்கள் ஆன பிறகு, தன்னை மறந்து சந்தானம் மறைந்து கொள்வான் என்ற அவநம்பிக்கை கன்னையனுக்கு உண்டு. 'சந்தானம் ஒரு நல்ல நடிகன்' என்பதை அவன் ஒரு கணமும் மறந்தவன் இல்லை. முன் அனுபவத்தில் கன்னையன் சிறையில் வாட, அவன் தன் வரை பார்த்துக்கொண்டவன் அல்லவா? வண்டியை மெல்ல ஓட்டினபடி பதிலை எதிர்பார்த்தான்.

சந்தானம் பதில் சொல்லவில்லை.

''கேட்கிறேனே, காயா, பழமா?'' என்று மறுபடி கேட்டான் கன்னையன்.

''காயானாலும், பழமானாலும் கல்லடி படாமல் அங்கிருந்து தப்பித்து வந்ததே பெரிய காரியம். நேரே 'கல்பமணி'க்கு விடு! எப்போதும் உனக்குப் பணம்தானே குறி?'' என்று கேட்டான் சந்தானம்.

''அவ்விடத்தில் மட்டும் வேறு என்ன குறி? நம்ம பங்கு முன்னாடி கிடைத்தாக வேண்டும்... இப்படி எடுத்து வையுங்கள்!''—ஒரு கையால் 'ஸ்டீரிங்'கைப் பிடித்துக் கொண்டே கன்னையன் மறு கையை நீட்டினான்.

''உஸ்ஸ்ஸ்...வம்பு பண்ணாதே; ஒன்றும் வாங்க முடியவில்லை என்கிறேனே! உண்மை! திலகவதி வரும்படி



சொல்லியிருந்தாள். இரண்டாயிரம் கொடுப்பதாக பேச்சு. நான் அதற்குமேல் கேட்பதில்லை என்றும் வாக்குக் கொடுத்திருந்தேன். நான் போன சமயம் மதுரநாயகம் பகல் வந்து காத்திருந்தான்; எங்களுக்குள்ளே ஒரு குஸ்தி தொடங்க வேண்டிய சமயம், சந்துரு வேறொருவனை இழுத்துக் கொண்டு புகுந்துவிட்டான். ஒளிந்து கொள்வதைத் தவிர ஒன்றும் செய்துகொள்கிறதற்கில்லை. அவன் பேச்சிலிருந்து தாமோதரம் 'அரஸ்டா'கிவிட்டான் என்று தெரிகிறது...''

''ஐயோ! அப்புறம்!''

''நாம் சீக்கிரம் 'கல்பமணி'யில் போய் ஏதேனும் தேட்டை போட்டால்தான் உண்டு... அதுதான் அவசரப் படுத்துகிறேன்.''

''நீங்க எப்பவும் தும்பைவிட்டு வாலைப் பிடிக்கிற ஆளு தானே!... அங்கே குருசாமி நாயக்கர் உனக்கு வைத்திருப்பானா மிச்சம்? ஒருமிக்கக் காலி செய்து கொண்டு போயிருக்க மாட்டானா?''

''சும்மா என்மேல் குற்றம் சொல்லாதே!''

''குற்றமா சொல்கிறேன்! கண்ணால் கண்டதைச் சொல்கிறேன். ஒரு காரியமா உம்மை அனுப்பினால், அங்கே இருக்கிற பெண்மீது மோகம் கொள்றீங்க! கெட்டுது வேலை பூரா!''

''பேசாதே அதெல்லாம்!... மரியாதையோடு நின்று கொள்!''

கன்னையன் சுடச்சுட பதில் சொல்லியிருப்பான். ஒரு பெரிய சண்டையே கூட அவர்களுக்குள் அப்போது ஏற்பட்டிருக்கும். சிறிது யோசனை செய்த கன்னையன் கோபத்தை அடக்கிக்கொண்டான். ஒருவேளை சந்தானம் உண்மையே சொல்லலாம். மதுரநாயகம் வந்ததையும்பிறகு ஓடினதையும், சந்துரு மற்றொரு இளைஞனுடன் பங்களாவுக்குள் சென்றதையும் அவனும்தான் பார்த்திருந்தான்...

மௌனமாக வண்டியை விட்டான். இரண்டு தெருவுக்கு அப்பால், தெருவின் வலது பாரிசத்தில் ஒரு ஆள் கிடப்பதை முதலில் கன்னையன்தான் பார்த்தான்.

"பட்டணத்திலே ஜன நெருக்கடி அதிகமாகி விட்டது. படுக்க இடம் வேறே இல்லையா?" என்று சொல்லிக் கொண்டே அருகில் வந்தான்.

"அடே! ஆளு அடிபட்டுக் கிடக்கிறான்... மோட்டார் ஏறிவிட்டமாதிரி தோன்றுகிறதே!" என்றான் கன்னையன்.

"நீ வண்டியை விடு!" என்று சந்தானம் உத்தரவு கொடுத்தான்.

"இருங்க, ஐயா! நம்ம மாதிரி ஒரு ஜீவன் கீழே துடித்துக்கொண்டு கிடக்கிறான்... பார்க்காமே போயிட றதா?" என்று கன்னையன் பிடிவாதமாக வண்டியை நிறுத்தி, இறங்கிப் பார்த்தான்.

கிடந்தது 'தம்பி'. அவனைக் கன்னையனுக்கு நேரில் பரிச்சயம் இல்லை; ஆனால் பார்த்தும் கேள்விப்பட்டும் இருந்தான்.

"யாரு உன்னை இப்படிச் செய்தது?" என்று ஆச்சரி யத்துடன் வினவினான்.

"சுந்தரம் பிள்ளை என்னைக் கொன்னுட்டான்..." என்று முனகினான் 'தம்பி'. அவனுக்கு நினைவு வந்து கொண்டும் போய்க்கொண்டும் இருந்தது.

"ஏன் அப்படி?"

"அதைக் கேட்காதே! என்னை விட்டுவிடு!...ஒரு ஆளு உயிருக்கு மன்னாடுது... போ! சுந்தரம் பிள்ளையோடே அடையாறு பங்களாவிலே!" பேச முடியவில்லை அவனால். மார்பு விம்மி விழுந்தது, தொண்டையை அடைத்தது.

"சொல்லு, 'தம்பி' யார் அது?"

"செங்கல்வராய பிள்ளை இருக்கிறாரு! அவர்கிட்டே பணம் இருக்குது!... பணம்... சுந்தரம் பிள்ளை அதற்காக அவர் தோலை உரிச்சிடுவான்; நெருப்பிலே பொசுக்கிடு வான்... பாழுங் கிணற்றிலே தள்ளிவிடுவான்..."

"எங்கே இருக்கிறது அந்தப் பங்களா?"



"அடையாறு... ஆலந்தோப்பு பங்களா... போ! போ!" —'தம்பி'க்குப் பேச்சு நின்று விட்டது.

சந்தானம் ஆத்திரமாக இறங்கினான்; "ஏ கன்னையன் நீ வருகிறாயா, இல்லையா?" என்று கேட்டான்.

"நீ சும்மா மிரட்டாதே; ஒரு ஆளு சாகக் கிடக்குது, தெரியல்லே?" என்றான் கன்னையன் அலட்சியமாக.

அடுத்தபடி நடந்ததை கன்னையன்கூட எதிர்பார்க்க வில்லை. அவன் மண்டையில் ஒரு இரும்பு ஆயுதம் 'பட்' டென்று தாக்கியது. "போடா! சாகிறவனோட நீயும் கூடச் சா...! போ...!" என்ற சந்தானத்தின் குரல் அவ னுக்குக் கேட்டது. அவன் கீழே சாயும்போதே சந்தானம் காரில் ஏறி உட்கார்ந்துகொண்டுவிட்டான்...

கார் வேகமாகச் சென்றது. 'தம்பி'யும் கன்னையனும் உலக நினைவின்றி அருகருகே அந்த ரஸ்தாவில் மூர்ச்சை யாகிக் கிடந்தனர்.

இந்திராவும் சுந்தரியும் அடைக்கலம் புகுந்த வீட்டில் நடந்த விறுவிறுப்பான நிகழ்ச்சிகளுக்குப் பின்— நெட்டையன் நினைவிழந்து கிடக்க, குள்ளன் வெளியேறிய பின்—சிறிது நேரம் நிசப்தம் நிலவியது. பஞ்சநதம் ஒளிந்து கொண்டிருந்த அலமாரியின் பின்புறத்திலிருந்து வெகு ஜாக்கிரதையுடன் வெளிப்பட்டான்; காலடி ஓசை என்பதே இல்லாமல் மெள்ள நடந்து, வீட்டைச் சுற்றிப் பார்க்கத் தொடங்கினான்.

அவனை எதிர்பாராமல் கண்டுவிட்ட இந்திராவுக்கும் சுந்தரிக்கும் அவனை அடையாளம் கண்டு கொள்ளமுடி யாத காரணத்தால் முதலில் பகீர்என்றது உண்மை. அந்தப் பயம் ஒரே வினாடியில் நீங்கிவிட்டது. நடந்த விஷயங் களை அவர்கள் பரஸ்பரம் பரிமாறிக் கொண்டார்கள். மாரிமுத்துவின் அட்டகாசங்களையெல்லாம் கூறி, முகவாய்க்கட்டையில் வாங்கிய குத்து எப்படி முகத்தையே வீங்க வைத்துவிட்டது என்று அரற்றினான் பஞ்சநதம். இந்திராவும் சுருக்கமாக அங்கு நடைபெற்ற நெட்டையன்

—குள்ளன் துவந்த யுத்தத்தை விவரித்தாள். தெருவில் ஜனங்கள் ஓடியதையும், இரைச்சல் போட்டதையும் கேட்டு எப்படி அவர்கள் திகில் பட்டுக் கொண்டிருந்தார்கள் என்பதையும் சொன்னாள். குள்ளன் எங்கோ சென்றிருக்கிறான் என்பதை ஊகித்துக் கொள்வது சிரமமான காரியமாக இல்லை. வாசற் கதவு வெளிப்புறம் தாளிடப் பட்டிருந்ததே அதற்கு ருசுவாக அமைந்தது.

சுமார் அரை மணி நேரம் பொறுத்து விட்டு ஊர் அமளிகள் அடங்கிய பிறகு அவர்கள் வெளிப்படுவது என்று தீர்மானித்தார்கள். ஏதேனும் நேருவதாக இருந்தால் அதற்குள் நேர்ந்தாக வேண்டும். அந்தச் சமயத்தில்தான் குள்ளன் தாமோதரத்தின் வீட்டு மாடியில் சுந்தரம்பிள்ளை உடைத்த 'பல்பி'லிருந்து, வந்த விஷப் புகையினால் மயங்கிக் கிடப்பான் என்பதை அவர்கள் எப்படி அறிவார்கள்!

பஞ்சநதம் மாடி ஏறிக் குதித்து, வெளியே வந்து, வெளித் தாழ்ப்பாளைத் திறந்து விட்டான். பிறகு இரு ஸ்திரீகளும பின் தொடர வந்து கொண்டிருந்தான். அமளியெல்லாம் அடங்கி மறுபடி ரஸ்தாவில் நிசப்தம் நிலவியது. இன்னம் இரண்டு மணி நேரத்தில் பொழுது விடியும் என்பதற்கு அறிகுறிகளாகச் சிலுசிலுத்த காற்று அடித்தது.

"ஒரு மோட்டார் வண்டி... ஏதேனும் ஒரு வண்டி... நமக்குக் கிடைத்தால் போதும்..." என்று திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டே வந்தான் பஞ்சநதம். நாலைந்து தெருக்கள் தாண்டி விட்டார்கள். தெரு மூலைகளில் சாதாரணமாகக் காணப்படும் ரிக்ஷாக்கள்கூடக் காணப் படவில்லை. ஒரு வேளை "திருடன்!" என்ற கூக்குரலினால், உறங்கும் ரிக்ஷாக்காரர்கள் கூட ஓடி ஒளிந்து கொண்டு விட்டார்கள் போலும்!

"உங்களை எவ்வளவு தூரம் கால் நடையாக நான் நடத்திச் செல்வது!... பாவம், ஏற்கனவே உங்களுக்கு மிகவும் சங்கடம்!" என்றான் பஞ்சநதம்.



"மறுபடி என் அண்ணன் போல் வேஷம் போட்ட ஆசாமியின் மோட்டார் நமக்கு வேண்டாம்... அதைப் பார்த்துக் கொள்ளுங்கள்!" என்றாள் இந்திரா.

பஞ்சநதம் மெல்லச் சிரித்துக் கொண்டான். "உங்கள் நாராயணன் இந்தச் சமயம் இங்கே வந்துவிட்டால், எனக்குப் பெரிய பொறுப்பு நீங்கின மாதிரி இருக்கும்... அவர் எங்கே உங்களைத் தேடிக்கொண்டு திரிகிறாரோ!" என்றான்.

இந்திராவின் முகத்தைப் பஞ்சநதம் வேண்டும் என்றே பார்க்கவில்லை. அவள், "அவருக்கு என்ன அபாயமோ! எனக்காக உழைக்கின்றார் என்று யார் அவரை அடைத்து விட்டிருக்கிறார்களோ! அல்லது துன்புறுத்துகிறார்களோ!" என்றாள்.

"அப்படி ஒன்றும் இராது! நான் அவருக்கு ஒரு உதவி கூடச் செய்தேன். உன் சித்தப்பாவிடமிருந்து காணாமல் போன தோல் பை கடைசியாக இருந்த இடம் எனக்கு அகஸ்மாத்தாகத் தெரிய வந்தது. அடையாளம் சொல்லி அவரை அங்கே அனுப்பினேன்... அதைக் கொண்டு வந்தார் அல்லவா?" என்று கேட்டான் அவன்.

"கொண்டு வந்தார்; ஆனால் பலன்தான் பூஜ்யம்..."

இந்திரா முடிக்கவில்லை; மூவரும் சட்டென்று வேறொன்றைக் கவனித்தார்கள். அடுத்த தெருவில் ஒரு மோட்டார் வரும் சப்தம் கேட்டது. யாராக இருந்தாலும் அதைநிறுத்தி ஏறிக்கொள்வதென்று பஞ்சநதம் துடித்தான். சில விநாடிகளுக்குள் அவர்கள் எதிர்பார்த்தபடியே மோட்டார் எதிர்ப்பட்டு வந்துகொண்டிருந்தது. சைகை காட்டிப் பஞ்சநதம் நிறுத்தினான்; காரினுள் இருந்த இருட்டில், ஓட்டி வருபவர் யார் என்று அவர்களால் கவனிக்க முடியவில்லை. "ஐயா! எங்கே போகிறீங்க?" என்று வினவினான் பஞ்சநதம்.

"உனக்கு எங்கே போகணும்?" கரகரத்த குரலில் விசாரணை வந்தது.

''தேனாம்பேட்டை: இரண்டு பெண் பிள்ளைகள் இருக்கிறாங்க... கொஞ்சம் உதவி செய்தால்—''

''பின் கதவைத் திறந்து இரண்டு பேரையும் ஏறிக் கொள்ளச் சொல்!''

சற்று ஒதுப்புறமாக நின்ற இந்திராவும் சுந்தரியும் இப்படி ஒரு சௌகரியம் கிடைத்ததே என்று பரபரப்புடன் வந்தார்கள். வண்டிக்குள் அமர்ந்து கொண்டார்கள். பின் கதவைச் சாத்தி விட்டுப் பஞ்சநதம் டிரைவர் சீட்டுக்கு அருகில் உட்கார விரும்பி, முன் கதவைத் திறந்தான்.

''ஏன் ஐயா! என்ன உனக்கு?'' என்று கேட்டான் மோட்டார் ஓட்டி. அதேசமயம் மோட்டார் 'திடுக்'கென்று கிளம்பியது; அந்த வேகத்தில், பஞ்சநதம் பின்னால் ஆறு அடி அப்பால் போய் விழுந்தான். ''ஹஹ்ஹஹ்ஹா!'' என்ற சிரிப்பின் ஒலி, இரு ஸ்திரீகள் வயிற்றிலும் நெருப்பை வளர்த்தது. ஒரே கணத்தில் அவர்கள் தங்கள் பெரும் தவறை உணர்ந்து கொண்டார்கள். சுந்தரம் பிள்ளை தமது குரலை இதுவரை மாற்றிப் பேசியிருக்கிறார். இப்போது அவரே வண்டியை ஓட்டிச் செல்கிறார் என்று அறிந்ததும் தலை சுற்ற ஆசனத்தில் சாய்ந்து விட்டார்கள்.

''ஏதேனும் கலாட்டா செய்தீர்களோ, வண்டியை மரத்தில் மோதி விடுவேன்; அல்லது குட்டை குளத்தில் இறக்கி விடுவேன்... சொன்னபடி கேட்டு வாயைத் திறக்காமல் வாருங்கள்! ஒன்றும் ஆபத்தில்லை!'' என்று எச்சரித்தார் சுந்தரம் பிள்ளை. 'தம்பி'யைத் தள்ளிய சில நிமிஷங்களுக்குள் அவருக்கு இத்தனை பெரிய அதிர்ஷ்டம் வரும் என்று அவர் எதிர்பார்க்கவில்லை. அதுவும் ஒரே கல்லில் இரண்டு மாங்காய்; பழிக்குப் பழி வாங்க துரோகி சுந்தரி சிக்கினாள்; உடன் அழைத்து ஓட இந்திராவும் கிடைத்தாள். ஹஹ் ஹஹ் ஹா!... போகும்போதே அடுத்த நாடகத்துக்குப் 'பிளான்'கள் போட்டுக் கொண்டார்.



அரை மணிக்குப் பிறகு அந்த நாடகத்தையும் நடத்தினார். அடையாறு பங்களாவில் அந்தரங்கமான அறையின் கதவைத் தாளிட்டுக் கொண்டு நின்றார். எதிரே சுந்தரியும் இந்திராவும்.

அவர் பேச்செல்லாம் சுந்தரியுடன்தான்; நாளை இந்திரா சுந்தரிபோல் நடந்து கொள்ள நினைத்தாலும், ஒரு எச்சரிக்கையாக இருக்கட்டும் என்ற எண்ணமும் அவருக்கு இருக்கலாம்...

சுவரில் இருந்த கண்ணாடி அலமாரி திறந்திருந்தது. அதனுள் அநேக மருந்து சீசாக்கள் இருந்தன. அவைகளிலிருந்து ஒன்றைப் பார்த்துப் பொறுக்கி எடுத்தார் பிள்ளை. ''கையில் பிடி இதை!'' என்று சுந்தரியிடம் அதிகாரமாகக் கொடுத்துவிட்டு, எதிரில் நின்று கொண்டார்.

''சுந்தரி! உன்னை நான் குப்பைத் தொட்டியிலிருந்து பொறுக்கினேனா? நினைத்துப் பார்!'' என்று கேட்டார்.

''அது உங்கள் அபிப்பிராயமாக இருக்கலாம்! உங்கள் பேச்சைக் கேட்டது முதல் நான் சாக்கடையில் விழுந்து விட்டதாக நினைத்துக் கொண்டிருக்கிறேன்'' என்றாள் சுந்தரி.

''அல்லது, பாழுங்கிணறு!... ஹஹ்ஹா!...முன்னாடியே அதில் நான் உன்னைத் தள்ளத் தவறி விட்டேன்!... வருத்தப் படாதே. இன்னும் வேறு வழிகள் இருக்கின்றன. உன்னை நான் கைவிடவில்லை...''

''உன் கையில் அகப்படுவதைவிட உயிரை விடவே துணிந்து விட்டேன்!'' என்றாள் சுந்தரி வெகு மிடுக்காக.

''அதற்குத்தான் நான் உதவி செய்யப் போகிறேனே. எனக்குத் துரோகம் செய்தவர்களிடம் நான் கருணையாகவே நடந்து கொள்வேன் என்பதற்கு வேறு அத்தாட்சி வேண்டுமா, சுந்தரி!... இப்போ ஒரு பரீட்சை! உனக்குத்தான் அந்தப் பரீட்சை! இரண்டு கேள்விகள் கொடுப்பேன். இரண்டில் எதற்கு விடை சொன்னாலும் நூறு மார்க்...''

''உனக்குப் பயித்தியம் பிடித்திருக்கிறது! இதென்ன விளையாட்டு!'' என்று கத்தினாள் சுந்தரி.

இந்திராவுக்குப் பயத்திலே வாயடைத்துப் போயிற்று. இந்தக் கிராதகன் சுந்தரியை என்ன செய்யப் போகிறான் என்று அவளால் ஊகிக்க முடியவில்லை, அதற்கு அடுத்த படி தனக்கு என்ன அபாயமோ என்று எண்ணி அஞ்சினாள்! நடுத்தெருவில் விழுந்து கிடக்கும் பஞ்சநதத்தையும் பற்றி அவள் எண்ணம் சுழன்று வந்தது.

''சுந்தரி! கூச்சல் போடுவதால் பயன் இல்லை. எனக்குத் துரோகம் செய்தவர்கள் வாழ முடியாது! வாழக் கூடாது. உன் கையில் நான் கொடுத்திருப்பது விஷம்; கடும் விஷம்; உனக்காகவே 'பெஷ'லாக நான் சேகரித்து வைத்திருக்கிறேன். தேன்மாதிரி தித்திப்பாக இருக்கும். ஒரு முழுங்கு; அப்படியே மயங்கிவிடலாம். எவ்விதச் சங்கடமும் இல்லை...''

''சீ! நீ மனிதனா?''

சுந்தரம் பிள்ளை பளிச்சென்று ஒருசிறு கத்தியை உருவினார். ''இல்லை; உனக்குச் சம்மதம் இல்லை என்றாலோ, நான் இந்தக் கத்தியை உபயோகிக்க வேண்டியிருக்கும். எப்படியோ ஐந்து நிமிஷத்தில் நீ தீர்ந்தாக வேண்டும். சீக்கிரம்! ஏதோ ஒன்றைத் தீர்மானம் செய்!''

''போ மிருகமே! இரண்டும் நடக்காது!''

சுந்தரம் பிள்ளை அவளை நெருங்கினார். கத்தியை ஆகாயத்தில் தூக்கிப் பிடித்தார். ''சீக்கிரம்! உம்ம்... குடித்து விடு! சொன்னதைக் கேள்! என் கை வீணாகக் கறையாக வேண்டாம்!''

அதற்குப் பின் அந்தப் பயங்கர நாடகத்தின் விறுவிறுப்பு அதிகமாயிற்று. அறையில் இருவரும் சுற்றிச் சுற்றி வந்தார்கள். இந்திராவுக்குக் குறுக்கே சென்று தடுக்க வேண்டும் என்ற விருப்பம்தான். ஆனால் அவள் அங்கங்கள் எல்லாம் செயலற்றுக் கிடந்தன. தன்



கண்ணெதிரில் ஒரு கொலை நடப்பதைக் காணப் போகிறோம் என்ற நினைவு தலையைச் சுற்ற வைத்தது; மயக்கம் போட்டு விழும் நிலைக்கு அவள் வந்து விட்டாள். ஒரு மூலையில், ஒண்டிய பதுமைபோல் நின்றாள்.

சொன்னதைச் சொன்னதைச் சொல்லிக் கொண்டு சுந்தரம் பிள்ளை துரத்தினார். அவர் பிடியில் அகப்படாமல் சுந்தரி ஓடினாள். எத்தனை தரம் அப்படி நடந்ததோ இந்திரா அறியாள், திடீர் என்று சுந்தரி பாய்ந்து, சுந்தரம் பிள்ளையின் மூக்குக் கண்ணாடியைப் பற்றி இழுத்துக் கீழே வீசி அறைந்து உடைத்து விட்டாள். என்ன தைரியம் அவளுக்கு!

சுந்தரம் பிள்ளை கத்தியை ஓங்கிக் குத்தியே இருப்பார். அவர் வழியிலிருந்து தப்பி, மற்றொரு பாய்ச்சலில் சுந்தரி விளக்கை அணைத்து விட்டாள். 'தபதப'வென்று இருவரும் இருட்டில் ஓடும் சப்தம் வந்து இந்திராவின் காதில் மோதியது.

ஒரு வேளை சுந்தரம் பிள்ளை இருட்டில் தன்னையே குத்தி விடலாம் என்றுகூட இந்திரா எதிர்பார்த்தாள். அப்படி ஒன்றும் நடக்கவில்லை. கண்களை இறுக மூடிக் கொண்டு விட்டவள் திறந்தபோது, விளக்கு எரிந்து கொண்டிருந்தது. அவர்கள் இருவரையுமே மறுபடி கண்டாள்.

ஓடினதில் இருவருக்கும் மேல் மூச்சு கீழ் மூச்சு வாங்கியது. இருவருமே பேச முடியாமல் திணறினார்கள். கீழே கண்ணாடித் தூள்கள் சிதறிக் கிடந்தன.

''உன்னை இன்றுவிட மாட்டேன்! நீ எங்கிருந்தாலும் குத்திவிடுவேன்... இந்த அறையிலிருந்து உன் பிணம்தான் வெளியே போகும்!'' என்று கர்ஜித்தார் பிள்ளை. 'ஸ்விட்சை' அவர்தான் போட்டிருந்தார்.

சுந்தரியும் திணறினாள். அவளால் நிற்கவும் முடியவில்லை. கால்கள் துவண்டன; தலை ஆடியது; உடலே தொய்ந்தது. ''பழிகாரா! உன் கையோ உன் கத்தியோ

என்மேல் படவேண்டாம்! நானே இந்த விஷத்தைக் குடித்து விடுகிறேன். குடித்து, மாய்ந்து பிசாசாக உன்னை வந்து வதைக்கிறேன்!'' என்று கத்திவிட்டு, சீசாவின் 'கார்க்'கைத் திறந்து மடமடவென்று குடித்தாள்.

அந்தக் காட்சியைக் கண்டு இந்திராவின் கண் பார்வை மங்கியது. சுந்தரம் பிள்ளையின் கொடூரமான இரக்கமற்ற முகத்திலே ஒரு ராட்சசப் புன்னகையைக் கண்டாள். ஒரு ஆத்மாவைக் கொல்வதில் ஏற்பட்ட 'உவகை'யையும் அதில் கண்டாள். மற்றோர்புறம் விஷம் அருந்திய சுந்தரி தள்ளாடிக் கொண்டிருந்தாள். மெள்ள மெள்ள அவள் கீழே சாய்ந்து கொண்டும் இருந்தாள்.

அதற்குப்பின் அங்கே நடந்தது எதுவும் அவளுக்குத் தெரியாது!

சிறிது நேரம் சுந்தரம் பிள்ளை அங்கேயே நின்றபடி கவனித்தார். அப்போது இந்திராவின் நினைப்பே அவருக்கு இருந்திருக்கும் என்று சொல்ல முடியாது. எண்ணங்கள் பாய்ந்து பாய்ந்து ஓடிக்கொண்டிருந்தன. அவருடைய மூக்குக் கண்ணாடி உடைந்ததில் பெரிய வருத்தம். அதை அவர் இரவு வேளையில் நடமாடுவதற்குப் பெரிதும் நம்பியிருந்தார். இரவு வேளையில் கண்ணாடி அவருக்கு மிகவும் தேவை என்பதை அறிந்தே சுந்தரி அதை உடைத்து விட்டாள்! இன்னொரு கண்ணாடி உண்டு. ஆனால், அது அவர் பெரிய பங்களாவில் இருந்தது. கண்ணாடியில்லாமல் மோட்டாரை ஓட்டிக் கொண்டு அங்கே போய்ச் சேருவது சங்கடந்தான்! இது அவர் சற்றும் எதிர்பாராத சம்பவம்...

உள்ளே கதகதப்பு அதிகமாக இருந்தது; அறைக் கதவைத் திறந்து வெளியே வந்து மறுபடி இழுத்துச் சாத்தினார். யோசனை செய்ய வேண்டும்; தனியே



நிதானமாக உட்கார்ந்து யோசனை செய்யவேண்டும்... அரைமணி அவகாசம் தேவை; அதற்கு மேல் வேண்டாம்...

அறைக்கு வெளியே வந்தவருக்குத் 'திக்'கென்றது. உடல் வெலவெலத்தது போன்ற உணர்ச்சி உண்டாயிற்று. வெகு நிதானமாக அவர் எதிரே ஹாலில் சந்தானம் வந்து கொண்டிருந்தான்!

# சில சிக்கல்கள் விலகுகின்றன

தேனாம்பேட்டை பங்களாவில் திலகவதியும் சரளாவும், கணேசனும் சஞ்சீவியும் திடுக்கிட்டுப் போனார்கள். அண்ணாமலை சிலை போல் நின்றான். மாடி அறையிலிருந்து அந்தச் சமயத்தில் இடிபோன்ற சப்தம் வரும் என்று அவர்கள் எதிர்பார்க்கவில்லை.

சந்துரு ஒருவன் மட்டுமே திடமாக உட்கார்ந்தபடி புன்னகை செய்தான். ''ஒன்றும் அலட்டிக்கொள்ளாதீர்கள்! எல்லாம் ஒழுங்காகவே நடந்து கொண்டிருக்கின்றன என்னும் போது நாம் எதற்காகப் பயப்பட வேண்டும்!'' என்று கேட்டான். பிறகு திலகவதியைப் பார்த்து, 'நாம் இப்போதே மேலே போகிறோம். நாம் கேட்ட சப்தம் உங்கள் வீட்டு இரும்புப் பெட்டியின் கதவு பலமாகச் சாத்திக் கொண்ட ஓசைதான்... வாருங்கள் போகலாம்!'' என்று எழுந்தான். திலகவதி பதில் சொல்லவில்லை; கணேசன் வேறு ஏதோ ஒரு சிந்தனையில் ஆழ்ந்த மாதிரி இருந்தது.

சந்துரு முன்னே செல்ல, சஞ்சீவிக்கும் கணேசனுக்கும் இடையில் இரு ஸ்திரீகளும் மாடி ஏறத்தொடங்கினார்கள். ஏறும்போதே சரளாவைச் சந்துரு ஜாடையாகப் பார்த்து, 'இங்கேயே இருந்து கவனித்துக் கொள்!' என்கிற மாதிரி சமிக்ஞை செய்து விட்டான். அவளும் அதைப் புரிந்து கொண்டு நாசுக்காகப் பின் தங்கினாள். அண்ணாமலை

யைப் பற்றி இன்னும் சந்துரு ஒரு தீர்மானமும் செய்ய வில்லை என்பதை அவள் ஊகித்தாள்; அவள் பின் தங்கி யிருப்பது தனக்குச் சங்கடம் என்று அண்ணாமலை நினைப்பதையும் அவன் முகபாவம் காண்பித்தது.

மாடியில் செங்கல்வராய பிள்ளையின் அறையில் மின்சார விளக்கு எரிந்து கொண்டிருந்தது. சந்துரு எல்லோரையும் உள்ளே அழைத்துச் சென்றான். சந்துரு ஏற்கனவே ஒரு முறை இந்த அறைக்கு வந்திருக்கிறான். அப்போது செங்கல்வராய பிள்ளை அங்கே இருந்தார்; கனத்த மெத்தை போட்ட அவருடைய கட்டில் முன் இருந்த இடத்திலேயே கிடந்தது. விசாலமான அறை; பெரிய ஜன்னல்கள்; பிரம்மாண்டமான இரும்புப் பெட்டி, ஆறடி உயரத்திற்குச் சுவரோடு சுவராகப் படுக்கப் பெற்று நின்றது. ஒரு மூலையில் சிறியதொரு இரும்புப் பெட்டியும் தனியே தன் மரப்பீடத்தின் மேல் வீற்றிருந்தது.

நேரே பெரிய இரும்புப் பெட்டியின் அருகில் போய் நின்று கொண்டான் சந்துரு, எல்லோரையும் பொதுவாய்ப் பார்த்து, ''இங்கிருந்துதான் சப்தம் வந்ததென்று நான் நினைக்கிறேன்...சரிதானே?'' என்று கேட்டான்.

''நானும் அப்படித்தான் நினைக்கிறேன்!'' என்றான் கணேசன். சந்துருவின் சாமர்த்தியமான பேச்சிற்கு அவன் அடிமையாகியிருந்தான்.

''எனக்கு ஒன்றுமே சொல்லத் தெரியவில்லை!'' என்று திலகவதி விட்டுக் கொடுக்காமல் பதில் சொன்னாள்.

தலையை அசைத்தான் சந்துரு. ''தயவு செய்து இதன் சாவியைக் கொண்டு வர முடியுமா?'' என்று திலகவதியைக் குறிப்பாகப் பார்த்துக் கேட்டான்.

''சாவியா! நான் என்ன செய்வேன்! அது என் கணவர் விஷயம். நான் தலையிடுவதில்லை! சாவியைக் கண்ணால் கண்டதும் இல்லை!'' என்று பளிச்சென்று, சிறிது மிடுக்காகவே பதில் கொடுத்தாள் திலகவதி.



சந்துரு சிறிதும் முகத்தில் மாறுதல் காண்பிக்க வில்லை. சஞ்சீவியின் பக்கம் திரும்பி, ''சரி அப்படியே இருக்கட்டும். இதோ இந்த இரும்புப் பெட்டியை நான் அன்றே கவனித்தேன். இது போன்ற ஒரு பெட்டியை நான் சிங்கப்பூரிலும் பார்த்திருக்கிறேன். அபூர்வமான பெட்டி. திருடர்கள் கொள்ளை அடிக்க முடியாதபடி ஒரு 'வேலை' இதில் செய்திருக்கிறார்கள். கதவைத் திறந்தால் உள்ளே இரண்டு அறைகள் இருக்கும். முதல் அறைக்குள் நின்று கொண்டு தான் இரண்டாவது அறையிலிருந்து வைக்கவோ எடுக்கவோ வேண்டும். விஷயம் தெரியாத அன்னியர், முதல் அறையில் கால் வைத்தால் கதவு தானாகச் சாத்திக் கொள்ளும். அதற்கு விசை இருக்கிறது. அப்படிச் சாத்திக் கொள்ளும்போது சப்தம் அதிகமாக இருக்கும். இதை எனக்குச் சிங்கப்பூரில் ஒரு சீன தவுக்கே (லட்சாதிபதி) காண்பித்து, 'திருடன் வந்து இரும்புப் பெட்டியைத் திறந்து விட்டாலும் நமக்குக் கவலை இல்லை. கட்டாயம் உள்ளே கால் வைத்துத்தான் ஆக வேண்டும். அப்படி அவன் வைத்ததும் கதவு சாத்திக்கொள்ள, சிக்கிக்கொள் வான். கதவு சாத்திக்கொள்ளும் சத்தத்தில் இரண்டு வீட்டு ஜனங்கள் விழித்துக் கொள்வார்கள்!' என்று சொல்லியிருக் கிறார். ஒரு வேளை அக்கம் பக்கத்தில் யாரும் இல்லாத போது திருடன் வந்தால், நிச்சயம் உள்ளே செத்துவிடு வான்! அது அவன் விதி என்று சொல்ல வேண்டியது தான்!'' என்றான்.

''ஸார்! நான் இது மாதிரி கேள்விப் பட்டதே இல்லையே!'' என்றான் சஞ்சீவி.

''நமது கணேசனுக்கு நிச்சயம் தெரியும். திலகவதி அம்மாள் ஒப்புக்கொள்வார்களோ என்னவோ; அவருக்கும் தெரியும் என்று நினைக்கிறேன். செங்கல்வராய பிள்ளை போன்ற தனவந்தர் ஒருவர் இங்கே வரும்போது—வந்து ஏராளமான பணத்தைச் சேர்த்து வைத்துக் கொள்ள வேண்டும் என்று ஆசைப்படும்போது—இது மாதிரி ஒரு

பெட்டி கொண்டு வராமல் இருப்பாரா? சொல்லுங்கள், மிஸ்டர் கணேசன்!''

கணேசன் கண்களைத் தாழ்த்திக் கொண்டான். ''நீங்கள் பெரிய மேதாவி என்பதில் சந்தேகம் இல்லை. உங்களிடம் எதையும் ஒளிப்பதில் பிரயோசனமும் இல்லை.. எங்கள் சித்தப்பா இந்தப் பெட்டியைக் கொண்டு வந்த காரணமே நிரம்ப சம்பாதித்து, சேர்த்து வைத்துக் கொள்ள வேண்டும் என்ற ஆசைதான்!''

''ரைட்! புரசைவாக்கத்தில் ஒரு சிறிய கம்பெனியை வைத்துக்கொண்டு எப்படி இத்தனை பெரிய பெட்டியை நிரப்பலாம் என்று அவர் ஆசைப்பட்டார் என்பது நாம் பின்னால் சாவகாசமாகக் கேட்டுக் கொள்ள வேண்டிய கேள்வி! இப்போதைக்கு அதன் அருகே நாம் போக வேண்டாம்... திலகவதி அம்மாள் அவர்களே! இதன் சாவி உங்களிடம் இல்லையென்று சொல்லிவிட்டீர்களே, அது உண்மைதானே?''

''நான் எதற்காகப் பொய் பேச வேண்டும்!'' என்றாள் அவள்.

''பொய் சொல்வது ஒரு குற்றம்தான். அதைவிடப் பெரிய குற்றம், அந்தப் பொய்யினால் ஒரு ஜீவன் மரணம் அடைகிறது என்பது! கிட்டத்தட்ட ஒரு கொலைக்கு உதவி செய்த மாதிரியே ஆகும் உங்கள் பொய். ஏனென்றால், நான் எதிர்பார்த்தபடி, தவசுப்பிள்ளை இப்போது இந்தப் பெட்டிக்குள் இருக்கிறான். அவனுக்கு இதன் சாவிதான் அகப்பட்டது; ஆனால் ரகசியம் தெரியவில்லை, திடும் பிரவேசமாக நான் வந்து மதுரநாயகமும், தாமோதரமும் சந்தானமும் சுந்தரம் பிள்ளையும்—எல்லாரும் மாட்டிக் கொள்ள இருக்கிறார்களென்று சொன்னேன் அல்லவா? அதில் ஒரு பெரிய தத்துவம் உண்டு. என் பேச்சைக் கேட்ட பின் இங்கே மதுரநாயகம் இருந்தால், அவர் ஓடியிருப்பார்; சந்தானம் இருந்தால், மேற்கொண்டு நிற்க மாட்டான். தவசுப்பிள்ளை கடைசி முயற்சியாக அகப்பட்ட பணத்



துடன் தப்பலாம் என்ற பிரயத்தனம் செய்வான். அதையெல்லாம் நான் எதிர்பார்த்தேன்; அப்படிப் பேசினேன். இப்போது தவசுப்பிள்ளை இதனுள் அகப்பட்டுக் கொண்டிருக்கிறான்—''

சஞ்சீவி முன்னால் வந்து கதவை இழுத்துப் பார்த்தான். ''கெட்டியாக இருக்கிறது!'' என்றான்.

''திலகவதி அம்மாளிடம் சாவியும் இருந்து, அவர் பதினைந்து இருபது நிமிஷங்களுக்குள் அதைக் கொடுக்கா விட்டால், இந்தத் தவசுப்பிள்ளை கடைசி மூச்சை இதனுள் விடப்போகிறார்!'' என்றான் சந்துரு. முகத்தில் புன்னகை மாறவே இல்லை.

''என்னிடத்தில் அது இல்லை என்கிறேனே!''

''இருந்தால், கொடுக்கும்படி சொன்னேன்...ஒரு உயிர் உள்ளே பிரிந்து கொண்டிருக்கிறது என்பதை நாம் மறக்கக் கூடாது. எத்தனை துஷ்டனானாலும், ஒரு மனிதன் இங்கே துடிக்கிறான். இந்தப் பெட்டியும் இரண்டு சாவிகளுக்குத்தான் திறக்கும்! ஒன்று அவன் கையில்; மற்றொன்று...''

திலகவதி கையைப் பிசைந்து கொண்டாள்! கணேசனைப் பரிதாபமாகப் பார்த்தாள்; பிறகு சந்துருவைக் கெஞ்சுகிற தோரணையில் நோக்கினாள். இரு முகங்களிலும் சற்றேனும் இரக்கத்தை அவள் காண வில்லை. ''என்னிடம் நிச்சயமாக இல்லை!'' என்று திருப்பித் திருப்பிச் சொல்லிக் கொண்டு நின்றாள்.

சந்துரு அசைந்து கொடுக்கவில்லை. 'இத்தனை கல் நெஞ்சுடன் இருக்கிறாரே சந்துரு!' என்று சஞ்சீவிகூட ஒரு க்ஷணம் நினைத்தான்.

''சாவி நிச்சயமாக இந்த வீட்டில் உங்கள் இருவரில் ஒருவரிடம் இருக்க வேண்டும். கொஞ்சம் பொறுங்கள்; செங்கல்வராய பிள்ளையை யாரோ இருவர் வந்து கடத்திச் சென்றார்கள் என்று கணேசன் சொல்கிறார் என்றால், காரணம் அவர்களுக்கு இந்த இரும்புப் பெட்டியின் சாவி கிடைக்காததுதான்! அந்தச் சாவி அகப்பட்டிருந்தால்,

அவர்கள் நிமிஷத்தில் இந்தப் பெட்டியைக் குடைந்திருப்பார்கள். சாவிக்காகத்தான் பெரும் போராட்டங்கள் நடந்திருக்கின்றன. ஓட்டம் பாட்டம் எல்லாம் நடந்தன. தோல் பையினுள் இதர விஷயங்களுடன் சாவிகளும் இருந்தன.''

''எனக்கு அது தெரியாது'' என்றாள் திலகவதி.

சந்துரு அந்தப் பேச்சைக் காதில் போட்டுக்கொள்ளவே இல்லை. ''இது போன்ற சந்தர்ப்பங்களில் நான் யார் பேச்சையும் நம்புவதில்லை. நம்புவதனால் நான்தான் ஏமாந்து போவேன்! நான் நேரில் கண்ட அனுபவங்களைக் கொண்டே ஒரு முடிவு செய்வேன். இந்த இரும்புப் பெட்டியின் சாவிகள் செங்கல்வராயபிள்ளை கையை விட்டுப் போன பிறகுதான் அவர் கவலைப்பட ஆரம்பித்தார். அதாவது, தோல்பை போனதும் கலக்கம் அடைந்தார். வேறு யாரேனும் தம்முடைய சம்பாத்தியத்தைத் தாம் அறியாமல் கொண்டு போய் விடுவார்களோ என்று கண் விழித்தார்! தோட்டத்தைச் சுற்றி வந்தார். அவர் எதையும் சுருட்டிக் கொண்டு ஓடிவிடாதபடி மூன்று கோஷ்டிகள் அவரைக் காபந்து செய்தன. மூவரில் யார் கையில் சாவி அகப்பட்டாலும் இதைக் காலி செய்திருப்பார்கள்... மிஸ்டர் கணேசன்! என்னை மன்னிக்க வேண்டும்! தாங்கள் தானே தோல் பையை லிங்கச் செட்டித் தெரு வீட்டில் கொண்டு போய் வைத்தது?'' என்று கேட்டான். கேள்வி திடீர் என்று எதிர்பாராத விதமாக வந்து விட்டது. திடுக்கிட்டான் கணேசன். பதில் சொல்லாமல், அவன் தலை குனிந்து நின்றான்.

சந்துரு, ''நீங்கள் செய்தது பிசகு என்று நான் சொல்லவில்லை. இந்தப் பையை ஒளிப்பதால், இந்த மூன்று கோஷ்டியினரும் ஒதுங்கி விடுவார்கள். உங்கள் சித்தப்பாவுக்கு நிம்மதி ஏற்படும் என்று நீங்கள் நம்பினீர்கள்... இல்லையா?'' என்று கேட்டான்.



''உங்களுக்கு அது எப்படித் தெரியும்?'' என்று சஞ்சீவி கேட்க விரும்பினான்.

சந்துரு அதை ஊகித்து, தாமோதரம் என்னிடம் முதலில் புகார் செய்தவுடனேயே, இந்தப் பங்களாவில் ஒருவர் தான் பையை ஆரம்பத்தில் ஒளித்திருக்கவேண்டும் என்று நான் தெரிந்து கொண்டு விட்டேன். ஆனால், கொண்டு வைத்தவருக்கு எடுத்து வரவும் சாமர்த்தியம் இருந்தாக வேண்டும்; வேறு ஆளை அமர்த்த வேண்டாம் ஆகையால் தான் தாமோதரத்தை விட்டு அதை எடுத்து வரச்சொன்ன ஆள் இதை வைத்தவர் இல்லை. எப்படியோ இது விஷயம் தெரிந்து கொண்டிருக்கிறவர் என்று நான் ஊகம் செய்தேன். அப்போது அது ஊகம்தான். பையைக் காணோம் என்றவுடனே இந்த வீட்டில் சலசலப்பு ஏற்பட்டு விட்டது. செங்கல்வராய பிள்ளை மனோவியாகூலத்துடன் படுத்தார். மதுரநாயகம் வீட்டை விட்டு நகர மறுத்தார். கணேசன் மட்டும் எதிலும் பட்டுக் கொள்ளாமல் ஒதுங்கினதைக் கண்டதும், இவருக்கும் தோல் பைக்கும் சம்பந்தம் உண்டு என்று ஒரு மாதிரி மனத்தில் நினைத்துவிட்டேன். ஆனால்—'' என்று சற்று நிறுத்தினான் கணேசன் சந்துருவை உற்றுப் பார்த்து, ''எனக்கு உங்களிடமிருந்து எதையும் ஒளிக்க இஷ்டம் இருந்ததில்லை. அந்த நிலையில் விவரமாகச் சொல்லவும் விருப்பம் இல்லை!'' என்றான்.

தலையை ஆட்டினான் சந்துரு. ''சற்று இருங்கள்; கணேசன்! நான் என் வழியில் சொல்லி முடித்துவிடுகிறேன்! பிறகு ஏதேனும் இருந்தால், திருத்திக்கொள்வோம்... செங்கல்வராய பிள்ளையின் அறைக்கு நான் சென்றிருந்த போது என் கையில் ஒரு காகிதச் சுருள் அகப்பட்டது; அப்போதுதான் அது வீசி எறிந்திருக்கப் பட்டிருக்கவேண்டும். 'சந்துரு வந்து கொண்டிருக்கிறான். எதையேனும் சொன்னாயோ, தீர்ந்தாய்! உன் அருகிலேயே இருந்து கவனித்துக் கொண்டிருக்கிறேன்' என்று அவரை அந்தக் கடிதம்

எச்சரிக்கை செய்தது. அதை எழுதியவன் சந்தானம் என்கிற போலி கணேசன் என்று நான் நிச்சயம் செய்துகொண்டு பிறகு சாவகாசமாக யோசித்தேன், கணேசன் ஸ்தானத்தில் சந்தானம் புகுந்து கொள்வதைச் செங்கல்வராய பிள்ளை அறிந்து கொண்டிருக்க வேண்டும். அவர் நிலையில் அதைத் தடுக்க அவரால் ஒன்றும் செய்து கொள்வதற்கில்லை. அவர் பல சிக்கல்களில் மாட்டிக் கொண்டிருந்தார்; இரும்புப் பெட்டியின் சாவிகளும் இதர சில முக்கியமான விஷயங்களும் தோல் பையுடன் போய்விட்டன. ஆனாலும் என்னிடம் தன்னைப் பற்றி அவர் பேசி விடுவாரோ என்ற பயம் சந்தானத்துக்கு உண்டு. கணேசன் தான் பையை வீட்டிலிருந்து அப்புறப்படுத்தியிருக்கிறார் என்பதை அவன் ஊகித்திருக்க வேண்டும்; தவிர, கணேசன் வீடெங்கும் இணைத்திருக்கும் மின்சாரக் கம்பிகள் அவனை மிகுந்த யோசனையில் ஆழ்த்தி விட்டிருக்க வேண்டும்..."

"எனக்கும் அந்தச் சந்தேகம் உண்டு!" என்றான் கணேசன்.

"நல்ல காலமாக, தோல் பை ஒருவர் கையிலும் அகப்படாமல் சிறிது காலம் சுழன்று வந்தது. அது இந்த மூன்று கோஷ்டிக்கும் தலை வேதனை அளித்திருக்கிறது...கடைசியில் நாராயணன் போய் அதைக்கொணர, நான் கவிழ்த்துக் காட்டி, வெறும் காகிதக் குப்பையைக் கொட்டிய பிறகே ஓரளவு நிம்மதி பிறந்தது..."

"சாவிகளின் கதி?" என்று கேட்டான் சஞ்சிவி.

சந்துரு திலகவதியைப் பார்த்து, "இவர் எல்லாரையும் மிஞ்சி ஒரு காரியம் செய்துவிட்டார். திலகவதி சாவியைத் தோல் பை திருட்டுப் போகுமுன்பே எடுத்து விட்டார்!" என்றான்.

"நீங்கள் என்மீது வேண்டுமென்றே குற்றம் சாட்டுகிறீர்கள்!" என்று அரற்றினாள் திலகவதி.



"இல்லை. நிச்சயமாக இல்லை! ஆரம்பத்தில் உங்களைப் பற்றிப் பை விஷயமாகக் கேட்டபோது நீங்கள் என்ன சொன்னீர்கள்? 'திருட்டுப்போனது உண்மை; ஆனால் பண்டம் வந்துவிட்டது' என்றீர்களா இல்லையா?... அப்போது உண்மையே பேசினீர்கள்; இப்போது மறுக்கிறீர்கள். பரவாயில்லை. நாம் பேசிக்கொண்டேயிருக்கிறோம். ஒரு ஜீவன் இரும்புப் பெட்டிக்குள் உள்ளே மூச்சுத் திணறி அணு அணுவாக இறந்து கொண்டிருக்கிறது. நாம் இரண்டு கஜ தூரத்தில் நின்று கொண்டு இந்தப் பாதகச் செயலை அரட்டை அடித்தபடி பார்த்துக் கொண்டிருக்கிறோம்...இது நியாயமா?"

கணேசன் சந்துருவின் பக்கம் வந்தான். "ஸார்! நீங்கள் சொல்லுவது உண்மை. நான்தான் தோல் பையை எடுத்தேன்; அதை அப்புறப்படுத்தினால் கொஞ்சம் நன்மை பிறக்கும் என்று நம்பினேன். நான் எடுத்ததைத் தவசுப் பிள்ளை பார்த்துவிட்டான். அவன் சுந்தரம் பிள்ளையின் கையாள் என்று எனக்கு அப்போது தெரியாது. பையைத் திரும்ப வைத்துவிட்டு, நான் இரண்டாம் முறை முயற்சித்தேன். அப்போது சாவிகள் இருந்தனவா என்று நான் கவனிக்கவில்லை. இருக்கும் என்ற நிச்சயத்துடன் சென்று விட்டேன். லிங்கிச் செட்டித் தெரு வீடு ஏதோ ஒரு வழக்கு காரணமாகக் கோர்ட்டார் வசம் இருக்கிறது. அதனால் வெகு காலமாகப் பூட்டியும் கிடக்கிறது. அதற்கு ரிஸீவராக இருப்பவர் எனக்குத் தெரிந்தவர். அங்கே தைரியமாகக் கொண்டு வைத்தேன். சந்தடிகள் ஓய்ந்த பின்னர் அப்புறப் படுத்தி விடலாம் என்று எண்ணினேன். அதற்குள் எப்படியோ சுந்தரம்பிள்ளையின் ஆள் ஒருவனுக்கு விஷயம் எட்டி, அவன் தாமோதரத்தை உபயோகித்துக் கொண்டி ருக்கிறான். அந்த ஆள் எதற்காக தாமோதரத்திடம் அந்த வேலையை ஒப்புவித்தான் என்பதை என்னால் ஊகிக்க முடியவில்லை. எந்த காரியம் தவறோ அதைச் செய்திருக் கிறான் அவன். இங்கே மதுரநாயகத்துக்கும் என்மீது

சந்தேகம். அவருடைய ஆட்களை அனுப்பி, சுந்தரம் பிள்ளையின் ஆளை மடக்க ஏற்பாடு செய்திருக்கிறார், அவரும் தோல்வி அடைந்திருக்கிறார்...''

''ஆனால் பிசகு ஒன்றும் நேர்ந்து விடவில்லை, கணேசன்! பையில் சாவிகள் இல்லை. ஒரு சாவியைத் தவசு பிள்ளை கைப்பற்றி விட்டான்; மற்றொன்றைத் திலகவதி அம்மாள் எடுத்திருக்கிறார்கள். ஒன்றையும் மறுக்காதீர்கள் அம்மா! நீங்களும் நல்ல எண்ணத்துடன்தான் செய்திருக்கிறீர்கள்! உங்களுக்கும் ஏமாற்றம் இருந்திருக்கிறது. இரண்டு சாவிகளில் ஒன்றைக் கணேசன் அமுத்தி விட்டதாகத் தவறாகச் சந்தேகித்து விட்டீர்கள்... அது போகட்டும் அம்மணி! ஒரு ஆள் முக்கால்வாசி செத்துவிட்டானே!'' என்றான் சந்துரு.

''என்னிடம் சாவி கிடையாது! இருந்தால் வஞ்சனையா?'' என்று கேட்டாள் திலகவதி.

''சரி...இன்னம் கொஞ்சம் அவகாசம் இருக்கிறது... மதுரநாயகம் என்பவருக்கு ஏற்கெனவே ஒரு மனைவி இருக்கிறாள் என்று நான் கேள்விப் படுகிறேனே, உண்மையா?'' என்று வினவினான் சந்துரு.

''எனக்குத் தெரியாது!''

''அந்த அம்மாள் இந்த ஊரில்தான் இருக்கிறாளா?''

''அவர் குடும்ப சமாசாரம் எதுவுமே எனக்குத் தெரியாது என்கிறேனே!''

''செங்கல்வராய பிள்ளை அவருக்கு ஒரு பச்சை மோதிரம் இனாமாகக் கொடுத்திருக்கிறார்...அநேகமாகச் நல்ல பண்டங்களை, ஆபரணங்களை மாப்பிள்ளைகளுக்கு, கொடுப்பார்கள்...''

கணேசன் மறுபடி குறுக்கிட்டான். ''சந்துரு! மதுரநாயகம் என் சிறிய தகப்பனாரின் நண்பர் மட்டும் இல்லை; என் சிறிய தகப்பனாருடன் அவர் கூட்டாக மலாயாவில் வியாபாரம் செய்தார்; ஓர் அசந்தர்ப்பம் காரணமாக அவர் தண்டனை அடைந்தார். வெகு காலமாகத் தலைகாட்ட



வெட்கப்பட்டுக் கொண்டிருந்தவிட்டு, இந்தியாவுக்கு வந்து இங்கேயும் பெங்களூரிலுமாக இருக்கிறார்'' என்றான்.

''அப்படிச் சொல்லுங்கள்! திலகவதி அம்மாள் தமது கணவரை உத்தேசித்து மதுரநாயகத்தின் பூர்வோத்தரங்களை ரகசியமாக வைத்திருப்பதை நான் பாராட்டுகிறேன். அவர்மேல் ஒரு குற்றமும் இல்லை...மதுரநாயகம் உறவினர் ...உறவினர்கள் ஒரு கழுத்தறுப்பு. அதுவும் தண்டனை பெற்று வந்த உறவினர் ரொம்பக் கழுத்தறுப்பு. திலகவதி அம்மாளுக்கு ஒரு புறம் தந்தை; ஒருபுறம் மதுரநாயகம். மதுரநாயகத்துக்கு வீட்டில் இடம் கொடுக்கும்போது, பஞ்சநதத்தை மட்டும் விரட்டுவானேன் என்று அவர் கோபம் கொள்வதும் நியாயம்! தவிர, மதுரநாயகம் ஓர் அதிகார தோரணையில் உட்கார்ந்துகொண்டு தொல்லை கொடுக்கிறார்.. அம்மணி! அம்மணி! உள்ளே இருக்கும் ஆசாமிக்கு இன்னம் இரண்டே நிமிஷம் ஆயுள். சாவி இருந்தால் கொடுத்து விடுங்கள்!''

திலகவதி அசைந்து கொடுக்கவில்லை. உதட்டைக் கடித்துக்கொண்டு சந்துருவைக் கோபமாகப் பார்த்தாள்.

சந்துரு தொடர்ந்து பேசிக் கொண்டிருந்தான்: ''சுந்தரம் பிள்ளையின் ஆள் தவசுப்பிள்ளை. அவனுக்குத் தெரியாமல் இந்தப் பங்களாவில் எதுவும் நடக்க முடியாது என்று சாதாரணமாக நினைக்கலாம், ஒன்றே ஒன்று மட்டும் தெரியாமல் நடந்துவிட்டது. அவர் ரயில்வே ஸ்டேஷனுக்கு அனுப்பின ஆள்—செல்வராஜ் என்பது அவன் பெயர் என்று நினைக்கிறேன்—வேறொரு சிநேகம் வைத்துக்கொண்டு விட்டான்! அது அவன்வரையில் தவறாத சிநேகம்; சந்தானம் தான் அந்தச் சிநேகிதன். தோல் பையை விங்கிச் செட்டித் தெரு வீட்டிலிருந்து அப்புறப்படுத்த விரும்பிய செல்வராஜ் சந்தானத்தின் பிடிவாதத்தினால் தாமோதரனை உபயோகப்படுத்திக் கொண்டான்; ஒருமுறை தோல் பையிலிருந்த விஷயங்களைப் பார்த்துக்கொண்டு திருப்பிக்

கொடுத்து விடுவான் என்று செல்வராஜ் எதிர்பார்த்தான்! பையே அவன் கைவிட்டுப் போனது அவனுக்குப் பெரிய ஆபத்து. சுந்தரம் பிள்ளைக்குப் பதில் சொல்ல முடியாதே என்ற திகில் அவனுக்கு வந்துவிட்டது. எப்படியோ திரும்ப அதைப் பெற முயற்சித்து, ஒரு வழியாக அதை மறுபடி கைப்பற்றியும் விட்டான்! நாராயணன் இப்போது குறுக் கிட்டு அதை என்னிடம் கொண்டு வந்து கொடுத்திருக் கிறான். இந்த இடைக் காலத்தில் தாமோதரமே அல்லது வேறு யாரோ அதிலிருந்த தஸ்தாவேஜிகளை அப்புறப் படுத்தி வெற்றுக் காகிதத்தை வைத்திருக்கிறார்கள்! அது தாமோதரமாக இருக்கலாம். ஒருகால் மதுரநாயகத்தின் 'ஏஜெண்ட்'டுகளாக இருக்கலாம்; சங்கரனாக இருக்கலாம். அல்லது நாராயணனாகவேகூட இருக்கலாம்!''

திலகவதி திடுக்கிட்டாள்; ''நாராயணனா?'' என்று கூவினாள்.

''ஏன் இருக்காது? அவன்தான் இந்திராவின் காதலன். இந்திராவின் சொத்துக்களுக்குக் 'கார்டிய'னாகிய செங்கல்வ ராய பிள்ளை, அவளுடைய சொத்துக்களைச் சூறையாடி விட்டார். இப்போது அவளுக்கு மணம் நடக்க இருக்கை யில், பதில் சொல்ல வேண்டிய நிர்ப்பந்தம் அவருக்கு இருக் கிறது. நாராயணன் மாப்பிள்ளையாக வந்தால் பல கேள்வி கள் கேட்பான்... அவன் 'கேட்டும் விட்டான்' என்றுகூட என் ஹேஸ்யம். இல்லாவிட்டால், இவன் பங்களாவில் காலை வைத்தால் வெட்டுவேன் என்கிற பேச்சு ஏன்? அம்மணி, அம்மணி! தவசுப்பிள்ளையின் பிணத்தையாவது வெளியே இழுத்துப் போடுவோம்; சாவியைக் கொடுங்கள்!''

''இருந்தால் கொடுத்து விடுங்களேன்!'' என்றான் சஞ்சீவி.

சந்துரு சிறிது கடுமையாக முகபாவத்தை மாற்றிக் கொண்டான். ''எனக்கு ஒரு சந்தேகம் உண்டு. அதனால்



தான் திலகவதி அம்மாளை நான் இப்படிக் கட்டாயப் படுத்துகிறேன். இரும்புப் பெட்டியை உடைப்பவர்கள் திருடர்களாகவோ, மாஜி—திருடர்களாகவோதான் இருப் பார்கள். தவசுப்பிள்ளையே இதில் புகுந்து கொண்டிருக் கிறான் என்று நான் நினைக்கிறேன்; என் ஊகம் அது. அவன் சாவதில் எனக்கு வருத்தமே இல்லை. ஒருகால் பஞ்சநதம் பிள்ளை வந்திருந்து, நம் பேச்சைக் கேட்டுவிட்டு மகனுக்கு மிஞ்சுகிறது. மிஞ்சட்டுமே என்று அவர் முயற்சி செய்திருந்தாலும் இருக்கலாம். தவசுப்பிள்ளைக்கு நாம் எதிர்பார்க்கும் முடிவு, பஞ்சநதத்துக்கே வந்து கொண்டி ருக்கலாம்; 'திலகவதி அம்மாள் சாவியைக் கொடுக்க வேண்டாம்; அவர் சாவியைப் பஞ்சநதம் திருடாமல் இருக் கிறாரா என்று பார்த்தால் போதும். அப்படி அவர் எடுத் திருந்து, பெட்டிக்குள் சிக்கிக்கொண்டும் இருந்தால் அவரை கடவுள்தான் இனிக் காப்பாற்ற வேண்டும்...!''

திலகவதியின் கண்களில் ஒரு பயங்கர ஒளி தோன்றி யது. இரு கைகளாலும் முகத்தை மூடிக்கொண்டாள். மறுகணம் பைத்தியம் பிடித்தவள் போல் தன் அறையை நோக்கி ஓடினாள்!

''அப்பாடா! ஒரு வழியாக மசிந்தாள். இனி சாவியைக் கொண்டுவந்து விடுவாள்! பஞ்சநதம் என்று நீங்கள் சொன்னது பொய்தானே?'' என்று கேட்டான் சஞ்சீவி.

''இரண்டு பொய் சொல்லியிருக்கிறேன். தவசுப் பிள்ளை என்று நான் சொன்னதும் பொய்தான். பெட்டி யைத் திறக்க வேண்டியதுதான் முக்கியம்!'' என்றான் சந்துரு.

மூவரும் காத்திருந்தார்கள். ஐந்து நிமிஷங்கள் ஆகியும் திலகவதி திரும்பவில்லை. கீழேயிருந்து சரளாவின் குரல் தான் 'க்றீச்' சென்று எழுந்தது. ''ஐயோ! வாருங்கள்!... கொலை! ஓடி வாருங்கள்! கொலை!'' என்ற கூக்குரல் எல்லாரையும் திடுக்கிட வைத்தது.

''கணேசன், சஞ்சீவி! சீக்கிரம் நீங்கள் போய்ப் பாருங்கள்! நான் இங்கேயே இருக்கிறேன். எனக்குக் கொஞ்சம் வேலை இருக்கிறது இங்கே!'' என்று சந்துரு அவர்களை அனுப்பிவிட்டு, சுவர் ஓரமாக ஒதுங்கி நின்றான்...

இரண்டு நிமிஷங்கள் சென்றிருக்கும். ஜன்னல் வழியே அறையினுள் 'தொப்'பென்று ஓர் உருவம் குதித்தது. ஆனால் அங்கே சந்துரு நிற்பதைக் கண்டதும், அது திடுக்கிட்டது. பிறகு வந்த வழியே திரும்பி அதிவேகமாக மறைந்தது...

சுந்தரம் பிள்ளை தம்மை எதிர் நோக்கி வரும் சந்தானத்தை ஒரு கண நேரம் கணேசனாக இருப்பானோ என்று நினைத்தார். கண்ணாடியை இழந்த குறை அவரை மிகவும் பாதித்தது. அருகில் வந்த பிறகுதான் அது வேறு ஆள் என்பது அவருக்கு நிச்சயம் ஆயிற்று.

''யார் நீ?'' என்று கேட்டார்.

சந்தானம் அதற்குப் பதில் சொல்லவில்லை. ''வழியை விடும்! எனக்கு இந்திராவைப் பார்க்க வேண்டும்!'' என்றான்.

''இந்திரா!—வெகு சுவாதீனமாகக் கேட்கிறாயே! நீ அவள் அண்ணன் என்று நான் ஏமாந்து விடுவேன் என்று பார்த்தாயா? அல்லது, அவள் அண்ணனாகவே இருந்தாலும் என்னைத் தாண்டிப் போய்விட முடியுமா!'' என்று சிரித்தார் சுந்தரம் பிள்ளை.

பேசிப் பயன் இல்லை என்ற எண்ணத்துடனோ என்னவோ, சந்தானம் அவரை முட்டித் தள்ளிவிட்டு, அப்பால் செல்ல முயன்றான். மறுகணம் ஒரு கத்தி, அவன் மார்புக்கு நேரே ஓங்கியிருப்பதைக் கண்டு தயங்கினான்.

மின் வேகத்தில் அந்தக் கத்தியைப் பிடுங்கிவிட்டான் சந்தானம், அவன் கையிலே அதன் பிடி அகப்பட்டிருக்குமானால், சுந்தரம் பிள்ளையின் இதயத்தை உடனே ருசி



பார்த்திருக்கும். ஆனால், இருவர் கையிலும் இன்றி அது தரையில் விழுந்தது. குனிந்து பொறுக்குவதற்கு இருவருமே அஞ்சினர்: குனிந்தவனை மற்றவன் தாக்குவது எளிதாயிற்றே!

ஏதோ ஒரு யோசனையில் சந்தானம் சடார் என்று காலினால் கத்தியை உதைத்தான். அது பதினைந்தடி அப்பால் போய்க் கிடந்தது இப்போது; எனினும் கூர்மையான அதன் முனை சந்தானத்தின் பாதத்தை வெட்டி விட்டது. குபுகுபுவென்று ரத்தம் வெளிப்பட்டது...என்ன அசந்தர்ப்பம்! நின்றபடி பாதத்தை வலக்கையில் தூக்கி நிமிர்த்திப் பார்த்தான்...

சுந்தரம் பிள்ளையின் கையில் ஒரு இன்ஜெக்ஷன் ஸிரிஞ்ச் இப்போது இருந்தது. கண் மூடித் திறக்குமுன் ஊசியைச் சந்தானத்தின் கையில் ஏற்றிவிட்டு 'ஸிரிஞ்'சைப் பிடுங்கிக்கொண்டு நகர்ந்தார்...இருபத்தி நாலு மணி நேரம் சந்தானம் அசைவற்றுக் கிடக்க வேண்டும். வைத்திய நிபுணர்கள் செய்திருக்கும் முடிவு அது...

ஏதோ நினைத்துக் கொண்டவராகத் திரும்பவும் அறைக் கதவைத் திறந்துகொண்டு சென்றார். கண்கள் நாலா புறமும் சுழன்றன. ''எங்கே? எங்கே?'' என்று மனம் துடித்தது...

சற்று முன் கீழே சுருண்டு கிடந்த இந்திராவும் சுந்தரியும் இப்போது அங்கே இல்லை!

## வேஷம் கலைகிறது

எங்கும் நிசப்தம்; விளக்கும் அணைக்கப்பட்டிருந்தது! கதவை அடைத்துக்கொண்டு சுந்தரம் பிள்ளை வெளியே சென்றுவிட்டார்; இவ்வளவையும் நிச்சயம் செய்து கொண்ட பின்னரே, சுந்தரி மெள்ள எழுந்து உட்கார்ந்

சுற்றும் முற்றும் நோக்கினாள். அறை உயரே வைத்துப் பதிக்கப்பட்டிருந்த கண்ணாடி ஜன்னல்கள் வழியே வந்த சிறு வெளிச்சத்தைத் தவிர வேறு இல்லை. கைகளை உதறி உடலை வளைத்துச் சோம்பல் முறித்துக்கொண்டு இந்திராவை நோக்கினாள்.

ஒரு கண நேரம் பொறாமைக்கு அவள் வசமாகி விட்டாள். இருவருக்கும் ஆண்டவன் ஏக காலத்தில் ஒரே விதமான வனப்புள்ள உடலைக் கொடுத்தார். ஆறேழு வருஷங்களுக்கு முன்பு சுந்தரியை வெகு அழகி என்றார்கள் ஜனங்கள். சுந்தரம் பிள்ளை அவள் கால் அடியில் சுருண்டு கிடந்தார். இதோ இந்திரா அதேபோல் எழிலின் சிகரத்தைப் பிடிப்பவளாக இன்று இருக்கிறாள். ஆனால் இருவரும் வாழ்க்கையில்—அவள் ஒரே களங்கம்; இவள் ஒரே பளிங்கு. எழுந்த ஆத்திரத்தில் அப்படியே விட்டுச் செல்வோமா என்றுகூட எண்ணினாள். சுந்தரி, மறுகணம் மனத்தை மாற்றிக் கொண்டாள். சூதுவாது அறியாத குழந்தை இந்திரா! அவளுடைய வீழ்ச்சிக்குக் காரணமாக இருக்கக்கூடாது என்று நல்ல எண்ணம் தோன்றிவிட்டது.

மெதுவாகச் சந்தடியின்றி அவளை அணுகி, அவள் முகத்தைத் தொட்டாள். திடுக்கிட்டுக் கண் விழித்தாள் இந்திரா; அவளுடைய உடலெல்லாம் நடுங்கிக்கொண்டிருந்தது. சுந்தரம் பிள்ளைதான் துர் எண்ணத்துடன் நெருங்கி விட்டான் என்று பயந்துவிட்டாள். சுந்தரியின் முகத்தைப் பார்த்ததும் பயம் தெளிந்தது. ஆனால், தினையளவு நேரமே; சுந்தரி விஷம் அருந்தி இறந்துவிட்டவள் ஆயிற்றே இப்போது வந்திருப்பது அவள் ஆவியாக இருக்குமோ— என்ற திகில் அவள் உடல் எல்லாம் பரவியது. மறுபடி கண்களை இறுக மூடிக்கொண்டாள்; தொண்டை கிழியக் கத்த வேண்டும்போல் இருந்தது.

இந்திராவின் பயத்தின் காரணத்தை ஊகித்துக் கொண்டாள் சுந்தரி, ''பயப்படாதே, இந்திரா! நான் பிசாசு என்று எண்ணிவிட்டாயா! நான் நிஜ சுந்தரிதான்... இறந்து போகவில்லை, சுந்தரம் பிள்ளையை ஏமாற்றி அனுப்பிய சுந்தரி...கண்ணை விழித்துப்பார்; என் கையைத் தொட்டுப் பார்!...'' என்றாள்.



இந்திரா ஆச்சரியம் நீங்காமல் எழுந்து உட்கார்ந்து, சுந்தரியின் இரு கைகளையும் பிடித்துக் கொண்டாள். ''ஐயோ! என்ன பயங்கரம்! எப்படி நீங்கள் அந்த விஷத்தை குடித்தீர்கள்! அந்தக் கயவன் உங்களைக் குத்திவிடுவான் என்றே நான்—'' என்றாள்.

''நானா விஷம் குடிப்பேன், இந்திரா! இந்தச் சுந்தரம் பிள்ளையுடன் இத்தனை வருஷம் பழகிவிட்டு, இன்னும் அந்த மனிதனுடைய கெட்ட சுபாவங்களை அறிந்து கொள்ளாமல் இருப்பேனா! கத்தியால் குத்த அனுமதி கொடுத்தால், அவன் குத்தியே விடுவான். நானாகவே விஷம் குடிக்க ஒப்புக்கொண்டால், அவனை ஏமாற்றிப் பிழைக்க ஒரு சந்தர்ப்பம் உண்டு. ஆகையால்தான் விஷத்தைக் குடித்து விடுகிறேன் என்றேன். ஒரு க்ஷணகாலம் விளக்கை அணைத்து விட்டேன், ஞாபகம் இருக்கிறதா! அதற்குள்ளாக விஷ சீசாவை அலமாரியில் வைத்து அதற்குப் பதில் வேறொரு சீசாவைப் பொறுக்கிக் கொண்டேன். அவன் கண்ணாடியைப் பிடுங்கி விட்டேனா? அதில் பாதி பார்வையை அவன் இழந்து விட்டான், நான் சீசா மாற்றினதைத் தெரிந்துகொள்ளாமல், விஷத்தைக் குடித்து நான் செத்துப்போய் விடுவேன் என்று கனவு கண்டான்...''

''அதற்கு ஏற்றாப்போல் நீங்களும்தான் மயங்கிவிட்ட மாதிரி விழுந்து காட்டினீர்களே! நானும் நம்பி அழுது விட்டேன் என்றால்...''

''இங்கே பேசிக்கொண்டிருக்க நமக்கு நேரம் இல்லை... எந்த நிமிஷமும் திரும்பி விடுவான், உனக்குத்தான் இனி மேல் ஆபத்து...''

வெளியே பேச்சுக் குரல்கேட்டது. சுந்தரம் பிள்ளையும் சந்தானமும் ஒருவரை யொருவர் எதிர்த்து நின்ற சமயம் அது. இருவர் குரல்களையும் புரிந்து கொண்டார்கள்.

''ஐயோ! நாம் எப்படித் தப்பி ஓடுவோம்?'' என்று பதறினாள் இந்திரா.

''ஒன்றும் கவலைப்படாதே! சுந்தரம் பிள்ளையின் பங்களாக்குள் சம்பந்தப்பட்டவரை வழி எனக்குத் தெரியும் என் பின்னே பேசாமல் வா!'' என்று அழைத்தாள்.

சுந்தரி வெகு சுவாதீனமாக ஒரு பீரோவைத் திறந்தாள். சிறு அறைபோல் காணப்பட்டது அது. அதனுள் ஒரு விசையை அமுக்கினாள். அதன் உள் பலகை நகர்ந்து கொண்டு, மற்றொரு அறையைத் திறந்து விட்டது. இருவரும் அதனுள் இறங்கிக் கதவைச் சாத்திக் கொண்டார்கள். சுந்தரி ஒரு 'ஸ்விட்'சைப் போட்டதும், மின்சார விளக்கு எரிந்தது. சுந்தரி இந்திராவைப் பார்த்து புன்னகை செய்தாள். ''இது சுந்தரம் பிள்ளையின் ஏற்பாடு. ஊரை ஏமாற்ற பீரோவைப்போல் காட்டுகிறார். இதோ இந்த விசையை அமுக்கியவுடன் இன்னொரு கதவு திறந்து கொள்ளும். நாம் அடுத்த அறையில் இருப்போம்...அங்கிருந்து நாம் ஓட்டம் பிடிப்பது வெகு எளிது...''

மூன்று நிமிஷங்களுக்குப் பிறகு அவர்கள் வீட்டுக்கு வெளியே வந்துவிட்டார்கள். சுந்தரம் பிள்ளையின் கார், சந்தானத்தின் காருக்கு முன்னால் நின்றது. சுந்தரி, ''ரொம்ப சௌகரியமாகப் போயிற்று! இது நான் ஓட்டப் பழகிக்கொண்ட வண்டிதான், வேகம் குறைவுதான்; ஆனால் நமக்கு இப்போதைக்குப் போதும்...'' என்றாள்.

இருவரும் அவசர அவசரமாக அதில் ஏறிக்கொண்டார்கள்.

சந்தானத்தை ஒரே 'இன்ஜெக்ஷ'னில் வீழ்த்திவிட்டு, திரும்ப அறைக்குள் எட்டிப் பார்த்த சுந்தரம் பிள்ளை, சுந்தரியும் இந்திராவும் தப்பி ஓடிவிட்டார்கள் என்பதைக் கண்டு திகைத்தார்.

இந்திரா ஓடியிருப்பதைக்கூட அவர் ஒருவாறு ஒப்புக்கொள்ளுவார். 'இறந்து கிடந்த' சுந்தரி எப்படி ஓடமுடியும் என்று ஆச்சரியப்பட்டார். இதில் ஏதோ சூது இருக்க வேண்டும் என்ற சந்தேகம் எழுந்தது! எப்படியும் அவர்கள்



அதிக தூரம் ஓடியிருக்க முடியாது என்ற நம்பிக்கையும் கூடவே எழுந்தது. வேகமாக ஜன்னலை அடைந்து வெளியே எட்டிப் பார்த்தார். அப்போதுதான் அவர்கள் இருவரும் அவருடைய மோட்டாரில் ஏறிக்கொண்டிருந்தார்கள்!

மோசம் வந்துவிட்டது! அவர்களை ஓடவிடக்கூடாது! எதையேனும் வீசி எறிந்து அவர்களை நிறுத்தலாமாஎன்று அறையெங்கும் கண்களைத் துழாவினார். வாய்ப்பாக எதுவும் அகப்படவில்லை. அதற்குள்ளாக மோட்டார் புறப்படும் சப்தம் அவர் காதை வந்து மோதியது.

பயித்தியம் பிடித்தவரைப் போல் கீழே ஓடினார். மோட்டார் காம்பவுண்டை விட்டுப் புறப்பட்டுவிட்டது, மின்னல் வேகத்தில் ஒரு யோசனை. ஏன் சந்தானத்தின் காரை எடுத்துக்கொண்டு அவர்களைத் துரத்தக் கூடாது. மூக்குக் கண்ணாடி இல்லை; அது ஓரளவு சங்கடம்தான்; இருந்தாலும் முயற்சி செய்து பார்க்கலாம்...காரின் சாவி? சந்தானத்திடம்தான் இருக்கவேண்டும். மறுபடி மாடி ஏறி, அதை எடுத்துக்கொண்டு திரும்ப வேண்டும். அவகாசம் அதிகம் இல்லை; பறவைகள் இரண்டும் பறந்து கொண்டிருந்தனவே!

நெஞ்சு படபடக்க ஓடினார்; மோட்டாரை இரண்டு விநாடிகளில் கிளப்பி விட்டார்.

தங்களை யாரும் பின்பற்றவில்லை என்ற துணிவுடன் சிரித்தபடி சற்று மெள்ளவே சென்ற சுந்தரி, தன் முன்னுள்ள கண்ணாடியில்,பின்னால் வரும் மோட்டாரைப் பார்த்து விட்டாள். ''ஐயையோ! துரத்துகிறான்போலிருக்கிறதே!'' என்று காரின் வேகத்தை உயர்த்தினாள். என்ன உயர்த்தியும், குறிப்பிட்ட ஓரளவுக்குமேல் அது வேகமாகப் போக மறுத்தது.

முடிந்தவரை ஓட்டினாள்; தெருக்கள் திரும்பும்போதெல்லாம் வேகம் குறைந்தது; மறுபடி வேகம் ஏற நேரமும்

பிரயாசையும் பிடித்தன. ஒவ்வொரு நிமிஷமும் பின்னால் வரும் வண்டி நெருங்கிக்கொண்டிருந்தது. தெருவில் ஜன நடமாட்டமே இல்லை. மனத்தில் தோன்றிய ரஸ்தாக்களில் எல்லாம் வண்டி சென்றது. தேனாம்பேட்டை பங்களாவுக்குச் செல்ல விரும்பியவர்கள், எப்படியாவது சுந்தரம் பிள்ளையிடமிருந்து விடுபட வேண்டும் என்ற நோக்கத்துடன், டவுன் பக்கமாக விரைந்து கொண்டிருந்தார்கள்.

எங்கு திரும்பினாலும், பின்னால் சுந்தரம் பிள்ளையின் வண்டியும் விடாப்பிடியாகப் பின்பற்றிக் கொண்டிருந்தது. அதுமட்டும் அல்ல; நிமிஷத்துக்கு நிமிஷம் நெருங்கிக் கொண்டும் இருந்தது. இந்திரா இடிந்துபோய் உட்கார்ந்து விட்டாள்...

ஜார்ஜ் டவுனில் பல நெரிசலான தெருக்களில் சுந்தரி காரை ஒடித்து ஒடித்துத் திருப்பினாள். மோட்டார் ஓட்டுவோரைக் கட்டுப்படுத்தும் போலீஸ் விதிகளையெல்லாம் மீறினாள். பல்லைக் கடித்துகொண்டு விசையுடன் ஓட்ட முயன்றாள். மோட்டாரின் சக்தியெல்லாம் செலவுசெய்தும் கூட, பின்னால் வரும் சுந்தரம் பிள்ளையின் காருக்கும் அவர்கள் காருக்கும் இடையில் தூரம் குறைந்துகொண்டே வந்தது.

வெகு நேரம் இந்தப் போட்டியில் நிற்க முடியவில்லை சுந்தரிக்கு. கடைசியில் சுந்தரி களைத்துப் போனாள். இனி சமாளிக்க முடியாது என்ற சோர்வு அவளைப் பற்றிக் கொண்டது. வண்டியை நிறுத்தி, திரும்பிப் பார்த்தாள். தெருக்கோடியில் அந்தக் கார் வந்துகொண்டிருந்தது. ''வரட்டும் அவன்! அவனுடைய கண்ணைப் பிடுங்கி விடுகிறேன்!'' என்று கீழே இறங்கினாள்.

ஆனால், சுந்தரம் பிள்ளையின் கார் நூறு கஜத்துக்கு அப்பால் நின்றுவிட்டது! அதில் பெட்ரோல் தீர்ந்துவிட்டது இது அவர் எதிர்பாராத ஒரு அதிர்ச்சி. சுந்தரியும் இந்திராவும் தப்பித்துக் கொள்வார்களே என்று அவர் உடல் எரிந்தது.



அவர் வண்டி 'கல்பமணி ட்ரக் ஸ்டோர்'ஸுக்கு எதிரே வந்து நின்றுவிட்டது என்பது அவருடைய இரண்டாவது அதிர்ச்சி. அவர் பயந்தது போலவே அதனுள் இருந்த நாயரின் குறுகிய உருவம் வெளிப்பட்டது. சுந்தரம் பிள்ளையின் காரைக் கண்டதும், நாயர் குரோதத்துடன் வந்தான்.

கத்தியைக் காட்டி, ''என்னைத் 'தம்பி'யிடம் மாட்டி விட்டுச் சாவகாசமாக வருகிறாயா! வஞ்சகா? உன்னை என் கத்தி ருசி பார்க்காமல் விடாது!'' என்றான்.

சுந்தரம் பிள்ளை பிரமித்து நின்றார். அவர் கண் முன்னே, சுந்தரி ஓட்டிய கார் மீண்டும் புறப்பட்டு மறைந்தது!

❀ ❀ ❀

சந்துரு பிரவேசித்தவுடன் தேனாம்பேட்டை பங்களாவிலிருந்து முதன் முதலாக வெளியேறியவன் சந்தானம்.

அதற்குப்பின் கிளம்பியவர் மதுரநாயகம். அவருக்கும் நிலைமை புரிந்துவிட்டது. இனி தாமதிப்பதால் பயன் இல்லை. கிடைத்த பொருளுடன் ஓடுவதே விவேகிகள் செய்யும் காரியம் என்று எண்ணிவிட்டார். சியாம்லால் சாந்திலால் ஸேட்டின் கடைக்குள் அவர் ஓட்டமாக ஓடினார்.

வெகு சுவாதீனமாக அந்தரங்க அறைக்குள் புகுந்து, கதவைத் தாளிட்டுக்கொண்டார். அங்கே இருந்த இரும்புப் பெட்டியைத் திறந்து, அதன் இரகசிய அறையையும் இழுத்தார். உள்ளே நாடகக்காரர்களுக்குப் பயன்படும் மீசை, தாடிகள் போன்ற உபகரணங்கள் இருந்தன. மளமள வென்று வெகு நாட்கள் பயிற்சியினால் ஏற்பட்ட திறமையுடன் அவைகளைத் தம் முகத்தில் ஒட்ட வைத்துக் கொண்டார். அடிக்கடி அங்கிருந்த நிலைக் கண்ணாடியின் முன் சென்று சரி பார்த்தும் கொண்டார். பதினைந்தே நிமிஷங்களில் மதுரநாயகம் நின்ற இடத்தில், சாந்திலால் ஸேட்

நின்றார். ஊன்றிப் பார்ப்பவர்களுக்குக்கூட மதுரநாயகமும் இந்த சாந்திலால் ஸேட்டும் ஒரே பேர்வழிதான் என்று சொல்வது எளிதாக இராது.

இளம் தாடியை உருவிக்கொண்டு புன்னகை செய்தார். ''சந்துரு! நீ மதுரநாயகத்தைத் தேடிக்கொண்டிரு! நான் சாந்திலாலாக, உன் கண் எதிரேயே ஊரைவிட்டு நான் வெளியேறுகிறேன்!'' என்று மனம் சவால் விட்டது.

ஒரு நிமிஷம்தான் இந்த யோசனை. பிறகு வெகு துரிதமாக வேலையில் முனைந்தார். ஒரு துணிப் பையில் இரும்புப் பெட்டியிலிருந்த பலவித ஆபரணங்களை அள்ளி அள்ளிக் கொட்டிக் கொண்டார். ஒரு குத்து மதிப்பில் இரண்டு லட்ச ரூபாய் பெறுமானமுள்ள வைரங்கள் சில விநாடிகளில் பையினுள் மறைந்து போயின. இரும்புப் பெட்டியில் எதையும் மிகுதி வைக்கவில்லை என்று ஒரு முறை திருப்தி செய்துகொண்டார்; பிறகு அதை மூடி, பையையும் சுருட்டிக்கொண்டு வெளி அறைக்கு வந்தார்.

அங்கே அவருக்கு ஓர் அதிர்ச்சி காத்திருந்தது! பல்லைக் கடித்துக்கொண்டு நெட்டையன் நின்றான்! ''எங்கே புறப் பட்டீங்க?'' என்று அவரை நிதானமாகக் கேட்டான். அந்த நிதானத்தினுள் அடங்கியிருந்த ஆத்திரத்தை மதுரநாயகம் உணர்ந்து கொண்டார்.

''உனக்குச் சொல்லித்தான் ஆகணுமோ!'' என்று கேட்டார். அவர் நிற்காமல் மேலே போக முயன்றார்.

''மதுரநாயகம்! நான் மிகவும் பொல்லாதவனாக இருப் பேன்...'' என்று எச்சரித்தான் நெட்டையன்.

''ஏய்! ஊமத்தங்காய் தின்றுவிட்டு வந்தாயா! யாரைப் பார்த்து நீ 'மதுரநாயகம்' என்கிறாய்! கண் தெரியவில்லை? தூக்கக் கலக்கமா? நான் சியாம்லால் சாந்திலால் ஸேட்!'' என்றார் மதுரநாயகம்.

''தெரியும். நிறுத்து! உன்னிடம் நான் வெகு நாள் வரைக்கும் ஏமாந்தேன். நேற்று உன் வேஷத்தைத்தெரிந்து



கொண்டேன். இந்த வேஷம் இவரிடம் இனிமேல் பலிக்காது! மதுரநாயகமும் சாந்திலாலும் ஒன்றுதான். நீ திலகவதியை ஏமாற்றலாம்; செங்கல்வராய பிள்ளையையும் ஏமாற்றலாம்; சந்துருவுக்கும் கூட 'டிமிக்கி' கொடுக்கலாம். என்னிடம் நடக்காது!... நீ யாராக இருந்தால் என்ன! அந்தப் பையை இப்படி நம் கையில் கொடு!''

மின்னல் வேகத்தில் மதுரநாயகம் ஒரு வேலை செய்தார். அவருடைய இடது கால், ஒரு அரை வட்டம் சுழன்று நெட்டையனைத் தாக்கியது. அதே சமயம் இடது முஷ்டி நெற்றிப் பொட்டில் 'சடார்' என்று ஒரு குத்து விட்டது. காற்றுப் போன பலூன் மாதிரி, நெட்டையன அந்த ஸ்தலத்திலேயே விழுந்து விட்டான். ஏற்கனவே குள்ளனிடம் பலத்த அடி வாங்கி பலஹீனமானவனாகை யால், இந்த அதிர்ச்சி அவனை ஒருமிக்க வீழ்த்தியே விட்டது.

அவனைக் காலால் புரட்டித் தள்ளிவிட்டு, மதுரநாயகம் சுற்றும் பார்த்தார். ஒரு வேளை குள்ளனும் கூட வந்திருப் பானோ என்ற பயம் அவருக்கு. குள்ளன மிகவும் தந்திர சாலி, பொல்லாதவன் என்பதை அவர் அறிவார். ஆகையால் ஜாக்கிரதையுடன் நடந்து கொள்ளத் தயார் செய்து கொண்டார்.

குள்ளன் வரவில்லை என்பதை விரைவில் கண்டு கொண்டார் அவர். ஒருவேளை அவனை வீழ்த்தி விட்டே இவன் வந்திருப்பானோ? என்று எண்ணினார். அப்படி யானால் இரட்டிப்பு சந்தோஷம் அவருக்கு. அவனும் தொலைந்தான்; இவனும் கெட்டான்...அவருக்குக் குறுக்கே இனி நிற்பது யார்!

வாசற் கதவைத் திறந்து கொண்டு வெளியே வந்தார். ரஸ்தாவின் இரு புறமும் கண்ணோட்டம் விட்டார். தெருவே காலி. இனி தைரியமாக நடையைக் கட்ட வேண்டியதுதான்.

எதிரே இருந்த ஓட்டலுக்குப் பக்கத்தில் ஒரு லாந்தல் கம்பம்; இருளில் மறைந்து நின்றது அது. அதன் அருகே நின்று காத்திருந்த ஒரு உருவம் இப்போது வெளிப்பட்டது. நீண்ட அடிகள் வைத்து மதுரநாயகத்தின் எதிரில் வந்து வழி மறித்தது.

''நில், மதுரநாயகம்!'' அதிகாரமாக வந்தது தொனி.

திகைத்துப் போனார் மதுரநாயகம். ''ஐயோ! செங்கல்வராய பிள்ளையா!'' என்று நாக்குழறக் கேட்டார்.

''ஆமாம்! நான்தான்! என்னிடம் சொல்லிக்கொள்ளாமல் எங்கே போகிறாய்? வா, உள்ளே! போகலாம்!'' என்றார் பிள்ளை.

# திருவாளர் காளிமுத்துப் படையாச்சி

மிஸ் சரளாவின் அபயக் குரலைக் கேட்டுக் கீழே விரைந்து ஓடி வந்த சஞ்சீவியும் கணேசனும் ஒரு கணம் திகைத்து நின்றார்கள். அந்தப் பெரிய ஹாலில் யாருமே இல்லையோ என்றுதான் முதலில் தோன்றியது. இரண்டாம் முறை பார்த்தபோது, ஒரு திரை ஓரமாக, சுவரோடு சுவராக நடுநடுங்கியபடி ஒண்டி நின்று கொண்டு, பயத்தின் உருவமாகவே சரளா அவர்களுக்குத் தோன்றினாள்.

கணேசன் அவளை மெதுவாக அழைத்து, ''ஒன்றும் பயப்படாதீர்கள்! நாங்கள் இருக்கிறோம்! சந்துரு வேறு நமக்குத் துணைக்கு இருக்கிறான்... வாருங்கள் இப்படி!'' என்று கூறி, ஒரு நாற்காலியை இழுத்து, அவள் அருகில் கொண்டு போட்டான்.

கைகள் வெதற, மெள்ளத் தட்டுத் தடுமாறி வந்து உட்கார்ந்து, மூலைகளையும் சரளா பார்த்தாள். போலீஸ்



இலாகாவில் எத்தனையோ முக்கியமான கேஸ்களில் எல்லாம் சம்பந்தப்பட்டு, ஓரளவு தைரியமும் நெஞ்சுரமும் பெற்றிருக்க வேண்டிய சரளா, இவ்வளவு தூரம் நடுக்கம் கொள்ளும்படி அங்கே என்ன நடந்திருக்கக்கூடும் என்று சஞ்சீவி ஆச்சரியப்பட்டான். இந்த மாதிரியான ஒரு சந்தர்ப்பத்தில் சந்துரு ஏன் அவர்களை மட்டும் கீழே அனுப்பிவிட்டுத் தான் மேலே தங்கினான் என்பதும் அவனுக்கு ஒரு புதிராகவே இருந்தது. 'இதில் என்ன மர்மம்?' என்று அவனுக்கு விளங்கவில்லை. சரளாவின் தோற்றத்தைப் பார்த்தபோது அவள் நடிப்பதாக இல்லை; உண்மையிலேயே அரண்டு போயிருந்தாள் என்ற எண்ணமே உண்டாயிற்று.

''தயவு செய்து நாங்கள் இல்லாத சமயம் இங்கே என்ன நடந்தது என்று சொல்ல முடியுமா?... சந்துரு வந்து கொண்டேயிருக்கிறார்!'' என்றான் சஞ்சீவி.

சரளாவுக்குப் பேசுவதற்குச் சில நிமிஷங்கள் பிடித்தன. அவள் ஆசுவாசப் படுத்திக்கொண்டு சௌகரியம் போல் சொல்லட்டும் என்று சஞ்சீவி காத்திருந்தான். ஹாலின் மூலை முடுக்குகளை யெல்லாம், யாரேனும் ஒளிந்திருப்பார்களோ என்று சந்தேகப்படுபவன்போல் கணேசன் உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டிருந்தான். சரளா சுருக்கமாக அங்கே நடந்தவற்றை விவரித்தாள்.

''நீங்கள் மாடி ஏறிச் சென்றீர்களா! கீழேயே நான் இருப்பது நலம் என்று எண்ணி, தங்கி விட்டேன். எனக்கு 'உதவி'யாக அண்ணாமலையும் இருந்து விட்டான். சிறிது நேரத்திற்குப் பின் அண்ணாமலை என்னுடன் பேசக் கொடுத்தான். ''நீங்கள்கூட மேலே போய் வாருங்களேன், அம்மா! வீட்டை நான் பார்த்துக் கொள்கிறேன்'' என்றான்.

''இல்லை. நான் போகவில்லை என்று, வார்த்தையை வளர்க்காமல் பதில் சொல்லிவிட்டேன்.''

"இன்றைக்கு இரவு இந்த வீட்டில் யாரும் இமை கொட்டவில்லை; படுக்கை போட்டுப் படுக்கவில்லை!" என்றான் அவன், மீண்டும் பேச்சைத் தொடங்கி.

"நாங்கள் சிறிது நேரம் தூங்கினோம்" என்றேன்.

"நீங்கள் தூங்கியிருக்கலாம். திலகவதி அம்மாள் தூங்கவில்லை அவருக்குத் தொல்லை, பாவம்! அவர் தகப்பனார் அடிக்கடிக்கு வந்து எழவு கொடுக்கிறார். "போ" என்றாலும் தொலைந்து போக மாட்டேன் என்கிறார். அவருக்கு ஒரு கூட்டாளி; பொல்லாத திருடன் அவன் இரண்டு பேரும் இந்தக் காம்பவுண்டைச் சுற்றிச் சுற்றி வந்து கொண்டிருந்தார்கள். திலகவதி அம்மாளிடம் பணம் பறிக்க முயன்று பார்த்தார்கள்!... நடக்கவில்லை" என்றான்.

"இதெல்லாம் என்னிடம் எதற்காகச் சொல்கிறாய்?" என்று கேட்டேன்.

"இல்லாத திருடனைத் தேடிக் கொண்டு சந்துரு அலைகிறார். அருகிலே இருக்கிறான் ஆள். அதை நீங்கள் அவருக்குச் சொல்ல வேண்டும். இப்போது மாடியில் இரும்புப் பெட்டியின் முன்னால் நின்று கொண்டு துப்புத் துலக்கப் போயிருக்கிறார். தவசுப்பிள்ளைமீது பழி போடுகிறார்... சந்துரு கெட்டிக்காரர் என்பதில் சந்தேகம் இல்லை. சரியான வழிகளை விட்டு அவர் புத்திசாலித்தனம் வேறு இடங்களில் பாய்கிறது..."

"நான் இதற்குப் பதில் சொல்லவில்லை. அண்ணாமலையை நான் இதுவரை கவனிக்கவில்லை; வேலைக்காரன் தானே என்று அலட்சியமாக இருந்திருக்கிறேன். அவன் பேச்சை இப்போது கேட்டபோது, அழுத்தமான ஆள் என்று தோன்றியது. சந்துருவின் வழிகளில் எனக்குக்கூட சந்தேகம் வந்தது."

"இப்படிப் பேசிக் கொண்டிருக்கும்போதே, திடீர் என்று அறையினுள் வேறொரு உருவத்தைப் பார்த்தேன்...



அது எங்கிருந்து தோன்றியது என்று என்னால் சொல்ல முடியாது. மாடியில் நடக்கும் பேச்சுக்களைக் கவனிக்க முயன்று கொண்டும், அதே சமயம் அண்ணாமலைக்குப் பதில் சொல்லிக் கொண்டும் இருந்து விட்டபடியால், அந்த உருவம் பிரவேசித்ததை நான் கவனிக்கவில்லை என்று நினைக்கிறேன். அது என்னை நோக்கியே வந்ததாக நான் எண்ணிவிட்டேன். பயந்து போனேன்..."

சரளா ஒரு முறை உடலைக் குலுக்கி, தலையையும் வேகமாக ஆட்டிக் கொண்டாள். மனத்தில் அந்த உருவத்தை மறுபடி கொண்டு வர முயற்சிப்பவள்போல் தோன்றியது.

சஞ்சீவி அவசரமாக, "அம்மணி! அந்த ஆள் யார் என்று உங்களால் சொல்ல முடியாதா?" என்று கேட்டான்.

"முடியாது! இதற்கு முன் நான் பார்த்திருக்கும் ஆள் இல்லை அவன்; அப்படியே பார்த்திருந்தாலும், இப்போது நன்றாக முகத்தை மூடிக் கொண்டு, உடலை ஒட்டினாற் போல ஆடை அணிந்து கொண்டு, ஒரு மாதிரி மாறு வேஷத்தில் வந்திருந்தான்...என்ன வயது இருக்கும் என்று கூடச் சொல்ல முடியாது; இருபத்தைந்து வயதும் இருக்கலாம்; ஐம்பத்திரண்டு வயதும் இருக்கலாம்..."

"ஓ!" என்றான் சஞ்சீவி. இதுவரை கணேசன் வாய் திறவாமல் விஷயத்தை மட்டும் கிரகித்துக் கொண்டிருந்தான்; புதிதாக ஒரு கேள்வி போடவோ, மேற்கொண்டு விவரங்கள் அறியவோ ஆவல் உள்ளவனாக இருந்தான் என்று அவனைப் பார்த்த பேர் சொல்ல முடியாது. இது ஓரளவு சஞ்சீவிக்கு ஆச்சரியமாகக் கூட இருந்தது. "அப்புறம் என்ன செய்தான், அந்த ஆள்?" என்று கேட்டான் சரளாவை.

"கையில் கூர்மையான ஓர் ஆயுதம் வைத்திருந்தான். அதை அவன் பிடித்திருந்த விதமும், கண்களில் வீசிய ஒளியும் அதை அவன் பாய்ச்சினால், அங்கேயே உயிர் பிரியும் என்று தோன்றும்படி இருந்தன. அதுவும் என்னை நோக்கி

வருவது போல் தோன்றியது. உதவிக்கு அண்ணாமலை வந்துவிடுவான் ஒன்று எதிர்பார்த்தேன். ஆனால்—என் நெஞ்சு திக்கென்றது—அண்ணாமலை அறையிலிருந்து நழுவிவிட முயன்று கொண்டிருந்தான். இரண்டு எட்டில் அதோ அறையின் வாசற்படியண்டை போய் நின்றான். கிலி பிடித்துக் கொண்டது என்னை. 'கொலை, கொலை!' என்று கூச்சல் போட்டு விட்டேன். ஓட்டமாக ஓடிச் சுவரண்டை நின்று கொண்டேன். அப்புறம் தான் தோன்றியது. அந்த ஆள் என்னை நோக்கி வரவில்லை என்று. அண்ணாமலை தான் அவனுடைய இலக்கு! நான் வெடவெட வென்று நடுங்கிக்கொண்டு நிற்கையிலேயே, அவன் அண்ணாமலையைப் பின்பற்றி ஓடினான். இருவரும் தோட்டத்திற்குள் ஓடி மறைந்து விட்டார்கள். நான் ஓரடி எடுத்து வைக்கக் கூட முடியாமல் கல்லாகச் சமைந்து போய் நின்றுவிட்டேன். பிறகு நீங்கள் வந்தீர்கள்!'' என்று நிறுத்தினான்.

கணேசன் மாடிப்படிப் பக்கம் திரும்பிப் பார்த்துவிட்டு, ''இதோ, சந்துருவே வந்துகொண்டிருக்கிறார்... அவரிடம் எல்லாம் கேட்டுப் பார்க்கலாமே!'' என்று பேச்சை மாற்றினான்,

உண்மையில் சந்துரு அப்போது மாடிப் படியில் இறங்கிக் கொண்டுதான் இருந்தான். நிதானமாக, ஏதும் பரபரப்பில்லாமல், ஒரு புன்சிரிப்புடன் அவன் வந்தான். அந்தச் சிரிப்பில் அவன் ஊகித்ததெல்லாம் சரியாக இருக்கின்றன என்ற நம்பிக்கையின் சாயை தென்பட்டது. ஹாலை அடைந்ததும், ''திலகவதி அம்மாள் இன்னும் இங்கே வரவில்லையா? அவரும் வந்தால் சௌகரியமாக இருக்குமே!...மிஸ்டர் கணேசன்! நீங்கள் அவரைச் சற்று அழைத்து வந்து விடுகிறீர்களா?'' என்று கேட்டான்.

போவதா, வேண்டாமா என்ற ஒரு சில விநாடிகள் கணேசன் தயங்கினான்; பிறகு மறுப்பதில் பயன் இல்லை என்று தேர்ந்தவனாக, யாடி ஏறினான்.



திலகவதியுடன் கணேசன் வருவதற்குள், சஞ்சீவி, சரளா சொன்ன விவரங்களை எல்லாம் சந்துருவிடம் கூறிவிட்டான். ஆனால், ஏன் இப்போது சரளா நடுங்க வில்லை. சிரித்த முகமாகவே இருக்கிறாள் என்பதை அவனால் ஊகிக்க முடியவில்லை.

கணேசன் வந்துவிட்டான்; திலகவதி குனிந்த தலை நிமிராமல் நின்றாள். சந்துரு தான் மௌனத்தைக்கலைத்து ''ஒரு வழியாக நம் கே[illegible] முடிந்துகொண்டு வருகிறது. திலகவதி அம்மாள் அவர்களே! ஒரே ஒரு வார்த்தை என்னிடம் கூறியிருந்தால்—இருபதாயிரம் ரூபாய் பணம் கொடுத்தால்தான் செங்கல்வராய பிள்ளையை விடுதலை செய்வதாகச் சொன்ன ஆசாமி போலி கணேசன் என்கிற சந்தானம் என்று அப்போதே கூறியிருந்தால்—அன்றே நான் விஷயத்தை உடனுக்குடன் முடிவு செய்திருப்பேன்—போகட்டும்; இப்போது சொல்லுங்கள்! நீங்கள் சற்று முன் ஓடிப் போய்ப் பார்த்தீர்களே! செங்கல்வராய பிள்ளை இருந்தார் அல்லவா? உங்களிடம் என்ன சொன்னார்?'' என்று கேட்டான்.

''செங்கல்வராய பிள்ளையா! அவர் இங்கேயா இருக்கிறார்?'' என்று சஞ்சீவி ஆச்சரியத்துடன் வினவினான்.

''திலகவதி அம்மாள் பதில் சொல்லட்டும்—அவர் பேச முடியாது என்றால், பிறகு கணேசன் சொல்லுவார்!'' என்றான் சந்துரு.

திலகவதிபேசவில்லை. கணேசன் சற்றுஅதிருப்தியுடன், ''எதற்காக அம்மா, இன்னும் மறைக்கிறீர்கள்! உள்ளதைச் சொல்லி விடலாமே!'' என்று கூறிவிட்டுச் சந்துருவைப் பார்த்து, ''என் சித்தப்பா வீட்டை விட்டுக் கொண்டு போகப்பட்டார் என்பது உண்மை. அந்த இடமும்எனக்குத் தெரியும், நான் அவரை அழைத்துவர ஏற்பாடு செய்யும் முன்பே என் சித்தப்பா மறுபடி வீட்டில் கொண்டு வந்து விடப்பட்டார்; ஆனால், அது யாருக்கும் தெரியாமல்நடந்த

விஷயம். அவரை அடைத்து வைத்த சுந்தரம் பிள்ளைக்குக் கூட இன்னும் தெரியாது! உங்களுக்குத் தெரிந்திருக்கிறது—'' என்றான்.

சந்துரு தலையை ஆட்டினான்; ''இவ்வளவு நீங்கள் ஒப்புக்கொண்ட பிறகு நானும் சொல்கிறேன். செங்கல்வராயபிள்ளை, அவர் எத்தனையோ குற்றங்கள் செய்திருக்கலாம். ஆனால் இப்போது ஒரு மன்னிக்க முடியாத குற்றம் செய்தார். சற்றுமுன் அனாவசியமாக நம் சரளாவைப் போய் பயமுறுத்தியிருக்கிறார்! அவர் 'கொலை, கொலை!' என்று கத்தும்படி மிரண்டு போயிருக்கிறார்! மாடியில் நான் இருக்க மாட்டேன் என்று நினைத்துக்கொண்டு வந்து என்னையும் சந்தித்துவிட்டு அவசரமாகப் போய்விட்டார்'' என்றான் சந்துரு.

''அவர் எதற்காக அண்ணாமலையைத் துரத்த வேண்டும் என்று எனக்குப் புரியவில்லை!'' என்றான் சஞ்சீவி

''அதை அண்ணாமலையைக் கேட்டு நாம் தெரிந்து கொள்ளலாம்...மிஸ்டர் கணேசன்! திலகவதி அம்மாள் எதையும் சொல்ல மறுப்பதால், நீங்கள் மற்றொரு விஷயம் எனக்கு விளக்கவேண்டும். இங்கேயே இருக்கிறாரா உங்கள் சித்தப்பா? அல்லது சியாம்லால் சாந்திலால் ஸேட் கடைக்குப் போய் விட்டாரா? அங்கே அவருக்கு வேலை இருக்குமே!''

இதைக் கேட்டதும் திலகவதி திடுக்கிட்டாள். இரு கைகளாலும் முகத்தை மூடிக் கொண்டாள்.

கணேசன், ''அவர் போய்விட்டார், ஸார்! எங்கள் குடும்பத்து சொத்துக்கள், நகைகள், பணங்கள் எல்லாம் அந்த ஸேட் சூறையாடிக் கொண்டிருக்கிறான். இதோ என் சிறிய தாயாரே அதற்கு உடந்தையாகவும் இருக்கிறாள்! எங்கள் குடும்பத்தில் நடந்திருக்கும் ஊழல்களைச் சொல்ல சாத்தியம் இல்லை. சொன்னால் தலை குனிய வேண்டி வரும். இப்போது ஸேட் ஊரைவிட்டு ஓடுமுன் மறிக்கலாம்



என்றுதான் என் சிறிய தகப்பனார் போயிருக்கவேண்டும்! என் சித்தியைக் கேளுங்கள்? ஏன் இந்த நிலைக்கு அவர் எங்களைக் கொண்டு வந்தார் என்று!''

''ஐயோ! இல்லை! நான் கொண்டு வரவில்லை. மதுரநாயகம் என்னை பயமுறுத்தினார்; நான் சாந்திலாலிடம் ஓடினேன். நகைகளை விற்றேன்'' என்று ஓலமிட்டாள் திலகவதி.

''சாந்திலாலும் மதுரநாயகமும் ஒரே ஆசாமிதான் என்று உங்களுக்குத் தெரியவே தெரியாதா திலகவதி அம்மாள்?'' என்று மற்றொரு வெடிகுண்டைத் தூக்கிப் போட்டான் சந்துரு.

சஞ்சீவி அதைக் கேட்டதும் திடுக்கிட்டுப் போனான். இது அவன் எதிர்பாராத மற்றொரு அதிர்ச்சி!

கீழே விழுந்து விடுகிறவள் போல் ஆடினாள் திலகவதி. ''நேற்று பிற்பகல்தான் நான் அகஸ்மாத்தாகத் தெரிந்து கொண்டேன். உடனே எல்லாவற்றையும் என் கணவரிடம் ஒப்புக் கொண்டேன். ஐயோ! எத்தனை வைர நகைகளைக் கால் விலைக்கும் அரைக்கால் விலைக்கும் அவனிடம் கொண்டு கொட்டியிருக்கிறேன்!'' என்று அரற்றினாள்.

''மிஸ்டர் கணேசன்! வீடு நிரம்ப மின்சார வசதிகள் செய்து வைத்துக்கொண்டும், அறைக்கு அறை நடக்கும் சம்பவங்களை இருந்த இடத்திலிருந்து கேட்டுக்கொண்டும் இருந்த உங்களால் கூட, இதை முன்கூட்டித் தெரிந்து கொள்ள முடியவில்லையா?''

கணேசன் சோகம் நிறைந்த குரலில், ''தெரிந்து கொண்டேன். ஆனால் அதற்குள் நிரம்ப மோசம் நடந்து விட்டது! நேற்று பகலில் ஸேட் கடை வாசலில் நாராயணன் காவல் நிற்பதைக் கண்டேன் நான். அவரும் தெரிந்து கொண்டுதான் நிற்கிறார் என்று நினைத்துப் பேச்சுக் கொடுத்தேன். 'ஸேட் கடையில் நுழைந்த மதுரநாயகம் திரும்பவே இல்லை' என்று சொன்னார் அவர்.

இது நான் எதிர்பார்த்ததுதான், ஸேட்டாக மாறியபின் அவர் வருவது எப்படி? 'சந்துரு வீட்டிற்குப் போய்க் கொண்டிருக்கிறேன். வருகிறீரா' என்று நான் அழைத்துப் பார்த்தேன். அவர் வரவில்லை. ஒருகால் உங்கள் உத்திரவின்மேல் நடந்து கொள்கிறார் என்று விட்டுவிட்டேன்...'' என்றான்.

''ஆனால், நீர் என் வீட்டுக்கு வரவில்லை. வந்தது சந்தானம்! அவனைப் பின்பற்றி வந்த மதுரநாயகத்தின் ஆட்களுக்கு, உமக்கும் சந்தானத்திற்கும் வித்தியாசம் தெரியவில்லை, முட்டாள்கள்!''

சஞ்சீவி நாலைந்து முறை கிராப்பைக் கலைத்துவிட்டுக் கொண்டான். ''மிஸ்டர் சந்துரு! உங்களுக்கு எப்போது தெரியும். மதுரநாயகமும் ஸேட்டும் ஒரே ஆள் தான் என்று!'' என்று கேட்டான்.

''இந்த வீட்டினுள் நான் காலடி வைத்தவுடனேயே அதைச் சந்தேகப்பட்டு விட்டேன். சில சுபாவங்களை மனிதன் என்னதான் முயன்றாலும் மாற்றிக்கொள்ள முடியாது. குரலை மாற்றிக் கொள்ளலாம்; அங்க அமைப்புக்களை மூடிக்கொள்ளலாம்; சில ஜாடைகளை மறைப்பது மட்டும் இயலாத காரியம். நான் சியாம்லால் சாந்திலால் ஸேட்டை வேறு ஒரு கேஸில் சில நாட்களுக்கு முன் பார்த்திருக்கிறேன். ஒரு ஆளை ஒரு முறை பார்த்தாலும் வெகு கவனமாகப் பார்த்துவிடுவது என் கெட்ட வழக்கங்களில் ஒன்று, 'ஸேட்' பேசுகையில் ஒவ்வொரு வாக்கியமும் முடியும் போது மெள்ள இடது கண்ணை மட்டும் மூடி மூடித் திறப்பார். மதுரநாயகமும் அப்படியே செய்தார்... ஒரு ஊகம்தான். இருவரும் ஒரே ஆசாமியாக இருக்கலாமோ என்று; அதை வைத்துக் கொண்டு மேலே பலம் சேர்த்தேன்...''

சஞ்சீவி நீண்ட பெருமூச்சு விட்டான். சட்டென்று நினைவு வந்தவனாக, ''ஐயையோ! மாடி இரும்புப் பெட்டியை மறந்தே விட்டோமே! அதை இன்னமும் திறக்க



வில்லையே! அதனுள் தவசுப் பிள்ளையோ, பஞ்சநதமோ மாட்டிக்கொண்டிருந்தால்...'' என்று நகர்ந்தான்.

சந்துரு அவன் தோளைப்பற்றி நிறுத்தினான்.

''பெட்டியினுள் யாரும் இல்லை; தவசுப்பிள்ளை முட்டாள் இல்லை. பஞ்சநதம் அத்தனை தூரம் துணிய மாட்டான். திலகவதி அம்மாளுக்கும் இது தெரியும். செங்கல்வராய பிள்ளையே அதனுள் மாட்டிக் கொண்டிருப்பாரோ என்ற பயத்தைத் திலகவதி அம்மாளிடம் உண்டாக்கவே நான் அம்மாதிரி யெல்லாம் பேசினேன்... அப்போது தான் அவரும் ஓடிப்போய்ச் செங்கல்வராய பிள்ளை சௌக்கியமாக இருக்கிறாரா என்று பார்த்துவரச் செல்வார் என்று எதிர்பார்த்தேன். என் ஊகம் சரிதான்; அவரும் விரைந்து சென்றார். இது சமயம் செங்கல்வராய பிள்ளையும் அண்ணாமலையைச் சந்தித்து விடுவது என்று கீழே வந்திருக்கிறார். எதிர்பாராத விதமாக சரளா கூச்சல் போடவே அவர் ஓட வேண்டி வந்து விட்டது. திலகவதி அம்மாள்! நான் கேட்ட கேள்விக்குப் பதில் சொல்லவில்லையே? இன்னமும் பிள்ளையவர்கள் இங்கேதான் இருக்கிறார்களா? உங்கள் வாயால் சொல்லி விடுங்கள் கேட்கிறேன்.''

''இல்லை, மதுரநாயகத்தைப் பார்த்துவரச் சென்றிருக்கிறார்!'' என்றாள் திலகவதி.

''அப்பாடா! உபகாரமாக ஒரு வாக்கியம் சொன்னீர்கள்; மிஸ்டர் கணேசன்! நாம் எல்லோரும் சேர்ந்து ஒரு காரியம் செய்ய வேண்டும். உங்கள் ஒத்துழைப்பு எனக்குத் தேவை...... சஞ்சீவி! அதோ அந்தத் திரைச் சீலையில் இருக்கும் மணிக் கயிற்றை எடுத்து வாருங்கள்!... கணேசன்! சற்று வெளியே சென்று அண்ணாமலையை இங்கே தருவியுங்கள்! அதற்குப் பிறகும் உங்களுக்கு ஒரு வேலை இருக்கிறது''

ஐந்து நிமிஷங்களுக்குப் பிறகு அண்ணாமலை உள்ளே வந்தான். அவன் உடம்பு வியர்த்திருந்தது. உடல் சோர்ந்து

காணப்பட்டது. கண்கள் மட்டும் அறையைச் சந்தேகத்துடன் துழாவின.

''வா, அண்ணாமலை! நீ ஒரு ஆபத்திலிருந்து தப்பினாய் என்று மிஸ் சரளா இத்தனை நேரம் சொல்லிக் கொண்டிருந்தாள்!'' என்றான் சந்துரு.

அண்ணாமலை பதில் சொல்லவில்லை. திலகவதியை உற்றுப் பார்த்தான். பிறகு சந்துருவிடம், ''ஐயா! நான் இந்த வேலையிலிருந்து நின்று கொள்கிறேன் இன்றோடு! இந்த வீட்டில் மனிதன் இருக்க மாட்டான்!'' என்றான் துவேஷமாக.

''தெரிகிறது! உனக்கும் ரொம்ப சிரமம். ஐயா ஒரு மாதிரி, எசமானி ஒரு மாதிரி, சின்ன எசமானி வேறொரு மாதிரி... யாருக்கு நீ ஜவாப் சொல்லுவாய்? ஒருவருக்குச் சரியாக நடந்து கொண்டால் மற்றவருக்குச் சங்கடம் உன் நிலைமையில் இருப்பது மிகவும் கஷ்டம்தான்! நானாக இருந்தால் என்றைக்கோ விட்டு ஓடியிருப்பேன்...முகமூடி ஆள் ஒருவன் துரத்தினானாமே! சரளா சொல்கிறாரே!''

''நான் ஒன்றும் பேசத் தயாராயில்லை!... என்னை அனுப்பி விடுங்கள்!''

''பேஷாக! அதற்கு நான் சிபாரிசு செய்கிறேன்!... விஷயங்களைச் சொல்லிவிட்டுப் போனால் எல்லோருக்கும் நிம்மதி... தவசுப்பிள்ளை உன்னிடம் சொல்லிக் கொண்டு தான் போனானா?''

''இல்லை!''

''நீ நல்லவன் என்று இந்திரா என்னிடம் சொல்லியிருக்கிறார். அது பெரிய நற்சாட்சி, கொஞ்சம் உண்மையைச் சொல்லேன்— தாமோதரத்தை என்னிடம் அனுப்பினது யார்?''

''தாமோதரம் யார் என்றே எனக்குத் தெரியாது!''

''நான் ஞாபகப்படுத்துகிறேன், நீ மருந்து வாங்கிவர அடிக்கடி போவாயே 'கல்பமணி ட்ரக் ஸ்டோர்ஸ்' அதில் வேலை பார்ப்பவன்...''

திருவாளர் காளிமுத்து படையாச்சி



32401

''எனக்கு அவனைத் தெரியாது!''

''மதுரநாயகத்தின் ஆட்களை ரயிலடிக்கு அனுப்பி செல்வராஜிடமிருந்து பையைத் தட்டிவரச் சொன்னது யார்! அதையேனும் சொல்.''

''நான் என்னத்தைக் கண்டேன்? இங்கே நான் வேலைக்காரன் என்பதை மறந்து விட்டீர்களே, ஐயா!''

''ஓ! ஓ! ஞாபகம் வந்துவிட்டது! செங்கல்வராய பிள்ளையின் விசுவாசமுள்ள சேவகன் ஆச்சே நீ! இப்போது நீ வேலையை விட்டுப் போகிறேன் என்கிறாய்; அவரானால் உன்னை முந்திக்கொண்டு துரத்திப் பிடித்துக் கத்தியால் குத்தி விடுகிறேன் என்கிறார். உங்களுக்குள் அப்படி ஒரு ஒப்பந்தமா?''

''விளங்கவில்லை, ஐயா! நான் படிக்காத ஆளு! சாதாரண ஆளு! துப்பறிகிறவர்களுக்குச் சரியாகப் பேச முடியுமா? பதில் சொல்ல முடியுமா? என்னை விடுதலை பண்ணி விடுங்க!'' என்றான். அங்கிருந்து செல்வதற்குத் தயாராக, துணியை உதறித் தோளில் ஆத்திரமாகப் போட்டுக் கொண்டான்.

மின்னல் வேகத்தில் சந்துரு சஞ்சீவியின் கையிலிருந்த கயிற்றைப் பிடுங்கிக் கொண்டான். ''அண்ணாமலை! நான் உன்னை இன்னும், 'அரெஸ்ட்' கூடச் செய்யவில்லை! உன் மேல் கேஸ் நடத்திச் சிறையில் தள்ளவில்லை; அதற்குள் என்னிடம் நீ விடுதலை கேட்கிறாயே!'' என்றபடி அவன் மேல் பாய்ந்து, இரு கைகளையும் இறுகப் பின்னால் பிடித்துக் கொண்டான்.

''சஞ்சீவி! கணேசன்! சீக்கிரம் இவனைக் கட்டுங்கள்! சீக்கிரம்!...'' என்று அவசர உத்தரவு போட்டு, தானே கயிற்றால் இரண்டு சுற்றுச்சுற்றி விட்டான். அண்ணாமலை என்ன திமிறியும் அவனால் ஓர் அங்குலமும் அசைய முடியவில்லை. இந்த ஆளுக்கு இத்தனை பலமா என்று திகைத்துப் போய்விட்டான்.

''இது என்னங்க!... இது என்னங்க! வேடிக்கையா பண்றீங்க! விடுங்க!'' என்றான் அண்ணாமலை.

''சும்மா இருங்கள், காளிமுத்து படையாச்சி அவர்களே, சிங்கப்பூர் உங்கள் ராஜ்யம்! சென்னைப் பட்டணம் எங்கள் ராஜ்யம்!'' என்றான் சந்துரு.

# "எங்கும் பிரகாசம்"

சற்றும் எதிர்பாராத விதமாக மோட்டார் நின்றதும், அது நின்ற இடம் 'கல்பமணி ட்ரக் ஸ்டோர்'ஸாக இருந்ததும் சுந்தரம் பிள்ளைக்குப் பெரிய அளவில் அதிர்ச்சியை அளித்தன என்பதில் சந்தேகம் இல்லை. அதோடு நாயரும், வஞ்சம் தீர்த்துக்கொள்ள வரும் கொடிய விலங்குபோல், கத்தியுடன் எதிர்ப்படவும், விதிதான் கடைசியில் தம்மை வளைத்துக்கொண்டு விட்டது என்பதை உணரத் தொடங்கினார். அப்போது விரும்பியது ஒரே ஒரு சந்தர்ப்பம். அந்த இடத்திலிருந்து எப்படியேனும் தப்பி விட்டால், இருப்பதை எடுத்துக் கொண்டு கண் காணாத இடத்தில் யாரும் அறியாமல் ஜீவிக்க அவர் தயாராக இருந்தார்... ஆனால், இந்தக் கத்திக்குத் தப்புவது எப்படி?...

''சுந்தரம் பிள்ளை! உன்னை நான் நம்பினேன், உன் பேச்சைக் கேட்டுக்கொண்டு உனக்கு உதவி செய்ய இந்த இடத்துக்கு வந்தேன். நீ என்ன செய்தாய்? எனக்கு வலை விரித்திருந்தாய்! என்னைப் படுகுழியில் பாய்ச்ச நினைத் தாய்? பின்புறமாகத் 'தம்பி'யை அனுப்பி, என்னைக் கொன்று வீழ்த்தப் பார்த்தாய்...''

''ஐயையோ!... நாயர்! நாயர்!... இதில் ஏதோ தவறு நேர்ந்திருக்கிறது!...'' என்று அலறினார் சுந்தரம் பிள்ளை.



அவருக்கு நாயரின் கத்தியின் வேகம் தெரியும். ஒருபுறம் குத்தினால் மறுபுறம் முனை தெரியும்! நாயர் கோரமாகச் சிரித்தான்... ''சுந்தரம்பிள்ளை! என்னிடம் இப்படி யெல்லாம் பசப்பி ஏமாற்றி விடலாம் என்று கனவு காண் கிறாயா?'' என்று கேட்டான்.

''உண்மை! நாயர்! சற்றுப் பொறு! நான் சொல்வதை...''

''பொறுமை! இந்தக் கத்தி என் கையை விட்டுப் புறப் பட்ட பின்புதான் பொறுமை! தீர்ந்தாய், போ! உனக்கு எந்தக் கடவுளிடமாவது நம்பிக்கை இருந்தால் வேண்டிக் கொள்!''

நாயர் கையைத் தூக்கிவிட்டான் விர்ரென்று பறந்து வரும் கத்தியைச் சுந்தரம்பிள்ளை எதிர்பார்த்துக் கண்ணை மூடிக்கொண்டார். கத்தி பறந்தும் வந்தது. ஆனால், அது குறி தவறி மோட்டாரின் மேல் தாக்கிக் கீழே விழுந்தது.

''என்ன ஆச்சரியம்! அவர் பக்கில் கடவுள்கூட இருந்தாரா?''—கண்ணைத் திறந்த சுந்தரம் பிள்ளை, ஒரே நொடியில் காரணத்தைத் தெரிந்து கொண்டு விட்டார். நாயரின் பின்புறமாகப் பூனைபோல் வந்து, தவசுபபிள்ளை அவனுடைய மணிக்கட்டைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டிருக்கிறான். இப்போது நிராயுதபாணியான நாயரும், தவசுப்பிள்ளையும் கீழே விழுந்து கட்டிப் புரண்டு கொண்டிருந்தார்கள். ஒரு நிமிஷம் வைத்த கண் வாங்காமல் சுந்தரம் பிள்ளை அவர்களையே பார்த்துக் கொண்டு நின்றார்.

தமது தோளில் மெள்ள யாரோ தட்டுவதை உணர்ந்து திரும்பினார். செல்வராஜ்! தோல் பைக்காக அவர் அனுப்பின ஆள் நின்றான். ''பிள்ளைவாள்! சீக்கிரம்! இங்கே நின்றால் ஆபத்து! போலீஸ்காரர்கள் புறப்பட்டு விட்டார்கள் சீக்கிரம்...!''

''நமது பங்களாவைப் போய்ச் சேர வேண்டும்!'' என்றார் பிள்ளை

''பிரயோசனம் இல்லை. அங்கே போலீஸ் படை ஒன்று நிற்கிறது. அடையாளரை மனசாலும் நினைக்காதீர்கள்! அங்கேயும் சிவப்புத் தலை. சுந்தரியும் இந்திராவும் இதற்குள் உங்கள்மீது புகார் செய்திருப்பார்கள்.''

''பின் நான் எங்கே போகிறது?'' என்று பதறினார் பிள்ளை.

''என்னுடன் வாருங்கள்!... ஒரு இடம் இருக்கிறது...... அதை யாரும் நினைக்க மாட்டார்கள் இப்போது...''

தவசுப்பிள்ளையும் நாயரும் ஒருவரை யொருவர் வேட்டை நாய்களைப் போல் பிறாண்டிக் கொண்டிருந்த சமயம் சுந்தரம் பிள்ளை செல்வராஜுடன் சந்துகளிலும் பொந்துகளிலும் விழுந்தடித்து ஓடிக்கொண்டிருந்தார்.

அவர்கள் ஐந்தாறு தெருக்கள் தாண்டிய பிறகே போலீஸார் அங்கே வந்து, சண்டை போடும் இருவரையும் ஸ்டேஷனுக்கு இழுத்துச் சென்றார்கள்...

விஷ வாயுவின் தாக்குதலால் தாமோதரத்தின் வீட்டு மாடியில் ஸ்மரணை இழந்து கிடந்த குள்ளன் மெள்ள மெள்ளக் கண் விழித்தான். சிறிது நேரம் வரையில் எல்லாம் ஒரே குழப்பமாக இருந்தது. அவன் வீட்டுக்கு வெளியே கிடத்தப்பட்டிருப்பதையும், சற்று அப்பால் சங்கரனும் நாராயணனும் படுத்திருக்க ஏக உபசாரங்கள் நடப்பதையும் கண்டபின், நடந்தவை யெல்லாம் ஞாபகம் வந்தது.

சுந்தரம் பிள்ளை வந்து காரியத்தைக் குட்டிச்சுவராக்கி விட்டார்; அவன் லட்சியத்தைக் குலைத்து விட்டார்! இப்போது நன்றாகப் பார்த்தபோது, அங்கே தாமோதரமும் இருப்பதைக் கண்டான். அன்று அக்கினித் திராவகத்தைக் கையில் வைத்துக்கொண்டு சங்கரனைத் துரத்தியபோது, பின் புறமாக வந்து தாக்கியவனே இந்தத் தாமோதரம்; இப்போது குள்ளன் அவன் கையில் சிக்கிக் கொண்டால் சும்மா விடமாட்டான்...



குள்ளனுக்கு முதலில் ஒரு பெரும் குறை, தன்னை யாரும் கவனிக்கவில்லை என்பது. இப்போது அதுவே அவனுக்கு ஒரு நல்ல வாய்ப்பாக மாறிவிட்டது. அங்கிருந்து தப்பி விடவேண்டும்! இடுப்பைத் தடவிப் பார்த்துக் கொண்டான்; அதில் ஒளித்து வைத்திருந்த பணம் அப்படியே இருந்தது. இன்னும், ஒரே காரியம்; மதுர நாயகத்தைச் சந்தித்து விட வேண்டியது. ஏதோ கிடைத்த வரை லாபம். நெட்டையனும் ஒழிந்தான். கண் காணாமல் ஊரை விட்டு ஓடி, இருப்பதை வைத்துக் கொண்டு ஜீவிக்க வேண்டியது. ''அட, ஒரு வெற்றிலை பாக்குக் கடையைச் சொல்லேன்! இத்தனை நாள் ஓடி ஆடி என்னத்தைக் கண்டு விட்டோம்!''

குள்ளன் மெள்ளப் புரண்டான். ஐந்தாறு முறை புரண்டு, நாலு காலால் நடந்து, இருட்டான ஓர் இடத்தில் எழுந்து நின்றான். கை கால்கள் சுவாதீனம் இழக்கவில்லை என்று கண்டான். அவன் இருட்டில் மறைந்ததையும் யாரும் கவனிக்கவில்லை.

ஃ ஃ ஃ

செங்கல்வராய பிள்ளை அந்தச் சமயத்தில் நேருக்கு நேர் சந்தித்ததை மதுரநாயகம் சற்றும் விரும்பவில்லை. தாம் ஓடும் தருவாயில் இருக்கும்போது எங்கிருந்தோ வந்து குதித்துத் தொல்லை கொடுக்கும் அந்தப் பிரகிருதியைக் கொன்று ஒழித்து விடுவோமா என்ற ஆத்திரமே அவருக்கு வந்தது.

இரண்டு வித பயங்கள் மதுரநாயகத்தை ஏக காலத்தில் தாக்கின. சாந்திலால் ஸேட் வேஷத்தில் நாம் இருக்கும் போது எப்படி 'மதுரநாயகம்!' என்று பெயர் சொல்லி அழைத்தார் என்பது ஒன்று. எத்தனை நாளாக அதை அவர் தெரிந்து கொண்டிருக்கிறாரோ! இரண்டாவது, 'உள்ளே வா, பேசலாம்' என்று அவர் கூப்பிட்டது. உள்ளே கிடக்கும் நெட்டையனைக் கண்டு விடக் கூடாது அவர். ஆகவே, வாசற்படியிலேயே தீர்த்துக் கட்ட வேண்டியதுதான்!

''உள்ளே என்ன! இங்கேயே பேசி விடலாம்... அதுவும் எனக்கு நிற்க அதிக நேரம் இல்லை!...'' என்றார் மதுர நாயகம்.

''நானும் சுருக்கமாக முடித்துக் கொள்கிறேன். பையில் இருப்பது என்ன!'' என்று கேட்டார் செங்கல்வராய பிள்ளை.

''உமக்குச் சொல்ல வேண்டிய நிர்ப்பந்தம்?'' என்று கேட்ட மதுரநாயகம், அடுத்த கேள்விக்குப் பதிலாக செங்கல்வராய பிள்ளையையே வீழ்த்தி விடுவது என்று முடிவு செய்து விட்டார். ஆனால், செங்கல்வராய பிள்ளையின் அடுத்த வினாவே, ஒரு பலத்த அடியாக வந்தது. இடுப்பில் சொருகியிருந்த ஒரு இரும்புக் கழியால் மதுர நாயகத்தின் மண்டையில் போட்டுவிட்டு, செங்கல்வராய பிள்ளை பையையும் எடுத்துக் கொண்டு தெருவுக்கு வந்தார்.

இரண்டு நிமிஷங்களுக்குப் பிறகு அங்கே வந்த குள்ளன் வெளியே மதுரநாயகம் விழுந்து கிடப்பதைக் கண்டான். நெட்டையன் மூர்ச்சை தெளிந்து அறைகளைச் சோதனை செய்வதைக் கவனித்து அந்தக் காரியம் செய்தவன் அவனாகத்தான் இருக்க வேண்டும் என்று ஊகித்தான்.

குள்ளனை ஓரக்கண்ணால் கவனித்த நெட்டையன், மதுரநாயகத்தை அடித்தவன் குள்ளனே என்று முடிவு கட்டினான்.

சிறிது நேரத்திற்குப் பிறகு வந்த போலீஸ் இன்ஸ்பெக்டரிடம் ஒருவரையொருவர் குற்றம் சாட்டிக் கொண்டு நின்றார்கள்.

பொல பொலவென்று பொழுது விடிந்து கொண்டிருந்தது. தேனாம்பேட்டை பங்களாவுக்குள் சுந்தரம் பிள்ளையின் மோட்டார் நுழைந்தது. அதைச் சுந்தரி ஓட்டி வந்தான்; பின் சீட்டில் துவண்டுப்போய் இந்திரா படுத்திருந்தாள்.



சந்துருவிடம் இது விஷயத்தைச் சொன்னபோது, அவன் வெகு மும்முரமாக டெலிபோனில் இன்ஸ்பெக்டர் கோபாலனுடன் பேசிக்கொண்டிருந்தான். கணேசன் உதவியுடன் டெலிபோன் மீண்டும் உபயோகப்பட்டது. அவசர அவசரமாக அநேக விஷயங்கள். இடம் இடமாகச் சொல்லி 'அவனை அங்கே அரெஸ்ட் செய்யுங்கள்' 'இவனை இங்கே அரெஸ்ட் செய்யுங்கள்!' என்று குறிப்புகள் கொடுத்துக் கொண்டிருந்தான். ''முக்கியமாக குருசாமி நாயக்கரையும் பாக்கி குமாஸ்தாக்களையும் விடாதீர்கள். இந்தப் பெரிய கேஸில் அவர்கள் சின்ன ஆட்கள் ஆகையால் பூரா உண்மையும் அவர்கள் மூலமாகவே வரவேண்டும். பாங்கி குமாஸ்தா தான் கள்ள நோட்டு அடிக்கக் காகிதம் 'சப்ளை' செய்பவன். செங்கல்வராய பிள்ளையின் கம்பெனிக்கும், 'கலைமணி ட்ரக் ஸ்டோர்'ஸுக்கும் இடையில் அவன்தான் தொடர்பு... குருசாமி நாயக்கருக்கு வெகு நாளைய ஆத்திரம். 'முதலாளி' என்று சேவி செய்திருப்பதற்காகவே அவன் வஞ்சம் தீர்த்துக் கொள்ளுவான்...'' என்றான்.

இரண்டு முறை, இந்திரா வந்துவிட்டதாக சொன்ன பிறகே, ''வரட்டும்!'' என்றான். தொடர்ந்து இன்ஸ்பெக்டர் கோபாலனிடம், ''உங்களுடன் நான் நேரில் பேச வேண்டும். நான் ஒரு வார லீவில் இருக்கிறேன்; அதில் ஒரு நாள்தான் செலவாகியிருக்கிறது! மீதம் ஆறு நாள் கொஞ்சம் சுகவாசம் செய்யலாம் என்று உத்தேசம். இப்போதே வரலாமா?''

இன்ஸ்பெக்டர் கோபாலன் என்ன சொன்னார் என்பது யாருக்கும் தெரியாது.

சி. ஐ. டி. சந்துரு சிரித்துக் கொண்டே பதில் சொன்னான். ''கதை பூராவும் சொல்லி விடுகிறேன். நீங்கள் கேஸை அகப்பட்ட ஆட்களை வைத்துக் கொண்டு, ஜோடனை செய்து கொள்ளுங்கள்...'' என்றான்.

# முன்னொரு காலத்தில்

இன்ஸ்பெக்டர் கோபாலன் வீட்டில் ஒரு சிறு கூட்டம் கூடியிருந்தது. கோபாலன், சஞ்சீவி, மிஸ் சரளா, மூன்று போலீஸ்காரர்கள் ஆகியோர் முன்னிலையில் ஸி. ஐ. டி. சந்துரு பேசிக்கொண்டிருந்தான். அதை ஒருசொற்பொழிவு என்று சொல்ல முடியாது. ஏனெனில், சந்துரு ஒருபோதும் மளமளவென்று பேசியது கிடையாது. அதை உபதேசம் என்றும் ஏற்றுக்கொள்ள முடியாது; தான் சொல்வதைப் பிறர் ஒப்புக் கொள்கிறார்களா என்று அவன் நிதானித்தது இல்லை. கடமையைச் செய்தோம், அதனால் ஒரு உரிமை உண்டு என்ற நிலையிலேயே அவன் பேசுவது வழக்கம் அந்த வழக்கந்தான் இங்கேயும்.

இன்ஸ்பெக்டர் கோபாலன்கூட எத்தனையோ வருஷங்களாகச் சந்துருவிடம் பழகியவர்தான்! எனினும் எந்தச் சமயத்தில் எப்படிப் பேசுவான் என்று தெரிந்துகொண்டவா இல்லை. ஒரு சமயம் ஒரு பெரிய கொலைக் கேஸ் போலீஸை யாவரையும் குழப்பிக் கொண்டிருந்தது. கோபாலன் சந்துருவை அழைத்து, ''கொஞ்சம் கவனியேன்!'' என்று சொன்னார்.

''கவனிக்கும்படியாக அதில் ஒன்றையும் காணோம்!'' என்றான் சந்துரு.

''என்ன, அப்படிச் சொல்கிறாய்! தலையும் காணாமல் காலும் காணாமல் நாங்கள் இரவுபகலாக அலைகிறோம்?'' என்றார் கோபாலன்.

''அப்படியா! அந்த அடி முடி காணா பரமசிவனை நாம் ஆராய்ச்சி செய்து பார்க்கலாம்!'' என்றான்.

மறு நாள் வரை அவனிடமிருந்து தகவல் இல்லை, இன்ஸ்பெக்டர் அவன் அறையைத் தேடிக்கொண்டு



போனார். சந்துரு 'திருவாசக'த்தை வைத்துக்கொண்டு ஒரே சிந்தனையாக இருந்தான்.

''என்ன ஆச்சு?'' என்று கேட்டார் கோபாலன்.

''இமைப் பொழுதும் எந் நெஞ்சின் நீங்காதான் வாழ்க!' என்கிறார் மணிவாசகம்'' என்றான் சந்துரு.

''என்ன ஐயா, விளையாட்டம்! நான் எவ்வளவு 'ஸீரியஸ்' விஷயம் சொல்லிவிட்டுப்போனேன் உம்மிடம்?''

''என்ன விஷயம் அது?''

''உஸ்ஸ்ஸ்...அந்தப் பெருவாளூர் 'மர்டர்' கேஸ்...''

சந்துரு நிமிர்ந்து பார்த்து, ''அதை அப்பொழுதே முடித்து விட்டேனே! மாதவரத்தான் செய்த வேலை; முன் கோபத்தில் அரிவாளால் தீர்த்திருக்கிறான். சிங்காரன் ஏரியில் தேடவேண்டும்...ஆசாமியை மாயவரத்தில் அவனுடைய சகலபாடி வீட்டில் எப்போது வேண்டுமானாலும் போய்ப் பிடித்துக் கொள்ளலாம்...'' என்று சொல்லிவிட்டு, மேலும் திருவாசகத்தில் ஊன்றிவிட்டான்.

''என்ன! இத்தனை சமாசாரத்தை வைத்துக்கொண்டு நீ...''

சந்துரு மீண்டும் இன்ஸ்பெக்டரைப் பார்த்து, ''சகலபாடியை உங்களுக்குத் தெரியும், கண்ணன் என்று பெயர்; முன்னே 'திண்டிவனம்—ரயட்டிங்' கேஸிலே ஸெஷன்ஸுக்கு வரவில்லை?'' என்றான்.

இத்தனை தூரம் எப்படிச் சந்துரு நிச்சயத்துடன் சொல்கிறான் என்று கோபாலன் ஆச்சரியப்பட்டது உண்டு. ஆனால், ஒருபோதும் சந்துரு தான் ஓர் அபூர்வமான விஷயத்தைச் சுண்டி எறிந்திருக்கிறோம் என்பதைக் காட்டிக்கொள்ளமாட்டான். ஏன் அப்படி என்று அவனாகச் சொன்னால் அன்றி அவனை விவரம் கேட்டது இல்லை.

மற்றொரு விஷயம் சந்துருவிடம், பெரிய கொலைக் காரனை முதலில் கொலை குற்றத்திற்காக அவன் கைது

செய்யவே மாட்டான். மூன்று வாரத்திற்கு முன் கோடம் பாக்கம் பங்களாவில் கெட்டுப்போன இரும்பு 'ட்ரம்' ஒன்றை வைத்திருந்ததாகத் தான் குற்றம் சாட்டி அழைத்துக்கொண்டு போவான். ஒரு வாரத்தில் திரும்பி வரலாம் என்று நம்பிக்கையுடன் செல்லும் 'ரௌடி'. இரண்டு வருஷத்திற்கு முன் சிந்தாதிரிப்பேட்டையில் கத்திக்குத்து சம்பவத்தில் ஈடுபட்டிருந்ததற்காக மூன்று வருஷம் சிறைவாசம் செய்துவிட்டே வருவான். பொறுத்து நிதானமாக, உடம்பை அலட்டிக் கொள்ளாமல் செய்வது சந்துருவின் வழி.

இன்ஸ்பெக்டர் கோபாலன் காத்துக் கொண்டிருந்தார். தொண்டையைக் கனைத்துக்கொண்டு பத்து நிமிஷங் களுக்குப் பிறகே சந்துரு பேசத் தொடங்கினான்.

"சில வருஷங்களுக்கு முன்பு சிங்கப்பூரில் ஒரு 'கம்பெனி' நடந்தது. அவர்களுடைய தொழில், ரத்னங் களை மலிவான விலையில் சேகரித்து இந்தியாவுக்கு அனுப்பி நல்ல லாபம் சம்பாதிப்பது. நல்ல வியாபாரம் நடந்தது. 'மலிவாகச் சேகரிப்பது' என்றால், கொள்ளை அடிப்பது என்று வைத்துக்கொள்ளுங்கள். ஏகப்பட்ட ஆள் படைகள் வேலை செய்தார்கள். வெகு சாமர்த்தியமாகத் திருடினார்கள்; பெரிய பெரிய புள்ளிகளிடமிருந்து லட்சக் கணக்கான மதிப்புடைய வைரங்கள் இவர்களிடம் சிக்கின. போலீஸாரால் ஒன்றும் செய்து கொள்ள முடியவில்லை. எங்கே ஆரம்பித்து எங்கே முடிகிறது என்று தெரிந்தால் தானே?

எப்போதேனும் ஒரு ஆள் சிக்கிக் கொள்வான். அவ னுக்கே தான் யாருக்காக வேலை செய்கிறோம். தன் எஜமான் எப்படி இருப்பான் என்று தெரியாது. அவ்வப் போது உத்தரவுகள் பிறக்கும்; நிறைவேற்றியாக வேண்டும். அந்தக் கம்பெனியில் முக்கியமான ஸ்தானம் வகித்தவர் செங்கல்வராய பிள்ளை, இவர் அகௌண்டண்டாக



இருந்தார்; சுந்தரம் பிள்ளை மானேஜராக இருந்தார். இருவருக்கும் நல்ல சம்பளம், நல்ல செல்வாக்கு. இவர் களுக்குள்ளேயே போட்டா போட்டிகள் உண்டு. எஜமா னிடம் அதிக சலுகைகள் பெற இருவரும் முயற்சிகள் செய்தார்கள், இவ்வளவு முக்கியமானவர்களுக்குக்கூட எஜமான் யார் என்று தெரியாது; அவர் முகத்தை அவர்கள் பார்த்ததில்லை. டெலிபோனில்தான் குரலைக் கேட்டிருக் கிறார்கள்.

இன்னொரு 'கம்பெனி'யும் நடந்தது; அதில் தாமோ தரம் தலைவன்; பொய்க் கையெழுத்துப் போடும் குருசாமி பெரிய ஆபீஸர்; சந்தானம் என்ற நடிகன் ஒருவன் ஏஜெண்ட். இவர்கள் செய்த வியாபாரம் கள்ள நோட்டு அச்சு அடிப்பது. ஜப்பானியர்களிடமிருந்து அதற்கு வேண்டிய முறைகளைக் கற்றுக் கொண்டிருந்தார்கள். ஆனால், இவர்களைப் பின் நின்று ஆட்டி வைத்தவன் அவர்கள் கண்ணில் படாத ஒரு ஆள். தந்திகள் மூலம் உத்தரவு வரும், தபால்களில் வரும்... ஆனால், ஆசாமியை நேரில் கண்டவர்கள் இல்லை.

அப்போது சிங்கப்பூரில் மதுரநாயகமும் இருந்து வந்தார். செங்கல்வராய பிள்ளையின் 'வலக்கரம்' அவர். ஆனால் பெயர் இதுவாக இருக்க முடியாது. அந்த ரத்தினங்களைச் சொந்த ஹோதாவில் மதுரநாயகம் மூலம் செங்கல்வராய பிள்ளை பணமாக்கியிருக்கிறார்.

மதுரநாயகத்திற்கு அங்கே இரண்டு அலுவல்கள் ஒன்று செங்கல்வராய பிள்ளையைச் சுரண்டுவது; இரண்டாவது 'சாந்திலால் ஸேட்'டாக மாறி நகைக் கடை வைத்து, மற்றத் திருடர்களுடன் தொடர்புகொண்டு திருட்டு நகை களை வாங்குவது. அப்படி அவரிடம் சிக்கிக் கொண்டவன் தான் பஞ்சநதம். எத்தனையோ இடங்களில் பஞ்சநதம் கொள்ளை அடித்திருக்கலாம்; கொண்டு வந்து ஸேட்டின் காலடியில் கொட்டியிருக்கலாம். ஆனாலும், மதுரநாயகம் திருப்தி கொள்ளவில்லை. அவருக்கு அவனுடைய மகள்

திலகவதியின் மேல் ஆசை விழுந்து விட்டது. திலகவதியை 'மதுரநாயக'மாகச் சந்தித்து, காதலைத் தெரிவித்திருக்கிறார். திலகவதி அவர் எண்ணத்திற்கு மசியவில்லை. "உன் தகப்பனை ஜெயிலுக்கு அனுப்ப என்னால் முடியும்!" என்று மிரட்டியிருக்கிறார். பஞ்சநதம் திக்கு முக்காடிக் கொண்டிருக்கும்போது, 'ஸேட்'டாக அவன் குறைகளையெல்லாம் கேட்டு, 'ஒன்றும் பயப்படாதீர்கள்! நான் உம்முடைய மகளைச் செங்கல்வராய பிள்ளைக்கு முடித்து வைக்கிறேன். அப்புறம் மதுரநாயகம் அடங்கி விடுவான்." என்று சந்தானம் சொல்லி அனுப்பியிருக்கிறார். திலகவதியைக் கண்காணிப்பில் வைத்திருக்க, செங்கல்வராய பிள்ளையின் மனைவியாக்கி விடுவது நலம், பிள்ளையிடம் நேரில் வாங்கும் வைரக் கற்களைத் தவிர, அவர் மனைவியின் மூலமும் வாங்க முடியும் அல்லவா? ஆனால், யாருமே மதுரநாயகமும் சாந்திலால் ஸேட்டும் ஒரே ஆள்தான் என்பதைக் கண்டு கொள்ளவில்லை! என் மறைமுகமாகக் காளிமுத்துப் படையாச்சி கூட கண்டு பிடிக்கவில்லை. மதுரநாயகம் பற்றிய விஷயமே தெரியாமல் அவன் இருந்திருக்கிறான்!

இந்தக் கம்பெனியின் முக்கியத்துவம் எங்கே வருகிறதென்றால், செங்கல்வராய பிள்ளையிடம் போடுவதற்கு ஆரம்பத்தில் 'முதல்' இருந்தது. அந்த மூலதனம் அவருடையது அல்ல. அவர் அண்ணன் தமது குழந்தைகளுக்காக ஒப்புவித்த சொத்து. அது அவ்வளவையும் இதில் மடுத்து விட்டார் செங்கல்வராய பிள்ளை.

எல்லாத் தொழில்களும் ஆரம்பத்தில் நல்ல லாபகரம் இருக்கும் என்ற நம்பிக்கை ஊட்டுவனவாகத்தான் இருக்கும். அப்படித்தான் இந்தத் தொழிலும் செங்கல்வராய பிள்ளைக்குத் தோன்றியது. கூடிய விரைவில் அண்ணன் பணத்தைத் திருப்பிப் போட்டுவிடலாம் என்றுதான் அவர் நினைத்தார். ஆனால், எதிர்பாராத ஒருசம்பவம் நிகழ்ந்து, ஆகாசக் கோட்டைகளை இடித்துத் தகர்த்து விட்டது.



எங்கோ எவனோ 'துரோகம்' செய்து உளறிவிட்டான். போலீசார் கிட்டத்தட்ட இரு 'கம்பெனி'களையும் சோதனை போட வந்துவிட்டார்கள். மளமளவென்று அநேகரைக் கைது செய்தார்கள். பல திருட்டுப் பொருள்களைக் கைப்பற்றினார்கள். பெரிய 'கைகள்' ஓட்டமும் பிடித்தனர். செங்கல்வராய பிள்ளையும் தாமோதரமும் குடும்பத்துடன் இந்தியாவுக்கு வந்துவிட்டார்கள். மதுரநாயகமும் அள்ளிக்கொண்டு வந்திருப்பார்; சந்தானம் அவரிடம் கள்ள நோட்டுக்களை ஒப்படைத்து ஏமாற்றிவிடவே, அவைகளுடன் சிக்கிக் கொண்டார் மதுரநாயகம். சந்தானம் தப்புவதும் என்பாடு உன்பாடு என்று ஆயிற்று. குருசாமி நாயக்கர் சிறு தண்டனையுடன் தப்பினார். இவர்களுக்கு உறுதுணையாக இருந்த பாங்கிக் குமாஸ்தா தலைமறைவாக இருந்துவிட்டான்.

இதுவரை மறைவாக இருந்த எஜமான் மட்டும் இன்னமும் மறைவாகவே இருந்தான். அவன் எங்கோ ஓடிவிட்டான், இனி தொல்லை இல்லை என்று நினைத்துச் செங்கல்வராய பிள்ளையும், தாமோதரமும், சுந்தரம் பிள்ளையிடம் ஓரளவு ஆறுதல் அடைந்தார்கள். ஏன் செங்கல்வராய பிள்ளை சென்னையில் பழைய தொழிலை நடத்தத் தொடங்கினார்!

சுந்தரம் பிள்ளைக்கும் செங்கல்வராய பிள்ளைக்கும் எப்போதுமே பொறாமை; ஆகவே, இருவரும் சென்னையில் பங்களா கட்டிக்கொண்டு வாழும்போதே ஒருவரை ஒருவர் எப்படிக் கவிழ்ப்பது என்று யோசனை செய்தார்கள். தாமோதரம் ஒரு மருந்துக்கடை வைத்து, அந்தப் போர்வையில் தான் முதலில் செய்து வந்த வியாபாரத்தை நடத்தி வந்திருக்கிறான். பழைய குருசாமி நாயக்கர், சந்தானம், பாங்கிக் குமாஸ்தா இவர்கள் வந்து சேர்ந்து கொண்டார்கள். தன் பெயர் வெளிவராதபடி குருசாமி நாயக்கருக்கு முதலாளி என்ற பேரை வைத்து வேலை வாங்கினான் தாமோதரம்.

செங்கல்வராய பிள்ளைக்கும் அவனுக்கும் கள்ள நோட்டு விஷயத்தில் ஒரு தொடர்பு வளர்ந்துவிட்டது. புரசைவாக்கத்தில் அவர் வியாபாரம் எல்லாம் இதுவே: பாங்கிக் குமாஸ்தா அவர் மூலம் தாமோதரத்திற்குக் காகித 'சப்ளை' செய்ய தாமோதரம் பாதாள அறையில் அச்சடித்துக் கொடுத்துக் கொண்டிருந்தான்.

இங்கேயும் ஒரு வம்பும் வந்திருக்காது. ஆறு வருஷம் வரை நிம்மதியாகப் போயிற்று. விடுதலையாகி மதுர நாயகம் வந்தார். அவர் செங்கல்வராய பிள்ளையின் விருந்தினராக வந்து, சந்தானத்தைப் பழி வாங்கி, திலகவதியை மிரட்டி, சுந்தரம் பிள்ளைக்கும் சந்தேகத்தை வளர்த்தார்! சுந்தரம்பிள்ளையின் ஆள் தவசுப்பிள்ளை, தேனாம்பேட்டை பங்களாவில் சில காலமாக ஒற்றன் வேலை பார்க்கிறான். அவன் மதுரநாயகத்தின் எதிரி, தாமோதரம் கூட மதுர நாயகத்தின் வரவால் ஓரளவு கவலை அடைகிறான். இங்கே தான் தோல் பை விவகாரங்கள் ஆரம்பமாகின்றன.

"தோல் பையில் இருந்தவை இரும்புப் பெட்டிச் சாவிகள்; தவிர, சிங்கப்பூர் வியாபாரங்களைப் பற்றிய தஸ்தாவேஜுகள், கொள்ளை அடிக்கப்பட்ட சொத்து விவரங்கள், கள்ள நோட்டுகள் விவரம், அவைகளுக்குத் தேவையான 'டிசைன்ஸ்' ஆகியவை. எந்தப் போலீஸ்காரர் கையில் இந்தப் பை அகப்பட்டாலும், சுமார் எட்டுப் பேரை யாவது சிறைக்கு அனுப்ப முடியும். மதுரநாயகம் வந்ததும் இந்தப் பையைக் கைப்பற்றுவதே குறியாக இருக்கிறார் என்பதைத் தவசுப்பிள்ளை சுந்தரம் பிள்ளைக்குத் தெரிவிக்க, அவர் 'ஏற்பாடுகள்' செய்தார்.

இந்தச் சமயத்தில்தான் இவர்கள் எல்லாருக்கும் அதிர்ச்சி தரும் விஷயம் நடந்தது. பழைய முதலாளியின் எச்சரிக்கைதான் அது. "நான் இங்கே இருக்கிறேன். ஞாபகம் இருககட்டும்!" என்றான் அவன்.



என்னைக் கூட அவர் டெலிபோனில் கூப்பிட்டு, "வேண்டாம் இந்தக் கேஸ் உனக்கு! விட்டுவிடு!" என்றார். நான்தான் விடவில்லை.

செங்கல்வராய பிள்ளையின் பாடு வெகு சங்கடமாகி விட்டது. மதுரநாயகத்தின் பிடுங்கல் ஒரு புறம். பழைய 'முதலாளி'யின் மிரட்டல் ஒரு புறம். சுந்தரம் பிள்ளையின் ஓயாத தொல்லை, திலகவதியின் திணறல் எல்லாம் அவரைப் படுக்கையில் வீழ்த்தியது. இடையில் இந்திரா நாராயணனைக் காதலித்துக் கல்யாணம் என்று வந்தால், அவள் சொத்துக்களைக் கொடுத்தாக வேண்டும்; நாராயணன் லகுவில் விடமாட்டான்.

இங்கும் கணேசன் உருவத்தில் எதிர்பாராத ஒரு சங்கடம். அறையில் இருந்தபடியே குடும்ப விவரங்கள் எல்லாம் தெரிந்துகொண்டிருந்தான். தோல் பையைப்பற்றியும் அறிவான். ஆகவே எல்லாரையும் முந்திக்கொண்டு அந்தப் பையை எடுத்துக்கொண்டு போய்க் காலி வீட்டில் மறைத்தான். எனினும, அதை மற்றவர்கள் பார்க்காமல் வைக்க முடியவில்லை. திலகவதி முதலாகப் பலர் அதில் கவனம் செலுத்தத் தொடங்கினார்கள். அந்தக் கதை பூரா வையும்தான் நீங்கள் தெரிந்து கொண்டிருக்கிறீர்கள்.

தோல் பையை வியாஜமாகக் கொண்டு நானும் வந்து விட்டேன் அல்லவா? ஒரே அல்லோலகல்லோலம்தான். தாமோதரத்தின் வீட்டில் அடி தடி; இங்கே கத்தி வீச்சு; மதுரநாயகத்தை ஒழித்துக் கட்ட ஒரு முயற்சி; சுந்தரம் பிள்ளை வீட்டில் கலாட்டா; இரு கணேசன்கள் சண்டை.

நான் சும்மா இருந்தேன். கடிகார இயந்திரத்தை வெளியே எடுத்து நன்றாகச் சாவி கொடுத்துவிட்டு விட்டால், 'கொர்ர்ர்' என்று சக்கரங்கள் எல்லாம் சுழலும் அல்லவா? சின்னச் சக்கரம் வேகமாக, பெரிய சக்கரம் மெதுவாக... வேடிக்கை பார்த்துக்கொண்டே இருந்தேன்.

என்னைத் தேடிக்கொண்டு கொலைகார நாயர்; லஞ்சப் பணத்துடன் செல்வராஜ்; டெலிபோனில் ஒரு பெண் பிள்ளை; நல்ல பிள்ளை மாதிரி 'தம்பி'—இப்படிப் பலர் நெருங்கினார்கள்.

செங்கல்வராய பிள்ளை போனார்! இந்திரா போனாள்—நான் கலங்கவில்லை. இவர்களுக்கு ஒன்றும் நடந்து விடாது—தலைவனான எஜமான் மறைந்திருந்து கவனித்து வருகிறான். எல்லாம் அவன் ஆட்டி வைக்கிறபடி தானே! அவனையோ நான் ஆட்டி வைத்தேன்.

செங்கல்வராய பிள்ளையை மாட்டி வைப்பதில் அவனுக்கு நன்மை இல்லை; மதுரநாயகத்தை ஓடவிடக்கூடாது என்றும் அவன் அறிவான். பீதாம் பை தன் கையில் கிடைக்க வேண்டும் என்ற ஆர்வமும் உண்டு...

மிஸ் சரளா இப்போது, "ஆமாம்! இதில் யார் காகிதக் குப்பைகளைப் போட்டது?" என்று கேட்டாள்.

"சொன்னால் நீங்கள் நம்பவே மாட்டீர்கள். ரொம்ப நல்ல மனிதர் அவர்; நாராயணன் என்று பெயர். காதலுக்காக ஒரு தீரச் செயலைச் செய்திருக்கிறார். இதில் இருந்தவற்றையெல்லாம் என் வீட்டில் எனக்கும் தெரியாமல் ஒளித்துவிட்டு, காகிதக் குப்பைகளை நிரப்பி என்னையே கொட்டச் செய்தார். என்னை யாரும் சந்தேகிக்க மாட்டார்கள் என்ற நம்பிக்கை அவருக்கு."

"உங்கள் வீட்டை முதலில் சோதனை செய்தது யார்!"

"ஓ! அது தாமோதரம்! ஆனால் பழியை வேறொருவர் மீது போடவேண்டும் என்று மதுரநாயகத்தின் மோதிரக் கல்லை என் அறையில் போட்டு விட்டுப் போனான். நான் மதுரநாயகத்திடம அந்தக் கல்லைப்பற்றிப பிரஸ்தாபித்த போது, அவர் சிறிதும் அஞ்சவில்லை. இரண்டு ஆட்களை வைத்துக்கொண்டு, காரிய சாதனை செய்து விடலாம் என்று எதிர்பார்த்தார்."



சந்துரு கனைத்துக்கொண்டு மேலும் தொடர்ந்தான்.

"இவர்களுக்குள்ளேயே யார் அந்த முதலாளி என்ற சந்தேகம் பலத்தது. சிங்கப்பூரில் அவர்கள் இதைப் பற்றிச் சிந்தித்துப் பார்க்கவில்லை. இங்கே யோசனை செய்தார்கள் செங்கல்வராய பிள்ளைக்குச் சுந்தரம் பிள்ளை மேலே சந்தேகம்; தாமோதரம் மதுரநாயகத்தைச் சந்தேகித்தான். சுந்தரம் பிள்ளைக்குத் தாமோதரத்தின் மீது சிறிது சம்சயம் உண்மையில் நான் வந்துவிட்டேன் என்று அதிகம் அரண்டது அந்த முதலாளியே. இந்திரா எடுத்த எடுப்பில் அண்ணாமலை மிக நல்லவன் என்று சொல்லிவிட்டாளாகையால், அவனை நான் முதலில் கவனித்தேன்.

ஒருவருக்கும் தீங்கு வராமல் இருப்பதை மிக விரும்பியவன் அண்ணாமலை. சிங்கப்பூரில் ராஜாவாக இருந்து எல்லாரையும் கண்காணித்தான்; சென்னையில் சேவகனாக இருந்து, அத்தனை பேரையும் கவனித்துக் கொண்டான். இதற்கு மிகுந்த மனோதிடம் வேண்டும். காளிமுத்துப் படையாச்சியை நான் பாராட்டுகிறேன்; அவன் மன உறுதியை நான் போற்றுகிறேன். அவன் போட்ட வேஷத்தை யாராலும் கண்டுகொள்ள முடியவில்லை. மதுரநாயகம் சந்தானத்தை வீழ்த்தியபோது அவன் கைக்குட்டையை மறைத்திருக்கிறான்; சுந்தரம்பிள்ளை அவசரப்பட்டுச் செங்கல்வராய பிள்ளையையும் இந்திராவையும் கொண்டு போனபோது, முன்னாடி செங்கல்வராய பிள்ளையை விடுதலை செய்யும்படி உத்தரவு போட்டிருக்கிறான். தவகப்பிள்ளைமீது ஒரு கண், சந்தானத்தின் மீது ஒரு கண் எப்போதும் வைத்திருக்கிறான். இங்கே இன்று டெலிபோன் கம்பியை அறுத்ததுகூட அவன்தான்."

"உங்களுக்கு எப்போது முதல் அண்ணாமலைமீது சந்தேகம்?" என்று கேட்டான் சஞ்சீவி.

''ஒரு துப்பறிபவனுக்கு எப்போது சந்தேகம் வருகிறதென்று கேட்டால் என்ன பதில் சொல்லுவது! ஒரு புதிய மனிதன் பின் நின்று நடத்துகிறானென்றால், அவன் யாராக இருக்கலாம் என்று நான் யோசிப்பேன். அண்ணாமலை எல்லோருக்கும் நல்லவனாக இருந்தான்; உடனே சந்தேகித்தேன். எனக்கு எப்போதும் கெட்ட மனம். யாருக்கேனும் புகழ் மிக அதிகம் என்றால் நான் நம்பமாட்டேன். கிட்டத்தட்ட குற்றம் செய்பவனும் துப்பறிபவனும் ஒரே மாதிரி தான் மூளைக்கு வேலை கொடுப்பார்கள். அவர்கள் லட்சியம்தான் வித்தியாசம்...''

''ஒரே ஒரு சந்தேகம்!'' என்றான் சஞ்சீவி.

''ஒன்றுதானா? அப்படியானால் நீ என்னிடம் நல்ல பயிற்சி பெற்றிருக்கிறாய்!'' என்று சிரித்தான் சந்துரு.

''அன்று நாராயணன் லிங்கிச் செட்டித் தெரு வீட்டில் தோல் பையை எடுத்து வரச் சென்றபோது மாடியில் இரண்டு ஆசாமிகள் இருந்தார்களே! ஒருவன் செல்வராஜ் மற்றவன் யார்?''

''அதைச் செல்வராஜிடம்தான் நாம் கேட்கவேண்டும். அவனுக்குக் கூட்டாளி ஒருவன் இருப்பதை நாம் எப்படி ஆட்சேபிக்க முடியும்? ஆனால், அன்று புழக்கடை வழியாக நாராயணன் வரும்போதே, சந்தானம் முன் வாசலால் அவர்களைப் போய்ச் சேர்ந்து கொண்டிருப்பான். ஏமாற்றமும் அடைந்திருப்பான்.''

''நாராயணன்தான் தஸ்தாவேஜிகளை வைத்துக் கொண்டு, காகிதக் குப்பையைப் போட்டான் என்கிறீர்களே!''

''பையை நாராயணன் எடுத்ததுடன் செய்திருக்கக் கூடிய முதல் காரியம் அதுதான். இந்திராவின்மீது காதல் கொண்டவராயிற்றே அவர்!...நானாயிருந்தால் அந்தச் சமயத்தில் அப்படித்தான் செய்திருப்பேன்!''



கோபாலன் சிரித்துக்கொண்டே ''சந்துரு! நீ எப்போது யார்மேல் காதல் கொண்டிருக்கிறாய்?'' என்று கேட்டார்.

''அது இருக்கட்டும்; இந்தக் கேஸில் யோக்கியமாக யாரேனும் இருந்திருக்கிறார் என்று சொல்வாரா அவர்?'' என்று கேட்டாள் சரளா கேலியாக.

''ஏன்? நாராயணன் நல்ல பிள்ளை! இந்திரா நல்ல பெண். இரண்டு பேரும் கல்யாணம் செய்து கொள்ளப் போகிறார்கள்—நாம் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும், அப்புறம் சங்கரன் இருக்கிறான். குப்பையில் கிடக்கும் குந்துமணி அவன். கள்ள நோட்டு வியாபாரம் தெரியாதவன். நல்ல தீரன். அவன் கல்யாணம் செய்துகொள்வதென்றால், நல்ல துப்பறியும் பெண்மணியாகத்தான் பார்க்கவேண்டும். என்னைக் கேட்டால் அவனுக்குப் போலீஸ் இலாகாவிலேயே ஒரு வேலை கொடுத்து...'' என்று சரளாவைக் குறிப்பாகப் பார்த்தான்.

''உமது குறும்பு உம்மோடு இருக்கட்டும். துப்பறிபவருக்குத் தரகர் வேலை என்னத்துக்கு'' என்றாள் சரளா. ஆனால், அவள் குரலில் கடுமை இல்லை. கொஞ்சலே மிகுந்திருந்தது.

கோபாலன், ''அதிருக்கட்டும், இப்போது எல்லாரையும் அரெஸ்ட் செய்திருக்கிறோமே! என்ன குற்றம் செய்ததாக அவர்களுக்கு நாம் காரணம் சொல்வது?'' என்று கேட்டார்.

சந்துரு சற்று யோசித்தான்; ''செங்கல்வராய பிள்ளை வருமான வரியில் மோசடி செய்திருக்கிறார். சுந்தரம் பிள்ளை சங்கரனைத் தாக்கியிருக்கிறார். தாமோதரம் பையைத் தன் வீட்டில் ஒளித்துக்கொண்டே போலீஸில் பொய்க் கேஸ் கொடுத்திருக்கிறான். மதுரநாயகம் ஆள் மாறாட்டம் செய்திருக்கிறார்; மாரிமுத்து வீடேறிக் குதித்திருக்கிறான். பாங்கி குமாஸ்தா 'போர்ஜரி' செய்திருக்கிறான். சந்தானம் செக்குக்குப் பணம் தந்திருக்கிறான். சந்தானம் மோட்டாரைக் கண்மூடித்தனமாக ஓட்டியிருக்கிறான்;

நெட்டையனும் குள்ளனும் சண்டை போட்டுக் கொண்டிருக்கிறார்கள். செங்கல்வராய பிள்ளை நம்பிக்கை மோசம் செய்திருக்கிறார். அப்புறம் வருவோம் பெரிய விஷயங்களுக்கு!'' என்றான்.

''ஆமாம்! அண்ணாமலையை எதற்குச் செங்கல்வராய பிள்ளை கடைசியில் துரத்தினார்?'' என்று கேட்டான் சஞ்சீவி.

''பீரோவில் இருந்த அத்தனை நோட்டுக்களையும் நகைகளையும் கடைசியில் அண்ணாமலை கைப்பற்றி ஒளித்துவிட்டான். இதைக் கண்டதும் அவருக்கு வயிற்றெரிச்சல்...ஒன்றும் பயப்படாதீர்கள்! எங்கும் போய்விடவில்லை...சரியான சமயத்தில் அண்ணாமலை என்ற தாளிமுத்து வைத்தான். நாங்கள் கட்டிப் போட்டுவிட்டோமே!''

''ஒரே ஒரு சந்தேகம். எல்லாரும் அகப்பட்டார்கள் கடைசியில் சுந்தரம் பிள்ளையை விட்டுவிட்டீர்களே...'' என்று அங்கலாய்த்தான் ஒரு கான்ஸ்டபிள்.

''லிங்கிச் செட்டித் தெரு வீட்டில் அவர் சௌக்கியமாக இருப்பார். அவருக்கு ஒளிய வேறு இடம் இல்லை, அவரை உத்தேசித்தே நான் அந்தப் பக்கம் கான்ஸ்டபிள்களை அனுப்பவில்லை. இப்போது போய்ப் பிடித்துக் கொள்ளுங்கள்!'' என்றான் சந்துரு.

''சபாஷ்!'' என்றார் கோபாலன்.

''நான் ஒரு வார லீவில் இருக்கிறேன். எங்கேனும் சுகவாசஸ்தலம் போய் வரப் போகிறேன். என்னைத் தயவு செய்து யாரும் தேட வேண்டாம்!'' என்று சந்துரு எழுந்தான்.

[illegible] ரஜா பூராவும் அவன் திருவாய்மொழி வாசித்துப் பெரும் பகுதியை நெட்டுருச் செய்துவிட்டான் என்பது சஞ்சீவிக்குக் காதில் விழுந்த செய்தி.

முற்றும்